







நகரத்தார்களின் குலதெய்வங்கள்









உ

சிவமயம்

நகரத்தார்களின் குலதெய்வங்கள்

உ

சிவமயம்

நகரத்தார்களின் குலதெய்வங்கள்

ஆருருவ உள்குவார் உள்ளத்துள்ளே
அவ்வுருவாய்த் தோன்றுகின்ற அருளும் தோன்றும்....

— ஆறாந் திருமுறை, அப்பர் சுவாமிகள்

மனிதர்கள் என்னைப் பலவாறாக
எந்த வடிவத்தில்
எப்படி வணங்கினாலும்
அவர்களுடைய பக்தியில்
நான் வேரூன்றி இருக்கிறேன்.

— பகவத் கீதை

எத்தனை சிரமங்கள் இருந்தாலும்,
பக்த ஜனங்கள் தரிசனம் பண்ணவருவார்கள்
என்பதைக் காட்டுவதற்காகவே
சுவாமி
இப்படிப்பட்ட (ஸ்ரீசைலம் போன்ற)
மகா க்ஷேத்திரங்களில் பலவற்றைக்
காடு, மலைகளுக்கு நடுவில் வைத்திருக்கிறார்.

காஞ்சி ஜகத்குரு
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சுவாமிகள்

உ

சிவமயம்

எழுபிறப்பும் உனக்குஆட் செய்கின்றேன்



கோர்ட்டுமலை கணேசர்

திருச்சிற்றம்பலம்

வேத வாரணம் மேற்கொண்(டு) இருந்தன,
பேதை யேன்செய் பிழைபொறுத்(து) ஆண்டன,
ஏத மானவை தீர்க்க இசைந்தன,
பூத நாத! நின் புண்டரீ கப்பதம்.

திருச்சிற்றம்பலம்

— சேக்கிழார், பெரியபுராணம்

நகரத்தார்களின் குலதெய்வங்கள்
தொகுப்பாளன்: எஸ்ஸாரெம்

முகவரி: 31, Jalan SS 18/1C
SUBANG JAYA
47500 PETALING JAYA
Malaysia

முதற்பதிப்பு — மே, 1995
1000 படிகள்

மணமேல்பட்டி கண்ணப்ப ஐயனார் கோயிலில் நிதி வழங்கியோர்/அன்பளிப்புச் செய்தோர் சார்பில் சிறு திருப்பணி செய்ய, அன்பளிப்பாக ரூ 25 (மட்டும்) வழங்குவோருக்கு ஒரு நூல் வழங்கப்பெறுகிறது.

ஒளியச்சுக்கோப்பு: சி. சண்முகம், பி.காம்., நா. உஷா, பி.ஏ., ச. செந்தில் குமார்., சொ. இரமேஷ்., வீ. ஜெகதீசன்., **பக்கமாக்கல்:** ஓவியர் அ.சந்திரஹாசன்., ஓவியர் லோ.பாலமுருகன்., ***காந்தளகம்***, சென்னை; **எதிர்மறை:** சக்திவண்ண ஆய்வகம், சிந்தாதிரிப்பேட்டை; **அச்சு:** பாலாஜி செம்மையச்சகம், ராயப்பேட்டை; **கட்டாளர்:** கிருஷ்ணன் கட்டாளரகம், தேனாம்பேட்டை; **தாள்:** 70 கிசமீ. சான்சிலர் பாண்ட்; **அலுவலக உதவி:** ச. பரமசிவம்., கி. சரவணன்; **அச்சிடல் தயாரிப்பு:** மறவன்புலவு க. சச்சிதானந்தன், ***காந்தளகம்***, 834, அண்ணாசாலை, சென்னை 600 002. தொலைபேசி 834505, தொலைநகல் 834728

உ

சிவமயம்

நூல் அமைப்பு

உ

சிவமயம்

நேசமுடைய அடியவர்கள் நின்று நிலாவுக!

கோவிலூர் ஆதினம்

தவத்திரு காசிவிசுவநாத ஞான தேசிகர் அவர்கள்

வழங்கிய சாற்றுகவி

நெஞ்சத்தை உமக்களித்தேன் ஐயனாரே!
நினைவுடனே நினைப்பணிந்தேன் ஐயனாரே!
நஞ்சுண்டான் மால்மகனாம் ஐயனாரே!
நகரத்தார் குலதெய்வம் ஐயனாரே!

தொழுமடியார் துணைநிற்கும் ஐயனாரை
தூய்மனத்தின் குகைவாழும் ஐயனாரை
எழுச்சிகளை ஈந்துதவும் ஐயனாரை
ஏகசோதி யாமவனை வணங்குவனே!

உயர்வாழ்வு ஓங்கிடவே உள்ளத்தில்
உறுதியுடன் உன்னடிகள் பற்றிநின்று
நயங்கேட்கும் நகரத்தார் குலம்வாழ
நாளெல்லாம் அருள்புரிக ஐயனாரே!

'நகரத்தார்களின் குலதெய்வம்' என்ற நூலும் வழிவழியாக வழிகாட்டிவரும் நூலாக மலர்ந்து மக்கள் எல்லோருக்கும் வழிகாட்டிப் பயனடையவும், உடல்நலன், மனநலன், பொருள் நலன், தெய்வீகத் திருவருள் நலன்களும் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்துவர ஆசி கூறுகின்றோம்.

உ

அணுக்கன் திருவாயில்

நல்வளஞ்சேர் அருட்புலவர் இருசெவிகட்(கு)
அமிர்(து)என,எந் நாளும் ஓங்கச்,
சொல்வளமும் பொருள்வளமும் அளித்(து),இந்நூற்(கு)
இடையூறு தொலைத்(து)ஆள் என்றே,
பல்வளமும் பெரும்புகழும் படைத்(து)இலகும்
மயிலைநகர் பதியாய் வாழும்
வெல்வளஞ்சேர் கூத்தாடும் ஐங்கரக்குஞ்
சரத்(து)இருதாள் வியந்து வாழ்வாம்.

— *திருமயிலைத் தலபுராணம்*

'அரசர்களின் காலம் முடிந்த பிற்பாடு கோயில் திருப்பணி செய்தவர்களைச் சொல்கிறபோது, முதலில் நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தை மனதார நினைத்து நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறோம். 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடிய' நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள், அந்தத் திரவியத்தைத் தேவாலயத் திருப்பணிகளுக்கு அள்ளி அள்ளித் தந்து, பழைய அரசர்களின் இடத்தைப் பெற்றார்கள். காளஹஸ்தி வரையில் இவர்களது திருப்பணி தர்மம் பரவியிருக்கிறது' என்று காஞ்சி முனிவர் சந்திர சேகரேந்திர சங்கராச்சாரிய சுவாமிகளாலும்,

'தமிழ்நாட்டில் எப்போது கோயில்கள் ஏற்பட்டன என்று குறிப்பிடுவது கடினமாக இருக்கலாம். ஆனால் தமிழகத்தில் உள்ள எல்லாக் கோயில்களிலும் நகரத்தார்களின் பங்கும் சேவையும் இல்லாத கோயில் இல்லை என்று கூறிவிடலாம். பொருளைத் தேடுவது ஒருபுறமிருந்தாலும், தேடிய பொருளைத் தர்ம காரியங் களுக்கும், ஆன்மிகத்தை வளர்ப்பதற்கும் நகரத்தார்கள் மிகவும் செலவு செய்து முன்னணியில் இருந்து பணியாற்றியுள்ளார்கள்' என்று சிருங்கேரி ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகளாலும்,[1]

'பண்டைத் தமிழ் மன்னர்கள் தங்கள் ஆட்சிக்குட்பட்ட எல்லையில் தான் ஆலயம் அமைத்தார்கள். ஆனால் நகரத்தார்களோ, காசி முதல் கன்னியாகுமரி வரை பரந்துள்ள — ஏன், கடல் கடந்தும் கூட ஆலயங்களைப் புதுக்கி, புதியன தோற்றுவித்துச் சரித்திரம் படைத்த பெருமை பெற்றுள்ளார்கள். அவர்களின் பணியால்

மறைகள் வளர்ந்தன; ஆலயங்கள் பொலிவு பெற்றன; சமயம் தழைத்தது' என்று புதுக்கோட்டை சத்குரு சாந்தானந்த சுவாமிகளாலும் போற்றிப் பாராட்டப் பெற்ற நாட்டுக்கோட்டை நகரத்தார்கள், சிவாலயங்கள், விநாயகர் — முருகன் — அம்பாள் கோயில்கள் ஆகியவற்றை மட்டுமில்லாது, குலதெய்வ (கிராம தேவதை)க் கோயில்களான ஐயனார், கறுப்பர்,[2] துர்க்கை கோயில்களுக்கும் நிறையத் திருப்பணிகள் செய்துள்ளனர்; செய்து வருகின்றனர்.

இருப்பினும், இவ்வாறு நகரத்தார்களால் திருப்பணி செய்யப் பெற்ற — செய்யப்பெறுகின்ற, நகரத்தார்களால் வழிபடப் பெறுகின்ற எல்லாக் குலதெய்வக் கோயில்களையும், எல்லா நகரத்தார்களும் அறிந்திருப்பரா என்பது ஐயத்திற்குரியதே.

நகரத்தார்களின் ஒன்பது நகரக் கோயில்களையும் பற்றிய விரிவான — விளக்கமான நூல்களை அறிஞர் பலர் எழுதியுள்ளனர். ஆனால், அதிகம் தெரிந்திராத இந்தக் குலதெய்வக் கோயில்களைப் பற்றிய முழுமையான நூல் ஏதும் இதுவரை வெளிவந்திருப்பதாகத் தெரியவில்லை.

எனவே, நாட்டுக்கோட்டை நகரத்தார்களால் வழிபடப்பெறும் எல்லாக் குலதெய்வக் கோயில்களையும் உள்ளடக்கிய ஒரு நூலை உருவாக்கலாம் என்னும் ஓர் அசட்டுத் துணிச்சலுடன் இம்முயற்சியை எளியேன் மேற்கொண்டேன். பின்னர்தான், ஆழந்தெரியாமல் காலை விட்டுவிட்டோம் என்பது தெரியவந்தது.

காரணம்,

பெரும்பாலும் செட்டிநாட்டு எல்லைக்குள்தான் இந்தக் கோயில்கள் அமைந்திருக்கின்றன என்றாலும், இவற்றைத் தேடிப்பிடிப்பதும், இக்கோயில்களுக்குச் சென்று வருவதும், அர்ச்சகர்களைத் தேடி அலைவதும் எவ்வளவு சிரமமான செயல்கள் என்பதை முதலில் அறிந்திருக்கவில்லை;

சில கோயில்களைத் தவிரப் பெரும்பாலான கோயில்களின் அர்ச்சகர்களும், அவற்றுக்கு அடிமைப்பட்ட நகரத்தார் பெருமக்களும் கோயில்கள் பற்றிய விவரங்களைக் கூறத் தயங்கியது;

முதலில் நினைத்ததைவிடப் பெரும் பொருட்செலவு ஏற்பட்டது.

இந்த முயற்சியைத் தொடங்கியபோது இருந்த ஆர்வம், நகரத்தார் பெருமக்களின் ஒத்துழைப்பின்மையால் குறையத் தொடங்கி, முயற்சி வெற்றிபெறுமா என்னும் கவலையும் ஏற்பட்டது.

மனமுடைந்த நிலையில் அறுபது கோயில்களின் பட்டியலை மட்டுமே வைத்துக் கொண்டு, மலையகத்திலிருந்து தமிழகம் வந்தோம். நேரில் கண்டபோது பலர் எளியேனுக்கு வெகுவாக உதவினர்; ஒத்துழைப்பு நல்கினர். வேறு பல கோயில்கள் இருப்பதையும் விசாரித்துத் தெரிந்து கொண்டோம்.

தமிழகத்தில் ஏறத்தாழ 32 நாட்கள், 2,500 கி.மீ. பயணம் செய்து, நகரத்தார்கள் வழிபடும் 108 குலதெய்வக் கோயில்களுக்குச் சென்று தகவல் சேகரித்தோம். அப்பயணத்தில்,

பல வகையான கோயில்கள்,
பல வகைப்பட்ட மனிதர்கள்,

பல வகை அனுபவங்கள்,
பல்வேறு படிப்பினைகள்,
எண்ணற்ற இன்ப துன்பங்கள் ஏற்பட்டன. அவற்றின் விளைவால் உருவானதே இந்நூல்.

இருப்பினும் நகரத்தார்கள் வழிபடும் குலதெய்வக் கோயில்கள் அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு நூல் என்று இதனைக் கூற இயலாது.

சி(ப)ல கோயில்கள் விடுபட்டிருக்கலாம்;
சில கோயில்கள், நகரத்தார் வழிபடும் கோயில்களாக இல்லாது இருக்கலாம்;
சில விவரங்கள் தவறாக இருக்கலாம்;
சில மிகைப்படுத்தப் பெற்றவையாக இருக்கலாம்.

முதலில் எளியேன் குறிப்பிட்டது போன்று, இந்த முயற்சிக்கு நகரத்தார் பெருமக்களின் முழுமையான ஒத்துழைப்புக் கிட்டாததே இவற்றுக்குக் காரணம். பெரும்பாலான கோயில்களைப் பொறுத்தவரை, அந்தந்தக் கோயில்களின் அர்ச்சகர்கள் தெரிவித்த (ஒரு சார்பான) தகவல்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளன.

சில கோயில்களின் திருக்குட நீராட்டு விழா மலர்கள், பாமாலைகள் போன்றவை கிடைத்தன; ஒரு சில நகரத்தார் பெருமக்கள் ஆர்வத்துடன் நிறையத் தகவல்களைத் திரட்டிக் கொடுத்திருந்தனர். அவ்வாறு கிடைத்தவற்றை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டேன். அதனால்தான் சில கோயில்களுக்கு மட்டும் அதிகமான விவரங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

ஒவ்வொரு கோயிலுக்கும் திருப்பணிகள் செய்துள்ள தனிப்பட்ட நகரத்தார் பெயர் ஏதும் இந்நூலில் குறிப்பிடப்பெறவில்லை. மாறாகத் தகவல் கிடைத்தமட்டில், தனிப்பட்டவருக்குத் தனிச் சிறப்புக் கொடுக்காமல், அவர்கள் சார்ந்த ஊர்கள் மட்டுமே குறிப்பிடப் பெற்றுள்ளன. இது, யாரையும் புண்படுத்தவோ, குறைவுபடுத்தவோ, யாருடைய கைங்கரியத்தையும் மறைக்கவோ மேற்கொள்ளப்பெற்ற முயற்சியன்று என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

படிப்படியாக மறைந்துவரும் குலதெய்வ வழிபாட்டுக்கு, இந்நூலின் வழி புத்துயிரூட்ட எளியேன் முயல்வதாகச் சிலர் குற்றம் சாட்டினர். இது உண்மையா என்பதை நகரத்தார் சமுகந்தான் முடிவு செய்ய வேண்டும். நாங்கள் கண்டவரை, இடையில் ஏற்பட்ட ஒரு தொய்வுக்குப் பின்னர், நகரத்தார்கள் இப்போதுதான் முழு மூச்சுடன் குலதெய்வக் கோயில்களைப் புதுப்பிப்பதிலும், குடமுழுக்கு நடத்துவதிலும், வழிபடுவதிலும் இறங்கியுள்ளனர் என்று தெரிகிறது.

இந்நூலில் இடம்பெறும் எல்லாத் தலைப்புகளிலும் திருமுறைத் தொடர்களைச் சேர்த்திருப்பதோடு, இயன்ற இடங்களில் எல்லாம் திருமுறைப் பாடல்களையும் இணைக்க முயன்றிருக்கிறேன். தேவையான இடங்களில் (எளியேனின் சிற்றறிவுக்கு எட்டிய) திருமுறை வரலாறுகள், புராண விளக்கங்கள் போன்றவற்றையும் சேர்த்திருக்கிறேன். இவற்றின்வழி, இந்நூல் வெறும் புள்ளி விவர விளக்க

ஏடாக அமையாமல், படிப்பதற்கும், பாதுகாப்பதற்கும் ஏற்புடைய நூலாக அமையும் என்பது எளியேனின் தாழ்மையான கருத்து.

தொண்டர் நாயகங்களான தேவகோட்டை லெ. கறுப்பன் செட்டி, கண்டவராயன்பட்டி முரு.சொ. கண்ணப்ப செட்டியார், மா. கறுப்பையா செட்டியார் ஆகியோர், எங்கள் பயணத்தின்போது உடன் வந்து, வழி காட்டுவதிலும், கோயில்களைத் தேடிக் கண்டுபிடிப்பதிலும், அரிய பல உதவிகளைச் செய்தனர்; அவர்களுக்கும், இம்முயற்சியை எளியேன் தொடங்கிய நாளிலிருந்து, தமிழகத்தில் எளியேனுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்து தந்த என் தங்கை மகன் வலையபட்டி எஸ்.எம். இராமநாதன் (மதுரை), கானாடுகாத்தான் இராம. அண்ணாமலை செட்டியார், காரைக்குடி இராம. மகாலிங்கம் செட்டியார் (சென்னை) ஆகியோருக்கும், என் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலைத் தமிழகத்தில் அச்சிடுவதற்குப் பெருந்தொகை தேவைப்பட்டது; அதை மனமுவந்து வழங்கிய மலேசிய — சிங்கப்பூர்த் திருக்கோயில்களின் நிர்வாகத்தினர், மலேசியா, சிங்கப்பூர், மற்றும் தமிழகத்திலுள்ள பொன்மனச் செம்மல்கள் அனைவரையும், கரங் கூப்பிச் சிரந்தாழ்த்தி வணங்குகின்றேன்.

தமிழகத்தில் பயணம் மேற்கொண்டிருந்தபோது, கோயிலூர் ஆதின கர்த்தர் தவத்திரு காசி விசுவநாத ஞான தேசிக சுவாமிகளைத் தரிசிக்கும் பெரும் பாக்கியம் கிட்டியது. அப்போது, இந்நூலுக்கு ஆசியுரை வழங்குமாறு அவர்களை யாசித்தேன்; அவர்கள் அன்புடன் தந்தருளினார்கள்; அவர்களின் பொன்னார் திருவடிகளைப் போற்றி வணங்குகின்றேன்.

இந்நூலில் இடம் பெற்றுள்ள முதல் 40 கோயில்களுக்கான (பரவும் சொல்மாலைப்) பாடல்களைச் சீர்பிரித்துச் செப்பனிட்டும், அந்தக் கட்டுரைகளின் கையெழுத்துப் படிகளைப் படித்துப் பார்த்துக் கருத்துரைத்தும், நிதி வழங்கிய பொன்மனச் செம்மல்களுக்கான கவிதைகளை யாத்தளித்தும் உதவிய அரிய நண்பர், தமிழறிஞர், அலோர் ஸ்டார் (கண்டனூர்) முத்தமிழ்ச் செல்வர் ரெ. இராமசாமி அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியும் வணக்கமும் உரியன.

இமாலயப் புகழ் ஈட்டிய தெய்விகப் பதிப்பகம் ஒன்றின் உரிமையாளரான நகரத்தார் ஒருவர், எளியேனை எள்ளி நகையாடி, இழித்துரைத்த நிலையில், இந்நூலினை அழகுற அச்சிடுவதில் துணை புரிந்த சென்னை 'காந்தளகம்' உரிமையாளர் க. சச்சிதானந்தன் அவர்களுக்கும்,
ஓவியர் கோலாலம்பூர் 'துரை' அவர்களுக்கும்
நன்றி மலர்களைக் குவிக்கிறேன்.

உச்சிப் பொழுதில், தன் நிழல்கூடத் தன்னிலிருந்து மறைந்துவிடும்; ஆனால் இமைப்பொழுதும் என்னிலிருந்து நீங்காது, என்னுள் நிறைந்திருந்து, இன்பதுன்பங்களை இன்முகத்துடன் பகிர்ந்து கொள்ளும் செம்பாதிச் சிவபூசைச் செல்விக்கும், முழம் போட முடியாத வெறுங்கைக்கு வேண்டிய மட்டும் கொடுத்து, இந்நூலுக்கான ஆயத்த வேலைகள் எந்த இடையூறுமின்றி நிறைவேற உதவியதோடு,

என்றுமே எனக்குப் பேருதவியாய் இருக்கும் என் அருமைச் செல்வத் திற்கும்
இறைவன் இன்னருள் பாலிக்கட்டும்.

இந்நூலைப் பெறுவதற்கு அன்பர்கள் வழங்கும் அன்பளிப்பு (ரூ 25 மட்டுமே), முழுமையாகத் திருப்புத்தூருக்கு அருகிலுள்ள மணமேற் பட்டி கண்ணப்ப ஐயனார் கோயிலில், ஏதேனும் திருப்பணிகள் செய்வதற்கு, நன்கொடைகள் வழங்கியோர், மற்றும் நூல் வாங்கி யோர் சார்பில் வழங்கப்பெறும்.

நகரத்தார்களின் குலதெய்வக் கோயில்களுக்கு ஓர் அறிமுக (தொடக்க) நூலாகவாவது இது அமைய வேண்டும் என்னும் ஆர்வத்தில், அசட்டுத் துணிச்சலுடன் அடியேன் மேற்கொண்ட எளிய முயற்சி இது! எளியேனின் முயற்சி வெற்றி பெற்றுள்ளதா என்பதைப் படித்துப் பார்த்துத் தீர்ப்புச் சொல்லுங்கள்!

எல்லோருக்கும் இறைவன் இன்னருள் புரியட்டும்!

நல்லவை பெருக வேண்டும்
நாடெலாம் வாழ வேண்டும்!

தெய்வத்தொண்டில்,

எஸ்ஸாரெம்

தொகுப்பாளன்
சுபாங்ஜெயா (மலேசியா)

குறிப்பு விளக்கம்:

அணுக்கன் திருவாயில் —கூத்தப்பிரான் ஆடும் இடத்திற்கு அண்மையில் உள்ள வாயில்

1. தொகுப்பு: சங்கரி புத்திரன், மா. தியாகராசன் - தினமணி கதிர், 18.04.80
2. தொன்றுதொட்டு இத்தகைய பெயர்கள், 'பெரிய கருப்பன், கருப்பையா, கருப்பன் செட்டி' என்றே குறிப்பிடப் பெற்று வந்துள்ளன. ஆனால், கருப்பு என்னும் சொல்லுக்கு 'அரிது, குறுவிலை, பஞ்சம்' என்னும் பொருட்களையும், கறுப்பு என்னும் சொல்லுக்கு மட்டுமே 'கருநிறம், கருமை, கோபம்' என்னும் பொருள்களையும் தமிழ் அகராதிகளில் காண முடிகிறது. மேலும், கறுப்பன் என்னும் சொல்தான் கரியவன், ஒரு தேவதை என்னும் பொருள்களையும் கொண்டிருக்கிறதே தவிர, கருப்பன், கருப் பையா என்னும் பெயர்களைக் காணமுடியவில்லை.

   கருநிறம், கடுமை ஆகிய பண்புகள் கருதித்தான் இப்பெயர்களைத் தெய்வங் களுக்கு இட்டிருக்கிறார்கள். தெய்வத்தின் நினைவாகவே இப்பெயர்கள் குழந்தைகளுக்குச் சூட்டப்பெறுகின்றன.

   எனவே, இந்நூல் நெடுகிலும் கறுப்பன், கறுப்பையா, என்றே இப்பெயர் கள் குறிப்பிடப்பெற்றுள்ளன. (எளியேனுடைய தமிழறிவும், சமய அறி வும் ஒரு வரையறைக்கு உட்பட்டவையே. எனவே, எளியேனின்) இந்தக் கருத்துத் தவறாயிருப்பின், அறிஞர்கள் பொறுத்தருள்க!

உ

பாதம் சென்னியிற் பரவுவன் பணிந்தே!

(நூலாக்க நன்கொடையாளர்)



அன்னை மீனாட்சி (இராம. மீனாட்சி ஆச்சி), வேகுப்பட்டி

'.......சிசுவாகி உற்பவிக்கத்
தவமே ஆற்றி,
ஒருபதுதிங் களில்பிறக்க
ஒருபோதில் ஒருவடிவாய்
வளர்த்துத், தீமை
மருவாது வாழஎனை
அருள்புரிந்த அன்னைதுதி
மகிழ்ந்து கொள்வாம்'

— பழனித் தலபுராணம்

வித்தகச் செல்வனாம் விறல்பழனி யப்பனைப்
பத்தியாய்ப் பயந்த பண்புசால் அன்னையாய்
விளங்கிய இராம மீனாட்சி ஆச்சியின்
தலைநிதி நூற்குத் தக்கசன் மானமாம்.

சேது பழனியப்பன், சிகாகோ, (வேகுப்பட்டி)

சிகாகோ நகரில் சிறந்த நிதித்துறை
மகாநிலைப் பட்டம் வாங்கிய வாலிபர்
பங்குபரி வர்த்தனப் பணிபுரி•யாளர்
மங்கல நூற்கு 'மாநிதி' கொடுத்தவர் .

நகரத்தார் தண்டாயுதபாணி திருக்கோயில், கோலாலம்பூர்

கண்டார் விரும்பிக் கருதுகோ லாலம்பூர்
தண்டா யுதன்தன் தாள்மலர் உறைதிருக்
கோயில் நகரத்தார் குலதெய்வ நூற்கே
ஆயிரக் கணக்காய் நிதிமகிழ்ந் தளித்தனர் .

நா.ம. நாகப்பன், கோலாலம்பூர், (வலையபட்டி)

மலைமகள் அபிராமி மனக்குகை வைத்தவர்
தலைநகர் கோலா லம்பூர் தன்னில்
வணிகம் புரிபவர் அணிஉரை ஆடுனர்
மணிநூல் இதற்கு மாக்கொடை கொடுத்தவர் .

நகரத்தார் தண்டாயுதபாணி திருக்கோயில், சிங்கப்பூர்

எங்கும் பைஞ்சோலை எழில்மிகு நகரெனும்
சிங்கை அருள்மிகு சீர்தண்ட பாணியின்
ஆலய நகரத்தார் அளித்தனர் முதல்நிதி
கோலமார் குகன்தன் கூரருள் நினைவனே!

டாக்டர் சி. சிவஞானம், கோத்தபாரு, (பொன்.புதுப்பட்டி)

மலையகக் கோத்தா பாருகண் மருத்துவர்
மலைமகள் சக்தியின் மாண்புயர் உபாசகர்
கலைநலம் விழையுனர் கனிவுடன் தானே
குலைபோல் நன்கொடை கொடுத்த வள்ளல் .

இஞ்சினியர் சுப அண்ணாமலை, பெட்டாலிங் ஜெயா, (பொன்.புதுப்பட்டி)

மேல்நா டுகளில் மேற்கல்வி கற்றவர்
சால்புற இங்கே சமர்த்தாய்ப் பணிகளை
ஆற்றி ஓய்வினை அடைந்தின் நூற்கே
ஏற்றிய கொடைநிதி இனிதே ஈந்தவர்.

டாக்டர் ஜெயசுப்பிரமணியன் அண்ணாமலை, இலண்டன், (பொன்.புதுப்பட்டி)

மேலை நாட்டில் மேற்கல்வி கற்றவர்
சாலவே கணிதம் ஆயும் கணக்கர்
தெய்வ பக்தியில் திளைக்கும் காளை
பெய்தவர் நிதிமழை பெருமன துடனே.

செல்வன் சுப சிதம்பரம், பெட்டாலிங் ஜெயா, (காரைக்குடி)

பொறியிய லாளர் மணியன் புதல்வனாம்
அறிவில் பெரியன் ஆகநாம் வாழ்த்தும்
சிதம்பரம் பெயரால் சீருற நன்கொடை
இதமாய் வழங்கியோர்க்(கு) ஏற்றம் பெருகவே!

எஸ்.எம். இராமநாதன், மதுரை, (வலையபட்டி)

இறையன் பரெனும் இராம நாதர்
நிறைய விந்நூற் குதவிகள் நிகழ்த்தி
மதுரையில் உறையும் மாநல் வணிகர்
மதுரமாய் நன்கொடை மதித்தே ஈந்தவர்.

டாக்டர் பெரி. இராமநாதன், டிகால்ப், அமெரிக்கா, (நெற்குப்பை)

அமெரிக்க டிகால்பில் மருத்துவம் ஆற்றுனர்
இமைகண் காப்பபோல் இயங்கும் சிறப்பினர்
பெரிஇராம நாதர் பெரிய உளத்தினர்
விரும்பி நிதிதந்த மேன்மைச் செம்மையர்.

மலாக்கா நாட்டுக்கோட்டைச் செட்டியார் சமுகத்தினர், மலாக்கா

பூர்விகக் கலைநலம் பொருந்திய மலாக்கா
பேர்மிகு சன்னாசி ஆண்டவப் பெருமான்
திருக்கோயில் சார்ந்த திருவுடை நகரத்தார்
விரும்பி இந்நூற்கு வெகுமதி தந்தனர்.

எம். தெய்வராயன் செட்டியார், கோலாலம்பூர், (காரைக்குடி)

மலையகத் தலைநகர் நிலைதிணைச் சொத்தினர்
மலைமகள் பங்கினன் மகனாம் செந்தூர்
முருகனின் பக்தர் முழுமன துடனே
விரும்பிமுன் வந்து வெகுமதி அளித்தவர்.

பெயர் குறிப்பிட விரும்பாத ஓர் அன்பர், கோலாலம்பூர்

தலைநகர் வாழும் தனிஇறை அன்பர்
நிலவும் தம்பெயர் குறிக்க நினையாது
நகரத் தார்குல தெய்வ நந்நூற்கு
மிகவே நிதிதனை விரும்பி வழங்கினர்.

ப. கணேசன், கோலாலம்பூர், (தேவகோட்டை)

மலையக வருமான வரித்துறை தன்னில்
வலவனாம் அதிகாரம் வாய்த்த நல்லார்
மருத்துவர் அமிர்த வல்லியின் துணைவர்
பெருத்த இறையன்பு பெரிதும் கொண்டவர்.

நாட்டுக்கோட்டைச் செட்டியார் தண்டாயுதபாணி கோயில், அலோர் ஸ்டார்

அருள்மிகு தண்ட பாணியின் அந்தமார்
திருக்கோ யிலுறை சீரலோர் ஸ்டார்வாழ்
நகரத் தார்கள் நன்கொடை நூற்கு
அகமுற அளித்ததை அன்புடன் போற்றுவம்.

நா. இலக்குமணன், குளுவாங், (கல்லல்)

இந்தியப் பொருளகப் பணிகள் இயற்றிபின்
அந்தமார் மலையகம் அடைந்து கணக்கின்
ஆயராய்ப் பணிகள் ஆற்றும் இளைஞர்
நேய உளத்துடன் நிதிநனி தந்தவர்.

சுப. முத்துக்கறுப்பன், ஈரோடு, (வலையபட்டி)

வலைய பட்டிவாழ் ஈரோடு வணிகர்
நிலையான சமூகத் தொண்டுகள் நிகழ்த்துனர்
முத்துக் கறுப்பர் முழுமன நிறைவுடன்
நத்திஇந் நூற்கு நன்கொடை நல்கினர்.

தான்ஸ்ரீ மு. சோமசுந்தரம், கோலாலம்பூர், (தேவகோட்டை)

சைவம் பெருக்கும் சமயத் தலைவர்
பெய்யும் கருணை பெரிதும் உடையவர்
தான்ஸ்ரீ சோம சுந்தரத் தகையர்
மாண்புற நன்கொடை வழங்கினர் வாழ்கவே!

டாக்டர் எம்.ஆர். முத்தையா, மதுரை, (கோட்டையூர்)

அறுவை மருத்துவர், ஒய்வுனர் ஆகியும்
மருத்துவச் சொந்த மனையினை நடத்துனர்
அண்ணா மலைப்பல் கழகமேல் ஆண்மைக்
கண்ணியக் குழுவின் கடனாற் றுறுப்பினர்.

ப.அ.அழ. இராமநாதன் (பெருமாள்), பொன். புதுப்பட்டி

கோவை வணிகர், கோயில் திருப்பணி
மேவிய தொண்டுகள் மிகவே ஆற்றுனர்,
குறையுடை யோர்தம் குறைகளை நீக்குனர்,
பிறையுடை யோன்தன் பேரருள் சூர்கவே!

கண.மு. கண்ணப்ப செட்டியார், வேகுப்பட்டி

கலைத்துறை முதுநிலை கனமார் விருதுனர்
நிலைகோ யிற்கும், வறுமை நிலையுடை
நகரத் தார்குல நாரியர் பலர்க்கும்
தகவுடன் நிதிகள் தந்துள பெருமகன்.

இராம. சொக்கலிங்கம் குடும்பத்தினர், வேகுப்பட்டி

இந்நூலைத் தொகுத்ததன் இன்தமையன் மணிவிழாவில்
அன்பளிப்பு வழ்ங்கலை ஆன்றஇந் நூலாக்க
நன்கொடையாய் அவர்தம்பி நன்மக்க ளுடன்கூடி
அன்புடனே வழங்கியுளார் அவர்நீடு வாழ்கவே!

டாக்டர் எஸ். வைரவன், சிங்கப்பூர், (நாச்சியாபுரம்)

அமைதி நீதி ஆள்பவர் மகனாம்
உமைசிவ இறையன் புள்ள உளத்தினர்
சிங்கைப் பதியில் சிறந்த மருத்துவர்
மங்கல ஆன்மிகம் மதித்தே உதவுனர்.

நூல் தொகுப்பாளன் நன்றியுரை:

எளியேன் மணிவிழாவில் என்அன்பர் அன்பாய்
அளிக்கும் தொகைகள் அத்தனையும் இந்நூல்
ஆக்கச் செலவுக்கே அளிப்பேன்; அனைவர்க்கும்
தேக்கிய எந்தன் திரள்நன்றி உரித்தே!

**இந்நூல் வெளிவர மனமுவந்து நிதி வழங்கிய பெருமக்கள்
அனைவரையும்
கரங்கூப்பிச் சிரந்தாழ்த்தி வணங்குகின்றேன்.**

''சிவபுண்ணியங்களுக்காகப் பொருள் வழங்குமாறு
கேட்டுக் கொள்ளப்பெறுவோர்,
இயன்றஅளவு ஏற்ற பொருளை உதவுவதால்,
தாமே அச்சிவபுண்ணியம் செய்த பலனைப் பெறுகின்றனர்.''

— பெரிய புராணம், நமிநந்தியடிகள் புராணம் — சிவக்கவிமணி உரை


(வழங்கிய நிதிக்கேற்ப, வரிசைக் கிரமமாக இந்தப் பட்டியல் அமைந்திருக்கிறது.)

கவிதையாக்கம்: முத்தமிழ்ச் செல்வர் ரெ. இராமசாமி, அலோர் ஸ்டார்

உ

சிவமயம்

எந்தை யார்அடி என்மனத் துள்ளவே



சி.பழ.இராம. சேதுராமசாமி செட்டியார்
வேகுப்பட்டி

சீரார் புகழ்மிகு சி.பழ.ராம. குடும்பப்
பேரார் வளமார் பீடுடைச் சிங்கம்
நலமார் குலமெனும் நற்பெயர் பூண்டே
இளமையில் சிவமுடன் இணைந்த ஏந்தல்
தத்துப் பிள்ளையாய்த் தமியனை ஏற்றே
ஒத்தஎன் வாரிசை உயர்த்துமென் அத்தன்
அன்னார் நினைவாய் அடியேன் படைக்கும்
பொன்னார் திருவடிக் காணிக்கைப் போதிதே!

கவிதை ஆக்கம்:
முத்தமிழ்ச் செல்வர் ரெ. இராமசாமி,
கண்டனூர்.

உ

விரிசுடர்க் கோயில்கள்

உ

வாள்நெடுங் கண்ணுமை மங்கை நாட்டரசன் கோட்டை நங்கை

(1. கண்ணுடையநாயகி அம்மன் திருக்கோயில், நாட்டரசன்கோட்டை)

''தண்ணுடையாள் ஞானத் தமிழ்ப்பனசை வாழ்கின்ற
கண்ணகியாம் செங்கமலக் காலுடையாள் — எண்ணுடையாள்
செட்டிமார் நன்றுவாழச் செய்பவளாய் நின்(று),என்றும்
கட்டியே காப்பாள் கனிந்து.'

— காசிவாசி நடேசானந்த சரஸ்வதி.

பேரருளின் பிறப்பிடமான தாயே, அம்மன் என்று அழைக்கப் பெற்று வழிபடப் பெறுகிறாள். மக்களின் மத்தியில் எவ்வாறு தாய் பழைமையானவளாக இருக்கிறாளோ, அவ்வாறே தெய்வங்களிடையிலும் அம்பிகையே பழைமை மிக்க தெய்வமாகிறாள்.[1]

பழந்தமிழரது தெய்வம் பெண் தெய்வம். பெண் தெய்வ வழிபாடே முழுமுதற் தெய்வ வழிபாடாக விளங்கியது. ஏனெனில் அது தோன்றிய சமுதாயத்திலே தாய்வழிமுறை நிலவியது என்கிறார் முனைவர் சிவ. மங்கையர்க்கரசி.[2]


அம்பிகையே உலக வாழ்க்கையில் பலவகையான நலன்களையும் அருள்கிறாள். அவளை வழிபடுவதால், ஞானம் பெற்று மோட்சத்தை அடையலாம் என்று சாத்திரங்களும் தோத்திரங்களும் கூறுகின்றன. எனவே நாம் ஆரம்பிக்க வேண்டியது அம்பாளுடைய சரணாரவிந்த தியானந்தான் என்று காஞ்சிப் பெரியவர் கூறுவார்.[3]

அவர் வாக்கை அடியொற்றிப் பேரருளின் பிறப்பிடமான அந்தத் தாயை, சண்டாசுரவதத்திற்காகத் தோன்றியருளிய தேவியை, நாட்டரசன்கோட்டையில் நடுநாயகமாக வீற்றிருக்கும் கண்ணுடைய நாயகியை முதலில் கண்டு வழிபடவிருக்கிறோம்.

* * *

நாட்டரசன்கோட்டையைப் பனசை என்று முன்னர் வழங்கியிருக்கின்றனர் என்பது கண்ணுடையம்மன் பள்ளு[4] என்னும் நூலி

லிருந்து தெரியவருகிறது. இவ்வூரைப் பாட்டரசன்கோட்டை என்றும் வழங்குகின்றனர். பாட்டரசரான (கவிச்சக்கரவர்த்தி) கம்பர் இறுதிக் காலத்தை இங்கு கழித்ததும், இங்கு மறைந்ததும்தான் இதற்குக் காரணம்.



கண்ணுடைய நாயகி

''கண்ணகி.....விலுக்கு விற்றுக் கொடுத்த நிலமாவது'' என்று கூறும் துண்டுக் கல்வெட்டு ஒன்று கரிகால சோழீஸ்வரர் கோயில் வாயிற்கோபுரத்தின் அடிப்பகுதியில் காணப்பெறுகிறது. கோயில் நுழைவாயிற் பகுதியின் அடிப்பகுதிக் கற்கள், வேறு எங்கோ பழுதடைந்திருந்த கற்கோயில் ஒன்றைப் பிரித்தெடுத்து வந்து இங்கு வைத்துக் கட்டப் பெற்றவை என்று இவ்வூரிலுள்ள வயதானவர்கள் கூறுகின்றனர். அங்ஙனமாயின் இக்கல்வெட்டு அப்பழைய கோயிலுக்கு உரியதாக இருக்க வேண்டும்; அந்தக் கோயில் கண்ணகி கோயிலாக இருந்திருக்க வேண்டும் என்று தெரிய வருகிறது. மேலும் கண்ணாத்தாளாகிய தெய்வமே கண்ணகித் தெய்வம் என்று கூடச் சிலர் கருதுகின்றனர் என்கிறார் பேராசிரியர் சுப. இராமநாதன் செட்டியார்.[5]

நகரத்தார்கள் சோழநாட்டை விட்டுப் பாண்டியநாடு வந்தபோது முதலில் தங்கிய இடம் இதுதான் என்றும், அதனாலேயே அவர் களுக்கு நாட்டுக்கோட்டைச் செட்டியார் என்று பெயர் வந்தது என்றும் மேனாட்டு அறிஞர் ஒருவர் கூறுகிறார்.[6]

மேலும், இப்பகுதிகளில் உள்ள பிற ஊர்களின் கிராமக் கோயில் களில் விபூதி மரியாதை செய்யும் போது, முதலில் சமஸ்தானம், அடுத்து நாட்டார், பின் நகரத்தார் என்னும் வரிசையில்தான் வழங்குவார்கள். ஆனால் இவ்வூரில் சமஸ்தானத்திற்கு அடுத்து நகரத்தாருக்கு விபூதி மரியாதை வழங்கப் பெறுகிறது. இவ்வூர் நகரத்தார் கொண்டிருந்த பழைமையான தொடர்புக்கு இது சான் றாகலாம் என்று பேராசிரியர் கூறுகிறார்.[7]

எனவே நகரத்தார்கள் காலங்காலமாக வழிபட்டு வரும் குலதெய் வக் கோயில்களுக்கான புனிதப் பயணத்தை, இத்துணை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாட் டரசன்கோட்டையில் உள்ள அருள் மிகு கண்ணுடையநாயகி அம்மன் கோயிலிலிருந்து தொடங்குவது பொருத்தமானதுதானே?

இங்கிருந்து வலம்வருவது போன்று எல்லாக் கோயில்களுக்கும் சென்று, இறுதியில் வெற்றியூர் அன்னபூரணியை வழிபட்டோமா னால், ஓங்கார வடிவத்தில் நம் புனிதப் பயணம் நிறைவுறும்.

மேலும், கண்ணுடையநாயகியுடன் தொடர்புடைய குறிப்பு ஒன் றும் இங்கு நினைவுகூரத் தக்கது.

இவ்வன்னை, நாட்டரசன்கோட்டையில் கண்ணுடையநாயகி, காளை யார்கோயிலில் வாள்மேல் நடந்தாள், உருவாட்டியில் பெரிய நாயகி, மரவமங்கலத்தில் அரியநாச்சி, பனங்குடியில் பெரியாள், பாகனேரியில் புல்வநாயகி, வெற்றியூரில் அன்னபூரணி என்னும் பெயர்களில் கோயில் கொண்டிருக்கிறாள் என்று கூறுகிறார்கள்.[8]

ஏழு தேவியரில் முதலாமவரான கண்ணுடையநாயகியின் திருக் கோயிலில் தொடங்கி, ஏழாமவரான அன்னபூரணி கோயிலில் பயணத்தை முடிப்பது சிறப்புடையதன்றோ?

* * *

நடுவில் ஓர் ஊருணியை வைத்து அதைச் சுற்றிக் கண்ணுடையநாயகி கோயிலும், நகரத்தார்களின் மற்றும் இரு குலதெய்வக் கோயில் களான பெரிய கறுப்பணசாமி கோயில், அங்காள பரமேஸ்வரி — குருநாதன் கோயில் ஆகியவையும், வேறு சில கோயில்களும் அமைந்துள்ளன. இவற்றில் கண்ணுடையநாயகி கோயில் வடக் குப் பார்த்து உள்ளது. இதன் காரணமாக இவ்வம்மைக்கு வடக்கு வாய்ச் செல்லி என்றொரு பெயரும் உண்டாம்.[9]

சிவகங்கை தேவஸ்தானத்தைச் சேர்ந்த இக்கோயிலின் நிர்வாகப் பொறுப்பை நகரத்தார்களே ஏற்று நடத்தி வருகின்றனர். நாட்டர சன்கோட்டை நகரத்தார் பெருமகனார் ஒருவர், இக்கோயிலின் கௌரவக் கண்காணிப்பாளராக நியமிக்கப் பெறுவது இங்கு வழக்க மாக உள்ளது.

முழுவதும் கல் திருப்பணியான அழகிய பெரிய கோயிலின் (இதனைப் பூங்கோயில் என்று குறிப்பிடுகிறார் வரகவி முத்துக்

குட்டிப் புலவர்.) எதிரில் சேங்கை என்னும் திருக்குளம் உள்ளது. (சிவகங்கை என்னும் பெயர்தான் சேங்கை என மருவியிருக்கக் கூடும் என்று கூறுகின்றனர்.)

முதலில் பெரியதொரு மண்டபம். இந்தச் சொக்கட்டான் காய்ச் சேரி மண்டபத்தைக் கடந்து உள்ளே செல்கிறோம்.

110 ஆண்டுகளுக்கு முன்னர் இக்கோயிலின் இராஜகோபுரத்துக் கும், இந்த மண்டபத்துக்கும் தச்சு செய்யப் பெற்றதாகவும், இதற் கென நாட்டரசன்கோட்டையிலிருந்த இளையாற்றங்குடிக் கழனி வாசல் பிரிவினர் ஆஸ்திவரி எழுதி, அத்தொகையை ஒருவரிடம் ஒப்படைத்து, 108 ஆண்டுகளுக்கு முன்னர் மண்டபத்துக்கான முதற் கற்றூண் நாட்டப்பெற்றதாகவும் கூறப்பெறுகிறது.[10]

கோயிலினுள் சென்றதும் வலப்புறம் வீரபத்திரர் சந்நிதியும், மூல வர் கருவறைக்கு முன்னர் கொடிமரமும் உள்ளன.

கோயில் மரத்துக்குக் (தலமரம்) கோமரம் என்னும் பெயரும் உண்டு. இது கொடிமரத்தையும் குறிக்கும். கோயில் மரத்தின் சின்ன மாகவே கொடிமரம் ஏற்பட்டிருக்கலாம் என்று கூறுகின்றனர்.[11] திருவிழாக் காலங்களில் இக்கொடிமரத்தில் கொடி ஏற்றுவார் கள்.

அன்னையின் வாகனமான சிம்மத்தையும், பலிபீடத்தையும் கடந்து சென்றால் துவாரசக்திகள் உள்ளனர். கருவறையில் மூலவர் கண் ணுடையம்மை எட்டுக் கரங்களுடன், வலக்காலைக் குத்திட்டு, இடக் காலை அசுரன் மீது ஊன்றியவண்ணம் அமர்ந்துள்ளார். கரங் களில் மூவிலைச் சூலம், உடுக்கை ஏந்தியிருக்கிறார்.

* * *

தனு என்பவனின் புதல்வனான இரம்பன், ஓர் எருமைவழி பெற்ற அசுரன் மகிஷன். அவன் ''தேவர், மானுடர், தைத்தியர் (காசி பருக்குத் திதி என்பவள்வழி பிறந்த மைந்தரும், திதி வயிற்றில் பிறந்த சிங்கிகை என்னும் மகள்வழி வந்தோரும் தைத்தியர் எனப் பெறுவர்), மற்றும் எந்த ஓர் ஆண்மகனாலும் தனக்கு மரணம் வரக் கூடாது; ஒரு பெண்ணால்தான் தனக்கு மரணம் நேரவேண்டும்'' என்று பிரம தேவனிடம் வரம் பெற்றுத் தேவர்களையும், ஏனை யோரையும் துன்புறுத்தி வந்தான்.

சிவபெருமானின் திருவுளப்பாங்கின் வண்ணம், அவருடைய படைத்தல், காத்தல், அழித்தல் முதலான சக்திகளும், ஏனைய சக்தி களும் ஒருங்கே திரண்டு சர்வதேவதா சொரூபிணியான மகாசக்தி தோன்றினாள்.


அவள் சண்டிகையின் உருவங்கொண்டு சிங்க வாகனத்தில் சென்று, தன் திரிசூலத்தால் மகிஷாசுரனின் மார்பில் குத்தி, ஆயிரக்கணக் கான ஒளிக்கதிர்கள் வீசும் சக்கராயுதத்தால் அவன் சிரத்தைக் கொய்தாள்.

அப்போது தன்னைத் துதித்தோரிடம், ''உங்களால் எவற்றைச் சாதிக்க முடியாமல் உங்களுக்கு ஆபத்து உண்டாகுமோ, அப்போ தெல்லாம் என்னை நினையுங்கள்; நான் உங்களை அந்த ஆபத்தி லிருந்து காப்பாற்றுகிறேன்'' என்று வாக்குக் கொடுத்தாள்.

அன்னை அந்த வாக்குறுதியை இன்றளவும் காப்பாற்றித் தேவர்கள் மட்டுமன்றி, மானிடரையும் நாட்டரசன்கோட்டைக் கண்ணாத் தாளாக இருந்து காத்து வருகிறாள்.

* * *

கலியுகத்தில் கண்போன்ற தெய்வமான கண்ணாத்தாளைத் தொழுது கொண்டு, பிராகாரத்தில் வலம் வரும்போது, பைரவர், அபிஷேக விநாயகர் ஆகியோரின் சந்நிதிகளையும் கண்டு வழிபடு கிறோம். மேலும் மூலவர் விமானத்தில் மூன்று தங்கக் கலசங்கள் கம்பிவலைப் பாதுகாப்புடன் இருப்பதையும் காண்கிறோம்.



கலசங்கள்

இத்திருக்கோயிலில் 12.09.1938ல் ஒருமுறையும், 06.09.1976ல் ஒருமுறையுமாக இருமுறை குடமுழுக்கு நடைபெற்ற பின்னர், சரி யாகப் பனிரெண்டு ஆண்டுகள் கழித்த மறுநாள், கருவறை விமானத்தில் இருந்த தங்கக் கலசங்கள் திருட்டுப் போய்விட்டன. (ஒரு கலசம் முழுமையாகவும், மற்ற இரண்டில் தங்கத்தைச் சுரண்டியும் திருடர்கள் எடுத்துச் சென்றனர்)

இது நடந்த சில நாட்களில் திருடர்கள் பிடிபட்டார்கள் என்பதும், நகரத்தார்களின் முயற்சியால் விமானத்தில் மீண்டும் தங்கக் கலசங் கள் பொருத்தப்பட்டன என்பதும் அன்னையின் திருவருளேயாகும்.

இதனைத் தொடர்ந்து 01.05.1989ல் மூன்றாவது குடமுழுக்கு மிகச் சிறப்பாக நடைபெற்றது.

* * *

கல்லல் இளையாற்றங்குடிக் கழனிவாசல் பிரிவினரும், நாச்சியாபுரம், நாட்டரசன்கோட்டை நகரத்தார்களும் இக்கோயிலைக் குலதெய்வக் கோயிலாகக் கொண்டு வழிபடுகின்றனர். கல்லல் நகரத்தார் குடும்பம் ஒன்றில், மூன்று தலைமுறைகளுக்கு முன்னர் ஆண் வாரிசு இல்லாமல், உடல் நலமும் குன்றியிருந்த நேரத்தில், அவர்கள் கண்ணாத்தாளை வேண்டிக் கொண்டதன் விளைவாகக், குடும்பத்தில் ஆண் குழந்தை பிறந்து, நலமும் வளமும் பெற்று வாழ்ந்து வரலாயினர். அதற்கு நன்றிக் கடனாக அவர்கள் தங்கக் கிரீடம் செய்து அம்பாளுக்குச் சாத்தினர். அந்தக் கிரீடம்தான் இப்போதும் தங்க அங்கி சாத்தும்போது அம்பாளுக்குச் சாத்தப் பெறுகிறது.

மேலும், மண்டபம், தளவரிசை (உட்சுற்றுப் பிராகாரத் தளவரிசைக் கல் 1936ல் பாவப்பெற்றது) போன்ற பல திருப்பணிகளையும் நகரத்தார்கள் செய்துள்ளனர். இக்கோயிலுக்கு நகரத்தார்கள் செய்துள்ள திருப்பணிகளையும், சேவைகளையும் கோயில் அர்ச்சகர்களும், சிப்பந்திகளும் மனதாரப் பாராட்டுகின்றனர்.

இங்கு நாள்தோறும் விளாப்பூசை, காலசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்தசாமம் என ஐந்துகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. நண்பகல் 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் எட்டரை மணி வரையிலும் கோயில் திறந்திருக்கும்.

ஆடி மாதத்தில் முளைக்கொட்டுத் திருவிழா, புரட்டாசியில் நவராத்திரி விழா, ஐப்பசி மாதம் கோலாட்டத் திருவிழா, தை மாதத்தில் தைலக்காப்பு உற்சவம் என்பவை நடைபெற்றாலும், இங்கு நடைபெறும் விழாக்களில் சிறப்பானது வைகாசி விசாகத் திருவிழா தான்.

கொடியேற்றம் முதலியவற்றுடன் இவ்விழா பத்து நாட்களுக்கு நடைபெறும். எட்டாம் நாளன்று களியாட்டக் கண்ணாத்தாளை நகரத்தார்களே அலங்கார மண்டபத்துக்குத் தூக்கி வந்து, பலவகையாக அம்பாளை அலங்கரித்து, நகரத்தார்களுக்கே உரிய கழுத்திரு அணிவித்து, வெள்ளி இரதத்தில் வைத்துத் திருவீதி உலா வருவர். ஒன்பதாம் நாளன்று தேர்த் திருவிழா நடைபெறுகிறது.

நாட்டரசன்கோட்டை, மற்றும் அதன் சுற்றுவட்டாரத்திலுள்ள நகரத்தார் வீடுகளில் நடைபெறும் திருமணங்களுக்கு, அவர்கள் இக்கோயிலுக்குச் சொல்லியனுப்பித், திருமணத்தன்று காளாஞ்சி, மாலையுடன் அர்ச்சகர் சென்று மணமக்களை வாழ்த்தி வருவதுண்டு. நகரத்தார் குழந்தைகளுக்குக் கண்ணப்பன், கண்ணாத்தாள், கண்ணம்மை என்று பெயரிடும் வழக்கம் இங்கு நிலவுகிறது. திருவிழாத் தேரோட்டத்தின் போதும், தை மாதத்தில் நடைபெறும் செவ்வாய்ப் பொங்கலன்றும், நகரத்தார்கள் இங்கு குழந்தைகளுக்குத் தொட்டில் கட்டுகின்றனர்.

உவச்சப் பட்டர்கள் இங்கு பல தலைமுறைகளாக அர்ச்சகர்களாக இருந்து வருகின்றனர்.

இம்மைக்கும் மறுமைக்கும் நன்மை பல நல்கும் கண்ணாத்தாளைப், புலவர் பலர் பாடியுள்ள பாடல்களில் சிலவற்றைப் பாடித் துதிப் போம்.

பரவும் சொல்மாலை

1. சார்ந்தவளே சிவன்பங்காய் இடப்புறம் தங்கி,அன்பு
கூர்ந்தவளே! வெளிகொண்ட வளே!மதி கொண்டமட்டும்
சேர்ந்தவளே! நிலைநின்ற வளே!நின்(று) ஒன்றில்மனம்
தேர்ந்தவளே! அருட்கண் ஆயிரம்பெற்ற சின்மயமே!

— ''கண்ணுடையம்மன் வாலையந்தாதி''
கண்ணானந்த சுவாமிகள்

2. திருமா துஅணிசெயப், பாமகள் மேவத், தினந்தினமும்
அருமா தவரும் மிகுயோகு செய்திட, அம்குணக்கின்
வரும்ஆ தவன்கண்டு பங்கயம் பூப்ப, வளர்பனசைப்
பெருமா தர்ஆர்ந்த கண்ணா னந்திபொற்பதம் போற்றுவனே!

— ''கண்ணுடையம்மை மாலை'',
ஐயாக் கறுப்பன் செட்டி

3. பூம்புகார்ப் பதிவாழ்ந்த பொற்பின் மிக்கார்,
பொன்மகுடம் பாண்டியற்கும் புனைந்த செல்வர்,
தேம்பிவரு வோர்க்(கு)எல்லாம் அள்ளி அள்ளிச்
செம்பொன்னை வழங்குகின்ற சீர்த்தி யாளர்,
பாம்பணியும் சிவனைஅல்லால் மற்றோர் தெய்வம்
பணியாதார், தவளமலர் பயிலும் மார்பர்
காம்பீரத் தென்பனசை மேவி வாழும்
கண்ணுடைய நாயகியே! காத்(து)அருள் வாயே!

— ''நாட்டரசன்கோட்டை கண்ணுடையநாயகி பதிகம்''
சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்

குறிப்பு விளக்கம்:

— வாள்நெடுங் கண்ணுமை மங்கை — வாள் போலும் நீண்ட கண்ணை உடைய உமாதேவி

1. நலந்தரும் நாடியம்மன் — இரமேஷ் சாமியப்பா
2. தமிழர் வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும் — ஓர் இயக்கவியல் நோக்கு: கட்டுரை, செந்தமிழ்ச் செல்வி மார்ச் 94
3. தெய்வத்தின் குரல்—முதற் பகுதி
4. முத்துக்குட்டிப் புலவர் இயற்றியது
5. கரிகால சோழீஸ்வரர் கும்பாபிஷேக நகரத்தார் திருப்பணி மலர்'85
6. Castes and Tribes of South India
7. கரிகால...மலர்
8. புலவர் சுப. காளிமுத்து, கண்ணுடைய நாயகியம்மன் கும்பாபிஷேக நகரத் தார் திருப்பணி மலர் '89
9. வெ.க.சு.ந.சுப. குமரப்ப செட்டியார், கண்ணுடைய...மலர்
10. வெ.க.சு.ந.சுப. குமரப்ப செட்டியார், கண்ணுடைய...மலர்
11. ஆலயங்களும், ஆகமங்களும் — நஜன்

உ

பிணிகெட அருளும் பேரருளாளன் பெரிய கறுப்பண சுவாமி

(2. பெரியகறுப்பணசாமி திருக்கோயில், நாட்டரசன்கோட்டை)

நாட்டரசன்கோட்டையில் நடுநாயகமாக உள்ள அருள்மிகு கண்ணுடைய நாயகியம்மன் கோயிலில் அன்னையை வழிபட்ட பின்னர், அங்கிருந்து வலப்புறமாகச் சென்று, கிழக்கே உள்ள சாலையை அடைகிறோம்.

சிறிது தொலைவில் வீடு போன்ற அமைப்பில், ஊருணிக்கரையில் கிழக்குப் பார்த்து அமைந்துள்ளது பெரியகறுப்பணசாமி கோயில்.

பெரியகறுப்பணசாமி பெயரில் இக்கோயில் திகழ்ந்தாலும், இங்கு மூலவராக விளங்குபவர் காமாட்சி அம்மையே!

* * *

அகில உலக மகா சக்தியான அன்னை வழங்கிய கரும்புவில்லையும், மலர்க்கணைகளையும் எடுத்துக் கொண்டு அகங்காரத்துடன் அண்ணலிடம் சென்றான் மன்மதன்.

பரமேசுவரனையே தன்வசப்படுத்திப் பார்வதியிடம் மோகிக்கச் செய்யப் போகிறோம் என்னும் அகம்பாவம் அவனை ஆட்கொண்டிருந்தது.


பரமேசுவரன்மீது மலர் அம்புகளைத் தொடுத்தான்;

அவர், தம் நெற்றிக்கண்ணை மட்டும் இலேசாகத் திறந்தார்.

மன்மதன் எரிந்து சாம்பலானான்; அங்கமே இல்லாத 'அனங்கன்' ஆனான்.

அன்னை அவனுக்கு உயிர் ஈந்து அபயம் தந்தாள். இரதியின் கண்களுக்கு மட்டும் மன்மதன் தெரியும்படியாக அருள்புரிந்தாள்.

''இந்த வில்லையும் அம்புகளையும் உனக்குக் கொடுத்தது, உலகத்தில் உள்ள உயிர்களைக் காமவசப் படுத்துவதற்காகத்தான். அப்



''வீடு போன்று தோற்றமளிக்கும் பெரிய கறுப்பணசாமி கோயில்''

போதுதான் அவர்கள் பிறப்பெடுத்து, வினைகளைக் களைந்து பிறப்பற்ற நிலையை எய்தமுடியும்.

ஆனால் நீயோ தவறான இடத்தில் உன் கைவரிசையைக் காட்டி விட்டாய். பரம்பொருள் பக்திக்குத்தான் வசப்படுவார்'' என்று கூறி, அந்த வில், அம்புகளுடன் அண்ணலின் அருகில் சென்று அவரை அன்பு பொங்க நோக்கினாள்.

அப்போதுதான் அவள் காமாட்சி என்று பெயர் பெற்றாள். காம — அன்பு, அட்சி — கண். அன்பு பொங்கும் கண்களை உடையவள் காமாட்சி — காமக்கண்ணி.

''எந்தக் கண்களால் இறைவனுக்குக் காமத்தை உண்டாக்கினாளோ, அந்தக் கண் பார்வை ஒரு துளி நம்மீது விழுந்தால் போதும். நம் முடைய எல்லா வகையான காமமும் பறந்துவிடும். காலத்தையும் வென்று அமர நிலையை அடைந்துவிடலாம்'' என்கிறார் காஞ்சிப் பரமாசாரிய சுவாமிகள்.[1]

★ ★ ★

கிழக்குப் பார்த்த சந்நிதி.

அன்னையை ஆனந்தமாகத் தரிசனம் செய்துகொள்கிறோம்.

கருவறையும், மகா மண்டபமும், பரிவார தேவதைகளின் சந்நிதி களும் முழுமையான கல் திருப்பணிகள்.

கருவறையின் எதிரே மண்டபத்தைக் கடந்து பலிபீடமும், தூணில் வேலும் உள்ளன.

மண்டபத்தில் நிற்கும் நம் இடப்புறத்தில் நுழைவாயிலை ஒட்டி, முதலில் வீரபத்திரர் சந்நிதி உள்ளது.

சிவபரம்பொருளை மதியாது அலட்சியப்படுத்திய தக்கனின் செருக்கை அழிக்கத் தம் திருச்சடையிலிருந்து சிவபெருமான் தோற்றுவித்தவரே வீரபத்திரர்.

இவர் தம்முடன் தோன்றிய பூதகணங்களுடனும், தாட்சாயணி (தக்கன் மகளாய்ப் பிறந்த பார்வதி) அனுப்பிய காளியுடனும் சென்று, தக்கனது வேள்வியை அழித்தார்; அவன் தலையை அறுத் தார்.[2]

அடுத்துள்ள மூன்று சந்நிதிகளில், முதலாவது சந்நிதியில் பெரிய கறுப்பணசாமி அருள்பாலிக்கிறார்.

காமாட்சிக்கும் கறுப்பணசாமிக்கும் இடையில் அரசனப்பன் சந் நிதி உள்ளது.

கறுப்பணசாமியை அடுத்துள்ள இரு சந்நிதிகளில் முத்துக்கறுப் பாயி அம்மன், ஆரியமாலா, காத்தவராயன், உகந்தநாயகி, சின் னான் ஆகியோர் உள்ளனர்.

எறும்பொன்றுக்குத் துன்பம் செய்த பாவம் நீங்க ஒரு நந்தவனம் வைத்துப் பராமரிக்குமாறு சிவபெருமானால் ஆணையிடப்பெற்ற பார்வதி தேவி, அவ்வாறே ஒரு நந்தவனம் வைத்து, அதைக் காவல் புரியக் காத்தான் என்பவனை ஏற்பாடு செய்தார்.

அவன் மலையாளத்துக்குச் சென்று, தொட்டியத்துச் சின்னான் என்னும் மந்திரவாதியை வெற்றிகொண்டு, அவனைத் தன் அமைச் சனாக்கி, ஆரியமாலா முதலிய பல பெண்களை மணந்தான் என் றும், அவர்களில் வண்ணாரவல்லி (வண்ணார் என்னும் ஏகாலி யர், காத்தவராயரைக் குலமுதல்வராகக் கொண்டவர்கள் என்று தர்ஸ்டன் கூறுவதற்கு இணங்க, அவர்கள் காத்தவராயர்வழி வண்ணாரவல்லியிடம் தோன்றியவர்களாக இருக்கக்கூடுமோ?), கந்தழகி, கறுப்பழகி முதலியோரும் அடங்குவர் என்று காத்தவராயன் கதை கூறுகிறது.

இவர் முத்தம்மை என்னும் தேவதையின் மகன் என்றும், வங்கணச் சின்னான் என்னும் சேவகனுடன் சென்று, ஆரியமாலா உகந் தாயி, கறுப்பாயி ஆகியோரை வசியப்படுத்தி மணந்தான் என்றும் காத்தவராயன் நாடகத்தில் கூறப்பெறுகிறது.[3]

இக்கதைகளை ஒட்டியே காத்தவராயர் மூர்த்தத்துடன் முத்துக்கறுப் பாயி, சின்னான், ஆரியமாலா, உகந்தநாயகி ஆகியோர் சிலை களும் இங்கு இடம் பெற்றுள்ளன போலும்.

இந்தச் சந்நிதிகளின் எதிரே மண்டபத்தைக் கடந்து திருச்சுற்றுச் சுவர் ஓரமாகப் பலிபீடமும், வடமேற்கு மூலையில் திருமஞ்சனக் கிணறும் உள்ளன.

சிலைகள் மிக அழகாகவும், பளிச்சென்றும் உள்ள இத்திருக்கோயிலில் இருமுறை குடமுழுக்கு நடந்திருப்பதாகக் கூறுகின்றனர்.[4] ஆனால் 05.07.79ல் நடந்த குடமுழுக்குப் பற்றிய விவரத்தை மட்டுமே கோயிலில் காணமுடிகிறது.

1933ஆம் ஆண்டில் உபயம் செய்யப்பெற்ற மணி ஒன்றையும் இங்கு காண்கிறோம்.

* * *

கண்ணுடையநாயகி கோயிலில் நடைபெறும் தைமாதச் செவ்வாய்ப் பொங்கல் விழாவில் கிடாய் வெட்டும் வழக்கம் முன்பு இருந்ததாம்.

இரவு 9 மணி அளவில் கறுப்பணசாமி கோயிலிலிருந்து பேய் வெட்டி காளைகள் என்று அழைக்கப்பெறும் சாமியாடிகளைக் கண்ணாத்தாள் கோயிலுக்கு அழைத்துச் செல்வார்களாம். கோயிலில் பலி கொடுத்து வழிபாடு முடிந்த பின்னர், முதல் பானை வைப்பவருடைய குட்டியையும், மற்றும் பலி கொடுக்க விரும்புவோரின் குட்டிகளையும் கறுப்பணசாமி கோயில் சாமியாடிகள் வெட்டுவார்களாம். பின்னர் சுமார் 11 மணி அளவில் பூசாரி எல்லா அடுப்புகளுக்கும் தீபாராதனை செய்வார்.[5]



''காத்தவராயன், ஆரியமாலா, உகந்தநாயகி, சின்னான்''

கண்டனூர் (இலுப்பைக்குடி நகரக் கோயிலைச் சேர்ந்தவர்கள்), காரைக்குடி, தேவகோட்டை, நாட்டரசன்கோட்டை, புதுவயல் நகரத்தார்கள் இங்குள்ள பெரியகறுப்பணசாமியைக் குலதெய்வ மாகக் கொண்டாடுகின்றனர்.

மாசி மாதத்தில் மகாசிவராத்திரியின்போது இங்கு மூன்று நாள் திருவிழா நடைபெறுகிறது. அப்போது நகரத்தார்கள் பேரளவில் இங்கு வந்து வழிபடுகின்றனர்.

நகரத்தார் வீடுகளில் நடைபெறும் திருமணங்களுக்கு இங்கு தகவல் தெரிவித்துத் திருமணத்தன்று மாலை கொடுக்கும் வழக்கம் உண்டு.

நகரத்தார் வீடுகளில் குழந்தை பிறந்தால் இங்கு முடி இறக்குவது, தொட்டில் கட்டுவது வழக்கம்.

முத்துக்கறுப்பன், பெரியகறுப்பன், முத்துக்கறுப்பாயி என்னும் பெயர்களைத் தலைக்குழந்தைகளுக்கு இடும் வழக்கமும் இவர்களி டையே நிலவுகிறது.

இந்து அறநிலையத் துறையின் ஆட்சியில் உள்ள இக்கோயிலில், இன்னமும் உயிர்ப்பலி கொடுக்கும் வழக்கம் இருந்து வருகிறதாம்.

நாள்தோறும் காலை 8.30 முதல் 10 மணி வரையிலும், மாலை 5.30 முதல் 7.30 வரையும் கோயில் திறந்திருக்கும். இருகாலப் பூசை நடைபெறுகிறது.

இடைப்பட்ட நேரங்களில் செல்வோர், கண்ணாத்தாள் கோயி லுக்கு அருகிலுள்ள கடைகளில் விசாரித்து, அகம்படியர்களான இக்கோயில் பூசாரிகளில் ஒருவரை அழைத்து வந்து கோயிலில் வழிபடலாம்.

பரவும் சொல்மாலை

1. திரும்பும் திசைக்கெல்லாம் வந்துமுன் நிற்பாய்,
தியானிக்க வந்து தவுவாய்!
சில்லறைப் பயமிகு வழிக்குவழி விடுதுணைச்
சேவகனு மாக வருவாய்!
கரும்பும் தெவிட்டாத கனியும்என ரசம்ஒழுகு
கவிசொல்ல வந்து கேட்பாய்!
கவிசொன்ன பேர்கேட்ட வரமும்கொடுப் பாய்நீ!
கண்கண்ட தெய்வம் ஐயா!
விரும்பும் தவம்பெற்ற காமாட்சி அம்மன்முதல்,
வீரபத் திரன்,முன் னோடி,
மெய்ச்சமயன், அரசு,முனி, சோனை,இரு ளன்,காளி
வெம்பேச்சி, ராக்கா மியாளும்
பெரும்பந்தி சூழும்உயர் சாலைதனில் ஆலயம்
பெறவீற் றிருந்த துரையே!
பெருகும்அலற் புனல்வாவி திகழ்பனசைப் பதிமேவு
பெரிய கறுப்பண சுவாமியே!

2. தேறாத கலிஎன்ப(து) அணுகாமல், உலகம்
செழிக்க, மழைமா ரிபொழியச்,

செகதலம் தழைய,மறை அந்தணர்கள் வாழ,மிகு
தெய்வ சன்னிதி விளங்க,
வீறாக மதயானை நிறைகண்ட வணிகேசர்,
மேருவை உரைத்துஅ றிந்தோர்,
மிக்கதெய் வங்கள்,குரு, தாய்தந்தை அல்லாமல்
வேந்தரைக் கும்பி டாதார்,
மாறாத புகழ்பெற்ற எழுநகர்[6] மரபுள்ள
வணிகர் நகரப் ரதாபர்
வளர்குடிக ளாகநின் குடியென்று கொண்டாடி
மைந்தரொடு வாழ்வு பெற்றுப்
பேறான செல்வம் தழைக்க,நின் கருணைஅருள்
பெருகு சன்னிதி வாழியே!
பெருகும்அலற் புனல்வாவி திகழ்பனசைப் பதிமேவு
பெரிய கறுப்பண சுவாமியே!

— ''பெரியகறுப்பண சுவாமி பதிகம்'',
வரகவி முத்துக்குட்டிப் புலவர்

குறிப்பு விளக்கம்:

1. தெய்வத்தின் குரல் — முதற் பகுதி
2. அபிதான சிந்தாமணி
3. அபிதான சிந்தாமணி
4. டாக்டர் அர. சிங்காரவடிவேலன், கண்டனூர்
5. வெ.க.சு.ந.சுப. குமரப்ப செட்டியார், நாட்டரசன்கோட்டை
6. (அ) நகரத்தார்களின் ஏழு கோயிற்பிரிவு, ஒன்பது பிரிவுகளாவதற்கு முன்பு, இப்பதிகம் பாடப் பெற்றிருக்கலாம். (இளையாற்றங்குடிக் கோயிலின் உட்பிரிவினரான திருவேட்பூருடையார் பிரிந்துசென்று தனிக் கோயில்களை அமைத்துக் கொண்ட வரை, நகரத்தார்கள் 'ஏழூர் நகரத்தார்' என்றே அழைக்கப்பெற்று வந்தனர். 'இருநிதியம் சேருகின்ற ஏழ்நகரத்தார்.... (''திருமுக விலாசம்'' — பாடுவார் முத்தப்ப செட்டியார்) என்று அழைக்கப் பெற்றவர்கள், 13ஆம் நூற்றாண்டில் (கி.பி.1278ல்) ஒன்பது நகரக் கோயில்களைக் கொண்டிருக்கலாயினர் என்கிறார் டாக்டர் வ. தேனப்பன். (''ஒன்பது நகரக் கோயில்கள்'')

(ஆ). வைசியர்கள் தாங்கள் மூன்று வகுப்பாயுள்ள வேளாளர் குலத்தில் கல்யாணம் செய்திருத்தலால், எப்பொழுதும் ஒற்றுமையாய் இருந்துவர முடியாதென்று கருதி, மூன்று பிரிவுகளாய்ப் பிரிந்து வாழ்ந்து வரலாயினர்.

மேலத்தெரு ஆறு வழியார் அரியூரார் என்றும், தெற்குத்தெரு நான்கு வழியார் சுந்தரத்தார் என்றும், கீழத்தெரு ஏழு வழியார் இளையாற்றங்குடியார் என்றும் அழைக்கப்படலாயினர். இவற்றுள் இளையாற்றங்குடி நகரம் நாட்டுக்கு நடுமண்டலம் ஆதலால், இளையாற்றங்குடி நகரத்தாராகிய ஏழு வழி நகரத்தாருக்கு மட்டும் நாட்டுக்கோட்டை நகரத்தார் என்று பெயர் ஏற்பட்டது.

இந்த இளையாற்றங்குடி நகரத்தாருள்ளும் ஒற்றுமைக்குறைவு ஏற்பட்டதைத் தொடர்ந்து, கி.பி.712 முதல் 718க்குள் இவர்கள் ஒன்பது கோயிற்பிரிவுகளை உண்டாக்கிக் கொண்டனர். (''நகரத்தார் சிறப்பு வரலாறு'' — சித. நடராஜன்)

உ

அடியர் மேல்வினை சிந்தும் அங்காள பரமேஸ்வரி—குருநாதன்

(3. அங்காள பரமேஸ்வரி — குருநாதன் திருக்கோயில், நாட்டரசன்கோட்டை)

சிவபரம்பொருளைச் சிந்தித்து வழிபடப் புகுந்த பாரதம் பாடிய பெருந்தேவனார், ''நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன்''[1] என்று பரம்பொருளைக் குறிப்பிடுகிறார்.

நீல நிற மேனியையும், ஒளி வீசும் முத்துமாலையையும் உடைய உமையம்மையைத் தன் ஒரு கூறாக உடைய ஒப்பற்ற சிவபெருமான் என்பது அவர் கூற்று.

''மலைமகள் இனிதுறை தரும்எழில் உருவினன்'', ''உமையவள் மேவிய திருவுரு உடையவன்'', ''ஆயிழைக்கு ஒரு கூறுபட்ட மேனியான்'' என்று தேவார ஆசிரியர்களும் மாதொருபாகனை — அர்த்த நாரீசுவரனைப் பாடுவர்.

வலப்பாதியில் சிவபெருமானும், இடப்பாதியில் அம்பிகையுமாக ஒருவரை ஒருவர் பிரிக்க இயலாமல் விளங்கும் நிலையே அர்த்த நாரீசுவர மூர்த்தம் என்னும் அம்மையப்பர் வடிவம் எனப்பெறும்.

பிருங்கி முனிவர் மோட்சத்தில் நாட்டங்கொண்டு, சக்தியை விட்டுச் சிவமூர்த்தியை மட்டும் தரிசித்து வந்தபோது, உமாதேவியார் சீற்றங் கொண்டு, அவரிடம் தம் கூறாகிய உதிர — மாமிசங்களை வற்றச் செய்தனர். மேலும், பிராட்டியார் தவம்செய்து பக்தர் வழிபாட்டில் தமக்கும் உரிமை பெற்று, இந்த அர்த்தநாரீசுவர வடிவத்தைப் பெற்றனர்.[2]

ஆண் — பெண் இருபாலரும் ஏற்றத்தாழ்வு இன்றிச் சமநிலையில் அன்பினால் இயைந்து ஒன்றுபட்டு வாழவேண்டும் என்னும் உயர்ந்த கருத்தினை, இவ்வுரு உலகுக்கு உணர்த்துகிறது.

மேலும், இறைவனே பிரபஞ்சம் அனைத்தின் உற்பத்திக்கும் மூல காரணன் என்பதையும், அவனே உயிர் அனைத்துக்கும் தாயாகவும், தந்தையாகவும் விளங்குகிறான் என்ற உன்னதத் தத்துவத்தையும் இது விளக்குகிறது.[3]


நாட்டரசன்கோட்டையில் பெரியகறுப்பணசுவாமி கோயிலில் காமாட்சி அம்மையையும், கறுப்பணசுவாமியையும் வழிபட்டுக் கொண்டு, மீண்டும் வலப்புறமாகச் செல்லும்போது, நகரத்தார்களின் மற்றொரு குலதெய்வக் கோயிலான அங்காள பரமேஸ்வரி — குரு நாதன் கோயில் உள்ளது.

சந்தைத் திடலை ஒட்டி அமைந்துள்ள இத்திருக்கோயிலுக்குள் செல்லு முன்னர், வெளியில் நம் வலப்புறத்தில் ஓட்டுக் கூடம் ஒன்று காணப் பெறுகிறது. அங்கு குருசாமி ஐயா என்று ஒரு மேடை.

அந்தக் குருசாமிதான், இக்கோயிலின் அம்மை பெயருடன் ஒட்டிக் கொண்டுள்ள குருநாதனோ என்று பூசாரியிடம் வினவுகிறோம்.

வளையற்காரச் செட்டியாரான அவர்,[4] (வீட்டில் தெலுங்கு பேசும் இவர்கள், இங்கு பூசாரியாக உள்ள நான்காவது தலைமுறையினர். இதுபோன்ற நான்கு கோயில்களில் இவர்களைச் சேர்ந்தோர் பூசாரி களாக உள்ளனராம்.) மூலவர் அர்த்தநாரீசுவர வடிவம் என்னும் தகவலைத் தெரிவிக்கிறார்.

அங்காள பரமேஸ்வரி — குருநாதனாக, மாதொரு பாகனாக மூலவர் இருந்த போதிலும், அம்மையாகவே, அங்காள பரமேசுவரியாகவே வழிபடப் பெறுகிறார்; அலங்காரங்களும் அத்தகையவே என்று குறிப்பிடுகிறார் அர்ச்சகர்.



அகில நாயகி அங்காள பரமேஸ்வரி திருக்கோயில்

நாம் முதலில் கண்ட ஓட்டுக் கூடத்தினுள், முனீஸ்வரர், வீரபத்திரர் ஆகியோரும், (முனீஸ்வரர் வெறும் மேடை வடிவில்தான் உள்ளார்; வீரபத்திரருக்கு மட்டுமே உருவச்சிலை உள்ளது.) தெற்கு நோக்கிக் குருசாமி ஐயா, அகோர வீரபத்திரர், அக்கினி வீரபத்திரர் (இம் மூன்றும் மேடைகளே) ஆகியோரும் உள்ளனர்.

வீரபத்திரருக்கு நேர்ந்து கொள்பவர்கள் வடைமாலை சாத்தி வழி படுவது இங்கு சிறப்புடையதாகக் கருதப்பெறுகிறது.

இந்தக் கூடத்தில் வீரபத்திரர் இருக்கும் இடத்தில் மட்டும் விமானம் உள்ளது.

இதன் எதிரில், நமக்கு இடப்புறத்தில் முதலில் கறுப்பண்ணசாமியும், அடுத்து முனிஐயா, கொம்புக் கறுப்பையா ஆகியோரும் (கறுப் பண்ணசாமிக்கு மட்டுமே உருவச்சிலை உள்ளது.) மேற்கூரையின்றி வடக்கு நோக்கிக் காணப்பெறுகின்றனர்.

கோயிலினுள் செல்கிறோம். ஸ்ரீகுருநாதன் கோயில் என்றே நுழை வாயிலில் எழுதப்பெற்றிருக்கிறது. வலப்புறம் மேடை அமைப்பில் சோனையாவும், தலமரம் போன்று ஒரு வில்வமரமும் உள்ளன.

நுழைவாயிலிலிருந்து கருவறை வரை ஓட்டுக்கூடம்.

கருவறைக்கு முன் உள்ள மண்டபத்தில் அம்மையப்பரின் வாகன மான விடை (நந்தி) மட்டும் உள்ளது. வாகனமான நந்தி இருப்பது சைவ மரபைக் குறிக்கிறது.

கருவறையின் முன்னால் விநாயகர்.

விநாயக மூர்த்தத்தையுமே அர்த்தநாரீசுவர வடிவமாக உருவகிக் கிறார் காஞ்சி பரமாச்சாரிய சுவாமிகள்.

மாதா — பிதாக்கள் பாதிபாதி ஆண் — பெண்களாக, அர்த்த நாரீசுவர உருவத்தில் இருக்கிற மாதிரியே, புத்திரரும் கொஞ்சம் இருந்துகாட்டுகிறார். அப்படியே காப்பி பண்ணினதாக இருக்க வேண்டாமென்று, அங்கே வலப்பக்கம் ஆண்வடிவம், இடப்பக்கம் பெண்வடிவம் என்றிருந்தால், இவரோ வலப்பக்கம் தந்தம் இல்லாமல் பெண்யானை (பிடி)யாகவும், இடப்பக்கம் தந்தம் உள்ள ஆண் யானை (களிறு) ஆகவும் இருக்கிறார்.[5]

அர்த்தநாரீசுவரராகக் கருவறையில் உள்ள அங்காள பரமேசுவரி — குருநாதருக்கு முன், அதே உருவைக்காட்டும் விநாயகரும் இருப்பது பொருத்தந்தானே! (கருவறையில் உள்ள அம்மையப்பரை அப்படியே படம் பிடித்துக் காட்டிவிட முயன்றேன். அடியேன் 'அரைவேக்காடு' தானே; அது கறுப்புச் சிலையாகத்தான் தெரிந்ததே தவிர, முழுமை யான உருவம் வெளிப்படவில்லை!)

சந்நிதியின் இடப்புறம் பேச்சியம்மன், இராக்காச்சியம்மன் (சிலைகள்) உள்ளன.

பேச்சியம்மனையும் சிறு (கிராம) தெய்வ நிலையிலிருந்து உயர்த்திக் காட்டுகிறார் காஞ்சி சங்கராச்சாரிய சுவாமிகள்.

கிராம ஜனங்களும் கூட சரஸ்வதியை நீண்ட காலமாக வழிபட்டிருக் கிறார்கள். ''பேச்சாயி, பேச்சாயி (பேச்சியம்மன்) என்று சொல்கிற

கிராம தேவதை, பேச்சுக்கு ஆயி(தாய்)யான வாக்தேவி சரஸ்வதி யைத் தான் குறிப்பிடுகிறது''.[6]

(இ)ராக்காச்சி என்பதற்கு விளக்கம் எழுதும் டாக்டர் கே.ஏ. குண சேகரன்,[7] போதிய அளவு விளக்குகள் அமைக்கப்படாத நிலையில் கிராமப் புறங்களில், இரவுநேரம் அச்சத்தைத் தரத்தக்கதாக உள்ளது; இருளின் அச்சத்தைப் போக்கிக் கொள்ளும் நோக்கத்தில் (இ)ராக் காச்சி என்ற உருவமற்ற பெண் தெய்வத்தை நாட்டுப்புற மக்கள் வழிபட்டு வருகின்றனர் என்று, கிராமப்புற அம்மையார் ஒருவர் கூறிய தகவலை மேற்கோள் காட்டுகிறார்.

(இராக்காச்சல் என்றால் இரவில் காயும் சுரம் என்று பொருள் கொள்கின்றனர். அதே போன்று இரவில் தனியாகச் செல்லும்போது தாய் (ஆச்சி) போன்று துணை வருபவள் என்னும் பொருளிலும் (இ)ராக்காச்சி உருவாகியிருக்கலாம்.)

அதன் வலப்புறம் (அடுத்த சந்நிதியில்) மதுரை வீரனும், கப்பரை ஓட்டுக்காரியும் மேடையாகக் காட்சி தருகின்றனர்.

அதையும் அடுத்து இருளப்ப சுவாமி இருக்கிறார் சிலை வடிவில்.

இந்தச் சந்நிதிகளுக்கும் கருவறையைப் போன்று விமானம் கட்டப் பெற்றுள்ளது.

21 மூர்த்தங்கள், 61 கோயிலை உள்ளடக்கியது இக்கோயில் என் கிறார் பூசாரி. (அதன் பொருளைத்தான் புரிந்து கொள்ள முடிய வில்லை. இதே போன்று இன்னும் பல கோயில்களிலும், அர்ச்சகர் களால் இதற்குச் சரியான விளக்கம் கூறமுடியவில்லை.)

1925ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7ஆம் நாள் என்று குறிக்கப்பெற் றிருக்கும் இங்குள்ள மணி, இக்கோயிலின் பழைமையை ஓரளவு தெளிவுபடுத்துகிறது.

இங்கு 3 முறை கும்பாபிஷேகங்கள் நடந்திருப்பதாகப் பூசாரி குறிப் பிடுகிறார். ஆனால் எந்தக் கும்பாபிஷேகத்துக்கான நாளையும் கோயிலில் கண்டுகொள்ள எந்தக் குறிப்பும் காணப்படவில்லை.

1962ஆம் ஆண்டில் இரண்டாம் முறையாகக் குடமுழுக்கு நடை பெற்றது என்றும், கடைசியாக நடைபெற்றது 1984ல் என்றும் அவர் சொன்னாலும், குடமுழுக்கு விழாவின்போது அச்சிட்டு வழங்கப்பெற்ற ''ஸ்ரீ தேவி அங்காளீஸ்வரி கவசப்பாமாலை'' என்னும் நூலில், 1989 செப்டம்பர் 7ஆம் நாள் என்று அச்சிடப் பெற்றிருக்கிறது.

நாள்தோறும் ஒருகாலப் பூசை அர்ச்சகருக்கு வசதியான நேரத்தில் நடைபெறுகிறது. ஆனால் கண்ணுடைய நாயகியம்மன் கோயிலின் அருகிலுள்ள கடையிலிருந்து பூசாரியை அழைத்துவந்து, அம்மை யப்பரை எந்த நேரத்திலும் வழிபட்டு மகிழலாம்.

வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளில் இங்கு மாவிளக்கு வைப்பது சிறப்புடையதாம்.

* * *

மாசிமாதச் சிவராத்திரி இங்கு சிறப்பாகக் கொண்டாடப்பெறுகிறது. முதல் நாள், முதல்நாள் பூஜை என்னும் சடங்கு நடைபெறுகிறது. அப்போது கப்பரை எடுத்து எறிசோறு கொடுத்து வழிபடுவர்.

சிவராத்திரியின்போது கண்ணுடையநாயகி அம்மன் கோயிலிலிருந்து கரகம் எடுத்து வந்து, பச்சைவாழை பரப்பி அபிஷேக ஆராதனைகள் செய்கின்றனர்.

மூன்றாவது நாள் அம்பாள் பாரி வேட்டைக்குச் செல்கிறார்.

* * *

பூசாரிகளே கோயிலை நிர்வகித்து வந்தாலும், நகரத்தார்களின் மேற்பார்வையிலேயே கோயில் திருப்பணிகளும், மராமத்துகளும் மேற்கொள்ளப் பெறுகின்றன.

இக்கோயிலுக்கான மின்விளக்குகளை நகரத்தார் குடும்ப ஆச்சி ஒருவரே பொருத்தியிருக்கிறார்.

நாட்டரசன்கோட்டையைச் சேர்ந்த சூரக்குடி நகரத்தார் சுமார் 300 புள்ளிகள் இக்கோயிலைக் குலதெய்வக் கோயிலாகக் கொண்டுள்ளனர்.

இவர்களின் வீடுகளில் நடைபெறும் திருமணங்களின்போது கோயிலுக்குச் சொல்லியனுப்புவதும், கோயிலிலிருந்து மாலை கொண்டு செல்வதும் இப்போதும் வழக்கமாக இருந்து வருகின்றன.

இக்கோயிலைக் குலதெய்வக் கோயிலாகக் கொண்டவர்கள் அருகிலுள்ள பெரியகறுப்பண சுவாமி கோயிலுக்குச் செல்லமாட்டார்களாம். அதே போன்று பெரியகறுப்பண சுவாமியைக் குலதெய்வமாகக் கொண்டவர்கள் (சுமார் 500 புள்ளிகள்) இக்கோயிலுக்கு வரமாட்டார்களாம். இந்தப் பழக்கம் தொன்றுதொட்டு நிலவி வருகிறதாம்.

சிவராத்திரியின்போது கண்ணுடையநாயகி அம்மன் கோயிலுக்குக் கரகம் எடுக்கச் செல்லும்போதும், எடுத்து வரும்போதும் கறுப்பண சுவாமி கோயில் வழியாக வரமாட்டார்களாம். அதே போன்று அக்கோயிலாரும் குருநாதன் கோயிலை ஒதுக்கியே நடந்து கொள்ளுகின்றனராம். (ஏன் இந்த ''மறந்தும் புறந்தொழாக்'' கொள்கை?)

கருவறைக்கு முன்னுள்ள மண்டபத்தில் தொட்டில் கட்டுவதற்கான இரு வளையங்கள் உள்ளன.

இந்த வளையங்களில் தாயாரின் கூறைப்புடவை (மணமகள் உடுத்தும் புதுப்பட்டுப் புடவை)யைக் கொண்டு தொட்டில் கட்டி அதில் பிள்ளையை இட்டு, அதற்கென உள்ள தாலாட்டுப் பாடல்களைப் பாடித் தொட்டில் ஆட்டி நேர்த்திக் கடனை நிறைவேற்றும் வழக்கம் இங்கு நிலவுகிறது. இரு வளையங்களிலும் மாறி மாறித் தொட்டில் கட்டுகின்றனர்.

அங்காளீஸ்வரி கவசப் புத்தகத்தில் அடங்கியுள்ள சில பாடல்கள் இங்கு கொடுக்கப் பெற்றுள்ளன.

அவற்றைப் பாடி அங்காள பரமேசுவரி — குருநாதனை வணங்கி அல்லல் தீர்ந்து அகமகிழ்வோம்!

பரவும் சொல்மாலை

1. மங்கையர் போற்றும் மாதவச் செல்வி,
   மகிழ்ந்திட அருளும் ஸ்ரீதேவி!

அங்கயற் கண்ணால் அருள்பா லிப்பாய்
ஆனந்த மயிலே, அங்காளி!
தங்கமு கத்தினில் தளிர்விடும் ஜோதி,
தாரணி போற்றும் கல்யாணி!
சங்கத் தமிழினில் சிந்துகள் பாடிட
தாயவ ளே!தேன் சொல்தா,நீ!

ஜெய ஜெய ஈஸ்வரி, ஜெய ஜெய ஈஸ்வரி,
அங்கா ளீஸ்வரி, மாகாளி!

— ஸ்ரீ அங்காளீஸ்வரி கவசம்,
கவிஞர் சுப சுந்தரம்

2. ஆராரோ கண்ணே! ஆரீரோ மானே!
கரும்பான தேனே! காவேரி மீனே!
தென்பாண்டி நாடு, தென்மாறர் வீடு,
சிங்கார நாட்டில் தென்பனசை ஊரு.

குலதெய்வம் நீயே! குரு,தெய்வம் நீயே!
சிலையான மகளே! தேனூறும் மலரே!
பல்லாண்டு கோடி முன்கோடி நாளில்
சொல்லாண்ட தமிழ்போல் சுவையான பொருளே!
கல்சூழ்ந்த மலையில் நீரூற்று நீயே!
பொல்லாத உலகில் அன்பான தாயே!
எரிகின்ற நெருப்பைப் பூவாக்கு வாயே,
தெரிந்தாலும் தவறை எளிதாக்கு வாயே,
வஞ்சங்கள் வந்தால் பொடியாக்கு வாயே,
நெஞ்சங்கள் வாழ வழிகாட்டு வாயே!

யாராரோ பாடும் ஆராரோ அல்ல,
நான்பாடும் தாலாட்டுக் கேளாயோ மெள்ள!

— ''ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி தாலாட்டுப் பாடல்கள்'',
கவிஞர் சுப சுந்தரம்

குறிப்பு விளக்கம்:

1. ஐங்குறு நூறு — கடவுள் வாழ்த்து
2. அபிதான சிந்தாமணி
3. ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் மாத இதழ்
4. ஆர்.ஜி. கண்ணன் செட்டியார், நாட்டரசன்கோட்டை
5. தெய்வத்தின் குரல் — 6ஆம் பகுதி
6. தெய்வத்தின் குரல் — முதற் பகுதி
7. நாட்டுப்புற நடனங்களும் பாடல்களும்

உ

அருள்நிதி தரவரும் அடைக்கலங்காத்த அம்மன்

(4. அடைக்கலங்காத்த அம்மன் திருக்கோயில், வாணியங்குடி)

அர்த்தநாரீசுவரராக உள்ள அங்காள பரமேசுவரி — குருநாதனை, அம்பிகையாகவே நாட்டரசன்கோட்டையில் வழிபட்டபோது, விநாய கப் பெருமானையும் ஆண் — பெண் இணைந்த அர்த்தநாரீசுவர வடிவமாகக் காஞ்சிப் பெரியவர்கள் வருணித்திருந்ததைக் கண்டோம்.

அங்கு அர்த்தநாரீசுவர வடிவம் அம்பிகையாக வழிபடப் பெற்றது.

நாட்டரசன்கோட்டையை அடுத்துள்ள வாணியங்குடியில் அந்த மாதொருபாகனின் மகனும், அம்பிகையாக உருமாறியிருக்கும் அதி சயத்தைக் காண்கிறோம்.

நாட்டரசன்கோட்டையிலிருந்து நடராஜபுரம் செல்லும் வழியில் புகை வண்டித் தடத்தைக் கடந்ததும், வலப்புறம் செல்லும் சாலையில் திரும்பி வாணியங்குடி கிராமத்தை அடைகிறோம்.

* * *

சிறிய கோயில்.

கோயில் அமைப்பு, வெளித்தோற்றம், சிலைகள் யாவுமே பிள்ளை யார் கோயிலைத்தான் நமக்குப் பறைசாற்றுகின்றன.

கோயிலின் நுழைவாயில் மேலே உள்ள மாடத்தில் சுதையினாலான விநாயகர்தாம் காட்சி கொடுக்கிறார்.


அம்மன் கோயில் என்றார்களே, இது விநாயகர் கோயிலாக இருக் கிறதே; நிச்சயம் தவறான கோயிலுக்குத்தான் வந்துவிட்டோம் என்று தடுமாறுகிறோம்.

அறங்காவலர் வருகிறார்; ''உள்ளே வாருங்கள், இதுதான் நீங்கள் தேடி வந்த கோயில்'' என்கிறார்.

வியப்புடன் திருச்சுற்றுச சுவரின் நான்கு மூலைகளையும் கவனிக் கிறோம்.

இருமூலைகளில் பூதகணங்களும், காளைகளும் உள்ளன;

இரு மூலைகளில் பெண் பூதங்களும், சிம்மங்களும் உள்ளன.



அடைக்கலங்காத்த அன்னை(பிள்ளை)யின் திருக்கோயில்

விநாயகரான மூலவர், இங்கிருந்தே தம் உருமாற்றத்தைத் தொடங்கியிருக்கும் உண்மை புலப்படுகிறது.

உள்ளே. செல்கிறோம். அழகிய சிறு கருவறையும், மகா மண்டபமும் உள்ளன.

கருவறைக்கு முன்னால்... அங்கும் விநாயகர் குடும்பம்தான். ஆம், பிள்ளையாரின் வாகனமான மூஷிஹம்தான் நான்கு கால்களையும் ஊன்றி நின்ற நிலையில் காட்சி தருகிறது.

கருவறையைக் காண்கிறோம்.

'பலபல காமத்தராகிப் பதைத்தெழுவார் மனத்துள்ளே கலமலக்கிட்டுத் திரியும் கணபதி என்னும் களிறு' தான் காட்சி கொடுக்கிறார்.

ஆண் குழந்தைக்குப் பெண் குழந்தையின் வேஷம்! அம்பிகையைப் போன்றுதான் இவருக்குச் சேலை உடுத்திச் சிங்காரிப்பார்களாம்!

ஆனால் நமக்கு விநாயகரைக் காண வேண்டுமே; அர்ச்சகரிடம் சொல்லி அலங்காரத்தைக் களைந்துவிட்டு வேஷதாரியான அந்த விநாயகரைப் படம் பிடித்துக் கொள்கிறோம்!

(அந்த நேரத்தில் அவசரமாக அங்கு வந்த அறங்காவலர், மூலவரைப் படம்பிடிக்க இதுவரை நாம் யாரையும் அனுமதித்ததில்லையே என்று

அர்ச்சகரைக் கோபிக்கிறார்; நல்ல வேளையாக வேறு பேச்சில் அவர் கவனம் திரும்பியதோ, நம் படம் பிழைத்ததோ!)

அரசு குறிப்பில்கூட 'அடைக்கலங்காத்த பிள்ளையார்' என்றுதான் இவருக்குப் பெயர் பதிவாகியிருக்கிறது.

பிறகு ஏன் இந்த பெயர்(உரு)க் குழப்பம்?

தனயனைக் காட்டிலும் தாயிடம் முறையிட்டால் — அடைக்கலம் கோரினால், ஆதரவு — அரவணைப்பு அதிகம் இருக்கும் என்னும் நம்பிக்கையோ என்னவோ, ஆனைமுகத்தவனை அன்னையாகவே கருதி வழிபடுகின்றனர்.

இவரை அம்பிகை என்றே வலியுறுத்த வேண்டுமே, அதற்காக 13.06.90ல் பட்டமங்கலம் நகரத்தார் ஒருவரைத் திருப்பணிக் குழுத் தலைவராகக் கொண்டு கும்பாபிஷேகம் நடைபெற்ற நேரத்தில், கருவறையின் ஒரு மூலையில் அம்பாள் சிலை ஒன்றையும் பிரதிஷ்டை செய்துள்ளனர். மூலவரின் வலப்பக்கம் நாகம் உள்ளது.

மூலவர் விநாயகரின்கீழ் வைக்கப்பெற்றுள்ள இயந்திரத் தகடு அம்பாளுக்கு உரியதுதான் என்கிறார் அறங்காவலர்.[1]

யானையின் நடை, அழகும், கம்பீரமும் வாய்ந்தது. அதைக் 'கஜகதி' என்பார்கள். உருவத்தில் ஆண்மை, பெண்மை இரண்டும் கலந்துள்ளது போன்று, நடை (கஜகதி)யிலும் அவை இரண்டும் கலந்துள்ளன. அதுதான் கஜகதிக்குள்ள சிறப்பு. அதனால் கம்பீரமான ஆண்களின் நடையை அதற்கு ஒப்பிடுவதோடு நிற்காது, உத்தமப் பெண்களின் உயர்நடை அழகையும் அப்படியே சொல்லி, அவர்களைக் 'கஜகாமினி' என்று கூறுவார்கள்.[2]

இவ்வாறு உருவத்தாலும், நடையாலும் ஆண்மை, பெண்மை இரண்டையும் கொணட அடைக்கலங்காத்தபிள்ளையாரை, அடைக்கலம் காத்த அன்னையாக ஏற்றுக் கொண்டதில் வியப்பில்லைதான்!

பிராகாரத்தில் இடப்புறம் வெற்றி விநாயகரும், வலப்புறம் சுப்பிரமணியரும் உள்ளனர்.

* * *

சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர் இங்கு வாழ்ந்து வந்த நகரத்தார்கள், பின்னர் நாட்டரசன்கோட்டை, பட்டமங்கலம் ஆகிய ஊர்களுக்குக் குடியேறியதாகச் சொல்லப் பெறுகிறது.

நகரத்தார்கள் இங்கு வாழ்ந்து வந்த காலத்தில் அம்பாளை வழிபட்டு வந்திருக்கின்றனர்.

அவர்கள் இங்கிருந்து வெளியேறிய பின்னர், காலவெள்ளத்தில் அந்தக் கோயில் இருந்த இடம் சிதைவுற்றுப் புதர் மண்டிப் போயிற்று.

இங்கிருந்து சென்ற நகரத்தார் குடும்பம் ஒன்றில் நிலவிய பிள்ளை இல்லாக் குறையை, அவர்களின் 'ஆதி' அம்பிகை தீர்த்து வைத்திருக்கிறாள்; அடைக்கலம் கொடுத்திருக்கிறாள்.

அன்னை 'பிள்ளை'யானாள்; 'பிள்ளையாரும்' ஆனாள்.

அதனால்தான் 'பிள்ளை'யை 'அன்னை'யாக வழிபடுகின்றனர் போலும்!

* * *

நாட்டரசன்கோட்டை, பட்டமங்கலம் (இளையாற்றங்குடிக் கோயிலார்) நகரத்தார்களும், வெள்ளாளர்களும் 'அம்மை'யைக் குலதெய்வமாகக் கொண்டாடுகின்றனர்.


நாட்டரசன்கோட்டை நகரத்தார்களே பல ஆண்டுகளாக இக் கோயிலை நிர்வகித்து வந்திருக்கின்றனர்.

பல ஆண்டுகளுக்கு முன்னர், சிதைவுற்றுச் சேதமுற்றுப் போயிருந்த சிறிய கோயிலான இதனைப் பெரிதுபடுத்திப் புதுப்பிக்கப் பட்டமங்கலம், பாகனேரி நகரத்தார்கள் முயன்றபோது, அம்பாளின் திருவுளச் சம்மதம் கிடைக்கவில்லை.

ஒப்புதலின்றித் திருப்பணி வேலையில் ஈடுபட்ட கிராமத்துப் பெரியவர்களின் உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டது.

பல ஆண்டுகள் கழித்தே பட்டமங்கலம் செட்டியாரின் சீரிய தலைமையில் திருப்பணி நிறைவேறியது.

காலை 6 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் 7.30 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. அண்டி வருவோருக்கு அடைக்கலம்கொடுக்க அன்னை (மகன் வடிவில்) காத்திருக்கிறாள்.



நடை சாத்தியிருந்தாலும், பூசாரி வீடு அருகிலேயே இருப்பதால், அவரை அழைத்து வந்து, அடைக்கலங்காத்த அன்னையை வழிபட்டு மகிழலாம்.

சித்திரை மாதம் கார்த்திகை நட்சத்திரத்தில் காப்புக் கட்டிப் பத்து நாள் திருவிழா நடைபெறுகிறது.

நகரத்தார்களும் திருவிழாவில் கலந்து சிறப்பித்து அன்னையின் அருளைப் பெற்று மகிழ்கின்றனர்.

9 ஆவது நாள் தெருக்கூத்து நடத்துகின்றனர்.

ஊர்மக்கள், இந்தத் திருவிழா நாட்களில் விரதமிருந்து, பால்குடம் எடுத்தல், காவடி எடுத்தல், அலகு குத்தித் தேர்க் காவடி இழுத்தல் போன்ற வழிகளில் வழிபாடு செய்கின்றனர்; வேண்டுதல்களை நிறைவேற்றுகின்றனர்.

திருவிழாக்காலத்தில் ஊறு விளைவிக்க முயல்வோர், குழப்பம் விளை விப்போர் அன்னையின் தண்டனைக்கு ஆளாகியே தீருவராம்.

'ஆருருவ உள்குவார் உள்ளத்துள்ளே, அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்'[3] என்னும் அப்பர் சுவாமிகளின் திருப்பூவணப் பதிகப் பாட்டின் அடிகளை நினைவு கூர்ந்து, வேழமுகத்து அண்ணலின் திருவுருவில் 'மின்னனைய நுண்ணிடையாள்' தோன்றுவதைக் கண்டு வழிபட்டு மகிழ்வுடன் திரும்புகிறோம்.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

பொருந்தாத செய்கை பொலியக் கண்டேன்,
　　போற்றிசைத்து விண்ணோர் புகழக் கண்டேன்,
பரிந்தார்க்(கு) அருளும் பரிசும் கண்டேன்,
　　பாராகிப் புனலாகி நிற்கை கண்டேன்,
விருந்தாய்ப் பரந்த தொகுதி கண்டேன்,
　　மெல்லியலும் விநாயகனும் தோன்றக் கண்டேன்,
மருந்தாய்ப் பிணிதீர்க்கு மாறு கண்டேன்,
　　வாய்மூர் அடிகளைநான் கண்ட வாறே.

திருச்சிற்றம்பலம்

— அப்பர் சுவாமிகள், 6 ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

1. பெரி. உடையார் அம்பலம், வாணியங்குடி
2. தெய்வத்தின் குரல் — 6 ஆம் பகுதி
3. 6 ஆம் திருமுறை

உ

வேகம் கெடுத்தாளும் வெட்டுடைய ஐயனார்

(5. வெட்டுடைய ஐயனார் (காளி) திருக்கோயில், அரியாக்குறிச்சி, கொல்லங்குடி)

''கல்லாத மாந்தரின் கண்ணீரை நீக்கிடுவாள்,
கற்றோரின் நெஞ்சத்தில் காவியச் சுடராவாள்!''[1]

அவள்தான் அநீதியை அழித்து நீதியை நிலைநாட்டும் கொல்லங்குடி வெட்டுடைய காளி!

ஐயனாரை அண்டிவந்த காளி, அரியாசனத்தில் அமர்ந்து கோலோச்சும் ஊரே கொல்லங்குடி.(பூங்குடியிலிருந்து இங்கு வந்தவளே இந்தக் காளி என்று கோயில் பூசாரிகள் கூறுகின்றனர்.[2])

வெட்டுடைய ஐயனார் வெறும் பெயரளவிலேயே இருக்கிறார். திருவிழாக்கள் கூட இவருக்குக் கிடையாது. இக்கோயிலில் எல்லாத் திருவிழாக்களும் வெட்டுடைய காளிக்கே நடைபெறுகின்றன.

சிவகங்கை — காளையார் கோயில் சாலையில் உள்ள கொல்லங்குடியின் பிரதான சாலையில் 'வெட்டுடையார் கோயில்' பெயர் அறிவிப்புப் பலகை உள்ளது; அந்த இடத்தில் வலப்புறம் திரும்பி 1.6 கி.மீ சென்று கோயிலை அடையலாம்.

தூய்மையான இடமே இறைவன் உறையும் கோயில் என்பார்கள். அதற்கு இலக்கணமாகத் திகழ்கிறது, சிவகங்கை தேவஸ்தானத்துக்குச் சொந்தமான, முழுவதும் கல் திருப்பணி செய்யப் பெற்ற இந்தப் பெரிய கோயில்.

பளிச்சென்று உள்ள சிலைகள் நம்மைப் பரவசத்தில் ஆழ்த்துவதோடு பக்திப் பெருக்கையும் தோற்றுவிக்கின்றன.

(நாங்கள் கோயிலுக்குச் சென்ற நேரத்தில் இராஜகோபுர — விமான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. கடந்த (1994) ஆகஸ்ட் திங்கள் 24ஆம் நாள் கும்பாபிஷேகம் நடைபெற்றதாகச் செய்தித்தாள்கள்வழி அறிந்தோம்.) அழகாபுரி, தேவகோட்டை நகரத்தார் பெருமக்கள் இருவர் முன்னின்று இவ்விழாவினைச் சிறப்பாக நடத்தி வைத்தனர்.[3]

விவரம் தெரிந்து, இது மூன்றாவது குடமுழுக்கு. 16.06.40ல் ஒன்றும், 26.06.77ல் ஒன்றுமாக, இதற்கு முன்னர் இருமுறை கும்பாபிஷேகங்கள் நடைபெற்றுள்ளன.

சிறிய எட்டுக்கால் மண்டபத்தின்வழி இராஜகோபுரத்தைக் கடந்து உள்ளே செல்கிறோம்.



கோயிலின் முன்புறத் தோற்றம்.
இராஜகோபுர வேலை நடைபெறுகிறது

ஐயனாரின் வாகனமான யானை, பலிபீடங்களைத் தாண்டிச் சென்றால் நம் இடப்புறம் குதிரைமீது ஒருவர் அமர்ந்திருக்கிறார்.

கறுப்பையா வேளார் என்று பெயர்.

ஊரின் இடப்புறமுள்ள பொய்சொல்லா மெய்ய ஐயனார் கோயிலில் இதேபோன்று இன்னொருவர் இருக்கிறார். பெயர் காரியப்ப ஐயா. இருவரும் சகோதரர்கள். இவர்களின் பங்காளித்துவக் கதையை அந்தக் கோயிலுக்குச் செல்லும் போது தெரிந்துகொள்வோம்.

* * *

மகாமண்டபத்திலுள்ள துவார பாலகர்கள் நம்மை உள்ளே செல்ல அனுமதிக்கின்றனர்.

கருவறையின் முன்புறம் விநாயகரும், சுப்பிரமணியரும் தரிசனம் தருகின்றனர்.

கருவறையில் வெட்டுடைய ஐயனார் அமர்ந்திருக்கிறார்; இருபுறமும் தேவியர் பூரணை, புஷ்கலை.

அரிய பூரணை புட்கலை யாம்இரு
தெரிவை மார்முலைச் செங்கள பத்(து)ஒளி
விரவு சுந்தர மேருஒப் பாம்புயக்
குரிசில் தண்டைக் குரைகழல் போற்றுவாம்.[4]

பக்தர்கள் அனைவரும் வெட்டுடைய காளியிடமே விரும்பிச் செல்வதால், ஐயனாருக்குத் திருவிழா இல்லாதது மட்டுமில்லை; பக்தர் குழாமும் இல்லை; பரிதாபமாக இல்லையா?

ஐயனார் கிழக்கு நோக்கி அமர்ந்திருக்க, அவருக்கு எதிரே (நேர் எதிரில் இல்லாமல், வலப்புறம் ஒதுங்கியே) மேற்கு நோக்கி இருக்கிறார் வெட்டுடைய காளி. (மூலங்குடிப் பொன்னன் கோயிலில் ஐயனாருக்கு நேர் எதிரிலேயே காளி இருக்கிறார்.)

காளியைக் கால உருத்திரருடைய சக்தி என்பர். அழிவுக்குக் காரணமாகிய காலத்தை நடத்தும் உருத்திரர், அந்த அழிவை எந்தச் சக்தியால் செய்து முடிப்பாரோ அச்சக்தியே காளி எனப்பெறும்.

இக்காளி சண்ட, முண்டர்களாகிய அசுரர்களைக் கொன்று 'சாமுண்டி' என்றும், தாரகனைக் கொன்று 'தாரகமர்த்தனி' என்றும் பெயர் பெற்றாள்.[5]

'வல்லைவரு காளியைவ குத்துவலி
யாகிமிகு தாரகனைநீ
கொல்லென விடுத்தருள் புரிந்தசிவன்...'[6]

என்னும் தேவாரப் பாடல் அடிகள், காளியின் தாரகவதத்தினை எடுத்தியம்புகின்றன.

சிவமூர்த்தியின் கட்டளையைத் தொடர்ந்து, சக்தியின் ஒரு கலை, சிவமூர்த்தியின் விஷக்கறை படிந்து, கனற்கண்ணில் பிறந்து வெளிப்பட்டது. காளமாகிய விஷக்கறை படிந்து வந்ததால், அவ்வுரு 'காளி' எனப் பெற்றது என்றும் கூறுவர்.[7]

சிவமூர்த்தியின் கோபம் ஒரு பெண் உருவாய்த் திரண்டது; அதுவே காளி உரு என்றும் சொல்வார்கள்.[8]

வெட்டுடையார் காளியின் இச்சந்நிதியே இக்கோயிலில் பிரபலமாகத் திகழ்கிறது.

இவள் தவறு இழைப்போரைத் தண்டிப்பாள் என்று நாட்டுப்புற மக்கள் வெகுவாக நம்புகின்றனர்.[9]

அநீதியால் பாதிக்கப்பட்டோர் தாய்ப்பாசத்துடன் அன்னையிடம் வந்து முறையிட்டபோது, அன்னை அவர்களுக்கு நீதி வழங்கினாள். அதிலிருந்து அவளிடம் காசு வெட்டிப்போட்டு, நீதியை நிலை நிறுத்துமாறு (ஏவம் கேட்குமாறு) முறையிடும் வழக்கம் அதிகரித்தது.

அநீதி இழைத்தோர் அன்னையால் நிச்சயமாகத் தண்டிக்கப் பெறுகின்றனர்.

அம்பாள் முன்னர் குறைகளைக் கூறிப் பூசாரியிடம் ஒரு காசைக் கொடுக்க அவர் அதைத் தொட்டுக் கொடுக்கிறார். அந்தக் காசைக் கொண்டு சென்று அன்னையின் சந்நிதானத்துக்குப் பின்புறமுள்ள கூண்டு போன்ற இடத்தில் வெட்டிப் போடுகின்றனர்.

பின்னர் பூசாரி பழம் மந்திரித்துக் கொடுக்கிறார். அதை அவர் சொல்வதுபோல் செய்தால் நிச்சயம் பலன் விளைகிறதாம்.

காசு வெட்டிப் போடுவதற்கு ஆறு ரூபாய் காணிக்கை செலுத்தி முறையீட்டுச் சீட்டு வாங்க வேண்டும்.

சிலர் தங்கள் குறைகளைக் காகிதத்திலும் எழுதிக் காசு வெட்டிப் போடும் இடத்தில் குத்தி வைக்கின்றனர்.

காசு வெட்டிப் போடும் கூண்டுக்கு அருகில் காசை வெட்டுவதற் கான உளியும், சுத்தியலும் உள்ளன.

அன்னையின் சந்நிதியில் காசு வெட்டிப் போட்டுச் சத்தியம் செய் வதும் உண்டாம்.

செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் இச்சந்நிதியில் அதிகமாக மக்கள் கூடுகின்றனர். அப்போது, காசு வெட்டிப் போடுவோர் மட்டுமே தடுப்பைத் தாண்டி அன்னையின் அருகில் செல்லமுடி யும். ஆனால் நகரத்தார்களுக்கு மட்டும் எல்லா நாட்களிலும் அன்னையின் அருகில் செல்லும் சலுகை உண்டு.

இச்சந்நிதியின் முன்பாக சிம்மவாகனமும், பலிபீடமும், கொடி மரமும் உள்ளன.

வெட்டுடைய காளிக்கு மட்டுமே திருவிழா நடைபெறுவதை இங்கு மட்டும் காணப்பெறும் கொடிமரம் உறுதிப்படுத்துகிறது.

இப்புதிய கொடிமரம் 31.03.82ல் நாட்டப் பெற்றிருக்கிறது.

அன்னையைத் தரிசித்து அகிலமெல்லாம் அமைதியுடன் வாழ அருள வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டு கோயிலை வலம் வரு கிறோம்.

ஆஞ்சநேயர், சோலைமலை, சுந்தரேஸ்வரர் — மீனாட்சி, மகா விஷ்ணு, கொங்கையாத் தேவர், கருப்பண்ண சுவாமி ஆகிய மூர்த்தங்கள் தெற்குப் பிராகாரத்திலும், பன்னி வீரப்பசுவாமி, வீரபத்திரர், முனியப்பசுவாமி, பேச்சியம்மாள், சூலாட்டுக் காளி யம்மன், முனீஸ்வரர், வைரவர் ஆகிய மூர்த்தங்களுடன் உற்சவ விக்கிரகங்கள் மேற்குப் பிராகாரத்திலும் உள்ளன.

கோயிலின் வெளியே வலப்புறத்தில் சோனைக் கறுப்பர் சந்நிதி உள்ளது.

காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை தொடர்ந்து கோயில் திறந்திருக்கும்.

இந்த நேரத்தில் காலை 7 மணிக்கு விளாப்பூசையும், 8 மணிக்குக் காலசந்தியும், நண்பகல் 12 மணிக்கு உச்சிக்காலமும், மாலை 6 மணிக்கு மாலைக் காலப் பூசையும் நடைபெறுகின்றன.

பங்குனி மாதத் திருவாதிரையின்போது 10 நாள் திருவிழா (பிரமோத்சவம்) நடைபெறுகிறது. பத்து நாட்களும் சுவாமி புறப்பாடு உண்டு.

ஆடி மாதம் 18,19ஆம் நாட்களில் பூச்சொரிதல் விழா நடைபெறும்.

திருக்கார்த்திகையும், மகாசிவராத்திரியும் இங்கு சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றன.

மார்கழி மாதத்தில் திருப்பள்ளியெழுச்சி நடைபெறுவதோடு, ஆடி, தை மாதக் கடைசி வெள்ளிக்கிழமைகளில் திருவிளக்கு வழிபாடும் நடைபெறுகிறது.

ஆனி, ஆடி மாதங்களில் இலட்சார்ச்சனை நடைபெற்று வருகிறது.

* * *

உயிர்ப்பலி தடை செய்யப் பெற்றுள்ள சில குலதெய்வக் கோயில்களில் இதுவும் ஒன்றாகும். 40 ஆண்டுகளுக்கு முன் வரை இங்கு பலியிடப் பெற்றுவந்திருக்கிறது.

இப்போது, நேர்ந்து கொள்பவர்கள் ஆடு மாடுகளைக் கொண்டு வந்து கோயிலில் விட்டு விடுகிறார்கள். நிர்வாகத்தினர் அவற்றைப் பின்னர் ஏலம் விடுகின்றனர்.

இவ்வாறு ஆடு, மாடு போன்ற உயிர்களைக் கொல்லாது, அவற்றைக் கோயிலில் விடும் மரபு பண்டைக் காலத்திலும் நிலவியிருப்பதை அகநானூற்றுப் பாடல் ஒன்று தெளிவுபடுத்துகிறது.

''நிலைக்கோட்டு வெள்ளை நால்செவிக் கிடாஅய்
நிலைத்துறைக் கடவுட்கு உளப்பட ஓச்சி...''[10] என்று அப்பாடல் கூறிச் செல்கிறது.

மேலும், தன் விருப்பம் நிறைவேறினால் உயிரைக் கொடுக்கும் பழக்கம் பிற்காலச் சோழர் காலத்தில் இருந்ததைப் பரணி நூலால் அறிய முடிகிறது. இதனை அடியொற்றியே உயிரையோ, உடலையோ கொடுக்காமல் அவற்றுக்கு ஈடாக வெள்ளி, தங்கத்தால் செய்த உறுப்புகளைக் காணிக்கை செலுத்தும் மரபு மக்களிடையே தோன்றியது[11] என்பதைப் பின்பற்றி, ஆடு, கோழி போன்றவற்றைப் பலி கொடுப்பதற்கு மாறாக அவற்றைப் போன்ற உருவங்களைக் காணிக்கையாகக் கொடுக்கலாமே!

சிறந்த வேண்டுதல் தலமான இங்குதான் சிப்பந்திகளுக்கு அதிகமாகச் சம்பளம் கொடுக்கப்பெறுகிறதாம். காரணம் கிராமக் கோயில்களில் அதிகமான உண்டியல் வருமானத்தைப் பெறும் கோயில் இதுவேயாகும்.[12]

* * *

காரைக்குடி, தேவகோட்டை (இளையாற்றங்குடி பட்டணசாமியார்) நகரத்தார்கள் இதனைக் குலதெய்வக் கோயிலாகக் கொண்டாடுகின்றனர்.

நகரத்தார் வீட்டுக் குழந்தைகளுக்கு இங்கு கரும்புத் தொட்டில் கட்டுகின்றனர்.

அழகாபுரி நகரத்தார் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இக்கோயிலில் 02.06.63ல் மின் விளக்குகளைப் பொருத்தியுள்ளனர்.

தன் பிள்ளைகள் தவிப்பதை உணர்ந்து, வெட்டுடையார் காளி யாக உருவெடுத்துத் தர்மத்தை நிலைநாட்டி வரும் அன்னையையும், ஐயனையும் மீண்டும் வழிபட்டுக் கொண்டு, மற்றொரு குலதெய்வக் கோயிலான பொய்சொல்லா மெய்ய ஐயனார் கோயிலுக்குப் புறப்படுகிறோம்.

பரவும் சொல்மாலை

நல்லதைச் சொல்என்றும், நல்லதே செய்என்றும்
நயம்படச் சொல்லும் தாயே!
நச்(சு)எண்ணம் கொண்டே இச்சையால் அலைவாரை
நசுக்கிடும் அன்னை நீயே!
பொல்லாத செயலினைப் பொடிப்பொடி ஆக்கிடும்
பொன்சுடர்த் தீபம் நீயே!
புகழுடைய வாழ்விற்குப் பொன்முடி சூட்டியே
பூத்தூவி வாழ்த்து வாயே!
கல்லாத மாந்தரின் கண்ணீரை நீக்கிடும்
கருவண்ண அன்னை நீயே!
கற்றோரின் நெஞ்சத்தில் கலங்கரை விளக்கான
காவியச் சுடரும் நீயே!
வில்லாக, வேலாக, வினைதீர்க்கும் மருந்தாக
விளங்கிடும் சக்தி நீயே!
வேண்டிடும் நல்வரம விரைவாகத் தந்திடும்
வெட்டுடைக் காளி உமையே![13]

குறிப்பு விளக்கம்:

— (அருட்குரவனை நாடி அலையும் மனத்தின்) விரைவைத் தொலைத்து(த் திருவருள் தந்து) ஆட்கொள்ளும்....

1. கறுப்பர் அருட்பா மலர் 1990
2. எம். காளீஸ்வரன் வேளார், கொல்லங்குடி
3. நகரத்தார் இதழ் — செப் '94
4. திருச்செந்தூர்ப் புராணம்
5. தமிழ் மொழி அகராதி
6. 3ஆம் திருமுறை
7. அபிதான சிந்தாமணி
8. அபிதான சிந்தாமணி
9. நாட்டுப்புற நடனங்களும், பாடல்களும்
10. அகநானூறு — பொருள்: கொம்பினையும், தொங்கும் காதினையும் உடைய வெள்ளாட்டுக் கிடாய் உட்பட, எல்லையினிடத்து நிலைபெற்ற காப்புத் தெய்வத்துக்கு(க் கையுறைப் பொருளை)ச் செலுத்தி. — ந.மு. வேங்கடசாமி நாட்டார் உரை
11. நலந்தரும் நாடியம்மன் — இரமேஷ் சாமியப்பா
12. பெரி.சே. சின்னையா சிவாசாரியார், சிங்கம்புணரி
13. கறுப்பர் அருட்பா மலர் '90

உ

புகழில் திகழும் அழகர் பொய் சொல்லா மெய்யர்

(6. பொய்சொல்லா மெய்ய ஐயனார் திருக்கோயில், கொல்லங்குடி)

அண்ணன் — தம்பி இருவர்; காரைக்குடியில் வாழ்ந்து வருகின்றனர். அண்ணனுடன் கோபித்துக் கொண்டு வந்த தம்பி, கிளிவிச்சி என்ற கிராமத்தில் ஒரு வேளார் வீட்டில் தங்கி, அந்த வேளாரின் விதவை மகளுடன் வாழத் தொடங்கிப் பின் தன் தவற்றை உணர்ந்து, மலையாளத்துக்குச் சென்று மாந்திரீகம் கற்றுக் கொள்கிறார்.

சிறிது காலம் கழித்து வேளாரின் வேண்டுகோளின் பேரில் திரும்பி வந்தவர், அண்ணனையும் அங்கு சந்திக்கிறார். தம் சம்பாத்தியத்தை அண்ணனுடன் பகிர்ந்து கொள்கிறார்.

இவ்விருவருமே வெட்டுடைய ஐயனார், பொய்சொல்லா மெய்ய ஐயனார் கோயில்களை அமைத்தவர்களாகக் கருதப்பெறுகின்றனர்.

அண்ணன் கறுப்பையா வேளாரின் சிலையை அன்னை வெட்டுடைய காளி கோயிலில் கண்டோம்.

தம்பி காரியப்ப ஐயா சிலை, அடுத்து நாம் செல்லவிருக்கும் பொய் சொல்லா மெய்ய ஐயனார் கோயிலில் உள்ளது.

அரியாக்குறிச்சியில் அன்னையின் கோயிலில் வழிபட்ட பின்னர் கொல்லங்குடிக்கே திரும்பி வருகிறோம்.

கொல்லங்குடிப் பிரதான சாலையில் இப்போது இடப்புறம் திரும்பிச் செல்கிறோம்.

கப்பிச் சாலையில் சுமார் 1 கி.மீ சென்று, இடப்புறம் திரும்பிக் கண்மாயினுள் செல்லும் வண்டித் தடத்தில் சென்று கோயிலை அடைகிறோம்.

* * *

இந்தக் கோயிலுக்கு முதல் திருப்பணி செய்தவர் தேவகோட்டை நகரத்தார் ஒருவர் என்று கூறுகின்றனர்.

மகாமண்டபத்தில் வலப்புறம் உள்ள செட்டியார் சிலை அவருடைய தாகவே இருக்கலாம் என்று நம்பப் பெறுகிறது.

கோயில் வளாகத்துக்குச் சென்றதும், கிழக்கு நோக்கியுள்ள இரு பெரிய சேமங்குதிரைகள் (சேமக்குதிரைகள் என்றும், க்ஷேமம் குதிரைகள் என்றும் கூடக் குறிப்பிடப் பெறுகின்றன) நம்மை வர வேற்று, இங்கு வந்துள்ள உங்களுக்கு எல்லா நலன்களும் உண்டா கட்டும் என்று வாழ்த்துக் கூறுகின்றன. சேமங்குதிரைகள் இல்லாத ஐயனார் கோயில்களும் இருக்கவே செய்கின்றன.


இக்குதிரையில் ஏறி ஐயனாரோ, கறுப்பரோ ஊரைக் காப்பதாக மக்கள் நம்புகின்றனர்.[1]

சேமம் என்பதற்குக் காவல், அரண் என்றெல்லாம் பொருள்கள் சொல்லப் பெறுகின்றன.

இக்கோயிலில் உள்ள இரு குதிரைகளில் ஒன்று 1970ஆம் ஆண் டிலும், மற்றொன்று 72ஆம் ஆண்டிலும் கட்டப்பெற்றதாக (கட்டப் பெற்றதா, புதுப்பிக்கப் பெற்றதா?) அவற்றின் அடியில் கல்லில் பொறிக்கப்பெற்றுள்ளது.

கோயிலின் நுழைவாயிலின் இருபுறமும் இருபூதங்களும், இரு யானைகளும் உள்ளன. (இவ்வாறு தனியாகப் பூதம் மட்டும் இருந் தால் அதற்கு துவாரபூதம் என்று பெயராம்.)

கோயிலினுள் செல்கிறோம்.



கோயிலின் முன்புறத் தோற்றம்

சந்நிதிவரை ஓட்டுக்கூடம் போடப்பெற்றுள்ளது. அதில் ஐயனாரின் யானை வாகனமும், பலிபீடமும் உள்ளன.

அவற்றைத் தாண்டி உள்ள மகாமண்டபத்தில், நாம் முன்னர் குறிப் பிட்ட தேவகோட்டைச் செட்டியாரின் சிலை வலப்புறத் தூணில் உள்ளது.

கர்ப்பக்கிரகத்தின் இருபுறமும் துவார பாலகர்கள். வலப்புற துவார பாலகர் அருகில் மற்றொரு செட்டியார் சிலை. இவர்தாம் கறுப்பர் சந்நிதியும், ஐயனார் சந்நிதியும் கட்டியவர் என்கின்றனர்.

அர்த்தமண்டபத்தில் விநாயகர், சுப்பிரமணியர் சிலைகள் உள்ளன.

கருவறையில் பொய்சொல்லா மெய்ய ஐயனார், இருபுறமும் தேவி யர் புடைசூழ இனிதே வீற்றிருக்கிறார்.

சுமார் 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கியமான சிலப்பதி காரத்தில் ஐயப்பன், சாத்தான் என்று அழைக்கப்பெற்றிருக்கிறார். சாத்தான், சாஸ்தா என்னும் இரண்டும் ஒன்றுதான். தற்காலத்தில் இவர், கிராமங்களில் ஐயனார் என்று கிராம தேவதைகளில் ஒருவ ராக வணங்கப் பெறுகிறார்; காவல் தெய்வமாகக் கருதப்பெறு கிறார். ஊரைக் காவல் செய்வதை உணர்த்த ஊருக்கு வெளியில் இவரது கோயில் அமைக்கப் பெற்றிருக்கிறது. இவ்வாறு புறப் பகுதியில், ஊருக்கு வெளியே கோயில் கொண்டுள்ளமையால் இவருக்குப் 'புறம் பணையான்' என்னும் பெயரும் ஏற்படலாயிற்று என்கிறார் தி. இராசமாணிக்கம்.[2]

நாயன்மார், ஆழ்வார்கள் காலத்தில்தான், சங்க காலத்தில் பெரு மைக்குரியதாக விளங்கிய சாத்தன் வழிபாடு, சிறு தெய்வ வழி பாடாக மாறியது என்கிறார் முனைவர் சிவ. மங்கையர்க்கரசி.[3]

சாத்திரங்களைப் பயின்ற காரணத்தால் இவர் 'மகாசாத்தன்' என் னும் பெயரைப் பெறுகிறார். சாத்திரன் என்பதே சாத்தன் என மருவியது என்று தி. இராசமாணிக்கம் கூறுகிறார்.

கருவறையும், மகாமண்டபமும் செம்புறைக் கற்களால் திருப்பணி செய்யப் பெற்றுள்ளன.

மூலவரை வணங்கி விட்டுப் பிராகாரத்தில் நுழைகிறோம்.

இடப்புறம் மண்சிலையான வீரபத்திரர், விநாயகருக்கு அருகில், காரியப்ப ஐயா அமர்ந்த கோலத்தில் சிலாவடிவம் பெற்றுள்ளார்.

அடுத்து ஏழு கன்னியர். இவர்களைச் சப்த மாதர் என்றும், சப்த மாதாக்கள், சப்த கன்னிகையர், சப்த மகாதேவியர் என்றும் கூறு வர்.

இவர்கள் பிராமி(அபிராமி என்றும் சொல்வதுண்டு), மகேசுவரி, கௌமாரி, நாராயணி (வைஷ்ணவி), வராகி, இந்திராணி (மாஹேந் திரி), காளி (சாமுண்டி) முதலியோராவர். பிரமாணி, நாரா யணி, மாயேசுரி, கௌமாரி, வராகி, உருத்திராணி, இந்திராணி என்று இவர்களைப் பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. எல்லாக் கோயில்களிலுமே இவர்கள் ஒரே வரிசையில் அமர்ந்த கோலத்தி லேயே காணப்பெறுவர்.

தென் பிராகாரத்தில் காளி, பேச்சி, இராக்காயி, சோனையன், நொண்டிச் சோனையன், சந்நியாசி, சின்னக் கருப்பர், வீரபத்திரர், கருப்பர், (மீண்டும்) வீரபத்திரர் ஆகியோரின் மண்சிலைகள் உள்ளன.

நகரத்தார்கள், மின்வசதி உட்பட ஏராளமாகத் திருப்பணி செய்துள்ள இக்கோயிலில், விவரம் தெரிந்து 21.08.1978ல் ஒரு முறை குடமுழுக்கு விழா நடைபெற்றிருக்கிறது.

கோயிலுக்கு வெளியே நுழைவாயிலில் உள்ள வலப்புற துவார பூதத்துக்கு அருகில், பட்டவருக்கான சிறிய சந்நிதி உள்ளது. இதை யாதவர் (இடையர்)கள் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

கோயிலின் தென் திருச்சுற்றுச் சுவரில் ஒரு நுழைவாயில் உள்ளது. அதன்வழி வெளியே சென்றால், பெரிய கருப்பருக்குத் தனியே ஒரு சந்நிதி கட்டப் பெற்றிருக்கிறது.

ஓராண்டுக்கு முன்னர் இந்த வாயிற்கதவைக் கள்வர் இருவர் கவர்ந்து சென்றுவிட்டனர். அவர்களில் ஒருவன் அடுத்த சில நாட்களில் மரணமடைய, மற்றவனுக்கு மிக விரைவில் திருட்டுக் குற்றத்துக்கான தண்டனை கிடைத்தது.

கண்மாயின் இடையிலுள்ள மேட்டுப்பாங்கான இடத்தில் இத்திருக்கோயில் அமைந்திருக்கிறது

★ ★ ★

கொ. அழகாபுரி, தேவகோட்டை, நாட்டரசன்கோட்டை நகரத்தார்களுடன், பல ஊர்களைச் சேர்ந்த யாதவர்களும் இதனைக் குலதெய்வக் கோயிலாகக் கொண்டுள்ளனர்.

நகரத்தார்களும், இந்து அறநிலைய வாரியத்தைச் சேர்ந்த இக்கோயிலின் அறங்காவலர்களில் உள்ளிட்டிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நாள்தோறும் ஏதேனும் ஒரு நேரம் பூசை நடைபெறுகிறது. மற்ற நேரங்களில் கொல்லங்குடியிலிருந்து அர்ச்சகரான வேளாரை அழைத்து வந்து வழிபாடு செய்யலாம்.

ஆடி மாதம் புரவி எடுப்பு நிகழ்கிறது. இத்திருவிழா இரு நாட்கள் நடைபெறும். இதனை ஒட்டிக் கிராமத்தில் நாடகம் நடைபெறுகிறது.

நகரத்தார்களும் சேர்ந்து வந்து இத்திருவிழாவில் பங்கு கொள்கின்றனர்.

நகரத்தார் வீடுகளில் நடைபெறும் திருமணங்களுக்கு இங்கிருந்து காளாஞ்சி கொண்டு செல்லப்படுவதுண்டு. திருமணத்திற்கு முன்னரும் பின்னரும் குடும்பத்தினர் இங்கு வந்து வழிபட்டுச் செல்கின்றனர்.

சிறிது காலம் முன்வரை, இக்கோயிலுக்கு அடிமைப்பட்ட நகரத்தார்கள், தங்கள் தலைப்பிள்ளையின் திருமணத்திற்கு முன்னர் இங்கு வந்து புரவி எடுத்து நாடகம் நடத்திச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனராம்.

குழந்தை பிறந்தால் இங்கு வந்து முடிஇறக்கி, மாவிளக்கு வைத்துப் பெயரிட்டு வழிபாடு செய்கின்றனர்.

மக்கள் மிகுதியாக வந்து வழிபட்டுச் செல்லும் ஆரவாரம் மிகுந்த வெட்டுடையார் கோயிலைப் போன்றில்லாமல், அமைதியான சூழலில் அமர்ந்து அருள் பாலிக்கும் பொய் சொல்லா மெய்யரை வணங்கிப் பொய்யான இவ்வுலகில் மெய்யான வாழ்வு தருவாய் என்று பிரார்த்தித்துக் கொண்டு, அல்லல் கெடுக்கும் அஞ்செழுத் துக்கு உரியவரான பஞ்சாட்சரமுடைய ஐயனார் கோயிலுக்குப் பயணமாகிறோம்.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

பொய்ஏதும் இல்லா மெய்யன் தன்னைப்,
புண்ணியனை, நண்ணாதார் புரம்நீ றாக
எய்தானைச், செய்தவத்தின் மிக்கான் தன்னை,
ஏறமரும் பெருமானை, இடமான் ஏந்தும்
கையானைக், கங்காள வேடத் தானைக்,
கட்டங்கக் கொடியானைக், கனல்போல் மேனிச்
செய்யானைத், திருவானைக் காவு ளானைச்,
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே.

திருச்சிற்றம்பலம்

— ஆறாந் திருமுறை

குறிப்பு விளக்கம்:

1. நலந்தரும் நாடியம்மன் — இரமேஷ் சாமியப்பா
2. தென்னிந்தியச் சிற்பங்களும், கோயில்களும்
3. தமிழர் வழிபாட்டின் தோற்றமும், வளர்ச்சியும் — ஓர் இயக்கவியல் நோக்கு., கட்டுரை, செந்தமிழ்ச் செல்வி, மார்ச் '94

உ

பரவவல் லார்வினை பாழ்படுக்கும் பஞ்சாட்சரமுடைய ஐயனார்

(7. பஞ்சாட்சரமுடைய ஐயனார் திருக்கோயில், சூரக்குளம்)

''-----முராரியும்
அந்தி வண்ணத்(து) அமலனும் ஆகியே
முந்து கூடி முயங்கிய எல்லையில்
வந்த னன்எமை வாழ்விக்கும் ஐயனே''[1]

(முராரி — திருமால்; அந்தி வண்ணத்து அமலன் — சிவந்த வானம் போன்ற மேனியை உடைய சிவன்.)

ஐயனாரின் திருவவதாரத்தைக் குறிப்பிடுகிறது இந்தக் கந்தபுராணப் பாடல்.

ஐயன் என்பது ஆர்ய என்பதன் திரிபு. ஆர்ய என்றால் மதிப்புக் குரிய என்று பொருள். பரமேசுவரனுக்கும், நாராயணமூர்த்திக்கும் பிறந்த குழந்தையை விட மதிப்புக்கு உகந்தவர் வேறு யார் இருக் கிறார்கள்? முதலி — முதலியார் ஆனது போல, செட்டி — செட்டி யார் ஆனது போல, ஐயன் — ஐயனார் ஆனார்.[2]

சிவனின் மகனாகத் தோன்றியதனால், சிவனுக்குரிய ஐந்தெழுத்தை — பஞ்சாட்சரத்தையே இங்கு நாம் காணப்போகும் ஐயனார், தம் பெயராக்கிக் கொண்டுவிட்டார் போலும்!


ஆம், சிவகங்கைப் புகைவண்டி நிலையத்திலிருந்து ஏறத்தாழ 6 கி.மீ தொலைவிலுள்ள சூரக்குளத்தில் கோயில் கொண்டிருக்கும் பஞ்சாட்சரமுடைய ஐயனார் கோயிலுக்கே இப்போது செல்கி றோம்.

திருப்புத்தூர் — சிவகங்கை பிரதான சாலையில் காஞ்சரங்கால் என்னும் ஊரில் பேருந்திலிருந்து இறங்கி நடந்து செல்லலாம் என்கிறார் கீழச்சிவற்பட்டி மு.நா.மு. முத்தையா செட்டியார்.

நாட்டரசன்கோட்டையிலிருந்து நடந்தும், சைக்கிளிலுமே இந்தக் கோயிலுக்கு வந்துவிடுவார்களாம்.[3]

ஆனால் நாங்கள் காரில் சென்றபோது மிகச் சிரமப்பட்டே இக் கோயிலுக்கும், இதனை ஒட்டியுள்ள மற்றகோயிலுக்கும் போக

வேண்டி இருந்தது. (எனவே புதிதாகச் செல்பவர்கள் நாட்டரசன் கோட்டையிலிருந்து யாரையேனும் துணைக்கு அழைத்துச் செல்வது நல்லது!)



திருப்பணியை எதிர்நோக்கியிருக்கும்
பஞ்சாட்சரமுடைய ஐயனார் கோயில்

சிவகங்கைப் புகைவண்டி நிலையத்தருகில் இடப்பக்கம் திரும்பிச் சென்றால் சூரக்குளம் என்னும் கிராமத்தை அடையலாம். அங்கிருந்து மேற்கே 1½கி.மீ சென்று கோயிலை அடைய வேண்டும். முன்னர் இந்தச் சூரக்குளத்தில் நகரத்தார் 110 புள்ளிகள் இருந்

தார்களாம். அங்கிருந்து அவர்கள் நாட்டரசன்கோட்டைக்குச் சென்று விட்டதாகத் தெரிகிறது.

அலவாக்கோட்டை, பி. அழகாபுரி, கீழச்சிவற்பட்டி (நேமங்கோயிலார்), நாட்டரசன்கோட்டை (பிள்ளையார்பட்டியார், மற்றும் மாத்தூர் மணலூர்ப் பிரிவினர்), பாகனேரி (வைரவன் கோயிலார்), பூங்குடி நகரத்தார்கள் சுமார் 500 புள்ளிகள் பஞ்சாட்சர முடைய ஐயனாரைக் குலதெய்வமாகக் கொண்டாடுகின்றனர்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு வரை, நகரத்தார் அனைவரும் ஒன்று சேர்ந்து இக்கோயிலுக்குச் சென்று வழிபட்டு வந்துள்ளனர். இப்போது அவரவரும் தனித்தனியே சென்று வழிபடுகிறார்களாம். இருப்பினும், மகா சிவராத்திரியின்போது அதிகமான நகரத்தார்கள் கோயிலுக்குச் செல்கின்றனர். அந்த நேரத்தில் கோயில் பழுதாகி இருப்பதைப் பற்றித்தான் பேசுகிறார்கள். ஆயினும் இன்னமும் கோயிலுக்கு விமோசனம் பிறக்கவில்லை.

ஆம், கடந்த ஐம்பது ஆண்டுகளாக எந்தத் திருப்பணியோ, குடமுழுக்கோ கண்டிராத இக்கோயில் மிகவும் பழுதடைந்து போயிருக்கிறது.

அருகிலுள்ள கலியுகமெய்ய ஐயனார் கோயிலைப் போன்று பாதுகாப்புடன் இக்கோயிலைக் கட்ட எண்ணுகிறார்கள்.

பணத்துக்குப் பஞ்சமில்லை;

ஆனால் திருப்பணிதான் இன்னமும் தொடங்கவில்லை.

கோயிலை விரைவில் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பெற்று வருகின்றன என்று கூறுகிறார்கள்; முயற்சி வெற்றி பெறப் பிரார்த்திப்போம்!

* * *

கோயில் பாதுகாப்பின்றி இருப்பதால் பன்முறை திருட்டுப் போயிருக்கிறது.

ஏறத்தாழ 70 ஆண்டுகளுக்கு முன்னர் இங்கிருந்த மணி திருட்டுப் போய் விட்டது. கண்மாய் உள்வாயிலினுள் மணியுடன் சென்றவனுக்குக் கண்பார்வை போய்விடவே, அவன் மணியை அங்கேயே போட்டுவிட்டுப் போய்விட்டானாம்.

மீண்டும் ஒருமுறை மணி திருட்டுப் போய்த் திருடன் உடனே பிடிபட்டுத் தண்டிக்கப் பெற்றான்.

அண்மையில் 5,6 ஆண்டுகளுக்கு முன்னர், 5 கற்சிலைகள் திருட்டுப் போய் விட்டன.

இரு துவார பாலகர்கள் (அவை இருந்த இடத்தில் இப்போது நாகர் சிலைகள் வைத்துள்ளனர்.), இராக்காயி, பேச்சி, பைரவர் ஆகியவை திருட்டுப் போய் வெளிநாட்டுக்குக் கடத்தப்பெறுவதற்காகப் பம்பாய் வரை கொண்டு செல்லப்பெற்று மீண்டுள்ளன.

''எங்கு மாகி இருந்துஎவ் வுலகையும், கங்கு லும்பகல் எல்லையும்'' காப்பவர் அன்றோ ஹரிஹரசுதன்? ''அவனுக்குஎதிர்'' யார் இருக்கிறார்கள்?[4]

அதனால்தான் தன் உடைமை எதனையும் பிறர் அபகரித்துச் செல்ல அவர் அனுமதிக்கவில்லை போலும்!

அச்சிலைகள் இப்போது அர்ச்சகர்களான வேளார்களின் பொறுப்பில் கிராமத்தினுள் உள்ள அவர்களுடைய கோயில் வீட்டில் உள்ளன. (அவை திருட்டுப் போய் மீட்கப் பெற்றதால் ஏற்பட்ட இலாபம், சிலைகள் சிறிதுகூட எண்ணெய்ப் பசையோ, அழுக்கோ இன்றிச் சுத்தமாக்கப் பெற்றுள்ளன.)

* * *

கோயிலைச் சென்று அடைகிறோம்.

இதென்ன, ஐயனார் கோயிலின் இராஜகோபுர நுழைவாயிலில் இருபுறமும் துவார சக்தியர் புடைப்புச் சிற்பமாகக் காணப்பெறுகின்றனர்?

உடன் வந்த முத்தையா செட்டியாரும், அர்ச்சகரும் விடை பகர்கின்றனர்.

100 ஆண்டுகளுக்கு முன்பு வரை, நகரத்தாரால் கட்டப்பெற்ற இக்கோயில், ஊருக்குத் தெற்கே கண்மாய்க் கரையில் இருந்தது. அந்த இடம் போகவர வசதி இல்லாததாக இருந்ததால், இப்போதுள்ள இடத்திற்குக் கோயிலை மாற்றினார்கள்.

பழைய கோயில் இடிந்து சீர்குலைந்து போய் இன்னமும் அந்தக் கண்மாய்க் கரையில் உள்ளது. அங்கிருந்த பழைய அம்பாள் சிலைகள் இக்கோயிலில் வெளியில் வைக்கப் பெற்றுள்ளன. ஐயனார் சிலைமட்டும் பாதுகாப்பின் பொருட்டுக் கருவறையினுள் உள்ளது.

கோயிலூரில் இருந்த அம்மன் கோயில் ஒன்றின் மூலத்தானக் கட்டுமானத்தை மட்டும் வாங்கி வந்து இந்தக் கோயிலுக்குப் பயன்படுத்திக் கொண்டார்கள். அதனாலேயே இக்கோயிலில் ஆங்காங்கே அம்மன் கோயிலின் சாயல் தென்படுகிறது!

* * *

இராஜகோபுரம், திருச்சுற்றுச் சுவர் எல்லாமே மிகவும் பழுதடைந்துள்ளன. சேதமடைந்துள்ள சேமங்குதிரைகளைக் கடந்து (இவற்றில் ஒன்று வேளார்களும், மற்றொன்று நகரத்தாரும் கட்டியவையாம்), இராஜகோபுரத்தின்வழி கோயிலினுள் செல்லும் முன்னர், இடப்புறத்தில் இரு சிலைகளைக் காண்கிறோம். அவை, தொடக்க கால அர்ச்சகரான வேல்முருக வேளார், அவர் மனைவி கல்லிச்சி அம்மா ஆகியோரின் சிலைகள்.

கல் திருப்பணியான இந்தப் பழைமையான கோயிலில் கருவறையின் முன்னர் யானை வாகனமும், பலிபீடமும் உள்ளன. பலிபீடம் சிறிது வித்தியாசமானதாக எட்டுப் பட்டையுடன் கூடியிருக்கிறது.

கருவறையின் இருபுறமும் விநாயகரும், சுப்பிரமணியரும் காட்சி தருகின்றனர். அவற்றின் இருபுறமும் பீடங்களில் நாகர் சிலைகள் வைக்கப் பெற்றுள்ளன. இவையே திருட்டுப்போன துவார பாலகர்கள் இருந்த இடம். இந்தப் பீடங்களில் 1934ஆம் ஆண்டு என்று மட்டும் குறிக்கப்பெற்றுள்ளது. அந்த ஆண்டில்தான் கோயில் இந்த இடத்திற்கு மாறி வந்திருக்குமோ?

மூலவர் பஞ்சாட்சரமுடைய ஐயனார், பூரணை, புஷ்கலை சமேதராகக் கருவறையில் காட்சி தந்து அருள் பாலிக்கிறார்.

''நல்லவை பெருக வேண்டும்,
நாடெலாம் வாழ வேண்டும்,
ஐயனின் கோயிலும் விரைவில்
அழகுற அமைய வேண்டும்!''

என்று பிரார்த்தித்துக் கொண்டு பிராகாரத்துக்கு வருகிறோம்.

காளி, முத்துக்கறுப்பண்ணசாமி, சின்னக்கறுப்பர், பெரியகறுப்பர், வீரபத்திரர் ஆகியோர் தென் பிராகாரத்தில் சந்நிதி கொண்டுள்ளனர்.

வட பிராகாரத்தில் சமய ஐயா (இவரை முன்னோடியாகக் கருதுகின்றனர்)வும், பைரவரும் உள்ளனர்.

வேளார்களின் பொறுப்பில் உள்ள இக்கோயிலில், நாள்தோறும் ஒருகாலப் பூசை நடைபெறுகிறது. அரசர்களால் கொடுக்கப்பெற்ற நிலமான்யத்தைக் கொண்டு, ஒவ்வொரு நாளும் பூசை வைக்கின்றனர்.

மகா சிவராத்திரி மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகிறது.

முன்பெல்லாம் இது மூன்று நாட்களுக்கு நடைபெற்றதாம்; அப்போது சந்தனக்குடம், பால்குடம், காவடி எடுப்பது, பூக்குழி இறங்குவது எல்லாம் நடைபெற்றிருக்கின்றன.

இப்போது நடைபெறுவது ஒருநாள் விழாத்தான்.

அந்த நாளில் நகரத்தார்கள் இங்குவந்து குழந்தைகளுக்கு முடி இறக்குவது, தொட்டில் கட்டுவது (மேளதாளத்துடன் கரும்புத் தொட்டிலில் குழந்தையை இட்டு மும்முறை கோயிலை வலம் வந்த பின்னர், சந்நிதானத்தில் உள்ள வளையத்தில் தொட்டில் கட்டி அதில் பிள்ளையை இட்டு ஆட்டுவார்களாம்), மாவிளக்கு வைப்பது போன்றவற்றைச் செய்கின்றனர்.



திருட்டுப் போய்த் திரும்பிய சிலைகள்

சிவராத்திரி தவிர்த்த ஏனைய நாட்களிலும் இங்கு தொட்டில் கட்டுவது உண்டு.

தொட்டில் கட்டுவோர் காணிக்கையாக ஏழு ரூபாய் செலுத்துகின்றனர்.

குழந்தைகளுக்குக் குலதெய்வத்தின் பெயரை வைக்கும் பழக்கம் நாட்டரசன்கோட்டைப் பகுதியில் இன்னமும் இருந்து வருகிறது.

கீழச்சிவற்பட்டிப் பகுதியில் உள்ள, இக்கோயிலுக்கு அடிமைப்பட்ட நகரத்தார்கள், தங்கள் வீடுகளில் நடைபெறும் நல்லது கெட்டதுகளின்போது பஞ்சாட்சரமுடையாருக்கு என்று பணம் முடிந்து வைக்கும் பழக்கத்தை (குறைந்தது 65 காசு) இன்னமும் கடைப்பிடிக்கின்றனர். ஆனால் நாட்டரசன்கோட்டை வட்டாரத்தில் இப்பழக்கம் அருகி வருகிறது.

பெரும்பாலும் ஆண்டுதோறும் இங்கு புரவி எடுப்பு நடைபெற்று வருகிறது. அப்போது தெருக்கூத்தும் நடத்துகிறார்கள். இந்த ஆண்டு வசதியின்மையால் இன்னமும் நடைபெறவில்லை.

திருவிழாக் காலங்களில் முதல் மரியாதை நாட்டரசன்கோட்டை அம்பலகாரச் செட்டியாருக்கும், அடுத்து நகரத்தாருக்கும் கொடுக்கப் பெறுகிறது.

நகரத்தார் வீட்டுத் திருமணங்களுக்கு இங்கு சொல்லியனுப்புவதும், வேளார்கள் காளாஞ்சி கொண்டு போய்க் கொடுத்து வருவதும், இங்கு ஒரு மரபாகவே இருந்துவருகின்றன.

கோயில் புதுப்பிக்கப்பெற்று மின்வசதியும் கிடைத்துக் குடமுழுக்கு விழா நடைபெறும் நாள் விரைவில் வரட்டும் என வேண்டிக் கொண்டு, வரும்வழியில் சூரக்குளத்தில் கோயில் வீட்டில் உள்ள மீட்கப்பெற்ற சிலைகளைப் பார்த்துக் கொண்டு, இதே பகுதியில் உள்ள அடுத்த கோயிலுக்குச் செல்கிறோம்.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்,
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்,
இம்மை வினைஅடர்த்(து) எய்தும் போழ்தினும்,
அம்மையி னும்துணை அஞ்செ ழுத்துமே.

திருச்சிற்றம்பலம்

— 3ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

— பரவல் — வழிபடுதல், வணங்கல்

1. கந்தபுராணம் 3260
2. தெய்வத்தின் குரல் — முதற்பகுதி
3. ப.வ. முத்தையா செட்டியார், நாட்டரசன்கோட்டை
4. கந்தபுராணம் 3266, 3267

உ

கலியுக மெய்யனே, கரவில்தடக் கையனே!

(8. கலியுகமெய்ய ஐயனார் திருக்கோயில், புதுக்கோட்டை, சூரக்குளம்)

போரில் விழுப்புண் பட்டு இறந்த வீரர்களுக்கும், பொதுநலனுச்
காகத் தன்னுயிர் ஈந்த மறவர்களுக்கும்தாம் அவர்களின் நினை
வாக நடுகற்கள் எழுப்பப் பெற்று வழிபாடு செய்யப்பெற்று வந்
திருக்கிறது.[1]

ஆனால் குருவி பிடிக்க வந்த வேடன் ஒருவன் தற்கொலை செய்து
கொண்ட இடத்தில் சிலை வைத்து வழிபாடு செய்யப் பெறுவதை
இக்கோயிலில் காண்கிறோம்.[2] (வளையற்காரர் ஒருவர் — வேடர்
— குருவிபிடிக்கும்போது மரத்திலிருந்து விழுந்து மரணமுற்று, இந்த
இடத்தில் அவரது ஆவி அணைந்திருப்பதால் அவருக்குச் சிலை
வைத்து வழிபாடு செய்கிறார்கள்.[3])

அணைந்தோர், அடுத்து வந்தோர் ஆகியோரின் பெயர்கள்,
பிற்காலத்தில் அந்தந்தக் கோயில்களின் பெயர்களாகி நிலைத்து
விட்டதைப் பல குலதெய்வக் கோயில்களில் காண்கிறோம்.[4]
அதேபோன்றுதான் இந்தக் கோயிலையும் 'குருவி பிடிக்கி ஐயனார்
கோயில்' என்றே பொதுவாகக் கூறுகிறார்கள்.

ஆனால், மூலவரின் பெயர் என்னவோ, 'கலியுக மெய்ய ஐயனார்'
தான்!

* * *

பஞ்சாட்சரமுடைய ஐயனார் கோயிலிலிருந்து திருட்டுப் போன
சிலைகளைச் சூரக்குளத்தில் உள்ள வேளார்களின் கோயில்
வீட்டில் பார்த்துவிட்டு, அவ்வூரின் எல்லையிலுள்ள குளத்தருகில்
வலப்புறம் திரும்பித் தெற்கே 2கி.மீ. மண் சாலையில்
செல்கிறோம். (கப்பிச்சாலை போட ஏற்பாடு செய்யப்பெற்று
வருகிறது.[5]) பின்னர் கண்மாயின் வழியாகவும் வயல்களின்
ஊடேயும் சென்று கோயிலை அடைகிறோம். (கோயிலுக்குச் செல்லும்
பாதையை நினைத்துப் பயப்படாதீர்கள். நாட்டரசன்கோட்டை
நகரத்தார்களின் உதவியுடன் வந்தால் சிரமமின்றி அழைத்து வந்து
விடுவார்கள்! அவர்கள் நடந்தோ, சைக்கிளிலோ இங்கு வந்து
பழக்கம் உள்ளவர்கள்.) சிவகங்கைப் புகைவண்டி நிலையத்திலிருந்து 5
கி.மீ. தொலைவில் இக்கோயில் இருக்கிறது.

பஞ்சாட்சரமுடைய ஐயனார் கோயிலைப் போன்றே இதுவும், காட்டிலாகா நிலத்தில் உள்ள கோயிலோ என்னவோ, கோயிலை ஒட்டிய பெரும் நிலப்பரப்பில் மரக்கன்றுகள் நடுவதற்காகக் குழிகள் தோண்டப்பெற்றுள்ளன.

சிறிது மேட்டுப்பாங்கான நிலத்தில் கோயில் உள்ளது.



தொலைவிலிருந்து கோயிலின் தோற்றம்

கோயிலின் இடப்பக்கம் உள்ள செங்கற்கட்டுப் பகுதியில் தான், இந்தக் கோயில் கட்டப்பெற்ற காலத்தில் மூலவரைப் பாலஸ்தா பனம் செய்திருந்தார்களாம். ('இருக்கோதி மறையவர்கள் வழி பட்டு ஏத்தும் இளங்கோயில்'[6] — மூலத்தான மூர்த்தி இருக்கும் பாலாலயத்தை அப்பர் சுவாமிகள் 'இளங்கோயில்' என்று குறிப் பிடுகிறார்.)

இப்போது கோயில் உள்ள இடத்தில் முதலில் ஓட்டுக்கூடம் மட்டுமே இருந்தது. அதில் ஐயனார் மட்டும் (கற்சிலை) பிரதிஷ்டை செய்யப் பெற்றிருந்தார். அந்த நாளில் சோனையன், குருவி பிடிக்கி, துவாரபாலகர் யாவும் மண் சிலைகளாகவே இருந்தன. கும்பாபிஷேகத்தின் போதுதான் அவை கற்சிலைகளாக மாற்றப் பெற்றன.

முதலில் இருந்த ஐயனார் சிலை சேதமுற்றிருந்ததால், இப்போதுள்ள புதிய சிலையைச் செய்து வைத்து, 15.09.76ல் குடமுழுக்கு விழாவை நடத்தியிருப்பார்கள் போலிருக்கிறது.

திருப்பணிகள் யாவும் நகரத்தார் செய்தவையே.

கோயில் வளாகத்திற்குள் வந்ததும், கிழக்கு நோக்கியுள்ள பெரிய பூதத்தின் தோள்களில் முன்னங்கால்களை வைத்துக் கொண்டு நிற்கும் பெரியதொரு சேமங்குதிரையைக் காண்கிறோம். இதனைச் சுற்றி இரும்புக் கம்பிகளால் பாதுகாப்பு வேலி அமைத்துள்ளனர்.

இந்தச் சேமங்குதிரை யுவ ஆண்டு ஐப்பசித் திங்கள் 14ஆம் நாளில் (அக்டோபர் 1935ஆக இருக்கலாம்) நாட்டரசன் கோட்டை நகரத்தார் ஒருவரால் கட்டப் பெற்றதாக மேடையில் குறிக்கப்பெற்றுள்ளது. (சி(ப)ல கோயில்களில் வரலாற்றுச் சான்றாகக் குடமுழுக்கு நடந்த நாட்கள்கூட எழுதி வைக்கப் பெறவில்லை என்பது வருத்தத்திற்குரியது.)

கோயில் அருகில் மிகப் பழைமையான கருக்குவாச்சி மரம் ஒன்று உள்ளது. இதுவே இத்திருக்கோயிலின் தல மரமாக இருக்கக்கூடும். கோயிலினுள் செல்லுமுன்னர் சிறியதொரு மாடத்தில் சோனையா வீற்றிருக்கிறார்.

அடுத்துத் தகரக்கொட்டகை. இதில்தான் யானை வாகனமும் பலிபீடமும் உள்ளன. இது 24.06.82ல் அமைக்கப்பெற்றது. இதைத் தாண்டிக் கோயிலினுள் செல்கிறோம். காங்கிரீட்டால் கட்டப்பெற்ற மிகச் சிறிய, ஆனால் அழகிய கோயில்.

கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் என மூன்று பிரிவுகளாகக் கோயில் அமைந்திருக்கிறது.

முன் மண்டபத்தில் இடப்புறம் காளியாத்தா(ள்), பெரிய கறுப்பர், வீரபத்திரர், கன்னிமார் எழுவர் சிலைகளும், வலப்புறம் பெரியதோர் ஆஞ்சநேயர் சிலையும் உள்ளன.

ஆஞ்சநேயரை நவ வியாகரண பண்டிதர் என்றும், சொல்லின் செல்வர் என்றும் வருணிப்பர். இவரைப் போன்ற சிறந்த இராமபக்தர் வேறு யாருமிலர் என்பர். இவரை வழிபட்டால், அறிவு, உடல்வலிமை, கீர்த்தி, அஞ்சாமை, மற்ற எவரும் தன்னைக் கண்டு பயப்படாத அபயத்தன்மை, ஆரோக்கியம், ஜடமாக இல்லாத தன்மை, வாக்குவன்மை ஆகிய எட்டும் கிட்டும் என்று ஆஞ்சநேய தோத்திரம் ஒன்று கூறுகிறது.[7]

கருவறையின் முன்னால் துவார பாலகர்களும், நமக்கு இடப்புறம் துவார பாலகருக்கு அருகில் பிள்ளையாரும், வலப்புறம் பழனியாண்டவரும் உள்ளனர். (சிங்கத்தின் மீது சித்தர் போன்று தாடி மீசையுடன் உள்ள இவரா பழனியாண்டவர்; பழனியாண்டவருக்கு எங்கிருந்து தலைமுடியும், தாடி மீசையும் முளைத்தன என்றெல்லாம் கேட்காதீர்கள். இவரைப் போன்ற பழனியாண்டவர் பலரை அடுத்தடுத்துக் காணப்போகிறோம்.)

அர்த்த மண்டபத்தில் நம் இடப்புறம் பிள்ளையார் வீற்றிருக்கிறார்.

கருவறையில் பூரணை, புஷ்கலை உடனாய ஐயனார் — கலியுக மெய்ய ஐயனார்; சிறிய அழகிய சிலைகள்.

1917ல் ஒன்றும், 1923ல் ஒன்றுமாகக் கோயிலுக்கு வழங்கப் பெற்ற இரு மணிகள், கோயிலின் பழைமையைப் பறை சாற்றிக் கொண்டிருக்கின்றன.

கும்பாபிஷேகம் ஆகிப் பல ஆண்டுகள் ஆகியும்கூடக் கோயிலின் தூய்மை குறையவில்லை. சிலைகள் யாவும் பளபளப்பாகவும், தெளிவாகவும் இருக்கின்றன.

கோயிலிலிருந்து வெளியே வந்துதான் கோயிலை வலம் வரவேண்டும். அவ்வாறு வரும்போது தென்மேற்கு மூலையில் உள்ள மாடத்தில், நம் கதாநாயகனான குருவிபிடிக்கி குத்துக் காலிட்டு அமர்ந்திருக்கிறார். வலக்கரத்தில் பறவை ஒன்று; பளிச் சென்று காணப்பெறுகிறார்.

இவர் அசாதாரணமானவர் என்று சொல்லி, அனைவரும் இவரையும் வழிபடுகின்றனர்.

* * *

நாட்டரசன்கோட்டை (மாத்தூரில் மணலூர், கருப்பூர்) நகரத்தார் களும், பாகனேரி வைரவன் கோயிலாரும், மதகுபட்டி நகரத்தார் களும், இந்தக் கலியுக மெய்ய ஐயனாரைக் குல தெய்வமாகக் கொண் டுள்ளனர்.

இவருடைய பெயரை ஒட்டி நகரத்தார் குடும்பங்களில் மெய்யப்பன், மெய்யம்மை என்று குழந்தைகளுக்கு முன்னர் பெயரிட்டு வந்தனர்; இப்போது அந்த வழக்கம் குறைந்து வருகிறது.[8]

இருப்பினும் இவரைக் குலதெய்வமாகக் கொண்டுள்ள அனை வரும், குழந்தைகளுக்கு முதல்முடி இங்குதான் இறக்குகின்றனர்.

நகரத்தார்களில் சிலர் மட்டும் இங்கு வந்து குழந்தைகளுக்குப் பெயர் கூப்பிடுகின்றனர்.

நாட்டரசன்கோட்டை நகரத்தார்களில் பெரும்பாலோரின் பூர்வீகம் சூரக்குளம்தான். ஒரு காலத்தில் இது பெரிய ஊராக இருந்தது. நிறைய நகரத்தார்கள் இங்கு வாழ்ந்திருக்கிறார்கள். இப்போது இந்த ஊரில் நகரத்தார் யாரும் இல்லை.[9]

வாரத்தில் ஒருநாள் — வெள்ளிக்கிழமை மட்டும் இங்கு ஒருகாலப் பூசை நடைபெறுகிறது. மற்ற நாட்களில் சூரக்குளம் கிராமத்தி லிருந்து முறைகார வேளாரை அழைத்துவர வேண்டும்.

இருப்பினும் நகரத்தார்கள் அதிகமாகப் புதன் — சனிக்கிழமை களில்தான் இக்கோயிலுக்கு வருகிறார்கள்.

பெரும்பாலும் தை மாதத்தில்தான் நகரத்தார்கள் சேர்ந்து இங்கு வந்து கூட்டு வழிபாடு செய்கின்றனர். பஞ்சாட்சரமுடைய ஐயனார் கோயிலைப் போன்று, சிவராத்திரி இங்கு சிறப்பாகக் கொண்டாடப் பெறவில்லை.

இவ்வாறு வரும்போது அந்த ஆண்டில் எப்போது குழந்தை

பிறந்திருந்தாலும் அக்குழந்தைக்கு முடிஇறக்குவது, தொட்டில் கட்டுவது போன்றவற்றைச் செய்கின்றனர்.

கரும்புத் தொட்டில் கட்டினாலும், கட்டாவிட்டாலும், மண்டபத்தில் உள்ள வளையங்களில் தொட்டில் கட்டி, அதில் குழந்தையை இட்டுத் தாலாட்டுவது மட்டும் நிச்சயம் உண்டாம். அதற்கெனப் பாடல்களும் உள்ளன.

3, 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை புரட்டாசி மாதத்தில் புரவி எடுப்புத் திருவிழா நடைபெறுகிறது. இது 3 நாள் திருவிழா. கடந்த ஆண்டில்தான் இவ்விழா ஊராரால் கொண்டாடப் பெற்றது.

கலியுக மெய்யவரான ஐயனாரை வணங்கிப்
பலவாறு வேண்டிப் பயன்பெற வாரீர்!

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

மைய லாய்இந்த மண்ணிடை வாழ்வெனும்
ஆழியுள் அகப்பட்டுத்,
தைய லார்எனும் சுழித்தலைப் பட்டு,நான்
தலைதடு மாறாமே,
பொய்யெ லாம்விடத் திருவருள் தந்து,தன்
பொன்னடி இணைகாட்டி,
மெய்ய னாய்வெளி காட்டிமுன் நின்றதோர்
அற்புதம் விளம்பேனே.

திருச்சிற்றம்பலம்.

— திருவாசகம்

குறிப்பு விளக்கம்:

— கரவில்தடக் கையனே — மறவாமல் வழங்கும் கரத்தினன்
1. தமிழகச் சிற்ப ஓவியக் கலைகள்
2. பேராசிரியர் சுப. இராமநாதன் செட்டியார், நாட்டரசன்கோட்டை
3. வெ. கண்ணப்ப வேளார், சூரக்குளம்
4. கோனாபட்டு கள்ளணன் — பிள்ளைப் பெருமாள் கோயில், பட்டமங்கலம் இரவுத்த இராயர் கோயில் ஆகியவை எடுத்துக்காட்டுக்குச் சில
5. ப.வ. முத்தையா செட்டியார், நாட்டரசன்கோட்டை
6. 6ஆம் திருமுறை
7. தெய்வத்தின் குரல் — 5ஆம் பகுதி
8. பேராசிரியர் சுப. இராமநாதன் செட்டியார்
9. பேராசிரியர் சுப. இராமநாதன் செட்டியார்

உ

கண்ணகத்தே நின்று களிதரு தேனே, சுக்கூருடைய ஐயனே!

(9. சுக்கூருடைய ஐயனார் திருக்கோயில், காளையார் மங்களம்)

பத்துவகை மருந்து வேரில் (தசமூலம்) ஒன்றான வில்வம், (ஏனையவை: கண்டங்கத்திரி, சிறுமல்லிகை, சிறுவழுதுணை, தழுதாழை, நெரிஞ்சி, பாதிரி, வெருங்குமிழ், பெருமல்லிகை, வாகை.) இலக்குமியின் வடிவம் என்று கூறப்பெறும். (இதனுடன், வேம்பு சக்தி வடிவம் என்றும், துளசி சரஸ்வதி வடிவம் என்றும் கூறுவர். 'ரமா பில்வம், சிவாநிம்பா, துலசி ஸ்யாத் சரஸ்வதீ')[1]

இந்த வில்வம், சிவமூர்த்தியின் இச்சா ஞானக் கிரியையாய்ப் பூமியில் ஆன்மாக்களின் பாவத்தைப் போக்க, அவர் அருளால் கோமயத்தில் உற்பத்தியானது என்றும் சொல்வார்கள்.

இதனைப் பூசிப்பவர்கள், விரதத்துடன் மரத்தை அடைந்து எட்டுத் திக்குகளிலும் பசுவின் நெய்யால் தீபமிட்டுத், தூப தீபாராதனை செய்து வழிபட, எல்லாச் சித்திகளையும் பெறுவார்கள்.

'வில்வம்ஏத் துநர்க்கே தேவர் மெய்வடி வாகும் அன்றே'[2] என்றும் சொல்லப் பெறுகிறது.

இலக்குமி நிரந்தரமாகத் தங்கியிருக்கும் இடங்களில் வில்வமும் ஒன்றாகும்.

தாமரைப்பூவின் மத்தி, யானையின் தலை, பசுவின் பின்புறம், வில்வ இலையின் பின்பக்கம், சுமங்கலிகளின் சீமந்தம் (வகிடு) ஆகிய ஐந்து இடங்களில் இலக்குமி நிரந்தரமாகத் தங்கியிருக்கிறாள்.


ஒரு வில்வத்தை எடுத்து 'சிவ' என்று சொல்லிச் சிவபெருமானுக்கு அர்ப்பணித்தால், செய்த பாவமெல்லாம் தீரும் என்பார்கள்.

ஒவ்வோர் இல்லத்திலும் இந்தப் புனிதமான வில்வமரத்தை வைத்து வளர்த்து முறையுடன் பேணி வருவது பெரும் புண்ணியமாகும். (வீட்டில் வில்வமரம் இருத்தலாகாது என்பது வெறும் அறியாமை; பெரும் பேதைமை.)

வீட்டில் துளசியை வைத்து நாள்தோறும் நம் பெண்கள் வழிபட வில்லையா?

ஆஸ்துமாத் தொந்தரவு அதிகமாக இருக்கிறது என்று தம்மிடம் கூறிக் கவலைப்பட்ட ஓர் அம்மையாரிடம், நாள்தோறும் இரண்டு வில்வதளம் (இலை) சாப்பிட்டு வருமாறு கூறினாராம் காஞ்சிப் பெரியவர்.[3]

* * *



கக்கூருடைய ஐயனார் திருக்கோயில்

முற்காலத்தில் எல்லா இடங்களிலும் மரமே கடவுள் உருவத்திற்குச் சார்வுருவமாக உறுதி செய்யப் பெற்றிருக்கிறது. இது கிராமத்தின் புனித மரமாகும். கடவுளுக்குச் செய்யப் பெறும் அனைத்து வழி பாடுகளும் இம்மரத்திற்கே செய்யப் பெறும். இம்மரபின் எச்ச மாகவே ஒவ்வொரு கோயிலிலும் இன்று 'தலமரங்கள்' (ஸ்தல விருட்சங்கள்) வகுக்கப்பட்டிருக்கின்றன என்கிறார் டாக்டர் வெங் கடரமணய்யா.[4]

மிகப் புனிதமாகக் கருதப்பெறுகின்ற வில்வமரம், இத்தகைய தல மரமாக உள்ள குலதெய்வக் கோயில்களில் ஒன்றுதான், நாம் இப் போது காளையார் மங்களத்தில் கண்டுவரவிருக்கும் கக்கூருடைய ஐயனார் திருக்கோயில்.

இங்குள்ள வில்வமரத்தின் மற்றொரு சிறப்பு, மரத்தின் ஒரு கிளையில் எப்படியோ முளைத்த நாவல்மரம் ஒன்று, கிளைவிட்டுத் தாய் மரத்தையே மறைக்கும் அளவுக்கு வளர்ந்திருப்பது. (கூடாரத்திற்குள் மூக்கை நுழைத்த ஒட்டகம், சிறிது சிறிதாகக் கூடாரத்திற்குள் இருந்தவர்களையே வெளியேற்றிய கதைதான்!)

* * *

மதகுபட்டி — நாட்டரசன்கோட்டை பிரதான சாலையில், காளையார் மங்களத்திற்குத் திரும்பும் இடப்புறச் சாலையின் எதிரே (பிரதான சாலையின் வலப்புறத்தில்) பெரிய ஊருணி ஒன்றும், அதன் வலப்புறம் ஐயனார் கோயிலும் உள்ளன. இந்த ஊருணி 1904ஆம் ஆண்டு காளையார் மங்களம் நகரத்தார் குடும்பம் ஒன்றினால் அமைக்கப்பெற்றது.

ஊருணிக்கும் கோயிலுக்கும் இடையில், முன்னால் பலிபீடத்துடன் கூடிய மேடையில் பெரிய பூதமும், அதன் தோள்களில் முன்னங் கால்களை ஊன்றிக் கம்பீரமாகக் காட்சி தரும் சேமங்குதிரையும் உள்ளன. இவை 1896ல் கட்டப்பெற்றதாக அங்கு உள்ள கல்லில் பொறிக்கப் பெற்றுள்ளது.

காளையார் மங்களத்தைக் கீழ மங்களம் என்று முன்னர் அழைத்து வந்திருக்கின்றனர். அதற்கும் மேல மங்களத்துக்கும் இடையில் ஒரு கண்மாய். அங்குதான் முதலில் இக்கோயில் இருந்தது.

ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன்னர் (சேமங்குதிரை கட்டப்பெற்ற ஆண்டை ஒட்டி) இக்கோயில் பழைய இடத்திலிருந்து இப்போதைய இடத்துக்கு மாற்றப்பெற்றது.

ஊருணியை அமைத்த அதே குடும்பத்தாரின் முயற்சியில், நாட்டார் — நகரத்தாரின் கூட்டுத் திருப்பணியாக, 1945ஆம் ஆண்டிலும், 08.02.1985லுமாக இரு கும்பாபிஷேகங்கள் நடைபெற்றுள்ளன.[5]

ஒக்கூர் நகரத்தார்களும் (இளையாற்றங்குடிக் கோயிலார்), சக்கந்தி, மதகுபட்டி நகரத்தார்களும், மேல — கீழமங்களம் நாட்டாரும், நகரத்தாரும் (சூரக்குடிக் கோயிலார்)இந்த ஐயனாரைக் குலதெய்வமாகக் கொண்டாடுகின்றனர்.

காளையார் மங்களத்திற்குள் செல்லுமுன்னர், பிரதான சாலையை ஒட்டியுள்ள வசிப்பிடத்தில், இக்கோயிலின் வேளார் குடும்பத்தினர் வாழ்கின்றனர். அவர்களில் அப்போதைய முறைகாரரை அழைத்துக்கொண்டு கோயிலுக்குச் செல்கிறோம். இங்கு செவ்வாய் — வெள்ளிக்கிழமைகளில் மட்டுமே ஒருகாலப் பூசை நடைபெறுகிறது.

(மத்தியகிழக்கு நாடுகளில் வேலை வாய்ப்புகள் நிறையக் கிடைப்பதைத் தொடர்ந்து பெரும்பாலான குலதெய்வக் கோயில்களில் பெண்களும், பள்ளிக்குச் செல்லும் சிறார்களுமே பூசை முறைகளைக் கவனிக்கின்றனர். இதைச் சிங்கம்புணரி சிவாச்சாரியாரும் ஒப்புக் கொள்கிறார். 50 ஆண்டுகளுக்கு முன்னர் வரை குலால சிவாச்சாரியார்கள் 250 பேர் இருந்தனர். இப்போது மிகச்சிலரே உள்ளனர். தேவகோட்டை முதலிய

இடங்களிலுள்ள அர்ச்சகர் பயிற்சிப் பாடசாலைகளில் மிகச் சிலரே பயில்கின்றனர்.[6])

கோயிலின் புறத்தே சேமங்குதிரையை அடுத்துள்ள மாடத்தில் சோனையன் குடி கொண்டிருக்கிறார். ஆடி மாதத் திருவிழாவின்போது, ஊரார் சோனையனுக்குக் கிடாய் வெட்டிப் பூசையிடுவதுண்டாம். அது வெளியிலேயே நடைபெறுகிறது. கோயிலினுள் உயிர்ப்பலி கொடுப்பதில்லை.

கோயிலினுள் செல்கிறோம்.

ஆஸ்பெஸ்டாஸ் என்னும் கல்நார் தகடுகள் வேய்ந்த கூடத்தில் யானை வாகனமும், பலிபீடமும் உள்ளன. அடுத்துள்ள மகாமண்டபமும், கருவறையும் முழுமையான கல்திருப்பணி.

கருவறையில் தேவியர் புடைசூழ அழகிய ஐயனார் வீற்றிருந்து அருள்பாலிக்கிறார்.

பிராகாரத்தில் கிழக்குச் சுற்றுச் சுவர் ஓரமாக, நாம் முன்பு குறிப்பிட்ட வில்வ — நாவல் மரங்கள் உள்ளன.

தென் சுற்றுச் சுவரை ஒட்டிப் பட்டதுரை, இராக்காயி, கறுப்பாயி, மாரியம்மன், சந்நியாசி, வீரபத்திரர் சிலைகள் உள்ளன. இவற்றில் பட்டதுரையும், மாரியம்மனுமே கற்சிலைகள். மாரியம்மன் சிலை அப்படிப்பட்டதோர் அழகு.

அடுத்து விமானத்துடன் கூடிய இரு சந்நிதிகளில் சின்னக்கறுப்பரும், பெரிய கறுப்பரும் உள்ளனர். இச்சந்நிதிகளுக்கு முன்னாலும் கல்நார்த் தகடு வேய்ந்த கூடமே உள்ளது.

சிறியதாக இருந்தாலும் சிறப்பாக அமைந்திருக்கும் இக்கோயிலில் உள்ள மணியில் 1893ல் உபயம் செய்யப் பெற்றதாகக் குறிக்கப்பெற்றுள்ளது.

இந்த மணியும் ஊருணியை வெட்டிய குடும்பத்தாரே உபயம் செய்ததாம்.[7]

மாசி மாதச் சிவராத்திரியின்போது நகரத்தார் சேர்ந்து சென்று வழிபடுகின்றனர்.

வீடுகளில் திருமணம் போன்ற நல்ல காரியங்கள் நடக்கும் போதும், வெளிநாடுகளுக்குச் செல்லும்போதும், அவரவரும் கோயிலுக்கு வந்து வழிபட்டுச் செல்கின்றனர்.

சிவகங்கை தேவஸ்தானத்தைச் சேர்ந்த கோயிலாயினும், நகரத்தார் தனிப்பட்ட முறையில் மராமத்துகளைச் செய்து, கோயிலைத் தூய்மை கெடாது சிறப்பாகப் பாதுகாத்து வருகின்றனர்.

'கண்ணகத் தேநின்று களிதரு தேனே!
கடலமு தே!கரும் பே!விரும் படியார்
எண்ணகத் தாய்!உல குக்குஉயி ரானாய்!'

என்று கக்கூருடைய ஐயனாரைப் பாடிப் பரவி வழிபட்டுக் கொண்டு, காளையார் மங்களத்திலுள்ள மேலும் இரு கோயில் களுக்குச் செல்லும் பொருட்டு ஊரை நோக்கிச் செல்கிறோம்.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

பொக்கணமும் புலித்தோலும் புயத்தில் கொண்டார்,
பூதப் படைகள்புடை சூழக் கொண்டார்,
அக்கினொடு படஅரவம் அரைமேற் கொண்டார்,
அனைத்துலகும் படைத்தவையும் அடங்கக் கொண்டார்,
கொக்கிறகும் கூவிளமும்[8] கொண்டை கொண்டார்,
கொடியானை அடல்ஆழிக்(கு) இரையாக் கொண்டார்,
செக்கர்நிறத் திருமேனி திகழக் கொண்டார்,
செடியேனை ஆட்கொண்ட சிவனார் தாமே!

திருச்சிற்றம்பலம்

ஆறாம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

1. அபிதான சிந்தாமணி
2. வில்வத்தை வணங்குவோர் தெய்வ வடிவத்தைப் பெறுவர் — புட்ப பலன், தருமையாதினம்
3. அன்பே.....அருளே — பரணீதரன்
4. An essay on the origin of the South Indian Temples
5. பேராசிரியர் டாக்டர் இராம சேதுநாராயணன், காளையார் மங்களம்
6. பெரி. சே. சின்னையா சிவாச்சாரியார்
7. பேராசிரியர் டாக்டர் இராம சேதுநாராயணன்
8. கூவிளம் — வில்வம்

உ

சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி!

(10. சந்தனக் கறுப்பையா திருக்கோயில், காளையார் மங்களம்)

இராங்கியம் நகரத்தார்களின் குலதெய்வக் கோயில் அது.

ஆண்டுதோறும் குறிப்பிட்ட சில நாட்களில் அக்கோயிலுக்குச் சென்று வருவதை அவர்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

அந்த நாள் தவறினால், அவர்கள் வீட்டில் சாம்பிராணி மணம் கமழத் தொடங்கிவிடுமாம்.

அதையடுத்து அந்தக் குடும்பத்தார் உடனடியாகக் கோயிலுக்குச் சென்று வழிபடுவார்களாம். விஞ்ஞானம் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கும் யுகத்தில், இது என்ன ஐயா சாம்பிராணிக் கதை? சுத்த மடச்சாம்பிராணியாக இருக்கிறாயே! யாரை ஐயா இதை நம் பச் சொல்கிறாய் என்று சரமாரியாகக் கேள்விக்கணை தொடுக்க முற்பட்டு விடாதீர்கள்.

இந்தப் புனித யாத்திரையை மேற்கொண்டிருந்த நாங்கள் பெற்ற அனுபவங்கள், இத்தகைய கூற்றுகள் யாவும் மெய்யானவை என்றே, எங்களை நம்பச் செய்தன.

எடுத்துக்காட்டுக்குக் காளையார் மங்களத்தில் சிவன் கோயிலுக்கு எதிரிலுள்ள ஊருணியின் மறுகரையில் அமைந்திருக்கும் இந்தச் சந் தனக் கறுப்பையா சுவாமி கோயிலை எடுத்துக் கொள்ளுங்களேன்.

இக்கோயிலில் வாரத்தில் ஒருநாள் வெள்ளிக்கிழமைகளில் மட்டுமே பூசை நடைபெறுகிறது. மற்ற நாட்களில் பக்தர்கள் வந்தாலே கோயில் திறக்கப் பெறும்.

இக்கோயிலுக்கு நாங்கள் சென்றது ஒரு புதன்கிழமை.[1]

அதற்கு முந்திய வெள்ளிக்கிழமைக்குப் பின்னர் கோயில் திறக்கப் பெறவில்லை என ஆசாரிகளான பூசாரி குடும்பத்தினர் கூறினர். அதை ஏற்க மறுப்பதற்குக் கோயிலில் எந்தத் தடயமும் இல்லை.

சந்தனக் கறுப்பையா சுவாமியின் பீடம் இருக்கும் இடம், கட்டட அமைப்பு இல்லாமல் நான்கு கால்கள்மீது அமைந்துள்ள விமானத் துடன் கூடிய மேல்விதானம் மட்டுமே. நாற்புறமும் திறந்தே இருக் கிறது. சுற்றிலும் திறந்த வெளி.



சந்தனம் தோய்ந்த சுந்தரக் கறுப்பையா கோயில்

வாயிற்கதவைத் திறந்து உள்ளே சென்றதும், அந்தப் புனிதமான சாம்பிராணி மணம் எங்கிருந்து வந்தது?

மேகமூட்டம் இல்லாமல், சூரிய வெளிச்சம் நிறைந்த அந்தப் பகற் பொழுதில், சந்நிதானத்தின் முன் காணப்பெற்ற இலேசான புகைப்படலம் எப்படி ஏற்பட்டது?

இந்த நூலுக்கான முயற்சியைத் தொடங்கியபோது, தெரியாத பல கோயில்களை நகரத்தார் சமுகத்துக்கு அறிமுகப்படுத்தும் ஒரு பணியாகவே நினைத்து இதனை மேற்கொண்டேன்;

இந்தக் கோயில்களில் முழுமையான ஒரு நம்பிக்கை இல்லாத நிலையில்தான் பயணத்தைத் தொடங்கினேன்;

ஆனால், இந்தப் பயணத்தின்போது ஏற்பட்ட
பல அனுபவங்கள்.....
பல நிகழ்ச்சிகள்.....
அவற்றுக்கு எப்படி, எங்கிருந்து, யாரிடம் விடை காண்பது?

சிலர் நினைப்பது போன்று, படிப்படியாக மறைந்து கொண்டிருக்கும் வழிபாடு அன்று இது;

இப்போதுதான் குலதெய்வ வழிபாடு புத்துணர்ச்சி பெறுகிறது என்று தோன்றுகிறது;

அதற்குக் காரணமும் இருக்கிறது!

* * *

காரைக்குடி வைரவன் கோயிலார் இக்கோயிலை — சந்தனக் கறுப் பையாவைக் குலதெய்வமாகக் கொண்டுள்ளனர்.

அழகர்கோயிலிலிருந்து தங்கள் ஊருக்குத் திரும்பிக் கொண்டிருக் கிறது அந்தக் குடும்பம். இந்த வழியாக அவர்கள் செல்லும்போது, கொள்ளையர் சிலர் அவர்களை வழிமறித்து அவர்களுடைய உடைமைகளைக் கவர்ந்து கொள்ளுகின்றனர். அழகர்கோயிலில் காவல் தெய்வமாக உள்ள பதினெட்டாம்படிக் கறுப்பர் அவர்கள் நினைவுக்கு வருகிறார்.

'சந்தனக் கறுப்பா!.....காப்பாற்று கறுப்பையா!' — பொருட்களை இழந்தோர் புலம்பித் தவிக்கின்றனர்;

கொள்ளையர்களின் கண்பார்வை மறைகிறது;

இழந்த பொருட்கள் மீண்டும் கிடைக்கின்றன.

வீட்டிற்குத் திரும்பிய குடும்பத்தாரில் ஒருவர்மீது சுவாமி ஆவேசிக் கிறார்.

திருட்டுப் போன இடத்தில் கோயில் கட்டுமாறும், கருங்கப்பட்டி ஆசாரிகளைப் பங்காளிகளாக்கிக் கொண்டு, அவர்களைப் பூசாரி களாக்குமாறும் சுவாமி கட்டளை இடுகிறது.

அப்படி எழுந்ததுதான் இந்தக் கோயில்.

தொடர்ந்து, இந்தக் கோயில் வளாகத்திலோ, அருகிலோ திருட்டுப் புரட்டு நடக்க வேண்டுமே.....மூச்......

* * *

இருபுறமும் கண்மாய்.

வெளியிலிருந்து பார்த்தால் வேலைப்பாடு இல்லாத வெறும் கும் பங்கள் போன்ற இரு விமானங்களைத் தவிர, வீடு போன்ற தோற்றத்தையே அது கொண்டிருக்கிறது.

உள்ளே சென்றதும், ஓர் ஓட்டுக் கூடம்.

இடப்புறத்தில் காளியாத்தாள்.

ஓட்டுக்கூடத்தை ஒட்டியுள்ள நாற்புறமும் திறந்த அமைப்பினைக் கொண்ட விமானத்துடன் கூடிய விதானம்தான், நாம் முன்பு குறிப்பிட்ட சந்தனக் கறுப்பையா சுவாமியின் கருவறை.

நடுவில் சிறிய மேடை. அதில் இரு பாதகுறடுகள். மேடையின் கீழே மேலும் இரு பாதகுறடுகள்.

இவர்தான் சந்தனச் சாந்தின் சுந்தரர்; பதினெட்டாம்படிக் கறுப் பர்; சந்தனக் கறுப்பையா சுவாமி.

இக்கருவறையின் இடப்புறம், மற்றொரு சந்நிதி. இது முழு அடைப் பினைக் கொண்டது. உள்ளே ஒரு பீடம். அதில் திருவாசி மட்டும் உள்ளது.

இது பொன்னாடாள், பூவாண்டாள் (இவைதாம் சரியான பெயர்களாக இருக்க வேண்டும்) என்னும் சகோதரிகளின் சந்நிதி என்கின்றனர். இவர்கள் கருங்கப்பட்டியைச் சேர்ந்தவர்களாய் இருக்க வேண்டும்.

மேற்கொண்டு முழுமையான விவரம் தெரிந்து கொள்ள முடியவில்லை. குலதெய்வக் கோயில்களைப் பொறுத்தவரை இது ஒரு பெரிய குறை. நகரத்தார்களும் தகவல்கள் கூறத் தயங்குகின்றனர்; அர்ச்சகர்களும் அதே நிலைதான்.

சந்தனக் கறுப்பையா, சகோதரிகள் சந்நிதி ஆகிய இரண்டின் முன்னும் பலிபீடங்கள் உள்ளன. சகோதரிகளின் சந்நிதியை அடுத்து வலப்புறம் ஏழு கன்னிமாரும், சோனை முத்துசுவாமியும் உள்ளனர். கோயிலுக்கு வெளியே வலப்புறம் உள்ள ஆத்தி மரத்தின் அடியில் சோனையா (முன்னோடி) வீற்றிருக்கிறார். இவருக்குச் சாராயம் படைப்பதுண்டு.

* * *

மாசி மாத மகா சிவராத்திரியிலிருந்து 15 நாட்கள் கழித்து வரும் வெள்ளி, சனிக்கிழமைகளில் சந்தனக்குடத் திருவிழா இங்கே நடைபெறுகிறது.

அத்திருவிழாவில் 21 பந்திகளுக்கு (பரிவார தேவதைகளுக்கு) 61 பள்ளயம் போடுவார்களாம்.

வீட்டில் பொங்கல் வைத்துப் பூசாரி சந்தனக்குடம் எடுத்துச் செல்லக், கருங்கப்பட்டியார் கரகம் எடுத்துவர இரண்டு தரப்பினரும் ஒன்று சேர்ந்து சந்தனக்குடத் திருவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

மற்ற கோயில்களைப் போன்று, நகரத்தார்கள் சிவராத்திரிக்கு இங்கு வருவதில்லை. சிவராத்திரி முடிந்ததும் சந்தனக்குடத் திருவிழாவுக்கென இக்கோயிலுக்கு அடிமைப்பட்ட 40 புள்ளி நகரத்தார்களிடம் புள்ளி ஒன்றுக்கு 65 ரூபாய் புள்ளிவரியைப் பூசாரி சென்று வசூலித்து வருவார்.

இக்கோயிலுக்கு அடிமைப்பட்ட மற்றவர்கள் புள்ளி வரியாக 30 ரூபாயும் 2 படி அரிசியும் கொடுக்கின்றனர்.

நகரத்தார் வீட்டுத் திருமணங்களுக்குப் பூசாரி சென்று திருநீறு வழங்கி வாழ்த்துக் கூறி வருவதுண்டு.

பூசாரிகளான ஆசாரிகள், முன்பு அரிவாள்மீது நின்று சாமியாடி அருள்வாக்குக் கூறிவந்தனராம். இப்போது அவ்வழக்கம் இல்லை.

காளையார் மங்களம் ஊரினுள் இருக்கும் பூசாரி வீட்டிற்குச் சென்று அவரை அழைத்துச் சென்றால், கோயிலில் மன நிறைவான அருட்காட்சி கிடைக்கும்.

சந்தனச் சாந்தின் சுந்தரரை வணங்கி விடைபெற்றுக் கொண்டு, சேவாத்தாள் ஐயனார் கோயிலுக்குச் செல்கிறோம்.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

சந்தன களபம் துதைந்தநன் மேனித்
தவளவெண் பொடிமுழு தாடும்
செந்தழல் உருவில் பொலிந்துநோக் குடைய
திருநுதல் அவர்க்(கு)இடம் போலும்,
இந்தன விலங்கல் எறிபுனம் தீப்பட்(டு)
எரிவ(து)ஒத்(து) எழுநிலை மாடம்
அந்தணர் அழலோம்(பு) அலைபுனற் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே.

திருச்சிற்றம்பலம்

— ஒன்பதாம் திருமுறை,
கருவூர்த் தேவர்

குறிப்பு விளக்கம்:

1. ஜூலை 13, 1994

உ

சேர்ந்தார் இடர்கள் தீர்க்கும் சேவாத்தாள் ஐயனார்

(11. சேவாத்தாள் ஐயனார் திருக்கோயில், காளையார் மங்களம்)

''காட்டக் காத்தது காளியாத்தா,
கம்மாக் கரையக் காத்தது ஐயனாரு.....''

வானொலியில் ஒலித்த இந்த நாட்டுப்புறப் பாடல் வரிகள், கண்மாய் நீரைக் காத்தும், ஊரைக் காத்தும், ஊர் மக்களுக்கு உடல் நலம் அளித்தும் வரக்கூடிய தெய்வமாக ஐயனார் போற்றப்பெறுவதைக் குறிப்பிடுகின்றன.[1]

நாம் இப்போது கண்டு தொழப்போகும் சேவாத்தாள் ஐயனார், இந்தக் கூற்றுக்குச் சரியான இலக்கணமாகத் திகழ்கிறார். (இந்தக் கோயில் இருக்கும் இடத்தை அடையச் சற்றுக் கூடுதலாகவே நடக்க வேண்டியிருக்கும், தயார்தானே?)

காளையார் மங்களம் ஊரின் நடுவில் இடப்புறம் திரும்பிப் பள்ளிக்கூடத்தின் வழியாகச் சென்று, கண்மாய்க் கரையில் உள்ள ஒற்றையடிப் பாதையில் சுமார் 2கி.மீ. நடந்து சென்றால்தான் இந்தக் கொம்படி ஆலயத்தை அடையலாம்.

இதுதான் நாம் வழிபடப் போகும் முதல் கொம்படி ஆலயம். (அங்காள பரமேஸ்வரி — குருநாதன் கோயில் போன்றவற்றில் மேல் விதானம் இல்லாமல் திறந்த வெளியில் சில மூர்த்தங்கள் இருந்த போதிலும், கோயில் முழுவதுமே திறந்த வெளியில் மரங்களின் நடுவே அமைந்திருப்பது இதுவே முதற்கோயில்.)

கொம்பு என்றால் ஏரிக்கோடி, மரக்கொம்பு, மரக்கிளை என்று பொருள் சொல்கின்றனர். மரத்தின் அடியில் — மரக்கிளையின் நிழலில், கட்டட அமைப்பு இன்றி இயற்கைச் சூழலில் அமைந்த கோயில் என இதனைக் கொள்ளலாம்.

'அழல்புரை குழைகொழு நிழல்தரும் பலசினை
ஆலமும் கடம்பு நல்யாற்று நடுவும்,
கால்வழக்(கு) அறுநிலைக் குன்றமும் பிறவும்,
அவ்வவை மேய வேறுவேறு பெயரோய்......''[2]



ஐயனார்

(''தீக்கொழுந்தினை ஒக்கும் தளிரையும், கொழுவிய நிழலையும் தரும் பல கிளைகளை உடைய ஆலமரத்தின் கீழும், கடம்ப மரத்தின் கண்ணும், நன்றாகிய ஆற்றிடைக் குறையிடத்தும், காற்றின் செலவு தடையுறுதற்குக் காரணமான உயரிய நிலையினையுடைய குன்றுகளிடத்தும், இன்னோரன்ன பிறவிடங்களிலும், அவ்வவ்விடங்களில் பொருந்திய பற்பல தெய்வங்களாக வகுத்துச் சொல்லப்பெறும் பெயர்களை உடையோனே!'' என்பது இப்பாடல் வரிகளின் பொருள்.)

ஒப்பற்ற அன்பினை உடைய கண்ணப்பர் வழிபட்ட குடுமித்தேவர், கட்டட அமைப்பின்றி இயற்கைச் சூழலிலேயே 'வெற்பின் முளைத்தெழு முத'[3]லாகவே மலையுச்சியில் குடிகொண்டிருந்தார் என்று கூறுவர்.

இவ்வாறே நம் சேவாத்தாள் ஐயனாரும், கண்மாய் உள்ள இடத்தில், கண்மாய்க்கும் கரைக்கும் நடுவில் உள்ள சரிவில், மரஞ்செடி கொடிகளிடையிலேயே குடிகொண்டிருக்கிறார்.

* * *

காளையார் மங்களத்திலுள்ள வைரவன் கோயிலாரின் குலதெய்வம் இது.

தகவல் கொடுக்க யாருமில்லாத நிலையில் வயதான செட்டியார் ஒருவரைச் சென்று காண்கிறோம்.

வறுமையிலும், தனிமையிலும் வாடும் இவர், சேவாத்தாள் தம்மைக் கைவிட்டு விட்டாள் என்று அடிக்கடி கூறிக் கண்ணீர் வடிக்கிறாரே அன்றி, அதிகமாகத் தகவல் கூறக்கூடிய நிலையில் இல்லாதிருக்கிறார்.

பூசாரி வீட்டிலும் ஆடவர் எவருமில்லை. வேறு வழியின்றி, வழிகாட்ட ஒரு சிறுமியை அழைத்துக் கொண்டு, நீண்ட தொலைவு கண்மாய்க் கரையில் முள்செடிகளிடையே நடந்து சென்று, கரை இறக்கத்தில் உள்ள ஐயனாரைக் காண்கிறோம்.

''உம்முடன் துணையாய் உள்ளார் ஒருவரும் இன்றி----''[4] என்று கூறிக் கண்ணப்பர் மனம் வருந்தினாராமே, அவ்வாறே நாமும் வருந்துகிறோம்.

நாள்தோறும் பூசை என்று எதுவும் இங்கு கிடையாது; யாரும் அழைத்தால் மட்டுமே வருவார்கள்; அதுவும், வீட்டில் ஒருவருமே இல்லாத நிலையில்...?

''அன்புடன் நோக்கி நிற்பர், அழுவர் கை தொழுவர், வீழ்வர்.
இன்புற எழுவர், பின்பால் ஏகுவர், இரங்கி மீள்வர்......''[5] என்னும் நிலையிலேயே நாமும் இருக்கிறோம்.

பழைய குலதெய்வக் கோயில்கள் பல புதுப்பிக்கப் பெற்றும், குடமுழுக்கு விழா நடத்தப்பெற்றும் சிறப்புறும் வேளையில், இது போன்ற சில கோயில்களுக்கும் விரைவில் விடிவு பிறக்கும் என நம்புவோம்.

சிறிய உருவங்களான சேவாத்தாள் ஐயனாரும், பூரணி, புஷ்கலையும் செம்புறைக்கல் மேடையில் வீற்றிருக்கின்றனர். அவர்களின் வலப்புறம் விநாயகர்.

ஒரு கால் இருக்கை மீது குத்திட்டும், மற்றொரு கால் தொங்கிய நிலையிலும் ஐயனார் அமர்ந்திருப்பதை 'உத்குடி' இருக்கை என்பர்.[6]

ஐயனாருக்கு முன்னால் சிறிது தள்ளி வலப்புறமாக அழகிய சிலை வடிவில் சேவாத்தாள் கூப்பிய கரங்களுடன் நிற்கிறார்.

இவரை நகரத்தாருடன் தொடர்புடைய பெண் என்று கூறுகின்றனர்.

அலவாக்கோட்டையில் திருமணமாகிச் சென்ற இவரின் மறைவுக்குப் பின்னர், இங்கு சிலை வைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிகிறது.

இந்த அம்மையாரின் பெயரையே தம்மோடு இணைத்துக் கொண்டு, தம்மை நாடி வரும் அன்பர்க்கு நலங்கொடுக்க நாளும் காத்திருக்கிறார் சேவாத்தாள் ஐயனார்.

ஐயனாரின் எதிரில் சிறிது தொலைவில் மண்ணில் புதைந்துள்ள கறுப்பரின் பாதி உருவம் உள்ளது. அருகில் ஒரு கல்மேடையும் காணப்பெறுகிறது.

காளையார் மங்களம் வைரவன் கோயில் நகரத்தார், முன்னர், இக் கோயிலுக்குச் சிவராத்திரியன்று சேர்ந்து வந்து வழிபடுவார்களாம். இப்போது அவ்வழக்கம் அருகி வருகிறது.

நகரத்தார் வீட்டுத் திருமணம் போன்றவற்றை முன்னிட்டு, இக் கோயிலில் முன்பு உயிர்ப்பலி கொடுத்திருக்கின்றனர். நீண்ட கால மாக அவ்வழக்கமும் நிறுத்தப்பட்டுவிட்டது.

சேர்ந்தார் இடர்தீர்க்கும் இந்தச் சேவாத்தாள் ஐயனாரரை 'என்பு கரைய உள்ளுருகி இறைஞ்சி' அங்கிருந்து புறப்படுகிறோம்.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

நின்னாவார் பிறரின்றி நீயே ஆனாய்,
நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்தும் ஆனாய்,
மன்னானாய், மன்னவர்க்கோர் அமுதம் ஆனாய்,
மறைநான்கும் ஆனாய்,ஆ றங்கம் ஆனாய்,
பொன்னானாய், மணியானாய், போக மானாய்,
பூமிமேல் புகழ்தக்க பொருளே உன்னை
என்னானாய் என்னானாய் என்னின் அல்லால்
ஏழையேன் என்சொல்லி ஏத்து கேனே.

திருச்சிற்றம்பலம்

— ஆறாந் திருமுறை

குறிப்பு விளக்கம்:

1. நாட்டுப்புற நடனங்களும், பாடல்களும் — டாக்டர் கே.ஏ.குணசேகரன்
2. பரிபாடல் 4: 66-69
3. பெரிய புராணம்
4. பெரிய புராணம்
5. திருவாதவூரர் புராணம்
6. தென்னிந்தியச் சிற்பங்களும், கோயில்களும் — தி. இராசமாணிக்கம்

உ

வல்லடைந்தார்க்கு அருளும் வல்லடிகாரர் சுவாமி

(12. வல்லடிகாரர் சுவாமி ஐயனார் திருக்கோயில், நைத்தாம்பட்டி, அம்பலகாரன்பட்டி)

தமிழ் நாட்டில் ஐயர் (குருக்கள்) பூஜிக்காத கிராமக் கோயில்களில் உள்ள சுவாமிதான் ஐயராக — ஐயனாராக இருக்கிறார் என்கிறார் காஞ்சிப் பெரியவர்.[1]

இவ்வாறு ஆகம முறையிலான பூசை செய்வோரைக் கொண்டிராத — சாத்திர தோத்திர நெறிமுறைகள், தவறாமல் ஆண்டுதோறும் நிகழ்த்தப்பெறக்கூடிய விழா ஏற்பாடுகள் ஆகியவை இல்லாத — கிராமிய வழிபாட்டு முறைகளைக் கொண்ட கோயில்களில் உள்ளவை சிறு தெய்வங்கள் ஆகும்.[2]

இத்தகைய கிராம தேவதைகள் — சிறுதெய்வங்கள்தாம், பெரும்பாலும் நம் குலதெய்வங்களாக அமைந்துள்ளன என்பது ஒப்புக்கொள்ள வேண்டிய ஓர் உண்மை.

இருப்பினும், இத்தகைய கோயில்களிலும், தேர்த்திருவிழா, அத் திருவிழாவில் அந்தணர் இனத்தைச் சேர்ந்த அர்ச்சகர்கள் வழி பாடு செய்தல் போன்ற பெருநெறிக்குரிய வழிபாட்டு முறைகளும் புகுத்தப்பெற்றே வருகின்றன.

இத்தகைய ஒரு மாறுதல் நிகழும் சில கோயில்களில் ஒன்றாக, மேலூர் தாலுகாவில் உள்ள நைத்தாம்பட்டி வல்லடிகாரர் சுவாமி ஐயனார் கோயிலைக் குறிப்பிட்டால் தவறில்லை.

அந்தக் கோயிலுக்குத்தான் இப்போது செல்கிறோம்.

* * *

ஒக்கூர், சக்கந்தி, சொக்கநாதபுரம், பாகனேரி நகரத்தார்களும், மதகுபட்டி இளையாற்றங்குடி பேராசெந்தூருடையாருமான சுமார் 150 புள்ளிகள், இந்த வல்லடிகாரர் சுவாமி ஐயனாரைக் குல தெய்வமாக வழிபடுகின்றனர்.[3]

மேலூரிலிருந்து சிவகங்கை செல்லும் சாலையில் 10 ஆவது கி. மீட்டரில் வலப்புறம் திரும்பி நேரே சென்றால் 3கி.மீ. தொலை வில் உள்ள அம்பலகாரன்பட்டியை அடையலாம். அதை அடுத்

துள்ள நைத்தாம்பட்டியின் ஊர் எல்லையில் உள்ளது இக்கோயில். மேலூரிலிருந்து பஸ் வசதி உள்ளது.

கோயில் வளாகம் மிகப்பெரிய திருச்சுற்றுச் சுவரைக் கொண்டது; முன்புறம் ஒரு பகுதியும், பின்புறம் மற்றொரு பகுதியுமாக அமைந் திருக்கிறது.

கோயிற் பூசாரி கூறுவதைக் கொண்டு நோக்கினால், முன்பகுதியைப் புதிய கோயில் என்றும், பின்பகுதியைப் பழைய கோயில் என்றும் கொள்ளலாம்.

ஊரின் எல்லையிலுள்ள கோயிலைச் சென்றடைகிறோம்.

உள்ளும் புறமுமாக நிற்கும் நான்கு பெரும் பூதங்களைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை என்று, திருஞானசம்பந்தப் பெருமான் முன்கூட்டியே நமக்கு அபயம் கொடுத்திருக்கிறார்.

"மிகையான பூத மவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே" என்பது அவர் வாக்கு.[4]

இரு நுழைவாயில்கள்.

நாம் இடப்புறம் உள்ள நுழைவாயில் வழியாக, வெளியே உள்ள புதிய பூதங்களைக் கடந்து செல்கிறோம். (வலப்புற வாயில் பூட்டப்பட்டே உள்ளது.)



கோபுர தரிசனம் கோடி புண்ணியம்

பெரிய திறந்த வெளி.

இரண்டு பழைய பூதங்கள் நம்மை அச்சுறுத்தும் வகையில் பார்க்கின்றன. அவற்றைத் தாண்டிக் கூரை வேய்ந்த நாற்கால் கூடம். அது கிராமத்தார் தம் விளைவுகளுக்கான காணிக்கை செலுத்தும் இடம்.

அதனருகில் வலப்பக்கம், கல்லினாலான மிக உயரமான விளக்குத் தூண்.

இடப்பக்கம் அண்மையில் வண்ணம் பூசப்பெற்றது போன்று புது மெருகுடன் திகழும் சேமங்குதிரை. கம்பீரமான தோற்றத்துடன் உள்ள சேமங்குதிரையைச் சுற்றிக் கம்பி அடைப்புப் போடப்பெற்றுள்ளது. இவற்றின் இடையில் சென்று 3 நிலைகளை உடைய இராஜகோபுரத்தை அடைகிறோம்.

இந்த 3 நிலை (வாயில்)கள் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி எனப் பெறும் மூன்று அவத்தைகளைக் குறிக்கின்றன. (விழிப்புநிலை, கனவு நிலை, மயக்கமான நித்திரை நிலை.) கோபுரம் இறைவனின் திருவடியைக் குறித்து நிற்கிறது.[5]

'வள்ளல் பிரானுக்கு வாய் கோபுரவாசல்' என்கிறது திருமந்திரம். ஆலய அமைப்பு, ஆண்டவன் இருப்பு யாவும் நம் உடலிலேயே உள்ளன என்பதைக் குறிக்கும் இத்திருமந்திரப்பாடல் (1823), உள்ளத்தில் உறையும் இறைவனைச் சென்று வழிபடுவதற்கு வாயே கோபுர வாசலாகும் என்கிறது.

'கோபுர தரிசனம் கோடிபுண்ணியம்' என்பார்கள்.

தூலலிங்கமாகிய திருக்கோபுரத்தைத் தரிசித்து, இரண்டு கைகளையும் சிரசிலே குவித்துச், சிவநாமங்களை உச்சரித்துக் கொண்டு உள்ளே போகவேண்டும் என்கிறது ஆலய தரிசன விதி.[6]

கோயில்களில் அமைக்கப்பெற்றிருக்கும் கோபுரங்களை 'பிரம் ஹரந்திர மத்யகபாலத்வாரம்' என்று யோகிகள் கூறுகின்றனர்.[7]

பெரிய கறுப்பர் சந்நிதிக்குரிய இந்த இராஜகோபுரத்தோடு ஒட்டிய சுற்றுச்சுவர் பாதியோடு நிற்கிறது. ஐயனாருக்குரிய இராஜகோபுரம் கட்டப்பெறுவதற்காக இப்படி இருக்கிறது போலும்.

இந்தத் திருச்சுற்றுச் சுவர் வடக்குப் பகுதியிலும் கட்டப்பெறாமல் அரைகுறையாகவே இருக்கிறது.

நுழைவாயில், இராஜகோபுரம் யாவுமே நம்மைப் பெரியகறுப்பர் சந்நிதிக்கே இட்டுச் செல்கின்றன.

ஐயனாரின் தலையாய காவல் தெய்வம் என்று கருதப்பெறும் இவரையே முதலில் தரிசிப்போமே!

பெரிய கறுப்பர் சந்நிதி மூலஸ்தானத்தையும், மகாமண்டபத்தையும் கொண்டு விளங்குகிறது.

மண்டபத்தின் இடப்புறத் தூணில் சின்னக் கறுப்பர் உள்ளார். இவரே இங்கு காவல் தெய்வம்.

கருவறையில் ஒரு பீடத்தின் பின்னால், அழகிய வேலைப்பாடு மிகுந்த பளிச்சிடும் திருவாசி. பீடத்தில் பாதம் உள்ளது. இதையே

பெரிய கறுப்பராகக் கொண்டு வழிபடுகின்றனர். இந்தச் சந்நிதிக்குரிய விமானம் புதுப்பிக்கப்பெற்று வருகிறது.

இவரை வணங்கிக் கொண்டு வலமாக வந்தோமானால், இவருடைய சந்நிதியின் இடப்புறம் ஐயனார் சந்நிதி. மகா மண்டபத்தில் யானை வாகனம், அதன் பின்னால் பலிபீடம், செப்புத் தகடு வேயப்பெற்ற கொடிமரம் ஆகியவை உள்ளன.

கருவறைக்கு வெளியே, இடப்புறம் நாகலிங்கம், விநாயகர், வலப்புறம் பலிபீடம் ஆகியவை காணப்பெறுகின்றன.

மூலவர் வல்லடிகாரர் சுவாமி ஐயனாரும், பூரணை — புஷ்கலையும் மிக அழகிய சிறிய மூர்த்தங்கள். பார்த்துக் கொண்டே இருக்கலாம் போலிருக்கிறது.

இந்த இரு சந்நிதிகளுக்கும் இடையில் ஒரு மண்டபம். இங்குதான் உற்சவக் காலங்களில் உற்சவர்களுக்கு அலங்காரம், வழிபாடு ஆகியவை நடைபெறுகின்றன.

ஐயனார் கருவறை விமானமும் புதுப்பிக்கப்பெறுகிறது.

இந்தக் கோயிலில் காணப்பெறும் ஒரு சிறப்பு, மூலவர் ஐயனாரும், பெரிய கறுப்பரும் மட்டுமே எழுந்தருளியிருப்பதுதான். மற்ற கோயில்களைப் போன்று ஏராளமான பரிவார தேவதைகளை இங்கு காணவில்லை.

இப்போது பெரிய கறுப்பர் சந்நிதி உள்ள இடத்தில், முதலில் ஓர் ஓட்டுக் கூடத்தில் ஐயனார் இருந்தார் என்றும், பெரிய கறுப்பர், கோயிலின் முன்புறம் ஒரு மூலையில் இருந்தார் என்றும் கூறுகின்றனர். விளைவுகள் பாதகமானதாக இருந்ததால், இப்போதுள்ள அமைப்பில் புதிய கோயிலை உருவாக்கி ஐயனாரையும், கறுப்பரையும் பிரதிஷ்டை செய்தார்களாம்.

மிகத் தூய்மையான கோயில். உள்ளத்தைப் பக்தியில் மூழ்கச் செய்கிறது. வல்லடிகாரர் சுவாமி ஐயனாரையும், பெரிய கறுப்பரையும் வலம் வருகிறோம்.

அப்போது இந்த இரு சந்நிதிகளுக்கும் பின்னால், திருச்சுற்றுச் சுவரில் ஒரு வாயில் இருப்பதைக் கண்டு, அதன்வழி வெளியே செல்கிறோம்.


இதுதான் பூசாரி குறிப்பிட்ட பழைய கோயிலாக இருக்க வேண்டும். முற்றிலும் தனிப்பட்ட — சுற்றுச் சுவரினைக் கொண்ட சிறியதொரு கொம்படி ஆலயம்.

இந்தச் சுற்றுச் சுவரிலும் இரு வாயில்கள். இவ்வாயில்களுக்கு நடுவில் சுவரின் மேற்பகுதியில் சுதை வேலையிலான சிவலிங்கம். சுவரின் வலப்பக்கம் ஓவியத்தில் மீனாட்சி திருமணம்.

ஒருவேளை கண்ணப்பர் கண்ட குடுமித்தேவர் கோயிலைப் போன்று சிவன் கோயிலாக இருக்குமோ? உங்கள் ஊகம் ஓரளவு சரிதான்.

உள்ளே செல்கிறோம். நடுவில் கூகமத்தி மரம். மிகப் பழைமையானது. இதுவே இக்கோயிலின் தல மரமாக இருக்கலாம். சுற்றிலும் மேடை அமைக்கப்பெற்றிருக்கிறது. அருகில் ஒரு திரிசூலம்.

இதனை இச்சை, கிரியை, ஞானம் என்னும் முத்தலை வேல் என்பர். மரத்தில், நேர்த்திக் கடனாகக் கட்டப்பெற்ற தொட்டில்கள் ஏராளமாகக் காணப்பெறுகின்றன.



முன்னமே தோன்றி முளைத்த முதல்வர்

இந்த மேடையின் இடப்புறம் நிலத்தில் சிமெண்ட் பூசப்பெற்றுள்ளது. அதில்.....

''பார்த்த ஞாபகம் இல்லையோ?'' — உள்மனம் கேட்கிறது.

''மடந்தைபாகத்(து) அடக்கிம் மறைஓதி வானோர்தொழத்
தொடர்ந்த நம்மேல்வினை தீர்க்கநின்றார்.......''[8]

அவரேதான். ''இது கணேஷ்ஜி, இது கௌரி, இது சிவா''... இமயத்தின் உச்சியில்.... கடுங் குளிரில்.... வடநாட்டுப் பண்டா கூறினாரே.....? ''என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே....'' என்று ஞானசம்பந்தரும், ''என்ன மாதவம் செய்தனை நெஞ்சமே''.... என்று அப்பர் சுவாமிகளும் இதை நினைத்துத்தான் பாடினார்களோ?

ஆம், ''மெல்லியலும்[9] விநாயகனும்'' உடனிருக்க ஆறு ஆண்டுகளுக்கு முன்பு இரண்டாம் முறையாகத் ''திவ்விய தரிசனம்'' தந்தாரே அதே கேதாரநாதர்தான். அவருடைய 'மினி' வடிவம் இவர்!

''குலதெய்வத்''தைத்தான் காண வந்தோம்; ''மனித குலத்துக்கே உரிய தெய்வத்''தை அன்றோ காண்கிறோம்!

சிறிய முக்கோணப் பாறை வடிவில் கேதாரநாதரைப் போன்று காட்சி தரும் இவரும் சுயம்புவே!

இவரை — தானாகத் தோன்றிய அண்ணலைக் ''சுகமத்தி ஐயனார்'' என்கின்றனர். (சிலநேரங்களில் சுகமத்திலிங்கம் என்றும் சொல்வார்களாம்)

இவரே இக்கோயிலில் முன்னமே தோன்றி முளைத்த முதல்வராம்; இவரே இக்கோயிலில் பிரதானமானவர் என்கின்றனர்.

இவருக்குப் பின்னரே வல்லடிகாரர் சுவாமி கோயில் ஏற்பட்டது என்கிறார் பூசாரி. உருவமற்ற நிலையிலிருந்து உருவத்துக்கு உயர்ந் துள்ளதோ?

* * *

24 ஊர்களைக் கொண்ட வெள்ளளூர் நாட்டு நாட்டார்களுக்குச் சொந்தமான இந்தக் கோயிலை அவர்களே நிர்வகிக்கின்றனர். அந்த 24 ஊர்களும் ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பெற் றுள்ளன. ஒவ்வொரு மாகாணத்தாரும் ஓராண்டு கோயிலை நிர் வாகம் செய்கின்றனர். திருப்பணி, மராமத்து எல்லாவற்றையும் அவர்களே மேற்கொள்கின்றனர். நகரத்தார் அவ்வப்போது திருப் பணிகளுக்கு நன்கொடை வழங்குவராம்.

கள்ளர் சமுகத்தினர் பூசாரியாக உள்ள இக்கோயிலில் நாள் தோறும் உச்சிக்காலப் பூசை மட்டுமே நிகழ்கிறது. (பூசாரிகளுக்குச் சம்பளமோ, மானியமோ, படித்தரமோ ஏதுமில்லையாம்.)

கோயில் அர்ச்சகர்பணி ஆயுள் முழுவதும் நீடிக்கிறது. மற்ற குல தெய்வக் கோயில்களைப் போன்று பங்காளிகளிடையே பகிர்ந்து கொள்ளப் பெறுவதில்லை. அர்ச்சகரின் ஆயுட்காலத்துக்குப் பின்னரே, அவர்களிடையே உள்ள ஐந்து வாரிசுதாரர்களிலிருந்து புதிய அர்ச்சகர் தேர்ந்தெடுக்கப்படுவார். இதில் இழுபறி ஏற்பட் டால், பிரச்னை நாட்டார்களிடம் கொண்டுசெல்லப் பெறும். (நடப்புப் பூசாரியின் தேர்வுக்கு 9 மாதங்கள் ஆகியதாம்!)

* * *

மாசி மாதத்தில் சிவராத்திரியன்று காப்புக் கட்டியதும் 10 நாள் திருவிழா நடைபெறுகிறது. இந்த நாட்களில் மட்டும் 2 நேரப் பூசை.

சிவராத்திரிக்கு அடுத்த நாள் அரண்மனை சிறுவயலிலிருந்து மண் எடுத்து வருவார்கள்.[10] அதனை ஒட்டிவரும் முதல் வியாழக் கிழமை மஞ்சுவிரட்டு. வெள்ளிக்கிழமை உச்சிப் பொங்கல்.

சேமங்குதிரை இருக்கும் இடத்தில் மண் பானையில் பொங்கல் வைத்துச் சரியாக மதியம் 12 மணிக்கு ஒரே வெட்டில் கிடாய் வெட்டிப் பூசை போடுவது தான் உச்சிப்பொங்கல் எனப்பெறு கிறது. (இது தவிர ஏனைய நாட்களில் கோயிலினுள் உயிர்ப்பலி கொடுப்பதில்லை.)

உச்சிப்பொங்கல் நாளன்று நகரத்தார்கள் தங்கள் குழந்தைகளுக்கு முடி இறக்குவது, தொட்டில் கட்டுவது, காது குத்துவது, மாவிளக்கு வைப்பது ஆகியவற்றைச் செய்கின்றனர்.

சனிக்கிழமையன்று தேரோட்டம்.

தேரோட்டத்தின்போது உற்சவருக்கு அலங்காரம், பூஜை முதலிய வற்றைப் பிராமண அர்ச்சகர்கள் மேற்கொள்கின்றனர். பூங்குடி,

சிவகங்கை ஆகிய ஊர்களிலிருந்து இவர்கள் அழைத்து வரப்பெறு கின்றனர். (விநாயகர், ஐயனார், தேவியர், சீவிலி முதலிய உற்சவத் திருமேனிகள் பாதுகாப்பின் பொருட்டு வெள்ளனூரில் வைக்கப் பெற்றுள்ளன.)

சுவாமிக்குத் திருக்கல்யாணம் நடைபெறும் ஒரு சில ஐயனார் கோயில்களில் இதுவும் ஒன்று. வியாழக்கிழமை திருக்கல்யாணம் முடிந்து சனிக்கிழமை நடைபெறும் தேரோட்டத்தின் போதுதான் சுவாமியும் தேவியரும் ஒன்றாக எழுந்தருளுவர்.

திருவிழா நடைபெறும் நாட்களில் ஊர்மக்கள் மாவு, பச்சரிசி, மாமிசம், தாளிப்பு இல்லாத சுத்த விரதம் இருப்பார்களாம்.[11]

இக்கோயிலில் கும்பாபிஷேகம் நடைபெற்ற விவரம் எதுவும் காணப்பெறவில்லை. ஆனால், பன்முறை குடமுழுக்கு நடைபெற்றிருக்கிறது என்றும், கடைசியாக 4 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்றது என்றும் மதகுபட்டி எம்.எஸ். முத்துராமன் கூறுகிறார்.

எம்மருங்கும் பூதகணம்;
எழில்தவழும் திருக்கோயில்!
விரைந்துவரும் பக்தர்க்கு
விரும்பியருள் புரியுமவர்
உறைகின்ற கோயிலுக்கு
ஓடிவரத் தாமதமேன்?

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

அந்தணனைத் தஞ்சம்என்(று) ஆட்பட்டார் ஆழாமே
வந்தணைந்து காத்தளிக்கும் வல்லாளன் — கொந்தணைந்த
பொன்கண்டாற் பூணாதே கோள்நாகம் பூண்டானே
என்கண்டாய் நெஞ்சே இனி.

திருச்சிற்றம்பலம்

— 11ஆம் திருமுறை,
காரைக்கால் அம்மையார்

குறிப்பு விளக்கம்:

— வல்லடைந்தார் — விரைந்து அடைந்தவர்
1. தெய்வத்தின் குரல் — முதற் பகுதி
2. தமிழ் இலக்கியத்தின் கோட்பாடுகள் — முத்துச்சண்முகன்
3. எம்.எஸ். முத்துராமன், மதகுபட்டி
4. 2ஆம் திருமுறை, கோளறு திருப்பதிகம்
5. ஆலயங்களும், ஆகமங்களும் — நஜன்
6. சைவ வினா விடை — தவத்திரு ஆறுமுக நாவலரவர்கள்
7. சிவாலய பூஜை விளக்கம் — சுவாமிநாத சிவாச்சாரியார்
8. 2ஆம் திருமுறை
9. மெல்லியல் — உமை
10. எம்.எஸ். முத்துராமன்
11. எம்.எஸ். முத்துராமன்

உ

அடைந்தார்தம் பாவம் அறுப்பார் அலவாக்கோட்டை ஐயனார்

(13. செவிட்டு ஐயனார் திருக்கோயில், அலவாக்கோட்டை)

ஐயனே, அரனே!'......

ஏன் இப்படி ஊரெல்லாம் கேட்கும்படி அலறுகிறீர்கள் — அரற்று கிறீர்கள்? 'ஐயனே, அரனே என்று அரற்றினால்... வையம் ஆள வும்' வாய்ப்புக் கிடைத்து விடும் என்று நினைக்கிறீர்களா? அல் லது இவர் செவிட்டு ஐயனார்; சத்தம் போட்டு அழைத்தால்தான் கேட்கும் என்று நினைக்கிறீர்களா?

இவருக்குப் பெயர்தான் செவிட்டு ஐயனார்; ஆனால் கேளாச் செவியர் அல்லர்; அண்டியோரின் குறைகளைக் கேட்டு அருள் புரியத்தானே — அடைந்தார்தம் பாவம் அறுக்கத்தானே, ஐயன் நினைத்த இடமெல்லாம் கோயில் கொண்டிருக்கிறார்?

* * *

காளையார் மங்களத்தில் கண்மாய்க் கரையில் கொம்படி ஆலயம் கொண்டுள்ள சேவாத்தாள் ஐயனாரைத் தரிசித்தோம் அன்றோ? அதே போன்றே அலவாக்கோட்டையிலும் முப்புறம் கண்மாய் சூழத் திறந்த வெளியில் குடிகொண்டிருக்கிறார் செவிட்டு ஐய னார்.

பனை மரங்களுக்கு இங்கு பஞ்சமில்லை.

அலவாக்கோட்டையில் உள்ள பெருமாள் கோயிலின் இடப்புறம் செல்லும் சாலையில் (அலவாக்கோட்டைக் கண்மாய் என்னும் அறிவிப்புப் பலகை உள்ள பாதை வழியே) நேரே சென்று, அங் குள்ள பள்ளிக்கு அடுத்து இருக்கும் இந்தக் கொம்படி ஆலயத்தை அடையலாம்.

ஊரினுள் கடை ஒன்றிலிருந்து பூசாரியை அழைத்துக் கொண்டு கோயிலுக்கு வருகிறோம்.


ஓ.....இப்போதுதான் புரிகிறது, நீங்கள் ஏன் ஐயனே அரனே என்று அரற்றினீர்கள் என்று!

ஆலயத்தின் முன் உள்ள இரு பெரிய சேமங்குதிரைகள் உருத் தெரியாமல் சிதைந்து போயிருப்பதும், செடிகொடிகள் மண்டிக் கிடப்பதும்தான் உங்களை அப்படி அலற வைத்துவிட்டன போலும்.

இந்த இரு சேமங்குதிரைகளையும் நகரத்தார்களே கட்டியிருக்கின் றனர். அவர்கள் குடும்பங்களில் சில இடர்ப்பாடுகள்; அதுதான் இதுவரை புதுப்பிக்கப் பெறாததற்குக் காரணம்.

இப்போது அவற்றைப் புதுப்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பெற்று வருகின்றன.

''அலவாக்கோட்டை நகரத்தாரின் குலதெய்வக்கோயில் இது. தங் கள் ஊரிலேயே உள்ள தங்கள் குலதெய்வக் கோயிலை, ஏன் அவர்கள் சுற்றுச்சுவர் கட்டிக் கோயிலமைத்து மற்ற கோயில்களைப்



அம்பிகையர் புடைசூழ ஐயனார்

போன்று ஆக்கிக் கொண்டிருக்கக்கூடாது?

இவருக்குக் காது நன்றாகக் கேட்குமென்றால் ஏன் செவிட்டு ஐய னார் என்று சொல்கிறீர்கள்?.....

நீங்கள் கேள்விகளை அடுக்கிக்கொண்டே போகிறீர்கள். பூசாரியே எல்லாவற்றுக்கும் மறுமொழி சொல்கிறார்.

திறந்த வெளியாக இருப்பதால், இக்கோயிலில் உள்ள சிலைகளைத் திருடிச் செல்லப் பன்முறை முயன்றிருக்கின்றனர். ஆனால் ஐய னாரின் அருட்சக்தியால் அவர்கள் முயற்சிகள் பலிக்கவில்லை.

இருப்பினும் பாதுகாப்பாகச் சுற்றுச் சுவர் கட்டிக் கதவு போடத் திட்டமிடப் பெற்றிருக்கிறது. விரைவில் கட்டப்பெற்றுவிடும்.

கோயில் ஏன் கட்டப்பெறவில்லை என்பதற்கு இறைவனின் திரு வுளச் சம்மதம் கிடைக்காததுதான் காரணம் என்கிறார் பூசாரி.

இங்கேயே பேசிக்கொண்டு நிற்காமல் உள்ளே சென்று எல்லா வற்றையும் விவரமாகத் தெரிந்து கொள்வோமே!

சேமங்குதிரைகளைக் கடந்து உள்ளே போகும்போது முதலில் 2 பலிபீடங்கள் காணப்பெறுகின்றன. இவை நொண்டி, சோனையன் ஆகியவற்றைப் பிரதிநிதிக்கின்றன.

கோயில் பரப்பின் நடுவில் 4 கற்றூண்கள்; அவற்றில் இரு மணி கள். அருகில் புதிதாகத் தோற்றமளிக்கும் விளக்குக் கம்பம். இரவு நேரங்களில் இங்கு விளக்கு ஏற்றி வைக்கிறார்கள்.

இவற்றைத் தாண்டிப் பதினெட்டாம்படிக் கறுப்பரை அடையுமுன் னர், இடப்புறத்தில் சற்றுத் தள்ளிக் கற்றூண்கள் மொட்டையாக நிற்கின்றன.

முன்பு விட்ட கதையைப் பூசாரி தொடர்கிறார்.

கோயிலுக்கென விடப்பெற்ற இரு காளை மாடுகளை விற்று, அல வாக்கோட்டைச் செட்டியார் ஒருவர் பொறுப்பில், அந்த இடத் தில் மடப்பளி கட்டப்பெற்றது.

சிலநாட்கள் கழிந்தன. பலத்த காற்று.....மழை....

எஞ்சியவை இந்தக் கற்றூண்களே.

செட்டியார் குடும்பமும் பல சோதனைகளைச் சந்திக்க நேரிட்டது.

அப்படியானால், இன்னமும் இறைவனின் திருவுளச்சம்மதம் கிடைக்க வில்லையா, கோயில் கட்டுவதற்கு?

பூசாரி தலையை அசைக்கிறார்.

பதினெட்டாம்படிக் கறுப்பர் அழகிய சிலை. பக்கத்தில் பெரிய அரிவாள் ஒன்று. கீழே மண்ணினாலான நாயின் சிலை.

இவரைக் குலதெய்வமாகக் கொண்ட அலவாக்கோட்டை நகரத் தார் குடும்பம் ஒன்று, இச்சிலையைச் செய்து வைத்திருக்கிறது. இது ஒன்றுதான் இந்தக் கொம்படி ஆலயத்தில் காணப்பெறும் ஒரே முழுமையான சிலை.

இவரைக் குலதெய்வமாகக் கொண்டவர்கள், அழகர் கோயிலுக்குச் சென்று நூபுரகங்கையில் தீர்த்தமாடிப் பதினெட்டாம்படிக் கறுப் பரை வழிபட்டுவிட்டு இங்கு வந்து இவரை வழிபட்ட பின்னர், ஊரிலுள்ள கோயில் வீட்டில் படைக்கின்றனர்.

கோயில் வீட்டில் உள்ள கறுப்பரின் ஆயுதங்கள் அனைத்தையும் இங்கு கொண்டுவந்து வைத்து வழிபட்டுவிட்டு எடுத்துச் செல்வார் கள். அந்த நேரத்தில் பங்காளிகள் எல்லாரும் சேர்ந்து வருகின் றனர்.

அருகில் காளி, இராக்காயி, பேச்சி, முத்து இருளி — எல்லாம் பலிபீடங்களாகவே உள்ளன.

கறுப்பருக்கும், மூலவருக்கும் இடையில் மூன்று பலி பீடங்கள் போன்ற நடுகற்களும், பெரிய நாகரும் காணப்பெறுகின்றன. இவை பெரிய கறுப்பர், சின்னக் கறுப்பர், முத்துக்கறுப்பர்.

என்ன, விரல்களால் காதைத் தொட்டவண்ணமாகவே இருக்கிறீர்கள்?

ஓ.....புரிகிறது. இதோ மூலவரான செவிட்டு ஐயனார் அருகில் வந்து விட்டோம். சற்று அமைதியாக இருங்கள். எல்லாம் தாமாகவே புரிந்துவிடும்.

மூலவர் செவிட்டு ஐயனார் இருப்பதாகச் சொல்லுமிடத்தில் ஒரு மார்பளவு அம்பாள் சிலையும், இரு நடுகற்கள் போன்றவையும் உள்ளன.

பூசாரி சொல்கிறார்: இந்த அம்பாள் சுயம்பு. இச்சிலை வளர்ந்து கொண்டே வருகிறது. இவரே செவிட்டு ஐயனார்!

மீண்டும் 'ஐயனே, அரனே' என்று அலறிவிடாதீர்கள். பூசாரியைப் பேச விடுங்கள். (வாணியங்குடியில் பிள்ளையார் அம்பிகையாகக் கருதப்பெறுகிறார்; இங்கு அம்பிகை ஐயனாராக உள்ளார்; இன்னும், துவார்...... இறைவா! உன் திருவிளையாடல்தான் எத்தகையது?)

பிறவிலி என்னும் ஊரிலிருந்த இப்போதையப் பூசாரிகளின் முன்னோர், இப்பகுதியில் வள்ளிக்கிழங்கு தோண்ட வருவதுண்டு. (ஐயனாருக்கும் வள்ளிக்கிழங்குக்கும் நிறையத் தொடர்பு இருக்கிறது போலும். போகப் போகத் தெரிந்து கொள்வீர்கள்.)

ஒருமுறை இந்த இடத்தில் கடப்பாறை கொண்டு வள்ளிக்கிழங்கைத் தோண்டியபோது, கடப்பாறை பட்ட இடத்திலிருந்து இரத்தம் பீறிட்டது.

தொடர்ந்து, கடப்பாறை கொண்டு அகழ்ந்தவர் மீதே அருள் வந்தது.

''தானே ஐயன் — ஐயனார்! கடப்பாறை தன் காதில் பட்டதால் காது தாக்கப் பெற்று விட்டது. தன்னை அந்த இடத்திலேயே வைத்து, வள்ளிக்கிழங்கு அகழ்ந்த மரபினரே பூசை வைத்து வர வேண்டும்'' என்று அருள்வாக்குக் கிடைத்தது.

செவி தாக்கப்பெற்றதால், 'செவிட்டு ஐயனார்' என்றே தமக்கு நாமகரணம் செய்யுமாறும் ஐயன் ஆணையிட்டாராம்!

பூசாரி தொடர்கிறார்.

அந்தப் பரம்பரையினரே இன்றும் பூசாரியாக இருக்கிறோம். நீண்ட காலத்திற்கு முன்னர் இந்த உருவத்தின் தலை மட்டும் நிலத்திற்கு மேல் தெரிந்தது. பின்னர் படிப்படியாக வளர்ந்து மார்பளவு வந்திருக்கிறது.

''இது அம்பாள் சிலை மாதிரி---- மாதிரி என்ன? அம்பாள் சிலையே தான்! இதைப் போய் ஐயனார் என்கிறீர்களே?''

இந்த அம்பாள் உருவந்தான் தொடக்க காலத்தில் கடப்பாறையால்

தாக்குண்டது; இதுதான் அருள்வாக்குக் கொடுத்தது; இதுதான் இப்போது படிப்படியாக வளர்ந்து வருகிறது.

உருவம் அம்பாளாக இருப்பதால், உங்களைப் போன்றவர்கள் நம்ப மாட்டீர்கள் என்று சொல்லித்தான், அடுத்து இரு நடுகற்களை வைத்துள்ளனர். நடுவில் உள்ள நடுகல்தான் இப்போது ஐயனாராகக் கருதி வழிபடப் பெறுகிறது; இரு புறமும் உள்ளவை பூரணை, புஷ்கலை. (புரிந்துகொள்ளச் சிறிது பொறுமை வேண்டும்!)

பத்து ஆண்டுகளுக்கு முன்புவரை, ஆண்டுதோறும் புரவி எடுப்பு நடந்து வந்தது. இப்போது 3 ஆண்டுகளுக்கு ஒரு முறையே நடைபெறுகிறது. அவ்வாறு கோயிலில் கொண்டு வந்து வைக்கப்பெற்ற மண் புரவிகள் ஏராளமாகக் காணப்பெறுகின்றன.

மேலும், பிள்ளை இல்லாதவர்கள் நேர்ந்துகொண்டு, பிள்ளை பிறந்ததும் (மண்) பிள்ளைச் சிலைகளைக் கொண்டுவந்து வைக்கின்றனர்.

நகரத்தார் குடும்பங்களில் திருமணம் போன்ற மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும்போது, அடுத்தடுத்த நாட்களில் இங்கு வந்து சிறப்புச் (உபயம்) செய்வார்களாம்.

புரவி எடுப்பிலும் நகரத்தார்கள் கலந்து கொள்கின்றனர்.

நகரத்தார் வீடுகளில் பிள்ளை பிறந்தால் 1¼ ரூபாய் காணிக்கை கொடுக்கின்றனர்; முடி இறக்குகின்றனர்.

மூன்று புறமும் கண்மாய் சூழ்ந்திருக்கிறதே; பெருமழை பெய்தால்....

இந்தப் பகுதியில் நீர் பெருகும் என்பது உண்மை தான். ஆனால் சிலைகளை மறைக்கும் அளவுக்கு நீர் பெருகுவதில்லை.

ஐயனாரே மனித குலத்தின் காவல் தெய்வந்தானே!

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

ஒண்மைய னே!திரு நீற்றைஉத் தூளித்(து) ஒளிமிளிரும்
வெண்மை யனே!விட் டிடுதிகண் டாய்,மெய் அடியவர்கட்(கு)
அண்மைய னே!என்றும் சேயாய் பிறர்க்(கு)அறி தற்(கு)அரிதாம்
பெண்மைய னே!தொன்மை ஆண்மை யனே!அலிப் பெற்றியனே!

திருச்சிற்றம்பலம்

— திருவாசகம்

உ

அருளுடைச் சுடரே, அழகிய மெய்யரே!

(14. அழகிய மெய்ய ஐயனார் திருக்கோயில், வீழநேரி)

உமா தேவிக்கு ஓர் ஐயம் எழுந்தது. கல்லினுள் தேரைக்கும் கருணை புரிபவர் என்று சிவமூர்த்தியைச் சிறப்பித்துக் கூறுகின்றனரே, அதைச் சோதித்துப் பார்த்து விடவேண்டும் என்று முடிவு செய்தார்.

எறும்பு ஒன்றைப் பிடித்துச் சங்கு ஒன்றினால் அதை மூடி வைத்தார்.

அடுத்த நாள். சங்கை அகற்றினார் அம்பிகை. எறும்பின் வாயில் அரிசி ஒன்று இருந்தது.

நடுநடுங்கிப் போய்விட்டார். அண்ணலிடம் ஓடினார். அனைத்தையும் கூறினார்.

எறும்புக்குத் துன்பம் இழைத்த பாவம் அகல, நந்தவனம் ஒன்றை அமைத்துப் பராமரித்து வருமாறு கூறினார் சிவபெருமான்.[1]

(இது காத்தவராயர் கதையுடன் தொடர்புடையது என்பதை, நாட்டரசன்கோட்டை பெரிய கறுப்பணசுவாமி கோயிலுக்குச் சென்றிருந்ததைத் தொடர்ந்து அறிந்திருப்பீர்கள்.)

செய்த பாவத்துக்குக் கழுவாயாக அமைந்த இந்த நந்தவனத்தில், (சிவபெருமானுக்கு என்றே வைக்கப்பெறும் நந்தவனத்துக்கு நந்தனவனம் என்று பெயர்.) சிவபெருமான், உமாதேவி, விநாயகர், முருகன் முதலிய பலரும் மகிழ்வுடன் தங்கியிருப்பதால், அது சிவலோகத்துக்கு ஒப்பாகும். இத்தகைய புனித நந்தவனத்தில் கூலிக்கு வேலை செய்வோரே, நந்தவனத்தை வைத்தோர் அடையும் புண்ணியத்தில் பத்தில் ஒரு பங்கினைப் பெறுவார்கள் என்றால், நந்தவனத்தை ஏற்படுத்தியவர் அடையும் பயனைக் கூறவும் வேண்டுமோ?[2]

சூரபதுமனுக்குப் பயந்து சீர்காழியில் மூங்கிலில் ஒளிந்திருந்த இந்திரன், சிவபூஜை செய்வதற்கென்றே ஒரு நந்தனவனத்தை உருவாக்கினானாம்.[3]

இவ்வளவு சிறப்பு மிகுந்த நந்தவனத்தைப் பற்றி நம் தாயர், தம் தாலாட்டில்

'நந்தவனம் கண்திறந்து
நாலுவகைப்[4] பூவெடுத்துப்
பூவெடுத்துப் பூசைசெய்யும்
புண்ணியரோ உங்கள்ஐயா' என்று, தம் குடும்பத்தலைவரின் பக்திப் பெருக்கை — நந்தவனம் வைத்துப் பாதுகாத்து வந்த பெருமையைச் சொல்லி மகிழ்வதை நாம் கேட்டிருக்கிறோம்.

பெரும் சிவபுண்ணியமான நந்தவனத்தைக் கோயில்களில் அமைத்துப் பராமரித்து வந்ததில் நம் மூதாதையருக்குப் பெரும் பங்கு உண்டு. அவர்கள் மேற்கொண்ட இந்த நற்செயல் நலிவுற்று விடக் கூடாது.

நகரத்தார்களின் குலதெய்வக் கோயில்கள் சிலவற்றில், அவர்கள் அமைத்த நந்தவனங்கள் உள்ளன. அத்தகைய கோயில்களில் ஒன்றுக்கே இப்போது செல்கிறோம்.

அக்கோயிலின் நந்தவனம் இருக்கும் நிலை கண்டே, இவ்வளவு எழுத நேரிட்டது.

* * *

மதகுபட்டி — சிவகங்கைச் சாலையில், மதகுபட்டியை அடுத்துள்ள நகரம்பட்டி விலக்கில் இடப்புறம் திரும்பி, இராமலிங்கபுரம் தாண்டி நேரே இடப்புறம் செல்லும் மண்சாலையில் திரும்பிச் சென்று, வீழநேரி அழகிய மெய்ய ஐயனார் கோயிலை அடையலாம். மதகுபட்டியிலிருந்து 3 கி.மீட்டரிலும், இராமலிங்கபுரத்திலிருந்து 1½ கி.மீட்டரிலும் இந்தக் கோயில் இருக்கிறது.

கோயிலுக்குச் செல்லும் வழியில் இராமலிங்கபுரத்தில் இறங்கி வேளாரையும் உடன் அழைத்துச் செல்கிறோம். (நாள்தோறும் ஏதாவது ஒருநேரம் மட்டுமே பூசை நடைபெறுவதால், இராமலிங்கபுரத்தில் விசாரித்துத் தெரிந்து கொள்வது நல்லது.)

ஆயிரங்கண்களைக் கொண்ட இந்திரன், தான் கண்ட அளவு கருதவும், ஆதிசேடன், தன் வாய்களால் அளவிட்டுக் கூறவும், கவிச் சக்கரவர்த்தி கம்பநாடர் தம் புலமையால் பாடவும் அரியதான திருக்கோயிலின் அழகும், மண்டபத்தின் அழகும், எண்ணாயிரம் காதம் தொலைவிலிருந்தும் காணத்தக்க எழில்மிகுந்த கோபுரத்தின் அழகும் (விமானத்தையே இங்கு கவிஞர் குறிப்பிடுகிறார் என்று கருதவேண்டியுள்ளது. ஏனெனில் இங்கு இராஜகோபுரம் இல்லை; இருந்ததற்கான சுவடும் இல்லை.) என்று கவிஞர் ஒருவர் வருணிப்பதிலிருந்து[5] இக்கோயில் எழில் மிகுந்த இடமாக இருந்திருக்கிறது என்று எண்ணத் தோன்றுகிறது.

ஆனால் இப்போது நம்மை வரவேற்பவை, சிதைந்துபோன சேமங் குதிரையும், பூதமும், மற்றொரு மண்குதிரையும்தாம்.

14.09.1967ல் இரண்டாவது முறையாகக் குடமுழுக்குக் கண்ட இக்கோயிலில், முதல் கும்பாபிஷேகம் அதற்கு 70 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்றதாகக் கூறப்பெறுகிறது.[6] கும்பாபிஷேகங்கள் நடைபெற்றதற்கான குறிப்புகள் ஏதும் கோயிலில் காணப்பெற வில்லை.

இப்போது கோயில் இருக்கும் இடத்தில், 1888-89ஆம் ஆண்டு வாக்கில் கண்டவராயன்பட்டி நகரத்தார் குடும்பத்தினர் கருவறை, விமானம், மையமண்டபம், கறுப்பர் மண்டபம் ஆகியவற்றைக் கல் திருப்பணியாகச் செய்திருக்கின்றனர்.[7]

இவ்வாறு இப்போதையக் கோயிலுக்கு நகரத்தார் திருப்பணி செய் வதற்கு முன்னர், வேறு இரு இடங்களில் இக்கோயில் இருந்ததாகச் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன.[8]

* * *

கருவறைக்கும், முன் (பதினாறுகால்) மண்டபத்துக்கும் நம்மை இட் டுச் செல்லும் ஓட்டுக்கூடம் மிகவும் பழுதடைந்து போயிருக்கிறது.

1936ஆம் ஆண்டில், இக்கோயிலுக்கு அடிமைப்பட்ட பல்வேறு ஊர்களையும் சேர்ந்த நகரத்தார்களிடம் நிதி வசூலித்து, வேகுப் பட்டி நகரத்தார் பெருமகனார் ஒருவர் இந்தப் பதினாறுகால் மண்டபத்தைக் கட்டினாராம். கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் யாவும் புராதனக் கல் திருப்பணிகள்.

கருவறையின் முன்னால், மண்டபத்தில் யானை வாகனமும், பலி பீடமும் உள்ளன.

கருவறைச் சுவரில் புடைப்புச் சிற்பங்களாகத் துவார பாலகர் உள்ளனர்.

அர்த்தமண்டபத்தில் விநாயகரும், கருவறையில் பூரணை — புஷ் கலை உடனாய அழகிய மெய்ய ஐயனாரும் அருள் பாலிக்கின் றனர்.

'பழகியமெய் அன்பர் பணியும்எம் அண்ணல்
அழகியமெய் யன்பொன் அடிக்கண்......''[9]
பணிந்து நிற்கிறோம்.

பங்குனி மாதக் கார்த்திகையின்போது இங்கு நடைபெறும் திரு விழாவில், முக்கனிச்சாறு, கரும்பு, கஸ்தூரி — பன்னீர் கலந்த சந் தனம், வாசனைத் திரவியங்கள், இளநீர், பஞ்சகௌவியம், தேன், தாம்பூல திரவியம் (முகவாசம் ஐந்து), பட்டாடைகள், நகைகள் இன்னபிறவும் ஏந்தி வந்து,[10] ஐயனுக்குத் திருமஞ்சனமாட்டி, அலங் கரித்து வழிபாடு செய்யக் கண்டவராயன்பட்டி, தேவகோட்டை, வேகுப்பட்டி ஆகிய ஊர்களின் பிள்ளையார்பட்டி நகரத்தார்களும், காளையார் மங்களம், மதகுபட்டி ஆகிய ஊர்களின் நகரத்தார் களும், பாகனேரியிலுள்ள இளையாற்றங்குடி கழனிவாசல் நகரத் தார்களுமாக ஏறத்தாழ 200 புள்ளியினரும் (1967ஆம் ஆண்டுக் கணிப்பு), அழகாபுரி, இராமலிங்கபுரம், ஏரியூர், வீழநேரி கிரா மத்தாரும்[11] காத்து நிற்கும் காட்சி கருத்தில் உதிக்கிறது;

அழகிய மெய்யருக்குக் காவடி எடுக்கும் அன்பர் குழாத்தின் ஆனந் தக் கூச்சல் காதில் ஒலிக்கிறது;

மகாசிவராத்திரியின்போதும், தைப்பொங்கலின்போதும் சிறப்புப் பூசைகள் நிகழ்வது சிந்தையில் தெய்வீகத்தைத் தெளிக்கிறது;

மண்டபத்தின் தென்கிழக்கு மூலையில் உள்ள உடைந்து போன மணி குரோதி ஆண்டு ஆடிமாதம் (1904 அல்லது 1964 ஜூலை) என்று பறைசாற்றிக் கொண்டிருப்பது, நம்மை ஆடி 18க்கு அழைத் துச் செல்கிறது;

ஆடித் திங்களில் அழகர்கோயில் நூபுர கங்கையில் தீர்த்தம் எடுத் துப் பதினெட்டாம்படிக் கறுப்பரின் சந்நிதியில் வைத்து வழிபாடு செய்து இங்கு கொண்டு வந்து, அந்தப் புனித நீரால் இங்குள்ள மூர்த்தங்களுக்கு ஆடி 18ல் அபிஷேகம் நடைபெறுகிறது;

இத்தனை சிறப்பு விழாக்களையும் மனக்கண்ணால் கண்டு மகிழ்ந்து மூலவரை வலம் வரத் தொடங்குகிறோம்.

தென் பிராகாரத்தில் தென்கிழக்கில் திருமஞ்சனக் கிணறு. பின் னர் வரிசையாக விமானங்களுடன் கூடிய பல சந்நிதிகள் உள் ளன.

அவற்றில், முதலில் உள்ள 4 சந்நிதிகளில், உட்கார்ந்த கோலத்தில் பொன்னையா சுவாமி (அம்மன்பட்டி யாதவர் குடும்பத்தினர் இச் சந்நிதியைக் கட்டியிருக்கின்றனர்; இது அவர்களின் பட்டதெய்வம் போலும்), சசிவர்ணம் (இதற்கான மண்டபத்தை வீழநேரித் தேவர் சமுகத்தினர் அமைத்துள்ளனர்; இது அவர்களின் பட்டதெய்வமோ?) குசக்காளி, குசமூலி (இவை இரண்டும் வேளார்கள் வைத்தவை; அவர்களுடைய பட்ட தெய்வங்கள்.), பேச்சியம்மன், இராக்காயி ஆகியோரும், அடுத்துள்ள இரு சந்நிதிகளில் காளியம்மன், சின்னக் கறுப்பர், பெரிய கறுப்பர், வீரபத்திரர் ஆகியோரும் குடிகொண் டுள்ளனர்.

அடுத்துள்ள மூன்று தனித்தனிச் சந்நிதிகளில், முன்னர் நாம் சூரக் குளம் கலியுக மெய்ய ஐயனார் கோயிலில் கண்டதைப் போன்ற பழனியாண்டவர் (சித்தர் போன்று சிம்ம வாகனத்தின்மீது அமர்ந் திருக்கிறார்), சப்தகன்னியர் ஆகியோர் உள்ளனர். சப்தகன்னியர் சந்நிதி நகரத்தாரால் கட்டப்பெற்றது.

சப்த கன்னியரைப் பற்றிய விளக்கத்தை முன்னர் கண்டிருக்கிறோம். ஆனால் இங்கு ஒரு குறிப்பு.

இக்கோயிலுக்குப் பதிகம் பாடியுள்ள கவிஞர், தம் பாடல் ஒன் றில்,

> ''செங்கமல மலரனைய வதனப்ர காசமுறு
> தீப்பாய்ந்த கன்னிமாராம்
> செய்யதாள் மங்கைமார் எழுவர்....''[12]

என்று குறிப்பிடுகிறார். முன்னர் நாம் குறிப்பிட்ட அபிராமி, மகேசுவரி மற்றும் ஏனை யோருக்கும் தீக்குளித்த இந்த எழுவருக்கும் தொடர்பு இருக்க வழி யில்லை. அப்படியானால் குலதெய்வக் கோயில்களில் உள்ள இந்த சப்த கன்னியர் யாவர்?

அடுத்த சந்நிதியில் விநாயகர், கிழக்குப் பார்த்த சந்நிதி.

வடமேற்கு மூலையில் அழகிய மயில்வாகன முருகன் அருள் பாலிக்கிறார்



மயில் வாகன மூர்த்தி

விநாயகர், முருகன் சந்நிதிகள் இரண்டும் 1960ல் பொதுச்செலவில் கட்டப் பெற்றவை.

இங்குள்ள முருகன் சற்று வித்தியாசமான திருக்கோலம்.

இடக்கையை இடுப்பில் வைத்து, வலக்கையால் அஞ்சேல் என்று அபயம் கொடுக்கிறார். மற்ற இரு கைகளில் இருப்பவை பாச — அங்குசங்களாக இருக்கக்கூடும். இவருடைய மயில் வாகனமும் சற்று வேறுபட்டதாகவே விளங்குகிறது. வழக்கமாக முருகனுக்குப் பின்னால் விரித்த தோகை, அல்லது முருகனுக்குப் பக்கத்தில்

நீண்ட தோகைதான் காணப்பெறும். இங்குள்ள மயில், பக்கத்தில் விரித்தது போன்று, ஆனால் முழுமையாக இல்லாமல் விசிறி போன்ற தோகையைக் கொண்டிருக்கிறது. இத்தகைய கோலத்தில் உள்ள முருகனை 'மயில் வாகன மூர்த்தி'[13] என்பர்.

வடக்குப் பிராகாரத்தில் பைரவர், நொண்டி, முத்துக் கறுப்பர், வீரபாண்டி (இவர் கள்ளர்களின் பட்டதெய்வம்), மேடை, பீடம் ஆகியவை உள்ளன.

கோயிலின் சுற்றுச்சுவர், கூடம், மடப்பளி ஆகியவற்றை வேகுப் பட்டி நகரத்தார் குடும்பத்தினர் 1936ஆம் ஆண்டுவாக்கில் கட்டி யிருக்கின்றனர்.

பிராகாரத் தள வரிசைக் கல் 22.01.1942ல் இராமலிங்கபுரம் வேளார் குடும்பத்தாரால் பாவப்பெற்றிருக்கிறது.

வடக்குச் சுற்றுச்சுவரை ஒட்டியுள்ளது, 26.08.1937ல் வேகுப் பட்டி நகரத்தார் குடும்பத்தாரால் அமைக்கப்பெற்றுத் தற்போது கவனிப்பாரற்றுக் காடு மண்டிப் போயிருக்கும் நந்தவனம்.[14]

இதனைப் பராமரிக்கும் பொறுப்பை யாரேனும் ஏற்றுக் கொள் வது சிவபுண்ணியம் ஆகும்.

* * *

வேளார்களின் நிர்வாகத்தில் உள்ள இக்கோயிலைப் புதுப்பிக்க நகரத்தார்கள் முயன்று வருவதாகத் தெரிகிறது.[15]

வீழநேரியிலிருந்து முதலில் சுண்ணாரிப்புக்கும், பின்னர் கண்டவ ராயன்பட்டிக்கும் சென்ற பிள்ளையார்பட்டிக் கோயில் நகரத்தார் கள், தங்கள் பழைய தொடர்பால் இக்கோயிலைக் குலதெய்வக் கோயிலாகக் கொண்டிருக்கின்றனர்.[16] ஏனையோருக்கும் இது பொருந்திவரலாம் அன்றோ?

தொல்லைத் தொடர்பால் ஐயனின் அருளை நாடி நிற்கும் அன் புடை நகரத்தார் பெருமக்கள், பழைமையடைந்து விட்ட கோயிலை விரைவில் புதுப்பிப்பார்கள் என்று நம்பி, 'மன்னும் அழகிய மெய் யன் என்னும் நற்பெயர் கொண்ட ஐயனை' வணங்கி விடைபெறு வோம்.

பரவும் சொல்மாலை

பன்னிருசீர் (இரட்டை) ஆசிரிய விருத்தம்

1.தேமேவு பைந்துளப மார்பினன் மோகினித்
தெய்வவடி வினைஎடுத்துச்
சென்றைவேலி யுண்மறைவு கொண்டஅரன் முன்புறச்,
சிவபிரான் மையலாகிக்
காமேவு மத்துறை கூடிக்க லந்தஅக்
கணமேஉ தித்ததேவா!
கண்யமிகு ரூபலாவண் ய!அரியர புத்ர!
காசினியில் அன்புகூரும்
பாமேவு செந்தமிழ்ப்ப னுவற்(கு)இரங் கிஅருள்
பாலிக்கும் எந்தையே!நின்

பாலராம் எங்களின் பாவவினை நீக்கியே
பாதுகாத்(து) அருளவருவாய்!
மாமேவு கனகதன வணிகரொடு மற்றுளோர்
வாழ்த்துகுல தெய்வமாகி
மன்னும்அழ கியமெய்யன் என்னுநற்பெ யர்கொண்ட
மாதேவ ஞானமணியே!

2. செட்டுற்ற எம்வணிக மக்களின் வாணிபம்
சீருற்(று)இ லங்கிஒளிரச்,
செய்தொழில்கள் யாவுமே ஐய!நின் பேரருள்
சேர்தரப் பெற்றுவளர,
முட்டின்றி வர்ன்மழை பொழிந்து,நெற் கதிரெலாம்
மொய்த்துக் கதித்துமுதிர,
மூள்கவலை இன்றி,இப் பேருலக மாந்தர்கள்
முற்றும்நின் பெயரைவாழ்த்தத்
தட்டின்றி உணவுப்பொ ருட்களின்விலை வாசி
தாழ்ந்(து)எங்கும் நன்மைமிளிர,
தருமவினை அறமெலாம் தரணிதனில் மருவ;நற்
சமயம்ஈ(து) அருள்புரிகுவாய்!
மட்டற்ற புகழ்மேவு தனவணிகர் மற்றுளோர்
வாழ்த்துகுல தெய்வமாகி
மன்னும்அழ கியமெய்யன் என்னுநற்பெ யர்கொண்ட
மாதேவ ஞானமணியே!

— கவிஞர் பெரி. இலக்குமணச் செட்டியார்,
''ஸ்ரீ அழகியமெய்யர் சுவாமி பதிகம்''

குறிப்பு விளக்கம்:

1. அபிதான சிந்தாமணி
2. புட்ப பலன்
3. கந்தபுராணம் — 2927
4. நாலுவகைப் பூ: கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ. (புதற்பூ என ஒன்றையும் சேர்த்து ஐந்தாகக் கூறுவதுமுண்டு.)
5. ஸ்ரீ அழகியமெய்யர் சுவாமி பதிகம் — கவிஞர் பெரி.இலக்குமணச் செட்டியார்
6. ஸ்ரீ அழகியமெய்யர் சுவாமி பதிகம், சில குறிப்புகள்
7. ஸ்ரீ அழகியமெய்யர் சுவாமி பதிகம்
8. சுப. ஆறுமுக வேளார், இராமலிங்கபுரம்
9. ஸ்ரீ அழகியமெய்யர் சுவாமி பதிகம் — காப்புச் செய்யுள்
10. ஸ்ரீ அழகியமெய்யர் சுவாமி பதிகம்
11. ஸ்ரீ அழகியமெய்யர் சுவாமி பதிகம் — சில குறிப்புகள்
12. ஸ்ரீ அழகியமெய்யர் சுவாமி பதிகம் — பாடல் 3
13. முருகன் அருள் செல்வம் — பி.எல். முத்துக்குமரன்
14. சந்நிதிகள் கட்டப்பெற்ற விவரங்கள், அழகியமெய்யர் சுவாமி பதிக வெளியீட்டிலிருந்தும், பட்ட தெய்வங்கள் குறித்த விவரங்கள் அர்ச்சகர் தெரிவித்த தகவல்களிலிருந்தும் தொகுக்கப் பெற்றவை
15. சுப. ஆறுமுக வேளார்
16. அ. வல்லநாட்டான்

உ

கருமுகிலுடைய ஐயன் எந்தை கழல்கண்டு கொள்கை கடனே

(15. கருமுகிலுடைய ஐயனார் திருக்கோயில், காடனேரி)

திருமாலின் திவ்விய உருவத்தைக் காணும் எவரும் வைத்த கண் வாங்காமல் சொக்கிக் கிடக்கவே செய்வர். அப்படிப்பட்டவர் மோகினி உருவெடுக்கும்போது எல்லோருடைய உள்ளங்களையும் எப்படிக் கொள்ளை கொண்டிருந்திருப்பார்? பரம ஞானியான பரமேசுவரனின் மனத்தைக்கூட இக்கோலம் மயக்கி விட்டது என்று புராணங்கள் சொல்கின்றன. இந்த அழகும், அமைதியும் சேர்ந்து தான் ஒரு பெரும் ஜோதியாக — ஐயப்பனாக உருக்கொண்டது.[1]

இந்த ஐயனார், தம் தந்தையான சீரிய சிவபரம் பொருளின் மூல மந்திர நாமத்தை — அல்லல் நீக்கும் அஞ்செழுத்தை — பஞ்சாட்சரத்தைத் தம் பெயருடன் இணைத்துக் கொண்டிருந்ததைச், சூரக்குளம் கோயிலில் பஞ்சாட்சரமுடைய ஐயனாராகக் கண்டோம்.

தாய்க்கு உரிய மதிப்பையும் வழங்கவேண்டாமா? (இது குறித்துச் சுவையான தகவல் ஒன்று உண்டு. அதைப் பின்னொரு நேரத்தில் காண்போம்.)

திருமாலை 'மறிகடல் துயின்ற கரியவன்', 'பாற்கடற் கருநிற வண்ணன்', 'காரெழில் வண்ணன்',[2] 'கருமால்'[3] என்றெல்லாம் திருமுறை ஆசிரியர்கள் வருணிப்பர்.

திருமாலாகிய தாயின் நிறத்தை ஒட்டியே பிள்ளையும் பிறந்திருப்பார் போலும்! ஐயனாரின் பிறப்பைக் கூறும் கந்தபுராணம் 'மைக் கருங் கடல் மேனி'யினன் என்கிறது.

அந்தக் 'கடல்நிறவண்ணன்'[4], இராமனுக்குரிய அடைமொழியாகிய 'கருந்தனி முகில்'[5] என்பதில் ஒரு பகுதியையே தம் பெயராக்கிக் கொண்டு விட்டார்; காடனேரியில் 'கருமுகிலுடைய ஐயனாராக் அமர்ந்துவிட்டார்; அவரைத்தான் இப்போது காணச் செல்கிறோம்.

* * *

மதகுபட்டி — பாகனேரி சாலையில், மதகுபட்டியிலிருந்து 4 ஆவது கி.மீட்டரில், காடனேரியில் உள்ள இரு ஐயனார் கோயில்களில்

ஒன்றான கருமுகிலுடைய ஐயனார் கோயில் அமைந்திருக்கிறது. பாகனேரிக்கு 2கி.மீ. முன்னதாக இடப்புறம் காடனேரி ஐயனார் கோயிலுக்குச் செல்லும் விலக்குப்பாதை உள்ளது. அதில் ஏறத் தாழ 1½ கி.மீ. மண்சாலையில் சென்று கோயிலை அடைகிறோம்.

குடமுழுக்கு (01.07.82ல்) நடைபெற்றுப் பன்னிரு ஆண்டுகள் ஆகியும்கூட, அழகிய கல் திருப்பணிகளைக் கொண்டுள்ள இக் கோயில் இன்னமும் எழிலுடன் திகழ்கிறது.

கும்பாபிஷேகத்துக்கு முன்னர் கருவறை சிறியதாக இருந்தது. ஐய னாரைப் பாலஸ்தாபனம் செய்து வேறிடத்தில் வைத்துவிட்டுக் கருவறையைப் பெரிதாக்கி, அதற்கு முன்னால் முன்பு இருந்த தகரக் கொட்டகையைக் காங்க்ரீட் மண்டபமாக மாற்றியுள்ளனர். இக்கோயிலுக்கு அடிமைப்பட்டவர்களான காரைக்குடி, தேவகோட் டையைச் சேர்ந்த சுமார் 270 புள்ளிகள் முன்னின்று நிதி திரட்டி இந்தக் கும்பாபிஷேகத்தை நடத்தினர்.[6]

அர்ச்சகர்களான வேளார்களுக்குச் சிவகங்கை தேவஸ்தானத்தில் கொடுக்கப் பெற்ற நிலமானியத்திலிருந்து வழிபாடுகள் நடைபெற்று வரும் இக்கோயிலில், நகரத்தார்களின் கைங்கரியங்கள் நிறைய உள்ளன.

* * *

கோயிலுக்குள் செல்லும் நம்மைத் திருச்சுற்றுச் சுவருக்குள்ளேயே அமைக்கப் பெற்றுள்ள சேமங்குதிரை, சிரித்த முகத்துடன் வர வேற்பது போன்று காணப்பெறுகிறது.

வலப்புறம், 01.07.82ல் நடைபெற்ற குடமுழுக்குக்கு முன்னர், உ. புதுப்பட்டிக்காரர்களால் வெட்டப்பெற்ற திருமஞ்சனக் கிண றும், இடப்புறம், 18.08.89ல் கட்டப்பெற்ற சோனை சாமியாடி பட்டவர் மணிமண்டபமும் உள்ளன.

பெரிய கோயில் வளாகத்தினுள் ஆங்காங்கே தனித்தனியாகச் சந் நிதிகள் கல் திருப்பணியாக அமைந்திருப்பது, ஓர் அழகாகத்தான் இருக்கிறது. வெயில், மழை நேரங்களில் சிரமமாக இருக்கும் என் பதால், ஆண்டுதோறும் மாசி மாத முதல் ஞாயிற்றுக்கிழமையில் பங்காளிகள் அனைவரும் சேர்ந்து வழிபடச் செல்லும்போது, கறுப் பர் சந்நிதி வரை கீற்றுக் கொட்டகை போட்டு வந்தார்கள்.

ஆண்டுதோறும் இதற்கு அதிகச் செலவு ஏற்படுவதால், நிரந்தரமாக ஒரு கொட்டகை அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பெறுகின்றன.

இந்தக் கூட்டு வழிபாட்டில், வெளியூர்களில் வாழ்ந்து வருவோரும் தவறாமல் வந்து கலந்து கொள்கின்றனர் என்பதோடு, புள்ளி தவறாமல் எல்லோரும் மாவிளக்கும் வைக்கின்றனர்.

குலதெய்வத்திற்காக வீடுகளில் முடிந்துவைக்கும் பணத்தை இந்தக் கூட்டு வழிபாட்டின்போது கோயிலில் கொண்டு வந்து சேர்ப்பிக் கின்றனர்.

இந்த வழிபாட்டில் சிறப்பானதோர் அம்சம் ஜபம் வைத்து அபி ஷேக ஆராதனைகள் செய்வதாகும்.


இந்த ஞாயிற்றுக்கிழமை வழிபாட்டைத் தொடர்ந்து, புதன்கிழமை யன்று காரைக்குடியில் உள்ள படைப்பு வீட்டில், காரைக்குடி — தேவகோட்டை நகரத்தார்கள் சோனைக் கறுப்பருக்குப் படைக்கின் றனர்.

பாதயாத்திரை என்பது இப்போது பரவலாக எல்லாக் கோயில் களுக்கும் மேற்கொள்ளப்பெறும் ஒரு வழிபாட்டு மரபாகிவிட்டது. சபரிக்கும், பழனிக்கும், சங்கடம் தீர்க்கும் வைத்தீஸ்வரன் கோயி லுக்கும் தொன்றுதொட்டு மேற்கொள்ளப் பெற்றுவந்த இந்த வழக் கம், இப்போது குலதெய்வக் கோயில்களுக்கும் பரவியிருக்கிறது.

காவடி எடுப்பதைப் போன்று பாதயாத்திரையும் ஆன்மிக அடிப் படையில் மட்டுமே அமையவேண்டும்; புனிதமும், தூய்மையும் நிறைந்ததாக இருக்கவேண்டும். நாமாவளி சொல்வதும், கட்டுப் பாட்டைக் கடைப்பிடிப்பதும் தலையாய கடமைகளாக மேற்கொள் ளப்பெற வேண்டும்.

கடந்த 10, 15 ஆண்டுகளாக மாசி மாதக் கூட்டு வழிபாட்டுக்குச் செல்வோர் சிலர், காரைக்குடியிலிருந்து சனிக்கிழமை பிற்பகல் கால்நடையாகப் புறப்பட்டுக் கோயிலை அடைகின்றனர்.

* * *



கல் திருப்பணிகளைக் கொண்ட கருமுகிலுடைய ஐயனார் கோயில்

கால்நடையாகவோ, காரிலோ காடனேரி செல்வோருடன் சேர்ந்து நாமும் சென்று, மூலபண்டாரம் (பேரின்பச் செல்வம்) வழங்கும் மூலவரைக் காண முந்துகிறோம். 'காலம் உண்டாகவே காதல் செய்து உய்ய'[7] வேண்டுமன்றோ?

கருவறை அழகிய கல் திருப்பணி. பூரணை — புஷ்கலையுடன் கருமுகிலுடைய ஐயனார், பெயருக்கேற்ப, அருள்மழை பொழியும் அண்ணலாக — கருணாமூர்த்தியாகக் காட்சியளிக்கிறார்.

''....இன்ப வெள்ளத்துள் நீந்திக் குளிக்கின்ற நெஞ்சம் கொண்டீர்!'' ஓடி வாருங்கள்! ''ஓரின்ப வெள்ளத்து உருக்கொண்டு, தொண்டரை உள்ளம் கொண்டவர்''[8] உங்களுக்காகக் காத்திருக்கிறார்! காலத்தை வீணாக்காதீர்! என்று கூறுவது போன்று காணப்பெறுகின்றனர் கருவறை வாயிலில் உள்ள துவார பாலகர்கள்.

இடப்புறத்தில் துவார பாலகரையடுத்து நாகலிங்கமும், பாலகணபதியும், வலப்புறம் வள்ளி — தெய்வயானையுடனான முருகனும் (மிகச் சில கோயில்களிலேயே முருகனைத் தம்பதி சமேதராகத் தரிசிக்கிறோம்!) இடம் பெற்றுள்ளனர்.

புதிதாக அமைக்கப்பெற்ற மண்டபத்துக்கு வெளியிலேயே யானை வாகனமும், பலிபீடமும் உள்ளன. (இவற்றுக்கும் சிறிய நாற்கால் (யானை) மண்டபம் ஒன்றை அமைத்திருக்கலாமே என்று நீங்கள் கருதினால் அதில் தவறில்லை!)

இங்கு நாள்தோறும் ஒரு நேர வழிபாடுதான். சிலநேரங்களில் காடனேரி கிராமத்திலிருந்து அர்ச்சகரை அழைத்துவர வேண்டியிருக்கலாம். (சில வீடுகளில் பெரியவர்கள் வெளிநாடு செல்ல நேர்ந்திருந்தால், ''செய்ய மணியே, சீராளா!....வாராய்.....அடியார்......அழைக்கின்றார்''[9] என்று திருவெண்காட்டுநங்கை அழைத்தது போன்று, 'பள்ளிக்குச் சென்றுள்ள பாலகரை அவர்தம் தாயரைக் கொண்டு அழைத்துவரச் செய்து, வழிபாட்டினை முடித்துக் கொள்ள வேண்டியிருக்கும்!)

இங்கு மகா சிவராத்திரி சிறப்பாகக் கொண்டாடப்பெறுகிறது.

★ ★ ★

பிராகாரத்தில் உள்ள பரிவார மூர்த்தங்களைக் காண முற்படும் போது, முதலில் தென் பிராகாரத்தில் தனிச்சந்நிதியில் வடுகச்சி குடிகொண்டிருக்கிறார். (காடனேரியில் உள்ள மற்றொரு கோயிலிலும் இவ்வம்மையாரைக் காணப் போகிறோம்.)

அடுத்துப் பேச்சியம்மன், காளியாத்தா, இராக்கியம்மன், (இராக்காச்சியாக இருக்கலாம்), கறுப்பாயி அம்மன், முனீஸ்வரர் ஆகியோர் உள்ளனர். இவற்றுடன் திருப்பணி செய்த செட்டியாரின் சிலையும் கல்தூணில் வடிக்கப் பெற்றுள்ளது. இந்த மண்டபம் 1938ஆம் ஆண்டில் அமைக்கப்பெற்றது.

அடுத்தது இரு சந்நிதிகளைக் கொண்ட மண்டபம். இதில் பெரிய கறுப்பர் ஒரு சந்நிதியிலும், வீரபத்திரர் மற்றதிலும் உள்ளனர். தேவகோட்டைச் செட்டியார் ஒருவரின் சிலை கறுப்பர் சந்நிதியின் வலப்புறம் உள்ள தூணில் காணப்பெறுகிறது.

கடைசியாக உள்ள மண்டபத்தில் சந்நியாசி, சப்த கன்னியர், ஆஞ்ச நேயர் ஆகியோரின் சிலைகள் உள்ளன.

இந்த எல்லா மூர்த்தங்களையும் வணங்கிக்கொண்டு வடக்குப் பிரா காரத்திற்கு வருகிறோம். அழகிய கல்மண்டபத்தில் சோனைக் கறுப் பர் குடிகொண்டிருக்கிறார். சந்நிதியின் முன்புறத்தில் நொண்டிக் கறுப்பரும், முன்னோடியும் உள்ளனர். சந்நிதியின் இடப்புறத் தூணில் 09.09.1938ல் இந்தச் சந்நிதியைக் கல் திருப்பணியாகச் செய்த காரைக்குடி நேமங்கோயிலைச் சேர்ந்த செட்டியாரின் சிலை வடிக்கப்பெற்றுள்ளது.

சோனைக் கறுப்பருக்கு இரவுநேரத்தில் (தான்) கிடாய்ப் பூசை கொடுக்கப்பெறும்போது நகரத்தார்கள் இரவு இங்கேயே தங்குவது உண்டு.

* * *

காரைக்குடி, தேவகோட்டை நகரத்தார்கள் இங்கே அருமையான திருப்பணிகளைச் செய்திருப்பதோடு, குலதெய்வத்திடத்து அதிக பக்தியும், ஈடுபாடும் கொண்டிருப்பதை நன்கு உணர முடிகிறது.

மாதந்தோறும் பங்காளிகளில் சிலர், கோயிலுக்குச் சென்று எல்லா மூர்த்தங்களுக்கும் எண்ணெய்க்காப்புச் சாத்தி வழிபட்டு வருகின் றனர். (சில கோயில்களில் மூலவரே எண்ணெயைக் கண்டிருப் பாரோ என ஐயுற வேண்டியிருக்கிறது!)

நகரத்தார் வீடுகளில் குழந்தை பிறந்தால் கோயிலுக்குச் சென்று பெயர் கூப்பிடுகின்றனர். பெற்றோர் தேர்ந்தெடுக்கும் பெயரை அர்ச்சகரைக் கொண்டு மும்முறை கூப்பிடச் செய்கின்றனர்.

பழனியிலும், திருப்பதியிலும்தான் அதிகமானவர்கள் முடிஇறக்கிக் கொள்வதுண்டு. ஆனால் இந்தக் கோயிலுக்கு அடிமைப்பட்ட (பெரிய)வர்கள், தங்கள் குழந்தைகளுக்கு இங்கு முடி இறக்கா விட்டாலும், ஆண்டுதோறும் தாங்கள் முடி இறக்கிக்கொள்வதை ஒரு நியமமாகக் கொண்டிருக்கின்றனர்.

தென் திருச்சுற்றுச் சுவரை ஒட்டி மடப்பளியும், ஒரு கூடமும் அமைந்திருக்கின்றன. இக்கோயிலுக்கான மின்இணைப்பினைக் கீழப்பூங்குடி நாடார், அம்பலகாரர்கள் உபயமாகச் செய்திருக்கின் றனர்.

தம்மை நாடி வருவோருக்கு இல்லை என்னாது வாரி வழங்கும் வள்ளலை வாழ்த்தி, வழுத்தி விடை பெறுகிறோம்.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

காற்றாகிக் கார்முகிலாய்க் காலம் மூன்றாய்க்,
கனவாகி நனவாகிக் கங்கு லாகிக்,
கூற்றாகிக், கூற்(று)உதைகொல் களிறு மாகிக்,
குரைகடலாய்க், குரைகடற்கோர் கோமா னுமாய்,
நீற்றானாய், நீ(று)ஏற்ற மேனி யாகி,
நீள்விசும்பாய், நீள்விசும்பின் உச்சி யாகி,

ஏற்றானாய், ஏறூர்ந்த செல்வ னாகி,
எழுஞ்சுடராய் எம்அடிகள் நின்ற வாறே.

திருச்சிற்றம்பலம்

— 6 ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

— கருமுகிலுடைய ஐயனாராகிய என் அப்பனின் திருவடியைக் கண்டு கொள்வதே (பிறவாதிருக்க விரும்பும் உயிர்களின்) கடனாகும்.

1. தெய்வத்தின் குரல் — முதற் பகுதி
2. ஞானசம்பந்தர்
3. மாணிக்கவாசகர்
4. ஐயனாரைக் குறிப்பிடும் பெயர்களில் ஒன்று — பிங்கல நிகண்டு
5. கம்பராமாயணம்
6. எஸ்.டி.எஸ்.பி. சுப்பிரமணியன் செட்டியார், காரைக்குடி
7. திருவாசகப் பகுதி: ''காலம் கிடைத்திருக்கும்போதே (இறைவனிடத்து) அன்பு செய்து பிழையுங்கள். வாழ்நாளை வீணாக்காதீர்!''
8. திருவாசகப் பகுதி: ''இன்பச் சுனையில் நீந்திக் குளிக்கின்ற எண்ணம் உடையவர்களே!''..... ''ஒப்பற்ற பேரின்ப வெள்ளமே திருவுருவாகக் கொண்டு, அடியார் உள்ளத்தைக் கவர்ந்து கொண்ட இறைவன்......''
9. பெரிய புராணம்

உ

மனத்தின்உள் மாசுதீர்க்கும் மருதுடைய ஐயனார்

(16. மருதுடைய ஐயனார் திருக்கோயில், காடனேரி)

பண்டைத்தமிழர், நிலத்தைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகையாகப் பிரித்து ஐந்திணை என்று பெயரிட்டிருந்தனர்.

இவற்றுள் வயலும் (பழனம்), வயல்சார்ந்த நிலமும் மருதநிலம் எனப்பெறும். இதனை 'ஊரடுத்த நிலம்' என்றும் சொல்வதுண்டு. இந்நிலத்தின் தலைவன் இந்திரன்.

இந்திரனின் மனைவியான இந்திராணியைக் காக்க இசைந்து, அவளுக்குக் காவல் இருக்க ஒப்புகிறார் 'அந்தமில் எம்ஐயன்'[1]. 'காளன் எனப்படும் கட்டுரையோனுடன்'[2] அவளைக் காத்துதவிய ஐயன், பின்னர் இந்திரனைத் தலைவனாகக் கொண்ட அந்த மருதநிலத்தையே — நிலத்தையும், நீர்நிலைகளையும், அந்நிலம்வாழ் மக்களையுமே காக்கும் தெய்வமாக,

அம்மருதநில மலர்களில் ஒன்றான தாமரை மலரை இருக்கையாகக் கொண்ட நான்முகனாலும் அர்ச்சிக்கப்பெறுபவராக,[3]


மருதநிலத்துக்குரிய மரமான மருத (மருது) மரத்தை உடையவராக,

'மருதுடைய ஐயனாரா'க் கொண்டாடப்பெறுவது பொருத்தமான தன்றோ?

★ ★ ★

காடனேரி கிராமத்தைத் தாண்டி சுமார் 1கி.மீ சென்றால், கண்மாய்க் கரையில் அமைந்துள்ளது மருதுடைய ஐயனார் கோயில்.

அக்கோயிலில் இரு நாட்களில் திருக்குட நீராட்டு விழா நடைபெறவிருந்ததால், (நாம் அங்கு சென்றது 11.07.94; குடமுழுக்கு விழா 13.07.94ல் மிகச் சிறப்பாக நடைபெற்றது.) அதற்கான ஆயத்தவேலைகள் அதிவேகமாக நடைபெற்றுக்கொண்டிருந்தன. அதன் காரணமாக முறையாகக் கோயிலில் வழிபாடு செய்ய இயலவில்லை என்பதோடு, கோயிலைப் பற்றி விரிவான விளக்கத்தையும் எழுத இயலவில்லை.



கோயில் குடமுழுக்குக்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இடைவிடாது பணியில் ஈடுபட்டுக் களைத்திருந்தபோதிலும், கும்பாபி ஷேகப் பொறுப்பாளர்கள்[4] கோயிலைப் பற்றியும், அதில் நகரத் தார்களுக்குள்ள பொறுப்புகள் — பங்குகள் பற்றியும் பல தகவல் களைக் கூறினர்.

* * *

சந்நிதியின் முன்பாக உள்ள இரு பெரிய பூதங்கள் நம்மைப் பய முறுத்தப் பார்க்கின்றன. ஆனால் நாம்தான் ஞானசம்பந்தரின் குளிகையைக் (கோளறு திருப்பதிகம்) கையில் வைத்திருக்கிறோமே, அதனால் அப்பர் சுவாமிகள் கூறியது போன்று 'அஞ்சுவது யாதொன்று மில்லை, அஞ்ச வருவது மில்லை'[5] என்று கூறி முன் செல்கி றோம்.

அருளுடைய — ஆற்றல்மிகவுடைய — அவரவரின் வினைக்கேற்ப அருள்செய்யும் மருதுடைய ஐயனாரின் கருவறை நடுநாயகமாகக் கோயிலை அலங்கரிக்கிறது.

கருவறையின் மேல் உள்ள விமானத்தை 'ப்ராசாதம்' என்றும் கூறுவர். இது நாகரம், திராவிடம், வேசரம் என மூன்று வகைப் படும். இவற்றில் இங்கு கருப்பக்கிரகத்தின் மீதுள்ளது போன்ற

சதுர விமானத்தை 'நாகரம்' என்பர். புருஷ விமானம் என்று கூறப்பெறும் இதன் அதிதேவதை மகாவிஷ்ணு.[6]

மருதுடைய ஐயனாருக்கு மகத்தான சக்தியாகத் திகழ்கிறார் வடுகச்சி அம்மன். 'கையருகே அவள்இருந்து காரியங்கள் செய்யாவிடில், ஐயனார் சிவமாகி அசையாமல் அமர்ந்து விடுவாராம்'.[7]

அலவாக்கோட்டை, கீழப்பூங்குடி, தேவகோட்டையைச் சேர்ந்த இளையாற்றங்குடிப் பட்டணசாமியாரும், மாத்தூர் உறையூராருமாக 250 புள்ளிகள், இந்த ஐயனாரையும், அம்மனையும் குலதெய்வமாகக் கொண்டாடுகின்றனர். இவர்களில் ஐயனாரைப் பிரதானமாக வழிபடுவோர் மாத்தூர் உறையூரார் ஆவர்.

இதனிடையே அலவாக்கோட்டையினர் (மாத்தூர் உறையூரார்) 110 புள்ளிகளும், தேவகோட்டையைச் சேர்ந்த 16 புள்ளிகளும், ஒக்கூர் புதூர் இளவகைச் செட்டியார்களும் இக்கோயிலுக்கு அடிமைப்பட்டவர்கள் என்று வேறொரு தகவல் கூறுகிறது.[8]

இருப்பினும் தேவகோட்டையில் ஒரு நகரத்தார் குடும்பத்தினர், அலவாக்கோட்டை மாத்தூர் உறையூர் நகரத்தார், கீழப்பூங்குடி — பேரணிப்பட்டி நகரத்தார் ஆகியோர் பெயரிலேயே திருக்குட நன்னீராட்டு விழா அழைப்பிதழ் அச்சிடப்பெற்றுள்ளது என்பது இங்கு நினைவுகூரத்தக்கது.

இதுவரை ஆண்டுதோறும் தை மாத வெள்ளிக்கிழமைகளில் நகரத்தார்கள், அவரவரும் தனித்தனியே வந்து வழிபட்டுச் சென்று வந்துள்ளனர். அவ்வாறு வரும்போது பிள்ளைகளுக்கு முடி இறக்கித் தொட்டில் கட்டிப் பெயர் கூப்பிடுவது உண்டு.

இனிப் பங்காளிகள் அனைவரும் குறிப்பிட்ட ஒரு நாளில் ஒன்று சேர்ந்து வழிபாடு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பெற்று வருகின்றன.[9]

நகரத்தார் வீட்டுத் திருமணங்களுக்கு அர்ச்சகர்களுக்கு அழைப்புக் கொடுத்து, அவர்கள் திருமணத்தன்று சென்று திருநீறு வழங்கி வரும் வழக்கம் இங்கு இருந்துவருகிறது.

நாள்தோறும் ஒருவேளைப் பூசை நடைபெறும் இக்கோயிலில், 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை இருந்துவந்த புரவி எடுப்பு விழா, தற்போது வசதிக் குறைவினால் நிறுத்தப் பெற்று விட்டது.

புதிதாக இப்போது மார்கழி மாதத்தில் திருப்பள்ளி எழுச்சி நடைபெற்று வருகிறது.

* * *

ஐயனாரின் வலப்புறம் வடுகச்சி அம்மனின் சந்நிதி அமைந்துள்ளது.

முதலில் இவர் வேப்பமர மேடையில் வழிபடப்பெற்று வந்திருக்க வேண்டும் என்பது, 'வேம்புவளர் மேடையில் விரும்பி வளர்ந்தவளே'[10] என்னும் பாடல் அடியால் தெரிகிறது.

கன்னிப் பெண்ணான வடுகச்சி அம்மனின் பீடம் கண்மாய்க் கரையில் இருந்து வந்தது; அங்கு சென்று வழிபடுவது சிரமமாக இருந்ததால், ஐயனாரின் அனுமதி பெற்றுச் சுமார் 300 ஆண்டுகளுக்கு

முன்னர் இங்கு சந்நிதி அமைத்து நகரத்தார்கள் வழிபட்டு வருகின்றனர்.[11]

சுமார் 100 ஆண்டுகளாகக் காடனேரி ஐயனாரையும், கறுப்பரையும் குல தெய்வமாகக் கொண்டிருந்த அலவாக்கோட்டை நகரத்தார்களிடம், சுமார் 75 ஆண்டுகளுக்கு முன்னர், 15 வயதுடைய பெண் ஒருத்தி அடைக்கலம் கோரினாள்; அவர்களுடைய கோயில் வீட்டின் அருகில் வந்ததும் அப்பெண் மறைந்து விட்டாள்; அதனைத் தொடர்ந்து அவர்கள் அந்தப் பெண்ணையும் வைத்து வழிபடுகின்றனர்; அப்பெண் அசரீரியாகக் கூறியபடி, அலவாக்கோட்டை நகரத்தார்கள், தம் தலைப் பெண்பிள்ளைக்கு நாச்சம்மை என்னும் பெயர் இட்டுவருகின்றனர்; அப்பெண் தேவகோட்டையிலிருந்து வந்ததாகச் சொல்லப்பெறுவதால், தேவகோட்டை நகரத்தார்களும் அப்பெண்ணை வழிபட்டு வருகின்றனர்.[12]

இது சரியான செவிவழிச் செய்தியாக இருந்தால், இப்பெண்தான் வடுகச்சி அம்மன் என்று ஊகிக்க முடியும். ஆனால் கோயில் குட முழுக்கு விழாப் பொறுப்பாளர்கள் கூற்றுப்படி 300 ஆண்டுகளாக இச்சந்நிதி இங்கு இருந்து வருகிறது!

மேலும், தேவகோட்டைப் பெண்ணைப் பற்றிய தகவல் கொடுத்திருப்பவர், ஐயனாரைப் 'பாங்காட்டு ஐயனார்' என்று குறிப்பிடுகிறார். காடனேரியில் உள்ள இரு ஐயனார்களின் பெயர்களுக்கும் இது பொருந்துவதாக இல்லை. மேலும் இரு கோயில்களிலுமே வடுகச்சி அம்மன் சந்நிதிகள் உள்ளன. இருப்பினும் மருதுடைய ஐயனார் கோ்யிலில்தான் வடுகச்சிக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பெறுகிறது.

பால்வடியும் முகத்தினள், அன்னநடையாள், மின்னல் இடையாள், கருமை நிறத்தினள் ('ஆம்பல்நிற வடுகச்சி') என்றெல்லாம் கவிஞரால் வருணிக்கப்பெறும் வடுகச்சி அம்மனை, இளையாற்றங்குடிப் பட்டணசாமியார் பிரதானமாக வழிபடுகின்றனர். இவர்கள் தங்கள் வீடுகளில் நடக்கும் நிகழ்ச்சிகளின்போது வடுகச்சிக்கென 1¼ ரூபாய் பணம் முடிந்து வைக்கின்றனர்.

வடுகச்சி அம்மன் சந்நிதியில் வளையல், காதோலை, கறியமணி ஆகியவற்றை நேர்த்திக்கடனாகச் செலுத்துகின்றனர்.

நகரத்தார் மட்டுமன்றி நாட்டாரும் விரும்பி வழிபடும் இச்சந்நிதியில் விபூதி, குங்குமம் கொடுக்கப்பெறுவதில்லை.

* * *

கிராமத்தார் ஆண்டுதோறும் ஆடி, ஆவணி மாதங்களில் இங்கு சிறப்புச் செய்கின்றனர். கோயில் வளாகத்தினுள் உயிர்ப்பலி கொடுப்பதில்லை. (கும்பாபிஷேகத்தின் போதுகூடப் பூசணிக்காய் தான் வெட்டவிருக்கிறோம் என்று நகரத்தார்கள் கூறினர்.)

இங்கு பிரதான தெய்வங்களாக மருதுடைய ஐயனார், வடுகச்சி அம்மனுடன், பெரிய கறுப்பர், சின்னக் கறுப்பர், வீரபத்திரர், விநாயகர், பைரவர் சந்நிதிகளும், கோயில் திருப்பணி செய்த அலவாக்கோட்டை பில்லப்ப செட்டியாருக்கு ஒரு சந்நிதியும் உள்ளன.

முன்பு, எல்லாமே மண் சிலைகளாக இருந்த நிலைமாறி, இப்போது கற்சிலைகள் இடம்பெற்றுள்ள இக்கோயிலில், இதற்கு முன்னர் ஒருமுறை குடமுழுக்கு நிகழ்ந்திருக்கிறது.[13]

மருதுடைய ஐயனாரையும், வடுகச்சி அம்மனையும் மனதார நம்பி வழிபடுவோரின் இல்லங்களில் எந்தத் தீமையும் நிகழ்வதில்லை; 'எங்கள் வாழ்வு வளம்பெற வழிகாட்டுபவர் வடுகச்சி அம்மன் தான்' என்று இக்கோயிலுக்கு அடிமைப்பட்டவர்கள் உளம் உருகிக் கூறுகின்றனர்.

பரவும் சொல்மாலை

1. கால்தூக்கி நெடுங்குதிரை கைகூப்பி வருவோரை
வால்தூக்கி விசிறிவிட்டு வர்வேற்கும் திருக்கோயில்
ஆல்தூக்கும் விழுதாகும் ஐயனார் சந்நிதியில்
பால்தூக்கும் முகத்தாளே வடுகச்சி வந்தருள்க!

2. தவறுசெய்தல் மனிதகுணம் தாங்குவது தெய்வமனம்
அவரவரின் வினைக்கேற்ப ஐயனார் அருள்செய்வார்!
சுவர்அருகே சித்திரம்போல் அவர்அருகே இருப்பவளே!
நவமணியே! வடுகச்சி நலம்கொடுக்க வந்தருள்க!

3. குலங்காக்கும் தாயே! குமரிமணம் கமழ்பவளே!
தலம்நோக்கி வந்துன்னைத் தலைபணிந்து வணங்குகிறோம்,
மலர்ந்திருக்கும் கன்னியர்க்கு மாலைகட்டித் தந்தருள்க!
உலர்ந்திருக்கும் ஏழைகளை உயர்வாக்க வந்தருள்க!

— டாக்டர் அர.சிங்காரவடிவேலன்,
'அருள்மிகு வடுகச்சி அம்மன் வணக்கப் பாமாலை'

குறிப்பு விளக்கம்:

1. கந்த புராணம்: முடிவில்லாத எம் தலைவரான ஐயனார்
2. க.பு: மாகாளன் என்று சொல்லப்பெறும் பெயரை உடைய வீரன்
3. 'மலர் அண்ணலும் தினம் அர்ச்சிக்கும் நீர்மையான்' — கந்த புராணம்
4. எம். இராமநாதன் செட்டியார், தேவகோட்டை: எஸ்.பி. பழனியப்ப செட்டியார், கீழப்பூங்குடி; இராமசாமிச் செட்டியார், அலவாக்கோட்டை
5. 4ஆம் திருமுறை
6. ஆலயங்களும் ஆகமங்களும்
7. வடுகச்சி அம்மன் வணக்கப் பாமாலை' — டாக்டர் அர. சிங்காரவடிவேலன்
8. வி. இராமநாதன் செட்டியார், அலவாக்கோட்டை
9. எம். இராமநாதன் செட்டியார், தேவகோட்டை
10. வடுகச்சி அம்மன் வணக்கப் பாமாலை
11. எம். இராமநாதன் செட்டியார்
12. வி. இராமநாதன் செட்டியார்
13. வி. இராமநாதன் செட்டியார்

புறமே கிடந்து புலம்புகின்றேன் புல்வாய் நாயகி அம்பாளே!

(17. புல்வாய்நாயகி அம்மன் திருக்கோயில், பாகனேரி)

அன்பு, அருள், பரிவு, இரக்கம், தூய்மை, மென்மை, தியாகம் ஆகிய சிறந்த தெய்விகப் பண்புகள் அனைத்தும் தாயிடமே ஒருங்கு அமைந்து நிலவுகின்றன. இத்தகைய சிறப்பை உணர்ந்த நம் முன் னோர் கடவுளைத் தாயாக வழிபட்டு வரலாயினர். பெண்ணினத் தின் எண்ணரிய பெருஞ் சிறப்புகளை எல்லாம் இனிதுணர்ந்து போற்றிய சமுதாய வாழ்வின் விளைவே அன்னைத் தெய்வ வழி பாடு எனலாம்.[1]

இந்த அன்னை — சக்தி வழிபாடு, குறிப்பாகக் கிராமப்புறங்களில் பெரிதும் பரவியிருக்கிறது.

இவ்வாறு கிராமப்புறங்களில் பரவியுள்ள சக்தி ஆலயங்களில் குறிப்பிடத் தக்கவையாக விளங்குபவற்றில் நாட்டரசன்கோட்டைக் கண்ணாத்தாள் திருக்கோயிலும் ஒன்றாகும்.

கண்ணாத்தாள் கோயிலுக்கு முதன்முதலில் சென்றபோது, நாட் டரசன்கோட்டையைச் சுற்றியுள்ள ஏழு ஊர்களில், அன்னை வெவ் வேறு பெயர்களில் கோயில் கொண்டு அருள்கிறாள் என்று கண் டோம்.

அவற்றில் மூன்று கோயில்கள் நகரத்தார்களின் குலதெய்வக் கோயில் களாக விளங்குகின்றன. நாட்டரசன்கோட்டைக் கண்ணாத்தாள் கோயில், பாகனேரி புல்வா(ய்)நாயகி அம்மன் கோயில், வெற்றி யூர் வெற்றியூரம்மன் (அன்னபூரணி) கோயில் ஆகியவையே அந்த மூன்று கோயில்கள்.

இவற்றில் கண்ணாத்தாள் கோயிலுக்குச் சென்றுவந்து விட்டோம். வெற்றியூருக்கு இப்புனிதப் பயணத்தின் இறுதியில் செல்லவிருக் கிறோம். இப்போது மூன்றாவது அம்பிகை ஆலயமான புல்வா(ய்) நாயகி அம்மன் கோயிலுக்குச் செல்கிறோம்.

சங்கத்தமிழ் இலக்கியங்கள் இன்று நம்மிடையே உலவ — நின்று நிலவ முழுமுதற் காரணமாக அமைந்த ஊர்களில் பாகனேரியும் ஒன்று என்று சொன்னால் அது மிகையாகாது.

அந்த ஊரின் உடையப்பா சாலை வழியாகச் சென்று கோயிலை அடைகிறோம்.

* * *

புல்வாய் என்பதற்குக் கலைமான் என்று பொருள் உண்டு.

துர்க்கை என்னும் கொற்றவையை மூன்று நிலைகளில் படம் பிடித்துக் காட்டுகிறார் சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகள்.

அவற்றில் ஒன்று

''வரிவளைக்கை வாள்ஏந்தி மாமயிடற் செற்றுக்
கரியதிரி கோட்டுக் கலைமிசைமேல் நின்ற.....'' கோலம்[2].

(வரிகளையுடைய வளையல் அணிந்த கையில் வாள் ஏந்திப் பெரிய மகிடாசுரனையும் கொன்றொழித்துக் கரிய முறுக்கேறிய கொம்பை உடைய கலைமான் மீது வீற்றிருக்கின்றாள்.)

பாகனேரியில் இந்த அம்பிகை துர்க்கை அம்சமாக வழிபடப் பெறுவதால், கலைமானை உடைய நாயகி என்னும் பொருள் தரும் 'புல்வாய்நாயகி அம்மன்'[3] என்பதே சரியான பெயராக இருக்கவேண்டும். (துர்க்கைக்கு உள்ள பல பெயர்களில் கலையூர்தி என்பதும் ஒன்றாகும்.[4])

இந்தக் கோயிலுக்கு நாம் செல்லும்போது(ம்), 15.07.94ல் (நடைபெற்ற) திருக்குட நன்னீராட்டு விழாவினை ஒட்டிப் பூர்வாங்க ஏற்பாடுகளும், யாகசாலை வேத பாராயணமும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அழகிய பெரிய அன்னை ஆலயத்தின் எதிரில் பெரியதோர் ஊருணி உள்ளது. அங்கு கை கால்களைத் தூய்மை செய்துகொண்டு இராஜகோபுரத்தின் முன் உள்ள பெரிய மண்டபத்தை அடைகிறோம்.

நம் இடப்புறம் திருச்சுற்றுச்சுவரை ஒட்டி விநாயகருக்கான தனிச் சந்நிதி ஒன்று காணப்பெறுகிறது.

விக்கினங்கள் தீர்க்கும் விநாயகரை 'ஐந்து கரத்தனை' என்னும் திருமந்திரக் காப்புச் செய்யுளைக் கூறி 5 முறை நெற்றிப்பொட்டில் குட்டிக் கொண்டு (இந்தச் செய்யுளில் 'ஐந்து கரத்தன், ஆனை முகத்தன், இந்தின் இளம்பிறை போலும் எயிற்றன், நந்தி மகன், ஞானக் கொழுந்து' என்று விநாயகரின் 5 திருப்பெயர்கள் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு திருப்பெயருக்கும் ஒருமுறை குட்டிக் கொள்வது, ஐந்து கரத்தனை ஐந்து முறை குட்டிக் கொண்டு வழிபடுவது ஆகிறது.) வழிபடுகிறோம்.

இங்குள்ள இராஜகோபுரம் 3 நிலைகளைக் கொண்டது. தென் திருச்சுற்றுச் சுவரிலும் இதேபோன்று மற்றொரு 3 நிலை இராஜ கோபுரம் உள்ளது.

கோயிலினுள் செல்கிறோம். கொடிமரம், பலிபீடம் ஆகியவற்றைக் கடந்து, மகா மண்டபத்தில் துவார சக்தியர் சிலைகள்.

கருவறையில், புல்வாய் நாயகி — துர்க்கையம்மன்.

இவள் பராசக்தியின் காவற்படைத் தலைவியாகக் கருதப்பெறுகி றாள். ஆபத்துக் காலத்தில் அடைக்கலம் புகுவோருக்கு அச்சத்தை நீக்கி அருள் புரிபவள், துர்க்கை.

துர்க்கம் என்பது அகழி. அது மதிலைப் பகைவர் அணுகமுடியா மற் செய்வது போலத் தன்னை வழிபடும் அடியார்களைத் துன்பம் அணுகா வகையில் காத்தலால், இவள் துர்க்கை எனப்பெறுகிறாள். (ஆபத்துக் காலங்களில் தேனில் தோய்த்த வெட்சிப் பூவைத் தூவி துர்க்கா சூக்தம் என்னும் மந்திரம் ஓதி அருச்சித்து வழிபட்டால் எல்லா இன்னல்களும், பிணிகளும் விலகும்.)[5]

நம்மை வெறுப்போர், நமக்குத் துன்பம் இழைப்போருக்குக்கூட எந்த இன்னலும் ஏற்படக்கூடாது என்று அன்னையிடம் வேண்டிக் கொண்டு அவரை வலம் வருகிறோம்.

* * *

கருவறையின் பின்புறம், ஆத்தங்குடி, கண்டனூர் ஆகிய ஊர்களின் பிள்ளையார்பட்டி நகரத்தாரும், காரைக்குடி நேமங் கோயிலாரும் குலதெய்வமாகக் கொண்டாடும் அக்கினி ஆத்தாள் சந்நிதி உள் ளது.

(அரியக்குடி, ஆத்தங்குடி, கண்டனூர், கோட்டையூரைச் சேர்ந்த வைரவன் கோயில், மற்றும் மாத்தூர் மணலூர்ப் பிரிவினரான சுமார் 500 புள்ளிகள் ஆத்தாளை வழிபடுகின்றனர் என்பது மற் றொரு தகவல்.[6])

அக்கினி ஆத்தாளுக்குத் தனிக் கோயிலோ, மண்டபமோ இல்லை. நெய்ச் கொட்டான் மரம். அதைச் சுற்றி ஒரு மேடை. (இந்த மரத் தில்தான் ஆத்தாள் அணைந்துள்ளதாக ஐதிகம் என்கிறார் நாச்சி யப்பன்.) மரத்தின் இடப்புறத்தில் இரு அடுக்குள்ள சிறிய கற்பீடம். அருகே விளக்கு மாடம். மேடையைச் சுற்றிப் பளிங்குக்கல் பதிக்கப் பெற்றுள்ளது.

சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னர் கண்டனூர் நகரத்தார்களால் இந்த மேடை அமைக்கப் பெற்றிருக்கலாம் என்று கூறப்பெறுகிறது.[7]

இந்த அம்மையார் காரைக்குடியில் பிறந்து கண்டனூரில் மண முடித்துப் பின்னர் தீக்குளித்துப் பாகனேரி சேர்ந்ததாகச் சொல் கிறார்கள் என்கிறார், கண்டனூரிலிருந்து ஆத்தங்குடியில் தம் மூதாதையர் குடியேறியதாகக் கருதும் நாச்சியப்பன்.

அக்கினி ஆத்தாள் என்பது நாச்சாத்தாள் என்றும் வழங்கப்பெறு கிறது. அக்கினியில் இறங்கி உயிர் துறந்ததால்தான் அக்கினி ஆத் தாள் என்கின்றனர். ஆத்தங்குடி, கண்டனூர் நகரத்தார் வீடுகளில் நாச்சியப்பன், நாச்சம்மை என்னும் பெயர்கள் பிள்ளைகளுக்கு இடப்பெறுவது இதை உறுதிப்படுத்துகிறது. நகரத்தார் குடும்பத் துப் பெண்ணான இவர், தீப்பாய்ந்தான்காடு என்னும் இடத்தில் (பாகனேரிக்கு அருகில் உள்ளது.) தீக்குளித்து இறந்துவிட்டதாக வும், அப்பெண்ணின் சேலையின் ஒரு சிறு துண்டு, புல்வாய் நாயகி கோயிலில் இப்போது மேடை உள்ள இடத்தில் விழுந்த தாகவும், தொடர்ந்து அந்த இடத்தில் பீடம் அமைத்து நகரத்தார் கள் வழிபட்டு வருவதாகவும் சொல்லப்பெறுகிறது.[8]

இந்தப் பீடத்துக்கு ஒவ்வொரு நாளும் அபிடேக ஆராதனைகள் கிடையாது. ஆண்டுக்கு ஒரு நாள் எல்லாரும் வந்து சிறப்பாக வழி பாடு செய்வர். சிலர் தனித்தனியே வழிபட்டுச் செல்வதும் உண்டு.

காரைக்குடி நகரத்தார்கள் மாசி மாத முதல் செவ்வாய்க்கிழமை புல்வாய் நாயகியம்மன் கோயிலுக்குச் சென்று அக்கினி ஆத்தாள் மேடைக்கு அபிஷேகங்கள் ஆராதனைகள் செய்தும், புல்வாய் நாய கிக்கு மாவிளக்கு வைத்தும் வழிபட்டுத் திரும்புகின்றனர்.[9]

ஆனி மாதப் பௌர்ணமியின்போது பத்து நாள்த் தேர்த் திருவிழா இங்கு நடைபெறுகிறது. அத்திருவிழாவின்போது பத்தாவது நாளன்று கண்டனூர் நகரத்தார்கள் அக்கினி ஆத்தாளுக்கு அபிஷேக ஆரா தனை செய்கின்றனர். அப்போது வெண்பொங்கல் படைத்து அதில் சர்க்கரை வைத்து நெய் ஊற்றி வழிபடுகின்றனர்.[10]



அக்கினி ஆத்தாள் மேடை

இருவேறு நாட்களில் இரு ஊர்க்காரர்களும் அக்கினி ஆத்தாளை வழிபடுவது, இவர்கள் ஒன்றாகச் சேர்ந்து (சந்தித்து) வழிபடக் கூடாது என்னும் சம்பிரதாயம் இருப்பதாக[11]ச் சொல்லப்பெறு வதை உறுதிப்படுத்துகிறது.

(இரு ஊர்க்காரர்களும் சம்பந்திகளாக இருப்பார்களோ? புகுந்த வீட்டின் கொடுமையால் அம்மையார் தற்கொலை செய்து கொண் டிருப்பாரோ? இதே போன்று இன்னும் சிலரது வாழ்க்கைகளை யும், பின்னால் வேறு சில கோயில்களில் நாம் கேட்டறியப் போகி றோம்.

இந்தக் கொடுமைச் செயல் இன்னமும் நீடிக்கிறது. உயிரோடு இருக்கும்போது கொடுமைப்படுத்துவது; இறந்த பின்னர் அவளைத் தெய்வமாக வைத்துப் படைத்து வழிபடுவதா?

படித்த — பண்புள்ள — பக்திநிறைந்த சமுகத்தில் நிராதரவான பெண்கள் இப்படிக் கொடுமைப்படுத்தப் பெறலாமா? கொடுமை நிறுத்தப்பெறாவிட்டால், அத்தகைய பெண்கள் நீதி கேட்கக் கொதித் தெழுவதை விடுத்து, நெருப்பு வைத்துக் கொள்ளலாமா? படித்த தாய்க்குலம் பதட்டமின்றிச் சிந்திக்க வேண்டும்.)

* * *

தங்கள் வீடுகளில் குழந்தை பிறந்தால், நகரத்தார் பெருமக்கள் இங்கு வந்து அக்கினி ஆத்தாளை வழிபட்டுச் செல்கின்றனர். இவர்களுடைய விடுதி ஒன்றும் அருகில் உள்ளது.

அக்கினி ஆத்தாளுக்காக வீடுகளில் 1¼ ரூபாய் முதல் 6¼ ரூபாய் வரை முடிந்து வைக்கும் வழக்கம் ஆத்தங்குடியில் நிலவுகிறது.

அக்கினி ஆத்தாளுக்கு நாள்தோறும் இருவேளை நிவேதனம் செய்து வழிபாடு நடத்த, நகரத்தார்கள் சிவகங்கை தேவஸ்தானத்துடன் பேச்சுவார்த்தை நடத்திவருகின்றனர். இது நடைமுறைக்கு வந்தால், பீடத்துக்கு நாள்தோறும் அபிஷேக ஆராதனைகள் நிகழும்.

* * *

கோயிலின் வடமேற்கு மூலையை ஒட்டி முனீஸ்வரர் சந்நிதியும், வடக்குப் பிராகாரத்தில் சாமுண்டீஸ்வரி, பைரவர் சந்நிதிகளும் உள்ளன.

சாமுண்டி சப்த மாதர்களில் ஒருவர். பிராமி, மகேசுவரி, கௌ மாரி, வைஷ்ணவி, வராகி, இந்திராணி, சாமுண்டி என்போர் அவ்வெழுவராவர். இவர்களில் சிங்கத்தை ஊர்தியாகக் கொண்ட காளியே சாமுண்டியாவாள்.

* * *

''இழைக்கும்வினைப் பயன்சூழ்ந்த இப்பிறவிக் கொடுஞ்சூழல் 12
பிழைக்குநெறி தமக்குதவப் பெண்கொடியைப் பெற்றெடுத்தார்''

என்று மானக்கஞ்சாற நாயனாரைக் குறிப்பிடுகிறார் சேக்கிழார் சுவாமிகள்.

ஒரு பெண்ணை ஒரு நற்குடியில் மணமுடித்து அக்குடி தழைக்கச் செய்தலால், பெண்ணைப் பெற்றோர் நற்கதி அடைகின்றனர் என்பது அறநூல் விதி.[13]

'தானங்களில் சிறந்தது கன்னிகாதானமே' என்றும் கூறுவர்.

ஆனால் நகரத்தார் சமுகத்திலோ இதற்கு எதிர்மாறான நிலையே காணப்பெறுகிறது. அந்நிலை மாற — அனைவரும் மகிழ்வுடன் வாழ, அன்னை(ம்மை)யைப் பிரார்த்தித்து அங்கிருந்து புறப்படுகிறோம்.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

அறுக்கி லேன்உடல், துணிபடத் தீப்புக்(கு)
ஆர்கி லேன்,திரு வருள்வகை அறியேன்,
பொறுக்கி லேன்உடல் போக்கிடம் காணேன்,
போற்றி போற்றிஎன் போர்விடைப் பாகா!
இறக்கி லேன்,உனைப் பிரிந்(து)இனி திருக்க
என்செய் கேன்,இது செய்கஎன்(று) அருளாய்!
சிறைக்க ணேபுனல் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே!

திருச்சிற்றம்பலம்

— 8ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

1. தெய்வத் திருவுருவங்கள் — ந.ரா. முருகவேள்
2. சிலப்பதிகாரம் — வேட்டுவவரி
3. புல்வநாயகி என்றே இந்த அம்பிகையை இங்கு அழைக்கின்றனர்
4. பிங்கல நிகண்டு
5. தெய்வத் திருவுருவங்கள்
6. என்.சி.டி. நாச்சியப்பன், ஆ.முத்துப்பட்டணம்
7. ஆ. மீனாட்சிசுந்தரம் பட்டர், பாகனேரி
8. ஆ. மீனாட்சிசுந்தரம் பட்டர்
9. எம். கணேசன் செட்டியார், காரைக்குடி
10. ஆ. மீனாட்சிசுந்தரம் பட்டர்
11. எம். கணேசன் செட்டியார்
12. பெரிய புராணம்: செய்வினைப் பயன்களால் சூழப்பெற்ற இப்பிறவியாகிய கொடுஞ் சூழலினின்றும் பிழைக்கும் வழியைத் தமக்கு உதவக் கொடி போன்ற பெண் மகவினை (நாயனார், தம் மனைவியிடத்து)ப் பெற்றெடுத்தார்
13. பெரிய புராணம் — சிவக்கவிமணி உரை

உ

சேய நெடுங்கொடைச் சேவகப் பெருமாள்

(18. சேவகப் பெருமாள் ஐயனார் திருக்கோயில், செம்பனூர்)

அரிமர்த்தன பாண்டியனின் அமைச்சராக இருந்த திருவாதவூரடிகள், குதிரைகள் வாங்கும் பொருட்டுத் திருப்பெருந்துறை நோக்கிச் செல்கிறார்.

அங்கு குருந்த மர நிழலில் சிவபரம்பொருள்,

''உருத்திரநல் திருமணியை இலங்கு காதில்,
ஒண்சிரத்தில், கந்தரத்தில், ஒளிகொள் மார்பில்,
கரத்தில்அணிந்(து), இலகுதிரு முண்ட மங்கிக்
கண்கரந்த நன்னுதல்மேல் கவினச் சாத்தித்
திருத்திகழும் வேதியனாரா'' க[1] அமர்ந்திருந்தார்.

அவரிடம் சிவம் ஏது, ஞானம் ஏது, போதம் ஏது என்று திருவாதவூரர் வினாத் தொடுக்கச், 'சிவமாவது ஏகப் பொருளாகிய பரப்பிரம்மம், அதனை உள்ளவாறு அறிதலே ஞானம், அறிந்ததனைத் தெளிதல் போதம்' என்று சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளினார்.[2]

ஆசாரியராகிய சிவசின்னங்கள் அணிந்த அண்ணலும், அவரிடம் அருளுரை கேட்கும் மாணவராகிய திருவாதவூரரும் அமர்ந்திருக்கும் காட்சியை, ஒரு கணம் மனக்கண்ணால் எண்ணிப் பாருங்கள். அந்தக் காட்சியை அழகுறக் கல்லி(தூணி)லே வடித்திருக்கிறார் சிற்பி ஒருவர்.

இந்தக் குரு — சீடர் சிற்பம் உள்ள கற்றூண், ஏதாவது ஒரு சிவன் கோயிலிலே இருக்கிறதோ என்று நினைத்து விடாதீர்கள். நாம் இப்போது செல்லும் செம்பனூர் சேவுகப் பெருமாள் ஐயனார் கோயிலில்தான் இது காணப்பெறுகிறது. (இது போன்ற இன்னும் சில அரிய சிற்பக் காட்சிகளை வேறுசில குல தெய்வக் கோயில்களிலும் காணப்போகிறோம். காலம் வரும், காத்திருங்கள்!)

சிற்பியின் கவினுறு கைத்திறனை இச்சிற்பத்தில் காணமுடியாவிட்டாலும், இத்தகையதொரு சிற்பத்தை, ஊருக்கு வெளியே எங்கோ

கண்மாயக் கரையில் உள்ள ஓர் ஐயனார் கோயிலில் காண்கிறோம் என்பதே பெருமைக்குரியது தானே!

இதை முழுமையாகப் படம் பிடித்துக் காட்டிவிட முயன்றேன். ஆனால் மணிவாசகர் அதற்கு இடம் கொடுக்கவில்லை.

திருவாசகத்தின் அரிய பொருளைக் கேட்ட தில்லைவாசிகளிடம்,

''தில்லையுளார் பொருள்என்று, கைகாட்டித் தம்உருவம் காட்டா மல் மறைந்தார்...''[3] அன்றோ? அதே போன்று இந்தக் கோயிலில் படம் பிடித்த போதும், அண்ணல் ஒருவரே மெய்ப்பொருள்; நான் வெறும் மாயைதான் என்று கூறித் தம் உருவைக் காட்டாது மறைந்து கொண்டு விட்டார். ஆகையால் நீங்கள் உபதேசக் காட்சியின் ஒரு பகுதியைத்தான் படத்தில் பார்க்கிறீர்கள்! (''அடேயப்பா, எப்படிச் சமாளிக்கிறார் ஐயா, இந்த ஆசாமி!'' என்று நீங்கள் கூறுவது என் காதில் விழத்தான் செய்கிறது. நன்றி!)

* * *

சிவபெருமான் மாணிக்கவாசகருக்கு உபதேசிக்கும் சிறப்பக்காட்சியைக் கொண்ட இந்தச் சேவுகப் பெருமாள் ஐயனார் கோயிலைச், செம்பனூரிலிருந்து மதகுபட்டி செல்லும் வழியில், ஊர் எல்லையில் சிறிது தொலைவு வரை வாகனத்தில் சென்று, பின்னர் கண்



அடிகளாரை ஆட்கொண்ட அண்ணல்

மாய்க்கரை மேட்டில் சுமார் 1கி.மீ. நடந்து சென்றுதான் அடைய முடியும்.

கோயில் வளாகத்தில் நம்மை வரவேற்க வளைவு ஒன்று காத்திருக் கிறது. ஆனால் இது கோயிலின் பின்புறந்தான்.

விமானங்கள், ஒட்டுக் கூடங்கள் நிறைந்த முன்புறத்துக்குக், கோயிலை ஒட்டியே செல்கிறோம்.

நுழைவாயிலில் திருச்சுற்றுச் சுவர்மீது இரு குதிரைகள் சவாரிக்கு ஆயத்தமான நிலையில் உள்ளன. இந்த மதில் சுவர் நகரத்தார் களின் திருப்பணி.

கோயில் அமைப்பு, விமானங்கள். சிலைகள் யாவும் காண்பதற்கு அழகாகக் கல்திருப்பணியாக இருந்தாலும், (இடையிடையே மரா மத்துச் செய்யப் பெற்றாலும்) 30 ஆண்டுகள் என்பது நீண்டகால இடைவெளி இல்லையா? (இரண்டு முறை குடமுழுக்கு நிகழ்ந் திருக்கலாம் என்றும், கடைசியாக நடைபெற்றது சுமார் 30 ஆண்டு களுக்கு முன்னராய் இருக்கலாம் என்றும் தெரிகிறது.[4])

கோயிலினுள் சென்றதும், (பின்பக்கமாக வந்தோம் என்பதை மறந்து விடுங்கள்) இடப்புறம், முன்னால் ஒட்டுக் கூடத்துடன் கூடிய சந் நிதி ஒன்று காணப்பெறுகிறது. 1929ஆம் ஆண்டில் வல்லாள பட்டிச் செட்டியார்கள் செய்த கல்திருப்பணி இது. பழைமை அடைந்து விட்டாலும், அழகிய வேலைப்பாடு நிறைந்த விமானம்; துவார சக்தியரும் உள்ளனர்.

உள்ளே...... களங்கமற்ற — பால் வடியும் — எழில் கொஞ்சும் முகம்; கோலப் புன்சிரிப்பு; வாலைக்குமரி.

இடக்கையில் கோமளப் புன்னகையுடன் கூடிய குழந்தையை ஏந்தி நிற்கும் காந்தக் கண்களுக்குரிய இப்பெண் யார்? இந்த அழகுப் பதுமைக்குக் கோயில் கட்டிக் கும்பிட நேர்ந்த பின்னணி என்ன?

நகரத்தார் இருவரும், அர்ச்சகர்களான வேளார்கள் மூவரும்[5] தங் களுக்குத் தெரிந்த செவிவழிச் செய்திகளைக் கூறுகின்றனர்:

செம்பனூருக்குச் சிறிது தொலைவில் உள்ளது கல்லுப்பட்டு என் னும் கிராமம். அங்கு யாதவ சமுகத்தினர் பெருமளவில் உள்ளனர். அங்கு பிறந்தவள்தான் இந்த உத்தமி உடையம்மத்தாள்.

புளியங்குடிப்பட்டியில் திருமணமாகியது. ஓர் அழகுக் குழந்தைக் குத் தாயும் ஆனாள் அவள். வழக்கமான மாமியார் — மருமகள் — நாத்திமார் சண்டை சச்சரவு. கோபித்துக் கொண்டு தாய்வீடு செல்கிறாள். நடு வழியில் நஞ்சு தின்று உயிரை மாய்த்துக் கொள் கிறாள்.

அவள் இக்கோயிலில் அணைந்துவிட்டாள் என்று சொல்லப்பெற் றது. யாதவ சமுகத்தினர் இந்த நங்கையை 'நஞ்சு தின்னி அம்மன்' என்று அழைத்து வழிபட்டு வரலாயினர்.

வல்லாளபட்டி மக்கள் (செட்டியார்கள்) இங்குள்ள வல்லநாட்டுக் கறுப்பரைக் குலதெய்வமாக வழிபட்டு வருபவர்கள். அவர்கள்

கனவில் தோன்றித் தனக்கொரு கோயில் எடுக்குமாறு கூறினாள் உடையம்மத்தாள்.

அன்றிலிருந்து அவர்களும் இச்சந்நிதியில் அபிஷேக — ஆராதனைகள் செய்து, கோழிப்பூசை கொடுத்து வழிபாடு செய்து வருகின்றனர்.

செம்பனூர் நகரத்தார்களும் தங்கள் சமுகப் பெண்ணான தீப்பாய்ந்தாள் அம்மனுக்குப் படைக்கு முன்னர், இங்கு கிடாய் வெட்டிப் பூசை நடத்துவார்களாம். (தீப்பாய்ந்தாள் அம்மனின் ஆண் வாரிசாக உள்ளவர்கள் செவ்வாய்க்கிழமை மாமிசம் சாப்பிடுவதில்லை!)

'என்று தீரும் இந்த ஏந்திழையர் (தற்கொலைக்) கொடுமை?' என்று அங்கலாய்த்து மனம் நொந்தவண்ணம், அடுத்த சந்நிதியில் உள்ள காளி, பேச்சியம்மனையும் தரிசித்துக் கொண்டு, பிரதானக் கோயில் கட்டடத்துக்குள் செல்கிறோம்.

பெரிய ஓட்டுக்கூடம். 66ஆம் ஆண்டு அடித்த பெரும் புயலில் சேதமாகி விட்டது. செம்பனூர் நகரத்தார் குடும்பத்தினர் நன்கொடை வழங்கி இதை மீண்டும் கட்டியுள்ளனர். இடப்புறம் உள்ள சந்நிதியில் நாம் முன்பு குறிப்பிட்ட வல்லநாட்டுக் கறுப்பரும், சந்நிதியின் வெளியே சின்னக்கறுப்பர், வீரபத்திரர் ஆகியோரும் உள்ளனர். இவர்களுக்கு நேர் எதிரில் வலப்புறத்தில் சேவல்கறுப்பரும், பைரவரும் இருக்கின்றனர்.

'நான் இன்னமும் மண் சிலையாகவே இருக்கிறேனே' என்னும் தாபம் இந்த பைரவருக்கு. உடையம்மத்தாள் 70 ஆண்டுகளுக்கு முன்னர் கடைப்பிடித்த 'கனவுக் கோரிக்கை' இவரும் அறிந்தது தானே?

செம்பனூர்ச் செட்டியார் ஒருவர், ஈராண்டுகளுக்கு முன்னர் தாம் கனவில் கண்டதை நனவாக்கினார். கற்சிலையில் பைரவர் பளிச்சென்று உள்ளார்.

இவற்றைக் கடந்து மேலே சென்றால், ஐயனாரின் யானை வாகனம், பலிபீடம், சந்நிதியின் முன்னர் துவார பாலகர்கள், வழக்கம் போல் கருவறையின் முன்புறம் விநாயகர், தண்டாயுதபாணி.

இந்த இடத்தில்தான் நம் வலப்புறம் உள்ள தூணில், நாம் முதலில் வருணித்த இறைவன் மாணிக்கவாசகரை ஆட்கொண்ட சிற்பக் காட்சி இடம்பெறுகிறது.

கருவறையில் உள்ள அழகிய மூலவர், சேவுகப்பெருமாள் ஐயனார், ஓர் ஐயத்தையும் தோற்றுவிக்கிறார்.

சேவுகப் பெருமாளா, சேவகப் பெருமாளா? அதன் பொருள் என்ன?

மாணிக்கவாசகரையே சந்நிதானத்தில் சாட்சி வைத்திருக்கிறார்கள். திருவாசகத்தில் பல இடங்களில் வீரன் என்றும், சில இடங்களில் மட்டும் வேலையாள் என்றும் பொருள்படும் வகையில் 'சேவகன்' என்னும் சொல்லாட்சியை அவர் கையாண்டிருக்கிறார்.

சேவகன் என்பதற்கு ஐயன் என்றும் பொருள் சொல்லப் பெறுகிறது. ஐயன் என்றால் பெருமைக்குரியவர் என்றும், சிவனுக்கும்

திருமாலுக்கும் பிறந்த அரிகரபுத்திரனை விடச் சிறந்த பெருமைக் குரியவர் வேறு யாருமிலர் என்றும் முன்பு கண்டிருக்கிறோம்.

மேலும், சேவகனார் என்னும் சொல்லும் ஐயனாரைக் குறிக்கிறது என்பர்.

இவற்றின்வழி, சிறந்த பெருமைக்குரிய வீரனான ஐயனாரே, சேவ கனார் ஆகிறார் என்று அறிகிறோம்.

பெருமாள் என்னும் பதம், பெரும்பாலும் திருமாலைக் குறிக்கவே பயன்படுத்தப்பெறுகிறது. (அருணகிரியார் மட்டுமே கடவுள் என்று பொருள்படும் வகையில் முருகனைப் பெருமாள் என்று அழைத் திருக்கிறார்.) பெருமாள் (திருமால்) ஐயனாரின் தாயார். நம் ஐய னார், தம் தாயாரின் பெயரைத் தம் பெயருக்குப் பின்னால் இணைத் துக் கொண்டு (இப்போதுதான் மேல்நாட்டில் இந்த நாகரிகம் பரவி வருகிறது!) சேவகப் பெருமாள் ஆகிவிட்டார்!

சேவகன் என்பதைச் சில நேரங்களில், சேவுகன் என்றும் சொல் வதுண்டு. அதனால்தான் நம் குலதெய்வக் கோயில்களில், அவர் சேவுகப் பெருமாள் ஐயனாராகி விட்டார் போலும்.

ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தேவகோட்டை நகரத்தார் செய்த திருப்பணியான இந்தக் கோயில், எந்த மாற்றமும் இன்றி அப்படியே இருந்து வருகிறது. இந்த ஐயனாரைக் கல்லல் நகரத் தாரும், செம்பனூர் நேமங்கோயிலாரும் குலதெய்வமாகக் கொண் டுள்ளனர். பல ஊர்களில் உள்ள கள்ளர் சமுதாயத்துக்கும் இவர் தான் குலதெய்வம்.

* * *

மற்ற ஊர்களில் இல்லாத ஒரு சமுதாய அமைப்பு முறை இந்த ஊரில் — கோயிலில் நிலவுகிறது.

செம்பனூர், புதுக்குடி, வெங்கட்ராமபுரம் ஆகிய மூன்று கிராமங் கள் சேர்ந்த இந்த ''ஊரார்'' ஆறு கரைகளாகப் பிரிக்கப்பெற் றுள்ளனர். இவர்களில் நகரத்தார் காளசெட்டி அம்பலம் என்னும் நான்காவது கரையினர் ஆவர். ஈராண்டுகளுக்கு ஒருமுறை நடை பெறும் புரவி எடுப்பில், பிடிமண் கொடுப்பது இவர்களுக்குரிய பணி.

புரவி எடுப்புக்கு இரு மாதங்களுக்கு முன்னர் ஒரு நல்லநாள் பார்த்து, நகரத்தாரில் பெரியவரான ஒருவர், தாம்பாளத்தில் உள்ள பிடிமண்ணை வேளாரிடம் கொடுத்துக் ''குதிரை செய்யுங் கள், பிடிமண் வைத்திருக்கிறது'' என்று சொல்வார்.

எங்கும் இல்லாத புதிய முறையிலான இந்தக் கௌரவம் — பெரிய, சிறிய அம்பலங்கள், கீழக்கரை அம்பலம், காளசெட்டி அம்பலம், புதுக்குடிப் பொன்மாரி அம்பலம், நத்தமுடையார் அம்பலம் என் னும் ஆறு கரைகளாக (வரிசைமுறை சிறிது மாறுபட்டிருக்கலாம்) அனைவரும் பிரிக்கப்பெற்ற முறை, சிவகங்கை மன்னரால் ஏற் படுத்தப் பெற்றது.

இந்து அறநிலையத் துறையைச் சேர்ந்த இக்கோயிலில் மாலையில் மட்டும் ஒருகாலப் பூசை நடைபெறுகிறது. மற்ற நேரங்களில் செம்ப னூரிலிருந்து வேளாரை அழைத்துவரவேண்டும்.

செம்பனூர் நகரத்தார்கள் (70, 80 புள்ளிகள்) சிவராத்திரியன்று இங்கு வந்து 1 ரூபாய் காவடிக் காணிக்கை செலுத்துகின்றனர். அடுத்த நாள் மற்ற ஊர் நகரத்தார்கள் வந்து குழந்தைகளுக்குத் தொட்டில் கட்டுவது போன்ற நேர்த்திக் கடன்களை நிறைவேற்று கின்றனர்.

செம்பனூர் நகரத்தார், குழந்தை பிறந்ததும் ஒரு திங்கட்கிழமை யில் இங்கு வந்து வழிபாடு செய்கின்றனர். அதே போன்று திரு மணம் நடைபெற்ற ஒரு மாதத்திற்குள் வந்து சிறப்புப் பூசையாற்றி மகிழ்கின்றனர்.

சேவுகராயர் என்றும் சொல்லப்பெறும் மூலவரை வணங்கிக் கொண்டு, பழைய கோயிலானாலும், முற்றிலும் கல் திருப்பணி — மூலவர் விமானம் அமைந்துள்ள அழகு ஆகியவற்றைக் கண்டு வியந்தவண் ணம், செம்பனூரரை நோக்கிப் பாதயாத்திரை தொடங்குகிறோம்.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்.

ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானைச்,
சேயானைச், சேவகனைத், தென்னன் பெருந்துறையின்
மேயானை, வேதியனை, மாதிருக்கும் பாதியனை,
நாயான நந்தம்மை ஆட்கொண்ட நாயகனைத்,
தாயான தத்துவனைத், தானே உல(கு)ஏழும்
ஆயானை, ஆள்வானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

திருச்சிற்றம்பலம்.

— 8 ஆம் திருமுறை.

குறிப்பு விளக்கம்:

— செம்மையாகிய பெரிய கொடை வள்ளல்

1. திருவாதவூரடிகள் புராணம்: 'சிறந்த உருத்திராக்கமணியைச் செவிகளிலும், அழகிய தலையிலும், கழுத்திலும், மார்பிலும், கைகளிலும் தரித்தும், வெண்மையான திருநீற்றுத் திரிபுண்டரத்தை நெற்றியில் தரித்தும், அழகு விளங்குகின்ற வேதியராக (சிவபெருமான்).....'
2. திருவாதவூரடிகள் புராணம் — 83
3. திருவாதவூரடிகள் புராணம்: 'தில்லையில் உள்ளவராகிய சபாநாயகரே இந் நூலுக்குப் பொருள் என்று கையினால் சுட்டிக்காட்டி விட்டுத் தம் திரு மேனியைக் காட்டாது (மணிவாசகர்) மறைந்தருளினார்....
4. சா.நா. சுப்பிரமணியன் செட்டியார் (நகரச் சிவன் கோயில் நடப்புக் காரியக் காரர்) வகையறா, செம்பனூர்
5. சா.நா. முருகப்பன், முரு.கும. மாணிக்கம் செட்டியார், வெ. முத்தையா வேளார், சுப. சுப்பையா வேளார், வே. சிதம்பரவேளார், செம்பனூர்.

உ

அருந்தவர்க்கு அருளும் ஆதினமிளகி ஐயன்

(19. ஆதினமிளகி ஐயனார் திருக்கோயில், கீழக்கோட்டை)

பார்வதி — பரமேசுவரன் திருமணத்தின்போது, வடக்கே இமயத்தி லிருந்த அகத்திய முனிவரைத் தெற்கே பொதிகைக்குச் செல்லுமாறு பணித்தார் சிவபெருமான். அப்போது அகத்தியர் சிவபெருமான் திருமணத்தைத் தெற்கே கண்டு இன்புறவேண்டுமென்றும், இமயத் தின் நினைவுச் சின்னமாக ஏதாவது அருளவேண்டும் என்றும் இறை வனை வேண்டினார். இறைவன், அடுத்திருந்த சிவகிரி, சத்திகிரி என்னும் இரு குன்றுகளைக் காட்டி அவற்றை எடுத்துச் செல்லு மாறு கூறினார்.

அரக்கர் குல குருவாயிருந்த தம் மாணாக்கனாகிய இடும்பனை, அவற்றை எடுத்து வரும்படி அகத்தியர் கட்டளை இட்டார். இடும் பன் ஏழு கணுக்களைக் கொண்ட கல் மூங்கில் ஒன்றின் இரு நுனி களில் இரு குன்றுகளையும் கட்டித் தூக்கி வந்து, பழனி (திரு வாவினன்குடி)யில் இறக்கி வைத்து இளைப்பாறினான். அங்கு சிவகிரியின்மீது பாலமுருகனாம் பழனியாண்டவனின் அருட்காட்சி பெற்றுப் பேரின்ப நிலையை எய்தினான்.

தன்னைப் போலக் காவடி கட்டி, அதில் முருகன் வழிபாட்டுக்குரிய பொருட்களைச் சுமந்து செல்வோருக்கு வற்றாத வளங்களை நல்க வேண்டுமென்று இடும்பன் வேண்ட, அவ்வண்ணமே அருள்புரிவ தாக ஐயன் கூறினான். அன்று தொட்டு முருகன் அடியார் காவடி எடுக்கும் வழக்கம் ஏற்பட்டது.[1]

இதுதான் ஆதியில் காவடி அமைந்த கதை — இடும்பன் கதை.


நகரத்தார்கள் தங்களின் அந்நாளையச் செல்வச் செழிப்புக்கு ஏற்பப் பொன்னும் மணியும் இழைத்த காவடிகள் சுமந்து, கீழக்கோட்டை ஆதினமிளகி ஐயனாரை வழிபட்ட முறையைக் கவிஞர் வருணிப் பதை இப்போது காண்போம்.

''பொற்பலகை தன்னைத் துளைத்துச், சட்டம்
பூட்டியே காவடியை நீட்டியே இழைத்து,

நற்பவளத் தால்வளையும் நாட்டிப், பச்சை
நயமான நீலக்கல் ஊடுவளை பூட்டி,
முத்தினால் பன்னாங்கு விரித்தே, அதனில்
முழுவயிரத் தொங்கல்களு முன்பின் தரித்தே,
கரிமுகன், வேலன்உருச் செய்து, தோகை
கட்டியே, காவடியைச் சுற்றிமலர் பெய்து......''2

நகரத்தார்கள் ஆதினமிளகி ஐயனுக்குக் காவடி செலுத்தி மகிழ்ந் திருக்கின்றனர்.

இருப்பினும், ஆதியில் இடும்பன் எடுத்த காவடியைத்தான் சிற்பி ஒருவரால் கல்லிலே வடித்துக் காட்ட முடிந்திருக்கிறது.



இடும்பன் காவடி

செம்பனூர் சேவுகப் பெருமாள் ஐயனார் கோயிலில் அரியதொரு சிற்பத்தைக் கண்டது போன்று, கீழக்கோட்டை ஆதினமிளகி ஐய னார் கோயிலிலும், மற்ற இடங்களில் காணக் கிடைக்காத இடும் பன் சிற்பம் இருக்கிறது என்பதைக் குறிப்பிடவே இடும்பன் கதை யைக் கூறினேன். எவ்வளவு எளிதாக இடும்பன் அந்த இரு மலை களையும் தூக்கிச் செல்கிறார் பாருங்களேன்!

மூலவர் கருவறையின் இடப்புறம் உள்ள வள்ளி — தெய்வயானை யுடனான சுப்பிரமணியர் சந்நிதியில் இச்சிற்பம் உள்ளது. வழக்க மாக இடும்பனைக் குறிக்க வேல் ஒன்றினையே முருகன் சந்நிதிக்கு முன்புறம் வைத்திருப்பர். இங்கு இடும்பனையே அழைத்து வந்து விட்டார்கள்!

* * *

மகா சிவராத்திரியின்போது காவடி எடுக்கும் வழக்கம் முன்பு இருந்து வந்தது. இப்போது, பால்குடம் எடுக்கும் பழக்கம் சில தக ராறுகளால் நிறுத்தப்பெற்றுவிட்டது போன்று, காவடி எடுப்பதும் நிறுத்தப்பெற்றுவிட்டது எனக் கோயில் அர்ச்சகர்கள் கூறுகின்றனர்.

இருப்பினும், கடந்த சில ஆண்டுகளாகப் பங்குனி உத்திரத்தன்று நடைபெற்றுவரும் விழாவில், பாற்குடம் எடுத்து, அபிஷேக — ஆராதனைகள் செய்யப்பெற்று வருவதாகக் கூறப்பெறுகிறது.[3]

இக்கோயிலுக்குக் காவடி எடுக்கிறார்களோ இல்லையோ, கடந்த 25 ஆண்டுக்காலமாக மிதிலைப்பட்டியிலிருந்து 40 கி.மீ. தொலைவு பாதயாத்திரை வருகிறார்கள். மகாசிவராத்திரியை ஒட்டி இந்தப் பாதயாத்திரை மேற்கொள்ளப் பெறுகிறது.

வாருங்கள், நாமும் அவர்களுடன் சேர்ந்து பாதயாத்திரை செய்து, கீழக்கோட்டை ஆதினமிளகி ஐயனார் கோயில் சென்று வருவோம்!

(குறிப்பு: நடந்துவர இயலாதவர்கள், கல்லல் — மதகுபட்டிச் சாலை யில் சொக்கநாதபுரம் செல்லும் வழியில் (கல்லலிலிருந்து 6 கி.மீ) கீழக்கோட்டை ஆலமரபஸ் ஸ்டாப் அருகில் திரும்பி 1 கி.மீ. உள்ளே சென்று கோயிலை அடையலாம். திருப்புத்தூரிலிருந்து காலையிலும், மாலையிலும் மட்டும் பஸ்வசதி உள்ளது. கோயில் அருகிலேயே இறங்கிக் கொள்ளலாம்.)

* * *

நம்முடன் நடந்துவரவிருக்கும் பழ. தியாகராஜன் செட்டியார், சிவ. வள்ளியப்ப செட்டியார் ஆகியோர், இந்தப் பாதயாத்திரை பற்றிய சில சுவையான தகவல்களைக் கூறுகிறார்கள். யாத்திரை தொடங்குமுன்னர் அவற்றைத் தெரிந்து கொண்டு விடுவோம். ஏனெனில் பாதயாத்திரை தொடங்கிவிட்டால் இறைவன் நாமா வளியும், பக்திப் பாடல்களும்தாம் எல்லோருடைய நாவிலும் ஒலிக்க வேண்டுமே தவிர, வேறு பேச்சுக்கு இடமிருக்கக்கூடாது!

மிதிலைப்பட்டியில் இக்கோயிலுக்கு அடிமைப்பட்டவர்கள் சுமார் 90 புள்ளிகள் உள்ளனர். வீட்டுக்கு ஒருவராவது இந்தப் பாதயாத் திரையில் நிச்சயம் கலந்து கொள்கின்றனர்.

''எண்ணிப்பார்த்தால் 250 பேருக்குக் குறையாது போலிருக்கிறதே!''
— நமது வியப்பு.

கடந்த சில ஆண்டுகளாக ஆண்டுதோறும் இது அதிகரித்து வருகிறது. இதில் ஒரு சிறப்பு, மணமாகாத இளம் பெண்கள் பாதயாத்திரை மேற்கொண்டால், அடுத்த ஆண்டு அவர்களுக்கு நிச்சயம் திருமணம் உறுதியாகிவிடுகிறது.!

''கன்னிப் பெண்கள் கவனிக்க!''

கீழக்கோட்டை போய்ச் சேரும் வரையில், ஒவ்வோர் ஊரிலும் போட்டிபோட்டுக்கொண்டு உணவுப் பொருள்களை வழங்குகின்றனர்.

''அடியார்க்கு அடியேன் ஆவேனே!'' என்னும் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வாக்கை மெய்ப்பிக்கிறார்கள் போலிருக்கிறது!''

* * *

இறை எண்ணத்திலேயே மூழ்கியிருந்து, எளிதாகக் கீழக்கோட்டைக்கு வந்துவிட்டோம்.

கோயிலின் பின்புறம் உள்ள குளத்தில் கை, கால்களைத் தூய்மையாக்கிக் கொண்டு (இந்தக் குளத்தில் யாரும் மீன்பிடிப்பதில்லை; பிடித்தால் அவர்கள் சோதனைக்கு உள்ளாவார்கள்[4]), அருகில் இருக்கும் விநாயகரை வணங்கி விட்டுக், கோயிலின் இடப்புறம் உள்ள நகரவிடுதியில் நமக்கும் இடம் தந்திருக்கிறார்கள்; அங்கு போய் நீராடிப் பூசைகளை முடித்துக் கொண்டு கோயிலுக்குச் செல்வோம்.

இந்த விடுதி 1925 ஆம் ஆண்டிலேயே இருந்திருக்கும் போலிருக்கிறது.[5] இந்தக் கோயில்காரர்கள் நகரவிடுதிக்கு மட்டும் மகமை எழுதுகிறார்கள்.[6] 05.07.1992ல் கோயில் குடமுழுக்கு விழா நடைபெற்ற போது, (இது இரண்டாவது கும்பாபிஷேகம் என்றும், 1925ல் முதல் குடமுழுக்கு நடைபெற்றிருக்கிறது என்றும் கூறுகின்றனர்.[7]) இந்த விடுதியும் பெரும் பொருட்செலவில் புதுப்பிக்கப்பெற்றிருக்கிறது.

இந்தக் கோயில்காரர்களுக்கு ஒரு பெருமிதம், இங்கு போன்று வேறு எந்த ஐயனார் கோயிலிலும் 5 நிலை இராஜகோபுரம் இல்லையென்று.[8] இது உண்மையாகவும் இருக்கலாம்.

மேலும், 25 ஊர்களில் உள்ள ஏறத்தாழ 2000 புள்ளிகள் இக்கோயிலைக் குலதெய்வக் கோயிலாகக் கொண்டு வழிபடுகின்றனர்[9] என்பதும், 9 நகரக் கோயில்களில் நேமம், இரணியூர் தவிர்த்த மற்ற எல்லாக் கோயிலாரும் இக்கோயிலுக்கு அடிமைப்பட்டிருக்கின்றனர்[10] என்பதும் பெருமைப்படத்தக்க விஷயங்கள்தாமே!

இக்கோயிலுக்கு அடிமைப்பட்டிருப்போர்: அமராவதிபுதூர் பிள்ளையார்பட்டியார்; ஒக்கூர் இலுப்பைக்குடியார்; கண்டரமாணிக்கம் நகரத்தார்; கண்டவராயன்பட்டி மாத்தூர் மணலூர் பிரிவினர் (83 புள்ளிகள் இருக்கின்றனர்[11]), மற்றும் அரும்பாக்கூர்ப்பிரிவினர்; கல்லல், கீழச்சிவற்பட்டி, கீழப்பூங்குடி நகரத்தார்; சிறுகூடல்பட்டி மாத்தூர் அரும்பாக்கூர்ப் பிரிவினர்; சொக்கநாதபுரம்,

தெக்கூர், தேவகோட்டை நகரத்தார்; பட்டமங்கலம் மாத்தூர் மண லூரார்; புதுவயல் வைரவன் கோயில் பெரிய வகுப்பினர்; மிதி லைப்பட்டி இளையாற்றங்குடி கழனிவாசல் பிரிவினர்; விராமதி நகரத்தார், மற்றும் சில ஊர்களைச் சேர்ந்தோர். (தகவல் கிடைத்த ஊர்களும், கோயில் பிரிவுகளும் மட்டுமே இங்கு குறிப்பிடப்பெற் றுள்ளன.)

சைவர்களுக்குச் சிவன்ராத்திரியைவிடச் சிறந்த விரதநாள் வேறில்லை. 'சித்திக்கு (சிவஞான சித்தியார்) மேல் சிறந்த நூலும் இல்லை, சிவராத்திரி விரதத்தில் சிறந்த விரதமும் இல்லை' என்பது ஆன் றோர் வாக்கு. அதற்கேற்பச் சிவராத்திரியன்று இங்கு முறைப்படி நிகழும் 4 கால பூசைகளிலும் கலந்து கொள்கிறோம். மறுநாள் களரி என்கின்றனர்.

முதல் நாளைவிட இரண்டாம் நாளில்தான் நகரத்தார் இங்கு அதிக மாய் வந்திருப்பதாகத் தெரிகிறது.

ஒரு பக்கம் பொங்கல் இடுகின்றனர்; ஒரு பக்கம் சந்நிதியில் மா விளக்கு வைக்கின்றனர்; பால்குடம் எடுத்து வருகின்றனர்; குழந் தைகளுக்குத் தொட்டில் கட்டுகின்றனர்; தலைப்பிள்ளைக்கு, முன் னரே பெயர் கூப்பிட்டவர்கள் கூடக் குழந்தைகளைக் கொண்டு வந்து, பெயர் கூப்பிடும் காணிக்கை என்று ஐந்து ரூபாய் செலுத்து கின்றனர்; நேர்த்திக் கடனாக அரிவாள்கள் செய்து கொண்டுவந்து காணிக்கை செலுத்துகின்றனர்; வீடுகளில் 15 காசு முதல் ரூ6.25 வரை முடிந்து வைத்த பணத்தைக் கொண்டு வந்து செலுத்துகின் றனர்.

இரவு சப்பரத்தில் விநாயகர், ஐயனார், சுப்பிரமணியர் ஆகிய மூர்த்தங்களின் சுவாமி புறப்பாடு நடைபெறுகிறது. குளத்தைச் சுற்றி வந்து சுவாமிகள் இருக்கை சேருகின்றனர். (முன்பு சாமி யாட்டம் நடந்தது உண்டு. இப்போது சுவாமிகளுக்கு யார்மீதும் நம்பிக்கை இல்லை போலும்; அதனால் யார் மீதும் சுவாமி ஆவே சிப்பதில்லை.)

பின்னர் நாடகம், வாண வேடிக்கை.... ஒரே அமர்க்களம்தான்! (அதனால்தான் களரி என்கிறார்களோ? களரி என்றால் அரங்கம், கூத்துப் பயிலிடம், கூட்டம், போர்க்களம் என்றெல்லாம் பொருள் உண்டு.) மூன்று நாட்கள் நகர விடுதியில் தங்கியிருந்து இந்த விழாக் கோலத்தைக் கண்டு களிக்கிறோம்.

* * *

ஒருவழியாகத் திருவிழா முடிவடைகிறது. அமைதியாகக் கோயி லைச் சுற்றிப் பார்க்கிறோம். அர்ச்சகர்களிடம் பல தகவல்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவும் முடிகிறது.

மூலவர் ஆதினமிளகி ஐயனார்தான். (ஆனால் 1925ஆம் ஆண்டு வெளியிடப் பெற்ற ஆனந்தக்களிப்பு நாமாவளிப் புத்தகத்தில் ஆதினமழகி ஐயனார் என்றே குறிப்பிடப்பெற்றுள்ளது.) இருப் பினும் கருவறையின் முன் உள்ள கண்ணாங்குடியானுக்குத் தான்[12] முதல்பூசை நடைபெறுகிறது.

''கன்னிக்கி ழங்குளடுக்கும் காலம் முன்ப
கண்டனர் முளைத்ததெய் வத்தினது கோலம்
ஆனகண் ணாங்குடியா னாமம் பெற்ற
ஐயனைக் கண்டது முதற்கொண்டு க்ஷேமம்''[13]

ஆண்டுதோறும் குடமுழுக்கு விழா நடைபெற்ற நாளை வருஷாபிஷேகமாகக் கொண்டாடுகின்றனர். இங்குள்ள கொடி மரம் 1982ல் அமைக்கப் பெற்றிருக்கிறது.

* * *

இப்போது இந்து அறநிலையத் துறையின் பார்வையில் உள்ள இக்கோயில், முன்னர் அரசர்களின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. வேளார்கள் அறங்காவலர்களாக இருந்து வருகின்றனர்.

நகரத்தார் ஒருவரையும், நாட்டார் ஒருவரையும் அறங்காவலர்கள் ஆக்குவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பெற்று வருவதாக அர்ச்சகர் கூறுகிறார். காலை மணி 9 முதல் 12 வரையும், மாலை மணி 4 முதல் 7 வரையும் கோயில் திறந்திருக்கும்.

எல்லாவகையாலும் இக்கோயில் சிறப்பாக இருப்பதைப் போன்று, இறந்துபட்டவர்களைத் தெய்வமாக்கிச் சிலைகள் வைத்து வழிபடுவதிலும் இது முன்னணியில் இருக்கிறது.

கோயிலின் முன்புறம் இடப்புறம் உள்ள சேமங்குதிரையை ஒட்டித் திருச்சுற்றுச் சுவருடனான ஒரு சந்நிதி உள்ளது. அதில் நடுநாயகமாக இருப்பவர் பெரியாள் ஆச்சி அம்மன். இவருக்குச் சிம்ம வாகனம், பலிபீடம் கூட உள்ளன. அருகில் விநாயகர், முருகன் சிலைகளும் இடம் பெற்றுள்ளன.

இது, தேவகோட்டைப் பங்காளிகளின் தனிச் சந்நிதி. அவர்கள் வரும்போது இந்த அம்மனைச் சிறப்பாக வழிபடுகின்றனர் என்பதோடு, அன்றாடப் பூசையும் இதற்கு நடைபெறுகிறது. (இதற்காக அந்தப் பங்காளிகள் தனிப்பட்ட முறையில் அர்ச்சகர்களுக்குச் சம்பளம் கொடுக்கின்றனர்.)

தென் பிராகாரத்தில் உள்ள பல சந்நிதிகளில் நைனப்பையா, அழகம்மை ஆயாள், கைக்குழந்தைகளுடன் 3 இளம்பெண்கள்..... பட்டியல் நீண்டு கொண்டே போகிறது!

இவற்றில் நைனப்பையாவைத் தேவகோட்டை, சிறுகூடல்பட்டி நகரத்தார்கள் வழிபடுகின்றனர். மாத்தூரில் அரும்பாக்கூர் பிரிவைச் சேர்ந்த இவர்தாம், பழனிக்குக் கொண்டு செல்லும் இரத்தின வேலை முதலில் வழிபட்டதாகச் சொல்கின்றனர்.[14]

கைக்குழந்தைகளுடன் உள்ள மூன்று பெண்களைத் தெக்கூர் நகரத்தார் வழிபடுகின்றனர்.

இந்த இரண்டு சந்நிதிகளிலும் அவ்வவற்றிற்குரிய பங்காளிகள் வரும்போது மட்டுமே வழிபாடு நடைபெறுகிறது. அவரவரும் அபிஷேகங்கள் செய்து பட்டுச் சாத்தி ஆராதிக்கின்றனர்.

சங்காபிஷேகம்கூட முன்னர் ஒருமுறை நடைபெற்றிருக்கும் இக்கோயிலில், சுமார் 40 ஆண்டுகளாக உயிர்ப்பலி கொடுப்பது

நிறுத்தப்பெற்று விட்டது. முன்னோடிக்குச் சாராயமும் படைக்கப் பெறுவதில்லை.

விபூதி மரியாதை பெறுவதில் சில நேரங்களில் பிரச்னைகள் ஏற்படுவது உண்டு என்று அர்ச்சகர்கள் கூறுகின்றனர். ஆனால், நகரத்தார் இதில் சம்பந்தப்படுவதில்லை என்பதோடு, பிரச்னைக்குக் காரணமாகவும் அவர்கள் அமைந்ததில்லையாம்.[15]

பெரிய கறுப்பர் சந்நிதிக்கு எதிரே வடக்குத் திருச்சுற்றுச் சுவரில் நுழைவாயில் ஒன்று உள்ளது. அதன் அருகில்தான் நகரவிடுதி இருக்கிறது.

மற்றும், 1992ல் கட்டப்பெற்ற புதிய சந்நிதியில் முன்னோடி, தனிச் சந்நிதி ஒன்றில் சின்னக் கறுப்பர், மற்றும் பொக்கிஷக் கோட்டைக் காளி, அகோர வீரபத்திரர், சப்த கன்னிகையர், பழைய அம்பாள் சிலை, கறுப்பாயி, முத்துக்கறுப்பர், சந்நியாசி, பழைய கறுப்பர், காளி, மதுரைவீரன், நீலிஅம்மன், நொண்டிக் கறுப்பர், வைரவர், ஆஞ்சநேயர் என, ஏராளமான பரிவார தேவதைகள் கோயில் பிராகாரங்களில் இடம் பெற்றுள்ளனர்.

சிறியதொரு சிவாலயம் போன்று அமைந்துள்ள இக்கோயில், முதலில் கூரைக் கட்டடத்தில் மண் சிலைகளாக இருந்து, பின்னர் நகரத்தார்களின் கைங்கரியத்தால், கல் திருப்பணி, கற்படிமங்கள் என்று மாறியுள்ளதாம்.[16]

இந்தக் கோயிலுக்கு அடிமைப்பட்டவர்களின் குடும்பங்களில் ஆதினமிளகி, ஆதப்பன், கறுப்பன் செட்டி, கண்ணப்பன் (கண்ணாங்குடியான் சாயலில்), ஆதம்மை, கண்ணம்மை என்னும் பெயர்களை நிறையக் கேட்க வாய்ப்புண்டு.

எல்லாத் தகவல்களையும் தெரிந்துகொண்டு, ஆதினமிளகி ஐயனாரிடம் விடைபெற்று வெளியே வரும்போது, அழகிய நந்தவனம் ஒன்று தென்படுகிறது.

பனங்குடிக் குடும்பத்தார் ஏற்படுத்திய இந்த நந்தவனம்,[17] இடையில் தேடுவாரற்றுப் புதர் மண்டிப் போனதைக் குடமுழுக்கு, அண்மையில் நடைபெற்ற நேரத்தில், அதே குடும்பத்தார் சீர்திருத்தி, இப்போது நாள்தோறும் மலர்த்தொண்டு செய்து வருகின்றனர்.[18]

> ''புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
> அண்ணல் அதுகண்(டு) அருள்புரி யாநிற்கும்''[19]

கீழக்கோட்டை கும்பாபிஷேகமும், ஸ்பெஷல் மோட்டாரும்.

5 செட்-

டியார் செய்த காலத்தில் செய்திருந்தால் ஒரு வருடம் முன்னே

தாகவே கும்பாபிஷேகம் நடந்திருக்கும். கிம்க, மேலே

சொல்லியுள்ள விடுதி மீண்டபோவாசக் கைமரங்கள் பட்டியல்கள் விழுகக்கூடிய நிலைமையில் பழுதாகியிருப்பது தெரிந்திருந்தும்[ ] செலவுனித்துப் பழுதுபார்க்காமல் மகமைப் பணம் காணிக்கைப்பணங்களை வாங்கிவந்து வைத்துக்கொண்டிருக்கிற பணத்தையும் குடுக்காமல் கும்பாபிஷேகத்திற்கென்று சொல்லி பொருள் அதிகமாகச் சேகரித்து வைத்துக்கொள்ளவேணுமென்றெண்ணங்கொண்டு;

ஒரு புத்தகத்தில்

வகையார் வரவு ரூபாய் இனாக என்று அவர்களாக எழுதிக்கொண்டு தேவகோட்டையில் இவர்கள் சொல்லிற்கிணங்கிய இரண்டொரு செட்டியார்களையும் கூட்டிக்கொண்டு ஸ்பெஷல் கார் ஒன்று நாள் ஒன்றுக்கு வாடகையாகவும் பெட்ரோலும் டிரைவர் படிச் செலவும் கொடுக்கிறதென்று மொத்தமாகப் பேசிக்கொண்டு சுமார் ஒன்றரை மாதமாக மோட்டாருக்கும் வாடகை கொடுத்துத் தேவகோட்டையிலும் இன்னும் பல வூர்களிலும் பணம் சேகரித்து வருகிறார்கள்.

6. இக்கும்பாபிஷேகத்திற்கு இவ்விதமாக அதிகப்பொருள் சம்பாதிக்கத் தேவையில்லை. அப்படியிருக்க இவர்கள் பொருள் அதிகமாகச் சேகரிக்கச் சிரத்தையெடுத்துவருவதையும் ஐயனார் கோயில் வேலைகளை மெதுவாக நடத்திவருவதையும் உத்தேசிக்கையில் ஐயனார் கோவில் ரிப்பேருக்கும் கும்பாபிஷேகத்திற்கும் இவர்கள் கையிலிருந்து பணம் செலவழிக்காமல் நன்கொடையாக வசூல் செய்கிற பணத்தைக்கொண்டே கும்பாபிஷேகமும் மற்ற வேலைகளையும் முடித்துவிடலாமென்று நினைத்திருக்கிறார்களென்று பலர் கருதுகிறார்கள். இவ்விதம் இவர்கள் சேகரித்துவரும் பணங்கள் இவர்களின் ஆர்ப்பாட்டச் செலவிலும் ஸ்பெஷல் மோட்டார் வாடகையிலும் போய்விட்டால் இப்பக் கும்பாபிஷேகமும் இனி வருடாவருடம் உற்சவமும் எவ்விதம் முறையாக நடத்திவரமுடியும்.


தேவகோட்டை நாட்டார்கள் மேற்படி கோயிலை வணங்கி வருகின்ற எல்லோரையும் ஒன்று சேர்த்து ஒரு நல்ல தினத்தில் கும்பாபிஷேகத்தைச் சிறப்பாக நடத்திவைத்தால் எப்பொழுதும் உற்சவம் முதலியவைகள் நன்றாக நடந்துவரும் மேற்படியூர் நாட்டார்களுக்கும் கௌரவமாக இருக்கும் இதை மேற்படி நாட்டார்களும் மேற்படி கோயிலைவணங்குகிற நகரத்தார்களும் கவனித்து மேலே சொல்லியபடி கும்பாபிஷேகத்தை வியவகாரமின்றி நடத்த ஏற்பாடு செய்வார்களென்று நம்புகிறேன்.

உண்மையுள்ளப்போல்,

[illegible]

1925ஆம் ஆண்டு நடைபெற்றதாகக் கருதப்பெறும் குடமுழுக்கு விழாவுக்கு முன்னர், நிதிவசூல் பற்றிக் குறைகூறி, ஓர் அன்பர் அச்சிட்டு வெளியிட்ட துண்டுப் பிரசுரம் ஒன்றின் ஒரு பகுதி. நெறிமுறைக் கோட்பாட்டை ஒட்டி, இதில் குறிப்பிடப் பெற்றிருந்த குடும்பப் பெயர்கள் அகற்றுப்பெற்றுவிட்டன.

(நன்றி: கே.ஆர். ஆதப்பன், ஒக்கூர்)



வடக்கு நுழைவாயில்

பரவும் சொல்மாலை

ஆதினமிளகி ஐயனார்:

1. எங்கள்குல தெய்வமென இன்னாட்டில் வந்துதித்த
தங்குபுகழ் நன்னீதா! சாயுச்ய மாமணியே!
மங்களமாய்க் கீழநகர் வந்தமர்ந்த மெய்ப்பொருளே!
பங்கயஞ்சீர்க் கண்ணுடைய பண்பான வரதையனே!

கீழக்கோட்டைக் கறுப்பணசுவாமி மீது போற்றிப் பதிகம்:

2. இங்கிதகு ணாளனே! எங்கும்நிறை ஏகனே!
எந்தையே மேக வண்ணா!

ஏழைகளை ஆதரித்(து) அன்புடன் காக்கவே
இப்புவியில் வந்த இறைவா!
சங்கீத மத்தளம் கைத்தாளம் வீணையும்
தவில்நாக சின்ன முடனே
சத்தமிகு பேரிடங் காமுரசு பம்பையும்
தாரைசே கண்டி பூரி
சங்கமொடு கொம்புவாங் காஒலிகி ளம்பவே
தாவுபரி மீதி ருந்து
தக்கபல விருதுகள்இ லங்கமுன் வந்துதுதி
தாசரைக் காக்கு முதல்வா!
திங்கள்மும் மாரிபொழி செந்நெல்விளை வயல்வளம்
சேர்ந்தகீழ்க் கோட்டை நகர்வாழ்
செகமதித்(து) எண்ணுமணி மகிமையைக் கொள்ளுமணி
திகழ்கறுப் பண்ண மணியே!.

— கவிஞர் சி.கறு. சோமசுந்தரம் செட்டியார், 1925

குறிப்பு விளக்கம்:

— அருந்தவர் — செயற்கரிய பெருந்தவம் செய்தவர்
1. ஆலயங்களின் உட்பொருள் விளக்கம் — இலஞ்சி ஆ.சொக்கலிங்கம்
2. கீழக்கோட்டை ஆதினமழகி ஐயனார் ஆனந்தக்களிப்பு — இயற்றியவர்: சி.கறு. சோமசுந்தரம் செடடியார், 1925
3. சோம. சுப்பிரமணியன், மிதிலைப்பட்டி
4. பழ. தியாகராஜன் செட்டியார், மிதிலைப்பட்டி
5. 'நகரத்தார் விடுதிமலை போலும் அன்பர் நலமுடன் கட்டினார் வாழ்க எக்காலும்....' — கீழக்கோட்டை ஆதினமழகி ஐயனார் ஆனந்தக்களிப்பு
6. சோம. சுப்பிரமணியன்
7. எஸ்.டி. அண்ணாமலை, ஒக்கூர்
8. பழ. தியாகராஜன் செட்டியார்
9. சோம. சுப்பிரமணியன்
10. பழ. தியாகராஜன் செட்டியார்
11. அ. வல்லநாட்டான் (தகவல் தொகுப்பு)
12. கண்ணாங்குடியானின் இரு சிலைகள் இங்கு உள்ளன. வள்ளிக்கிழங்கு தோண்டும்போது கிடைத்த முதற்சிலை, ஐயனாருக்கு முந்தியது; அதனால்தான் அதற்கு முதல் மரியாதை! அந்தச் சிலை சேதமுற்றுவிட்டதால் அண்மையில் நடந்த குடமுழுக்கின்போது புதிய சிலை வைக்கப்பெற்றுள்ளது. கண்ணாங்குடியாரைப் பாலசாஸ்தா என்றும் குறிப்பிடுகின்றனர்.
13. ஆதினமழகி..... களிப்பு
14. லெ. கறுப்பன் செட்டி, தேவகோட்டை
15. சோம. சுப்பிரமணியன்
16. சோம. சுப்பிரமணியன்
17. 'நந்தன வனத்தின்சிங் காரம் இந்த நாடெங்கும் புகலுவார் அதிகவிஸ் தாரம்....' — ஆதினமழகி.... களிப்பு
18. சோம. சுப்பிரமணியன்
19. திருமந்திரம்: மெய்யன்பினர்க்குப் பூவும் புனலும் முட்டின்றிக் கிட்டும். அண்ணலாகிய சிவபெருமான் அவ்விரண்டினாலும் செய்யும் வழிபாட்டினைக் கண்டு செவ்விய அருள் புரிவான்.

உ

பொருந்து நோய்பிணி தீர்ப்பாள் பொக்கிஷக் கோட்டைக் காளி

(20. பொக்கிஷக்கோட்டைக் காளி திருக்கோயில், கீழக்கோட்டை)

தாய்க்கும், தனயனுக்கும் சண்டை..... பேரப்பிள்ளையை யார் ஓர் இரவு பார்த்துக் கொள்வது என்பதில்.

விளைவு.....?

பேரப்பிள்ளை அங்கம் அங்கமாகப் பிய்த்து எறியப்பெற்றது. அன்னை அங்கிருந்து வெளியேறவேண்டி நேர்ந்தது.

இதுதான் பொக்கிஷக்கோட்டைக் காளி, கீழக்கோட்டைக்கு வந்த கதை.

* * *

ஆதியில் பொக்கிஷக்கோட்டை நகரைக் காத்து வந்தவள் இந்த அன்னை.[1]

பின்னர் வெள்ளாளர்கள் இவளை வழிபட்டு வந்தனர்.

அந்தப் பூசாரிக்கு ஒரே மகன்; கண்ணை இமை காப்பது போல் மகனை அவர் வளர்த்து வந்தார். ஒருநாள் பூசை முடிந்து திரும்பிய போது, வீட்டில் மனைவியிடம் விட்டுச் சென்ற மகனைக் காண வில்லை. அவர் கூடவே அவனும் கோயிலுக்குச் சென்றதாக மனைவி கூறினார்.

கோயிலுக்கு ஓடினார் பூசாரி.

உள்ளே சிரிப்பொலி. தாயும் (பேரப்)பிள்ளையும் விளையாடி மகிழ்கின்றனரோ? தன் மகன்தான் உள்ளே விளையாடி மகிழ் கின்றான் என்பது அவருக்கு உறுதியாகிவிட்டது.

காளி கெட்டிக்காரி; கதவு உள்ளே தாளிடப் பெற்றிருக்கிறது.

'என் மகனை அனுப்பிவிடு!' — பூசாரி

'இரவு என்னிடம் இருக்கட்டும்; விளையாடிவிட்டுக் காலையில் அனுப்பி விடுகிறேன்!' — அன்னை

'முடியாது. அவன் சிறுபிள்ளை.... இருளில் பயந்துவிடுவான். என்னிடம் ஒப்படைத்துவிடு'

'முடியாது. அவன் கோயிலிலேயே இருக்கட்டும்'. — சிவனுட னேயே போட்டியிட்டவளாயிற்றே, எளிதில் இணங்கி விடுவாளா அன்னை?

'அவனை உன்னிடம் விட்டுச்செல்ல முடியாது... முடியாது.... முடியாது!' — பூசாரி

அன்னைக்குக் கோபம் வராதா? சீற்றம் கரை புரண்டது; சிறுகுழந் தையின் அங்கங்கள் சிதைந்தன; அனைத்தும் வெளியே பறந்தன.

பிள்ளையின் கோர நிலையைப் பார்த்தார் பூசாரி. அவருக்கும் ஆத்திரம் அளவு கடந்தது.

'இனி உன்னை இங்கு வைத்துப் பூசிக்கமாட்டேன். எங்காவது தொலைந்து போ! யாராவது ஈனக் குலத்தவரிடம் சென்று இருந்து கொள்!' என்று வெறி பிடித்ததுபோல் கத்திவிட்டு, அவளை ஒரு பெட்டியில் வைத்து ஆற்றில் வீசிவிட்டார்.

மேலக்கோயில் என்னுமிடத்தில் கள்ளர் ஒருவரும், ஹரிஜன் ஒருவ ரும் வயலுக்குச் சென்று கொண்டிருந்தனர். பெட்டி ஒன்று ஆற்றில் மிதந்து வருவதைக் கண்டு, அதைக் கரைக்கு இழுக்க முயன்றனர். கள்ளரால் முடியவில்லை; ஹரிஜன்தான் அதில் வெற்றி கண் டார்.



பொக்கிஷக்கோட்டைக் காளி சந்நிதி

பெட்டியைத் திறக்கமுடியாது போகவே, அங்கேயே வைத்து விட்டுச் சென்றனர்.

அன்று இரவு. அரிஜன பக்தரின் கனவில் அன்னை காட்சி தந்தாள். தன்னைப் பெட்டி இருக்கும் இடத்திலேயே வைத்து வழி பட்டு வருமாறு பணித்தாள்.

அன்னையின் ஆலயம் அங்கு உருவாகியது; அவளும் அனைவருக்கும் இன்னருள் புரிந்தாள். இருந்தாலும் காளி, காளி தானே! கோபம் எளிதில் வந்து விடுமே!

உலக்கைச் சத்தம் கேட்டால் உடனே தண்டனை கிடைத்துவிடும்; கர்ப்பிணிப்பெண் அவ்வழியே சென்றால் கருக்கலைந்து விடும்.

அங்கிருந்து அவளை அகற்றிவிட முயன்றனர் கிராமத்தார்.

மீண்டும் பூசாரியின் கனவில் அம்பாள் வந்தாள். இப்போது கோயில் உள்ள இடத்தில் (இதைக் கீழைக்கோயில் என்கின்றனர்) தன்னை வைத்து வழிபட்டு வருமாறும், அதற்காக அந்த இடத்தில் உள்ள மக்களைத் தான் அகற்றித் தருவதாகவும் கூறினாள்.

அடுத்த நாளே சொன்னதைச் செய்தாள். இப்போதும் அந்தப் பகுதியில் சிதைந்த ஓடுகளும் கற்களும் காணப்பெறுகின்றனவாம்.

தொடர்ந்து, இங்கு கொம்படி ஆலயம் அமைந்தது; பொக்கிஷக் கோட்டைக் காளி இங்கு கோயில் கொண்டாள்.

* * *

கீழக்கோட்டை ஐயனார் கோயிலிலிருந்து வடக்கே கண்மாய் ஓரமாகச் சென்று, ஊரின் எல்லையில் உள்ள குடிசைகளைக் கடந்து வலப்புறம் திரும்பிச் சென்றால், அடர்ந்த காட்டுப் பகுதியின் நடுவே உள்ள இக்கொம்படி ஆலயத்தை அடையலாம். ஐயனார் கோயிலிலிருந்து சுமார் 2கி.மீ. தொலைவில் இக்கோயில் அமைந்துள்ளது.

செவ்வாய் — வெள்ளிக்கிழமைகளில் மட்டுமே இங்கு பூசை நடைபெறுகிறது. மற்ற நாட்களில், ஐயனார் கோயிலில் கேட்டால் பூசாரியை அழைத்துச் செல்ல அவர்கள் உதவி செய்வார்கள்.

கண்டரமாணிக்கம், சிறுகூடல்பட்டி, தேவகோட்டை, மிதிலைப்பட்டி நகரத்தார், பொக்கிஷக்கோட்டைக் காளியைக் குலதெய்வமாகக் கொண்டாடுகின்றனர். யாதவர், வெள்ளாளர், மற்றும் பல சமூகத்தவரும் இவளைக் குலதெய்வமாகக் கொண்டுள்ளனர்.

நேர்த்திக்கடன்களை முன்னிட்டுச் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் இங்கு நகரத்தார் வந்தாலும், சிவராத்திரியின்போதுதான் அதிகமானோர் இங்கு வருகின்றனர். சிவராத்திரியன்று இந்தப் பகுதி ஜே ஜே என்று இருக்குமாம். (நாம்தான் சிவராத்திரியை ஐயனார் கோயிலிலேயே கழித்துவிட்டோமே!) குறிப்பாகச் சிவராத்திரியன்று நகரத்தார் வீட்டுக் குழந்தைகளுக்கு முடி இறக்குவது, தொட்டில் கட்டுவது, பிள்ளைகளுக்குப் பெயரிடுவது எல்லாம் உண்டு.

கவலைப்படாதீர்கள், சிவராத்திரிக்கு அடுத்த நாள், சிவராத்திரியன்று போடப்பெற்ற பச்சைவாழையைப் பிரித்த பின்னர், ஒரு

மாதத்துக்குள் நல்லதொரு நாளில் சாமப்பூசை நடத்துகின்றனர்; அதைப் பார்த்துவிடுவோம்.

நாட்கள் நகர்கின்றன; சாமப்பூசைக்கு நாள் குறிப்பிட்டுவிட்டனர். சாமப்பூசைக்கான நாள் குறிப்பிடப் பெற்றதிலிருந்து பூசாரிகள் விரதமாக — சுத்தபத்தமாக இருப்பார்கள்.

இப்போது ஒரு புதுத் தகவல். சாமப் பூசையை வேற்று மனிதர்கள் யாரும் பார்க்க முடியாதாம். இவ்வளவு நாள் காத்திருந்து வீணாகப் போய்விட்டதே என்று கவலைப்படுகிறீர்கள் போலிருக்கிறதே! சாமப்பூசைக்கு மறுநாள் காலையில் ஆண்கள் மட்டும் அங்கு செல்லலாமாம்.

அப்போது போய்ப் பார்த்து விடுவோமே!

அடுத்த நாள், நடந்தே அங்கு போகிறோம். (காரிலும் செல்லலாம்!)

காட்டு மரங்கள் அடர்ந்த பகுதியின் நடுவே, கோயில் அழகாக அமைந்திருக்கிறது.

படிக்கட்டுகளைக் கொண்ட மேடை ஒன்றில் நடுநாயகமாகப் பொக்கிஷக்கோட்டைக் காளி குடையின்கீழ் அமர்ந்திருக்கிறாள். இருபுறமும் யானைகளின் சிலைகள். கம்பி போட்டுச் சுற்றிலும் அடைத்திருக்கிறார்கள். மேல் விதானம் மட்டும் இல்லை.

தாயாகித்,தனை நிகர்ந்து வேறொன்றும்இலாத்
தன்மையினாய், எவ்வுயிர்க்கும் தலைவியாகிச்,
சிலையாகி, நீரினுள் வந்தகடவுளாகி.....'[2]

இங்கு குடிகொண்டிருக்கிறாள் பொக்கிஷக்கோட்டைக் காளி.

இரண்டு படிகள் இறங்கினால் இருபுறமும் பெண் பூதங்கள். இவை சுதை வேலைதாம். காளியுமே முன்பு சுதையிலேயே அமைந்திருந்ததாம். ஐயனார் கோயில் திருக்குட நீராட்டு நேரத்தில்தான், கற்படிமமாக மாற்றிப் பீடம் அமைத்து மஹாபிஷேகம் செய்தார்களாம்.[3] முதலில் இருந்த மண்சிலை உடைந்து சேதமுற்றுவிட்டதாலேயே, அம்பாளின் அனுமதி பெற்றுக் கற்சிலையாக மாற்றப் பெற்றது. மேலும், இந்த இடத்தில் அவளுக்கென்று ஒரு கோயிலைக் கட்டப் பூசாரிகளும், நகரத்தார்களும் முயன்றனர்; ஆனால் இப்படிக் கொம்படிக் கோயிலிலேயே குடியிருக்கத்தான் காளி விரும்புகிறாள் என்கிறார் பூசாரி.[4]

அழகிய சிலை வடிவில் அருள்புரிந்தவாறு அமர்ந்திருக்கிறாள் அன்னை பொக்கிஷக்கோட்டைக் காளி.


''நித்தமுத்த சுத்தபுத்த சத்தபெருங் காளிபத
நீழல்அடைந் தார்க்(கு)இலை ஓர் தீது....''[5]

ஆம், அன்னையைச் சரணடைந்து விட்டால், எடுத்த காரியம் யாவிலுமே வெற்றிதான்!

அண்டசராசரங்களையும் ஆட்டிப் படைக்கும் அன்னையின் தாள்களில் அடைக்கலம் புகுவோம் வாரீர்!

மருது சகோதரர்களும் இவளை வழிபட்டே உய்ந்தார்கள் என்று வரலாறு கூறுகிறது.

நம் இடப்புறம் பெரியதொரு புளியமரம். அதை ஒட்டி முருகன், முனி, முத்துக்கறுப்பர், பெரிய கறுப்பர், சின்னக் கறுப்பர், வடுக நாச்சி, பேச்சி, சப்த கன்னியர் — எல்லாத் தெய்வங்களுமே உள் ளனர்.



பொன்காத்த காளியம்மா

இந்தக் கொம்படி ஆலயம் பூசாரிகளின் நிர்வாகத்திலேயே உள் ளது. இங்கு உண்டியல் வருமானம் அதிகம் என்று கூறுகின்றனர். இருப்பினும் கோயிலுக்குத் தேவையான எல்லாவற்றையும் பக்தர் களே நிறைவேற்றி வைக்கிறார்கள்.

சிவராத்திரிக்கு இந்தக் கீழைக்கோயிலில் நிறையக் கூட்டம் வந்தா லும், சாமியாட்டம் முதலியவை இன்னமும் மேலைக் கோயிலி லேயே நடைபெறுகின்றன.

★ ★ ★

பூசாரி சிறிது ஓய்வாக இருக்கிறார் போலிருக்கிறது. அவரிடம் நேற்றிரவு நடைபெற்ற சாமப்பூசை பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்வோமா?

முறத்தில் பாவை அமைத்துச் சந்நிதியின் பின்புறம் வைத்து விளக்கு ஏற்றி வழிபடுவர். பிறகு கோழி, கிடாய் வெட்டி, வெண்பொங்கல், சர்க்கரைப் பொங்கல் வைத்துக், கத்தரிக்காய், முருங்கைக் காய் போன்ற காய்கறிகளைச் சமைத்து எல்லாவற்றையும் ஓட்டில் வைத்துக், கிடாயின் ஈரலை எறிசோற்றினுள் வைத்து, ஒன்பது நெய்த் தீப்பந்தங்களை அவற்றின்மீது செருகி வைப்பர். சாமியாடி அந்த முறத்தைத் தூக்கி நான்கு திசைகளிலும் எறிசோற்றை எறிவார். இது வழக்கமாக இரவு 1 மணிக்குத்தான் நடைபெறும்.

இங்கு நேர்த்திக்கடனாக உயிர்ப்பலி கொடுப்பது உண்டா என்று கேட்கிறோம். நேர்ந்து கொண்டவர்கள் அவற்றைக் கொண்டு வந்து கோயிலில் ஒப்படைத்துவிட்டுச் சென்று விடுவார்களாம். பூசாரிகள் அவற்றைப் பலியிட்டுச் சமைத்து அவர்களே சாப்பிடுவர்.

பூசாரிமீது பொக்கிஷம்(காளி), நொண்டித்தேவர், சின்னக் கறுப்பு (பர்), சோனைமுத்து, முருகன் போன்ற ஏழு தெய்வங்கள் ஆவேசித்து அருள்வாக்குக் கூறுவது உண்டாம்.

இருள் சூழத் தொடங்கிவிட்டது; நடந்து வேறு வந்திருக்கிறோம்.

இரவில் பூச்சிபொட்டு.....

அன்னையை நாடி வந்தோருக்கு அச்சத்திற்கு இடமேது? பூசாரி உடன்வர மெதுவாக ஆதினமிளகி ஐயனார் கோயிலை நோக்கிப் புறப்படுகிறோம்.

பரவும் சொல்மாலை

யாது மாகி நின்றாய் — காளீ
எங்கும் நீ நிறைந்தாய்,
தீது நன்மை எல்லாம் — நின்றன்
செயல்கள் அன்றி இல்லை,
போதும் இங்கு மாந்தர் — வாழும்
பொய்மை வாழ்க்கை எல்லாம்
ஆதி சக்தி தாயே! — என்மீது
அருள் புரிந்து காப்பாய்!

— மகாகவி பாரதியார்

குறிப்பு விளக்கம்:

— அடியார்க்கு ஏற்படும் உடல் — மன நோய்களைத் தீர்த்து வைப்பாள்.

1. 'பொக்கிஷக் கோட்டைநகர் பொன்காத்த காளியம்மா' — கவிஞர் கண்டனூர் மெ.பழ.மெ. சிதம்பரம்
2. சி. நாராயணன், மிதிலைப்பட்டி
3. சோம. சுப்பிரமணியன், மிதிலைப்பட்டி
4. பூசாரி வெள்ளைச்சாமி
5. மகாகவி பாரதியார்

உ

சிந்திப்பார் வினைதீர்க்கும் சேவகப்பெருமாள் ஐயனார்

(21. சேவகப் பெருமாள் ஐயனார் திருக்கோயில், கத்தப்பட்டு)

பாரதப் போருக்கு அடிகோலியாகி விட்டது. (கண்ணன் தூது மேற்கொண்டால் சண்டையில்லாமல் சமாதானமா பிறக்கும்?) பாண்டவரில் சகதேவன் தவிர்த்த நால்வரும் தத்தம் கருத்துகளைக் கண்ணனிடம் தெரிவித்துவிட்டனர்.

புகலரிய உணர்வுடைய — புகழுடைய — திறலுடைய தத்துவ ஞானி யான சகதேவனின் கருத்து யாது என்று கண்ணன் கேட்க, எல்லாம் உன் சங்கற்பத்தின்படிதான் நடக்கும் என்கிறான் சகதேவன்.

போரைத் தவிர்க்க வழி உண்டா என்று கண்ணன் கேட்டபோது,

''....காலில் தளைபூட்டி, நேராகக் கைப்பிடித்து நின்னையும்யான்
கட்டுவனேல், வாராமற் காக்கலாம் மாபா ரதம்...''

என்று சக தேவன் கூற, முடிந்தால் கட்டிப்பார் என்று கண்ணன் சவால்விட,

''தூயவனும் மூலமாம் தோற்றம்உணர்ந்து எவ்வுலகும்
தாயஅடி இணைகள் தன்கருத்தி னால்பிணித்தான்.''[1]

சகதேவன், மனமாகிய கயிற்றினால் எப்படிப் பரந்தாமனின் மூல வுருவைப் பிணைத்தான்? வில்லிபுத்தூரார் இதற்கு விடை கூற வில்லை. ஆனால்....

பகவானுக்கு எதிரில் பத்மாசனம் இட்டு அமர்ந்து, யோகத்தினால் குண்டலினி சக்தியை மேலெழும்பச் செய்து, அது மூலாதாரத்தி லிருந்து கிளம்பி சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி என்று ஐந்து நிலைகளைக் கடந்து ஆறாவதான ஆஞ்ஞா என்ற இடத்திற்கு வரும்போது, புருவமத்தியில் இடை — பிங்கலை நாடி கள் அத்தனையும் சேரும்போது, பகவானின் சைதன்ய சொரூபம் (அறிவு உருவம்) இருக்கிறதே அது, கிருஷ்ணனின் உடலில் இருப் பதும், சகதேவனின் யோகத்தில் இருப்பதுமாகிய இரண்டும் சேர்ந்த உடனே, பகவானைத் தன் யோகத்தினால் சகதேவன் கட்டி விடு கிறான் என்று யோகக்கலை கற்றவர்கள் கூறுகிறார்கள்.[2]

உண்மையிலேயே யோகமார்க்கம் அறிந்தவர்களுக்குத்தான் இது புரியும். இருப்பினும், எம்பெருமானைப் பிணைப்பதற்கு யோக மார்க்கத்தினால் இயலும் என்னும் உண்மை இதன்வழி தெரிய வருகிறது.

கத்தப்பட்டு சேவகப்பெருமாள் கோயில் அர்ச்சகர்கள்,[3] மலையாளம் தொட்டியத்துக் கறுப்பரைப் பற்றிய வரலாற்றினைக் கூறும் போது, இந்த யோகமார்க்கத்தினால்தான், ஆதிவேளாரால், அவரை மலையாளத்திலிருந்து கொண்டு வந்திருக்க முடிந்திருக்கும் என்று ஊகிக்க வேண்டியிருக்கிறது.

* * *



சுயம்பு இலிங்கமும் புதுமை விநாயகரும்

சொக்கநாதபுரம் — மதகுபட்டி சாலையில், சொக்கநாதபுரத்திலிருந்து 1 கி.மீட்டரில் வலப்புறம் திரும்பி மண்சாலையில் சென்றால், கத்தப்பட்டு சேவகப்பெருமாள் ஐயனார் கோயிலும், குளமும் உள்ளன.

கோயிலின் இடப்பக்கம் (தெற்கில்) திருக்குளம் இருக்கிறது. அவ்வழியாகத்தான் கோயிலை அடையவேண்டும்.

குளத்தை ஒட்டி மேல் விதானம் இல்லாத இரு மேடைகளில் ஒன்றில் வாளுக்கு வேலி இருக்கிறார். இவரைக் கோயிலின் புறத்தே வைத்திருக்கிறீர்களே என்று கேட்டபோது, இவ்வாறு போரில் இறந்தவர்களைக் கோயிலினுள் வைப்பதில்லை என்று அர்ச்சகர்கள் கூறி

னர். (பட்டவர், ராஜா தெய்வம் போன்றவையும் இப்படிப்பட்டவையே. இருப்பினும் ஏறத்தாழ எல்லாக் குலதெய்வக் கோயில்களிலும் அவர்களைத் திருச்சுற்றுச் சுவருக்குள்தான் வைத்திருக்கின்றனர்.)

அருகில் மிகப் பழைமையான மூன்று மரங்கள் பின்னிப் பிணைந்து நிற்கின்றன. இவைதாம் தல மரங்களோ? இந்தப் புளி, இலுப்பை, ஏறழிஞ்சில் மரங்களில், இலுப்பை மரத்தடியில்தான் தொட்டியத்துக் கறுப்பரை முதன்முதலில் அருவமாகப் பிரதிஷ்டை செய்திருந்தாராம் ஐயாச்சி வேளார்.

இப்போது இம்மரங்களில் ஏராளமான மணிகளும், அடியில் ஏராளமான அரிவாள்களும் காணப்பெறுகின்றன.

மேலே சென்றால் நம் இடப்புறம் சோனைக்கறுப்பர், தனிக்கோயில் கொண்டுள்ளார். விமானத்துடன் கூடிய கல்திருப்பணி மண்டபத்தில், திருப்பணி செய்த சொக்கநாதபுரம் செட்டியாரின் சிலை, கையில் உருத்திராக்க மாலையுடன் காட்சியளிக்கிறது. வலப்புறம் பெரிய மடப்பளி; விதானத்தில் அஷ்டலக்ஷ்மியரின் அழகுத் திருவுருவங்கள்.

இவை இரண்டுக்கும் நடுவே கோயிலினுள் செல்வதற்கான தெற்கு நுழைவாயில் உள்ளது. இருப்பினும், நாம் முன்புற வாயில் வழியாகவே உள்ளே செல்வோமே?

கோயிலின் முன் இரு அழகிய சேமங்குதிரைகள் ஒன்றையொன்று பார்த்தவண்ணம், பூதங்களின் தோள்களில் கால்களை வைத்து நிற்கின்றன. இவை ஸ்ரீமுக ஆண்டு தை மாதம் 16ஆம் நாள் (1934 ஜனவரித் திங்களாக இருக்கக்கூடும்) அமைக்கப்பெற்றதாக மேடைகளில் குறிக்கப்பெற்றுள்ளது.

கோயிலின் வடபுறச் சுற்றுச் சுவரில் மேலும் ஒரு நுழைவாயில் உள்ளது. இது பதினெட்டாம்படிக் கறுப்பர் சந்நிதிக்கு நேர் எதிரில் உள்ள வாயிலாகையால், நுழைவாயில் மீது நாமம், சங்கு சக்கரங்கள் பொறிக்கப்பெற்றுள்ளன.

கோயிலின் முன்புறத்தில் இரு நுழைவாயில்கள். ஐயனார் சந்நிதிக்கு எதிரே உள்ள நுழைவாயில், இரண்டு நிலைகளைக் கொண்ட சிறிய இராஜகோபுரத்தைப் பெற்றுள்ளது. மற்ற நுழைவாயில் மலையாளம் தொட்டியத்துக் கறுப்பர் சந்நிதிக்கு இட்டுச் செல்கிறது.

இவை இரண்டுக்கும் நடுவில் ஒரு சிறிய குடும்பமே இருக்கிறது. இவர்கள்தாம் இந்தக் கோயிலின் கதாநாயகர் குடும்பத்தினர் — ஐயாச்சி வேளார், அவர் மனைவி, பிள்ளை. இங்குதான் இந்தக் கோயிலின் வரலாறே தொடங்குகிறது.

* * *

மாடுகள் வாங்கித் தருவதாக மற்றவர்களிடம் பணம் வாங்கிவிட்டார் ஐயாச்சி வேளார்; ஆனால் நல்ல மாடுகள்தான் கிடைத்தபாடில்லை.

மாணிக்கவாசகர் குதிரை வாங்கச் சென்றதுபோல, நல்ல மாடு களைத் தேடி மதுரைப் பக்கம் சென்று, அங்கு அவை கிடைக்காத தால், அங்கிருந்து மலையாளத்துக்கும் சென்றுவிட்டார்.

சென்ற இடத்தில் தொட்டியர்களுடன் தொடர்பு ஏற்பட்டது.

தொட்டியர் என்பவர் ஒருவகைக் குறச்சாதியர் என்றும், பாம்பாட் டியும், பன்றி மேய்த்தும் நாடோடிகளாகத் திரிவர் என்றும், இவர் களின் தேவதையர் ஜக்கம்மா, பொம்மக்கா என்றும் தர்ஸ்டன் கூறுகிறார்.[4]

தொட்டியர் தொடர்பு, இவருக்கு மந்திர உச்சாடனங்களைக் கற்றுக் கொடுத்தது.

இதனிடையே, மாதங்கள் பலவாகிவிட்டன. பின்னர்தான் தாம் வந்த நோக்கத்தை நினைவு கூர்ந்தார் ஐயாச்சி வேளார்.

மலையாளப் பகுதியில் இருந்த காலத்தில், அங்கு அருளாட்சி செய்து வந்த கறுப்பண்ண சுவாமியின் அருமைபெருமைகளை அறிந்திருந்தார் வேளார். அதன் விளைவாக அவரைத் தம்முடன் கொண்டு செல்ல அவர் விழைந்தார். முடிந்தால் கொண்டு செல் லுங்கள் என்று தொட்டியர்கள் கூறிவிட்டனர்.

தாம் கற்றுவைத்திருந்த மந்திரங்களைக் கொண்டு, சில மாதங்கள் கடும் விரதமிருந்து, மந்திரோபாசனைவழி கறுப்பண்ண சுவாமி யைக் கும்ப நீரில் ஆவாஹனம் செய்து தம்முடன் எடுத்துச்சென்றார். குறிப்பிட்ட ஒரு காலம் வரையே இவ்வாறு கும்பத்தில் ஆவா ஹனம் செய்து வைத்திருக்க முடியுமாகையால், அவர் ஊர் திரும்பு முன்னரே கும்பம் அதன் சக்தியை இழந்துவிட்டது. (வேளார்கள், இதனைச் சுவாமி ஓடிப்போய் விட்டது என்று குறிப்பிட்டனர்.)

கலாகர்ஷண மந்திரத்தால் செய்யப்பெறும் கும்ப ஸ்தாபனம், ஒரு வார காலமே நீடிக்கும் என்று சாத்திரங்கள் கூறுகின்றன. அதன் பின்னர் அதிலுள்ள கலை சூரிய மண்டலத்திற்குச் சென்று சேர்ந்து விடுகிறது என்று சொல்லலாம். (''...நீங்கித் தமது எண்வகை வடி வங்களுள்[5] ஒன்றான சூரிய மண்டலத்தில் ஆவிர்பவித்து விடு வார்.''[6]) அந்த வேளார் இதை அறிந்திருக்கக் கூடும். அதனா லேயே அந்தக் காலக்கெடு முடிந்ததும், மீண்டும் அந்த இடத்திற்கே அவர் சென்றிருப்பார் போலும்.[7]

மீண்டும் கறுப்பண்ணசுவாமியின் இருப்பிடத்துக்குச் சென்றார்.

இம்முறை நாம் முதலில் குறிப்பிட்டது போன்று, யோக மார்க்கத் தால் இறைவனை மனத்தில் கட்டி எடுத்துவந்தார்.

இத்தகைய யோகமார்க்கம் பற்றிச் சாத்திரங்கள் எதுவும் சொல்ல வில்லை. அது சாத்திரத்திற்கு முற்றிலும் மாறுபட்ட ஒன்று. எனவே அது முடியுமா முடியாதா என்பதை நாம் சொல்ல இயலாது.[8]

* * *

ஐயாச்சி வேளாரே இவ்வாறு மலையாளத்துக் கறுப்பண்ண சுவா மியை மந்திர (யோக) சக்தியால் இங்கு கொண்டுவந்து, முதலில் அருவப் பிரதிஷ்டையும், பின்னர், கோயிலினுள் மூலவருக்கு வலப்

புறம் உருவப் பிரதிஷ்டையும் செய்து, அவரை மலையாளம் தொட்டியத்துக் கறுப்பராக்கிக், கோயிலின் இந்த அளவு வளர்ச்சிக்குக் காரணமாய் இருந்தவர் என்று, அர்ச்சகர்கள் நன்றிப் பெருக்குடன் கூறுகின்றனர்.

பிள்ளைப்பேறு இல்லாதோர் இங்கு வழிபட்டு நேர்ந்து கொண்டால், அடுத்த ஆண்டே வீட்டில் தொட்டில் கட்டுவது உறுதி. அதனால்தான் இவருக்குத் தொட்டியத்துக் கறுப்பர் என்று பெயர் என்று கூறுவாரும் உளர்.[9]

இந்த ஐயாச்சி வேளாரின் ஆண் — பெண் குழந்தைகளின் வாரிசுகளே இன்றைய அர்ச்சகர்கள்.

இங்குள்ள மற்ற மூர்த்தங்களான பதினெட்டாம்படி அழகுக் கறுப்பர், சோனைக்கறுப்பர், சின்னக்கறுப்பர் போன்றவை, 21 பந்தித் தெய்வங்களை அமைக்கும் முறையில் பிரதிஷ்டை செய்யப் பெற்றவையே.[10]

இராஜகோபுர வாசல் வழியாக உள்ள ஒட்டுக்கூடத்தின்வழி சென்று மூலவர் சேவகப்பெருமாள் ஐயனார் சந்நிதிக்குச் செல்கிறோம். ஒட்டுக்கூடத்தில் உள்ள தூண்களில் விநாயகர், தண்டபாணி, ஆஞ்சநேயர் போன்ற உருவங்கள் பொறிக்கப்பெற்றுள்ளன.

கருவறை மண்டபத்துக்கு முன்னதாக, வட்டவடிவமாக உள்ள சுயம்பு இலிங்கமும், அவரின் வலப்புறம் புதுமை விநாயகரும் உள்ளனர். இவ்விரு மூர்த்தங்களையும் சுற்றிக் கம்பி அடைக்கப் பெற்றுள்ளது.

* * *

சிவலிங்கம் இருக்கும் இடத்தில் முன்னர் ஒரு நடைபாதை இருந்தது. அந்த வழியாக வியாபாரத்திற்குப் பால் கொண்டு சென்ற அனை வரும் அந்த இடத்தில் இடறி விழுந்து பால் கொட்டிக் கொண்டே இருந்தது. ஒருநாள் எல்லோரும் சேர்ந்து அந்த இடத்தைத் தோண்டி என்னதான் இருக்கிறது என்று பார்க்க விழைந்தனர்.

இரத்தம் பீறிட்டு, இப்போது உள்ளது போன்று வட்டவடிவமாக உறைந்தது. மேலும் தோண்டிப் பார்த்தபோது 3 அடி ஆழத்துக்கு இரத்த உறைவு இருந்தது. அதுதான் இந்தச் சுயம்பு இலிங்கம்.

பூமியைத் தாங்கிக் கொண்டிருந்த ஆதிசேடனின் அளவற்ற சிரசுகள் ஒருமுறை அசைந்ததால், காலாக்கினி உருத்திரருடைய கோபாக்கினியிலிருந்து மூன்று தீப்பொறிகள் வெளிப்பட்டன. அவையே சிவலிங்கங்களாக மாறின. அவை நிர்மூலம், சமூலம், பார்த்திவம் என 3 வகைப்படும். இவற்றில் மண்ணுக்குள் இருப்பது பார்த்திவ[11] சுயம்பு இலிங்கம் எனப்பெறும் என்று காமிகாகமம் கூறுகின்றது. இலிங்கம் என்பது சித்திரித்தல் எனப் பொருள்படும் என்றும் சிவபெருமான் படைப்பு முதலான ஐந்து தொழில்களாலும் பிரபஞ்சத்தைச் சித்திரிக்கின்றதால் சிவலிங்கம் எனப் பெயர் ஏற்பட்டது என்றும், வருண பத்ததி எனும் நூலில் கூறப்பெறுகிறது.[12]

அபிஷேக நேரத்தில் மட்டுமே இந்தச் சுயம்பு இலிங்கத்தைச் செம்பு அங்கி இன்றிக் காணமுடியும். சுயமான சுயம்பு இலிங்கத்தை எல்

லோருக்கும் காட்டும் வாய்ப்பினை இறைவன் எளியேனுக்கு நல்கி விட்டான்.

கடந்த திருக்குட நீராட்டுக்கு முன்புவரை, இப்போது புதுமை விநாயகர் உள்ள இடம் காலியாகவே இருந்தது. (16.09.77ல் இரண்டாவது குடமுழுக்கும், 04.09.89ல் மூன்றாவது குடமுழுக்கும் நடந்திருக்கின்றன. முதல் குடநீராட்டு ஸ்ரீமுக ஆண்டு தைத் திங்களில் (ஜனவரி 1934ல்) நடந்திருக்கலாம் என்று ஊகிக்க முடிகிறது. சேமங்குதிரைகளின் பீடங்களிலும், கோயிலினுள் பிராகாரத்தில் தனித்தனியாக உள்ள விநாயகர், சுப்பிரமணியர் சந்நிதிகளிலும் ஸ்ரீமுக ஆண்டு (தைத் திங்கள்) என்று குறிப்பிடப்பெற்றிருப்பதே இதற்குக் காரணமாகும். பிராகாரத் தளவரிசை இதற்கு முன்னரே போடப் பெற்றிருந்திருக்க வேண்டும். கோயிலின் வடகிழக்கு மூலையில் — கூத்தாயி அம்மன்[13] சந்நிதிக்கும், பைரவர் சந்நிதிக்கும் இடைப்பட்ட மூலையில் — உள்ள பழைய கல்வெட்டு ஒன்றில், ரௌத்திரி ஆண்டு வைகாசி மாதம் 14ஆம் நாள் (ஏறத்தாழ மே 1920) தெக்கூர் நகரத்தாரால் தளவரிசை போடப்பெற்றதாகக் குறிப்பிடப் பெற்றிருக்கிறது.) காலியாக இருந்த இடத்தில் விநாயகர் இருப்பதாகப் பாவித்துப் பூசித்து வந்தார்கள். 1989ல் நடைபெற்ற குடமுழுக்கு விழாவிற்கு முன்னர், அந்த இடத்தைத் தோண்டிய போதுதான் இந்தப் புதுமை விநாயகர் (பிடித்து வைத்த பிள்ளையார் என்போமே, அப்படி மொழுமொழு என்று சரியான உருவ அமைப்பு இல்லாமல் இருக்கிறார்.) வெளிப்பட்டார். அதிலிருந்து அவரை அருகில் வைத்து, இந்த விநாயகர், சுயம்பு இலிங்கத்துக்குத்தான் (எப்போதுமே) முதற்பூசை நடைபெறுகிறது. ஐயனாருமே சுயம்பு இலிங்கத்துக்குப் பின்னர் பிரதிஷ்டை செய்யப் பெற்றவர் தாம்.[14]

நமக்கு இடப்பக்கம் (வடக்குப் பார்த்து) உள்ள இரு சந்நிதிகளில் ஒன்றில் (கிழக்கே உள்ளது) பதினெட்டாம்படி அழகுக் கறுப்பரும், ஆஞ்சநேயரும் இடம் பெற்றிருக்க, மற்றதில் அகோரவீரபத்திரர் உள்ளார்.

சிவராத்திரியின்போது எடுக்கப்பெறும் சந்தனக் குடங்கள், இந்தப் பதினெட்டாம்படிக் கறுப்பருக்குத்தான் அபிடேகிக்கப் பெறுகின்றன. குடம்குடமாக வரும் சந்தனத்தை அண்டாவில் ஊற்றிக் கறுப்பர் சந்நிதியை மூடி விட்டுக் கதவுக்கே சந்தனத்தை அபிஷேகம் செய்வார்கள். பின்னர் அலங்காரம், வழிபாடு எல்லாம் கதவுக்குத்தான்! (அழகர்கோயில் பதினெட்டாம்படிக் கறுப்பரை நினைவுகூரும் பொருட்டு இப்படி நிகழ்கிறது போலும்.)

பதினெட்டாம்படிக் கறுப்பர் முதலில் சுதை வேலைப்பாடாக இருந்து, பின்னர்தான் கற்சிலையாக மாற்றப்பெற்றதாம். சந்தன அபிஷேகம் கதவுக்கு நடைபெறுவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்குமோ? (சுதைத் திருவுருவம் கற்படிமம் போன்றதுதான். ஆனால் அதற்கு அபிஷேகம் கிடையாது.[15])

சிவராத்திரியன்று சந்தனக்குடம், பாற்குடம் ஏந்தி வருவோர், ஐயனார் சந்நிதிக்கு முன்னுள்ள தீக்குழியில் இறங்கித்தான் வருவார்கள். தீக்குழியைப் பூக்குழி என்றும் கூறுகின்றனர். இறை சிந்தனை

யில் மூழ்கியவர்களுக்கு எரியும் நெருப்பும் மலர் மஞ்சமாக மாறுவதில் என்ன வியப்பு?

''செந்தீமேல் எழும்பொழுது செம்மலர்மேல் வந்தெழுந்த
அந்தணன்போல் தோன்றினார்......''[16] திருநாளைப் போவார் (நந்தனார்) என்கிறார் சேக்கிழார் பெருமான்.

சந்தன — பாற்குடங்கள் சந்நிதிக்கு வந்ததும், நகரத்தார்களின் (குழந்தைகளுக்கான) கரும்புத் தொட்டில்கள் நூற்றுக்கணக்கில் மேள தாளத்துடன் கோயிலை வலம் வருவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும் என்று, உடனிருந்தவர்கள் கூறியபோது, உடம்பு புல்லரித்தது! நகரத்தார்களும் 8 நாள் கடுமையான விரதம் மேற்கொண்டு (சில நேரங்களில்) சந்தனக்குடம் எடுப்பது உண்டாம்.

அர்த்த மண்டபத்துக்கு வெளியே வழக்கமான, துவார பாலகர், துவார விநாயகர் இருக்கக், கருவறையில் மூலவர் சேவகப் பெருமாள் ஐயனார், தேவியர் புடைசூழ, அழகிய சிறிய மூர்த்தமாக அமர்ந்திருக்கிறார். இவருக்குத் தொழக்குடி ஐயனார் என்ற பெயரும் உண்டு.[17]

1989 ஆம் ஆண்டுக் கும்பாபிஷேகம் தர்மம் காத்த பட்டப்பிள்ளையான நகரத்தார் தலைமையில் நடந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறதே, அது என்ன தர்மம் காத்த பட்டப்பிள்ளையார் என்று அர்ச்சகர்களைக் கேட்கிறோம்.

அரிமழம், இராயவரம், கண்டரமாணிக்கம், காரைக்குடி, சொக்கநாதபுரம், தெக்கூர் (தெற்கூர் என்று தமிழண்ணல் குறிப்பிடுகிறார்), பள்ளத்தூர் ஆகிய ஏழு ஊர்களைச் சேர்ந்த மாத்தூர் நகரக் கோயிலின் மணலூர்ப் பிரிவினரே இந்தத் தர்மம் காத்த பட்டப் பிள்ளைகள். (அரிமழத்துக்குப் பதிலாக அர்ச்சகர்கள் கண்டனூரைக் குறிப்பிடுகின்றனர். கண்டனூரைக் கட்டாயம் சேர்க்க வேண்டும் என்கிறார் கண்டனூர் நகரத்தார் ஒருவர்.[18]) இவர்களே கோயில் நிர்வாகத்தைக் கவனிக்கின்றனர்; இவர்களுக்கே முதல் மரியாதை வழங்கப்பெறுகிறது; சிவராத்திரிக்கு இரு நாட்கள் கழித்து, இவர்கள்தாம் கூடிக் கோயில் வளர்ச்சி பற்றிப் பேசுகின்றனர். (ஒரு வேளை ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளைப் போன்று, நிரந்தர நிர்வாகத்தினரோ?)

சிவராத்திரிக்கு அடுத்துச் சிறப்புடன் நடைபெறுவது ஆடிப்பௌர்ணமி. அது ஒருநாள் திருவிழா. (ஆடி மாதத்தில் வரும் உத்திராட நட்சத்திரத்தில் க்ஷீரபூசை எனப்பெறும் பாற்பூசையைச் செய்ய வேண்டும் என்று ஆகமங்கள் கூறுகின்றன.)

வைகாசி மாதம் புரவி எடுப்பு நடைபெறுகிறது; இதனை நாட்டார் நடத்துகின்றனர்.

* * *

அடுத்து மலையாளம் தொட்டியத்துக் கறுப்பர் சந்நிதிக்குச் செல்கிறோம். தனியாக உள்ள சுற்றுச் சுவருடன் கூடிய சதுர மேடையில் கம்பி அடைக்கப்பெற்று, அதன் நடுவே நாற்கால் கல் மண்டபத்தில் மலையாளம் தொட்டியத்துக் கறுப்பர் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார்.

இச்சந்நிதியில் வழிபாடு நடைபெறும்போது, கறுப்பரின் வலப் புறம் ஒரு பள்ளயம் போட்டுத் தீபமும் காட்டுகின்றனர். அந்த இடத்தில் காளியம்மன் அருவமாய் இருப்பதாக ஐதிகமாம்.

மற்றொரு காளியம்மன், இச்சந்நிதியின் வலப்புறம் (தென் சுற்றுச் சுவரை ஒட்டி அமைந்துள்ள நீளமான சந்நிதியில்) இராக்காயி அம்மன், பிள்ளையுடன் உள்ள பேச்சியம்மன், சின்னக்கறுப்பர், கழுவடிக்கறுப்பர், பெரியகறுப்பர் ஆகியோருக்கு இடையில் உள் ளார். இவர்தாம் நெற்குப்பை நகரத்தார்களின் குலதெய்வமாம்.[19] அடுத்துத் தனிச் சந்நிதி ஒன்றில் பிள்ளையுடன் சிந்தியார் அம்மன் உள்ளார்.

கோயிலின் தென்மேற்கு, வடமேற்கு மூலைகளில் உள்ள விநாய கர், வள்ளி — தெய்வயானையுடனான சுப்பிரமணியர் திருவுருவங் களின் அழகை எப்படி விவரிப்பது?



அழகன் முருகன்

அவன் அழகைக் கண்டு ஆனந்தித்து ஆராதிக்கப் பிரமன், தமக்கு நாலாயிரம் கண் படைக்கவில்லையே[20] என்று அருணகிரியாரே அங்கலாய்க்கும்போது, அடியேன் எம்மாத்திரம்?

ஆயிரம் கோடி மன்மதர்களின் அழகெல்லாம் திரண்டு ஒரு வடிவ மாகிப் பொருந்தின என்றாலும், இப்பெருமானின் குற்றமற்ற திரு வடியில் உள்ள தூய நல் அழகுக்கு ஒவ்வாதே![21]

★ ★ ★

முதலில் ஓலைக்கூடத்தில் இருந்து பின்னர் கற்கட்டடமாக மாறிய[22] பெரிய — தூய்மையான இக்கோயிலில் உள்ள எல்லாத் தெய்வத் திருமேனிகளுமே அழகுடன் மிளிர்கின்றன என்பது பெருமைப் படத்தக்கது.

கோயிலில் நிலவும் தூய்மையைப் போன்றே, வழிபாடு செய்வோர், செய்விப்போர் ஆகியோரின் உள்ளங்களும் தூய்மையாக — நேர்மையாக இருக்க வேண்டாமா? 'சாமியாடி மேலே கையைத் தூக்குவார்; கை நிறையச் சாம்பிராணி வரும்; அதெல்லாம் முன்பு' என்று பெருமூச்செறியும் பெரியவர் ஒருவர்,[23] இப்போது உள்ளவர்களின் உள்ளத் தூய்மையின்மையை எண்ணி உள்ளம் நைகிறார்.

* * *

கண்டரமாணிக்கம், கண்டனூர், சொக்கநாதபுரம் ஆகிய ஊர்களின் மாத்தூர் மணலூர்ப் பிரிவினரும், நெற்குப்பை இளையாற்றங் குடிக் கழனிவாசற்குடியினரும், அரிமழம், ஆத்தங்குடி, இராயவரம், காரைக்குடி, தெக்கூர், பள்ளத்தூர் நகரத்தார்களுமாக ஏறத்தாழ 500 புள்ளிகளும்,[24] சொக்கநாதபுரம், திருப்புத்தூர் ஆகிய ஊர்களில் உள்ள நகரத்தார் அல்லாதாரும், மேலூர், அட்டப்பட்டி, தும்பப்பட்டிச் செட்டியார்களும், இக்கோயிலைக் குலதெய்வக் கோயிலாகக் கொண்டு வழிபடுகின்றனர்

நகரத்தார் குடும்பங்களின் ஆண்பிள்ளைகள் திருமணத்தின்போது கோயிலுக்கு நன்கொடை வழங்கும் வழக்கம் இங்கு நிலவுகிறது.[25]

இக்கோயிலைக் குலதெய்வக் கோயிலாகக் கொண்டவர்கள், பெரும்பாலும் தொட்டியத்துக்கறுப்பரை ஒட்டியே பெரிய கறுப்பன், கறுப்பையா, கறுப்பன்செட்டி, கறுப்பாயி என்று பிள்ளைகளுக்குப் பெயரிடுகின்றனர்.

தமிழில் 108 போற்றி (நாமாவளி)களை அண்மையில் இக்கோயிலில் அறிமுகப்படுத்தியுள்ளனராம்.[26] எவ்வளவு முயன்றும் நகரத்தார்களிடமிருந்தோ, அர்ச்சகர்களிடமிருந்தோ ஓர் அர்ச்சனைப் புத்தகத்தைப் பெற இயலவில்லை!

தாங்கள் சார்ந்த கோயில் — தங்கள் சமயத்துக்கெனத் தங்கள் வருமானத்தில் ஒரு பகுதியை ஒதுக்கி வைக்கும் வழக்கம் நகரத்தார்களிடையே முன்பு நிலவியது. சுவாமிகளுக்குப் பங்கு வைக்கும் பழக்கம் நகரத்தார்களிடையே மட்டும் காணப்பெற்ற ஒன்று. இன்று அந்த வழக்கங்கள் அருகி வருகின்ற வேளையிலும், கண்டரமாணிக்கம் அன்பர் ஒருவர்[23] (கிறிஸ்துவர்களைப் போன்று) தம் மாத வருமானத்தில் ஒரு விழுக்காட்டினை இக்கோயிலுக்கெனச் சேமித்து வருகின்றாராம்.

'எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும் தொட்டியத்துக் கறுப்பருக்கே அடிமையாகப் பிறக்க' ஆசைப்படுகிறார் இந்த அன்பர்! அடியார்களின் முறையான கோரிக்கைகளை நிறைவேற்றுவதுதானே ஆண்டவனின் வேலை!

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

வேண்டும் நின்கழற் கண்அன்பு பொய்மை தீர்த்து மெய்மையே,
ஆண்டு கொண்டு நாயி னேனை ஆவ என்(று)அ ருளுநீ,
பூண்டு கொண்(டு)அடிய னேனும் போற்றிபோற் றிஎன்று மென்றும்
மாண்டு மாண்டு வந்துவந்து மன்ன நின்வ ணங்கவே.

திருச்சிற்றம்பலம்

— 8 ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

1. வில்லிபுத்தூரார் பாரதம் — வை.மு.கோ. உரை. தூயவனான சகதேவன் (பதினாயிரம் திருவுருவங்களை எடுத்துக் கொண்ட கண்ணனின்) முதன்மையான திருவுருவத்தை (த் தத்துவ ஞானத்தால்) அறிந்து, எல்லா உலகங்களையும் அளவிட்ட பெருமானின் இரு பாதங்களையும் தன் மனமாகிய கயிற்றினால் கட்டினான்.
2. அபிநவபட்டத்ரி ஸ்ரீவத்ஸ ஜெயராம சர்மா, ஞானபூமி, ஜூன்'94
3. சுப. கறுப்பையா வேளார், வெ. திருநாவுக்கரசு வேளார், பழ. கனகு வேளார். சேவு. சண்முக வேளார், கத்தப்பட்டு
4. அபிதான சிந்தாமணி
5. அட்டமூர்த்தம்; இயமானன், காற்று, சந்திரன், சூரியன், தீ, நிலம், நீர், வெளி
6. சைவ ஆகமங்கள்; ஓர் அறிமுகம் — டாக்டர் எஸ்.பி. சபாரத்தினம்
7. ம. சிவகுமார் பட்டர், மதுரை
8. ம. சிவகுமார் பட்டர்
9. கே.ஆர்.கே. கறுப்பையா, கண்டரமாணிக்கம்
10. கோயில் அர்ச்சகர்கள்
11. பார்த்திவம் — பூமி
12. சைவ ஆகமங்கள் : ஓர் அறிமுகம்
13. கூத்தாடி அம்மன் கோயில் என்று தனியாகவே ஒரு குலதெய்வக் கோயில் இந்நூலில் இடம் பெறுகிறது. அந்தக் கூத்தாடி முத்துப் பெரியநாயகியின் தொடர்பாக இந்தக் கூத்தா(டி)யி அம்மன் சந்நிதி ஏற்பட்டிருந்தாலும் வியப்பில்லை
14. கோயில் அர்ச்சகர்கள்
15. ம. சிவகுமார் பட்டர்
16. பெரிய புராணம்: செந்தீயின் மேல் வந்து எழுகின்றபோது, செம்மலரின் மேல் வந்து எழுந்த அந்தணன் போல் தோன்றினார்
17. கோயில் அர்ச்சகர்கள்
18. ரெ. இராமசாமிச் செட்டியார், கண்டனூர்
19. கே.ஆர்.கே. கறுப்பையா
20. 'நாலா யிரங்கண் படைத்தில னேஅந்த நான்முகனே' — கந்தரலங்காரம்
21. 'ஆயிர கோடி காமர் அழகெலாம் திரண்(டு)ஒன் றாகி
மேயின எனினும் செவ்வேள் விமலமாம் சரணம் தன்னில்
தூயநல் எழிலுக்(கு) ஆற்றா(து)....' — கந்த புராணம்
22. ரெ. இராமசாமிச் செட்டியார்
23. நன்னெறிக் கோட்பாட்டினை ஒட்டி இக்கட்டுரையில் சில பெயர்கள் வேண்டுமென்றே குறிப்பிடப்பெறவில்லை
24. கே.ஆர்.கே. கறுப்பையா
25. ரெ. இராமசாமிச் செட்டியார்
26. கே.ஆர்.கே. கறுப்பையா

உ

அருள்சுரந் தளிக்கும் ஆதினமிளகி ஐயன்

(22. ஆதினமிளகி ஐயனார் திருக்கோயில், நரியங்குடி)

திருக்கோயில்களில் உள்ள தெய்வச்சிலைகளின் உறுப்புகளை அங்கம், உபாங்கம், பிரத்தியங்கம் என மூன்று வகைப்படுத்திச் சாத்திரங்கள் பேசுகின்றன.

முகம், மூக்கு, கை, கால், விரல் போன்றவை அங்கம் எனப் பெறுகின்றன.

உடலோடு சேர்ந்திருந்தாலும் அதனை இழப்பதாலோ, இழக்கும் போதோ இன்னல் ஏற்படாத சிகை, நகம், தந்தம், கோரப்பல் போன்றவற்றை உபாங்கம் என்கின்றனர்.

கல்லில் செதுக்கப்பெற்ற கிரீடம், நகைகள், ஆடை (மடிப்பு)கள் போன்றவை பிரத்தியங்கம் ஆகின்றன.

ஒரு கோயிலில் உள்ள தெய்வ/பரிவார தேவதைச் சிலையின் அங்கத்தில் பின்னம் (சிதைவு) ஏற்படுமானால், அந்தச் சிலையை மாற்றி விட வேண்டும்; அதனை வழிபடலாகாது என்று சாத்திரங்கள் கூறுகின்றன. ஆனால் உபாங்கம், பிரத்தியங்கத்தில் சிதைவு ஏற்பட்டால், அதை மாற்றவேண்டிய கட்டாயம் இல்லை.[1]

சைவ சமயக் கொள்கைப்படி கோயில்களில் உள்ள சிவலிங்கம், நந்தி, பலிபீடம் ஆகிய மூன்றும் பதி, பசு, பாசம் என்று கூறப் பெறும்.


நந்தியாகிய வாகனம் சந்நிதிக்கு ஏற்ப வேறுபட்டுச் சிவனுக்கு விடையும், திருமாலுக்குக் கருடனும், அம்பிகைக்கு (சாக்த முறைப்படியாயின்) சிம்மமும், (சைவ முறைப்படியாயின்) விடை(காளை)யும், விநாயகருக்கு மூஷிஹமும், முருகனுக்கு மயிலும் போன்று, ஐயனாருக்கு யானை (சில கோயில்களில் குதிரையும் இருப்பதுண்டு) வாகனமாகும்.

பலிபீடம் வாகனத்துக்குப் பின்புறம் அமைந்திருக்கும். திருக்கோயிலினுள் சென்றதும், பலிபீடத்துக்கும் கொடிக்கம்பம் (துவஜ ஸ்தம்பம்) இருப்பின் அதற்கும் இடையில் ஆண்கள் அட்டாங்கமாகவும், பெண்கள் பஞ்சாங்கமாகவும், தங்கள் ஆணவம், பாசம் ஆகிய

வற்றைப் பலிபீடத்தில் பலியிடுவதாகக் கருதிக்கொண்டு விழுந்து வணங்கவேண்டும்.

பின்னர் இடபதேவர் அல்லது அந்தந்த மூர்த்தத்திற்குரிய வாகனத்திடம், கருவறையில் உள்ள இறைவனை வணங்கி அருள்பெற அனுமதி பெற்றுப் பின்னரே உள்ளே சென்று வழிபடவேண்டும். இதுவே திருக்கோயில் வழிபாட்டு முறையாகும். அந்தந்த வாகனத்திற்குரிய மந்திரங்களும் சாத்திரங்களில் கூறப்பெற்றுள்ளன.

எனவே தெய்வப் படிமங்களைப் போன்றே பலிபீடம், வாகனம் ஆகியவற்றிலும் சிதைவு ஏற்படாது பார்த்துக் கொள்வது இன்றியமையாததாகும்.



கை இழந்த தும்பி

நாம் இப்போது வழிபடச் செல்லும் நரியங்குடி ஆதினமிளகி ஐயனார் கோயிலில் உள்ள தும்பிக்கை இழந்து துவண்டு நிற்கும் யானை வாகனத்தை இங்கு காண்கிறோம்.

கருவூரில் சிவனடியாரான சிவகாமியாண்டார் இறைவனுக்கெனக் கொண்டு சென்ற பூங்கூடையைப் பறித்து மலர்களைச் சிந்திய புகழ்ச்சோழ மன்னனின் பட்டத்து யானையான பட்டவர்த்தனத்தின் தும்பிக்கை அற்று விழும்படி தம் மழுவாயுதத்தால் துணித்தார் எறிபத்த நாயனார். கரியமலை போன்ற அந்த யானை துதிக்கையினைத்

தொண்டர் துணித்தபோது, கடல்போலக் கதறிக் கீழே விழுந்து புரண்டது என்பர் சேக்கிழார் சுவாமிகள்.[2]

அதுபோன்று இந்த யானை (வாகனம்) விழுந்து புரண்டு துடிக்க வில்லையாயினும், அதனைப் பார்த்துக்கொண்டு வாளாவிருப்பது சாத்திரத்துக்குப் புறம்பானது.

இருப்பினும் கோயிலைப் புதுப்பிக்கும் வேலைகள் தொடங்கிக் குட முழுக்கு விரைவில் நடைபெறுவதற்கான நம்பிக்கை இருப்பதால், தும்பிக்கையை இழந்தாலும், நம்பிக்கையை இழக்காமல் இவ்யானை வாகனம் இருக்கிறது போலும்! (கோயிலைப் புனரமைப்புச் செய் வதற்காகத் தச்சு செய்து ஆறு மாதங்கள் ஆகிவிட்டனவாம்.![3])

* * *

கருங்குளத்திலிருந்து தெற்கே 1கி.மீட்டரில் உள்ள நரியங்குடிக் கண்மாய்க் கரையை ஒட்டி உள்ளது இக்கோயில்.

கோயிலும், திருச்சுற்றுச் சுவரும் புராதனக் கல் திருப்பணிகள். கண்மாய், மற்றும் வயல்களை இரு புறங்களிலும், நிறைய வில்வ மரங்களை மற்ற பக்கங்களிலும் கொண்டு, வில்வ வன (வில்வாரண்ய) மாகவே இந்தப் பகுதி திகழ்கிறது.

3 நிலைகளை உடைய இராஜகோபுரத்துக்கு முன்னால், வடக்கு நோக்கி அமைந்துள்ளது ஒற்றைச் சேமங்குதிரை. ஆரண்யத்தின் அருமைபெருமைகள், இராஜகோபுரத்திலும், மூலவர் விமானத் தருகிலும் கூடத் தென்படுகின்றன!

கோயிலினுள் சென்றதும் வலப்புறம் திருமஞ்சனக் கிணறும், பைர வர் சந்நிதியும், இடப்புறம் முன்னோடியும், மடப்பளியும் உள் ளன.

கருவறைக்கு முன்னால் பெரிய மகாமண்டபம் இருந்தும்கூட, ஐய னாரின் வாகனத்துக்கு அதில் இடம் கிடையாது. 'காக்கை குருவி எங்கள் ஜாதி' என்று, அவற்றுடன் — ஆனந்தமாக உறவு கொண் டாடுகிறது ஐயனார் வாகனம்.

முழுமையும் கல் திருப்பணியான கருவறை நுழைவாயிலின் இரு புறமும் துவார பாலகர் புடைப்புச் சிற்பங்களாக உள்ளனர்.

ஊராரின் பொறுப்பில் கோயில் இருந்தாலும், கோயிலைக் கட்டி, அவ்வப்போது மராமத்துப் பார்த்துக் கோயிலை இந்த அளவுக் காவது காப்பாற்றிவரும் நகரத்தார்மீது ஆதினமிளகி ஐயனாருக்கு அளவுகடந்த அன்பு உண்டு. விபூதி — காளாஞ்சி மரியாதை என்று வரும்போது, திருப்பணி நகரத்தார் என்று கூப்பிட்டு மரியாதை செய்யும் அளவுக்கு நகரத்தார்களின் கைங்கரியங்களைக் கோயிலார் மதிக்கின்றனர்.

விவரம் தெரிந்து பல ஆண்டுகளாகத் திருக்குட நீராட்டு நடைபெற வில்லை என்னும் கவலை ஒருபுறம் இருந்தாலும், அஷ்டபந்தன மருந்து எடுபட்டுச் சிலைகள் ஆட்டம் கண்டபோது, காரைக்குடி நகரத்தார் மருந்து சாத்திக், கும்பம் வைத்து ஜபம் செய்து அபி ஷேகம் செய்தார்களாம்.[4]

கண்டவராயன்பட்டியைச் சேர்ந்த இளையாற்றங்குடிக் கழனிவாசற் குடிப் பிரிவினர் சுமார் 25 புள்ளிகளும், கருங்குளம் (10), காரைக் குடி (32), குருவிக்கொண்டான்பட்டி (11), தேவகோட்டை (25) ஆகிய ஊர்களின் இரணிக்கோயிலாரும், வேகுப்பட்டி நகரத்தாரு மான சுமார் 115 புள்ளிகள், இக்கோயிலுக்கு அடிமைப்பட்டவர் கள்.[5]

நகரத்தார் வீடுகளில் ஆண் குழந்தை பிறந்தால், பங்காளிகளுடன் இங்கு வந்து கிடாய்ப்பூசை கொடுப்பதோடு, முடி இறக்கித் தொட் டில் கட்டி, ஆண்குழந்தைகளுக்குப் பெயர் சூட்டி வழிபாடு செய் கின்றனர்.

இங்கு நாள்தோறும் காலையில் மட்டுமே ஒருநேரப் பூசை நடை பெறுகிறது. மற்ற நேரங்களில் கோயிலுக்குச் செல்ல நேரிட்டால், கருங்குளத்தில் வேளார் வீட்டை விசாரித்தறிந்து அர்ச்சகரை உடன் அழைத்துச் செல்லவேண்டும்.

தென் பிராகாரத்தில் உள்ள முதல் சந்நிதியில் பேச்சி, இராக்காயி, அம்பாள், சின்னக் கறுப்பர் ஆகியோரும், இரண்டாவது சந்நிதி யில் பெரிய கறுப்பரும், மூன்றாவதில் வீரபத்திரர், சப்த கன்னி யர், பண்டாரம், சந்நியாசி ஆகியோரும் உள்ளனர்.



கருவறைத் தோற்றம்

இதற்கு முன்னர் பார்த்த சில கோயில்களைப் போன்று, தென் மேற்கு மூலையில் மூஷிஹம், பலிபீடத்துடன் கூடிய விநாயகர் சந் நிதியும், வடமேற்கு மூலையில் மயில், பலிபீடத்துடன் கூடிய வள்ளி — தெய்வயானை உடனாய சுப்பிரமணியர் சந்நிதியும் அமைந்திருக்கின்றன.

திருச்சுற்றுச் சுவரின் நான்கு மூலைகளிலும் யானைகள் புடை சூழப் பூதங்கள் காணப்பெறுகின்றன.

சித்திரை, வைகாசி மாதங்களில், முன்னர் நடைபெற்று வந்த புரவி எடுப்பு விழா இப்போது இல்லையென்றாலும், குடநீராட்டுக்குப் பின்னர், மீண்டும் தொடங்கலாம்.

இருப்பினும், கடந்த சில ஆண்டுகளாகச் சிவராத்திரி இங்கு சிறப் பாகக் கொண்டாடப்பெற்று வருகிறது.

பிரமன் — மால் காணாப் பெரியோனாக — அழற்பிழம்பாக அண்ணல் வெளிப்பட்ட அந்த நாளில் மட்டும், அருள்சுரந்தளிக்கும் ஆதினமிளகி ஐயனாரை நாள்முழுவதும் வழிபட்டு மகிழலாம்.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

நரியைக் குதிரைப் பரியாக்கி
ஞால மெல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம்
பிச்ச தேற்றும் பெருந்துறையாய்!
அரிய பொருளே! அவிநாசி
அப்பா! பாண்டி வெள்ளமே!
தெரிய அரிய பரஞ்சோதீ!
செய்வ(து) ஒன்றும் அறியேனே!

திருச்சிற்றம்பலம்

— திருவாசகம்

குறிப்பு விளக்கம்:

1. ம. சிவகுமார் பட்டர்
2. "கையினைத் துணித்த போது, கடல்எனக் கூறி வீழ்ந்து
மைவரை அனைய வேழம் புரண்டிட....." — பெரிய புராணம்
3. மூ. சிங்காரம், கருங்குளம்
4. மூ. சிங்காரம்
5. முரு.சொ. கண்ணப்ப செட்டியார், கண்டவராயன்பட்டி

உ

பந்தித்தவினை தீர்ப்பாள் பரநாச்சி அம்பாள்

(23. பரநாச்சியம்மன் திருக்கோயில், கருங்குளம்)

பரத்துவம், பரபத்தி, பரசிவம், பரகதி என்னும் சொற்கள் யாவும் கடவுளுடன் தொடர்புடைய வகையில், கடவுட்தன்மை, சிவபத்தி, கடவுள், முக்தி என்னும் பொருள்களைக் கொண்டிருக்கின்றன.

நாச்சி என்பது தலைவியைக் குறிக்கும்.

எனவே பரநாச்சி என்பதைக் கடவுட்தன்மை கொண்ட — தெய் விகம் பொருந்திய தலைவி என்று சொன்னால், அதில் தவறில்லை.

மேலும், நாச்சிமார் என்னும் சொல்லைச் சப்த மாதாக்களைக் குறிக்கவும் கூறுவதுண்டு. சப்த தேவியரில் ஒருத்தி காளி. ஆகை யால் காளியைத்தான், அவளுடைய ஆற்றல் — தன்மை கருதிப் பரநாச்சியம்மன் என்று அழைக்கிறோம் என்று சொல்லலாம்.

பரம் என்ற சொல்லே இங்கு குறுகிப் 'பர' என்று ஆகியிருக்கிறது. பரம் என்ற சொல்லுக்கு, வேறு பல பொருள்கள் இருப்பினும், மேலானது, கடவுள் என்ற பொருள்களும் சிறப்பாக அதற்கு உண்டு. அந்த முறையில் இந்த அம்மனுடன் இணைந்த பர என்ற சொல், தெய்வத்தையே உணர்த்துகிறது.[1]

சிவமூர்த்தியின் கோபமே காளி உருக்கொண்டது; இரத்தபீசன் என்னும் அசுரனை, ஒரு துளி இரத்தமும் சிந்தாது ஆகாயம் மேல் வாயாகவும், பூமி அடிவாயாகவும் கொண்டு அங்காந்து அவனை உண்டு கொன்றது; தாருகனை நீறாக்கியது என்று சொல்பவற்றை வைத்து, அவள் கோபமே உருவானவள்; அழித்தலையே தொழி லாகக் கொண்டவள் என்று கூறிவிடக் கூடாது.

நல்லோரைக் காப்பதும், தீயோரைத் தண்டித்துத் திருத்துவதுமே கடவுட்கொள்கை.

ஆனால் அறியாமற் செய்யும் சிறு தவறுகளைக்கூட அன்னை பொறுக்க மாட்டாள்; தண்டித்து விடுவாள் என்பது, அவளிடத்து நிரந்தரமான ஓர் அச்ச உணர்வைத் தோற்றுவிப்பதையே நோக்க மாகக் கொண்டதாகும்.

இறைவனிடத்துப் பக்தியும் வேண்டும், பயமும் இருக்கவேண்டும். அதனால்தான் அதனைப் பயபக்தி என்று கூறிவைத்தனர்.

தெய்வத்தின் மீதுள்ள நம்பிக்கை (பக்தி), நல்லன செய்வோரை வளர்த்து வாழ வைக்கும்; தெய்வத்தின் மீதுள்ள அச்சம், அல்லன செய்வோரை அச்சுறுத்தி நெறிப்படுத்தி வாழ வகை செய்யும்.[2]

இந்த அடிப்படைச் சமய உண்மையைப் புரிந்து கொண்டால், எந்த நாளும் நாம் ஏமாளிகளாகவே இருக்கவேண்டி வராது.

* * *

பட்டமங்கலத்திலிருந்து தெற்குத் தெரு வழியாகச் சொக்கநாதபுரம் செல்லும் சாலையில் 1½ கி.மீ. சென்று, வலப்புறம் செல்லும் சாலையில் (பரநாச்சியம்மன் கோயில் என்னும் கைகாட்டி அறி விப்புப் பலகை உள்ள இடத்தில்) திரும்பி, சுமார் 1 கி.மீ. சென்று கருங்குளம் கிராமத்தை அடைந்து, ஊரின் எல்லையில் உள்ள விநாயகர் கோயிலை வலம் வந்து வடப்புறமாகச் சுமார் ½ கி.மீ. சென்றால், பரநாச்சியம்மன் கோயிலை அடையலாம்.

கோயிலுக்குச் செல்லுமுன்னர் உள்ள குடியிருப்புப் பகுதியிலிருந்து பூசாரியை அழைத்துச் செல்ல வேண்டும்.



படமெடுக்க அனுமதிக்காத பரநாச்சியம்மன்
கோயில் வளாகம்

மரங்கள் அடர்ந்த இடம். இடப்புறம் ஒரு விடுதிக் கட்டடம். வட்ட மான கோயில் சுற்றினுள் செல்லுமுன்னர், பெரியதொரு மரம்; வெள்ளுகா மரம் என்கின்றனர். இன்னும் பெயர் தெரியாத மரங் கள் பலவும் உள்ளன.

பெரியதொரு வட்டமாகக் கோயில் அமைந்திருக்கிறது. திறந்தவெளி. நுழைவாயிலைத் தவிர்த்து அந்தச் சுற்றுவட்டம் முழுவதையும் மண் ணாலான பிள்ளைச் சிலைகளும், ஆண் சிலைகளும், பொம்மை களும் நிறைத்து நிற்கின்றன.

இங்கு கோயில் வட்டத்துக்குள் செல்லும் ஆண்கள் சட்டையைக் கழற்றிவிட வேண்டும். பெண்கள் அந்த வட்டத்துக்குள்ளேயே செல்ல இயலாது; வெளியிலேயே நிற்க வேண்டியது தான். இப்படி ஒரு கட்டுப்பாடு இன்னும் சில கோயில்களிலும் உள்ளது. (பெண்களுக் குத் திடீரென மாதவிலக்கு வந்துவிடுமாம்; அம்பாள் அதை அனு மதிக்க மாட்டாளாம்! கதையாம் கதையாம் காரணமாம்.....!)

உள்ளே நம் இடப்புறம் இறங்கழிஞ்சில் மரம். (கத்தப்பட்டில் மூன்று மரங்கள் பிணைந்திருக்கும் இடத்தில் ஏறழிஞ்சில் மரத்தைப் பார்த் தோமே, நினைவிருக்கிறதா?)

அதனையடுத்து ஏராளமான பிள்ளைக் குழந்தைகளின் பொம்மை கள். தொடர்ந்து பெரிய கறுப்பர், ஆஞ்சநேயர். வலப்புறம் சின்னக் கறுப்பர்.

நுழைவாயிலின் நேர் எதிரில், அரை வட்டத்துக்கு, அழகிய பர்ண சாலை. நடுவில், ஒருவர் உட்கார்ந்து மட்டும் உள்ளே செல்லக்கூடிய அளவுக்கு இடைவெளி. அதன் இருபுறமும் பூதம் போன்ற சிலை கள். எதிரில் பெரியதும் சிறியதுமான 3 திரிசூலங்கள். பின்னால் பீடத்தின் மீது பலிபீடம்.

இந்தப் பர்ணசாலைதான் பரநாச்சியம்மன் கோயில் கொண்டிருக் கும் இடம்.

* * *

நத்தத்துக்கு அருகில் உள்ள உலுப்பக்குடியில் இருக்கிறது கரந்த மலை. அங்கு இந்தக் காளிக்குப் பூசை செய்து வந்தார் அந்தணர் ஒருவர். அவரின் ஒரே பிள்ளை அம்பிகையின் அன்பில் சிக்கி.... அன்னை திருப்பி அனுப்ப மறுத்து.... சினம்..... பிள்ளை சின்னா பின்னமாகியது.... அர்ச்சகர் அடங்காக் கோபங்கொண்டார். ''பறச் சேரிக்குப் போ!'' என்று சாபமிட்டு விட்டார். (பொக்கிஷக் கோட் டைக் காளி கதைதான்! இன்னும் சில கோயில்களிலும் இது தொட ரும்!) அதிலிருந்து இங்கு ஹரிஜனக் குடியிருப்பில் வைத்து வழி படப் பெறுகிறது. எப்போது இந்த இடமாற்றம் ஏற்பட்டது என்பது யாருக்கும் தெரியாது.[3]

அம்பாளுடன், கன்னியர் எழுவரும், கோட்டி அம்பலமும் உள்ளே இருக்கின்றனர். (இந்தக் கோட்டி அம்பலம்தான் அம்பாளுக்கு முத லில் பூசை செய்தவராகக் கருதப் பெறுகிறார்.)

''ஆக்குதற்கும் அளிப்பதற்கும்
அழிப்பதற்கும் வல்ல

அகண்ட பெருஞ்சக்தி வடிவான
பழம் பொருளே!
சீர்க்குணங்கட்கு உறைவிடமே!
திரிகுணங்கள் மயமே!''....

உன்னைப் பணிந்து நிற்கிறோம். உலகம் புரப்பவளே! உத்தமரைக் காப்பவளே! உலக மாதா சரணம், சரணம்!

ஈராண்டுகளுக்கு ஒருமுறை இந்தப் பர்ணசாலை மாற்றப் பெறு கிறது. அருகிலிருக்கும் மரங்களின் கிளைகளைக் கொண்டு பர்ண சாலை அமைப்பார்கள். அப்போது உட்பகுதியைப் பட்டுத்துணி யால் மூடிவிடுவர். அதே போன்று மூலவர் சிலையும் மாற்றப் பெறுகிறது. புதிய சிலை, இக்கோயிலுக்கென உள்ள வெள்ளித் தேரில் பவனி வரும். அம்பாளுக்கு எல்லா அபிஷேகங்களும் நடை பெறுவது உண்டு. அவளுக்கென வெள்ளி அங்கிகளும் உள்ளன.

* * *

பங்குனிக் கடைசிச் செவ்வாயில் இங்கு திருவிழா நடைபெறுகிறது. திருவிழா நாட்களில் இந்த ஊரில் திருமணங்கள் நடைபெறுவ தில்லை.

இக்கோயிலைக் குலதெய்வக் கோயிலாகக் கொண்ட கருங்குளம், தெக்கூர் நகரத்தாரும், ஏனைய ஊர் நகரத்தாரும் ஆடி மாதச் செவ்வாய்க்கிழமைகளில் இங்கு அதிகமாக வந்து, குழந்தைகளுக்கு முடியிறக்கி, மாவிளக்கு வைத்து வழிபடுகின்றனர். (இங்கு வந்து தான் மா இடித்து மாவிளக்கு வைப்பார்களாம்!)

தெக்கூர் நகரத்தார்கள் கருங்குளத்திலிருந்து குடிபெயர்ந்தவர்கள் என்று சொல்லப்பெறுகிறது.

கோயில் வட்டத்துக்குள் கல்தளம் பரப்பிய நகரத்தார்கள், சுற்றுச் சுவர் எடுக்கவும் முற்பட்டபோது, பழைய பொம்மைகளிடையே ஏராளமான பாம்புகள் இருந்ததால், அந்த எண்ணத்தைக் கைவிட்டு விட்டனர்.

இங்கு ஏராளமான குழந்தைப் பொம்மைகள் உள்ளனவே என்று பூசாரியைக் கேட்கிறோம்.

குழந்தைப் பேறு கிட்டாதவர்கள் இங்கு வந்து நேர்ந்து கொண்ட பின்னர், இங்குள்ள இலைகளைப் பறித்து நீரில் குழைத்துப் பூசாரி கொடுக்க, அவற்றை உட்கொண்டு, விரைவில் தாய்மைப் பேற்றினை அடைகின்றனர். அவர்களின் நேர்த்திக்கடன்களே இந்தப் பொம் மைகள் என்கிறார் பூசாரி.

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்
ஆதிசக்தி பராசக்தி மகாசக்தி ஓம் என்று அன்னையின் நாமத்தைப் பாராயணம் செய்தவண்ணம் அங்கிருந்து புறப்படுகிறோம்.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

விண் களார்தொழும் விளக்கினைத் துளக்கிலா
விகிர்தனை, விழவாரும்
மண்க ளார்துதித்(து) அன்பராய் இன்புறும்
வள்ளலை மருவித்,தம்
கண்க ளார்தரக் கண்டுநம் கடிக்குளத்(து)
உறைதரு கற்பகத்தைப்
பண்க ளார்தரப் பாடுவார் கேடிலர்,
பழியிலர் புகழாமே.

திருச்சிற்றம்பலம்

— 2ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

— பந்தித்தல் — கட்டுதல்
1. ரெ.இராமசாமி, கண்டனூர்
2. டாக்டர் தே. சொக்கலிங்கம், காரைக்குடி
3. பூசாரி நா. பெரியசாமி, கருங்குளம்

உ

வேண்டும்வரம் கொடுப்பார் வெள்ளானை ஐயனார்

(24. ஆலத்தி ஐயனார் என்ற வெள்ளானை ஐயனார் திருக்கோயில், பட்டமங்கலம்)

நகரத்தார் குடும்பங்களில் ''பெயர் விளங்கப் (ஆண்) பிள்ளை வேண்டும்'' என்று சொல்லிப் பிறக்கும் குழந்தைகளுக்கு இரு தரப்புப் பாட்டனார் பெயர்கள், குலதெய்வப் பெயர் வைப்பதாக இருந்தால் தெய்வத்தின் பெயர் என்று, தொடர்ந்து ஒரே மாதிரியான பெயர்களையே வைக்கும் பழக்கம் மிகுதியாக இருக்கிறது. (இப்போது பெரியவர்களுக்குப் பயந்தோ என்னவோ, அவர்களின் பெயர்களை வைக்க வேண்டுமே என்பதற்காக வைத்து விட்டு, வேறொரு நாகரிகப் பெயரில் அழைக்கத் தொடங்கிப் பின்னர் அந்தப் பெயரே நிலைத்து விடுவது வேறு விஷயம்.)

ஆனால் இந்து சாத்திரப்படி, பிறந்த நட்சத்திரத்திற்கு ஏற்புடைய பெயரையே வைக்கவேண்டும் என்னும் ஒரு நியதி இருக்கிறது. (நகரத்தார்களில் எத்துணைப் பேர் இதனை அறிந்திருப்பர் என்று தெரியவில்லை!)

இவ்வாறிருக்க ஓர் ஊரிலுள்ள தெய்வத்திற்கு, அந்த ஊருக்குப் பொருத்தமான பெயர் சூட்டப் பெற்றிருக்கிறது என்றால், சற்று வியப்பாகத்தான் இருக்கிறது!

ஆலத்திக் கண்மாய்க்குள் (நான்கு புறமும் நீரால் சூழப்பெற்றது.) உள்ளதால் ஆலத்தி ஐயனார் என்று ஒரு பெயர்; ஊருக்குப் பொருத்தம் பார்த்து வைக்கப்பெற்ற பெயர் வெள்ளானை ஐயனார்.[1] (ஐயனாருக்கு வெள்ளையானை வாகனன் என்னும் ஒரு பெயரும் உண்டு.[2]) கடவுளுக்கும் மனிதர்களைப் போன்று, ஆலத்தி ஐயனார் என்ற (alias) வெள்ளானை ஐயனார் எனப் பெயர் சூட்டப் பெற்றிருப்பது விந்தையானதுதான்; ஆனால் இது போன்று இரு பெயர்களைக் கொண்டவர்கள் இன்னும் சிலர் உள்ளனர்; போகப் போகத் தெரிந்து கொள்வோம்.

பட்டமங்கலத்திலிருந்து சொக்கநாதபுரம் விலக்கில் திரும்பித் தெற்குத் தெரு வழியாகச் சுமார் 2கி.மீ. சென்றால் கோயிலை அடைய.

லாம். வழி நெடுகிலும் வலப்புறம் கண்மாயும், இடப்புறம் வயல்களும் உள்ளன. சாலையின் வலப்புறம் கோயில் உள்ளது. சாலையிலிருந்து கண்மாயைக் கடந்து கோயிலுக்குச் செல்லப் பாலம் அமைக்கப் பெற்றிருக்கிறது.

* * *

பனங்குடி என்னும் நடராஜபுரத்திற்கு (ஐயனார் வாசனை இங்கும் வீசுகிறது!) அருகில் உள்ளது கண்டிப்பட்டி என்னும் சிற்றூர். அங்கிருந்து குதிரைமீது சென்ற ஹரிஜன் ஒருவர், இந்தக் கோயிலின் சந்நிதானத்து எதிரில் வந்ததும் கண் பார்வையை இழந்துவிட்டார்.



சற்றே விலகும் பிள்ளாய்

அப்போதுதான் கோயிலின் அருகில் வந்ததும் குதிரையிலிருந்து இறங்காத தம் தவற்றை உணர்ந்தார். பார்வை மீண்டால் சேமங்குதிரை கட்டிவைப்பதாக நேர்ந்து கொண்டார். சொன்னவாறே பார்வை மீண்டதும் அவர் கட்டியதுதான், சந்நிதிக்கு நேர் எதிரில் பாலத்தைக் கடந்து சாலை ஓரத்தில் உள்ள ஒற்றைச் சேமங்குதிரை. அவருடைய வமிசாவளியினர் இப்போதும் ஆண்டு தோறும் பங்குனி மாதம் இங்கு வந்து அபிஷேக — ஆராதனைகள் செய்து வழிபட்டுச் செல்கின்றனர்.[3]

பாலத்தைக் கடந்து கோயில் நுழைவாயிலை அடைகிறோம். சாதாரண வீட்டின் நுழைவாயில் போன்ற அமைப்பில், மேலே கஜலட்சுமியின் சுதைச் சிற்பத்துடன் காணப்பெறுகிறது.

கதவைத் திறந்ததும், சந்நிதியை மறைத்துக் கொண்டு ஒரு பெரிய பழைமையான புளியமரம்.

இதுதான் இக்கோயிலின் தலமரம். முதலில் இங்குதான் ஐயனாரை வைத்து வழிபட்டு வந்திருக்கின்றனர். அப்போது இருந்த இந்த மரத்தடி ஆலயத்துக்குச் சிவகங்கை தேவஸ்தானத்திலிருந்து நில மானியம் கொடுக்கப்பெற்றிருக்கிறது.

ஒருமுறை இந்த வழியாகச் செல்ல நேர்ந்த சிவகங்கை மன்னர், ''இந்தக் கொம்படி ஐயனாருக்கா ஒன்பதுமா முக்காணி?'' என்று வினவினாராம். அதனால் வெட்கமுற்ற இப்போதையப் பூசைமுறை வேளார்களின் மூதாதையர் ஒருவர், மரத்தடியில் இருந்தவரை மண்டபம் கட்டி அதில் குடியேற்றினாராம்.

பிறகு காரைக்குடி நகரத்தார், ஐயனார், கறுப்பர் ஆகிய எல்லா மூர்த்தங்களுக்கும் மண்டபங்கள் அமைத்து, விவரம் தெரிய இது வரை 3 திருக்குட நீராட்டு விழாக்கள் நடைபெற்றிருக்கின்றன. கடைசியாக 1966ல் குடமுழுக்கு நடைபெற்றது.[4]

பொதுவாகக் கிராமக்கோயில்கள், மரங்களுக்கிடையிலும், மேடைகளாகவும் தோன்றிக், கட்டிடங்களாக மாறும் வளர்ச்சியைப் பெற்றுள்ளன[5] என்னும் கூற்றுக்கு ஏற்ப, இந்த ஐயனாரும் படிப்படியான வளர்ச்சியைக் கண்டிருக்கிறார்.

இருப்பினும் இவரைக் குலதெய்வமாகக் கொண்ட காரைக்குடி, பள்ளத்தூர், பனங்குடி, முத்துப்பட்டணம், வெற்றியூர் நகரத்தார்கள், இன்னும் இந்தப் புளியமரத்துக்குப் பட்டு, மாலை ஆகியவை அணிவித்துச் சிறப்பாக வழிபடுகின்றனர். 18 முழ வேட்டி கொண்டு வந்து மரத்துக்குக் கட்டி அவர்கள் வழிபடுவதும் உண்டு. 400 ஆண்டுக் கால மரமாக இருக்கலாம் என்று நம்பப்பெறும் இந்தப் புளியமரத்துக்குத் தீபாராதனை மட்டும் உண்டு.[6]

நாமும் அந்தப் புளியமரத்தை ஒரு சுற்றுச் சுற்றிக் கும்பிட்டு விட்டுக் கருவறை நோக்கிச் செல்கிறோம். கருவறை, கறுப்பர் சந்நிதிகள் இரண்டுமே கல்திருப்பணிகள்தாம். முன்னால் மண்டபங்களுக்குப் பதிலாக ஓட்டுக்கூடங்கள் போடப் பெற்றுள்ளன.

கருவறைக்கு முன்னுள்ள ஓட்டுக்கூடத்தில் ஐயனாருக்கு எதிரே யானை வாகனமும், பலிபீடமும் உள்ளன.


அர்த்தமண்டபத்தின் வெளியே புடைப்புச் சிற்பங்களாகத் துவார பாலகர்களும், அவர்களுக்கு முன்னால் இடப்புறம் மூஷிஹம், பலி பீடத்துடன் விநாயகரும், வலப்புறம் மயில், பலிபீடத்துடன் தண்ட பாணியும் உள்ளனர்.

அர்த்தமண்டபத்தில் புடைப்புச் சிற்பங்களாக விநாயகரும், தண்ட பாணியும் உள்ளனர்.

கருவறையில் மூலவர் ஆலத்தி ஐயனார் என்ற வெள்ளானை ஐய னார், தேவியர் புடைசூழத் திவ்விய தரிசனம் தருகிறார்.

இடப்புறத்(தென்) திருச்சுற்றுச் சுவரை ஒட்டித் தென்கிழக்கு மூலை யில் மடப்பளியும், அதனை அடுத்து, அடுத்தடுத்து ஐந்து சந்நிதி களும் உள்ளன.

முதல் சந்நிதியில் இடம் பெற்றிருப்போர் மறவன் — மறத்தியர்;



உள்ளத்தாலும் உருவத்தாலும் ஒத்த தம்பதியர்

இவர்களைப் பற்றி ஏதும் அறிந்து கொள்ள இயலவில்லை. இருப் பினும், நகரத்தார், குறிப்பாகக் காரைக்குடி நகரத்தார் இச்சந்நிதி யில் சிறப்பு வழிபாடு செய்கின்றனர்.

மாசி மாதம் முதல் திங்கட்கிழமை, அவர்கள் இங்கு வந்து வழி பாடு செய்த பின்னர், மறவன் — மறத்தி சந்நிதியிலிருந்து தீர்த்தம் எடுத்துச் சென்று படைப்பு நடத்துகிறார்களாம்.

மறவன் — மறத்தி சிலைகள் மிக அழகாக உருவாக்கப் பெற்றுள்ளன. மறவர் இடக்கையில் பிச்சுவா உறையுடனும், வலக்கையில் உருவிய பிச்சுவாவுடனும், சிரித்த முகமாய்க் கம்பீரமாகக் காணப்பெறுகி றார்.

அவரின் வலப்புறமுள்ள மறத்தி, அம்பிகை போன்று அருள் பொங் கும் முகத்துடன் காட்சி தருகிறார். இருவரின் ஆடை அணிகலன் களையும் சிற்பி வடித்துள்ள சிறப்பினைப் பார்த்துக் கொண்டே இருக் கலாம் போலிருக்கிறது.

அடுத்து, முன்னோடி, பேச்சியம்மன், முத்துக்கறுப்பர் ஒரு சந்நிதியிலும், சின்னக்கறுப்பர், பெரிய கறுப்பர், வீரபத்திரர் மூவரும் தனித் தனிச் சந்நிதிகளிலுமாக ஐந்து சந்நிதிகள் உள்ளன. எல்லாமே தனித் தனி விமானங்களைக் கொண்டிருக்கின்றன. தொடர்ந்து திருமஞ் சனக் கிணறு.

மேற்குப் பிராகாரத்தில் சப்த கன்னியர், சிங்கத்தின் மீது அமர்ந் துள்ள சந்நியாசி, விநாயகர் ஆகிய மூவருக்கும் தனித்தனிச் சந்நிதி கள் அமைக்கப் பெற்றிருக்கின்றன.

ஒவ்வொரு நாளும் பூசைமுறை வேளார் காலை 9 மணி முதல் 10 மணி வரை கோயிலில் இருப்பார். மற்ற நேரங்களில் பட்டமங் கலத்திலிருந்து அர்ச்சகரை அழைத்து வரவேண்டும்.

ஆண்டுதோறும் மாசி — பங்குனி மாதங்களில் கீழைத்தெருவினர் புரவி எடுப்பு நடத்தி வந்தனர்; கடந்த சில ஆண்டுகளாக இது நடை பெறவில்லை.

நகரத்தார் குடும்பங்களில் பிறந்த குழந்தைகளுக்கு இங்கு வந்து முடி இறக்குகின்றனர்.

ஊராருக்குத்தான் இங்கு முதல் மரியாதை என்பது போன்று, எந்த வழிபாடு செய்தாலும், நகரத்தார்கள், முதலில் சந்நிதிக்கு எதிரில் உள்ள புளிய மரத்துக்குப் பட்டுச் சாத்தி வழிபட்டு விட்டுத்தான் மற்றவற்றைச் செய்கின்றனர்.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

உறவா கியயோ கமும்,போ கமுமாய்
உயிராளி! என்னும்,என் பொன்ஒருநாள்
சிறவா தவர்புரம் செற்ற கொற்றச்
சிலைகொண்டு பன்றிப்பின் சென்றுநின்ற
மறவா! என்னும், மணிநீர் அருவி
மகேந்திர மாமலைமேல் உறையும்
குறவா! என்னும், குணக்குன்றே! என்னும்,
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே.

திருச்சிற்றம்பலம்

— 9ஆம் திருமுறை,
திருமாளிகைத் தேவர்

குறிப்பு விளக்கம்:

1. ஆறு. ஆறுமுக வேளார், பட்டமங்கலம்
2. பிங்கல நிகண்டு
3. ஆறு. ஆறுமுக வேளார்
4. ஆறு. ஆறுமுக வேளார்
5. டாக்டர் தே. சொக்கலிங்கம், காரைக்குடி
6. ஆறு. ஆறுமுக வேளார்

உ

தொழுதகை துன்பம் துடைக்கும் கரியமலை ஐயன்

(25. கரியமலை சாத்தய்யனார் திருக்கோயில், பட்டமங்கலம்)

சைவ சமயத்து அடியார் அறுபத்துமூவர், வைணவத்தின் ஆழ்வார் பன்னிருவர், மற்றும் சமயப் பெரியோர்களின் சிலைகள், சைவ — வைணவக் கோயில்களில் வைத்து வழிபடப் பெறுகின்றன.

ஆனால் அவிநாசியில் அவிநாசியப்பர் கோயிலின் தென்புறத்தில் உள்ள முதலைமடு என்னும் குளத்தின் அருகில், சுந்தரருக்கெனத் தனியாக உள்ள கோயிலைத் தவிர்த்து வேறு எந்தக் கோயிலிலும், எந்த அடியாருக்கும் தனியாக வாகனம் ஏதும் வைக்கப்பெற்றிருக்க வில்லை.


அவிநாசி சுந்தரர் கோயிலிலும், அவருடைய 'வாகனம்' என்று அதைச் சொல்ல முடியாது. இருப்பினும், வழக்கமாகச் சந்நிதிகளுக்கு முன் புறம் வாகனங்கள், (பலிபீடங்கள்) இடம் பெறும் இடத்திலேயே, அதுவும் உள்ளது. இத்தகைய அமைப்பு, வேறு எங்கும் காணப்பெறாத ஒன்றாகும்.

* * *

சேரமான் பெருமாளை மீண்டும் காண விரும்பி மலைநாடு புறப் பட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள், வழியில் திருப்புக்கொளியூர் அவி நாசி (இப்போதைய அவிநாசி)யில், பல ஆண்டுகளுக்கு முன்னர் மடுவில் குளித்துக் கொண்டிருந்தபோது, முதலையால் விழுங்கப் பெற்ற அந்தணச் சிறுவனைக் ''கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே''[1] என்று அவிநாசியப்பரைக் கோரி உயி ருடன் மீட்டார்.

அம்முதலை வயிற்றில், பிரமன், குழந்தையின் உடலையும், இயமன், அக்குழந்தையின் உயிரையும் கொடுத்தனர்.[2]

இதைக் குறிக்கும் வகையில், சுந்தரரைக் கருவறையில் கொண்ட சுந் தரர் கோயிலில், கருவறையின் எதிரே, வாயில் பிள்ளையுடன் முதலை இருக்கக் காணலாம்.



முதலை வாய்ப் பிள்ளை, சுந்தரர் கோயில், அவிநாசி

அதுபோன்று நாம் இப்போது காணச் செல்லும் கரியமலை சாத்தய்யனார் கோயிலிலும், அடியார்கள் அவர்களுடைய வாகனத்துடன் எழுந்தருளியிருக்கின்றனர்.

* * *

அலாவுதீன் கில்ஜியின் தளபதி மாலிக் கபூர்; மதுரை பாண்டிய மன்னனின் தளபதி இரவுத்தராயர். (இரௌத்தம் — இரவுத்தம் — என்றால் குதிரைச் சேவகம் என்று பொருள். இராயர் என்பது கிருஷ்ணதேவ ராயருக்கு வழங்கும் சிறப்புப் பெயர்.[3] எனவே இரவுத்தராயர் என்பவர், கிருஷ்ணதேவராயரின் வழியில் வந்தவர் என்றும், பாண்டிய மன்னனின் குதிரைப்படைத் தளபதியாகப் பணியாற்றியவர் என்றும், ''குதிரை (ச்சேவக்கர்)ப் படைத் தளபதி இராயர்'' என்று, பதவிப் பெயருடன் குலப்பெயரையும் கொண்டவர் என்றும் கொள்ளலாம்.) இவ்விருவருக்கும் மதுரை காக்காத்தோப்பில் நடந்த போரில், இராயர் தோல்வியுற்றார்.

இவரும், இவருடைய சகோதரரும் உயிர் போகும் தருவாயில் வெளியாத்தூர்க் காராள வேளாள ஐயாவைக் கண்டனர். தங்களை வழிபடுவோர், எப்போதும் இன்புற்று வாழ்வர் என அவரிடம் கூறி உயிர் துறந்தனர்.

அங்கிருந்து 'பிடிமண்' கொண்டுவந்து (அஸ்தியாக இருக்குமோ?) வெளியாத்தூர் துர்க்கையம்மன் கோயிலில் வைத்து, ஐயா வழிபட்

டார். பின்னர் கரியமலை சாத்தய்யனார் கோயிலின் தென்பகுதிக்கு அது இடம் மாறியது.

பிடிமண், சிலையாகியது; இடமும் வெளியாத்தூர் சிவன் கோயில் ஆகியது.

பின்னர், வேளாள ஐயா வழி வந்தவர்கள், கரியமலை சாத்தய்யனாருக்கும், இரவுத்தராயர் சகோதரர்களுக்கும் சந்நிதிகள் அமைத்துத் தனிக்கோயில் கட்டி வழிபட்டு வரலாயினர். இது நடந்து ஏறத்தாழ 300 ஆண்டுகள் இருக்கலாம்.

இதன் காரணமாக இக்கோயிலில் வெளியாத்தூர் ஐயா வமிசத்தினருக்கு முதல் மரியாதையும், அவர்களுக்கு உதவியாக இருந்த பட்டமங்கலம் சூரியத் தொண்டமான் குடும்பத்தினருக்கு அடுத்த மரியாதையும் வழங்கப்பெறுகின்றன.

திருக்கோஷ்டியூர் தொண்டமான் குடும்பத்தினர், இக்கோயிலுக்குத் தனிப்பட்ட முறையில் திருப்பணி செய்து, 01.07.1987ல் குடமுழுக்கு நடைபெற்றது.[4]

* * *

கண்டரமாணிக்கத்திலிருந்து 5கி.மீ. தொலைவில் உள்ள இக்கோயிலைப், பட்டமங்கலம் — திருப்புத்தூர் சாலையில் 2ஆவது கி.மீட்டரில் வலப்புறம் திரும்பிக் கண்மாயினுள் இறங்கிச் சென்று அடையலாம். (நயினார் கோயில் பஸ் நிறுத்தும் இடத்திற்கு எதிரில் கண்மாயினுள் பாதை செல்கிறது.)

பேருந்து வசதி இடையிடையில் உண்டு. கண்டரமாணிக்கத்தில் உள்ள இளையாற்றங்குடிப் பெருமருதூருடையாரும், பட்டமங்கலம் நகரத்தாரும் இக்கோயிலைக் குலதெய்வக் கோயிலாகக் கொண்டுள்ளனர்.

கோயிலின் முன்புறமாகச் சென்றால், தேடுவாரற்ற திருக்குளம் கோயிலை ஒட்டிக் காட்சி தருகிறது. உடைந்த குதிரைகளும், பெயர்ந்த கற்களும் குளக்கரையை அலங்கரிக்கின்றன(!) என்றாலும், கோயில் நுழைவாயில்களுக்கு எதிரில் உள்ள படித்துறையின் இருபுறமும் இரு சிறு யானைகளை அமைத்திருப்பது அழகாக இருக்கிறது. (அவை இன்னமும் தாக்குப்பிடிக்கின்றன!)

உள்ளே அடுத்தடுத்துள்ள ஐயனார், இராயர் சந்நிதிகளுக்கு எதிரே இரு நுழைவாயில்கள் அமைக்கப்பெற்றுள்ளன. (கத்தப்பட்டிலும் இதே அமைப்பைப் பார்த்தோமே!) இந்நுழைவாயில்களின் மேல் மதிற்சுவரில் வேலைப்பாடுகள் நிறைந்த சிறுசிறு கோபுரங்கள் அலங்கரிக்கின்றன. நுழைவாயில்களுக்கு முன்னால் சிறியதொரு கல் மண்டபம். இந்த நுழைவாயில்களில் நம் வலப்பக்கம் உள்ளது ஐயனார் சந்நிதிக்கு இட்டுச் செல்கிறது. அதன் வழியே உள்ளே செல்கிறோம்.

முதலில் பெரியதொரு மண்டபம் உள்ளது; இரு புறமும் அறைகள்.

கருவறையில் பூரணை, புஷ்கலையுடன் கரியமலை சாத்தய்யனார் காட்சி தர, அர்த்த மண்டபத்தினுள் இருபுறமும் விநாயகரும், தண்டபாணியும் இடம் பெற்றுள்ளனர். அர்த்த மண்டபத்திற்கு வெளியே இரு புறமும் சிறிய துவாரபாலகர்கள், மற்றும் யானை, பலிபீடம் ஆகியவை உள்ளன.

ஐயனாருக்கு வலப்புறம் இரவுத்தராயர் சகோதரர்களின் சந்நிதி. இவர்கள் முடி, தாடியுடன், மற்ற கோயில்களில் உள்ள சித்தர்கள் போன்று தோற்றமளிக்கின்றனர். இவர்களின் இருபுறமும் இவர்களுடைய சேவகர்கள். (பூவுடன் சேர்ந்த நாறும் மணம் பெறுமாமே!)

இரு சந்நிதிகளுமே முழுமையான கல் திருப்பணி பெற்றவை. இத்திருப்பணிகளைச் செய்தோர் வெளியாத்தூர் ஐயாவின் வமிசத்தினரே என்று குடமுழுக்கு விழா மலர் தெரிவித்த தகவலை, முன்பு கண்டோம். இருப்பினும், கண்டரமாணிக்கம் நகரத்தார்களே இராயர் சகோதரர்களின் சந்நிதியை ஏற்படுத்தியதாகச் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன் என்கிறார் கோயில் அர்ச்சகர்.[5]

இவர்களை இராவுத்தர் சாமி என்று சொல்லும் பெரியவர் ஒருவர்[6] இவருக்கு ஜவ்வாது வாங்கிச் சாத்தினால், நினைத்த காரியம் கைகூடும் என்கிறார். 'குதிரையில் வந்தார்கள்; இங்கு சமாதி ஆனார்கள்; சந்நிதி ஏற்படுத்தப் பெற்றது' என்கிறார் அவர்.

ஆனால், இவர்களை முஸ்லிம் என்பது தவறு; இவர்கள் இராவுத்தர்கள் அல்லர்; இரவுத்த இராயரே என்கிறார் அர்ச்சகர்.

இராவுத்தர் என்னும் சொல், இரவுத்தர் என்பதன் அடிப்படையிலேயே வழக்கிற்கு வந்திருக்கவேண்டும். இராவுத்தர் என்பதற்குத் தமிழ் முஸ்லிம்களில் ஒரு பிரிவினரின் பட்டப் பெயர் என்பதோடு, குதிரை வீரர் என்னும் பொருளும் உண்டு.[7] மேலும், குதிரைச் சேவகன், குதிரைப்பாகன் என்னும் பொருள்களும் கூறப்பெறுகின்றன.[8]

அருணகிரிநாத சுவாமிகள் வீரன் என்னும் பொருளில் முருகனை 'இராவுத்தனே' என விளிக்கிறார்.

'வெஞ் சூர்க்கொன்ற ராவுத்தனே',[9] 'கலாபத் தனிமயில் ஏறும் இராவுத்தனே'[10] என்று முருகனையும், 'சீகர சிந்துர வுத்த (அலைகளையுடைய சமுத்திரத்தின்கண் இராவுத்தனான) வெம் சூர செய!' (கொடிய சூரனை வென்றவனே)[11] என்று, முருகனை விளிக்கும் போது, இராவுத்தன் (வீரன்) என்னும் அடைமொழியைச் சூரனுடன் இணைத்தும் அருணகிரியார் பாடியிருக்கிறார்.

தெரிந்தோ தெரியாமலோ, (குதிரை) வீரன் என்னும் பொருளின் அடிப்படையில், குதிரையில் வந்த வீரரான இராயரை, அந்தப் பெரியவர் 'இராவுத்த சாமி' (குதிரை வீரரான சாமி) என்று குறிப்பிட்டிருக்கலாம் என்று நாம் எண்ண இடமிருக்கிறது.

நகரத்தார்கள் இச்சகோதரர்களைச் சிறப்பாக வழிபடுகின்றனர். சாதாரணமாக இவர்களுக்குச் சர்க்கரைப் பொங்கல்தான் நிவேதனம். என்றாலும், நகரத்தார்கள் ரொட்டிச் சிறப்புச் செய்து மகிழ்வர்.

பச்சரிசி மாவை இடித்து அதில் அதிரசம் போன்று சிறுசிறு ரொட்டிகளாகச் செய்து சகோதரர்களுக்குப் படைப்பார்கள். இவர்களுக்கு ஜவ்வாது, புனுகு, வாசனைச் சந்தனம், அத்தர், நறுமணமிக்க மலர்கள் போன்ற மணமிக்க பொருள்களே சாத்தப்பெறுகின்றன.[12]

இவ்விரு சந்நிதிகளின் முன்பாக நுழைவாயில் வரை உள்ள ஓட்டுக் கூடம் நெருப்புப் பிடித்து எரிந்து போனதை ஒட்டியே, தொண்டமான் குடும்பத்தினர் புதிய மண்டபம் கட்டி, ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் குடமுழுக்கு விழா நடத்தினர் என்றும் அர்ச்சகர் கூறுகிறார்.



குளக்கரையும் கோயில் நுழைவாயிலும்

பட்டமங்கலம் வடக்குத் தெருவாரின் கோயிலான இது, இப்போது இந்து அறநிலையத்துறையின் ஆட்சியில், வேளார்களின் பொறுப்பில் நிர்வகிக்கப் பெறுகிறது.

நாள்தோறும் ஏதேனும் ஒருவேளை பூசை நடைபெறும் இக்கோயிலுக்கு அடிமைப்பட்ட நகரத்தார்கள், எல்லாக் கார்த்திகைச் சோம வாரங்களுக்கும் சேர்ந்து வந்து, அபிஷேக ஆராதனை செய்து வழிபடுகின்றனர். இருப்பினும் குழந்தைகளுக்கு முடி இறக்குவது, தொட்டில் கட்டுவது, பெயர் கூப்பிடுவது எதுவும் இங்கு நடைபெறுவதில்லை.

ஈராண்டுகளுக்கு ஒருமுறை மாசி மாதப் பௌர்ணமியை ஒட்டி வடக்குத் தெருவார் புரவி எடுப்புத் திருவிழாவை நடத்துகின்றனர். இது 9 நாள் திருவிழா.

காப்புக் கட்டிய நாளிலிருந்து வடக்குத் தெருவில் ஒரே கோலாகலக் கொண்டாட்டந்தான்! எட்டாம் நாள் புரவி எடுத்து, ஒன்பதாம் நாள் மஞ்சுவிரட்டு நடத்தி மகிழ்கின்றனர்.

தென்புறத் திருச்சுற்றுச் சுவரை ஒட்டிக் குமாரசாமித் தொண்டமான் (பட்டமங்கலம் தொண்டமான் குடும்பத்தின் மூதாதையராக இருக்கலாம்.), கரைய கருப்பர், நொண்டிக் கருப்பர், முத்துக்கருப்பர், இராக்

காயி, பேச்சி, சின்னக் கறுப்பர், பெரியகறுப்பர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

தெற்கு — வடக்குச் சுற்றுச் சுவர்கள் இரண்டிலும், இரு நுழைவாயில் கள் உள்ளன.

கோயிலுக்குச் செல்லுமுன்னர், பட்டமங்கலம் வேளார் வீடுகளில் விசாரித்தறிந்து, தேவையானால் அர்ச்சகரை உடன் அழைத்துச் சென்று, ஐயனாரையும் அடியாரையும் வழிபட்டு மகிழலாம்.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

கரிஅட்ட கையன், கபாலம்கை ஏந்தி,
எரியும் இளம்பிறை சூடும்எம் மானை,
அரியன் பெரியன்என்(று) ஆட்பட்ட தல்லால்,
கரியன்கொல் சேயன்கொல் காண்கின்றி லேனே.

திருச்சிற்றம்பலம்

— 10ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

1. 7ஆம் திருமுறை: 'எற்றான் மறக்கேன்' என்று தொடங்கும் பதிகம். பொருள்: கூற்றுவனையும், முதலையையும் இக்குளக்கரையிடத்துப் பிள்ளையைக் கொணர்ந்து தருமாறு ஆணையிட்டருள்'
2. சிவனருட்செல்வர் — திருமுருக கிருபானந்த வாரியார்
3. அபிதான சிந்தாமணி
4. கண்டரமாணிக்கம் மாணிக்கநாச்சியம்மன் திருக்கோயில் குடமுழுக்கு விழா மலர் 1992
5. பழ. சிங்காரம் வேளார், கண்டரமாணிக்கம்
6. சின்னயன் செட்டியார், கண்டரமாணிக்கம்
7. கழகத் தமிழ் அகராதி
8. தமிழ் மொழி அகராதி
9. கந்தரலங்காரம் 37: கொடிய சூரனைக் கொன்ற வீரன்
10. கந்தரலங்காரம் 50: தோகை நிரம்பிய ஒப்பற்ற மயிலில் ஏறும் வீரனே
11. கந்தரந்தாதி 66
12. பழ. சிங்காரம் வேளார்

உ

அன்பர்க்கு மெய்யன் ஆதினமிளகி ஐயன்

(26. ஆதினமிளகி ஐயனார் திருக்கோயில், மேல்குடி)

ஒவ்வொரு மாதமும் முழுநிலவை (பௌர்ணமியை) முன்னிட்டுக் கோயில்களில் சிறப்பான வழிபாடுகள் நடைபெறுவது, நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயக்கும் என்று மூதாதையர் விதித்துள்ளனர்.

அந்த அடிப்படையில் சித்திரைத் திங்களின் சித்திரை நட்சத்திரத்தில் தமனோற்சவம் என்பதைச் செய்தால் எல்லா வகைச் செல்வங்களும் பெருகுமாம்.

கஸ்தூரி, பச்சைக் கற்பூரம், பனிநீர் (பன்னீர்) முதலானவற்றைக் கூட்டிச் செய்யப்பெற்ற கந்தத்தை (சந்தனக்குழம்பு) இறைவனின் திரு மேனியில் சாத்துவதாகிய கந்தபூசை என்பதை வைகாசி மாத விசாக நட்சத்திரத்தில் செய்ய வேண்டும்.[1]

இந்தக் கந்தபூசையைத் திருமந்திரமும் குறிப்பிடுகிறது.

"சாங்கம தாகவே சந்தொடு சந்தனம்
தேங்கமழ் குங்குமம் கர்ப்பூரம் காரகில்
பாங்கு பட்டப்பனி நீரால் குழைத்துவைத்(து)
ஆங்கே அணிந்துநீர் அர்ச்சியும் அன்பொடே."[2]

இவ்வாறு வழிபாடு செய்தால், இவ்வுலக வாழ்விற்குத் தேவையான அனைத்தும் கிட்டும்; மேலும் தேவருலக வாழ்வும் உண்டாகும்; எண்வகைச் சித்திகளும் கைகூடும் என்கிறார் திருமூலர்.

இந்த முறைப்படி சித்திரை — வைகாசி மாதங்களின் முழுநிலவு நாட்களில் சிறப்புப் பூசைகள், திருவிழாக்கள் நடைபெறுகின்றனவோ இல்லையோ, இவ்விரண்டில் ஏதாவது ஒரு மாதத்தில் மேல்குடி — நடுவிக்கோட்டை கிராமத்தார், தனித்தனியே புரவி எடுத்து விழா நடத்துகின்றனர், இப்போது நாம் வந்திருக்கும் மேல்குடி ஆதினமிளகி ஐயனார் கோயிலில். அந்த நாட்களில் அந்தந்தக் கிராமத்தில் நாடகம் (கூத்து) நடத்துவதும் உண்டு. இராசராசசோழன் காலத்திலேயே கோயில்களில் விழாக் காலங்களில் ஆடல்பாடல் நிகழ்ச்சிகள் நடை

பெற்றதோடு, இத்தகைய நாடகங்களும் நடைபெற்றிருப்பதாகக் கூறுகின்றனர்.[3]

* * *

கல்லல், காரைக்குடி, நாச்சியாபுரம், மானகிரி நகரத்தாரின் குல தெய்வக் கோயிலான மேல்குடி ஆதினமிளகி ஐயனார் கோயில், காரைக்குடி — மதகுபட்டி (சிவகங்கை) சாலையின் 9 ஆவது கி. மீட்டரில், வலப்புறம் கண்டரமாணிக்கம் செல்லும் சாலையில் திரும்பிச் சுமார் 6 கி.மீ. தொலைவில் உள்ளது. மேல்குடி கிராமத்தின் எல்லையில், சாலையின் இடப்புறம் இக்கோயிலும், எதிரில் பெரிய குளமும் உள்ளன.



இனிய சூழலில் அழகிய கோயில்

30.06.1966, 09.02.1992 ஆகிய நாட்களில், நகரத்தார் — கிராமத்தார்|கிராமத்தார் — நகரத்தாரின் ஒத்துழைப்பில் ஜீரணோத்தாரனக் (பழுது பார்த்த) கும்பாபிஷேகத்தைக் கண்டுள்ள இக்கோயில், புதுமை மெருகுடன் திகழ்கிறது.

கோயில் வளாகத்தினுள் நுழையுமுன்னர், சாலையில் செல்லும்போதே, நாங்கள் இங்குதான் இருக்கிறோம் என்று கூறுவது போன்று, எதிரில் காட்சி அளிக்கிறது ஒற்றைச் சேமங்குதிரை. சாலையை ஒட்டியுள்ள நுழைவாயில் வழியே கோயில் வளாகத்தினுள் செல்கிறோம்.

குள்ள பூதத்தின் தோள்களில் குதிரை கால்களை ஊன்றி நிற்கப், பூதத்தின் கால்களுக்கு இடையில் சிவலிங்கம் ஒன்றை வைத்திருக்கிறார்கள். கிராமதேவதைகளின் கோயில் என்னும் பெயரைப் போக்குவதற்காகவோ என்னவோ, பல ஐயனார் கோயில்களில் ஏதாவது ஒரு வகையில் சிவலிங்கப் பிரதிட்டை செய்துள்ளனர். ஆனால் இது மாதிரிப் பூதத்தின் கால்களுக்கு இடையில்......? இதற்கும் நாள்தோறும் பூசை நடைபெறுகிறது.

இங்கும் யானை வாகனத்திற்கும், பலிபீடத்திற்கும் வானமேதான் கூரை! கருவறைக்கு முன்னுள்ள மகாமண்டபத்தில் இடநெருக்கடி ஏற்படும் என்று கருதி, இவற்றை இங்கேயே வைத்துவிட்டார்கள் போலும்!



அன்னமெனும் மென்னடையாள் அன்னக்குடியாள்

மகாமண்டபத்தினுள் சென்றதும், இடப்பக்கம் பேச்சி, இராக்காயி, நொண்டிக் கறுப்பர், சின்னக்கறுப்பர், பெரியகறுப்பர், முத்துக் கறுப்பர், வாவாசக் கறுப்பர் ஆகிய பரிவார தெய்வங்களை அடுத்து, முழுமையாகக் கல் திருப்பணி செய்யப்பெற்ற சந்நிதியில் வல்லநாட்டுக் கறுப்பர் எழுந்தருளியுள்ளார்.

தெவிட்டாத திருமேனி அழகு; கம்பீரமான தோற்றம். சிற்பியின் கைத்திறன் நம்மைப் பரவசத்தில் ஆழ்த்துகிறது. நகரத்தார்கள்தாம் இவரை இங்கு பிரதிட்டை செய்திருக்கின்றனர்.[4]

''வல்லமை தாராயோ, இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே'' என்று வல்லநாட்டுக் கறுப்பரை வணங்கிக் கேட்டுக்கொண்டு, மூலவரிடம் செல்கிறோம். கருவறையின் முன் இருபுறமும் துவாரபாலகரும், விநாயகர் — தண்டபாணியும் உள்ளனர்.

கருவறையில் பூரணை — புஷ்கலை உடனாய ஆதினமிளகி ஐயனார் அழகிய திருவுருக் கொண்டு அருள் பாலித்து அமர்ந்திருக்கிறார். அழகிய விமானத்தைக் கொண்டுள்ள இக்கருவறையும் முழுமையாகக் கல் திருப்பணி செய்யப்பெற்றுள்ளது.

ஐயனாரின் வலப்புறம் 07.05.1979ல் கட்டப்பெற்ற ஓர் ஓட்டுக்கூடம். அதில் சந்நாசி, வீரபத்திரர், ஆஞ்சநேயர், சப்தகன்னியர் (மண்சிலை) ஆகியவர்களுடன் நடுநாயகமாக அன்னக்குடியாள் வீற்றிருக்கிறார்.

இடக்கையில் குழந்தை; வலக்கையில் தாமரை மொக்கு; அமைதி தவழும் அழகிய முகம். நகரத்தார் குடும்பப் பெண்ணான இவர் இங்கு எப்படி வந்தார்?

நாச்சியாபுரத்து நகரத்தார்கள், இக்கோயிலுக்குச் சேர்ந்து வந்து வழிபட்டுச் செல்வதை நீண்டகாலமாகவே வழக்கமாகக் கொண்டுள்ளனர். ஒருமுறை அவர்கள் அவ்வாறு வந்தபோது, அவர்களில் செல்வாக்கு மிகுந்த ஆச்சி ஒருவர் இங்கேயே மரணமடையவே, அவரின் நினைவாக நாச்சியாபுரம் பங்காளிகள் இச்சிலையைக் கொண்டு வந்து, இங்கு தனிச்சந்நிதி ஏற்படுத்தி, அதில் வைத்து வழிபட்டு வருகின்றனர். இந்தச் சந்நிதிக்கும் அன்றாடம் வழிபாடு நடைபெறுகிறது. ஆனால் அதற்கெனப் படித்தரம் ஏதும் கொடுக்கப்பெறுவதில்லை.[5]

நகரத்தார்கள் வந்து இந்த அன்னக்குடி(ஆச்சியை)யாளை வழிபடும் போது, அவர்களே பொங்கலிட்டுப் பூசைகளைச் செய்து கொள்வார்களாம்.

காரைக்குடி நகரத்தார் ஆடி மாதத்தில் இங்கு வந்து அன்னக்குடியாளுக்கு அபிஷேக — ஆராதனைகள் செய்து, அதைத் தொடர்ந்து காரைக்குடி சென்று அங்கு படைக்கிறார்கள்.

மற்ற ஊர் நகரத்தார்கள் தங்களுக்கு வசதியான நாட்களில் தனித் தனியே வந்து ஐயனாரையும், வல்லநாட்டுக் கறுப்பரையும் வழிபட்டுச் செல்கின்றனர்.

காரைக்குடி — நாச்சியாபுரம் நகரத்தார் வீட்டுத் திருமணங்களின் போது, முன்கூட்டியே அவர்கள் வந்து பணம் கொடுத்துச் செல்வதை ஒட்டி, வேளார்கள் திருமணத்தன்று சுவாமிக்கு ஆராதனைகள் செய்து மாலை எடுத்துச் சென்று கொடுத்து வருகின்றனர்.

நகரத்தார் வீட்டுப் பிள்ளைகளுக்கு இங்கு முடி இறக்குவது உண்டு.

ஊரார்களுக்குச் சொந்தமான இந்தக் கோயிலின் திருப்பணிகள், மராமத்துகளை நகரத்தாரே முன்னின்று செய்கின்றனர். ஊரார் போட்டுள்ள மின்விளக்குகளுக்கான கட்டணத்தை நகரத்தார்களில் தனி ஒருவர், தொடர்ந்து செலுத்தி வருகிறார்.[6]

ஒவ்வொரு நாளும் பெரும்பாலும் காலையிலேயே இங்கு பூசை முடிந்து விடும். பிற்பகலில் கோயிலுக்குச் செல்வோர், நடுவிக்கோட்டையிலிருந்து (மேல்குடியிலிருந்து 1 கி.மீ.) வேளாரை அழைத்துவந்து ஐயனாரை வழிபட்டு மகிழலாம்.

சிறியதானாலும், சீரிய கோயிலான இது, கவினுறு தெய்வத் திருமேனிகளைக் கொண்டு தூய்மையாகத் திகழ்வது, மனத்தைப் பரவசத்தில் ஆழ்த்துகிறது; பக்தியுணர்வைப் பெருக்குகிறது.

'இவ்வையனைக் கண்டார் இடருக்கோர் எல்லைகண்டார்'.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

வெப்பொடு பிணிஎல்லாம் தவிர்த்(து)என்னை ஆட்கொண்டாய்,
ஒப்புடை ஒளிநீலம் ஓங்கிய மலர்ப்பொய்கை
அப்படி அழகாய அணிநடை மடஅன்னம்
மெய்ப்படு குருகாவூர் வெள்ளடை நீயன்றே.

திருச்சிற்றம்பலம்

— 7 ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

1. சைவ ஆகமங்கள்: ஓர் அறிமுகம் — டாக்டர் எஸ்.பி. சபாரத்தினம்
2. திருமந்திரம் — 'புனுகு, கஸ்தூரி முதலியவற்றுடன் சந்தனம், குங்குமப்பூ, பச்சைக் கருப்பூரம், அகில் ஆகியவற்றை அளவாகப் பனிநீர் சேர்த்துக் குழைத்து, அணிய வேண்டிய இடங்களில் முறையாக அணிந்து அன்புடன் வழிபடுவீர்'
3. சைவ சமய வளர்ச்சி — டாக்டர் மா. இராசமாணிக்கம்
4. சுப. கறுப்பையா வேளார், மேல்குடி
5. சுப. கறுப்பையா வேளார்
6. சுப. கறுப்பையா வேளார்

உ

வாட்டந் தீர்க்கும் கோட்ட நாச்சியார்

(27. கோட்ட நாச்சியார் திருக்கோயில், கத்தாளம்பட்டு)

"சல்லரி தாளம் தகுணிதம் தத்தளகம்
கல்லலகு கல்ல வடம்மொந்தை — நல்இலயத்
தட்டழி சங்கம் சலஞ்சலம் தண்ணுமை
கட்டழியாப் பேரி கரதாளம் — கொட்டும்

மத்தளம் துந்துபி வாய்ந்த முரு(டு)இவற்றால்
எத்திசை தோறும் எழுந்(து) இயம்ப......"[1]

கத்தாளம்பட்டுக் கோயில் வீட்டிலிருந்து சிலைஎடுப்புத் தொடங்குகிறது. கேடகத்தில் ஆண்டுதோறும் புதிதாக மாற்றப்பெறும் சப்த கன்னியரின் (ஏழு கன்னியர்). மண்சிலை உள்ளது.

பின்னால் இந்தத் தெய்வத்துக்கான வெள்ளி அங்கி, நகைகள், பட்டு, கண்மலர் அடங்கிய பேழையைச் சொக்கநாதபுரம மாத்தூர் அரும் பாக்கூர்உடையார்ப் பிரிவுப் பங்காளிகள் 70 புள்ளிகளில் பெரியவர் ஒருவர் தூக்கி வருகிறார்.

கோட்டநாச்சியார் கொம்படி ஆலயத்தைக் காணச் சென்றுள்ள நமக்கு, இறையருளால் பங்குனி மாதத்தில் நிகழும் இந்தச் சிலை எடுப்புத் திருவிழாவில் பங்கு கொள்ளும் வாய்ப்புக் கிட்டுகிறது.

நம்முடன் நகரத்தார் நிர்வாகிகளில் ஒருவரும், கத்தாளம்பட்டுக் கிராமத்தார் இருவரும்[2] கூடவே வருகின்றனர். நமக்குத் தேவையான எல்லா விவரங்களையும் இவர்கள் கூறுவார்கள்.

* * *

கரந்தமலையை அதற்குள் மறந்திருக்கமாட்டீர்கள் என நம்புகிறேன். பரநாச்சியம்மன் அங்கிருந்துதானே வந்ததாகச் சொன்னார்கள்.

அங்கிருந்து வந்தவர் அவர் ஒருவர் மட்டும் அல்லராம். அவருடன் மற்றும் அறுவரும் (மொத்தம் எழுவர்) மணிமுத்தாற்றில் பயணம் செய்து, பல இடங்களைச் சென்றடைந்திருக்கின்றனர். அவர்களில் ஒருவர்தாம் நாம் முன்னர் கண்ட கருங்குளம் பரநாச்சியம்மன். அடுத்தவர் இவர், கத்தாளம்பட்டுக் கோட்டநாச்சி அம்மன். (மற்றும் மாணிக்க நாச்சி, அந்தரநாச்சி, காட்டநாச்சி, மேலும் சிலர்.)


மற்ற இடங்களில் தனித்தனி மூர்த்தமாகக் கோயில் கொண்டுள்ள இந்த அம்பிகையர், இங்கு சப்த மாதாக்களாக, ஒரே சிலையில் எழுவரும் அமர்ந்து காட்சி தருகின்றனரே?

இந்த ஏழு கன்னியர் சிலை உங்களுக்குப் புதியதன்று. எல்லாக் குலதெய்வக் கோயில்களிலும் பரிவார தேவதையரில், இவர்கள் நிச்சயம் இடம்பிடித்துக் கொண்டிருப்பார்கள்!

உமையம்மை இறைவனை நோக்கித் தவம் புரிந்ததைக் கூறும் பாடல் ஒன்றை இங்கு நினைவுகூரலாம்.

இறைவனின் திருக்கண்களை விளையாட்டாகத் தேவி மூடி, அதனால் உலகெலாம் இருண்ட பாவம் நீங்கக் காஞ்சியில் தவம் செய்து, கம்பை ஆறு பெருகியபோது இறைவனைத் தழுவ, அதற்கு மகிழ்ந்த இறைவன் என்ன வரம் வேண்டும் என்று கேட்டனர். அண்ணலின் இடப்பாகத்தைத் தனக்குத் தந்தருள அன்னை கோரினாள். ''திருவண்ணாமலையில் தவம் செய்யின் இடப்பாகம் தருவேன்'' என்று இறைவன் கூற, அவ்வண்ணமே அன்னை அருணையில் தவம் செய்தபோது, சப்த மாதர்களும் தவச்சாலையைப் புறங்காத்தனர் என்று அந்தப் பாடல் கூறுகிறது.[3]

அன்னையின் தவச்சாலையை அம்மையர் எழுவர் காத்தது போன்று, உலக மாந்தரையும், அவர்தம் உடைமைகளையும் இவ்வெழுவரும்



கேடகம்

காத்தருள்வர் என்னும் பொருளில், அவர்களை இங்கு வைத்து வழி படுகின்றனர் போலும்!

★ ★ ★

இந்தத் திருவிழாவின் நோக்கம் என்ன? ஏழு கன்னியரின் புதிய மண் சிலையைக் கொண்டு செல்கின்றனரே, ஏன்? கோயில் எங்குள்ளது?

மூவர் அடங்கிய தகவல் பொறுப்புக்குழு இவற்றுக்கு விளக்கம் கூற முன்வருகிறது:

இப்போது நாம் கோட்டநாச்சியம்மனின் கொம்படிக் கோயிலை நோக்கித்தான் சென்று கொண்டிருக்கிறோம். நீங்கள் வரும் வழியில் இருந்த ஒரு முச்சந்தியில் வலப்புறம் திரும்பினால் கருவேற்குறிச்சி கிராமத்துக்குச் செல்லலாம். (அங்கும் ஓர் ஐயனார் கோயில் இருக் கிறது. அடுத்து நாம் அங்குதான் செல்லவிருக்கிறோம். அந்த இடத்திற்கு வருவதற்குரிய வழியைப் பின்னர் சொல்கிறேன்.) இடப்புறம் திரும் பிக் கப்பிச் சாலையில் நேரே வந்து, மடைக்கரைப்பட்டிக் கிராமத் தைக் கடந்து இந்தக் கத்தாளம்பட்டுக் கிராமத்துக்கு வந்தீர்கள். இந் தக் கிராமத்தை அடையுமுன்னர் வலப்புறம் காணப்பெறும் வயல் களின் ஊடே சென்று, கருவேலா மரங்கள் அடர்ந்துள்ள பகுதிக் குச் சென்றீர்களானால், அங்குதான் இந்தக் கொம்படி ஆலயம் இருக் கிறது.

சொக்கநாதபுரத்திலுள்ள இந்தப் பங்காளிகள் அனைவரும், இந்த கிராமத்திலிருந்து அங்கு சென்றவர்கள்தாம்.

ஒவ்வோர் ஆண்டும் பங்குனி மாதத்தில் சப்தகன்னியரின் புதிய சிலை எடுப்புத் திருவிழா கொண்டாடப்பெறுகிறது. இப்போது கொண்டு செல்லப்பெறும் புதிய சிலை, உற்சவர் போன்றது என்றுகூடச் சொல லாம். மூலவர் பற்றிய விவரங்களை அங்கு சென்றதும் கூறுகிறோம்.

திருவிழாவுக்கான காப்புக்கட்டு பங்குனித் திங்கள் முதல் செவ்வாய்க் கிழமையன்று நடைபெறும். ஏழாவது நாள் புரவி எடுத்தல்; அடுத்த ஏழாவது நாள் கயிறு குத்துதல் (வேல் குத்துவது போன்றது).

பங்குனி மாதத்தில் ஒரு நல்ல நாள் பார்த்து, அந்த நாளில் இந்தச் சிலை எடுப்பு நடைபெறுகிறது. இதுதவிர ஆடி மாதத்தில் மூன்று செவ்வாய்க்கிழமைகளும், கார்த்திகை மாதத்தில் மூன்று செவ்வாய்க் கிழமைகளும், கோயிலில் பொங்கல் வைப்பார்கள். அந்த நாட்களில் நாடகம் போன்ற கேளிக்கை நிகழ்ச்சிகளும் நடைபெறுவது உண்டு. எல்லாச் செலவுகளையும் நகரத்தார்களே ஏற்றுக் கொள்கின்றனர்.

(ஒவ்வோராண்டிலும் நிர்வாகத்தைக் கவனிப்போர், திருவிழா போன்ற வற்றுக்குச் செலவிடும் தொகையைப் போல் பன்மடங்கு வருமானத்தை அடுத்தடுத்த ஆண்டுகளில் பெறுகின்றனராம்!)

★ ★ ★

ஏராளமான கிராம மக்களும், நகரத்தார் பெருமக்களும் கலந்து கொண்டிருக்கும் சிலை எடுப்பு ஊர்வலம் கொம்படி ஆலயத்தை அடைந்து விட்டது. வயல் வரப்புகளின் வழி கோயிலுக்குச் செல் கிறோம்.

காஞ்சிரை — கூந்தல் — பனை — வேலாமரங்கள் அடர்ந்த இப்பகுதி

யில் முள்ளுக்குப் பஞ்சமில்லை, பார்த்து வாருங்கள்! இதோ தகவல் குழுவினர் வந்து விட்டனர், மேலும் பல தகவல்களைத் தெரிவிக்க.

சாலையிலிருந்து பார்த்தீர்களானால், இப்படி ஒரு கோயில் இருப்பதற்கான அடையாளமே தெரியாது.

(கொம்படி ஆலயத்தினுள் படம் பிடிக்கக் கிராமத்தார் அனுமதி கொடுக்க மறுத்தபோது, 'கோயில் இருக்கும் திசையை நோக்கியாவது கும்பிடு போடுகிறோம்' என்பது போன்று, சாலையிலிருந்து மரங்கள் அடர்ந்த இந்தப் பகுதியையாவது படம் எடுத்துக் கொள்கிறோம் என்று எவ்வளவோ கேட்டுப் பார்த்தும்..... ஊஹூம்.... முடியவே முடியாது என்று மறுத்துவிட்டனர்.)

நடுவில் சிறிதளவு பகுதி, மரங்கள் இல்லாமல் திறந்த வெளியாக — திடலாக இருக்கிறது பார்த்தீர்களா, அதுதான் கோயில்! வரிசை வரிசையாகக் காணப்பெறும் ஏழு கன்னியர் சிலைகள் அனைத்தும், ஆண்டுதோறும் இங்கு கொண்டுவந்து வைக்கப்பெற்றவை.

இவ்வாண்டு கொண்டு வரப்பெற்ற புதியசிலை, முன் வரிசையில் இடம்பெறும். இனி இந்த ஆண்டு நடைபெறும் சிறப்புகள் அனைத்தும் இந்தப் புதிய சிலைக்குத்தான். இன்று இதற்கு வெள்ளி அங்கி சாத்தி ஆராதனைகள் நடைபெறும். இந்தச் சிலைகளுக்கு முன்னால் உள்ள திறந்த வெளியில்தான் பொங்கல் இடுவார்கள்.

மண் சட்டிகளில்தான் பொங்கல் வைப்பார்கள். புள்ளிக்கு ஒரு பொங்கல் நிச்சயம் உண்டு. மரக்குச்சி கொண்டுதான் பொங்கல் பானையைக் கிளறுவார்கள். இந்தக் கோட்ட நாச்சியம்மனைக் குலதெய்வமாகக் கொண்ட பங்காளிகள் எந்த ஊரில் இருந்தாலும், இந்தப் பொங்கலில் கட்டாயம் கலந்து கொண்டு விடுவார்களாம்.

இங்கு வந்து வழிபடாமல் எந்தச் செயலைத் தொடங்கினாலும் அது சிறப்படைவதில்லை என்பது கண்கூடு.

இப்போது ஒரு முக்கியமான தகவலை உங்களுக்குக் கூறப்போகிறோம். இந்தப் பழைய சிலைகளுக்குப் பின்னால் மரம் ஒன்றின் அடியில் சிறிய பள்ளம் தெரிகிறது அன்றோ? அதுதான் மூலவர் உள்ள இடம். அங்குதான் முதன்முதலில் தோன்றிய கற்சிலை உள்ளது.

இப்பங்குனித் திருவிழாவின்போது, அது முழு உருவத்துடன் தோன்றிப் பின்னர் மறைந்துவிடும். (தொண்டை நாட்டுப் பாடல் பெற்ற தலமான திருவல்லத்திற்கு (திருவலம்) அருகில் காஞ்சனகிரி என்னும் ஊர் இருக்கிறது. சித்திராப் பௌர்ணமியன்று அங்குள்ள குளக்கரையிலிருந்து பார்த்தால், காஞ்சனகிரி மலையில் ஜோதி ஒன்று தோன்றி மறைகிறதாம். அதைப் போல இல்லையா இது?)

இந்த மூலவர் சிலைக்கும் இத்திருவிழாவில் அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

பருவமடையாத சிறுமியரும், வயது கடந்த மூதாட்டியருமே இந்த வளாகத்தினுள் உள்ளனர்; மற்ற பெண்களைக் காணவில்லையே என்று நீங்கள் கேட்கலாம். இவர்களைத் தவிர்த்த ஏனைய பெண்கள் (முழுக்கு நிற்காதவர்கள்) இப்பகுதிக்குள் வரக்கூடாது என்பது இங்கு கண்டிப்பான விதிமுறை.

அதுமட்டுமன்று. திருவிழாவின்போது அருள்வாக்குக் கூறும் சாமியாடிகள் ஹரிஜன இனத்தவர். அவர்கள்கூட, அதோ அந்த மிகப் பெரிய பழைமையான வன்னிமரத்தைத் தாண்டி உள்ளே வரமாட்டார்கள் என்கிறார் அம்பலகாரரான பூசாரி.

நகரத்தார் வீட்டுத் திருமணங்களுக்குக் கிராமத்தாருக்குச் சொல்லி அனுப்புவதும், அவர்கள் சீர்கொண்டு சென்று கொடுத்து வருவதும் வழக்கம். ஆனால் பிறந்த பிள்ளைகளுக்கு முடி இறக்குவது, தொட்டில் கட்டுவது போன்றவை, இங்கு மேற்கொள்ளப் பெறுவது இல்லை.

நகரத்தார் அன்பருக்கும், கிராமத்துப் பெருமக்களுக்கும் நன்றி கூறி, அவர்களிடமிருந்து விடை பெறுகிறோம்.

ஒரு விஷயத்தை மறந்துவிட்டேனே! அடுத்தமுறை நீங்களாக இங்கு வருவ்தானால், திருக்கோஷ்டியூர் — சிவகங்கைச் சாலையில் திருக்கோஷ்டியூரிலிருந்து 2கி.மீட்டரில் இடப்புறம் உள்ள கத்தாளம்பட்டு விலக்கில் திரும்பிச், சுமார் 2கி.மீ. சென்றால், முன்பு இந்தக் கிராமத்துப் பெருமக்கள் குறிப்பிட்ட முச்சந்தியை அடைந்து விடுவீர்கள். அங்கிருந்து கத்தாளம்பட்டு செல்லும் வழியைத்தான் அவர்கள் கூறிவிட்டார்களே!

இப்போது, அந்த முச்சந்தியிலிருந்து வலப்புறம் செல்லும் மண் சாலையில் சிறிது தொலைவு சென்று, கருவேற்குறிச்சியை அடைகிறோம். அங்குதான் நாம் அடுத்துச் செல்லவேண்டிய சேவகப்பெருமாள் ஐயனார் கோயில் இருக்கிறது.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

உலாநீர்க் கங்கை ஒருசடைக் கரந்து,
புலால்நீர் ஒழுகப் பொருகளி(று) உரித்த
பூத நாதன் ஆதி மூர்த்தி,
திருமட மலைமகட்(கு) ஒருகூறு கொடுத்துத்,தன்
அன்பின் அமைத்தவன் ஆரூர் நன்பகல்
வலம்புரி அடுப்பா, மாமுத் தரிசி
சலஞ்சலம் நிறைய ஏற்றி, நலந்திகழ்
பவளச் செந்தீ மூட்டிப், பொலம்பட
இப்பியந் துடுப்பால் ஒப்பத் துழாவி,
அடாஅ(து) அட்ட அமுதம் வாய்மடுத்து
இடாஅ ஆயமோ(டு) உண்ணும் பொழுதில்,
"திருந்திழைப் பணைத்தோள் தேமொழி மாதே!
விருந்தின் அடியேற்(கு) அருளுதி யோ" என
முலைமுகம் நோக்கி முறுவலித்(து) இறைஞ்சலின்,
நறைகமழ் எண்ணெய்ச் சிறுநுண் துள்ளிப்
பொங்குபுனல் உற்றது போல,என்
அங்கம் எல்லாம் தான்ஆ யினளே.

திருச்சிற்றம்பலம்

— 11ஆம் திருமுறை, சேரமான் பெருமாள் நாயனார்

குறிப்பு விளக்கம்:

1. 11ஆம் திருமுறை: திருக்கைலாய ஞானஉலா — 'சல்லரை — பம்பை,மேளம்; தகுணிதம் — ஒருவகைத் தோற்கருவி; கல்லவடம் — ஒருவகைப் பறை; மொந்தை — தோற்கருவி; இலயம் — சுருதிலயம்; சலஞ்சல்ம் —வலம்புரிச் சங்கு; தண்ணுமை — உடுக்கை; பேரி — முரசு; துந்துபி — பேரிகை; முருடு — பறை ஆகிய இசைக் கருவிகளின் ஓசை எங்கும் முழங்க'
2. அன்பு, சொக்கநாதபுரம்; பொன்னுசாமி சேர்வை, சுப்பிரமணிய அம்பல காரர், கத்தாளம்பட்டு
3. அருணாசல புராணம்: '..........பன்ன சாலை
புதி(து) அமைத்(து), அகமகிழ்ந்து புறம்பு காக்க
மாதர் எழுவரை அமைத்து.....' — முருகவேள் பன்னிரு திருமுறை, தொகுதி 5, தணிகைமணி உரை

உ

கடிகொள் போதில் தென்றல் அணையும் கருவேற்குறிச்சிப் பெருமாள்

(28. சேவகப் பெருமாள் ஐயனார் திருக்கோயில், கருவேற்குறிச்சி)

பழனிக்குப் பாதயாத்திரை மேற்கொள்வது நகரத்தார்களுக்குப் புதிய தன்று. கி.பி. 1600 — 1608ல் எழுந்த பழனிக்கோயில் நடப்பு அட்டவணைப்படி,[1] அதற்கு முன்னரே பழனியாண்டவனைத் தரி சிக்கும் எண்ணத்தில் அங்கு உப்பு வியாபாரம் மேற்கொண்ட கண் டனூர் நேமங்கோயில் குமரப்ப செட்டியார், தம்முடன் சேர்ந்து கொண்ட மற்ற நகரத்தார்களையும் சேர்த்து, அவ்வியாபாரத்தில் கிடைத்த இலாபத்தில் வேலாயுத சுவாமிக்கு மகமை எழுதி, உப்புச் செட்டிகள் என்று பெயர் பெற்றுத், தொடர்ந்து கலாமடம் ஈசானிய சிவாசாரியாரின் கட்டளைப்படி காவடி எடுத்த காலத்திலிருந்து, நகரத்தார்களின் பாத யாத்திரை நடந்து வருகிறது. கண்டவராயன் பட்டி, சிங்கம்புணரி சேவகப்பெருமாள் கோயில் ஆகிய இடங்களில் காவடி தங்கிச் சென்ற விவரங்கள் இவ்வட்டவணையிலும், ஆனந் தக் களிப்பு, காவடிச் சிந்து ஆகியவற்றிலும் குறிப்பிடப்பெற்றுள்ளன.

ஏறத்தாழ 350 ஆண்டுகளுக்கு முன்னர் நகரத்தார் மேற்கொண்ட இந்தக் காவடிப் பாத யாத்திரையைத் தொடர்ந்து, இப்போது தமிழ் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பல இலட்சம் பேர் பழனி நோக் கிப் பாதயாத்திரை மேற்கொள்ளுகின்றனர்.

அவர்கள் அனைவரும் தங்கள் குலதெய்வங்களை வணங்கி விட்டே பாதயாத்திரை மேற்கொள்கின்றனர்[2] என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது நாம் வந்துள்ள கருவேற்குறிச்சியிலிருந்தும் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாகப் பலர் பழனி யாத்திரையை மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் கருவேற்குறிச்சி கிராமத்திலிருந்து புறப்பட்டு, அவ்வூர்த் தொடக்கப்பள்ளியின் அருகில் உள்ள சேவகப்பெருமாள் ஐயனார் கோயிலுக்கு வந்து வழிபட்டுவிட்டுத், தொடர்ந்து பயணத்தை மேற்கொள்கின்றனர்.[3]

அதன் நினைவாக அவர்கள் தங்களிடம் எஞ்சிய நிதியிலிருந்து கரு வறை முன்மண்டபத்திற்கு இரும்புக்கதவு போட்டுக் கொடுத்திருக்

கின்றனர். அவர்களின அந்த உபயம், நம்மை, நகரத்தார்களின் பாத யாத்திரை வரலாற்றைச் சிறிது நினைவுகூரச் செய்தது.

* * *

சொக்கநாதபுரம், வெற்றியூர் ஆகிய ஊர்களின் இளையாற்றங்குடிக் கிங்கிணிக்கூருடையாரும்,[4] கண்டவராயன்பட்டி, நடராஜபுரம் நகரத்தார்களும், கருவேற்குறிச்சியிலுள்ள சேவகப் பெருமாள் ஐய னாரைக் குலதெய்வமாகக் கொண்டுள்ளனர்.

10.09.1986ல் குடமுழுக்கு விழா நடைபெற்றிருந்தபோதிலும், கோயில் தேடுவாரற்று இருப்பதுபோல் தோற்றுகிறது. கோயிலிலும், விமானங்களிலும் காட்டு — முட்செடிகள் மண்டிக் கிடப்பது இதற் குச் சான்று பகர்கிறது.

நாம் இக்கோயிலுக்கு வரும் வழியிலேயே திருக்கோஷ்டியூரிலிருந்து அர்ச்சகரை அழைத்து வந்தது நல்லதாகப் போய் விட்டது. ஏனெ னில் இங்கு வாரத்தில் ஒருநாள் வெள்ளிக்கிழமை மட்டுமே ஒரு வேளைப் பூசை நடைபெறுகிறது.



ஐயனார் — கறுப்பர் சந்நிதிகள்

கோயிலுக்கு வெளியில் சேதமடைந்து கிடக்கும் மண்குதிரைகளைப் பார்த்துக் கொண்டு, வடக்குச் சுற்றுச் சுவரில் உள்ள நுழைவாயில் வழியே கோயிலினுள் செல்கிறோம்.

பரந்த வெளியில் இரு தனித்தனிக் கோயில்கள் மட்டும் கட்டப்பெற்றுள்ளன. சேவகப் பெருமாள் ஐயனார் சந்நிதியின் முன்பு இரு புறங்களிலும், இரு பெரிய வெண்குதிரைகள் புறப்பட ஆயத்தமான நிலையில் உள்ளன.

அவற்றுக்குச் சற்று முன்னால் யானை வாகனமும், பலிபீடமும் காணப் பெறுகின்றன. வெளியில் சந்நிதியின் முன்பாக இரு சிறிய துவார பாலகர்கள்; இடப்புறம் விநாயகர் அமர்ந்திருக்கிறார்.

சிறிய முன் மண்டபத்தினுள் செல்கிறோம். அர்த்த மண்டபத்திலும் இடப்புறம் விநாயகர் இருக்கிறார். கருவறையில் அழகிய சேவகப்



வல்லபைக் கணேச மாமணியே!

பெருமாள் ஐயனார் மட்டும் அருள்பாலித்து அமர்ந்திருக்கிறார்; அருகில் தேவியர் இல்லை.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை விக்கினம் தீர்க்கும் விநாயகர் பிரம்மச் சாரிதான். இருப்பினும், அவரை வல்லபை கணபதி என்றும், சித்தி புத்தி கணபதி என்றும், அவருக்குரிய திருப்பெயர்கள் அவரைக் குறிப் பிடத் தவறுவதில்லை.

விநாயகர் புராணத்தில் கூறப்பெறும் விநாயகரின் 12 திருவவதா ரங்களில் வல்லப கணபதி என்று ஒன்று; மரீசி முனிவரின் மகளான வல்லபையை விநாயகர் மணந்தார் என்பர்.

கணபதி ஹிருதயத்தில் கூறப்பெறும் 21 திருப்பெயர்களில் சித்தி புத்தி பதி என்பது ஒன்று. தருமதத்தனின் இரு புதல்வியரான சித்தி யையும் புத்தியையும் விநாயகர் மணந்திருப்பதாகச் சொல்வர்.

இருப்பினும் இப்பெயர்களைத் தத்துவார்த்தமாகவே கொள்ள வேண் டும் என்று கூறுவர்.

புத்தியுடன் பக்தி சேர்ந்து சித்தி பெற்றால், ஞானம் கிட்டும் என் பதே இம்மூவரின் தத்துவம் என்பர்.[5]

இது போன்றே ஐயனாரின் இரு தேவியரான பூரணை — புஷ்கலை பற்றியும் கூறுவதுண்டு.

சதாசிவ கோத்திரத்தைச் (குடி) சேர்ந்தவரான ஐயனாரின் இரு மனை வியரில், பூரணை அம்பரீஷ மன்னனின் மகள் என்றும், புஷ்கலை சௌந்திரராஜாவின் மகள் என்றும் கூறுவர்.[6]

இதற்குத் தத்துவ விளக்கம் கூறுவதும் உண்டு. திருமாலும், சிவமும் சேர்ந்த பேரொளி ஐயனார். அவர்களின் திருவருள், ஐயனாரிடம் பூரணமாகவும் (முழுமை), புஷ்கலமாகவும் (புஷ்கலம் — புட்கலம் — நிறைவு) இருப்பதால், அவருக்கு இரு சக்திகள் என்கிறோம். அவற் றையே பூரணாதேவி, புஷ்கலாதேவி என்றும் உருவகப்படுத்துகிறோம் என்பர்.[7]

அடுத்து ஐயனார் சந்நிதியின் வலப்புறமுள்ள கறுப்பர் சந்நிதிக்குச் செல்கிறோம்.

அழகிய கறுப்பர் சிலை கருவறையிலும், வெளியில் பட்டவர் சிலை யும், பலிபீடமும் உள்ளன. பட்டவரைக் கருவேற்குறிச்சிக் கள்ளர் சமு கத்தினர் குலதெய்வமாகக் கொண்டாடுகின்றனர்.[8] இரு சந்நிதிகளுமே முழுமையான கல்திருப்பணி செய்யப்பெற்றவை; விமானங்கள் அழ கிய வேலைப்பாடுகள் நிறைந்தவை.

* * *

கிராமத்தார் நிர்வாகத்தில் உள்ள இக்கோயிலில் சிவராத்திரியன்று சிறப்பாக வழிபாடு நடைபெறுகிறது. சிவராத்திரியன்று பச்சை வாழை பரப்புவார்கள். இருப்பினும் பெரும்பாலான நகரத்தார்கள் காலை யிலேயே சென்று வழிபட்டுத் திரும்பி விடுகின்றனர்.[9]

நகரத்தார்கள் தங்கள் வீடுகளில் நடைபெறும் திருமணங்களுக்கு முன் னும் பின்னும் வந்து வழிபட்டுச் செல்வது உண்டு என்றும், குழந் தைகள் பிறந்தால், இங்கு வந்து முடி இறக்கி வழிபாடு செய்வர் என்றும் அர்ச்சகர் கூறுகிறார்.

ஈராண்டுகளுக்கு ஒருமுறை புரவி எடுப்பு விழா, இரு நாட்களுக்கு நடைபெறுகிறது. இதிலும் நகரத்தார்கள் கலந்து கொள்ளுகின்றனர். இரண்டாவது நாள் மஞ்சுவிரட்டு நடைபெறும்.

வெளியில் உள்ள மரத்தடியில் முன்னோடி இருப்பதாக ஐதிகம். அங்கு மதுபானம் படைக்கப்பெறுவது உண்டு. கள்ளர் சமுகத்தினர் அங்கு பூசை செய்கின்றனர்.

''செங்கழுநீர் சூடும் திருமுடியும், மைவண்ணம்
தங்கொளிசேர் ஐயன் தனியழகும்........''[10] மனமாரக் கண்டு மகிழ்வுடன் திரும்புகிறோம்.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

ஆவகை நாமும்வந்(து) அன்பர்தம்மோ(டு)
ஆட்செயும் வண்ணங்கள் பாடி,விண்மேல்
தேவர் கனாவிலும் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டும்,செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்,
சிவபெரு மான்,புரம் செற்ற,கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்,
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.

திருச்சிற்றம்பலம்

— 8ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

— மணம் நிறைந்த மலரும் பருவத்தை உடைய மொக்குகளில் பட்டு, அவற்றின் மணத்தைக் கொண்டு உலவும் தென்றல் காற்று

1. நகரத்தார் அறப்பட்டயங்கள் — நெற்குப்பை கு.பழ.சு.பழ. சுப்பிரமணியன் செட்டியார் பதிப்பு., குறிப்புரை: டாக்டர் வ.சுப. மாணிக்கனார்
2. லெ. கறுப்பன் செட்டி, தேவகோட்டை
3. கறு. குமார் வேளார், திருக்கோஷ்டியூர்
4. சுப்பிரமணியன் செட்டியார், வெற்றியூர்
5. வினை தீர்க்கும் விநாயகர், கணபதி ஹிருதயம் — நஜன்
6. பெரி.சே.சின்னையா சிவாச்சாரியார், சிங்கம்புணரி
7. மா வயித்திலிங்கன் — 'தென் சபரி' கட்டுரை, ஓம் சக்தி மாத இதழ்
8. கறு. குமார் வேளார்
9. சுப்பிரமணியன் செட்டியார்
10. கோயிலில் காணப்பெறும் பாடல் அடிகள்

உ

நன்பொன் மணியொத்த நயினாத்தான் கறுப்பையா

(29. நயினாத்தான் கறுப்பையா சுவாமி திருக்கோயில், வடவன்பட்டி)

நயினார் என்னும் சொல்லுக்கு ஐயனார், நாயனார்(தலைவர்), இறைவன் என்னும் பொருள்கள் உண்டு. கடவுள் கறுப்பையா என்று குறிப்பிட விரும்பி, நயினாத்தான் கறுப்பையா என்று, இந்தக் கறுப்பண்ண சுவாமிக்குப் பெரியவர்கள் பெயர் இட்டிருக்கலாம்.

நயனம் என்பது கண்ணைக் குறிக்கும் சொல்.


'நெற்றி நயனன் நாமம் நமச்சிவாயவே'[1] என்பர் திருஞான சம்பந்தர். நெற்றியில் கண்ணை (நயனம்) உடையவன் என்பது இதன் பொருள்.

கண்ணை உடையவன் (நயனன்), 'நயனத்தான்' ஆவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. அருள் சுரக்கின்ற, அன்பைப் பொழிகின்ற, தீமை கண்டவிடத்து கோபத்தைக் காட்டுகின்ற, எதிரியைப் பார்க்கும் போது வீரத்தைக் கொப்புளிக்கின்ற கண்ணை உடையவன் (நயனத்தான்) ஆகிய கறுப்பையா என்று, இவருக்குப் பெயர் சூட்டியிருக்கவும் வாய்ப்பு உண்டு.

எப்படியிருப்பினும் தேவகோட்டை (சுமார் 50 புள்ளிகள்), நாட்டரசன்கோட்டை (புள்ளி விவரம் தெரியவில்லை), வலையபட்டி (நாற்பதுக்குக் குறையாத புள்ளிகள்)[2] ஆகிய ஊர்களில் உள்ள இந்தக் கோயிலின் பங்காளிகளுக்குக் கண்ணும் இவரே, கடவுளும் இவரே!

* * *

திருக்கோஷ்டியூர் — சிவகங்கைச் சாலையில் சுமார் 5 கி.மீட்டர் தொலைவில் உள்ள அரளிக்கோட்டை விலக்கில் (வலப்புறம்) திரும்பி 1 கி.மீட்டர் சென்று அரளிக்கோட்டையை அடைந்து, அங்கிருந்து வலப்புறம் திரும்பி 3 கி.மீட்டரில் உள்ள ஏரியூருக்குச் சென்று, அங்கிருந்து மேலூர் செல்லும் நெடுஞ்சாலையில் 4 கி.மீட்டர் பயணம் செய்தால், வடவன்பட்டி கிராமத்தை அடையலாம். ஊரின் எல்லையில், பல ஓட்டு வீடுகளிடையே ஒரு வீடாக, நயினாத்தான் கறுப்பையா சுவாமி கோயில் (வீடு) அமைந்திருக்கிறது.



கோயில் வீடு

மயில்ராயன்பேட்டையைச் சேர்ந்த மல்லாக்கோட்டை கிராமத்தில், மேற்கண்ட 3 ஊர்ப் பங்காளிகளும் முதலில் வாழ்ந்து வந்திருக் கின்றனர். தேவகோட்டை, நாட்டரசன்கோட்டை, வலையபட்டி போன்ற ஊர்களில் சம்பந்தங்கள் செய்த இவர்கள், நாளடைவில் அந்தந்த ஊர்களிலேயே குடியேறிவிட்டனர்.

கால ஓட்டத்தில் சில நகைகள் தொடர்பாகத் தேவகோட்டையில் குடியேறி இருந்த நகரத்தார் குடும்பத்திற்கும், வடவன்பட்டியி லிருந்த அம்பலகாரர் ஒருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு, நாட்கள் செல்லச் செல்ல இரு தரப்புக் குடும்பங்களும் நலிவுறத் தொடங்கின.

பின்னர் குறிகாரர் கூறிய வண்ணம் வடவன்பட்டியில் கோயில் (வீடு) கட்டி, அதில் சின்ன சுவாமி, சந்நியாசி, கன்னிப்பெண்கள், சோனையன், சின்னக் கறுப்பையா, நயினாத்தான் கறுப்பையா, பேச்சியம்மன் ஆகியோரை அங்கு வைத்துக் கள்ளர்களும், நகரத் தார்களும் சேர்ந்து வழிபட்டு வரலாயினர்.

* * *

இப்போது நாம் வந்துள்ள இந்தக் கோயில் (வீடு), 1915 ஆம் ஆண்டில் கட்டப்பெற்றது.

ஒவ்வொரு நாளும் இக்கோயிலின் பூசாரிகளான தேவர்கள், கோயிலில் தீபம் போட்டுச் சாம்பிராணி தூபத்துடன் வழிபாடு நடத்துகின்றனர். யார் வேண்டுமானாலும், எந்த நேரத்திலும் போய், அருகிலுள்ள பூசாரியை அழைத்து வந்து சுவாமி கும்பிடலாம் என்று தெரிவிக்கப்பெற்றதைத் தொடர்ந்து, நாம் இங்கு வந்துவிட்டோம்.

ஆனால், பூசாரி, மற்றும், அவர்தம் குடும்பத்தின் ஆடவர் அனைவருமே அலுவல் காரணமாக அயலூர் சென்று விட்டதால், அடியேனுக்குப் பூசாரியாகும் பாக்கியம் கிட்டுகிறது!

பூசாரி வீட்டுப் பெண்களால் விவரங்கள் அதிகம் தெரிவிக்க இயலாவிட்டாலும், கோயிலைத் திறந்து நம்மை வழிபாடு செய்ய அனுமதிக்கின்றனர்.

முதலில் ஒரு திறந்தவெளி ஓட்டுக்கூடம்.

உள்ளே சென்றதும் பெரியதொரு முகப்பு. அங்குள்ள கதவினைத் திறந்து உள்ளே செல்கிறோம். அங்கு இடப்புறம் சில திருவாசிகள் மட்டும் உள்ளன. நுழைவாயிலுக்கு நேரே ஓர் அறை அமைந்திருக்கிறது. அதுதான் இங்குள்ள மூலவர் கருவறை.

இங்கு மூலவர், சந்நியாசி ஆண்டித் தெய்வம். அவருக்கு அடையாளமாகத் திருவாசி உள்ள பீடத்தின் கீழ் பாதகுறடுகள்; திருவாசியின் வலப்புறம் சந்நியாசிகளின் தண்டம், சுவரோடு சாத்தி வைக்கப் பெற்றுள்ளது. இந்த அறையினுள் இன்னும் ஏராளமான திருவாசிகள் உள்ளன.

இவை, சோனையன், கன்னிமாப் பெண்கள், பெரிய (நயினாத்தான் கறுப்பையா) கறுப்பர், சின்னக் கறுப்பர், பேச்சியம்மன், சின்னையன் ஆகியோருக்கு உரியவை.

மாசி மாதம் முதல் வெள்ளிக்கிழமை தேவகோட்டைப் பங்காளிகள் இங்கு வந்து வழிபடும் போது, வெள்ளித் திருவாசி, அரிவாள் ஆகியவை சாத்தப்பெறும். இந்த நாளில் நகரத்தார் வீடுகளில் பிறந்த குழந்தைகளுக்குத் தொட்டில் கட்டி நேர்த்திக் கடன் செலுத்துவர். தொட்டிலில் பிள்ளையை இட்டுச் சுற்றி வந்ததும் பூசாரி பிள்ளைக்குத் திருநீறு பூசிப், பெற்றோர் குறிப்பிடும் பெயரைக் கூப்பிட்டுப் பெயர் வைப்பார்.

இவ்வாறு கோயிலுக்குச் செல்வதற்கு 10 நாட்கள் முன்பிருந்து தனித்து விரதமாக வாழ்ந்து வர வேண்டும் என்பது இங்குள்ள நியதி.

இரண்டாவது வெள்ளி, ஊர்ப் பங்காளிகள் ஒன்று கூடி வழிபடுகின்றனர்.

இந்த நாட்களில் வலையபட்டிப் பங்காளிகள் இங்கு வருவதில்லை. மற்ற மாதங்களில் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளிலேயே அவர்கள் இங்கு வந்து வழிபடுகின்றனர்.

ஏன் இந்தப் பிளவு? தொடக்கத்திலிருந்தே இது நிலவி வருகிறது; ஏன் என்று தெரியவில்லை; இனி இணைவதற்கும் வாய்ப்பில்லை என்கின்றனர் தேவகோட்டைப் பங்காளிகள்.

மாசி மாதச் சிறப்புப் பூசையின் போது, பூசாரி அரிவாள் மீது நின்று அருள் வாக்குச் சொல்வது உண்டாம்.

இந்நகரத்தார்கள், தங்கள் வீடுகளில் நடக்கும் திருமணம் போன்ற மங்கல நிகழ்வுகள், பிரயாணம், உடல்நலக் குறைவு ஏற்படும் போதெல்லாம், நயினாத்தான் கறுப்பையாவுக்கென 1¼ ரூபாய் அல்லது அதற்குக் கூடுதலாகப் பணம் முடிந்து வைத்திருந்து மாசி மாதத்தில் கோயிலில் சேர்க்கிறார்கள்.

* * *

1922ஆம் ஆண்டுவரை, கிடாய் வெட்டியதும் அதன் உதிரத்தைப் பூசாரி குடித்து விடுவாராம். அவ்வாறு குடிக்காமல், இரத்தத்தை நிலத்தில் விடவேண்டுமென்று நகரத்தார் கோரியதன் விளைவாக இவ்வழக்கம் பின்னர் கைவிடப்பெற்றதாம்.

(அரசாங்கம் உயிர்ப்பலித் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்ததற்கு முன்பு வரை, சில கோயில்களில் நிலவிய ஒரு வழக்கத்தை இங்கு நினைவுகூர்வது ஏற்புடையதாக இருக்கும்.)

கிடாய் பலி கொடுக்கப் பெற்றதும், அதன் இரத்தம் துளிகூடக் கீழே சிந்தாவண்ணம், அருகிலுள்ள சாமியாடி குடித்துவிடுவார்; தொடர்ந்து ஓர் இளநீர் பருகுவார்; தொடர்ந்து இரத்தம்.... இளநீர்.... இப்படியே ஒன்று இரண்டல்ல..... இருபது, முப்பது கிடாய்கள்,.... இளநீர்கள்!

இது மிகவும் அருவருக்கத்தக்கதாக இருக்கிறது என்பதோடு, எப்படி இவ்வளவு இரத்தம், இளநீரைக் குடிக்க முடிகிறது என்பதும் விந்தையாக உள்ளது!

(பெரும்பாலும் ஏதோ ஒரு வெறியினால்) பிறரைக் கொலை செய்வோருக்குக்கூட மரணதண்டனை விதிக்கக்கூடாது என்று, உலக நாடுகள் கண்டித்துப் போராடி வரும் நேரத்தில், ஒன்றும் அறியாத அப்பாவியான உயிர்களை, அன்பே சிவம் என்று அறிவுறுத்தும் சைவ சமயத்தினர், கடவுள் பெயரால் பலியிடுவது சரியா, முறையா, நீதியா, நேர்மையா? நகரத்தார் சமுகம் சிந்திக்க வேண்டும்.

அரசாங்கத் தடை இருந்தும்கூட, இன்னும், சில கோயில்களில் இந்தப் பலியிடுதல் நடந்து கொண்டுதான் இருக்கிறது. முடிந்தால் தடுக்கட்டும் என்று இந்தக் கோயில்காரர்கள் சவாலும் விடுகின்றனர்!

ஐயனாரை அரிகரபுத்திரன் என்கிறோம்; கறுப்பரைத் திருமாலின் அம்சம் என்கிறோம்; காளி, தன் பிள்ளைகளிடத்து அன்புள்ளம் கொண்ட அன்னை; இவர்களா, ஓர் உயிர் நலமாக — வளமாக வாழ, மற்றோர் உயிரைக் காவு கேட்பார்கள்? (ஒரு கோயிலில் திருமாலுக்குக் கூட பலி கொடுக்கிறார்கள் என்பது விந்தையாக இல்லையா?).

வழிபாடு செய்வோரும், செய்விப்போரும், உயிர்ப்பலி கொடுப்பது குறித்துச் சிறந்ததொரு முடிவுக்கு வரவேண்டிய காலம் கனிந்து விட்டது.

இது தவறான கோரிக்கையானால், முறையற்ற விவாதமானால், குலதெய்வங்களும், குலத்தினரும் எளியேனை மன்னிக்கட்டும்!).

★ ★ ★

ஆண்டித் தெய்வத்துக்குத் தேங்காய் உடைத்து வைத்துத் தீபாரா தனை காட்டிவிட்டு அங்கிருந்து அடுத்த கோயிலுக்குப் புறப்படு கிறோம்.

பரவும் சொல்மாலை

நயினாத்தான் கறுப்பையா பாமாலை

நயினாத்தான் கறுப்பையா எங்கள் தெய்வம்!
நாளெல்லாம் எம்முடனே இருக்கும் தெய்வம்!
உயிர்களைக் காக்கின்ற உயர்ந்த தெய்வம்!
ஒன்றாகக் கூடிநாங்கள் வணங்கும் தெய்வம்!
பயிர்காக்கும் மழைபோலப் பிள்ளை எம்மை
பரிவுடனே காக்கின்ற பாசத் தெய்வம்!
உயிரோடு உயிராகக் கலந்த உம்மை
உவகையுடன் போற்றிடுவோம்! வாழ்த்து வாயே!

— கண்ணம்மை அரங்கநாதன்

வடவன்பட்டிப் பேச்சியம்மன் துதி

திங்கள் முகத்தழகி! செவ்வாய் வடிவழகி!
மஞ்சள்நிற ஆடைகட்டி மனங்கவரும் பேரழகி!
எங்கள் குலம்தழைக்க இல்லவிளக் கொளியாய்ப்
பொங்கிவரும் பேச்சியம்மா! புறப்பட்டு வாரும்அம்மா!

— டாக்டர் அர. சிங்காரவடிவேலன்

குறிப்பு விளக்கம்:

1. 3 ஆம் திருமுறை
2. இங்குள்ள தகவல்கள், தேவகோட்டை பெரி.வெ.சுப.சு. சுப்பிரமணியன் எழுதிய 'தேவகோட்டை கறு.மு.குடும்ப வரலாறு' சிறு நூல், மற்றும் அவர் நேரடியாகக் கூறிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

உ

பலர்க்கும் களைகண்ணே, பகச்சால மூர்த்தியே!

(30. பகச்சாலமூர்த்தி ஐயனார் திருக்கோயில், இலங்குடி)

மேல் — கீழ் — பக்கம் என்று எல்லா இடமும் குறுகியன எனத் தோன்றுமாறு பரவியிருக்கின்றன ஏழு மராமரங்கள். அந்த 'ஐந்தினோ(டு) இரண்டில், ஒன்(று) உருவ (துளைக்கும்படி) நின் அம்பு' செல்ல வேண்டும் என்றுதான் வாலி கூறினான். ஆனால் இராமன் எய்த ஓர் அம்பு, 'ஏழு பெரிய மராமரங்களையும் துளைத்து, ஏழு கீழ் உலகங்களையும் ஊடுருவிச் சென்று, அதன் பின்னர் ஏழு என்னும் தொகையுடைய பொருள் வேறு இல்லாமையால்' அவனிடமே திரும்பியது என்று கவிச்சக்கரவர்த்தி கம்பர் கூறுகிறார்.[1]

இவ்வாறு இராமபாணத்தினால் துளைக்கும் சிறப்பினைப் பெற்ற இந்த மராமரத்தை ஆச்சா மரம் என்றும், சால மரம் என்றும் கூறுவர்.

இந்த மரா(சால)மரம், திருமாலின் மோகினி அவதாரத்தில் சிவன் வழி அவதரித்த அரிகரசுதனின் பிறப்பிடமாக இருக்கும் பெருமையையும் பெற்றிருக்கிறது.[2] இதனால் ஐயனார் 'சாலமூர்த்தி ஐயனார்' ஆகிறார்.

ஐயனாரின் அருளாற்றலை அறிய வேண்டாமா? கடவுளை அறுகுணன் என்றும் கூறுவர். அவாவின்மை, ஈச்சுரத்தன்மை, கீர்த்தி, செல்வம், ஞானம், வீரியம்[3] ஆகிய இந்த அறுகுணங்களையும் 'பகம்' என்று சொல்வதுண்டு.

இந்த அறுகுணங்(பகம்)களை உடைய சால மரத்தின் அடியில் அவதரித்த ஐயனார் 'பகச்சாலமூர்த்தி ஐயனார்' என்னும் பெயர் பெறுகிறார்.

ஆனால், இவர் பிறந்தது என்னவோ இங்குள்ள பாலைமரத்தின் அடியில்தானாம். அதனாலேயே இவரைப் ''பாலையடியான் பகச்சால மூர்த்தி'' என்கின்றனர். அங்கிருந்துதான் கருவறைக்குக் கொண்டு செல்லப்பெற்றுப் பிரதிஷ்டை செய்யப்பெற்றார் என்று கூறுகின்றனர்.[4]

* * *

காரைக்குடியிலிருந்து மானகிரி வழியாகத் திருப்புத்தூர் செல்லும் சாலையில் 8 ஆவது கி.மீட்டரில் (இலங்குடி என்னும் பெயர் அறி விப்புப் பலகையும், பேருந்து நிற்கும் இடத்தின் பிரயாணிகள் தங் கும் கூடமும் உள்ள இடத்தில்) இடப்புறம் திரும்பி, ஊருணியைத் தாண்டி நேரே சென்றால், கோயிலும் குளமும் உள்ள இடத்தை அடையலாம்.



கோயிலும் குடவயிற்றன பூதங்களும்

கோயிலுக்கு முன் உள்ள குளத்தைச் சுற்றிலும் காணப்பெறும் அடர்ந்த மரங்கள் நிறைந்த சோலை போன்ற சூழல், ஞான சம் பந்தப் பெருமான் குறிப்பிடும் 'வெயில்புகா'ச் சோலையை[5] நினை வூட்டுகின்றது.

அழகிய சிறிய கோயில். திருக்குட நீராட்டு நடந்து 12 ஆண்டுகள் ஆகியும் (அடுத்த குடமுழுக்கு விழாவுக்கான காலம் நெருங்கிவிட் டது. இம்முறை மலேசியாவில் உள்ள இந்தக் கோயிற்காரர்கள் திருப்பணிப் பொறுப்பை ஏற்கவேண்டும் என்று வேளார்கள் விரும்பு கின்றனர்.) இன்னும் புதுமை மெருகுடன் பொலிகின்றது.

ஒருவேளை ஞானசம்பந்தர், ஞானக்கண்ணால் இக்கோயிலின் அமைப்பைக் கண்டிருப்பாரோ? 'கோயில்வா யிற்கண் குடவயிற் றனசில பூதம்'[6] என்று பாடியிருக்கிறாரே!

ஆம், வெளியே இரு பூதங்கள்; உள்ளே சேமங்குதிரையைத் தாங்கி நிற்கும் 3 பூதங்கள்; போதாததற்குக், கோயிலின் இணைப்புப் பகுதியில் உள்ள பாலைமரத்தை ஒட்டி மற்றொரு பெரிய பூதம்!

ஒருவேளைப் பூசையாக உச்சிக்காலத்தில் மட்டும் பூசை நடைபெறுமாதலால், அந்நேரத்தில் மட்டுமே அர்ச்சகரான வேளார் கோயிலில் இருப்பார். எனவே மானகிரி அல்லது இலங்குடியில் விசாரித்துத் தெரிந்து கொண்டு, தேவையானால் வேளாரை உடன் அழைத்துச் செல்வது நல்லது.

குளக்கரையில் கைலாச விநாயகர் தனியாகக் கோயில் கொண்டிருக்கிறார். அவரை வழிபட்டுக் கொண்டு, மூன்றுநிலை இராஜ கோபுரத்தின்வழி கோயிலினுள் செல்கிறோம். வாயிலின் இருபுறமும் உள்ள பூதங்களுக்கு வந்தனம் செலுத்தத் தவறாதீர்கள். இல்லாவிட்டால் கையில் தாங்கியுள்ள கதாயுதத்தை அவர்கள் சுழற்றி விடக்கூடும்!

இராஜகோபுர நுழைவாசலிலிருந்து கருவறை வரையுமே மண்டபம் அமைக்கப்பெற்றிருக்கிறது. காரைக்குடி நகரத்தார் குடும்பத்தினரால் இம்மண்டபம் இப்போதுதான் புதிதாக அமைக்கப்பெற்றுள்ளதாம்.[7]

மண்டபத்திற்கும், நம் இடப்பக்கமுள்ள மடப்பளிக்கும் இடையில் பெரியதொரு சேமங்குதிரை உள்ளது. இந்த இடத்தில்தான் 3 பூதங்கள் காணப்பெறுகின்றன. பாலைமரத்தை ஒட்டிப் பளபளவென்று தனியாக ஒரு பூதம் இருக்கிறதே, அதன் கதையும் இங்கிருந்துதான் தொடங்குகிறது.

சண்முகநாதபுரம் நகரத்தார் குடும்பத்தினர், திருக்குட நீராட்டுக்கு முன்னர் இந்தச் சேமங்குதிரையைப் புதுப்பித்த நேரத்தில், முன்னரும் அங்கு இருந்த மூன்று பூதங்களில் ஒன்று சேதமுறாமல் நன்றாக இருந்ததால், அதை எடுத்துச் சுவர் ஓரமாக வைத்துக், காற்றினால் சாய்ந்து விடாதிருக்கக் கயிற்றினால் கட்டி வைத்தார்கள். 'என்னை மழையிலும் வெயிலிலும் கட்டிப் போட்டுப் பட்டினியும் போட்டு விட்டார்களே' என்று பலருடைய கனவில் பூதம் குறைபட்டுக் கொள்ள, முதன் முதலில் அதைச் செய்து வைத்தவர்களான கோனாபட்டு நகரத்தார் குடும்பத்தினர், கூடம் ஒன்று அமைத்து, அதில் புதிய வண்ணத்தில் பொலிவுடன் திகழும் பூதத்தை வைத்துப் பூசித்து வருகின்றனர்.[8]

கல் தூண்களைக் கொண்ட மண்டபத்தில், வழக்கம்போல் பீடத்தில் யானை, பலிபீடம் ஆகியவையும், பீடத்தின்கீழ் ஒரு பலிபீடமும் உள்ளன. மண்டப மேல் விதானத்தில் பன்னிரு இராசிகளும் வேலைப்பாட்டுடன் பொறிக்கப்பெற்றுள்ளன.

முழுவதும் கல் திருப்பணியான கருவறையின் முன்னர், துவார பாலகர் காட்சி தருகின்றனர். உள்ளே அம்பிகையர் புடைசூழ அமர்ந்திருக்கிறார் பகச்சாலமூர்த்தி ஐயனார்.

'இருகரமும் கூப்பிநின்று ஐயனாரப்பா! — உன்றன்
இணையடியில் மனம்பதித்தோம் ஐயனாரப்பா!'[9] என்று பகச்சால மூர்த்தியிடம் பணிந்து நிற்கிறோம்.

இக்கோயிலில்தான் நாம் முதன்முதலில் ஐயனார் கோயில் ஒன்றில் சண்டேசுவரரைக் காண்கிறோம். வழக்கமாகச் சிவாலயங்களில் கருவறையின் இடப்புறத்தில் (வடக்கே) கோமுகத்தை (அபிடேகத் தீர்த்தத் தொட்டிக்கு) அடுத்து, இவருடைய சிறிய சந்நிதி அமைந் திருக்கும். அந்த முறையில் இங்கும் சண்டேசுவரர் சிலை அமைக் கப் பெற்றிருக்கிறது.

பெரிய புராணத்தில் சண்டேசுர நாயனார் புராணம் முக்கியமான தொன்று. விசாரசருமன் என்னும் அந்தணச் சிறுவன், தன் சிவ பூசைக்கு இடையூறாய் இருந்த தந்தை எச்சதத்தனின் காலை வெட்ட, இறைவன் காட்சி தந்து, அவருக்குச் சண்டேசுரபதம் தந்ததை இப் புராணம் விரிவாகக் கூறுகிறது.

இது ஒரு பதவிதான். சிவபெருமான், அம்பிகை, விநாயகர், முருகன், சூரியன் ஆகியோருக்கு அந்தந்த மூர்த்திகளை நெருங்கி, அந்தந்த நிலையில் சண்டீசபதம் உண்டு. அவரவர், அந்தந்த மூர்த்திகளை வழிபடுவோருக்கு அவ்வவ்வழிபாட்டின் பயனை நல்குவர். சூரிய மூர்த்தியிடம் உள்ள சண்டிகேசர் தேசச்சண்டர் என்றும், அம்பிகை யிடம் உள்ளவர் நீலச்சண்டர் என்றும், விநாயகரிடம் உள்ளவர் ஆம்போச்சண்டர், முருகனிடம் உள்ளவர் மாத்ருச்சண்டர், சிவ பெருமானிடத்து உள்ளவர் தொனிச்சண்டர் என்றும் பெயர் பெறு வர்.[10]

ஒவ்வொரு கோயிலிலும் கோயிலின் சொத்துகளைக் கண்காணிக் கும் முக்கிய அதிகாரி சண்டேசுவரர். முன்னாட்களில் அவர் பெய ராலேயே கோயில் வரவு — செலவுக் கணக்குகள் எழுதுவதும், விலை கொள்வதும், விற்பதும் நடைபெற்று வந்திருக்கின்றன.[11]

தென் பிராகாரத்தில் நொண்டிக் கறுப்பர் (இச்சந்நிதி காரைக்குடி நகரத்தார் குடும்பத்தினரால் இடைப்பட்ட காலத்தில் கட்டப்பெற் றதாம்.[12]), பேச்சி, பத்ரகாளி, இராக்காயி, மீண்டும் நொண்டிக் கறுப்பர், முத்துக்கறுப்பர், பெரிய கறுப்பர், சின்னக்கறுப்பர்,[13] முனீஸ்வரர், ஆஞ்சநேயர், சப்த கன்னியர் ஆகியோருடன், நாச்சி யப்ப பண்டித (வேளா)ரின் பெரிய சிலையும், இராமசாமி செட்டி யாரின் சிறியதொரு சிலையும் உள்ளன.

இவற்றுடன், இருபுறமும் பெண்களுடன் தேனாண்டாள் குப்பாஞ் செட்டியாரின் சிலையும் உள்ளது. செட்டியார்களின் சிலைகளுக் குப் பூசை நடத்துவதற்காக அந்தந்தக் குடும்பத்தார் கணிசமான தொரு தொகையைக் கொடுத்து வருகின்றனராம்.

மேற்குப் பிராகாரத்தில் மூஷிஹம், பலிபீடத்துடன் கற்பகப் பிள்ளை யார், மூஷிஹத்துடன் கன்னிமூலை கணபதி, சித்திவிநாயகர், வீரபத்திரர், கறுப்பர் ஆகியோரும், வடமேற்கு மூலையில் வள்ளி — தெய்வயானையுடன் கூடிய சுப்பிரமணியர், வடகிழக்கு மூலையில் பைரவர் ஆகியோரும் பரிவார தெய்வங்களாக அமைந்துள்ளனர்.

அடுத்துக் கோயிலின் வலப்புறம் (தெற்கே) உள்ள திறந்த வெளிப் பகுதிக்குச் செல்கிறோம்.

நாகதாளி மரத்தின் அருகில் பெரியதொரு கல் மேடை; அதில் இரு பீடங்கள்; அரிவாள், திரிசூலம் ஆகியவை அருகே உள்ளன.

இவற்றில் தெற்கே உள்ளது மேடைக் கறுப்பர் என்றும், வடக்கே உள்ளது மேடைக்காளி என்றும் கூறுகின்றனர்.

மேடைக்காளிக்கு அர்ச்சனை செய்யும்போது, எத்துணை முறை சொல்லிக் கொண்டார்களோ, அத்துணை முறை 65 காசு வீதம் மேடையில் வைப்பார்களாம்.[14] நேர்ந்து கொண்டதற்கு ஏற்ப 11 ரூபாய் முதல் 101 ரூபாய் வரை வைப்பவர்களும் உண்டு. இந்தச் சந்நிதியைச் சிறப்புடையது என்றும், பெண்கள் நேரடியாக வந்து வழிபடாமல், பின்னால் சற்றுத் தள்ளி நின்றே தரிசிப்பர் என்றும் கூறுகின்றனர். நேர்ந்து கொண்டவர்கள் காளிக்கும், கறுப்பருக்கும் சேலை, வேட்டி சாத்துவதும் உண்டு.[15]

இதற்கு முன்னால் (மேற்கே)தான், இக்கோயிலின் தலமரமான பாலை மரம் இருக்கிறது. மேடை அமைத்து, இதனையும் பாலையடியான் என்று கூறி வணங்குகின்றனர். இதன்வழிதான், பகச்சாலமூர்த்தி பாலையடியான் என்னும் பெயரை இணைத்துக்கொண்டிருக்கிறார்.

* * *

01.07.1982 கணக்குப்படி, 24 ஊர்களைச் சேர்ந்த 2374 புள்ளிகள் இக்கோயிலைக் குலதெய்வக் கோயிலாகக் கொண்டுள்ளனர். ஊர்களும், புள்ளிகள் விவரமும் வருமாறு:
அமராவதிபுதூர் (23 புள்ளிகள்), அரண்மனைச் சிறுவயல் (8), ஆத்தங்குடி (21), ஆறாவயல் (24), உ.சிறுவயல் (134), கடியாபட்டி (3), கண்டரமாணிக்கம் (109), கண்டவராயன்பட்டி (இளையாற்றங்குடி ஒக்கூர், கழனிவாசற் பிரிவினர் — 100), கண்டனூர் (2), கல்லல் (6), காரைக்குடி (இளையாற்றங்குடி ஒக்கூர், வைரவன் கோயில் பெரிய வகுப்பினர் — 670), குழிபிறை (43), கூத்தலூர் (35), கோனாபட்டு (157), சிராவயல் (36), சொக்கநாதபுரம் (பிள்ளையார்பட்டியினர் — 13), தேவகோட்டை (690), நாச்சியாபுரம் (இலுப்பைக்குடியினர் — 80), நெற்குப்பை (3), புதுப்பட்டி (25), மானகிரி (28), மிதிலைப்பட்டி (மாத்தூர் குளத்தூர் — 48), வலையபட்டி (21), விராமதி (இளையாற்றங்குடி ஒக்கூர் — 95).[16]

இவர்களுடன் அமராவதிபுதூர், தேவகோட்டை ரஸ்தா ஒற்றைவடச் செட்டியார்களும் இக்கோயிலில் வழிபாடு செய்கின்றனர்.[17]

இவர்கள் அனைவரும் சேர்ந்து ஆண்டில் ஒருநாள் கோயிலுக்கு வந்து வழிபடுவது கிடையாது. காரைக்குடி நகரத்தார்கள் தை அல்லது மாசி மாதத்தில் வந்து வழிபடுகின்றனர்; சிறுவயல் நகரத்தார்கள் சித்திரை அல்லது ஆடியில் வருவதுண்டு; தேவகோட்டைப் பங்காளிகள் தை மாதத்தில் வருவர்.[18]

நகரத்தார் வீடுகளில் நடைபெறும் திருமணங்களுக்குச் சில நேரங்களில் (நகரத்தார்கள் விரும்பிச் சொன்னால்), வேளார்கள் சென்று விபூதி கொடுத்து வருகின்றனர்.

திருமணத்திற்கு முன்னர் கோயிலுக்குச் சென்று அபிஷேகம் செய்து தீர்த்தம் எடுத்துச் செல்லும் வழக்கமும் இவர்களிடையே இருந்து வருகிறது.[19]

நகரத்தார் குடும்பங்களில் பிள்ளைகள் பிறந்தால், இங்கு வந்து முடிஇறக்கிப் பெயர் கூப்பிடும் வழக்கம் நிலவுகிறது. இதற்குக் காணிக்கையாக ஐந்து ரூபாய் கொடுப்பார்கள் என்கிறார் அர்ச்சகர். குழந்தைகளுக்கு முடி இறக்கும் வழக்கம் முன்னர் இருந்தது; இப்போது இல்லை; மேலும் பிள்ளைகளுக்குச் சுவாமி பெயர் வைப்பதும் இல்லை என்று நகரத்தார்கள் கூறுகின்றனர்.[20]

இங்கு சிறப்புடன் கொண்டாடப்பெறும் மாசிமாதச் சிவராத்திரியின்போது, இக்கோயிலைக் குலதெய்வக் கோயிலாகக் கொண்ட நகரத்தார்களும் வந்து வழிபாடு செய்கின்றனர். புரவிஎடுப்பு அத்தி பூத்தாற் போல் எப்போதாவதுதான் நிகழ்கிறது.

ஈராண்டுகளுக்கு ஒருமுறை வைகாசி மாதத்தில் சுவாமி புறப்பாடு உண்டு. வேறு கோயில்களிலிருந்து சப்பரம் கொண்டு வந்து இங்குள்ள உற்சவரை வைத்து நிகழும் இவ்விழா, ஒரு நாள் திருவிழாவாகக் கொண்டாடப்பெறுகிறது.[21] இக்கோயிலில் உற்சவமூர்த்தி இல்லை என்றும் சொல்லப் பெறுகிறது.[22]

* * *

இதுவரை இக்கோயிலில் மும்முறை திருக்குடநீராட்டு நிகழ்ந்திருக்கிறது. முதல் குடமுழுக்கு நடைபெற்ற நாள் விவரம் யாருக்குமே தெரியவில்லை. 08.06.1930ல் இரண்டாவது குடமுழுக்கும், 01.07.1982ல் மூன்றாவது குடமுழுக்கும் நடைபெற்றிருக்கின்றன.

82ஆம் ஆண்டில் நடைபெற்ற குடமுழுக்கின்போது, காரைக்குடி, கண்டவராயன்பட்டி, சண்முகநாதபுரம், அமராவதிபுதூர் நகரத்



'இராசி'யான மேல்விதானம்

தார்கள் தனித்தனியாகத் திருப்பணிப் பொறுப்புகளை ஏற்று இராஜ கோபுரம், முன்மண்டபம், விமானங்கள், மடப்பளி, சேமங்குதிரை, முன்னோடியான் சந்நிதி ஆகியவற்றைப் பழுது பார்த்தும், புதுப் பித்தும் உதவியுள்ளனர்.[23] மொத்தத்தில் நகரத்தார்களிடம் புள்ளி வரியும், நிதிவசூலும் செய்து திருக்குடநீராட்டு நடைபெற்றிருக் கிறது.[24]

இங்கு, கிராமத்தில் உள்ள நகரவிடுதி பராமரிப்பில்லாமல் பழைமை யாகி விட்டபோதிலும்,[25] சில குடும்பத்தினர் வேண்டுதல் காரண மாக இங்கு விடுதியில் தங்கியிருந்து வழிபாடு செய்வது உண்டாம்.[26]

பரவும் சொல்மாலை

1. பொன்ஒளி ததும்புநின் கோயில்தனி லே,தினம்
புகலரிய தேவர் ஒருபால்,
பூதகணர், விஞ்சையர், முனிவர்,யோ கியருடன்,
புகழ்தவத் தோர்கள் ஒருபால்,
மன்னுகலை வல்லவர்கள், உலகாளும் வேந்தர்,எம்
மகுடதன வணிகர் ஒருபால்,
மற்றும்உள மாந்தர்ஒரு பால்நின்று, தம்குறை
வழுத்த,அன் போடு கேட்டு,
நன்னயத் துடன்அவர்கள் வேண்டுவரம் ஈந்திடும்
நாயகா! தமியன் இந்த
நானிலம் தனில்உறும் வேதனைஎ லாம்தீர
நாத!நீ களைகண் ஐயா!
பன்னரிய நீலநிற வண்ணமொ(டு) இலங்குடிப்
பதியில்இனி(து) ஆக வாழும்
பாலைஅடி யான்என்னும் எங்கள்குல தேவாம்
பகற்சால மூர்த்தி அருளே!

— அருள்மிகு பகற்சாலமூர்த்தி ஐயனார் பதிகம்
இயற்றியவர்: தேவகோட்டை
க.முரு.இராம.சோம. இராமநாதன் செட்டியார்

2. பூவுலகில் மெய்ஞ்ஞான தெய்வம்என நின்துணைப்
பொன்பதம் பரவும் உரவோர்
புத்திரர்கள், கல்வி,நிறை செல்வமொடு, சுற்றம்
பொருந்திவாழ்(வு) உறுதல் கண்டும்,
தீவினையி னேன்ஒரு கணப்போதும் உனதுபுகழ்
செவிமடுத் திடவும் நினையேன்,
சிந்தைமகிழ் வோடுதுதி பேசிடேன், இனிஎத்
திறம்கொண்(டு) எனக்(கு)அ ருள்வாய்?
தேவர்துதி பூரணா தேவியொடு புட்கலா
தேவிக்கும் உரிய கணவா!

திண்கொண்ட வெள்ளைவா ரணம்ஏறு சேவகா!
செம்பொன்ம ணிமாட வரையின்
மாவகிர் நெடுங்கண்அ ரமங்கையர்கள் ஆடும்நல்
வளம்திகழ் இலங்கு டிக்கண்
மறைவழுக் காமெய்யர் மகிழ்வுறப், பார்உய்ய
வளர்பகச் சால ஐயனே!

அருள்மிகு பகச்சாலமூர்த்தி ஐயனார்
மீது ஆசிரிய விருத்தம் —
இயற்றியவர்: நாச்சியாபுரம் இராமையாச் செட்டியார்
(கூத்தலூர் இராமையா)

குறிப்பு விளக்கம்:

— பலர்க்கும் களைகண்ணே — அனைவர்க்கும் பற்றுக்கோடாய் (ஆதரவாய்) இருப்பவனே!

1. கம்பஇராமாயணம் — கிட்கிந்தா காண்டம்
2. 'மாலும் எந்தையும் மாண்பொடு கூடியே
   சால மேவு தனிநகர்....' — கந்தபுராணம்
3. ஐஸ்வர்யம், வீரியம், புகழ், திரு, வைராக்கியம், ஞானம் என்றும் இவற்றைக் கூறுவதுண்டு
4. லெ. பழனியப்ப வேளார், இலங்குடி
5. 3 ஆம் திருமுறை
6. 'கோயில் நுழைவாயிலின்கண் குடம்போலும் வயிற்றை உடைய பூதகணங்கள் நிற்கும்' — 3 ஆம் திருமுறை
7. எஸ்.பி.வி. இராமநாதன் செட்டியார், காரைக்குடி
8. லெ. பழனியப்ப வேளார்
9. இலங்குடி ஐயனார் கோயில் திருக்குட நீராட்டு மலர் 1982
10. பெரிய புராணம்— சிவக்கவிமணி உரை
11. சைவ சமய வளர்ச்சி — டாக்டர் மா. இராசமாணிக்கம்
12. லெ. பழனியப்ப வேளார்
13. கறுப்பணசாமியின் பல பேதங்கள்தாம் பெரிய கறுப்பன், சிறிய கறுப்பன், மண்டைக் கறுப்பன், தோட்டிக் கறுப்பன் முதலியவை. இக்கறுப்பண தெய்வங்களுக்குப் பிரதான தெய்வம், அழகர்மலையில் உள்ள பதினெட்டாம் படிக் கறுப்பணசாமியே. — அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் வரலாறு
14. எஸ்.பி.வி. இராமநாதன் செட்டியார்
15. எஸ்.ஆர்.எம். மெய்யப்ப செட்டியார், காரைக்குடி
16. திருக்குட நீராட்டு மலர் 82, மற்றும், தகவல் கொடுத்தோர் தெரிவித்துள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, 01.07.82 வரையுள்ள புள்ளி விவரம் இங்கு கொடுக்கப்பெற்றுள்ளது
17. எஸ்.பி.வி. இராமநாதன் செட்டியார்
18. லெ. பழனியப்ப வேளார்
19. சொ. மாணிக்கம் செட்டியார், கண்டவராயன்பட்டி
20. எஸ்.ஆர்.எம். மெய்யப்ப செட்டியார்
21. லெ. பழனியப்ப வேளார்
22. எஸ்.ஆர்.எம். மெய்யப்ப செட்டியார்
23. எஸ்.பி.வி. இராமநாதன் செட்டியார்
24. எஸ்.ஆர்.எம். மெய்யப்ப செட்டியார்
25. எஸ்.ஆர்.எம். மெய்யப்ப செட்டியார்
26. எஸ்.பி.வி. இராமநாதன் செட்டியார்

உ

மாலமுதப் பெருங்கடலாம் மஞ்சணத்திக் கறுப்பர்

(31. மஞ்சணத்திக் கறுப்பர் திருக்கோயில், கொரட்டி)

சிவனைப் பரம்பொருளாகக் கொண்ட சைவம், திருமாலை வழி படும் வைணவம், சக்தி வழிபாடாகிய சாக்தம், விநாயகரை முதன்மையாகக் கொண்ட காணாபத்யம், முருகனை வழிபடுவோரின் கௌமாரம், சூரிய வழிபாட்டினைக் கொண்ட சௌரம் ஆகியவை அறுசமயங்கள் (ஷண்மதம்) எனப்பெறும். இவற்றில் சைவம், வைணவம், சாக்தம் ஆகிய மூன்றும், ஏனையவற்றைத் தம்முள் அடக்கிக் கொண்டு, தனித்தன்மையுடன் விளங்கிய போதிலும், சைவமும், வைணவமுமே தென்னிந்தியாவில் செழித்தோங்கி வளர்ந்தன.

பின்னர் ஏற்பட்ட பௌத்த — சமண சமயங்களின் தாக்கத்தால் தமிழகத்தில் சைவ — வைணவ சமயங்கள் நிலை குலைந்து போயிருந்த நேரத்தில் சைவ சமய நாயன்மார்களும், வைணவ சமய ஆழ்வார்களும் தோன்றி, இவ்விரு சமயங்களையும் நிலைபெறச் செய்தனர்.

இருப்பினும் இவ்விரு சமயத்தினருமே, தத்தம் சமயமே மேலானது என்று வாதிட்ட நேரத்தில், சைவ — வைணவ சமயங்களிடையிலும் பிளவு ஏற்பட்டது.

அருணகிரியார் போன்றவர்கள் தோன்றிச் சமயக் காழ்ப்பு உணர்வுகளை அகற்ற முயன்றாலும்,[1] அது சைவத்தில் மட்டுமே பலனைத் தந்தது.


விளைவு? எம்மதமும் சம்மதம் என்று சைவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்; பிறர் அந்த மனப் பக்குவத்தை அடையவில்லை.

இந்தச் சமரச அலையில் நகரத்தார் சமுகம் சிக்கிவிடக்கூடாது என்பதற்காகவே, ''நகரத்தார்கள் சிவ மதத்திலேயே இருக்கிறது, அந்நிய மதங்களில் சேரக்கூடாது'' என்று, நகரத்தார் சாதிமுறை நியாயங்கள்[2] விதிமுறை உருவாக வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

ஆனால் எந்த விதிமுறைதான் நிலைத்து நின்றது, இது நிலைபெற? நகரத்தார் சமுகத்தில் வைணவ அலை வேகமாக அடித்துப், பல குடும்பங்களைத் தன் பக்கம் இழுத்துக் கொண்டது.

சிவபூசை செய்து, திருமுறைகளை ஓதிச், சிவாலயங்களைக் கட்டிய வர்கள், திருமாலையே குலதெய்வமாகக் கொண்டு, பெருமாள் கோயில்களைக் கட்டிப் புரட்டாசி மாதத்தில் இராமாயணம் படித்து, வைணவப் பெயர்களை ஏற்று.... நெற்றியில்தான் திருமண்ணைக் (நாமம்) காணவில்லை என்னும் அளவுக்கு மாறி விட்டார்கள்.

''சைவர்களாகிய நாமெல்லாம் நம் சமயக் கடவுளான சிவபிரானை அன்போடு வழிபடுதல் வேண்டும். அங்ஙனம் வழிபடுங்கால், இதர தெய்வங்களைப் பழித்தல் கூடாது. நம் தெய்வத்தைப் போற்று வோமாக''[3] என்னும் அறிவுரைதான் இப்போது நமக்குத் தேவைப் படுகிறது.



கொம்படிக் கோயில்

(புலால் உண்ணுதல், சிறுதெய்வ வழிபாடு, தெய்வங்களுக்கு உயிர்ப் பலி இடுதல், மது அருந்துதல் ஆகியவை, சைவ சித்தாந்தக் கோட் பாட்டுக்கு முற்றிலும் விரோதமானவை. இருப்பினும், இவற்றை மேற்கொள்வோரும் திருநீறு அணிவதாலும், சிவன்— முருகன் — விநாயகர் முதலிய சிவமூர்த்தங்களை, மற்ற எல்லாத் தெய்வங் களுக்கும் மேலானவை எனக் கொள்வதாலும், தெரிந்தோ தெரி யாமலோ திருமுறைகளையும், சித்தாந்த சாத்திரங்களையும் பிரமாண மாக ஏற்றுக் கொள்வதாலும், படிமுறையில் இவர்கள் திருந்துவர்

என்னும் கருத்தில், இவர்களும் சைவராகவே ஏற்றுக் கொள்ளப் பெறுகின்றனர்.[4])

* * *

காரைக்குடி, கானாடுகாத்தான் உ.சிறுவயல் ஆகிய ஊர்களின் மாத்தூர் அரும்பாக்கூர்ப் பிரிவினரான சுமார் 70 புள்ளிகள் வழி படும் கொரட்டி மஞ்சணத்திக் கறுப்பரின் (கொம்படிக்) கோயி லுக்கு இப்போது செல்கிறோம்.

அவர்கள் ஆடி மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை அங்கு சிறப்பு வழிபாடு செய்கின்றனர். அதைக் காணத்தான், இலங்குடி பகச் சாலமூர்த்தி ஐயனார் கோயிலிலிருந்து புறப்படுகிறோம்.

இலங்குடியிலிருந்து மீண்டும் மானகிரி — திருப்புத்தூர் சாலைக்கு வந்து அங்கிருந்து 1½ கி.மீட்டரில் வலப்புறம் பிரியும் கொரட்டி செல்லும் பாதையில் திரும்பி, இடப்புறம் கண்மாய், வலப்புறம் வயல்களுக்கு இடைப்பட்ட கண்மாய்க் கரை மண்சாலை வழியே சென்றால் கொரட்டி கிராமத்தை அடையலாம்.

கிராமத்துக்குள் நுழையும் முன்னரே, மிகப் பழைமையான — சேத முற்ற சிவன் கோயில் ஒன்று காணப்பெறும். அதைக் கடந்து இடப் புறம் சென்றால், பழைய பெருமாள் கோயில் ஒன்றும் அதே சேத மடைந்த நிலையில் காணப்பெறுகிறது. அதன் எதிரில் உள்ள பெரிய ஊருணிக்கரையில், மேடை கட்டப்பெற்ற ஒரு மஞ்சணத்தி மரம், அதனுடன் இரண்டு மூன்று வேப்பமரங்கள் ஆகியவை கம்பி அடைக்கப் பெற்றுக் காணப்பெறும் இடம்தான் மஞ்சணத்திக் கறுப் பரின் (கொம்படிக்) கோயில்

* * *

முதல்நாள் அரியக்குடி சீனிவாசப் பெருமாள் கோயிலில் வழி பட்ட பின்னர், அடுத்தநாள் இங்குள்ள பெருமாள் கோயிலில் சிறப்பு வழிபாடு செய்து, தொடர்ந்து இந்த மஞ்சணத்திக் கறுப் பருக்கு ஒருநாள் வழிபாடு செய்கின்றனர்.

கொரட்டியிலிருந்து சிறுவயலுக்குச் சென்று குடியேறிய பங்காளி களில் ஒரு பெண் இந்த இடத்தில் தற்கொலை செய்து கொண்ட தாம். அதைத் தொடர்ந்து இந்த மஞ்சணத்தி மரத்தையே பதினெட் டாம்படிக் கறுப்பராகக் கருதி, இங்கு வழிபாடு செய்து வருகிறார் கள்.[5]

இந்தக் கொம்படிக் கோயிலுக்குரிய அரிவாள்கள், சூலாயுதங்கள் ஆகியவற்றைச் சிறுவயலில் வைத்திருக்கிறார்கள். ஆடி மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை அவற்றை இங்கு கொண்டு வந்து, மஞ்சணத்தி மரத்துக்கே பால், தயிர் அபிஷேகங்கள் செய்து, கறுப்பருக்கென உள்ள தங்கப் பூணூல், வெள்ளி — தங்கத்தினாலான அரிவாள் கள், பிரம்பு, பாதகுறடுகள் மற்றும் நகைகளைக் கொண்டு மரத் துக்கு அலங்காரங்கள் செய்து, மாவிளக்கு வைத்து அன்னதானம் செய்து, சிறப்புப் பூசை நடத்துகிறார்கள். ஐயர்(ஐயரா, ஐயங் காரா?)தாம் முதல் தீபாராதனை செய்வாராம். இங்கு நிவேதனம் செய்யப் பெறும் பள்ளயம் பிரிக்கப்பெறுவதோ, மாலைகள் அகற் றப் பெறுவதோ கிடையாது.

பல கொம்படி ஆலயங்களைப் போன்றே, இங்கும் இந்த ஒருநாள் சிறப்பு வழிபாட்டின்போது கொட்டகை போடுவதற்கு இறைவனின் திருவுளச் சம்மதம் கிட்டுவதில்லை. (ஒருமுறை கொட்டகை போட்டு அது தீப்பற்றிக் கொண்டதாம்!) பங்காளிகள் தங்குவதற்காக விடுதிகள் கட்டமுயன்றும் முடியவில்லை.[6]

இந்த ஒருநாள் விழாவின்போது நிறையப் பழங்கள் நிவேதனம் செய்யப்பெறுகின்றன; தேங்காய்கள் நூற்றுக்கணக்கில் (இப்போதும் அறுநூறுக்குக் குறையாமல்) உடைக்கப்பெறுகின்றன. திருமணம் ஆகிய முதலாமாண்டில், நகரத்தார் குடும்ப மாப்பிள்ளை — பெண்கள் கட்டாயம் இங்கு வந்து வழிபடுவர். பிள்ளைப் பேறுக்காக நேர்ந்து கொள்பவர்கள், வெள்ளி (சில நேரங்களில் தங்க)ப் பிள்ளைகளும் காணிக்கையாகக் கொடுப்பார்களாம்.

பெருமாள் கோயிலைப் பழுதுபார்த்துத் திருப்பணி செய்ய முயன்று வருகின்றனர் என்று சொல்லப்பெறுகிறது. (சிவனுக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கவில்லை!)

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

சடையே, நீரகம் ததும்பி நெருப்புக் கலிக்குமே,
மிடறே, நஞ்சகம் துவன்றி அமிர்து பிலிற்றுமே,
வடிவே, முளிஎரி கவைஇத் தளிர்தயங் கும்மே,
அடியே மடங்கல் மதம்சீறி மலர்பறிக் கும்மே,
அஃதான்று, இனையவென்(று) அறிகிலம் யாமே, முனைதவத்
தலைமூன்று வகுத்த தனித்தாள்
கொலையூன்று குடுமி நெடுவே லோயே!

திருச்சிற்றம்பலம்

— 11 ஆம் திருமுறை,
இளம்பெருமான் அடிகள்

குறிப்பு விளக்கம்:

— மாலமுதப் பெருங்கடல்— அன்பு மயமாகிய பெரிய கடல்
1. டாக்டர் எஸ்.எம். பொன்னையா, கோலாலம்பூர் — சொற்பொழிவிலிருந்து
2. நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு — வயிநாகரம் அ. இராமநாதன் செட்டியார் தொகுத்தது
3. பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்
4. சித்தாந்த வித்தகர் முரு.பழ. இரத்தினம் செட்டியார்
5. திருவாட்டி உமையாள் ஆச்சி, உ. சிறுவயல்
6. திருவாட்டி உமையாள் ஆச்சி

உ

அருமந்த நன்மைதருவார் ஆரடி சாத்தையனார்

(32. ஆரடி சாத்தையனார் திருக்கோயில், கொரட்டி)

கொரட்டி கிராமத்தை ஒட்டி இரு ஐயனார் கோயில்கள் உள்ளன. இருவருமே சாத்தையனார்கள்தாம். ஒரு கோயிலுக்குக் கொரட்டியிலிருந்து கிழக்கே செல்ல வேண்டும்; மற்றதற்கு மேற்கே செல்ல வேண்டும். இரு கோயில்களிலுமே, சிறிது வித்தியாசமான ஒவ்வொரு சிலைகள் உள்ளன.


* * *

இராமநாமம் ஒலிக்கும் இடமெல்லாம், இராமகீர்த்தனம் நடக்கும் இடமெல்லாம், இராம தூதனான அனுமன், நம் கண்ணுக்குத் தெரியாமல் நின்று, தாரை தாரையாகக் கண்ணீர் சொரிந்து கேட்டுக் கொண்டிருப்பார் என்று சொல்வார்கள். அவரைப் போன்றதொரு தீவிரமான பக்தர் வேறு யாரும் இருக்க இயலாது என்றும் கூறுவார்கள். தம் நெஞ்சைப் பிளந்து அதில் எந்த நேரமும் இராமனைக் குடிவைத்திருப்பதை உலகுக்கு உணர்த்தியவர் என்றுகூடச் சொல்வார்கள்.

சஞ்சலத்துக்குப் (நிலையில்லாமை) பெயர்பெற்ற கபி (குரங்கு) இனத்தில் பிறந்த ஆஞ்சநேயர், எந்த நேரமும் சஞ்சலித்துக் (அசைந்து) கொண்டிருக்கும் வாயுவின் புத்திரர். (புஞ்சிகஸ்தலை என்னும் தேவலோகத்துப் பெண், சாபத்தால் அஞ்சனை என்னும் வானர மங்கையாகிக், கேசரி என்பவனை மணந்திருந்தாள். ஒரு நாள் வாயுதேவன், அவளது உண்மை உருவைக் கண்டு கூட, அவனது அம்சத்தால் ஆஞ்சநேயர் பிறந்தார்.)[1]

அரிகர புத்திரரான ஐயனார் கோயில்கள் பெரும்பாலானவற்றில், இந்த ஆஞ்சநேயர் இடம் பிடித்துக் கொண்டிருக்கிறார். எல்லாக் கோயில்களிலுமே இவர் 'சிவனே' என்று நின்று கொண்டிருப்பார். (சிவன் கோயில்களிலும் இவர் இடம் பிடித்துக் கொண்டுவிடுவார். தனியாகச் சந்நிதி இல்லாவிட்டாலும், தூணில் உள்ள சிற்பத்தையாவது, சிவன் கோயிலுக்குச் செல்பவர்கள் வழிபடுவார்கள்!)

கறுப்பரைத் திருமாலின் அம்சம் என்று சொல்வதாலோ[2] என்னவோ, கறுப்பருடனேயே ஒன்றிக் கொண்டு, சிறுபிள்ளைகள், பெரியவர்கள் செய்வதையெல்லாம் செய்துகாட்டுவார்களே, அது போல, அவருடைய காலடியில் அமர்ந்து, இடக்கையை முழங் காலில் ஊன்றி, வலக்கையை உயர்த்திக் கறுப்பர் போலக் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கிறார், நாம் இப்போது செல்லும் ஆரடி சாத்தையனார் கோயிலில்.



அனுமார் சேட்டை

முத்துக்கறுப்பர், சோனைக் கறுப்பர் என்னும் பெயருடைய கறுப்பர் களை மற்ற கோயில்களில் கண்டிருக்கிறோம். இங்கோ இந்தக் கறுப்பருமே அனுமக் கறுப்பராகி விட்டார்! இத்தகைய ஒரு சிலை அமைப்பு வேறு எந்தக் கோயிலிலும் காணப்பெறவில்லை.

* * *

கொரட்டி மஞ்சணத்திக் கறுப்பரை வழிபட்ட பின்னர், கொரட்டி கிராமத்திற்குள் சென்று, கிழக்கே பாதரக்குடி செல்லும் மண்சாலை யில் சுமார் 2கி.மீ சென்று இடப்புறம் திரும்பி, இருபுறமும் கண் மாய் உள்ள கரை வழியே ½ கி.மீ சென்று ஆரடி சாத்தையனார் கோயிலை அடைகிறோம்.

எல்லாக் கோயில்களிலும் முன்னோடி ஒருவர்தாம் இருப்பார். இங்கு கோயிலின் வெளியே ஐயனார் சந்நிதிக்கு எதிரில், இரு முன்னோடியர் இடம் பெற்றுள்ளனர். இவர்களும் காலத்தை அனு சரித்துச் சுத்தபத்தம் ஆகிவிட்டனர் போலும். வேறு சில கோயில் களைப் போன்று இங்கும் இவர்களுக்குச் சாராயம் படைக்கப் பெறுவதில்லை. மாறாகப் பக்தர்கள் காணிக்கையைச் செலுத்தி விடுகின்றனர்; அதை, முன்னோடிகளுக்குப் பூசை வைக்கும் ஹரி ஜனங்கள் எடுத்துக் கொள்கின்றனர்.

1992 ஆம் ஆண்டில்தான் திருக்குட நீராட்டு நடைபெற்றதால், கோயில் புதுமைமெருகு கலையாமல் இருக்கிறது. ஈசுவர ஆண்டு வைகாசி மாதம் 18ஆம் நாள் (ஜூன் 1937), 30.06.61, 03.02.77, 11.09.92 ஆகிய நாட்களில் (நான்கு முறை) திருக்குட நீராட்டு நடைபெற்றிருக்கிறது.[3]

கோயில் நுழைவாயிலை ஒட்டி நம் இடப்புறம் சேமங்குதிரையும், இரு பூதங்களும் காணப்பெறுகின்றன. இரு பூதங்களும் முதுகுப் புறமாக நின்று ஒற்றைக் கையை உயர்த்த, இருவரின் இரு கரங்களி லும் குதிரை தன் முன்னங்கால்களை வைத்து நிற்பதும் புதுமை யாகத்தான் உள்ளது. சேமங்குதிரையின் சேமம் கருதித், திருச்சுற் றுச் சுவருடன் சேர்த்துக் கதவுடன் கூடிய அரைச் சுவரே எழுப்பி விட்டனர்.



கோயிலும் குதிரையும்

கோயிலினுள் செல்கிறோம். ஓட்டுக்கூடம் ஒன்று, நுழைவாயிலி லிருந்து கருவறைக்கு நம்மை இட்டுச் செல்கிறது. இந்த ஓட்டுக் கூடத்தில் யானை வாகனமும், பலிபீடமும் உள்ளன. முழுவதும் கல் திருப்பணியான மகா மண்டபத்தில், கருவறையின் இருபுறமும் துவார பாலகர் நிற்க, அவர்களின் வல — இடப்புறங்களில், மூஷி ஹம், பலிபீடத்துடன் கூடிய சித்தி விநாயகர், தண்டாயுதபாணித் தெய்வத் திருவுருவங்கள் உள்ளன.

அர்த்தமண்டபத்தில் மேலும் ஒரு பிள்ளையார் அமர்ந்திருக்கிறார். கருவறையில் ஆரடி சாத்தையனார் அம்பிகையர் புடைசூழ அமர்ந்து அருள்பாலிக்கிறார்.

இங்கு ஒரு புதுமையான வழக்கம் நிலவுவதாகத் தெரிகிறது. பொது வாக எந்த மூர்த்தத்துக்கு மாவிளக்கு வைத்தாலும், அதை எடுத்து அங்கு இருப்பவர்களுக்கு விநியோகித்த பின்னர், மீதமுள்ளதை மாவிளக்கு வைத்தவர்கள், தம் வீட்டுக்கு எடுத்துச் செல்வர். ஆனால் இங்கு ஐயனாருக்கு வைக்கும் மாவிளக்கு, அர்ச்சகரான வேளாருக்கு உரியது; மற்ற தெய்வங்களுக்கு வைப்பது அவற்றை வைக்கும் நக ரத்தாருக்கு உரியதாம்.[4]

அரியக்குடியைச் சேர்ந்த இளையாற்றங்குடிப் பெருமருதூருடையா ரும், கண்டனூர், காரைக்குடி, கானாடுகாத்தான் நகரத்தார்களும், சண்முகநாதபுரம் இளையாற்றங்குடி ஒக்கூருடையாரும், சிராவயல், சிறுவயல், தேவகோட்டை, புதுவயல் நகரத்தார்களுமாக 300[5] முதல், 500[6] புள்ளிவரை இக்கோயிலில் குலதெய்வ வழிபாடு செய்கின்றனர்.

ஆடி மாதம் முதல் திங்கட்கிழமை கானாடுகாத்தான் நகரத்தார் களும்,[7] இரண்டாவது திங்கட்கிழமை அரியக்குடி நகரத்தார்களும்,[8] தை மாதம் முதல் புதன்கிழமை காரைக்குடி நகரத்தார்களும்,[9] முதல் புதன்கிழமை — வெள்ளிக்கிழமைகளில் சண்முகநாதபுரம் நக ரத்தார்களும்[10] இங்கு வந்து வழிபாடு செய்கின்றனர்.

ஊரார் கோயிலான இங்கு திருப்பணி, மராமத்து எல்லாவற்றை யும் நகரத்தார்களே செய்கின்றனர். கோயில் திருப்பணிகள் பல வற்றைக் காரைக்குடி, கானாடுகாத்தான் நகரத்தார் குடும்பத்தினர் செய்துள்ளனர்.[11]

சாத்தையனார் என்னும் சுவாமியின் பெயரை ஒட்டிச் சாத்தப்பன் என்று ஆண் குழந்தைகளுக்கும், சாத்தம்மை என்று பெண் குழந்தை களுக்கும் பெயரிடுவது உண்டாம்.[12]

* * *

தென் பிராகாரத்தில் உள்ள நீண்டதோர் ஓட்டுக்கூடத்தில் பல பரி வார தெய்வங்களின் சந்நிதிகள் உள்ளன.

முதல் சந்நிதிக்குள் அடைக்காத்தாள், வெளியே உண்ணாமுலை அம்மன், இரண்டாம் சந்நிதியில் உள்ளே பதினெட்டாம்படிக் கறுப் பர், வெளியே நாகர், (இந்தப் பதினெட்டாம்படிக் கறுப்பரையும், அடைக்காத்தாளையும் காரைக்குடி நகரத்தார் வழிபடுகின்றன ராம். இவை இரண்டும் அவர்களின் குலதெய்வங்கள் போன் றவை என்கிறார் அர்ச்சகரான வேளார்.), அடுத்துள்ள சந்

நிதியில் சிறு(மி) அம்மன் (இது முதலில் இலங்குடியில் இருந்த தாம். அங்கிருந்து கோபித்துக் கொண்டு இங்கு வந்துவிட்டது என்பது செவிவழிச் செய்தி. சிராவயல் நகரத்தார் இந்த அம்மனை வழிபடுகின்றனர்.[13]), கையில் குழந்தையுடன் ஆண்டாத்தாள் (இது கிராம தெய்வம்; இதனையும், பெரியகறுப்பரையும், கானாடுகாத் தான் நகரத்தார் சிறப்பாக வழிபடுகின்றனர்.[13]), அடுத்துள்ள சந் நிதியில் காத்தாயி அம்மன், அனுமக்கறுப்பர், சந்நியாசி ஆகியோர் சந்நிதியின் உள்ளும், வெளியில் புதுவளவு அம்பலகாரர் சிலையும் உள்ளன. எல்லாப் பரிவார தேவதைகளுக்கும் வழிபாடு நடைபெறு கிறது.

சாப்பாட்டுக் கூடமும், தங்கும் விடுதியும் கோயிலின் உள்ளேயே இருக்கின்றன.

* * *

சித்திரை மாதத்தில் கிராமத்தார் திருவிழா நடத்தி, மஞ்சு விரட் டும், நாடகமும் நடத்தும் இக்கோயிலில் நாள்தோறும் ஒருவேளைப் பூசைதான் நடைபெறுகிறது. எனவே கொரட்டியிலிருந்து புறப்படு முன்னர், அங்குள்ள வேளார்களின் வீடுகளில் கேட்டுத் தெரிந்து கொண்டு, தேவையானால் அர்ச்சகரை உடன் அழைத்து வருவது நல்லது.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

பார்த்தனுக்(கு) அருளும்வைத்தார், பாம்(பு)அரை ஆடவைத்தார்,
சாத்தனை மகனாவைத்தார், சாமுண்டி சாமவேதம்
கூத்தொடும் பாடவைத்தார், கோள்அரா மதியநல்ல
தீர்த்தமும் சடையில்வைத்தார் திருப்பயற் றூரனாரே.

திருச்சிற்றம்பலம்

— 4ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

1. அபிதான சிந்தாமணி
2. சந்திரசேகர குருக்கள், கண்டதேவி
   மகாகாளரை(பெரிய கறுப்பர்) வீரபத்திரர்க்குக் காளியிடத்துப் பிறந்தவர் என்று சொல்வர் — அபிதான சிந்தாமணி
3. ஆர்.எம்.ஏ இராமநாதன் செட்டியார், சண்முகநாதபுரம்
4. கும. நடராஜ வேளார், கொரட்டி
5. டாக்டர் ஏ.ஆர். அண்ணாமலை, சண்முகநாதபுரம்
6. இராம. நாராயணன், அரியக்குடி
7. கும. நடராஜ வேளார்
8. இராம. நாராயணன்
9. கும. நடராஜ வேளார்
10. ஆர்.எம்.ஏ. இராமநாதன் செட்டியார்
11. ஆர்.எம்.ஏ. இராமநாதன் செட்டியார்
12. டாக்டர் ஏ.ஆர். அண்ணாமலை
13. கும. நடராஜ வேளார்

உ

பணிசெய்வார்க்கு இரங்கும் பனக்குடி ஐயனார்

(33. பனக்குடி சாத்தையனார் திருக்கோயில், தட்டட்டி)

கொரட்டியை அடுத்துள்ள தட்டட்டியில் கோயில் கொண்டிருக்கும் மற்றொரு சாத்தையனார் கோயிலுக்கு இப்போது செல்கிறோம். கொரட்டி கிராமத்தினுள் உள்ள ஊருணியின் மேற்கே திரும்பி, இடப்பக்கம் வயல்கள்,வலப்பக்கம் கண்மாய் வழியாகக் கண்மாய்க் கரையில் சுமார் 1.கி.மீ. சென்று பனக்குடி சாத்தையனார் கோயிலை அடையலாம்.


கிராமத்திலிருந்து கோயிலுக்குச் சாலை அமைக்க ஏற்பாடுகள் செய் யப்பெறுவதாக அர்ச்சகர் கூறுகிறார்.கோயிலை மராமத்துச் செய்து குடமுழுக்கு விழா நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பெறுகின்றன. வாம். (முந்திய திருக்குட நீராட்டு விழா 25.04.83ல் நடைபெற் றிருக்கிறது.)

அரியக்குடி, கல்லுப்பட்டி, காரைக்குடி, சண்முகநாதபுரம், நற்சாந்து பட்டி (இளையாற்றங்குடிப் பெருமருதூருடையார்), புதுவயல் நக ரத்தார்களின் குலதெய்வக் கோயிலான இது, இடப்புறம் வயல் களையும், வலப்புறம் கண்மாயையும் கொண்டு விளங்குகிறது.

பழைமையின் சுவடுகள் பதிந்துள்ள கோயிலின் முன்புறம், நுழை வாயிலுக்கு எதிரில், மாடத்தில் முன்னோடி இருக்கிறார். மாடத் தில் 1983ஆம் ஆண்டு என்று பொறிக்கப் பெற்றிருப்பது, கடந்த திருக்குட நீராட்டு விழா நேரத்தில்தான் இது அமைக்கப் பெற்றி ருக்கவேண்டும் என்பதை உணர்த்துகிறது. இங்கு முன்னோடிக்குச் சாராயம் படைக்கும் பழக்கம் உண்டாம்.

முன்னோடிக்கும், கோயிலுக்கும் இடையில் நம் இடப்புறம் ஒற்றைச் சேமங்குதிரை, ஒற்றைப் பூதத்தின் தோள்களில் கால்களை ஊன்றி வடக்குப் பார்த்து நிற்கிறது.

கருவறையின் முன்னால், முதலில் காங்க்ரீட் மண்டபமும், அடுத் துப் புதுவயல் நகரத்தார் 22.08.82ல் கட்டிய அஸ்பெஸ்டாஸ் மகாமண்டபமும் உள்ளன.



பழைமையின் சுவடு பதிந்துள்ள கோயில்

காங்க்ரீட் மண்டபத்தை ஒட்டி, நம் இடப்புறம் பெரிய கறுப்பர் சந்நிதி வடக்குப் பார்த்து உள்ளது. இது, குடநீராட்டு விழாவின் போது புதுவயல் நகரத்தார் திருப்பணி செய்தது.

இந்த மண்டபத்தில் பலிபீடம் மட்டும் தனியாகக் காணப்பெறுகிறது. இதைக் கடந்து மகாமண்டபத்துக்குச் செல்கிறோம். யானை வாகனமும் பலிபீடமும் இங்கு இடம்பெற்றுள்ளன.

கருவறையின் முன், நுழைவாயிலின் இருபுறமும் துவாரபாலகருடன், இடப்புறம் மூலகணபதியும், வலப்புறம் சித்தி விநாயகரும் வீற்றிருக்கின்றனர். பெரும்பாலான ஐயனார் கோயில்களில் ஒரு பக்கம் விநாயகரும், மறுபுறம் தண்டாயுதபாணி அல்லது சுப்பிரமணியரும் இடம் பெற்றிருப்பர். இங்கு இருபுறமும் ஐங்கரனே ஆக்கிரமித்துக் கொண்டு விட்டார். அப்போதுதான் சுப்பிரமணியரை எங்கு வைப்பது என்னும் பிரச்சினை எழுந்திருக்கிறது. சிற்பி சாமர்த்தியமாக அதற்கு மாற்று இடம் வழங்கிவிட்டார். பரிவார தேவதைகளிடையே ஒதுங்கியிருக்கும் அவரைப் பின்னர் தரிசிப்போம்.

'மடைதிறந்த வெள்ளமென எமதுமுன்னோடி வரவேணும்' என்று பக்தர்கள் விடுக்கும் அழைப்பை ஏற்றுப் பாசத்துடன் ஓடிவந்து,

பணி செய்வார்க்கு இரங்கும் பனக்குடி சாத்தையனார், பூரணை — புஷ்கலையுடன் கருவறையில் காட்சி தருகிறார்.

ஒவ்வோர் ஆண்டும் சித்திரை மாதம் இவருக்குத் திருவிழா நடைபெறுகிறது. சாமியாடி, மஞ்சுவிரட்டு நடத்திக் கிராமத்தார் இந்தத் திருவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். ஆனால் மற்ற கோயில்களில் வழக்கமாக நடைபெறும் புரவி எடுப்பைப் பற்றி மட்டும் யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. விவரம் தெரிந்து பல்லாண்டுகளாகக் குதிரை எடுப்பு விழா நடைபெறவில்லை என்கிறார் அர்ச்சகர்.[1] சிவராத்திரியன்று இங்கு சிறப்பு வழிபாடு ஏதும் நடைபெறுவதில்லை என்றாலும், தைப்பொங்கலன்று, நாட்டாரும் ஊராரும் இங்கு வந்து சிறப்பாக வழிபாடு செய்த பின்னர்தாம், தத்தம் இல்லங்களில் பொங்கல் வைப்பார்களாம். (கோயிலுக்கு வந்திருந்த ஒருவர், தைப்பொங்கலன்று கோயிலுக்கு வந்து வழிபடுவதைப் பற்றி உணர்ச்சி பொங்க விவரித்தார்.)

கருவறையும், பெரிய கறுப்பர் சந்நிதியும் முழுமையான கல்திருப் பணிகள்; கவினுறக் காட்சி தருகின்றன. விமானத் திருப்பணியை நற்சாந்துபட்டி நகரத்தார்கள் செய்திருக்கின்றனர்.

பிராகாரத்தில் தென் திருச்சுற்றுச் சுவரை ஒட்டி முதலில் மடப் பளியும், அடுத்துப் பரிவார தேவதைகள் மண்டபமும் உள்ளன. இந்த மண்டபமும், வடக்குத் திருச்சுற்றுச் சுவரை ஒட்டியுள்ள மண்டபமும் கல்லுப்பட்டியார் செய்த திருப்பணிகள்.

சகாதேவன், நல்லிப்பாட்டி, குழந்தையா, காளியம்மன், சின்னக் கறுப்பர், அரசுமுகம், சந்நியாசி, இராக்கியம்மாள், பேச்சியம்மாள், ஆதராண்டிக் கறுப்பர், பட்ட தெய்வம், நாகர், அடைக்கலம்காத்தவர் ஆகியோர், பரிவார தேவதைகளின் மண்டபத்தில் உள்ளனர். இவர்கள் அனைவருக்கும் நாள்தோறும் வழிபாடு நடைபெறுகிறது.

இவர்களில், இறந்துபோனவர்களின் சிலைகளான நல்லிப்பாட்டி, குழந்தையா இரண்டையும் கல்லுப்பட்டி, புதுவயல் நகரத்தார்கள் வழிபடுகின்றனராம். புதுவயல் நகரத்தார் மாசி மாதம் முதல் திங்கட்கிழமை இங்கு வந்து வழிபாடு செய்கின்றனர். நற்சாந்துபட்டி நகரத்தாரும் மாசி மாதத்தில் வந்து வழிபடுவது உண்டு.[2]

இங்குதான் நாம் காணக் காத்திருக்கும் மயில்வாகன சுப்பிரமணியர், இரு நாகங்கள் குடைபிடிக்க, இடையில் மயில் வாகனத்துடன் காட்சி தருகிறார்.

பெரும்பாலும் ஐந்துதலை நாகம், அல்லது இரண்டு நாகங்களின் இடையில், சிவலிங்கம், தவழும் கண்ணன் ஆகிய உருவங்களே மிகுதியாகக் காணப்பெறும். ஒரு கோயிலில், பாற்கடலில் பள்ளி கொண்ட திருமாலையும், நாகங்களின் இடையே பள்ளிகொள்ள வைத்திருக்கிறார்கள். இங்கு சுப்பிரமணியர் அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்.

கோயிலில் முருகன் சிலை தனியாக இல்லாத குறையைச் சிற்பி தீர்த்து விட்டார். ஆனால் எத்துணைப்பேர் அவரை உன்னிப்பாகக் கவனிக்கப் போகிறார்கள்?

நகரத்தார் வீடுகளில் நடைபெறும் திருமணங்களுக்கு, அவர்கள் தகவல் தெரிவிப்பதைத் தொடர்ந்து, அர்ச்சகர் திருமண வீடுகளுக்குச் சென்று திருநீறு கொடுத்து வருவது உண்டாம்.

இக்கோயிலுக்கு நகரத்தார் செய்துள்ள திருப்பணிகளை மனமாரப் பாராட்டி மகிழும் அர்ச்சகர், இங்கு நாள்தோறும் ஏதேனும் ஒரு நேரம் பூசை நடைபெறுகிறது என்றும், அர்ச்சகரைக் கொரட்டியிலிருந்து அழைத்துவந்து, ஐயனாரை வழிபட்டு அல்லல் நிறைந்த வாழ்க்கையில் அமைதியும், ஆனந்தமும் பெற்று உய்வு பெறலாம் என்றும் கூறுகிறார்.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

கோவினைப், பவளக் குழமணக் கோலக்
குழாங்கள் சூழ்,கோழிவெல் கொடியோன்,
காவல்நற் சேனைஎன் னக்காப் பவன்,என்
பொன்னை மேகலை கவர்வானே?
தேவின்நற் றலைவன், திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
தூவிநற் பீலி மாமயில் ஊரும்
சுப்பிர மண்ணியன் தானே.

திருச்சிற்றம்பலம்

— 11ஆம் திருமுறை, சேந்தனார்

குறிப்பு விளக்கம்:

1. கும. நடராஜ வேளார், கொரட்டி
2. கும. நடராஜ வேளார்,

உ

அடியார் தொழுதேத்தும் அஞ்சாத பெருமாள்

(34. அஞ்சாத பெருமாள் ஐயனார் திருக்கோயில், சாலி)

கரிய கடல் போன்ற கருநிற வடிவையும், வானத்தில் பரவும் சிவந்த வானம் போன்ற சடையையும், செண்டு என்னும் படைக்கலத்தை ஏந்திய திருக்கையையும் உடைய உக்கிரமான குணத்துடன் கூடிய வர் என்று, கந்தபுராணம் ஐயனாரை வருணிக்கிறது.

பார்வைக்கு அவர் இவ்வாறு உக்கிரமாகத் தோன்றினாலும், குற்ற மற்றவர்களை — தனித்திருப்போரை — நிராதரவானவர்களைத் தீமை அணுகாவண்ணம் காத்தருள்பவர்[1] என்றும் அது கூறத் தவற வில்லை.

இந்திராணியை அசுரர்களிடையே தனித்துவிட்டுச் செல்ல நேர்கி றதே என்று தவித்த இந்திரனுக்கு அஞ்சேல் என்று அபயம் கொடுத் தவர் அரிகரபுத்திரன். அதனால்தான் இக்கோயிலில் உள்ள அழ காத்தாள் உட்பட நிராதரவான இளம் பெண்கள் பலர், ஐயனார் கோயிலை அண்டியிருப்பர் போலும்; தஞ்சமடைந்திருப்பர் போலும்!

எதற்கும், எவர்க்கும் அஞ்சாத இவர், மற்றவர்களையும் எத்தகைய இடையூறிலிருந்தும் மீட்பவர் ஆதலின், அஞ்சாத பெருமாள் என்று பெயர் பெற்றனர் போலும்!

''செப்பமாம் சாலிச்[2] செந்நெறி மேவிய ஐயனார்[3] உளர் அஞ்சு வது என்னுக்கே'' (அப்பர் சுவாமிகள் அடியேனை மன்னிக்கட்டும்) என்னும் மனத்திட்பத்துடன் தீமையை எதிர்த்து நில்லுங்கள்; வாய் மையே வெல்லும் என்று கூறி, இப்போது உங்களைக் குன்றக் குடிக்கு அருகில் உள்ள சாலி என்னும் கிராமத்துக்கு அழைத்துச் செல்கிறேன்.

* * *

குன்றக்குடி — உ.சிறுவயல் சாலையில், குன்றக்குடியிலிருந்து இரண் டாவது கிலோ மீட்டரில் உள்ள விநாயகர் கோயிலின் முன்பாக வலப்புறம் செல்லும் மண்சாலையில் சுமார் 1கி.மீ சென்றால், அஞ்சாத பெருமாள் ஐயனார் கோயிலை அடையலாம்.

காரைக்குடி, நற்சாந்துபட்டி நகரத்தார்களின் குலதெய்வக் கோயிலான இதன் ஒருபக்கம் கிணறும், ஒரு புறம் வயல்களும், எதிரே குளமும் உள்ளன.

குளக்கரையில் கோயிலை நோக்கியவண்ணம் முன்னோடி குடிகொண்டிருக்கிறார். இவருக்குப் பொறிகடலைதான் நிவேதனம்.



அடவியோ என்று அஞ்சற்க; அஞ்சாத பெருமாள் அபயம் தருவார்

நம் இடப்புறம், வயல்களுக்குச் செல்லும் வழியில் சேமங்குதிரையும், பூதமும் உள்ளன.

கோயிலின் நுழைவாயில் பகுதி, நீண்ட ஓட்டுக்கூடத்தைக் கொண்டிருப்பதால், ஏதோ ஒரு வீட்டிற்குள் செல்வது போன்றுதான் தோன்றுகிறது. கோயிலைச் சுற்றிலும், உள்ளே பிராகாரத்திலும் முட்செடிகளும், காட்டுச் செடிகளும் மண்டிக் கிடக்கின்றன.

கருவறையின் முன்னுள்ள ஓட்டுக்கூடத்தில் யானை வாகனமும், பலிபீடமும் காணப்பெறுகின்றன. கருவறை வாயிலின் இருபுறமும் துவார பாலகர்கள் உள்ளனர்.

அர்த்த மண்டபத்தில் பெரியதொரு பிள்ளையார் சிலை இருக்கிறது.

கருவறையில் அஞ்சேல் என்று அபயம் அளிக்கும் அஞ்சாத பெரு மாள் ஐயனார், பூரணை, புட்கலை பூம்புற மேவ (இருபுறமும் இருக்க) வீற்றிருக்கிறார்.

'அண்ணலே! என்னால் உனக்கு என்ன நன்மை? நெஞ்சகம் கனிய மாட்டேன்; உன்னை உள்ளத்தில் வைத்து உணரவும் மாட்டேன். இவ்வாறிருந்தும் வஞ்சக நெஞ்சினனாகிய நாயேனை, அடித்தொண் டில் ஈடுபடுத்தி, அஞ்சேல் என்று சொல்லி ஆண்டு கொண்டாயே, உன் கருணைத் திறம்தான் என்னே? உன் பெருமைதான் என்னே?[4]' என்று கண்ணீர் வழியக் கரைந்துருகி நிற்கிறோம்.

அந்த நேரத்தில், அபலையாய் இங்கு வந்த அழகாத்தாளுக்கு அஞ் சேல் என்று கூறி, ஐயனார் அடைக்கலம் கொடுத்த கதையை அர்ச்சகர் விவரிக்கிறார்.

நகரத்தார் பெண்ணான அழகாத்தாள் இங்கு வந்திருந்த நேரத்தில் காணாமற் போய்விட்டாராம். ''இங்கேயே அடங்கிவிட்டேன் தேட வேண்டாம்'' என்று அவர் அசரீரியாகச் சொன்னதைத் தொடர்ந்து நகரத்தார் அப்பெண்ணுக்குச் சிலை வைத்து வழிபட்டு வருகின்ற னராம். (காரைக்குடி நகரத்தார் பங்காளிகள் இந்த அம்மையாருக் குப் படைப்பதால், இவர் காரைக்குடியைச் சேர்ந்தவராகத்தான் இருக்க வேண்டும். இவரைப் பற்றிய வேறு விவரங்கள் தெரியவில்லை யெனினும், வழக்கமான கதை நாம் அறிந்ததுதானே!)

காரைக்குடிப் பங்காளிகள் ஓரிருவர், பங்குனி மாதத்தில் ஒரு செவ்வாய்க்கிழமை இங்கு வருவார்கள். சம்பாச்சோறு பொங்கிச், சுவாமிக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து, இங்கிருந்து தீர்த்தம் எடுத்துச் செல்வர். வியாழக்கிழமை காரைக்குடியில் படைத்த பின்னர், வெள்ளிக்கிழமை பங்காளிகள் அனைவரும் இங்கு வரு வர். பால், தயிர், பழ அபிஷேகங்கள் நிறையச் செய்து சுவாமியை வழிபடுவார்கள். அப்போது அழகாத்தாளுக்கு எல்லோரும் மா விளக்கு வைத்து அஞ்சலி செய்வராம்.[5]

ஆத்தாளைப் பார்க்க ஆவலுடன் இருக்கிறோம். அர்ச்சகர் நம் மைத் தென் பிராகாரத்தில் முகப்பு ஓட்டுக்கூடத்தை ஒட்டி வடக் குப் பார்த்து உள்ள அம்மையார் சந்நிதிக்கு அழைத்துச் செல்கிறார்.

அமைதி தவழும் அழகிய முகம்; அச்சத்துக்கு அதில் இடமேயில்லை. (அதைத்தான் ஐயனார் போக்கிவிட்டாரே!) இருகரங்களையும் கூப்பிய வண்ணம் கால்களை மடித்து உட்கார்ந்திருக்கிறார் மாத ரசி! இந்தச் சந்நிதி விமானத்துடன் கூடியிருக்கிறது. அடுத்த இரு சந்நிதிகளில் சின்ன — பெரிய கறுப்பர்கள் குடிகொண்டிருக்கின் றனர்.

தென்மேற்கு மூலையை ஒட்டித் திருச்சுற்றுச் சுவருடன் உள்ள மண்டபத்தில் பரிவார தெய்வங்களும், கன்னிமாரும் உள்ளனர். அனைவரையும் தரிசித்துக் கொண்டு, முன்புறமுள்ள ஓட்டுக்கூடத் தில் பலிபீடத்தருகில் அமர்ந்து அர்ச்சகருடன் பேசுகிறோம்.

* * *

08.11.1987ல் இக்கோயிலில் திருக்குட நீராட்டு நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் ஏதேனும் ஒரு நேரம் வந்து பூசை வைத்துச் செல்வதால், அர்ச்சகர்களால் புல்பூண்டுகளை அகற்ற இயலுவ தில்லை. இங்கு பக்தர்கள் வருமுன்னர், குன்றக்குடியில் குலால சங்கத்தில் கேட்டுத் தெரிந்து கொண்டு, தேவையானால் அர்ச்சக வேளாரை அழைத்து வருவது நல்லது.

தீபாவளிக்குச் சுவாமிக்குப் பட்டு வாங்குவதற்கென்று பதினைந்து ரூபாய் காரைக்குடி நகரத்தார் கொடுக்கிறார்கள் என்று கூறிச் சிரிக்கிறார் அர்ச்சகர்.

நகரத்தார்கள், தங்கள் வீட்டுத் திருமணத்திற்கு முன்பும் பின்னரும் இங்கு வந்து வழிபட்டுச் செல்கின்றனர். குழந்தை பிறந்தால் இங்கு வந்து முடி இறக்குவது உண்டு.



அஞ்சி ஓடி வந்தாள்
ஐயனைச் சரணடைந்தாள்.

திருப்பணிகள், குடநீராட்டு விழாக்களைச் செய்த காரைக்குடி நகரத்தார்கள் அவ்வப்போது தேவையான மராமத்துகளையும் செய்கின்றனர்.

இந்து அறநிலையத்துறை சார்ந்த கோயிலான இங்கு, மின் வசதி கிடையாது. இரவு யாரும் இங்கு தங்கினால்தானே விளக்கு வேண்டும்? இறைவனுக்குத் தேவையானால், இருக்கவே இருக்கின்றன அவர் படைத்த மின்மினிச்பூச்சிகள்! தூக்கணங் குருவிகள், வீடு போன்று அழகாகக் கூட்டை அமைக்கும்போது அதில் வெளிச்சத் துக்கென மின்மினிப் பூச்சிகளை வைத்துக் கொள்வது உண்டாம்.[6] குருவிக்கே இது தெரிந்திருக்கும்போது, ‘புல்லுயிர்க்கும் பூட்சி புணர்க்கும்’[7] இறைவனுக்குத் தெரியாமலா போகும்? இருந்தாலும், தமக்குத் துணைக்கெனக் காவற்காரர் ஒருவரை வைத்துக் கொண்டிருக்கிறார், இந்த அஞ்சாத பெருமாள்!

ஆண்டுக்கொருமுறை ஆடிமாதத்தில் ஊரார் இவரைச் சிறப்பாக வழிபட்டுச் சீரோடும் சிறப்போடும் வாழ்கிறார்கள்.

பரவும் சொல்மாலை

பையரா அமளி யானும், பரம்பொருள் முதலும் நல்கும்
ஐயனே ஓலம்![8] விண்ணோர்க்(கு) ஆதியே ஓலம்! செண்டார்
கையனே ஓலம்! எங்கள் கடவுளே ஓலம்! மெய்யர்
மெய்யனே ஓலம்! தொல்சீர் வீரனே ஓலம் ஓலம்!

ஆரணச் சுருதி ஓர்சார் அடல்உருத் திரன்என்(று) ஏத்தும்
காரணக் கடவுள் ஓலம்! கடல்நிறத்(து) எந்தாய் ஓலம்!
பூரணைக்(கு) இறைவா ஓலம்! புட்கலை கணவா ஓலம்!
வாரணத்(து) இறைமேற் கொண்டு வரும்பிரான் ஓலம் ஓலம்!

— கந்தபுராணம்

குறிப்பு விளக்கம்:

1. ‘தீதடை யாது சிறப்பொடு காப்பன்’ — கந்தபுராணத்தில் ஐயனார் கூற்றாக அமைந்த பாடல்
2. அப்பர் சுவாமிகளின் பாடலில் ‘(திருச்)சேறை’ என்னும் தலம் இந்த இடத்தில் குறிப்பிடப்பெறுகிறது
3. அப்பர் சுவாமிகள் ‘அப்பனார்’ என்று பாடியுள்ளார்
4. ‘வஞ்சகப் புலையனேனை வழியறத் தொண்டில்பூட்டி
அஞ்சல்என்(று) ஆண்டுகொண்டாய், அதுவுநின் பெருமைஅன்றே!
நெஞ்சகம் கனியமாட்டேன், நின்னைஉள் வைக்கமாட்டேன்,
நஞ்சிடம் கொண்டகண்டா! என்னளன நன்மைதானே?’ — 4 ஆம் திருமுறை
5. கும. உடையப்ப வேளார், குன்றக்குடி
6. சித்தாந்த வித்தகர் முரு.பழ. இரத்தினம் செட்டியார், விரையாச்சிலை
7. 6 ஆம் திருமுறை: புல்லுயிர் — புல்லாகிய உயிர்., பூட்சி — பூணப்படுவது, வாழ்க்கை., புணர்த்தல் — உண்டாக்குதல்
8. ஓலம் — அடைக்கலம் வேண்டி அழைக்கும் ஒலி

உ

தேறலின் தெளிவே, தேனாட்சி அம்மையே!

(35. தேனாட்சியம்மன் திருக்கோயில், சிராவயல் புதூர்)

(மதுரை) மீனாட்சி, (காஞ்சி) காமாட்சி, (காசி) விசாலாட்சி, (ஆரூர்) கமலாயதாட்சி, (நாகை) நீலாயதாட்சி வரிசையில் ஒரு தேனாட்சி.

மீன்போலும் கண்களை உடையவள் மீனாட்சி (அங்கையற்கண்ணி) ஆகிறாள்; கலைமகளையும், மலைமகளையும் கண்களாக உடையவள் காமாட்சி; விரிந்த (விசாலமான) கண்களை உடையவள் விசாலாட்சி; தாமரை போலும் கண்களை உடையவள் கமலாயதாட்சி; கருங்குவளை மலர் போன்ற கண்களை உடையவளை நீலாயதாட்சி (கருந்தடங்கண்ணி) என்கிறோம். அதுபோன்று தேன் போலும் இனிமையான (கண்)பார்வையை உடையவள் தேனாட்சி ஆகிறாள்.

(தேனாட்சி மட்டும் தனியாக இல்லை. இவருக்குச் சகோதரியர் அறுவர் இருக்கின்றனர். காட்டநாச்சி, பெரியநாச்சி, அழகியநாச்சி, சௌந்தரநாச்சி, கொங்குநாச்சி, பரநாச்சி என்போரே மற்றும் அறுவர்.) இது ஒரு நாச்சியார் குடும்பம் என்று குருக்கள்[1] கூறும்போது, இந்த அம்பிகையின் பெயரும் ஒரு நாச்சியாக இருக்குமோ என்னும் நியாயமான ஐயம் எழுகிறது. தே — (தெய்வம், கடவுள், அருள்); நாச்சி. 'தேனாச்சி' என்று முதலில் இருந்து, பின்னர் மீனாட்சி, விசாலாட்சி வரிசையில் சேரும் வகையில் 'தேனாட்சி' ஆகியிருப்பாரோ என்னும் எண்ணம் ஏற்படுகிறது.

இப்போது இங்கு காரணாகம முறைப்படி சிவாசாரியாரால் 4 வேளை பூசை நடத்தப் பெறுகிறது எனினும், மருதுபாண்டியர் காலத்தில், கூரைக் கொட்டகையில் இருந்த அம்பாளுக்கு வேளார்கள்தாம் பூசை செய்து வந்திருக்கின்றனர். புலால் உண்ணும் வேளார்கள் பூசை செய்வதை விரும்பாத மருதுபாண்டியர்தாம், பூசை முறையை மாற்றினர் என்று கூறப்பெறுவதால்,[2] அந்தக் காலகட்டத்தில் பெயர் மாற்றமும் நிகழ்ந்திருக்கக் கூடுமன்றோ?

தேனைத் தேவாமிர்தத்துடன் இணைத்துப் பேசும் மணிவாசகப் பெருமான்,[3] தேன் நாடிப் பறந்து திரியும் அரசவண்டிடம் தினையளவு இருக்கின்ற ஒரு மலரின் தேனைப் பருகாமல், பேரின்பத் தேன் சொரியும் இறைவன் பாதமலர்களை நாடிச் செல்லுமாறு கூறு

வது,[4] மானிடர்க்குக் கூறும் மறைமுக அறிவுரையாகும். உலகச் சிற்றின்பங்களில் நாட்டாங்கொள்ளாது பேரின்ப மயமான இறைவனை நாடுங்கள் என்கிறார் அவர்.

அந்தப் பேரின்பத்தை நாடி இப்போது சிராவயல்புதூருக்குச் செல்கிறோம்.

* * *

பிள்ளையார்பட்டியிலிருந்து தெற்கே செல்லும் சாலையில் 1 கி.மீட்டரில் உள்ள சிராவயலுக்குச் சென்று, ஊரின் எல்லையில் இருக்கும் குளத்தின் அருகில் இடப்புறம் திரும்பி மண்சாலையில் 1 கி.மீட்டர் சென்றால், சிராவயல்புதூரை அடையலாம். ஊரின் எல்லையில் உள்ளது தேனாட்சியம்மன் கோயில். (இந்த இடத்துக்கே தேனாட்சியம்மன் கோயில் என்றுதான் பெயராம்.)

இங்கு வந்ததில் நமக்கு ஒரு போனஸும் கிடைக்கிறது! ஆம். ஒரே இடத்தில் (ஒன்றுக்கொன்று தொடர்புடைய) இரு தனித்தனிக் கோயில்களைக் காணும் பாக்கியம் நமக்குக் கிடைத்திருக்கிறது. (இன்னும் இரண்டொரு இடங்களிலும் இத்தகைய இரட்டைத் தலங்களைத் தரிசனம் செய்யவிருக்கிறோம்!)

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதினத்தைச் சேர்ந்த தேனாட்சியம்மன் கோயிலும், நகரத்தார்களின் திருமேனிக் கறுப்பர் கோயிலும் தனித்தனியாக வெவ்வேறு கோயில்களாக இருந்தாலும், ஒன்றுடன்



இரட்டைக் கோயில்கள்

ஒன்று தொடர்புடையவை. இந்தத் தொடர்பினை அறியச் சில நூறு ஆண்டுகள் பின்னோக்கிப் பயணம் செய்ய வேண்டும்; வருகிறீர்களா?

* * *

தேனாட்சியம்மன் கோயில் திருப்பணி நடந்து கொண்டிருந்த நேரம். திருப்பணியாளர்கள் கற்றூண்கள், கற்சிலைகள் (இக்கோயிலில் வேலைப்பாடு நிறைந்த — சிதைவுற்ற கற்சிலைகள் நிறைய உள்ளன.) ஆகியவற்றைத் தூக்குவதில் துணை புரியக், காளியைத் துணைக்கு அழைத்துக் கொண்டார்கள். அவளும் அளவற்ற உதவிகளைச் செய் தாள். திருப்பணி முடிவுற்றது. கறிக்கு உதவும் கறிவேப்பிலையை நாம் என்ன செய்கிறோம் என்பது தெரிந்ததுதானே? வேலை முடிந்த பின் னர், அவளுக்கு வேளாவேளைக்குப் பூசை இல்லாவிட்டாலும், சோறா வது அவளுக்குக் கொடுக்க வேண்டுமன்றோ?

அர்ச்சகர்கள் தாங்களாகப் படைக்காத நிவேதனங்களை அவள் தானாகத் தட்டிப் பறித்து கொள்ள முற்பட்டாள்.

அவளுடைய ஆர்ப்பாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்தது. பூசைக்கு முன்னரே நிவேதனங்களைத் தட்டிப் பறிக்கவும் தொடங்கினாள். இதில் ஏதோ சூது இருப்பதாக எண்ணிய தலைமை அர்ச்சகர், ஒரு நாள் தாமே நைவேத்தியங்களை எடுத்து வந்தபோது, அவரிடமும் அவள் தன் கைவரிசையைக் காட்டினாள்.

கோயில் திருப்பணி செய்த செட்டியார் — ஆச்சியின் சிலைகள் உள்ளே உள்ளன. அவற்றில், ஆச்சி சிலையில் இருந்து கொண்டுதான் அவள் இந்தத் திருவிளையாடல்களைச் செய்து வந்தாள். அச்சிலையைச் சிதைத்து அருகிலுள்ள தோட்டத்தில் போட்டுவிட்டார் சிவாசாரியர்.

(கரங்கள் சிதைவுற்ற நிலையில் உள்ள மின்னஞ்செட்டியின் சிலை யும், ஆச்சியின் பாதங்களும் மட்டும், இப்போது கோயில் முன்மண் டபத்தில் உள்ளன. பாதங்களின் நரம்புகள்கூடத் தெரியும் அளவுக்கு வேலைப்பாடு மிகுந்த சிலைகள் இவை.)

அங்கும் அது தன் திருவிளையாடலைத் தொடர்ந்தது. அவ்வழியே போவோர் வருவோரை மருட்டவும், வெருட்டவும் தொடங்கிவிட்டது.

பின்னர் தன்னிடம் வந்து முறையிட்டவர்களிடம், தனக்குக் கோயில் கட்டிக் கும்பிடுமாறும், உறவினர் 5¼ பணமும், மற்றவர்கள் 6¼ பணமும் காணிக்கை வைத்து வழிபட்டால், அவர்களுக்கு எல்லா நன்மைகளையும் புரிவதாகவும் காளி கூறினாள். (சிதைவுற்ற சிலைப் பகுதிகள் கிடந்த இடம், இப்போது, கண்ணஞ்செட்டி என்று அழைக் கப்பெறுகிறது. — கண்ணஞ்செட்டி என்னும் பெயர்தான் மின் னஞ்செட்டியாகி விட்டதோ?)

அருகிலுள்ள திருமேனிக் கறுப்பர் கோயிலில், சிதைவுற்ற அந்த உடல் பகுதிகளை நிலத்தினுள் புதைத்து, மேலே மின்னஞ்செட்டி காளியாத் தாளின் சிலையை வைத்து வழிபட்டு வருகிறார்கள். அந்தக் காளி யாத்தாளைக் கறுப்பர் கோயிலுக்குச் செல்லும்போது தரிசிப்போம்.

இப்போது தேனாட்சியம்மையைத் தரிசித்து மகிழ்வோம்.

பெரிய நிலப்பரப்பில், சாலையின் இடப்புறம் வடக்கு நோக்கித் தேனாட்சியம்மன் கோயிலும், அக்கோயிலின் இடப்புறம் கிழக்குப்

பார்த்த திருமேனிக்கறுப்பர் கோயிலும் உள்ளன. இவை இரண்டுக் கும் நடுவில் தென்மேற்கு மூலையில் திருக்குளம் ஒன்று இருக்கிறது.

தேனாட்சியம்மன் கோயில் முதுமையை எட்டிவிட்ட புராதனக் கோயில். நுழைவாயிலில், இருபுறமும் திண்ணைகளைக் கொண்ட ஓட்டுக்கூடம். அதனைக் கடந்து உள்ளே சென்றால், பெரியதொரு மண்டபம். இங்குதான் ஏராளமான சிதைவுற்ற சிலைகள் தூண்களில் காணப்பெறுகின்றன. மின்னஞ்செட்டி காளியாத்தாளின் பாதம் உள்ளதும் இங்குதான்.

திருப்பணி செய்த வெங்கலப்ப நாயக்கரும், அவர்தம் இரு மனைவி யரும் ஒருபுறமும், மின்னஞ்செட்டியும், மின்னஞ்செட்டி காளியாத் தாளின் பாதங்களும் மறுபுறமும் இம்மண்டபத்தில் உள்ளன.

இம்மண்டபத்துக்கும், 3 நிலை இராஜகோபுரத்துடன் கூடிய கோயி லுக்கும் இடையில் கொடிமரமும், அம்பிகையின் சிம்ம வாகனமும், பலிபீடமும் உள்ளன. இங்கு ஒருபுறத்தில் திருமஞ்சனக் கிணறும் உள்ளது.

முழுமையும் கல் திருப்பணி செய்யப்பெற்ற பெரிய கோயில். நடு நாயகமாகத் தேனாட்சியம்மையின் கருவறை உள்ளது. கருவறைக் குச் செல்லுமுன்னர் உள்ள பீடத்தில் பலிபீடமும், துர்க்கைக்கு ஏவல் செய்யும் யக்ஷிணி சிலையும் உள்ளன.



உலா வரும் உத்தமி

நன்றி: சிவஸ்ரீ ஆர். காளீஸ்வரக் குருக்கள்

கருவறையின் உள்மண்டபத்தில் இருபுறமும் துவாரசக்தியர் காட்சி தர, உள்ளே தேனாட்சியம்மை எட்டுத் திருக்கரங்களுடன் மகிஷா சுரமர்த்தனியாகத் தரிசனம் தருகிறாள். இவள் மிக உக்கிரமான தெய் வம் என்றும், அடியார் வேண்டுவதை வேண்டியவண்ணம் ஈவாள் என்றும் குருக்கள் கூறுகிறார்.

சித்திராப் பௌர்ணமியன்று நடைபெறும் ஒருநாள் திருவிழாவில், சகோதரிகளில் ஒருவரான பெரியநாச்சி (சிராவயல் புதூரில் உள்ள அம்பிகை) மட்டும் தேனாட்சியம்மையுடன் சேர்ந்து உலா வருகிறார்.

15 ஆண்டுகளுக்கு ஒருமுறை செவ்வாய் என்னும் திருவிழா நடை பெறுகிறது. (கடந்த ஆனி மாதம் இது நடைபெற்றது.) அந்த நாட் களில் கிராமமே கடும்விரதம் இருக்குமாம். அம்மி — ஆட்டுக்கல் — உரல் ஒலிகள் கேட்கக்கூடாது. கர்ப்பிணிப் பெண்கள், மாத விலக் கான பெண்கள் கிராமத்தில் இருக்கக் கூடாது. இந்த ஊரார் வெளி யூர்களில் சாப்பிடக்கூடாது. படுக்கை விரித்துப் படுக்கக் கூடாது. 10 நாள் இத்தகைய கடும் விரதத்துக்குப் பின்னர் 11ஆம் நாள், நீர்ச்செம்பில் தென்னம்பாளைகளை வைத்து ஏந்திவரப்பெறும் மதுக்குடம் எடுப்பார்கள். சுமார் 500 பேர் வரை மதுக்குடம் ஏந் துவர் என்று குருக்கள் கூறுகிறார்.

தேனாட்சியம்மையைப் படம்பிடிக்க வெளிநாட்டுக்காரர் ஒருவர் முயன்றபோது, படக்கருவியை இயக்கவே இயலவில்லை என்று கூறப்பெறுவதைப்[5] பற்றிக் கேட்டபோது, இந்த அனுபவம் தமக் கும் ஏற்பட்டதாகக் கூறுகிறார் குருக்கள்.[6]

* * *

கீழச்சிவற்பட்டி உ.சிறுவயல், தேனிப்பட்டி, நாச்சியாபுரம், மேலைச் சிவபுரி ஆகிய ஊர்களின் வைரவன் கோயில் நகரத்தார், ஆடி மாதம் 2ஆவது வெள்ளிக்கிழமையன்று இங்கு வந்து, சிறப்பாகப் பூசை செய்து அம்பிகையை வழிபடுகின்றனர். இவர்கள் வீடுகளில் குழந் தைகளுக்கு இறைவியின் பெயரை ஒட்டித் தேனப்பன், தேனம்மை என்று பெயரிடுகின்றனர்.

அவ்வாறு பெயர் வைக்கப் பெற்றோருக்குத் திருமணம் நடக்கும் போது, கட்டாயம் இங்கு வந்து சொல்லி, அர்ச்சகர் திருமணத்தன்று மாலை கொடுத்து வருவது உண்டாம்.

குழந்தை பிறந்தால் இங்கு வந்து முடி இறக்கிப், பெயர் வைக்கும் வழக்கமும் இருக்கிறது.

கோயில் திருப்பணிகளுக்கும், மராமத்துக்களுக்கும், நகரத்தார் மனமு வந்து தாராளமாக நிதி வழங்கியிருக்கின்றனர்; வழங்கி வருகின்ற னர் என்று குருக்கள் பெருமையுடன் கூறுகிறார்.

* * *

பெரிய விசாலமான பிராகாரத்தின் வடகிழக்கு மூலையில் பைரவர் சந்நிதி உள்ளது. அவருக்கு முன்னால் உள்ள தூண் அருகில் தனி யாகச் சனீஸ்வரர் மட்டும் இருக்கிறார். தென் மேற்கு மூலையில் விநாயகர் சந்நிதி உள்ளது. மேற்குப் பிராகாரத்தில் திருச்சுற்றுச் சுவரை ஒட்டி இடபம் பலிபீடத்துடன் கூடிய காசிவிசுவநாதர், விசா லாட்சி, மற்றும் சுப்பிரமணியர், தூணில் சண்டீஸ்வரர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இங்குள்ள கோயில் மணியில் குறிக்கப் பெற்றிருக்கும் 1897 ஆம் ஆண்டு, கோயிலின் புராதனத்தை (பழைமையை)க் குறிக்கிறது.

விநாயகர், தேனாட்சியம்மன், பெரியநாச்சியம்மன் ஆகிய மூர்த் தங்களின் எழுந்தருளிகளும், வாகனங்களும் பிராகாரத்தில் வைக் கப் பெற்றுள்ளன.

மும்முறை திருக்குட நீராட்டு நடைபெற்றிருப்பதாகக் கூறும் குருக் கள், கடைசியாக 1987ல் நடைபெற்றதாகச் சொல்கிறார்.

இன்பநலன் அளிப்பவளை, இனியனவே தருபவளை, நம்முடைய இதயத்தே நல்லுயிராய் இருப்பவளை நன்மலரால் பூசித்தே நமோ துர்க்கா என்று கூறி வணங்கிக் கொண்டு, அடுத்துள்ள திருமேனிக் கறுப்பர் கோயிலுக்குச் செல்கிறோம்.

பரவும் சொல்மாலை

பொங்கர(வு) அணிந்தஜெக தீஸ்வரி, நாரணி,
பூரணி, புராந்த தகனி,
புவனமொடு சரம்அசரம் ஈரேழு பதிநாலு,
புண்யபூ தலமும் ஈன்ற
சங்கரி, மனோன்மணி, ஓங்காரி, ரீங்காரி,
சத்தியே! தில்லை நகரில்
தாண்டவன் கூடவா தாடிடும் சாமளை,
தரணித னில்உனது மகிமை
எங்கும்ப்ர காசமாய் அனுதினமும் உனதுபுகழ்
எப்போ துமேது திக்கும்
இயல்பான வணிகர்குலம் அதனைஆள் அன்னையே!
இணையிலா முதல்வி, கௌரி,
செங்கரம் தன்னில்மா சூலம்உள அபிராமி,
சிராவயற் பேர்நக ரில்வாழ்
தேனாட்சி யம்மைஇரு பாதபத் மங்களைச்
சிந்தையுள் இருத்தி வைப்பாம்.

— பி.கு. குட்டை ஐயா என்னும்
பி.சு. சுப்பிரமணியன் செட்டியார்,
பள்ளத்தூர்

குறிப்பு விளக்கம்:

தேறல் — தேன்
1. ஆர். காளீஸ்வரக் குருக்கள்
2. ஆர். காளீஸ்வரக் குருக்கள்
3. 'தேனாய்இன் அமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்' — 8ஆம் திருமுறை
4. 'தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே
....
.... ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ'— 8 ஆம் திருமுறை
5. சுப. இராமையா செட்டியார், பூலாங்குறிச்சி
6. ஆர். காளீஸ்வரக் குருக்கள்

உ

திசையனைத்தும் தொழுதேத்தும் திருமேனிக் கறுப்பையா

(36. திருமேனிக் கறுப்பர் திருக்கோயில், சிராவயல் புதூர்)

சிறந்த சிவபக்தனான இராவணன், சாமகானம் இசைத்து, மிகுந்த சக்தி வாய்ந்த பிராண இலிங்கத்தைச் சிவபெருமானிடமிருந்து பெற்றுக் கொண்டு இலங்கைக்குச் செல்வதை அறிந்த தேவர்கள், அந்த இலிங்கம் இராவணனிடம் இருந்தால், தம் பலம் குன்றி விடும் என்பதை நாரதர்வழி அறிந்து, திருமாலின் உதவியுடன் இலங்கை மன்னன் அந்தப் பிராண இலிங்கத்தை நிலத்தில் வைப் பதற்கான சூழ்ச்சியைச் செய்கிறனர். ஒருமுறை நிலத்தில் வைத்து விட்டால், பின்னர் அந்த இலிங்கத்தைப் பெயர்த்தெடுக்க முடி யாது என்று சிவபெருமான் கூறியிருந்ததை அவர்கள் அறிந்திருந் தனர். அந்தணனான இராவணன் சந்தியாவந்தனம் செய்யத் தவற மாட்டான்; அந்த நேரத்தில் இலிங்கத்தைக் கையில் வைத்திருக்க ஒருவர் தேவைப்படுவார் என்பதை அறிந்த திருமால், பிரம்மச் சாரிச் சிறுவனாக விநாயகரை அங்கு அனுப்பிவிட்டுத் தம் சக்கரா யுதத்தைக் கதிரவனுக்கும் பூமிக்கும் இடையில் நிறுத்திச் செயற்கை யாக அந்திப்பொழுதை உருவாக்கினார். எதிர்பார்த்தது போலவே, இராவணன் பிராண இலிங்கத்தை விநாயகரிடம் கொடுக்கப், பாரம் தாங்கமுடியாவிட்டால் மும்முறை அழைப்பேன், வந்துவிட வேண்டும், வரவில்லையேல் பிராண இலிங்கத்தை நிலத்தில் வைத்து விடுவேன் என்று விநாயகர் நிபந்தனை விதிக்கத், தேவர்கள் பிராண இலிங்கத்தின் பளுவை அதிகரிக்க, அதனைத் தாங்க முடியாத விநாயகர் மும்முறை அழைத்துவிட்டு, அவன் வாராமையால் அதை நிலத்தில் வைக்கத், திருமால் தம் சக்கராயுதத்தை மீட்டுக்கொள்ளத், தான் ஏமாற்றப்பெற்றதை உணர்ந்த இராவணன் விநாயகரைத் தலையில் குட்டிவிட்டு, இலிங்கத்தைப் பெயர்த்தெடுக்க எவ்வளவோ முயன்றும் இயலாமற் போகவே, அதை அங்கேயே விட்டுவிட்டான்; அதுவே மகாபலநாதர் கோயில் கொண்டுள்ள திருக்கோகர்ணம் என்னும் பாடல் பெற்ற தலமாகும்.[1] சிறிது மாறுதல்களுடன் இந் தக் கதையைப் பெரும்பாலோர் அறிந்திருப்பர்.

அண்ணனைப் போலவே தம்பி விபீடணன் வாழ்க்கையிலும் ஒரு நிகழ்ச்சி.

இராமபிரான் திருவவதாரத்தை முடித்துக் கொண்டு தன்னடிச் சோதிக்கு எழுந்தருளும் நேரத்தில், விபீஷணாழ்வான் அப்பிரிவைத் தாங்க இயலாது வருந்தி நிற்கிறான். அவனிடம் இச்சுவாகு குல மன்னர்களின் குலதெய்வமும், தம் திருவாராதன மூர்த்தியுமான அரங்கநாதனைக் கொடுத்தருளுகிறார் இராமபிரான். இலங்கைக் குச் செல்லும் வழியில் இளைப்பாறும் பொருட்டு அந்த ஆராதன மூர்த்தியை விபீடணன் கீழே வைக்கப், பின்னர் அதனை எடுக்க இயலாமல் அங்கேயே (திருவரங்கத்தில்) வைத்துவிட்டுச் சென்று விடுகிறான். தர்மவர்மன் என்னும் சோழ மன்னன் அந்த ஆராதன



திருமேனிக் கருப்பர்
தெவிட்டாத அழகர்

மூர்த்திக்கு மண்டபம், கோபுரம் முதலியவை கட்டினான் என்று, 'கோயில்ஒழுகு' என்னும் நூல் கூறுகிறது.[2]

சிராவயல் புதூர் தேனாட்சியம்மன் கோயில் குருக்கள், திருமேனிக் கறுப்பர் எவ்வாறு அந்த இடத்தில் இடம் பிடித்தார் என்னும் வரலாற்றைக் கூறியபோது, இந்த இரு கதைகளும் என் நினைவுக்கு வந்தன.

* * *

தேனாட்சியம்மன் கோயிலிலிருந்து குருக்களையும் அழைத்துக் கொண்டு (கறுப்பர் கோயில் பண்டாரம் வெளியூர் சென்றிருந்தார்.) திருமேனிக் கறுப்பர் கோயிலுக்குச் செல்லும்போது, குருக்கள் கீழ்க்கண்ட கதையைக் கூறத் தொடங்கினார்:

இது நடந்து சில நூறு ஆண்டுகள் ஆகியிருக்க வேண்டும். மலையாளத்திலிருந்து பதினெட்டாம்படிக் கறுப்பரைத் தேங்காய், எலுமிச்சம்பழம் ஆகியவற்றில் ஆவாகனம் செய்து நகரத்தார்கள் கொண்டு வந்தார்கள். குறிப்பிட்ட இடத்தை அடையுமுன்னர், அவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நிலத்தில் வைக்கக்கூடாது என்று பூசாரி எச்சரித்திருந்ததை மறந்துபோய், அவற்றை இங்கு கீழே வைத்து விட்டுச் சிரம பரிகாரம் செய்த பின்னர், மீண்டும் எடுக்க முயன்றபோது தோல்வியே கண்டனர். அந்த நேரத்தில் 'நான் இங்கேயே இருக்கிறேன்; கோயில் கட்டி என்னை வழிபடுங்கள்' என ஒரு குரல் ஒலித்தது; தொடர்ந்து இங்கு கறுப்பர் கோயில் எழுந்தது என்று நகரத்தார்கள் கூறுவர் என்கிறார் குருக்கள்.[3]

அதிலிருந்து கீழச்சிவற்பட்டி, உ.சிறுவயல், தேனிப்பட்டி, நாச்சியாபுரம், மேலைச்சிவபுரி ஆகிய ஐந்து ஊர்களின் வைரவன் கோயிலாரும், அங்கிருந்து பெண் எடுத்த நேமங்கோயிலாரும், இவ்விரு கோயில்களையும் வழிபட்டு வருகின்றனர்.

ஆடி மாதம் இரண்டாவது வெள்ளிக்கிழமை இந்த 5 ஊர் நகரத்தார்களும் வந்து கிடாய்ப்பூசை செய்வார்களாம்.

நேமங்கோயில் பங்காளிகள் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை இங்கு வந்து தேனாட்சியம்மனுக்கும், திருமேனிக் கறுப்பருக்கும் சுத்த (சைவ) பூசை நடத்துவார்களாம். மாசி மாதம் முதல் வெள்ளிக்கிழமை நடைபெறும் அதனை மாசிப் பூசை என்கின்றனர்.[4]

மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை அரிமழம், கானாடுகாத்தான், கோட்டையூர், நெற்குப்பை, பலவான்குடி, பள்ளத்தூர், (மற்றோர் ஊர் ?) ஆகிய ஏழு ஊர்களின் நேமங்கோயில் பங்காளிகள் சேர்ந்து பூசை நடத்துகின்றனர் என்று சொல்லப்பெறுவது[5] இந்த மாசிப் பூசையாகவே இருக்கலாம்.

இந்தப் பொதுவான தகவல்களைத் தெரிந்துகொண்டு கோயிலுக்கு வருகிறோம்.

கீழச்சிவற்பட்டி, உ.சிறுவயல், தேனிப்பட்டி, நாச்சியாபுரம், மேலைச்சிவபுரி ஆகிய 5 ஊர்களின் வைரவன் கோயில் நகரத்தார்களால் புதுப்பிக்கப்பெற்று, 12.06.92ல் மூன்றாவது முறையாகத் திருக்குட நீராட்டு நடைபெற்றிருப்பதால், கோயில் புதுமை கலையாமல் திகழ்கிறது.

இதற்கு முன்னர் இருமுறை இங்கு குடமுழுக்கு நடைபெற்றிருந் தாலும், நடைபெற்ற நாட்கள் பற்றிய எந்தக் குறிப்பும் கிடைக்க வில்லை; எனினும் 1971, 1980, 1988 ஆகிய ஆண்டுகளில் கோயில் புதுப்பிக்கப் பெற்றது என்னும் குறிப்புக் காணப் பெறுவ தால், இந்த மூன்றாண்டுகளில் எப்போதேனும் ஒருமுறையும், அதற்கு முன்னர் ஒருமுறையும் குடமுழுக்கு நடைபெற்றிருக்கலாம் என ஊகிக்க முடிகிறது.

நுழைவாயிலுக்கு அருகில் கம்பி அடைப்புக்குள் இரு பெரும் சேமங் குதிரைகள் எதிரும் புதிருமாக உள்ளன. இரண்டுமே இரண்டிரண்டு பூதங்களின் கரங்களில் கால்களை ஊன்றி நிற்பது அழகாக இருக் கிறது. இந்தக் குதிரைகள் 15.11.1929ல் நகரத்தார் குடும்பத் தாரால் அமைக்கப்பெற்றவையாம். கோயிலின் பழைமையை இது பறைசாற்றி நிற்கிறது.

உள்ளே நுழைவாயிலுக்கு நேரே மூன்று சந்நிதிகள். நடுச்சந்நிதி (கருவறை)யில் திருமேனிக் கறுப்பர் கோயில் கொண்டிருக்கிறார்.

உண்மையிலேயே இவரைக் காணக் கண் கோடி வேண்டும்; அவ் வளவு அழகாகத் திகழ்கிறார். திரு என்பதை அழகு என்று கொண் டால், அழகிய மேனியை உடைய கறுப்பர் என்று பொருள்படுவ தற்கு ஏற்ப அழகுடன் காணப்பெறுகிறார். கட்டழகும், கருணை பொழி நயனமும், காட்சிதரு சந்திர நுதலும் கூடிய இவரைத் தேனாட்சியம்மையின் வாசல் அதிகாரி என்று கவிஞர் ஒருவர்[6] வருணிக்கிறார்.

இவருக்கு வலப்புறம் உள்ள சந்நிதியில் இராஜா தெய்வமும், இடப் புறம் உள்ள சந்நிதியில் சின்னக்கறுப்பரும் உள்ளனர்.

மூன்று சந்நிதிகளுக்கும் எதிரில் 3 பலிபீடங்கள் மட்டும் இருக் கின்றன.

நம் இடப்புறத்தில் உள்ள தெற்குத் திருச்சுற்றுச் சுவரில் அரசன், சந்நியாசி சந்நிதி உள்ளது. தென்மேற்கில் சப்த கன்னியரும், வடக் குப் பிராகாரத்தில் உள்ள நான்கு சந்நிதிகளில் முனிஐயா — வீர பத்திரசாமி, பேச்சிஅம்மன் — இராக்காயி, காமாட்சி — சின்னக் காளி, மின்னஞ்செட்டி காளியாத்தாள், நொண்டி ஐயா ஆகியோ ரும் இடம் பெற்றுள்ளனர்.

இந்த மின்னஞ்செட்டி காளியாத்தாள்தாம், இந்தக் கோயிலுக்கும், தேனாட்சி அம்மன் கோயிலுக்கும் தொடர்பை — இணைப்பை ஏற் படுத்துகிறார். தேனாட்சி அம்மன் கோயிலில் சிவாசாரியாரால் சேதப்படுத்தப் பெற்றுத் தோட்டத்தில் கிடந்த மின்னஞ்செட்டி காளி யாத்தாளின் சிதைந்த பாகங்கள், இந்தச் சந்நிதியில் நிலத்தினுள் வைக்கப்பெற்று, அவற்றின் மீது அழகிய காளிசிலை அமைக்கப் பெற்றிருக்கிறது.

எட்டுக் கரங்களுடன் திகழும் இவளை ''எண்ணியே நிதமும் வாழ்ந் தால், எய்தாதன உண்டோ? குறைதான் ஏதுமுண்டோ?'' என்று கூறுகின்றனர். நாமும் அவளை அடிபணிந்து, உறவினர் அல்லா தாருக்குரிய காணிக்கையான 6¼ பணத்தை அவள் பாதத்தடியில்

வைத்து வழிபட்டுக் கொண்டு, அருகில் உள்ள முன்னோடியையும் பார்த்துக்கொண்டு அங்கிருந்து புறப்பட ஆயத்தமாகிறோம்.

நாள்தோறும் ஒருவேளை பூசை செய்யும் பண்டாரத்திற்குப் படித் தரமாகச் சிறிது ஊதியம் வழங்கப்பெறும் இக்கோயிலில், திருவிழா என்று தனியாக ஏதும் கிடையாது.

பரவும் சொல்மாலை

பொன்னுலகர் உன்னுடைய சந்நிதியில் அனுதினம்
போற்றிப் பணிந்து நிற்க,
பூதலந் தன்னிலே மன்னாதி மன்னர்உன்
பொன்னடி வணங்கி நிற்க,
இன்னிலந் தனிலுள்ள பிர்மசத் திரியரும்,
இயல்புள்ள வணிகர், சூத்ரர்
எப்போதும் வந்(து)உனது பாதார விந்தமதில்
இன்பமொடு தொழுது போற்ற,
நன்னயம தாகவளர் மேகசா மளவணா!
நவிலொ ணாப்புகழ் பூண்டவா!
நலமுள்ள சீலனே! அசுரர்குல காலனே!
நான்மறை துதிக்கும் அருளே!
சென்னெலும், கன்னலும் மென்மேலும் ஓங்கிடும்
சிராவயல் பேர்நக ரில்வாழ்
தேனாட்சி வாசல்அதி காரி,கார் மேக
திருமே னிக்கறுப் பையனே!

— திருமேனிக் கறுப்பண்ண சுவாமி பதிகம்,
பி.கு.குட்டை ஐயா என்ற
பி.சு.சுப்பிரமணியன் செட்டியார், பள்ளத்தூர்

குறிப்பு விளக்கம்:

1. ஸ்ரீ கோகர்ண க்ஷேத்ர மகிமை — மூல ஆசிரியர்: கோரா குரு
2. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் — கரப்பங்காடு கோபாலாசாரியர் பதிப்பு; புகழ் மணக்கும் வைணவத் தலங்கள் — புலவர் சி.முத்துப்பிள்ளை
3. ஆர். காளீஸ்வரக் குருக்கள்
4. ஆர். காளீஸ்வரக் குருக்கள்
5. மு. வள்ளியம்மை, கோட்டையூர்
6. பி.கு.குட்டை ஐயா, பள்ளத்தூர்.

உ

மருந்தாய்ப் பிணிதீர்க்கும் மருதங்குடி ஐயனார்

(37. ஆதினமிளகி ஐயனார் திருக்கோயில், மருதங்குடி)

பட்டமங்கலம் கரியமலை சாத்தையனார் கோயிலுக்குச் சென்றிருந்த போது, அங்குள்ள இரவுத்த இராயரை இராவுத்தர் சாமி என்றும் குறிப்பிடுகிறார்கள்; ஆனால் அவர் ஒரு முஸ்லிம் அல்லர்; குதிரை வீரரான இராயரே என்றும், இராவுத்தர் என்பது குதிரை வீரன் என்பதையும் குறிக்கும் என்றும், அருணகிரிநாத சுவாமிகள் முருகனை இராவுத்தனே என்று விளிக்கிறார் என்றும் அறிந்தோம்.

இப்போது நாம் வந்துள்ள மருதங்குடி ஆதினமிளகி ஐயனார் கோயிலில் முத்தால இராவுத்தர் சந்நிதி ஒன்று உள்ளது. இந்த மூர்த்தம் குதிரை மீது அமர்ந்த நிலையில் காணப்பெறுகிறது. ஆத்தங்குடி, கோனா பட்டு நகரத்தார்கள் இவரை மிகச் சிறப்பாக வழிபடுகின்றனர். ஆனால் முஸ்லிம்கள் யாரும் இங்கு வருவதில்லை; வழிபடுவதில்லை.

குதிரைமீது வந்திருக்கிறார்; இராவுத்தர் என்ற பெயர் இருக்கிறது; ஆகையால் இவர் ஒரு முஸ்லிம் என்று கூறுவது பொருந்துமா என்று பார்ப்போம்.

இவரும் குதிரைமீது சென்ற ஓர் இந்துவாகவே இருக்க வாய்ப்புண்டு. முத்தால என்பது முத்தலீப் என்னும் முஸ்லிம் பெயரின் பேச்சு (கொச்சை) வழக்காக இருக்கக்கூடுமானாலும், முத்தாலம்மன் என்று ஒரு சிறு தெய்வத்தின் பெயர் நிலவுவதையும் நினைவுகூர வேண்டும்.

முத்தாலை என்னும் ஒரு தொட்டியத்துப் பெண், தான் கற்பிழந்து விட்டதாகத் தன் சகோதரர்களால் சந்தேகிக்கப் பெற்றுக், கொலை செய்யப் பெறவிருந்த நேரத்தில், தானே மட்கலம் சுடும் சூளையில் புகுந்து வெந்து நீறாகி, முத்தாலம்மன் என்னும் தெய்வமானாள் என்று கூறப்பெறுகிறது.[1]

இங்குள்ள குதிரை வீர(இராவுத்த)ரான இவரும், இந்த வகையைச் சேர்ந்த ஒருவராக இருக்கலாமன்றோ?

பி. அழகாபுரி பிள்ளையார்ப்பட்டிக கோயிலாரும், அமராவதிபுதூர், ஆத்தங்குடி, ஆராவயல், காரைக்குடி, கீழச்சிவற்பட்டி, கோனாபட்டு, சிறுகூடல்பட்டி, தேவகோட்டை, புதுப்பட்டி நகரத்தார்களும், மருதங்

குடியில் உள்ள ஆதினமிளகி ஐயனார், செங்கிடாய்க் கறுப்பர், முத்தால இராவுத்தர், அம்மத்தாள், தேனாண்டாள், தேனம்மை, உடையாத்தாள் ஆகியோரைக் குலதெய்வங்களாகக் கொண்டு வழிபடுகின்றனர்.

இந்த நகரத்தார்களோடு ஆசாரிகளும், யாதவர்களும் வழிபடும் ஆதின மிளகி ஐயனார் கோயிலுக்குப், பிள்ளையார்பட்டி — சிராவயல் சாலையில், பிள்ளையார்பட்டியிலிருந்து சுமார் ஒரு கி.மீட்டரில் கண்மாய்க் கலிங்கு இருக்கும் இடத்தில் இடப்புறம் திரும்பிக் கண்மாய்க் கரை வழியே நடந்து செல்லவேண்டும்.

புதிதாகச் செல்பவர்களுக்கு ஓர் எச்சரிக்கை! கண்மாய்க் கரையில் நடந்து செல்லும்போது, பாதித் தொலைவில் உள்ள ஓர் இடத்தில் காலணிகள் அணிந்து செல்லக்கூடாது என்றும், பெண்கள் அந்த இடத்தில் நீராடக்கூடாது என்றும் அறிவிக்கும் அறிவிப்புப் பலகை ஒன்று காணப்பெறுகிறது. அந்த இடத்தில் பெண் தெய்வம் ஒன்று இருப்பதாகவும், எச்சரிக்கையை மீறி நடந்தவர்கள் அந்த பெண் தெய்வத்தின் தண்டனைக்கு உள்ளானார்கள் என்றும், அங்கு இருப்பவர்கள் கூறுகின்றனர்.

எச்சரிக்கையை மதித்துக் காலணிகளைக் கையில் எடுத்துக்கொண்டு சிறிது தொலைவு நடந்து, பின்னர் வழக்கம்போல் காலணியோடு நடந்து சென்று கோயிலை அடைகிறோம்.



முதுமையின் விளிம்பில் மருதங்குடிக் கோயில்

சேமங்குதிரைகளை அவற்றின் சேமம் கருதிக் கோயில் திருச்சுற்றுச் சுவருக்குள்ளேயே வைத்துள்ளனர் போலும்!

இங்கு யானை வாகனத்துக்கு முன்னும் பின்னும் பலிபீடங்கள் உள் ளன. இவற்றைக் கடந்து பெரியதொரு கல்மண்டபத்துக்குச் செல் கிறோம். இடப்புறம் நாச்சாரம்பாள் சந்நிதி அமைந்திருக்க, அர்த்த மண்டபத்தில் துவார பாலகரும், கருவறையில் பூரணாதேவி — புஷ் கலாதேவி உடனாய ஆதினமிளகி ஐயனாரும் உள்ளனர்.

இவருக்கு ஒவ்வொரு நாளும் ஒருகாலப் பூசை நடைபெறுகிறது. திங் கள், வெள்ளிக்கிழமைகளில் மட்டும் மாலைநேரத்தில் பூசை நடை பெறும். மற்ற நேரங்களில் மருதங்குடியிலிருந்து வேளாரை அழைத்து வந்து ஐயனாரையும், மற்ற தெய்வங்களையும் வழிபட்டு மகிழலாம்.

இங்கு சிவன்ராத்திரி மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகிறது. பேரளவில் பக்தர்கள் வந்து வழிபடும் அந்நாளில், நூற்றுக் கணக் கான நகரத்தார்களும் வருவார்கள். அடுத்தநாள் மஞ்சுவிரட்டு நடை பெறும்; வேளார்கள் பாற்குடம் எடுப்பார்கள். 20.01.83ல் நடை பெற்ற திருக்குட நீராட்டுக்கு முன்னர், விவரம் தெரிந்து ஒருமுறை குடமுழுக்கு நடைபெற்றிருப்பதாக அர்ச்சகரான வேளார் கூறுகிறார்.

தென் பிராகாரத்துக்கு வருகிறோம். அடைக்கலம்காத்தார், சின்னக் கறுப்பர், பெரியகறுப்பர், வீரபத்திரர் ஆகியோர் தனித்தனி சந்நிதி களில் தரிசனம் தருகின்றனர். மேலும் சந்நியாசி, கன்னிமார் எழு வர், ஆஞ்சநேயர், அரசுமகன்சுவாமி, அம்மத்தாள் ஆகியோருடன் மூலிமலையான் (மயிலுடன் உள்ள முருகன்; முருகனைச் சில கோயில் களில் இவ்வாறு அழைக்கின்றனர். தோற்றத்தில் சித்தரைப் போன்று காட்சியளிக்கின்றார்.), தனிச்சந்நிதி ஒன்றில் சொக்காயி அம்மன், மற்றொரு தனிச்சந்நிதியில் இக்கோயிலின் சிறப்புமிக்க செங்கிடாய்க் கறுப்பர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். செங்கிடாய்க் கறுப் பருடன், வள்ளியம்மை என்று ஒரு பெண் தெய்வமும் அந்தச் சந் நிதியில் இடம் பெற்றுள்ளது.

செங்கிடாய்க் கறுப்பருக்குக் கிடாய் வெட்டிப் பூசை போடுவதென் றால், முதலில் இறைவனின் திருவுளச் சம்மதம் பெற வேண்டுமாம்; நிறையச் செலவும் பிடிக்கும்; 20,30 ஆண்டுகளாக இத்தகைய பூசை நடைபெறவில்லை என்கிறார் அர்ச்சகர்.

காரைக்குடி, தேவகோட்டை நகரத்தார்கள், தத்தம் ஊர்களிலேயே செங்கிடாய்க் கறுப்பருக்குக் கோயில்வீடுகள் கட்டி வழிபாடு நடத்து கின்றனராம். அங்கு படைப்பவர்கள், முதலில் இங்கு வந்து தீர்த் தம் எடுத்துச் செல்கின்றனர்.

கீழச்சிவற்பட்டி நகரத்தார்கள் இவரை அதிகமாக வழிபடுகின்றனர். அவர்கள் வீடுகளில் தலைப்பிள்ளை ஆண்பிள்ளையாக இருந்தால், இங்கு மிகச் சிறப்பாக அபிஷேக ஆராதனைகள் செய்வார்களாம்.

அம்மத்தாளைத், தேவகோட்டை நகரத்தார்களில் ஒரு பிரிவினர் மாசி மாதத்தில் வந்து வழிபடுகின்றனர்.

தேவகோட்டை நகரத்தாரில் எஞ்சியோர், தை மாதம் முதல் சனிக் கிழமை வந்து தங்கியிருந்து பாலாபிஷேகம் செய்து, பச்சை வாழை பரப்பி வழிபடுவது உண்டு.

தென் சுற்றுச்சுவரை ஒட்டியுள்ள நான்கு சந்நிதிகளில் தேனம்மை, உடையாத்தாள், பிள்ளைச்சி அம்மன், தேனாண்டாள் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இவர்களைக் காரைக்குடி, கோனாபட்டு, தேவகோட்டை நகரத்தார்கள் வழிபடுகின்றனர்.

வடக்குத் திருச்சுற்றுச் சுவரை ஒட்டித்தான் முத்தால இராவுத்தர் சந் நிதி உள்ளது.

குதிரைமீது இவ்வழியே வந்த இராவுத்தர் ஒருவர் இதற்கு மேல் போக முடியாமல், இங்கேயே சமாதியாகி விட்டாராம். பின்னர் நகரத்தார் அவரைத் தங்கள் குலதெய்வமாக ஏற்றுக் கொண்டு வழிபட்டு வரு கின்றனராம்.

மிகவும் வரதராகக் கருதப்பெறும் முத்தால இராவுத்தருக்கு, மா இடித்து, அதில் ஏலக்காய் போன்ற வாசனைப் பொருள்களும், தேங்காய்ப் பூவும் கலந்து ரொட்டியாகச் செய்து நிவேதனம் செய்வார்களாம்.

இந்தப் பிராகாரத்தில் நொண்டிக் கறுப்பருக்கு ஒரு தனிச் சந்நிதி உள்ளது.

நகரத்தார் வீடுகளில் நடைபெறும் திருமணத்துக்கு முன்னர், அவர் கள் இங்கு வந்து வழிபட்டுச் செல்கின்றனர். திருமணத்தன்று வேளார் கள் அங்கு சென்று திருநீறு வழங்கி வருவதுண்டு. பிள்ளைகளுக்கு இங்கு வந்துதான் பெரும்பாலும் பெயர் கூப்பிடப்பெறுகிறது.

செங்கிடாய்க் கறுப்பருக்கு மட்டும் ஒரு நகரத்தார் குடும்பத்தினர் திருப்பணி செய்து குடநீராட்டுச் செய்ய முயன்றபோதுதான், கீழச் சிவற்பட்டி, தேவகோட்டை நகரத்தார்களின் முயற்சியில் நிதிதிரட்டிக் கோயில் முழுவதுமே மராமத்துச் செய்து, 83ஆம் ஆண்டில் திருக் குட நீராட்டு நடைபெற்றதாக அர்ச்சகர் கூறுகிறார்.

முதலில் குறிப்பிட்ட எல்லா ஊர்களையும் சேர்ந்த சுமார் 400 புள்ளி கள், இக்கோயிலைக் குலதெய்வக் கோயிலாகக் கொண்டு வழிபடு கின்றனர். அவர்களில் பழனிப் பாதயாத்திரை மேற்கொள்வோர், முதலில் இங்கு வந்து வழிபட்ட பின்னரே, யாத்திரையைத் தொடங்கு கின்றனராம்.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

போதியர், பிண்டியர், பொருத்த மில்லிகள்
நீதிகள் சொல்லியும் நினைய கிற்கிலார்,
வேதியர் பரவுவெண் காடு மேவிய
ஆதியை அடிதொழ அல்லல் இல்லையே.

திருச்சிற்றம்பலம்

— 3ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

1. அபிதான சிந்தாமணி

உ

முனிகள் முனியே முப்பலிக் கறுப்பரே!

(38. முப்பலிக் கறுப்பர் திருக்கோயில், வைரவன்பட்டி)

கரியமலை போன்ற உருவம்; கம்பீரமான தோற்றம்; வண்டெனச் சுழலும் கருவிழிகள்; முறுக்கியமீசை; இரண்டு பிறைச் சந்திரன்களைக் கடைந்தாற்போல் விளங்கும் அழகிய வளைந்த பற்கள்; பனைமரம் அனைய கரங்கள்; அவற்றில், மழைமேகங்கள் மின்னினாற்போல ஒளிவிடும் வாள்கள்; இடியின் ஒலி போல ஆரவார ஒலியை உடையவர்; அதட்டிப் பேசும் சொல்லை உடையவர்.

இத்தகைய வியத்தகு வீரர், கையில் கங்கணமும், காலில் சிலம்பும், இடுப்பில் ஒலிக்கும் மணிகளையும் அணிந்து, கலகலவென ஒலி எழுப்பிக் கடுவேகமாக வருகிறார்.

'களவு செய்துகொண்டு எங்கே போகிறாய்?'

வீரரின் அதட்டலைக் கேட்டு வெருண்டு விட்டீர்களா? 'அழுங்கல்...., அஞ்சேல்'.[1] இவர்தாம் "வீரரில் வீரன், காலற்கும் காலன், வீர மாகாளன்"[2] இந்திராணியை இழுத்துச் செல்லும் அசமுகி என்னும் அரக்கியை நோக்கித்தான் இவ்வாறு அதட்டுகிறார்.

* * *

அரக்கர்களின் அக்கிரமம் குறித்துச் சிவபெருமானிடம் முறையிடச் செல்லுமுன்னர், இந்திராணியைக் 'காரணி செறிந்துற்றன்ன கரிய கடவுளிடம்'[3] ஒப்படைத்துவிட்டு இந்திரன் சென்றது வரை, முன்னர் தெரிந்துகொண்டிருக்கிறோம்.

அந்த அடைக்கலப் பொருளான இந்திராணியைச் சூரபதுமனின் தங்கையும், ஆட்டுக்கடாவின் முகம் கொண்டவளுமான அசமுகி, தன் தமையனிடம் இழுத்துச் செல்ல முயல்கிறாள். அப்போது ஐயனாரை நோக்கி இந்திராணி அபயக்குரல் எழுப்பக், காற்றெனக் கடுகி விரைகிறார் 'சாத்தனது அருளின் நிற்கும் தானையந் தலைவன்'.[4]

இந்திராணியைப் பற்றி நின்ற அசமுகியின் கையைத் துண்டித்து, அவளிடமிருந்து இந்திராணியைக் காப்பாற்றுகிறார் மாகாளர்.

* * *

மாகாளர் என்றால் பெரியகறுப்பர் என்று பொருள். விடத்தை உண்டு காத்த (ஆலகால நஞ்சினை உண்டு அமரரைக் காத்த) சிவ

பெருமானின் நாமத்தை — மாகாளன் என்னும் பெயரைப் பெற்ற இவர், தேவர் தலைவனின் அவைகளில் எல்லாம் புகழப்பெறும் வீரர்; வாள் போரில் சிறந்தவர்; ஐயனாரின் தானை(படை)த் தலைவர்.

இவரைச் சிறந்த சிவனடியார் என்று கூறி, இவர் போன்றவர்களை வழிபடுவதை, 'அடியார் வழிபாடு' என்று கொள்ளவேண்டும் என் கிறார்கள்.[5]

கறுப்பரைச் சிவபெருமானுடைய அணுக்கத் தொண்டர்களில் ஒருவர் என்று கூடக் கூறுகின்றனர். சிவசந்நிதியில் நந்தியுடன் இருக்கும் துவார பாலகரே இவர் என்றும், சிவசந்நிதியைக் காவல் செய்வ தும், சிவசந்நிதி இருக்கும் ஊரில் அதர்மம் நடவாமல் காவல் புரி வதும் இவருடைய கடமையாகும் என்றும் சொல்கின்றனர்.[6]

ஆன்மிக முன்னேற்றத்துக்காகச் சிவனை வழிபட்ட மக்கள், இகபர சௌபாக்கியங்களுக்காகக் கறுப்பர் போன்ற காவல் தெய்வங்களை வழிபடலாயினர் என்று[7] சொல்வது பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. நம் மூதாதையர் சிறந்த சிவபக்தர்களாக — சிவா லயத் திருப்பணிகள் செய்தவர்களாக இருந்தும், ஐயனார், கறுப்பர் கோயில்களையும் கட்டி, அத்தெய்வங்களையும் வழிபட்டு வந்துள் ளனரே என்று நினைக்கும்போது — வியக்கும்போது, இது பொருத்த மான விளக்கமாக அமைகிறது.



எழில்மிகு சிவாலய இராஜகோபுரமும், காவல் தெய்வம் கறுப்பர் சந்நிதியும்

இந்தக் கூற்றுகளை மெய்ப்பிப்பது போன்று, இரு கோயில்கள் அமைந் திருக்கின்றன. நகரத்தார்களுடன் தொடர்புடைய வைரவன் கோயில், கோட்டூர்க் கோயில் இரண்டுமே அவை. இவற்றில் வைரவன்பட்டி யிலுள்ள வைரவன் கோயிலில், கோயிலை ஒட்டி வெளியில் கறுப்பர் கோயில் உள்ளது. கோட்டூரிலோ, கோயிலின் உள்ளேயே மாகாளர் சந்நிதி அமைந்திருக்கிறது. இவ்விரு சந்நிதிகளும், முன்னர் கூறப் பெற்ற காவல்தெய்வ வழிபாடு, அடியார் வழிபாடு என்பவற்றுக்கு ஏற்ப அமைகின்றன.

* * *

வைரவன்பட்டிக்குச் செல்ல வழி கூறுவது, கொல்லர் பட்டறையில் இரும்பு விற்ற கதைதான்! எனவே எளியேனுக்கு முன்னரே நீங்கள் அங்கு சென்று காத்திருப்பதில் வியப்பில்லை!

வளரொளிநாதர் கோயிலுக்குள் செல்லுமுன்னர் கோயிலின் முன் பகுதியில், முன்புறத் திருச்சுற்றுச் சுவருடன் சேர்ந்து, நம் இடப்புறம் விநாயகர் கோயிலும், நம் வலப்புறம் முப்பலிக்கறுப்பர் கோயிலும் உள்ளன. (முப்பலி என்பது மூவகையான உயிர்ப்பலி கொடுப்பதையே குறிக்கும்.[8])

முதலில் விநாயகரை வணங்கிவிட்டு, இராஜகோபுரத்தின் இடப்புற முள்ள முப்பலிக் கறுப்பர் கோயிலுக்கு வருகிறோம். உயிர்ப்பலி கொடுப்பதாலேயே, இச்சந்நிதி கோயிலின் புறத்தே உள்ளது என் கிறார் இங்கு பூசாரியான சிவன்கோயில் வைராவி.[9]

முப்புறமும் பாதிக்குக் கம்பி அடைத்த கல்மண்டபத்தில் கிழக்குப் பார்த்த வாயிலுடன்உள்ளது கறுப்பர் சந்நிதி. வாயில்தான் கிழக்கு நோக்கியுள்ளதே தவிர, உள்ளே கறுப்பர் தெற்குப் பார்த்தே இருக் கிறார்.

உள்ளே, கறுப்பரைக் குறிக்கப் பீடம் மட்டுமே உள்ளது. அரிவாள் கள், சூலாயுதம், பாதகுறடுகள், சுக்குமாந்தடி ஆகியவை கறுப்பரைப் பிரதிநிதித்து வைக்கப்பெற்றுள்ளன. பின்னால் பெரியதொரு சுக்கு மாந்தடியும், நீண்ட பெரிய அரிவாளும் உள்ளன.

இங்கிருந்து அரிவாளை எடுத்துச் சென்று மகிபாலன்பட்டியில் படைக் கிறார்களாம். இவருக்குக் கல்லல் நகரத்தார் குடும்பத்தினர் வெள்ளி யில் அரிவாளும், சுக்குமாந்தடியும் காணிக்கை செலுத்தியுள்ளனராம்.

இப்போது ஓராண்டுக் காலமாகத்தான் இங்கு நாள்தோறும் ஒருகாலப் பூசை நடைபெறுகிறது. சிராவயல் நகரத்தார் ஒருவர் இதற்கான படித் தரம் வழங்கி வருகிறார்.

கறுப்பரை நேரே வழிபட விரும்புவோருக்கெனச் சந்நிதியின் தெற் குச் சுவரில் சாளரம்(ஜன்னல்) அமைக்கப்பெற்றிருக்கிறது. கறுப்பருக்கு நேர் எதிரில் சந்நிதிக்கு வெளியே வேல் ஒன்று உள்ளது. கறுப்பரின் வலப்புறம் உள்ள பலிபீடம் காளிக்காக அமைந்தது.

சந்நிதியைச் சுற்றி வந்தோமானால், மேற்குப் பிராகாரததில் பத்துப் பீடங்கள் உள்ளன. அவை சோனையன், காளி, மலைச்சி, பிள்ளை யார் ஆகியவற்றுக்கான பீடங்கள். கல்லினாலான தண்டாயுதமும் உள்ளது.

இதற்கு வடகிழக்கே, இக்கறுப்பர் சந்நிதியுடன் தொடர்புடைய மற்றொரு மண்டபமும் உள்ளது. குழிபிறை நகரத்தார் ஒருவரின் திருப்பணியான இக்கூடத்தில் சோனையன், சங்கூதிக் கறுப்பர், ஊர்காவலன் ஆகியோரைப் பிரதிநிதித்து மூன்று கற்பீடங்கள் காணப்பெறுகின்றன.

நகரத்தார்களைத் தவிர மற்றவர்களும் இக்கறுப்பரைக் குலதெய்வமாகக் கும்பிடுகின்றனர். அடிக்கடி பலர் வந்து அபிஷேக ஆராதனைகள் செய்கின்றனர்.

நேர்ந்து கொண்டவர்கள், குழந்தை பிறந்தால் இங்கு வந்து முடி இறக்கித் தொட்டில் கட்டிப் பெயர் கூப்பிடுவது உண்டு.[10]

சிவசந்நிதியையும், சிவபக்தர்களையும் காக்கும் கறுப்பரை வணங்கி வழிபடுவோருக்கு எவ்விதத் தொல்லையும் நேராமல் அவர் பார்த்துக் கொள்வார்[11] என்னும் உறுதி மொழியை உள்ளத்துட் கொண்டு, முப்பலிக்கறுப்பரை மனம் — மொழி — மெய்களால் வணங்கி விடை பெறுகிறோம்.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்,
இன்றும் திருவுருவம் காண்கிலேன் — என்றுந்தான்
எவ்வுருவோன் உம்பிரான் என்பார்கட்(கு) என்உரைக்கேன்,
எவ்வுருவோ நின்னுருவம் ஏது.

திருச்சிற்றம்பலம்

— 11ஆம் திருமுறை,
காரைக்கால் அம்மையார்

குறிப்பு விளக்கம்:

– முனிகள் முனியே — முனிவர்கட்கெலாம் முனிவனே!

1. வருந்தாதீர்! அஞ்சாதீர்! — கந்தபுராணம்
2. கந்தபுராணம்
3. 'மேகமானது அழகுற்று வந்தாற்போன்ற கரிய நிறமுடைய தெய்வத் தன்மை பொருந்திய ஐயனார்' — கந்தபுராணம்
4. 'ஐயனாரின் திருவருளின்படி நடக்கும் படைத் தலைவர்' — கந்தபுராணம்
5. பேராசிரியர் சொ. சொ. மீ. சுந்தரம்
6. கலாமடம் பாதரக்குடி ஆதினம் நகரத்தார் குருபீடம் தவத்திரு காமாட்சி சுந்தர தேசிக சுவாமிகள் — கறுப்பர் அருட்பா மலர்'90
7. சொ. சொ. மீ
8. சொ. சொ. மீ
9. ஆர். எம். நாகு வயிராவி, வைரவன்பட்டி
10. ஆர். எம். நாகு வயிராவி
11. தவத்திரு காமாட்சி சுந்தர தேசிகர்

உ

மாசொன்று இலாத மக்கமடை ஐயனார்

(39. மக்கமடை ஐயனார் திருக்கோயில், வைரவன்பட்டி)

அந்தக் குடும்பத்தினர் ஆண்டுதோறும் தைத்திங்களில் தங்கள் குல தெய்வக் கோயிலுக்குச் சென்று வழிபட்டு வருவது வழக்கம். அந்த ஆண்டு, வேலைப் பளுவின் காரணமாகத் தம் குடும்பத்தினரை மட்டும் கோயிலுக்கு அனுப்பிவிட்டுக் குடும்பத் தலைவர், அலுவலகத்துக் குச் சென்றுவிட்டார். மாலையில் தம் ஸ்கூட்டரில், அவர் இல்லம் திரும்பிய நேரத்தில், எங்கிருந்தோ வந்த முரட்டு(கோயிற்) காளை ஒன்று, அவரை விரட்டத் தொடங்கியது. பிரதான சாலையிலிருந்து சந்து பொந்துக்குள் எல்லாம் நுழைந்து தப்பிக்கப் பார்த்தார். அக் காளை விடாமல் அவரை விரட்டியது. ஒரு வழியாக முரட்டுக் காளை யிடமிருந்து தப்பி, வழக்கமாக அரைமணி நேரத்தில் வீடு திரும்பு கின்றவர், 2 மணி நேரங்கழித்து வியர்க்க விறுவிறுக்க வீடு திரும்பி னார்.

அவருடைய அதிசயக் கதையைக் கேட்ட மனைவி மக்கள், உடனே அவரைக் கோயிலுக்குப் புறப்படுமாறு கூறினர். இரவு நேரத்தில் எப்படிப் போவது என்று, ஏதேதோ சாக்குப் போக்குச் சொல்லிப் பார்த்தார்; பயனில்லை.

முதலில் வேளார் வீட்டுக்குச் சென்றார். அவர், யாருக்காகவோ கோயிலில்தான் இன்னமும் காத்திருப்பதாகக் கூறினார்கள்.

நம் கதாநாயகரின் வருகையை எதிர்நோக்கியே, வேளார் கோயிலில் காத்திருந்தார். எப்படி? வழக்கமாக மாலையில் நடை சாத்தும் நேரத் தில், ஒவ்வொருமுறை அவர் கருவறைக் கதவைச் சாத்த முயன்ற போதும், கதவைச் சாத்தவிடாமல், யாரோ வருகிறார்கள் என்று சொல் வது போலக் கௌளி (பல்லி) சத்தமிட்டுக் கொண்டிருந்ததாம். அதை மதித்து அவரும் காத்திருந்தார்.

ஒருவரை இங்கு வரச் சொல்லிக் காளை விரட்டியது; மற்றவரை இங் கிருந்து போக விடாமல் கௌளி தடுத்தது! இது பொய்யோ புனை சுருட்டோ அன்று; அனுபவப்பட்டவர் கூறிய அதிகார பூர்வத் தகவல்.[1]

முரட்டு காளை விரட்டிப் போக வைத்த வைரவன்பட்டி மக்கமடை ஐயனார் கோயிலைப் பற்றித்தான் இப்போது தெரிந்து கொள்ளப் போகிறோம்.


* * *

விவரம் சேகரிக்க நாங்கள் கோயிலுக்குச் சென்றது 26.06.94 — ஐந்தாவது திருக்குட நீராட்டு விழா நடைபெற்ற நாள். குடமுழுக்கு விழா என்று அறியாமலேயே அங்கு சென்றிருந்தபோது, கோயில் அர்ச்சகர்களும், குடநீராட்டு விழாவை முன்னின்று நடத்திய நகரத்தார் பெருமகனாரும் நடந்து கொண்டமுறை, மாறாத மனக்கசப்பை ஏற்படுத்தியது.

கோயில் பற்றிய விவரங்களைக் கேட்டபோது, நகரத்தார் பெருமகனார் காத்திருக்கச் சொன்னார்; பின்னர் அவர் எங்கள் கண்ணிலேயே தென்படவில்லை.

வேளார்களை நாடியபோது, வெளியே சொல்லமுடியாத இராணுவ இரகசியங்களாக நினைத்துத், தங்கள் குலாலர் சங்கத்துடன் கலந்தாலோசித்த பின்னர்தான் விவரங்கள் கூறமுடியும் என்று கூறிவிட்டனர்.

அதனுடன் அமையாது, அங்கிருந்த நகரத்தார் பெருமக்களுடன் நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது, அரிவாள்களுடன் அங்கு வந்த இருவர், நாங்கள் பேசுவதை உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தனர்.



அழகிய இராஜகோபுரமும் அருகே நொண்டி ஐயா சந்நிதியும்

ஏன் இந்த அச்சுறுத்தல்? ஏன் இந்தத் தயக்கம்? அப்படி நீங்கள் சொல்லக்கூடாத இரகசியம்தான் என்ன? — மக்கமடை ஐயனாரே அறிவார்!

* * *

மக்கம் என்றால் எருக்கு; மடை — நீர் பாயும் மதகு; கண்மாய் மதகு அருகில் எருக்கஞ்செடிகள் நிறைந்த இடத்தில் கோயில் கொண்டிருந்த(ப்ப)தால் மக்கமடை ஐயனார் ஆனார் போலும்! 'மடையருகே கோயில் கொண்ட ஐயனாரே'[2] என்னும் பாடல் வரியும் இதனை ஓரளவு உறுதி செய்கிறது.

சிறப்பு வாய்ந்த இடத்தில்தான் ஐயனார் கோயில் கொண்டிருந்திருப்பார் போலும்! ஏனெனில் வெள்ளெருக்கம்பூவை இறைவன் திருவடியில் சாத்தினால், தம்மைப் பற்றியுள்ள பாவங்கள் யாவும் நீங்கப்பெற்றுப், பக்குவ முதிர்ச்சி அடைந்து, சஞ்சித கன்மங்கள் நீங்கி, இறைவனது கருணையால் ஞானத்தைப் பெற்றுப் பரமுத்தி அடையலாம்[3] என்று சொல்லப்பெறுகிறது.

பக்தர்கள் சிரமமில்லாமல், செலவில்லாமல், அருகிலுள்ள (வெள்ளை) எருக்கம்பூவைச் சாத்திப் பலன் பெற்றுவிடலாம் என்று ஐயனார் நினைத்திருப்பார் போலும்!

ஆனால், இவர், சிறுகூடல்பட்டி அழகிய நாச்சியம்மன் கோயில் அருகே 'ஐயன் திடல்' என்று கூறப்பெறும் இடத்தில்தான் முதலில் கோயில் கொண்டிருந்தாராம்; பின்னரே இப்போதுள்ள இடத்திற்குக் குடிபெயர்ந்தார்[4] என்று சொல்வதை ஏற்றுக்கொண்டால், இப் பெயர், இங்கு வந்த பின்னர் ஏற்பட்ட பெயராகவே இருக்கவேண்டும். (தத்து எடுத்த பிள்ளைக்குச் சுவீகாரம் வந்த இடத்தில் புதிய பெயர் சூட்டப்பெறுவதைப் போன்று!)

* * *

வைரவன்பட்டி முப்பலிக் கறுப்பரை வழிபட்ட பின்னர், பிள்ளையார்பட்டி — சிறுகூடல்பட்டி சாலையில் சுமார் 2 கி.மீ சென்று, இடப்புறம் கண்மாயினுள் (நீர் இல்லாவிட்டால்) திரும்பிச் சென்றால், கோயில்வரை காரிலேயே செல்லலாம். வைரவன்பட்டியிலிருந்து கண்மாய்க்கரை வழியே நடந்தும் சென்று விடலாம்.

கண்மாயும், முட்செடிகளும், மரங்களும் நிறைந்த பகுதியில் கோயிலும், எதிரில் திருக்குளமும் உள்ளன.

மூன்று நிலை இராஜகோபுரத்துக்கு முன்னால், ஓர் ஓட்டுக்கூடம். நடந்து களைத்துப்போய் வருகின்றவர்கள் இங்கிருந்துதான் இளைப்பாறுவார்களாம். வெளியில் இராஜகோபுரத்தின் இருபுறமும் இரு பூதங்கள் கோயிலைக் காத்து நிற்கின்றன.

கோயிலினுள் செல்லுமுன்னர் நம் இடப்புறத்தில் (தெற்கில்) சுற்றுச் சுவருடன் கூடிய சந்நிதியில் மேடை ஒன்று மட்டும் உள்ளது. நொண்டி ஐயா என்றும், நொண்டி அண்ணன் என்றும் சொல்லும், இந்த மேடையில் குடிகொண்டிருப்பவரை, நொண்டிக் கறுப்பர் என்றும் கூறுகின்றனர். (கோயிலின் உள்ளே பரிவார தெய்வங்களுடனும் ஒரு நொண்டிக் கறுப்பர் இருக்கிறார்.) வழக்கமாக, முதலில் இவரை வணங்கிவிட்டுத் தான் கோயிலினுள் செல்வார்களாம். சிறுகூடல்பட்டி மாத்தூர் மணலூர்ப் பிரிவினரின் குலதெய்வம் இவரே.

கிராமததார் பூசை செய்யும் இருவருக்குச் சாராயம் நிவேதனம் செய்யப்பெறுவதுண்டு.[5]

ஒட்டுக்கூடத்தின் வழியே அழகிய இராஜகோபுரத்தைக் கடந்து சென்று, மற்றோர் ஒட்டுக்கூடத்துக்கு வருகிறோம். இதன் மறுகோடியில் பலி பீடம் மட்டும் உள்ளது. அதையடுத்து மற்றோர் ஒட்டுக்கூடம். அதில் யானை வாகனமும், பலிபீடமும் உள்ளன.

அடுத்துக் கல்திருப்பணி செய்யப்பெற்ற மகாமண்டபமும், கருவறையும் உள்ளன. அர்த்த மண்டபத்தின் வாயிலில் துவாரபாலகர் நின்றிருக்க, அர்த்த மண்டபத்தில் நம் இடப்பக்கம் விநாயகரும், நாகரும், வலப்பக்கம் தண்டாயுதபாணியும் காட்சி தருகின்றனர்.

தனிமை விரும்பியான மூலவர் மக்கமடை ஐயனார், இடக்காலை மடித்து இருக்கை மீது ஊன்றி, வலக்காலைக் குறுக்காகக் கீழே தொங்க விட்டு உத்குடி ஆசனத்தில்[6] இடக்கையை இடது முழங்காலின் மீது நீட்டி வலக்கையில் வளை ஏந்தியிருக்கிறார்.

காட்டுவழியில் செல்லும்போது, வழியில் உள்ள முள்ளை அகற்றவும், ஆடுமாடுகளுக்கு மரத்தின் கிளைகளை (ஒடித்துவிடாமல்) வளைத்துக் கொடுக்கவும் இந்த வளை பயன்படுகிறது. (இதனைத் துறட்டி போன்றது என்று சொல்லலாமா?)கால்நடைகளைக் காக்கும் (மேய்க்கும்) மேய்ப்பர் போன்று, உலகத்து உயிர்களை இடையூறுகளிலிருந்து காப்பாற்றியும், அவற்றுக்கு வேண்டியவற்றை அருளியும் காத்தருள்கிறார் ஐயனார் என்பதை அவர் கையில் உள்ள வளை குறிப்பிடுகிறது.[7]

மூலவரைப் பற்றிய சுவையான தகவல்கள் பல உள:

1920 ஆம் ஆண்டுவாக்கில், அதற்கு முன்னர் கூரை வேய்ந்த கோயிலில் இருந்த ஆதி ஐயனார் சிலையை அகற்றிவிட்டுக், கல் திருப்பணி செய்யப்பெற்ற புதிய கோயிலில், புதிய ஐயனார் சிலையும், நடுகற்களாக இருந்த தெய்வங்களுக்கு உருவச்சிலைகளும் செய்து வைத்துக் குடமுழுக்குச் செய்திருக்கின்றனர்.[8] இதுவே முதல் குடமுழுக்கு விழாவாக இருந்திருக்கலாம்.

அந்த நேரத்தில் இக்கோயிலுக்குக் குமாரப்பேட்டை மக்கமடை ஐயனார் கோயில் என்று பெயர். குடமுழுக்கு நேரத்தில் முதல் (திருநீறு) மரியாதைப் பிரச்சினை எழுந்திருக்கக்கூடும். காரணம் 1922ல் இப்பிரச்சினை காரணமாக வெங்கடப்ப நாயக்கருக்கும், நகரத்தார்களுக்கும் இடையில் வழக்கு நடைபெற்று, நகரத்தார்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்க பெற்றிருக்கிறது. இருப்பினும், எந்தக் காரணத்தினாலோ, அது முதல், முதல் விபூதியை யாருக்கும் கொடுக்காமல், ஐயனார் சந்நிதிப் படியிலேயே போட்டு விடுகிறார்களாம். குமாரப்பேட்டை என்னும் பெயரும், அதைத் தொடர்ந்து அகன்றுவிட்டது.[1]

வைரவன்பட்டி உட்பட இந்தப் பகுதியை, நாயக்கர்கள் மானியமாக வழங்கியிருப்பதாகக் கூறப்பெறுவதால்,[1] அவர்கள் முதல் மரியாதை கோரியிருப்பார்களோ?.

1920களில் செய்து வைக்கப்பெற்ற அந்த இரண்டாவது சிலையைப் போன்று மற்றொரு சிலையை, அதே சிற்பியால் கூடச் செய்திருக்க

முடியுமா என்று நினைகக தோன்றுகிறது. இவருடைய முகத்தில் தவழும் புன்னகையும்(இவரையா கச்சியப்ப சிவாசாரியார் 'உக்கிரத் துடன் ஓர் மகன்'[9] என்று குறிப்பிட்டார் என்று ஐயுறவேண்டியுள் ளது!), ஆடை ஆபரணங்களைச் சிற்பி வடித்துள்ள அழகும், இன் றெல்லாம் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போலிருக்கிறது.

மற்றொரு சுவையான தகவல்: இந்தச் சிலையை விரலால் சுண்டி னால், மிக இனிமையான நாதம் ஒலிக்கிறது. 'ஓசை ஒலிஎலாம் ஆனாய் நீயே'[10] என்று அப்பர் சுவாமிகள் பாடியது இவருக்கு அப் படியே பொருந்தும்! இது போன்றதொரு தெய்வத் திருமேனியை எளியேன் எந்தக் குலதெய்வக் கோயிலிலும் காணவில்லை.

ஆனால் யாருடைய கண்ணேறோ, சிலை மாற்றப்பெற்ற சில ஆண்டு களில், திருடர்கள் புகுந்து, மூலவரின் திருவுருவத்தைப் பெயர்த் தெடுத்து, அதன் கீழிருந்த நவரத்தினங்களை அபகரித்த நேரத்தில் அதன் வலக்கால் விரல்கள் சேதமுற்று விட்டன. (சிலையின் கலை யழகைக் கண்ட பின்னருமா, அவர்களால் அதைச் சிதைக்க முடிந்தது?)

தெய்வச் சிலைகளின் அங்கங்களில் சேதம் ஏற்பட்டால், சிலைகளை மாற்றவேண்டும் என்னும் சாத்திர விதிக்கேற்ப, [11] மீண்டும் புதிய சிலை ஒன்றினைச் செய்து வைத்துக் குடமுழுக்கு நடத்தியிருக்கின்ற னர்.[12]

இக்குடமுழுக்கு 1920(22)க்கும், 1977க்கும் இடையில் நடைபெற் றிருக்க வேண்டும். ஏனெனில் 1977ல் நடைபெற்றது மூன்றாவது குடமுழுக்கு என்று கூறப்பெறுகிறது. அந்த நேரத்தில்தான் மூலவர் விமானத்தில் இருந்த செப்புக் கலசங்கள் (ஸ்தூபி) திருட்டுப் போன தால், மீண்டும் செப்புக் கலசங்களை வைக்க அஞ்சிக் கற்கலசங் களை[13] வைத்துத் திருக்குட நீராட்டுச் செய்துள்ளனர். அது (3ஆவது குடமுழுக்கு) நடந்து ஏறத்தாழ 17 ஆண்டுகளில் மூலவர் விமானத்தை இடி தாக்கிக் கற்கலசங்கள் சிதறிப் போயின. அதனால் மீண்டும் கற்கலசங்களை வைக்காமல், செப்புக் கலசங்களைச் செய்து வைத்து, 26.06.94ல் ஐந்தாவது திருக்குட நீராட்டு நடைபெற்றது.

இப்போதுள்ள மூலவரின் சுயஉருவத்தை அறிந்து கொள்ள இயலா மல், வெள்ளி அங்கி சாத்திச் சந்தனக் காப்பு இட்டுவிட்டனர்.

பழைய மூர்த்தங்கள் இரண்டையும், ஸ்ரீமந்நாராயணன், ஸ்ரீகிருஷ் ணன் (இவையும் அழகிய வேலைப்பாடுகளைக் கொண்டவை), ஆண் டவராய சுவாமி, ஆண்டாத்தாள், சந்நாசி ஆகியோருடன் ஓர் அறை யில் வைத்திருக்கின்றனர்.

* * *

கொ. அழகாபுரி, பி. அழகாபுரி (மாத்தூர் கண்ணூர்ப் பிரிவினர்), உலகம்பட்டி, இராயவரம், கிழச்சிவற்பட்டி, கோனாபட்டு, சிறுகூடல் பட்டி (மாத்தூர் மணலூர்), தேவகோட்டை (வைரவன் கோயில் பெரிய வகுப்பு), புதுவயல், வலையபட்டி ஆகிய ஊர்களின் மாத் தூர்க் கோயிலின் பல பிரிவினரும், வைரவன் கோயிலினருமான சுமார் 400 புள்ளிகள்[14] முதல் 1000 புள்ளிகள் வரை[15] இக்கோ யிலைக் குலதெய்வக் கோயிலாகக் கொண்டுள்ளனர்.

திருவிழா ஏதும் இல்லாத, நாள்தோறும் ஒருகாலப் பூசை நடைபெறும் இக்கோயில் நகரத்தார்களின் நிர்வாகத்தில் உள்ளது. கோயில் மராமத்து, திருப்பணி ஆகியவற்றை நகரத்தாரே செய்கின்றனர்.[16]

நகரத்தார் வீடுகளில் நாராயணன், கறுப்பையா என்னும் பெயர்களைப் பிள்ளைகளுக்கு வைப்பது உண்டு என்றாலும், கறுப்பையா என்னும் பெயரில் இராசி இல்லை என்னும் நம்பிக்கையும் சில குடும்பங்களில் நிலவுகிறது.

திருமணத்திற்குப்பின் கட்டாயம் மகன் — மருமகளைக் கோயிலுக்கு அழைத்து வருகின்றனர். இவ்வாறு அழைத்துச் சென்று வந்த பின்னரே, சாந்திமுகூர்த்தம் வைக்கும் வழக்கம்கூடச் சில குடும்பங்களில் நிலவிவருகிறது.[17]

தை மாதம் திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளிலும், மாசி மாதத்திலும், குடும்பங்களாகவோ, பங்காளிகள் சேர்ந்து வந்தோ வழிபடுகின்றனர்.

* * *



ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே

இராஜகோபுரத்தின் இருபுறமும் சேமங்குதிரைகள் கட்டப்பெற்றுள் ளன. இவற்றில் ஒன்று, 1870ஆம் ஆண்டில், கூரைக் கொட்ட கையில் சுவாமி இருந்த காலத்திலேயே நகரத்தார்களால் கட்டப்பெற் றது. மற்றது யார், எப்போது கட்டியது என்னும் விவரம் தெரிய வில்லை.[18]

ஐயனாருக்கு வலப்புறம் உள்ள கல் திருப்பணி செய்யப்பெற்ற சந் நிதியில், பெரிய கறுப்பர் கிழக்கு நோக்கி அருள்பாலிக்கிறார். அச் சந்நிதியின் முன் உள்ள ஒட்டுக் கூடத்தில், நம் இடப்புறம் சப்த கன்னி யரும், வலப்புறம் இரு பலிபீடங்களும் உள்ளன.

தென் பிராகாரத்தில் வரிசையாக உள்ள சந்நிதிகளில் சப்பாணிக் கறுப்பர், சமயக் கறுப்பர், முத்துக்கறுப்பர், இராக்காயி, கையில் குழந்தையுடன் பேச்சியம்மாள், பத்ரகாளியம்மன், வீரபத்திரர், நொண்டிக்கறுப்பர், சின்னையா, சின்னக் கறுப்பர் ஆகிய பரிவார தெய்வங்கள் இடம்பெற்றுள்ளன. எல்லாச் சந்நிதிகளுக்குமே விமானங் கள் உள்ளன.

மேற்குப் பிராகாரத்தில் மூலவர், கறுப்பர் சந்நிதிகளின் பின்புறம் பலாமரம் உள்ளது. இருப்பினும் இக்கோயிலின் தலமரம் புளியமரமே என்று கூறுகின்றனர்.[19]

நேர்த்திக் கடனாக அரிவாள்கள் அடித்துக் கொடுப்பதும், ஏகவேட்டி, நெல் ஆகியவை கொடுப்பதும் உண்டு என்று கூறப்பெறுகிறது.

இக்கோயிலில் மின்விளக்குகளை அமைத்துள்ள தேவகோட்டை நகரத் தார் குடும்பத்தினரே, மின்கட்டணங்களையும் கட்டி வருகின்றன ராம்.[19]

* * *

இறுதியாக மக்கமடை ஐயனார் கோயில் அர்ச்சகர்களுக்கு அடியேன் மிகத் தாழ்மையாகத் தெரிவித்துக் கொள்வது: கடவுள் ஒருவர் இருக் கிறார்; அவர் மிகப் பெரியவர்! அர்ச்சகர் உட்பட அனைவரும் அவரு டைய ஊழியர்களே! அவரை நம்பினோரை அரிவாள் என்ன, அணுவாயுதம்கூட ஒன்றும் செய்யாது!

''ஆராலும் என்னை அமட்டஒண் ணா(து)இனிச்
சீரார் பிரான்வந்(து)என் சிந்தை புகுந்தனன்....''

— திருமூலர்

பரவும் சொல்மாலை

1. வாடுகின்ற பயிர்க்கெல்லாம்
வந்துபொழியும் மழையைப்போல்
தேடிநம்மை ஆட்கொண்ட
தெய்வமே நல்ஐயனார்!

மக்கமடை ஐயனார்
மகிழ்வுதரும் ஐயனார்

பக்தர்தம்மைக் காத்திடும்
பரிவுமிக்க ஐயனார்.

— டாக்டர் வ. தேனப்பன், பி. அழகாபுரி

2. கண்மாய்க்கரை சூழ்ந்திருக்கக்
கழனியெல்லாம் வாழ்ந்திருக்கக்
காவலுக்குக் கோயில்கொண்ட
அய்யனாரே! — எங்கள்
பெண்டுபிள்ளை ஊர்வளரப்,
பேரன்பேத்தி பேர்வளரப்,
பேணிமிகக் காத்திருக்கும் அய்யனாரே!

— காசிஸ்ரீ அரு. சோமசுந்தரன்,
தேவகோட்டை

3. மக்கமடை ஐயனாரே ஐயனாரே!
வாழ்வளிக்க வந்ததெய்வம் ஐயனாரே!
எக்கணமும் உனைமறவோம் ஐயனாரே!
என்றென்றும் துணைஇருப்பாய் ஐயனாரே!

குழந்தைகுட்டி யோடுவந்தோம் ஐயனாரே!
குறைகள்தீர்க்க வேணும்எங்கள் ஐயனாரே!
வளங்கள்எல் லாம்பெருகவேணும் ஐயனாரே!
மனங்கசிந்து வேண்டுகிறோம் ஐயனாரே!

— குழந்தைக் கவிஞர்
அழ. வள்ளியப்பா

குறிப்பு விளக்கம்:

1. நன்னெறிக் கோட்பாட்டின் அடிப்படையில், இக்கட்டுரை நெடுகிலும் சில பெயர்கள் குறிப்பிடப் பெறவில்லை
2. குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா
3. புட்ப பலன்
4. டாக்டர் வ. தேனப்பன், பி. அழகாபுரி
5. நா.கி.நா.கி. கிருஷ்ணப்ப செட்டியார், கீழச்சிவற்பட்டி
6. தென்னிந்தியச் சிற்பங்களும் கோயில்களும் — தி. இராசமாணிக்கம்
7. டாக்டர் வ. தேனப்பன்
8. நா.கி.நா.கி. கிருஷ்ணப்ப செட்டியார்
9. கந்தபுராணம்
10. 6ஆம் திருமுறை
11. ம. சிவகுமார் பட்டர், மதுரை
12. நா.கி.நா.கி. கிருஷ்ணப்ப செட்டியார்
13. கலசம் அல்லது ஸ்தூபி தங்கம், வெள்ளி அல்லது தாமிரத்தினாலேயே அமைக்கப் பெறவேண்டும் என்பது விதி — ஆலயங்களும் ஆகமங்களும்
14. டாக்டர் தே. சொக்கலிங்கம், பி. அழகாபுரி
15. காசிஸ்ரீ அரு. சோமசுந்தரம், தேவகோட்டை.
16. டாக்டர் தே. சொக்கலிங்கம்
17. டாக்டர் வ. தேனப்பன்
18. நா.கி.நா.கி. கிருஷ்ணப்ப செட்டியார்
19. காசிஸ்ரீ அரு. சோமசுந்தரம்
20. திருமந்திரம், 10ஆம் திருமுறை

உ

கண்ணாய் உலகுகாக்கும் கண்ணப்ப ஐயனார்

(40. கண்ணப்ப ஐயனார் திருக்கோயில், மணமேல்பட்டி)

தென்கயிலாயம் என்று சிறப்பிக்கப்பெறும் திருக்காளத்தியில், கோண மில் குடுமித்தேவரால் ஆட்கொள்ளப் பெற்றுக், கண்ணாய் உலகு காக்கும் கடவுளுக்கே கண் ஈந்து, 'நில்லு கண் அப்ப' என்று இடந்து அப்ப இருந்த கையை இறைவன் பிடித்து என் வலத்தில் என்றும் நிற்பாய்!' என்று அருளப்பெற்றவர், அன்பிற்கு இலக்கணமாகத் திகழும் திண்ணப்பர் என்னும் கண்ணப்பர்.

அந்த அன்பின் சிகரத்தின் திருப்பெயரைத் தாங்கி, அடியார்களுக்கு ஊனக்கண் வழங்குவதோடு, அவர்களின் ஞானக் கண்ணையும் திறந்து வைத்து அருள்பாலித்து வருகிறார் மணமேல்பட்டிக் கண் ணப்பையனார்

மக்கமடை ஐயனாரின் குடமுழுக்கு விழாவில் கலந்துகொண்ட பின்னர், அங்கிருந்து குன்றக்குடி — திருப்புத்தூர் பிரதான சாலைக்கு வந்து, திருப்புத்தூரை ஒட்டியுள்ள மணமேல்பட்டிக்குக், குடுமித் தேவரைக் காணத் திண்ணப்பர் ஆர்வத்துடன் விரைந்தது போன்று, நாமும் விரைகிறோம்

திருப்புத்தூரிலிருந்து சுமார் 3 கி.மீட்டரில், இடப்புறம் திரும்பும் மணமேல்பட்டி சாலையில் (ஊரின் பெயர் அறிவிப்புப் பலகை யும் அம்முச்சந்தியில் உள்ளது.) ஏறத்தாழ 1½ கி.மீ சென்று, இளஞ்சிட்டுகள் இன்முகத்துடன் கூடிக் குதூகலிக்கும் காட்சியைக் கண்டு இன்புற்ற வண்ணம், அடுத்துள்ள மற்றொரு முச்சந்தியில் வலப்புறம் திரும்பி, வள்ளலின் கோயிலை அடைகிறோம்.

ஊரின் எல்லையில், கிழக்கு நோக்கி அமைந்துள்ள கோயிலின் பின்பகுதியைச் சென்றடைகிறோம். அருகில், கோயிலின் தென் மேற்கு மூலையில் பராமரிக்கப் பெறாத பழைய குளம் ஒன்று உள்ளது. இதை ஆவிணிப்பட்டியார் குளம் என்று சொல்வார் களாம். ஆவிணிப்பட்டி, வேகுப்பட்டி ஆகிய ஊர்களின் இளை யாற்றங்குடி ஒக்கூர்ப்பங்காளிகள், மணமேல்பட்டி கண்ணப்பைய னாரைக் குலதெய்வமாகக் கொண்டிருந்த காலத்தில், ஆவிணிப் பட்டியில் நடந்த அழகாத்தாள் படைப்புக்கு, அந்த ஊர்ப் பங்

காளிகள் இந்தக் குளத்திலிருந்து தீர்த்தம் எடுத்துச் சென்று படைத்து வந்தனராம்.[1]

பல்லாண்டுகளுக்கு முன்னர் அந்த படைப்பு நின்று போனதிலிருந்து அவர்களுக்கு இந்தக் கோயிலுடன் இருந்த தொடர்பும் படிப்படியாகக் குறைந்துவிட்டது.

தற்போது அந்த ஆவிணிப்பட்டிப் பங்காளிகள் மூலங்குடிப் பொன்னன் கோயிலைக் குலதெய்வக் கோயிலாகக் கொண்டு வழிபட்டு வருகின்றனர். இருப்பினும், ஓரிரு குடும்பத்தினர், இன்னும் கண்ணப்பையனாருக்குப் பணம் முடிந்து வைப்பது, திருமணமானதும் மகன் — மருமகளை அழைத்து வருவது போன்றவற்றைச் செய்து வருகின்றனர்.[1]

இரணசிங்கபுரம், திருவிடையார்பட்டி ஆகிய ஊர்களைச் சேர்ந்த யாதவ சமுகத்தினர், பல்லாண்டுகளாக இந்த ஐயனாரை வழிபட்டு வருகின்றனர். அவர்கள் அந்தக் காலத்தில் கால்நடைகளை ஓட்டி வந்தபோது, இக்குளக்கரையில் தங்கி இளைப்பாறி இங்கு வழிபாடு செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனராம்.

கோயிலின் பின்புறம் ஒரு நுழைவாயில் இருந்தாலும், நாம் முன் பக்கத்திற்கே செல்கிறோம்.



கண்ணப்பையனாரைக் காண வாரீர் எனத் துவார பூதங்கள் வரவேற்கின்றனவோ?

கோயிலின் தென்கிழக்கே பெரியதொரு புளியமரம் உள்ளது. நூறாண்டுகளுக்கு மேல் பழைமையான இம்மரமே கோயிலின் தல மரம் போன்று விளங்குகிறது.

மற்ற ஐயனார் கோயில்களில் காணப்பெறும் சேமங்குதிரைகளை இங்கே காணமுடியவில்லை. சேமங்குதிரைகள் இல்லாத மிகச்சில ஐயனார் (குலதெய்வக்) கோயில்களில் இதுவும் ஒன்று.

இந்நூல் தொடர்பாகத் தகவல் சேகரிக்க இக்கோயிலுக்குச் சென் றிருந்தபோது (03.06.1994), இந்நூலை வாங்குவோர் வழங்கும் அன்பளிப்புத்தொகை முழுவதும் இந்தக் கோயிலுக்கே வழங்கப் பெறும் என்று கூறியபோது, "சேமங்குதிரை இல்லாதது இங்கு பெரியதொரு குறையாக உள்ளது. இந்த நல்ல காரியத்தின்வழி கிடைக்கும் பணத்தைக் கொண்டு அதைக் கட்டிக் கொடுங்கள்" என்று, தலைமை அர்ச்சகர் (சேவக வேளார்) ஐயனார் வாசலில் கூறினார். அப்போதே ஐயனார் முன்னிலையில் சேமங்குதிரை கட்டும் முடிவைச்செய்து, இந்த நூலை அச்சிடுவதற்காக நிதி திரட் டிய போதும், வேறு பல நேரங்களிலும், நூலை விற்பதன்வழி கிடைக்கும் முழுத்தொகையும் கண்ணப்பையனார் கோயிலில் சேமங் குதிரை கட்டுவதற்கே செலவிடப்பெறும் என்று அறிவித்திருந்தோம். ஆறு மாதங்கள் கழித்துச் சிலர், "இங்கு சேமங்குதிரைகள் கட்ட நாங்கள் நீண்ட காலத்திற்கு முன்பே முடிவு செய்திருக்கிறோம்; நாங்கள்தான் கட்டப் போகிறோம்" என்று, அதே ஐயனார் வாச லில் கூறியிருக்கின்றனர். எனவே சேமங்குதிரை கட்டும் முடிவை மாற்றிக்கொண்டு, இந்நூலைப் பெறுவதற்கு அன்பர்கள் வழங்கும் ஒவ்வொரு ரூபாயும், 'நிதி / நன்கொடை வழங்கியோர்' சார்பில், இதே கண்ணப்பையனார் கோயிலில், வேறு ஏதாவது ஒரு திருப் பணிக்குச் செலவிடப்பெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

★ ★ ★

பகட்டோ, படாடோபமோ இல்லாத சிறிய — எளிய கோயில். நுழைவாயிலின் இருபுறமும் கற்சிலைகளான சிறிய துவாரபூதங்கள் கோயிலைக் காத்து நிற்கின்றன.

நுழைவாயிலிலிருந்து மகாமண்டபத்துக்குச் செல்ல ஒட்டுக்கூடம் ஒன்று அமைக்கப்பெற்றுள்ளது. இங்கு தான் ஐயனாரின் யானை வாகன மும், பலிபீடமும் உள்ளன. தென்கிழக்கு மூலையில் உள்ள மடப் பளியை ஒட்டி நொண்டிக்கறுப்பரும், பட்டவரும் இருக்கின்றனர்.

இந்தப் பட்டவர் யார்? நொண்டிக்கறுப்பர் யார்? விளக்கம் ஏதும் இல்லாமலே இதுவரை இவர்களைப் பல கோயில்களில் பார்த்து வந்திருக்கிறோம்.

'பட்டுக்கிடப்பான்' என்று நகரத்தார் வீடுகளில் திட்டுவது உண்டு; 'வெட்டுப்பட்டுக்கிடப்பாய்' என்பது இதன் விரிவு; 'தண்டச்சோறு சாப்பிடாமல் மக்களுக்காக உயிரைக் கொடுப்பாய்' என்பது இதன் விளக்கம். போர்க்களத்துக்குச் சென்று மக்களுக்காக உயிர் துறத் தலே 'படுதல்'. அவ்வாறு அந்தந்தப் பகுதி மக்களுக்காக உயிர் களைத் தியாகம் செய்தோரே 'பட்டவர்கள்'. ஒரு படையை எதிரிப் படை சுற்றி வளைத்து வியூகம் அமைத்துக் கொன்று குவித்து

விடும். அவ்வாறு உயிர் துறப்போர் ஒரு தொகையாக — பலராக இருப்பதால், அவர்களுக்கென ஒரு கல்லையோ, பலிபீடத்தையோ வைத்துப் 'பட்டவர்' என்று குறிப்பிட்டு வழிபாடு செய்து வந்தனர். நாளடைவில், நாயன்மார்களில் தொகை அடியார்க்கும் ஓர் உரு வத்தை உருவாக்கியது போன்று, பட்டவர்களுக்கும் ஓர் உருவத்தைச் சித்திரித்துக் கோயில்களில் வைத்து வழிபட்டு வரலாயினர். இது போலவே போரில் உயிர் துறந்த அரசனுக்கு 'அரசு முகம்', 'இராஜா தெய்வம்' என்னும் சிலைகளை வைத்து வரலாயினர். போரில் கால் ஊன(முட)மான பின்னரும் போரிட்ட தலைவர் 'நொண்டிக் கறுப்பர்' ஆயினார். அந்தந்தப் பகுதி மக்களைக் காப்பாற்றியமைக் காக, நன்றிப் பெருக்குடன் முதலில் அவர்களைப் பாராட்டிப், பின்னர் அவர்களுக்குச் சிலை வடித்துப் பெருமைப்படுத்தி, நாள டைவில் அவர்களை வழிபடவும் தொடங்கி விட்டனர்.[2]

(இந்நாளில்,தலைவர்களுக்குச் சிலைகள் வைத்தும், அவர்களின் பிறந்த நாள்களில் அச்சிலைகளுக்கு மாலை மரியாதை செய்தும், சில நேரங்களில் பாலாபிஷேகம் கூடச் செய்தும் பாராட்டி மகிழ் வதைப் பார்க்க — கேட்கவில்லையா?)

மக்களைக் காக்க எந்த நேரமும் அவர்கள் ஆயத்தமாக இருந்ததையே, அவர்களின் கைகளில் உள்ள குத்துவாள்களும், ஈட்டிகளும் உணர்த்து கின்றன.[2]

மன்னுயிர் காக்கத் தம்முயிர் ஈந்த இந்த மாபெரும் தியாகிகளுக்கு நாமும் நன்றி செலுத்திவிட்டு மகாமண்டபத்துக்கு வருகிறோம். இது முழுமையாகக் கல் திருப்பணி செய்யப்பெற்றது.

தொடக்க காலத்தில், இப்போது கோயில் உள்ள இடத்திலேயே சாந்து மண்டபத்தில் ஐயனார் குடிகொண்டிருந்தார். வேகுப்பட்டி நகரத்தார் பெருமகனார் ஒருவர், இக்கோயிலின் ஈசான்ய மூலை யில் ஓட்டுக்கூடம் ஒன்று அமைத்து அதில் ஐயனாரைப் பாலஸ்தாபனம் செய்தார். 12 ஆண்டுகள் அந்தப் பாலாலயத்தி (இளங்கோயிலி) லேயே ஐயனார் இருந்து வந்தார். பின்னர் வைரவன் கோயில் நக ரத்தார்களுக்கும், உ.சிறுவயல் அம்மன் கோயில் நகரத்தார்களுக் கும் உரிமையாக இருந்த இந்தக் கிராமத்தில், அவர்களுடன் ஒப்பந் தம் செய்து கொண்டு, கோயில் இருக்கும் நிலத்தை அவர்களிட மிருந்து பெற்று, வேகுப்பட்டி (இளையாற்றங்குடியின் ஒக்கூர்) நக ரத்தார் பெருமகனார் ஒருவரின் தனிமுயற்சியாக இப்போதையக் கோயில் எழுந்தது. அருகில் உள்ள திருமஞ்சனக்கேணி ஆழத்துக்கு அஸ்திவாரம் போட்டுக் கட்டடம் எழுப்பினார்களாம். இவ்வாறாக இக்கோயிலின் முதல் திருக்குட நீராட்டு விழா 10.07.1941ல் நடைபெற்றது.

கோயிலில் நடந்த களவைத் தொடர்ந்து, 05.07.79ல் இரண்டா வது முறையாகக் குடமுழுக்கு நிகழ்ந்தது. (இவ்வாறு திருடர்களால் அல்லது இதர தீட்டுக்களால் பாதிக்கப்பெற்றுச் செய்யப்பெறும் சாந்தி நீராட்டுக்கு 'அந்தரிதம்' என்று பெயர்.[3])

கோயில் கட்டியவரின் குடும்பத்தைச் சேர்ந்த நகரத்தார் பெருமக னாரின் முயற்சியில், பங்காளிகளிடம் நிதி சேர்த்துப் பிராகாரத்தில் உள்ள பரிவார தேவதைகளுக்கு அஸ்பெஸ்டாஸ் கூடம் போட்டு,

உருத்திர ஜபம் செய்து, 31.05.85ல் நீராட்டு விழா நடைபெற்றது.

அடுத்து வேகுப்பட்டிப் பங்காளிகள் அனைவரும் (சுமார் 58 புள்ளிகள்)[4] சேர்ந்து நிதி திரட்டி 1992ல் திருக்குட நீராட்டு நடத்தினர். இதற்கு ஆவிணிப்பட்டி ஒக்கூர்ப் பங்காளிகளும் நிதி வசூலித்துக் கொடுத்திருக்கிறார்கள்.[5]

மகாமண்டபத் தளத்திலிருந்து உயர்த்தப்பெற்றுள்ள கருவறை, அர்த்த மண்டபம் ஆகியவற்றின் நுழைவாயிலில் இருபுறமும் துவார பாலகரும், நம் இடப்புறம் இரட்டை விநாயகரும், வலப்புறம் பாலமுருகனும் இடங்கொண்டுள்ளனர்.

அர்த்த மண்டபத்தில் இடப்புறம் அழகிய விநாயகரும், வலப்புறம் சுப்பிரமணியரும் அருட்காட்சி கொடுக்கின்றனர். கருவறையில் பூரணை, புஷ்கலை சமேத கண்ணப்ப ஐயனார் அருள்பாலித்து அமர்ந்திருக்கிறார். பழைய காலச் சிலைகள்; ஐயனார் உத்குடி இருக்கையில், வலக்கையில் செண்டு ஏந்தி, இடக்கையை முழங்கால்மீது வைத்து அமர்ந்திருக்கிறார்.

இவருடைய தொடக்ககாலப் பெயர் கோட்டை ஐயனார். (இப்பெயரை நகரத்தார் யாரும் அறிந்திருப்பதாகத் தெரியவில்லை.) பின்னர், கண் போன்ற குழந்தைப் பேற்றை நல்கியதால் கண்ணப்ப ஐயனார் ஆனார்.[5]

(அடுத்து நாம் — செல்லவிருப்பது திருப்புத்தூரில் உள்ள கோட்டைக் கறுப்பர் கோயில். இந்த ஐயனாரின் தொடக்ககாலப் பெயர் கோட்டைஐயனார். அவ்வாறானால், இவரும் முதலில் கறுப்பரைப் போன்று, கோட்டையை ஒட்டிக் கோயில் கொண்டிருந்து, பின்னர் இங்கு வந்து கண்ணப்ப ஐயனாராக மாறி இருப்பாரோ? பெயர் ஒற்றுமையைத் தவிர இந்த ஐயனார் அங்கு இருந்ததற்கோ, இடம் பெயர்ந்து இங்கு வந்ததற்கோ எந்த ஆதாரமும் இல்லை.)

மகா மண்டபத்திலேயே மூலவரைச் சுற்றிப் பிராகாரம் வரலாம். தென்புறத் தூண் ஒன்றின் ஓரத்தில் ஆஞ்சநேயர் சிலையைப் புதிதாகப் பிரதிஷ்டை செய்துள்ளனர்.

வழக்கமாகச் சிவன்கோயில்களில் கோமுகத்தின் அருகில் சண்டீசர் இருக்கும் இடத்தில், இங்கு 'தொட்டி காக்கும் சின்னான்' என்று ஒரு சிலையை வைத்திருக்கின்றனர்.

தொட்டி என்பதற்குத் தொட்டில், நீர்த்தொட்டி, சிற்றூர் என்னும் பொருள்களைக் கூறுகின்றனர். ஐயன் அருளால் பிறக்கும் அடியார்களின் பிள்ளைகளைக் காப்பவரா? ஐயனாரின் சார்பில் நீர்நிலைகளைக் காப்பவரா? கிராமத்தைக் காப்பவரா? சண்டீசரைப் போன்று கருவறையைப் பார்த்து நிற்காமல், திருச்சுற்றுச்சுவரைப்(வடக்கே) பார்த்து நிற்கிறார் இந்தச் சின்னான்.

தென் பிராகாரத்தில் திருச்சுற்றுச் சுவரை ஒட்டி உள்ள மூன்று சந்நிதிகளில், சின்னக்கறுப்பர், வலக்கையில் குழந்தையுடன் பேச்சி அம்மன், சூலாயுதம் ஏந்திய பத்ரகாளியம்மன், நடுச்சந்நிதியில் பெரிய கறுப்பர், அடுத்த சந்நிதியில் சந்நியாசி, இராஜா தெய்வம், வீரபத்திரர், சப்த கன்னியர் ஆகியோர் உள்ளனர்.



தக்கனைத் தடிந்திடும் வீரபத்திரர்

இவற்றில் நாம் முதலில் கண்ட நொண்டிக்கறுப்பரும், வீரபத்திர ரும் அழகிய சிலா வடிவங்கள்.

வீரபத்திரர் சூலாயுதத்தால் கீழே உள்ள அரக்கனைக் குத்தும் நிலை யில் காணப்பெறுகிறார். பத்துக் கரங்கள்; பரந்த மார்பு; அனல் கக்கும் கண்கள்; அழகியசிலை.

தக்கன் செய்த வேள்வியினை அழித்து, அவனைத் தன் மறக்கருணை யினால் ஆட்கொள்வதன் பொருட்டுச் சிவபெருமான் தோற்றியரு ளிய மைந்தரே வீரபத்திரர். விநாயகர், முருகனைப் போன்று, வீரபத்திரரும் சிவபெருமானின் வேறல்லாத சிறப்பினரே ஆவர். தத்தம் செயல்களில் வீரமும், வெற்றியும் வேண்டுவோர், வீரபத் திரரை வழிபடுவர்.[6]

'தக்கனைத் தடிந்திடு சேவகன் சரணம் போற்றுவாம்.'[7]

சப்த கன்னியர்மீது ஐந்துதலை நாகம் குடைகவிழ்த்துக் காணப் பெறுவது, இங்கு காணப்பெறும் மற்றொரு சிறப்பான அம்சம்.

தீபாவளியன்று இங்கு எல்லா மூர்த்தங்களுக்கும் வடைமாலை சாத்தப்பெறுகிறது. பத்தாண்டுக் காலமாக, ஆடி மாதத்தின் இரண்டாவது வெள்ளிக்கிழமையன்று, இரு நாட்களுக்குச் சிறப்பு வழிபாடு நடைபெற்று வருகிறது. கடந்த ஓரிரண்டு ஆண்டுகளாக வேகுப்பட்டி ஒக்கூர் நகரத்தார்கள் இவ்வழிபாட்டில் கலந்து சிறப்பிக்கின்றனர்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பெற்ற மார்கழி மாதத் திருப்பள்ளி எழுச்சியை, வேளார்களே நடத்தி வருகின்றனர்.

திருப்பணிகள் செய்து, மராமத்துகள் பார்த்து, மின்கட்டணம் செலுத்தி வருவோர் நகரத்தார்களே என்று கூறும் வேளார்கள், எங்களைப் பங்காளிகள் என்றே நகரத்தார்கள் அழைக்கின்றனர் என்று பெருமிதத்துடன் கூறி மகிழ்கின்றனர்.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

மண்ணோடு விண்ணளவும்
மனிதரொடு வானவர்க்கும்
கண்ணாவாய்! கண்ணாகா(து)
ஒழிதலும்,நான் மிகக்கலங்கி,
'அண்ணாவோ' என்(று)அண்ணாந்(து)
அலமந்து விழித்தாலும்
நண்ணாயால் திருத்தில்லை
நடம்பயிலும் நம்பானே!

திருச்சிற்றம்பலம்

— 9 ஆம் திருமுறை,
வேணாட்டடிகள்

குறிப்பு விளக்கம்:

— கண்ணாய் உலகு காக்கும் — அறிவுக்கு அறிவாகி நின்று உலக உயிர்களைக் காக்கின்ற...

1. கும.இராம. சுப்பிரமணியன் செட்டியார், ஆவிணிப்பட்டி
2. டாக்டர் வ. தேனப்பன், பி. அழகாபுரி
3. ஆலயங்களும் ஆகமங்களும்
4. இராம. பழ. இராம. இராமநாதன் செட்டியார், வேகுப்பட்டி
5. கோயில் அர்ச்சகர்கள்; சேவக வேளார், கண்ணப்ப வேளார், முத்தையா வேளார், பாண்டிய வேளார், மணமேல்பட்டி
6. தெய்வத் திருவுருவங்கள்
7. கந்தபுராணம்

உ

கொற்றச் சேவகர் கோட்டைக் கறுப்பர்

(41. கோட்டைக் கறுப்பணசுவாமி திருக்கோயில், திருப்புத்தூர்)

ஞானசம்பந்தப் பெருமான், அப்பர் சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய மூன்று தேவார ஆசிரியர்களால் பாடப்பெற்ற கோயில்கள், பாடல்பெற்ற கோயில்கள் என்று சிறப்பித்துக் கூறப் பெறுகின்றன. இவ்வாறு உள்ள 276 தலங்களில் (முதலில் உள்ள 274 தலங்களுடன், பின்னர் காணவந்த திருஇடைவாய், திருக் கிளியன்னவூர் ஆகியவையும் சேர்த்து 276 தலங்களாகின்றன.[1]) பாண்டிநாட்டில் உள்ளவை 14. இதை ஒட்டிப் 'பாண்டி பதி னான்கு' என்னும் ஒரு வாசகமும் உண்டு.

இவற்றில் செட்டிநாட்டு ஊர்களுக்கிடையில் அமைந்திருப்பது திருப் புத்தூர் ஒன்றேயாகும். இங்குள்ள திருத்தளிநாதரை ஞானசம்பந் தரும் (முதலாம் திருமுறை — 1 பதிகம்), அப்பர் சுவாமிகளும் (6ஆம் திருமுறை — 1 பதிகம்) பாடியுள்ளனர்.

இலக்குமி பூசித்ததால் இதனை ஸ்ரீதளி என்பர். இங்குள்ள கற்படி மங்களான நடராஜர், சிவகாமியம்மை உருவங்கள் மிக அழகானவை. பைரவர் பூசித்துச், சுவாமிக்கும் அம்மைக்கும் இடையில் (சுந்தர் போல) வீற்றிருக்கும் பதி இது.

பாண்டிய மன்னர்கள் காலத்திலேயே இந்தப் பைரவர் சிறப்புடன் திகழ்ந்திருக்கிறார் என்பதைச் சில கல்வெட்டுகள்வழி அறியமுடி கிறது.

விஜய நகரத்தை அரசாண்ட வீரப்பிரதாப அச்சுததேவ மகாராயர் நன்மைக்காகப், பெரிய ராமப்ப நாயக்கர், பைரவருக்கு நிலம் வழங்கியிருக்கிறார். பின்னர் அவருடைய சொந்த நலனுக்காகவும் நிலங்கள் பைரவருக்கு விடப்பெற்றுள்ளன. இவற்றின்வழி, அப் போதே இவர் சிறந்த வேண்டுதல் தெய்வமாகத் திகழ்ந்திருக்கிறார் என்பதை அறியமுடிகிறது.[2]

இந்த பைரவர் சந்நிதி தனிக்கோயிலாக அழகிய விமானத்துடன் அமைந்திருக்கிறது. மருது சகோதரர்களின் சிலைகள் முன் மண் டபத்தில் உள்ளன.

பைரவர் யோகாசன நிலையில் அமர்ந்திருக்கிறார். இவரை வழி பட்டுப் பேறுபெற்ற இந்திரன் மகன் ஜயந்தனின் சிலை சந்நிதிக்கு வெளியில் வாயிலில் உள்ளது. அர்த்தசாமத்தில் பைரவருக்குப் புனுகு சாத்தப்பெற்று, வடைமாலை, சம்பாச்சோறு நிவேதிக்கப்பெறு கிறது. அர்த்தசாம வழிபாட்டிற்காக மணி அடிக்கப்பெற்ற பிறகு யாருமே இச்சந்நிதிக்குப் போகக்கூடாது என்பர். சித்திரை முதல் வெள்ளியன்று இவருக்குத் தங்கஅங்கி சாத்தப்பெறுகிறது.[3]

திருத்தளிநாதர் கோயிலில் உள்ள பைரவருடன், இப்போது நாம் காணப்போகும் கோட்டைக் கறுப்பணசுவாமி கோயிலுக்குத்



பாரோர் பணிந்தேத்தும் பைரவர் சந்நிதி

தொடர்பு இருப்பதாலேயே, திருத்தளிநாதர் கோயிலைப் பற்றியும், பைரவரைப் பற்றியும் ஓரளவு தெரிந்து கொண்டோம்.

வைரவன்பட்டியில் சிவாலயமும், அதற்கு முன்னால் கறுப்பர் கோயிலும் இருப்பதைக் கண்டோம். கறுப்பர் சிறந்த சிவனடியார் என்றும், அவர் சிவசந்நிதியையும், சிவசந்நிதி உள்ள ஊரையும் பாதுகாக்கிறார் என்றும் கூறக் கேட்டோம்.

அதே போன்று இங்கு திருப்புத்தூரில் திருத்தளிநாதர் கோயிலும், அதற்குக் கிழக்கில் (கோயிலுக்கு முன்னால்) கோட்டைச் சுவரை ஒட்டிக் கோட்டைக் கறுப்பர் கோயிலும் இருப்பது, வைரவன்பட்டி அமைப்பை ஒத்திருக்கிறது. கோட்டைக்கு வெளியிலோ, பாதியிலோ அல்லாமல், கோட்டைக்கு உள்ளேயே கறுப்பர் கோயில் அமைந்திருப்பதும், அவர் பெயரும், அவர் கோட்டைக் காவலராகவும் திகழ்ந்திருக்கிறார் என்பதை உறுதிப்படுத்துகின்றன. இவற்றின் வழி இக்கோயிலின் பழைமையை ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம்.

* * *

திருப்புத்தூரிலிருந்து குன்றக்குடி செல்லும் சாலையில், ஊரின் எல்லையை ஒட்டியுள்ள சாம்பான் ஊருணி[4]யின் இடப்புறம் இக்கோயில் அமைந்திருக்கிறது. இதுவே சிவகங்கைத் தீர்த்தமாக இருக்க வேண்டும். இத்தீர்த்தம் திருத்தளிநாதர் கோயிலுக்குக் கிழக்கே அமைந்திருக்கிறது என்று உரையாசிரியர் பலர் குறிப்பிட்டுள்ளனர். மேலும் கோயிலுக்குப் பக்கத்தில் உள்ள விசாலமான பரந்த குளமே சிவகங்கைத் தீர்த்தம் என்று, பின் வந்த ஆய்வாளர்களும் கூறுகின்றனர்.[5]

கண்ணப்ப ஐயனாரைத் தரிசித்துவிட்டு வரும் நாம், திருப்புத்தூருக்குள் செல்லுமுன்னரே இக்கோயிலைக் கண்டுகொண்டு விடலாம். இந்தப் பகுதியில் மிகப் பெரிய குதிரைகள் என்று கருதப் பெறும் தேவகோட்டை நகரத்தாரால் கட்டப்பெற்ற இரு சேமங் குதிரைகளும்,[6] 'இங்குற்றேன்' என்று நமக்குக் கோயில் இருக்கும் இடத்தைக் காட்டி நிற்கின்றன.

இச்சேமங்குதிரைகள் இரண்டின் நடுவே சென்றால், நம் இடப் புறம் உள்ள சேமங்குதிரையின் பின்னால், கோயிலின் தென்கிழக்கில், பெரியதொரு பழைய புளியமரம் இருக்கிறது. இது, சில நூறாண்டுகளுக்கு முற்பட்டது என்று கூறுகின்றனர். மாறன் சடைய வர்மன் காலத்திய கல்வெட்டு ஒன்று, திருப்புத்தூர் சபையார் உறங்காப்புளி மரத்தடியில் கூடி, ஏதோ சில விஷயங்களைத் தீர் மானித்ததாகக் கூறுகிறது.[7] அந்த மரம் இதுவாகவே இருந்தாலும் வியப்படைவதற்கில்லை.

கோயிலின் முன்புறம் முதலில் ஓர் ஒட்டுக்கூடம். இங்கு ஒரு பலி பீடம் மட்டும் உள்ளது. கோயிலையும் இந்தக் கூடத்தையும் பிரித்து நிற்கிறது, வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கோட்டைச் சுவர்.

அந்நாளில் திருப்புத்தூர், அரசாங்கத் தொடர்புடைய முக்கியமான தொரு நகரமாயிருந்திருக்க வேண்டும். கறுப்பணசுவாமி கோயிலை

ஒட்டியுள்ள இந்தக் கோட்டைச் சுவர், இந்நகர் அந்நாளில் பெற்றிருந்த முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

கோயிலினுள் சென்றதும் மகா மண்டபத்தில், முன்னால் ஒரு பலி பீடம் மட்டும் உள்ளது. பெரிய மண்டபம். அதில் நடுநாயகமாகக் கோட்டைக் கறுப்பர் கருவறை அமைந்திருக்கிறது.

மூலவர் கோட்டைக் கறுப்பர் சிறிய உருவம். உயரமான பீடத்தில் நின்று கொண்டிருக்கிறார். அவர் பாதத்தில் இருபுறமும் பெரிய அரிவாள்கள் சாத்தி வைக்கப் பெற்றுள்ளன. மூலவரின் வலப் புறம் பெரிய கறுப்பரும், இடப்புறம் சின்னக் கறுப்பரும் சிலா வடிவங்களாக உள்ளனர். எல்லாமே அழகிய வேலைப்பாடு நிறைந்தவை.

இந்த மண்டபத்தின் தென்மேற்கு மூலையில் விநாயகர் சந்நிதியும், வடமேற்கு மூலையில் முருகன் சந்நிதியும் உள்ளன.

மண்டபத்தில் உள்ள தூணில் வடக்கு நோக்கிச் செட்டியார் ஒருவரின் சிலை வடிக்கப் பெற்றிருக்கிறது. முதல் திருப்பணி செய்தவரான தேவகோட்டைச் செட்டியாரின் சிலை இது என்று அறிகிறோம்.

மகா மண்டபத்திலிருந்து இறங்கி வந்தால், கோயிலின் தென்கிழக்கு மூலையில் சங்கிலிக் கறுப்பர் காட்சி தருகிறார். முன்னோடியான இவர், சங்கிலியால் பிணைக்கப் பெற்றிருக்கிறாராம். கோட்டைக் கறுப்பர் கண்ணசைத்தால், முன்னோடக் காத்திருக்கிறாராம்.[8]

தென் சுற்றுச் சுவரை ஒட்டியுள்ள மிகக் குறுகிய வாயிலுடன் கூடிய சந்நிதியில், இராக்காச்சி அம்மன் குடிகொண்டிருக்கிறார். கடந்த 07.06.1990ல் குடநீராட்டு விழா நடைபெற்றபோது, இராக்காச்சி — பேச்சி சந்நிதியின் வாயிலைப் பெரிதாக்குவது உட்படக், கோயிலில் எந்த மாற்றத்தையும் செய்யக்கூடாது என்று இறைவாக்குக் கிடைத்ததால், இப்போது கல் பரப்பப் பெற்றுள்ள தளத்துக்குச் சிமெண்ட் போடுவது உட்பட, எந்த மாற்றமுமே செய்யப் பெறவில்லையாம்.[9] இதற்கு முன்னர் 3, 4 முறை குடமுழுக்கு நடைபெற்றிருப்பதாக நகரத்தார்களும், பூசாரியும் தெரிவித்தாலும், எவ்வெப்போது நடைபெற்றன என்பதை யாரும் அறிந்திருக்கவில்லை.


இச்சந்நிதியை ஒட்டிப் பூசாரியின் மூதாதையரான வடுகநாதன், இராக்கப்பன் பூசாரிகளின் சிறிய சிலைகள் வைக்கப்பெற்றுள்ளன. அடுத்து வைத்திலிங்கத் தொண்டமானின் பெரிய சிலை உள்ளது. இந்தச் சிலை இங்கு வைக்கப்பெற்றதற்கான முக்கியத்துவத்தை யாரும் அறிந்திருப்பதாகத் தெரியவில்லை. பட்டமங்கலம் கரியமலை சாத்தையனார் கோயிலில், கோயில் நிர்மாணத்திற்கு உதவிய தொண்டமானுடன் இந்தத் தொண்டமானுக்கு உறவுண்டா என்றும் தெரியவில்லை.

சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் வைக்கப்பெற்ற இந்தச் சிலை[10] பழுதுற்றதால், அவரின் வழித்தோன்றல்கள் புதிதாகச் சிலை செய்து கோயிலினுள் கொண்டு வந்திருக்கின்றனர். சிலையின் கால் மூலவரை நோக்கிக் கொண்டுவரப் பெற்றபோது, கால் தெறித்துப்

போகவே, அதை வைக்காமலேயே குடநீராட்டு விழா நடைபெற்றது.[11] பின்னர் புதிய சிலை செய்து வைக்கப்பெற்று, 25.02.91ல் ஸ்ரீலங்கா அமைச்சரால் திறந்துவைக்கப்பெற்றது.[12]

கோயிலின் வடக்குப் பிராகாரத்தில் சித்தர்கள், நாகநாதர், இராக்காச்சியின் பணிப்பெண் ஆகியோருக்குத் தனித்தனிச் சந்நிதிகள் உள்ளன.

* * *



வரலாறு கூறும் கோட்டையும், கோயிலும்

கீழச்சிவற்பட்டி, குருவிக்கொண்டான்பட்டி, குழிபிறை, சொக்கநாதபுரம், தேவகோட்டை (மாத்தூர் கண்ணூர்ப் பிரிவினர்), விராமதி நாட்டரசன்கோட்டை, பனையப்பட்டி, மிதிலைப்பட்டி, நகரத்தார்களின் குலதெய்வக் கோயிலான இக்கோயிலுக்குத், தேவகோட்டைப் பங்காளிகள் ஆடி மாதம் முதல் வெள்ளிக்கிழமையன்று சேர்ந்து வந்து வழிபடுகின்றனர்.[13]

அந்த நாளில், மூலவருக்கு நிறைய அபிஷேகங்கள் செய்து, அங்கிகள் சாத்தி, உடனடியாகத் திருத்தளிநாதர் கோயிலுக்குச் சென்று, பைரவருக்கு சகஸ்ரநாம அர்ச்சனை செய்து, மாவிளக்கு வைத்து வழிபாடு செய்துவிட்டு வந்துதான், கோட்டைக் கறுப்பருக்கு மாவிளக்கு வைத்து வழிபாடுகள் செய்வார்களாம்.[14] கடைசியாகக் கறுப்பருக்கு வேட்டைத் தலைப்பாகை சாத்துவார்களாம். அதைப் பார்க்காமல் யாரும் வீடு திரும்புவதில்லையாம். பைரவரை வழிபடாமல், கோட்டைக் கறுப்பர் வழிபாடும் நிறைவுறுவதில்லையாம். தேவகோட்டைப் பங்காளிகள் சுமார் 10 பேர், பத்தாண்டுக் காலமாக, ஆடி மாத வளர்பிறையில் இங்கு பாதயாத்திரை வருகிறார்களாம்.

நகரத்தார்களின் வீடுகளில் நடைபெறும் திருமணங்களுக்கு, அவர்கள் இங்கு வந்து எழுதிக்கொடுத்துச் செல்வதும், பண்டாரம் திருமண நாளன்று, மாலை — திருநீறு கொடுத்து வருவதும் வழக்கமாக நடைபெறுகின்றன.[15]

நகரத்தார்களுடன் தென்மாப்பட்டு, கருத்தன்பட்டி யாதவ சமுகத்தினரும்,[16] திருப்புத்தூர், சதுர்வேதமங்கலம், அம்மாபட்டி மக்களும்,[17] இக்கறுப்பரைப் பல்லாண்டுகளாக வழிபட்டு வருகின்றனர்.

இந்து அறநிலைய நிர்வாகத்தின் கீழுள்ள இக்கோயிலில், நாள் தோறும் காலையும், மாலையும் பூசைகள் நடைபெறுகின்றன. புழுங்கல் அரிசிச் சோறும், கருவாடும் கறுப்பருக்கு நிவேதிக்கப் பெறுகின்றன.

சித்திரை மாதம் முதல் வெள்ளிக்கிழமை சேந்தன்பூசையும், ஆடி மாதம் 2 ஆவது வெள்ளிக்கிழமை இருநாள் சிறப்பு வழிபாடும் நடைபெறுகின்றன.

பரவும் சொல்மாலை

1. வானோங்கு கோயிலிலே வளர்ந்தோங்கு திருத்தளியார்
மீனோங்கு திருக்குளத்தில் மேலோங்கு தாமரைபோல்,
தேனோங்கு திருவருளைத் தினம்பொழியும் கறுப்பணனே!
ஊனோங்கக் கூவுகிறோம் உதித்திடுவாய் இதுசமயம்.

— டாக்டர் அர. சிங்காரவடிவேலன்

2. திருப்பத்தூர் நகர்வாழும் தெய்வமே கறுப்பையா!
விருப்பமாய் உனைப்பணிந்தோம், வேண்டுதல் கேட்டருள்வாய்,
திருப்பங்கள் தந்திடுவாய், செல்வங்கள் சேர்த்திடுவாய்,
பெரியகறுப் பண்ணசாமி, பிள்ளைகுரல் கேட்டுவருக!

— டாக்டர் சபா அருணாசலம்

குறிப்பு விளக்கம்:

கொற்றச் சேவகர் — வெற்றி வீரர்

1. திருமுறைத் தலங்கள் — புலவர் பு.மா. ஜயசெந்தில்நாதன்
2. முதலாம் திருமுறை, தருமபுரம் பதிப்பு — குறிப்புரை: வித்துவான் ச. தண்டபாணி தேசிகர்
3. திருமுறைத் தலங்கள்
4. முல்லை பி. முத்தையா, தேவகோட்டை
5. திருமுறைத் தலங்கள்
6. லெ. கறுப்பன் செட்டி, தேவகோட்டை
7. முதலாம் திருமுறை
8. டாக்டர் அர. சிங்காரவடிவேலன்
9. லெ. கறுப்பன் செட்டி
10. ச. கறுப்பையா பண்டாரம், திருப்புத்தூர்
11. லெ. கறுப்பன் செட்டி
12. ச. கறுப்பையா பண்டாரம்
13. முல்லை பி. முத்தையா
14. லெ. கறுப்பன் செட்டி
15. முல்லை பி. முத்தையா
16. ச. கறுப்பையா பண்டாரம்
17. கவிஞர் சிவல்புரி சிங்காரம்

உ

கிடைத்தற்கரிய பொருளே கிணற்றடிக் காளியம்மா!

(42. கிணற்றடிக் காளியம்மன் திருக்கோயில், கண்டவராயன்பட்டி)

சதாசிவ மூர்த்தங்களில் ஒன்றான ஈசானமூர்த்தி, வாயுவை அதிட்டித்து (நிலைக்களமாக்கிக் கொண்டு) நிற்பவர். இவரது சக்தி காளி என்றும், காளி, வாயு வடிவமானவள் என்றும் கூறுவர்.

வாயு வடிவமான சக்தியாகிய இவளை, மரங்கள் அடர்ந்த, காற்றின் ஊளை ஒலியைத் தவிர வேறு சத்தமில்லாத கண்மாய்க் கரையில் கண்டு வழிபடச் செல்கிறோம்.

ஊரின் நடுவில் கிணறு ஒன்று வெட்டியபோது, திடீரென நீருக்குப் பதில் இரத்தக் கசிவு தென்பட்டது. பதறிப்போய் மிகக் கவனமாக அந்த இடத்தைத் தோண்டியபோது வலக்கையில் வெட்டுக் காயம் பட்டு இரத்தக்கசிவுடன் காணப்பெற்ற காளி சிலை ஒன்று அங்கு இருந்தது. கிணற்றடி(யில் கிடைத்த இந்த)க் காளி(சிலை)யை, ஊரின் நடுவிலுள்ள ஊருணியின் கிழக்குக் கரையில் கோயில் கொள்ளச் செய்தனர். தேசிகர்கள் — பண்டாரங்கள், காளிக்குப் பூசை செய்து வந்தனர்.


தான், மக்கள் நடமாட்டம் மிகுந்த அங்கு இருப்பதைவிட, ஊரின் எல்லையில், உரல் — உலக்கை ஒலி (மக்கள் குடியிருப்பு) இல்லாத இடத்தில் இருப்பதையே விரும்புவதாக அன்னையின் அருள்வாக்குக் கிடைத்ததைத் தொடர்ந்து, ஊரின் மேற்கே உள்ள கண்மாய்க் கரைக்கு — கானகப் பகுதிக்குக் கோயிலை மாற்றினர்.

ஒருநாள்....தேசிகர் குடும்பத்தின் பெண் ஒருத்தி காட்டில் விறகு பொறுக்கச் சென்றிருக்கிறாள். கரடி ஒன்று அவளைக் கண்டு விரட்டத் தொடங்கிவிட்டது. காளியிடம் அபயக்குரல் எழுப்பியிருக்கிறாள், அந்த அபலைப் பெண். கரடியைக் கொன்று, அந்தப் பெண்ணைக் காப்பாற்றிய காளி, அன்று முதல் 'கரடி குத்திக் காளி' என்றும் அழைக்கப் பெறலாயினள்.

அவள்தான், கண்டவராயன்பட்டி — தெக்கூர் சாலையில், கண்டவராயன்பட்டியிலிருந்து ஏறத்தாழ ஒன்றரைக் கி.மீட்டரில் (மகிபாலன்பட்டி விலக்குப் பாதை தாண்டி) இடப்புறம் செல்லும் மண் சாலை

யின் சிறிது தொலைவில் கோயில் கொண்டுள்ள கிணற்றடிக் காளியம்மன்.

சாலையின் இடப்புறம், வடக்குப் பார்த்த இந்தக் கோயில் உள்ளது.



ஆடம்பரமில்லாத அன்னையின் ஆலயம்

முதலில் ஒரு பெரிய அஸ்பெஸ்டாஸ் மண்டபம். அதிலேயே ஒரு பலிபீடம் உள்ளது. இம்மண்டபத்துக்கு முன்னதாகத் திறந்த வெளியில் திரிசூலம் ஒன்று நடப்பெற்றுள்ளது.

மண்டபத்தைக் கடந்து உள்ளே சென்றால் ஓர் ஓட்டுக்கூடம். இதுவே மற்ற கோயில்களில் உள்ள மகாமண்டபம் என்று சொல்லலாம்.

இதில் தென்சுவரை ஒட்டி அன்னையின் கருவறை உள்ளது. வேலைப்பாடு ஏதுமில்லாத சிறிய விமானத்தைக் கொண்ட இக்கருவறைக்குக் கம்பிக் கதவுதான் போட்டிருக்கிறார்கள். அதனால் எந்த நேரத்திலும் யார் போனாலும் அன்னையைத் தரிசித்து மகிழ முடியும்.

எட்டுக் கரங்களுடன், வலக்காலை இருக்கையில் குத்திட்டு, இடக்காலைத் தொங்கவிட்டு அமர்ந்திருக்கிறாள் அன்னை. உயர்த்திய வலக்கரத்தில் காணப்பெறும் திரிசூலம் அசுரனைக் கொல்வதற்கு அவள் ஆயத்தமாயிருப்பதைக் குறிக்கிறது. அகல விரித்த கண்களில் கோபக்கினி கொப்புளிக்கிறது. காலடியில் அசுரன்.

இந்தக் கோபமும், கனல் தெறிக்கும் பார்வையும், அசுரர்களை — அநியாயக்காரர்களை மறக்கருணையால் ஆட்கொள்ளத்தான். அடியார்க்கு, அவள் எழில் கொஞ்சும் ஏந்திழை. 'அருள் பெருகு எழில் முகமும், அன்பர்கட்கு, அகங்குளிர நிறையளிக்கும் கருணை நோக்கும்...'[1] அவளுடையவை.

அன்னையின் வலப்புறத்தில் உள்ள சந்நிதியில் சின்னக் கறுப்பர் குடிகொண்டிருக்கிறார். அன்னையின் இடப்புறம் சில பலிபீடங்கள். அருகில் முனீஸ்வரர் கிழக்கு நோக்கிக் காட்சி தருகிறார்.

ஆழ்ந்து நினைத்தல் என்னும் பொருள் கொண்ட 'மன்' என்ற தாதுவிலிருந்து முனி என்னும் சொல் பிறந்தது. வேதத்தில் இச்சொல்லுக்குப் பரமஹம்ஸர்களாகிய பிரமநிஷ்டர் என்பது பொருள். முதன்முதலாக முனி என்ற சொல், இருக்கு வேதத்தில் ஆவேசம் படைத்தவர் என்ற பொருளில் வருகிறது.[2] ஆவேசம் படைத்தவரான பிரமநிஷ்டர் என்பதற்கு ஏற்ப இவரைச் சிவபெருமானின் தவக்கோலத்தினர் என்கிறார் ஒரு சிவாச்சாரியார்.[3]

சிவாச்சாரியாரின் கருத்தை உறுதி செய்வது போன்று, இச்சந்நிதிக்கு நேர் எதிரில் திறந்த வெளியில் இடப வாகனமும், பலிபீடமும் உள்ளன. மேலும், செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் மட்டுமே பூசை நடைபெறும் இக்கோயிலில், முனீஸ்வரருக்குத்தான் முதல் வழிபாடு நடைபெறுகிறது.

இடப வாகனத்திற்கும், இந்தச் சந்நிதிகள் உள்ள மண்டபத்துக்கும் இடையில் மற்றொரு மண்டபம் இருக்கிறது. இதுதான் மடப்பளியும், சாப்பாட்டு மண்டபமும். எதிரே கண்மாய்.

* * *

தொடக்கத்திலிருந்தே கற்சிலையாக உள்ள தெய்வத்திருமேனிகள், முதலில் பெரிய கல் தளத்தில் வைக்கப் பெற்றிருந்து, பின்னர் கோயில் கட்டப்பெற்று, அங்கு மாற்றப்பெற்றன.[4] ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஒருமுறை குடமுழுக்கு நடைபெற்றிருக்கிறதாம். (அப்போதுதான் இந்த மாற்றம் நிகழ்ந்திருக்குமோ?) கோயில் திருப்பணிகள், மராமத்துகள் அனைத்தையும் நகரத்தார்களே மேற்கொள்கின்றனர்.

கண்டவராயன்பட்டி (இளையாற்றங்குடிக் கழனிவாசல் பிரிவினர்), கீழச்சிவற்பட்டி, சிறுகூடல்பட்டி, தெக்கூர் நகரத்தாரான சுமார் 350 புள்ளிகள், இக்கோயிலைக் குலதெய்வக் கோயிலாகக் கொண்டு வழிபடுகின்றனர்.[5]

வைகாசி மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை தொடங்கும் மூன்று நாள் திருவிழாவிலும் நகரத்தார்களுக்குப் பங்கு உண்டு. இரண்டாவது நாளில் சுவாமி ஆவேசித்து, அருள்வாக்குக் கூறுவதுண்டாம். சில நூறாண்டுகளுக்கு மேல் பழைமையானவளாகக் கருதப்பெறும் அன்னை கிணற்றடிக்காளி (கோயிலுக்கு வடமேற்கில்)க்கு அருகில், பாலதண்டாயுதபாணி கோயில் ஒன்றும் உள்ளது.

பரவும் சொல்மாலை

1. அன்புருவாய்த் தோன்றுகின்ற அம்மா! உள்ள
அழுக்கெல்லாம் நீக்குகின்ற அமுத வல்லி!
இன்பமெலாம் அடியவர்க்குக் கொடுக்கும் மேலோய்!
இணையில்லா அருட்கடலே! வணங்கு கின்றோம்,
துன்பமெனும் இருள்நீக்கி ஒளியைக் காட்டும்
தூண்டாத மணிவிளக்கே! சுகத்தின் வித்தே!
என்றைக்கும் உன்மலர்த்தாள் பணிந்து நின்றோம்,
எமைக்காக்கும் காளியம்மா! அருள்செய் வாயே!

— புலவர் முத்து சண்முகம்,
கண்டவராயன்பட்டி

குறிப்பு விளக்கம்:

1. அருள்நெறித் திருக்கூட்டத்தின் பாடல் அடிகள்
2. கலைக் களஞ்சியம்
3. சந்திரசேகர குருக்கள், கண்டதேவி
4. ஆர்.எம். சிவசுப்பிரமணியன், கண்டவராயன்பட்டி
5. ஆர்.எம். சிவசுப்பிரமணியன்

உ

வெய்யவினை தீர்ப்பார்
வையகளத்து ஐயனார்

(43. வையகளத்து ஐயனார் திருக்கோயில், சுண்டக்காடு)

பெருமாக்கோதையார் என்னும் இயற்பெயரைக் கொண்ட சேர மான் பெருமாளும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும், தில்லைச் சிற்றம் பலவரின் திருவருளால் இணைபிரியாத நண்பர்களாயினர். இரு வரும் பல தலங்களுக்குச் சென்று தரிசித்த பின்னர், திருவாரூரி லிருந்து சேர நாட்டை நோக்கிப் புறப்பட்டனர். திருக்கண்டியூர் இறைவனை வழிபட்டதைத் தொடர்ந்து, காவிரியின் வடகரையி லுள்ள திருவையாற்றுக்குச் சென்று ஐயாறப்பனை வழிபட விழைந் தார் சேரமான் பெருமாள். ஆனால் காவிரியாற்றின் வெள்ளமோ இரு கரைகளையும் அழித்து, நீந்த முடியாதபடியும், ஓடங்கள் செல்ல முடியாதபடியும் பெருகிக் கொண்டிருந்தது. அதைக் கண்ட சேர மான் தோழர், 'பரவும் பரிசு ஒன்றறியேன்' என்று தொடங்கும் பதிகத்தைப் பாடிச்[1] சராசரங்கள் எல்லாம் கேட்கும்படி 'ஓலம்' (அபயம்) என்று கூவியருளினர்.

அப்போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. காவிரியாற்றின் வெள்ள மானது, மேலைத் திசையில் பளிங்குமலையைப் போல் தங்கி நிற் கக், கீழ்த் திசையிலுள்ள நீர் வழிந்த இடைவெளியில், நல்ல வழி உண்டாகியது. அதைக் கண்ட நம்பியாரூரரும், சேரமான் பெரு மாளும் பெருமகிழ்ச்சி அடைந்து; அக்கரையை அடைந்து, ஐயாறப் பனை வழிபட்டுத், திரும்பவும் தென்கரை அடைந்த பின்னர், மலை போல் தேங்கி நின்ற ஆற்றுநீர் முன்பு போல விரைந்து தொடர்ந்து பெருகியது என்கிறார் சேக்கிழார் பெருமான்.[2]

இத்தகையதொரு நிகழ்ச்சி, இப்போது நாம் செல்லும் வையகளத்து ஐயனார் கோயிலிலும் நிகழ்ந்திருப்பதாகக் கூறுகிறார்கள்.

அம்பலகாரர் வீட்டுப் பெண் ஒருத்தி, இராட்சாண்டாள் என்று பெயர். அவளை அழைத்துவர, இந்த ஐயனாரே சென்றாராம். சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பரவை நாச்சியாருடன் சேர்த்து வைக்க, இரவோடு இரவாகத் திருவாரூர் வீதியெல்லாம் நடந்து திரிந்தார் சிவபெருமான். ஆனால், இங்கோ ஒரு பெண்ணை வீட்டிலிருந்து பிரித்து அழைத்து வர, ஐயனார் அங்கு சென்றிருக்கிறார்!


அபலைப் பெண்ணுடன் ஐயனார் திரும்பி வந்தபோது, கோயிலின் அருகிலுள்ள களத்திக் கண்மாயில் நீர் நிறைந்து வழிந்தது. கோயிலுக்கு வர வழியில்லை. அப்போது, வைகையில் வெள்ளம் கரை புரண்ட நேரத்தில், வந்தியின் வேலையாளாக வந்து வேலை பார்க்காது சோம்பியிருந்த சிவபெருமானைப் பாண்டியன் கோபத்தால் பிரம்பால் அடித்தது போன்று, ஐயனாரும் தம் கையிலிருந்த பிரம்பால் நீரை அடிக்க, அது விலகி வழிவிட்டது. இருவரும் கோயிலை அடைந்தனர்; அங்கு அந்த அபலைப் பெண் இராட்சாண்டாள், ஐயனாருடன் ஐக்கியமாகிவிட்டாள்!

அதிலிருந்து அந்தப் பெண்ணின் குடும்பத்தினர், இப்போதும் அந்தப் பெண்ணின் பெயரை இராசாண்டாள் என்றாக்கித் தங்கள் குழந்தைகளுக்கு வைக்கின்றார்களாம்.[3]

இந்த இராட்சாண்டாளின் சிலை, இந்தக் கோயிலின் வடக்குத் திருச்சுற்றுச் சுவரை ஒட்டி இருக்கும் சந்நிதியில் பைரவருடன் உள்ளது. இதுபோல இன்னும் ஓர் அபலைப் பெண்ணும் உள்ளே குடிகொண்டிருக்கிறார்; அவரைப் பற்றிய வரலாற்றை, அந்தச் சந்நிதிக்குச் செல்லும்போது கேட்டுத் தெரிந்துகொள்வோமே.

* * *

கண்டவராயன்பட்டி — செவ்வூர் சாலையில் (வடக்கே) 3 கி.மீ. சென்று, வலப்புறம் திரும்பும் மண்சாலையில் ஒன்றரைக் கி.மீ.



வையம் உய்ய வந்த வள்ளல் வாழுமிடம்

பயணம் செய்தால் கோயிலை அடையலாம். கோயில் உள்ள இட மெல்லாம் குளமும் இருக்கும். இங்கும் எதிரே ஒரு குளம் இருக் கிறது; நீர்தான் இல்லை! (இக்குளம் 1964ல் சீர்திருத்தப்பெற்ற தாம்).

உடைந்த மண்குதிரைகளும், முட்செடிகளும் சூழ்ந்திருக்கும் இக் கோயிலுக்கு, இரு வாயில்கள் உள்ளன. ஒன்று ஐயனார் சந்நிதிக்கு நேரே உள்ளது; மற்றது பெரிய கறுப்பர் சந்நிதிக்கு எதிரில் உள் ளது. இரு வாயில்களுக்கும் இடையில், மாடத்தில் பிள்ளையார் அமர்ந்திருக்கிறார். ஐயனார் சந்நிதி நுழைவாயிலின் இடப்புறம் முனியனும், பெரிய கறுப்பர் சந்நிதி நுழைவாயிலுக்குச் சற்றுத் தள்ளி மாடத்தில் முன்னோடியும் உள்ளனர். இந்த முன்னோடிக்குச் சேவல் பலி கொடுப்பது உண்டாம். ஆனால் அதை யாரும் எடுத் துக் கொள்ளாமல் சேமம் செய்து (புதைத்து) விடுவார்களாம்.

இரு நுழைவாயில்களும் ஒட்டுக்கூடங்களால் மகா மண்டபத்துடன் இணைக்கப்பெற்றுள்ளன. ஐயனார் சந்நிதிக்கு எதிரிலுள்ள பிர தான வாயில் வழியாகவே உள்ளே செல்கிறோம். ஒட்டுக்கூடத்தில் யானை வாகனமும், பலிபீடமும் உள்ளன. ஐயனார் சந்நிதியின் முன்னால் இருபுறமும் துவாரபாலகர் உள்ளனர். கருவறையில் நம் இடப்புறம் விநாயகரும், நாகலிங்கமும் இடம் பெற்றுள்ளன. வலப் புறம் சுப்பிரமணியர் இருக்கிறார்.

உள்ளே தர்ம சாஸ்தா தனிமையில் அமர்ந்திருக்கிறார்; கோயிலுக்கு மானியமாக விடப்பெற்ற நிலங்கள் எல்லாம் இவர் பெயராலேயே உள்ளனவாம்.[4] (ஐயனார் சரியான காரியவாதியாக இருப்பார் போலிருக்கிறது!)

ஐயனாரை நீர்நிலைகளையும், வயல்வரப்புகளையும் காத்தருளும் கிராம தெய்வமாக வருணிப்பர். அந்த அடிப்படையில் உலக (வைய)த்தையே நிலமாக்கி, நெற்களமாக்கி, அதனைக் காத்தருள் கிறார் இந்த ஐயனார் என்னும் பொருளில், இவரை ''வைய(க்) களத்து ஐயனார்'' என்று அழைத்திருப்பார்களோ?

மதுரையில் வைகையில் வெள்ளம் கரை புரண்டது போல, இங்கு களத்திக் கண்மாயில் நீர் நிறைந்து வழிந்தபோதுதான், மதுரையில் பாண்டியன் பிரம்பால் அடித்தது போன்று இங்கு ஐயனார் களத் திக் கண்மாய் நீரைப் பிரம்பால் அடித்தார். அப்படியானால், அந்த வைகைக்கும் இந்தக் களத்திக்கும் தொடர்பு ஏற்படுத்தி, அதை ஐய னார் பெயர்ாக்கி இருப்பார்களோ, 'வைகைக்களத்தி ஐயனார்' என்று? அது நாளடைவில் வையகளத்து ஐயனார் ஆகிவிட்டதோ?

பாகனேரி, பொ.புதுப்பட்டி, வலையபட்டி, வேந்தன்பட்டி நகரத் தார்களின் குலதெய்வக் கோயிலான இங்கு, ஒருநேரப் பூசைதான். அதுவும் 'காலையும் நீயே, மாலையும் நீயேதான்!' கோயிலில் அர்ச் சகர்கள் இல்லாவிட்டால், கூப்பிட்டால் வருவார்கள்!

சிறப்பாகக் கொண்டாடப்பெறும் சிவராத்திரி விழாவில் நகரத் தார்களும் அதிக அளவில் கலந்து கொள்வதுண்டாம்.

ஆடி மாதத்தில் கிராமத்தார் புரவிஎடுப்பு நடத்துகின்றனர். அப்போது மட்டும் நேத்திரப்பலி கொடுப்பதுண்டாம். (நேர்த்திக்கடன் போன்று நேர்த்திப்பலியாக இருக்குமோ?) மற்ற நாட்களில் இங்கு உயிர்ப்பலி கிடையாது.

ஐயனாரின் வலப்புறம் (நம் இடப்புறம்) பெரிய கறுப்பர் சந்நிதி (யும் பெரிதாகவே) இருக்கிறது. இங்கும் நமக்குச் சுவையான சில தகவல்கள் கிடைக்கவிருக்கின்றன. சந்நிதி முன் உள்ள மண்டப விதானத்தில் பன்னிரு இராசிகள் பொறிக்கப் பெற்றுள்ளன. நம் இடப்புறம் உடையம்மை ஆச்சி, வாத்தியார் ஆகியோரும், கன்னிமார் எழுவரும் உள்ளனர்.

சந்நிதி முன்பாக இருபுறமும் துவார பாலகரும், அகோர வீரபத்திரர், தண்டபாணி ஆகியோர் நம் வலப்புறமும், ஆவிச்சி செட்டியார் நம் இடப்புறமும் உள்ளனர். இவர்களில் வாத்தியார் பற்றிய விவரம் எதுவும் தெரியவில்லை. ஆனால், ஆவிச்சி செட்டியாரும், உடையம்மை ஆச்சியும் (இரத்த)பாச மலர்கள்! ஆமாம், இவ்விருவரும் அண்ணன் — தங்கையர்தாம்!

வேறு சில கோயில்களில் புகுந்த வீட்டில் கோபித்துக் கொண்டு (அல்லது விரட்டப் பெற்று) ஐயனார் கோயிலுக்கு (அருகில்) வந்து, உயிரைவிட்ட பெண்களைப் பற்றித்தான் கேள்விப்பட்டிருக்கிறோம் (கேள்விப்படவிருக்கிறோம்); உடையம்மை ஆச்சியும் அவர்களில் ஒருவர்தாம்! ஆனால், அண்ணன் ஆவிச்சி செட்டியார், வித்தியாசமானவர், உத்தம சகோதரர்!

கேளுங்கள் கதையை:

பாகனேரியில் உள்ள கணவர் வீட்டிலிருந்து கோபித்துக் கொண்டு பிறந்த (அண்ணன்) வீட்டுக்குச் சென்று விட்டாள் உடையம்மை. சில நாட்கள் கழித்துக் கணவரும், மாமனாரும்(கூட), அவரைச் சமாதானம் செய்து அழைத்துப் போக வந்திருக்கின்றனர். ''நானே நாளை அழைத்து வருகிறேனே'' என்று ஆவிச்சி செட்டியார் சொல்ல, அவர்கள் போய் விட்டார்கள்.

அடுத்த நாள். 'நீராடிவிட்டு வருகிறேன்' என்று கூறிவிட்டு ஆவிச்சி செட்டியார் வெளியே சென்றதும், உடையம்மை ஓடினாள் கோயிலுக்கு; அடைக்கலம் புகுந்தாள் ஐயனாரிடம்; அஞ்சேல் என்று அடைக்கலம் கொடுக்கும் தர்ம சாஸ்தா, தம்முடன் அவளைச் சேர்த்துக் கொண்டார்.

தங்கையைக் காணாது துடிதுடித்துப் போன தமையன், எங்கு தேடியும் காணாமற் போகவே, கோயிலுக்குச் சென்றார். அதற்குள் அவள் அமரத்துவம் பெற்றுவிட்டாள். அண்ணன் 'ஓ'வென்று கதறவில்லை. மாறாகத், தங்கைக்கு முன் பிறந்த தமையன், தங்கையின் பின்(னே) சென்றுவிட்டார். இதுவன்றோ இரத்தபாசம்!

இதையறிந்த பாகனேரிக்காரர்கள், அவர்கள் இருவருக்குமே சிலை எடுத்து, உடையம்மை ஆச்சியைப் (இவரை அம்மன் தேவதை என்று குறிப்பிடுகிறார்கள்) பெரிய கறுப்பர் சந்நிதியில் உள்ளே வைத்து, அண்ணனை வெளியில் வைத்து (தங்கைக்குக் காவலாகவோ?) வழிபாடு செய்து வருகின்றனர்.[5]

இந்த இரு குடும்பங்களிலும் உடையப்பன், உடையம்மை என்னும் பெயர்கள் குழந்தைகளுக்கு வைக்கப்பெறுமோ? தெரியவில்லை! (நகரத்தார் பெருமக்கள்தாம் ஒத்துழைப்பு நல்கவில்லையே!). ஆனால் அர்ச்சக வேளார்களில் ஒருவர் உடைய வேளார், மற்றவர் முத்துடைய வேளார் என்பதைக் கவனித்திருப்பீர்கள்.

கோயிலின் தென்புறச் சுவரை ஒட்டிக் காளியாத்தாள், கறுப்பர், சின்னையா, முத்துக் கறுப்பர், அரசுமகன், புலிமுகப் பண்டாரம், சன்னாசி எல்லோரும் வரிசையாக உள்ளனர்.

இனி ஐயனாரின் இடப்புறமுள்ள சந்நிதிக்கு வருகிறோம். சிறிய சந்நிதிக்கு ஏற்பச், சின்னக் கறுப்பர் இங்கு உள்ளார். இங்கும் ஒரு முனியன், மற்றும் பொம்மியம்மா உடனாய மதுரைவீரன், கரை மேல் அழகு ஆகியோர் உள்ளனர். நாம் முன்னர் குறிப்பிட்ட இராட் சாண்டாள், பைரவர் சந்நிதி வடக்குச் சுவரை ஒட்டி உள்ளது.

பெரிய கோயில் என்பதற்கு ஏற்ப, நிறையப் பரிவார தெய்வங் களும் உள்ளன ; ஆனால் நான்கு முறை திருக்குட நீராட்டு நடை பெற்றாலும்கூட, இன்னும் மின்சாரவசதி ஏற்படுத்தப் பெறவில்லை. 08.09.1926, 27.08.1940, 01.09.1963, 23.01.1985 ஆகிய நாட்களில் குடமுழுக்கு விழாக்கள் நடைபெற்றுள்ளன. (இந்தக் கோயிலைப் பின்பற்றி ஏனைய கோயில்களிலும் குடநீராட்டு விழா நாட்கள் குறித்து வைக்கப் பெற்றிருந்தால், வரலாறு, காலவெள் ளத்தில் கரைந்து போகாதிருக்கும்!)

நாட்டார்கள் கோயிலான இங்கு நகரத்தார்களே திருப்பணிகள் செய்து, மராமத்துப் பார்த்துக் கோயிலைப் பாதுகாத்து வருகின் றனர். அவர்கள் வீடுகளில் நடைபெறும் திருமணங்களுக்குத் தகவல் தெரிவித்தால், வேளார்கள் போய் மாலை கொடுத்து வருவர். நகரத்தார்களில் சிலர் மட்டுமே இங்கு வந்து பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டுகின்றனர். மற்றபடி, தொட்டில் கட்டுதல், முடி இறக்குதல் போன்றவை அரிதாகவே இங்கு நடைபெறுகின்றன.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

செய்யகோடுடன் கமலமலர்சூழ்தரு
தில்லைமாமறை யோர்கள்தாம்தொழ,
வையம் உய்யநின்று
மகிழ்ந்(து)ஆடு சிற்றம்பலவன்
செய்யவாயின் முறுவலும்,திகழும்
திருக்காதும்,கா தினின்மாத்திரைகளோ(டு)
ஐய தோடும்அன்றே
அடியேனைஆட் கொண்டனவே.

திருச்சிற்றம்பலம்

— 9 ஆம் திருமுறை, திருவாலியமுதனார்

குறிப்பு விளக்கம்:

— வெய்ய — கொடிய

1. 7 ஆம் திருமுறை
2. 12 ஆம் திருமுறை
3. அர்ச்சகர்கள்: உ. முத்துடைய வேளார். பெரி. உடைய வேளார், சுண்டக்காடு
4. அர்ச்சகர்கள்
5. அர்ச்சகர்கள்

உ

வேண்டமுழுதும் தருவார் வேலங்குடிக் கறுப்பர்

(44. சாம்பிராணிவாசகர் திருக்கோயில், சுண்டைக்காடு, வேலங்குடி)

''சாம்பிராணிவாசகர்!... சாம்பிராணிவாசகர்!.. சாம்பிராணி வாசகர்!... '' நீதிமன்றச் சிப்பந்தி மும்முறை உரத்த குரலில் கூவி அழைக்கிறார்.

''யார் இந்தச் சாம்பிராணிவாச...?''

''உஷ்..உரக்கப் பேசாதீர்கள். வெள்ளைக்கார நீதிபதி வெகு கோபக் காரர்... இந்த வழக்கைப் பற்றிப் பிறகு சொல்கிறேன்... '' அடிக் குரலில் சொல்லிக்கொண்டிருக்கும் போதே, ஓடிவரும் ஒருவரின் கலகலவென ஒலிக்கும் சலங்கை ஓசை....

''இதோ வந்தேன்....!'' குரல் ஒலிக்கிறது, ஆளைக் காணோமே? அசரீரியா? (சரீரம் — உடல் இல்லாதவர் அசரீரி)

திடீரெனச் சாம்பிராணியின் நறுமணம்....ஆனால் புகையைக் காணோமே?

நீதி தவறாத நேர்மையான நீதிபதிக்கு உண்மை புரிந்துவிட்டது. உடனே தீர்ப்புக் கூறிவிட்டார்.

வாதியிடம் வாங்கிய பணத்தை வட்டியும் முதலுமாகச் சேர்த்துக் குறிப்பிட்ட காலத்திற்குள் கொடுத்துவிடுமாறு பிரதிவாதிக்கு உத் திரவிடப்பெற்றது.

பிரதிவாதி உட்பட எல்லாருடைய முகத்திலும் மகிழ்ச்சிக் குறி தென்பட்டது.

''இதென்ன தலையும் புரியவில்லை, காலும் புரியவில்லை. பர்மா விற்கு அழைத்து வந்து நீதிமன்ற நிகழ்ச்சியைப் பார் என்று சொன் னால், யாருக்கு என்னதெரியும்?''-உண்மையிலேயே உங்களுக்குக் கோபம் வந்துவிடுகிறது.

''அவசரப்படாதீர்கள்...எல்லாவற்றையும் விவரமாகச் சொல்கி றேன்... அதோ நிற்கிறாரே அவர்தாம் வாதி..கிரு(ட்)ஷ்ண நார ணன் செட்டியார். (நகரத்தார் குடும்பங்களில் இப்படிப்பட்ட பெயரை நான் கேள்விப்பட்டதில்லை. இருப்பினும் இப்பெயர்

தான் புத்தகத்தில் குறிப்பிடப்பெற்றிருக்கிறது.[1]) கீழச்சிவற்பட்டி யைச் சேர்ந்தவர். வேலங்குடியிலுள்ள சாம்பிராணிவாசகப் பெரு மானைக் குலதெய்வமாகக் கொண்டவர். இங்கு பர்மாவில் லேவா தேவி (வட்டிக்கடை)த் தொழில் செய்கிறார். மிகநேர்மையானவர். கடுவட்டியோ, ஏமாற்றி எழுதி வாங்குவதோ அவர் அறியாதவை.

அவருடைய வாடிக்கைக்காரர்களில் ஒருவர்தாம் பிரதிவாதியான பர்மாக்காரர். அவரும் நேர்மையானவரே. தேவைப்பட்ட போதெல் லாம் பணம் வாங்கிக் குறிப்பிட்ட காலக்கெடுவில் வட்டியுடன் திருப்பிக் கொடுத்துவிடுவார். சிறிது காலத்துக்கு முன்னர் அவருக் குப் பணம் கூடுதலாகவே தேவைப்பட்டது. கினா ரூனாவும் நோட் டுச்சாட்டு எதுவும் இல்லாமல், அவர் கேட்ட பணத்தைக் கொடுத்து விட்டார்.

மனிதமனம் நிலையற்றதாயிற்றே. தமக்குப் பணம் தேவைப்பட்ட போது, கொடுத்த கடனைத் திருப்பிக் கேட்ட செட்டியாரிடம், பணமா, யார் யாரிடம் வாங்கியது என்று, ஒன்றுமே நடக்காதது போல் கூறிவிட்டார் பர்மாக்காரர்.

தம் குலதெய்வமான வேலங்குடிக் கறுப்பையாவை நம்பிப் பர்மாக் காரர் மீது வழக்குத் தொடுத்தார் செட்டியார். சாட்சி உண்டா என்று கேட்ட வெள்ளைக்கார நீதிபதியிடம் சாம்பிராணிவாசகர் இருக்கிறார், அழைத்தால் வருவார் என்றார்.

சாம்பிராணிவாசகருக்குச் சமன் சென்றது. குறிப்பிட்ட நாளில் நீதிமன்றத்துக்கு அவருடைய மணமும், ஒலியும் வந்தன; செட்டி யாருக்கு வழக்கு வெற்றியடைந்துவிட்டது.

'சாம்பிராணி வாசம் காட்டிச் சான்று சொல்லி' நீதியை நிலை நாட்டிவிட்டார், வேலங்குடி உறங்காப்புளிக் கறுப்பர்.

* * *

சுமார் 150 ஆண்டுகளுக்குப் பின்னர், 1994ல், அந்தச் சாம் பிராணி வாசகரை நேரில் தரிசிக்கச், சுண்டைக்காட்டில் வையக் களத்து ஐயனாரைத் தரிசித்த கையோடு, அங்கிருந்து வடக்கே (செவ்வூர் செல்லும் வழியில்) 3 கி.மீ. தொலைவில் உள்ள (சுண் டைக்காடு) வேலங்குடிக்கு வந்திருக்கிறோம்.

பூங்குன்ற நாட்டின் 24½ கிராமங்கள், 5 மங்கலங்களாகப் பிரிக் கப் பெற்றிருந்தன. அவற்றில், இந்த வேலங்குடி கிராமம் ஒரு மங்கலமாகத் திகழ்ந்தது. இந்தப் பூங்குன்ற வேலங்குடியில்தான் நகரத்தார் சாதிமுறை நியாயங்கள், ஆதியில் அனுட்டித்து வந்தபடி நிர்ணயம் செய்யப்பெற்றன. அதை இவ்வூர்க் கல்வெட்டு ஒன்று புலப்படுத்துகிறது.[2]

இங்குதான் சாம்பிராணிவாசகர் என்றும், உறங்காப்புளிக் கறுப் பர் என்றும் போற்றப்பெறும் வேலங்குடி (வேலாபுரி)க் கறுப் பண்ணசுவாமியின் கோயில், பிரதான சாலைக்கு மேற்கே அமைந் திருக்கிறது. கிழக்கில் கண்மாய் உள்ளது.

ஆத்தங்குடி, இராங்கியம், கண்டவராயன்பட்டி, காரைக்குடி, கானாடு காத்தான், கீழச்சிவற்பட்டி (மாத்தூர்க் கோயில் கண்ணூர்ப் பிரி

வினர்), கோனாபட்டு, செவ்வூர், பள்ளத்தூர், பொ.புதுப்பட்டி (வைரவன் கோயில் பெரிய வகுப்பு), மகிபாலன்பட்டி, மிதிலைப் பட்டி, வலையபட்டி நகரத்தார்கள்[3] குலதெய்வமாகக் கொண் டுள்ள இந்தக் கறுப்பண்ணசுவாமி கோயில், மற்ற கோயில்களி லிருந்து சிறிது மாறுபட்டதாகவே காணப்பெறுகிறது. காரணம், கோயில் என எதுவுமில்லை; கொம்படி ஆலயமும் இல்லை.

முதலில் சாலையை ஒட்டிக் கிழக்கு நோக்கிப் பூதம் ஒன்று காணப் பெறுகிறது. அதன் தோள்களில் கால்களை வைத்து, வாலை முறுக் கிய வண்ணம் குதிரை ஒன்று, பயணத்துக்கு ஆயத்தமாக உள்ளது. குதிரையின் காதுகளிடையே பறவை ஒன்று குதூகலமாக அமர்ந்



வேண்ட முழுதும் தரும் வேலங்குடிக் கறுப்பர்

திருப்பதைக் கவனித்தீர்களா? அழகிய பெரிய இந்தக் குதிரையைச் சாதாரணமாக நினைத்து விடாதீர்கள்.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இந்தச் சாலை வழியே குதிரை ஒன்றில் சென்று கொண்டிருந்தார் வெள்ளை அதிகாரி ஒருவர். சந்நிதானத்தின் முன் அவருடைய குதிரை சென்ற போது, இந்தச் சேமங் குதிரை வாலை முறுக்கிக் கனைத்திருக்கிறது. பின்னர்தான் அருகில் கோயில் இருப்பதை உணர்ந்து, அவ்வதிகாரி இறங்கி நடந்தாராம். அதிலிருந்து இவ்வழியே குதிரையில் செல்வோர், கோயில் வந்தவுடன் இறங்கி விடுவார்களாம். மேலும், இந்தக் கோயிலைக் கும்பிடுவோர், குதிரை ஏறித் தாலி கட்டுவதும் இல்லையாம்.

இக்குதிரையின் வலப்புறம் உள்ள ஊருணி, சுமார் 150 ஆண்டுகளாகக் கீழச்சிவற்பட்டி நகரத்தார் குடும்பத்தின் பராமரிப்பில் இருந்து வருகிறதாம். 1943ல் இந்த ஊருணி பழுது பார்த்துச் சீர் திருத்தப் பெற்றது. தாய்மைப் பேறடைந்த நகரத்தார் குடும்பத்துப் பெண்கள் தீர்த்தம் சாப்பிடுவதற்கு இந்த ஊருணி நீரையே பயன் படுத்துகின்றனர். ஊருணியில் நீர் எடுத்து, அருகிலுள்ள புளிய மரத்தின் இலைகளையும், கறுப்பண்ண சுவாமியின் விபூதியையும் கலந்து, சுவாமி சந்நிதியில் வைத்து எடுத்துச் சென்று, வீட்டில் தீர்த்தம் சாப்பிடுவார்களாம்.[4] இந்தப் புனிதக் குளத்தில் இறங்கி நீரைத் தெளித்துக் கொண்டு கோயிலுக்குச் செல்கிறோம்.

பழைமையான பெரிய உறங்காப்புளி மரம். மரத்திற்கு வடக்கில் ஒரு கூரைக்கூடம். இதுதான் கறுப்பண்ணசுவாமியின் கோயில். இந்தக் கூடம், முன்னர் பனை ஓலை வேயப் பெற்றிருந்ததாகவும், இப்போது தென்னை ஓலை வேயப் பெற்றிருப்பதாகவும் கூறுகிறார்கள்.

மூலவர் கறுப்பண்ணசுவாமிக்குச் சிலை ஏதும் கிடையாது. திருவாசியுடன் கூடிய ஒரு சதுரப் பீடம்தான் உள்ளே இருக்கிறது. இதுவே கறுப்பண்ணசுவாமியாகக் கருதப் பெறுகிறது. திருவாசியின் நடுவில் ஐந்து தலை நாகம் ஒன்று உள்ளது. பீடத்தின் முன்னால் கீழே இரு ஆணிப் பாதகுறடுகளும், பெரிய அரிவாள் ஒன்றும் காணப்பெறுகின்றன. இந்தப் பீடத்துக்கே அபிஷேக — ஆராதனைகள் நடைபெறுகின்றன.

கூடத்தின் முன்பக்கம், பீடத்தின் இடப்புறம், வேல் ஒன்று உள்ளது. இந்த வேலாயுத சாமிக்கு, நீண்ட காலத்திற்கு முன்னர் நகரத்தார்கள் காவடி எடுப்பது உண்டாம். இப்போது அவ்வழக்கம் அருகி விட்டது. பஞ்சாமிர்த அபிஷேகம் மட்டும் இப்போது இந்த வேலுக்கு நடைபெறுகிறது.[5] இந்த நினைவை ஒட்டியே, மாசி மாதம் பிரதமைக்கு மறுநாள் இங்கு நடைபெறும் திருவிழாவின் நான்காவது நாளில் கலந்து கொள்ள வரும் நகரத்தார்கள், காவடிக் காணிக்கை எழுதுகின்றனரோ?[6] இந்த வேலுக்குச் சிறிய தலை போன்ற அங்கியும், திருவாசியும் உள்ளன அவை திருவிழாக் காலத்தில் சாத்தப் பெறுகின்றன.

கோயிலின் வலப்புறமுள்ள குளத்தைச் சுற்றிலும், மற்றும் கோயிலின் மறுபுறத்திலும், கூரை வேயாத கற்றூண்கள் நிறையக் காணப்

பெறுகின்றன. மாசி மாதத் திருவிழாவின் போது, இந்த இடங்களில் கூரைகள் வேய்ந்து, கீழச்சிவற்பட்டி, பொ.புதுப்பட்டி நகரத்தார் களும், அரளிக்கோட்டை, மாங்குடி போன்ற ஊர் மக்களும், வரு கின்றவர்களுக்கெல்லாம் இல்லையென்னாது அன்னதானம் செய் கின்றனர்.[7]

கண்டவராயன்பட்டி நகரத்தார்களுக்கும், கீழச்சிவற்பட்டி நகரத் தார்களுக்கும், 30 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட கருத்து வேறு பாட்டைத் தொடர்ந்து, கண்டவராயன்பட்டி நகரத்தார் இப்போது அன்னதானம் செய்வதில்லையாம்; நேர்த்திக் கடன்களும் செலுத் துவதில்லையாம். ஆனால் பச்சைவாழை பரப்புவதற்கென ஒரு நாள் மட்டும் வருவார்களாம்.[8]

நான்காம் நாள் இரவு நகரத்தார்கள் பச்சைவாழை பரப்பி, மா விளக்கு வைத்து வழிபட்டு விட்டு அடுத்தநாள் அங்கிருந்து இல்லங் களுக்குத் திரும்புவார்களாம். பச்சைவாழை என்பது வாழை இலை யில் கரும்பு, தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை, பூ எல்லாவற்றை யும் பரப்பி, மாவிளக்கு வைத்து வழிபடுவதாகும். நகரத்தார் குடும் பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்குப் பிறந்த ஆறு மாதம் கழித்துத் திருவிழாக் காலத்தில் முடி இறக்கித் தொட்டில் கட்டி வழிபடுகின். றனர்.[9]

திருவிழாக் காலத்தில், இரவு நேரத்தில் சாமியாடிமீது சுவாமி ஆவேசித்து, அரிவாள்மீது நின்று ஆடுவது பார்க்க வேண்டிய ஒன்றாகும். இரு புறங்களிலும் அரிவாள்களை இருவர் பிடித்து நிற்க, அவற்றின்மீது சாமியாடி ஏறி நின்று, கேள்வி கேட்பவர் களுக்குப் பதில் சொல்வாராம். அப்போது சாம்பிராணி நிறையப் போடுவார்களாம்.[10]

இங்கு சுவாமிக்குச் சாம்பிராணிதான் பிரதானமானது. அந்தச் சாம்பலையே திருநீறாக வழங்குகின்றனர். அது ஆற்றல் வாய்ந்தது என்று, இக்கோயிலுடன் தொடர்புடையவர்கள் கூறுகின்றனர்.

கோயிலுக்கெனப் பாதுகாப்பு அமைப்போ, சுற்றுச் சுவரோ இல்லா திருப்பது பற்றிக் கேட்கும்போது, மூலவர் உள்ள கூடத்தின் பின் புறத்தைக் காட்டுகின்றனர்.

கற்றூண்கள் நிறைந்த, விமானத்துடன் கூடிய, முற்றுப் பெறாத இந்தக் கல் மண்டபம், கீழச்சிவற்பட்டி நகரத்தார்களின் திருப் பணி.[11] ஆனால் அந்தக் கோயிலில் சுவாமியைப் பிரதிஷ்டை செய்யத் திருவுளச் சம்மதம் கிடைக்கவில்லையாம். இப்போது, காணிக்கையாகச் செலுத்தப் பெற்ற அரிவாள்கள் மட்டுமே அங்கு குவிந்து கிடக்கின்றன.

கறுப்பண்ணசுவாமி கோயில், புளியமரத்தடியில் இருக்கிறது என்று கண்டோம். இந்த மிகப் பழைமையான உறங்காப் புளி மரத்தில் திருவுளம் கேட்பது உண்டாம். நேர்ந்து கொண்டவர்கள், மணி களை மரத்தில் கட்டியும், அரிவாள்களை மரத்தடியில் வைத்தும் நேர்த்திக் கடனை நிறைவேற்றுகின்றனர்.

* * *

கீழச்சிவற்பட்டி நகரத்தார் குடும்பத்து ஆச்சி ஒருவருக்கு, இரவு நேரத்தில் கறுப்பண்ண சுவாமி, வேடுவன் உருவில் வந்து, திருடர் பயம் அகற்றி, ஆச்சிக்குச் சுமை தூக்கி அருள் புரிந்த நிகழ்ச்சியை,

''வள்ளிஎனும் செட்டி மங்கைதனைத் தொடர்ந்து
வழிகாட்டி நள்ளிரவில் துணையாய் நின்றாய்....''[12] என்னும் பாடல்

அடிகள் குறிப்பிடுகின்றன. அதைத் தொடர்ந்து அந்த ஆச்சி நடத்தி வந்த அன்னதானத்தை, அவர்தம் குடும்பத்தார் இப்போதும் நடத்தி வருகிறார்களாம்.[13]

கீழச்சிவற்பட்டி நகரத்தார் குடும்பங்களில் கறுப்பண்ணசுவாமி நினைவாக, முத்துக் கறுப்பாயி, சின்னக்கறுப்பாயி போன்ற பெயர்கள் வைக்கப்பெறும் வழக்கம் நிலவி வருகிறது.

நகரத்தார் வீடுகளின் திருமணங்களை ஒட்டி, இருபடி நெல் எடுத்து, அதில் சில விரளி மஞ்சள் துண்டுகளைப் போட்டு, இங்கு கொடுத்தனுப்புவது உண்டாம். சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்னர், நகரத்தார் குடும்பத்தினர் இங்கு வந்து, 11 நாட்கள் தங்கியிருந்து வழிபடும் வழக்கம் இருந்து வந்தது.

கொட்டகை அமைப்பிலேயே சுவாமி இருந்துவந்தாலும், சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர், கீழச்சிவற்பட்டி நகரத்தார் குடும்பத்து அம்மையார் ஒருவர், மின்விளக்குகள் போட்டுக் கொடுத்துக், கட்டணங்களையும் கட்டி வந்திருக்கிறார். இப்போது, ஓதுவார்கள் என்று அழைக்கப்பெறும் பூசாரிகளே அவற்றைக் கட்டிவருகின்றனர்.



கோமான் குடிபுகாத கோயில்

நாள்தோறும் 3 வேளைப் பூசை நடைபெறுவதாகக் கூறுகின்றனர். அற்புதங்கள் பல புரிந்து, அண்டினோருக்கு அருள்புரிந்து, வையத்தை வாழ வைக்கும் சாம்பிராணி வாசகரை வணங்கிவிட்டு, அடுத்த கோயிலுக்குச் செல்ல, அங்கிருந்து ஐயாபட்டிக்குப் புறப்படுகிறோம்.

பரவும் சொல்மாலை

பூமேவு நவமணியை வாரிஅலை வீசுகடல்
புடைசூழ நெடிய ஈரேழ்
புடவிமுதல் ஆயிரத் தெட்(டு)அண்ட மும்கொண்ட
புவனப் பெரும்ப ரப்பும்,
தேமேவும் அகிலாண்ட நூறுகோடி யின்மேற்
சிறந்தபிரு மாண்டம் எங்கும்
திகம்பரா னந்தபரி பூரண மதாகச்
செகச்சோதி யாய்நி றைந்தும்,
காமேவு தருஉறங் காப்புளி யின்நீழற்
கனகபீ டிகையின் மீது
கமழ்நறுஞ் சாம்பிராணி வாசனை உகந்தருள்
கதிக்கவி ளையாடி நின்றும்,
மாமேவு கனமகிமை கொண்டதால், நின்போலும்
வையமேல் தெய்வம் உளதோ?
மணிகொழித் திடும்வேலை நகர்செழித் திடநாளு
வளர்கறுப் பணசா மியே!

— வாலகவி இராமசாமிக் கவிராயர்,
வேலாபுரி கறுப்பண்ணசுவாமி சதகம்.
கி.பி. 17 ஆம் நூற்றாண்டு

குறிப்பு விளக்கம்:

1. அருள்மிகு கறுப்பண்ணசுவாமியின் திருவிளையாடல்கள் — சி. முத்துக்கறுப்ப சாமி
2. செட்டிநாடும் செந்தமிழும் — சோமலெ
3. நா.கி.நா.கி. கிருஷ்ணப்ப செட்டியார், கீழச்சிவற்பட்டி ; மு. சங்கரலிங்கம், புதுப்பட்டி; எம். கறுப்பையா செட்டியார், கண்டவராயன்பட்டி ஆகியோர் கொடுத்த தகவல்களின் அடிப்படையில்
4. நா.கி.நா.கி. கிருஷ்ணப்ப செட்டியார்
5. நா.கி.நா.கி. கிருஷ்ணப்ப செட்டியார்
6. மு. சங்கரலிங்கம்
7. அருள்மிகு கறுப்பண்ணசுவாமியின் திருவிளையாடல்கள்
8. எம். கறுப்பையா செட்டியார்
9. மு. சங்கரலிங்கம்
10. நா.கி.நா.கி. கிருஷ்ணப்ப செட்டியார்
11. அருள்மிகு கறுப்பண்ணசுவாமியின் திருவிளையாடல்கள்
12. வயி. இராமநாத தேசிகர்
13. நா.கி.நா.கி. கிருஷ்ணப்ப செட்டியார்

உ

பத்தர்சிக்கெனப் பிடித்த பதினெட்டாம்படிக் கறுப்பர்

(45. பதினெட்டாம்படிக் கறுப்பர் திருக்கோயில், ஐயாபட்டி)

பதினெட்டு என்னும் எண் சமயத் துறையிலும், தமிழ் — வட மொழிகளிலும் சிறப்பு வாய்ந்த — முக்கியமானதோர் இடத்தை வகிக்கிறது. இதைப் பற்றி நிறையத் தகவல்கள் உள்ளனவாயினும், பதினெட்டாம்படிக் கறுப்பருடன் தொடர்புடைய சபரிமலையின் 18 படிகளின் முக்கியத்துவத்தை மட்டும் இங்கு பார்ப்போம்.

சாஸ்தாவைச் சபரிமலையில் வழிபட, 18 படிகளைக் கடக்க வேண்டும். இந்தப் பதினெட்டுப் படிகளைப் பல்வேறாகப் பொருள் கொள்வர். புலன் 5, பொறி 5, பிராணன் 5, மனம், புத்தி, அகங்காரம் ஆகிய பதினெட்டையும் கடந்து ஐயப்பனை அடைய வேண்டும் என்பது ஒரு விளக்கம்.[1] பதினெட்டுப் படிகளும் ஐயப்பன் அருளாட்சியில் அடங்கிய 18 மலைகளைக் குறிக்கின்றன; அவை ஐயப்பனின் பூங்கா எனப்பெறுகின்றன. ஒவ்வொரு மலையும் தெய்விகத் தன்மை வாய்ந்தது. 18 படிகள் ஏறுவது 18 மலைகளின் வழியாகப் பயணம் செய்வதைக் குறிக்கும் என்பது மற்றொரு விளக்கம்.[2]

அழகர்கோயிலிலுள்ள பதினெட்டாம்படிக் கறுப்பரும், சிறப்பு வாய்ந்த இந்தப் பதினெட்டுடன் தொடர்புடையவரே. 18 படிகளைக் கொண்டிருப்பதாலேயே அவருக்கு அப்பெயர் ஏற்பட்டது. (அதைப் பற்றிய விவரங்களைப் பின்னர் அக்கோயிலுக்கே செல்லும்போது தெரிந்து கொள்வோமே!)

அந்தப் பதினெட்டாம்படிக் கறுப்பருடன் தொடர்புடையவரே, நாம் இப்போது தரிசிக்கவிருக்கும் ஐயாபட்டிப் பதினெட்டாம் படிக் கறுப்பரும்.

* * *

திருக்காளத்தியில் தங்கித் திருப்பணிகள் செய்துகொண்டிருந்த அப்பர் சுவாமிகளுக்கு, அந்தத் தென் கயிலாயம், வடகயிலையை நினைவூட்டியது. கல்லும் முள்ளும், காடும் மலையும் கடந்து, காயும் கனியும் உண்பதையும்கூட விடுத்துக், கால்களும், கைகளும் தேய்ந்த

நிலையில், கயிலையை நோக்கி மார்பினால் ஊர்ந்து சென்ற நேரத்தில், முனிவர் போல் எதிர் தோன்றிய சிவபரம்பொருள், கயிலையைக் காணுதல் அரிய செயல், திரும்பிச் செல்வதே சாலச் சிறந்தது என்று சுவாமிகளிடம் கூறியபோது, 'ஆளு நாயகன் கயிலையில் இருக்கைகண்டு அல்லால், மாளும் இவ்வுடல் கொண்டுமீளேன்'[3] என மறுத்துரைத்தார். அப்போது அண்ணல், அடுத்துள்ள நீர்ப் பொய்கையில் மூழ்கி, ஐயாற்றில் கயிலைக் காட்சியைக் காணுமாறு பணித்தார். அவ்வண்ணமே அப்பர் சுவாமிகள் திருவையாற்றில், வெள்ளிமலை மீது பச்சிளங்கொடியான உமாதேவியோடு பவளமலை போல் சிவபெருமான் வீற்றிருந்த கயிலைக் காட்சியைக் கண்டார்; களிபேருவகை கொண்டார் என்று, சேக்கிழார் சுவாமிகள் கூறுகிறார்.[3]

அது போன்றதோர் அற்புதம், இந்த ஐயாபட்டியில் நிகழ்ந்திருப்பதாகச் சொல்கிறார்கள். இங்குள்ள சுவாமியாடி, யாதவ குலத்தைச் சேர்ந்தவர். இவரின் மூதாதையர் ஒருவர் அழகர்கோயிலுக்கு அடிக்கடி சென்று, பதினெட்டாம்படிக் கறுப்பரை வழிபட்டுவரும் வழக்கம் உடையவர். வயோதிக காலத்தில் அழகர்மலைக்குப் போக முடியாத நிலை ஏற்பட்டபோது, தம் இயலாமையை எண்ணிக் கண்ணீர் வடித்தார். அப்போது அந்தப் பதினெட்டாம்படிக் கறுப்பர், தம்மை, இங்கு (ஐயாபட்டியில்) வைத்து வழிபடுமாறும், இங்கு வந்து அவருக்கு அருள் புரிவதாகவும் வாக்குக் கொடுத்தார். அதைத் தொடர்ந்து இங்கு ஏற்பட்ட இந்தக் கோயிலில், பதினெட்டாம்படிக் கறுப்பரின் சாந்நித்தியம் ஏற்பட்டதாம்.[4]

* * *

திருப்புத்தூர் — மதுரை சாலையில், திருப்புத்தூரிலிருந்து 6 ஆவது கி.மீட்டரில் உள்ளது மு.கிருஷ்ணாபுரம் என்னும் ஊர். அங்கிருந்து வலப்புறம் திரும்பும் முறையூர் செல்லும் சாலையில் சுமார் 3 கி.மீ சென்றால், ஐயாபட்டியை அடையலாம். அங்கிருந்து வலப்புறம் செல்லும் மண்பாதையில் திரும்பிக் கோயிலுக்குச் செல்லவேண்டும். நல்லாங்குளம் கண்மாய்க்கரையில் உள்ளது, இந்த மிகச் சிறிய பதினெட்டாம்படிக் கறுப்பர் கோயில்.

முதலில் சாதாரணக் கூடமாக இருந்த இக்கோயில், 1949 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26 ஆம் நாள், நெற்குப்பை நகரத்தார் குடும்பத்தாரால் திருப்பணி செய்யப்பெற்று, அழகிய கற்கோயிலாக மாறியது. இது, சாமியாடி ஒ. அரங்கய்யா காலத்தில் நடந்த திருப்பணியாம்.

கோயிலின் பின்புறம் கண்மாய், முன்புறம் திருக்குளம். அக்குளக் கரையில் சிறிய விநாயகர் கோயில். கறுப்பர் கோயிலின் இருபுறமும் ஓட்டுக்கூடங்கள் காணப்பெறுகின்றன.

கோயிலின் முன்புறம் சிறியதொரு மண்டபம். அதன்மீது, சீதேவி — பூதேவியுடன் அமர்ந்திருக்கும் திருமாலின் திருவுருவம், சுதை வேலையாக அழகாகக் காட்சியளிக்கிறது. இருபுறமும் கருடாழ்வார் உருவங்கள், சிங்கவாகனங்களுடன் உள்ளன.


வேலைப்பாடு மிகுந்த விமானத்துடன் கூடிய கருவறைக் கோயி

லில், மூலவரின் இடத்தில் 7 நாமங்கள் இடப் பெற்றுள்ள பலகை ஒன்றுதான் வைக்கப் பெற்றிருக்கிறது.

அகங்கார — மமகாரங்களால் (மமதை) அசுத்தமடைந்துள்ள ஆன் மாவைப் பரிசுத்தமாக்க, வைணவ சமயத்தில் ஐந்து வகையான ஸமஸ்காரங்கள் (மந்திரத்தினால் சுத்தி செய்யும் கிரியை) விதிக்கப் பெற்றுள்ளன.

அவை, சங்கு — சக்கரக் குறிகளைத் தோளில் பொறித்துக் கொள் ளும் 'தாபம்'; நெற்றி முதலிய இடங்களில் இரேகை அணியும் புண்டரம்; இறைவன் நாமத்தைத் தரித்திருத்தல்; எட்டெழுத்து மந்திரம் முதலியவற்றை ஆசாரியரால் உபதேசிக்கப் பெறுதல்; இறைவனை நாள்தோறும் ஆராதிக்கும் யாகம், ஸமஸ்காரம் ஆகிய வையாகும்.

இவற்றில் இரண்டாவதான புண்டரம் என்னும் இரேகை, வராகப் பெருமானின் திருமேனியிலிருந்து உண்டான வெண் மணலினால், மேல்நோக்கி அணியப் பெறுவதாகும். மேல் நோக்கி உள்ள இது, தன்னைத் தரித்தவர்களை மேலோகமாகிய பரமபதத்தை அடையச் செய்யும். வைணவர்களுக்கு இது இரட்சையாக — காப்பாக இருப் பதனால், இதனைத் 'திருமண்காப்பு' என்று கூறுவர். மூக்கின் மேல் பாகத்தில் புருவங்களின் மத்தியில் ஓரங்குலம் பாதபீடம் இட்டு இதனை அணியவேண்டும். நடுவில் பிராட்டிக்கு உகந்த



ஐயாபட்டியான் அவன்என் அகத்துளானே

தான மஞ்சளினாலான ஸ்ரீசூர்ணம் தீபாகாரமாக (தீபம் போன்று) இடவேண்டும். பாதபீடத்தில் திருவநந்தாழ்வார் (ஆதிசேடன்), இரேகைகளின் நடுவில் பகவான், ஸ்ரீசூர்ணத்தில் பிராட்டி ஆகியோர் இருப்பதாக ஐதிகம். ஆகவே இதனைப் பிரணவ வடிவம் என்பர்.[5]

நகரத்தார் குடும்பத்தினரால் கல் திருப்பணி செய்யப்பெற்றுக் குடமுழுக்கு நிகழ்ந்த பின்னர், அடுத்த திருக்குட நீராட்டும், நகரத்தார்களாலேயே செய்யப் பெற்றதென்றும், சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்னர் மூன்றாம் முறையாக, நாட்டாரின் முயற்சியால் குடமுழுக்கு நடைபெற்றதென்றும் கூறப்பெறுகிறது.[6]

கொப்பனாபட்டி, தெக்களூர், நெற்குப்பை நகரத்தார், இங்கு அதிகமாக வழிபடுகின்றனர். சுவாமியாடியின் அருள்வாக்கைக் கேட்டு அதன்மீது ஏற்பட்ட நம்பிக்கையின் காரணமாகவே, அவர்களுக்கு இக்கோயிலுடன் தொடர்பு ஏற்பட்டிருப்பதாக நம்பப்பெறுகிறது.

சுவாமியாடியின் குடும்பத்தைச் சேர்ந்த இக்கோயில், கோயிலுக்குச் சொந்தமான நிலங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு நிர்வகிக்கப் பெற்று, ஒவ்வொரு நாளும் ஒருவேளைப் பூசையுடன் நடந்துவருகிறது. இருப்பினும் சுவாமியாடியும், பூசாரியும் எந்நேரமும் கோயில் வளாகத்திலேயே இருப்பார்களாகையால், சிரமமின்றி வழிபாடு செய்யலாம்.

புரட்டாசி மாதம் ஐந்தாவது சனிக்கிழமை (புரட்டாசியில் 4 சனிக்கிழமைகளே இருந்தால் ஐப்பசி முதல் சனி) பெரிய அளவில் பூசை நடைபெறுகிறது. 20 மூட்டை அரிசி வடித்து, அன்னதானம் செய்வார்களாம்.

சுவாமியாடியிடம் எந்த நேரத்திலும் அருள்வாக்குக் கேட்கலாம். இதற்குக் காணிக்கை ஏதும் கிடையாது. இக்கோயிலை வழிபடும் சில குடும்பத்தினர் அருள்வாக்குக் கேட்டே, திருமண ஏற்பாடுகளைக்கூடச் செய்வதுண்டாம்.

இங்கு சுவாமியாடியாக இருப்பவர்கள் வெளியூர்களுக்குச் செல்வது கிடையாதென்றும், இறைபணியாக எண்ணியே அருள்வாக்குக் கூறுகின்றனர் என்றும், இப்போதைய இளம் சுவாமியாடி கூறுகிறார்.

இக்கோயில் உருவாவதற்குக் காரணமாயிருந்த யாதவகுலப் பெரியவர், அழகர்கோயில் போய்க் கறுப்பரை வழிபட்டு வந்ததன் காரணமாகவே, இங்கு எங்கு நோக்கினும் நீக்கமறச் சங்கு — சக்கரமும், திருமண்ணும், திருமால் உருவங்களுமே காணப்பெறுகின்றனவோ?

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

எங்கே னும்இருந்(து) உன்அடி யேன்உ னைநினைந்தால்,
அங்கே வந்(து)என்னொடும் உட னாகி நின்றருளி,

இங்கே என்வினையை அறுத் திட்(டு)எ னைஆளும்
கங்கா நாயகனே! கழிப் பாலை மேயானே!

திருச்சிற்றம்பலம்

— 7 ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

1. லீலா விபூதிகள் — அ. சுப்பராமன்
2. இந்து சமயக் களஞ்சியம் — மு. திரவியம்
3. 12 ஆம் திருமுறை
4. சுவாமியாடி கோட்டை அழகப்பன், ஐயாபட்டி
5. ஸ்ரீ வைஷ்ணவம் — ஆர். இராமஸ்வாமி இராமாநுஜதாசர்
6. பூசாரி எல். மாணிக்கம், ஐயாபட்டி

உ

சித்தத்துள் தித்திக்கும் சேவகப் பெருமாள்

(46. சேவகப் பெருமாள் ஐயனார் திருக்கோயில், சிங்கம்புணரி)

கழுத்தில் சலங்கைகள் கட்டப்பெற்று, மாலை சூட்டப்பெற்றிருந்த கோயில் காளைமாடு, யாரும் விரட்டாமலே, ஒரே சீரான வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தது. மக்கள் கூட்டம் மகிழ்ச்சி பொங்க மாட்டின் பின்னே ஓடியது. திடீரென மாட்டின் கழுத்திலிருந்து பூ உதிர்வது போன்று ஒரு மணி நிலத்தில் விழுந்தது. சிறிது நேரங்கழித்து மற்றொரு மணி; அடுத்து மூன்றாவது மணி. மக்கள் கூட்டம் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தது.

'எருது கட்டு மாரி' — வைகாசியில் நடைபெறும் பிரமோற்சவம் (10 நாள் திருவிழா); புரட்டாசி மாதப் பூர்வ பட்சத்தில் நடைபெறும் 10 நாள் புரவி எடுப்பு; கார்த்திகையில் மகோற்சவம்; தைப்பூசம்; மாசி மாத மகாசிவராத்திரி ஆகிய திருவிழாக்களில், புரவி எடுப்பின்போது நடைபெறும் சோதனை விழாதான் இந்த 'எருது கட்டு மாரி' கோயில் காளையின் முதுகில் சுவாமி ஆரோகணித்திருப்பதாக ஐதிகமாம். காளையின் கழுத்திலிருந்து எத்தனை மணிகள் நிலத்தில் விழுகின்றனவோ, அதற்கேற்ப அந்த ஆண்டின் மழை, விளைச்சல் ஆகியவை அமையுமாம்! மூன்று மணிகள் விழுந்தால் நல்ல மழை, அமோக விளைச்சல்! (அப்படியானால் இந்த விழாவினை 'எருது கட்டு மாரி' என்பதைவிட, ''எருது காட்டு(ம்) மாரி''(மழை) என்று கூறுவது பொருத்தமாக இருக்குமோ? ஒரு வேளை அப்படி இருந்து, இப்படித் திரிந்திருக்குமோ?)

காரைக்குடி (இரணிக் கோயிலார்), முத்துப்பட்டணம் நகரத்தார்களின் குலதெய்வக் கோயிலான சிங்கம்புணரி சேவகப்பெருமாள் ஐயனார் கோயிலில் நடைபெறும் வித்தியாசமானதொரு விழா இது!

* * *

குலசேகர ஆழ்வார் என்பவர், வைணவ சமயத்தின் விடிவெள்ளிகளான ஆழ்வார் பன்னிருவரில் ஒருவர். பூர்விகத்தில் சேர மன்னர் குலசேகரனான அவர், அரச வாழ்வை வெறுத்து, ஆன்மிகத்

துறையில் நாட்டங்கொண்டவராகத் திகழ்ந்தார். இறையடியார்களுக்குத் தொண்டு செய்வதிலேயே எல்லையற்ற நாட்டங்கொண்டிருந்த அவரை, அதிலிருந்து ஆட்சிப் பொறுப்புக்குத் திருப்ப விழைந்த அமைச்சர்கள், இராமபிரானின் முக்கியத் தங்கநகை ஒன்றை மறைத்து வைத்துப் பழியைப் பரந்தாமனின் அடியார்கள் மீது சுமத்தினர். அதை நம்பாத குலசேகரர், 'அடியார் அதனைச் செய்யார்' என்று கூறி, அதனை மெய்ப்பிக்கும் வகையில் பாம்புகள் நிறைந்த குடத்தினுள்(குடப்பாம்பு) தாமே கையை விட்டு உண்மையை உலகுக்கு உணர்த்தினாராம்.[1]

அதனைப் போன்று, கொதிக்கும் நெய்யில் கையை விட்டுச் சத்தியம் செய்யும் வழக்கம், இன்றும் இங்கு நிலவுகிறதாம்!

பிரமோற்சவத்தின்போது, ஐந்தாவது நாள் ஐயனார் திருக்கல்யாணம் நடைபெறுகிறது. அந்த நாளில், ஊஞ்சல், சேஷ (ஆதிசேஷன்) வாகனத்தில் சுவாமி புறப்பாடு ஆகியவை நடைபெறுகின்றன. (வல்லடிகாரர் சுவாமி கோயிலிலும் இதுபோன்று திருக்கல்யாணம் நடைபெறுவதை, அங்கு சென்றிருந்தபோது சொல்லக் கேட்டோமன்றோ.)

சிங்கம்புணரி சேவகப் பெருமாள் ஐயனார் கோயிலுக்கு இன்னும் சில சிறப்புகளும் உண்டு. அவற்றைக் கோயிலுக்குள் சென்று ஒவ்வொன்றாகத் தெரிந்துகொள்வோம்.


* * *

வில்வவனம், சிம்மபுர க்ஷேத்திரம் என்றெல்லாம் சிறப்பிக்கப் பெறும் இந்த ஊரின் பெயருக்கும், இக்கோயிலுக்கும் ஏதேனும் தொடர்பு உண்டா?

திருப்புத்தூரிலிருந்து சிங்கம்புணரிக்குச் செல்லும்போது, ஊருக்கு முன்னதாகவே இடப்புறம் அமைந்துள்ள இக்கோயிலில், ஐயனாருடன், மகிஷாசுரமர்த்தனி அவதாரமான பிடாரியும் இடம் பெற்றிருக்கிறாள். இவ்வூருக்கு அருகில் உள்ள கண்டபுரம் என்னும் ஊரில், சிங்கம் ஒன்றைப் பிடாரி கண்டதாகவும், அதனைக் குத்திக் கொன்றதாகவும், அதன் அடிப்படையிலேயே இவ்வூர் 'சிங்கம்+பிடாரி' ஆயிற்று என்றும் கூறுகின்றனர்.[2] (கண்டபுரத்தில் சிங்கத்தைக் கண்டு அதனைத் தன் வாகனமாக்கிக் கொண்டாள் என்று கதையை மாற்றி அமைத்திருந்தார்களானால், பொருத்தமாக இருந்திருக்கும். தன் வாகனமான சிங்கத்தையே அவள் கொல்வாளா?)

சிம்மபுர க்ஷேத்திரமான இது, முன்னர் பெரிய காடாக இருந்தது என்றும், இங்கு சிங்கங்கள் நிறைய இருந்தன என்றும், அதனால் இது 'சிங்கம்புணரி' என்று பெயர் பெற்றது என்றும்கூடக் கூறுகின்றனர்.

பெரிய புராதனக் கோயில்; முழுவதும் கல் திருப்பணி; சிவாலயத்திற்குரிய தோற்றத்துடன் சிறப்பாகத் திகழ்கிறது. காலையில் நடைபெறும் திருவனந்தலைத் தொடர்ந்து, காலசந்தி, உச்சிக் காலம், சாயரட்சை (மாலை வழிபாடு), அர்த்தசாமம் என நாள்தோறும் 4கால பூசை மேளதாளத்துடன் நடைபெறுகிறது.



சிறப்புமிக்க சிங்கம்புணரி ஐயனார் கோயில்

ஐந்து நிலை இராஜகோபுரத்தின் வழியாகக் கோயிலின் உள்ளே செல்லுமுன்னர், ஒவ்வொரு பக்கத்துக்கு ஒவ்வொன்றாகப் பெரிய பூதங்கள் இரண்டும், பெண்பூதங்கள் இரண்டும், இராஜகோபுரத்தின் இருபுறமும் உள்ளன. இராஜகோபுரத்துக்கு முன்னால், இரட்டைப் பூதங்களின் தலைகளில் கால்களை வைத்துள்ள இரு பெரிய சேமங்குதிரைகள், 1970ஆம் ஆண்டில் புதுப்பிக்கப் பெற்று, வண்ணம் பூசப் பெற்றனவாம். தொடர்ந்து 11.06.73ல் குடமுழுக்கு நடைபெற்றிருக்கிறது. மூலவரின் கருவறைக்கு முன்னுள்ள மகா மண்டபத்தில் முதலில் கொடி மரமும், அதற்கு முன்னால் பலிபீடமும் இருக்க, அவற்றை அடுத்து உள்ளே, முன்னும் பின்னும் பலிபீடங்களுடன் கூடிய யானை வாகனம் உள்ளது. கருவறையின் இருபுறமும் துவார பாலகரும், கருவறையின் வலப்பக்கம் விநாயகரும் இடம் பெற்றிருக்கின்றனர்.

கருவறையில் தேவியர் உடனிருக்கச் சேவகப் பெருமாள் ஐயனார் அருட்காட்சி தருகிறார். முதலில் இவருடைய இருப்பிடம் கொம்படி ஆலயமாகவே இருந்திருக்கிறது. பின்னர்தான் சிவகங்கை சமஸ்தானக் கோயிலான இது, படிப்படியாகு வளர்ச்சி கண்டு இன்று ஐயனார் கோயில்களிலேயே மிகப்பெரிய கோயில்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

இவரின் இருபுறமும் மேலும் இரு ஐயனார்கள் உள்ளனர். (இந்த இருவரில் ஒருவரைச் சிவனாகவே கருதுகிறார்களாம்.)

திருப்புத்தூருக்கு மேற்கே, சிங்கம்புணரியைத் தலைக் கிராமமாகக் கொண்ட 15 ஊர்களை 'அடைக்கலங்காத்த நாடு' என்று சொல் வது உண்டாம். அந்த நாட்டின் காவல் தெய்வமான அடைக்கலங் காத்த ஐயனார், மூலவரின் வலப்புறம் கோயில் கொண்டுள்ளார். அச்சந்நிதியில் அவருடன் பூரணையும், புஷ்கலையும் இடம் பெற் றிருக்கின்றனர். மற்றொரு சந்நிதியில் உள்ளவர்தாம், இத்தலத்துக் குச் சிறப்புச் சேர்க்கும் சுயம்புமூர்த்தி.

மூலவர், கொம்படி ஆலயத்தில் குடிகொண்டிருந்த காலம். வழக் கம்போல், வள்ளிக்கிழங்கு தோண்டும்போது இரத்தம் பீறிடத், தோண்டிப் பார்த்தபோது சிவரூபமாக ஒரு சுயம்புமூர்த்தி காணப் பெற்றது. அதனை மூலவரின் இடப்பக்கம் வைத்து, அந்தப் பள்ளி கொண்ட ஐயனாரைச் சிவசொரூபமாகக் கருதி, இருபுறமும் அம் பிகையரைக் கங்கா, கௌரியாக்கி, ஆனால் வாகனமாக யானையை வைத்து வழிபடுகின்றனர். எல்லாம் ஒரே குழப்பம்!

வேளார்கள் பூசை செய்யும் கோயிலாகையால், சாஸ்தா கோயில் என்றால்தான் அனுமதிப்பார்கள் என்பதால், சுயம்புமூர்த்தியைப் பள்ளிகொண்ட ஐயனார் என்று பெயரிட்டு, அம்பிகையரை வைத்து, யானை வாகனத்தைப் பிரதிஷ்டை செய்தார்கள். ஆனால் வழி பாடு, சிவவழிபாடாகவே நடைபெறுகிறது என்கிறார் தலைமை சிவாச்சாரியார்.

இச்சந்நிதியின் பின்னால், வள்ளி — தெய்வயானை சமேத சுப்பிர மணியர் சந்நிதி உள்ளது. இந்த மகாமண்டபத்தில், மூலவரின் முன்னுள்ள யானை வாகனத்தின் இரு புறமும், நம் இடப்புறம் படிக்கறுப்பரும், வலப்புறம் வாணசுவாமி, பெரிய கறுப்பர், சின் னக் கறுப்பர் ஆகியோரும், மண்டபத்தின் இருபுறமும் சேமங் குதிரைகளும் உள்ளன. இந்த மண்டபத்திலேயே உற்சவத் திரு மேனிகளும் வைக்கப் பெற்றுள்ளன.

மண்டபத்தின் தென்புறத்தில் வடக்குப் பார்த்துப் பிடாரியம்மன் சந்நிதி அமைந்திருக்கிறது. இங்கும் சந்நிதி முன்னர் ஒரு கொடிமர மும் பலிபீடமும் உள்ளன. மூஷிஹம், பலிபீடம் ஆகியவற்றுடன், விநாயகர், சந்நிதி முன்னர் இடம் பெற்றுள்ளார். இதனைக் கடந்து சென்றால், திருக்கல்யாண மண்டபம்.

தென்மேற்கு மூலையில் மூலவிநாயகர் இடங்கொண்டுள்ளார், மூஷிஹம், பலிபீடம்ஆகியவற்றுடன். இச்சந்நிதியில் உள்ள தூண் ஒன்றில் கி. சுப்பஞ்செட்டியார் என்பவரின் சிலை உள்ளது. இவரைப் பற்றிய விவரம் ஏதும் தெரியவில்லை. வடக்குப் பிராகாரத்தில் திருச்சுற்றுச் சுவருடன் உள்ள சந்நிதியில் சப்த கன்னியர், சந்நாசி, சங்கிலிக் கறுப்பர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

வடகிழக்கு மூலையில்தான், இந்த கோயிலுக்கே உரிய சிறப்புச் சந்நிதியான் நவக்கிரகச் சந்நிதி உள்ளது.

இங்கு சிவசொரூபமான சுயம்புமூர்த்தி உள்ளது; மேலும், ஐய னார் அரிகர புத்திரர் ஆதலால், இதனைச் சிவத்தலமாகக் கொள்

ளலாம். சிவத்தலங்களில் நவக்கிரகங்கள் வைப்பதில் தவறில்லை. அந்த அடிப்படையிலேயே இங்கு கோஷ்ட தேவதை, நட்சத்திர தேவதை, இராசி, இலக்கினம் என்னும் முறையில், முறைப்படி விமானம் அமைத்து, நவக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்தோம். நவக்கிரகங்களுக்கு இப்படி ஒரு விமான அமைப்பு வேறு எங்கும் கிடையாது என்கிறார் தலைமைக் குருக்கள்.

இந்தக் கும்பாபிஷேகம் 04.09.1987ல் நடைபெற்றது.

* * *

காரைக்குடி நகரத்தார், ஆனி, ஆடி மாதங்களில் இங்கு வந்து சிறப்பு வழிபாடு செய்கின்றனர். மேலும் தைமாதம் கடைசி வெள்ளிக் கிழமைகளிலும் நகரத்தார் ஏராளமானோர் இங்கு வந்து வழிபடு கின்றனர். அப்போது பிள்ளைகளுக்குப் பெயரிட்டு, முடி இறக்கி வழிபாடு செய்கின்றனர்.

பழனிப் பாத யாத்திரைக் குழுவினர், தொடக்க காலத்திலிருந்தே — உப்புச் செட்டிகள் என்று பெயர் பெற்றிருந்த காலத்திலிருந்தே, இங்கு வந்து காவடி இறக்கி வைத்து வழிபட்டுச் சென்றதை முன் னர் அறிந்திருக்கிறோம். இப்போது அந்த நேரத்தில் பானகப் பூசை செய்கிறார்களாம்.

சிவத்தலமாக இது கருதப் பெறுவதால், எப்போதுமே இங்கு கோயிலினுள் உயிர்ப்பலியோ, பள்ளயம் போடுவதோ இல்லை என்பதைக் கேள்விப்படும்போது, ஐயனாரோ, சிவனோ, அந்தச் சுயம்புமூர்த்திக்கு நம் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கி றோம்.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

கரைகடல் ஒலியில் தமருகத்(து) அரையில்
கையினிற் கட்டிய கயிற்றால்,
இருதலை ஒருநா இயங்கவந்(து) ஒருநாள்
இருந்திடாய் எங்கள்கண் முகப்பே,
விரிதிகழ் விழவின் பின்செல்வோர் பாடல்
வேட்கையின் வீழ்ந்தபோ(து) அவிழ்ந்த
புரிசடை துகுக்கும் ஆவண வீதிப்
பூவணம் கோயில்கொண் டாயே!

திருச்சிற்றம்பலம்

— 9ஆம் திருமுறை, கருவூர்த் தேவர்

குறிப்பு விளக்கம்:

1. திருமாலடியார்கள் — காழியூர் சேஷாத்திரி மணவாளன்
2. இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ள கோயில் பற்றிய தகவல்களை வழங்கிய வர்; பெரி.சே. சின்னையா சிவாச்சாரியார், சிங்கம்புணரி

உ

ஆரமுதாய் அண்ணிக்கும் அழகர்மலைக் கறுப்பர்

(47. பதினெட்டாம்படிக் கறுப்பர் திருக்கோயில், அழகர்கோயில்)

மலையாளத்திலிருந்து மந்திர — தந்திரங்களால் கறுப்பரைக் கொண்டு வர நடந்த முயற்சிகளைப் பற்றிப் பல கோயில்களில் அறிந்திருக்கிறோம். அதே கறுப்பர், தமிழ்நாட்டிலிருந்து அழகரைக் கொண்டு செல்ல மேற்கொள்ளப் பெற்ற முயற்சிக்குக் காவல் இருந்திருக்கிறார் என்பது அழகர்கோயிலில் கூறப்பெறும் வரலாறு.


இவ்வரலாறு வழங்கும் இடத்திற்கே, இப்போது செல்கிறோம். மதுரைக்கு வடக்கே ஏறத்தாழ 20கி.மீ தொலைவில் அழகர்கோயில் என்னும் திருமாலிருஞ்சோலை இருக்கிறது. இதனையே சோலைமலை என்றும், பழமுதிர்சோலை என்றும் கூறுகின்றனர். மாமா, மருமகன் இருவருமே இந்த இடத்தில் குடியேறி இருக்கின்றனர்; சொந்தமும் கொண்டாடுகின்றனர்.

அழகர்கோயிலில் கள்ளழகர் என்னும் சுந்தரராஜப் பெருமாளுக்குத் தான் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். மூலவர் பரமசுவாமியின் உற்சவர்தாம் இந்த சுந்தரராஜன். இவரைப் போன்ற அழகிய உற்சவமூர்த்தி வேறு எங்குமே இல்லை என்பர் . அபரஞ்சித் தங்கத்தால் (அபரஞ்சித் தங்கம் என்பதற்குப் புடமிட்டபொன் என்று பொருள் கூறப்பெறுகிறது.) செய்யப் பெற்றவர்; நூபுர கங்கை நீரைத் தவிர்த்த ஏனைய நீரால் இவருக்கு அபிஷேகம் செய்தால், மேனி கறுத்து விடுமாம்! (சுயநிறத்தைக் காட்டிவிடுவார் போலிருக்கிறது!) இதன் காரணமாகவே, அரசர்கள், மற்றும் பெரிய மனிதர்களுக்கு உணவைச் சோதித்துப் பார்க்க ஒருவர் இருப்பது போன்று, அபிஷேகத்திற்காக ஒவ்வொரு நாளும் கொண்டு வரப்பெறும் நூபுர கங்கைத் தீர்த்தத்தைச் சோதிக்கப் பதினெட்டாம்படிக் கறுப்பர் நியமிக்கப் பெற்றிருக்கிறாரோ? நாள்தோறும் திருமஞ்சனத்திற்காகக் கொண்டு வரப்பெறும் நூபுரகங்கைத் தீர்த்தத்தைப் பதினெட்டாம்படியானிடம் வைத்து, இது கலப்படமற்ற தூய்மையான நூபுரகங்கைத் தீர்த்தம் என்று பிரமாணம் செய்த பின்னரே, எடுத்துச் சென்று அபிஷேகம் செய்வார்களாம்!

இந்தப் புடமிட்ட பொன்னை (அபரஞ்சித் தங்கத்தை)த் தனக்கு உரிமையாக்கிக் கொள்ள முயன்றிருக்கிறான், மலையாளத்து மன்னன் ஒரு

வன். (சிலைத் திருட்டுப் பண்டைக் காலத்திலிருந்தே இருந்துவருகிறது என்பதை இது உணர்த்தவில்லையா?) காவல் தெய்வம் ஒன்றின் உதவியுடன், மந்திர- தந்திரங்களில் தேர்ந்த பதினெண்மரை அவன் இங்கு அனுப்பியிருக்கிறான்.

அவர்கள் அரூபியாக இருந்து முயன்றனர்; மூலச்சிலையின் கலைகளை வேறொரு சிலைக்கு மாற்ற முயன்றனர்; எதுவுமே இங்கிருந்த மந்திர — தந்திர வல்லுநர்களான பட்டர்களின் கண்களிலிருந்து தப்பவில்லை. முடிவு? சிலை திருட வந்த பதினெண்மரும் பலியானார்கள்; தலைவாயிலின் பதினெட்டுப் படிகளின் கீழே புதையுண்டனர்.



படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே

படியாய்க் கிடந்து ''அவன்'' பவளவாய் காண விழைந்தார் குல சேகராழ்வார். (இதனை ஒட்டியே திருமால் கோயில்களில் கருவறை யின் முதற்படி குலசேகரப்படி என அழைக்கப்பெறுகிறது.) வேண்டு கோள் விடுக்காமலேயே இவர்கள் படியாய்க் கிடக்கும் பாக்கியத் தைப் பெற்றுவிட்டனர்! காவலுக்கு வந்தவர் கட்சி மாறிவிட்டார்; அரசாங்கத் தரப்பின் 'அப்ரூவ'ராகி விட்டார்.

தாமும் அந்தக் கோபுர வாசலிலேயே (புதைக்கப் பெறாமல்) இருந்து, காவல் காத்துக் கோயில் சொத்துகளைப் பத்திரமாய்ப் பாதுகாப்ப தாக ஒப்புக்கொண்டார். அதற்குக் கைம்மாறாக அவர் கேட்டதெல் லாம், அர்த்தயாம நிர்மாலிய நிவேதனம் மட்டுமே!

இன்றளவும் நிர்மாலிய நிவேதனம் இந்தப் பதினெட்டாம்படிக் கறுப் பணசுவாமிக்கே கொடுக்கப்பெறுகிறது.[1]

★ ★ ★


அலவாக்கோட்டையைச் சேர்ந்த மாத்தூர் உறையூருடையாரும், கல் லலில் உள்ள மாத்தூர்க் கறுப்பூர்ப் பிரிவினரும் குலதெய்வமாக வழிபடும் இந்தப் பதினெட்டாம்படிக் கறுப்பணசுவாமிக்கு, அழகர் கோயிலில் உருவம் ஏதும் கிடையாது. கிருஷ்ணபுத்திரன் என வழங் கப் பெறும் இவர், கள்ளர்களால் பெரிதும் போற்றி வழிபடப் பெறு கிறார்.

கோயில் வளாகத்தினுள் சென்றதும், தலைவாயிலான இராஜகோ புர வாயில், எப்போதும் மூடப்பெற்றுச், சந்தனம் பூசப்பெற்றுக் காட்சி தருவதைக் காணலாம். இந்தப் பதினெட்டாம்படிக் கோபுரக் கதவுகளையே கறுப்பணசுவாமியாகக் கருதி வழிபாடுகள் செய்யப் பெறுகின்றன.

மூடப்பெற்றுள்ள கதவுகள் பிரமோற்சவக் காலத்தில் சக்கரத்தாழ் வார் வருவதற்காக மட்டுமே ஆண்டுக்கு ஒரு முறை திறக்கப்பெறு கின்றன. மற்ற நேரங்களில், சத்தியப் பிரமாணம் செய்ய விரும்பு வோருக்கு அவை திறக்கப் பெறுவது உண்டு. அப்போது, உள்ளே உள்ள பதினெட்டுப் படிகளுக்கும் படிக்கு ஒரு ரூபாயாகப் பதினெட்டு ரூபாய் காணிக்கை செலுத்துகின்றனர். மூடப்பெற்றுள்ள வலக்கத வில் சிறிய (திட்டி) வாயில் ஒன்று உள்ளது. பதினெட்டு ரூபாய் கட்டணம் செலுத்தி அதனைத் திறந்து உள்ளே என்ன இருக்கிறது என்று பார்க்கலாம். உள்ளே 18 படிகள்; முதற்படியில் பெரிய அரி வாள் ஒன்று உள்ளது. இந்த அரிவாள் மிகச் சக்தி வாய்ந்ததாகக் கருதப் பெறுகிறது. அதன்மேலே இராஜகோபுர நுழைவாயில் கதவு கள் உள்ளன.

மூடப்பெற்று வழிபடப்பெறும் பதினெட்டாம்படிக் கறுப்பருக்கு (கதவு களுக்கு) முன்னால் 7 படிகள் பித்தளைத் தகடு போடப்பெற்றுள்ளன. சில அரிவாள்கள் கதவுகளில் சாத்தி வைக்கப் பெற்றுள்ளன. கத வின் இடப்புறம் பெரியதொரு கதாயுதமும், வலப்புறம் சில பெரிய அரிவாள்களும் வைத்துக் கம்பி போடப் பெற்றிருக்கிறது. ஏழு படி களின் நடுவில் பெரிய இரு பாதுகைகள் வைக்கப் பெற்றுள்ளன.

குலாலர் குலத்தைச் சேர்ந்த பூசாரி தேங்காய்களை உடைத்து வைத்து, விபூதி கொடுக்கிறார். பொங்கல், வடை முதலியன இவருக்கு நிவே தனம் செய்யப் பெறுவதுண்டு.



நிலம் முனம் இடந்தான் நீடுறைகோயில்

இந்தக் காவல் தெய்வமான கருப்பணர் வடக்கிலிருந்து (கொண்டு) வந்ததாகச் சொல்லப்பெறுவதால், இங்கு வடக்கு நோக்கி நின்றே பூசைகள் செய்வார்களாம்.

ஆடிப் பௌர்ணமியன்று நிறையச் சந்தனக் குடங்கள் வந்து, அந்தச் சந்தனத்தைக் கதவுகளில் தடவி மாலை சாத்தி வழிபடுவர். இது ஒன்று மட்டுமே இவருக்கு நடைபெறும் திருவிழாவாகும். (சுத்தப் பட்டில் இதைத்தான் பின்பற்றுகின்றனர்.)

சித்திரைத் திங்களில் மீனாட்சி திருமணத்திற்காக அழகர் புறப்படும் போது, அவர்மீது உள்ள நகைகளின் பட்டியல் இவர் முன்னர் படிக்கப்பெறுமாம். அழகர் திரும்பி வந்ததும், அந்தப் பட்டியலைப் படித்து நகைகளைச் சரி பார்ப்பார்களாம். மேலும் அன்றாடம் இரவில் கோயில் கருவூலத்தின் சாவியை இவர் முன்னர் வைத்துவிட்டுச் சென்று விடுவார்களாம். மறுநாள் காலை அது எடுக்கப் பெறும் வரை யாருமே அதன் அருகில்கூடச் செல்ல மாட்டார்களாம்.

இவர் முன்னர் சத்தியம் செய்வது என்பது இன்னும் நடந்து வருகிறது. யாருமே இவர் முன்னர் பொய் சொல்லத் துணியமாட்டார்கள்.

★ ★ ★

மற்ற கோயில்களில் பதினெட்டாம்படிக் கறுப்பர் சந்நிதியை அமைக்க விரும்புவோர், இங்கிருந்து பிடிமண்ணும், திருநீறும் பெற்றுச் சென்று, அந்தந்தக் கோயில்களில் அவற்றைக் கீழே வைத்துப் பின்னர் கறுப் பர் உருவச் சிலையைப் பிரதிஷ்டை செய்வார்களாம்.

அலவாக்கோட்டைப் பங்காளிகள் ஒவ்வொரு மாதமும் அமாவாசை யன்று இங்கு வந்து நூபுர கங்கையில் நீராடிக் கறுப்பரை வழிபட்டுச் செல்வார்களாம். நகரத்தார் வீடுகளில் நடைபெறும் எந்த மங்கல நிகழ்ச்சியும், இங்கு வந்து பதினெட்டாம்படிக் கறுப்பரை வழி பட்ட பின்னரே தொடங்கும் என்று கூறப்பெறுகிறது.[2]

கல்லல் பங்காளிகள் முன்பு வண்டியில் இங்கு வந்து 11 நாட்கள் தங்கியருநது வழிபாடு செய்வது வழக்கமாம். முன்பு கிடாய்ப் பூசை கொடுப்பது உண்டாம். இப்போது அதற்குப் பதிலாக குட்டிக் காணிக்கை என்று சொல்லிக் குறிப்பிட்டதொரு தொகையை உண்டி யலில் சேர்ப்பிக்கின்றனராம். 11 நாட்கள் தங்கியிருந்து வழிபட்ட காலத்தில் இருந்த மண்டபங்கள், இப்போது பாழடைந்து போய்விட் டன என்கின்றனர். கல்லல் நகரத்தார் வீடுகளில் பெரியகறுப்பன், பெரியகறுப்பி, பெரியகறுப்பாயி என்னும் பெயர்கள் வைக்கும் வழக்கம் இருந்து வருகிறது.[3]

★ ★ ★

ஆழ்வார்களில் ஒரே பெண்ணாகிய ஆண்டாள்கூட, இப்பதினெட் டாம்படியானை வியந்ததாகச் சொல்லப் பெறுகிறது.[4] ஆனால் அதற்கான அகச்சான்று ஏதும் காணப்பெறவில்லை.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

உருவிலி, ஊனிலி, ஊனம்ஒன்(று) இல்லி,
திருவிலி, தீதிலி, தேவர்க்கும் தேவன்,
பொருவிலி, பூதப் படையுடை யாளி,
மருவிலி வந்(து)என் மனம்புகுந் தானே.

திருச்சிற்றம்பலம்

— 10ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

— தேவாமிர்தமாகத் தித்திக்கும்

1. இக்கோயில் பற்றிய வரலாறு, தகவல்கள் ஆகியவை
   (அ) அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் வரலாறு,
   (ஆ) வேங்கடம் முதல் குமரி வரை — தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான் ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பெற்றவை.
2. ப.இராம. இராமசாமி செட்டியார், அலவாக்கோட்டை
3. மு.ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி, கல்லல்
4. கள்ளழகர் திருக்கோயில் வரலாறு

உ

ஒப்புனக்குஇல்லா ஒருவனே, ஓமக்காட்டு ஐயனே!

(48. ஓமக்காட்டு ஐயனார் (சோனையன்) திருக்கோயில், நெற்குப்பை)

ஒவ்வொரு கோயிலிலும் கர்ப்பக்கிரகத்திலுள்ள முக்கியமான தெய்வத்தைச் சுற்றியுள்ள பிராகாரங்களில் பரிவார தேவதைகளும் இருக்கவேண்டும் என்பது ஆகமவிதி.[1] பல்லவர் காலத்திலும், முற்காலச் சோழர் காலத்திலும் அம்மனுக்குச் சிவன் கோயிலில் தனிச் சந்நிதி ஏற்படாதிருந்தபோதே, சூரியன், கணேசர், சப்த கன்னியர், சுப்பிரமணியர், ஜேஷ்டர், சண்டேசுவரர், சந்திரன் ஆகிய பரிவார தெய்வங்கள் இடம் பெற்றிருந்தன என்று கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.[2] (கி.பி. 11ஆம் நூற்றாண்டில் முதல் இராஜேந்திரனின் கல்வெட்டுதான் அம்மனின் தனிக்கோயில் பற்றிக் குறிப்பிடுகிறது. அதன் பின்னரே அம்மனுக்குத் தனிக் கோயில்கள் எடுக்கப்பெற்றன.)

இதன் காரணமாகவே, ஐயனார், கறுப்பர் கோயில்களில் 21 பந்தித் தெய்வங்களை வைக்க முற்படுகின்றனர் போலும்! (கோயிலில் உள்ள மொத்த தெய்வங்களின் எண்ணிக்கை இருபத்தியொன்றாக வருவதுபோன்று, பரிவார தெய்வங்களை அமைத்துக் கொள்ளலாயினர்.)

இருப்பினும், பரிவார தெய்வங்களாக வந்தவை, மூலவரையே பெயர் போடவிடாமல் செய்துவிடுவதையும் சில கோயில்களில் காணமுடிகிறது. எடுத்துக்காட்டுக்கு இராங்கியம் கறுப்பர், மூலங்குடிப் பொன்னன், சுத்தப்பட்டுத் தொட்டியத்துக் கறுப்பர், கொல்லங்குடி வெட்டுடையார் காளி போன்றவற்றைக் குறிப்பிடலாம். அத்தகைய கோயில்களில் ஒன்றுதான், இப்போது நாம் வந்துள்ள நெற்குப்பை ஓமக்காட்டு ஐயனார் (சோனையன்) கோயில்.

மூலவர் ஓமக்காட்டு ஐயனார், ஓமக்காட்டுக் கறுப்பர் போன்றோர் இங்கு பிரபலமாக இருந்துங்கூடச் சோனையனுக்குத்தான் இராஜோபசாரம்.

* * *

திருப்புத்தூரிலிருந்து பொன்னமராவதி செல்லும் வழியில், நெற்குப்பையிலிருந்து 1 கி.மீட்டரில் (நெற்குப்பையிலிருந்து பரியாமருது

பட்டி செல்லும் சாலை), மணிமுத்தாற்றங்கரையை ஒட்டி அமைந் திருக்கிறது, ஓமக்காட்டு ஐயனார் கோயில்.

சூரக்குடி, பிள்ளையார்பட்டிக் கோயில்களைச் சேர்ந்தவர்களான உலகம்பட்டி, செவ்வூர், நெற்குப்பை, பனையப்பட்டி, பூலாங்குறிச்சி, மிதிலைப்பட்டி, மேலைச்சிவபுரி, வலையபட்டி, வேகுப்பட்டி, வேந்தன் பட்டி நகரத்தார்கள் வழிபடும் இக்கோயில், 10.02.1992ல் திருக் குட நீராட்டுக் கண்டது.

நகரத்தார்களுடன் உலகம்பட்டி வளைவிக்காரர்களும் (வளையற்காரர் களா?), நெற்குப்பைப் பல்லவராயர்களும் இக்கோயிலைக் குலதெய் வக் கோயிலாகக் கொண்டுள்ளனர். இந்தக் குடமுழுக்கு விழா, பல்லவராய வகையறாக்களுடன் நகரத்தார் இணைந்து திருப்பணி செய்து நடத்தியதாகும்.

பாடுவார் முத்தப்ப செட்டியார் அவர்கள் காலத்தில், செவ்வூருக்கு அருகிலுள்ள திருக்கோளக்குடி என்னும் ஊரில் நகரத்தார்கள் வாழ்ந்து வந்தார்களாம். பின்னர் அங்கு ஏற்பட்ட சில மாறுதல்களின் காரண மாக, அங்கிருந்து செவ்வூர், பரியாமருதுபட்டி, பனையப்பட்டி, பூலாங்குறிச்சி, மிதிலைப்பட்டி, வேகுப்பட்டி ஆகிய ஊர்களுக்குக் குடிபெயர்ந்திருக்கின்றனர். இவர்கள் அனைவரும் சூரக்குடிக் கோயி லாரே ஆவர். பரியாமருதுபட்டியில் இருந்தவர்களே பின்னர் மீண் டும் குடிபெயர்ந்து, நெற்குப்பை சென்றுள்ளனர். இவர்கள் திருக் கோளக்குடியில் இருக்கும்போதே, சோனையனையும், ஆச்சியம்மனை யும் வழிபட்டு வந்திருக்கின்றனர்.[3]

* * *

நெற்குப்பை — பரியாமருதுபட்டிச் சாலையை ஒட்டியே உள்ள இக் கோயிலைக் கண்டுபிடிக்கச் சிரமப்படவேண்டியதில்லை. காலையோ, மாலையோ ஏதேனும் ஒருநேரம் மட்டும் இங்கு பூசை நடைபெறு கிறது. ஆனால் நாம் செல்லும் நேரத்தில் வேளார் இருப்பாரா, மாட்டாரா என்பதைச் சுவாமி அழைத்துக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டாம். 1992ல் நடைபெற்ற திருக்குட நீராட்டுக்குப் பின்னர், நகரத்தார்கள் நியமித்துள்ள மேற்பார்வையாளர் ஒருவர், கோயி லின் அருகிலேயே குடியிருக்கிறார். அவரிடம் சொன்னால், வேளாரை அழைத்து வந்து வழிபாடு செய்ய ஏற்பாடு செய்து தருவார். சில நேரங்களில், அவரும் வெளியில் சென்று விடுகிறார்; கோயில் மட்டும் திறந்திருக்கிறது. (சந்நிதிகள் பூட்டப்பெற்றிருக்கும்.) நாமே சொந்த மாக ஐயனார், கறுப்பர், சோனையனை வழிபட்டுச் செல்லலாம்!

* * *

சாலைக்கும், கோயிலுக்கும் இடையில் உள்ள வளைவு, நம்மைச் சோகமெலாம் தீர்க்கும் சோனையன் கோயிலுக்கு வருக வருக என்று வரவேற்கிறது. வளைவைக் கடந்து கோயிலின் பின்புற வாயில் வழியாக உள்ளே செல்லுமுன்னர், நம் இடப்புறம், மாடத்தில் சங் கிலிக் கறுப்பர் முதலியோரின் சிலைகள் உள்ளன.

மூலவர் ஓமக்காட்டு ஐயனார் கருவறைக்கு இடப்புறம் உள்ள நுழை வாயில் வழியாக உள்ளே செல்லலாம். விசாலமான மகாமண்டபம். இருபுறமும் சந்நிதிகள். நம் இடப்புறத்தில் செங்கிடாய்க் கறுப்பர்,

நாகலிங்கம், வீரபத்திரர் ஆகியோரும், தனிச் சந்நிதியில் தம் பரிவாரங்களுடன் மாயாண்டித் தெய்வமும் உள்ளனர். அவற்றைத் தாண்டி மேலே சென்றால், கிழக்குப் பார்த்த சந்நிதியில் ஆச்சியம்மனும், முத்துக்கறுப்பர்சாமியும் உள்ளனர். தெற்குப் பார்த்துத் தொட்டிச்சி அம்மன் சந்நிதி உள்ளது.

திருக்கோளக்குடியில் திருமணம் செய்து கொடுக்கப்பெற்ற நகரத்தார் குடும்பப் பெண் ஒருவர், தம் தாய் வீட்டுக்குச் சென்றுவிட்டுச், சகோதரர், வித்வையான உறவினர் ஒருவர் ஆகியோரின் துணையுடன், கணவன் வீட்டுக்குத் திரும்பும் போது, இடியும் மின்னலும், காற்றும் மழையும் பிடித்துக் கொள்ளவே, அருகில் இருந்த ஐயனார் கோயிலில் ஒதுங்கி இருக்கிறார்.

மலையாளத்திலிருந்து பட்டாணி ஒருவர், தொட்டியப் பெண் ஒருத்தியைச் சிறையெடுத்து வந்தார். அவர்கள் கள்ளத்தனமாக வெளியேறியதை அறிந்த பெண்ணின் தகப்பனாரும், சகோதரரும், மோப்ப நாய் ஒன்றின் துணையுடன் அவர்களைப் பின்தொடர்ந்து வந்தனர். இருதரப்பினருமே, இந்த ஐயனார் கோயிலருகே வந்த நேரத்தில் தான், பேய்மழை பெய்யத் தொடங்கிவிட்டது. அவர்களும் கோயிலினுள் அடைக்கலம் புகுந்தனர். இந்த மூன்று குழுவினரில் யாருடைய தீவினையோ, இடி அந்த இடத்தைத் தாக்கியது; அனைவரும் உயிர் துறந்தனர்.

சிறிது காலம் கழித்துத் திருக்கோளக்குடியில் உள்ள சூரக்குடிக் கோயிலார் குடும்பத்தில் சிற்சில சோதனைகள் ஏற்படலாயின. இடியினால் உயிர் துறந்த பெண்ணின் காரணமாகவே அவை ஏற்படுகின்றன என்பதை உணர்ந்த அவர்கள், ஐயனார் கோயிலில் உயிர் துறந்த அனைவருக்குமே சிலைகள் வைத்து, நகரத்தார் குடும்பத்துப் பெண்ணை ஆச்சியம்மனாக்கி, அவருடன், சோனையன், பட்டாணி, தொட்டிச்சியம்மன் அனைவரையும் வழிபட்டு வரலாயினர்.[4]

ஐயனார் சந்நிதி மட்டும் முதலில் இங்கு இருந்தது. நெற்குப்பையிலிருந்து செவ்வூர் சென்ற நகரத்தார் குடும்பப் பெண் (ஆச்சி) ஒருவர், சோனையன் (சக்கிலிய சுவாமி), நாய் ஆகியோரின் துணையுடன் தம் பிள்ளையைத் தூக்கிக் கொண்டு இவ்வழியே வந்தபோது, இந்த இடத்தில் தொட்டிச்சியுடன் சேர்ந்து, எல்லாரும் கல்லானார்கள் என்றும் சிலர் சொல்கின்றனர்.[5]

அம்மனாகிய ஆச்சியின் பெயர், பிறந்த ஊர் போன்ற விவரங்கள் தெரியாத போதிலும், அந்த நகரத்தார் குடும்பப் பெண்ணின் காரணமாகவே, திருக்கோளக்குடியிலிருந்த சூரக்குடிக்கோயில் நகரத்தார்களுக்கு இக்கோயிலுடன் தொடர்பு ஏற்பட்டது என்பது தெரிகிறது.

இரண்டாவதாகத் தெரிவிக்கப் பெற்ற கருத்துக்கேற்பச், சோனையன், அந்தப் பெண்ணுக்குத் துணைக்குச் சென்றவராக இருக்க வாய்ப்புண்டு. இதுபோன்று மற்றோர் இடத்தில் துணைக்குச் சென்றவருடன் நகரத்தார் குடும்பப் பெண்ணுக்குத் தொடர்பு ஏற்படுத்தி இழித்துரைத்துப், பின்னர் உண்மையை உணர்ந்து, அவ்விருவரையும் வழிபட்டு வருகின்றனர். அதுபோன்று இங்கும் நடந்திருக்கக்கூடும்.

ஆச்சியம்மன், நீண்டு தொங்கும் காதுகளில் சுருள் அணிந்து, இடக்கையில் குழந்தையை ஏந்தி நிற்கிறார். தொட்டிச்சி அம்மன் கையில்

அரிவாளுடன் வலப்புறம் கொண்டை முடித்துக் கம்பீரமாகக் காணப் பெறுகிறார்.

கோயிலின் தென்புறமுள்ள பரிவார தேவதைகளில், காவல் வந்த நாய், சப்த கன்னியர், சித்தர் முதலியோரின் சிலைகள் உள்ளன. தொட்டிச்சியைத் தேடி, அவர் தகப்பனார், மற்றும் சகோதரர்கள், வைரவரின் துணையோடு வந்ததாகக் கூறப்பெறுவதில், வைரவர் என்பது இந்த நாயாகவே இருக்கலாம்.

அடுத்து, ஓமக்கறுப்பர் சந்நிதி வடக்குப் பார்த்து உள்ளது. பழைய சிலை சேதமுற்று விட்டதால், இப்போது புதிய சிலை செய்து வைத்



அண்ணலே சோனையா! ஆற்றல் மிகுந்தவரே!

துள்ளார்களாம். இந்தச் சந்நிதியில் ஐந்தலை நாகத்தின் கீழ் நர்த்தன கோபாலசுவாமி சிலை உள்ளது. இச்சந்நிதியை அடுத்து ஸ்ரீ அம்பாள் சந்நிதி. இதில் இரு அம்மன் சிலைகள் உள்ளன. இவை, உலகம்பட்டி வளைவிக்காரர்களின் குலதெய்வங்களாம்.

கோயிலின் இரு புறங்களிலுமுள்ள பரிவார தெய்வங்களுக்கு இடையில், கிழக்கு நோக்கி மூலவர் கருவறை அமைந்திருக்கிறது.

இப்போது ஓமக்கண்மாய், ஓமவயல் என்றழைக்கப்பெறும் முந்திய ஓமக்காட்டில் கோயில் கொண்டிருப்பதால், மூலவர் ஓமக்காட்டு ஐயனார் என்று அழைக்கப்பெறுகிறார். ஐயனார், கறுப்பர், மாயாண்டி சிலைகள் யாவும் தொடக்கத்திலிருந்தே கற்சிலைகளாகவே இருந்தவைதானாம்.

இந்தக்கோயில் நீண்ட காலமாக மிகவும் சேதமுற்றுப் பராமரிக்கப் பெறாமல், இருளடைந்து இருந்துவந்தது. கோயிலைச் செப்பனிட்டுத் திருப்பணி செய்ய ஒப்புதல் கிடைக்கவில்லை என்று கூறிவந்தனர். இப்போது மிகச் சிறப்பாகக் கோயில் கட்டப் பெற்றுத் திருக்குடநீராட்டு நடைபெற்றிருக்கிறது.

நகரத்தார்கள் சுமார் 300 புள்ளிகள் வழிபடும் இக்கோயில், தற்போது நகரத்தார்களால் நிர்வகிக்கப்பெறுகிறது.[6] கோயில் கட்டிய பின்னர், உரிமை கோருவதில்லை என்று கூறி, அன்றாடப் பூசைக்கான நிவேதனத்துக்கு நகரத்தார்கள் அரிசி கொடுத்து வருகின்றனர் என்று அர்ச்சகர் கூறுகிறார்.[7]

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்புவரை இக்கோயிலில் சித்திரை மாதம் புரவி எடுப்பு நடந்து வந்தது. ஊரார்களிடையே ஏற்பட்ட தகராற்றினால், அது தடைப்பட்டுவிட்டது என்கிறார் அர்ச்சகர்.

இந்து அறநிலையத் துறைக் கோயிலான இங்கு, ரூ 325 கட்டினால், ஆண்டுக்கு ஒருமுறை நாம் குறிப்பிடும் நாளில் வழிபாடு செய்து திருநீறு அனுப்பி வைக்கிறார்களாம். பெரும்பாலான சிவன் கோயில்களில் மேற்கொள்ளப்பெறும் இவ்வழக்கம், முதன்முறையாக இக்கோயிலில் கடைப்பிடிக்கப்பெறுகிறது.[8]

குடமுழுக்கு நடைபெற்ற பின்னர், நகரத்தார் வீட்டுத் திருமணங்களுக்கு மாலை கொடுக்கும் வழக்கம் ஏற்பட்டிருக்கிறது. நகரத்தார் வீட்டுக் குழந்தைகளுக்கு இங்கு முடியிறக்குவதோ, தொட்டில் கட்டுவதோ இல்லை.

ஈராண்டுகளுக்கு ஒருமுறை சித்திரை மாதம் கடைசி வெள்ளிக்கிழமை, பங்காளிகள் கூடிச் சிறப்பு வழிபாடு செய்கின்றனர்.[9]

* * *

மண்டபத்துக்கு வெளியே, ஐயனார் சந்நிதிக்கு எதிரில் பலிபீடமும், யானை வாகனமும் காணப்பெறுகின்றன. பலிபீடம் முன்னாலும், யானை வாகனம் பின்னாலும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

திருச்சுற்றுச் சுவரில் உள்ள கிழக்கு வாசல் வழியே வெளியே சென்றால், கோயிலின் வலப்புறம் (தென்கிழக்கில்) ஒரு வேலும், அதற்கு அப்பால் மேடையில் சோனையனும் இருக்கக் காண்கிறோம். மேற்கூரையின்றி மேற்கு (சேங்கையை) நோக்கிச் சோனையனின் சிலை உள்ளது.

நகரத்தார்களின் குலதெய்வம் ஆச்சியம்மனே ; அதனை ஒட்டியே சோனையனை அவர்கள் வழிபடுகின்றனர் என்றும், சோனையன் சக்கிலியர் சுவாமி என்றும் கூறுகிறார்கள்.[10]

சக்கிலியர் என்போர் தெலுங்கு நாட்டுக்காரர் என்றும், கஞ்சம் மாவட்டத்தில் தோல் தைப்பவர் என்றும் கூறப்பெறுகிறது.[11] தொட்டிச்சியும் தெலுங்கு நாட்டுத் தொட்டியர் வீட்டுப் பெண்ணாகவே இருக்க வேண்டும். தொட்டியர் பிரிவில் சக்கிலியரும் அடங்குகின்றனர். எனவே தெலுங்கு நாட்டிலிருந்து தொட்டியப் பெண்ணைக் காதலித்துக் கடத்தி (சிறையெடுத்து) வந்த பட்டாணி, தொட்டிச்சியம்மன், சக்கிலியத் தெய்வமான சோனையன் ஆகிய எல்லோருக்கும், ஏதோ ஒரு வகையில் தொடர்பு இருக்கிறது என்று ஊகிக்க முடிகிறது.

அவர்களின் காதல் — கடத்தல் விவகாரத்தில், நகரத்தார் குடும்பப் பெண்ணும், பிள்ளையும், உறவினர்களும், அவர்களை அறியாமல் இணைய வேண்டி நேர்ந்திருக்கலாம். அனைவரும் இடிக்குப் பலியான தகவலைச் சிறிது காலம் கழித்து அறிந்த நகரத்தார்கள், ஆச்சியின்வழி அனைவரையும் தெய்வமாக்கி வழிபட்டு வந்திருக்கலாம் என்று நினைக்கத் தோன்றுகிறது. கால ஓட்டத்தில், செவிவழிச் செய்திகள், சிதைவுற்று — சேர்க்கப்பெற்று, ஒருவரை உயர்ந்தவராகவும் ஆக்கலாம்; உருக்குலைக்கவும் உதவலாம் என்பது எல்லோரும் அறிந்த ஒன்றே.

இன்னும் சற்று ஆழமாகச் சிந்தித்தால், ஆதிகாலச் சாதிப்பிரிவான நான்கு வருணங் (பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்)களைக் கோயிலில் வைத்துக் கும்பிடும் ஒரு முயற்சியாகவும் இதைக் கருத முடிகிறது. பிராமண வகுப்பைத் தலைமைத் தெய்வமாக்கி, க்ஷத்திரிய — வைசிய — சூத்திரர்களைப் பரிவார தெய்வங்களாக்கிக் கோயிலினுள் வைத்துத், தீண்டத்தகாத (மன்னிக்கவும், இது எனக்கு உடன்பாடில்லாத சொல்) சூத்திரர்களைக் கோயிலின் புறத்தே வைத்திருப்பார்களோ என எண்ணத் தோன்றுகிறது.


சூத்திரர்களையும், சற்சூத்திரர், அசற்சூத்திரர் என இரு வகையாகப் பிரிக்கின்றனர். மேலொழுகிய ஒழுக்கமும், குடிப்பிறப்பும் உடையோர் சற்சூத்திரர் ஆவர் என்று சொல்லப்பெறுகிறது.[12] இத்தகைய சற்சூத்திரரே கோயிலில் இடம்பெறும் நிலையை எய்தியிருக்கக்கூடும் என்றும் நினைக்கத் தோன்றுகிறது.

வேளாரின் கூற்றை (சக்கிலிய சுவாமி என்பதை) மறந்து, சோனையன் என்னும் தெய்வத்தைப் பற்றிப் பொதுவாகச் சிந்தித்தோமானால், சோனை என்னும் சொல்லாட்சி கம்ப இராமாயணத்தில் சில இடங்களிலும், வில்லிபுத்தூரார் பாரதத்தில் மிகுதியாகவும் இடம் பெற்றிருக்கிறது. திருமுறை ஆசிரியர்களோ, ஆழ்வார்களோ, இச்சொல்லைப் பயன்படுத்தியிருப்பதாகத் தெரியவில்லை.

கம்பரும், வில்லிபுத்தூராரும், 'விடாப் பெருமழை போல; விடா மழை பொழியும் மேகம் போற் கறுத்த; மேகம்' என்னும் பொருள்களிலேயே இச்சொல்லைக் கையாண்டிருக்கின்றனர். மகா பாரதத்தில் ''சோனகர் மனையில்'' என்னும் இடத்தில் ''மிலேச்சர் இல்லத்தில்'' என்று பொருள் கிடைக்கிறது.

இச்சொல்லுக்கு உரிய வேறு பொருள்களை நோக்குவோம்: ''கார்

முகில்'' — சோனையனைக் கரிய நிறத்தினன் என்று சொல்லலாம்; ''திருவோணம்'' — கறுப்பரைத் திருமாலின் அம்சம் என்று கூறு கின்றனர் என்பதை முன்னர் கண்டோம். திருமால் திருவோண நட் சத்திரத்தில் அவதரித்தவர் என்பதை ''....நீ பிறந்த திருவோணம், இன்றுநீ நீராட வேண்டும்'' என்று பெரியாழ்வார் கூறுவார்.[13] ஆகையால் திருவோணம் என்று பொருள்தரும் சோனை(யன்), அந்த நட்சத்திரத்தில் அவதரித்த திருமாலின் (கறுப்பரைப் போன்ற) அம் சம் என்று கொள்ளலாம்.



சோகமெலாம் தீர்க்கவரும் சோனையன் கோயில்

''சொரிதல்'' — தன்னை நம்புவோருக்கு இன்பங்களை — பாது காப்பை அள்ளிச் சொரிபவன் என்றும், சோனையன் என்பதற்குப் பொருள் சொல்லலாம். ''மிலேச்சர்'' என்னும் பொருளைக் கொண்ட சோனகர், சோனையர் ஆகியிருக்கலாம் என்றாலும்,

இவர் இந்த (நெற்குப்பை)க் கோயிலிலும், வேறு சில கோயில்களி லும் வெளியிலேயே வைக்கப் பெற்றிருக்கிறார் என்பதைக் கொண்டு, மிலேச்சருக்குக் கோயிலினுள் இடம் இல்லை; அதன் காரணமாகவே ஆற்றல் மிக்கவராக இருந்தாலும், கோயிலின் புறத்தே வைக்கப் பெற்றார் என்று சொல்லலாம் என்றாலும்,

(போரில் இறந்து)பட்டவரைக் கோயிலினுள் வைக்க அனுமதி இல்லை; அதனாலேயே ''வாளுக்கு வேலி'' போன்ற மன்னுயிர் காக்கத் தன்

னுயிர் ஈந்த மாவீரர்களின் சிலைகள் கோயிலுக்கு வெளியிலேயே உள்ளன என்று கத்தப்பட்டு, மற்றும் சில கோயில்களில் கூறப்பெற்ற போதிலும், அதிகமான கோயில்களில் இந்தப் பட்டவர் தெய்வம், இராஜா தெய்வம், மற்றும் தீக்குளித்த — தற்கொலை செய்து கொண்ட நகரத்தார் — வேறு சில சமுகப் பெண்களின் சிலைகள், கோயிலினுள் குடியேறிவிட்டதைக் கொண்டு பார்க்குமிடத்து, இது போன்ற விதிகள், எல்லாக் கோயில்களுக்கும் பொதுவானவையல்ல ; கோயிலுக்குக் கோயில் வேறுபடுகின்றன என்பதை உணருகிறோம்.

மேலும், மூலங்குடிப் பொன்னன் கோயில், தேக்காட்டூர் முனைசந்தைப் பனையுடை ஐயனார் கோயில் போன்றவற்றில் கோயிலின் உள்ளேயே துருக்கியர் சிலை, முஸ்லிம் ஒருவருக்கான நடுகல், மற்றும் கரியக்குடி கருவி ஐயனார் கோயிலில் வெள்ளைக்காரத் தளபதி, அவருடைய சிப்பாய்களுக்கான நடுகற்கள் வைக்கப்பெற்றிருக்கின் றன என்பதையும் நினைவு கூரலாம்.

எனவே, சோனையனை மிலேச்சர் என்று கருதிக் கோயிலினுள் வைக் கவில்லை என்று சொல்வதைவிட, அந்தக் கோயிலின் அமைப்பு அப்படி என்பதுதான் பொருந்தும்.

மேலும், பல கோயில்களில், சோனைக் கறுப்பர், சோனை முத்து என்னும் பெயரில் கோயிலினுள்ளேயே இவர் இடம் பெற்றிருப் பதையும் நினைவுகூரலாம். எனவே இவரைக் கறுப்பரைப் போன்ற நிலையில், காவல் தெய்வமாகவே கருதவேண்டும்.

கறுப்பரை ஐயனாரின் படைத் தளபதி என்று கொண்டால், சோனை யனை அவருக்கு அடுத்தவராக — இரண்டாமவராக எண்ண இட முண்டு.

ஆகையால், சோனையன் என்னும் தெய்வம், கருமையான நிறத்தை யும், மழை பொழியும் கார் மேகத்தைப் போன்று இடைவிடாது கருணை யைச் சொரிந்து மக்களைக் காக்கும் இயல்பையும் கொண்டவர் என்று கொள்வதே பொருத்தமானதாக இருக்கும்.

* * *

இந்தச் சோனையன் சிலையும், மற்றும் சில சிலைகளும் முதலில் மண்ணாக இருந்து பின்னர் கற்சிலைகளாக மாற்றப்பெற்றுள்ளன.

நீண்ட காலத்துக்குப் பிறகு, புதுத் தோற்றத்தைப் பெற்றுப் பொலி வுடன் திகழும் ஓமக்காட்டு ஐயனார் கோயிலிலிருந்து மனநிறைவு டன் அடுத்த கோயிலுக்குப் புறப்படுகிறோம்.

பரவும் சொல்மாலை

1. ஐயனார்:

மெய்யான பக்தர்க்கு மேன்மைகள் சேர்த்திட
நெய்யாய் உருகுவார் நெஞ்சிலே நின்றிட
பொய்யான மாய்கை புறங்காட்டி ஓடிட
அய்யனார் காக்க அறிந்து.

2. ஆச்சியம்மன்:

அன்னையாய்த் தோன்றிய ஆச்சியாம் அம்மனே!
முன்னைத் தவத்தால் உனதடி போற்றுவோம்,
கண்ணை இமையெனக் காத்திடல் போலவே
வண்ணமுறக் காப்பாய் மகிழ்ந்து.

— புலவர்மாமணி மா. முத்துராமன்

3. சோனையன்:

எண்ணமெலாம் நிறைந்தவனே! எமதுகுறை தவிர்ப்பவனே!
எதிராரும் இல்லாய்! உன்றன்
கண்பார்த்தால் எங்கள் கலக்கம் குறையாதோ?
கருணைநில வாக வருவாய்!
மண்ணோடு வானுலகும் மன்னவன்உன் புகழ்சிறக்க
வல்லமைகள் கொண்ட ஐயா!
அண்ணலே சோனையா! ஆற்றல் மிகுந்தவரே!
அடியர்எமைக் காக்க வாராய்!

— அண. இராமநாதன், வேகுப்பட்டி

குறிப்பு விளக்கம்:

1. கள்ளழகர் திருக்கோயில் வரலாறு
2. சைவ சமய வளர்ச்சி — டாக்டர் மா. இராசமாணிக்கம்
3. டாக்டர் பெரி.இராமநாதன் செட்டியார், செவ்வூர் — நகரத்தார் குரல் செப் 94 கடிதத் தகவல்
4. சோனையன் கோயில் படைப்பு வரலாறு
5. அர்ச்சகர் சேவகப் பெருமாள் வேளார், நெற்குப்பை
6. ப. நாகப்பன், செவ்வூர்
7. சேவகப் பெருமாள் வேளார்
8. சேவகப் பெருமாள் வேளார்
9. ப. நாகப்பன்
10. சேவகப் பெருமாள் வேளார்
11. அபிதான சிந்தாமணி
12. தமிழ் மொழி அகராதி
13. முதலாயிரம் — பெரியாழ்வார் திருமொழி

உ

வழித்துணை வருவான் வள்ளிலிங்கப் பெருமான்

(49. வள்ளிலிங்க ஐயனார் திருக்கோயில், துவார்)

நல்லதங்காள் வரலாறு நாடறிந்த கற்பனைக் கதை.

மதுரையில் மன்னன் மகளாகப் பிறந்து, காசியரசனை மணந்து, 40 ஆண்டுக்கால மணவாழ்வில் ஏழு குழந்தைகளுக்குத் தாயாகி, ஏழையர்க்கு உதவியதால் ஏழையாகிய மன்னன் படும் மனத்துயர் தாங்காது, குழந்தைகளுடன் அண்ணன் இருப்பிடம் சென்று, அண்ணியின் கொடுமைகளுக்கு ஆளாகி, அண்ணன் இல்லாத நேரத்தில் வீட்டைவிட்டு வெளியேறிக் குழந்தைகளைப் பாழுங்கிணற்றில் தள்ளித், தானும் விழுந்து உயிரை மாய்த்துக் கொண்டவள் நல்லதங்காள். (கதை இன்னும் தொடர்கிறது என்றாலும், நமக்குத் தேவை இம்மட்டே!) இந்தக் கற்பனைக் கதையில் ஒரு சில மாற்றங்களுடன் அடைக்கம்மை அம்மையின் வாழ்க்கை அமைந்திருந்ததாகச் சிலர் விவரித்துள்ளனர்.[1]

அடைக்கம்மை அம்மை பூலாங்குறிச்சியில் பிறந்தவர் என்றும், துவாரில் வைரவன் கோயிலார் வீட்டில் பிறந்தவர் என்றும், இரு மாதிரியான தகவல்கள் கூறப்பெறுகின்றன. இருப்பினும் நற்சாந்துபட்டியில் இலுப்பைக்குடிக் கோயிலார் வீட்டில் திருமணமாகி, அங்கு வாழ்ந்து வந்தவர் என்பதில், எந்தக் கருத்து வேறுபாடும் காணப் பெறவில்லை. இதே போன்று, இரு குழந்தைகளுக்குத் தாயான பின்னரே, அவர் வீட்டை விட்டு வெளியேறினார் என்பதிலும் கருத்து வேறுபாடு இல்லை. நல்லதங்காளைப் போன்று, குடும்பத்தின் வறுமை காரணமாக அங்கிருந்து அவர் வெளியேறினார் என்றும், கணவன் முரடன், குடிகாரன் அதனால் அவன் தொல்லை தாங்காது வெளியேறினார் என்றும் வேறுபட்ட கருத்துகள் காணப்பெறுகின்றன.

அண்ணன் வீட்டுக்கு வந்து, அங்கு அண்ணி, தமக்கும், குழந்தைகளுக்கும் இழைத்த கொடுமை தாங்காது, துவாரில் வேளார் வீட்டில் பாத்திரம் வாங்கி வந்து,...............[2] அரைத்துக் குழந்தைகளுக்குக் கொடுத்துத் தாமும் உண்டு உயிர் துறந்திருக்கிறார். பின்னர், தேடி வந்தவர்களிடம், ''நான் இங்கு அணைந்து விட்டேன்; என்னை

வழிபடுங்கள்; உங்களைக் காப்பாற்றுகிறேன்'' என்னும் வழக்கமான அசரீரி!

அவரும், பிள்ளைகளும் மீளா நித்திரையில் ஆழ்ந்த பகுதி, அருகில் இருந்த ஊருணி எல்லாம், இப்போது காடு மண்டிப்போய் விட்டன வாம். அப்பகுதிக்குச் செட்டியூர் என்று பெயராம்.[3]

அவருடனான உறவு முறைக்கு ஏற்ப, அடைக்கம்மை அப்பத்தாள் — ஆயாள் — ஆச்சி என்று அவரவரும் அழைக்கின்றனர். அம்மை யார் பிறந்த — புகுந்த வீடுகளின் வாரிசுதாரர் அனைவருமே அவரை வழிபடுகின்றனர். புகுந்த வீட்டு வகையில் புள்ளி குறைவு என்றும், பிறந்த வீட்டுப் பக்கம் புள்ளிகள் அதிகம் என்றும் கூறப்பெறுகிறது.[3]

இந்த அம்மையார் குடிகொண்டுள்ள துவார் வள்ளிலிங்க ஐயனார் கோயிலுக்கு இப்போது வந்திருக்கிறோம்.

இந்த வள்ளிலிங்கம் (வள்ளிக்கிழங்கு தோண்டும்போது கிடைத்த இலிங்கம்) சிவலிங்க உருவில் இருப்பதால், இதனைச் சிவன் என் றும், கோயிலைச் சிவன் கோயில் என்றும் பொதுவாகக் கருதுகின் றனர்; கூறுகின்றனர். ஆனால் இந்தச் சிவலிங்க வடிவச் சிலையில் ஐயனாரே இருப்பதாகக் கருதியே, இரு பக்கத்திலும் பூரணை, புஷ் கலையை இடம்பெறச் செய்தும், வாகனமாக யானையை வைத்தும்



தங்குசீர் செல்வத் தான்தோன்றி நம்பி

வழிபட்டு வருகிறோம் என்கிறார் சாமியாடி ஐயா. இதனை உறுதிப் படுத்தும் வகையில், துவார் வள்ளிலிங்கத்தை ஐயனாராகத்தான் கொள்ளவேண்டும் என்று சிங்கம்புணரி சிவாச்சாரியாரும் கூறுகிறார்.[4]

* * *

பொன்னமராவதி — திருப்புத்தூர்ச் சாலையில், பொன்னமராவதியிலிருந்து 5 கி.மீ. தொலைவில் இடப்பக்கம் உள்ள பரியாமருது பட்டி விலக்கில் திரும்பிக் கிழக்கே சுமார் இரண்டரைக் கி.மீ. சென்றால், துவாரை அடையலாம். புதுக்கோட்டை — திருப்புத்தூர் டவுன் பஸ் இவ்வூரின் வழியே செல்கிறதாம்.

கோயிலுக்குக் கிழக்கிலும், தெற்கிலும் குளங்கள் இருக்கின்றன. கிழக்கில் உள்ள ஊருணியை நகரத்தார் ஒருவரே அழகுறச் சீர்செய்து கட்டிக் கொடுத்திருக்கிறார். வடக்கில், சிறிய — பெரிய வள்ளிக் கண்மாய்கள் உள்ளன.

சிவகங்கைத் தேவஸ்தானத்தைச் சேர்ந்த இக்கோயிலில், தற்போது (11.06.94) இராஜகோபுரத் திருப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மிகவும் பழைமை அடைந்துவிட்ட இக்கோயில் திருப்பணி செய்யப்பெற்றுத், திருக்குட நீராட்டு விழா விரைவில் நிகழும் என நம்பப்பெறுகிறது. துவார் வள்ளிலிங்கம் நற்பணி டிரஸ்ட், இக் கோயிலுக்கு அடிமைப்பட்ட நகரத்தார்களிடம் புள்ளிவரி வசூலித்தும், நகரத்தார்கள், மற்றும் ஏனையோரிடமிருந்து நன்கொடைகள் வசூலித்தும், இந்தத் திருப்பணியை மேற்கொண்டு வருகிறது.

இதற்கு முன்னர் ஒரே ஒருமுறை திருக்குட நீராட்டு நடைபெற்றிருக்கிறது என்றும்,[5] 65 ஆண்டுகளுக்கு முன்னர் இது நடந்திருக்கலாம் என்றும்,[6] சுமார் 80 ஆண்டுகளுக்கு முன்னர், பூலாங்குறிச்சி நகரத்தார் குடும்பத்தினர், விமானங்கள் அமைத்துக், கும்பாபிஷேகம் செய்தனர் என்றும்[7] கூறப்பெறுகிறது.

ஆவிணிப்பட்டி, இராங்கியம், கடியாபட்டி, குழிபிறை, கொப்பனாபட்டி, சிராவயல், சொக்கனேந்தல், புதுவயல், பூலாங்குறிச்சி, விராமதி, வேகுப்பட்டி நகரத்தார்களும், இராமச்சந்திரபுரம், இராயவரம், வி.இலட்சுமிபுரம், கண்டரமாணிக்கம், குருவிக்கொண்டான்பட்டி, நற்சாந்துபட்டி, நேமத்தான்பட்டி, பள்ளத்தூர், பனையப்பட்டி, புதுப்பட்டி, விரையாச்சிலை, வேந்தன்பட்டி ஆகிய ஊர்களின் இலுப்பைக்குடிக் கோயிலாரும், கீழச்சிவற்பட்டி, வலையபட்டி ஆகிய ஊர்களின் மாத்தூர் உறையூர்ப் பிரிவினரும், கண்டவராயன்பட்டி இளையாற்றங்குடிக் கழனிவாசற் பிரிவினரும், சொக்கலிங்கம்புதூர் வைரவன் கோயில் நகரத்தாரும் இக்கோயிலைக் குலதெய்வக் கோயிலாகக் கொண்டுள்ளனர் என்றும், இவர்களில் இங்கு குறிப்பிடப்பெற்ற கோயில் பிரிவினரைத் தவிர்த்துப் பிள்ளையார்பட்டி, இரணிக்கோயிலாரும் உள்ளனர் என்றும், வினாத்தொகுதிக்கு விடையிறுத்தோர் கொடுத்துள்ள தகவல்கள்வழி தெரியவருகிறது. மேலே உள்ள ஊர்களோடு, காரைக்குடி, நெற்குப்பை, மேலைச்சிவபுரி நகரத்தார்களும் இங்கு வழிபடுகின்றனர் என்றும் தெரிகிறது.[8] இந்த நகரத்தார்களின் எண்ணிக்கை 2000 புள்ளிகளாக இருக்கக்கூடும்[9] என்று சிலர் கூறியுள்ளபோதிலும், நகரத்தார் குல தெய்வக் கோயில்களில் இங்குதான்

புள்ளி அதிகம்; சுமார் 4200 புள்ளிகள் இக்கோயிலை வழிபடு கின்றனர் என்னும் கருத்தும்[10] நிலவவே செய்கிறது. நகரத்தார் களோடு, ஆசாரிகளும், யாதவர்களும் இக்கோயிலுக்கு அடிமைப்பட் டிருக்கின்றனராம்.

* * *

கோயிலுக்கு வெளியே, சந்நிதிக்கு எதிரில் பலிபீட உருவில் முன் னோடியும், வடகிழக்கில் சோனையனும் உள்ளனர். இராஜகோபுர வேலை நடைபெற்றுக்கொண்டிருப்பதால், கவனமாக உள்ளே செல்கி றோம்.

இராஜகோபுரத்துக்கும் மகா மண்டபத்துக்கும் இடையில் புதிதாக மண்டபம் ஒன்று கட்டப்பெற்றுள்ளது. இதில் உள்ள நாலுகால் மண்ட பத்தில் யானை வாகனமும், பலிபீடமும் காணப்பெறுகின்றன.

இதைக் கடந்து சென்றால், 16கால் மண்டபம் ஒன்று உள்ளது. இங்கு இரு தூண்களில் சின்ன வள்ளியப்ப செட்டியார் (பெரிய சிலை), பெரிய வள்ளியப்ப செட்டியார் (சிறிய சிலை) என்னும் இருவர் சிலைகள் வடிக்கப் பெற்றுள்ளன.

உலகம்பட்டிப் பக்கமிருந்து காரைக்குடியில் உளுந்து வியாபாரம் செய்த சகோதரர்கள் இவர்கள். இறையருளால் வியாபாரத்தில் நிறைய இலாபம் கிடைக்கவே, இம்மண்டபத்தை இவர்கள் உருவாக்கியிருக் கின்றனர். மண்டபத்தைக் கட்டவேண்டும் என்ற சிறியவரின் பெரிய உள்ளத்துக்கேற்ற பெரியசிலை; வேண்டாம் என்ற பெரியவரின் குறுகிய உள்ளத்துக்கேற்ற சிறிய சிலை! அருகிலுள்ள கண்மாய்களும், இவர்கள் பெயர்களாலேயே வழங்கி வருகின்றனவாம்.[11] இந்த மண்டபத்தில் சுதை வேலைப்பாடான இரு துவார பாலகர்களும் உள்ளனர்.

கருவறை நிலையில் நம் இடப்புறம் சிறிய விநாயகர், வலப்புறம் சிறிய ஐயனார் உருவங்கள் பொறிக்கப் பெற்றுள்ளன. இவற்றுக்கே முதல் வழிபாடு நடைபெறுகிறதாம்.[12]

மூலவர், நாம் முன்னர் குறிப்பிட்டவாறு சிவலிங்கத் திருமேனி. இரு புறமும் பூரணை, புஷ்கலை உள்ளனர். முதலில் இங்கு ஐயனார் திருவுருவமே இருந்தது. அவருக்கே முதல் வழிபாடு, தேர்த் திரு விழாக்கள் நடைபெற்று வந்தன. சுயம்பு (இலிங்க) ஐயனார் வந்த தும், 'பழையன கழிதல், புதியன புகுதல்' என்பதற்கேற்பப், பழைய ஐயனார் தம்பதியரைக் கோயிலின் வடக்குப் பிராகாரத்தில் உள்ள பைரவர் சந்நிதிக்கு அருகில் குடியமர்த்திவிட்டனர்.

இந்த வள்ளிலிங்க ஐயனாரை வள்ளி(ய)க்காட்டு ஐயனார் என்றும் அழைக்கின்றனர்; வள்ளிலிங்கம் என்பதுதான் வள்ளியக்காடு என்று மருவியிருக்கிறது என்கின்றனர்.[13] மருவியிருக்கிறது என்று சொல் வதைவிட, முன்பு ஐயனாராக இருந்தபோது வள்ளிக்காட்டில் குடி கொண்டிருந்தவராகையால், வள்ளிக்காட்டு ஐயனார் என்னும் பெயர் (ஓமக்காட்டு ஐயனார் என்பது போன்று) இருந்திருக்கலாம்; சுயம்பு மூர்த்தி வந்ததும், அவர் இலிங்க வடிவில் இருப்பதால், வள்ளிலிங் கம் என்று பெயர் மாறியிருக்கலாம் என நினைக்கவும் இடமிருக் கிறது அன்றோ? இவருக்கு வள்ளிநாயகம் ஐயனார் என்னும்பெய ரும் உண்டு எனத் தெரிகிறது.[14]

முன்பு இக்கோயிலில் உற்சவர் இருந்த காலத்தில், வைகாசி விசா கத்தை ஒட்டிப் பத்துநாள் தேர்த்திருவிழா நடைபெற்று வந்தது. சில ஆண்டுகளுக்கு முன்னர், அந்த ஐம்பொன் உற்சவத் திருமேனிகள் களவு போனதைத் தொடர்ந்து, அவை நிறுத்தப்பெற்றுவிட்டன. சிறிய வையாக இருந்த விநாயகர், இரு அம்பிகையர் சிலைகளைத் திருடர் கள் திருடிச் சென்று விட்டனர். ஐயனார், பத்ரகாளி ஆகிய சிலை கள் பெரியவையாக இருந்ததால், அவர்களால் தூக்க இயலவில்லை. இறையருளால், திருடியவர்கள் தண்டிக்கப்பெற்றுத் திருட்டுப்போன எழுந்தருளிச் சிலைகள் மீட்கப்பெற்று, இப்போது நெற்குப்பைச் சிவன் கோயிலில் வைக்கப்பெற்றுள்ளன. (அவற்றைப் படம்பிடிக்கச் சிவ கங்கைத் தேவஸ்தானத்துக்கு எழுதிக்கேட்டும், அனுமதி தர மறுத்து விட்டனர்!)

தான்தோன்றி (சுயம்பு) நம்பியை — மூலவரை வணங்கிவிட்டுத், தெற்குப் பிராகாரத்துக்குச் செல்கிறோம். சுற்றுச்சுவரை ஒட்டி ஏராள மான மண் சிலைகள் உள்ளன. அரச குடும்பத்தினரின் (இவர்களைப் பின்னர் பார்க்கப் போகிறோம்.) பல்லக்குத் தூக்கிகள் (அரைக்காசு உத்தியோகமானாலும் அரசாங்க உத்தியோகம் என்பார்கள்; அரச ரின் பல்லக்குத் தூக்கிகளுக்கும் கிடைத்திருக்கிற பாக்கியத்தைப் பார்த் தீர்களா?), யானை மேல் தீர்த்தக்கரை ஐயனார், யானைமேல் அங்கு தன், ஆஞ்சநேயர் ஆகியவற்றுடன், சிற்பியின் கவினுறு கலை வண் ணத்தைக் காணமுடியாவிட்டாலும், அபூர்வமான — மூன்று முகங் களைக் கொண்ட சிலை ஒன்றும் காணப்பெறுகிறது.

அன்னவாகனம், வலது கீழ்க்கையில் ஜபமாலை, இடது கீழ்க்கை யில் சுவடி, வலது மேற்கையில் தாமரை மலர், இடதுமேற்கையில் பூங்கொத்து (?) — பிரமாவை (நான்முகனை)ப் போன்று தோன்று கிறதே என்று கேட்கிறோம்; இல்லை, இது திரிமூர்த்தி சிலை என் கிறார் சாமியாடி ஐயா.

சுத்தப்பிரமம், படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிற் காகச் சகளீகரித்த (உருவெடுத்த), பிரமா, விஷ்ணு, உருத்திரன் என் னும் மூன்று திருமேனிகளை ஒன்றாகக் கொண்டதே திரிமூர்த்தி உரு வம்.[15] ஆனால் முகங்களிலோ, கரங்களிலோ அந்த மும்மூர்த்தி களுக்கு உரிய அமைப்பைக் காணமுடியவில்லை.

''சரி, இச்சிலை பிரமாவே என்று வைத்துக் கொள்வோம். ஐந்து முகங்களைக் கொண்ட பிரமன், சிவமூர்த்தியால் ஐந்தாவது தலை கிள்ளி எறியப்பெற்ற பின்னர், நான்கு தலைகளைக் கொண்டிருப் பதாக அன்றோ கேள்விப்பட்டிருக்கிறோம்; இங்கு மூன்று முகங் கள்தாமே உள்ளன?''

நியாயமான கேள்விதான். மூன்று முகங்களைக் கொண்ட பிரமனின் கற்சிலை ஒன்று, கொடுமுடி என இப்போது வழங்கப் பெறும் திருப் பாண்டிக்கொடுமுடி — பாடல் பெற்ற தலத்தில் காணப்பெறுகிறது. தவம் செய்து, அங்குள்ள பெரியவன்னிமரத்தையே ஒரு முகமாகப் பெற்றார் என்பது புராணம்.[16] அப்படி ஓர் அமைப்பில், பிரமா தான் இங்கு இடங்கொண்டிருக்கிறார் என்று கொள்ளலாம் அன்றோ? வேளார்கள், தங்களைப் பிரமபுத்திரர்கள் என்று கூறிக் கொள்வ தற்கும் அதுதானே பொருந்தும்?

வடக்குப் பிராகாரத்தில்தான் முக்கியமான சந்நிதிகள் உள்ளன. வட மேற்கு மூலையை ஒட்டி உள்ள சந்நிதியில், முத்துக் கறுப்பர் இடம் பெற்றிருக்கிறார். பலிபீடம் ஒன்றும் அங்கு காணப்பெறுகிறது. அடுத்துள்ள சந்நிதியில் மண்சிலைகளான கன்னிமார் எழுவர், சின்னராஜா (இளவரசராக இருக்கலாம்) ஆகியோர், வெளியில் தெரியும் வகையிலும், குறுகிய வாயிலைக் கொண்ட மூடப்பெற்ற சந்நிதியினுள், மேற்கு நோக்கி இராமநாதபுரம் மன்னரும் (இவரை இராஜா தெய்வம் என்கின்றனர்), அரசியும், பாரம்பரிய உடைகளி லும் காணப்பெறுகின்றனர்.

இராஜபார்வை(திருஷ்டி) கெடுதலை ஏற்படுத்தும் என்பது, பாமர மக்களிடையே இன்றளவும் நிலவும் ஒரு பொதுவான கருத்து. அதனால் கூடியவரை அரச தம்பதியரைக் காணாதே இருப்பார்களாம். அர சரும், அத்தி பூத்தாற்போலத்தான் பட்டணப் பிரவேசம் மேற்கொள் வார். அந்த அடிப்படையிலேயே, கோயிலுக்கு மேற்கே உள்ள ஊருக்கு, மேற்கு நோக்கியுள்ள அவர் திருமுகத்தால் ஊறு நேரும் என்று எண்ணியே, அறையினுள் அவர்களை ''மறைத்து'' வைத்துள்ளன ராம்![17]

எங்கோ ஓரிடத்தில் உயிர்துறந்த அரசர், அரசி, இளவரசர், அரசி யின் தோழியர்|தாதிப்பெண்கள், பல்லக்குத் தூக்கிகள் ஆகிய அனை வரும் இங்கு சிலை வடிவில் குடியேறிவிட்டனர்! இந்த இராஜா தெய்வமே தம்மீது ஆவேசித்து அருள்வாக்குக் கூறுவதாகச் சாமியாடி ஐயா கூறுகிறார்.

இதற்கு எதிரே கிழக்குப் பார்த்த சுப்பிரமணியர் சந்நிதி; வள்ளி — தெய்வயானையுடன் அவர் இங்கு அருள் பாலிக்கிறார். அதற்கு முன்னதாக, மூலவர் கோயில் சுவருடன் இணைந்து அடைக்கம்மை அம்மையின் சந்நிதி உள்ளது.

இடக்கையில் குழந்தையை ஏந்திய வண்ணம், பீடம் ஒன்றின்மீது வடக்கு நோக்கி நிற்கிறார் அம்மையார். (இடுப்பில் ஒரு குழந்தை யும், காலடியில் ஒரு குழந்தையும் உள்ள சிலை, துவாரிலும், படம் நற்சாந்துபட்டிப் படைப்பு வீட்டிலும் இருப்பதாகக் கூறப்பெறுவ தற்கு[18] ஆதாரத்தை இங்கு காணமுடியவில்லை; நற்சாந்துபட்டி யில் உள்ள படம் எப்படி இருக்கிறதோ தெரியவில்லை.) புன்முறு வல் தவழும் முகம்; நீண்டு தொங்கும் காதுகள்; தொங்கும் வலக் கரம்; பிள்ளையை இடுப்பில் ஏந்தியதற்கு ஏற்பச் சற்றே வலப்புறம் சரிந்த உடல்.

சமுகக் கொடுமைகளுக்குப் பெண்கள் பலியாவதை, உங்களைப் போன்ற உத்தமியர் தடுத்து நிறுத்தி, ஆண்களைப் போன்று பெண் களும் வாழ உதவவேண்டும் என்று, அம்மையாரிடம் அடிபணிந்து வேண்டுகிறோம்.

இந்த அம்மையாரை வழிபடும் நகரத்தார்கள், பொங்கல் வைத்துப் பள்ளயம் போட்டு, அர்ச்சனை செய்து வழிபடுவார்கள்; இந்தச் சந் நிதியில் (உயிர்ப்பலி இல்லாத) சுத்த பூசையே நடைபெறுகிறது என்கிறார் சாமியாடி.

அடைக்கம்மை அப்பத்தாள் படைப்புக்கு ஒரு வாரம் முன்னர், அல்லது திங்கட்கிழமை, கோயிலில் அப்பத்தாளுக்கு அபிஷேக — ஆராதனைகள் செய்து, பச்சரிசி — சர்க்கரைப் பொங்கல்கள் வைத்து வழிபட்டுச் செல்வார்களாம். மேலும், இலுப்பைக்குடி நகரத்தார் வீட்டுத் திருமணங்களுக்கு முதல்நாள் இங்கு வந்து, ஐயனார் — கறுப்பர் — அப்பத்தாளுக்கு வழிபாடுகள் செய்து, இங்கிருந்து திருநீறு, மஞ்சள், குங்குமம் கொண்டு சென்று, மணமக்களுக்குக் கொடுத்தும், மாங்கலியத்தில் வைத்தும் திருமணம் செய்வார்களாம்.[19]

பத்திரிகை அனுப்பிப் பணம் கொடுத்து வருவோருக்குத் திருமணத்தன்று, அர்ச்சகர் மாலை கொண்டு சென்று கொடுத்து வருவதும் உண்டாம். ஆண் குழந்தை பிறந்தால் பங்காளிகளைக் கோயிலுக்கு



அடைக்கலம் புகுந்த அம்மையார்

அழைத்து வந்து, கிடாய் வெட்டிப் பூசை கொடுக்கும் வழக்கமும்
இக்கோயிலில் நிலவுகிறது.[20] சிலர் அடைக்கம்மை அப்பத்தாளுக்கு
ஏழு பானை பொங்கல் வைத்து, மற்ற தெய்வங்களுக்கு உயிர்ப்பலி
கொடுத்துப் பெயர் கூப்பிட்டுச் செல்வதும் உண்டு.[21]

சொக்கலிங்கம்புதூரின் வைரவன் கோயில் நகரத்தார்கள் தைமாதம்
3 ஆம் நாள் இங்கு வந்து வழிபடுகின்றனர். கண்டர மாணிக்கம்
இலுப்பைக்குடி நகரத்தார்கள், மாசி மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை
இங்கு வந்து ஒருநாள் வழிபாடு செய்கின்றனர்.[22]

நகரத்தார் அல்லாதார் திங்கள் — வெள்ளிக்கிழமைகளில் இக்
கோயிலுக்கு அதிக அளவில் வருகின்றனர்.

இங்கு வழக்கமாகக் குழந்தைகளுக்கு முடி இறக்குவதோ, தொட்
டில் கட்டுவதோ இல்லை என்று சாமியாடி கூறினாலும், நேர்ந்து
கொண்டவர்கள் அடைக்கம்மை அப்பத்தாள் சந்நிதியில் தொட்
டில் கட்டுவது உண்டு என்று கூறுவோரும் உளர்.[23]

தைப்பொங்கல், மகாசிவராத்திரி ஆகியவை இங்கு சிறப்பாகக்
கொண்டாடப்பெறுகின்றன.

வலையபட்டிப் பங்காளிகள், தைப்பொங்கலன்று வீடுகளிலும்,
அடைக்கம்மை அம்மையார் சந்நிதியிலும் சர்க்கரைப் பொங்கல் வைப்
பதைத் தவிர்த்து, மற்ற நாட்களில் வீடுகளில் சர்க்கரைப் பொங்கல்
இடுவதோ, தயாரிப்பதோ இல்லையாம். கோயிலில் பொங்கும் சர்க்
கரைப் பொங்கலையும், வீட்டுக்கு எடுத்துச் செல்லமாட்டார்களாம்.[24]

மூலவர், அம்மையார், கறுப்பர் பெயர்களை ஒட்டி, வள்ளியப்பன்,
அடைக்கலவன், அடைக்கம்மை, முத்துக்கறுப்பன், கறுப்பையா என்
னும் பெயர்களை, இக்கோயிலைக் கும்பிடும் நகரத்தார் வீடுகளில்
பேரளவில் காணலாம்.

கோயிலில் உள்ள அடைக்கம்மை அம்மையாரின் சிலையைப் படம்
பிடித்து, வீட்டில் வைத்து வழிபடுவது சிறப்புடையதாகத் தெரிய
வில்லை என்று கூறப்பெற்றபோதிலும்,[25] அம்மையாரை எல்லோ
ரும் அறிந்து கொள்ளும் பொருட்டுப் படம்பிடித்தேன்; இப்புத்த
கத்திலும் இடம் பெற்றுள்ளது. தவறாயிருப்பின், சேய் செய்த பிழை
யைத் தாய் பொறுத்தருளட்டும்!

வடக்குச் சுவரை ஒட்டி, மதுரைவீரன், பொன்னி (பொம்மியாக
இருக்கவேண்டும்), வெள்ளையம்மா, தண்டியத்தேவன் ஆகியோரின் சந்
நிதியும், அடுத்து, நாம் முதலில் குறிப்பிட்ட பழைய — சிறிய ஐய
னார் — அம்பிகையர் — யானை வாகனம் ஆகியவையும், பைரவர்
சந்நிதியும் உள்ளன.

* * *

மின்சாரக் கட்டணம் செலுத்துதல், கோயிலைப் பராமரித்தல் போன்ற
வற்றை நகரத்தார்களே மேற்கொண்டு வருகின்றனர் என்று கூறும்
சாமியாடி ஐயா, இவற்றுக்கெனச் சிறியதொரு தொகையை அரச
குடும்பத்தினர் கொடுக்க முன்வந்ததையும், நகரத்தார்கள் ஏற்றுக்
கொள்ள மறுத்துவிட்டனர் என்கிறார். அதுதானே நகரத்தார்களின்
தனித்தன்மை! தனிச்சிறப்பு!

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

கங்கைநீர் அரிசிற் கரைஇரு மருங்கும்
கமழ்பொழில் தழுவிய கழனித்,
திங்கள்நேர் தீண்ட நீண்டமா ளிகைசூழ்
மாடநீ டுயர்திரு வீழித்
தங்குசீர்ச் செல்வத் தெய்வத்,தான் தோன்றி
நம்பியைத், தன்பெருஞ் சோதி
மங்கைஓர் பாகத்(து) என்அரு மருந்தை
வருந்திநான் மறப்பனோ இனியே.

திருச்சிற்றம்பலம்

— 9ஆம் திருமுறை,
சேந்தனார்

குறிப்பு விளக்கம்:

1. இராம. அடைக்கலவன்,வி.இலட்சுமிபுரம்; சாமியாடி இராமையா வேளார், துவார்; ஏ.என்.சிதம்பரம், விரையாச்சிலை; பெயர் குறிப்பிடாத இலுப் பைக்குடி சூடாமணிபுரமுடையார் ஒருவர்
2. வேண்டுமென்றே விடுபட்டுள்ளது
3. சாமியாடி இராமையா வேளார்
4. பெரி.சே. சின்னையா சிவாசாரியார்
5. ஏ.என்.சிதம்பரம்
6. திருமணச்சோலை பழனியப்பன், சொக்கலிங்கம்புதூர்
7. சாமியாடி இராமையா வேளார்
8. இராமையா வேளார்
9. திருமணச்சோலை பழனியப்பன்; ஆர்.எம். மாணிக்கம்,வி. இலட்சுமிபுரம்
10. சுப. முத்துக்கறுப்பன், வலையபட்டி
11. இராமையா வேளார்
12. இராமையா வேளார்
13. சுப. முத்துக்கறுப்பன்
14. அ. வல்லநாட்டான், கண்டவராயன்பட்டி — சிவன் கோயில் திருக்குட நீராட்டு மலரிலிருந்து
15. தமிழ் மொழி அகராதி
16. திருமுறைத் தலங்கள்
17. இராமையா வேளார்
18. இராம. அடைக்கலவன்
19. பெயர் குறிப்பிடாத அன்பர்
20. எஸ்.எம். முத்தையா, கீழச்சிவற்பட்டி
21. இராமையா வேளார்
22. திருமணச்சோலை பழனியப்பன்; எஸ்.எம். முத்தையா; எம். பழனியப்பன்
23. திருமணச்சோலை பழனியப்பன்
24. எஸ்.எம். இராமநாதன், வலையபட்டி
25. ஏ.என். சிதம்பரம்

உ

மற்றாரும் தன்னொப்பில்லா மங்களக்காட்டு ஐயனார்

(50. மங்களக்காட்டு ஐயனார் திருக்கோயில், ஏனாதி, மேலைச்சிவபுரி)

அடைக்கம்மை அம்மையார் குடிகொண்டுள்ள வள்ளிலிங்க ஐயனார் கோயிலிலிருந்து அடுத்த கோயிலுக்கு வருகிறோம்; இங்கும் ஓர் அடைக் கியாத்தாள் குடிகொண்டிருக்கிறார். அவரையும், ஏனாதிக் கறுப்ப ரையும், சிறுகூடல்பட்டி வைரவன் கோயில் பெரிய வகுப்பினர் குலதெய்வங்களாகக் கொண்டு வழிபடுகின்றனர்.

திருப்புத்தூரிலிருந்து பொன்னமராவதி செல்லும் இரு வேறு சாலை களில், இவ்விரு கோயில்களும் அமைந்திருக்கின்றன.

திருப்புத்தூரிலிருந்து நெற்குப்பை சென்று, அங்கிருந்து பரியாமருது பட்டிக்கு அருகிலுள்ள துவார் வள்ளிலிங்கம் கோயிலுக்குச் சென்று அடைக்கம்மை அம்மையாரை வழிபட்டோம்.

நெற்குப்பையிலிருந்து வேந்தன்பட்டி வழியாகப் பொன்னமராவதி செல்லும் மற்றொரு சாலையில், வேந்தன்பட்டியை அடுத்துள்ள மேலைச்சிவபுரியை ஒட்டியிருக்கும் ஏனாதி கிராமத்தில் இருக்கிறது, மற்றோர் அடைக்கியாத்தாள் குடிகொண்டுள்ள மங்களக்காட்டு ஐய னார் கோயில்.

வேந்தன்பட்டியில், புகழ்பெற்ற நெய் நந்தியை வழிபட்டுக் கொண்டு மேலைச்சிவபுரி வழியாக ஏனாதிக்குச் செல்கிறோம்.

தமிழ்ப்பயிர் வளர்த்த நிலம் மேலைச்சிவபுரி. சன்மார்க்க சபை வழி யாகத், தமிழ்ப் பெரும் புலவர்களை உருவாக்கி — ஆதரித்து — வளர்த்துவிட்ட மகிமை வாய்ந்த மண் அது!

* * *

மேலைச்சிவபுரி ஊரின் எல்லையில் ஆறு ஒன்று இருக்கிறது. இங்கு, மதுரையைப் போன்று, ஆவணிமூலத் திருவிழா மிகச்சிறப்பாக நடந்த துண்டு. அப்போது இந்த ஆற்றில்தான் பிட்டுக்கு மண் சுமக்கும் திரு விழா நடைபெறும். ஆற்றுநீர் பெருகிக் கரை உடைந்தபோது, அதை அடைக்கத்தான், ஆலவாய் அண்ணல் மண் சுமந்தார். இப்போது இங்கு, மண்ணை வெட்டிப் போட்டுக் கரையை அடைக்கவேண்டிய



சிரித்த முகங்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே?

தில்லை; எங்கேனும் நீர் தென்படுகிறதா என்பதை அறியத்தான், மண்ணைத் தோண்ட (வெட்ட) வேண்டும்!

இந்த ஆற்றை ஒட்டித்தான் ஏனாதி என்னும் கிராமம் இருக்கிறது. தொன்மைத் திருநீற்றுத் தொண்டில் நிலைபெற்று நின்ற ஈழகுலச் சான்றோர், ஏனாதிநாத நாயனார், நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர். அவர் பெயரைத் தாங்கிய ஊர் (ஏனாதி), (மேலைச்) சிவ புரியை ஒட்டி இருப்பது பொருத்தமானதுதானே!

பொன்னமராவதிக்குச் செல்லும் சாலை ஓரத்திலேயே, நாம் தேடி வந்திருக்கும் ஏனாதி மங்களக்காட்டு ஐயனார், கோயில் கொண்

டிருக்கிறார். ஒரு புறம் மிகப் பெரிய ஏனாதிக் கண்மாய்; மறுபுறம் வயல்கள். இவ்வழியே, பொன்னமராவதியிலிருந்து திருப்புத்தூர், மதுரை செல்லும் பேருந்துகள் நிறையச் செல்கின்றன.

* * *

சிறிய, அழகிய கோயில். முதல் குடமுழுக்கு நடைபெற்று 40 ஆண்டு களுக்குப் பின்னர், 1993ல் இரண்டாவது திருக்குட நீராட்டு நடை பெற்றிருக்கிறது.

பிள்ளையார் கோயிலும், திருச்சுற்றுச் சுவரும், காளியாத்தாள் மண்டபமும் மிகவும் சேதமுற்று இருந்ததால், நகரத்தார்கள் அவற் றைச் செப்பனிட்டுத் திருப்பணி செய்து குடமுழுக்குச் செய்வித்திருக் கின்றனர்.

சேமங்குதிரையோ, நுழைவாயிலின்மேல், மாடத்தில் சுதைச் சிற்பங் களோ எதுவுமே இல்லாத சாதாரண வாயில் வழியாகவே கோயி லினுள் செல்கிறோம்.

கருவறையையும், பெரிய (ஏனாதிக்) கறுப்பர் சந்நிதியையும் இணைத்து ஓர் ஒட்டுக்கூடம். மூலவர் கருவறை, கறுப்பர் சந்நிதி இரண்டும் கல் திருப்பணி. கருவறையின் முன் உள்ள மகாமண்டபத்தில் யானை வாகனமும், பலிபீடமும் உள்ளன. கருவறை வாயிலின் இருபுறமும் துவார பாலகர் நிற்க, வலப்புறம் விநாயகர் அமர்ந்திருக்கிறார்.

கருவறையில், அழகிய ஐயனார் தனித்து அமர்ந்திருக்கிறார். இரண் டாவதாக வந்ததால், இவர் இவ்வளவு எழிலுடன் திகழ்கிறாரோ? அருள் சுரக்கும் அமுத விழிகள்; புன்னகை தவழும் பொலிவான உதடுகள்; பார்த்துக்கொண்டே இருக்கத் தூண்டும் பரவசமான தோற் றம். 'எதற்கும் அஞ்சாதே; எல்லாம் மங்களமாக இருக்கும்' என்று கூறுகிறாரோ?

அந்த நம்பிக்கையுடன், கருவறையின் இடப்புறம், விமானம் இல் லாத கூடத்தில் இருக்கும் ஆத்தாள் இருவரைக் காண்கிறோம். திரி சூலத்தின் அருகில் அடைக்கியாத்தாள்; அவருக்கு இடப்புறம் காளி யாத்தாள்.

நிறைமாத கர்ப்பிணியான அடைக்கியாத்தாள், கண்மாய்க்குள் நடந்து வந்து கொண்டிருந்தபோது கல்லாய்ச் சமைந்து விட்டார்[1] என்பவ தைத் தவிர, வேறு எந்தத் தகவலையும் அறிந்து கொள்ள முடிய வில்லை. அவரை இங்கு குடியிருத்திச், சிறுகூடல்பட்டி நகரத்தார் கள் ஆடி மாதத்தில் இங்கு வந்து அவரையும், கறுப்பரையும் வழி பட்டுப், படைப்புக்கு இங்கிருந்து தீர்த்தம் கொண்டு செல்கின்றனர்.

கோயிலின் தென்புறத்தில், பெரிய (ஏனாதிக்) கறுப்பர் சந்நிதி, விமானத்துடன் அமைந்திருக்கிறது. அதன் வலப்புறத்தில் சின்னக் கறுப்பரைக் குறிக்க வேலாயுதம் ஒன்று மட்டும் உள்ளது.

கோயிலின் தென்மேற்கு மூலையில், விநாயகருக்கான தனிக் கோயில். விநாயகர், மூஷிஹம், பலிபீடம், சந்நியாசி, நாகர் எல்லாம் இங்கு இடம் பெற்றுள்ளன.


கறுப்பர் சந்நிதிக்கும், விநாயகருக்கும் இடையில், தென்சுற்றுச் சுவர் ஓரமாகப் பழைய ஐயனாரும், யானை வாகனமும் குடியமர்த்தப்

பெற்றுள்ளன. ஐயனார் மெழுகு பொம்மை போன்று காணப்பெறு கிறார்.

* * *

சிறுகூடல்பட்டி நகரத்தார்களுடன், மேலைச்சிவபுரி, வலையபட்டி, வேந்தன்பட்டி நகரத்தார்களும் (மொத்தம் சுமார் 75 புள்ளிகள்)[2] பிடாரம்பட்டி அம்பலகாரர்களும் இங்கு வந்து வழிபடுகின்றனர்.

இங்கு வெள்ளிக்கிழமைகளில் மட்டும் ஒருகாலப் பூசை நடைபெறு வதால், மற்ற நாட்களில் கோயிலுக்கு வருவோர், வேந்தன்பட்டிக்கு அப்பாலுள்ள வார்ப்பட்டிலிருந்து அர்ச்சகரான வேளாரை அழைத்து வரவேண்டும். (திருக்குட நீராட்டு முடிந்து மண்டலாபிஷேகம் நடை பெற்ற நாட்களில் மட்டும் ஒவ்வொருநாளும் ஒருநேரப் பூசை நடை பெற்றது. பின்னர், வழக்க நிலைக்குத் (வாரம் ஒருநாள்) திரும்பி விட்டது!)[3]



மங்கல வாழ்வளிக்கும் மங்களக்காட்டு ஐயனார் கோயில்

நிலமானியம் இருந்தும்கூடப் படித்தரத்துக்குப் போதுமான வருமானம் இல்லை என்று வேளார்கள் கூறிய காரணத்தால், பங்காளிகள் பேசி ஒரு முடிவு செய்து, மாதம் ஒன்றுக்கு முந்நூறு ரூபாய் சம் பளமும், படித்தரத்துக்குத் தனியாகவும் கொடுத்து வருகிறார்கள்.[4] ஆனால், நகரத்தார்கள் சம்பளமாக மாதம் இருநூறு ரூபாய் கொடுக் கிறார்கள் என்றே அர்ச்சகர்[5] கூறுகிறார்.

இது நகரத்தார் கோயிலாகத்தான் இருக்கவேண்டும் என்று அர்ச்சகர் கருதுகிறார். இது நகரத்தார் கோயில்தான்; அதை மெய்ப்பிக்கத், தக்க ஆவணங்கள் தற்போது கையில் இல்லாததுதான் ஒரு குறை பாடு என்பது, நகரத்தார்களின் கூற்று. பங்காளிகள், ஆண்டு ஒன்றுக்கு ரூ 100 புள்ளிவரி வசூலித்துக் கோயிலை நிர்வகிக்கின்றனராம்.[6]

நகரத்தார் வீடுகளில் நடைபெறும் திருமணங்களுக்கு இங்கிருந்து மாலை கொண்டு செல்லப்பெறுவது உண்டு. குழந்தை பிறந்தால் முடி இறக்குவது, பெயர் கூப்பிடுவது எல்லாமே இங்குதான்.

சிறுகூடல்பட்டி நகரத்தார் பெருமகனார், தாமே தேடிவந்து பல தக வல்களைத் தெரிவித்ததைத் தவிர, அர்ச்சகரிடமிருந்து அதிகமாக ஒன்றையும் அறிந்து கொள்ள இயலவில்லை. கேட்டவற்றுக்கெல் லாம், அவர் கூறிய ஒரே மறுமொழி, ''அதெல்லாம் நமக்குத் தெரி யாது'' என்பதுதான்.

விரக்தியடைந்த நிலையில் அப்படிக் கூறினாரா?

''அதெல்லாம் நமக்குத் தெரியாது!''

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

தான்ஒரு காலம் தனிச்சுட ராய்நிற்கும்,
தான்ஒரு கால்சண்ட மாருத மாய்நிற்கும்,
தான்ஒரு காலம் தண்மழை யாய்நிற்கும்,
தான்ஒரு காலம்தண் மாயனு மாமே.

திருச்சிற்றம்பலம்

— 10ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

1. எஸ். இராமசுவாமி செட்டியார், சிறுகூடல்பட்டி
2. எஸ். இராமசுவாமி செட்டியார்
3. ஆர். சிவலிங்க வேளார், வார்ப்பட்டு
4. எஸ். இராமசுவாமி செட்டியார்
5. ஆர். சிவலிங்க வேளார்
6. எஸ். இராமசுவாமி செட்டியார்

உ

அஞ்சேல்என்று அருள்செய்யும் அழகியநாச்சி அம்மன்

(51. அழகியநாச்சி அம்மன் திருக்கோயில், பொன்னமராவதி)

திருக்கோயிலில் தீபமிட நெய் வேண்டும் என்று கேட்ட நமிநந்தி அடிகளிடம், 'கையிலே கனல் ஏந்திய கடவுளுக்கு, எதற்கு விளக்கு?' என்று ஏளனம் செய்தனர், சமண சமயத்தைச் சார்ந்தோர். 'விளக்கெரிக்க வேண்டுமானால், வேண்டிய அளவு நீர் உளதே' என்றும் கூறினர். அவர் நாண, இறையருளால் குளத்து நீராலேயே விளக்கு ஏற்றினர் நமிநந்தி அடிகள். அன்று இது நடந்தது, அரூர் அரநெறியில்.[1]

இன்றும் இது நடைபெறுகிறது, (நாம் அறிந்த வரையில்) இரு கோயில்களில்! ஒன்று, இப்போது நாம் வந்திருக்கும் பொன்னமராவதி அழகியநாச்சி அம்மன் கோயில்; மற்றது, கோனாபட்டில் உள்ள கள்ளணன் — பிள்ளைப் பெருமாள் கோயில்.

அரிகரசுதனான ஐயனார், இதுவரை நாம் கண்டு வந்துள்ள குலதெய்வக் கோயில்களில் மூலவராக இருக்கிறாரே தவிர, பிராகாரத்தில் பரிவார தெய்வமாக எழுந்தருளியதில்லை. (கோயிலின் பெயரை வேண்டுமானால், பரிவார தெய்வங்களுக்கு விட்டுக் கொடுத்திருக்கிறார் !) ஆனால் இங்கு, ஐயனார் தேவியருடன் பிராகாரத்தில் எழுந்தருளியிருக்கிறார்! (சில குலதெய்வக் கோயில்களில், சிவமூர்த்தமே மூலவருக்கு அடுத்த நிலைக்குச் சென்றுள்ள விந்தையும் காணப்பெறவே செய்கிறது! முறையான கோயில் அமைப்பு விதிமுறைகள் இல்லாததும், இருந்தாலும் அவற்றைப் பின்பற்றாததுமே இந்த அலங்கோலங்களுக்குக் காரணம்.)

இந்த அழகிய நாச்சியம்மன் கோயிலில் கண்ணகி வந்து தங்கிச் சென்றிருப்பதாகப் புதியதொரு செய்தியும் கூறப்பெறுகிறது! [2]


இத்தகைய தனித்தன்மைகள் கொண்ட அழகியநாச்சியம்மன் கோயில், வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னமராவதியில் அமைந்திருக்கிறது.

★ ★ ★

ஏனாதி மங்களக்காட்டு ஐயனாரை வழிபட்ட பின்னர், அங்கிருந்து பொன்னமராவதி சென்றால், ஊருக்குள் செல்வதற்கு முன்பாகவே,

இடப்புறத்தில் இருக்கிறது, புராதனமான இந்தப் பிரார்த்தனைக் கோயில்.

சாலையில் செல்லும்போதே, பூதங்களின் தோள்களில் கால்களை வைத்துக், கம்பீரமாய்க் கிழக்கு நோக்கி நிற்கும் இரு சேமங்குதிரை களைக் காணலாம்.



அஞ்சேல் என்று அருள்செய்வாள் அமரும் கோயில்

பெரிய ஒட்டுக்கூடத்தைக் கடந்து உள்ளே சென்றால், கொடி மரமும், அதற்கு முன்னால் பலிபீடமும் உள்ளன. சிறியதொரு மண்டபத் தில் சிங்கவாகனம் காணப்பெறுகிறது. இருபுறமும் கோயிற்காவலர் போல இரு துவார பூதங்கள்.

அடுத்துள்ள பதினாறுகால் மண்டபத்தின் தூண்களில் சிற்ப வேலைப் பாடு நிறைந்துள்ளது.

கருவறையில் அழகியநாச்சியம்மன், அமர்ந்த கோலத்தில் அருள் பாலிக் கிறாள்.

மிகப் பழைமையான இந்தக் கோயிலில், 1955ல் ஒருமுறை திருக் குடநீராட்டு நடைபெற்றிருக்கிறது.

ஆடிப் பௌர்ணமியை ஒட்டி, ஆடி முதல் வாரத்தில் காப்புக் கட்டித் திருவிழா நடைபெறுகிறது. அத்திருவிழாவில் சாமியாடும் போது,

ஐந்து நிமிடங்களுக்கு நீரில் விளக்கு எரிகிறதாம். தீபத்தில் நிறையத் தண்ணீர் ஊற்றுவார்களாம்; தீபம் அணையாமல் சுடர்விட்டுப் பிரகாசிக்குமாம்![3]

திருவிழாவின் 11ஆம் நாள் மண்டகப்படியை நகரத்தார்கள் நடத்துகின்றனர். அப்போது நகரத்தார்களின் மடத்தில் அம்பாள் இருந்து காட்சி கொடுப்பாள். நகரத்தார் குடும்பத்தினர் மாவிளக்கு வைத்து அழகியநாச்சியம்மையை வழிபடுவராம்.

இராயவரம், கீழச்சிவற்பட்டி, மேலைச்சிவபுரி, வேந்தன்பட்டி நகரத்தார்கள் இந்த அம்மையைக் குலதெய்வமாகக் கொண்டு வழிபடுகின்றனர். இவர்களில் சில ஊர் நகரத்தார்கள், பிள்ளையார்பட்டிக் கோயிலைச் சேர்ந்தோராக இருக்கலாம் என்று அர்ச்சகர் கருதுகிறார்.

திருமணத்திற்குப் பின்னர் இங்கு வந்து வழிபடுதல், பிள்ளைகளுக்கு முடி இறக்குதல், தொட்டில் கட்டுதல் ஆகியவற்றை இந்த நகரத்தார்கள் மேற்கொள்ளுகின்றனராம். சில நேரங்களில் அம்பாள் சந்நிதியிலேயே நகரத்தார் வீட்டுத் திருமணங்கள் பேசி முடிவாகின்றன என்று, குருக்கள் மகிழ்ச்சியுடன் கூறுகிறார்.

உடல்நலமற்ற குழந்தைகளை அம்பாளிடம் ஒப்படைத்துப், பின்னர் அவளிடமிருந்து குழந்தையைத் தத்தெடுத்துக் கொள்ளும் வழக்கம் இங்கு நிலவுகிறது.

எண்ணியதை எண்ணியாங்கு முடித்தருளும் எழில் நாச்சி இவள்!

★ ★ ★

மகா மண்டபத்தில், கருவறையின் இடப்புறம், தெற்கு நோக்கி நாகர் ஒன்று பிரதிஷ்டை செய்யப்பெற்றிருக்கிறது.

நாக தோஷத்தினால் பிள்ளைப்பேறு இல்லாதவர்கள், செவ்வாய்க் கிழமைகளில் இங்கு வந்து, இந்தச் சந்நிதியில் பாலும் முட்டையும் வைத்து வழிபடுகின்றனர்; பெரும்பாலான குடும்பங்களில், உடனடியாகப் பிள்ளைப்பேறு கிட்டிவிடுகிறது.

சிலரைப் பொறுத்தவரை நாள் சென்றாலும்கூட, அம்பாளின் அருளால் பிள்ளைப்பேறு நிச்சயம் கிட்டிவிடுகிறது என்று, குருக்கள் திட்டவட்டமாகக் கூறுகிறார்.

நேர்ந்து கொண்டவர்கள், பிள்ளைப்பேற்றுக்குப் பின்னர் கட்டிய தொட்டில்களும், மணிகளும் இதற்குச் சாட்சி கூறுகின்றன.

★ ★ ★

தெற்குப் பிராகாரத்தில் பெரியதொரு புளியமரத்தை அடுத்துத் திறந்த வெளியில், இரு கறுப்பர் சந்நிதிகளும், அவற்றை அடுத்துக் கிழக்குப் பார்த்து ஐயனார் சந்நிதியும் உள்ளன. தேவியர் புடைசூழ அமர்ந்திருக்கும் இந்த ஐயனாரும், இரண்டாம் தலைமுறையினரே! சேதமுற்றுவிட்ட பழைய ஐயனார், தேவியரோடு, அண்ணன் (சுப்பிரமணியர்) — அண்ணியர் அருகிருக்க, மேற்குப் பிராகாரத்தில் அமர்ந்திருக்கிறார். மேற்குப் பிராகாரத்தில் விநாயகர் சந்நிதியை அடுத்துத் திறந்த வெளியில் (ஏனாதியைப் போன்று) இவர்கள் வைக்கப்பெற்றுள்ளனர். அடுத்துள்ளதொரு மரத்தின் அடியில், அரிவாள்களும், திரிசூலங்களும் நிறையக் காணப்பெறுகின்றன.

அடுத்த சந்நிதி நகுலனுடையது. இவர் பாண்டவர்களில் ஒருவரான நகுலரோ என நினைத்தால், ஏமாந்து போவீர்கள்.

இந்து அறநிலையத் துறையைச் சேர்ந்த இக்கோயில், ஊராரின் சார்பில் பொன்.புதுப்பட்டிப் பெரிய அம்பலகாரரால் பராமரிக்கப் பெறுகிறது. பரம்பரை அறங்காவலராக இருந்து, கோயிலை நிர்வகித்து வரும் அம்பலகாரர் குடும்பத்தின் மூதாதையரில் ஒருவர்தாம், இந்த நகுலர்; கோயிலைத் திறம்பட நிர்வகித்தவர்; திருச்சுற்றுச் சுவர் எழுப்பியவர்; மிதிலாபுரியின் ஜனக மன்னரை இராஜரிஷி என்று கூறுவரே,[4] அப்படித் தாமரை இலைத் தண்ணீராய் வாழ்ந்தவர். அந்தப் பெரியவரின் சந்நிதிதான் இது. அவருடைய பாதகுறடுகள், இந்தச் சந்நிதியில் வைக்கப் பெற்றுள்ளன.

வடமேற்கு மூலையில் சுப்பிரமணியர் சந்நிதி. வள்ளி — தெய்வயானையுடன் அருள் பாலிக்கிறார்.

வடக்குத் திருச்சுற்றுச் சுவருடன் ஒட்டிய சந்நிதியில், சப்தகன்னியர், கன்னிமார், கணேசர், சந்நியாசி, நல்லியப்ப சுவாமி, அகோர வீரபத்திரர், ஆகாசவீரன், பாப்புராஜா, சிவலிங்கம் — நந்தி, நாகர்கள் ஆகிய சிலைகள் இடம்பெற்றுள்ளன. வடகிழக்கு மூலையை ஒட்டிப் பைரவர் சந்நிதி உள்ளது.

கோயிலில் குருக்கள் இல்லாதிருந்தால், பொன்னமராவதியிலிருந்து அவரை அழைத்து வந்து, அஞ்சேல் என்று அருள்செய்யும் அம்பாளை வழிபட்டு உய்வடையலாம்.

அன்னையின் ஆலயத்தை விட்டுப் புறப்படுமுன்னர், அடுத்துள்ள (முன்னாள்) நாடக மேடையிலும், கூரைக் கூடங்களிலும் கல்வி கற்ற கடந்த கால நினைவுகளில் தோய்கிறேன்; அன்னையைக் கண்ட ஆனந்தம், அதிலும் ஏற்படுகிறது!

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

ஆராய்ந்(து) அடித்தொண்டர் ஆணிப்பொன் ஆரூர் அகத்தடக்கிப்
பாரூர் பரிப்பத்,தம் பங்குனி உத்திரம் பாற்படுத்தான்,
நாரூர் நறுமலர் நாதன் அடித்தொண்டன் நம்பிநந்தி
நீரால் திருவிளக்(கு) இட்டமை, நீள்நா(டு) அறியும்அன்றே!

திருச்சிற்றம்பலம்

— 4 ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

1. இது, திருவாரூர்ப் பெருங்கோயிலினுள், தென்கீழ்த் திசையில் உள்ள ஒரு தனிக்கோயில்
2. பொன். புதுப்பட்டி — தகவல் கட்டுரை, சோம. சுப. சுணபதி — நகரத்தார் இதழ், நவ.'94
3. சோமசுந்தரக் குருக்கள், பொன்னமராவதி

4. 'ஜனகர் ஒரு ராஜரிஷி.... நியமம் காத்தவர்; பிரம்ம ஞானி; கடமைகளைச் செய்தே சித்தியடைவதைப் பற்றி அருச்சுனனுக்கு எடுத்துச் சொல்லும் போது, கண்ணன், ஜனகரைச் சிறந்த உதாரணமாக எடுத்துச் சொன்னான்'... — சக்கரவர்த்தித் திருமகன், இராஜாஜி
''கர்மணைவ ஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜனகாதய:'' — பகவத்கீதை, கர்ம யோகம்: 20

உ

மாசற்ற மணிக்குன்றே, மாசங்கறுப்பரே!

(52. மாசங்கறுப்பர் திருக்கோயில், கொப்பனாபட்டி)

சிறந்த சிவபக்தனான இராவணனும், இராமபக்தனான விபீஷணனும், தாங்கள் கொண்டு சென்ற உபாசனாமூர்த்திகளை நிலத்தில் வைத்துத், திருக்கோகர்ணமும், திருவரங்கமும் உருவாகக் காரணமாய் இருந்தது போன்று, சிராவயல் புதூரில் திருமேனிக் கறுப்பர் கோயில் அமைவதற்கு நகரத்தார்கள் காரணமாய் அமைந்திருந்தார்கள் என்பதை முன்னர் கண்டோம். அத்தகைய வரலாற்றினை மீண்டும் ஒருமுறை கேள்விப்படுகிறோம், கொப்பனாபட்டி மாசங்கறுப்பர் கோயிலில்.

வடநாட்டுப் பக்கமிருந்து அரசர்களால் விரட்டப்பெற்ற அம்பல(க்)காரர்கள், தாங்கள் வழிபட்டுவந்த ஐயனார், பிடாரி, கறுப்பர் ஆகிய தெய்வங்க(ளின் துணையோடு)ளோடு இந்தச் சீமையை நோக்கி ஓடிவந்தனர். (வடநாடு என்று இங்கு குறிப்பிடப்பெறுவது, தமிழ் நாட்டுக்கு வடக்கே உள்ள தெலுங்கு (ஆந்திர) நாடாக இருக்கக்கூடும். ஞானசம்பந்தப் பெருமான் திருக்காளத்தியிலிருந்த வண்ணம் கயிலை, திருக்கேதாரம், கோகர்ணம், திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்), இந்திரநீலபருப்பதம் ஆகிய தலங்களைப் பாடினார் என்னும் போது, 'அங்கண்வட திசைமேலும் குடக்கின் மேலும்''[1] என்று, சேக்கிழார் சுவாமிகள் பாடுகிறார். இதில் ஆந்திராவில் உள்ள ஸ்ரீசைலமும் அடங்கிவிடுகிறது. இதிலிருந்து தமிழ் நாட்டுக்கு வடக்கே உள்ள எல்லாப் பகுதிகளையுமே வடநாடாகத்தான் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. மேலும் அம்பல(க்)காரர் என்போர் தெலுங்கு நாட்டின் முத்திரியரை ஒத்தவர் என்று தர்ஸ்டன் கூறுகிறார்.[2] எனவே, இவ்வாறு ஓடி வந்தவர்கள் தெலுங்கு நாட்டிலிருந்து தங்களையொத்த முத்திரியரால் விரட்டப்பெற்றவர்களாக இருக்கலாம்.)


வரும்வழியில் கொன்னப்பட்டியை அடுத்த ஓரிடத்தில் பிடாரி தங்கிவிட்டதாம். ஐயனார் மற்றும் கறுப்பருடன் வந்தவர்கள், இப்போது மாசங்கறுப்பர் இருக்கும் இடத்தில் மூர்த்தங்களை வைத்துவிட்டுச் சிரமபரிகாரம் செய்த பின்னர், கறுப்பரை இங்கிருந்து அகற்ற முடியாமற் போகவே, இங்கேயே தங்கிவிட்டனர். சற்றுத் தள்ளி

யுள்ள கொன்னவயலில ஐயனார், மாச ஐயனார் என்னும் பெயரில் கோயில் கொண்டிருக்கிறாராம். இவர்களுடன் வந்த மற்றும் சிலர், தூத்தூரில் தென்மலைக் கறுப்பன், வடமலைக் கறுப்பன் என்னும் பெயர்களில், கறுப்பர்களை வைத்துக் கொண்டு வாழ்கின்றனராம்.

தனித்து விடப்பெற்ற கறுப்பர் பூசாரி, கிடாய் வெட்டும்போது, அதைப் பிடித்துக் கொள்ளத் துணை தேடியிருக்கிறார்; அப்போது அவ்வழியே வந்த நகரத்தார் பெருமகனார் ஒருவர், அவருக்கு உதவியிருக்கிறார்; அதிலிருந்து இரு குடும்பங்களும் பங்காளிகளாகி விட்டனர். அந்தக் குடும்பத்தினர் பின்னர் குழிபிறைக்குக் குடி பெயர்ந்து விட்டனர்.

குழிபிறை இரணிக்கோயிலாரான அந்தப் பங்காளிகள் மட்டுமே இக்கறுப்பரைக் குலதெய்வமாகக் கொண்டுள்ளனர்.[3]

* * *



மனமாசு அகற்றும் மாசங்கறுப்பர் கோயில்

பொன்னமராவதி அழகியநாச்சியம்மன் கோயிலிலிருந்து பொடி நடையாகவே பொன்னமராவதிப் பேருந்து நிலையத்திற்குச் சென்றுவிடலாம். பொன்னமராவதி — புதுக்கோட்டை சாலையில், பொன்னமராவதியை அடுத்துள்ள கொப்பனாபட்டி ஊரின் எல்லையில், கல்விக் கோயிலான கலைமகள் கல்லூரிக்கும், அன்னையின் கோயிலான புகழ்பெற்ற கொன்னையூர் முத்துமாரியம்மன் கோயிலுக்கும் இடையில், சாலையின் வலப்புறம் அமைந்துள்ளது இக்கோயில். இங்கு வருவதற்குப் பேருந்து வசதி பேரளவில் உள்ளது.

நாற்புறமும் திருச்சுற்றுச் சுவரை மட்டுமே கொண்டுள்ள இது, ஒரு



மரத்தடியில் மாசங்கறுப்பர்

கொம்படி ஆலயமே. குழிபிறை நகரத்தார்களே இந்தத் திருச்சுற்றுச் சுவரைக் கட்டிக் கொடுத்திருக்கின்றனர். மரங்கள் நிறைந்துள்ள உட்பகுதியில் பெரியதொரு மேடை. அதில் அழகிய திருவாசியின் முன் உள்ள முத்தலைச் சூலந்தான் மாசங்கறுப்பர். கருமையான அழகிய கறுப்பர் என்று இப்பெயருக்குப் பொருள் கூறலாமா? (மாசு — கருமை)

வெள்ளி, தங்கத்தினாலான தொப்பிகள், தங்க — வைர அணிகலன்கள் எல்லாம் இவருக்கு இருக்கின்றன.

தை பிறந்ததும், திருவுளம் கேட்டுப் பூசைக்கு நாள் குறித்து, அந்த நல்ல நாளில் முதற்பூசையும், அதற்கு எட்டாம் நாள் குழிபிறைப்

பங்காளிகள் நடத்தும் பூசையும் நடைபெறுகின்றன. இவ்விரு நாட்களில் மட்டுமே, ஆடை, அணிகலன்களுடன் கறுப்பரைக் கட்டழகராகக் காணமுடியும்.

உருவத் திருமேனியோ, ஒய்யாரமான கட்டடங்களோ வேண்டாம்; எளிமையிலேயே இன்பங்காணுங்கள் என்று இறைவாக்குக் கிடைத்ததைத் தொடர்ந்து, அவற்றுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பெறவில்லை.

அருகில் இருக்கும் மேடையுடன் கூடிய உவாமரம், கோயில் அமைவதற்கு முன்பிருந்தே இருக்கிறது என்றும், அதில் திருவுளம் கேட்பது உண்டு என்றும் சொல்லப்பெறுகிறது. இதைத் தவிர இங்கு யார்மீதும் சுவாமி ஆவேசிப்பதில்லை.

கறுப்பர் மேடைக்கு இடப்புறம் வேல்களும், அரிவாள்களும் உள்ள இடத்தில் இருப்பவர், அழகப்ப சுவாமிகள்; கோயில் பூசாரியாயிருந்த அவர், நன்கு படித்தவர். அவர் கொலையுண்டதைத் தொடர்ந்து, இங்கு அவருக்குச் சந்நிதி ஏற்படுத்தி வழிபட்டு வருகின்றனர்.

மாசங்கறுப்பரைக் குலதெய்வமாகக் கொண்ட நகரத்தார் குடும்பங்களில் திருமணம் நடைபெற்றால் ஒரு பூசையும், குழந்தை பிறந்தால் ஒரு பூசையும் நடத்துவது உண்டாம். குழந்தைகளுக்கு இங்கு தொட்டில் கட்டுவது, பெயர் சூப்பிடுவது உண்டு; ஆனால் முடியிறக்குவது இல்லை.

உயிர்பலி கொடுக்கும்போது மட்டுமே இங்கு வழிபாடு நடைபெறுகிறது என்றும், மற்ற நாட்களில், வருவோர் தேங்காய் உடைத்து வைத்துச் சாம்பிராணி போட்டு வழிபட்டுச் செல்லலாம் என்றும் மாசன் பூசாரி கூறுகிறார்.

தேவையானால், சாலையின் மறுபுறத்தில் உள்ள பூசாரி வீட்டிலிருந்து அவரை அழைத்து வந்து, மாசங்கறுப்பரை மனமார வழிபட்டு மகிழலாம்.

பரவும் சொல்மாலை

மனத்தூ(சு) அகற்றி மாந்தர்க்(கு) எல்லாம்
இனஒற் றுமையொ(டு) இன்பம் பெருக்கி,
ஆசுபுக ழொடுஆக்கம் அனைவர்க்கும் நல்கும்
மாசங் கறுப்பர் மாணடி தொழுவனே!

— அரு.சுப. அருணாசலம்

குறிப்புவிளக்கம்:

— குற்றமற்ற மாணிக்க மலையே
1. 'அவ்விடத்தும், வடக்கிலும் மேற்கிலும்...' — பெரிய புராணம்
2. அபிதான சிந்தாமணி
3. இங்கு குறிப்பிடப் பெற்றுள்ள வரலாறுகள், கோயிலைப் பற்றிய விவரங்கள் ஆகியவை இக்கோயிலின் அர்ச்சகரான கொப்பனாபட்டி மாசன் பூசாரி தெரிவித்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

உ

மூலபண்டாரம் வழங்கும் மூலங்குடி ஐயன்

(53. பொய்சொல்லாமெய்ய ஐயனார் திருக்கோயில், மூலங்குடி)

நகரத்தார்களின் குலதெய்வக் கோயில்களில், குதிரை மீதான பட்
டாணிக்குச் சிலை வைக்கப் பெற்றிருப்பதை அறிந்திருக்கிறோம்.
இப்போது நாம் காணப்போகும் மூலங்குடிப் பொய்சொல்லா
மெய்ய ஐயனார் கோயிலில் (இதனை, வழக்கமாக மூலங்குடிப்
பொன்னன் கோயில் என்றே கூறுகின்றனர்.) பட்டாணி, அவர்
மனைவி ஆகியவர்களோடு, அவர்கள் ஏறிவந்த குதிரைக்கும்கூடச்
சிலை வைக்கப் பெற்றிருக்கிறது.

பட்டாணி என்பவர், உருது மொழி பேசும் முகமதியர் என்று
கழகத் தமிழ் அகராதி கூறுகிறது. இந்தக் குடும்பத்தினர் இந்தக்
கோயிலில் எப்படி இடம் பிடித்தனர்? பட்டாணியும், அவர் மனைவி
யும் குதிரையில் வந்து கொண்டிருந்தபோது, இவ்விடத்தில் நடந்த
போரின் காரணமாக (கலகம், அல்லது அடிதடி சண்டையாக
இருந்திருக்கலாம்), அயலவரான அவர்கள் இங்கு அடைக்கலம்
புகுந்திருக்கின்றனர். இருந்தும், சண்டையிட்டோர் அவர்களையும்
விட்டு வைக்கவில்லை. அதன் காரணமாக, வேற்று மதத்தவராயி
னும் அவர்களையும் ஏற்றுக் கொண்டு, அவர்களுக்கும் இங்கு சிலை
அமைத்திருக்கின்றனர் என்று விளக்கம் கூறப்பெறுகிறது.[1]

இப்படி உயிர் துறந்த — தற்கொலை புரிந்து கொண்ட சாதாரண
மனிதர்களுக்கெல்லாம் கோயிலில் சிலை வைக்கிறார்களே என்று
வியந்தபோது, புதியதொரு விளக்கம் கிடைத்தது.

ஊரில் துர்மரணங்கள் (அகால மரணம், தற்கொலை, விபத்தில்
உயிர் துறத்தல் போன்றவை) நேரும்போது, அந்த ஆவிகள் ஊரைத்
துன்புறுத்தும் என்று பயந்து, அவற்றை அங்கு உள்ள ஆலயங்
களில் அணையச் செய்து விடுவது, அக்கால வழக்கமாக இருந்
திருக்கலாம். (இப்போதும் கிராமங்களில், ஆவிச் சேட்டையால்
அவதிப்படுவோரின் முடி போன்றவற்றை, அங்குள்ள பழைய
மரங்களில் அறைந்து, ஆவியை அகற்றுவதாக நம்பப்பெறுகிறது.)
அவ்வாறு தோன்றியவையே (கோயில்களில் காணப்பெறும்) இச்

சிலைகளாக இருக்கலாம்[2] என்னும் விளக்கம், ஓரளவு சிந்திக்க வைக்கிறது.

கணவன் அமர்ந்திருக்க, மனைவி அருகில் நிற்கும் சிறிய கல் வடிவம், திருவாசியுடன் காணப்பெறுகிறது. அருகில் உள்ள மாடத்தில் புதிதாக வண்ணம் தீட்டப் பெற்ற அழகிய குதிரை உள்ளது.

வடக்குத் திருச்சுற்றுச் சுவரை ஒட்டி இத்தம்பதியரையும், இவர்கள் ஏறிவந்த குதிரையையும் கொண்டிருக்கும் பொய்சொல்லாமெய்யர் கோயில், மூலங்குடி கிராமத்தில் உள்ளது.

* * *

கொப்பனாபட்டி மாசங்கருப்பர் கோயிலுக்கு அருகில் உள்ள சிறந்த பிரார்த்தனைத் தெய்வமான கொன்னையூர் முத்துமாரியம்மனையும் வழிபட்டுக் கொண்டு, வாகன வசதி உள்ளவர்கள் வாகனத்திலும், மற்றவர்கள் நடந்தும் கொன்னையூரிலிருந்து கிழக்கே 3 கி.மீ. தொலைவில் உள்ள மூலங்குடிக்குப் போய்ச் சேரலாம். இவ்வூருக்குப் பேருந்து வசதி இப்போதைக்குக் கிடையாது.

ஊரின் எல்லையில் இருக்கிறது, பொன்னன் கோயில் என்று எல்லோராலும் கூறப்பெறும், பொய்சொல்லாமெய்ய ஐயனார் கோயில். பழைமை அடைந்துவிட்ட, ஏறத்தாழ ஒரு சிவன்கோயில் போன்று நிறைய விமானங்கள் உள்ள, பெரிய கற்கோயில் இது.



மூலங்குடி ஐயனை நான் கண்டவாறே

தெற்குத் திருச்சுற்றுச் சுவரில் உள்ள நுழைவாயில் வழியாகவும், கிழக்கில் உள்ள முன்வாசல் வழியாகவும் கோயிலுக்குள் செல்லலாம்.

முதலில், கருவறையுள்ள மைய மண்டபத்துக்குச் செல்கிறோம். கொல்லங்குடி வெட்டுடைய ஐயனார் கோயிலுக்குச் சென்றிருந்தபோது ஐயனாருக்கு எதிரே, ஆனால் வலப்புறமாக (திருப்புன்கூரில் சிவன் சந்நிதிக்கு எதிரில் உள்ள நந்தி, 'சற்றே விலகியிரும் பிள்ளாய்'[3] என்று சிவன் கூறியதும், கருவறையின் வலப்புறமாக நகர்ந்திருப்பது போன்று,) வெட்டுடையார் காளி சந்நிதி அமைந்திருப்பதைக் கண்டோம். ஆனால் இங்கோ சுவாமிக்கு நேர் எதிரில் பத்ரகாளி சந்நிதி உள்ளது.

முதலில் மூலவரைத் தரிசித்துக் கொண்டு, பின்னர் பத்ரகாளியைத் தரிசிப்போம்.

மூலவர் பொய்சொல்லாமெய்யரும், பூரணை — புஷ்கலை தேவியரும், சிறிய — அழகிய சிலை வடிவங்கள்; மீண்டும் மீண்டும் காணத் தூண்டும் கலைப் பொக்கிஷங்கள். இவர்களும் இரண்டாம் தலைமுறையினரே. ஆதி ஐயனாரும், தேவியரும் உருக்குலைந்து போய்ப் பிராகாரத்தின் வடமேற்கில் ஒரு சந்நிதியில் வைக்கப்பெற்றுள்ளனர்.

கூரைக்கூடமாகக் கோயில் இருந்தபோது நடைபெற்ற இந்தச் சிலை மாற்றக் காலத்தில்தான், மற்றொரு முக்கியமான நிகழ்ச்சி, இக்கோயிலில் இடம்பெற்றது. அதைப் பின்னர் அறிந்து கொள்வோம்.

அக்கினி நட்சத்திரத்தின்போது, அந்தணர்கள் உருத்திர ஜபம் செய்து, மூலவருக்கு அபிஷேகம் செய்வது, குலதெய்வக் கோயில்களில் இங்கு மட்டுமே நடைபெறும் ஒரு தனித்தன்மை வாய்ந்த வழிபாடாகும். காளாஞ்சி மரியாதையில், பிராமணர்களுக்கே (மகாஜனம்) முதல் மரியாதை செய்யப்பெறுகிறது.

இங்கு நடைபெறும் சிறப்பு விழாக்களில் மகாசிவராத்திரி முக்கியமானதொன்று. அந்த நாளில் நகரத்தார் உட்பட ஏராளமானோர் கோயிலில் கூடுவர். அடுத்த நாள் நகரத்தார்களின் குழந்தைகளுக்கு முடி இறக்குவதும், தொட்டில் கட்டுவதும் உண்டு.[4] குழிபிறைப் பங்காளிகள் சிவராத்திரியின்போது சேர்ந்து வந்து, கூட்டாக அன்னதானம் செய்வார்களாம்.[5] நெற்குப்பைக் கிண்கிணிக்கூருடையார் அனைவரும் சிவராத்திரிக்கு மறுநாள் வந்து, பொன்னன் சந்நிதியில் சோறு வடித்து விருந்து வைப்பார்களாம்.[6]

வைகாசி விசாகத்தை ஒட்டிப் பத்து நாள் திருவிழா நடைபெறுகிறது. அப்போது சுவாமி ஊருக்குள் சென்று வருவது உண்டு.

ஆடிப் பௌர்ணமியை ஒட்டிவரும் ஒரு திங்கட்கிழமை, கோட்டையூர்ப் பங்காளிகள் இங்கு வந்து மாவிளக்கு வைத்துக், குழந்தைகளுக்குப் பெயர் கூப்பிட்டு, அடுத்தநாள் செவ்வாய்க்கிழமை அபிஷேக ஆராதனைகள் செய்து, புதன்கிழமை விடுதியில் ஏலம் போட்டுப், பின்னர் வீடு திரும்புவார்களாம்.[7]

ஆவணி மாதத்தில் ஆவிணிப்பட்டிப் பங்காளிகள் ஒரு நாளும், வேந்தன்பட்டிப் பங்காளிகள் ஒரு நாளும் இங்கு வந்து கூட்டு வழி

பாடு செய்து திரும்புகின்றனர். புரட்டாசி மாதத்தில் மூன்றாவது சனிக்கிழமையன்று வேகுப்பட்டிப் பங்காளிகள் இங்கு வந்து வழி பாடு நடத்திப் பிராமணபோஜனம் செய்விக்கின்றனர்.[8]

குழிபிறைப் பங்காளிகள் தங்கள் படைப்புத் தெய்வத்திற்கு (அடைக்கி ஆத்தாள்) வழிபாடு செய்யுமுன்னர், இங்கு வந்து இரவு பொன்ன னுக்குப் பொங்கல் வைத்து வழிபட்டு, மறுநாள் வீடு திரும்புவார் களாம்.[9]

நெற்குப்பைப் பங்காளிகள், இராயவரம் தெய்வானை அம்மன் படைப்புக்கு முதல்நாள் இரவு இங்கு வந்து சிறப்புப் பூசை நடத்தி, அடுத்த நாள் இங்கிருந்து புனிதநீர் எடுத்துச் செல்வார்களாம்.[10]

கருவறையின் முன் உள்ள நாற்கால் மண்டபத்தில், கருவறை வாச லின் வலப்புறம், விநாயகர் இடம் பெற்றுள்ளார். மண்டபத்தில், ஐயனார், தேவியர், விநாயகர் ஆகியோரின் உற்சவத் திருமேனி கள் உள்ளன. வேலைப்பாடு மிகுந்த அழகிய செப்புத் திருமேனி கள் இவை.

மண்டபத்தின் முன்னால் சுவரிலும், தனியாக முன்னாலும் துவார பாலகர்கள் உள்ளனர். சுவரில் சிறிய சிவலிங்கம் வடிக்கப்பெற் றிருக்கிறது. மண்டபத்தின் வலப்புறம் உள்ள துவார பாலகருக்கு முன்னால் ஆஞ்சநேயர் சிலையும், மண்டபத்தின் முன்னால் யானை வாகனம், பலிபீடம், கொடிமரம் ஆகியவையும் உள்ளன. இங் குள்ள ஆஞ்சநேயருக்கு முன்பாகப் புரட்டாசி மாதத்தில் இராமா யணம் படிக்கப் பெறுகிறது. ஒரு வாரமோ, இரு வாரங்களோ இப்படிப்பு நடைபெறுமாம்.

இந்தக் கல் மகா மண்டபத்தின் மறுபுறம் (கருவறையின் எதிரே) பத்ரகாளி சந்நிதி உள்ளது.

வலக்கையில் வாள் ஏந்தி, நின்ற கோலத்தில் காட்சி தரும் இவளு டைய முகத்தில், அசாதாரணமானதொரு சாந்தம் நிலவுகிறது.

அமரம் என்பது ஒரே பொருளைக் கொண்ட பல சொற்களின் கோவையான சுலோகங்கள் அடங்கிய ஒரு சமஸ்கிருத இலக்கண நூல். அதில் காணப்பெறும்

''ஸ்வ ஸ்ரேயசம் சிவம் பத்ரம்
கல்யாணம் மங்களம் சுபம்''

என்னும் சுலோகம், மங்களம் என்னும் பொருளைத் தரும் பல சொற்களின் கோவை. இதன்வழி, பத்ரம் என்பது, மங்களம் என் னும் பொருளைத் தரும் ஒரு சொல் என அறிகிறோம். எனவே, பத்ரகாளி என்பதற்கு மங்களகரமான காளி என்பதுதான் பொருளே தவிர, நாம் சாதாரணமாக நினைப்பது போன்று, கொடூரமான காளி என்று பொருள்படாது. மங்கலத்தை நல்கும் மங்களகரமான காளியே இவள்![11]

சாந்தம் தவழும் மங்களகரமான இவளையா, உக்கிரம் நிறைந் தவள், ஊரை எல்லாம் எரித்தவள் என்று சொல்கிறார்கள்? அது என்ன ஊரை எரித்த கதை என்கிறீர்களா, அர்ச்சக வேளார் கூறு கிறார் கேளுங்கள்:

காட்டுப் பகுதியில் ஒரு புதருக்குள் இருந்த இவளை, யாரோ எடுத்து வெளியில், பலரும் நடமாடும் இடத்தில் குப்புறப் போட்டு விட்டனர். அவ்வழியே சென்றோரால் மிதியுண்டு கிடந்த காளி சிலையை எடுத்துவந்து கோயிலில் வைக்குமாறு ஐயனார் ஆணை இட்டார். குப்புறக் கிடந்த வரை பொறுமையாக இருந்தவள், கோயிலுக்குள் வந்ததும் ஆட்டம் போடத் தொடங்கிவிட்டாள். எத்திசை நோக்கி அவளை வைத்தாலும் அத்திசை எரிந்து போகலாயிற்று. ஐயனாரிடம் கேட்டனர், நீதானே கொண்டுவரச் சொன்னாய் என்று.

மந்திரபூர்வமாக இயந்திரப் பிரதிஷ்டை இல்லாமல், காளியை எனக்கு எதிரில், என்னைப் பார்த்தவண்ணம் வைத்து விடுங்கள். பின்னர் அவளுடைய உக்கிரம் தணிந்து விடும் என்று ஐயனாரின் அருள்வாக்குக் கிடைத்ததாம். அதன் விளைவுதான், ஐயனார் சந்நிதிக்கு நேர் எதிரே பத்ரகாளி சந்நிதி அமைந்திருப்பது.[12]

உக்கிரமாக இருந்த பல அம்பிகையரை, ஆதிசங்கரர் சமனம் செய்து (தணியச் செய்து), அந்த மூர்த்தங்களைச் சாந்தமாக்கியிருக்கிறார் என்று, காஞ்சிப் பெரியவர் கூறுவார். காஞ்சிபுரத்தில் காமாட்சி, திருவானைக்காவில் அகிலாண்டேஸ்வரி, கொல்லூரில் மூகாம்பிகை, அஸ்ஸாமில் காமாக்யா, திருவொற்றியூரில் திரிபுரசுந்தரி என்று, பல தலங்களில் அம்பிகையரை அவர் சாந்தமூர்த்தமாக்கினாராம்.[13]

அடுத்துப் பிரமர் கறுப்பர் சந்நிதிக்குச் செல்கிறோம். கிழக்குப் பார்த்த சந்நிதியான இது, கோயிலின் தென்கிழக்கில் உள்ளது. நாம் முன்னர் குறிப்பிட்ட ஐயனார் சிலை மாற்றம் நடந்த காலகட்டத்தில்தான், இந்தச் சந்நிதியும், பிரபலமான பொன்னன் சந்நிதியும் இங்கு உருவாகின என்று கூறப்பெறுகிறது.[14]

இவ்விரு தெய்வங்களும் குடுமியாமலையில் இருந்தவை. அங்கு, இவர்களுக்குப் பூசை செய்துவந்த வேளார்களும், மூலங்குடி வேளார்களும் திருமணச் சம்பந்தம் உடையவர்கள். ஒருமுறை மூலங்குடி வேளார்கள் குடுமியாமலை சென்றிருந்தபோது, சுவாமி சந்நிதியில் அடுக்கியிருந்த சுக்குமாந்தடிகளில் சிலவற்றை எடுத்து வந்தனர். அவற்றுடன் பிரமரும், பொன்னனும் மூலங்குடிக்குக் குடிபெயர்ந்து விட்டனர். மரச்சிலைகளில் இறை சாந்நித்தியம் பன்னிரு ஆண்டுகளுக்கு இருக்கும் என்று கூறப்பெறுவதை[15] இங்கு நினைவு கூரலாம். அதன்வழி இங்கு வந்துவிட்ட பிரமரும், பொன்னனும் இங்கேயே தங்கிவிட விரும்புவதாகக் கூறவே, அவர்களின் சந்நிதிகள் இங்கு ஏற்படலாயின. பிரமர் கோயில் முதலில் மிகவும் தாழ்வாக இருந்தது; பெருமழை பெய்தால், சந்நிதியில் நீர்நிரம்பிவிடும். பின்னர் அது உயர்த்திக் கட்டப்பெற்றது.[16] இச்சந்நிதிக்கு 02.02.47ல் திருக்குட நீராட்டு நடைபெற்றதாகக் கூறுகின்றனர்.[17]

அடுத்துள்ளது வடக்குப் பார்த்த சுப்பிரமணியர் சந்நிதி. இவரை மூலிமலையான் என்று குறிப்பிடுகின்றனர். இவருக்குச் சுருட்டும், காயமும் நிவேதனம் செய்கின்றனர். (முன்பு கஞ்சா படைத்தனர்; இப்போது அதற்குப் பதிலாக வெள்ளைப்பூடு, மிளகு ஆகியவற்றை அரைத்து உருவாக்கும் காயம் படைக்கின்றனர்.)[18] சிவராத்திரிக்கு அடுத்தநாள் இவருக்குச் சிறப்புப் பூசை நடைபெறுகிறதாம்.[19]

அடுத்துள்ள நுழைவாயிலை அடுத்துக், கறுத்தக் கலயன் சந்நிதி இருக்கிறது. இவர் காவலுக்காக இங்கு அழைத்துவரப் பெற்ற கள்ள மரபினராம்.

இதனை அடுத்துள்ள திருமஞ்சனக் கிணற்றுக்குக்கூட ஒரு கதை கூறப்பெறுகிறது. இதனைக் காராளன் கேணி என்கின்றனர். காராளனும், அவர் மனைவியும், இந்தக் கேணியை வெட்டி, அதனுள்ளேயே குழந்தையும் பெற்றெடுத்து, ஐந்தாண்டுகள்வரை பேசாதிருந்த குழந்தை பேசத் தொடங்கி, ஊறாத கிணற்றில் நீரும் பெருகி....இதற்கு மேல் இக்கிணற்றுக்குச் சிறப்பு வேறு என்ன வேண்டும்?



புகழ் மணக்கும் பொன்னையா

அடுத்துள்ள கிழக்குப் பார்த்த மண்டபம், இக்கோயிலின் முக்கிய மான பகுதிகளில் ஒன்று. இங்கு இரு சந்நிதிகள் உள்ளன. வடக்கே உள்ள சிவன் சந்நிதியில், ஐந்தலை நாகக் குடையின் கீழ் உள்ள சிவலிங்கம் காணப்பெறுகிறது. இந்த ஐந்தலை நாகத்தின் விரித்த படத்தில், காலசம்ஹாரமூர்த்தி போன்றதோர் உருவம் பொறிக்கப் பெற்றுள்ளது. மேலும், பெரிய சிவலிங்கத்தின் அருகில், சிறிய தொரு சிவலிங்கத் திருவுருவமும் வைக்கப்பெற்றுள்ளது. இந்தச் சிறியவரே, ஆதி சிவலிங்கம் என்கிறார் அர்ச்சகர். இச்சந்நிதியின் முன்னால் விடையும், பலிபீடமும் உள்ளன. சந்நிதி வாயிலில் தண்டாயுதபாணி (?) இடம் பெற்றிருக்கிறார்.

இந்த மண்டபத்தின் வலப்புறம் (தெற்கில்) பொய்சொல்லாப் பிள் ளைகளின் சந்நிதி உள்ளது. இவர்கள் ஐயனாரின் பிள்ளைகளோ? இக்கோயிலைக் குலதெய்வக் கோயிலாகக் கொண்ட அனைவருமே அவருடைய பிள்ளைகள்தாம். அவர்களும், ஐயனாரைப் போன்று, பொய்சொல்லாதவர்களாகவே இருக்கவேண்டும் என்பதற்காகவே, பொய் சொல்லாப் பிள்ளைகள் சந்நிதியை அமைத்திருக்கின்ற னரோ? அச்சந்நிதியின் முன்புறம் விநாயகரும், மூஷிஹமும் காணப் பெறுகின்றன.

மேற்குப் பிராகாரத்தில், ஏறத்தாழ வடமேற்கில், அடைக்கலம் காத்தவர் சந்நிதி உள்ளது.

வடக்குச் சுற்றுச் சுவரில், நாம் முன்பு குறிப்பிட்ட பட்டாணி குடும் பம் இடம்பெற்றுள்ளது. இதுவரை நாம் இராஜா தெய்வம், அரசு முகம், இராமநாதபுரம் மன்னர் என்றுதான் சிலைகளைப் பார்த்து வந்திருக்கிறோம்; ஆனால், இங்குதான் முதன்முறையாக மூவேந் தருமே சிலை வடிவில் எழுந்தருளியிருக்கின்றனர். ஆம், சேர, சோழ, பாண்டியர்களின் சிலைகள்தாம், பட்டாணியின் குதிரையை அடுத்து உள்ளன. மேலும், சப்த கன்னியர், ஆலாத்திக்காரி, தவள முகச் சந்நியாசி, அரசுமுகச் சந்நியாசி, சின்னக் கறுப்பர், பெரிய கறுப்பர், சங்கிலிக் கறுப்பர் எல்லோரும் இங்கு இடம்பிடித்துக் கொண்டிருக்கின்றனர்.

இறுதியாக, இக்கோயிலின் முக்கியமான சந்நிதிக்கு வருகிறோம். கோயிலின் தென்கிழக்கு மூலையில், சுற்றுச்சுவருடன், மேற்கூரை இல்லாமல், கிழக்கு நோக்கி அமைந்துள்ள இச்சந்நிதியில் இருப் பவர்தாம் மூலங்குடிப் பொன்னன்.

* * *

அரண்மனைச் சிறுவயல், ஆவிணிப்பட்டி, வி.இலட்சுமிபுரம், கண் டரமாணிக்கம் (இளையாற்றங்குடிக் கழனிவாசல்), கல்லல், கல்லுப் பட்டி (பிள்ளையார்பட்டி), கீழச்சிவற்பட்டி, குழிபிறை (இளை யாற்றங்குடி கிண்கிணிக்கூருடையார்), கொப்பனாபட்டி, கோட் டையூர் (மாத்தூர் மண்ணூர் — சுமார் 120 புள்ளிகள்), கோனா பட்டு, சொக்கநாதபுரம், தேவகோட்டை, நெற்குப்பை (இளையாற் றங்குடி கிண்கிணிக்கூருடையார்), பொன்.புதுப்பட்டி (வைரவன் கோயில் பெரிய வகுப்பு), பூலாங்குறிச்சி, மேலைச்சிவபுரி, விரை யாச்சிலை, வெற்றியூர், வேகுப்பட்டி (சூரக்குடி), வேந்தன்பட்டி

(மாத்தூர் மண்ணூர்), மற்றும் சில ஊர்கள், ஆக 25 ஊர்கள் முதல் 60 ஊர்களின் 1500க்கு மேற்பட்டோர் குலதெய்வக் கோயிலாகக் கொண்டுள்ள இக்கோயிலில்,[20] இருமுறை திருக்குட நீராட்டு நடை பெற்றிருக்கலாம் என்றும், இரண்டாவது குடமுழுக்கு 05.07.46ல் நடைபெற்றது என்றும், 1947ல் கீழச்சிவற்பட்டி, கோட்டையூர், புதுப்பட்டி நகரத்தார்களும், குழிபிறை, வேகுப்பட்டி ஆகிய ஊர் களின் நகரத்தார் குடும்பத்தினரும் திருப்பணி செய்திருக்கின்றனர் என்றும் கூறப்பெறுகிறது.[21] நகரத்தார்களைத் தவிர மூலங்குடிப் பிராமணர்கள், மற்றும் சிறுகுடி, தேவகோட்டை, தேனூர், நத்தம் போன்ற பல ஊர்களின் அம்பலக்காரர்கள், சேர்வைகள், தேவர் கள், நாயக்கர், யாதவர்களும் இங்கு வந்து வழிபடுகின்றனர். பிரா மணர்களில் ஒருவரை வைத்தே இங்கு வழிபாடு நடைபெற்று வரு கிறதாம். திருவிழாக் காலங்களில், பிராமணர் ஒருவர் வந்த பின் னரே தீபாராதனை நடைபெறுமாம்.[22]

* * *


பொன்னையா சுவாமி சந்நிதியில், இருபுறமும் பெரிய சூலாயுதங் கள் இருக்க, நடுவில் மேடையில், வலக்கையில் கத்தி ஏந்தி, இடக் கையில் கதாயுதம் வைத்துக்கொண்டு பொன்னன் நிற்கிறார். வலப் புறம் சரிந்த தலைமுடிக் கொண்டை, உருட்டி விழித்த கண்கள், கறுகறுவெனும் மீசை, காது — கழுத்து — கைகளில் பழங்கால அணிகலன்கள் — பார்த்தாலே சிறிது அச்சத்தை ஊட்டும் தோற் றந்தான். இவருடைய தோள்களில் முன் இரு கால்களையும் ஊன் றிக், கனைப்பது போன்ற தோற்றத்துடன், புறப்பட ஆயத்தமாய் இருக்கும் நிலையில் குதிரை நிற்கிறது. பொன்னையா, மற்றும் குதிரைச் சிலைகள் சுதை வேலைப்பாடுகளே.

இவர் குடுமியாமலையிலிருந்து சுக்குமாந்தடிவழி கொண்டு வரப் பெற்றவர் என்று, முன்னர் அர்ச்சகர் கூறக் கேட்டோம். ஹரிஜன இனத்தவரான இவர், புதுக்கோட்டைத் தனியரசில் (சமஸ்தானம்) காடு காவலராக இருந்தவர் என்றும், வெள்ளைக் குதிரையில் ஏறி எங்கும் சுற்றிவருவார் என்றும், மக்கள் இவரிடம் மட்டற்ற மரி யாதை கொண்டிருந்தனர் என்றும், இறந்த பின்னரும் இவருக்கு மரியாதை தெரிவிக்குமுகத்தான், இங்கு சிலை எடுத்து வழிபாடு செய்து வருகின்றனர் என்றும், அதன் காரணமாகவே இவருக்கு மது நிவேதனம் செய்யப் பெறுகிறது என்றும் கூறுவாரும் உளர். நகரத்தார்கள் இவருக்கே அதிகம் அஞ்சுகின்றனர் என்றும், சுருட்டு இவருக்கு நிவேதனம் செய்யப்பெறுகிறது என்றும், வெளிநாட்டு மதுபானங்கள் கூடப் படைக்கப்பெறுகின்றன என்றும் கூறப்பெறு கிறது.[23] இக்கோயிலில் கௌளி திருவுளம் கேட்பது வழக்கமாம். தெற்கே கௌளி சொன்னால் நல்லது; வடக்கே சொன்னால் தீயது என்று கருதப் பெறுகிறது.

04.02.1968ல் பொன்னையா கோயில் புதுப்பித்துக், குடநீராட்டு நடைபெற்றிருக்கிறது. ஆனால் பொன்னையாவும் அவருடைய குதிரையும், வண்ணம் தீட்டப்பெற்றுப் புதுமெருகுடன் காட்சி தரு கின்றனர்.

இக்கோயிலுக்கு அடிமைப்பட்ட நகரத்தார்கள் புதுக்கணக்குப் போடும் போது, பொன்னையா சுவாமி பெயரால்தான் வரவு வைத்துக் கொள்வார்களாம்.[24]

* * *



மங்களத்தின் திருவுருவம்

அர்ச்சகர் கூற்றுப்படி திங்கள், வெள்ளிக்கிழமைகளில் எந்த நேரமும் கோயிலில் வழிபாடு செய்யலாம்; மற்ற நாட்களில் காலை 11 மணி வரை கோயில் திறந்திருக்கும்; நாள்தோறும் இங்கு இரு வேளை பூசை நடைபெறுகிறது.

பொன்னன் சந்நிதிக்குத் தெற்கே, சுற்றுச்சுவருடன் கூடிய திறந்த வெளிச் சந்நிதி ஒன்று காணப்பெறுகிறது. அதனைச் சின்னக் கறுப்பர் சந்நிதி என்று கூறுகின்றனர்.

கோயிலின் பின்புறம் உள்ள கவனிப்பாரற்ற நந்தவனம், இத்தனை ஊர் நகரத்தார்களில் யாருடைய கவனத்தையும் ஈர்க்காமல் போனது விந்தைதான்!

பரவும் சொல்மாலை

ஐயனார், பத்ரகாளி ஆலயத்தின் முன்னின்று
மெய்யாகக் காத்துவரும் மேலோனைக் — கைகூப்பிப்
பொன்னையா என்று புகன்றாலே ஓர்முறைதான்
என்னையா ஈவான் எலாம்.

— பழ. கறுப்பையா, மேலைச்சிவபுரி

குறிப்பு விளக்கம்:

— மூலமாகவுள்ள நிதியை எடுத்தளிக்கும்...
1. பொ. ஐயாக்கண்ணு வேளார், மூலங்குடி
2. கிருஷ்ணமூர்த்தி ராவ், மூலங்குடி
3. நந்தனார் கீர்த்தனை
4. ஆர்.எம். ஏகப்பன், கோட்டையூர்
5. நா. சுந்தரம், குழிபிறை
6. இராமு. விசுவநாதன், நெற்குப்பை
7. ஆர்.எம். ஏகப்பன்., க.வீ.மு.ப.கதி. பழனியப்ப செட்டியார்,கோட்டையூர்
8. சுப.பழ. பழனியப்ப செட்டியார், வேகுப்பட்டி
9. நா. இராமசாமி, குழிபிறை., நா. சுந்தரம்
10. இராம. விசுவநாதன்
11. ம. சிவகுமார் பட்டர், மதுரை
12. பொ. ஐயாக்கண்ணு வேளார்
13. தெய்வத்தின் குரல் — ஐந்தாம் பகுதி
14. பொ. ஐயாக்கண்ணு வேளார்
15. ம. சிவகுமார் பட்டர்
16. பொ. ஐயாக்கண்ணு வேளார்
17. மு. பழனியப்பன், வேந்தன்பட்டி
18. பொ. ஐயாக்கண்ணு வேளார்
19. எம்.எஸ்.எஸ்.பி. சுப்பையா செட்டியார், புதுப்பட்டி
20. ஆர்.எம். ஏகப்பன், மு. பழனியப்பன், சுப.பழ. பழனியப்ப செட்டியார், நா. சுந்தரம்., வெ.சித.அழ. வெங்கடாசலம் செட்டியார், கோட்டையூர் ஆகியோரின் தகவல்கள்
21. நா. சுந்தரம், சுப.பழ. பழனியப்ப செட்டியார்
22. பொ. ஐயாக்கண்ணு வேளார்
23. வெ.சித.அழ. வெங்கடாசலம் செட்டியார், மு. பழனியப்பன், சுப.பழ. பழனியப்ப செட்டியார், ஆர்.எம்.ஏகப்பன், க.வீ.மு.ப.கதி. பழனியப்ப செட்டியார்
24. இராம. விசுவநாதன்

உ

மண்ணினார் கொண்டேத்தும் மதுக்காரை நாச்சி

(54. மதுக்காரை நாச்சியம்மன் திருக்கோயில், செவலூர்)

முயல்வேட்டை ஆடிவந்த அம்பலக்காரர்கள், காரைப் புற்றுக்குள் பதுங்கிக்கொண்ட முயலைப் பிடிக்கப் புதரை வெட்டியபோது, அதன் கீழிருந்த சிலை ஒன்றின் தலையில் வெட்டுப்பட்டு இரத்தம் கசிந்தது. தோண்டிப் பார்த்தபோது அது அம்பாள் சிலையாக இருக்கக்கண்டு, இங்கு கூரைக்கூடம் அமைத்து வழிபட்டு வரலாயினர். அதுவே இப்போதும் வெட்டு வடுவுடன் காணப்பெறும் மதுக்காரை நாச்சியம்மன் என்றும்,[1] செவலூர்[2] செவிலிக் கண்மாயின் மேற்குப் பகுதியிலுள்ள மேல்தளத்தில், மதுக்காரைச் செடியின் அடியிலிருந்து தோன்றியதால், அம்பிகைக்கு மதுக்கா(ை)ர நாச்சி என்னும் பெயர் வழங்கி வருகிறது என்றும்,[3] இப்போது நாம் தரிசிக்க வந்திருக்கும் அம்பிகையின் தோற்ற வரலாற்றினைக் கூறுகின்றனர்.

காரை என்பது ஒரு முட்புதர்[4(i)] என்பதைக் கொண்டு, காரைப் புதருக்குள்ளிருந்து தோண்டி எடுக்கப்பெற்ற தேன் போன்று இனிமையான அம்பிகை என்றும், மதுக்காரை என்பது ஒரு பூண்டுச் செடி என்று கொண்டு[4(ii)], அச்செடியின் கீழிருந்து கிடைத்த அம்பிகை என்றும் கொள்ளலாம். (அன்னையை மதுவநாயகி[5] என்றும் அழைக்கின்றனர்.) காரைப் புதரோ, மதுக்காரைச் செடியோ எதுவாயினும், மூலங்குடிக் காளியைப் போன்று இந்த அம்மையும் நிலத்திலிருந்து எடுக்கப்பெற்றவளே என்பது உறுதியாகிறது.

மூலங்குடியிலிருந்து திரும்பவும் கொப்பனாபட்டிக்கு (கொன்னையூர் முத்துமாரியம்மன் கோயிலருகில்) வந்து, அங்கிருந்து குழிபிறை வழியாகப் புதுக்கோட்டை செல்லும் சாலையில், குழிபிறைக்கு 3 கி.மீ. முன்னதாகவே வலப்புறம் திரும்பும் செவலூர் விலக்கில் ஒன்றரைக் கி.மீ. சென்று செவலூரை அடைந்து, ஊரின் எல்லையில் மரங்கள் அடர்ந்த சூழலில் உள்ள கோயிலை அடையலாம். காலையில் ஒரு முறையும், மாலையில் ஒரு முறையுமே செவலூருக்குப் பேருந்து வசதி உண்டு. சொந்த வாகனமும் இல்லாமல்,

ஏனைய நேரங்களில் அங்கு செல்ல வேண்டுமானால், 'நட(டா) ராஜா (நடடா)தான்!'

* * *

கோயிலுக்கு வருபவர்கள், இங்குள்ள முன்னோடிக்கு ஒன்றேகால் பணம் அல்லது ஐந்தேகால் பணம் (65 காசு) காணிக்கை செலுத்து வது வழக்கமாம்.[6] அந்த வழக்கை மீறாமல் நாமும் முன்னோடிக்குக் காணிக்கை செலுத்திவிட்டே, முன்னோடிக்கும் கோயிலுக்கும் இடை யிலுள்ள சாலையைக் கடந்து, கோயிலுக்குச் செல்ல முற்படும் போது அர்ச்சகர் இன்னொரு தகவலும் கூறுகிறார். இந்த முன் னோடிக்கு, முன்னர் சாராயம், கள் படைக்கப் பெறுவது உண் டாம். இப்போது 'கலர்', மற்றும் பொரி கடலை நிவேதனம் செய் கிறார்களாம்.

02.09.1990ல் நான்காம் முறையாகத் திருக்குட நீராட்டு நடை பெற்ற இந்தக் கோயில், அழகிய தோற்றத்துடன் திகழ்கிறது. நுழை வாயிலின் மீது சிறிய கோபுர அமைப்பும், சூலாயுதத்தால் அரக்க னுக்கு மறக்கருணை புரியவிருக்கும் எட்டுக் கரத்துடன் கூடிய அன் னையின் அழகுருவமும், நம்மை வரவேற்கின்றன. 1990ல் பூலாங் குறிச்சி நகரத்தார் குடும்பத்தினர் இந்தத் திருப்பணியைச் செய்துள் ளனர். கோயிலின் திருச்சுற்றுச் சுவர், 1942ல் காரைக்குடி நகரத் தார் பெருமக்கள் சிலரின் முயற்சியால் அமைக்கப் பெற்றதாகும். அவர்கள்தாம் மற்றவர்களின் துணையுடன் 07.05.42ல் முதலா வது திருக்குட நீராட்டு விழாவினை நடத்தியிருக்கின்றனர்.

1960ல் நடைபெற்ற இரண்டாவது குடமுழுக்குப் பற்றிய விவரங் கள் ஏதும் கிடைக்கவில்லை.

மூன்றாவது குடமுழுக்கு, 07.07.73ல் உள்ளூர் மக்களின் உதவி யுடன் காரைக்குடி, மிதிலைப்பட்டி நகரத்தார்கள் முன்னின்று நடத்தியதாகும்.

வெளியில் உள்ள ஆழ்குழாய்க் கிணறு, 1989ல் குருவிக்கொண் டான்பட்டி நகரத்தார்களால் அமைக்கப்பெற்றதாயும், உள்ளே உள்ள ஆழ்குழாய்க் கிணறு, நீர்க்குழாய் வசதிகள், 1990ல் மிதி லைப்பட்டி நகரத்தார்களால் அமைக்கப் பெற்றதாயும் கூறப்பெறு கிறது.[7]


கடந்த சில ஆண்டுகளாக வருஷாபிஷேகம் (குடநீராட்டு நடைபெற்ற நாளின் நினைவாக ஆண்டுதோறும் நடைபெறும் அபிஷேக ஆரா தனைகள்) ஆடி மாதம் முதல் ஞாயிறன்று இங்கு சிறப்பாகக் கொண்டாடப்பெற்று வருகிறது.[8] அந்த நாளில் குழந்தைகளுக்குத் தொட்டில் கட்டுவது உண்டாம்.[9] ஏலமும் அந்த நாளில் நடை பெறுகிறது.[10]

120 ஆண்டுகளாக நிறுத்தப் பெற்றிருந்த அம்பாள் ஊர்வலம், நகரத்தார் முயற்சியால் மீண்டும் தொடங்கியிருக்கிறது.[11] முன்பு திருவிழாக் காலத்தில் அம்பாள் புறப்பாடு நடைபெற்று வந்தது ; பின்பு அந்த நேரத்தில் ஊரில் தீப்பற்றிக் கொண்டதைத் தொடர்ந்து, திருவிழாக்கள் நிறுத்தப்பெற்றன. (இதற்குக் காரணம் திருவிழாக் காலத்தில் ஊரில் உலக்கைச் சத்தம் கேட்கக்கூடாது; மாத விலக்

கானோர் ஊரில் இருக்கக் கூடாது என்பன போன்ற கடுமையான விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படாது போனதாக இருக்கலாம் என்று கூறுகின்றனர்.) அண்மையில் கும்பாபிஷேகம் நடைபெற்றபோது, அம்பாள் புறப்பாடு கோயிலைச் சுற்றி மட்டும் நடைபெற்றது. அடுத்தடுத்த ஆண்டுகளில் தொடர்ந்து இது நடைபெறும் என நம்புகிறோம் என்கிறார் அர்ச்சகர்.

* * *

கோயிலினுள் சென்றதும், கருவறையை நோக்கித் திரிசூலம், சிங்க வாகனம், பலிபீடம் ஆகியவை இருப்பதைக் காண்கிறோம். திரி



அலங்கார நாயகி

சூலத்துக்கு முன்னால் உள்ள நெருப்புக் குண்டத்தில், அக்கினி ஆத்தாள் படைப்புக்காரர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில், நாள் தோறும் நெருப்பு மட்டும் போடப்பெறுகிறதாம். அடுத்துள்ள மண்டபம் மிதிலைப்பட்டி நகரத்தார்கள் கட்டியது.[12] முதலில் இது ஓட்டுக்கூடமாகச் சிதைந்த நிலையில் இருந்தது; ஊரார் முயன் றும் ஒன்றும் நடக்கவில்லை; பின்னர் நகரத்தார்களின் முயற்சியால் இது கட்டி முடிக்கப்பெற்றது என்கிறார் அர்ச்சகரான பட்டர்.

அதைக் கடந்து உள்ள மகா மண்டபத்தில் வலப்புறம் பைரவரும், இடப்புறம் சுப்பிரமணியர், நாகலிங்கம் ஆகியவையும், கருவறைக்கு முன்னால் இருபறமும் துவார சக்திகள், கருவறையின் வலப்புறம் விநாயகர், மற்றும் பூதங்களின் சிலைகள் ஆகியவையும் காணப் பெறுகின்றன.

கருவறையில் அருட்காட்சி கொடுக்கும் அன்னையை மதுக்காரை நாச்சியம்மன் என்பதற்கு மாறாக, மதுவநாச்சியம்மன் என்று சொல் வதே பொருத்தமாக இருக்கலாம். காரணம், ஆதியில் அம்பலக் காரர்கள் (மதுக்)காரையின் கீழ்த் தோண்டியெடுத்த — வெட்டுப் பட்ட வடுவுடன் கூடிய ஆதிசக்தி (மதுக்காரை நாச்சி) இன்னமும் கருவறையில்தான் விநாயகரின் அருகில் குடிகொண்டிருக்கிறார் என்றபோதிலும், இப்போது உள்ள மூலவர் புதியவரே! இந்தச் சிலை மாற்றம், கோயில் கூரைக்கூடமாக இருந்த காலத்திலேயே நிகழ்ந்ததாம்.[13]

அம்பாளுக்கு முழு வெள்ளி அங்கியும், சின்ன — பெரிய கறுப்பர் களுக்கு வெள்ளித் தலைப்பாகைகளும் உள்ளனவாம். சில கோயில் களில் சிறப்பான நிவேதனங்கள் படைக்கப்பெறுவது போன்று, இங்கும், நேர்ந்து கொள்வோரால் 'அமுதுகறி' நிவேதனம் செய்யப் பெறுகிறது. (பெரும்பாலும் மிதிலைப்பட்டி நகரத்தார்கள் இத னைப் படைக்கின்றனர்.) சேர்மானங்களின் விவரமும், செயல் முறையும் (recipe) வேண்டுமா? ஒரு கத்தரிக்காய், ஒரு வாழைக் காய், பாசிப்பயறு இவற்றைப் போட்டுத் தாளிக்காமல் குழம்பு வைத்து, வெண்பொங்கலில் நெய், தயிர், சர்க்கரை சேர்த்துப் படைத்தால், அதுதான் அமுதுகறி!

* * *

அரிமழம் (இலுப்பைக்குடி 6), இராங்கியம் (இரணிக்கோயில் 26), காரைக்குடி (பிள்ளையார்பட்டி 64), குருவிக்கொண்டான்பட்டி (இரணிக்கோயில் 32), குழிபிறை (மாத்தூர் மணலூர் 9, இலுப் பைக்குடி 2), கொத்தமங்கலம் (இலுப்பைக்குடி 6), கொப்பனா பட்டி (இரணிக்கோயில் 3), செவ்வூர் (இரணிக்கோயில் 10), பூலாங்குறிச்சி (இலுப்பைக்குடி 32), மிதிலைப்பட்டி (இரணிக் கோயில் 41), வலையபட்டி (இரணிக்கோயில் 8, இலுப்பைக் குடி 15) நகரத்தார்கள், மதுக்காரை நாச்சியையும், கறுப்பரையும் குலதெய்வங்களாகக் கொண்டுள்ளனர்.[14] ஈராண்டுகளுக்கு ஒரு முறை இந்த 11 ஊர் (ஏகாதச) நகரத்தார்களில் ஒருவர் தெரிவு செய்யப்பெற்றுக் கோயில் தொடர்பான நிர்வாகம் — மராமத்து ஆகியவற்றைக் கவனிக்கிறாராம்.[15]

நகரத்தார் வீட்டுக் குழந்தைகளுக்கு அம்பிகையின் பெயரை ஒட்டி

மதுவப்பன், நாச்சம்மை, நாச்சியப்பன், மதுவரசி, மதுக்காரநாச்சி என்னும் பெயர்கள் வைக்கப் பெறுகின்றன. பெற்றோர் விரும்பும் பெயருடன், அம்பாளின் பெயரையும் சேர்த்து, அம்பாள் முன் பூக் கட்டிப் போட்டுப் பெயரைத் தெரிவு செய்வார்களாம்.[16]

* * *

பிராகாரத்தில், கட்டுமானம் ஏதுமில்லாமல் மரத்தடியில் செம் புறைக்கல் பாவப்பெற்ற தளத்தில் பரிவார தெய்வங்கள் வைக்கப் பெற்றுள்ளன. முன்பு இந்த இடத்தில் மிகப் பழைய புளியமரம் ஒன்று இருந்ததாகவும், 1975வாக்கில் பாதியாகப் பிளந்து விழுந்து விட்டது என்றும், சிறிய பகுதியே நிலத்தில் இருக்க, மரம் கறுப் பருக்கு மேல் தொங்கிக் கொண்டிருந்தது என்றும், பின்னர் அது, சிலைகளுக்கு எந்தச் சேதமும் இல்லாமல் அகற்றப்பெற்றது என் றும் கூறப்பெறுகிறது.

பட்டவர், முத்துக்கறுப்பர் (மிகச் சிறிய — அழகிய சிலைகள்), சின்னக் கறுப்பர் (பெரிய சிலை), பெரிய கறுப்பர் (சிறிய சிலை), நாகர்கள், மண்ணினாலான மங்கைக்கு அரசன், மங்கைக்கு அரசி பேச்சியம்மன் சிலைகள் ஆகியவை, (புதிய) மரத்தடியில் காணப் பெறுகின்றன. பெரிய — சின்னக் கறுப்பர்களின் சிலைகள் மிக அழகாக வடிக்கப் பெற்றுள்ளன. பேச்சியம்மன் சிலை, சிதைவுற் றதைத் தொடர்ந்து, முதல் குடநீராட்டு விழாவின்போது மாற்றப் பெற்றதாம்.

1990 குடநீராட்டு விழாவிற்கு முன்னதாகக் கறுப்பர் பீடம் உயர்த் தப் பெற்றதோடு, பிடிமண் கொண்டுவந்து சின்னக்கறுப்பரின் அருட்சக்தி பெருகவும் வழி வகுக்கப்பெற்றதாம்.[17]

* * *

காலை எட்டரை மணியிலிருந்து பிற்பகல் 12½ வரையிலும் கோயில் திறந்திருக்கும். அப்போது ஒருமுறையும், மாலையில் ஏதேனும் ஒரு நேரத்தில் ஒரு முறையுமாக, இரு வேளைப் பூசை இங்கு நடை பெறுகிறது. இவற்றிற்கு இடைப்பட்ட நேரத்தில் அன்னையைத் தரிசிக்க அடியார்கள் விரும்பினால், குழிபிறையில் சிவன் கோயி லின் அருகிலுள்ள உலகநாயகிபுரத்திலிருந்து அர்ச்சகர்களான உவச் சப் பட்டர்களில் முறைகாரரை அழைத்துவந்து வழிபாடு செய்து மகிழலாம்.

கோயிலின் அருகிலுள்ள நந்தவனம் மிதிலைப்பட்டி நகரத்தார் குடும் பத்தினர் அமைத்ததாம். அது சரிவரப் பராமரிக்கப் பெறாமல் இருக்கிறதோ என எண்ணத் தோன்றுகிறது. இறைவனுக்குச் செய் யும் மலர்த்தொண்டு மாபெரும் தொண்டு! ''ஆறும் மதியும் அணியும் சடைமேல் ஏறும் 'மலரை'',[18] நந்தவனம் அமைத்து நாள் தோறும் கொடுக்க, நாம் என்ன புண்ணியம் செய்திருக்க வேண் டும்? அதைப் பேணாது விடலாமா?

பரவும் சொல்மாலை

1. திருப்பள்ளியெழுச்சி:

புள்ளினம் கூவிஉன் நல்லருட் புகழ்கூறிப்
பூபாளம் இசைக்குதம்மா!

அள்ளிவரும் மயில்உனைக் காணவே வாயிலில்
அகிலமே சூழ்ந்ததம்மா!
தெள்ளிய கங்கைநதி தேவிஉனை நீராட்டத்
தேடியே வந்ததம்மா!—எம்
உள்ளே ஒளிர்கின்ற ஒளிமயமே! செவ்வல்நகர்
உமையே!கண் மலர்ந்திடம்மா!

— திருமதி சகுந்தலா வெங்கடராமன், சென்னை

2. புரிசடா டவியும், புண்டர நுதலும்,
பொருசிலைப் புருவ்மும், கருணை
சொரியுமுக் கண்ணும், வதனபங் கயமும்,
சூலமும், மருவுநல் அபய
வரதமும் ஆய கரதல நான்கும்,
செவ்வலூர் மதுவநா யகிபொன்
திருவடி மலரும், என(து)இரு விழியும்
சிந்தையு நிறைந்துநின் றனவே!

— மதுவநாயகியம்மை பதிற்றுப் பத்தந்தாதி,
பி.ராம.கு.மெ. மெய்யப்ப செட்டியார்

குறிப்பு விளக்கம்

— மண்ணினார் — மண்ணில் வாழும் மக்கள்

1. அம்பிகாபதி பட்டர், குழிபிறை
2. சேவலூர், செவ்வலூர் என்றும் இவ்வூரைக் குறிப்பிடுகின்றனர்
3. அருள்மிகு மதுக்கார நாச்சியம்மன் பாமாலை, தல வரலாறு
4 (i) A kind of thorny shrub, Thorny Webera — A Dictionary of Tamil and English, V.Visvanatha Pillai
(ii) A plant, the young shoots and bark of which are used in dysentry
5. மதுவம் — கள்,தேன்
6. அம்பிகாபதி பட்டர்
7. இந்தத் திருப்பணித் தகவல்கள் 1990ஆம் ஆண்டுக் கும்பாபிஷேக மலரிலிருந்து தொகுக்கப் பெற்றவை
8. குடநீராட்டு விழா ஆவணியில் நடைபெற்றிருந்தாலும், ஆடி மாதத்தில் மங்கள நிகழ்வுகள் குறைவு என்பதாலேயே, அந்த மாதத்தில் வருஷாபிஷேகம் நடத்தப்பெறுகிறது. — அம்பிகாபதி பட்டர்
9. கா. மாணிக்கம், மதுரை
10. டாக்டர் சோம. சொக்கலிங்கம், பூலாங்குறிச்சி
11. கும்பாபிஷேக மலர்
12. கும்பாபிஷேக மலர்; அம்பிகாபதி பட்டர்
13. அம்பிகாபதி பட்டர்
14. கும்பாபிஷேக மலர் '90. இத்தகைய விரிவ்ான புள்ளிவிவரத்தைத் தொகுத்துள்ள இக்கோயில் நகரத்தார்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். மற்ற கோயில்களும் ஓரளவாவது இதைப் பின்பற்றலாமே!
15. வே. முத்தையா, மிதிலைப்பட்டி
16. கா. மாணிக்கம், டாக்டர் சோம. சொக்கலிங்கம்; டாக்டர் அண. ஆண்டியப்பன், இராங்கியம், வே. முத்தையா
17. கும்பாபிஷேக மலர்
18. 'கங்கையும் பிறையும் அணியும் சடைமீது அமரும் மலர்' — பெரியபுராணம்

உ

அன்பினில் விளைந்த அடைக்கலங்காத்தாள்

(55. அடைக்கலங்காத்த அம்பாள் திருக்கோயில், விரையாச்சிலை)

சைவமும் தமிழும் இணைபிரியாதவை; பிரிக்கமுடியாதவை என்பார்கள். இந்தக் கூற்று நம் குலதெய்வக் கோயில்கள் அமைந்துள்ள ஊர்களுக்கும் பொருந்திவரும் போலும். நகரத்தார்களின் குலதெய்வங்களாக விளங்கும் முக்கியமான மூன்று தெய்வங்கள் ஐயனார், கறுப்பர், அம்பாள் ஆகியோராவர். இவர்களில் தமிழ்ப்பயிர் வளர்க்கும் இரு நிலங்களில் கோயில் கொண்டுள்ள ஐயனார், கறுப்பர் ஆகியோரை, அடுத்தடுத்துக் கண்டு வந்தோம். மூன்றமவராகிய அம்பிகை குடிகொண்டுள்ள ஊரான விரையாச்சிலை, சைவ (சித்தாந்த)ப் பயிர் விளைந்த நிலம்! கடல் கடந்த நாடுகளிலும் சைவ சித்தாந்தத்தைப் பரப்பிய சித்தாந்த வித்தகர் பிறந்து — வளர்ந்த பெருமைக்குரிய நிலம்! அந்த மனிதப் புனிதர் வாழ்ந்த புனித மண்ணை — புண்ணிய பூமியை வணங்கி, அங்குள்ள, இராயவரம் நகரத்தாரின் குலதெய்வக் கோயிலான அடைக்கலங்காத்தாள் கோயிலுக்கு உங்களை அழைத்துச் செல்கிறேன்.

* * *

அன்னையின் கருணைக்குக் களங்கம் விளைவிக்கும் வகையில், அவள், குழந்தைகளைக் கொன்று அங்கம் அங்கமாகத் தூக்கி எறிந்தாள் என்று, முன்னர் சென்றுவந்த சில கோயில்களில் கூறக்கேட்டோம். ஆனால் இங்கு அந்தக் கதையைச் சற்று வித்தியாசமான வகையில் கேள்விப்படுகிறோம்.

வாராப்பூர் அரிவரத்தார் செட்டியார்கள் இந்த ஊரில் வாழ்ந்த போது, சிறியதொரு கோயிலில் இந்த அம்பாளை வைத்து வழிபட்டு வந்திருக்கின்றனர். அப்போது இவளுக்குப் பெயர் நாடுகாத்த அம்பாள். அந்தக் காலகட்டத்தில், அவர்களில் ஒரு குடும்பத்தார், தங்கள் குழந்தையைக் கோயிலினுள் விட்டுச் சென்றுவிட்டனர். கோயில் திருக்காப்பிடப்பட்ட பின்னர்தான் தெரிந்தது, குழந்தை சந்நிதியில் இருக்கிறது என்ற விஷயம். அம்பாளிடம் முறையிட்டனர். 'காலையில் வந்து அழைத்துச் செல்லுங்கள்' என்று அம்பாள் கூறினாள். அதுபோல் காலையில் வந்தபோது, குழந்தை

தூங்கி எழுந்ததுபோன்று பெற்றோரை நாடி ஓடிவந்தது. அன்றி லிருந்துதான் இவள், அடைக்கலங்காத்த அம்பாள் ஆயினாள். அதிலிருந்து அந்தச் சமுகத்தினருக்குத்தான் இங்கு முதல் மரியாதை கொடுக்கப் பெறுகிறது.[1]

* * *

செவலூரிலிருந்து மீண்டும் பொன்னமராவதி — புதுக்கோட்டை பிரதான சாலைக்கு வந்து, குழிபிறை வழியாகப் பனையப்பட்டியை அடைகிறோம். அங்கிருந்து புதுக்கோட்டைக்கு நற்சாந்துபட்டி வழி யாக ஒரு பாதையும், விரையாச்சிலை வழியாக ஒரு பாதையும் உள்ளன. அவற்றில் விரையாச்சிலைப் பாதையில் சென்றால், விரையாச்சிலை ஊரின் மையத்தில் வலப்புறம், இந்த அம்பிகை கோயில் அமைந்திருக்கிறது. கோயிலுக்குச் செல்லும் பாதையில் உள்ள தோரணவாயில் நம்மை வரவேற்கிறது.

முதலில் நாம் காண்பது, பல தூண்களுடன் கூடிய பெரிய கல் மண்டபம். இந்த மண்டபத்தில் நான்கு மேடைகள் அமைக்கப்பெற் றுள்ளன. அவற்றுக்கு நடுவில் மேல் விதானத்தில் பன்னிரு இராசி கள் பொறிக்கப்பெற்றுள்ளன. இந்த மண்டபத்தையும் கோயிலை யும் இணைத்து நிற்கிறது மூன்று நிலை இராஜகோபுரம்.

உள்ளே பதினாறுகால் மண்டபத்தில் பலிபீடம், திரிசூலம், கொடி மரம் ஆகியவற்றுக்கு முன்னால் யக்ஷிணியின் சிலை. இவள் துர்க் கைக்கு ஏவல் செய்யும் பெண்.



கண்ணீரைத் துடைத்துவிட ஓடிவா அம்மா!

இந்த மண்டபத்தைக் கடந்து மகா மண்டபமும், கருவறையும் உள் ளன. கருவறை வாயிலின் இருபுறமும் பெண் பூதங்கள் காணப் பெறுகின்றன. அவற்றுக்கு முன்னால், கோயில் திருப்பணி செய் தோர் என நம்பப்பெறும் ஓயாமாரித் தேவர், பாண்டித் தேவர்

ஆகியோரின் சிலைகள் உள்ளன. மற்றும், மகிழவன அம்பாள் என்னும் திருப்பெயருடன் கூடிய உற்சவத் திருமேனியும் உள்ளது.[2]

கருவறையில் மூலவர், பெரிய சிலை வடிவம். வடக்குப் பார்த்த சந்நிதி. மற்ற கோயில்களைப் போன்று அல்லாது, குழந்தையைப் பாதுகாப்புடன் உரியோரிடம் ஒப்படைத்து, அடைக்கலங்காத்தாள் என்னும் திருப்பெயரினைப் பெற்ற மகிஷாசுரமர்த்தனியான தேவி. இராயவரம் நகரத்தார் ஆண்டுதோறும் வைகாசி மாதம் முதல் வெள்ளிக்கிழமை அம்பிகைக்குப் பெரிய அளவில் அபிஷேக ஆரா தனைகள் செய்கின்றனர்.

வைகாசி மாதம் இக்கோயிலில் நடைபெறும் திருவிழாவின் பத் தாம் நாளன்று, இவர்களின் ஊஞ்சல் மண்டகப்படி நடைபெறு கிறது. (இவர்களுடைய மடம் அருகில் உள்ளது)

இந்தப் பத்து நாள் திருவிழாவின்போது, ஒவ்வொரு நாளும் அம் பாள் வெளியில் எழுந்தருளுவது உண்டு.

இக்கோயிலுக்கு நகரத்தார்கள் ஏராளமாகத் திருப்பணி செய்துள் ளனர் என்று, இங்கு அர்ச்சகர்களாக உள்ள உவச்சப் பட்டர்கள் நன்றிப் பெருக்குடன் கூறுகின்றனர்.

அர்த்த மண்டபத்தில் விநாயகரும், நாகலிங்கமும் உள்ளன.

அன்னையை வலம் வர முற்படுகிறோம். கிழக்குப் பிராகாரத்தில் தனிச் சந்நிதியில் தெற்கு வாசல்கறுப்பர் எனப்பெறும் பதினெட்டாம் படி முத்துக்கறுப்பர் தரிசனம் தருகிறார். பெயருக்கேற்ப இது தெற்குப் பார்த்த சந்நிதிதான். வெளி மண்டபத்தில் இரு பலியீடங்களும், வாயிலை ஒட்டித் தண்டாயுதபாணியும், அடுத்துச் சிங்கியான் அம் பலக்காரர் மகன் வெள்ளையனின் சிலையும் உள்ளன.

மேற்குப் பிராகாரத்தில் சப்த கன்னியர், விநாயகர், நாகலிங்கம் ஆகியோர் ஒரு சந்நிதியிலும், முத்துமாரியம்மன் மற்றொரு சந்நிதி யிலும் காணப்பெறுகின்றனர்.

இந்து அற நிலையத்துறைக் கோயிலான இது, முழுமையாகக் கல் திருப்பணி செய்யப் பெற்றுள்ளது. இங்கு காலை, உச்சிக்காலம், மாலை, அர்த்தயாமம் என நான்கு வேளைப் பூசை நடைபெறு கிறது.

1991ல் ஒருமுறை இங்கு திருக்குட நீராட்டு நடைபெற்றிருப்பதாகக் கூறும் அர்ச்சகர்கள், அதற்கு முன்னர் இருமுறை குடமுழுக்கு நடை பெற்றிருக்கலாம் என நம்புகின்றனர்.

நகரத்தார் வீடுகளில் நடைபெறும் திருமணங்களுக்கு இங்கிருந்து மாலை கொண்டு சென்று கொடுப்பதும், குழந்தைகளுக்கு முடி இறக்குவதும் இங்கு வழக்கமாக மேற்கொள்ளப் பெறுகின்றன.

* * *

அம்பாளுக்குத் திட்டுக்குட்டிப் பூசை என்றும், சக்தி பூசை என்றும் இரு உயிர்ப்பலிப் பூசைகள் நடைபெறுகின்றன. சக்திபூசை என்பது எட்டாம் நாள் திருவிழாவின்போது மேற்கொள்ளப்பெறுகிறது. இதைப் பற்றி அதிகம் விவரிக்காமல் விடுத்து, சக்தி உபாசகரான வி.எஸ். சங்கரன் என்பவர், அம்பாளுக்கு உயிர்ப்பலி கொடுப்பது பற்றிக் கூறியிருப்பதை இங்கு குறிப்பிட விழைகிறேன்:

வாமாசாரத்தில்[3] பலியிடும் வழக்கம் இருக்கிறது. பலி என்பது நம் மிடம் உள்ள உட்பகைவர்களாகிய காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாத்சர்யங்களை ஜபத்திலும், ஹோமத்திலும் தியா கம் செய்வதேயாகும்.

அவை பின்வருமாறு: வெள்ளாடு — காமம்; எருமை — குரோதம் (கோபம்); பூனை — லோபம் (கருமித்தனம்); செம்மறியாடு — மோகம் (பெண்ணாசை); நரன் — மதம் (ஆணவம்); ஒட்டகம் — மாத்சர்யம் (பொறாமை). இவ்வாறு காமம், கோபம் போன்ற வற்றை நீக்கிக் கொள்ளாமல், அடையாளச் சொற்களாகக் குறிப் பிடப்பெற்ற மிருகங்களையே பலியிடுவது, ஜகன்மாதாவாகிய காளிதேவிக்கு ஒவ்வாத செயலாகும்.[4]

18ஆம் நூற்றாண்டின் புகழ்பெற்ற தெலுங்குக் கவிஞரான கவி வேமனாவின் கூற்றும் இங்கு சிந்திக்கத் தக்கது. ''ஒருயிர் இன் னோர் உயிரைக் கொல்லுமானால், அது கடவுளையே கொல்வதற்கு ஒப்பாகும். இதற்கும் மேலாகச் சீவனும், சிவனும் ஒன்றென்பதை உணர வேண்டும்.... கருணையற்ற அக்கொலைமனம் எவ்வாறு இறைவன் திருவடியை அடையமுடியும்?''[5]

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

கொலையே களவு,கள் காமம்,பொய் கூறல்
மலைவான பாதக மாம்,அவை நீக்கித்
தலையாம் சிவன்அடி சார்ந்(து)இன்பம் சார்ந்தோர்க்(கு)
இலையாம் இவைஞானா னந்தத்(து) இருத்தலே.

திருச்சிற்றம்பலம்

— 10ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

1. அர்ச்சகர்கள்: மு.இராம. இராமச்சந்திர பட்டர், வேலுப் பட்டர், விரையாச் சிலை
2. திருமால் கோயில்களில் மூலவருக்கு ஒரு பெயரும், உற்சவருக்கு ஒரு பெய ரும் இருக்கும். (கள்ளழகர் கோயிலில் இதை அறிந்துகொண்டிருப்பீர்கள்). மதுரை சொக்கநாதர்(மீனாட்சி) கோயிலிலும், உற்சவருக்கு இளைய நாய னார், மதுரை நாயகர் என்னும் பெயர்கள் உண்டாம். இங்கும் அந்த முறையில் உற்சவர்க்குத் தனியானதொரு பெயர் கூறப்பெறகிறது.
3. வாமமதம் — சைவ சமயத்தின் உட்சமயத்துள் ஒன்று. இது சக்திக்குப் பரத் துவம் கூறும்.
4. ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம், அக்'94 — சுவாமி கமலாத்மானந்தரின் ஆன்மிக வினா — விடை
5. செந்தமிழ்ச் செல்வி, நவ'94 —'கவி வேமனாவின் கனிந்த உள்ளம்'கட்டுரை, சொ.ச. செந்திலாண்டவன்
"If one living being kills another it is like killing God himself, ponder over this and you will realise that Jiva and Siva are one..... How can merciless murderers attain salvation?" — Vemana's verses translated by G.Appa Rao in Annal of Oriental research.

உ

மெய்யடியார் விரும்பியேத்தும் மேலக்காட்டு ஐயனார்

(56. மேலக்காட்டு ஐயனார் திருக்கோயில், ரெண்டாவயல், விரையாச்சிலை)

கறுப்பர்: சுவாமி! தாங்கள் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருப்பது போல் தோன்றுகிறதே?

ஐயனார்: ஆமாம் முப்பலிக் கறுப்பரே! என் தொடர்பான ஒரு புதிர் இருக்கிறது; அதைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். இப்போது உம்மிடம் கூறுகிறேன், கேட்கிறீரா?

கறு: கரும்பு தின்னக் கூலியா? கேட்கத் தயாராக இருக்கிறேன் சுவாமி. இன்றைக்கு யாரும் வரமாட்டார்கள்... திங்கள், வெள்ளிக்கிழமைகளில் தானே இங்கு பூசை நடைபெறுகிறது. மற்ற நாட்களில் யாரும் விரையாச்சிலையிலிருந்து வேளாரை அழைத்து வந்தால்தானே நமக்குப் பூசை நடக்கும்? ஹூம்..(பெருமூச்சு விடுகிறார்)

ஐய: பெருமூச்சு விடாதீர். நம்முடையது போன்ற கோயில்களைப் பற்றி எழுதவிருக்கும் ஆசாமி இன்னும் சிறிது நேரத்தில் வந்துவிடுவான். அவன் வருவதற்குள் சொல்லி முடித்துவிடுகிறேன்.

கறு: சரி சுவாமி!

ஐய: இது நடந்தது 16ஆம் நூற்றாண்டில். அப்பைய தீட்சிதர், தாதாசாரியார் என்போர் காஞ்சிபுரத்தில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அப்பைய தீட்சிதர் சிறந்த சிவ பக்தர். சிவபெருமானின் உயர்வை வெகுவாகப் பறைசாற்றி வந்தார். ஒருநாள் அரசருடன், அவரும் தாதாசாரியாரும் கோயில் ஒன்றுக்குச் சென்றனர். அங்கு சாஸ்தா — நான்தான், சிலை ஒன்று இருந்தது. இங்கு நர்ன் இப்போது இருப்பதைப் போன்ற கோலத்தில்தான் அந்தச் சிலை இருந்தது. ஆனால் ஒரே ஒரு வேறுபாடு.

கறு: இங்கு நீங்கள் யோக சாஸ்தாவாக — தனியாக அமர்ந்

திருக்கிறீர்கள். அந்தச் சிலை, சுவாமியின் தேவியர் உடனிருக்கப், போக் சாஸ்தாவாக இருந்ததோ?

ஐய: இல்லை. அதுவும் தனியாக உள்ள சிலைதான். ஆனால், அதன் வலக்கை ஆள்காட்டி விரல், அதன் மூக்கில் இருந்தது.

கறு: (சிரித்து) ஏன், சளிப் பிடித்திருந்ததா?

ஐய: கதை கேட்பதானால், இந்தக் கிண்டலையெல்லாம் விட்டுவிட வேண்டும்.

கறு: மன்னித்துக் கொள்ளுங்கள் சுவாமி.... ஒருவேளை அந்தச் சிலையைச் செய்த சிற்பி, ஒரு மாற்றமாக இருக்கட்டுமே என்று அப்படிச் செய்திருக்கலாம் இல்லையா?

ஐய: ஊஹும்... அந்தக் காலத்தில் சிலை செய்தவர்கள் தங்கள் விருப்பத்திற்கு எதையும் செய்வதில்லை. அவர்களுக்குக் கிடைக்கும் தரிசனத்துக்கு ஏற்பவே சிலைகளைச் செய்து வந்தார்கள். அதனால்தான் பண்டையச் சிற்பங்களில் கலை நுணுக்கங்களும், வேலைப்பாடுகளும் மிகுந்திருந்தன; தெய்வீகமும் இருந்தது!

கறு: அப்படியானால் இதற்கு ஏதாவது காரணம் இருக்க வேண்டும், இல்லையா சுவாமி?

ஐய: இருந்தது. ஆனால் அதை அந்தச் சிற்பி சொல்லவில்லை. யாரொருவர், சாஸ்தாவின் மூக்கில் விரல் இருப்பதற்கான காரணத்தைச் சரியாகச் சொல்கிறாரோ, அப்போது அந்த விரல் வழக்க நிலைக்கு வந்துவிடும் என்று மட்டும் சொல்லியிருந்தாராம்.

கறு: யாராலுமே சொல்ல முடியவில்லையாக்கும்?..ம்ம்ம்ம்...

ஐய: நீர் கண்டுபிடிக்க முயல்கிறீரா?

கறு: நீங்களே பாக்கிக் கதையைச் சொல்லி முடித்துவிடுங்கள் சுவாமி

ஐய: முதலில் தாதாசாரியாரைப் பார்த்தார் அரசர். அவர் ஒரு சுலோகம் சொன்னார். ஆனால் விரல் எடுபடவில்லை. அடுத்தது அப்பைய தீட்சிதர்... அவர் என்ன சுலோகம் சொன்னார் என்று சொல்வதற்கு முன்னால், என் பிறப்பைப் பற்றி நீர் அறிவீர்தாமே?

கறு: எத்தனை முறை இதைக் கேட்டிருக்கிறேன் சுவாமி! சிவனுக்கும், மோகினியாகிய மகாவிஷ்ணுவுக்கும் சால மரத்தடியில், அதுவும் ஒரு மகா சிவராத்திரி நாளில் தாங்கள் தோன்றினீர்கள் என்பதை, இதுவரை பலர் சொல்லியிருக்கிறார்களே! அதனால்தானே தங்களை ஹரிஹரசுதன் என்று அழைக்கின்றனர்?

ஐய: சரியாகச் சொன்னீர். அங்குதான் இருக்கிறது புதிரும். கௌரியாகிய சிவ பத்தினியையும் நான் அம்மா என்று அழைக்கிறேன். மகாவிஷ்ணுதான் என் அம்மாவாக

வேண்டும் என்றாலும், தகப்பனாருக்கு எத்தனை பத்தினியர் இருந்தாலும், அத்தனை பேரும் எனக்குத் தாயார் முறைதானே? எனவே அதில் பிரச்னை ஏதுமில்லை.

கறு: அப்படியானால் பிரச்னையை உருவாக்குவது யார் பிரபு?

ஐய: லக்ஷ்மீம்!... திருமாலின் பத்தினியான திருமகள்தான் — இலக்குமிதேவிதாம் இந்தப் பிரச்னைக்கு உரியவர். அவரை எப்படி அழைப்பேன்?

கறு: திருமகள், திருமாலின் பத்தினி. திருமாலோ உமக்குத் தாய். அப்படியானால் உமது தாயின் மனைவி அவர்! இது என்ன குழப்பம்? தாயின் மனைவியா.? இப்படி ஒரு புது உறவுமுறை தோன்றியிருக்கிறதா?

ஐய: வியப்படையாதீர்... மனித குலத்தில் இப்படி ஓர் அலங்கோலம் இப்போது உருவாகிக் கொண்டிருக்கிறது. அதை விடும்.. இப்போது கதைக்கு வருவோம்... இந்தக் குழப்பத்தினால்தான் சாஸ்தா விரலை மூக்கில் வைத்திருந்தார். அப்பைய தீட்சிதர் இந்தச் சுலோகத்தைச் சொன்னாரோ இல்லையோ, சாஸ்தாவின் மூக்கிலிருந்து விரல் அகன்றுவிட்டது.... ஆமாம்.. நீர் ஏன் இப்போது மூக்கில் விரலை வைத்திருக்கிறீர்?

கறு: சாஸ்தாவின் குழப்பம் என்ன என்று தீட்சிதர் சொல்லிவிட்டார்! ஆனால் அதற்குத் தீர்வு?[1]

ஐய: உஷ்... அதோ அவர்கள் வந்துவிட்டார்கள்... அமைதியாக இரும்!

* * *

விரையாச்சிலை ஊரின் நடுவில் உள்ள அடைக்கலங்காத்த அம்பாள் கோயிலிலிருந்து, முதலில் நாம் பனையப்பட்டியிலிருந்து விரையாச்சிலைக்கு வந்த அதே சாலையில் பனையப்பட்டி நோக்கிச் செல்கிறோம். சுமார் 2 கி.மீ சென்றதும், இடப்புறம் பிரியும் மண் சாலையில் சுமார் ஒன்றரைக் கி.மீ சென்று, இடப்புறம் காட்டுப் பகுதியின் ஊடே உள்ள பாதை வழியே நடந்து சென்றால், கண்மாய்க் கரை மேட்டில் நாம் நாடிச் செல்லும் மேலக்காட்டு ஐயனார் கோயில் இருக்கிறது. ஊரின் மேற்கே காட்டுப் பகுதியில் இருப்பதால் இவர் மே(ல)லக்காட்டு ஐயனார் ஆகியிருக்கலாம். இவரை விளாக்குடை ஐயனார் என்றும் சொல்கிறார்களாம். (விளா — விளா மரம்; விளா மரத்தைக் குடையாகக் கொண்டிருந்த (அதன் அடியில் இருந்த) ஐயனாராக இருப்பாரோ?) இங்குள்ள ஆஜானுபாகுவான, இராஜ தோற்றத்துடன் திகழும் கறுப்பரைத்தான் முப்பலிக்கறுப்பர் என்கின்றனர்.

* * *

மரங்கள் அடர்ந்த பகுதியில் இரு கல் மண்டபங்கள் உள்ளன. சேதமடைந்துபோய், நாற்புறமும் சுவர்களைக் கொண்ட கருவறை, மகாமண்டபம், விமானம் இல்லாத மேல் விதானம் — இதுதான் ஐயனாரின் கோயில். கோயில் கவனிப்பாரற்றுக் கிடந்தாலும்

மூலவர் மிக அழகிய திருவுருவம். தனியாக இருக்கிறோமே என்று தான், துணைக்குப் பழைய ஐயனார் சிலையைக் கருவறைக்குள் ளேயே வைத்துக் கொண்டிருக்கிறார் போலும்!

கருவறைக்கு முன்னால் உள்ள சிறிய மண்டபத்தில் விநாயகரும், நாகலிங்கமும் காணப்பெறுகின்றன. இரு தூண்களில் துவார பால கர் சிலைகள் அமைந்துள்ளன.

கருவறையின் வலப்புறத்தில், சுற்றிலும் கம்பி அடைப்பை மட்டும் கொண்ட, நான்கு தூண்களுக்குமேல் விதானம் மட்டும் உள்ள



காட்டுக்குள் தனித்திருந்தாலும்
காவலுக்கு நான் இருக்கிறேன்!

மண்டபத்தில், கறுப்பர் அழகிய தோற்றத்துடன் ஐயனாருக்குக் காவலாக நிற்கிறார். அருகில் நிறைய அரிவாள்கள் உள்ளன.

யானை வாகனம், பலிபீடம், மற்றும், நான்கு பட்டவர் சிலைகளும், பரிவார தேவதைகளாகச் சில மண் சிலைகளும், அருகில் உள்ளன.

முன்னோடி சீர்குலைந்து போனதால், மரத்தடியில் உள்ள ஒரு கல்லுக்கே, அதற்கான பூசை நடைபெறுகிறது.

மிக நீண்ட காலமாகப் புரவி எடுப்பு நடப்பதில்லையாம். பழைய மண் குதிரைச் சிலைகளிடையே, அம்பாரி வைத்த யானையும், யானைப் பாகனும் உள்ள சிலை வித்தியாசமான ஒன்று. பெரியதொரு சேமங்குதிரையும், பூதமும் கோயிலின் முன்னர் காணப் பெறுகின்றன.

கிராமக் கோயிலான இங்கு சிறிது காலத்துக்கு முன்னர் குடநீராட்டு நடத்த முயன்று, பின்னர் ஏதோ காரணத்தினால் நிறுத்தப் பெற்று விட்டதாம்.

விரையாச்சிலை மேல்கட்டுக்காரர்கள் மட்டும் இங்கு வருவார்கள் என்று அர்ச்சகர் கூறினாலும், வி. இலக்குமிபுரம், விரையாச்சிலை ஆகிய ஊர்களின் வைரவன் கோயிலார் இக்கோயிலை வழிபடுவதாக எங்களிடம் சொல்லப்பெற்றது.

மயிலின் அகவல் மட்டும் எந்த நேரமும் கேட்டு கொண்டிருக்கும் இங்கு, ஒருவருக்கு ஒருவர் பேச்சுத் துணையாக ஐயனாரும், கறுப்பரும் மட்டும் தனித்து விடப்பெற்றுள்ளனர். அதனால்தானே ஐயனார்வழி, சாஸ்தாவைப் பற்றிய சுவையான தகவலைத் தெரிந்து கொள்ள முடிந்தது!

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

காடேல்மிக வாலிது, காரிகை அஞ்சக்
கூடிப்பொந்தில் ஆந்தைகள் கூகை குழறல்,
வேடித்தொண்டர் சாலவும் தீயர், சழக்கர்,
கோடிக்குழ கா!இடங் கோயில் கொண்டாயே!

திருச்சிற்றம்பலம்

— 7 ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

1. தெய்வத்தின் குரல் — ஐந்தாம் பகுதி, காஞ்சிப் பெரியவர்கள் கூறிய வரலாற்றினை ஆதாரமாகக் கொண்டது.

உ

தீதிலா நன்மைத் தேக்காட்டூர் ஐயனார்

(57. கரைமேல் அழகர் ஐயனார் திருக்கோயில், தேக்காட்டூர்)

பூங்குன்ற நாட்டில் சமண முனிவர் பலர் வாழ்ந்ததற்கு அடையாள மாக மகிபாலன்பட்டி அருகேயும், இராயவரத்தை அடுத்த தேக் காட்டூரிலும் சமண விக்கிரகங்களைக் காணலாம் என்று கூறுவர்.[1] நம்முடைய குலதெய்வக் கோயில்களுக்கான யாத்திரையின் ஒரு பகுதியாகத் தேக்காட்டூர் சென்றபோது, அத்தடயங்கள் சிலவற்றை அங்கு காண முடிந்தது.

நமனசமுத்திரத்திலிருந்து 4 கி.மீ. தொலைவில், நான்கு சாலை களின் சந்திப்பு ஒன்று உள்ளது. விரையாச்சிலையிலிருந்து செல் லும் சாலையும் அச்சந்திப்பைச் சென்றடைகிறது. நமனசமுத்திரம் — திருமயம் பிரதான சாலையில் (வலப்புறம் விரையாச்சிலை — அதுதான் நாம் சென்று சேரும் சாலை) இடப்புறம் திரும்பி (செங் கீரை செல்லும் சாலை) சுமார் 2 கி.மீ. சென்று, தேக்காட்டூர் பெயர் அறிவிப்புப் பலகை உள்ள இடத்தில் இடப்புறம் திரும்பி, மண் சாலையில் 2 கி.மீ. சென்றால் தேக்காட்டூரை அடையலாம். ஊரினுள் செல்லுமுன் இடப்புறத்தில் உள்ளது, நாம் செல்லவிருக் கும் கரைமேல் அழகர் ஐயனார் கோயில். கோயிலுக்குப் போவதற்கு முன்னர், சாலையின் வளைவில், நம் வலப்புறம் சாலை ஓரமாகச் சமண முனிவர் ஒருவரின் சிலை காணப்பெறுகிறது. அதனையும் நம் மக்கள் வழிபடத் தவறவில்லை. (சைவத்தை நிலைநாட்ட நம் நாயன்மார்கள் பட்ட பாடு என்ன? இன்று, சைவம் படும் பாடு என்ன?) இதனை நினைத்து வேதனைப்பட்டுக் கொண்டு, கரை மேல் அழகர் ஐயனார் கோயிலுக்குச் சென்றால், கோயிலுக்குள் செல்லுமுன்னரே சமணர் காளி என ஒரு சந்நிதி உள்ளது! இது கோயிலின் ஒரு பகுதி!

* * *

அரிமழம், கடியாபட்டி நகரத்தார்கள் வழிபடும் இந்த ஐயனார் கோயில், மிகவும் பழுதடைந்து, எப்போது புதுப்பிக்கப் பெறு வோம், எப்போது குடமுழுக்கு விழா நடைபெறும் என ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிறது. ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்கு முன்னர்



உற்றுப் பார்க்கச் சற்றே விலகாதோ?

இக்கோயிலில் மருந்து சாத்தி, வண்ணம் வைத்துத் திருக்குட நீராட்டு நடைபெற்றதாகவும், கடியாபட்டி நகரத்தார் குடும்பத்தினர் இக் கோயிலை மேற்பார்த்துத் திருப்பணி செய்ததாகவும் கூறப்பெறு கிறது.[2]

இருபுறம் வயல்களாலும், பின்புறம் கண்மாயாலும் சூழப்பெற்றுக், காட்டுச் செடிகள் மண்டிக் கிடக்கும் கோயிலின் எதிரில், மாடத் தில் முன்னோடி உள்ளார். நம் இடப்புறம் உள்ள வடக்குப் பார்த்த சிறியதொரு சந்நிதியில்தான் சமணர் காளி குடிகொண்டிருக்கிறாள். இந்த காளி சமணர்களால் வழிபடப்பெற்றவளா, நம்முடைய காளி தான் சமணத்தைத் தன்னுடன் இணைத்துக் கொண்டிருக்கிறாளா என்று தெரியவில்லை.

சமண சமயத்தில் காளி, வித்தியா தேவியாக வழிபடப்பெறுகிறாள். மந்திரம், தந்திரம், யோகம், செல்வம் போன்ற கலைகள், பதி னாறு தேவியராக உருவகப்படுத்தப்பெற்று, அவர்கள் வித்தியா தேவியர் என்றும், சோடஷ வித்தியா தேவியர் என்றும் அழைக்கப் பெறுகின்றனர். மகா சரஸ்வதி தேவி, அவர்களுக்குத் தலைவி யாகத் திகழ்கிறாள். நான்கு கரங்களையும், கரு நிறத்தினையும் (பொன் நிறத்தினள் என்றும் கூறுவதுண்டாம்) உடைய காளி,

ஏழாவது வித்தியா தேவி. இவளுடைய வாகனமான மான், விரைந்து இயங்கும் இவளுடைய ஆற்றலைக் குறிக்கிறது என்கின்றனர். ஏழா வது தீர்த்தங்கரரான பகவான் சுபார்சுவநாத சுவாமிக்குப் பணி விடைகளைச் செய்து, அவர் மோட்சம் எய்திய பிறகு ஜினசாசனத் தைக்[3] கடைப்பிடிப்பவர்களுக்குத் துணை தேவதைகளாக விளங்கு பவர்களிலும், காளி என ஒருவர் கூறப்பெறுகிறார்.[4]

* * *

முன்பு நாம் பட்டமங்கலம் வெள்ளானை ஐயனார் கோயிலுக்குச் சென்றிருந்தபோது, கோயிலினுள் சந்நிதியை மறைத்துக் கொண்டு பழைமையான புளியமரம் இருக்கக் கண்டோம். இங்கு கோயி லுக்கு வெளியிலேயே சந்நிதியை மறைத்துக் கொண்டு முட்செடி கள் மண்டியிருக்கின்றன.

நுழைவாயிலின் மேலே சுதையினாலான கஜலட்சுமி காணப்பெறு கிறார். கோயிலினுள் சென்றதும் உள்ள ஓட்டுக்கூடத்தில் யானை வாகனமும், பலிபீடமும் உள்ளன. கருவறை நுழைவாயிலின் இரு புறமும் துவார பாலகர் இடம்பெற்றுள்ளனர். கருவறைச் சுவரில் நுழைவாயிலின் இருபுறமும் குதிரைவீரர்களின் புடைப்புச் சிற்பங் கள் காணப் பெறுகின்றன.

முன்பு சில கோயில்களில் நாம் கண்டு வந்த வித்தியாசமான படைப்புகள் சிலவற்றைப் போன்றே, இச்சிற்பத்திலும் கலையழ கைக் காண இயலாவிடினும், புதுமையானதொரு படைப்பாக இது திகழ்கிறது. முன் இரு கால்களையும் நிலத்தில் ஊன்றி, ஓரளவு வாலை நிமிர்த்திய நிலையில் காணப்பெறும் குதிரையின் இத் தோற்றம், அது மலையில் ஏறுவது போன்றோ, வேகமாகச் செல் வது போன்றோ இருக்கிறது; குதிரைவீரர் பின்னால் சாய்ந்த நிலையில் சாட்டையைச் சொடுக்கிக், குதிரையைத் துரிதப்படுத்து கிறாரோ? பக்தர்களைக் காக்க எந்த நேரத்திலும் பாய்ந்தோடி வரு வேன் என்று ஐயனார் குறிப்பால் உணர்த்துகிறார் போலும்!

கல் திருப்பணியான இந்தக் கருவறையில், கரை மேல் அழகர் ஐய னார் தனிமையில் இருக்கிறார். கண்மாய்க் கரையில் உள்ள அழக ரான இந்த ஐயனாருக்குச் சிவராத்திரி விழா சிறப்புடன் கொண் டாடப்பெறுகிறது. மற்றபடி, ஐயனார் கோயில்களில் வழக்கமாக நடைபெறும் புரவி எடுப்புப் போன்றவை எப்போதாவதுதான் நடைபெறுகின்றன.

நகரத்தார்கள் ஆடி மாதத்தில் சேர்ந்து வந்து வழிபாடு செய்வது உண்டாம். தங்கள் படைப்பு வீட்டில் நடைபெறும் படைப்புக்கு முன்னர், இராயவரம் நகரத்தார் இங்கு வந்து வழிபட்டுத் தீர்த்தம், திருநீறு எடுத்துச் செல்வார்களாம்.

ஐயனாரை வழிபட்டுக் கொண்டு பிராகாரத்திற்குச் செல்கிறோம். தென் திருச்சுற்றுச் சுவரை ஒட்டி அமைந்துள்ள சந்நிதிகளில் சாவக் காரன்(சாவகர் — சமணர் என்று ஒரு பொருள் இருக்கிறது. இது சமணர் செல்வாக்கினால் உருவான சிலையாக இருக்கலாமோ?), பேச்சியம்மன், (இரண்டு மண் சிலைகள்) வெள்ளையம்மா, பொம்மி,

மதுரைவீரன், மீண்டும் மண் சிலைகளான கன்னிமார், பெரிய கறுப்பர், சின்னக் கறுப்பர் ஆகியோர் காணப்பெறுகின்றனர். இவர்கள் குடிகொண்டிருக்கும் ஓலை வேய்ந்த கூடத்தின் பரிதாப நிலையைக் கண்ட பின்னருமா, இக்கோயிலைப் புதுப்பிக்க இன் னும் முயற்சிகள் மேற்கொள்ளப்பெறவில்லை?

★ ★ ★

முன்பு நகரத்தார்கள் இங்கு தங்கியிருந்து வழிபாடு செய்தது உண் டாம். அதே போன்று ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்று வந்த செவ்வாய்த் திருவிழாவும் பழங்கதைதான்!

மார்கழி மாதத்தில் திருப்பள்ளி எழுச்சி வழிபாடு நடைபெறும் கரைமேல் அழகர் ஐயனார் கோயிலில், காலையிலோ, மாலை யிலோ, ஏதேனும் ஒரு நேரத்தில் பூசை நடைபெறுகிறது. மற்ற நேரங்களில் தேக்காட்டூர் முனைசந்தையிலிருந்துதான், வேளாரை அழைத்து வரவேண்டும்.

அந்தத் தேக்காட்டூர் முனைசந்தைக்கு (அர்ச்சகரை அழைத்துவர அன்று; அங்குள்ள அதிசய ஐயனாரைத் தரிசிக்கும் பொருட்டு)ச் செல்லுமுன்னர், அருகிலுள்ள அங்காள பரமேஸ்வரி அம்மனைக் கண்டு வழிபடச் செல்வோமா? அங்கும் வழக்கத்திற்கு மாறான பலவற்றைக் காணப் போகிறீர்கள்!

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

உன்னை உகப்பன் குயிலே! உன்துணைத் தோழியும் ஆவன்,
பொன்னை அழித்தநன் மேனிப் புகழில் திகழும் அழகன்,
மன்னன் பரிமிசை வந்த வள்ளல், பெருந்துறை மேய
தென்னவன், சேரலன், சோழன் சீர்ப்புயங் கன்வரக் கூவாய்!

திருச்சிற்றம்பலம்

— 8 ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

1. செட்டிநாடும் செந்தமிழும் — சோமலெ
2. மரு. இலட்சுமண வேளார், தேக்காட்டூர்
3. தீர்த்தங்கர பகவான் பகர்ந்த அறமொழிகளை, ஆசாரியர்கள் நூல் வடிவில் அருளியவையே, ஜினசாசனங்கள் எனப் பெறுகின்றன
4. ஜைன சமயத் திருவுருவங்கள் — பூசை ச. அருணவசந்தன்

உ

தீவினைகள் தீர்த்திடும் தேக்காட்டூர் அம்பாள்

(58. அங்காள பரமேஸ்வரி அம்மன் திருக்கோயில், தேக்காட்டூர்)

இப்போது நாம் இலங்கைக்குச் செல்கிறோம், இராம — இராவண யுத்தத்தைக் காண! இந்திரசித்து விடுத்த பிரமாஸ்திரத்தினால் (நான்முகனின் படை) இலக்குவன் அறிவு ஒடுங்கி, வலிய பெரிய யானை படுக்கையிடத்து அடங்கினாற்போல அயர்ந்து விட்டான்.[1] அதனைக் கண்ட இராமன் அழுது புலம்பினான். அப்போது களைப்பு நீங்கி எழுந்த அனுமனிடம், மாண்டவரை உய்விக்கும் மருந்தான சஞ்ஜீவகரணி, வெவ்வேறு பிளவுகளாகப் பிளந்திட்டாலும் பொருந்தச் செய்யும் மருந்தான ஸந்தாகரணி, பொத்திய (தைத்த) படைக் கலங்களை வெளிப்படுத்தும் மருந்தான விஸல்யகரணி, உருவம் மாறி விட்டாலும், மீண்டும் தன்னுருவையே அடையச் செய்யும் மெய்ம்மை மருந்தான ஸாவர்ண்யகரணி ஆகியவற்றைக் கரிய மலை (கார்வரை)க்குச் சென்று கொண்டு வந்தால்தான், இலக்குவனையும், வானரப் படைகளையும் காப்பாற்றலாம் என்று, முதியவரான சாம்பவான் கூறவும், அனுமன் பேருருக்(விசுவரூபம்) கொண்டு, அங்கு சென்று, அந்த மருத்துமலையை, வயிரம் போல் உறுதியான தன் தோளினால் பூமியிலிருந்து பெயர்த்தெடுத்தான்.

அம்மலையை வேருடன் அழகிய கையில் தாங்கி, ஓங்கிய விசும்பில் விரைந்து சென்றான் அனுமன். ''அவன் வந்திட்டான்'' என்று சாம்பவான் சொல்லி முடிக்குமுன்னர், நிலத்தில் தன் பாதம் ஊன்றப்பெற்று, அனுமன் அவ்விடத்தை அடைந்தான் என்று கம்பநாடர், அனுமனின் அதிதீரச் செயலைப் புகழ்ந்து பாடுகிறார்.


வலக்கையில் சஞ்சீவி மலையைத் தாங்கிப் பாதங்கள் நிலத்தில் ஊன்றப் பெற்ற நிலையில், முறுக்கிய வாலுடன் 'மருத்துமலையையே பெயர்த்து வந்துவிட்டேன்' என்னும் பெருமிதம் பொங்கக் காட்சி அளிக்கும் இராமதூதனைக்(சிலை வடிவில்) காண, இலங்கைக்குச் செல்ல வேண்டாம்; இங்கு தேக்காட்டூர் அங்காள பரமேஸ்வரி கோயிலுக்குச் சென்றால் போதும், கண்டுவிடலாம். அங்கு இந்த வீர அனுமனின் விசுவரூபச் சிலை மட்டுமல்லாது, வேறுசில புதுமைகளும் நிறைந்திருக்கின்றன!

* * *

கரைமேல் அழகர் ஐயனார் கோயிலிலிருந்து, தேக்காட்டூர் கிராமத்துக்குள் சென்று, இடப்புறம் திரும்பினால், அங்காள பரமேஸ்வரி கோயிலை அடைந்துவிடலாம்.

காரைக்குடி (வைரவன் கோயிலார்), தேவகோட்டை, மானகிரி நகரத்தார்களும், மற்றும் அரிமழம், பள்ளத்தூர் ஆகிய ஊர்களின் ஆசாரிமாரும், இரகுநாதபுரம் கள்ளர், நெய்வாசல்பட்டி யாதவர்கள், புதுக்கோட்டை நாயக்கர்கள் ஆகியோரும் குலதெய்வமாகக் கொண்டாடும் கோமளவல்லியே, இந்த அங்காள பரமேஸ்வரி.

நகரத்தார்கள் உப்பு வியாபாரம் செய்த காலத்தில் இந்த ஊரில் தங்கிச் செல்வது உண்டாம்; அவ்வாறு வியாபாரம் முடிந்து திரும்



தோட்டனன் அனுமன் மற்றக் குன்றினை வயிரத்தோளால்

பும்போது, கள்ளர்களுக்குப் பயந்த அவர்களுக்கு அம்பாள் அபயம் கொடுத்து, ''எனக்குக் கோயில் கட்டி வழிபடுங்கள்; உங்களைத் தலைமுறை தலைமுறைக்கும் காப்பாற்றுகிறேன்'' என்று கூறக், காரைக்குடி நகரத்தார் கோயில் கட்டி வழிபட்டு வரலாயினர் என்று கூறப்பெறுகிறது. திருப்பணி செய்த காரைக்குடி நகரத்தார் பெருமகனாரின் சிலை தூணில் வடிக்கப் பெற்றுள்ளது.

24.08.1980ல் திருக்குட நீராட்டு நடைபெற்றதால், கோயில் பழைமைத் தோற்றத்தைக் கொண்டிருந்தாலும், மூன்று நிலை இராஜ கோபுரம், மூலவர் விமானம் ஆகியவை புதுமை மெருகுடன் திகழ் கின்றன.

எதிரும் புதிருமாக உள்ள இரு சேமங்குதிரைகளுக்கு முன்னால் வடக்கு நோக்கிய மாடத்தில் முன்னோடி குடிகொண்டிருக்கிறார். இரு சேமங்குதிரைகளும் வழக்கம்போல் பூதங்களின் தோள்களில் கால்களை வைத்துப் புறப்படுவதற்கான ஆயத்த நிலையில் உள்ளன. எனினும், இவை ''முத்துக்கறுப்பர் க்ஷேமம் குதிரைகள்'' என்று குறிப்பிடப் பெற்றுள்ளன. உள்ளேயுள்ள பரிவார தெய்வங்களில் ஒருவரான முத்துக்கறுப்பர் குறித்து இவை கட்டப்பெற்றவையா என்பது சிந்திக்கத்தக்கது. மேலும், பொதுவாகச் சேமங்குதிரைகள் என்றே குறிப்பிடப்பெற்று வந்துள்ள இக்குதிரைகள், இங்கு க்ஷேமம் (நலம்) குதிரைகளாகியுள்ளன. இவை காரைக்குடி நகரத்தார் பெரு மகனாரால் 19.09.62ல் கட்டப்பெற்றவை.

இவற்றுக்கு நடுவில் உள்ள தொட்டியை ஆகாச கங்கை என்று சொல்வார்கள் என்றும், கோயிலிலிருந்து புறப்படும்போது அதில் பணம் போட்டுவிட்டே செல்வார்கள் என்றும் கூறப்பெறுகிறது.

இந்த விவரங்களைத் தெரிந்து கொண்டு, இராஜகோபுர வாயில் வழியாக உள்ளே செல்ல முற்படுகிறோம். வாயிலின் அருகே நம் இடப்புறத்தில் விநாயகர், நாகர் ஆகியவை உள்ளதைக் கவனித்து, விநாயகருக்குத் தோப்புக்கரணம் போட்டுவிட்டு உள்ளே செல் கிறோம்.

திரிசூலம், கொடிமரம், பலிபீடம் ஆகியவற்றுக்கு முன்னால் விடை (இடபம்) உள்ளது. இந்த நந்தியின் முன்புறத்தில் ஸ்தூல (பருமை) பஞ்சாக்கரமான (ஐந்தெழுத்து) *நமசிவாய* பொறிக்கப்பெற்றிருப்பது, வேறு எங்கும் காண இயலாத ஒரு சிறப்பாகும். இதனையே சிவ மூலமந்திரம் என்பர். இது இம்மை, மறுமை ஆகிய இரு பலன் களையும் வழங்கவல்லது; அனைவரும் எண்ணத்தக்கது; அகத் தூய்மையும், சிவப்பேறும் வழங்கவல்லது.[2]

ஆலய தரிசனம் முடிந்ததும் பலிபீடத்துக்குப் பின்னால் மும்முறை விழுந்து வணங்கி, எழுந்து இருந்து, ஐந்தெழுத்தை நூற்றெட்டு முறையேனும் ஜபம் செய்யவேண்டும் என்பது ஆலய தரிசன விதி. அதை நினைவுறுத்தவே, இடபதேவரின் முன் ஐந்தெழுத்தைப் பொறித்து வைத்துள்ளனரோ?

மகா மண்டபத்தின் மேல்விதானத்தில் பன்னிரு இராசிகள் பொறிக்கப் பெற்றுள்ளன. கருவறை வாயிலின் இருபுறமும்

நம் இடப்புறம் விநாயகரும், நம் வலப்புறம் சுப்பிரமணியரும் எழுந்தருளியுள்ளனர். மூலவர் அங்காள பரமேஸ்வரி, முதலில் கூரைக் கொட்டகையில் எழுந்தருளி இருந்ததாயும், மற்ற பரிவார தெய்வங்கள் கூரையின்றித் திறந்த வெளியில் இருந்ததாயும், பின்னர் நகரத்தார்களால் தற்போதைய அமைப்பில் கோயில் கட்டப் பெற்றதாயும் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன.

ஆண்டுதோறும் காரைக்குடி நகரத்தார் அனைவரும் இங்கு வந்து பெரிய அளவில் பூசை நடத்துவார்களாம். அம்பாளை வழிபடுவோர், இக்கோயிலின் பின்புறமுள்ள கறுப்பரையும் வழிபடுகின்றனர். முதல்நாள் அங்காளம்மனுக்குப் பூசை நடத்தி, மறுநாள் காலை கறுப்பர் கோயிலில் பொங்கலிட்டு, மாவிளக்கு வைத்த பின்னரே, இங்கிருந்து புறப்படுவார்களாம்.

இங்கு மாசி மாதம் சிவராத்திரியின் போது, ஐந்து நாள் திருவிழா நடைபெறுகிறது. நான்கு, ஐந்தாம் நாட்களில் அம்பாள் எழுந்தருளுவது உண்டு. இதற்கென நகரத்தார் அனைவரும் சேர்ந்து சகடை ஒன்று செய்து கொடுத்துள்ளனர். ஐந்தாம் நாள் அம்பாள் பாரி வேட்டைக்குப் போகும்போது, அருகிலுள்ள பிள்ளையார் கோயில் அருகில், 'சூலாடு குத்துவது' உண்டாம். (இதுபற்றி உங்களுக்குத் தெரிந்திருந்தால் சரி; தெரியாதிருந்தால் தெரியாமலேயே இருக்கட்டும். அத்தகைய கொடுமையான உயிர்ப்பலி இது!)

கத்தப்பட்டு ஐயனார் கோயிலில் தமிழ் 'மலர் வழிபாடு' (108 போற்றிகள்) அறிமுகப்படுத்தப் பெற்றிருப்பதாகச் சொன்னார்களே தவிர, புத்தகத்தைக் காணக்கூட இயலவில்லை. ஆனால் இங்கு போற்றித் தொடர்கள் அறிமுகப்படுத்தப் பெற்றிருப்பதோடு, அவை கருவறைச் சுவரிலும் எழுதி வைக்கப்பெற்றிருக்கின்றன. தமிழில் மலர் வழிபாடு செய்ய வேண்டும் என்னும் விழிப்புணர்வு ஏற்பட்டதும், அவரவரும் தத்தம் பாண்டித்தியத்தைக் காட்டும் வகையில், சொந்தத் தொடர்களை உருவாக்கி, நாளடைவில் அவை சூறைக்காற்றில் சருகெனச் சொல்லிக் கொள்ளாமல் மறைந்துவிட்டன. ஆனால் இங்கோ தேவாரப் பாடல் பெற்ற (ஏறத்தாழ 170) தலங்களில் உள்ள அம்பிகையரின் திருப்பெயர்களைக் கொண்டே (சொந்தச் சரக்கு எதனையும் கலக்காமல்) 108 போற்றித் தொடர்களை அமைத்துத் தந்திருப்பது, பெருஞ் சிறப்பாகும். (இந்தத் தொடர்கள், நூலின் பிற்பகுதியில் இணைக்கப்பெற்றுள்ளன. சிவாலயங்களில் அம்பாளுக்கான அர்ச்சனையாகப் பயன்படுத்துவதற்கு ஏற்றவை இவை. செட்டிநாட்டில் உள்ள நகரச் சிவன்கோயில் நிர்வாகிகள் இதனைக் கருத்திற் கொள்ளலாம்!)

இங்கு மார்கழி மாதத்தில் திருப்பள்ளிஎழுச்சியும் நடைபெற்று வருகிறது.

* * *

தென் பிராகாரத்தில் மடப்பளியை அடுத்துள்ள நான்கு சந்நிதிகளில், மண்சிலைகளான ஏகாயி அம்மனும் (ஏகாலி அம்மனாய் இருக்கலாம். ஏகாலியர் — வண்ணார்), காட்டேரி அம்மனும் (காட்டில் வசித்துக் கொண்டிருந்த இந்துக்கள், தம் மேல் காட்டுத்தீ சார்ந்து தம்மை அழிக்காவண்ணம் வனதேவதையை வழிபட்டனர்.

அதனைக் காட்டெரி, காட்டேரி என்பர்.[3]), இருளப்பசுவாமி (பாண்டிநாட்டில் பரவலாக வழிபடப்பெறும் தேவதை), ஜடா முனி (பீடம் மட்டும்), முத்துக்கறுப்பர், சின்னக் கறுப்பர், முத் தாலு இராவுத்தர், வேடப்ப சுவாமி, இலாட சந்நியாசி (இலாடம் என்பது 56 தேசங்களுள் ஒன்று. அங்கிருந்து வந்த சந்நியாசி யாகவோ, இலாடர் என்னும் மைசூர் நாட்டில் உள்ள ஒருவகைச் சாதியினரின் துறவியாகவோ இருக்கலாம்[3]), சப்த கன்னியர், முன்னோடிய பூங்காவனத்து அம்மன் ஆகிய பரிவார தேவதைகள் உள்ளன.

வடக்குப் பிராகாரத்தில் உள்ள ஒரு சந்நிதியில் நாம் முதலில் கண்ட சஞ்சீவி பர்வத அனுமனும் அடுத்துள்ள சந்நிதிகளில் பைர வர், வீரபத்திரர், சித்தநாதர்(முருகன்), துந்துபி, சோனைக் கறுப் பர், சப்பாணிக் கறுப்பர் (இவர் மிகவும் சக்தி வாய்ந்தவராகக் கருதப் பெறுகிறார். இவருக்கு நேர்ந்து கொண்டு நிவேதிப்பதற் கான சாராயத்துக்காகப் பணம் முடிந்து வைப்பது முந்தையப் பழக்க மாம். இப்போது பேரீச்சம்பழம், தேன் ஆகியவற்றைப் பிசைந்து வைத்து நிவேதிக்கின்றனர்.), உளிவீரன் ஆகியோரும், தெற்குப் பார்த்த சந்நிதியில் மதுரைவீரன், வெள்ளையப்பன்(!), பொம்மி யம்மாள் ஆகியோரும் (இந்தச் சந்நிதியை உருவாக்கியோர் நகரத் தார்களாம்; நாயக்கர்கள், குலால (மண்) சிலைகளைக் கற்சிலை களாக்கி 11.09.75ல் குடநீராட்டுச் செய்துள்ளனர்) உள்ளனர்.

கிழக்குத் திருச்சுற்றுச் சுவருடன் ஒட்டிய ஒரு சந்நிதியில் நல்லரவன், காத்தவராயன், தூண்டிக்கறுப்பர், கறுப்பாயி அம்மன் (செம்பு குமாரன் வனத்து இருந்தவள். காத்தவராயன் பாம்புப் பிடாரன் வடிவு கொண்டு சென்று, பல அதீதச் செயல்களைச் செய்துகாட்டி இவளை மணந்தனன் என்பர்[3]), பேச்சியம்மன், பத்ரகாளி ஆகிய பரிவார தெய்வங்கள் இடம் பெற்றுள்ளன. இச்சந்நிதியின் புறத்தே யுள்ள மாடம் ஒன்றில், நகரத்தார் பெண் ஒருவரின் சிறிய சிலை யைக் காண்கிறோம்.

இந்தப் பெண் காலமான பின்னர், தனக்குச் சிலை வைக்குமாறு தன் குடும்பத்தாரிடம் கூற, அவர்கள் அப்பெண்ணுக்குச் சிலை வைத்திருக்கின்றனர். அக்குடும்பத்தார் இங்கு வரும்போது, பால் காய்ச்சி நிவேதனம் செய்து வழிபாடு செய்கின்றனராம்.

அப்பாடா, முடிந்ததா என்று பெருமுச்சு விடுகிறீர்களா? என்ன செய்வது, பெரும்பாலான குலதெய்வக் கோயில்களில் கணக்கி லடங்காத பரிவார தேவதைகள் வைக்கப் பெற்றுள்ளனவே!

* * *

நகரத்தார்கள் ஒருகாலப் பூசைக்கு ஏற்பாடு செய்திருந்த நாட் களில், ஒவ்வொரு நாளும் இங்கு இருகாலப் பூசை நடைபெற்று வந்தது. இப்போது அது நிறுத்தப்பெற்று விட்டதால், திங்கள், வெள்ளிக்கிழமைகளில் மாலை நேரத்திலும், மற்ற நாட்களில் காலை நேரத்திலும் மட்டுமே பூசை நடைபெறுகிறது.

நகரத்தார் வீட்டுத் திருமணங்களுக்கு இங்கிருந்து மாலை கொண்டு சென்று கொடுப்பதும், பிள்ளைகளுக்கு முடி இறக்குவது, காது

குத்துவது, பெயர் சூட்டுவது ஆகியவையும், இங்கு நகரத்தார்கள் வழக்கமாகப் பின்பற்றும் வழிபாட்டு முறைகளாகும். அருகிலுள்ள நகர விடுதியிலிருக்கும் பசுமடத்திலிருந்து, நாள்தோறும் அபிஷேகத்திற்குப் பால் கொடுக்கப்பெறுகிறது.[4] ஐயனின் திருமுடியில் அபிஷேகம் செய்வதற்கான ஐந்து பொருட்களை[5] வழங்கும் உரிமையும், சிறப்பும் பசுக்களுக்கே வாய்த்திருக்கின்றன. இத்தகைய பெருமை வாய்ந்த பசுக்களைப் பேணிப் பராமரித்து, அவை வழங்கும் பாலையும், பஞ்சகவ்யத்தையும் அன்றாடம் இறைவனுக்கு வழங்குவதினும் சிறந்த புண்ணியம் வேறு ஏது?

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

திரிபுரை, சுந்தரி, அந்தரி, சிந்துரப்
பரிபுரை, நாரணி யாம்பல வன்னத்தி,
இருள்புரை ஈசி, மனோன்மனி என்ன
வருபல வாய்நிற்கு மாமாது தானே.

திருச்சிற்றம்பலம்

— 10ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

1. ''........உணர்வுபக் கொடுங்க
ஆடல் மாகரி சேவகம் அமைந்தென அயர்ந்தான்!'' — கம்பராமாயணம், யுத்த காண்டம்
2. திருவைந்தெழுத்து — டாக்டர் கு. சுந்தரமூர்த்தி
3. அபிதான சிந்தாமணி
4. இக்கோயில் தொடர்பான பயனுள்ள பல தகவல்களை வழங்கியவர்: கறு. அண்ணாமலை பண்டாரம், தேக்காட்டூர்
5. பஞ்சகவ்யம்: கோசலம் (பசு மூத்திரம்), கோமயம் (சாணம்), தயிர், நெய், பால் திருவண்ணாமலை என்னும் நாழியால் கோமூத்திரம் உழக்கும், கோமயம் ஆழாக்கும், பால் நாழி உழக்கும், தயிர் நாழி உரியும், நெய் நாழியும் அண்ணாமலையாருக்கு அன்றாடம் அபிஷேகம் செய்யப்பெற்றதாம். — பெரியபுராணம், சிவக்கவிமணி உரை

உ

பத்தர்மனத்து உறையும் பனையுடை ஐயனார்

(59. பனையுடை ஐயனார் திருக்கோயில், தேக்காட்டூர் முனைசந்தை)

நான்முகன் (பிரமன்) வந்து பூசித்தபோது, வேளைக்கு ஒரு நிறமாக மாறிப், பின்னர் உதங்க முனிவருக்கு ஐந்து காலங்களில் ஐந்து வண்ணமாகக் காட்சி கொடுத்து, ஐவண்ணநாதர் (பஞ்சவர்ணநாதர், பஞ்சவர்ணேஸ்வரர்) என்று பெயர் பெற்றவர், திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள பாடல் பெற்ற தலமான திருமுக்கீச்சரத்து (உறை யூர்) இறைவன்.

திருவிற்கோலம் (கூவம்) என்னும் தேவாரத் தலத்திலுள்ள இறை வன் திருமேனியில், அதிக மழை, வெள்ளம் வருவதற்கான அறி குறிகள் இருந்தால் வெண்மையும், போர் நிகழப் போவதானால் செம்மையும் படரும் என்றும், இதுபற்றியே திருஞானசம்பந்தப் பெரு மான், அவரை ''ஐயன்நல் அதிசயன்''[1] என்று தம் பாடலில் குறிப் பிட்டார் என்றும் கூறுவர். (இப்போது இந்த வண்ணமாற்றம் நிகழ் வதில்லை.)[2]

ஐப்பசி மாதத்தில் கந்தர் சஷ்டித் திருவிழாவின்போது (தீபாவளிக் குப் பிறகு வரும் பஞ்சமியில்) சிக்கல் சிங்காரவேலவர், அன்னை வேல்நெடுங்கண்ணியிடம் வேல் வாங்கும் வைபவம் நடைபெறுகிறது. அன்னையின் கருவறையிலிருந்து அர்ச்சகர் வேலைக் கொண்டு போய்க் குமரன் கையில் கொடுத்த சில நிமிடங்களுக்கெல்லாம், முருகனுடைய திருமேனியில் வியர்வைத் துளிகள் அரும்புமாம்; பட்டுத் துண்டால் ஒத்தி ஒத்தித் துடைத்து விசிறிக் கொண்டே இருப்பார்க ளாம். இது இன்றளவும் காணப்பெறுகிறது.[3]

இவற்றைப் போன்றதோர் அதிசய நிகழ்வு, இப்போது நாம் செல் லும் பனையுடை ஐயனார் கோயிலிலும், இப்போதும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

* * *

பஞ்சவர்ணேஸ்வரர், திருவிற்கோலநாதர், சிங்காரவேலவர் ஆகி யோரைப் போன்ற ''நல் அதிசயமான பனையுடை ஐயனை'', அரி மழம், நெற்குப்பை, வலையபட்டி, வேந்தன்பட்டி நகரத்தார்கள் குலதெய்வமாகக் கொண்டு வழிபடுகிறார்கள்.

தேக்காட்டூர் கரைமேல் அழகரையும், அங்காள பரமேஸ்வரியையும் தரிசித்துவிட்டுத், தேக்காட்டூர் — செங்கீரை பிரதான சாலைக்கு மீண்டும் வருகிறோம். அங்கிருந்து சுமார் 3 கி.மீ. சென்றால், பெரியதோர் ஆலமரத்தின் அருகில், இடப்பக்கம் புதுக்கோட்டை செல்லும் தார் போட்ட சாலை பிரிகிறது. அதில் 2 கி.மீ. சென்று, சாலை இரண்டாகப் பிரியும் (முனைசந்தை பெயர் அறிவிப்புக் கல் காணப்பெறும்) இடத்தில் இடப்பக்கம் திரும்பிச், சுமார் 2 கி.மீ சென்றால், முனைசந்தை கிராமத்தை அடையலாம். ஊரினுள் உள்ள பள்ளிவாசலை அடுத்து இடப்புறம் உள்ள சாலையில், வயல் களின் ஊடே சிறிது தொலைவு சென்று கோயிலை அடையலாம்.

தூர்ந்து போன குளத்திற்கும், கோயிலுக்கும் இடையில், வலைய பட்டி நகரத்தார் குடும்பத்தினர் 17.04.1969ல் புதுப்பித்த இரு சேமங்குதிரைகள் முதுமையடைந்து, எதிரும் புதிருமாக நிற்கக் காண் கிறோம். இவற்றின் அருகில் ஏராளமான மண் குதிரைகள் (புரவி கள்) வைக்கப் பெற்றுள்ளன. 1969ஆம் ஆண்டில் நெற்குப்பைக் குடும்பத்தினர் குளத்துக்குக் கரை கட்டிப் படித்துறைகள் அமைத் திருக்கின்றனர். அதில் இப்போது எஞ்சியிருப்பது ஒரு பக்கத்துக் கற் சுவர்தான். இது போன்றே கோயிலும் மிகவும் பழைமை அடைந்து விட்டது. திருப்பணி செய்து திருக்குட நீராட்டுச் செய்ய நகரத்தார் கள் திட்டமிடுகின்றனராம். விரைவில் விடிவு காலம் பிறக்க ஐய னாரைப் பிரார்த்திப்போம். நம் இடப்புறம் உள்ள சேமங்குதிரை யின் அருகில் காணப்பெறும் விமானத்துடன் கூடிய சிறிய சந்நிதி யில், முனீஸ்வரரும், காளியம்மனும் கிழக்குப் பார்த்துக் குடி கொண்டிருக்கின்றனர். குளத்தின் மறுபுறம், ஒரு பக்கத்தில் வீர பாண்டியும், மறுபக்கத்தில் முன்னோடியும் உள்ளனர்.

கோயிலின் முன்னால் உள்ள ஓட்டுத் தாழ்வாரத்துடன் கூடிய முன் திருச்சுற்றுச் சுவர், கோயில் அமைப்பைக் கொண்டிருக்கவில்லை. ஏதோ ஒரு கிராமத்து வீட்டிற்குள் செல்வதைப் போன்ற உணர் வைத்தான் தோற்றுவிக்கிறது.

ஓட்டுத் தாழ்வாரத்தின் வழியே சென்றதும், இருபுறமும் முகப்புத் திண்ணைகள் உள்ளன. நகரத்தார்களின் உபயமாக ஆறு கால பூஜை நடைபெறும் சிவ்ராத்திரியன்று, எல்லா ஊர் நகரத்தார்களும் இங்கு வந்து இரவு தங்கும்போது, இத்திண்ணைகள் பெரிதும் பயன்படு கின்றன.

கல் திருப்பணியான கருவறை, மகா மண்டபத்தைச் சுற்றி, விநாய கர், தண்டாயுதபாணியைத் தவிர்த்த ஏனைய பரிவார தெய்வங் கள் அனைத்தும், திறந்த வெளியிலேயே கல் மேடைகளில் குடியி ருத்தப் பெற்றுள்ளன.

திண்ணைகளைக் கடந்து திறந்த வெளிக்குச் சென்றதும், வலப்புற முள்ள பட்டாணிதான் முதலில் நம் கண்ணில் தென்படுகிறார். இவர் இங்கு இடம் பெற்றிருப்பதற்குச் சொல்லப் பெறும் காரணம், வழக் கமாகக் கூறப்பெறுவதான 'குதிரையில் வந்தார்....தடுக்கி விழுந் தார்...இங்கேயே அணைந்துவிட்டார்' என்பதுதான். ஆனால் வழக் கத்திற்கு மாறாக, இப்பகுதியில் உள்ள முஸ்லிம்கள், தங்களுக்கு இடையூறு, பயம், நோய் என ஏதாவது நேரும்போது, இங்கு வந்து

அவல், சர்க்கரை, அரிசி, ஊதுபத்தி போன்றவற்றை அர்ச்சகரிடம் கொடுத்துச் செல்கிறார்கள் என்பது, இங்கு மட்டும் காணப்பெறும் ஒரு தனித்தன்மையாகும்.[4]

பதினாறுகால் மண்டபத்தில் யானை வாகனம், பலிபீடம் ஆகியவை கருவறைக்கு எதிரில் அமைந்துள்ளன. கருவறை நுழைவாயிலின் இருபுறமும் துவார பால்கர் காணப்பெறுகின்றனர்.

அர்த்த மண்டபத்தில் நம் இடப்பக்கம் விநாயகர் அமர்ந்திருக்கிறார். கருவறையில் ஐயன் நல் அதிசயனான பனையுடை ஐயனார், தேவியர் புடை சூழ்த் தெவிட்டாத தரிசனம் தருகிறார்.

பனைமரத்தடியிலிருந்து வெளிப்பட்டவர், சுயம்புமூர்த்தியான இவர்; அதனால்தான் இவருக்குப் பனையுடை ஐயனார் என்று பெயர் ஏற்பட்டது என்கிறார் அர்ச்சகர். கோயிலைச் சுற்றிலும் காணப் பெறும் ஏராளமான பனை மரங்கள், அர்ச்சகரின் கூற்றை மெய்ப் பிக்கின்றன. எனினும் பெயர்க் காரணம் அதுவாக இருந்தால், பனையடி ஐயனார் என்பது இன்னும் பொருத்தமான பெயராக இருக்கலாம் அன்றோ?

அதே நேரத்தில், பனை என்னும் சொல்லுக்கு உள்ள பல பொருள் களில், வயல் என்பதும் ஒன்று. வயல்கள் நிறைந்த — வயல்களால் சூழப்பெற்ற இந்தக் கோயிலில் உள்ள ஐயனாரைப் ''பனை(வயல் களை) உடை(ய) ஐயனார்'' என்று சொல்வதும் பொருத்தமாக இருக்கலாம்!

சுயம்புமூர்த்திதாம் இவர் என்பதை உறுதிப்படுத்துகிறது, சிறிதே ஐயனார் சாயலைக் கொண்ட இவர்தம் திருவுருவம். ஆதியிலிருந்தே இவர்தாம் இங்கு அருள்பாலித்து வருகிறார். திருக்குட நீராட்டுக்கு முன்னர் திருப்பணி நடைபெற்ற நேரத்தில்கூட, இவரை இங்கி ருந்து அகற்ற முடியவில்லையாம். கோயில் இருக்கும் இடத்தில், முதலில் ஈச்ச மரங்களும், புதர்களும் மண்டியிருந்தனவாம்.

நெற்குப்பை நகரத்தார் பெருமகனாரின் முயற்சியால், நகரத்தார் களின் நன்கொடைகளைக் கொண்டு, விநாயகர், தண்டாயுதபாணி, ஐயனார் சந்நிதிகளின் விமானங்கள் புதுப்பிக்கப்பெற்று, மகா மண்டபம் புதிதாகக் கட்டப்பெற்று, மருந்து சாத்தி, 21.11.69ல் திருக்குட நீராட்டு நடைபெற்றதாக இங்கு காணப்பெறும் குறிப்பு ஒன்று கூறுகிறது. இதற்குப் பத்து ஆண்டுகள் கழித்தே, நெற்குப்பை நகரத்தார் குடும்பத்தினரால் இங்கு மின்சார விளக்குகள் போடப் பெற்றுள்ளன.

கருவறைக் கல் ஒன்றில் காணப்பெறும், பவ வருஷம் ஆவணி மாதம் (1934ஆக இருக்கலாம்) என்னும் குறிப்பு, கருவறைத் திருப் பணி நடைபெற்று, முதல் திருக்குட நீராட்டு நடைபெற்ற காலமாக இருக்கலாமோ? (இத்தகைய விவரங்களை முறையாகக் கோயிலில் கல்லில் பொறித்து வைத்தால், தலைமுறை தலைமுறைக்கும் நகரத் தார்களின் திருப்பணிப் பெருமைகளை அவை பறைசாற்றிக் கொண் டிருக்குமே!)

நமக்குத் தெரிந்த வரை வேறு எந்தக் குலதெய்வக் கோயிலிலும் கேள்விப்பட்டிராத ஓர் அதிசயம் இங்கு நிகழ்வதாக அர்ச்சகர் கூறு

கிறார். அதுதான் இந்த ஐயனாரை 'ஐயன் நல் அதிசயன்' என்று கூறவைக்கிறது.

ஒவ்வோராண்டும் ஆடி மாதத்தில் சுவாமிக்கு மார்பிலிருந்து இடுப்பு வரை, நீர் வழிவது போன்று வியர்ப்பதுண்டாம்! சுவாமி மீது முதல் நாள் சாத்திய பட்டு அடுத்த நாள் பார்த்தால் நனைந்து போயிருக்குமாம்! இவ்வாறு சுவாமி மீது வியர்வை தென்பட்டால், நல்ல மழை பெய்து, நாடு செழிப்படையும் என்றும், இதனைத் தாம் கண் கூடாய்ப் பன்முறை அனுபவத்தில் கண்டிருப்பதாயும் கோயில் அர்ச்சகர்[5] கூறுகிறார்.

இதனை ஓர் அதீதக் கற்பனை என்று, பகுத்தறிவு மனங்கள் புறக் கணித்துவிடக் கூடும். அது அவரவர் மனப்பக்குவத்தைப் பொறுத்தது.

இது போன்றே, ஆண்டுதோறும் ஆடி மாதத்தில் புரவி எடுப்பு நடை பெறாவிட்டாலும், ஊர்வளம் குன்றிவிடுகிறதாம்! மார்கழி மாதத்தில் திருப்பள்ளி எழுச்சி வழிபாடு இங்கு நடைபெற்றுவருகிறது.

தென் பிராகாரத்தில் உள்ள ஒரு நுழைவாயிலை அடுத்து, வேந்தன்பட்டி நகரத்தார் குடும்பத்தினர், வெகுதான்ய ஆண்டு ஆனி மாதம் உபயம் செய்த மேடை ஒன்றில், சின்னக் கருப்பர் இடம்



நல்ல காலம் பிறக்கக் காத்திருக்கிறோம்

பெற்றிருக்கிறார். இம்மேடையின் ஒருபுறம் பேச்சியம்மனும், மறு புறம் சாவல்காரனும் உள்ளனர். பேச்சியம்மனுக்கு முட்டை, கச்சக் கருவாடு, முருங்கைக்காய், கத்தரிக்காய் கலந்து (இதற்குச் சுள் என்று பெயராம்) படைப்பதுண்டாம்.



வெயிலும் மழையும் வீண் போகலாமா?

அடுத்துள்ள நீண்ட கல் மேடையில் இராக்காயி, பெரிய கறுப்பர், வீரபத்திரர், சப்த மாதர், மற்றும் ஐந்து மண் சிலைகள் உள்ளன. தென்மேற்கு மூலையில் விநாயகர் சந்நிதியும், வடமேற்கு மூலையில் தண்டாயுதபாணி சந்நிதியும் உள்ளன. தண்டாயுதபாணி சந்நிதிக்கு முன்னால் ஓர் ஓரத்தில் வேல் ஒன்று பிரதிஷ்டை செய்யப் பெற்றிருக்கிறது. இந்த இரு சந்நிதிகளும்கூட, வெகுதான்ய ஆண்டு (1938) ஆனி மாதத்திலேயே கட்டப்பெற்றிருக்க வேண்டும். இதிலிருந்து கோயிலின் படிப்படியான வளர்ச்சியை ஓரளவு ஊகிக்க முடிகிறது. முதலில் கருவறைத் திருப்பணி நடைபெற்றுப், பின்னர் நான்கு ஆண்டுகள் கழித்து விநாயகர், தண்டாயுதபாணி சந்நிதிகளும், கறுப்பர் மேடைகளும் அமைக்கப்பெற்றிருக்கின்றன; நீண்ட காலம் கழித்து மகா மண்டபம் கட்டப் பெற்றிருக்கிறது. அடுத்து நடைபெறவிருக்கும் திருக்குட நீராட்டுக்கு முன்னர், ஏனைய பரிவார தேவதைகளுக்கும் சந்நிதிகள் அமைக்கப்பெறும் என நம்புவோம்.

வடக்குப் பிராகாரத்தில் திறந்த வெளியில், இரு ஆஞ்சநேயர் சிலைகள், பைரவர் சிலை ஆகியவை, பட்டாணி சிலையை அடுத்துத் தனித்தனியாக வைக்கப் பெற்றுள்ளன.

இந்து அற நிலையத் துறையைச் சேர்ந்த இக்கோயிலில், ஒவ்வொரு நாளும் காலை, மாலை இரு வேளைகளிலும் பூசை நடைபெறுகிறது.

திருவிழாக் காலங்களில் சாமியாடி மீது கறுப்பர் ஆவேசிக்கும்போது, அவரை மேள தாளத்துடன் அழைத்து வருவார்களாம். இவ்வாறு அருள் வரும் நேரத்தில் சாமியாடி தீப்பந்தம் சாப்பிடுவது உண்டாம்.

சிவராத்திரியின்போது இங்கு வரும் நகரத்தார்கள், அந்த ஆண்டில் பிறந்த பிள்ளைகளுக்கு முடி இறக்கிக், காது குத்தித், தொட்டில் கட்டிப், பெயர் வைத்து, மாவிளக்கு வைக்கின்றனர். பனையப்பன், கறுப்பாயி என்பவை, இந்தக் கோயிலைக் குலதெய்வக் கோயிலாகக் கொண்டவர்களின் குடும்பங்களில் அதிகமாகச் சூட்டப்பெறும் பெயர்களாகும்.

ஐயனார் ஆடம்பரமின்றிப், படாடோபமில்லாமல், எளிமையாகக் காணப் பெறுகிறாரே என்று கருதி, அவரைச் சாதாரணமாக நினைத்து விடாதீர்கள்; தம் பக்தர்களுக்கு வேண்டியவற்றை வேண்டியாங்கு கொடுக்கும் அதே நேரத்தில், தமக்கு வரவேண்டியவற்றையும், அவர் வட்டியும் முதலுமாக வாங்கிக்கொண்டு விடுவாராம்!

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

மணிவாய் முகிழ்ப்பத், திருமுகம் வேர்ப்ப,அம்
மன்றுக்கெல்லாம்
அணியாய் அருள்நடம் ஆடும்பிரானை
அடைந்(து)உருகிப்
பணியாய், புலன்வழி போம்நெஞ்ச மே!இனிப்
பையப்பையப்
பிணியாய்க் கடைவழி சாதிஎல் லோரும்
பிணமென்னவே.

திருச்சிற்றம்பலம்

— 11ஆம் திருமுறை,
பட்டினத்துப் பிள்ளையார்

குறிப்பு விளக்கம்:

1. 3ஆம் திருமுறை
2. திருமுறைத் தலங்கள்; சிவப்பதிகள் வரலாறு — கழக வெளியீடு
3. தெய்வ தரிசனம் — ஆனந்தி; திருச்சிக்கல் கோயில் வரலாறு — சொ. கணபதி தேசிகர்
4. உ. சேவகப் பெருமாள் வேளார், முனைசந்தை
5. உ. சேவகப் பெருமாள் வேளார்

உ

செப்புதற்கு அரிய சேத்துமேல் ஐயன்

(60. சேத்துமேல் செல்ல ஐயனார் திருக்கோயில், அரிமழம்)

வள்ளிக்கிழங்கு தோண்டினால் சிவலிங்கம்; முயல்வேட்டை ஆடி னால் துர்க்கை; கிணறு தோண்டினால் காளி; பாலை மரத்தடி யில் ஐயனார்; தானாக மேலே வரும் அம்பாள் என்று சுயம்பு மூர்த்தங்கள் பெருகிக்கொண்டே வரும் குலதெய்வக் கோயில்களின் வரிசையில், மேலும் ஒரு ''தான் தோன்றி ஐயன்''. இம்முறை குதிரை குளம்பினால் கிளறியதால் வெளிப்பட்ட செல்ல மூர்த்தி இவர்!

வயல்கள் சூழ்ந்த பகுதியில் கோயில் கொண்டிருக்கும் பணை(னை) யுடை ஐயனாரை முனைசந்தையில் தரிசித்த நாம், இப்போது ''சேத்து (வயல்) மேல் செல்ல ஐயனாராக'' அரிமழத்தில் காணப் போகிறோம்.

மன்னர்களிடையே மார்ச்சரியம் (பொறாமை) இல்லாதிருந்த காலம் போலும். அதனால்தான் புதுக்கோட்டை மன்னரும், சிவகங்கை சேதுபதியும் தோழமை பூண்டு குதிரைகள் மீது ஆரோகணித்துச் சவாரி செய்திருக்கின்றனர். மன்னர்கள் ஓய்வு கொண்டிருந்த நேரத் தில் குதிரை குளம்பினால் மண்ணைக் கிளறி, ஐயனை அவர்களுக்கு அறிமுகப் படுத்தியிருக்கிறது. ஐயனுக்கு ஆலயம் அமைக்க விரும் பிப், புதுக்கோட்டை மன்னரிடமிருந்து நிலத்தைப் பெற்றுச் சிவ. கங்கைச் சேதுபதி இந்தக் கோயிலை அமைத்தாராம்.[1] அதுதான் இப்போது நாம் செல்லும் அரிமழம் சேத்துமேல் செல்ல ஐயனார் கோயில்.

இவரை வழிபடும் அரிமழம் (65 புள்ளிகள்), நேமத்தான்பட்டி (50 புள்ளிகள்) ஆகிய ஊர்களின் இரணிக்கோயில் நகரத்தார்கள்,[2] இங்குள்ள பெரிய கறுப்பரையே தங்கள் இனத்துடன் சேர்த்து, அவரைச் செட்டிக் கறுப்பராக்கிப், போதாததற்கு மாப்பிள்ளைக் கறுப்பர் என்றும் அவரை அழைக்கின்றனர்.

* * *

தேக்காட்டூர் முனைசந்தையிலிருந்து அரிமழம் சென்று, அரிமழம் — தேனிப்பட்டி (புதுப்பட்டி என்றும் சொல்கின்றனர்) சாலை யில், அரிமழத்திலிருந்து சுமார் 2 கி.மீ. தொலைவில் இடப்பக்கம் திரும்பும் மண் சாலையில் சுமார் ஒரு கி.மீ. சென்று, மீண்டும் இடப் புறம் திரும்பிச் சென்றால், கோயிலை அடையலாம்.

இதுவும் முதுமை நிலையை எட்டிவிட்ட கோயில்தான். முதுமையில்தானே பெரும்பாலோர் கோல் ஊன்றி நடக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது? அதனால்தான் இக்கோயிலின் திருச்சுற்றுச் சுவர்களும் வெடிப்புக் கண்டு முட்டுக் கொடுத்து வைக்கப் பெற்றுள்ளன! 17, 18 ஆண்டுகள் என்பது நீண்ட இடைவெளிதானே? (02.02.1941ல் முதல் குடமுழுக்கும், 05.05.1977ல் இரண்டாவது திருக்குட நீராட்டும் நடைபெற்றிருக்கின்றன). ஆனாலும் மற்ற கோயில்களைப் போன்று முட்செடிகள் நிரம்பி, நடக்கத் தவிக்க வேண்டி இல்லாமல், கோயிலும், அதன் சுற்றுப்புறங்களும் தூய்மையாக உள்ளன. குலதெய்வக் கோயில்களில் இத்தகையதொரு நிலை அபூர்வமாகத்தான் காணப்பெறுகிறது!

கோயிலின் எதிரில் திருக்குளம் அமைந்திருக்கக் காண்கின்றோம். அதைத் தாண்டித்தான் இரு சேமங்குதிரைகள் உள்ளன. கோயிலின் இடப்புறம் (வடக்கில்) செட்டிக் கறுப்பர் (தனிக்)கோயில் அமைந்திருக்கிறது. அரிமழம், நேமத்தான்பட்டி நகரத்தார்களுக்குச் சொந்தமான இக்கறுப்பர் கோயிலுக்குப்[3] பின்னர் வருவோம். முதலில் ஐயனாரைத் தரிசிப்போம். ஐயனார் கோயில் நுழைவாயிலின் வலப்புறம் (நுழைவாயிலுக்குத் தெற்கே) சிறியதொரு மாடத்தில் செல்வ விநாயகர் அமர்ந்திருக்கிறார். செல்லம் என்பதற்குச் செல்வம் என்றும் பொருள் உண்டு. அதனால்தான் செல்ல ஐயனார்



செட்டிக் கறுப்பரின் சிறிய கோயில்

கோயிலில், செல்வ விநாயகரை, வாயிலில் அமர்த்தியிருக்கின்றனர் போலும்! நுழைவாயிலின் மேலே சுதையில் கஜலட்சுமி காட்சி தரு கிறார். ஐயனார் கோயில், கறுப்பர் கோயில் இரண்டையும் இணைத் துத் தகட்டுக் கல் பரப்பப் பெற்றிருக்கிறது.

நுழைவாயிலையும், முழுமையும் கல் திருப்பணியான கருவறை — அர்த்த மண்டபம் — மகா மண்டபத்தையும் ஓட்டுக்கூடம் ஒன்று இணைத்து நிற்கிறது. மகா மண்டபத்தில் யானை வாகனமும், பலி பீடமும் உள்ளன. கருவறை நுழைவாயிலில் துவார பாலகரும், அர்த்த மண்டபத்தில் நம் இடப்பக்கம் விநாயகரும் காணப் பெறு கின்றனர்.

கருவறையில் உள்ள சேத்து மேல் செல்ல ஐயனார், இரண்டாம் தலைமுறையினர். குதிரைக் குளம்பு கிளறியதால் வெளிப்பட்ட முதல் ஐயனார் தலையில் சிறிது சேதம் ஏற்பட்டிருந்ததால்,[4] அவரை யும், அவர்தம் தேவியரையும் தென்மேற்கு மூலையில் இடம்பெறச் செய்திருக்கிறார்கள். இருப்பினும் அவருக்கும் நாள்தோறும் பூசை நடைபெறுகிறது.

வைகாசி விசாகத்தன்று இங்கு ப்ரவி எடுப்பு நடைபெறுகிறது. இந்த ஐந்து நாள் திருவிழாவில், ஒவ்வொரு நாளும் ஐயனார் தேவியரு டன் வாகனத்தில் எழுந்தருளுவது உண்டாம்.

மகார் நோன்பன்று வெள்ளிக் குதிரையில் ஐயனார் சென்று, நகரச் சிவன் கோயில் முன்பாக ஏழு சுவாமிகள் நின்று அம்பு போடுவது உண்டாம்.[5] இதற்கு மூன்று நாட்கள் கழித்து, நகரத்தார்கள் ஐய னாருக்கும் கறுப்பருக்கும் அபிஷேக ஆராதனைகள் செய்து, பிரா மண போஜனம் நடத்துவார்களாம். அரிமழம் நகரத்தார்கள் பேர ளவில் இதில் கலந்து கொள்வர்.[6]

திருமணங்களுக்கு மாலை கொடுப்பது, குழந்தைகளுக்கு முடி இறக் குவது எல்லாம் இங்கு நடைபெறுகின்றன. நகரத்தார் வீடுகளில், ஐயனாரின் பெயரை ஒட்டிக் குழந்தைகளுக்குச் செல்லப்பன், செல் லம்மை என்று பெயரிடுகின்றனர்.

இந்த ஐயனார் கோயில் இப்போது இந்து அறநிலையத்தின் பொறுப் பில் இருந்தாலும், இங்கு திருப்பணிகள் முழுமையாக நகரத்தார் களாலேயே செய்யப் பெற்றிருக்கின்றன.[7]

* * *

தென் பிராகாரத்தில் திருச்சுற்றுச் சுவரை ஒட்டியுள்ள மாடங் களில் சின்னக் கறுப்பர், சந்நியாசி, சப்த கன்னியர் (யாவும் மண் சிலைகள்) ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். தென்மேற்கு மூலை யில் மூஷிஹத்துடன் கூடிய விநாயகர் சந்நிதி உள்ளது. அடுத்தடுத்து இன்னும் இரு விநாயகர்களும் வீற்றிருக்கின்றனர். வடமேற்கு மூலை யில் வள்ளி — தெய்வயானை சமேத சுப்பிரமணியர் சந்நிதி அமைந் திருக்கிறது. வடக்குப் பிராகாரத்தில் உள்ள மாடங்களில் பத்ர காளி, முனி, பைரவர் ஆகியோர் உள்ளனர்.

''சேற்றார்வயல் புடைசூழ்''[8] செல்ல ஐயனாரை வணங்கிவிட்டுப் பக்கத்தில் உள்ள செட்டிக்கறுப்பரின் தனிக் கோயிலுக்குச் செல்கி

றோம். வேலைப்பாடு நிறைந்த (ஆனால் பழைமையான) விமானத்துடன் கூடிய கிழக்குப் பார்த்த சிறிய சந்நிதி; கல் திருப்பணி செய்யப் பெற்றுள்ளது. முன்னால் ஓர் ஓட்டுக்கூடம். இங்கு 18.04.75ல் திருக்குட நீராட்டு நடைபெற்றிருக்கும் போலிருக்கிறது. மாப்பிள்ளைக் கறுப்பர் என்று உரிமையுடைய உறவு முறையோடும், செட்டிக் கறுப்பர் என்று இனப் பற்றோடும் அழைக்கப் பெறும் பெரிய கறுப்பர், நடுவில் நிற்கிறார். அவரின் வலப்புறம் செட்டிச்சி அம்மனும், இடப்புறம் காளியும் காணப் பெறுகின்றனர். வலப்புறம் சரிந்த கொண்டை; முறுக்கு மீசை, கடுமை இல்லா



மகளும், மாப்பிள்ளை(?)யும்

விட்டாலும் கண்டிப்புக் காணப்பெறும் முகம், – வலக்கையில் ஓங்கிய அரிவாள், மார்பில் அணிகலன்கள் — மிகமிக அழகான உருவச்சிலை. அழகிய தோற்றமுடைய மாப்பிள்ளையைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்! செட்டிச்சி அம்மனும் அழகில் சிறிதும் குறைந்தவர் அல்லர். இடப்புறக் கொண்டை, இடக்கையில் தாமரை மலர் ஏந்தி எழிலுடன் திகழ்கிறார்! இந்த மூவர் (கறுப்பர், செட்டிச்சி, காளி) மட்டுமன்றி ஐயனார் கோயிலில் உள்ள அனைத்து மூர்த்தங்களுமே அழகிய வேலைப்பாடு நிறைந்தவை தாம். சிற்பி, மிகுந்த ஈடுபாட்டுடன் சிற்பங்களை உருவாக்கியிருக்கிறார்!

பெரிய கறுப்பர், எப்படிச் செட்டி (மாப்பிள்ளை)க் கறுப்பர் ஆனார்? செட்டிச்சி அம்மன் யார்?

அரிமழம் இரணிக்கோயில் நகரத்தார் குடும்பத்தில் பிறந்த பெண், பிரசவத்துக்காகத் தந்தையாருடன் அரிமழம் செல்லும் வழியில், இங்குள்ள குளத்தருகில் தங்கியிருக்கிறார். குளத்தில் இறங்கி நீர் மொண்டு வரச் சென்ற தந்தையார் திரும்பி வந்தபோது, மகளையும் காணோம்; கொண்டு வந்த கட்டுச் சோற்றையும் காணோம். துடித்துப் போய் மகளை அழைத்தார்; மகளிடமிருந்து மறுமொழி இல்லை. மாறாக 'நான் சேர்த்துக் கொண்டேன்' என்னும் மறுமொழி வந்தது கறுப்பரிடமிருந்து! தொடர்ந்து செட்டிப் பெண்ணுக்குச் சிலை வைத்துக், கறுப்பரையும் செட்டிக் கறுப்பராக்கி, (மகளைச் சேர்த்துக் கொண்டதால் மாப்பிள்ளைக் கறுப்பரும் ஆக்கி), வழிபட்டு வரலாயினர்.[9]

வியாபாரத்துக்குப் போய்வந்தவர்கள், வழியில் இளைப்பாற இங்கு தங்கியபோது, அவர்களுடன் வந்த பெண் இங்கு மறைந்து போய், இங்கேயே இருக்கிறேன் என்று சொன்னதாகவும் கூறுகின்றனர்.[10]

செட்டிக் கறுப்பர், மாப்பிள்ளைக் கறுப்பர் என்னும் பெயர்களோடு, கட்டுச்சோற்றையும் அபகரித்துச் சென்ற இந்தக் கறுப்பரைக் கட்டுச் சோற்றுக் கறுப்பர் என்று அழைப்பதும் பொருத்தமாகவே இருக்கும்!

ஆடி மாதம் கடைசி வெள்ளிக்கிழமை அரிமழம், நேமத்தான்பட்டிப் பங்காளிகள் சேர்ந்து, கறுப்பையாவுக்குப் பெரும்பூசை நடத்துகின்றனராம்.[11] இந்தப் பூசையின்போது பெரிய கறுப்பருக்குப் பால் பள்ளயம்தான் போடப்பெறுகிறது. இதற்காகப் பால் கொண்டு வருவதே, இதில் தலையாயதாகக் கருதப்பெறுகிறது.

மண்பானையில் இளஞ்சூடாகக் காய்ச்சிக் கொடுக்கப்பெறும் 14 படி பாலை, அரிமழத்திலிருந்து 3 கி.மீ. தொலைவு நடந்து தலையில் வைத்துத் தூக்கிவந்து, கறுப்பர் சந்நிதியில் அந்தப் பாலைக் கொண்டு இரவு 8 மணிக்குப் பொங்கல் வைப்பார்களாம். இந்தப் பூசையில் பெண்கள் கலந்து கொள்வதில்லை. எனினும், வீட்டிலிருக்கும் ஆண்கள் கட்டாயமாகக் கோயிலுக்கு வந்து விடுவார்கள். சூடான பால் உள்ள பானையை அரிமழத்திலிருந்து சுமந்து வருபவர், மிகக் கடுமையான நோன்பினைக் கடைப்பிடிக்க வேண்டுமாம். 80 ஆண்டுக் காலமாக ஒரே மண்பானைதான் பயன்படுத்தப் பெற்று வருகிறது. உலோகப் பானையாகவோ, வேறு மண்

பானையாகவோ மாற்ற முயன்றபோது, தோல்வியே கிட்டியது. கடந்த பல ஆண்டுகளாகப் பால் பானையைத் தூக்கி வருபவரின் வாழ்க்கையில் ஏற்பட்ட சோதனை, கறுப்பரின் அருளால் கதிரவனைக் கண்ட பனி போல் மறைந்ததாம்.[12] பள்ளயம் போட்டுப் படைத்த பின்னர் சுவாமி அழைப்பது உண்டு. நகரத்தார் ஒருவர்மீது, கறுப்பர் ஆவேசித்து அருள் வாக்குக் கூறுவாராம்.[13]

* * *

ஒவ்வொரு நாளும் காலை, மாலை இரு வேளைகளிலும் பூசை நடைபெறும் இக்கோயிலில், காலை 9 மணியிலிருந்து 11 மணி வரையும், மாலை 4 முதல் 6 மணி வரையும் எந்தத் தடங்கலுமின்றி இறைவனை வழிபட்டு மகிழலாம். ''அரிமழ நாயகா! வரும்குறை தீர்ப்பவா! அண்ணலே காத்துரட்சி!''[14] என்று கூறிச், செல்ல ஐயனாரையும், செட்டிக் கறுப்பரையும் நீங்களும் சென்று சேவித்து வாருங்களேன்!

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

பல்லார் பயில்பழனம், பாசூர் என்று
  பழனம் பதிபழைமை சொல்லி நின்றார்,
நல்லார் நனிபள்ளி இன்று வைகி,
  நாளைப்போய் நள்ளாறு சேர்தும் என்றார்,
சொல்லார் ஒருவிடமாத், தோள்கை வீசிச்
  சுந்தரராய் வெந்தநீ(று) ஆடி எங்கும்
அல்லார் வயல்புடை சூழ்மாட வீதி
  வலம்புரமே புக்(கு)அங்கே மன்னி னாரே.

திருச்சிற்றம்பலம்

— 6 ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

— செப்புதற்கு — சொல்லுதற்கு
1. சா. சுப்பையா வேளார், அரிமழம்
2. சி. செல்லப்ப செட்டியார், அரிமழம்
3. சா. சுப்பையா வேளார்
4. சா. சுப்பையா வேளார்
5. சா. சுப்பையா வேளார்
6. சி. செல்லப்ப செட்டியார்
7. சா. சுப்பையா வேளார்
8. ''சேறு நிறைந்த வயல்கள் மருங்கு சூழ்ந்த..'' — 8 ஆம் திருமுறை
9. அ. முத்தையா செட்டியார், அரிமழம்
10. சா. சுப்பையா வேளார்
11. சி. செல்லப்ப செட்டியார்
12. அ. முத்தையா செட்டியார்
13. சி. செல்லப்ப செட்டியார்
14. 'அரிமழம் செட்டிக் கறுப்பர் பக்திப் பாடல்கள்'

உ

தனிநீக்கும் தனித்துணையே, தலைக்காவுடை ஐயனே!

(61. தலைக்காவுடை ஐயனார் திருக்கோயில், செங்கீரை)

''தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து'' என்பது திருமூலர் திருவாக்கு.[1] இறைவனின் இந்தப் பேரருட் பண்பையே ஐயனாருக்குப் பெயராக அமைத்து, அவரைத் தலைக்காவுடை ஐயனார் என்று அழைத்து மகிழ்கின்றனர் செங்கீரை மக்கள். ஏனெனில் ஐயனார், பூமி முதலான மூவுலகங்களையும் அருள்கூர்ந்து பாதுகாத்து அருள்பவர் அன்றோ?[2] இதன் காரணமாகவே, சாதாரணமாகப் பேச்சு வழக்கில் குலதெய்வத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'தலைமாடு (தலைப்புறம்) காக்கும் தெய்வம்' என்று கூறியிருப்பர் போலும்!

வினாத்தொகுதி நிறைவு செய்து உதவிய நகரத்தார் பெருமகனார் ஒருவர்[3] சுவாமி (மூலவர்)யின் திருநாமம் ''தண்ணீர் ஊற்றி விளக்கு எரிக்கும் தழைக்காடு காக்கும் ஐயனார்'' என்று குறிப்பிட்டிருக்கிறார். அர்ச்சகரைக் கோயிலுக்கு அழைத்து வந்தபோது, கோயிலுடன் தொடர்புடைய கிராமத்து மக்கள் சிலரும் உடன் வந்தனர். ஒருவரேனும் தண்ணீர் ஊற்றி விளக்கு எரிக்கும் அற்புதம் இங்கு நிகழ்வதாகச் சொல்லவில்லை. இத்தகைய விந்தை இங்கு நிகழ்ந்(திருந்)தால், ஒருவராவது குறிப்பிட்டிருப்பார்கள். ஒருவேளை அவர்கள் கூற மறந்திருந்தால், நீரில் விளக்கு எரியும் மூன்றாவது கோயிலாகச்[4] செங்கீரை ஐயனார் கோயிலை ஏற்றுக் கொள்வதில் எந்த மறுப்பும் இல்லை. தழை என்பதற்கு இலை என்னும் பொருள் இருப்பதனால், 'தழைக்காடு காக்கும் ஐயனார்' என்பதும் பொருத்தமான பெயரே!

'குறைந்தடைந்தார் ஆழாமைக் காக்கும்'[5] அந்தக் குணக்குன்றைக் காண, அரிமழத்திலிருந்து இராயவரம் செல்லும் சாலையில் பயணம் மேற்கொள்கிறோம். இராயவரத்திற்குச் செல்லுமுன்னதாகவே, இராயவரத்திலிருந்து கிழக்கே ஏறத்தாழ ஒரு கி.மீ. தொலைவில் செங்கீரை கிராமம் உள்ளது.

கிராமத்தின் வடபுறத்தில் உள்ள பெரியதோர் ஊருணியின் வடகரையில், முன்னோடிக் கறுப்பர் கோயிலும், அதற்குப் பின்புற

மாகக் கிழக்கு நோக்கித் தலைக்காவுடை ஐயனார் கோயிலும் அமைந்திருக்கின்றன. இரண்டுமே நகரத்தார்கள் வழிபடும் குலதெய்வக் கோயில்கள்தாம். முதலில் ஐயனார் கோயிலுக்குச் செல்கிறோம்.

கோயிலின் முன்புறத்தில் 02.12.1917ல் கட்டப்பெற்ற இரு சேமங் குதிரைகள் எதிரும் புதிருமாக அமைந்திருக்கின்றன. பூதங்களின் தோள்களில் முன் கால்களை ஊன்றி நிற்கும் இரு குதிரைகளுமே (விமானங்களும் கூடப்) புதிதாக வண்ணம் தீட்டப்பெற்றது போன்று காணப்பெறுகின்றன.



ஐயனார் வீற்றிருக்கும் அழகுக் கோயில்

நுழைவாயிலின் மேலே உள்ள சிறிய கோபுர அமைப்பில், ஐயனார் நடுவிலும், தேவியர் இருபுறமும் தனித்தனி மாடங்களில் சுதையில் அமைக்கப்பெற்றிருப்பது அழகாக உள்ளது.

உள்ளே நுழைந்ததும் முதலில் ஓர் ஒட்டுக்கூடம். அதையடுத்துள்ள மகா மண்டபம், கருவறை ஆகியவை முழுமையாகக் கல் திருப்பணி செய்யப் பெற்றுள்ளன. யானை வாகனம், பலிபீடம் ஆகியவற்றைக் கடந்து சென்றால், கருவறை வாயிலின் இருபுறமும் துவாரபாலகர் உள்ளனர். அர்த்த மண்டபத்தில் ஐயனாரின் வலப்புறம் விநாயகப் பெருமான் காட்சியளிக்கின்றார். கருவறையில் தேவியர் புடைசூழத் தலைக்காவுடை ஐயனார் அருள் பாலித்து அமர்ந்திருக்கிறார்.

இங்குள்ள ஐயனார், தேவியர், அகோரவீரபத்திரர், மற்றும் சில சிலைகள், இடையில் மாற்றப் பெற்றிருக்கின்றன. இப்போது உள்ளவை புதிய சிலைகளே. பழைய சிலைகள் புதர் வெட்டும்போது கிடைத்தவையாம்;[6] மீண்டும் பிறந்தகத்துக்கே சென்றுவிட்டன!

(முதன் முதலில் வழிபட்ட தெய்வச் சிலைகளை, அவை சிதைந்து போயிருந்தாலும், மற்ற கோயில்களைப் போன்று, கோயிலினுள்ளேயே வைத்திருக்கலாமே!)

கடியர்பட்டி, நேமத்தான்பட்டி நகரத்தார்களும், பலவான்குடி வைரவன் கோயிலாரும் வழிபடும் ஐயனார் இவர்.[7] ஆடிப் பௌர்ணமியை அடுத்துவரும் வெள்ளிக்கிழமையன்று, பங்காளிகள் சேர்ந்து வந்து, இங்கு வழிபாடு செய்கின்றனர். நகரத்தார் குடும்பங்களில் பிறந்த குழந்தைகளுக்கு இங்கு முடி இறக்குவது இல்லை; ஆனால் தொட்டில் கட்டும் வழக்கம் நிலவுகிறது.[8]

ஒரு வேளைப் பூசை நடைபெறும் இக்கோயிலில், திருவிழா என்று ஏதும் கிடையாது.

மாசி மாத மகா சிவராத்திரிக்கு இங்கிருந்து காவடி கட்டிப், பாற்குடம் எடுத்துக் கடியாபட்டி சாத்தையா கோயிலுக்குச் செல்கிறார்களாம்.[9]

* * *

தென் பிராகாரத்தில் திருமஞ்சனக் கிணற்றை ஒட்டிச் சோனையக் கறுப்பர், மற்றும் மூன்று சந்நிதிகளில் செட்டிச்சி அம்மன் (நேமத்தான்பட்டி நகரத்தார்கள் வழிபடுவதால், அவ்வூருடன் தொடர்புடைய செட்டிச்சியம்மன் இங்கும் குடிகொண்டிருக்கிறாரோ?), கறுப்பாயி அம்மன், பேச்சியம்மன் ஆகியோர் ஒரு சந்நிதியிலும், பெரிய கறுப்பண்ணசுவாமி ஒரு சந்நிதியிலும், அகோர வீரபத்திரர் மூன்றாவது சந்நிதியிலும் இடம் பெற்றுள்ளனர்.

தென்மேற்கு மூலையில் விமானத்துடன் கூடிய சந்நிதியில் விநாயகரும், அவரின் இடப்புறம் சந்நியாசி, அரசுமுகம் ஆகியோரும், வடமேற்கு மூலையில் தண்டாயுதபாணியும், அவரின் வலப்புறம் கன்னிமாப் பெண்டிரும் உள்ளனர்.

வட பிராகாரத்தில் கருவறையை ஒட்டி உள்ள விமானத்துடன் கூடிய சிறிய சந்நிதியில் மதகடி சாஸ்தா வீற்றிருக்கிறார். (மக்கமடை ஐயனாரைப் போன்றவர் போலும்.) இச்சந்நிதி தெற்குப் பார்த்து அமைந்திருக்கிறது. வடகிழக்கு மூலையை ஒட்டி அடைக்கலங்காத்தாள் காணப்பெறுகிறார்.

கோயிலுக்கு வெளியே தெற்கில் உள்ள சேமங்குதிரைக்குப் பின்னால் காணப்பெறும் சில நடுகற்கள் காளியாக வழிபடப் பெறுகின்றன..

* * *

விவரம் தெரிந்து 20.08.70ல் முதன் முறையாகவும், 82ஆம் ஆண்டில் இரண்டாவது முறையாகவும், இங்கு திருக்குட நீராட்டு நடைபெற்றிருக்கிறது.

நேமத்தான்பட்டி நகரத்தார்கள் மின்சார விளக்குகள் போட்டுக், கட்டணங்களையும் கட்டி வருவதாகச் சொல்லும் அர்ச்சகர், இங்கு வருபவர்கள், முதலில் இங்கு வழிபட்டு விட்டுப், பின்னால் உள்ள கறுப்பர் கோயிலுக்குச் சென்று, அங்குதான் சிறப்பாக வழிபடு கின்றனர் என்று குறைபட்டுக் கொள்கிறார்.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

விண்ணின்(று) இழிந்து வினைக்(கு)ஈடாய் மெய்கொண்டு,
தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து,
உண்ணின்(று) உருக்கி,ஓர் ஒப்பிலா ஆனந்தக்
கண்ணின்று காட்டிக், களிம்(பு)அறுத் தானே.

திருச்சிற்றம்பலம்

— 10ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

— 'தனிமை நீக்கும் ஒப்பற்ற துணைவன்'
1. 'குளிர்ச்சி பொருந்திய திருவடியை (ஆன்மாக்களுக்குப்) பாதுகாவலாக அமைத்து (இறைவன் அருள் புரிகிறான்) — 10ஆம் திருமுறை
2. தாரணி முதல மூன்றும் .தலையளி புரிந்து காப்பான்' — கந்த புராணம்
3. கும. வள்ளியப்பன், பலவான்குடி
4. மற்ற இரு கோயில்கள்: அழகிய நாச்சியம்மன் கோயில், பொன்னமராவதி; கள்ளணன் — பிள்ளைப் பெருமாள் கோயில், கோனாபட்டு
5. குறைந்து — நலிவுற்று; ஆழாமை — அழியாமல்; — 6ஆம் திருமுறை
6. வீர. சாத்த வேளார், செங்கீரை
7. வீர. சாத்த வேளார்
8. கும. வள்ளியப்பன்
9. வீர. சாத்த வேளார்

உ

முழங்குஅழலாய் நிமிர்ந்த முன்னோடிக் கறுப்பர்

(62. முன்னோடிக் கறுப்பர் திருக்கோயில், செங்கீரை)

தலைக்காவல் புரிந்து தண்ணளி (அருள்) செய்யும் தலைக்காவுடை ஐயனாரை வழிபட்டுக் கொண்டு, அக்கோயிலின் பின்புறமாக, மேற்கு நோக்கி அமைந்துள்ள முன்னோடிக் கறுப்பர் கோயிலுக்கு வருகிறோம்.

செங்கீரை கிராமத்திலிருந்து வரும்போது முதலில் நாம் காண்பது இக்கோயிலே எனினும், பெரும்பாலோர் இந்த முன்னோடிக் கறுப் பருக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றனர் எனினும், ஐயனார் இருக் கும்போது அவரை வழிபடாமல் வரலாமா? அதனால்தான் முத லில் ஐயனாரை வழிபட்டுக் கொண்டு, அடுத்து இங்கு வந்திருக் கிறோம்.

03.11.1989ல் திருக்குட நீராட்டு நடைபெற்றிருப்பதால்,[1] கோயி லின் முன்னுள்ள ஒற்றைச் சேமங்குதிரை, புத்தொளியுடன் திகழ் கிறது. இரு பூதங்கள் முறையே தம் இட — வலக் கரங்களை உயர்த் தியிருக்க, அவற்றில் தன் முன் கால்களை வைத்துக் கொண்டு, கனைப்பொலியுடன் (உனக்கு மட்டும் எப்படிக் கேட்டது என்று கேட்காதீர்கள்!), புறப்பட ஆயத்தமான நிலையில் அமைந்திருக்கிறது இக்குதிரை. ஐயனார் கோயில் போன்றே, இங்கும் சேமங்குதிரை யின் பாதுகாப்புக்காகச் சுற்றிலும் கம்பி அடைப்புப் போடப்பெற் றிருக்கிறது.

கோயிலின் முன்புறமும், ஊருணியை ஒட்டியும், இரு நீண்ட கூடங் கள் உள்ளன. முன்னால் உள்ள ஓட்டுக் கூடத்தைக் கடந்து கோயி லினுள் செல்கிறோம்.

மூலவர் 'முழங்கழலாய் நிமிர்ந்த' முன்னோடிக் கறுப்பர், பெரிய திருவுருவம்; அழகிய சிலை வடிவம்; அருகில் திரிசூலம்.

இவருக்கு அன்றாடம் அபிஷேகம் கிடையாது. உயிர்ப்பலி கொடுத்து உபயம் செய்தால் மட்டுமே அபிஷேகம் நடைபெறும்; மற்ற நாட் களில் நிர்மாலியத்தைக்கூட அகற்றுவதில்லை; சாம்பிராணி போட்டுத்

தீபம் காட்டுவதோடு சரி. அதற்காக இவரைச் சாதாரணமாகக் கருதி விடாதீர்கள்; அடிக்கடி இவருக்கு நிறையப் பால், தயிர் அபிஷேகங்கள் நடைபெறுவதுண்டாம்!

அரிமழம் (மாத்தூர் அரும்பாக்கூர்), இராயவரம், கண்டனூர், நேமத்தான்பட்டி, பலவான்குடி, புதுவயல் நகரத்தார்கள், இந்த முன்னோடிக் கறுப்பரைக் குலதெய்வமாக வழிபடுகின்றனர்.[2]



முன்னோடிக் கறுப்பரின் முகப்புக் கோயில்

ஒவ்வோராண்டும் தை மாதம் மூன்றாவது வெள்ளிக்கிழமை, பங்காளிகள் கூடி வழிபடுகின்றனர். ஈராண்டுகளுக்கு ஒருமுறை சிறப்பு வழிபாடும் செய்கின்றனர்.[3] நகரத்தார்கள் ஆண்டுக்கொரு முறை கூடி வழிபடும்போது, சுவாமிக்கு வெள்ளி அரிவாள் வைப்பது உண்டு என்கிறார் பூசாரி.

சந்நிதிக்கு வலப்புறம் காஞ்சிர மரத்தின் பட்டுப்போன ஒரு கிளை உள்ளது. அதன் அருகில் வேல் ஒன்று காணப்பெறுகிறது. இது, முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் முருகன் கை வேல்!

கறுப்பருக்குச் சிறப்புப் பூசை நடைபெறும்போது, முருகனுக்கு வெண்பொங்கல் வைத்து, அதன்மேல் சர்க்கரை தூவிப் படைப்பார்கள்.

இங்குள்ள காஞ்சிர மரமும், கறுப்பர் சந்நிதியின் இடப்புறம் (தெற்கில்) உள்ள வீர மரமும், திருவுளம் சொல்லும் மரங்களாகக் கருதப் பெறுகின்றன. காஞ்சிர மரத்தில் கெளளி சொன்னால் நல்லது என்றும், வீர மரத்தில் கெளளி சொன்னால் தீயது என்றும் கூறப் பெறுகிறது.

ஐயனாரின் துணைவரே மாகாளர் எனினும், இவ்விரு கோயில்களிலும் கறுப்பர் கோயிலுக்கே நிறையப் — பெரிய அளவில் அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன; மக்களும் ஏராளமாகச் செல்கின்றனர் என்பதை அர்ச்சகர்கள் சொல்ல வேண்டுவதில்லை; பார்க்கும்போதே தெரிகிறது. ஐயனார் கட்டளைதான் இடுவார்; அடுத்த கணமே அதை நிறைவேற்றி வைப்பவர் இவர்தாமே? அதனால்தான் இந்தக் கூடுதல் மரியாதை போலும்!

பரவும் சொல்மாலை

சாத்தன(து) அருளின் நிற்கும்
தானையந் தலைவன், வானோர்
வேத்தவை யான வெல்லாம்
வியத்தகு வீரன், உந்தி
பூத்தவன் முதலோர் யாரும்
புகழ,வெவ் விடத்தை உண்டு
காத்தவன் நாமம் பெற்றோன்
காலற்கும் காலன் போல்வான்.

— கந்த புராணம்

குறிப்பு விளக்கம்:

— ஒலிக்கின்ற அனற்பிழம்பாய் உயர்ந்து நின்ற...

1. இதற்கு 25 ஆண்டுகளுக்கு முன்னர் (எழுபதுகளில்) முதல் குடமுழுக்கு விழா நடைபெற்றிருக்கலாம் என்று கருதுகிறார், அர்ச்சகர் செங்கீரை பெரி. சுப்பையா அம்பலம்
2. மு. ஆறுமுகம், அரிமழம்; பெரி. சுப்பையா அம்பலம்; மு. பழனியப்ப செட்டியார், உ.சிறுவயல்
3. மு. ஆறுமுகம்

உ

பெருங்கருணைப் பேராறே, பேரையூர் சாஸ்தாவே!

(63. திருப்பேரையூர் நாகலிங்க தர்ம சாஸ்தார் திருக்கோயில், கண்ணன்கார்குடி / சாஸ்தார் கோயில் / சாத்தான் கோயில்)

இறைவன் தாமே வலிந்து தோழராக்கிக் கொண்டவர், சுந்தரமூர்த்தி சுவாமிகள்.[1] அந்த உரிமையால், சுந்தரர் பன்முறை இறைவனிடம் பலவற்றைக் கேட்டுப் பெற்றிருக்கிறார். அவ்வாறு உடனடியாகப் பெறாத நேரங்களில் — திருவாரூரில் மற்றைக் கண் தாரீர் என்று இறைவனிடம் கேட்டபோது, (கேட்டும் கேளாதது போல்) வாளா விருப்பது உம் இயல்பாயின், 'நீரே இனிது வாழ்ந்து போமின்'[2] என்றுதான் வெறுப்புடன் கூறினார். திருநாகைக்காரோணத்து இறைவனிடம் இம்மைக்கு வேண்டிய பலவற்றையும் கேட்டபோது, 'தாராதொழிந்தால், அப்பால் அடியெடுத்து வைக்க ஒட்டாது, உம் திருவடிகளைப் பிடித்துக் கொள்வேன்',[3] 'உம் திருமேனி வருந்தும்படி கட்டிப் பிடித்துக் கொள்வேன்'[4] என்றுதான் மருட்டி னார்.,

ஆனால், இராமநாதபுரம் விஜயன் சேதுபதி என்பவரோ (கண்ணன் கார்குடி சாஸ்தா கோயிலின் முன்னுள்ள யானைகள், பூதங்கள் ஆகியவை, இவர் கட்டியவைதாம் என்று கூறப்பெறுகிறது.[5] அப் போது இந்த ஊர் அவர் ஆட்சிக்கு உட்பட்டிருந்ததாம்.), தமக்குத் தீராத வயிற்றுவலி வந்தபோது, ஒவ்வொரு கோயிலிலும் பிரார்த் தனை செய்து கொண்டு, அக்கோயில் அர்ச்சகர் கூறும் காலக் கெடுவுக்குள் நோய் தீராவிடில், அக்கோயிலை மூடிவிடுவது என்று முடிவு கட்டி இருந்தாராம்; அது போன்று சில கோயில்கள் மூடப் பெற்றும்விட்டன.

பேரையூர் சாஸ்தார், அவனிடத்து இரக்கம் கொண்டு விட்டார் போலும்! இங்குள்ள மூலிமலையான் தமக்குச் சிகிச்சை அளித்த தாகவும், தம் அரண்மனையிலிருந்த வனசங்கிலி என்னும் பேயை யும் கூட்டிக் கொண்டு அவர் கோயிலுக்குத் திரும்பியதாகவும், சேதுபதி கனவு கண்டார்; (மூலிமலையான் பற்றிய விளக்கத்தைப் பின்னர் காண்போம்.) நோயும் தீர்ந்தது; கோயிலும் தப்பியது!

அம்மட்டோ? தங்கத்தில் அங்கிகள்; இரு யானைகள் இருந்த இடத்தில் மூன்று யானைகள்; தம்மனை கிராம மானியம். (நாடு சுதந்திரம் பெறும்வரை தம்மனைக் கட்டளையாகவே, இங்கு உச்சிக் காலப் பூசை நடைபெற்று வந்ததாம்.[6]) — தீராத நோயைத் தீர்த்து வைத்த தேவதேவனுக்கு வாரி வழங்கினார் சேதுபதி.

இது நடைபெற்ற காலத்தை நம்மால் ஊகிக்க முடியாவிட்டாலும், கோயிலின் தொன்மையை உணர்த்துகிறது, கி.பி. 1669ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று. திருமலை சேதுபதி காத்த தேவர் என்பவர், சாஸ்தாவுக்கு நிலம் வழங்கியது அக்கல்வெட்டில் குறிப்பிடப் பெற்றிருக்கிறதாம்.[7]

பழைமை வாய்ந்த — பழைமையாகிவிட்ட திருப்பேரையூர் நாக லிங்க தர்ம சாஸ்தா கோயில் அமைந்துள்ள கண்ணன்கார்குடிக்கு இப்போது செல்கிறோம். இவ்வூர், ஐயனார் பெயராலேயே சாஸ் தார் கோயில் என்றாகி, இப்போது வழக்கில், சாத்தான் கோயில் என்று ஆகிவிட்டது.

இராயவரம், கடியாபட்டி (வைரவன் கோயிலார்), கண்டவராயன் பட்டி (வைரவன் கோயில் பெரிய வகுப்பினர் சுமார் 55 புள்ளிகள்), காரைக்குடி, தேவகோட்டை, நடராஜபுரம் (சூரக்குடிக் கோயில்), நேமத்தான்பட்டி (இலுப்பைக்குடி), பள்ளத்தூர் (சூரக்குடி), புதுப் பட்டி (இளையாற்றங்குடி பட்டணசாமி பிரிவினரும், வைரவன் கோயிலாருமாகச் சுமார் 175 புள்ளிகள்), மகிபாலன்பட்டி, வலைய பட்டி, வேகுப்பட்டி ஆகிய ஊர்களின் நகரத்தார்களுக்குக் குல தெய்வக் கோயிலான இது,[8] கடியாபட்டியிலிருந்து (கடியாபட்டி — கொத்தமங்கலம் சாலையில், கடியாபட்டிச் சிவன்கோயில் வழி யாகத் தெற்கே) சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ளது.

* * *

மூலவரான நாகலிங்க தர்ம சாஸ்தா, நற்சாந்துபட்டிக்கு அருகிலுள்ள பேரையூரிலிருந்து இங்கு குடியேறிவர்தாம். ஆட்சி கைமாறு வதற்கு முன்னர், இப்போது பிராகாரத்துக்கு ஒதுங்கி விட்டவரான பிரமர்தாம், ஐயனார் தோற்றத்துடனும், கையில் பிரம்புடனும், ‘தடி கொண்ட ஐயனார்’ என்னும் பெயருடனும், அதிகார பீடத்தில் அமர்ந்திருந்தார். கண்ணன்கார்குடி என்று, ஊருக்குப் பெயர் ஏற்படக் காரணமாய் இருந்தவரான அறமனச் செம்மல் கண்ணன் என்பவர், இந்தப் பிரமரை வழிபட்டு வந்தபோதிலும், பேரையூர் ஐயனாரையே விருப்ப மூர்த்தியாக (இஷ்ட தெய்வமாக)க் கொண்டிருந்தார். வயோதிகத்தில் அங்கு செல்ல இயலாத நிலை ஏற்பட்டபோது, ‘வருந்தாதே, நாமே அங்கு வருகிறோம் என்று கண்ணனின் கனவில் கூறினார் பேரையூர் நாகலிங்க தர்ம சாஸ்தா. (ஐயாபட்டி பதினெட்டாம்படிக் கறுப்பர் கோயில் கதைதான்!) அடுத்த நாள், அதற்கு அடையாளமாக, அருகிலுள்ள பாலைமரப் பொந்தில், திருநீறு, உருத்திராக்கம், பிரம்பு ஆகியவை இருந்தன. (அந்த மரத்தடியில் இப்போது பாலை விநாயகர் அமர்ந்திருக்கிறார்.) அவற்றை வைத்துப் பேரையூர் ஐயனைக் கண்ணன் வழிபட்டு வந்தார். பின்னர் சிலை ஏற்படுத்தப்பெற்றபோது, கருவறைக்கே சென்றுவிட்டார் பேரையூர் சாஸ்தா!



யானை கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெலென்று குதிரையும் கூட இருக்கிறது போலும்!

முதலில் இக்கோயில் சிறிய அளவிலேயே இருந்தது. பிள்ளைத் தவமிருந்த நகரத்தார் குடும்பத்தினர், ஐயனின் அருளால், பிறந்தது ஆண் குழந்தையாகவே இருக்கவே, கோயிலின் பழைய அமைப்பை மாற்றி, இப்போதுள்ள கல் திருப்பணியைச் செய்தனர் என்று ஒரு சாரார் சொல்கின்றனர்.[9] இராயவரம் நகரத்தார் குடும்பத்தினர், அரசாங்கத்தின் ஏழு கிராமங்களை ஏழு ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு எடுத்து, அதிலிருந்து கிடைத்த வருமானத்தைக் கொண்டு, சிறிய கோயிலாக இருந்ததை விரிவுபடுத்திக் கட்டிப், புதுக்கோட்டைத் தனியரசிடப் (சமஸ்தானம்) ஒப்படைத்ததாகச் செவிவழிச் செய்தி நிலவுவதாகவும் கூறப்பெறுகிறது.[10]

புதுக்கோட்டை மன்னர் இரகுநாதத் தொண்டைமான் காலத்தில், இக்கோயில், இராமநாதபுரம் சேதுபதியிடமிருந்து புதுக்கோட்டைத் தனியரசுக்கு மாறியதாம். புதுக்கோட்டையின் கடைசி மன்னராக இருந்தவர், இப்போதும்கூட, நல்ல நாள் பெரிய நாட்களில் இங்கு பணம் அனுப்பி அபிஷேக ஆராதனைகள் செய்யச் சொல்வது உண்டாம்.

★ ★ ★

கோயிலைச் சென்றடையும்போது, தென் திருச்சுற்றுச் சுவரிலுள்ள திருவாயில்தான் நமக்கு அணுக்கமாக இருக்கிறது. சுதைச் சிற்பங்கள் நிறைந்த அவ்வாயிலின் வழியாகவே பக்தர்கள் கோயிலுக்குச் சென்று திரும்புவது வழக்கமாக இருந்தபோதிலும்,[11] நாம் கிழக்கு வாயிலுக்கே செல்கிறோம்.

கோயிலின் எதிரில் பெரியதொரு குளம்; கரை கட்டப்பெற்றுத் தகர்ந்து போயிருக்கிறது; இருப்பினும் படித்துறைகள் உள்ளன. குளத்தின் மேற்குப் படித்துறையின் இருபுறமும் இராட்சத உருவிலான பெரிய பூதங்கள், கிழக்கு நோக்கி உள்ளன. அவற்றின் இருபுறமும் இரண்டிரண்டு குட்டிப் பூதங்கள். இப்பூதங்களுக்குப் பின்னால் மூன்று பெரிய யானைகள், கோயிலைப் பார்த்து நிற்கின்றன. இவற்றுக்கு முன்னால் கோயிலை ஒட்டி, இரு சேமங்குதிரைகள், வழக்கம்போல் பூதங்களின் கரங்களில் கால்களை வைத்து எதிரும் புதிருமாக நிற்கின்றன. சேமங்குதிரைகளுக்கு மட்டும் பாதுகாப்புக்காக இடுப்பளவு சுவர் கட்டியுள்ளனர். கோயிலில் பழைமையின் சுவடு நன்கு பதிந்திருந்தாலும், இந்தப் பூதங்களும், யானைகளும் புத்தம் புதிதாகவே தோற்றமளிக்கின்றன. கோயிலின் வலப்புறத்தில் கிழக்கு நோக்கிய சிறிய பிள்ளையார் கோயில் அமைந்திருக்கிறது. விக்கினம் தீர்க்கும் விநாயகரை வழிபட்டுக் கொண்டு, கிழக்கு வாசல் வழியாகக் கோயிலினுள் செல்கிறோம்.

கடந்த 83 ஆண்டுகளில் மும்முறை திருக்குட நீராட்டு நடைபெற்றிருப்பதாகவும்,[12] 1956 ஜூனில் (வைகாசி 27) நடைபெற்ற குடமுழுக்கு விழாவிற்குப் பின்னர், திருக்குட நீராட்டு நடைபெறவில்லை என்றும் கூறப்பெறுகிறது. முழுமையும் கல் திருப்பணி செய்யப் பெற்று, ஒரு சிவாலயத்தைப் போன்றே தோற்றமளிக்கும் இக்கோயிலுக்கு இராஜகோபுரம் இல்லாதது ஒரு பெருங்குறையாகவே நமக்குப் படுகிறது.

1992 ஆம் ஆண்டில் கோயிலுக்கு அடிமைப்பட்ட நகரத்தார் பெருமக்கள் சிலர், கிழக்கு இராஜகோபுரம் கட்ட எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்த நேரத்தில், அவ்வனைவருமே பெருஞ் சோதனைகளுக்கு உள்ளானதால், அத்திட்டம் கைவிடப் பெற்றது. அதன் காரணமாகத் தெற்கு வாயிலுக்கு இராஜகோபுரம் கட்டத் திட்டமிட்ட அம்பலக்காரரும், தம் எண்ணத்தை மாற்றிக் கொண்டார்.[13] இராஜகோபுரம் கட்ட முயன்றதன் விளைவு, நகரத்தார்களை மட்டுமல்லாது, பூசாரியையும் பாதித்தது. இறைவனுக்கே அதில் சம்மதமில்லை என்று உணர்ந்த நிலையில், திருக்குட நீராட்டுக்கு இப்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பெற்று வருகின்றன என்கிறார் தலைமை அர்ச்சகர்.

கோயிலினுள் நுழைந்ததும், துவஜஸ்தம்பமும் (கொடிமரம்),[14] அடுத்துள்ள மகாமண்டபத்தில் பலிபீடமும், அதற்கு முன்னால் இரு யானைகளும் அமைக்கப்பெற்றிருப்பதைக் காண்கிறோம். மகா மண்டபத்தில் கருவறையின் இருபுறமும் துவார பாலகர் உள்ளனர். இம்மண்டபத்தின் வடபுறத்தில் ஐம்பொன் உற்சவ விக்கிரகங்கள் வைக்கப் பெற்றுள்ளன.

இங்கும் ஒரு யானை வாகனம் உள்ளது. கருவறையின் வலப்புறம் விநாயகர் அமர்ந்திருக்கிறார். அர்த்த மண்டபத்தை அடுத்துள்ள கருவறையில் இருப்பவர்தாம் திருப்பேரையூர் நாகலிங்க தர்ம சாஸ்தா. அரசு ஆவணங்களில் காணப்பெறும் இதே பெயரில்தான் திரு முகங்கள் அனுப்பப்பெறுகின்றன. இந்தத் திருமேனியுமே, பழை யது சிதைந்து போய்ப் புதிதாகச் செய்யப்பெற்றதே என்று கூறு கிறார்கள்.

ஆண்டுதோறும் சித்திரை, ஆடி, கார்த்திகை, தை மாதங்களில் ஆலயத்துப் பூசை என, நான்கு பெரிய பூசைகள் நடைபெறுகின் றன. முன்பு, ஒவ்வொரு பூசையின்போதும் ஒன்பது கிடாய்கள் வெட்டப்பெற்றனவாம். இப்போது அரசாங்கத் தடையின் காரண மாக அது நிறுத்தப் பெற்றுவிட்டது.[15] புரட்டாசி மாதத்தில் நவ ராத்திரி விழா ஒன்பது நாட்களுக்கும், மார்கழி மாதத்தில் திருப் பள்ளி எழுச்சியும், மாசி மாதம் சிவராத்திரியும், இங்கு மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றன. சிவராத்திரியின்போது, பாற்குடம், காவடி எடுப்பு என ஒரே கோலாகலமாக இருக்குமாம். நகரத்தார்கள் பேரளவில் கலந்து கொண்டு வழிபாடு செய்து மகிழ்கின்றனர்.

சிவராத்திரியை ஒட்டிக் குறைந்தது 250 பேருக்கு நகரத்தார்கள் அன்னதானம் செய்கின்றனர். கடந்த சில ஆண்டுகளாக அன்ன தானத்தைத் தொடர்ந்து ஏலமும் நடைபெற்று வருகிறது.[16] பங் குனி உத்திரம் பத்து நாள் திருவிழாவில், ஒன்பதாம் நாள் நடை பெறும் தேரோட்டம், முக்கியமானதோர் அங்கமாகும். இராய வரம் நகரத்தார்களின் முயற்சியால், பலரின் பொருளுதவியுடன் 23.08.80ல் தேர் செய்யப்பெற்று, 29.01.82ல் தேரோட்டம் தொடங்கியது.

தேரோட்டத்தை ஒட்டி இங்கு உயிர்ப்பலி கொடுக்கப் பெறுகிறதா என்பதைப் பற்றி எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. எனினும் வழக்கமாக எல்லாக் கோயில்களிலும் அது நடைபெறுவது உண்டு. அதனை ஒட்டிய ஒரு தகவலை இங்கு நினைவுகூர்வது பொருத்த மாக இருக்கும்.

புதுவயலில் பிறந்தவரான கோயிலூர் வீரப்ப சுவாமிகள், திருக் களர் என்னும் பாடல் பெற்ற தலத்தில், தேர் உருவாவதற்குக் காரணமாயிருந்தவர். (கோயிலூர் மடாலயத்தில் அதிபராயிருந்த வீரசேகர ஞானதேசிக சுவாமிகளின் சமாதிக் கோயில் திருக்களரில் இருப்பதாயும், அவர் செய்த திருப்பணிகளே அங்கு மிகச் சிறப் பானவை என்றும், திருமுறைத் தலங்கள் நூலில் குறிப்பிடப்பெறு பவர், இந்த வீரப்ப சுவாமிகளாகவே இருக்க வேண்டும்.) தேரை வெள்ளோட்டம் விடும் உற்சவத்தில், தேரை இழுக்குமுன்னர், ஓர் ஆட்டை — குறைந்தது ஒரு கோழியையாவது பலி கொடுக்காவிட் டால், இடையூறுகள் நேரிடும் என்று மக்கள் ஏகமனதாகக் கூறிய போது, அதைத் தடுத்த சுவாமிகள், அவர்கள் கூறியதுபோலவே, சிறிது நேரத்தில் தேர் நிலை குத்தியபோது, சம்பிரதாயத்தை மீறிய தால்தான் இவ்வாறு நேர்ந்தது என்று கூறிய மக்களிடம், ''இறை வனே ஓர் உயிரைக் காவு கேட்கிறான் என்றால், என்னையே நான் பலி கொடுக்கிறேன்'' என்று கூறித் தேருக்கு முன்னால் சென்று

விழுந்தார். இச்செயலைக் கண்டு மக்கள் மனம் பதறிப் போய், இறைவனைச் சரணடைய, தேர் அசைந்தது; உற்சவம் சிறப்பாக நிறைவேறியது.[17] தேரோட்டத்தின்போது உயிர்ப்பலி கொடுப் பதை ஒரு சிவாச்சாரியாரே[18] ஆதரித்ததை, இந்நிகழ்ச்சியுடன் ஒப்பிட்டுப் பார்க்கிறேன்; வீரப்ப சுவாமிகள் உண்மையிலேயே ஒரு மகான்தான் என உதடுகள் முணுமுணுக்கின்றன.

சபரிமலைக்குச் செல்லும் ஐயப்ப பக்தர் ஒருவர், கடந்த முறை அந்த இருமுடியை இந்த சாஸ்தாவுக்கே செலுத்தினாராம்; இனி, வரும் ஆண்டுகளில் இங்கேயே இருமுடி செலுத்த முடிவு செய் திருப்பதாயும் கூறியிருக்கிறாராம்.[19]

* * *

அடுத்துத் தெற்குப் பிராகாரத்தில் உள்ள பரிவார தெய்வங்களைக் கண்டு வழிபடச் செல்கிறோம். தனியாக உள்ள ஒரு சந்நிதியில், இக்கோயிலின் பிரபலமான தெய்வங்களில் ஒருவரான பன்னி வீரப்ப ஸ்வாமி, குதிரைமீது ஆரோகணித்துத், தேவியர் இரு மருங் கும் இருக்கக் காட்சி தருகிறார்.

இவரைப் பார்த்தால் மதுரைவீரன் மாதிரி இல்லையா? அவசரப் பட்டு விடாதீர்கள்; மதுரைவீரன் பொம்மியுடன், குலால (மண்) சிலையாக, இதோ பக்கத்திலேயே இருக்கிறார்.

இந்த வீரப்ப ஸ்வாமி யார் என்பதற்கு முன்னதாக, இவர் பெயரி லேயே குழப்பம் நிலவுகிறதே! பன்னியா? பண்ணியா? பணியா? பன்றியா? — எது சரி? சந்நிதியில் பன்னி என்று எழுதப் பெற் றிருக்கிறது. 'பணி என்றுதான் இருக்கவேண்டும்; ஆனால் கோயி லுக்குப் பாடப் பெற்றுள்ள பாடல்களில் ''பன்னி''[20] என்று இருக் கிறதே, என்ன செய்வது?' என்கிறார் தலைமை அர்ச்சகர்.

புதுக்கோட்டைப் பகுதிகள் அடங்கிய நாட்டுக்குப் 'பன்றி நாடு'[21] என்பது பழைய பெயர். அந்நாட்டில் சிறந்து விளங்கிய — அந் நாட்டுக்காகப் போராடிய வீரனையே 'பன்றி வீரன்' என்றும், 'பன்றி வீரப்பன்' என்றும் வழிபடுகின்றனர். மதுரைவீரன் வழி பாட்டைவிடப், பன்றிவீரன் வழிபாடு பழைமையானது என்று, மற்றொரு சாரார் கூறுகின்றனர்.[22] (மூலங்குடிப் பொன்னனை யும் புதுக்கோட்டைத் தனியரசின் காடு காவலர் என்றே கூறுகின் றனர்.)

பன்னி என்பதற்குக் குருவின் பத்தினி, மனைவி என்று பொருள் சொல்லப்பெறுகிறது. (பன்னி என்பது பத்தினி என்பதன் திரிபு என்கின்றனர்.) அதை ஒட்டி, இரு தேவியருடன் இருக்கும் இவர், கோயிலில் எழுதப் பெற்றிருப்பது போன்று 'பன்னி வீரப்ப ஸ்வாமி' தானோ?

இவருக்கும், முன்னோடிக்கும் ஹரிஜனங்கள் கள் படைப்பதுண் டாம். பன்னி வீரப்பர் சந்நிதி வெளிச்சுவரில் ஜன்னல் இருக் கிறது; அதில் மதிலுக்குப் பின்புறமாக நின்று, ஜன்னலில் வைத்து நிவேதனம் செய்து எடுத்துச் செல்வார்களாம்.[23]

இவரின் இடப்புறம், வெள்ளையம்மாள் இல்லாத மதுரைவீரன் தம்பதியருடன், முத்துக் கறுப்பரும், வலப்புறம் வனசங்கிலியும்

(மண்சிலை) உள்ளனர். வனசங்கிலி யார் என்பதை நீங்கள் முன்னரே அறிவீர்கள்.

சந்நிதிக்கு வெளியே காளியம்மா என இருவர் உள்ளனர். அநீதி இழைக்கப் பெற்றவர்கள், 6¼ அல்லது 12½ ரூபாயை இந்தக் காளியின் பாதத்தில் படிகட்டி, ஏவம் (குறைபாட்டைக்) கூறினால், அதற்கு நிவர்த்தி நிச்சயம் கிடைக்கிறதாம்.[24]

அடுத்துள்ள ஒரு சந்நிதியில் முலையாள பகவதியம்மன் குடிகொண்டிருக்கிறார். குழந்தைப் பேறு வேண்டுவோர் நேர்ந்து கொள்ளும் சந்நிதி இது. ஆண் குழந்தை வேண்டுவோர் தொட்டிலும், பெண் குழந்தை வேண்டுவோர் வளையலும் அம்மனுக்குக் காணிக்கை செலுத்துவராம்.[24]

அடுத்து, அகோர கறுப்பர், மண் சிலைகளான மூவேந்தர், வானாதிராய வேளாளர், இலாட சந்நியாசி ஆகியோருடன், ஆஞ்சநேயரும் உள்ளார். இவர்களில் வானாதிராய வேளாளர் என்பவர் சைவ வேளாளர்; இவர்தாம் தொடக்க காலத்தில் அர்ச்சகராக இருந்திருக்க வேண்டும் என நம்பப் பெறுகிறது. அடுத்துள்ள சந்நிதியில் அகோர வீரபத்திர சுவாமி, சோலையாண்டவர், அழகுக் கறுப்பர், தங்கம்மா ஆகியோரும், மேற்குப் பிராகாரத்தில் அடைக்கலங்காத்த சுவாமி, சின்னக் கறுப்பர், சின்ன ஆண்டி, பெரிய ஆண்டியும், மற்றொரு சந்நிதியில் பிரமரும் உள்ளனர். இந்தப் பிரமர்தாம் முதலில் கருவறையில் இருந்து ‘முடி துறந்தவர்’ என்பதை அறிவீர்கள்!

அகோர வீரபத்திரருக்குப் பாதுகாப்புக் கருதிக் கம்பிக் கதவு போட்டபோது, பக்தர் ஒருவர்மீது அருள்வந்து, தம்மைச் சிறை வைக்க நினைக்கிறார்களா என்று கேட்டதும், அதை அகற்றி விட்டார்களாம்.[25] இதே பிராகாரத்தில் சப்த மாதர்கள், மண் சிலையான வடக்குவாசல் கறுப்பர் ஆகியோரும் உள்ளனர்.

வடக்குப் பிராகாரத்தில் முக்கியமான இரு மூர்த்தங்களைக் காணப் போகிறோம். முதலில் மூலிமலையான். இவரைத் தண்டாயுதபாணி என்றும், சுப்பிரமணியர் அம்சம் என்றும்[26] கூறுகிறார்கள். சிம்ம வாகனத்தில், சித்தர் போன்று, தவக்கோலத்தில் வைத்திய நாதராக இவர் காட்சி தருகிறார். (மற்ற கோயில்களில் காணப் பெறும் மூலிமலையானும் இதே தோற்றந்தான்.) இவருடைய பெயரும் பல வடிவங்களைக் கொண்டிருக்கிறது. கோயிலில் எழுதப் பெற்றிருப்பது மூலமலையான்; பாடல்களில் காணப்பெறுவது மூலைமலையான். ஆனால் வைத்தியர் போன்ற தோற்றமுடையவரை மூலி(கை நிறைந்த) மலையை உடையவன் (மூலிமலையான்) என்று அழைப்பது பொருத்தமாக இருக்குமன்றோ? (மூலி என்பது மூலிகை என்பதன் சுருக்கம்)

இவருக்குப் பண்டாரத்தார் பூஜை என, ஒரு சிறப்பு வழிபாடு நடத்தப்பெறுவது உண்டாம். ஆறு மூடை பச்சரிசி வடித்துப் பள்ளயம் போட்டு வழிபடுவது உண்டாம்.

அடுத்திருக்கும் பைரவர் சந்நிதியைத் தொடர்ந்து உள்ள மற்றொரு சந்நிதியில் பொற்பனைக்கோட்டை முனியும், காளியம்மனும் உள்ளனர். புதுக்கோட்டை மன்னர் இராமச்சந்திரத் தொண்டை

மான் காலத்தில், அரண்மனைக்கு அதிகத் தொந்தரவு கொடுத்து வந்த பொற்பனைக்கோட்டை முனிஸ்ய, வீரபத்திர சுவாமி சென்று அடக்கிக் கொண்டு வந்து, இங்கு காவல் தெய்வமாக்கியுள்ளார் என்று செவிவழிச் செய்தி நிலவுகிறது.[27]

* * *

1930ஆம் ஆண்டு வரை இங்கு சாமியாடி மீது சுவாமி ஆவே சித்து அருள்வாக்குக் கூறிவந்த நேரத்தில், சாமியாடி தீப்பந்தத்தை வாயில் வைத்து, அதன்வழி நெய்யை உருக்கி உட்கொள்ளும் திரிப் பழம் சாப்பிடுவது உண்டாம்.[28]

நேமத்தான்பட்டி நகரத்தார்கள் ஈராண்டுகளுக்கு ஒருமுறை ஆடி அல்லது மாசி மாதத்தில், இங்கு வந்து ஏராளமான பொருட்செல வில், ஒரு நாள் சிறப்புப் பூசை செய்து வழிபடுவார்களாம்.[29]

நகரத்தார் குழந்தைகளுக்கு இங்கு முடிஇறக்கித், தொட்டில் கட்டிப், பெயர் கூப்பிடுவது உண்டு. மூலவரின் பெயரில் சாத்தப்பன், சாத்தம்மை என்று முன்னர் பெயரிட்டு வந்தது சிறப்புறாமல் போகவே, அதைக் கைவிட்டுவிட்டார்களாம்.[30]

கோயிலின் அருகிலுள்ள நகரவிடுதியை இராயவரம் நகரத்தார் குடும்பத்தினர் கட்டியுள்ளனர். அதில் தங்கியிருந்து இங்கு வழி பாடு செய்வதும் உண்டாம். இக்கோயிலுக்கு அடிமைப்பட்ட பிரா மணர்கள், சில ஆண்டுகள் நடத்திவந்த மஹேஸ்வர பூஜை, சில காரணங்களால் இப்போது நிறுத்தப் பெற்றுவிட்டது.

ஒவ்வொரு நாளும் காலசந்தி, உச்சிக்காலம், மாலை வழிபாடு, அர்த்தசாமம் என நான்குகாலப் பூசை மேளதாளத்துடன் நடை பெறுகிறது.

பேரையூர் சாஸ்தாவின் பெருங்கருணைக்குப் பாத்திரராக, நீங் களும் அங்கு ஒருமுறை சென்று வாருங்களேன்!

பரவும் சொல்மாலை

கொடியவல் சூனியம், வஞ்சனைகள், பேய்,பில்லி
குலவிசா மத்து ரோகம்,
கொற்றவர்கள் ரோகமும், விஷவாத பாதகம்,
குருவத்தி, பிரும வத்தி,
துடியான வறுமை,பிணி, அக்கானிய முதலான
சூழ்ந்திருந் தாலும், உந்தன்
சுந்தரம் விளங்குதிருச் சன்னிதிவிபூ திக்(கு)அடிமை
சொல்லியே தான்ப றக்கும்
படிபுகழ வந்திடும் அடைக்கலங் காத்தையன்,
பண்ணிவீ ரப்ப சாமி,
பாரழகு மூலைமலை யானும்,க றுப்பண்ணரும்,
பண்மைபெறு பத்ர காளியும்,
இடியேறு ரணவீர் பத்திரன், சன்னாசி,
ஏந்திளையனும், கன்னி மாரும்,

இவர்களெல்லாம் மனமகிழ வருகண்ணை தனில்நின்று
என்றும்வ ளர்சாத் தையனே.

— சுப. பெரியண்ணன் செட்டியார்,
இராயவரம்

குறிப்பு விளக்கம்:

— பேரருள் வடிவாகிய (வற்றாதோடும்) பெரிய ஆறு போன்றவனே!

1. ''தோழமை யாக உனக்கு நம்மைத் தந்தனம்...'' — பெரிய புராணம்
2. ...''வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே''—7 ஆம் திருமுறை
3. ''தாரீரேல் ஒருபொழுதும் அடியெடுக்கல் ஒட்டேன்...''—7 ஆம் திருமுறை
4. ''திருமேனி வருந்தவே வளைக்கின்றேன்..'' — 7 ஆம் திருமுறை
5. பூ.சா. இராமையா வேளார், கண்ணன்கார்குடி
6. பூ.சா. இராமையா வேளார்
7. வி.ஆர்.எம். அண்ணாமலை செட்டியார், இராயவரம்
8. பூ.சா. இராமையா வேளார்; வீர. காசிவிசுவநாதன் செட்டியார், பொன். புதுப்பட்டி; அ. வல்லநாட்டான் — கும்பாபிஷேக மலர் தகவல் தொகுப்பு; சோம. வீரப்பா, நேமத்தான்பட்டி ஆகியோர் வழங்கிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டது
9. மாவட்ட ஆட்சியாளர் திரு. காசிலிங்கத்தின் சொற்பொழிவுத் தகவலை மேற்கோள காட்டியிருப்பவர்: வீர. காசிவிசுவநாதன் செட்டியார்
10. பூ.சா. இராமையா வேளார்
11. சோம. வீரப்பா
12. வீர. காசிவிசுவநாதன் செட்டியார்
13. பழ. சிதம்பரம் செட்டியார், பொன். புதுப்பட்டி
14. நம் உடம்பிலுள்ள முதுகெலும்புதான் இந்தக் கொடிமரம் என்கிறது யோக சாஸ்திரம்; இரண்டாம் நூற்றாண்டிலேயே இது கோயில்களில் காணப் பெற்றதை, யக்ஞுஸ்ரீ என்னும் அரசன் காலத்திய நாணயம் ஒன்று தெளிவு படுத்துகிறது. — ஆலயங்களும், ஆகமங்களும், — நஜன்
15. சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இராயவரம் சுப. பெரியண்ணன் செட்டியார் இயற்றிய சாத்தையா துதிப்பாடல் ஒன்றிலும், இப்பூசைகள் பற்றிக் குறிப்பிடப்பெற்றுள்ளது.
16. மு. அருணாசலம், பொன். புதுப்பட்டி; வீர. காசிவிசுவநாதன் செட்டியார்
17. காஞ்சி சங்கராச்சாரிய சுவாமிகள் — இராங்கியம் பெரிய கறுப்பண்ண சுவாமி குடமுழுக்கு விழா மலர்' 87
18. நன்னெறிக் கோட்பாட்டை மதித்துப் பெயரோ, ஊரோ குறிப்பிடப் பெற வில்லை
19. பூ.சா. இராமையா வேளார்
20. சாத்தையா துதிப் பாடலில் 'பன்னி' என்று காணப்பெறவில்லை; 'பண்ணி' என்றே உள்ளது
21. பன்றி என்பது கொடுந்தமிழ் நாட்டில் ஒன்று.
One of the 12 districts around the kingdom of Madura, where corrupt, vulgar Tamil is spoken — A Dictionary of Tamil & English - V. Visvanatha Pillai
22. வி.ஆர்.எம். அண்ணாமலை செட்டியார்
23. வீர. காசிவிசுவநாதன் செட்டியார்
24. பூ.சா. இராமையா வேளார்
25. பழ. சிதம்பரம் செட்டியார்
26. வி.ஆர்.எம். அண்ணாமலை செட்டியார்
27. பூ.சா. இராமையா வேளார்
28. சோம. வீரப்பா
29. சோம. வீரப்பா
30. வீர. காசிவிசுவநாதன் செட்டியார்

அடியார் தமக்கினிய அங்காள பரமேஸ்வரி

(64. அங்காள பரமேஸ்வரி, உறங்காப்புளிக் கறுப்பண சுவாமி திருக்கோயில், இராங்கியம்)

சேனை முதலியா(விஷ்வக்சேன)ரின் அம்சமாக அவதரித்தவர் என்றும், வைணவத்தின் குலபதி என்றும் போற்றப்பெறும் நம்மாழ்வார், பதினாறு வயது வரை திருக்குருகூரில் உள்ள ஒரு புளிய மரத்தடியில், உலக விவகாரங்கள் எதுவுமின்றி (உண்ணாது, கண் விழியாது, வாய் திறவாது) வாட்டமில்லாமல் வீற்றிருந்தார் என்று குருபரம்பரைக் கதை கூறுகிறது. இன்றும் உறங்காப்புளியாக அந்தப் பெரிய மரம் அங்கு இருக்கிறது![1]

வேதம் தமிழ் செய்த வித்தகர், புளிய மரத்தடியில் பதினாறு ஆண்டுகள் இருந்தது போன்று, கர்நாடகத்திலிருந்து வந்த இலிங்கதாரியான பெரியவர் ஒருவர் (வீர சைவர்களான இவர்களை இலிங்காயதர் என்பர்), இராஜசிங்கமங்கலம்[2] என்னும் இராங்கியத்தின், மரங்கள் அடர்ந்த தோப்பாக இருந்த பகுதியில் (இப்போது இராங்கியம் அங்காள பரமேஸ்வரி அம்மன் (கறுப்பர்) கோயில் உள்ள இடம்), புளிய மரம் ஒன்றின் அடியில், தாம் தேடிய அமைதியைக் கண்டிருக்கிறார். அழகர்கோயில் சென்று சிலை கொண்டு வந்து இங்கு வைத்து வழிபடுமாறு, தியானத்திலிருந்த அவருக்குக் கறுப்பர் உணர்த்தினாராம். அதன்படியே இப்போது உறங்காப்புளிக் கறுப்பர் இருக்கும் இடத்தில், அப்போது இருந்த புளிய மரத்தடியில், அவர் கறுப்பரைப் பிரதிஷ்டை செய்தாராம்.[3] (தம் இஷ்டலிங்கத்தைத் தவிர வேறு தேவர்களைக் கனவிலும் விரும்பாதவர்கள்; இலிங்கலோபம் (குறைபாடு) நேர்ந்தால், பிராண(உயிர்)த் தியாகம் தவிர வேறு பிராயச்சித்தம் இல்லாதவர்கள் என்று, இலிங்காயதர்கள் வருணிக்கப்பெறுகின்றனர்.[4])

நம்மாழ்வார் பற்றிய குருபரம்பரைக் கதைகள் பற்றிச் சொல்லும்போது, பிறக்கும்போதே அவர் பரிபூரண ஞானத்துடன் தோன்றினார் என்பதைப் பிரசாரம் செய்வதுதான் இக்கதையின் நோக்கம் என்பார்கள்.[5] அதுபோன்று, ஒரு தெய்வத்துக்கு மகத்துவத்தை ஏற்படுத்துவதற்காகப், (இலிங்காயதர் ஒருவர் கறுப்பரைப் பிரதிஷ்டை

செய்தார் என்பது போன்ற) பொருத்தமற்ற கதைகள் புகுத்தப்பெறு வதில் வியப்பில்லை!

அற்புத நிகழ்ச்சி ஒன்றைக் கற்பனை செய்திருக்கிறது பக்த மனோ பாவம்; இவற்றை உற்றுநோக்கியும், ஊடுருவிப் பார்த்தும், வாழ்க்கை வரலாற்றின் உண்மைகளைக் கண்டுபிடிப்பது சிரமந்தான். ஆனால் பண்பட்ட உள்ளங்கள், தள்ளவேண்டியதைத் தள்ளிக் கொள்ள வேண்டியதைக் கொள்ளவேண்டும்![5]

* * *

இராங்கியம் அங்காள பரமேஸ்வரி கோயிலை அறியாவிட்டாலும், இராங்கியம் கறுப்பர் கோயிலைப் பெரும்பாலானவர்கள் அறிந் திருப்பார்கள். புதுக்கோட்டையிலிருந்து பனையப்பட்டி, குழிபிறை வழியாகவும், பொன்னமராவதியிலிருந்து பூலாங்குறிச்சி, மிதிலைப் பட்டி வழியாகவும் இராங்கியம் சென்று, அங்கு ஊரின் கடைசியி லுள்ள இக்கோயிலை எளிதில் சென்றடையலாம்.

இராங்கியம் கறுப்பர் கோயில் என்று பிரபலமான இக்கோயிலின் மூலவர் என்னவோ, அங்காள பரமேஸ்வரிதான்! பூசாரிகள் கூறிய இலிங்காயதர் கதையில், கறுப்பரைப் பிரதிஷ்டை செய்தபோது, இது தோப்பாக இருந்தது என்று மட்டுமே கூறப்பெற்றது. அங் காள பரமேஸ்வரி பற்றிய சிறு குறிப்புக்கூட அதில் இல்லை! ஆனால் மூலவராக வீற்றிருப்பவரோ அம்மையார்! மரம் முதலா? வித்து முதலா? இது சிக்கலான கேள்வி. 'விச்ச தின்றியே விளைவு செய்'பவன்[6] தானே இறைவன்? அதனால்தான் கோயிலில் உள்ள அறிவிப்புப் பலகையில் புத்திசாலித்தனமாக 'அங்காள பரமேஸ் வரி — உறங்காப்புளிக் கறுப்பண சுவாமி கோயில்' என்று குறிப் பிட்டுவிட்டார்கள்!

இக்கோயிலில் உள்ள காண்டாமணியில் 1886ஆம் ஆண்டு என்று குறிப்பிடப் பெற்றிருப்பதும், கறுப்பர் மண்டபம் 1892ல் கட்டப் பெற்றது என்று சொல்லப்பெறுவதும், இக்கோயிலின் தொன்மை யைப் பறைசாற்றுகின்றன. மேலும், முகப்புத் திண்ணை மண்டபம் 1902லும், வீரபத்திரர் — அங்காள பரமேஸ்வரி மண்டபங்கள் 1905லும், மகா மண்டபம், இராஜகோபுரம் ஆகியவை 1910லும் கட்டப் பெற்றனவாம்.[7]

தெற்கு வாசல் வழியாகத்தான் கோயிலுக்கு வழிபடச் செல்வது வழக்கம் என்று கூறப் பெற்றாலும்[8], நாம் கிழக்கு இராஜகோபுர வாயில் வழியாகவே கோயிலுக்குள் செல்ல முற்படுகிறோம். நுழை வாயிலுக்கு மேலே கஜலட்சுமியும் அழகிய பொம்மைகள் நிறைந்த மூன்று நிலை இராஜகோபுரமும் நம்மை வரவேற்கின்றன. வேறு எக்கோயிலிலும் காணப்பெறாத அளவு பெரிய சுதையினாலான இரு ஆஞ்சநேயர் சிலைகள், இராஜகோபுரத்தின் இருபுறமும் அமைக் கப் பெற்றுள்ளன. கையில் சஞ்சீவி மலையுடன் விசுவரூபம் எடுத் தது போன்று அமைக்கப்பெற்றிருக்கும் இச்சிலைகளின் கால்களுக் கிடையில், இருபுறமும் இரு பூதங்கள் மண்டியிட்டு அமர்ந்துள்ளன. இதனுடன் சேர்ந்தாற்போன்று கோயிலின் இடப்புறம் (வடக்கே

உள்ள முன்னோடியான் சந்நிதிக்கு நேரே) புதிதாகத் தோரணவாயில் அமைக்கப்பெற்றிருக்கிறது.

இராஜகோபுர வாயில் வழியாக உள்ளே சென்றதும், கண்ணைக் கவரும் வண்ண ஓவியங்கள் நிறைந்த பெரியதொரு மண்டபம் (கல் யாணக் கொட்டகை) உள்ளது. இந்த மண்டபமும், இராஜகோபுர மும் அமையக் காரணமாயிருந்த முத்திருளப்ப பூசாரியின் பெரிய தொரு படமும் இங்கு வைக்கப்பெற்றுள்ளது. இதனையடுத்து இரு புறமும் திண்ணைகளுடன் கூடிய மண்டபத்திற்குச் செல்லுமுன்னர், இருபுறமும் பெரிய சேமங்குதிரைகள் வடக்கு நோக்கியும், தெற்கு நோக்கியும் நிற்கின்றன. இவற்றில் வடக்கே உள்ள சேமங்குதிரை, பாடுவார் முத்தப்ப செட்டியாரால் கட்டப்பெற்றது என்கின்றனர். சுவாமி வாக்களித்தபடி அவருக்கு ஐந்து ஆண் வாரிசு கிட்டவும், இக்குதிரையை அவர் கட்டினார் என்று சொல்கிறார்கள்.[9] ஆனால் இது அவரது குடும்பத்தாரால் கட்டப்பெற்றது என்று குடமுழுக்கு விழா மலரில் குறிப்பிடப்பெற்றுள்ளது.

திண்ணைகளுடன் கூடிய முகப்பிலிருந்து கோயிலினுள் செல்கிறோம். பெரிய கோயில்; அழகிய சந்நிதிகள்.

விவரம் தெரிந்து இங்கு 1910 ஆம் ஆண்டிலும், 03.06.1987லு மாக இருமுறை திருக்குட நீராட்டு நடைபெற்றிருக்கிறது. இருப்பி னும், 1910க்கு முன்னரும், இருமுறை குடமுழுக்கு நடைபெற்றி ருப்பதாகவும் சொல்கின்றனர்.[10]

மூலவர் அங்காள பரமேஸ்வரி அருளாட்சி செய்யும் கருவறையின் இருபுறமும், விநாயகரும், வள்ளி-தெய்வயானை உடனாய சுப்பிர மணியரும் காட்சி தருகின்றனர். மகா மண்டபத்தின் முகப்பில் இடப தேவரும், பலிபீடமும் காணப்பெறுகின்றன. கருவறைக்கும் பலி பீடத்துக்கும் இடையில் உள்ள தூண் ஒன்றில் செட்டியார் ஒருவ ரின் சிலை ஒன்று உள்ளது. இவரைப் பற்றிய விவரம் ஏதும் தெரிய வில்லை. ஒருவேளை கருவறை, மற்றும் மகா மண்டபத்தை அமைத்த வராக இருப்பாரோ? மற்றொரு தூணில் காணப்பெறும் கல்வெட் டுப் பற்றியும் யாரும் அறிந்திருப்பதாகத் தெரியவில்லை. அறிந்து கொள்ள யாரும் ஆசைப்படுவதாகவும் தெரியவில்லை!

* * *

அரிமழம் (பிள்ளையார்பட்டி), பி. அழகாபுரி, இராங்கியம் (இளை யாற்றங்குடிக் கழனிவாசல்), கண்டரமாணிக்கம், கண்டனூர், காரைக் குடி, கீழச்சிவற்பட்டி, குருவிக்கொண்டான்பட்டி, குழிபிறை (இளை யாற்றங்குடிக் கழனிவாசல்; இலுப்பைக்குடி), தேவகோட்டை, தேனிப்பட்டி (இளையாற்றங்குடிப் பட்டணசாமி), நெற்குப்பை (இரணியூர் சுமார் 100 புள்ளிகள்), பொ. புதுப்பட்டி, புதுவயல் (இளையாற்றங்குடிப் பட்டணசாமி), மகிபாலன்பட்டி (இளையாற் றங்குடி ஒக்கூர்), வலையபட்டி (மாத்தூர் மணலூர்), வேந்தன்பட்டி ஆகிய ஊர்களின் சுமார் 400 புள்ளிகள் முதல் 3000 புள்ளிகள் வரை[11] இக்கோயிலைக் குலதெய்வக் கோயிலாகக் கொண்டுள்ள னர். இவர்கள் அனைவரின் வாழ்க்கையும் ஆனந்த வெள்ளத்தில் திளைப்பது, பெரிய கறுப்பண்ண சுவாமியின் திருவருளினால் தான் என்கின்றனர். சிவசக்தியான அங்காள பரமேஸ்வரி, அரசி யல் அமைப்பு முறையிலான பெயரளவுத் தலைவிதான் போலும்!

இங்கு மகா சிவராத்திரி ஐந்து நாள் திருவிழாவாகச் சிறப்புடன் கொண்டாடப் பெறுகிறது. கப்பரை எடுத்தல், சிவராத்திரி, குதிரையில் அம்பாள் எழுந்தருளும் பாரிவேட்டை, பொங்கலிடுதல், பச்சை வாழை பரப்புதல் ஆகியவை இந்த நாட்களில் நடைபெறுகின்றன. தட்சயக்ஞத்தை நினைவுகூரும் வகையில் வீரபத்திரருக்காகக் கப்பரை எடுத்தல் நடைபெறுகிறதாம். கப்பரை என்றால் பிச்சைக்கலம். தட்சயக்ஞத்தைச் சிவபெருமானின் ஆணையின் பேரில் வீரபத்திரர் அழித்தார் எனினும், அவர் பிச்சைக்கலன் ஏந்தினாரா என்பது தெரியவில்லை. (கறுப்பரைப் பிரதிஷ்டை செய்ததாகக் கருதப் பெறும் இலிங்காயதர்(கள்) வீரபத்திரரைச் சிறப்பாக வழிபடுகின்றனர்.[12]) சிவபெருமான் பிட்சாடனர் வடிவமேற்ற போதுதான், பிச்சைக்கலன் ஏந்தினார். ஏன் இரண்டையும் இணைத்துக் குழப்புகின்றனர் என்று தெரியவில்லை.

இந்த விழாவில், முறத்தில் காளியின் முகத்தைச் செய்து, வேப்பிலை செருகிப் பூசாரி அதைச் சுமந்து வருவாராம். அப்போது அவர்மீது வீரபத்திரர் ஆவேசிப்பது உண்டாம். வீரபத்திரரைச் சாந்தப்படுத்தவே பச்சைவாழை பரப்பி வழிபடுகின்றனராம். (கரும்பு, தேங்காய், பழங்கள், சுத்தான்னம் படைப்பது பச்சைவாழை பரப்புதலாம்). இந்த மாசி மாதத் திருவிழாவில் நகரத்தார்கள் தங்கள் குழந்தைகளுக்கு முடி இறக்குவது, தொட்டில் கட்டுவது உண்டாம்.[13] முத்துவீரப்ப பண்டாரம் காலத்தில் கொம்படி ஆலயமாக இருந்த இக்கோயில், நகரத்தார்களாலேயே திருப்பணிகள் செய்யப்பெற்றுப் படிப்படியாக இன்றைய நிலைக்கு வளர்ச்சி கண்டிருக்கிறது என்றும், நகரத்தார்கள் வழங்கும் நன்கொடைகளைக் கொண்டே கோயில் பராமரிக்கப் பெறுகிறது என்றும் பூசாரிகள் கூறுகின்றனர்.

* * *

அடுத்துத் தென் பிராகாரத்துக்குச் செல்கிறோம். தென்கிழக்கு மூலையில் ஒரு சிறிய மண்டபமும், அதில் இரு வேல்களும் காணப்பெறுகின்றன. இதற்குச் சுப்பையா மண்டபம் என்று பெயர். மாஹேஸ்வர பூஜை இங்குதான் நடைபெறுகிறது. இதைக் கட்டிய செட்டியாரின் சிலை ஒரு தூணில் காணப்பெறுகிறது.

நாம் முதலில் கேள்விப்பட்ட வரலாற்று நாயகரான இலிங்காயதர், உறங்காப்புளியான் என்னும் பெயரில், உறங்காப்புளி மரத்தடியில் மாடம் ஒன்றில் வைக்கப் பெற்றிருக்கிறார். இப்போது உறங்காப்புளிப் பெரிய கறுப்பண்ண சுவாமி சந்நிதி இருக்குமிடத்தில் தான் முதல்(ஆதி) உறங்காப்புளி மரம் இருந்தது. அங்குதான் கர்நாடகத்திலிருந்து வந்த பெரியவர், பெரிய கறுப்பரைப் பிரதிஷ்டை செய்தார். காலப்போக்கில் அந்த மரம் பட்டுப்போய், அடுத்துள்ள இடத்தில் வேறொரு மரம் தோன்றி வளர்ந்தபோது, பெரிய கறுப்பண்ண சுவாமியைப் பிரதிஷ்டை செய்த பெரியவரை, அந்த மரத்தடியில் குடியமர்த்தி விட்டனர். இந்தப் புளியடியான் குறடு, அரிமழம் நகரத்தார் குடும்பத்தால் கட்டப் பெற்றதாம்.[14] தலமரமான இந்த உறங்காப்புளியின் இலைகளையும், திருநீற்றையும் உட்கொண்டு, பலரின் நோய்கள் குணமாகியுள்ளனவாம்.[15] இவரது பெயரையும் (உறங்காப்புளியான்) பல குழந்தைகள் பெற்றிருக்கின்றன.

அடுத்துள்ள சந்நிதிகளில், இராக்காயி அம்மன், ஆஞ்சநேயர், இடையன், கறுப்பன், இருளப்பர், வீரப்ப பூசாரி (இவ்விருவரும் கோயிலின் வளர்ச்சிக்குக் காரணமாய் இருந்தோராவர்), முத்துப்பேச்சி, சஞ்சீவி பண்டாரம் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இராக்காயி அம்மன் சந்நிதியின் வெளித்தூணில் புதுவயல் கறுப்பன்செட்டி வடுகநாதன் செட்டியாரின் சிலை உள்ளது.

இனித்தான், இரு முக்கியமான சந்நிதிகளை நாம் காணப் போகிறோம். தில்லைக்கூத்தனின் விமான அமைப்பில், செப்பு ஓட்டினால், 1892ல் அமைக்கப்பெற்ற விமானத்துடன் கூடிய சந்நிதியில்தான் இக்கோயிலின் நாயகர் உறங்காப்புளிக் கறுப்பண்ண சுவாமி (இவரை மலையாளக் கறுப்பர் என்றும் அழைப்பதுண்டாம்.[16]) அருளாட்சி செய்கிறார். இந்த விமானத்தில் வேயப்பெற்றுள்ள செப்பு ஓட்டில், முத்திருளப்ப பூசாரியின் பெயர் பொறிக்கப் பெற்றுள்ளதாகப் புசாரிகள் கூறுகின்றனர்.



ஒப்பற்ற கறுப்பரின் ஒரு தனிச் சேவை

இவரிடத்து இரண்டு தனித்தன்மைகள் காணப்பெறுகின்றன. வேறு எந்த (நகரத்தார் குலதெய்வ)க் கோயிலிலும் காணப்பெறாத வகையில், இங்கு மட்டுமே கறுப்பண்ண சுவாமி, அமர்ந்த (இராஜாங்கக்) கோலத்தில் காட்சி தருகிறார். அடுத்து, இத்துணை வளர்ச்சிகள் கண்டுள்ள கோயிலில், மண் சிலையாய் இருந்த மற்ற சிலைகள் படிப்படியாகக் கற்படிமங்களாக மாறியிருந்தும், இவர் இன்ன

மும் குலால (மண்) சிலையாகவே இருக்கிறார். (இவருக்குத் துணை யாக முத்துவீரப்பரைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறார்.) இவ் விரு சிலைகளையும் கற்சிலைகளாக மாற்ற இறைவனின் திருவுளச் சம்மதம் கிடைக்கவில்லையாம். (இலிங்காயதர் அமைத்த சிலை யாக இருந்தால், அதில் தனிச்சக்தி இருக்கத்தானே செய்யும்?)

வழக்கமாகக் கறுப்பர் சிலைகளில் காணப்பெறும் அரிவாள் இவர் கையில் இல்லை. (வெள்ளி அங்கி சாத்தும்போது மட்டும் கையில் அரிவாள் காணப்பெறுகிறது.) வலக்காலைக் குத்திட்டு, இடக்காலை மடக்கி அமர்ந்திருக்கிறார். வலக்கையில் பிரம்பு ஒன்றையும், திரு வாசியின் இருபுறமும் இரு பெரிய அரிவாள்களையும் சாத்தி வைத்துள்ளனர்.

மகாவிஷ்ணுவின் அம்சமாகவே கருதப்பெறும் கறுப்பண்ண சுவா மிக்கு, மலர் வழிபாடு (அர்ச்சனை) செய்யும்போது, திருமாலுக் கான அஷ்டோத்திரம் (108 போற்றிகள்), சகஸ்ரநாமங்களே (1008 போற்றித் தொடர்கள்) பயன்படுத்தப் பெறுகின்றனவாம்.[17] கிழக் குப் பார்த்த இச்சந்நிதியில், இவர் அருகே, சின்னக் கறுப்பர் எழுந் தருளியிருக்கிறார்.

மற்றொரு முக்கியமான சந்நிதி, நகரத்தார் பெண்ணுடன் தொடர் புடையது. கருவறைக்கு வலப்புறத்தில் (தெற்கே) அமைந்திருக்கிறது, இச்சந்நிதி. அலமேலு, தெய்வயானை என வேறு சிலரும் (நகரத் தார் வீட்டுப் பெண்களாகத்தான் இருக்கவேண்டும்.) இருந்தாலும், இங்குள்ள இந்த ஏகாத்தாளுக்குத் தனிச்சிறப்பு இருக்கிறதாம்.

இடுப்பில் குழந்தை ஒன்றை ஏந்திய வண்ணம், நின்ற கோலத்தில் காட்சி தருகிறார் ஏகாத்தாள். சிலையில் கலையழகைக் காண இய லாவிடினும், அம்மையாரின் முகத்தில் அமைதி தவழ்கிறது. குழந் தையும் புன்சிரிப்புடன் காணப்பெறுகிறது. கழுத்தில் தாலி போன்ற ஒன்றைக் கட்டி வைத்துள்ளனர்.

பல்லாண்டுகளுக்கு முன்னர் இக்கோயிலுக்கு வழிபட வந்த தந்தை யும் மகளும், வழிபாடு முடிந்து கோயிலருகில் தங்கியிருந்த போது, தண்ணீர் கொண்டு வரச் சென்ற தந்தை வருவதற்குள், மகள் கல் லாகி விட்டாள். (அரிமழம் செட்டிச்சி அம்மனின் கதை நினைவுக்கு வருகிறதா?) அதிலிருந்து ஏகாத்தாளை நகரத்தார்கள் வழிபட்டு வருகிறார்கள் என்று சொல்லப் பெறுகிறது.[18] கையில் குழந்தையு டன் காணப்பெறுகிறாரே, அதைப் பற்றி இந்தச் செவிவழிச் செய் தியில் ஏதும் கூறப்பெறவில்லை.

இவ்வம்மையாரின் பெயரை ஒட்டி நகரத்தார் வீட்டுக் குழந்தைகளுக்கு ஏகப்பன், ஏகாத்தாள், ஏகம்மை என்னும் பெயர்களை வைக்கிறார் களாம். குழந்தைப்பேறு வேண்டுவோர், இச்சந்நிதியில் வழிபட் டுத் தொட்டில் செய்து வைத்து நேர்த்திக் கடனை நிறைவேற்று கின்றனராம். சிறந்த பிரார்த்தனைச் சந்நிதி என்று இதனைக் குறிப்பிடு கின்றனர்.

தென் பிராகாரக் கோடியில் உள்ளதொரு சந்நிதியில், சப்த கன்னி யருடன், வளத்தியம்மன், அடைக்கியாத்தாள், துர்க்கையம்மன், செல்லியம்மன் என்னும் நான்கு படைப்புத் தெய்வங்களும், மற்

றும் கையில் குழந்தையுடன் அலமேலு; தெய்வானை ஆகியோரும் உள்ளனர்.

தொடர்ந்து வடக்குப் பிராகாரத்துக்கு வருகிறோம். இரட்டைப் பனை மரம், பலிபீடம் ஆகியவற்றை அடுத்து, ஆஞ்சநேயர் வெளியில் உள்ள வீரபத்திரர் சந்நிதி உள்ளது. அடுத்துள்ள சந்நிதிகளில் முனீஸ்வரர், ஆதிசேடர், காட்டேரி, மகாகாளி ஆகிய தேவதை கள் இருக்கின்றனர்.

* * *

கோயிலுக்கு வெளியே வடக்கே உள்ளது, முன்னோடி சந்நிதி. வடக்கேயுள்ள சேமங்குதிரை அருகில் இச்சந்நிதி அமைந்திருக்கிறது. இங்கு முன்னோடி, சப்பாணி, மதுரைவீரன், துந்துமி ஆகியோர் உள்ளனர். முன்னோடியைச் சுற்றி 60 பாகம் சங்கிலி கட்டப் பெற்றுள்ளதாம்.

ஆயர்பாடியில் கண்ணன் செய்த குறும்புகளும், அவற்றுக்காக அவன் வாங்கிக் கட்டிக் கொண்ட பரிசுகளும் எல்லோரும் அறிந்ததே. ஆய்ச்சியரின் குடிசைகளில் திருட்டுத்தனமாக நுழைந்து, வயிறு நிரம்பும் வரை வெண்ணெயும், தயிரும் விழுங்கியமைக்காகக் கயிற்றினால் உரலோடு கண்ணன் கட்டுண்டதை ஆழ்வார்கள் பாடி மகிழ்கின்றனர்![19]

சுந்தர பாண்டியனின் மனைவி தேவி விந்தியாவலியிடம் இளம் பெண்ணாக வளர்ந்து வந்த இலக்குமியின் கையைச், சைவ வேதிய ராய் வந்த விஷ்ணுமூர்த்தி பிடிக்க, அதன் காரணமாக அரசனால் விலங்கிடப்பெற்ற சேதுமாத்வரை இராமேசுவரத்தில் கண்டு வழி படுகிறோம்.

கண்ணன் கட்டுண்டதற்கும், திருமால் விலங்கிடப்பெற்றதற்கும் காரணங்களை அறிந்துள்ள நாம், ஐயனார், கறுப்பர் ஆகியோரின் முன்னோடித் தெய்வம், இங்கும், இன்னும் சில கோயில்களிலும் அறு பது பாகம் சங்கிலியால் பிணைப்புண்டிருப்பதற்கு என்ன கார ணம் என அறிய விழைகிறோம்; சரியான விளக்கம் கிடைக்கவில்லை. அவர் அத்துமீறி ஓடிவிடுவாரா என்ன? மற்றொரு விந்தையான கட்டுப்பாடு — பெண்கள் இச்சந்நிதிக்குள் செல்லக்கூடாது. ஏன்? (எதற்கும் காரணத்தை அறிய விழைவது, இன்றைய உலகத்தின் இயல்பு.)

இடையில் சிறிது காலம், முன்னோடி, சப்பாணிக்குப் பானக்கம், பேரீச்சம்பழம் ஆகியவை படைத்தார்கள். இப்போது வெளிநாட்டு உயர்தரச் சரக்குகள் கூட நிவேதனம் செய்யப் பெறுகின்றன வாம்![20]

* * *

திருக்குட நீராட்டு நாளை ஒட்டி ஒவ்வோராண்டும் வருஷாபிஷேகம் நடைபெறும் இக்கோயிலில், நித்தியப் படித்தரத்துக்கு நிதி சேர்க் கும் வகையில், ஆண்டுக்கொரு நாள் அர்ச்சனைக்கென, 240 நாட்களுக்கு நிதி சேர்ந்திருக்கிறதாம்.[21]

காலை ஏழு மணி முதல் பத்தரை மணி வரையிலும், மாலை நான்கு மணி முதல் ஏழரை வரையிலும் கோயில் திறந்திருக்கும்போது, இரு வேளை பூசை நடைபெறுகிறது.

அரிமழம் பங்காளிகள் தை அல்லது சித்திரை மாதத்திலும், நெற் குப்பைப் பங்காளிகள் ஆடிப்பூரத்தன்றும் இங்கு வந்து வழிபட்டா லும், குழிபிறைப் பங்காளிகள், தங்கள் வீடுகளில் திருமணம் போன்ற நல்ல நிகழ்ச்சிகள் முடிந்தபின்னர் மட்டும், பங்காளிகளுடன் வந்து வழிபடுவர் என்று சொல்லப் பெறுகிறது.[22] அதே நேரத்தில், ஆடி வெள்ளிக்கிழமைகளிலும், சித்திராப் பௌர்ணமி, சித்திரை மாத முதல் ஞாயிறு போன்ற நாட்களிலும், நகரத்தார்கள் வந்து வழிபடுகினறனர் என்று பூசாரிகள் கூறுகின்றனர். இந்து அற நிலையத் துறையைச் சேர்ந்த இக்கோயிலைப் பண்டாரங்களே நிர் வகித்து வருகின்றனர். நகரத்தார்களே இக்கோயிலின் எல்லாத் திருப்பணிகளையும் செய்திருந்தாலும், முதற் காளாஞ்சி மரியாதை தொடர்பாக, அண்மையத் திருக்குட நீராட்டு விழாவின்போது, சிறு சலசலப்பு ஏற்பட்டதாம்.[23]

அழகிய பெரியதொரு கோயிலில் வழிபட்ட மனநிறைவுடன், அடுத் துக் கீரணிப்பட்டி முத்துமாரியம்மன் கோயிலுக்குச் செல்கிறோம்.

பரவும் சொல்மாலை

1. அங்காளம்மன்:

கங்கச்சி வாணி, கடுங்கோபிநீலி, கருத்தில்உன்னை
மங்குச்சி என்று வணங்கிநிற்பேன், வருமாமயிலே!
பங்கச்சி சிங்கைப் பதிஇருந்தாண்டிச்சி, நீலபச்சவர்ணீ!
தங்கச்சி யானவளே! சிங்கையில்வாழும் அங்காளம்மனே!

— பாடுவார் முத்தப்ப செட்டியார்

2. கறுப்பண்ண சுவாமி:

கறுப்பண்ணன் வாழ்கின்ற ராங்கியம் சென்றிட்டால்
காலமும் காத்துநிற்பான்,
கண்போன்ற மாதராம் ஏகாத்தா ராக்கம்மை
கருணையாம் அன்பைஈவார்,
விருப்பின்றி வெறுப்பின்றி வந்திட்ட அனைவர்க்கும்
விரும்பிய வரம்அருள்வான்,
விளையாத நிலத்தையும் விளைவித்துக் காட்டியே
வித்தைகள் புரிந்துநிற்பான்,
உருகியே தினம்பாடி உள்ளத்தில் வைத்திட்டால்
உலகினை ஆளவைப்பான்,
உறவென்று அவனையே உறுதியாய்ப் பற்றிட்டால்
உண்மைகள் புரியவைப்பான்,
இருபொழுதும் விளக்கேற்றி இல்லத்தில் கும்பிடவே
இன்முகம் காட்டிவருவான்,
இல்லாமை நிலைபோக்கி எல்லாமும் பெற்றிடவே
என்றென்றும் அருள்புரிவான்.

— கவிஞர் அரிமழம் ப. செல்லப்பா

3.சிலையானைப் படையெடுத்த செங்கை யானைத்
திகழ்உறங்காப் புளியானைத் தினமும் சித்ர
முலையார்கள் மடல்எழுதும் வடிவத் தானை
முத்திதரும் மெய்ஞ்ஞான மூர்த்தி யானைக்
கலையானை நறுந்துளவ மார்பத் தானைக்
கமழ்பெரிய கறுப்பணனைக் கடாட்சத் தானை
மலையாளத் துரையானை என்னு ளத்தில்
வந்தானைக் கண்டடியேன் வணங்கி னேனே.

— பாடுவார் முத்தப்ப செட்டியார்

குறிப்பு விளக்கம்:

1. திருக்கோயில் மாத இதழ், நவ 79
2. கல்வெட்டுக் குறிப்பு ஒன்றில் இப்பெயர் காணப்பெறுகிறது — சித. ஆவுடையப்பன், இராங்கியம் பெரிய கறுப்பண்ண சுவாமி ஆலயம் குடமுழுக்கு விழா மலர் 1987
பாடுவார் முத்தப்ப செட்டியாரும், தம் பாடல்களில் இப்பெயரைக் குறிப்பிட்டி ருக்கிறார்
3. கோயில் பூசாரிகள்: பூ.வீர.மு.மு. முத்திருள பூசாரி, சிவ.ஆறு. கணபதி பண்டாரம், பூ.வீர.மு.வீர. கணபதி பண்டாரம், இராங்கியம்
4. அபிதான சிந்தாமணி
5. பி.ஸ்ரீ.— மாணிக்கவாசகரும், நம்மாழ்வாரும்
6. 'வானுலகத்தையும் மண்ணுலகத்தையும் பிற எல்லாவற்றையும் வித்தில்லாமலே தோற்றுவிக்கிறான்' — திருவாசகம்
7. இராங்கியம் பெரியகறுப்பண்ண சுவாமி ஆலயம் குடமுழுக்கு விழா மலர் 1987
8. வீரப்ப பண்டாரம் — குடமுழுக்கு விழா மலர்க் கட்டுரை
9. கோயில் பூசாரிகள்
10. எம்.கே.எம். இராமநாதன் செட்டியார், நெற்குப்பை
11. கவிஞர் ப. செல்லப்பா, அரிமழம்; எம்.கே.எம். இராமநாதன் செட்டியார்; பூசாரிகள்; பி.ஆர்.எம்.பி. முத்துப்பழனியப்ப செட்டியார், இராங்கியம்; டாக்டர் என். அழகப்பன், குழிபிறை; மற்றும் குடமுழுக்கு விழா மலரில் அடங்கியுள்ள தகவல்களிலிருந்து தொகுக்கப்பெற்றது
12. கடவுளின் திருவுருவங்கள் — ந.ரா. முருகவேள்
13. பி.ஆர்.எம்.பி. முத்துப்பழனியப்பன்
14. குடமுழுக்கு விழா மலர்
15. பூசாரிகள்
16. பி.ஆர்.எம்.பி. முத்துப்பழனியப்பன்
17. பூசாரிகள்
18. கவிஞர் ப. செல்லப்பா
19. ''துன்னு படல்திறந்து புக்கு, — தயிர்வெண்ணெய்
தன்வயிறார விழுங்க, கொழுங்கயல்கண்
மன்னும் மடவோர்கள் பற்றியோர் வான்கயிற்றால்
பின்னும் உரலோடு கட்டுண்ட பெற்றிமையும்...''— திருமங்கையாழ்வார், பெரிய திருமடல்
20. பூசாரிகள்
21. 13.06.94ல் கிடைத்த தகவல்
22. கவிஞர் ப. செல்லப்பா, எம்.கே.எம். இராமநாதன் செட்டியார், டாக்டர் என். அழகப்பன்
23. டாக்டர் என். அழகப்பன்

உ

மூவுலகுக்கொரு தாயே, முத்துமாரி அம்மையே!

(65. முத்துமாரியம்மன் திருக்கோயில், கீரணிப்பட்டி)

பங்குனி பிறந்து விட்டால், எங்கெல்லாம் மாரியம்மன் கோயில்கள் உள்ளனவோ, அங்கெல்லாம் ஞாயிற்றுக்கிழமைகளில் பூச்சொரிதல் நிகழத் தொடங்கிவிடும். செட்டி நாட்டில் உள்ள சில மாரியம்மன் கோயில்களில், இந்த விழா மிகவும் புகழ்பெற்றுப் பிரபலமாகத் திகழ்கிறது.

''.....நாள் மலர்கொண்டங்(கு) இசைந்தேத்தும் அடியார்கள்
பண்ணார்பா டல்அறாத.....''[1] கோயில்கள் இவை. இவற்றில்

ஒன்றுதான் கீரணிப்பட்டி முத்துமாரியம்மன் கோயில். சாதாரணமாகவே திங்கள், வெள்ளிக்கிழமைகளில் இங்கு பொதுமக்களின் கூட்டம் நிரம்பி வழிகிறது.

இராங்கியம் அங்காள பரமேஸ்வரி கோயிலிலிருந்து, இளையாற்றங்குடி நித்திய கல்யாணி உடனாய கைலாசநாதர் தேவஸ்தானத்தின் நிர்வாகத்தில் உள்ள கீரணிப்பட்டி முத்துமாரியம்மன் கோயிலுக்குச் செல்கிறோம். இராங்கியத்திற்குத் தெற்கே உள்ள குருவிக்கொண்டான்பட்டி வழியாகக் கீரணிப்பட்டிக்குச் செல்லலாம். இளையாற்றங்குடியிலிருந்தும் வடக்கே 3 கல் தொலைவில் உள்ள ஆவிணிப்பட்டி தாண்டிக் கீரணிப்பட்டியை அடையலாம். அங்கு சாலை ஓரத்தில் அமைந்திருக்கிறது, புகழ்பெற்ற முத்துமாரியம்மன் கோயில்.

* * *

சில நூறு ஆண்டுகளைத் தாண்டிவிட்ட, முழுவதும் கல் திருப்பணி செய்யப்பெற்ற இக்கோயிலில், 1993ஆம் ஆண்டு ஜனவரி மாதம் திருக்குட நீராட்டு நடைபெற்றிருக்கிறது.

இராங்கியத்தைப் போன்று இங்கும் கோயிலினுள் செல்லுமுன்னர் உள்ள மண்டபத்தில் அழகிய வண்ண ஓவியங்கள் தீட்டப்பெற்றுள்ளன.

கோயிலினுள் சென்றதும் மகா மண்டபத்தில் பலிபீடம் மட்டும் காணப் பெறுகிறது. மூலவரைத் தரிசிக்கக் கருவறை நோக்கிச் செல்லும் நேரத்தில், மகா மண்டபத்தில் இரட்டை விநாயகர் இருப்பதையும் கண்டு, அவர்களையும் வழிபடுகிறோம். அவர்களில் பெரிய விநா யகர், அழகிய சிலா வடிவம்.

கருவறையின் முன்னால் அன்னையின் வலப்பக்கம் பழைய அம் பிகை சிலை வைக்கப் பெற்றிருக்கிறது. கருவறையில் அன்னை முத்துமாரி அழகிய கோலத்தில் காட்சி தருகிறார்.

ஜமதக்னி முனிவரின் மனைவியாகிய இரேணுகை, முனிவர் இறந் ததும் அவருடன் தீக்குளிக்க, வருணன் அவளைக் காப்பாற்றுகி றான். ஆடை எரிந்து போன நிலையில், வேம்பின் தழைகளை ஆடையாகத் தரித்துக்கொண்டு அவள் சென்றபோது, தேவர்கள் தரிசனம் தந்து, கிராமங்களிலிருந்து தீமைகளை அகற்றவும், அவள் உடலில் உண்டான தீக்கொப்புளங்கள் உலகத்து உயிர்களுக்கு அம் மைக் கொப்புளங்களாக வரும்போது, அவள் தரித்திருந்த வேப் பிலையை மருந்தாக்கி, அவள் புசித்த பச்சரிசி, மா, வெல்லம், இளநீர் ஆகியவற்றை அவளுக்கு நிவேதித்து நோய் நீக்கம் பெறவும், சக்தி அம்சமாகிய அவளுக்கு வரம் தந்து, அவள் உடலிலிருந்த முத் துப் போன்ற கொப்புளங்களால், அவள் முத்துமாரி எனப் பெயர் பெற்றுக் கிராமதேவதை ஆவாள் என்றும் கூறி மறைந்தனர்.[2]



அடைக்கலம்இங்கு உனைப்புகுந்தோம் எங்கள்முத்து மாரியம்மா

பங்குனி மாதம் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை இங்கு பூச்சொரிதல் நடைபெறுகிறது. இந்த வட்டாரத்திலேயே மிகப் புகழ் பெற்றதொரு விழா அது. அருகிலுள்ள பல ஊர்களிலிருந்து பாற்குடங்களும், பூத்தட்டும் வருவது கண்கொள்ளாக் காட்சியாகும். அதிலிருந்து பதினைந்தாவது நாள், பத்துநாள் திருவிழாத் தொடங்குகிறது.[3]

பத்து நாள் திருவிழாவிற்கு அன்னையின் உற்சவ விக்கிரகம், இளையாற்றங்குடி நகரச் சிவன் கோயிலிலிருந்து தேரில் கொண்டுவரப் பெறுகிறது.[4] இந்த எழுந்தருளி கோயிலை வந்தடைந்ததும், சாமியாடி, மூலவரின் பூசைப் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறார். திருவிழா முடியும்வரை, வழக்கமாகப் பூசை செய்யும் பண்டாரங்கள் அம்பாளைத் தீண்டமாட்டார்களாம்.[5] ஒன்பதாம் நாள் தேர்த் திருவிழா நடைபெறுகிறது. திருவிழா முடிந்த பின்னர் பாதுகாப்பின் பொருட்டு, உற்சவத் திருமேனியை இளையாற்றங்குடிக்குக் கொண்டு சென்று விடுகின்றனர்.

பண்டாரங்கள் இரு நேரப் பூசை செய்யும் இக்கோயிலுக்குக், கைலாசநாதர் கோயிலிலிருந்து நித்தியப்படிப் படித்தரம் கொடுக்கப்பெறுகிறது.

* * *

ஆவிணிப்பட்டி, இராங்கியம், கண்டவராயன்பட்டி, காரைக்குடி, கீழச்சிவற்பட்டி (சூரக்குடி, இளையாற்றங்குடிக் கழனிவாசல் நகரத்தார்கள்), குருவிக்கொண்டான்பட்டி, பட்டமங்கலம், மிதிலைப்பட்டி ஆகிய ஊர்களின் நகரத்தார்கள், இக்கோயிலைக் குலதெய்வக் கோயிலாகக் கொண்டுள்ளனர்.[6] இக்கோயிலுக்கு அடிமைப்பட்ட நகரத்தார்கள், தங்கள் ஊரில் நடைபெறும் படைப்பு முடிந்த பின்னர் ஆடி மாதத்தில் இங்கு வந்து வழிபாடு செய்கின்றனராம்.[7]

இந்த முத்துமாரியையும், இங்குள்ள பெரிய கறுப்பரையும், கீழச்சிவற்பட்டி, ஆவிணிப்பட்டி, குருவிக்கொண்டான்பட்டி நகரத்தார்கள் தை மாதத்தில் அவரவரும் தனித்தனியாகச் சென்றும், சேர்ந்து சென்றும் அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபடுகின்றனர். திருமணத்துக்குப் பின்னர் மணமக்களை இங்கு அழைத்து வந்து ஆராதனைகள் செய்து வழிபட்ட பின்னரே, சாந்தி முகூர்த்தம் உட்பட யாவும் நடைபெறுகின்றன. பிள்ளை பிறந்தால், 31ஆவது நாள் இங்கு வந்து அபிஷேகம் செய்து, பிள்ளைக்குப் பெயர் வைத்துச் செல்கின்றனர். அதற்கு முன்னர் அவர்கள் தாயையும் சேயையும் எங்கும் அழைத்துச் செல்வதில்லை. பூச்சொரிதலின்போது, பிள்ளைகளுக்குத் தொட்டில் கட்டுகின்றனர்.

* * *

தென் பிராகாரத்தில் வடக்குப் பார்த்து உள்ள சந்நிதியில் சின்னக் கறுப்பர், பெரிய கறுப்பர், முத்துக் கறுப்பண்ண சுவாமி ஆகிய மூவரும் குடிகொண்டுள்ளனர். இவர்களைத் தரிசித்துக் கொண்டு மூலவரை வலம் வந்த பின்னர், கோயிலின் எதிரில் தனியாக உள்ள முன்னோடிக் கறுப்பரின் பெரிய கொம்படி ஆலயத்துக்குச் செல்கிறோம்.

இடுப்பளவு உயரத்துக்குச் சுற்றுச் சுவர் கட்டப்பெற்றுள்ள இதனுள், காஞ்சிர மரம் போன்ற பல பெரிய பழைய மரங்கள் உள்ளன.

மேற்குப் பகுதியில் சுற்றுச் சுவருடன் கூடிய முன்னோடிக் கறுப்பர் சந்நிதி உள்ளது. மிகக் குனிந்து செல்லும் வகையில், இதன் நுழை வாயில் அமைக்கப் பெற்றிருக்கிறது. உள்ளே மேடையில், சிவலிங்க வடிவில், சுதையினாலான பெரிய கறுப்பரும், முன்னோடிக் கறுப்பரும் உள்ளனர். நிறைய அரிவாள்களும், வேல்களும் அருகில் காணப்பெறுகின்றன.

இக்கோயிலினுள் பெண்கள் போகமாட்டார்கள், ஆண்கள்தான் சுவாமி கும்பிடவேண்டும் என்று கூறப்பெறுவதைப் பற்றிக்[8] கேட்ட போது, பயந்துதான் பெண்கள் போவதில்லையே தவிரப், போகக் கூடாது என்று தடை விதிக்கப்பெறவில்லை என, ஹரிஜனங்க ளான பூசாரிகள் கூறுகின்றனர். இந்தச் சந்நிதிக்குச் சிவராத்திரி யன்று, நிறைய ஊர்மக்கள் வழிபாட்டுக்காக வருவார்களாம்.[9]

பாடுவார் முத்தப்ப செட்டியாரின் பாடல்களைப் பெற்ற அன் னையை மீண்டும் வழிபட்டுக் கொண்டு, இளையாற்றங்குடிக்குச் செல்கிறோம், மற்றோர் அன்னையின் தரிசனத்துக்காக!

பரவும் சொல்மாலை

சீர்வளர் மதியும் திருவளர் வாழ்க்கைச்
செல்வமும் கல்வியும் பொறையும்
பார்வளர் திறனும் பயன்வளர் பரிசும்
பக்தியும் எனக்கருள் பரிந்தே,
வார்வளர் தனத்தாய்! மருவளர் குழலாய்!
மணிவளர் அணிமலர் முகத்தாய்!
ஏர்வளர் குணத்தாய்! இசைதுலக் காணத்(து)
இரேணுகை எனும்ஒரு திருவே!

— திருவருட்பா

குறிப்பு விளக்கம்:

1. "அன்றலர்ந்த மலர்களைக் கொண்டு, மனம் பொருந்தித் துதித்து வழிபடும் அடியார்களின் பண் நிறைந்த பாடல் ஒலி நீங்காத..." — 7 ஆம் திருமுறை
2. அபிதான சிந்தாமணி
3. எஸ்.எம். முத்தையா செட்டியார், கீழச்சிவற்பட்டி
4. டி. தினமணி, இளையாற்றங்குடி
5. ஆ.ஏ.நா. பாட்டையா பூசாரி, இளையாற்றங்குடி
6. எஸ்.எம். முத்தையா செட்டியார்; மு. பழனியப்ப செட்டியார், உ. சிறுவயல்
7. அழ. சொக்கலிங்கம், கீழச்சிவற்பட்டி
8. மு. பழனியப்ப செட்டியார்
9. மு. பழனியப்ப செட்டியார்

உ

அண்டத்தவர் பணிந்தேத்தும் அங்காள பரமேஸ்வரி

(66. அங்காள பரமேஸ்வரியம்மன் திருக்கோயில், இளையாற்றங்குடி)

மகா சிவராத்திரி, பெரும்பாலும் எல்லாக் குலதெய்வக் கோயில்களிலும் கொண்டாடப் பெறுகிறது. அதை ஒட்டி வெவ்வேறு கோயில்களில், வெவ்வேறு வகையான விழாக்கள் — நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அவற்றில் ஒன்றான ''அலகு நிறுத்தல்'' என்பது, (எளியேன் அறிந்தவரை) நகரத்தார்களின் குலதெய்வக் கோயில்களில் ஒன்றில் மட்டுமே நடைபெறுகிறது.

சிவராத்திரிக்கு அடுத்த நாள் காலை, அருகிலுள்ள திருக்குளத்திலிருந்து கரகத்தில் நீர் எடுத்துவந்து, அம்பாள் முன் வைத்து, அக்குடத்தின் சரிவான பக்கவாட்டில் ஒரு கத்தியைச் செங்குத்தாக நிறுத்துவார்கள். அக்கத்தி விழாமல், சிறிது நேரம் செங்குத்தாக நிற்கும். இதற்கு ''அலகு (கூர்மையான; ஆயுதம்) நிறுத்தல்'' என்று பெயர். இவ்வாறு கத்தி நின்றால், நாட்டுக்கு நலம் பயக்கும் என்று நம்பப் பெறுகிறது. (காளை மாட்டின் கழுத்திலிருந்து மணி விழுதல், சுவாமிக்கு வியர்த்தல், குடத்தில் கத்தி நிற்றல் — இப்படி எத்தனை வகைகளில், நாட்டின் நலனை அறிந்து கொள்ள முடிகிறது!)

1985ஆம் ஆண்டில், நகரத்தார்களின் குலதெய்வக் கோயில் அல்லாத வேறொரு கோயிலில், இந்த நிகழ்ச்சியைக் கண்ணுற்ற ஜப்பானிய அம்மையார் ஒருவர், இரண்டு நிமிடங்களுக்கு மேல் குடத்தின் சரிவான பகுதியில் கத்தி நின்றதைத் தாம் கண்டதாகக் கூறுகிறார்.[1] கத்தி சிவனையும், குடம் சக்தியையும் குறிப்பிடுகின்றன; கத்தி குடத்தில் நிற்பதானது, சிவமும், சக்தியும் ஐக்கியமாவதைக் காட்டுகிறது என அவர் எழுதியிருக்கிறார்.

ஆண்டுதோறும் , மகா சிவராத்திரிக்கு அடுத்த நாள் இந்த அலகு நிறுத்தல் நடைபெறும் இளையாற்றங்குடி அங்காள பரமேஸ்வரி கோயிலுக்கு இப்போது செல்கிறோம்.

* * *

இளையாற்றங்குடியில், எளியேனுக்கு உரியவரான கைலாச விநாயகரின் கோயிலுக்கு எதிரிலுள்ள திருக்குளத்தின் தெற்குக் கரை



நீரின் கீழே இருந்த நிதியம்

யில், இக்கோயில் அமைந்திருக்கிறது. கடந்த ஆண்டு ஜூலைத் திங்கள் நாங்கள் இக்கோயிலுக்குச் சென்றிருந்தபோது, கோயில் திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

புதிய மூன்றுநிலை இராஜகோபுரம், சில சந்நிதிகளுக்குப் புதிய விமானங்கள், சில புதிய சந்நிதிகள், மகா மண்டபம் ஆகியவற்றுக் கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், கோயில் தலைமைப் பூசாரி,[2] கோயில் பற்றிய பல விவரங்களைக் கூறி னார்.

ஆவிணிப்பட்டி (மாத்தூர் — குளத்தூர்), கீழச்சிவற்பட்டி, குருவிக்கொண்டான்பட்டி (சூரக்குடி), குழிபிறை, சிறுகூடல்பட்டி, தேவகோட்டை (மாத்தூர் — குளத்தூர்), நற்சாந்துபட்டி, நெற்குப்பை, பனையப்பட்டி, மேலைச்சிவபுரி, வலையபட்டி, விரையாச்சிலை நகரத்தார்களுக்குக் குலதெய்வக் கோயிலான இதன் தொன்மையை உணர்த்தும் இருசான்றுகளை இக்கோயிலில் காண்கிறோம்.

கோயிலில் கட்டப்பெற்றுள்ள மணி, குருவிக்கொண்டான்பட்டி நகரத்தார் ஒருவரால் குரோதன ஆண்டு உபயம் செய்யப்பெற்றது என்று, மணியில் பொறிக்கப்பெற்றுள்ளது. இம்மணி 1925 — 26ல், அல்லது அதற்கு 60 அல்லது 120 ஆண்டுகளுக்கு முன்னர் உபயம் செய்யப்பெற்றிருக்க வேண்டும்.

மிக முக்கியமான மற்றொன்று, இங்குள்ள சிறிய உற்சவ விக்கிரகம். கோயில்களில் சுவாமியோ, அம்பாளோ, வெளியில் எழுந்தருளும்போது, மூலவருக்குரிய ஓர் உற்சவர்தாம் எழுந்தருளுவது வழக்கம். ஆனால் இக்கோயிலில் மட்டும் அம்பாளின் இரு உற்சவர்கள் உலா வருகின்றனர். ஏன்?

நாரத குண்டத்தில் (நீர்நிலை) புனித நீராடிய (ஆதி)சங்கரரின் கரத்தில் ஒரு சாளக்கிராமம் (பூசித்தற்குரிய விஷ்ணு முத்திரையுள்ள கல்) தட்டுப்படுகிறது. (வைணவர்களுக்கு அஞ்சிப் பாதுகாப்பிற்காகப் பௌத்தர்கள், நீர் நிலையில் மறைத்து வைத்திருந்த புத்தர் சிலை என்று அதனைக் கூறுவர்.) அதைச் சங்கரர் தப்த குண்டத்தருகே பிரதிஷ்டை செய்தார் என்பர். அதுவே இப்போது பத்ரி நாராயணனாக விளங்குகிறது.[3]

அதுபோன்று இளையாற்றங்குடி நகரச் சிவன் கோயில் கேணியில் தூர் எடுக்கும் (சேறு அகற்றும்) போது, சேறு, கல், மண் ஆகியவற்றுடன், பள்ளியறை சுவாமி போன்ற சிறிய அளவிலான அம்பாளின் ஐம்பொன் சிலை ஒன்றும் எடுக்கப்பெறுகிறது. யாரும் வேண்டுமென்றோ, வேண்டாமென்றோ (பாதுகாப்பின் பொருட்டோ, கடத்தும் பொருட்டோ, விரோதத்தின் பொருட்டோ) கேணியினுள் போட்ட சிலையாக இருக்கலாம். சங்கரரைப் போன்று கோயில்க்காரர்கள், அதற்கு உரிமை கொண்டாடவில்லை. மாறாகச் சிலையைத் துருவித் துருவிப் பார்த்தார்கள்; அங்காள பரமேஸ்வரி கோயில் என்று எழுதப் பெற்றிருந்தது. இந்த அம்மன் கோயிலிடம் ஒப்படைத்து விட்டார்கள்.

இது நடந்தது எப்போது? எந்தக் காலச் சிலையாக இருக்கலாம்? யுவ வருஷம், தை மாதம் 11ஆம் தேதி என்று சிலையில் பொறிக்கப்பெற்றுள்ளது. தமிழ் ஆண்டுகளில் ஒரு குழப்பம். அறுபது ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு சுற்று. அப்படியானால் இது, ஒரு சுற்றுச் சிலையா? இரண்டு சுற்றா? மூன்றா?...1936?...1876?... 1816?... இது நடந்து சுமார் 180 ஆண்டுகள் ஆகின்றன என்கிறார் பூசாரி. சரியாகவும் இருக்கலாம்; மிகைப்படுத்தப் பெற்றதாகவும் இருக்கலாம்!

சிறிய சிலையாக இருந்ததால், கடந்த தலைமுறையில் அதே அமைப்பில் பெரியதோர் உற்சவரைச் செய்தார்கள். புதியவர் வந்ததும், பழையவருக்குப் பிரியாவிடை நல்கவில்லை; சிறியவரான மூத்த

வரும், பெரியவரான இளையவருமே இப்போது உலா வருகிறார்கள்.

* * *

புதிய இராஜகோபுரம் எழுந்து கொண்டிருக்கும் இடத்துக்கு முன்னே, இரு பெரிய சேமங்குதிரைகள், இரட்டைப் பூதங்களுடன் உற்சாகமாக நிற்கின்றன. விரையாச்சிலை நகரத்தார் குடும்பத்தினர் திருப்பணி செய்யும் இராஜகோபுர வாயில் வழியாக உள்ளே செல்கிறோம்.

கல் திருப்பணி செய்யப்பெற்ற மண்டபத்தை அடுத்துள்ள மகா மண்டபம், புதிதாகக் கட்டப் பெற்றிருக்கிறதாம். இங்கு பலிபீடம் — நந்தி — மீண்டும் ஒரு பலிபீடம் ஆகியவை உள்ளன. அவற்றைக் கடந்து சென்றால், நம் இடப்புறம் சிங்கார விநாயகரும், (முதலில் அர்த்த மண்டபத்தில் இருந்தவர்), கைலாச விநாயகரும், வலப்புறம் தண்டாயுதபாணியும் காட்சியளிக்கின்றனர். அர்த்த மண்டபத்தில் நாம் முன்னர் குறிப்பிட்ட இரு உற்சவர்களுடன், பெரியதொரு கறுப்பர் உற்சவத் திருமேனியும் வைக்கப் பெற்றிருக்கின்றது.

கல் திருப்பணியான கருவறையில் அன்னை அங்காள பரமேஸ்வரி அழகிய தோற்றத்துடன் காட்சி தருகிறார்.

மாசி மாதம் மகா சிவராத்திரியை ஒட்டி, ஆறு நாட்களுக்கு உருத்திராபிஷேகம், இயல்—இசை—நாடக நிகழ்ச்சிகள், பச்சை வாழை பரப்புதல், பொங்கல், கப்பரை எடுத்தல், திருவிளக்கு வழிபாடு, நகர விருந்து இன்னோரன்ன சிறப்பு வழிபாடுகளை இக்கோயிலுக்கு அடிமைப்பட்ட நகரத்தார்கள் பொறுப்பேற்று நடத்துகின்றனர்.


108 பெண்கள் கலந்து கொள்ளும் திருவிளக்கு வழிபாடு, இருபது ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இவை அனைத்துமே, பூசாரிக்குள்ள அன்னையின் அருளினாலும், செல்வாக்கினாலுமே நடைபெறுகின்றன என்றால் மிகையாகாது. சிவராத்திரிக்கு இரண்டு நாள் முன்னதாகவே இந்தச் சிறப்பு வழிபாடுகள் தொடங்கிச், சிவராத்திரியன்று ஆறு காலப் பூசை நடைபெறுகிறது.

இங்கு, முதல்நாள் கப்பரை எடுக்கும்போது, முறத்தில் பாவை அமைத்து, ஊர்வலமாக மயானத்துக்குச் சென்று, எறிசோறு கொடுப்பார்களாம். ''எறிசோறு கீழே விழுவதே இல்லையா'' என்று பல கோயில்களில் கேட்டபோதெல்லாம், ''எங்களுக்கு அந்த அனுபவம் ஏற்பட்டதே இல்லை'' என்று அந்தந்தக் கோயில்களின் அர்ச்சகர்கள் கூறினார்கள். ஆனால், இங்கு கேட்டபோது, நேர்ந்து கொள்வோரிடமோ, வழிபாட்டு முறையிலோ குறைபாடு இருக்குமானால், எறிசோறு கீழே விழுவதும் உண்டு என்று பூசாரி ஒப்புக் கொண்டது, அவருடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது.

கழிவு பூசை என ஒன்றும் இங்கு நடைபெறுவது உண்டாம். நேர்த்திக்கடன் செலுத்த விரும்புவோர் மட்டுமே இதனைச் செய்கின்றனர். இந்தப் பூசையைப் பற்றி விவரிக்காமல் விடுவதே சிறந்தது. சிவராத்திரிக்கு அடுத்து நாள், முதலில் குறிப்பிடப்பெற்ற ''அலகு

நிறுத்தல்'' நடைபெறுகிறது. இரவு, சகடையில் அம்பாள், கறுப்பர் புறப்பாடு நடைபெறுகிறது. அடுத்தடுத்த நாட்களில் பச்சை வாழை பரப்புதலும், பொங்கலும் நடைபெறுகின்றன.

காஞ்சி சங்கராச்சாரிய சுவாமிகளைச், சில ஆண்டுகளுக்கு முன்னர், ஜோதிலிங்கத் தல யாத்திரை மேற்கொள்வதற்கு முன்னர் தரிசித்தபோது, வில்வமாலை ஒன்றைத் தாம்பாளத்தில் வைத்துச் சுவாமிகளிடம் கொடுத்தோம். சுவாமிகள் மிகுந்த அன்போடு அந்த வில்வ மாலையை எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டு புன்முறுவல் பூத்த காட்சி, இன்னும் நினைவில் நிற்கிறது. அவருடைய அருளாசி பெற்றவரான இக்கோயிலின் சாமியாடியோ, திருவிழாவின் ஆறாவது நாளன்று, கறுப்பண்ண சுவாமி ஆவேசித்து அருள்வாக்குக் கூறு முன்னர், தம் முன் வைக்கப் பெறும் அனல் பறக்கும் தீக்கங்குகளை ஆசையோடு அள்ளித் தலையிலும், உடம்பிலும் கொட்டிக் கொள்வாராம். நெருப்புக் குறைவாக இருந்தால் சுவாமி அதை ஏற்றுக் கொள்வதில்லையாம்! இந்த ஆறு நாட்களும் ஊரே திருவிழாக் கோலம் பூண்டிருக்குமாம்.



அம்மையார் கண்ட அலகு நிறுத்தல்
நன்றி: Yuko Nishimura | தமிழண்ணல்

அன்னையை வழிபட்ட பின்னர், அன்னையின் வலப்புறமுள்ள மலையாளக் கறுப்பர் சந்நிதிக்குச் செல்கிறோம். இச்சந்நிதியும் முழுமையாகக் கல் திருப்பணி செய்யப்பெற்றதே. மலையாளக் கறுப்பரும் அவரது இடப்புறம் சின்னக்கறுப்பரும் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகின்றனர். மலையாளத்திலிருந்து மண் எடுத்து வந்து இந்தக் கறுப்பரைப் பிரதிஷ்டை செய்ததாகச் சொல்வார்கள் என்று பூசாரி கூறுகிறார். கறுப்பரின் வலப்புறம் ஆஞ்சநேயர் வடக்கு நோக்கி நிற்கிறார்.

தென் பிராகாரத்தில், ஏகாம்பரநாதர், இருளப்பர், மயானக் கறுப்பர், இராக்காயி, பேச்சி, ஏகாத்தாள் ஆகியோர் உள்ளனர்.

புதிய திருப்பணி நேரத்தில் ஏகாத்தாளும், ஆஞ்சநேயரும் மேற்குப் பிராகாரத்தில் உள்ள புதிய சந்நிதிகளுக்குப் போய்விடுவார்களாம். இராங்கியத்தில் உள்ள ஏகாத்தாளும், இங்குள்ளவரும் ஒருவர் தாமா என்பது யாருக்கும் தெரியவில்லை. ஆனால் சொல்லப் பெறும் கதை சிறிது மாறுபட்டதாக இருக்கிறது. குழிபிறை நகரத் தார் குடும்ப அம்மையாரான இவர், மழை நேரத்தில் கோயிலின் முன்னால் உயிர் துறக்க நேரிட்டதாம். அதைத் தொடர்ந்து குழி பிறை நகரத்தார்கள் அவருக்குச் சிலை வைத்துச் சிறப்பாக வழி பட்டு வருகிறார்களாம்.

வடக்குப் பிராகாரத்தில் சப்த மாதர், சடை முனியாண்டி, காளி யாத்தாள், காட்டேரி அம்மன் ஆகியோர் ஒரு சந்நிதியிலும், அன் னையின் கருவறையை ஒட்டித் தெற்கு நோக்கி வீரபத்திரரும் இடம் பெற்றுள்ளனர்.

* * *

நகரத்தார் வீடுகளில் நடைபெறும் திருமணங்களுக்கு மாலை — காளாஞ்சி கொண்டு சென்று கொடுப்பது உண்டு என்றும், பிள்ளை பிறந்தால் முப்பதாவது நாள் தாய் — சேயை இங்கு அழைத்து வந்த பின்னரே வேறு இடங்களுக்குச் செல்வர் என்றும், பிள்ளை களுக்கு முடி இறக்குவது, தொட்டில் கட்டுவது, பெயர் கூப்பிடுவது எல்லாம் இங்கு நடைபெறுகின்றன என்றும் பூசாரி கூறுகிறார்.

தாம் அணிந்திருந்த, காஞ்சிப் பெரியவரின் ஆசி பெற்ற கௌரி சங்கம், திருட்டுப் போய்ப் பல நாட்கள் கழித்துச் சிறிதுகூடச் சேத மின்றித் திரும்பக் கிடைக்கப் பெற்றதற்கு, அன்னையின் திருவரு ளும், கறுப்பையாவின் கருணையுமே காரணம் என்று சொல்லிச் சொல்லிக் கண்ணீர் உகுக்கிறார் பாட்டையா பூசாரி.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

ஈசன் அறியும் இராப்பக லும்தன்னைப்
பாசத்துள் வைத்துப் பரிவுசெய் வார்களைத்,
தேசுற்(று) அறிந்து செயலற்(று) இருந்திடில்,
ஈசன்வந்(து) எம்மிடை ஈட்டிநின் றானே.

திருச்சிற்றம்பலம்

— 10 ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

— அண்டத்தவர் — உலகத்தவர்

1. The sword stands poised there for more than two minutes before it falls to the ground... The author witnessed the above in 1985 — A study on Mariamman worship in South India by Yuko Nishimura, 1987
2. ஆ.ஏ.நா. பாட்டையா பூசாரி, இளையாற்றங்குடி
3. க்ஷேத்திராஞ்சலி — ஸரோஜினி ஜகந்நாதன்;
கோயில் திறந்திருக்கும் ஆறு மாதங்களின் விடியற்காலை நேரத்தில் மட்டுமே, புத்தர் போன்ற தோற்றத்தைக் கொண்ட பத்ரி நாராயணனின் முழு உருவத்தைக் காணமுடியும்

உ

பண்ணார் இன்தமிழே, பணிச்சாருடை ஐயனே!

(67. பணிச்சாருடையவர் ஐயனார் திருக்கோயில், செண்பகம்பேட்டை)

(இக்கோயிலுக்கு 14.06.94ல் சென்றிருந்த போது, திருக்குட நீராட்டு நடத்தத் தீர்மானிக்கப்பெற்றுள்ளது என்று கூறினர். 09.09.94ல் இக்கோயிலின் திருக்குட நீராட்டு நடைபெற்றதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறோம். இருப்பினும், இங்கு குறிப்பிடப் பெற்றுள்ள தக வல்கள், திருக்குட நீராட்டுக்கு முன்னர் சென்று வந்தபோது காணப் பெற்றவையே என்பதை மனத்திற் கொள்ளவேண்டுகின்றேன்.)


இளையாற்றங்குடியிலிருந்து நான்கு கி.மீட்டரில் இரணியூர் செல்லு முன்னர் உள்ள செண்பகம்பேட்டையில் அமைந்திருக்கும் பணிச் சாருடையவர் ஐயனார் கோயிலுக்கு இப்போது செல்கிறோம். கண்டவராயன்பட்டி — இரணியூர் சாலையில் 5 கி.மீ சென்று, (இரணியூர்க் கோயிலுக்கு முன்னால் உள்ள இடப்புறச் சாலையில் திரும்பிச்) செண்பகம்பேட்டை கிராமத்தை அடைந்து, கண்மாய்க் கரையை ஒட்டிச் சென்றால், இந்தக் கோயிலை அடையலாம்.

கண்மாய்க்கரையை ஒட்டி அமைந்துள்ள இக்கோயிலில் மதிற்சுவர் ஏதும் இல்லை. ஆங்காங்கே ஓட்டுக்கூடங்கள்; கருவறையும், மூலி மலையான், மற்றும் சின்னக் கறுப்பர், பெரிய கறுப்பருக்குரிய சந்நிதிகளும் கல் திருப்பணி செய்யப் பெற்றுள்ளன.

கண்டவராயன்பட்டி (இளையாற்றங்குடிக் கழனிவாசற் பிரிவினர் — 52 புள்ளிகள்), காரைக்குடி, குழிபிறை, வலையபட்டி (20 புள்ளிகள்) ஆகிய ஊர்களின் நகரத்தார்கள்[1] குலதெய்வமாகக் கொண்டுள்ள இந்தப் பணிச்சாருடை(யவர்) ஐயனார், பெயருக் கேற்ப அழகிய வேலைப்பாடு நிறைந்தவர்தாம். (பணி — அணி கலம், வேலைப்பாடு; சாரு — அழகு). மூலவரும், தேவியர் இரு வரும் அருமையான வேலைப்பாடு நிறைந்த சிலா வடிவங்கள். களை மிகுந்த ஐயனாரின் திருமுகம், நம்மை அவருடைய சந்நிதி யிலேயே நிற்க வைக்கிறது.

கல் திருப்பணியான கருவறையின் விமானம், 1970ல் கட்டப் பெற்றுத் திருக்குட நீராட்டு நடைபெற்றதாம். 1970க்கும், 1930க்கும்

இடைப்பட்ட நாற்பதாண்டுக் காலத்தில், இருமுறை குடமுழுக்கு நடைபெற்றிருக்கிறது என்றும் கூறுகின்றனர்.[2] முப்பது ஆண்டு களுக்கு முன்னர் ஒருமுறை மட்டுமே குடமுழுக்கு நடைபெற்றிருக் கிறது என்று சொல்லப் பெறுவது,[3] அர்ச்சகர்கள் கூறும் எழுபது களில் நடைபெற்ற குடமுழுக்காகவே இருக்கவேண்டும்.



காலம் யாருக்கும் காத்திருப்பதில்லை

கோயிலைப் புதுப்பித்து இயந்திரத் தகடுகள் வைத்து, மீண்டும் குடநீராட்டு நடத்த நகரத்தார்கள் முடிவு செய்திருக்கிறார்களாம்.[4] (09.09.94ல் திருக்குட நீராட்டு நடைபெற்ற தகவல் முதலில் குறிப் பிடப்பெற்றிருக்கிறது.) மூலவர் மட்டுமே தொடக்கத்திலிருந்து கற் சிலையாக இருந்து வருகிறார். மற்ற பரிவார தேவதைகள் மண் சிலைகளாக இருந்து, படிப்படியாக மாற்றங்கண்டு வருகின்றன. இங்குள்ள ஏராளமான பரிவார தெய்வங்களில் இன்னமும் சில சிலைகள், மண் சிலைகளாகவே இருந்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இது போன்றே கருவறையும், அருகில் உள்ள மண்டபமும் மட்டுமே முதலில் இருந்தன என்றும், மற்ற கூடங்கள் நாளடைவில் ஒவ்வொன்றாக உருவாயின என்றும் அர்ச்சகர்கள் கூறுகின்றனர்.

மூலவர் பணிச்சாருடையவரின் வேலைப்பாட்டிலேயே மெய்ம் மறந்து விடாமல், கோயிலைச் சுற்றிப் பார்த்து வருவோமா? கோயி

லின் முன் உள்ள குளத்திலிருந்து தொடங்குவோமே? இந்தக் தல்லுக்கட்டி ஊருணி, வலையபட்டி நகரத்தார்களின் அறப்பணி.

குளத்தின் அருகிலுள்ள ஓட்டுக்கூடத்தில் மதுரைவீரன், பொம்மி, வெள்ளையம்மாள் மூவரும் காணப்பெறுகின்றனர். ஒருத்தி (தேவகி) மகனாய்ப் பிறந்து, ஒருத்தி (யசோதை) மகனாய் வளர்ந்த கண்ணனைப் போன்று, காசி மன்னனின் மகனாகப் பிறந்து (பிறக்கும் போதே மாலையுடன் பிறந்ததால்) சக்கிலியர் குடும்பத்தில் வளர்ந்தவர் மதுரைவீரன். பொம்மநாய்க்கன் மகள் பொம்மியை மணந்த பின்னர், வெள்ளச்சியை மணந்த நேரத்தில் அரசனால் கைகால் வாங்கப்பெற்று, மனைவியர் தீக்குளிக்கவே, தாமும் மீனாட்சி சந்நிதியில் உயிரைப் போக்கிக் கொண்டவர். வீரர்க்குக் கல் நாட்டுவது போல், இவரையும் கல்லில் பதித்து வழிபட்டு வருகின்றனர்.[5] தொட்டியர், மற்றும் சில இனத்தவரின் குலதெய்வம் என்று இவர் கருதப் பெறுகிறார்.[6] மூதாதையர் வழிபாட்டை ஒரு பகுதியாகக் கொண்ட குலதெய்வக் கோயில்களில், இந்த மூவரின் சிலைகள் இடம்பெறுவதில் வியப்பில்லை.

இவர்களைக் கடந்து செல்லும்போது, இங்குள்ள ஒற்றைச் சேமங் குதிரையைக் காண்கிறோம். வடக்கு நோக்கியுள்ள இந்தப் பெரிய சேமங்குதிரை, ''இப்போது உதவான் அவன்'' என்று சிறுத் தொண்டர் கூறியது[7] போன்று, ஐயனாருக்கோ, கறுப்பருக்கோ அமயம்சமயத்திற்கு உதவாது! காரணம் முன்கால்கள் இரண்டையும் யாருக்கோ கடன் கொடுத்துவிட்டது போலும்! 30 ஆண்டுகள் என்பது நீண்ட கால இடைவெளிதானே!

இதனையடுத்து மேற்கூரை இல்லாத பீடத்தில் சோனையனும், தொட்டிச்சியும் உள்ளனர். அடுத்துள்ள நடுத்தரமான ஓட்டுக்கூடத்தின் முன்னால் இருபுறமும் இருபூதங்கள் உள்ளன. இந்தக் கூடத்தின் நடுவில் சாம்பிராணிக் குண்டம் இருக்கிறது.

இதைக் கடந்து உள்ள ஓட்டுக்கூடத்தின் இருபுறமும்தான் பரிவார தேவதைகளில் பெரும்பாலோர் இடம் பெற்றுள்ளனர். தெற்கில் உள்ள கல் மண்டபத்தில் பத்ரகாளி, அகோர வீரபத்திரர், நொண்டிக் கறுப்பர், துந்துபி, பேச்சி, இராக்காயி, சின்னக் கறுப்பர், நல்லதங்காள், பெரிய கறுப்பர், முத்துக்கறுப்பர், சடாமுனி ஆகியோருடன், கண்டவராயன்பட்டி மூக்கன் செட்டியார் சிலையும் காணப்பெறுகிறது. முதலில் ஓட்டுக்கூடமாக இருந்த இந்த மண்டபத்தை முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் (குடமுழுக்கு விழா நேரத்திலாக இருக்கலாம்) வலையபட்டி நகரத்தார் குடும்பத்தினர் கல்திருப்பணி செய்துள்ளனர்.[8]

இந்த ஓட்டுக்கூடத்தின் மறுபுறம் (வடக்கே) இளையகறுப்பர், நவரக் காளி, கந்தராண்டி, வௌத்தாடி, மண்சிலைகளான சாம்பிராணிக் கறுப்பர், வெள்வூறிக் கறுப்பர், குங்குலியக் கறுப்பர், கற்சிலையான பைரவர், மீண்டும் மண்சிலையான முன்னோடி ஆகியோர் உள்ளனர். இந்தக் கறுப்பர்களில் பெரும்பலரை, வெளியூர்களிலிருந்து வரும் ஊரார், தத்தம் குலதெய்வங்களாக வழிபடுகின்றனராம்.[9]

இதையடுத்துத்தான் கருவறை உள்ளது. கருவறையின் முன்னால்

உள்ள அஸ்பெஸ்டாஸ் கூடத்தில், பீடத்தின்மீது யானை வாகனமும், பலிபீடமும் வைக்கப்பெற்றுள்ளன. கருவறை வாயிலின் இரு புறமும் துவார பாலகரும், விநாயகர் — சுப்பிரமணியரும் இடம் பெற்றுள்ளனர். கருவறையின் வலப்புறம் (தெற்கில்) உள்ள கல் மண்டபத்தில், மண்சிலையான கன்னிமார் எழுவரும், கற்சிலைகளான ஆண்டி, மூலிமலையான், அரசு, ஆஞ்சநேயர் ஆகியோருடன், ஒரு விநாயகரும் உள்ளனர். இந்த மண்டபம் கண்டவராயன்பட்டிக் குடும்பத்தாரின் திருப்பணியாகும்.[10]

★ ★ ★

நகரத்தார் சிவராத்திரிக்கு அடுத்தநாள் அமாவாசையன்று இங்கு வந்து வழிபடுவது உண்டு. நிறைய அபிஷேகங்கள் செய்து, கறுப்பருக்கும், நல்லதங்காளுக்கும் உயிர்ப்பலி கொடுத்து வழிபடுவார்களாம். அந்த நாளில் பிள்ளைகளுக்கு முடியிறக்கித் தொட்டில் கட்டுகின்றனர்.[11]

நகரத்தார்களே மின்வசதி செய்து கொடுத்துக், கண்டவராயன்பட்டிக் குடும்பத்தார் மின் கட்டணங்களைச் செலுத்தி வருகின்றனராம்.

இக்கோயிலில் திருவிழா என்று ஏதுமில்லை என்றாலும், ஆண்டுதோறும் ஊரார் சித்திரை அல்லது வைகாசி மாதத்தில் அபிஷேக ஆராதனைகள் செய்கின்றனர் என்றும், ஈராண்டுகளுக்கு ஒருமுறை,



ஐயனே! நின்னடி பணிந்துய்வோம்!

சித்திரை அல்லது வைகாசி மாதத்தில் புரவி எடுப்பு நிகழ்கிறது என்றும் சொல்லப்பெறுகிறது.[12]

* * *

இந்து அறநிலையத் துறைக் கோயிலான இங்கு காலையிலோ, மாலையிலோ, ஒருமுறை பூசை நடைபெறுகிறது. பேருந்தில் இங்கு வர நினைப்பவர்கள், சிங்கம்புணரி — கீழச்சிவற்பட்டிப் பேருந்தில் வந்து செண்பகம்பேட்டையில் இறங்கிக் கொள்ளலாம். பின்னர், நடந்துதான் கோயிலுக்குச் செல்லவேண்டும். எப்படிப் பயணம் செய்தாலும் செண்பகம்பேட்டையில் அர்ச்சக வேளார்கள் வீட்டில் விசாரித்துத், தேவையானால் முறைகாரரை உடன் அழைத்துச் செல்வது நல்லது.

வேறு சில கோயில்களைப் போன்று, இங்கும், திருக்குட நீராட்டுக்குப் பின்னர், நித்தியப்படிப் படித்தரத்துக்காக, ஆண்டுக்கொரு நாள் வழிபாட்டுக்கான கட்டளை நிதி சேர்க்கத் திட்டமிடுகின்றனர்.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

கூற்றைவென்(று), ஆங்(கு)ஐவர் கோக்களை
யும்வென்றிருந்(து), அழகால்
வீற்றிருந் தான்பெருந் தேவியும்
தானும்,ஓர் மீனவன்பால்
ஏற்றுவந்(து) ஆருயிர் ஆண்ட
திறல்ஒற்றைச் சேவகனே,
தேற்றம் இலாதவர், சேவடி
சிக்கெனச் சேர்மின்களே!

திருச்சிற்றம்பலம்

— 8.ஆம் திருமுறை'

குறிப்பு விளக்கம்:

1. அ. வல்லநாட்டான், கண்டவராயன்பட்டி; அர்ச்சகர்கள்: பூ.உ. சின்னையா வேளார், மு. கறுப்பையா வேளார், உ. கிருஷ்ண வேளார், செண்பகம் . பேட்டை
2. அர்ச்சகர்கள்
3. எஸ்.ஓ.ஆர்.எம். கணபதி செட்டியார், திருச்சி
4. அர்ச்சகர்கள், எஸ்.ஒ.ஆர்.எம். கணபதி செட்டியார்
5. அபிதான சிந்தாமணி
6. தமிழ்மொழி அகராதி
7. 'அவன் (சீராளன்) இப்போது உதவ மாட்டான்' என்று சிறுத்தொண்ட நாயனார் உண்மைக்கு மாறுபடாமல் கூறிய நயம் — பெரிய புராணம்
8. எஸ்.ஓ.ஆர்.எம். கணபதி செட்டியார்
9. அர்ச்சகர்கள்
10. அ. வல்லநாடடான்
11. எஸ்.ஓ.ஆர்.எம். கணபதி செட்டியார்
12. அர்ச்சகர்கள், எஸ்.ஓ.ஆர்.எம். கணபதி செட்டியார்

உ

புகழில் திகழும் பூசாரி உடையார்

(68. பூசாரி உடைய ஐயனார் (எம்மான் கறுப்பர்) திருக்கோயில், அம்மாபட்டி)

மூர்த்தி சிறியதானாலும் கீர்த்தி பெரியது என்பார்களே, அது இப்போது நாம் வந்திருக்கும் அம்மாபட்டி பூசாரி உடைய ஐய னாருக்குப் பொருந்தும்.

மூலவர் சிறிய உருவந்தான்; முறையான கோயில் அமைப்போ, திருச்சுற்றுச் சுவரோ கிடையாது; கருவறையைத் தவிர மற்றவை ஓட்டுக்கூடங்களே; கண்மாய்க் கரையில் சிவனே என்று (தேவியர் இல்லாமல்) அமர்ந்திருக்கிறார்; திருவிழா என்று ஏதும் கிடை யாது; மின்விளக்குகள் இல்லை; திங்கள் — வெள்ளிக்கிழமை களில் மட்டுமே ஒருகாலப் பூசை நடைபெறுகிறது: சிவராத்திரிக் குக் கூடச் சூரக்குடி மக்கள் மட்டுமே வந்து வழிபடுவர்; இருப் பினும், தம் கோயிலுக்கு அடிமைப்பட்ட இராங்கியம் (நேமங் கோயிலார்), உலகம்பட்டி, வேந்தன்பட்டி நகரத்தார்களைக் காலந் தவறாமல் கோயிலுக்கு வரவழைத்து விடுவார்.[1] அம்மாபட்டி யானை (இங்குள்ள பெரிய கறுப்பரான எம்மான் கறுப்பரை இப் படித்தான் செல்லமாக அழைக்கின்றனர்.) அனுப்பி, அவர்களுக்கு நினைவூட்டி விடுவாராம்!

காளையார் மங்களம் சந்தனக் கறுப்பையா கோயிலுக்குச் சென் றிருந்த போது குறிப்பிட்டேனே, அது இந்தக் கோயில்தான். இந்த ஐயனாரையும், கறுப்பரையும் வெகுவாகக் கொண்டாடும் இராங் கியம் பங்காளிகள், குறிப்பிட்ட நாட்களில் வரத் தாமதமானால், அவர்களின் வீடுகளில் சாம்பிராணி மணம் கமழுமாம்!

* * *

செண்பகம்பேட்டை பணிச்சாருடையவர் ஐயனார் கோயில் வேளார் களே இங்கும் பூசை முறைக்காரர்கள்; எனவே, முன்னே குறிப் பிட்ட திங்கள் — வெள்ளி தவிர்த்த மற்ற நாட்களில் இக்கோயிலுக்கு வர நேர்ந்தால், அர்ச்சக வேளாரை அழைத்து வந்து விடவேண்டும்.

செண்பகம்பேட்டையிலிருந்தே இக்கோயிலுக்குச் சென்று விடலா மானாலும், முதலில் இக்கோயிலுக்குச் செல்வோருக்கான வழி, திருப்புத்தூர் — கீழச்சிவற்பட்டிச் சாலையில், சிறுகூடல்பட்டி

விலக்கில் திரும்பி, அம்மாபட்டி கைகாட்டி உள்ள இடத்தில் மீண்டும் திரும்பி 2 கி.மீ செல்லவேண்டும். அம்மாபட்டி ஊரை அடைந்ததும், அங்குள்ள கண்மாய்க்கரை வழியே 1 கி.மீ. சென்றுதான் கோயிலை அடையவேண்டும். கோயிலுக்குச் செல்லும் வழியிலேயே, இடப்பக்கம் கரை இறக்கத்தில் செங்கிடாய்க் கறுப்பர் இருக்கிறார். அவரைப் பின்னர் தரிசிப்போமே!



பனைபழம் படும்இடம் தேவர்கள் தங்குமிடம்

பனை மரங்கள், மற்றும் ஏராளமான மரங்கள் சூழ்ந்திருக்க, நான்கு புறமும் திறந்ததான ஓர் ஓட்டுக்கூடம் காணப்பெறுகிறது. அதன் முன்னால் இருபுறமும் துவாரபூதங்கள். கூடத்தின் நடுவில் யானை வாகனமும், பலிபீடமும் உள்ளன. ஓட்டுக்கூடத்தை ஒட்டிக் கல் திருப்பணி செய்யப்பெற்ற கருவறை அமைந்திருக்கிறது. இது எப்போதுமே இப்படியேதான் இருந்துவருகிறது என்று அர்ச்சகர்கள் கூறுகின்றனர். நுழைவாயிலின் இருபுறமும் துவாரபாலகர் நிற்கின்றனர். அர்த்த மண்டபத்தில் சிறிய விநாயகரும், நாகலிங்கமும் இடம்பெற்றுள்ளன. அழகிய விமானத்துடன் கூடிய கருவறையில், சிறிய உருவிலான பூசாரி உடைய ஐயனார் அமர்ந்து அருள் பாலிக்கிறார்.

விரைவில் திருக்குட நீராட்டு நடைபெறவிருப்பதாக, நாங்கள் சென்றிருந்தபோது (14.06.94) கூறினர். இதற்கு முன்னர் 05.06.81ல்


இரண்டாவது குடமுழுக்கு நடைபெற்றிருக்கிறது. அதற்குப் பத்து ஆண்டுகளுக்கு முன்னர்(?) முதற் குடமுழுக்கு நடந்திருக்கலாம் என்று அர்ச்சகர்கள் கருதுகின்றனர்.

முன்பு குறிப்பிட்ட இராங்கியம், உலகம்பட்டி, வேந்தன்பட்டி நகரத்தார்கள் இந்த ஐயனாரையும் எம்மான் கறுப்பரையும் குலதெய்வமாகக் கொண்டிருந்தாலும், அனைவரும் சேர்ந்து வந்து வழிபடுவது கிடையாதாம். ஆண்டுக்கொரு முறை சித்திரை மாதத்தில் ஒரு வெள்ளிக்கிழமையன்று, ஊரார், பூசை போட்டுச் சிறப்பு வழிபாடு செய்கின்றனர். மேலும், சித்திரை அல்லது வைகாசி மாதத்தில் புரவி எடுப்பு நிகழ்கிறது. இப்போது அது மூன்றாவது ஆண்டாக நடைபெறுகிறதாம்.

மூலவர் பூசாரி உடைய ஐயனார், விநாயகர், கறுப்பர் திருமேனிகள் மட்டுமே முதலிலிருந்து கற்சிலைகளாக இருந்து வருகின்றன. கும்பாபிஷேக நேரத்தில்தான் மற்றவை கற்சிலைகள்ாக மாற்றப் பெற்றனவாம். அம்மாபட்டி ஊராரின் கோயிலான இங்கு நகரத்தார்களே எல்லாத் திருப்பணிகளையும் செய்துள்ளனர்; மராமத்துகளையும் பார்க்கின்றனர்.

* * *

கருவறையின் வலப்பக்கம் உள்ள ஓட்டுக்கூடத்தின் ஒரு பகுதியில், முன்னோடி, துந்துமி, பேச்சி, இராக்காயி, சின்னக்கறுப்பர், எம்மான் கறுப்பர் எனப்பெறும் பெரிய கறுப்பர், மற்றொரு பகுதியில் முத்துக்கறுப்பர், சந்நியாசி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.



சாம்பிராணியே சகலமும்

எம்மான் கறுப்பர் மிக அழகிய சிலை. வலப்புறம் சரிந்த கொண்டை; முறுக்கிய மீசை; காதில் வளையங்கள்; வலக்கையில் வீச்சரிவாள்; வீரருக்குரிய ஆடை ஆபரணங்கள் — பெயருக்கேற்பப்'பெரிய'' கறுப்பர்தான். அவருடைய வலப்புறத்தில் சிலை உயர அரிவாள் ஒன்று சாத்தி வைக்கப் பெற்றுள்ளது.

இவற்றைப் பார்த்துக் கொண்டு கோயிலுக்கு முன்னால் சிறிது தொலைவில் கரைச் சரிவில் உள்ள செங்கிடாய்க் கறுப்பரைக் காணச் செல்கிறோம். கூரையோ, சிலையோ எதுவுமில்லாமல், மரத்தடியில் கல் மேடையில் சிறியதொரு பீடம் உள்ளது. அதன் பின்னால் பெரியதோர் அரிவாள் காணப்பெறுகிறது; அருகில் சில அரிவாள்களும், வேலும் உள்ளன; செங்கிடாய்க் கறுப்பர் இவரே!

சித்திரை மாதத்தில் ஊரார் அபிஷேகம் செய்யும்போது, இங்கு உயிர்ப்பலி கொடுப்பார்களாம். அது தவிர, சாம்பிராணிதான் இவருக்குப் பிரதானமானது என்று அர்ச்சகர்கள் கூறுகின்றனர். மேடையின் முன்னால் உள்ள சிறிய குண்டத்தில்தான் சாம்பிராணி போடுவார்களாம்.

ஆடம்பரமற்ற — எளிமையான கோயிலானாலும், ஐயனாரும், கறுப்பரும் கீர்த்தி வாய்ந்தவர்கள். 'உருவு கண்டு எள்ளாமை (இகழாமை, நிந்தை செய்யாமை) வேண்டும்' என்னும் தமிழ் மறையை இங்கு நினைவுகூரலாம். தமிழ்நாட்டின் எங்கெங்கோ உள்ள மூலைமுடுக்குகளில் — ஆளரவம் அற்ற இடங்களில், எளிமையான, ஆனால் சக்தி வாய்ந்த கோயில்கள் பல அமைந்திருக்கின்றன. அவற்றில் இந்தப் பூசாரி உடைய ஐயனார் கோயிலும் ஒன்று!

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

வடிகொள் மேனியர், வானமா மதியினர்,
நதியினர், மதுவார்ந்த
கடிகொள் கொன்றையஞ் சடையினர், கொடியினர்,
உடைபுலி அதள்ஆர்ப்பர்,
விடைய தேறும்எம் மான்அமர்ந்(து) இனிதுறை
விற்குடி வீரட்டம்
அடிய ராகிநின்(று) ஏத்தவல் லார்தமை
அருவினை அடையாவே.

திருச்சிற்றம்பலம்

— 2 ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

1. இக்கோயில் பற்றிய எல்லாத் தகவல்களையும் கூறிய கோயில் அர்ச்சகர்கள்: பூ.உ. சின்னையா வேளார், மு. கறுப்பையா வேளார், உ. கிருஷ்ண வேளார், செண்பகம்பேட்டை

உ

பெண்ணின் நல்லாள் பெரிய நாயகி

(69. பெரியநாயகியம்மன் திருக்கோயில், அம்மாபட்டி)

பத்தினிப் பெண்களும், பத்திசேர் பக்தர்களும், மெய்யுணர்வு கைவரப் பெற்ற ஞானியரும் சித்தம் கலங்கும் வகையில் தீமைகள் செய்த கொடியோர், பொருளும் உயிரும் நீங்கி, மீளா நரகில் ஆழ்வர் என்று, நந்தி(சிவன்) மேல் ஆணையிட்டுத் திருமூலதேவர் உரைக்கிறார்.[1]

பட்டி, பட்டணமாயிருந்த காலம். சிறுகூடற்பட்டி, மகிபாலன் பட்டி, இரணியூர், நெடுமரம் ஆகியவற்றுக்கு இடைப்பட்ட பகுதி, அம்மாப் பட்டணமாகத் திகழ்ந்தது அப்போது. இப்பகுதியில் உள்ள மூன்று ஊருணிகளில் ஒன்று, செட்டி ஊருணி என இப்போதும் வழங்கப்பெறுவதால், அந்த நாளில் நகரத்தார்கள் இங்கு வாழ்ந்திருக்கக்கூடும் என நம்பப்பெறுகிறது. அப்போது இங்கு காவல் தெய்வமாகத் திகழ்ந்த செல்லாயி அம்மன், ஊரைப் பார்த்து அமர்ந்திருந்தாள்.

அந்த ஊரில் (நம் கதைக்குத் தேவையான) இரு இளம் பெண்கள்; ஒருத்தி, கூழோ, கஞ்சியோ, உழைத்துக் குடிப்பதில் இன்பம் கண்டவள்; மற்றொருத்தி, மற்றவர்களை மருட்டி — அச்சுறுத்தி — துன்புறுத்தியே வாழ்க்கையை ஓட்டினாள். கூழ் காய்ச்சி வைத்து விட்டு, வேலைக்குச் சென்று திரும்பும் உழைப்பாளிப் பெண்ணுக்குப் பசியைத் தணிக்கக் கூழ் இருக்காது; வெறும் கலயமே இருக்கும். அநியாயக்காரியின் செயலே இது என அறிந்த உழைப்பாளிப் பெண், பஞ்சாயத்தாரிடம் — ஊர்ப் பெரியவர்களிடம் சென்று முறையிட்டாள். தட்டிக் கேட்டால், தங்கள் பல்லையும் தட்டி விடுவாள் அந்தப் போக்கிரி என்பதால், அவளிடம் பேசவே அஞ்சினர் பஞ்சாயத்தார். திக்கற்றவருக்குத் தெய்வமே துணை என்று துணிந்து, செல்லாயியிடம் சென்றாள் நிராதரவான பெண்; கூழ் இருந்த சட்டியை அவள் முன் போட்டு உடைத்தாள்; நீயே கேட்டுக் கொள் என்று கூறிவிட்டு வேற்றூருக்குச் சென்று விட்டாள்.

செல்லாயி சினமுற்றாள்; விளைவு? ஊரே கொள்ளை நோயால் கொள்ளை போய்விடும் போலிருந்தது; அன்னையிடம் அனைவரும் ஓடினர்; மன்றாடினர்; மடிப் பிச்சை கேட்டனர்.

தீட்டிய மரத்திலேயே பதம் பார்க்கும் உலகம் ஆயிற்றே இது! மனம் இரங்கிய அன்னையை, மறுநாளே திசை திருப்பி வைத்து விட்டனர்; அன்னை ''வடக்கு வாசல் செல்லாயி'' ஆகிவிட்டாள்!

21.08.1964ல் இரண்டாவது திருக்குட நீராட்டு[2] நடைபெற்ற நேரத்தில், அவளுக்குக் கட்டாயப் பதவிஓய்வும் கொடுத்துப் பக்கத்தில் வைத்துவிட்டுப், பெரியநாயகியை ஆட்சி பீடத்தில் அமர்த்தி விட்டனர். இப்போது முதுமைப் பிராயத்தில், கருவறைக்கும், கறுப்பர் சந்நிதிக்கும் இடையில், செல்லாயி, சிவனே (சக்திதான் இல்லையே!) என்று அமர்ந்திருக்கிறாள்![3]

அம்மாபட்டி கிராமத்தின் வடபகுதியில் இருக்கும் பெரியநாயகி யம்மன் கோயிலின் பழைய வரலாறு இது. புதுப் பெரியவரை (அன்னை பெரியநாயகியை)த் தரிசித்து வர அங்கு செல்கிறோம்.

* * *

மேலைச்சிவபுரி நேமங்கோயில் பங்காளிகள் (சுமார் 40 புள்ளிகள்[4]) — பெரும்பாலானவர்கள் குடும்பத்தோடு அங்கு வந்திருக்கின்றனர். ஒவ்வோராண்டும் வைகாசிப் பௌர்ணமியன்று இவர்கள் இங்கு கட்டாயம் வந்து விடுவார்களாம். அனைவரும் இரவு இங்கேயே தங்கி, அடுத்த நாள்தான் வீடு திரும்புவார்களாம். நாமும் அவர்களுடன் தங்கியிருந்து அன்னையையும், முத்துக்கறுப்பரையும் வழிபடுவதோடு, கோயில் பற்றிய விவரங்களையும் தெரிந்து கொள்வோமா?

நம்மைப் போன்று யார் வேண்டுமானாலும், இங்கு வந்து வழி படலாம். ஆனால், இக்கோயிலுக்கு அடிமைப்பட்ட நகரத்தார் வீட்டுப் பெண்ணுக்குத் திருமணமான பின்னர், விரும்பினால், மகள் மட்டும் வரலாம்; மாப்பிள்ளை வரக்கூடாது என்று இங்கு ஒரு கட்டுப்பாடு இருக்கிறது.[5]

கணவர் வராமல், நான் மட்டும் வரவில்லை என்று மகள் தெரிவித்தால்? — நமது கேள்வி.

மகளும் வரவேண்டியதில்லை என்று, சுவாமி அழைத்துக் கேட்ட போது சொல்லப்பெற்றது. அதை மீறி நகரத்தார் குடும்பம் ஒன்றில்[6] மாப்பிள்ளையை அழைத்து வந்திருந்தார்கள்; அந்தக் குடும்பம் அவ்வளவு சிறப்படையவில்லை.

கோயில் (திருநீறு, குங்குமப்) பிரசாதத்தைக் கொடுத்தால் போகிறது! — அடியேனுடைய (அசட்டுத்தனமான) ஆலோசனை.

மாப்பிள்ளைக்கு விபூதி பிரசாதம் கூடக் கொடுக்கக்கூடாது என்பது, அன்னையின் ஆணை.[7]

இந்தக் கோயிலுக்கு மேலைச்சிவபுரி நேமங்கோயில் பங்காளிகள் மட்டும்தான் அடிமைப்பட்டவர்களா?

அரிமழம், கடியாபட்டி, கானாடுகாத்தான், கோட்டையூர், கோனா பட்டு, நேமத்தான்பட்டி, பள்ளத்தூர் ஆகிய ஊர்களின் இரணிக் கோயில் பங்காளிகளும், பெரியநாயகியையும், முத்துக்கறுப்பரையும் குலதெய்வமாகக் கொண்டிருக்கிறார்கள்.[8]


அவர்களில் யாரையும் இங்கு காணோமே?

அவர்களை ஏழூர் இரணிக்கோயில் பங்காளிகள் என்று சொல்வார்கள். அவர்கள் ஆடிப் பௌர்ணமி நாளன்று இங்கு வந்து, இரவில் உயிர்ப்பலி கொடுத்து வழிபடுவார்கள். இப்போது வந்துள்ள மேலைச்சிவபுரி நேமங்கோயில் பங்காளிகள் வழிபடும் போது, (உயிர்ப்பலி இல்லாத) சுத்த பூசைதான். இரு கோயில் காரர்களும் சேர்ந்து வந்து வழிபடுவதில்லை.[8]

சுத்த — அசுத்த(பலி) பூசைதான் இதற்குக் காரணமாக இருக்குமோ? — யாரும் இதற்கு மறுமொழி சொல்லவில்லை.

திருக்குட நீராட்டினை எல்லோரும் சேர்ந்தே செய்திருக்கிறார்கள். இரத்தாட்சி ஆவணி 3ல்(ஆகஸ்ட் 1924), முதல் குடமுழுக்கினை, மேலைச்சிவபுரிப் பங்காளிகள் முன்னின்று நடத்தினராம். இரண்டாவது திருக்குட நீராட்டினை 21.08.64ல், ஏழூர்ப் பங்காளிகள் — குறிப்பாகப் பள்ளத்தூர் நகரத்தார் முன்னின்று நடத்தியிருக்கின்றனர். மூன்றாவதாக 29.08.1991ல் நடைபெற்ற கும்பாபிஷேகத்தினை, இரு தரப்பினருமே சேர்ந்து (மொத்தம் ஏறத்தாழ 190 புள்ளிகள் இருக்கக்கூடும்) செய்திருக்கிறார்கள்.[9]

இந்த நேரத்தில் மேலைச்சிவபுரி நகரத்தார்கள் எங்கோ புறப்பட ஆயத்தமாகின்றனர். முதலில் கண்மாய்க்கரையில் உள்ள ஐயனார் கோயிலில் (செண்பகம்பேட்டை பணிச்சாருடையவர் கோயிலாக இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது.) பகல் நேரத்தில் அபி



பெற்றி பிறர்க்கரிய பெரியநாயகி கோயில்

ஷேக ஆராதனைகள் செய்து வழிபடுவோம்; சந்திரன் உதயமான தும்தான் இங்கு வழிபாடு தொடங்கும்.[10]

* * *

அவர்கள் ஐயனார் கோயிலுக்குச் சென்று வருவதற்குள், நாம் கோயிலைச் சுற்றிப் பார்த்து வந்துவிடலாமா?

பெரிய கோயில் வளாகம். ஆனால் திருச்சுற்றுச் சுவர் ஏதும் கிடையாது. மதிள் சுவர் கட்ட வேண்டாம் என்று அன்னை ஆணையிட்டு விட்டாளாம்.[11] முட்கம்பி மட்டும் கொண்டு பாதுகாக்கப் பெற்றிருக்கிறது. கோயிலின் இடப்புறம் பெரியதொரு குளம் உள்ளது.

இந்தக் குளத்தின் தெற்குக் கரையில், மரத்தடியில் உள்ள பிள்ளையாரும் இக்கோயிலைச் சேர்ந்தவரே. அவருக்கும் வழிபாடு உண்டாம். வடக்குப் பார்த்த அன்னையின் கருவறையும், மேற்குப் பார்த்த கறுப்பர் சந்நிதியும் ஓட்டுக்கூடம் ஒன்றினால் இணைக்கப் பெற்றுள்ளன. பெரியநாயகி சந்நிதிக்கு எதிரில், ஒரு தகரக்கூடம் உள்ளது. அதில் ஓமகுண்டம் கட்டப் பெற்றிருக்கிறது.

பெரியநாயகியின் கருவறைக்கு எதிரில் ஓட்டுக்கூடத்தில் உள்ள மேடையில் சிம்மவாகனமும், பலிபீடமும் உள்ளன. சாக்த வழிபாட்டு முறையைச் சிம்மவாகனம் குறித்து நிற்கிறது. கல் திருப்பணி செய்யப்பெற்ற கருவறை நுழைவாயிலின் இருபுறமும் துவார சக்தியர் காணப் பெறுகின்றனர். கிழக்கில் உள்ள துவார சக்திக்கு முன்னால் மேலும் ஒரு பலிபீடம் உள்ளது.

அர்த்த மண்டபத்தில், கருவறையின் இருபுறமும் பலிபீடங்களும், மேற்கில் நாகலிங்கமும் விநாயகரும் உள்ளனர். அழகிய விமானத்தைக் கொண்ட கருவறையில், பெரியநாயகி!— சிறிய திருவுருவம்; சேர்ந்தோரைத் தன்மயமாக்கும் தோற்றம்!

அம்பிகையைத் தனியே வழிபடுவதால், சிவம் வேறு, சக்தி வேறு என்று பேதப்படுத்தி விடலாகாது. அவனுடைய கருணைக்குத் தனி உருவம் கொடுத்து, ‘அம்மா’ என்று அழைத்து வழிபடுவதில், மக்கள் மனநிறைவு பெறுகிறார்கள்.[12] தந்தையைவிடத் தாயிடம் தானே பிள்ளைகள் மனந்திறந்து பேசமுடிகிறது; தங்கள் மனக் குறைகளை ஒளிவு மறைவில்லாமல் தாயிடம்தானே சொல்லமுடிகிறது!

64ஆம் ஆண்டுக்கு முன்னர் அம்பாள் கோயிலும் (கருவறை) ஓலைக்கூடமாகவே இருந்திருக்கிறது. அம்பாளே கோயில் கட்டுமாறு நகரத்தார்களைப் பணித்தாளாம்.[13] அப்போதுதான் ‘‘செல்லமான ஆயி(அன்னை)’’,பெரிய‘‘நாயகி’’ ஆகியிருக்கிறாள்! அண்மையக் கும்பாபிஷேகத்தின்போது திருப்பணி வேலைகள் நடைபெற்ற நேரத்தில், அன்னையை அந்த இடத்திலிருந்து எடுத்துப் பாலஸ்தாபனம் செய்ய முடியாமல் போனதால், அந்த இடத்தில் வைத்தே வேலைகள் நடைபெற்றனவாம்.[14] நம்மையும் இந்தப் பொல்லாத மனிதர்கள் மாற்றி விடுவார்களோ என்று அன்னை அஞ்சி விட்டாளோ? (இந்தக் கூற்றை யாரும் தவறாகப் பொருள் கொண்டுவிடக் கூடாது.)

ஆடிப் பௌர்ணமியன்று, இங்கு சண்டி ஹோமம் நடக்கிறது. சாக்த வழிபாடு பிரபலம் அடைந்ததைத் தொடர்ந்து நடைமுறைக்கு வந்ததே இந்தச் சண்டி ஹோமம். சாக்தேயர்கள் (சக்தி உபாசகர் கள்), இந்த யாகம் விரைந்து பலன் அளிக்கக்கூடியது என்பர்.

பராசக்தியின் ஆயிரத்தில் ஒரு கூறு ஞானசக்தி என்றும், ஞான சக்தியின் ஆயிரத்தில் ஒரு கூறு கிரியா சக்தி என்றும், கிரியா சக்தியின் ஆயிரத்தில் ஒரு கூறு இச்சாசக்தி என்றும், அதன் ஆயிரத் தில் ஒரு கூறே மகாமாரி என்றும் சொல்லப்பெறுகிறது. காளி, துர்க்கை, மகாமாரி ஆகியோரைச் சண்டி என்று கூறலாம். கலி காலத்தில் சண்டியும், விநாயகருமே விரைந்து பலன் கொடுப்பர் என்று சொல்லப் பெறுகிறது. எனவே, துர்க்கை, காளி, மாரி யம்மன் போன்ற க்ஷூத்ர தேவதை (கோரவடிவம் கொண்ட கோப மான மூர்த்தங்கள்) களுக்குச் செய்யப் பெறுவதே இந்தச் சண்டி ஹோமம். சிவாகமப்படி வழிபாடு நடைபெறும் கோயில்களில் இது செய்யப் பெறுவதில்லை. இந்த யாகத்தை அஷ்டமி, நவமி, சுக்லபட்ச சதுர்த்தசி ஆகிய நாட்களில் செய்வது சிறப்பானது. ஏவல், பில்லி, சூனியம் ஆகியவற்றால் பாதிக்கப்பெற்றோர், பதவி இழந்தோர், எதிரிகளால் துன்புறுவோர், பாலாரிஷ்ட தோஷமுள் ளோர் போன்றவர்கள் இதனைச் செய்து நிவர்த்தி பெறலாம். சுரத மகாராஜா என்னும் சூரிய வம்சத்து அரசன் (தசரதனுக்குப் பல தலைமுறை முந்தியவன்) எதிரிகளிடம் நாட்டை இழந்து தவித்த போது, இந்தச் சண்டி ஹோமத்தைச் செய்து இழந்த நாட்டைத் திரும்பப் பெற்றான் என்பர். இது, வட நாட்டில் மிகச் சிறப்பாகச் செய்யப்பெறுகிறது.[15]

ஆடிப் பௌர்ணமியன்று இங்கு வரும் இரணிக்கோயில் (ஏழூர்ப்) பங்காளிகள், கையில் குழந்தையுடன் கூடிய ஒரு பதுமையைக் கொண்டு வந்து சேலைகள் விரித்துப் படுக்க வைத்து வழிபடுகின் றனர்.[16] இது பற்றிய விளக்கம் யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. (ஏழூர்ப் பங்காளிகள் யாரும் தங்கள் கோயிலைப் பற்றிய தகவல் களைக் கொடுக்க முன் வரவில்லையே!)

அன்னையின் வலப்புறம் (கிழக்கே) உள்ள சந்நிதி முத்துக்கறுப்ப ருடையது. முத்துக்கறுப்பர் கோயில் முதலில் மேலைச்சிவபுரிக் குடும்பத்தார் திருப்பணி செய்தது. விமானம் இன்றிச் செங்கற் கட்டடமாகவே அப்போது அது இருந்தது. 1991ஆம் ஆண்டு நடைபெற்ற திருக்குட நீராட்டின்போது, மேலைச்சிவபுரி நகரத் தார்களின் ஒப்புதல் பெற்றுப் பள்ளத்தூர் நகரத்தார், அழகிய விமானத்துடன் கூடிய சீரிய சிமெண்ட் கட்டடம் கட்டித் திருப் பணி செய்தனர்.[17]

இந்த இரு சந்நிதிகளுக்கும் இடையில் உள்ளதொரு சந்நிதியில் இரு விநாயகர் சிலைகளும், நாகரும் சப்த கன்னியரும் உள்ளனர். எல்லாச் சந்நிதிகளையும் தரிசித்துக்கொண்டு வந்ததும், அர்ச்சகர், அன்னைக்கு நிவேதனம் செய்த அமுதினை வழங்குகிறார். அந்த நேரத்தில் அது தேவாமிர்தமாகத் தித்திக்கிறது! அந்த நேரத்தில், திருமணமாகாத — திருமணமாகிக் குழந்தைப்பேறு இல்லாத பெண்களுக்குத், தேனினும் இனியதொரு தகவலையும் அவர் தெரி விக்கிறார்.

பௌர்ணமியன்று (எந்த மாதமானாலும்) இங்கு வந்து சுவாமி யாடியிடம் திருநீறு பெற்று அணிந்து கொண்டால், கன்னிப் பெண் களுக்குக் கடிமணம் நிகழ்கிறது; தாய்மைப் பேற்றுக்குத் தவிக்கும் பெண்களுக்குக் குழந்தைப் பேறு கிட்டுகிறது! சகோதரிகளே! இன் னும் தாமதமேன்? முயன்று பாருங்களேன்!

உவச்சப் பட்டர்களான இக்கோயிலின் பூசாரிகள், தருகணி என் னும் ஊரிலிருந்து வந்தவர்கள் என்று நம்பப்பெறுகிறது.[18] இந்தக் கோயிலுக்கு அடிமைப்பட்ட நகரத்தார் வீடுகளில் பசு கன்று ஈன் றால் (போட்டால்), முதல் மூன்று நாள் வெண்ணெயைத் தனியே வைத்திருந்து, கோயிலுக்கு வரும்போது கொண்டு வந்து கொடுப் பார்களாம். அம்மாபட்டி அம்பலக்காரர்கள், கன்று போட்ட மாட் டின் முதற்பாலைக், கோயிலில் சந்நிதி முன்னால்தான் கறப்பார் களாம்.[19]

* * *

இந்த நேரத்தில் மேலைச்சிவபுரி நகரத்தார்கள் ஐயனார் கோயிலி லிருந்து திரும்பி வருகின்றனர்.

''அண்ணல் அணிந்துள்ள திருநீற்றின் வெள்ளிய ஒளி போன்று, நீண்ட ஒளிவிடும் நிலா''[20] தன் குளிர்ந்த ஒளிக்கிரணங்களைப் பரப்பி எழுகிறது; நேமங்கோயில் நகரத்தார்களின் பௌர்ணமி பூஜை தொடங்குகிறது. அன்னையின் சந்நிதியில் கும்பம் வைத்து ஜபம் செய்து, பொங்கல் வைத்து, அன்னைக்கும், முத்துக்கறுப் பருக்கும் அபிஷேகங்கள் செய்து, வெண்பொங்கல் படைத்து, இரவு முழுவதும் கண் விழித்துக் கூட்டு வழிபாடு செய்கின்றனர்.

கடந்த திருக்குட நீராட்டுக்குப் பின்னர், அர்ச்சகர்களுக்கு மாதந் தோறும் சம்பளம் வழங்கப்பெறுவதோடு, அன்றாடப் படித்தர மாக எண்ணெய், அரிசி, பருப்பு முதலியவற்றையும் நகரத்தார்கள் வழங்கி வருகிறார்களாம்.[21]

நகரத்தார் வீடுகளில் நடைபெறும் திருமணங்களுக்குக் கடிதம் எழுதி னால், மாலை கொண்டுபோய்க் கொடுப்பார்கள் என்றும், நேர்ந்து கொள்வதைப் பொறுத்துத் தொட்டில் கட்டுவது உண்டு என்றும் சொல்லப் பெறுகிறது. மறுநாள் காலை நடைபெறும் ஏலத்தைத் தொடர்ந்து (ஆடிப்பூசையின் முடிவிலும் ஏலம் நடைபெறுகிற தாம்[22]), மேலைச்சிவபுரிப் பங்காளிகள் புறப்பட ஆயத்தமாகும் போது, அருகில் சாலை ஓரத்தில் குடிகொண்டுள்ள சந்திவீரனைக் காண நாம் செல்கிறோம்.

புளிய மரத்தின் அடியில் உள்ள மேடையின்மீது பலிபீடம் ஒன்று வைக்கப் பெற்றிருக்கிறது. இதனையே சந்திவீரனாக வழிபடுகின் றனர். இவருக்குப் பௌர்ணமியன்று மட்டுமே இளநீர் நிவேதனம் செய்து பூசை நடைபெறுகிறது.[23]

இந்து அறநிலையத் துறைக் கோயிலான இங்கு, நாள்தோறும் நண் பகல் 12 மணிக்குள் ஒருகாலப் பூசை நடைபெறுகிறது என்று தெரிவிக்கும் அர்ச்சகருக்கும், மேலைச்சிவபுரிப் பங்காளிகளுக்கும் நன்றி கூறிவிட்டு, நம் புனித யாத்திரையைத் தொடர்கிறோம்.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

1. பேரொளி யாய பெரிய பெருஞ்சுடர்
சீரொளி யாகித் திகழ்தரு நாயகி
காரொளி யாகிய கன்னிகை பொன்னிறம்
பாரொளி யாகிப் பரந்துநின் றாளே.

திருச்சிற்றம்பலம்

— 10ஆம் திருமுறை

2. முத்துக் கறுப்பர்
மாகாளர் என்றபெயர் மாண்பாகக் கொண்டோய்நீ!
வாகாகக் கையதனில் வடிவாளும் கொண்டோய்நீ!
நீ,கா!என்(று) ஐயனவன் நினைப்பணித்த பான்மையினால்,
ஊர்காவல் கொண்டுநிற்கும் உத்தமனே! பணிகின்றோம்.

— திருக்குட நீராட்டு அழைப்பிதழ்

குறிப்பு விளக்கம்:

1. ''பத்தினி, பத்தர்கள், தத்துவ ஞானிகள்
சித்தம் கலங்கச் சிதைவுகள் செய்தவர்,
அத்தமும் ஆவியும் ஆண்(டு)ஒன்றில் மாண்டிடும்,
சத்தியம் ஈது, சதாநந்தி ஆணையே.'' — 10ஆம் திருமுறை
2. முதல் திருக்குட நீராட்டு, இரத்தாட்சி ஆவணி 3ல் (ஆகஸ்ட் 1924) நிகழ்ந் திருக்கிறது — சொ.ப. சொக்கலிங்கம, மேலைச்சிவபுரி
3. மேலைச்சிவபுரி இராம. மு. தியாகராஜன் செட்டியார் கொடுத்த தகவலை அடிப்படையாகக் கொண்டது
4. இராம.மு. தியாகராஜன் செட்டியார்
5. கா. முத்துக்கறுப்பையா பட்டர், அம்மாபட்டி
6. நன்னெறிக் கோட்பாட்டை ஒட்டி,வேறு விவரங்கள் கொடுக்கப்பெறவில்லை
7. புலவர் மு. சேதுராமன், மேலைச்சிவபுரி
8. கா. முத்துக்கறுப்பையா பட்டர்
9. சொ.ப. சொக்கலிங்கம்
10. இராம.மு. தியாகராஜன் செட்டியார், புலவர் மு. சேதுராமன்
11. புலவர் மு. சேதுராமன்
12. மு. அருணாசலம், ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் மாத இதழ்க் கட்டுரையிலிருந்து
13. கா. முத்துக்கறுப்பையா பட்டர்
14. புலவர் மு. சேதுராமன்
15. சா. சந்திரசேகர் பட்டர், ம. சிவகுமார் பட்டர், மதுரை
16. புலவர் மு. சேதுராமன், இராம.மு. தியாகராஜன் செட்டியார்
17. புலவர் மு. சேதுராமன், கா. முத்துக்கறுப்பையா பட்டர்
18. சொ. ப. சொக்கலிங்கம்
19. இராம.மு. தியாகராஜன் செட்டியார்
20. ''....அண்ணல் வெண் ணீற்றின்
பேரொளி போன்றது நீணிலா....'' — பெரிய புராணம்
21. கா. முத்துக்கறுப்பையா பட்டர்
22. புலவர் மு. சேதுராமன்
23. கா. முத்துக்கறுப்பையா பட்டர்

உ

சிந்தனைக்கும் அரிய செட்டிக் கறுப்பர்

(70. செட்டிக் கறுப்பர் திருக்கோயில், அம்மாபட்டி)

அன்னை பெரியநாயகி கோயிலிலிருந்து சிறிது தூரத்தில் சிறு கூடல்பட்டி செல்லும் வழியில், சாலையிலிருந்து இறங்கி வலப் புறம் சிறிது தொலைவு நடந்து சென்றால், கண்டவராயன்பட்டி, கீழச்சிவற்பட்டி ஆகிய ஊர்களின் இளையாற்றங்குடிக் கழனிவாசற் பிரிவினர் வழிபடும் செட்டிக் கறுப்பர் கோயிலைக் காணலாம்.

காட்டு மரங்கள் சூழ்ந்த பகுதியில், கோயில் அமைப்பே இல்லாத, உருவச் சிலைகளோ, அன்றாட (வாரம் ஒருமுறை, இருமுறைகூட) வழிபாடோ, நிரந்தர அர்ச்சகர்களோ, எதுவுமே இல்லாத கோயில் இது.

மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை, மேற்கூறப்பெற்ற ஊர்களின் பங்காளிகள், பண்டாரங்களை அழைத்து வந்து, இரவில் பலி கொடுத்துப் பூசை நடத்துகின்றனராம்.

சாலையிலிருந்து இந்தப் பகுதிக்குச் செல்லும்போது, திறந்த வெளி ஒன்றைக் காண்கிறோம். சுற்றிலும் மரங்கள் நிறைந்துள்ளன. திறந்த வெளியில் முதலில் மூன்று கற்படிகள் காணப்பெறுகின்றன. அவற்றுக்கு நேரே காஞ்சிரமரம் ஒன்றின் அடியில், கற்பீடம் ஒன்று உள்ளது. அதில் மூன்று அரிவாள்கள் வடக்கு நோக்கி நிறுத்தி வைக்கப் பெற்றுள்ளன. இந்த மேடையும், அரிவாள்களுமே செட்டிக் கறுப்பரைக் குறிப்பவையாக இருக்கவேண்டும்.

பீடத்தின் முன்னால் பெரியதொரு சாம்பிராணிக் குண்டம் காணப் பெறுகிறது. இந்தப் பீடத்தின் இடப்புறம் உள்ள ஒற்றைப் பனை மரத்தின் அடியில் ஒரு கல் பீடமும், கறுப்பர் பீடத்துக்கும், முதலில் நாம் கண்ட மூன்று படிகளுக்கும் இடையில், கறுப்பர் பீடத்தின் இடப்புறம் மற்றொரு பீடமும் உள்ளன. இந்தப் பீடங்களே, வழக்கமாக மற்ற கோயில்களில் காணப்பெறும் சின்னக் கறுப்பர், முன்னோடி ஆகியவையாக இருக்க வேண்டும். இந்தக் கொம்படி ஆலயத்தின் இடப்புறம்(மேற்கே) ஊருணி ஒன்று காணப்பெறு கிறது.



கண்டதெல்லாம் கோயிலென்று....

"கல்லெல்லாம் தெய்வமென்று, கண்டதெல்லாம் கோயிலென்று, அதற்குஒரு வில்வம் வைத்து, அர்ச்சனைகள் செய்துவரும்..." செட்டிமார்களின் செயலுக்கு, இக்கோயில் ஒரு சிறந்த எடுத்துக் காட்டு என்று கூறினால், யாருடைய மனதும் புண்படாது என்று நம்புகிறேன்.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

ஒட்டி ஆட்கொண்டு போய்,ஒளித் திட்ட
உச்சிப் போதனை, நச்சர(வு) ஆர்த்த
பட்டி யைப்,பக லை,இருள் தன்னைப்,
பாவிப் பார்மனத்(து) ஊறும்அத் தேனைக்,
கட்டி யைக்,கரும் பின்தெளி தன்னைக்,
காத லால்கடற் சூர்தடிந் திட்ட
செட்டி அப்பனைப், பட்டனைச், செல்வ
ஆரூ ரானை மறக்கலு மாமே!

திருச்சிற்றம்பலம்

உ

காட்டகத்தே மகிழ்ந்திருக்கும் காட்டுக் கறுப்பையா

(71. காட்டுக் கறுப்பர் திருக்கோயில், எண்ணெயாட்டுப்பாறை, கீழச்சிவற்பட்டி)

இப்போது மற்றுமொரு கொம்படி ஆலயத்துக்குச் செல்கிறோம்.

கீழச்சிவற்பட்டியில் உள்ள சூரக்குடி நகரத்தார் ஏறத்தாழ 160 புள்ளிகளின் குலதெய்வமான காட்டுக் கறுப்பையா, கீழச்சிவற் பட்டியை ஒட்டியுள்ள, உண்மையிலேயே வனாந்திர (காட்டு)ப் பகுதியான எண்ணெயாட்டுப்பாறையில் கோயில் கொண்டிருக் கிறார்.

செட்டிக் கறுப்பரைப் போன்றே இவருக்கும் கோயிலமைப்போ, உருவச் சிலையோ , முறையான பூசைகளோ எதுவும் கிடையாது. ஆவிணிப்பட்டியிலும், கீரணிப்பட்டியிலும் உள்ள இக்கோயிலின் பூசாரிகளான குடியானவர்கள், பூசையன்று மட்டுமே வருவர்.

கீழச்சிவற்பட்டி — இளையாற்றங்குடிச் சாலையில், பள்ளிக்கூடத் துக்குப் பக்கத்தில் பிரியும் கப்பிச் சாலையில் சுமார் ஒன்றரைக் கி.மீ. சென்று, இடப்புறம் பிரியும் மண் சாலையில் மீண்டும் சுமார் ஒரு கி.மீ. சென்று, மீண்டும் இடப்புறம் காட்டுமரங்கள் நிறைந்த இட்டிகை (இடுக்குவழி) வழியே வண்டித்தடத்தில் சென்று, கோயிலை அடையலாம்.

நடுவில் உள்ள ஒரு திறந்த வெளியைச் சுற்றி மரங்கள் அடர்ந் திருப்பதால், எந்த இடத்தில் இந்தக் கொம்படி ஆலயம் இருக்கிறது என்று கண்டுபிடிப்பது சிரமமான செயல்தான். எனவே கீழச்சிவற் பட்டியிலிருந்து உள்ளூர்க்காரர் யாரையேனும் அழைத்துச் செல் வதுதான் நல்லது!

சுமைதாங்கிக் கல் போன்று, இரு கல் தூண்களின் மேலே ஒரு குறுக்குக் கல் தூணும், கீழே ஒரு தூணுமாகச் சதுர வடிவில் அமைந்திருக்கும் கல்தூண் அமைப்பே, காட்டுக் கறுப்பையா! மேலே குறுக்காக உள்ள தூணில் மூன்று திரிசூலங்கள் பொருத்தப்பெற் றுள்ளன. திருமாலின் திருமண், சிவனின் திருநீறு எல்லாவற்றுக் குமே இங்கு இடமுண்டு!

இந்தக் கருப்பர் வடிவத்தின் எதிரே சாம்பிராணி போடுவதற்கான இருப்புச் சட்டிகள் உள்ளன. திறந்த வெளியில் இரு இடங்களில் தகட்டுக்கற்கள் பரப்பப் பெற்றுள்ளன.

வழிபடச் செல்வோர் மூன்று திரிசூலங்களிலும் எலுமிச்சம்பழங் களைச் செருகி, மலர்மாலை இட்டு, ஊதுபத்தி ஏற்றி வைத்துச், சாம்பிராணி போட்டு வழிபாடு செய்கின்றனர்.



காட்டுக்குள் ஒரு கோயில், அது கறுப்பையா கோயில்

வழக்கமாகத் திங்கள், வெள்ளிக்கிழமைகளில், இக்கறுப்பரைக் கும்பிடுவோர், இங்கு வந்து வழிபட்டுச் செல்கின்றனர். ஆடி மாதம் நடைபெறும் அழகாத்தாள் படைப்பிற்கு முன்னர், பங் காளிகள் அனைவரும் இங்கு வந்து வழிபாடு செய்கின்றார்கள். இவை தவிர, யாரேனும் நேர்ந்து கொண்டால் மட்டுமே, பங்காளி கள் சேர்ந்து வந்து, உயிர்ப்பலி கொடுத்துப் படையலிட்டுச் சிறப்பு வழிபாடு செய்வார்களாம். அந்த நேரத்தில் திறந்த வெளியில் உள்ள தகட்டுக் கற்களில் பள்ளயம் போடுவார்களாம்.

இந்தக் கறுப்பரைக் கும்பிடுவோர், வீட்டில் நடக்கும் நற்காரியங் களின்போது, ஆறேகால் ரூபாய் பணம் முடிந்து வைக்கின்றனர். இக்கோயிலுக்கு அடிமைப்பட்டோர், இக்கறுப்பரின் பெயரைச் சொல்லும்போதே உணர்ச்சி வயப்பட்டு விடுகின்றனர்; கண்கள்

குளங்கட்டுகின்றன; பக்தியின் உச்சத்துக்கே — பரவசத்தின் எல்லைக்கே சென்று விடுகின்றனர்!

பங்காளிகளால் மிகவும் வரதராகக் கருதப்பெறும் காட்டுக் கறுப்பரிடம், மிகுந்த பயபக்தியுடன் நடந்து கொள்ள வேண்டுமென எச்சரிக்கின்றனர். பொங்கல் வைக்கும்போதும், கிடாய் வெட்டும் போதும், வாயைக் கட்டிக் கொண்டுதான் செய்வார்களாம்!

அருகில் கிடக்கும் காய்ந்த குச்சிகளைப் பொறுக்கி நெருப்பு மூட்டிச் சாம்பிராணி போட்டுக் கறுப்பரை வழிபட்டுவிட்டு, ஆளரவம் அற்ற அந்தப் பகுதியிலிருந்து கீழச்சிவற்பட்டிக்குப் புறப்படுகிறோம்.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

பொற்றூணைப், புலால்நாறு கபாலம் ஏந்திப்
புவலோகம் எல்லாம் உழிதந் தானை,
முற்றாத வெண்திங்கட் கண்ணி யானை,
முழுமுதலாய் மூவுலகும் முடி(வு)ஒன்(று) இல்லாக்
கற்றூணைக், காளத்தி மலையான் தன்னைக்,
கருதாதார் புரமூன்றும் எரிய அம்பால்
செற்றானைத், திருமுதுகுன்(று) உடையான் தன்னைத்,
தீவினையேன் அறியாதே திகைத்த வாறே.

திருச்சிற்றம்பலம்

— 6 ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

இக்கோயில் பற்றிய தகவல்களைக் கூறிக், கோயிலை எளிதில் கண்டு வழிபடும் வகையில், அன்பர் சிலரையும் அனுப்பி வைத்து உதவியவர்: எஸ்.பி. சுப்பிரமணியன் செட்டியார், கீழச்சிவற்பட்டி

உ

அற்றார்க்கு அருள்செய்யும் திட்டாணி ஐயனார்

(72. திட்டாணி ஐயனார் திருக்கோயில், நெய்வாசல்)

தில்லையில் நடராசர் கோயிலுக்கு மேற்கே உள்ளது, வியாக்கிர பாதர் என்னும் புலிக்கால் முனிவர் பூசித்த திருப்புலீச்சுரம் என்னும் சிவாலயம். அதனை இளமையாக்கினார் கோயில், இளமை நாய னார் கோயில் என்றும் கூறுவர். அதன் முன் உள்ளது வியாக்கிர பாத தீர்த்தம். ஒரு சிவனடியாரை — நாயனாரை, அவர்தம் மனைவி யுடன் அக்குளத்தில் மூழ்கச்செய்து, அவர்களுக்கு என்றும் நீங்காத இளமையை நல்கிய இறைவன், இளமையாக்கினார்.

சிவபெருமானையே நினைந்து நினைந்து, நீலகண்டம் என்று ஓயா மல் சொல்லி வந்ததால், திருநீலகண்ட நாயனார் என்று அழைக்கப் பெற்றவரே, அந்தச் சிவனடியார். வேட்கோவரான அவர், (மண் ணிலே குல உரிமைத் தொழில் செய்பவர் — குயவர்), உயிர் வாழ் வதற்காக — வாழ்க்கைக்காக மட்கலங்களையும், அடியார்க்கு உதவத் திருவோடு (பலிப் பாத்திரங்)களையும் செய்து வந்தார். அவர் பரத்தையிடம் சென்றதால், அவருக்கும், அவர் மனைவிக்கும் ஏற் பட்ட ஊடலை (வெறுப்பு, பிணக்கு), அவருடன் திருவோட்டுக் காகச் சண்டையிட்டதன்வழி, சிவபெருமான் தீர்த்து வைத்தார்.

அப்பர், சம்பந்தர் காலத்துக்கும், சுந்தரர் காலத்துக்கும் (கி.பி.660 — 840) இடைப்பட்டவரான அவர், இறைவனால் சோதிக்கப் பெற்ற அடியார் எண்மரில் ஒருவர்.[1]

சிற்றின்பம் சிறிது; பேரின்பம் பெரிது. இறைவனிடத்து வைத்த அன்புக்காகச் சிற்றின்பத்தைத் துறந்தவர், என்றும் அழியாப் புகழ் பெற்றுப் பேரின்பம் எய்துவர்[2] என்னும் உயர்ந்த கருத்தை உலகுக்கு உணர்த்திய அந்தத் திருநீலகண்ட நாயனாரை, இப்போது நாம் செல்லும் திட்டாணி ஐயனார் கோயிலில் காண்கிறோம், சிலை வடிவில்.

இதே கோயிலில், மூலவர் ஐயனாரின் கருவறையை ஒட்டி இடம் பெற்றுள்ள சண்டீசரும் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவர் தாம் எனினும், அவர் நாயன்மார் என்னும் நிலையில் இல்லாமல், இறைவனின் அணுக்கத்தொண்டர் என்னும் நிலையிலேயே, எல்


லாக் கோயில்களிலும் இடம் பெறுகிறார். எனவே, அவரை ஒதுக்கிப் பார்த்தோமானால், நாயன்மார் ஒருவர் (நகரத்தார் வழிபடும்) குலதெய்வக் கோயிலில் இடம் பெறுவதை இங்குதான் முதன்முதலில் காண்கிறோம்.

ஐயனார் கோயில்களில் குலாலர் என்னும் வேட்கோவர்(வேளார்)களே அர்ச்சகர்களாக அமைந்திருப்பதால், அவர்கள் குலத்தவரான நாயன்மார் ஒருவரை இங்கு பரிவார தெய்வமாக்கியிருப்பது, வரவேற்கத்தக்கதே. (பெரியதோர் ஊரில், இந்தச் சமுகத்தினர் அதிகமாக வாழும் தெருவுக்குத் திருநீலகண்டர் தெரு என்று பெயரிட்டிருப்பது இங்கு நினைவு கூரத்தக்கது.)

★ ★ ★

கீழச்சிவற்பட்டி — குன்றக்குடி சாலையில், கீழச்சிவற்பட்டியிலிருந்து 3ஆவது கி.மீட்டரில் இடப்புறம் திரும்பி மண்சாலையில் நேரே சென்று, நெய்வாசல் குளக்கரையில் இடப்புறமாகத் திரும்பிக் காட்டு மரங்கள் அடர்ந்த வண்டித் தடத்தின் வழியே சென்று கோயிலை அடையலாம்.

பி.அழகாபுரி, ஆத்தங்குடி (வைரவன் கோயில் தெய்யனார் வகுப்பினர்), கீழச்சிவற்பட்டி, கோனாபட்டு, சிறுகூடற்பட்டி, சொக்கலிங்கபுரம், நேமத்தான்பட்டி ஆகிய ஊர்களின் சுமார் 300 புள்ளி



குளமும் கோயிலும்

கள்[3] இங்குள்ள திட்டாணி ஐயனாரையும், திட்டாணிக் கறுப் பரையும் வழிபடுகின்றனர்.

கோயிலின் பின்புறமுள்ள தாமரைக் குளத்தில் கால் கைகளைத் தூய்மை செய்து கொண்டு, கோயிலின் தென்புறமாகச் சென்று முன் வாயிலை அடைகிறோம். கண்மாயை எதிரே கொண்டுள்ள கோயிலின் நுழைவாயிலில் மேலே, ஐயனாரின் சிறியதொரு சுதைச் சிற்பம் உள்ளது. அந்த வாயிலின் வழியாக உள்ளே செல்லுமுன் னர், முன்பக்கம் பார்க்கிறோம். சகடை நிறுத்தப்பெறுவதற்கான ஒரு தகரக்கூடத்தை அடுத்துத், தெற்கே ஒரு சேமங்குதிரையும், வடக்கே இரு சேமங்குதிரைகளும் உள்ளன.

வடக்கில் முதலில் உள்ள குதிரை கிழக்கு நோக்கித் தனியாக நிற் கிறது. வழக்கமாக உள்ள பூதத்தைக் காணவில்லை. அதை அடுத் துக் கோயிலின் திருச்சுற்றுச் சுவரை ஒட்டி, இரு பெரும் சேமங் குதிரைகள், ஒன்றை ஒன்று பார்த்தவண்ணம், பூதங்களின் கரங் களின் மீது கம்பீரமாக நிற்கின்றன. தென்புறச் சேமங்குதிரையை அடுத்துக் கிழக்குத் திருச்சுற்றுச் சுவரை ஒட்டியுள்ள ஒரு கல்மேடை யில் பெரிய அரிவாள் மட்டும் உள்ளது. சின்னக்கறுப்பர், நொண்டி, அடைக்கலங்காத்தான், முனியன் ஆகியோர் இங்கு குடிகொண் டிருப்பதாக ஐதிகம். நொண்டிக் கறுப்பருக்குச் சாராயம் படைக்கப் பெறுவது உண்டு.

அடுத்துக் கோயிலினுள் செல்கிறோம். கிழக்குத் திருச்சுற்றுச் சுவ ரின் நீளத்துக்கும், நுழைவாயிலிலிருந்து கருவறையை இணைத்தும் ஒட்டுக்கூடம் காணப்பெறுகிறது. கல் திருப்பணியான கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகியவற்றை அடையுமுன்னர், இருபுறமும் பூதங்கள் கோயிலைக் காவல் புரிகின்றன. கருவறை நுழைவாயிலின் இருபுறமும் புடைப்புச் சிற்பங்களாகத் துவார பாலகர் அமைக்கப்பெற்றுள்ளனர். அர்த்த மண்டபத்தில் நம் இடப் புறம் விநாயகர் வீற்றிருக்கிறார்.

கருவறையில் திட்டாணி ஐயனார், தேவியரின்றித் தனித்து யோக நிலையில் அமர்ந்திருக்கிறார். 'பேரின்பத்தை நாடுங்கள்; அதுவே அழிவற்றது; பிறவியின் பயன் பேரின்பத்தைப் பெறுவதே' என்று உணர்த்தவே தனித்து உள்ளார் போலும்!

திட்டாணி என்றால், மரத்தைச் சுற்றிய மேடை என்று பொருள் கூறப்பெறுகிறது. கோயிலின் பழைய அமைப்புப் பற்றி எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. ஒருவேளை இந்த ஐயனாரும், கறுப் பரும், மரத்தடியில் மேடையில் இருந்து, பின்னர் இங்கு குடியேறி யிருப்பரோ?

கருவறையின் வலப்புறம் (தெற்குப் பிராகாரத்தில்) உள்ள நீண்ட தொரு கூடத்தில், திட்டாணிக் கறுப்பரை நடுநாயகமாக வைத்து, இருபுறமும் ஏராளமான பரிவார தெய்வங்கள் உள்ளன. தச்சன் (அரசன் பார்ப்பினியைப் புணரப் பிறந்தவன் தச்சன்; விருக னுக்குத் துருவாட்சியிடம் பிறந்தவன் தட்சன்; மற்றும், தக்ஷன் (தக்கன்) என்பவன், பிரமனின் மானச புத்திரர்களில் ஒருவன். சிவனிடம் வரம் பெற்று உமாதேவியைத் தாக்ஷாயணி என்னும்

பெயரில் மகளாகப் பெற்றுச் சிவபெருமானையே மருமகனாக்கிக் கொண்டு, பின்னர் அவராலேயே மறக்கருணை புரியப் பெற்றவன். இங்குள்ள தச்சன் என்னும் மூர்த்தம், இவர்களில் ஒருவரோ, மர வேலை செய்யும் தச்சர் குலத்தவரோ தெரியவில்லை.), தச்ச அம்மன், தச்சம்மன் காளி, மெய்யன், முனியன், முத்தையா, முத்துக் கறுப்பர், சின்னக் கறுப்பர், கூத்தாச்சி அம்மன் (தாழையூர் கூத் தாடி அம்மனின் எதிரொலியோ? அந்தக் கூத்தாடி அம்மனைத் தரிசிக்கத் தாழையூர் செல்லவிருக்கிறோம்!) ஆகியோரை அடுத்துத், திட்டாணிக் கறுப்பர் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார்.

வழக்கமாகச் சோனையன், பொன்னன் போன்றோரைத்தான் குதி ரையில் வந்தவர், கொண்டாடப் பெறுகிறார் என்று கேள்விப் பட்டிருக்கிறோம். இங்கோ திட்டாணிக் கறுப்பரே வேட்டையாடக் குதிரையில் வந்தவர்; இங்கே கோயில் கொண்டுவிட்டார் என்று கூறுகின்றனர்.[4] நாம் இதுவரை கண்டு வந்துள்ள ஒருசில அழகிய வேலைப்பாடு மிகுந்த கறுப்பர் சிலைகளுடன் இதனை ஒப்பிட முடியவில்லை எனினும், தன்னை வழிபடுவோருக்கு அருள் சுரக் கும் அமைதியான முகமண்டலத்தைக் கொண்டிருக்கிறது. இவர் பெயரை ஒட்டி நகரத்தார் குடும்பங்களில் திட்டாணி, திட்டாணிக் கறுப்பையா, கறுப்பையா என்னும் பெயர்கள் குழந்தைகளுக்கு வைக்கப் பெறுகின்றன. இவரின் இடப்புறம் நாயகியம்மன், பத்ர காளி, பேச்சியம்மன், நாகர், செம்முனி, அகோர வீரபத்திரர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இந்தக் கூடத்தினுள்ளேயே தல மரமான மாவிலிங்கமரம் உள்ளது.

கூடத்திற்கு வெளியே கூடத்தின் கீழ்த்தளத்தில் பதினெட்டாம்படிக் கறுப்பரின் சிறிய புடைப்புச் சிற்பம் ஒன்று காணப்பெறுகிறது. இவருக்கு முன்னால், பிள்ளைகளுக்குப் பெயர் கூப்பிடும் வழக்கம் உண்டாம்.

இதனை அடுத்துள்ள வடக்குப் பார்த்த தனிச் சந்நிதியில் தில்லைக் காளி காட்சி தருகிறாள். இறைவனின் நடனத்தைக் காணத் தவங் கிடக்கும் வியாக்கிரபாதர், பதஞ்சலி ஆகியோரின் விருப்பத்தை நிறைவேற்றவும், தன்னை ஒப்பார் ஒருவருமிலர் என்று செருக்கித் திரிந்த தில்லை வனத்துத் தேவதையான தில்லைக்காளியின் செருக்கை அடக்கவும், இறைவன் காளியுடன் போட்டியிட்டு நடனம் ஆடி னார். இறுதியில் காளியால் ஆட முடியாத ஊர்த்துவ தாண்ட வத்தை ஆடினார்.

ஊர்த்துவ தாண்டவம் என்பது வலக்காலை உடலோடு ஒட்டி உச்சந் தலை வரை தூக்கி நின்று ஆடுவது.[5] காளி தோல்வியை ஒப்புக் கொண்டு தில்லை (சிதம்பரத்தின்)யின் வடபுறத்தில் ஒதுங்கி, எல் லைக் காளியாக எழுந்தருளினாள்.[6] இதுதான் தில்லைக்காளியின் வரலாறு. அடுத்துள்ள சந்நிதியில் தில்லைவாசியான திருநீலகண்டர் குடிகொள்ளப் போகிறார் ஆதலால், அத்தலத்துடன் தொடர் புடைய தில்லைக்காளியை இங்கு எழுந்தருளச் செய்துள்ளனர் போலும்! இச்சந்நிதியை ஒட்டி வில்வ மரம் ஒன்று உள்ளது.

அடுத்துள்ள கிழக்குப் பார்த்த சந்நிதியில் நாகர், (முனீஸ்வரர் சப்தமாதர், திருநீலகண்...

குப் பிராகாரத்தில் உள்ள கிழக்குப் பார்த்த சந்நிதியில் தண்டாயுத பாணியும் உள்ளனர். கருவறையை ஒட்டித் தெற்குப் பார்த்துச் சண்டிகேசுவரர் காணப் பெறுகிறார். சண்டிகேசுவரர் எழுந்தருளி யுள்ள மிகச்சில ஐயனார் கோயில்களில் இதுவும் ஒன்று. மற் றொரு சந்நிதியில் (இரண்டாம்) அடைக்கலங்காத்தான், பைரவர் ஆகியோர் உள்ளனர்.

* * *



ஐயனாரின் அருள்பெற அனைவரும் வருக!

இக்கோயிலில் இருமுறை (28.01.66, 09.09.87) திருக்குட நீராட்டு நடந்திருப்பதாகச் சொல்லப் பெறுகிறது.[7] 06.03.89ல் பிராகாரத் தில் தகட்டுக்கல் பதிக்கப் பெற்றதற்கும், 02.03,92ல் ஆழ்குழாய்த் தண்ணீர்த் தொட்டி அமைக்கப் பெற்றதற்குமான குறிப்புகள் கோயி லில் காணப்பெறுகின்றன. நாள்தோறும் காலை, மாலை இரு நேரங்களிலும் பூசை நடைபெறும், வேளார்கள் பொறுப்பிலுள்ள இக்கோயில், காலை 8 மணி முதல் 10 வரையிலும், பிற்பகல் 2 முதல் மாலை 4 வரையிலும், பக்தர்களின் வழிபாட்டுக்காகத் திறந்திருக்கும்.

மகா சிவராத்திரி, மற்ற கோயில்களைப் போன்றே இங்கும் மிகச் சிறப்பாக மூன்று நாட்களுக்குக் கொண்டாடப் பெறுகிறது. சிவ

ராத்திரியின்போது இரு நாட்களுக்கு ஐம்பொன்னால் அமைந்த விநாயகர், ஐயனார் உற்சவ மூர்த்திகளைச் சகடையில் வைத்துக் கோயிலை வலம் வருகின்றனர். இந்த நாட்களில் சாமியாடியான வேளார், ஈட்டி, தீப்பந்தம் ஏந்தி, ஆணிகள் நிறைந்த பாதகுறடு களில் நின்று அருள்வாக்குச் சொல்வது, இங்கு பிரபலமானது. நகரத்தார்கள் இந்த விழாவில் அதிக அளவில் கலந்து கொண்டு, குழந்தைகளுக்குக் கரும்புத் தொட்டில் கட்டுகின்றனர்.[8] சிவராத் திரிக்கு அடுத்த நாள், கோயிலை ஒட்டியுள்ள திடலில் மஞ்சு விரட்டு நடைபெறுகிறது.

சிவராத்திரியின்போது சேரும் பணத்தைக் கொண்டு, அதற்கடுத்த வாரம், உயிர்ப்பலி கொடுத்து, அதிரசம், சுண்டல், வடை நிவே தனம் செய்து, பெரிய அளவில் சிறப்பாக வழிபாடு நடத்துகின் றனர். இது போன்றே, நேர்ந்து கொண்டவர்களுக்காக இங்கு நடைபெறும் பெரும்பூசையும் மிகப் பிரபலமானது. (இப்பூசையில் பேரளவில் உயிர்ப்பலிகளும் கொடுக்கப்பெறுகின்றன.) சில நேரங் களில் நகரத்தார்களும் இந்தப் பெரும்பூசையை நடத்துகின்றனர்.[9]

சிவாலயங்களில்கூட நாயன்மார்களின் திருமேனிகளைக் காண வியலாத நிலையில், ஐயனார் கோயில் ஒன்றில் அறுபத்துமூவரில் ஒருவராவது இடம்பெற்றிருப்பதை எண்ணி மகிழ்ந்து, அடுத்த கோயிலை நோக்கி நம் பயணத்தைத் தொடர்கிறோம்.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

மறக்கு மனத்தினை மாற்றி,எம் ஆவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் திருந்தடிக் கீழ்ப்பிழை யாதவண்ணம்,
பறித்த மலர்கொடு வந்(து)உமை ஏத்தும் பணிஅடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.

திருச்சிற்றம்பலம்

— முதலாம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

— அற்றார்— நீங்கப்பெற்றோர், துறந்தோர், துறவிகள், வறியோர்
1. பெரிய புராண ஆராய்ச்சி — டாக்டர் மா. இராசமாணிக்கம்
2. பெரிய புராண உரை — சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார்
3. சி. குணா வேளார், நெய்வாசல்; பழனியப்பன் திட்டாணிக் கறுப்பையா, ஆத்தங்குடி
4. சி. குணா வேளார்
5. ஆடல் வல்லான் — திருவாவடுதுறை ஆதினம்
6. புனிதக் கோயில்களும், புண்ணியத் தீர்த்தங்களும் — புலவர் சி. முத்துப் பிள்ளை
7. பழனியப்பன் திட்டாணிக் கறுப்பையா
8. சி. குணா வேளார், பழனியப்பன் திட்டாணிக் கறுப்பையா
9. சி. குணா வேளார்

உ

கள்ளங்கடிந்து ஆட்கொள்ளும் கல்லுக்கா(ட்)டு ஐயனார்

(73. கல்லுக்காடு ஐயனார் திருக்கோயில், கல்லுவயல், தொலையானூர்)

கிடைத்த தகவல்களைக் கொண்டு, இயன்றவரை எளியேன் சென்று வந்த குலதெய்வக் கோயில்களைப் பற்றிய கட்டுரைகளை முற்றாகப் படித்தீர்களானால், ஒரே மாதிரியான அமைப்பிலேயே எல்லாக் கோயில்களும் அமைந்திருக்கின்றன என்று கருதமாட்டீர்கள்.

ஐயனார் — இரு தேவியர்; ஐயனார் — ஒரு தேவி; அம்பிகையர் இல்லாத ஐயனார்; இரு ஐயனார் சந்நிதிகள்; இரு கறுப்பர் சந்நிதிகள்; அர்த்தநாரீஸ்வர வடிவம்; பிள்ளையாரின் உருவில் அன்னை — இப்படி மொத்தக் கோயில்களையும் நுணுக்கமாகப் பகுத்தால் சுவையான பல தகவல்களைத் திரட்டலாம்.

இப்போது நாம் வந்துள்ள தொலையானூர் கல்லுக்காடு ஐயனார் கோயிலில், ஒரே நிலையில் — ஒரே படித்தரத்தில் உள்ள இரு கறுப்பர்கள் இருக்கக் காண்கிறோம். இது எவ்வாறு நேர்ந்தது? சந்நிதிக்குச் செல்லும்போது அதைத் தெரிந்து கொள்வோமே?

* * *

அரிமழம், இராயவரம், இலட்சுமிபுரம், கண்டனூர், கானாடுகாத்தான் (இரணிக்கோயில்), கீழச்சிவற்பட்டி, குருவிக்கொண்டான்பட்டி, குழிபிறை (மாத்தூர் உறையூர்), கொத்தமங்கலம், பனையப்பட்டி, புதுவயல், வேந்தன்பட்டி ஆகிய ஊர்களின், சுமார் 300 புள்ளி நகரத்தார்கள் இக்கோயிலில் உள்ள கல்லுக்காடு ஐயனார், கலங்காப்புலிக் கறுப்பர், அழகுக் கறுப்பர் ஆகியோரைக் குலதெய்வங்களாகக் கொண்டு வழிபடுகின்றனர்.[1] திருமயம் — திருப்புத்தூர் சாலையில் உள்ள காட்டுபாவா பள்ளிவாசல் என்னும் ஊரிலிருந்து வடக்கே 2 கி.மீ. தொலைவில், சின்னக் கல்லுவயல் என்னும் பெயர் அறிவிப்புப் பலகை உள்ள இடத்தில் வலப்புறம் திரும்பிச் சென்று, இக்கோயிலை அடையலாம். தொலையானூரில் இக்கோயில் உள்ள இடம் கல்லுவயல் என்று அழைக்கப்பட்டாலும், 1977ஆம் ஆண்டில் கலங்காப்புலிக் கறுப்பர் மீது பாடப்பெற்ற ஒரு பாடலில், கள்ளுவயல் என்றே குறிப்பிடப் பெற்றுள்ளது.

திருமயம் தாசில்தாரால் அறிவிக்கப் பெற்ற கோயிலின் பூஜை நேரம், காலை 10 மணி முதல் 12 வரை; மாலை 5 முதல் 7 மணி வரைதான்.[2] இவற்றுக்கு இடைப்பட்ட நேரத்திலேயே நாம் கோயிலுக்குச் செல்கிறோம். அந்த நேரத்தில் கோயிலில் காவற்காரர் மட்டுமே உள்ளார். அவருடைய உதவியால் (1922ஆம் ஆண்டில் புதுவயல் நகரத்தார் குடும்பத்தால் உபயம் செய்யப் பெற்ற மணியை, அர்ச்சகரை அழைப்பதற்காக, அவர் இரண்டு மூன்று முறை ஒலிக்கிறார்.) பூசைக்கான முறைகார வேளாரைக் கோயிலுக்கு வரவழைத்துச் சந்நிதிகளில் வழிபாடு செய்து, கோயிலைப் பற்றிய சில தகவல்களையும் தெரிந்து கொள்கிறோம்.

* * *

கோயிலின் கிழக்குச் சுற்றுச் சுவரில் ஐயனார் சந்நிதிக்கு நேரே (நுழைவாயிலின் இருபுறமும் இரு பூதங்களுடனும், மேலே கஜ லட்சுமி சுதைச் சிற்பத்துடனும் கூடிய) ஒரு நுழைவாயிலும், அதன் வலப்புறம் மற்றொரு நுழைவாயிலும் இருந்துங்கூட, அவை இரண்டுமே தாளிடப்பெற்றே இருப்பதால், தென்புறச் சுற்றுச் சுவரில் உள்ள நுழைவாயில் வழியாகத்தான் உள்ளே செல்லவேண்டி இருக்கிறது. இந்த நுழைவாயிலின் மீதும் சுதைச் சிற்பங்கள் உள்ளன. கோயிலின் தென்கிழக்கு மூலையில் ஒற்றைச் சேமங்குதிரை, பூதங்கள் சூழ வடக்கு நோக்கி நிற்கக் காணுகிறோம்.

தென்புற வாயில் வழியே உள்ளே சென்றதும், முதலில் கலங்காப் புலிக் கறுப்பர் சந்நிதியும், அதன் இடப்புறம் (நடுவில்) அழகுக் கறுப்பர் சந்நிதியும், அதன் இடப்புறத்தில் (வடக்கே) கல்லுக்காடு ஐயனார் சந்நிதியும் (மூன்றுமே) கிழக்கு நோக்கி அமைந்திருக்கின்றன. 06.07.1960, 03.02.1984 ஆகிய நாட்களில் திருக்குட நீராட்டு நடைபெற்றுள்ள இக்கோயிலின் மூன்று சந்நிதிகளுமே, முழுமையாகக் கல் திருப்பணி செய்யப்பெற்றவையே.

முதலில் ஐயனாரை வழிபட்டுவிட்டுப் பின்னர் கறுப்பர்களின் சந்நிதிகளுக்கு வருவோமே?

கல்லுக்காடு ஐயனாரின் கருவறைக்கு முன் உள்ள மகா மண்டபத்தில், நுழைவாயிலின் இருபுறமும் துவார பாலகர்களும், இடப்புறம் உள்ள துவார பாலகரின் அருகில் விநாயகரும், அவரை அடுத்து இடையங்கறுப்பரும் உள்ளனர். அர்த்த மண்டபத்தில் விநாயகர், தண்டாயுதபாணி சிலைகள், கருவறை நுழைவாயிலின் இருபுறமும் காட்சி தருகின்றன.

கருவறையில் கல்லுக்காடு ஐயனார், தேவியர் புடைசூழ அமர்ந்திருக்கிறார். இவரைக், குறிப்பாக வேந்தன்பட்டி நகரத்தார்கள் குல தெய்வமாகக் கொண்டு வழிபடுகின்றனராம்.[3] மண்டபத்துக்கு வெளியே யானை வாகனமும், பலிபீடமும் உள்ளன.

ஐயனார் அவதரித்ததாகக் கூறப்பெறும் மாசி மாத மகா சிவராத்திரி நாள்,[4] மற்ற கோயில்களைப் போன்று இங்கும் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகிறது. அதற்கு அடுத்த நாள் காலை நகரத்தார் அனைவரும் இங்கு வந்து வழிபடுகின்றனர். அப்போது குழந்தைகளுக்குத் தொட்டில் கட்டி, மாவிளக்கு வைத்து வழிபாடு செய்வார்களாம்.

இப்பகுதியில் கற்குன்றுகள் மிகுதியாக இருந்து, அதை ஒட்டி இப் பகுதி கல்லுவயல் என்று அழைக்கப்பெற்று, ஐயனாரும் கல்லுக் காடு ஐயனார் என்று பெயர் பெற்றிருந்திருக்கலாம்.

அடுத்துத் தென்புறத்தில் முதலில் உள்ள கலங்காப்புலிக் கறுப்பர் சந்நிதிக்குச் செல்கிறோம். சந்நிதியின் முன் உள்ள காங்க்ரீட் மண் டபத்தைக் குழிபிறை நகரத்தார் கட்டியுள்ளனர்.

இச்சந்நிதியின் பிரதான தெய்வமான கலங்காப்புலிக் கறுப்பர், பெயருக்கேற்ப எதற்கும் கலங்காத புலியாக — அஞ்சாத சிங்கமாகக் கடுகடுப்பாகவே காணப்பெறுகிறார். அழகிய சிற்ப வேலைப்பாடு! உருத்திராட்ச மாலை அணிவித்து, அரிவாள், வேல், சூலாயுதம், பிரம்பு ஆகியவற்றை அவர் மேனி மேல் சாத்தி வைத்திருக்கின் றனர்.

மகா மண்டபத்தில், வாயிலை ஒட்டிச் சின்னக் கறுப்பரும், முத்துக் கறுப்பரும் இருபுறமும் இருக்கச் சின்னக் கறுப்பரை அடுத்துச் சந் நியாசியும், சேவல்காரனும் உள்ளனர். முத்துக்கறுப்பரை ஒட்டிக் காயாத்தாள், துந்துபி, இராக்காயி ஆகியோர் காணப் பெறுகின் றனர். கலங்காப்புலிக் கறுப்பர், கீழச்சிவற்பட்டி, குழிபிறை நகரத் தார்களின் குலதெய்வம்.

இங்குள்ள காயாத்தாளையும் நகரத்தார்கள் குலதெய்வமாக வழி படுகின்றனர். இராயவரம் நகரத்தார் ஆனி, ஆடி மாதங்களில் இவருக்குப் படைக்கு முன்னர் இங்கு வந்து இவரை வழிபட்டு இங்கிருந்து தீர்த்தம் எடுத்துச் செல்கின்றனர்.

அர்ச்சகரின் கூற்றுப்படி, இவர்தாம் இங்கு வந்து குடியேறியவராக இருக்கவேண்டும். இவர், முதலில் வேறொரு கோயிலில் இருந் தார் என்றும், கருத்து வேறுபாடு காரணமாக அங்கிருந்து இங்கு கொண்டுவரப் பெற்றார் என்றும் செவிவழிச் செய்தி நிலவுகிற தாம். ஒரே படிநிலையிலுள்ள இரு கறுப்பர்கள் வேறு கோயில் களில் காணப்பெறாத காரணத்தால், இந்தக் கூற்று ஏற்றுக்கொள்ளத் தக்கதாகவே இருக்கிறது. மண்ணின் மைந்தர் (இந்தக் கோயிலுக்கு உரியவர்) என்று, அடுத்த சந்நிதியில் உள்ள அழகுக் கறுப்பரையும், குடியேறியவர் என்று கலங்காப்புலிக் கறுப்பரையும் கூறலாமா?

அடுத்து (நடுவில்) உள்ள அழகுக் கறுப்பர் சந்நிதியின் முன்பாக உள்ள காங்க்ரீட் மண்டபத்தை, இவரைக் குலதெய்வமாகக் கொண்ட குருவிக்கொண்டான்பட்டி நகரத்தார் கட்டியிருக்கின்றனர். இந்தச் சந்நிதியின் மூன்று புறமும் மேலே விரிவுபடுத்தப் பெறுகின்றது. இங்கு அழகுக் கறுப்பருடன் நாகரும், கன்னியர் எழுவரும் உள் ளனர். அழகுக் கறுப்பர் ஆடம்பரமின்றி, அமைதியாகத் தலையை இலேசாக வலப்புறம் சாய்த்த வண்ணம் காணப்பெறுகிறார். இவர் அருகில் பிரம்பு ஒன்று மட்டுமே உள்ளது.

இந்த இரு கறுப்பர்கள், இந்த இரு சந்நிதிகளில் உள்ள ஏனையக் கறுப்பர்களின் பெயர்களை ஒட்டி, நகரத்தார் வீடுகளில் குழந்தை களுக்குப் பெரியகறுப்பன், முத்துக் கறுப்பன், அழகப்பன் என் னும் பெயர்களை வைப்பது உண்டாம்.[5]

இக்கோயிலில் தீபம் போடுவதற்கெனக் கீழச்சிவற்பட்டி நகரத்தார்கள் எண்ணெய் கொடுக்கின்றனராம். 'விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்' என்பது அப்பர் சுவாமிகள் வாக்கு.[6] அப்பர் சுவாமிகளால் தேவாரப் பதிகத்தில் அடித்தொண்டன் என்று சிறப்பிக்கப் பெற்ற நமிநந்தி அடிகள், கோயில்களில் விளக்கிட்டுப் பெற்ற பேறு யாவரும் அறிந்ததே. நந்தவனம் அமைத்தல், விளக்கிடுதல் போன்ற தொண்டுகள் பெரும் சிவ புண்ணியங்களாகும்!

கோயிலின் வடபுறத்தை ஒட்டி அமைந்துள்ள சந்நிதிகளில் கன்னியர், சாவற்காரர், பண்டாரம், சந்நியாசி, ஆஞ்சநேயர், மதுரை



என்னைப் பார்த்தாலா கோபக்காரன் மாதிரித் தெரிகிறது?

வீரன், பொம்மி, வெள்ளையம்மாள், வீரபத்திரர், சங்கிலிக் கறுப்பர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். வீரபத்திரர் சிலை அழகிய வேலைப்பாடு நிறைந்து காணப்பெறுகிறது.

* * *

வைத்தீஸ்வரன் கோயிலுக்குப் பாத யாத்திரை மேற்கொள்வோர், போகும்போதும், வரும்போதும், இங்கு வந்து வழிபட்டுச் செல்வது வழக்கம் என்று, நாம் கோயிலிலிருந்து புறப்படும்போது அர்ச்சகர் கூறுகிறார். நாமும் ஒரு வகையில் (பாதியாவது) பாத யாத்திரைதானே மேற்கொண்டிருக்கிறோம்? இங்குள்ள திரிமூர்த்திகள், நம் புனித யாத்திரையில் எந்தக் கலக்கமும் வராமல் காப்பாற்றுவர் என்னும் நம்பிக்கையில், ஊனையூரிலுள்ள முத்துவெள்ளைச் சாத்தையனார் கோயிலுக்குப் புறப்படுகிறோம்.

பரவும் சொல்மாலை

மேயசிவ நிந்தைபுரி வெய்யவர்க்குப்
புரிகழுவாய் வே(று)இன்(று) அன்னார்
மாயஒறுத் திடல்அன்றி என்னுமறைக்(கு)
இலக்கியமா, வாள்கைக் கொண்டு
தீயமகம் புரிதக்கன் சிரம்அறுத்துச்
சேர்ந்தாரும் சிதையச் செய்த
நாயகமா விறல்வீர பத்திரநம்
பனைவணங்கி நயந்து வாழ்வாம்.

— திருப்பெருந்துறைப் புராணம்

குறிப்பு விளக்கம்:

— கள்ளம் — குற்றம், கள்ளத்தனம், கபடம்; கடிந்து — அகற்றி, அழித்து, நீக்கி

1. ஏ. சிதம்பரம், கானாடுகாத்தான்; பெரி. சோமசுந்தரம், குழிபிறை; ஜி. முத்துக்குமார் வேளார், தொலையானூர்
2. இந்த நேர அறிவிப்புப் பலகை கலங்காப்புலிக் கறுப்பர் சந்நிதியில் காணப் பெறுகிறது
3. ஜி. முத்துக்குமார் வேளார்
4. டாக்டர் அ. விசுவநாதன் — 'ஐயனார் வழிபாடு' கட்டுரை, நேமம் குடமுழுக்குவிழா மலர் 1991
5. பெரி. சோமசுந்தரம்
6. 'திருக்கோயில்களில் திருவிளக்குகள் இட்டவர் எய்தும் பேறு, உண்மை மெய்ந்நெறியான ஞானமாகும்' — 4ஆம் திருமுறை

உ

முழுதுமாய்ப் பரந்த முத்துவெள்ளைச் சாத்தர்

(74. முத்துவெள்ளைச் சாத்தையனார் திருக்கோயில், காரிபட்டி, ஊனையூர்)

முத்துச்சிப்பி தன்னிடம் வந்துசேரும் (உறுத்தும்) பொருள்களைத் தன் புறத்தோல் படலத்தால் பொதி(கட்டு)வதன்வழி முத்தினை உருவாக்குகிறது.[1] அதுபோன்று தம்மைச் சரணடைந்த பல வகையான உயிர்களையும், தம் அருள் என்னும் பெருங்கருணையால் ஆட்கொண்டு, அதன்வழி வெண்மையானதொரு கோயில் முத்தினை உருவாக்கி, அதனைப் பரிவுடன் பாதுகாத்து, அதனை நாடும் அன்பர்களுக்கு இகபர நலன்களை அருளி வருகிறார் முத்துவெள்ளைச் சாத்தையனார். வீரப்ப சுவாமி, ஊனையூர்க் கறுப்பர், பண்டாரத்தையா, பன்னி வீரப்பர், பொம்மி, செட்டிச்சி அம்மன், சோனையன் இன்ன பிறர், ஒளி வீசும் வெண்முத்தின் உயர் அடுக்குகளாகத் திகழ்கின்றனர்.

அந்த முத்தினைக் கண்டு மகிழ்ந்து, முத்துவெள்ளைச்சாத்தையனாரின் அருளாசி பெற, நேமத்தான்பட்டிக்கு அருகிலுள்ள ஊனையூருக்குச் செல்கிறோம்.

நேமத்தான்பட்டி - திருமயம் சாலையில், நேமத்தான்பட்டியிலிருந்து 2 கி.மீட்டரில் உள்ள சவேரியாபுரத்தில் (உமையாள்புரத்தருகில்) வலப்புறம் திரும்பும் மண்சாலையில் நெடுந்தொலைவு சென்று கோயிலை அடையலாம். (மேலும் சிறிது தொலைவு சென்று வலப்புறம் திரும்பும் ஊனையூர்ச் சாலையில் சென்றும் கோயிலை அடையலாம்.)

சாலையின் இடப்புறம் முத்துவெள்ளைச் சாத்தையனார் கோயிலும், வலப்புறம் கண்மாயினுள் சோனையன் கோயிலும் உள்ளன. ஐயனார் கோயிலின் இடப்புறம் உள்ள திருக்குளத்தில் இறங்கி, நீண்ட தொலைவு மண் சாலையில் வந்த அழுக்குகளை அகற்றிக் கொண்டு, குளத்தருகே கோயிலுக்குச் செல்ல வடபுற வாயில் இருந்தாலும், முன்வாயில் வழியாகவே கோயிலுக்குள் செல்கிறோம்.

அழகிய தூய்மையான கோயிலில், கல் திருப்பணி செய்யப்பெற்றுள்ள கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகியவற்

றுக்கு நீண்டதோர் ஒட்டுக் கூடத்தின்வழி செல்லவிருக்கும் நேரத்தில், நம் இடப்புறம் (தெற்கில்) ஒற்றைச் சேமங்குதிரை இருப்பதைக் காண்கிறோம். இக்கூடத்தின் நடுவில், ஐயனாரின் யானை வாகனமும், பலிபீடமும் உள்ளன. அருகில் உள்ளதொரு தூணில், செட்டியார் ஒருவரின் சிலை காணப்பெறுகிறது. கானாடுகாத்தான் செட்டியார் ஒருவரின் சிலையான இது, அவரது குடும்பத்தாரால் தனிப்பட்ட முறையில் வைக்கப் பெற்றிருக்கிறதாம்.[2]

மகா மண்டபத்தில், நம் இடப்புறம் (தெற்கில்) உள்ள மூன்று சந்நிதிகளில் வீரப்ப சுவாமி, உனையூர்க் கறுப்பர், பண்டாரத்தையா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். கறுப்பர் அருட்சக்தி மிகுந்தவராம்; வேண்டியவற்றை வேண்டியாங்கு வழங்குபவராம்.

அர்த்த மண்டப நுழைவாயிலின் இருபுறமும் துவார பாலகரும், தெற்கில் உள்ள துவார பாலகரின் அருகில் பழைய ஐயனாரும் உள்ளனர். அப்படியானால் உள்ளே உள்ளவர்? ஆம், அவர் புதியவர்தாம்! ஏறத்தாழ 40,50 ஆண்டுகளுக்கு முன்னர், புதிய ஐயனார் சிலை வைக்கப் பெற்றதாக அர்ச்சகர் கூறுகிறார். 1970ல் ஒருமுறை திருக்குட நீராட்டு நடைபெற்றதாகச் சொல்லப் பெறுகிறது.[3] அவ்வாறானால் 22.08.91ல் நடைபெற்றது, விவரம்



அழகிய கோயிலைக் காண
அதிகத் தொலைவு வந்தால் என்ன?

தெரிந்து நடைபெற்ற மூன்றாவது திருக்குட நீராட்டாக இருக்க வேண்டும்.

கடியாபட்டி, கானாடுகாத்தான், கொத்தமங்கலம் (மாத்தூர் அரும் பாக்கூர்), கோட்டையூர், நேமத்தான்பட்டி, பள்ளத்தூர், பனையப் பட்டி நகரத்தார் சுமார் 450 புள்ளிகள்,[4] நிதி திரட்டிக் கும் பாபிஷேகம் செய்ததாக அர்ச்சகர் கூறுகிறார். இவர்களுடன் காரிப் பட்டி, குளத்துப்பட்டி, திருமயம் வேளார்களும், இக்கோயிலைக் குலதெய்வக் கோயிலாகக் கொண்டு வழிபட்டு வருகின்றனர்.

நகரத்தார்கள் ஆடி மாதத்தின் கடைசி வாரத்திலும், மிகச் சிறப் பாகக் கொண்டாடப் பெறும் மகா சிவராத்திரியின்போதும், சேர்ந்து வந்து இங்கு வழிபடுவது உண்டாம். சிவராத்திரியின்போது நிறை யப் பாலாபிஷேகம் நடைபெறுவதுண்டு. குளத்துப்பட்டியிலிருந்து வேளார்கள் காவடி எடுத்து வருவதும், சாமியாடியான வேளார் அருள்வாக்குச் சொல்வதும், சிவராத்திரியின் சிறப்பு அம்சங்கள்.

அர்த்த மண்டபத்தில் ஐயனாரின் வலப்புறம் விநாயகர் அமர்ந் திருக்கிறார். கருவறையில் பூரணை, புஷ்கலை உடனாய முத்து வெள்ளைச் சாத்தையனார், பெரிய உருவத்துடன் காட்சி தரு கிறார். வெள்ளை (வஞ்சமற்ற) உள்ளத்தினராக வாழ வழி தாரும் என்று ஐயனாரைப் பிரார்த்தித்துக் கொண்டு, பிராகாரத்துக்குச் செல்கிறோம்.

* * *


தெற்குப் பிராகாரத்தில் சேமங்குதிரையை ஒட்டி உள்ளதொரு சந் நிதியில், பன்னி வீரப்பர், பக்கத்தில் பொம்மியுடன் காட்சி தரு கிறார். பன்னி வீரப்பர்...? எங்கோ கேள்விப்பட்ட பெயர் மாதிரி இல்லையா?....மேலும், பன்னி வீரப்பருக்குப் பொம்மியா? அப்படித்தான் என்கிறார் அர்ச்சகர்.

புதுக்கோட்டைச் சீமைக்குப் பன்றி நாடு என்று முற்காலத்தில் பெயர் விளங்கியது; அந்தச் சீமையின் சிறந்த வீரர் வீரப்பன்; இறந்த பின்னர், அவரே பன்றி வீரப்பனாக வழிபடப் பெறுகிறார் என்று, கண்ணன்கார்குடி பேரையூர் நாகலிங்க தர்ம சாஸ்தா கோயிலில் கேள்விப்பட்டதை அதற்குள் மறந்திருக்க மாட்டீர்கள். ஆனால் இதுவோ இராமநாதபுரம் சீமை! இங்கு எப்படிப் பன்றி நாட்டு வீரப்பன்.....?பக்கத்தில் பொம்மி வேறு?....ஒருவேளை மதுரைவீரனின் பொம்மியை, இவர் களவெடுத்து இங்கு கொண்டு வந்து விட்டாரோ?

பன்றி வீரப்பரும், பரிவாரங்களும் அழகிய சிலா வடிவங்கள்; குறிப்பாகப் பொம்மி(என்று சொல்லப் பெறும் அம்மை)சிலை கொள்ளை அழகு! குதிரை மீது மதுரைவீ..(மன்னிக்கவும்!)வீரப்பர் ஓங்கிய அரிவாளுடன் ஒய்யாரமாக அமர்ந்திருக்கிறார்; இருபுற மும் மெய்காவலர்; சேமங்குதிரைகள் தம் முன் கால்களைப் பூதத் தின் தோள்களிலோ, கைகளிலோ வைத்து நிற்பதைப் பார்த்திருக் கிறோம். ஆனால் இங்கு வீரப்பர் குதிரையின் முன் கால்களைத் தம் கைகளால் தாங்கியிருப்பவர், சாதாரண ஒரு மீசைக்காரரே! ஆசாமி, படா பயில்வானாகத்தான் இருக்க வேண்டும்! இது வடக் குப் பார்த்த சந்நிதி.

தென் பிராகாரத்தின் கோடியில் உள்ள கிழக்குப் பார்த்த சந்நிதியில், விநாயகரும், கன்னிப் பெண்களும், சந்நிதியின் வெளி மண்டபத்தில் இருக்க, உள்ளே செட்டிச்சி அம்மன் கோயில் கொண்டிருக்கிறார். இவர் தேவகோட்டை நகரத்தாரின் குலதெய்வமாம். அவர்கள் இச்சந்நிதியில் சிறப்பு வழிபாடு செய்கின்றனர் என்று அர்ச்சகர் சொல்கிறார்.

அடுத்து வடக்குப் பிராகாரத்துக்குச் செல்கிறோம். தெற்கில் உள்ள செட்டிச்சி அம்மன் சந்நிதியின் நேருக்குச் சுப்பிரமணிய சுவாமி சந்நிதி உள்ளது; கல் திருப்பணி. இப்பிராகாரத்தில் உள்ள நுழை



வீரருக்குக் கிடைத்த வெற்றிப் பரிசு

வாயிலை ஒட்டி பைரவர் சந்நிதியும், திருமஞ்சனக் கிணறும் உள்ளன. ஐயனாரால் ஆட்கொள்ளப்பெற்ற ஆவரண தேவதைகளாகிய வெண்முத்தின் ஒளி உமிழும் பல அடுக்குகளைப் பார்த்துக் கொண்டு, கோயிலுக்கு எதிரில் கண்மாயினுள் உள்ள சோனையன் கோயிலுக்குச் செல்கிறோம்.

* * *

நாம் செல்லும் நேரத்தில் கண்மாயில் நீர் இல்லையாயினும், நீர் நிறைந்திருக்கும் நாட்களில் சோனையனைத் தரிசிப்பதற்கெனச் சாலையிலிருந்து பாலம் ஒன்று அமைக்கப்பெற்றுள்ளது. கொத்தமங்கலம் நகரத்தார் பெருமகனார் ஒருவரின் திருப்பணி இக்கோயில். உள்ளே, அருகில் நாயுடன் காட்சி தரும் சோனையன், கொத்தமங்கலம் நகரத்தார்களின் குலதெய்வமாகத் திகழ்கிறார். முன்பு நாம் கண்ட ஊனையூர்க் கறுப்பரும், இந்தச் சோனையனும், அருட்சக்தி நிறைந்தவர்கள்! இவர்களிடம் முறையிட்டால் நிச்சயம் நீதி கிடைக்கும் என்று அர்ச்சகர் திட்டவட்டமாகக் கூறுகிறார். இவருக்குச் சாராயம், பொரி கடலை, சர்க்கரை ஆகியவை நிவேதனம் செய்யப்பெறுகின்றன.[5]

இந்து அறநிலையத்துறைக் கோயிலான இங்கு நாள்தோறும் காலை, உச்சிக்காலம், மாலை ஆகிய மூன்று வேளைகளிலும் பூசைகள் நிகழ்கின்றன. ஒருகாலப்பூசையே ஒழுங்காக நடைபெறாத கோயில்களிடையே மூன்று காலப் பூசை நடைபெறுவது என்பது, சிறப்பானதொரு செய்திதான்!

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

முன்னேஎம் பெருமானை மறந்தென்கொல், மறவா(து)
ஒழிந்தென்கொல், மறவாத சிந்தையால் வாழ்வேன்,
பொன்னே!நன் மணியே!வெண் முத்தே!செம் பவளக்
குன்றமே! ஈசன்என்(று) உன்னியே புகழ்வேன்,
அன்னே!என் அத்தா!என்(று) அமரரால் அமரப்
படுவானை, அதிகைமா நகருள்வாழ் பவனை,
என்னே,என் எறிகெடில வடவீரட் டானத்(து)
உறைவானை, இறைபோதும் இகழ்வன்போ லியானே.

திருச்சிற்றம்பலம்

— 7 ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

1. கலைக்களஞ்சியம்
2. கோயில் அர்ச்சகர்
3. அண. பெரிச்சியப்பன், கொத்தமங்கலம்
4. அண. பெரிச்சியப்பன்
5. அண. பெரிச்சியப்பன்

உ

பூக்கள் கொண்டவர் பொன்னடி போற்றினால், காப்பர் நம்மைக் கரைமேல் அழகரே!

(75. கரைமேல் அழகர் ஐயனார் திருக்கோயில், கானாடுகாத்தான்)


பின்னிக் கொண்டிருக்கும் இரு ஐந்தலை நாகங்களிடையே, பாற் கடலில் பள்ளிகொண்ட பரந்தாமன், சுப்பிரமணியர் ஆகிய திரு வுருவங்களை முன்னர் வேறு கோயில்களில் கண்ட நாம், ஐயனா ரையும், இரு தேவியர் சமேதராகக் காணக், கானாடுகாத்தானில் உள்ள கரைமேல் அழகர் ஐயனார் கோயிலுக்குச் செல்கிறோம். சிற்பம் தெளிவாக இல்லாவிட்டாலும் புதுமையாக இருக்கிறது. இருபுறமும் பூரணை, புஷ்கலா தேவியர் ஒரு காலை மடித்து, மறு காலைத் தொங்கவிட்ட நிலையில் அமர்ந்து, வலக்கரங்களில் மலர் மொக்குகளை ஏந்தியிருக்கின்றனர். நடுவில் ஐயனார் வலக்கரத் தில் செண்டு ஏந்தி அமர்ந்திருக்கிறார். இது, கோயிலின் நடுவில் உள்ள மகா மண்டபத்தில் காணப்பெறுகிறது.

* * *

ஊனையூர் முத்துவெள்ளைச் சாத்தையனார் கோயிலிலிருந்து கானாடு காத்தானுக்கு வந்து, அங்கிருந்து பெரிய கோயில் சாலையில் வயல் களிடையே சுமார் 1 கி.மீ சென்று, சாலையின் இடப்புறமுள்ள கரைமேல் அழகர் கோயிலை அடைகிறோம். கானாடுகாத்தான் பெரிய கோயில் என்பது, தென்னை மரங்கள் நிறைந்த இந்தப் பகுதியின் பெயர். சிவன், அம்மன், பெருமாள், ஐயனார் கோயில் கள் இந்தப் பகுதியில் அமைந்திருப்பதால், பெரிய கோயில் என்று அழைக்கப்பெறுகிறது போலும்.

அமைதியான சூழல்; அழகான — தூய்மையான கோயில்; மன நிறைவு ஏற்படுகிறது! மகிழ்ச்சி பொங்குகிறது! வடக்குப் பார்த்த சேமங்குதிரை நம்மைப் பிரமிக்க வைக்கிறது. பெரியது; வேலைப் பாடு நிறைந்தது! கழுத்து நிறைய மணிகள்; தீயோரை ஒறுத்து, நல்லோரைக் காக்க, எந்த நேரத்திலும் ஆயத்தமாகக் (கேடயம், அம்பறாத்தூணி, வில் ஆகியவை கூட ஆயத்தமாகச் சேணத்தில் இணைக்கப்பெற்றுள்ளன.) கனைத்துக் கொண்டு நிற்

சிறது. இரு சிவ பூத கணங்களின் கைகளில் உள்ள கேடயங்களின் மீது, தன் முன் கால்களை வைத்துக் குதிரை நிற்கிறது. குதிரையின் கீழ் முன்புறம் காணப்பெறுபவர்தாம் மதுரைவீரன், வெள்ளை யம்மாள், பொம்மியாக இருப்பரோ? அது என்ன அந்த ஆடவர் (மதுரைவீரனா?) அப்படி நிற்கிறார்? யாராவது சிறிது துணி கொடுங்களேன்!



வேலைப்பாடு மிகுந்த வெற்றிக் குதிரை

நுழைவாயிலின் மீது கஜலட்சுமி சுதைச் சிற்பம். இருபுறமும், குதி ரையைப் போன்றே பெரிய பூதங்கள். (உள்ளுவதெல்லாம் உயர் வுள்ளல் போலும்!) சேமங்குதிரை, பூதங்கள் அனைத்துக்குமே பாதுகாப்புக் கம்பிகள் பொருத்தப் பெற்றுள்ளன.

விவரம் தெரிந்தவரை 28.10.1955ல் முதன் முறையும், 27.03.78ல் இரண்டாவது முறையும் திருக்குட நீராட்டு நடைபெற்றிருக்கிறது. இரண்டாவது குடமுழுக்கு நடைபெற்று ஏறத்தாழப் பதினாறு ஆண்டுகள் ஆகியும் கோயிலும்,சேமங்குதிரை, பூதங்கள் ஆகியவை யும், புதியன போலவே காட்சியளிக்கின்றன. முன்பு திருச்சுற்றுச் சுவர், தளவரிசை இல்லாது இருந்த இந்த நகரத்தார் பராமரிப்புக் கோயிலில், கானாடுகாத்தான், பள்ளத்தூர் ஆகிய ஊர்களின் இரணியூர்க் கோயில் பங்காளிகள், நிதி திரட்டித் தேவையான

அனைத்தையும் செய்து வருகின்றனர். மின்சார வசதிகளையும் இப்போது புதுப்பித்துக் கொடுத்துள்ளனராம்.[1]

கல் திருப்பணியான மகா மண்டபத்துக்கு முன்னால் உள்ள ஓட்டுக் கூடத்தில் யானையும், பலிபீடமும் உள்ளன. மகா மண்டபத்தில் கருவறையின் எதிரே, நாற்கால் மண்டபம் ஒன்று மேடையுடன் காணப்பெறுகிறது. அதன் ஒரு தூணில், (கல் திருப்பணி செய்தவ ராக இருக்கக் கூடுமோ?) கானாடுகாத்தான் சாத்தப்ப செட்டியாரின் சிலை காணப் பெறுகிறது. இந்த மகா மண்டபம், மற்றும் சந்நிதி களின் விமானங்கள் யாவுமே வேலைப்பாடு நிறைந்து விளங்கு கின்றன.

அர்த்த மண்டப நுழைவாயிலின் இருபுறமும் துவார பாலகரும், நாகர்களும் இடம் பெற்றிருக்க, அர்த்த மண்டபத்தில் விநாயகர் அமர்ந்திருக்கிறார். கருவறையில் கரைமேல் அழகர், இரு மருங்கும் தேவியர் இடம் பெற்றிருக்க, அமர்ந்திருந்து அருள் பாலிக்கிறார். மூலவர் இரண்டாவது தலைமுறையினராகவே இருக்க வேண்டும். ஏனெனில் மேற்குப் பிராகாரத்தில் மற்றோர் ஐயனார் சிலை காணப்பெறுகிறது.

அழகிய அண்ணலுக்குச் செய்யப் பெற்றிருக்கும் அலங்காரத்தைக் கண்ட பின்னர், 'விண்ணவரொடு மண்ண வர்தொழ, அண்ண லாகிநின்றார் அவரே அழகியரே!'[2] என்றுதான் எண்ணத் தோன்று கிறது.

இந்த அழகிய ஐயனார் கோயிலில் திருவிழாக்கள் ஏதும் நடப்ப தில்லை என்றாலும், வைகாசி மாதம் இரண்டாவது திங்கட்கிழமை யன்று, அருகிலுள்ள பொன்னழகியம்மன் கோயிலில் திருவிழா நடைபெறும்போது, ஊரார் இங்கு புரவி கொண்டு வந்து வைப் பார்களாம். மேலும் நகரத்தார் வழங்கும் பணத்திலிருந்து மாசி மாதத்தில் சிவராத்திரி மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெறு கிறது.

முன்னர் குறிப்பிட்ட இரு ஊர் நகரத்தார்களும், வைகாசி மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை இங்கு வந்து வழிபாடு செய்கிறார்கள். உயிர்ப்பலி கொடுக்காது, பாலாபிஷேகம் செய்து, பட்டுச் சாத்திப், பொங்கல், சுண்டல் நிவேதனம் செய்து அவர்கள் வழிபடுகின் றனர். இந்த வைகாசி மாத வழிபாடு, 78ஆம் ஆண்டில் நடை பெற்ற திருக்குட நீராட்டு விழாவை ஒட்டி மேற்கொள்ளப் பெறு கிறது.

வைகாசி மாத இரண்டாவது திங்கட்கிழமையன்று, நாவினிப்பட்டி யிலுள்ள ஆத்தங்குடிச் செட்டியார்கள் இந்த வழிபாட்டினைச் செய்கின்றனர்.[3] (அட்டப்பட்டி, நாவினிப்பட்டி ஆகிய ஊர்களி லுள்ள ஆத்தங்குடிச் செட்டியார்கள் இந்தக் கோயிலைக் குலதெய் வக் கோயிலாகக் கொண்டிருந்தாலும், நாவினிப்பட்டியில் உள்ள வர்களே, கடந்த பதினேழு ஆண்டுகளுக்கு மேலாக இந்த வருஷா பிஷேக வழிபாட்டினைக் கானாடுகாத்தான், பள்ளத்தூர் நகரத் தார்கள் செய்த பின்னர், அடுத்த திங்கட்கிழமையன்று மேற் கொண்டு வருகின்றனர்.)

யார் இந்த ஆத்தங்குடிச் செட்டியார்கள்?

இவர்கள் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர், கானாடுகாத்தான், சூரக்குடிப் பகுதிகளில் வாழ்ந்தவர்கள். நகரத்தார்களுடன் ஏற் பட்ட கருத்து வேறுபாட்டினால் (புள்ளிவரி, கோயில்வரி ஆகிய வற்றைத் தாங்க முடியாத நிலை ஏற்பட்டதனால், கருத்து வேறு பாடு ஏற்பட்டது என்கிறார் சின்னக்கறுப்பன் செட்டியார்.) அவர் களிடமிருந்து பிரிந்து, மேலூரைச் சுற்றியுள்ள நாவினிப்பட்டி, வல்லாளப்பட்டி, கொட்டக்குடி, அட்டைப்பட்டி, ஏரியூர், கீழூர் போன்ற ஊர்களில் குடியேறினர். இருப்பினும், ஆண்டுதோறும் கரைமேல் அழகரை வழிபடுவதை, அவர்கள் தங்கள் தலையாய கடமையாகக் கொண்டிருக்கின்றனர்.[4]

ஆண்டுதோறும் இந்த வழிபாட்டினை நடத்தத் தொடங்கியதிலிருந்து, (''அட்ரஸே இல்லாதிருந்தவர்கள் எல்லாம்,'') இன்று படிப்படியாக நன்னிலைக்கு வந்து கொண்டிருக்கிறோம் என்கிறார் நாவினிப் பட்டிப் பெரியவர். கோயிலைச் சுற்றியுள்ள தென்னை மரங்கள், அவர்கள் வசூலித்துக் கொடுத்த பணத்திலிருந்து பயிர் செய்யப் பெற்றவைதாம். நாவினிப்பட்டி ஆத்தங்குடிச் செட்டியார்கள் வழி படும் நாளில், பெண்கள் பானை உண்டியல் ஏந்திக், காணிக்கை யாகப் போடப்பெறும் பணம், பொருள்களை, அப்படியே நகரத் தார்களிடம் ஒப்படைத்து விடுகின்றனராம். நகரத்தார்களும் எங் களுக்கு நல்ல ஒத்துழைப்பு நல்கி வருகின்றனர்; உதவிகளைச் செய் கின்றனர் என்று அந்தப் பெரியவர் பெருமிதத்துடன் கூறுகிறார்.

அவர்கள் வீடுகளில் குழந்தை பிறந்தால் (''இருப்பவனோ, இல் லாதவனோ'') முதல் முடி இங்குதான் இறக்குகிறார்களாம். திரு மணங்களுக்கு முன்னர் அழைப்பிதழை ஆண்டவனின் பாதத்தில் வைத்து வழிபட்டுச் செல்கின்றனர். தங்கள் வாழ்வை மலரச் செய்த கரைமேல் அழகர், நகரத்தார்களுடன் தங்களுக்குள்ள உறவை மேலும் வலுப்படுத்தும் நாள் எந்நாளோ என்று, ஆவலுடன் அவர்கள் காத்திருக்கின்றனர்.

* * *

ஐயனாரின் வலப்புறம் உள்ள ஸ்தூபியுடன் கூடிய மாடத்தில் ஆஞ்சநேயர் காணப்பெறுகிறார். அடுத்துத் தெற்குப் பிராகாரத் துக்குச் செல்கிறோம்.

கல் திருப்பணி செய்யப்பெற்ற முதல் மூன்று சந்நிதிகளில், நொண் டிக் கறுப்பர், குழந்தையுடன் பேச்சியம்மன், காளியம்மன், சின்னக் கறுப்பர், பெரிய கறுப்பர் ஆகியோரும், அடுத்துள்ள கல் திருப் பணி செய்யப் பெற்றுள்ள சந்நிதியில், உள்ளே பதினெட்டாம்படிக் கறுப்பரும் இடம் பெற்றுள்ளனர். பதினெட்டாம்படிக் கறுப்பருக்கு உயிர்ப்பலி கொடுத்தால், எறிசோறு போடுவது உண்டாம். இவரு டைய சந்நிதியின் வெளிப்புறத்தில், நகரத்தார் பெண்ணான தேனாத்தாள் சிலை உள்ளது. கையில் தாமரை மொட்டுடன், அமர்ந்த நிலையில் அம்மையார் காணப்பெறுகிறார். இவரைப் பற்றிய வேறு விவரம் சொல்வார் யாருமிலர்! கிடைத்தாலும், 'கோயிலுக்கு வந்தார்!; வந்த இடத்தில் ஆண்டவனுடன் ஐக்கிய மாகி விட்டார்' என்னும் பழங்கதையாகத்தான் இருக்கும்!

இவளரத் தேனாத்தாள், நாச்சாத்தாள் என இரு வகையாக அழைக் கின்றனர். நகரத்தார்கள் நாச்சாத்தாள் என்றும், ஆத்தங்குடிச் செட்டியார்கள் தேனாத்தாள் என்றும் சொல்கின்றனர். இப்பெயர் களுக்கு ஏற்ப, அவரவரும்' பிள்ளைகளுக்கு நாச்சம்மை என்றும், தேனம்மை, தேனாத்தாள், தேனி என்றும் பெயரிடுகின்றனர்.

இச்சந்நிதியில் தூணில் உள்ள சிலை அந்தச் சந்நிதியைக் கட்டியவர் என்று கருதப்பெறும் பள்ளத்தூர் அருணாசலம் செட்டியார் என் பவருடையதாம். இதனை அடுத்து வீரபத்திரர் சந்நிதி உள்ளது. திருச்சுற்றுச் சுவருடன் இணைந்ததொரு சந்நிதியில் பேச்சிமுத்து அம்மன் காணப்பெறுகிறார்.



அலங்காரப் படங்களின் அழகிய தொகுப்பு

மேற்குப்பிராகாரத்தில்வடக்குத் திசையை ஒட்டிச் சிதைந்து போன காளியம்மனின் மண் சிலையும், ஐயனார் சிலையும், மாடத்தில் சப்த கன்னியர் சிலையும் உள்ளன. வடக்குப் பிராகாரத்தில் அர சிம்மம், சந்நியாசி, பைரவர் ஆகியோர் தனித்தனிச் சந்நிதிகளில் உள்ளனர்.

* * *

ஒவ்வொரு நாளும் காலை 9 மணி முதல் 12 மணி வரை கோயில் திறந்திருக்கும் நேரத்தில் ஒரு காலப் பூசையும், மாலை 4 முதல் 6 மணி வரை நடை திறந்திருக்கும்போது, இரண்டாவது பூசையும் நடைபெறுகின்றன. இடைப்பட்ட நேரத்தில் கோயிலுக்கு வருவோர், வடகுடிப்பட்டியிலிருந்தோ , நேமத்தான்பட்டியிலிருந்தோ வேளாரை அழைத்து வர வேண்டும்.

கடந்த பத்தாண்டுக் காலமாக நகரத்தார்கள் ஒருவேளைப் பூசைக்குப் படித்தரமாக நாள்தோறும் அரிசி, வாழைப்பழம், சூடம், சாம்பிராணி ஆகியவற்றைக் கொடுக்கின்றனர்; மேலும் ஒவ்வொரு நாளும் சிப்பந்திகளுக்குச் சம்பளமும் கொடுக்கப் பெறுகிறதாம். நகரத்தார்களில் ஒருவர், கோயிலுக்கென உள்ள நிதியிலிருந்து கோயிலை நிர்வகித்து வருகிறார்.

நகரத்தார் வீடுகளில் திருமணம் நடைபெறும்போது கோயிலுக்கு விதைப்புக் கொடுப்பது உண்டாம். அர்ச்சகர்கள் திருமண நாளன்று தீர்த்தம் கொண்டு போய்க் கொடுத்து வருவர். நகரத்தார்கள் தங்கள் குழந்தைகளுக்கு முடி இறக்குவதற்கு ஐந்தேகால் ரூபாய் காணிக்கை செலுத்துகின்றனர். அந்தப் பணம் கோயில் நிதியில் சேர்க்கப் பெறுகிறது. கோயிலுக்கு எதிரில் சாலையின் மறுபுறம் நகரத்தார் விடுதி உள்ளது.

அழகும், அமைதியும் ஒன்று சேரும்போது, அடியார் மனம் ஆண்டவனிடத்து ஐக்கியமாவதில் வியப்பென்ன?

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

வெய்யவினை நெறிகள்செல, வந்தணையு
    மேல்வினைகள் வீட்டலுறுவீர்!
மைகொள்விரி கானல்மது வார்கழனி
    மாகறல்உ ளான்,எழிலதார்
கையகரி கால்வரையின் மேலதுரி
    தோலுடைய மேனிஅழகார்
ஐயன்அடி சேர்பவரை அஞ்சிஅடை
    யாவினைகள் அகலுமிகவே.

திருச்சிற்றம்பலம்

— 3 ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

1. கோயிலைப் பற்றிய தகவல்களைத் தெரிவித்தோர்: அர்ச்சகர்கள்: மு. வைத்திலிங்க வேளார், மு. அடைக்க வேளார், வடகுடிப்பட்டி
2. 'விண்ணவரும், மண்ணவரும் தொழுமாறு தலைவராகி நின்ற அவரே, யாவரினும் அழகுடையவர்' — 7 ஆம் திருமுறை
3. நாவினிப்பட்டி சின்னக்கறுப்பன் செட்டியார் வழங்கிய தகவல்கள்
4. செட்டிநாடும் செந்தமிழும் — சோமலெ

உ

குறைவிலா நிறைவே, குருந்துடை ஐயனே!

(76. குருந்துடைய ஐயனார் திருக்கோயில், ஆதனூர்)

பண்டைத் தமிழர், தாம் வாழும் நிலத்தை ஐந்திணை[1] யாகப் பிரித்து, அவை ஒவ்வொன்றிலும் ஒரு கடவுளை முதன்மையாகக் கொண்டு வழிபட்டு வந்தபோது, வயலும் வயல் சார்ந்த இடமுமான மருத நிலத்தின் கடவுளாக வழிபடப் பெற்ற இந்திரனுக்குக், காவிரிப் பூம்பட்டினத்தில் வெகு சிறப்பாக விழாக் கொண்டாடப் பெற்றது. அகத்திய முனிவரின் ஆணையின்படி, தூங்கெயில் எறிந்த (அசைகின்ற மதில்களை அழித்த) தொடித் தோட்செம்பியன் (வீர வளை அணிந்த தோள்களை உடைய சோழன்), இந்திரனை வேண்டி, அவன் உடன்பாட்டுடன் இருபத்தெட்டு நாள் தீவகச்சாந்தி என்னும் இந்திரவிழாவினை நடத்தி வந்தான். சிறப்புற நடந்து வந்த இந்த இந்திரவிழாவினை நெடுமுடிக்கிள்ளி என்னும் சோழன் 'விழாக்கோள் மறப்ப' (இந்திரவிழாவினை மறக்க), அதனால் சினமுற்ற இந்திரன் 'இடு சாபத்து,நகர்கடல் கொள்ள'ப் (இந்திரன் இட்ட சாபத்தால் காவிரிப்பூம்பட்டினத்தைக் கடல் கொண்டு ஒழிய) பட்டது என்று மணிமேகலை கூறுகிறது.[2]

இதுபோன்று, மேகங்களுக்கு அதிபதியான இந்திரனுக்கு ஆயர் குலத்தாரும் ஆண்டுதோறும் விழாவெடுத்து வந்தனர். இதனால் இந்திரனுக்கு ஏற்பட்ட செருக்கை அடக்க எண்ணிய கண்ணன், இந்திரனுக்கு விழா எடுக்காமல், ஆயர்களின் நல்வாழ்வுக்குக் காரணமான மலைக்கு — கோவர்த்தனகிரிக்கு விழாக் கொண்டாடுமாறு கூறினான்.[3] கோபங்கொண்ட இந்திரன், ஏழு மேகங்களை[4] யும் அழைத்து, ஆயர்பாடியை அழிக்க உத்திரவிட்டான். ஆயர்களையும், ஆநிரைகளையும் அழைத்துச் சென்று, கோவர்த்தன மலையை உயர்த்தி, ஏழு நாட்கள் இடைவிடாமல் பெய்த மழை, அடித்த காற்று ஆகியவற்றிலிருந்து கண்ணன் அவர்களைக் காத்தான்; இந்திரனின் கர்வத்தைக் குலைத்தான்.[5]

இவ்வாறு அழிவுக்கே காரணமாயிருக்கும் இந்த இந்திரன் யார்?

காசிப முனிவருக்கு அதிதி தேவியிடம் பிறந்த பன்னிரு புத்திரர்களுள் ஒருவன்; நூறு அஸ்வமேத யாகங்கள் செய்து, இந்த இந்திரப்

பதவியை அடைந்தான். இந்திரன் ஒருவன் அல்லன், 'எண்ணிலி இந்திரர்' (எண்ணற்ற இந்திரர்) என்கிறார் மணிவாசகப் பெருமான்; 'நீர் பொங்கிப் பெருகும் கங்கையாற்று மணலை விட எண்ணிக்கையற்ற இந்திரர்' என்பர் அப்பர் சுவாமிகள்.[6]

வயலும் வயல் சார்ந்த இடமுமான மருத நிலக் கடவுள் என்னும் காரணத்தால்(?), இந்த இந்திரனுக்கும் ஒரு சந்நிதி ஈந்துள்ள குருந்துடைய ஐயனார் கோயிலைக் கண்டு வழிபட, ஆதனூருக்குச் செல்கிறோம்.

திருநாளைப்போவார் நாயனார் என்னும் நந்தனார் அவதரித்ததும் (சோழநாட்டின்) ஆதனூர்தான். ''வயல்வளமும், செயல்படும் தோட்ட வளமும் பெருகத் திருமகள் வாழும் ஊர் ஆதனூர்'' என்று சேக்கிழார் பெருமான் அவ்வூரை வருணிப்பர். ஆனால் நாம், நேமத்தான்பட்டி — கோனாபட்டு சாலையில், கோனாபட்டிலிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் இடப்புறம் பிரியும் மண் சாலையில் திரும்பிச் சிறிது தூரம் சென்று, இந்த (ப் பாண்டி நாட்டு) ஆதனூரை அடைந்து, குருந்துடைய ஐயனார் கோயிலுக்குச் செல்கிறோம்.

அரண்மனைப்பட்டி, குருந்தம்பாளை, சுப்ராண்டிப்பட்டி, செம்பிரான்பட்டி, நைனாப்பட்டி, பெரிய உடைவளம், சிறிய உடைவளம் என்னும் ஏழு ஊர்களுக்கும் உரிய ஐயனார் கோயில் இது ஒன்றுதான். எனவே, உலகம்பட்டி, கோனாபட்டு நகரத்தார்களுடன், இந்த ஏழு ஊர் மக்களும் இக்கோயிலைக் குலதெய்வக் கோயிலாகக் கொண்டு வழிபடுகின்றனர். ஆனால் யாருமே கோயிலின் சிறப்பில் கவனம் செலுத்துவதில்லையோ என எண்ணத் தோன்றுகிறது.

1926ஆம் ஆண்டில் உபயம் செய்யப்பெற்ற மணி ஒன்றினைக் கொண்டிருக்கும் இக்கோயிலில், ஏழூர் மக்களின் முயற்சியால், 01.07.74ல் திருக்குட நீராட்டு நடைபெற்றிருக்கிறது. அழகிய சந்நிதிகள் உள்ளன; அருள்மழை பொழியும் ஐயனார் உள்ளார். இருந்தும், சுற்றுச் சுவர் இல்லை; பராமரிப்பு இல்லை; பாதுகாப்பும் இல்லை.

சந்நிதிகளும், பூதங்களும், சேமங்குதிரைகளும் ஆங்காங்கே நிறுத்தி வைக்கப் பெற்றிருப்பது போன்ற ஒரு தோற்றம். இருபது ஆண்டுகள் என்பது ஒரு நீண்ட இடைவெளி; பழைமையடைந்து விட்ட கோயிலைப் பராமரிப்பது, பக்தர்களின் பொறுப்பில்லையா? வாய்ப்பும், வசதியும் இல்லாததே கோயிலின் இந்த நிலைக்குக் காரணம் என்கிறார் அர்ச்சகர்.[7]

* * *

கோயிலையும், குளம் ஒன்றினையும் பிரித்து நிற்கிறது, நாம் இங்கு வந்த சேர்ந்த சாலை. இது கோயிலின் பின்புறந்தான். முன்புறத்திலிருந்து கோயிலைப் பார்த்து வருவோமே?

இரு பெரிய துவார பூதங்கள்,''இதுதான் கோயிலின் நுழைவாயில், உள்ளே செல்லுங்கள்; ஆனால் காவல் இல்லையே என்று கருதி விடாதீர்கள்; நாங்கள் இருக்கிறோம், கவனம்!'' என்று சொல்வது போன்று நின்று கொண்டிருக்கின்றன. அவற்றை அடுத்துள்ள

(சேமங்) குதிரைகளைத் (மற்ற கோயில்களில் உள்ளவை போன்றில்லாமல், புரவி எடுப்பு மண் குதிரைகள் போன்ற தோற்றமுடையவை.) தொடர்ந்து, இரு புறமும் பல சந்நிதிகள் உள்ளன. அவற்றைப் பார்க்குமுன்னர், மூலவரைத் தரிசித்து வந்து விடுவோமா?

ஒரு புறம் அடைக்கப்பெற்றும், இரு புறங்களில் திறந்துமுள்ள கல் மண்டபத்தில் கருவறை அமைந்திருக்கிறது. இம்மண்டபத்தின் முன்னால் உள்ள விமானத்துடன் கூடிய சிறியதொரு மண்டபத்தில் இரு யானைகள் கீழேயும், பலிபீடம் உயரத்திலும் உள்ளன.

மண் சிலைகளான துவார பாலகர், அர்த்த மண்டபத்தின் நுழைவாயிலில் காணப்பெறுகின்றனர். மகா மண்டபத்தின் மேல் விதானத்தில் பன்னிரு இராசிகள் பொறிக்கப் பெற்றுள்ளன. அர்த்த மண்டபத்தில் விநாயகரும், கருவறையில் குருந்துடைய ஐயனாரும் காட்சி தருகின்றனர். இங்கு தேவியர் இல்லாத குறையை, மகா மண்டபத்தின் மேல் உள்ள சுதைச் சிற்பத்தில் நிவர்த்தி செய்திருக்கின்றனர்.

தவமாகிய கிளைகள் பரப்பித், தருமமாகிய இலைகள் நிறைந்து, மெய்ஞ்ஞானமாகிய பூக்கள் பூத்துக் குலுங்கும் அறிஞர்களை ஒத்த அழகு பொருந்தியதொரு குருந்த மரத்தடியில்தான் மணிவாசகப் பெருமானுக்கு, அண்ணல் அருட்காட்சி தந்தார்.[8] அது போன்று காட்டுப் பகுதியில் பூத்துக் குலுங்கிய குருந்த மரம் ஒன்றின் அடியில் சுயம்புவாக இருந்த ஐயனும், அங்கு வேட்டையாட வந்த வேட்டுவர்களுக்குக் (கண்ணப்பருக்குக் காட்சி கொடுத்தது போன்று) காட்சி கொடுத்தார். குளத்துப்பட்டி வேளார்கள் கோயில் அமைத்தனர். இப்போது மூலவர் உள்ள இடமே சுயம்பு மூர்த்தி வெளிப்பட்ட இடம். இந்தத் தல வரலாற்றினை மகா மண்டபச் சுவரில் சித்திரமாக்கியுள்ளனர்; பாராட்ட வேண்டிய பணி!

இனிப் பிராகாரத்தில் உள்ள பரிவார தெய்வங்களைப் பார்த்து வருவோமா? அடுத்தடுத்து உள்ள இரு சந்நிதிகளில், சின்னக் கறுப்பர், மூகாக்கறுப்பர், அடுத்துள்ள சந்நிதியில் இரு ஆஞ்சநேயர், அடைக்கலங்காத்தவர், விநாயகர், அடுத்துள்ள சந்நிதியில் அரவாண்டிப் பிள்ளையார், பிர்மா (பிரம்மா) ஆகியோர் உள்ளனர். திலோத்தமையைப் படைத்த பிரம்மா, அவளது அழகில் மயங்கிப் போய் அவளை விரும்பியபோது, அவள் மருண்டு நாலாபக்கமும் ஓடினாளாம்; அவர் திக்குக்கு ஒரு முகம் கொண்டு நான்முகன் ஆனாராம்.[9] கதை வேடிக்கையாக இல்லையா?

மேற்கே, நாகராஜா, மண் சிலையான தேவேந்திரன், மோகினி அம்பாள், தேவியருடன் சுப்பிரமணியர் ஆகியோர் உள்ளனர். தேவேந்திரன் தம்முடைய வெள்ளை யானையான ஐராவதத்தின் மீது அமர்ந்திருக்கக் காண்கிறோம். திருமால் மோகினி வடிவங் கொண்ட போதுதானே ஐயனார் அவதரித்தார்? அந்த அடிப்படையிலேயே மோகினியை இங்கு வைத்துள்ளனர் போலும். சுப்பிரமணியர் கற்படிமம்; தேவியர் இன்னமும் மண் சிலையாகவே உள்ளனர்.

வடக்கே சந்திரன், பைரவர், கானாட்டுக் கறுப்பர், பெரிய நாயிகை (பெரிய நாயகியாக இருக்க வேண்டும்), சின்னப்பிளாயி அம்மன்



எண்ணிலி இந்திரரில் இவர் ஒருவர்

(சின்னப் பிள்ளை அம்மனாக இருக்கலாம்), தச்சமயன், கறுப்பர் ஆகியோர் உள்ளனர். தச்சமயன் என்பவர் அசுரர்களின் தச்சன். தருமபுத்திரருக்குச் சபை நிருமித்துக் கொடுத்தவன் இவனே என்பர்.

ஒவ்வொரு நாளும் மூன்று காலப் பூசை நடைபெறும் இக்கோயி லில், மார்கழி மாதத்தில் திருப்பள்ளி எழுச்சியும் நடைபெறுகிறது. சிவராத்திரியை ஒட்டிக் காவடி எடுத்தல், சந்தனக்குடம், பாற் குடம் ஏந்துதல், கூத்து ஆகியவை, ஏழூராரின் ஆதரவில் நடை பெறுகின்றன. இக்கோயிலுக்கு அடிமைப்பட்ட நகரத்தார்கள் சிவ ராத்திரிக்கு வந்து வழிபடுவதைத் தவிர, மற்ற நாட்களில் அவரவ ரும் தனித்தனியாகவே வந்து வழிபடுகின்றனர்.

நகரத்தார்கள் தம் வீடுகளில் நடைபெறும் திருமணங்களுக்கு முன்னும் பின்னும் இங்கு வந்து வழிபடுவதோடு, பிறந்த குழந்தைகளுக்கு முடி இறக்கிக், காது குத்திப், பெயர் இட்டு, மாவிளக்கு வைத்து வழிபடுகின்றனர்.

* * *

குருந்துடைய ஐயனார் கோயிலிலிருந்து கிழக்கே செல்லும் மண் சாலையில் சிறிது தொலைவு சென்றால், இக்கோயிலைச் சேர்ந்த பப்பரவன் காளியம்மன் கோயில் இருக்கிறது. ஐயனார் கோயிலில் உச்சிக்காலப் பூசைக்குப் பின்னர், அந்தக் கோயிலின் பூசை முறை வேளார், அபிஷேகத்திற்கான நீர், நிவேதனம் ஆகியவற்றை அங்கிருந்து எடுத்து வந்து, இங்குள்ள மூர்த்தங்களுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்கிறார். மிகப் பழைய — சிறிய கோயிலின் இருபுறம் சாலைகளும், ஒரு புறம் வயல்களும், ஒரு புறம் மரங்களும் உள்ளன.

ஐயனாரை வழிபடும் அனைவரும் இங்குள்ள பப்பரவனையும் வழிபடுகின்றனராம். பப்பரவன், முனியன் போன்றவர் என்கின்றனர். பப்பரவன் என்பதற்குப் பருத்தது என்று பொருள் கூறப் பெறுகிறது. பப்பரம் என்பது 56 தேசங்களில் ஒன்று (குஜராத்) என்றும், புளியமர வகை என்றும் பொருள் சொல்கின்றனர். இவை இங்குள்ள மூர்த்தத்திற்கு எப்படிப் பொருந்தி வருகின்றன என்று தெரியவில்லை.

இங்குள்ள பப்பரவன் காளியம்மன், சிறந்த பிரார்த்தனைத் தெய்வமாகத் திகழ்கிறாள். ஐந்தேகால் பணம் படிகட்டிக் குறைகளைத் தெரிவித்தால், அவற்றை அன்னை நிவர்த்தி செய்து தருவாளாம். வெற்றி கிட்டிய பின்னர் ஆறேகால் அல்லது பனிரெண்டரை ரூபாய் காணிக்கை செலுத்துவராம்.[10]

பப்பரவனின் வலப்புறம் முனீஸ்வரரின் சிறிய மண் சிலை ஒன்று உள்ளது. முதலில் பெரியதொரு சிலை இருந்ததாகவும், அதன் காதின் வழியாக உள்ளே சென்ற தேனீக்கள் உள்ளே தேன்கூடு கட்டியதாகவும், அதை எடுக்கச் சிலையையே உடைத்த ஒருவன், சில நாட்களில் உயிர் துறக்க நேரிட்டது என்றும், பின்னர் இந்தச் சிறிய சிலை செய்து வைக்கப் பெற்றது என்றும் அர்ச்சகர் கூறுகின்றார்.

கோயில் மூர்த்தத்தில் தெய்வத்தைப் பார்த்தால், கல்லோ, மண்ணோ தெரிவதில்லை; கல்லாகவோ, மண்ணாகவோ அதைப் பார்த்தால், தெய்வம் தெரிவதில்லை. இதனையே 'மரத்தை மறைத்தது மாமத யானை, மரத்தில் மறைந்தது மாமத யானை' என்று திருமூலர் கூறுகிறார்.[11]

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

துப்பனே! தூயாய்! தூயவெண் ணீறு
துதைந்தெழு துளங்கொளி வயிரத்(து)

ஒப்பனே! உன்னை உள்குவார் மனத்தின்
உறுசுவை அளிக்கும் ஆரமுதே!
செப்பமா மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தம்மே வியசீர்
அப்பனே! அடியேன் ஆதரித்(து) அழைத்தால்
அதெந்துவே என்(று)அரு ளாயே!

திருச்சிற்றம்பலம்

— 8 ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

1. குறிஞ்சி, நெய்தல், பாலை, மருதம், முல்லை
2. மணிமேகலை —விழாவறை காதை, தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை
3. ''...ஆனாயர்கூடி அமைத்தவிழவை அமரர் தங்கோனார்க்கு
ஒழியக் கோவர்த்தனத்துச் செய்தான்..'' — பெரியாழ்வார் திருமொழி
4. ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம் ஆகியவை மணி, நீர், பொன், பூ, மண், கல், தீ ஆகியவற்றைப் பொழியும்.
— பிங்கல நிகண்டு
5. ''சலமா முகிற் பல்கணப் போர்க்களத்துச் சரமாரி
பொழிந்து எங்கும் பூசலிட்டு நலிவானுறக் கேடகம்
கோப்பவன் போல் நாராயணன் முன் முகம் காத்த...''
— பெரியாழ்வார் திருமொழி
6. ''ஏறு கங்கை மணல் எண்ணில் இந்திரர்...'' — 6 ஆம் திருமுறை
7. குரு. சண்முக வேளார், குளத்துப்பட்டி
8. திருவாதவூரடிகள் புராணம்
9. அபிதான சிந்தாமணி
10. குரு. சண்முக வேளார்
11. 10 ஆம் திருமுறை

உ

பிறவி அறுப்பவனே, பிள்ளைப் பெருமாளே!

(77. கள்ளணன் — பிள்ளைப் பெருமாள் திருக்கோயில், கோனாபட்டு)

அவன் ஊருக்கு உபகாரி; ஏழை பங்காளன்; வறியோருக்கு வாழ் வளித்தவன்; ஆனால் செல்வம் படைத்தோருக்கு — செருக்குடை யோருக்கு அவன் ஒரு திருடன்; கள்ளன். கள்ளன் என்னும் பழிச் சொல்லே, வாழ்வளிக்கும் தெய்வமாகக் கருதியோருக்கு — அவனை அண்ணனாகக் கருதியோருக்குக், கள்ளணன் ஆகிவிட்டது.

முள்ளை முள்ளாலேயே அகற்ற நினைத்தனர் எதிரிகள்; அவன் உறவினனைக் கொண்டே அவன் வாழ்க்கையை முடித்துவிட நினைத் தனர்; விளைவு?
அவர்கள் எதிர்பார்த்தது நடக்கவில்லை; மாறாகக் கள்ளணன் கொலையாளியாகி விட்டான்.

அவனைக் கொலை செய்தால் என்ன? கொலைகாரன் ஆக்கினால் என்ன?
இரண்டும் ஒன்றுதானே?
அவன் அத்தியாயம் முடிந்தது; அது போதுமே அவர்களுக்கு!

இரவுசேரியிலிருந்து பிள்ளைப்பெருமாளிடம் தஞ்சம் புகக் கோனா பட்டுக்கு வந்தான், கள்ளணன்.

நீரில் விளக்கெரித்து என் மேல் பிழை இல்லை என்பதை மெய்ப் பிக்கின்றேன் என்றான். நீரில் விளக்கு எரிந்தது; கள்ளணன் நிர பராதி எனப் பிள்ளைப்பெருமாள் தீர்ப்புக் கூறி விட்டார்.

ஆனால் எதிரிகள் விட்டு வைக்கவில்லை. அருகில் உள்ள குளக் கரையில் மறைந்திருந்தவனை மர்மமாக முடித்துவிட்டனர்.

ஐயனார், தஞ்சம் புகுந்தவனைத், தாம் ஏற்றுக்கொண்டார்; தம் பெயரையும் கள்ளணன் — பிள்ளைப்பெருமாள் ஆக்கிக் கொண் டார்! அடுத்தடுத்த தலைமுறையினர், அவனுக்கும் ஒரு சந்நிதி ஏற் படுத்தினர்.


அவன் நிரபராதி என்பதை இன்றைக்கும் உலகுக்குப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது, மூன்று நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை, ஆடி மாதத்தில் பௌர்ணமியன்று நடைபெறும் புரவி எடுப்பின்போது

எரியும் தண்ணீர் விளக்கு! (மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இது நடைபெற்றது. சாமியாடி பாத்திரத்திலிருக்கும் நீரை விளக்கில் ஊற்றிக் கொண்டே இருப்பார்; விளக்கு அணையாமல் எரிந்து கொண்டே இருக்கும்)[1]

* * *

நான்கு ஐயனார் உருவச் சிலைகளைக் கருவறையில் கொண்டிருக்கும் கள்ளணன் — பிள்ளைப் பெருமாள் ஐயனார் கோயில், கோனாபட்டில், ஊருக்குக் கிழக்கேயுள்ள கண்மாய்க் கரையில் அமைந்திருக்கிறது. நான்கு தெய்வத் திருமேனிகளிலும், உற்று நோக்கினால்தான் தெரியக்கூடிய வேறுபாடுகளே உள்ளன. தலை இடப்பக்கம் இலேசாகச் சாய்ந்திருப்பது; செண்டு ஏந்திய கரம் ஆகியவற்றில்தான் சிறுசிறு வித்தியாசங்களைக் காணமுடியும். இவை நான்குமே ஐயனார் உருவச் சிலைகள்தாம் என்பதில் யாருக்கும் ஐயம் இருப்பதாகத் தெரியவில்லை.[2] ஆனால், ஏன் நான்கு திருமேனிகள்? இதில் ஏதேனும் சிறப்பு உண்டா? யாரும் அறிந்திருப்பதாகத் தெரியவில்லை. (கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்!)

அர்த்த மண்டபத்தில் விநாயகர் வீற்றிருக்கிறார். மகா மண்டபத்தில், கருவறையின் இடப்புறம் ஆஞ்சநேயர் மட்டும் உள்ளார்.



தாமரைத் தடாகமும், தஞ்சமளித்த கோயிலும்

கருவறை, மகா மண்டபம் இரண்டுமே முழுமையான கல் திருப் பணி செய்யப்பட்டவை. மகா மண்டபத்தின் முன்னால் யானை யும், பலிபீடமும் வைக்கப் பெற்றுள்ளன.

கோயிலின் பின்னாலுள்ள தாமரைக் குளத்திலிருந்து பார்த்தால், அழகிய உயரமான கருவறை விமானம் தெளிவாகத் தெரியும். அதைப் பார்த்துக் கொண்டே தெற்கு வாயில் வழியாகத்தான் கோயிலுக்குள் செல்லவேண்டும். கிழக்குத் திருச்சுற்றுச் சுவருக்கும், அதற்கு முன்னுள்ள சுவருக்கும் இடையில் அமைந்திருக்கும் சேமங் குதிரைகளைக் காண விரும்புவோர் மட்டுமே, கிழக்கு வாயிலுக் குச் செல்லலாம். காரணம், கிழக்குத் திருச்சுற்றுச் சுவரில் உள்ள நுழைவாயில், பெருமாள் கோயில் சொர்க்கவாசல் போல், எப்போதும் மூடியே இருக்கும் போலிருக்கிறது!

பெரிய சேமங்குதிரைகள், பெரிய பூதங்கள். கோயிலே பழைமை அடைந்துவிட்டபோது, இவை மட்டும் தப்புமா? ஒன்றை ஒன்று நோக்கியுள்ள குதிரைகளின் காதுகளிடையே, குறி வைக்கப் பெற் றது போன்று அம்புகள் வைக்கப் பெற்றுள்ளன.

முட்செடிகளும், மரங்களும், கொடிகளும், படிகள் முதல் விமா னங்கள் ஈறாக எங்கும் நீக்கமற நிறைந்துள்ளன.

* * *

பரிவார தெய்வங்கள், மகா மண்டபத்தின் இரு புறமும் வரிசை யாக இடம் பெற்றுள்ளன.

தெற்குப் பிராகாரத்தில், மேற்கிலிருந்து அமராவதிக் கறுப்பர், மாணிக்க ஆண்டாள், கன்னிப் பெண்கள், பட்டாணித் தெய்வம், பெரிய கறுப்பர், பத்ரகாளி, சந்நியாசி ஆகிய மூர்த்தங்கள் உள் ளன. கிழக்குச் சுற்றுச் சுவரை ஒட்டி அமைந்துள்ள கிழக்கு நோக் கிய சந்நிதியில் முனீஸ்வரர் குடிகொண்டிருக்கிறார்.

வடக்குப் பிராகாரத்தில் உள்ள ஐந்து சந்நிதிகளில், மேற்கிலிருந்து சின்னக் கறுப்பர், கள்ளணன், புள்ளாண்டாள், நாகர் ஆகிய சிலைகள் தெற்கு நோக்கியும், மதுரைவீரன் சிலை கிழக்கு நோக்கி யும் வைக்கப் பெற்றுள்ளன. மதுரைவீரனை நோக்கிய வண்ணம், கிழக்குச் சுற்றுச் சுவரை ஒட்டி அமைந்திருப்பது பூமணப் பிச்சாத் தாள் சந்நிதி.

இவற்றில் கள்ளணன், பூமணப் பிச்சாத்தாள், முனீஸ்வரர், மதுரை வீரன், ஆஞ்சநேயர் ஆகியவை பிற்காலத்தில் வைக்கப்பட்டவையே என்று கூறுகின்றனர்.[3]

வடக்குப் பிராகாரத்தில் உள்ள இரண்டாவது சந்நிதியில் நின்ற கோலத்தில் காட்சி தருபவரே கள்ளணன். இவருடைய உருவச் சிலையைப் பார்த்தால், யாருமே இவரைக் கள்ளன், கொலை காரன் என்று சொல்லமாட்டார்கள். வலக்கையில் குத்துவாளை உயர்த்திப் பிடித்து, இடக்கையில் வேல் ஏந்திச் சிரித்த முகத்துடன் காட்சி தருகிறார் கள்ளணன்.

அடுத்து, இக்கோயிலில் தனித் தன்மையுடன் விளங்குபவர், பூமணப் பிச்சாத்தாள். இவர் நகரத்தார் குடும்பத்துப் பெண் என்பதில்

யாருக்கும் ஐயமில்லை.[4] கோட்டையூரில் பிறந்து கோனாபட்டில் திருமணம் ஆனவரா, கோனாபட்டிலிருந்து கோட்டையூருக்கு வாழச் சென்றவரா? அதைப் பற்றி நாம் அதிகம் கவலைப்பட வேண்டிய தில்லை. வழக்கம் போல் புகுந்த வீட்டில் கோபித்துக் கொண்டு, கோ. விலிருந்து, கோ.வுக்குக் கோ. வுடன் சென்றபோது, கோ. வில் அணைந்து விட்டார்! (இதுவரை பல கோயில்களில் இது போன்ற கதைகளைக் கேள்விப்பட்டுள்ளதால், சுருக்கெழுத்து களைப் புரிந்து கொள்வதில் உங்களுக்குச் சிரமமிருக்காது!)

இந்தக் கோட்டையூர், கோனாபட்டு (பிள்ளையார்பட்டி) நகரத் தார்களுடன், ஆத்தங்குடி (பிள்ளையார்பட்டி), மேலைச்சிவபுரி நகரத்தார்களுமாகச் சுமார் 250 புள்ளிகள், இக்கோயிலைக் குல தெய்வக் கோயிலாகக் கொண்டுள்ளனர். பிள்ளையார்பட்டிப் பங் காளிகள், ஆடி மாதத்தில் தங்கள் ஊரில் படைப்பதற்கு முதல் நாள், இங்கு அனைவரும் வந்து வழிபடுகிறார்கள் என்றும், ஆத் தங்குடி, கோட்டையூரைச் சேர்ந்த இளையாற்றங்குடிப் பங்காளி களும், கோனாபட்டுப் பங்காளிகளும் பூமணப் பிச்சாத்தாளுக்கு ஆடி மாதத்தில் படைக்குமுன்னர், படைப்புக்கு முதல் நாள் செவ் வாய்க்கிழமை இங்கு கூடி வழிபடுகின்றனர் என்றும் கூறப்பெறு கிறது.[5]

தேவர் சமுகத்தினர் பூசாரிகளாக இருக்கும் இந்து அறநிலையத் துறையைச் சேர்ந்த இக்கோயிலில் சிவராத்திரி, மாசிமகம், (மூன்று, நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும்) புரவி எடுப்பு ஆகி யவை சிறப்புற நிகழ்கின்றன. மாசி மகத்தின் போது மஞ்சு விரட்



சொர்க்கவாசல் எப்போது திறக்கும்?

டும், மாசி மகம் — புரவி எடுப்பு ஆகியவற்றின்போது நாடகமும் நடைபெறுவது உண்டு.

சிவராத்திரி, மாசி மகம் ஆகிய நாட்களில், நகரத்தார் வந்து வழி படுகின்றனர் என்றும், சிவராத்திரியின்போது குழந்தைகளுக்குக் கரும்புத் தொட்டில் கட்டுவது உண்டு என்றும் பூசாரி கூறுகிறார்.

விவரம் தெரிந்து 1978ல் ஒருமுறை திருக்குட நீராட்டு நடைபெற் றிருந்தாலும், அதற்கு முன்னர் குறைந்தது நான்கு முறைகளாவது குடமுழுக்கு நடைபெற்றிருக்க வேண்டும் என்று சொல்லப் பெறு கிறது.[6] ஆத்தங்குடியைச் சேர்ந்த இளையாற்றங்குடிப் பங்காளி கள், வெளிநாடுகளுக்குச் செல்லுமுன்னர், இங்கு வந்து ஐயனார், பூமணப் பிச்சாத்தாள் ஆகியோரை வழிபட்டுச் செல்கின்றனராம்.

★ ★ ★

சிவனடியார் அறுபத்துமூவருள் ஒருவரான நமிநந்தியடிகள், நீரால் விளக்கெரித்துத் தம் சிவபக்தியை உலகுக்கு உணர்த்தினார்; ஏழை பங்காளரான கள்ளணனோ, நீரில் விளக்கு எரியச் செய்து, தம் நேர்மையை உலகறியச் செய்திருக்கிறார்! ''நாதர் அருளினால் திருவிளக்கு எரித்த'' இவ்விருவரையும் வாழ்த்தி வணங்குவோம்!

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

1. ஆன விளக்கொளி தூண்டும் அவன்என்னத்,
தான விளக்கொளி ஆமூல சாதனத்(து)
ஆன விதிமூலத் தானத்தில் அவ்விளக்(கு)
ஏனை மதிமண்ட லம்கொண்(டு) எரியுமே.

திருச்சிற்றம்பலம்

— 10ஆம் திருமுறை

2. பாட்டியல் அளிமுரல் பதுமக் கோயிலில்
நாட்டிய நிமலன்முன் நந்தி நீரிடை
மாட்டிய பல்பெரும் சுடரை மானுமால்
கோட்டுயர் தடந்தொறும் குவளை பூத்தவே!

— கந்த புராணம்

குறிப்பு விளக்கம்:

1. கோயில் பூசாரி கோனாபட்டு சுப. பழனியப்பன் கொடுத்த தகவலின் அடிப் படையில், சில மாறுதல்களுடன், இந்தக் கள்ளணன் கதை இங்கு இடம் பெற்றுள்ளது
2. புலவர் கும. ஆறுமுகம், கோனாபட்டு; பூசாரி சுப. பழனியப்பன்; ச. சுப்பிர மணியன், ஆத்தங்குடி
3. ச. சுப்பிரமணியன்
4. புலவர் கும. ஆறுமுகம், சுப. பழனியப்பன்
5. ச. சுப்பிரமணியன், சுப. பழனியப்பன், புலவர் கும. ஆறுமுகம்
6. ச. சுப்பிரமணியன்

உ

கமையார் கருணைக் கருமலை சாஸ்தா

(78. கருமலை சாஸ்தா (காஞ்சிரங்குடிக் காளி) திருக்கோயில், கோனாபட்டு)

மரங்கள் அடர்ந்த இடம்; உயரமான அகன்ற மேடையில் சிமெண்ட் கற்கள் பதிக்கப்பெற்றுள்ளன; மாடங்களில் தெய்வப் படிமங்கள்; அயலார் இடையூறின்றி ஆண்டவனை வழிபட, அமைதியான சூழல். ஆத்தங்குடி, கீழச்சிவற்பட்டி, ஆ.முத்துப்பட்டணம் (மாத்தூர் மணலூர்), வேந்தன்பட்டி ஆகிய ஊர்களின் நகரத்தார்கள் குலதெய்வமாக வழிபடும் காஞ்சிரங்குடிக் காளி, கருமலை சாஸ்தாவின் கொம்படி ஆலயமே அது!

இதற்கு முன்னர் சென்றிருந்த கள்ளணன்-பிள்ளைப் பெருமாள் கோயிலுக்குத் தெற்கே உள்ள கண்மாயைக் கடந்து, இடப்புறம் திரும்பி வயல் வரப்பினிடையே நடந்து சென்று, கருவேலா மரங்கள் சூழ்ந்த இடத்தில் அமைந்துள்ள கருமலை சாஸ்தாவின் ஆலயத்தை அடையலாம்.

இங்கு நாள்தோறும் பூசை நடைபெறுகிறதெனினும், கோனாபட்டில் பூசைமுறை வேளார் இருக்கிறாரா என்றறிந்து, இல்லாவிடில் உடன் அழைத்துச் செல்வது நல்லது. அவர் கோயிலில் இருந்தாலும் கூட, வழியறிந்த ஒருவரை உடன் அழைத்துச் செல்வது, சிரமமின்றி இந்தக் கொம்படி ஆலயத்தைச் சென்றடைய உதவியாக இருக்கும்.

கோலாலம்பூரிலுள்ள ஆ. முத்துப்பட்டணம் தில்லை அ. சிதம்பரம் வழங்கிய தகவல்களின் அடிப்படையில், கோனாபட்டிலுள்ள புலவர் கும. ஆறுமுகம் கூறியபடி, ஜோதிடர் லெ. ஆறுமுக வேளாரை அணுகினோம். மகிழ்வுடன் எங்களைக் கோயிலுக்கு அழைத்துச் சென்று, நமக்குத் தேவையான எல்லாத் தகவல்களையும் கோர்வையாக அவரே கூறினார்.

* * *

காஞ்சிரங்குடிக் காளி கோயில் என்றே எல்லோரும் இக்கொம்படிக் கோயிலை அறிந்திருந்தாலும், இங்கு மூலவராக இருப்பவர்

கருமலை சாஸ்தா என்னும் ஐயனார்தாம்! இவர்தாம் முதலிலிருந்தே இங்கு கோயில் கொண்டிருக்கிறார். இடைப்பட்ட காலத்தில் — ஏறத்தாழ 120 ஆண்டுகளுக்கு முன்னர் இங்கு வந்து குடியேறி யவள்தான், காஞ்சிரங்குடிக்காளி.

அவள் இங்கு வந்த நேரத்தில் நச்சுத்தன்மை வாய்ந்த காஞ்சிர மரங்களே நிறைந்திருந்தன. காஞ்சிரமரத்தின் அடியில் குடிகொண்ட காளி என்பதே சுருங்கிக், காஞ்சிரங்குடிக்காளி என்று ஆகியிருக் கிறது.

எங்கள் மூதாதையரான மந்திர உச்சாடனம் கற்றறிந்த வேளார் ஒருவர், 1875ஆம் ஆண்டுவாக்கில், பரமக்குடியில் இருந்தார். அப்போது ஒரு நாள்....

★ ★ ★

எங்கள் சந்ததியில் வந்தவர் கூறியதுபோன்று, நான் அப்போது பரமக்குடியில் இருந்தேன். அப்போது ஒருநாள், பிராமணப்பெண் போன்று தோற்றமளித்த அழகிய கன்னிப்பெண் ஒருத்தி, என் னிடம் வந்து, தான் இப்போது இருக்கும் இடம் வசதியாகவும், தூய்மையாகவும் இல்லை என்று கூறித் தன்னை என்னுடைய ஊருக்கு அழைத்துச் செல்லுமாறு கோரினாள். வந்தவள் அன்னை காளிதான் என்பதை என்னுடைய மந்திர ஆற்றலால் அறிந்து கொண்டேன். கரும்பு தின்னக் கூலியா? அன்னையை அழைத்துச் செல்ல ஏது தயக்கம்? மந்திர உச்சாடனத்தின்வழி மண் கலசத்தில் அன்னையை ஏந்திக் கொண்டு புறப்பட்டேன்.

வழியில் நேமத்தான்பட்டியில் மந்திர உரு ஏற்றப்பெற்ற கலசத் தைக் கீழே வைத்துவிட்டுக் களைப்பாறி எழுந்தபோது, அன்னை யின் ஒரு கலை அங்கு குடிகொண்டுவிட்டது. பரமனூர்க் காளி என்று அங்கு அவளைப் பிரதிஷ்டை செய்துவிட்டுப் புறப்பட்டு வந்தபோது, ஆத்தங்குடியிலும் அது போன்றே நிகழ்ந்தது. அங்கு அவளை இம்மஞ்செட்டிக் காளி[1] என்று பிரதிஷ்டை செய்துவிட்டு இவ்வழியே வந்தபோது, ஐயனார் கோயில் அமைந்திருந்த இந்த இடமே தனக்கு ஏற்றது என்று கூறி, அவள் இங்கு இடங்கொண்டு விட்டாள்.

முதலில் காஞ்சிரமரம் ஒன்றின் அடியில் வடக்கு நோக்கிப் பீடம் அமைத்து, அதில் கலசத்தை வைத்து வழிபட்டு வந்தோம். ஏறத் தாழ இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னரே, அன்னையின் மண்சிலை இங்கு இடம் பெற்றது........

★ ★ ★

கல்லும் முள்ளும் நிறைந்திருந்த இந்தப் பகுதியில், எங்கள் மூதா தையரான ஆதி வேளார் காலத்தில், ஐயனார் உட்பட எல் லாமே மண் சிலைகளாகவே இருந்தன. 1966, 67ஆம் ஆண்டு வாக்கில்தான், வேளார் சமுகத்தினர் நிதி திரட்டிக் கற்படிமங்கள் அமைத்து இங்கு பிரதிஷ்டை செய்து, விமானம், கோபுரம் எதுவும் இல்லாததால் சுவாமிகளுக்கு மட்டும் திருக்குட நீராட்டினோம். பின்னர் 1970களில் மேடைகள், குறடுகள் கட்டி, அவற்றில் சுவா

மிகள் வைக்கப் பெற்றன. நகரத்தார்கள் இங்கு கோயில் கட்டித்தர முன் வந்தனர்; ஆனால் ஐயனோ, அன்னையோ அதற்கு ஆதரவு தரவில்லை. அதைத் தொடர்ந்து, ஆ. முத்துப்பட்டணம் செட்டியார் ஒருவர்தாம் இங்கு மேடை அமைத்துத் தளம் போட்டுத் தந்தார். அந்தக் குடும்பத்தார் ஆண்டுதோறும் அவ்வட்டாரத்தில் நிதி சேர்த்துப் பூசை போடப் பணம் அனுப்பி வருகின்றனர்.



அமைதியான சூழலில் அமைந்திருக்கிறது ஆலயம்

கற்படிமங்களாக மாற்றிய நேரத்தில், காளியம்மனின் மண்சிலையை அருகிலிருந்த மரத்தடியில், நிலத்தில் புதைத்து வைத்தோம். அது தவறு என்று பின்னர்தான் தெரியவந்தது. சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர், அந்த மண்சிலையைத் தோண்டி எடுத்து, மரத்தடியில் வைத்திருக்கிறோம்.

விரைவில் இங்குள்ள எல்லா மூர்த்தங்களுக்கும் மாடங்கள் கட்டிச், சுற்றிலும் வேலி போட்டு, அருகிலுள்ள குளத்தைத் தூர்வை எடுத்துத் திருப்பணி செய்ய, ஊரார், கிராமத்தார் (குடும்பர்கள்) முயன்று வருகின்றனர். ஆனால் இப்போது திறந்த வெளியாக — கொம்படி ஆலயமாக இருக்கிறதே, பாதுகாப்பு இராதே என்று நினைக்காதீர்கள். யார் வேண்டுமானாலும், எந்த நேரத்திலும் வந்து வழிபட்டுவிட்டுக், குறைகள் இருந்தால் படிகட்டிவிட்டோ, காரியம் வெற்றி பெற்றிருந்தால் காணிக்கை செலுத்திவிட்டோ செல்ல

லாம். அவ்வாறு வைக்கும் பணமோ, மற்ற எந்தப் பொருளோ, எத்தனை நாளானாலும் அப்படியே இருக்கும்; யாரும் தொடமாட் டார்கள்.

படிகட்டுவது என்பது, காஞ்சிரங்குடிக் காளிக்குத்தான். ஐந்தே கால் பணம் முதல், ஆறேகால் ரூபாய் வரை படிகட்டிக் காளியம் மனிடம் குறையைச் சொல்லிவிட்டால், நிச்சயம் குறை நிவர்த்தி யாகும். பின்னர் அவரவரும் வந்து காணிக்கையாக ஆறேகால் ரூபாய் செலுத்தி வழிபட்டுச் செல்வார்கள். தெய்வப் படிமங்கள் இருக்கும் தளத்துக்குக் குடும்பர்களும், மாதவிலக்கு ஏற்படக்கூடிய பெண்களும் வந்து வழிபடுவதில்லை. (நாங்கள் சென்றிருந்த நேரத் தில், குடும்பர் சமுகப் பெண் ஒருவர், மேடைக்கு அப்பால் வயல் வரப்பில் நின்று, ஆறேகால் ரூபாய் காணிக்கை செலுத்தி வழி பட்டுச் சென்றதைக் கண்டோம்.)

ஆத்தங்குடியில் இம்மஞ்செட்டிக் காளியை வழிபட்டு வந்த நகரத் தார்கள், ஏதோ குறை ஏற்பட்டதால், இங்கும் வந்து வழிபடலா யினர். (குடும்பத்தில் நடந்த ஏதோ ஒரு சம்பவத்தால், ஆ.முத்துப் பட்டணம் நகரத்தார் குடும்பத்தினர், இந்தக் காளியை வழிபடத் தொடங்கியிருக்கலாம் என்று சொல்லப் பெறுவது[2] சரியாக இருக் கலாம்.)

படிகட்டும் பணம், மற்றும் காணிக்கைத் தொகைகள் ஆகியவற்றைச் சேர்த்து வைத்திருந்து, தீபாவளிக்கு முதல்நாள் இங்கு காளிக்குப் பெரிய அளவில் பூசை நடத்துவோம். பள்ளயம் போடும்போது சில நேரங்களில் பெருமழை பெய்வது உண்டு. அப்படிப் பெய் தால், அந்த ஆண்டு நல்ல விளைச்சல் ஏற்பட்டு, நாடு செழிக்கும் என்பது நாங்கள் அறிந்த உண்மை.

இந்து அறநிலையத் துறை சார்ந்த கோயிலான இங்கு, விவசாயம் தொடங்குமுன்னர், இப்பகுதியிலுள்ள மக்கள் ஆண்டுதோறும் பெரிய பூசை நடத்துவதைத் தவிர, திருவிழா என்று எதுவும் நடப்ப தில்லை என்று, கோனாபட்டு ஜோதிடர் லெ. ஆறுமுக வேளார் சொல்லி முடித்தார்.

* * *

இந்தக் கோயிலில் மேடையில் ஏறியதும் வலப்பக்கம் (மேற்கே) கிழக்கு நோக்கிக் கருமலை சாஸ்தா மட்டும் பீடத்தில் நடுவில் இருக்க, அவருக்கு வலப்புறம் இரட்டை விநாயகரும், இடப்புறம் முருகனும், (சகோதரர் மூவரும் சமநிலையில் இருக்க), எதிரே யானையும், பலிபீடமும், அருகில் ஆஞ்சநேயரும் உள்ளனர். அவருக்கு வலப்புறம் சற்றுத் தள்ளிப் பெரிய கறுப்பர் காணப் பெறுகிறார். அவருக்கு எதிரில் கிழக்கு ஓரமாக முனீஸ்வரரும், நொண்டிக் கறுப்பரும் மேற்குப் பார்த்து உள்ளனர். தளத்தின் தெற்குப் புறம் பழைய காளியம்மன் (மண்சிலை), பீடத்தில் பத்ர காளியம்மன், சின்ன அம்மன், சின்னக் கறுப்பர் ஆகியோர் இடம் பெற்றிருக்கின்றனர்.

'அம்மா! உன் அருளால் எங்களுக்கு எந்தக் குறைவுமில்லை; நாடும், நகரமும், நகரத்தார் குலமும் வளமுடன் வாழ நல்லருள் புரிவாய்!'

என்று அன்னையைப் பிரார்த்தித்துக் கொண்டு, இக்கோயிலைப் பற்றி அறிந்துகொள்ளத் துணை புரிந்த அனைவருக்கும் நன்றி கூறிப் புறப்பட்டோம்.

பரவும் சொல்மாலை

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!
எங்கும் வெற்றி! எதனினும் வெற்றி!
கண்ணும் ஆருயி ரும்என நின்றாள்
காளித் தாய்இங்(கு) எனக்கருள் செய்தாள்,
மண்ணும் காற்றும் புனலும் அனலும்
வானும் வந்து வணங்கிநில் லாவோ,
விண்ணு ளோர்பணிந்(து) ஏவல்செய் யாரோ,
வெல்க காளி பதங்கள்என் பார்க்கே?

— மகாகவி பாரதியார்

குறிப்பு விளக்கம்:

— பொறுமை நிறைந்த, அருளுடைய
1. இவள்தான் சிராவயல் புதூரில் கோயில் கட்ட உதவிக்குச் சென்றவளோ?
2. தில்லை அ. சிதம்பரம்

உ

தன்னடைந்தார்க்கு அருளும் தர்ம சாத்தையனார்

(79. தர்ம (மகா) சாத்தையனார் திருக்கோயில், வெழுவூர், ஆ. முத்துப்பட்டணம்)

ஆறுபடை வீடுகளில் முதலாவதான திருப்பரங்குன்றத்தில்தான் முருகப் பெருமான் தெய்வயானையைத் திருமணம் புரிந்தருளினார். அம்மையுடன் அவர் உல்லாசமாக விளங்கும் தலம் திருப்பரங்குன்றம்.[1] அங்கு கோயிலினுள் முருகப் பெருமானுடன் தெய்வயானை மட்டுமே உள்ளார்; வள்ளியம்மை இல்லை.

அதுபோன்று, ஐயனார் பூரணையுடன் (?) உல்லாசமாக விளங்கும் தலமாக ஆ. முத்துப்பட்டணம் இருக்கக்கூடுமோ? ஏனெனில் திருப்பரங்குன்றத்தில் முருகனும் தெய்வயானையும் மட்டும் இருப்பது போன்று, இங்கு வெழுவூரில் உள்ள தர்ம சாத்தையனார், பூரணையுடன் (?) மட்டுமே காட்சி தருகிறார். (ஐயனாரின் வலப்புறம் உள்ளவர் பூரணை, இடப்புறம் உள்ளவர் புஷ்கலை என்றுதான் அறிந்திருக்கிறோம். அது சரியானால், இங்குள்ளவர் பூரணையாக இருக்க முடியாது; ஏனெனில் ஐயனாரின் இடப்புறம்தான் இங்கு அம்மையார் வீற்றிருக்கிறார்.)


ஆனால், இவ்வாறு ஒரு தேவியுடன் ஐயனார் இருப்பதைச் சமயவாதிகள் ஏற்கவில்லை. முறையற்றது; சாத்திரத்துக்கு விரோதமானது என்றனர். சமயவாதிகள் அப்படி ஒரு சங்கடத்தை ஏற்படுத்தியதாலேயே, மகா மண்டபத்தினுள் நுழையுமிடத்தின் மேலே உள்ள மாடத்தில் ஐயனாரையும் இரு தேவியரையும் சுதையினால் அமைத்து விட்டனர்.[2]

இந்த ஐயனார் ஒரு தேவியுடன் இருந்து ஏற்படுத்திய 'தர்ம' சங்கடம் போதாதென்று, தம் பெயரிலுமே ஒரு 'மகா' சிக்கலைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கிறார். அதைத் தெரிந்து கொள்ள, இந்தக் கோயிலின் தொடக்க கால வரலாற்றினை அறிந்து கொள்ள வேண்டும்.

சிவகங்கை அரசரால் பிராமணர்களுக்குத் தாரை வார்க்கப்பெற்றது, இந்தக் கிராமம். அவர்கள் ஓர் ஓலைக்கூடத்தில் இருந்த ஐயனாரையும் வழிபட்டு வந்திருக்கின்றனர். தர்மமாகக் கொடுக்கப்பெற்ற

கிராமமாதலால், கிராமக் காவல் தெய்வமான ஐயனாரையும், 'தர்ம' சாத்தையனார் என்றே அழைத்து வழிபட்டிருக்கின்றனர்.

முறையூர், கர்நாக்குடி, பூங்குடிச் செட்டியார்கள் ஓலைக்கூடத்தை மாற்றிக் கோயில் அமைப்பை உருவாக்கியிருக்கின்றனர். சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஒருமுறை திருக்குட நீராட்டு நடைபெற்றது இன்னும் தம் நினைவில் இருப்பதாக அர்ச்சகர் கூறுவது, அச்சமயத்தில் நடைபெற்ற குடமுழுக்காக இருப்பதற்கான வாய்ப்பு உண்டு. அப்போது இக்கோயில், பிராமணர்கள் நிர்வாகத்தில், வேளார்களை அர்ச்சகர்களாகக் கொண்டிருந்தது.



தேவி ஒருவருடன் திகழ்கின்ற ஐயனார் கோயில்

பின்னர் கோனாபட்டு நகரத்தார்கள் பெருஞ்செலவு செய்து கோயிலை அழகுற அமைத்து, ஓட்டுக் கொட்டகையில் இருந்த காளியம்மனை மண்டபத்துக்குக் குடியேற்றி, 08.06.1989ல் திருக்குட நீராட்டு நடத்தியிருக்கின்றனர். அவர்களே இப்போது இந்தக் கிராமக் கோயிலை மேற்பார்த்து வருகின்றனர்.[3] எண்பத்தொன்பதாம் ஆண்டுக் கும்பாபிஷேகத்தின் போதுதான் இக்கோயிலின் (ஐயனாரின்) பெயரில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. இப்பெயர்க் குழப்பம் பற்றி நகரத்தார்கள் அறிந்திருக்கவில்லையா, அறிந்ததாகக் காட்டிக் கொள்ள விரும்பவில்லையா என்பது தெரியவில்லை.

★ ★ ★

ஆத்தங்குடி, கண்டனூர், காரைக்குடி, கோனாபட்டு, சொக்கனேந்தல் (சூரக்குடியார்), புதுவயல் ஆகிய ஊர்களைச் சேர்ந்த நகரத்தார்களின் குலதெய்வக் கோயிலான[4] இந்தத் தர்ம (மகா)சாத்தையனார் கோயிலுக்கு, ஆ.முத்துப்பட்டணம் பெரிய வீட்டுக்கு எதிரில் மேற்கே செல்லும் மண்சாலையில் சென்று வெழுவூரை அடைந்து, அங்கிருந்து வயல் வெளியில் நடந்து செல்லலாம். (பலவான்குடிக்கும் ஆத்தங்குடிக்கும் இடையில் பலவான்குடியிலிருந்து சுமார் ஒன்றரை கி.மீட்டரில் இடப்புறம் திரும்பி, மண்சாலையின் வழியே சென்று, சிறிது தொலைவு நடந்தும் கோயிலை அடையலாம்.)

மகா சாத்தையனார் என்னும் புதிய பெயர் எழுதப் பெற்றுள்ள நுழைவாயிலை அடுத்து, இரு பெரிய சேமங்குதிரைகள் திருச்சுற்றுச் சுவரை ஒட்டி, ஒன்றையொன்று நோக்கிய வண்ணம் நிற்கின்றன. தொடக்க காலத்தில் இவற்றில் ஒன்றை முறையூர்ச் செட்டியார்களும் (இதைத் தான் நகரத்தார் குதிரை என்று குறிப்பிடுகிறார்கள் போலும்!), மற்றதைச் சேர்வார்களும் (சேர்வைக்காரர் என்போர் போர்வீரர்கள், சேனைத்தலைவர் ஆவர்.) கட்டியிருக்கின்றனர். இப்போது இவை பழுதுபார்க்கப் பெற்று வண்ணந் தீட்டப் பெற்றுள்ளன.[5]

கருவறையில் தர்ம (மகா) சாத்தையனார் உத்குடி இருக்கையில் அமர்ந்திருக்கிறார். ஐயனின் இடப்புறம் தேவி இடக்காலைத் தொங்கவிட்டு வலக்காலை மடித்துக் குத்திட்டு அமர்ந்திருக்கிறார்.



அழகிய சிலைக்கு இப்படி ஓர் அவலமா?

முதலில் இருந்த ஐயனார் - அம்பிகை கற்படிமம், பிராமணர் களின் நிர்வாகத்தில் கோயில் இருந்தபோதே மாற்றம் பெற்றுப், புதிய சிலை வைக்கப் பெற்றிருக்கிறது. பழைய சிலையில் கை கால்கள் (செதுக்கப்பெற்றது போன்று) சேதமுற்றதே இதற்குக் காரணம். பழைய சிலை கருவறையின் வலப்புறம் வைக்கப்பெற் றுள்ளது. இந்த ஐயனாரைச் சொக்கனேந்தலைச் சேர்ந்த சூரக் குடிக் கோயிலார் குலதெய்வமாக வழிபடுகின்றனராம். அவர்களி டையே சாத்தப்பன், சாத்தம்மை என்று தங்கள் குழந்தைகளுக்குப் பெயரிடும் வழக்கம் நிலவுகிறது.

அர்த்த மண்டபத்தில், ஐங்கரனார் அருட்காட்சி தருகிறார். துவார பாலகரைத் தவிர்த்து, மண்டபத்தில் உள்ள வேறு மூன்று சிலை களும், முதல் திருப்பணி செய்தோரின் கற்படிமங்களாகும். கரு வறை வாயிலின் மேலே முதலையும், பாம்பும் புடைச் சிற்பமாகச் செதுக்கப் பெற்றிருப்பது, ஏதேனும் காரண்ம் கருதியா? அதற்கு ஏதேனும் பொருள் உண்டா? தெரியவில்லை. மண்டபத்துக்கு வெளி யிலேயே யானை வாகனமும், பலிபீடமும் வைக்கப் பெற்றுள்ளன.

இங்கு பரிவார தெய்வங்களாக உள்ள சின்னியம்மத்தாள், ஆவத் தாள், சேவத்தாள், முத்துக் கறுப்பர், இராக்காச்சி, காளியம்மாள், பேச்சியம்மன், பிச்சாத்தாள், அடைக்கன், அடைக்கம்மை, அரசர், சந்நியாசி, சின்னக் கறுப்பர், பெரிய கறுப்பர், வண்ணாத்தியம் மன் (மண்சிலை) ஆகியவற்றில், சின்னியம்மத்தாள் நகரத்தார் பெண் என்பதும், வண்ணாத்தியம்மன் பெயருக்கேற்ப வண்ணார் (ஏகாலியர்) சமுகப் பெண் என்பதும், குறிப்பிடப்பெற வேண்டி யவை.

சின்னியம்மத்தாள், கோனாபட்டில் பிள்ளையார்பட்டிக் கோயிலைச் சேர்ந்த நகரத்தார் வீட்டில் பிறந்து, காரைக்குடியில் திருமணம் ஆன வர். பிரசவத்திற்காக வந்த போது, இடையில் உயிர் துறந்து, இக் கோயிலில் அணைந்ததாகவும்[6], கோயிலில் பிராகாரம் வரும்போது சுவாமி இவரைச் சேர்த்துக்கொண்டு விட்டார் எனவும்[7] கூறுகின் றனர். அதைத் தொடர்ந்து, கைக்குழந்தையுடன் உள்ள அவரு டைய சிலை இங்கு வைக்கப் பெற்றது.

கோனாபட்டுப் பங்காளிகள், மாசி மாதத்தில் ஒரு செவ்வாய்கிழமை இங்கு வந்து சின்னியம்மத்தாளை வழிபட்டுத் தீர்த்தம் எடுத்துச் சென்று, அடுத்த நாள் கோனாபட்டில் படைக்கின்றனர். அடுத்த நாள் கோயிலிலிருந்து கொண்டுபோய்க் கொடுக்கப் பெறும் திரு நீற்றினைப் பெற்றுக்கொண்ட பின்னரே, அந்தப் பங்காளிகள் வீடு திரும்புவார்களாம்.

ஆத்தங்குடியில் ஒரு பிரிவினர் இவரை ஆடி மாதம் முதல் புதன் கிழமையன்று இங்கு வந்து வழிபடுகின்றனர். அவர்கள் சின்னியப் பத்தாள் (மகன்வழி வாரிசாக இருக்கலாம்) என்றும், கோனாபட்டு நகரத்தார்கள் சின்னியம்மத்தாள் (மகள்வழி வாரிசாக இருக்கலாம்) என்றும் அழைக்கின்றனர்.[8]

வண்ணாத்தியம்மன், முதலில் இக்கோயிலின் எதிரில், இப்போது முட்புதர்களும், மரங்களும் மண்டியிருக்கும் இடத்தில் கோயில் கொண்டிருந்திருப்பார் என நம்பப்பெறுகிறது.

அந்த இடத்தில் சிதைந்த சிலைப்பகுதிகள் அங்குமிங்கும் சிதறிக் கிடக்கின்றன. சூரக்குடி, சொக்கனேந்தல், புதுக்கோட்டைப் பகுதி களில் உள்ள ஏகாலியர் சமுகத்தினர், ஆண்டுக்கொருமுறை இங்கு வந்து வண்ணாத்தியம்மனைச் சிறப்பாக வழிபட்டுச் செல்கின்றனர்.

* * *

ஒவ்வொரு நாளும் ஒருகாலப்பூசை நடைபெறும் இக்கோயிலுக்கு நகரத்தார் நிறையத் திருப்பணிகளைச் செய்துள்ளனர். திருமணம், குழந்தைப்பேறு ஆகிய காலங்களில், ஐயனாரையும், சின்னியம்மத் தாளையும், நகரத்தார்கள் மறப்பதில்லை.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

முக்கணா போற்றி! முதல்வா போற்றி!
முருகவேள் தன்னைப் பயந்தாய் போற்றி!
தக்கணா போற்றி! தருமா போற்றி!
தத்துவனே போற்றி!என் தாதாய் போற்றி!
தொக்கணா என்(று)இருவர் தோள்கை கூப்பத்
துளங்கா(து) எரிசுடராய் நின்றாய் போற்றி!
எக்கண்ணும் கண்ணிலேன் எந்தாய் போற்றி!
எறிகெடில வீரட்டத்(து) ஈசா போற்றி!

திருச்சிற்றம்பலம்

- 6 ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

1. திருமுருக கிருபானந்த வாரியார்
2. புலவர் கும. ஆறுமுகம், கோனாபட்டு
3. சா. முத்துவீர வேளார், வெழுவூர், ஆ. முத்துப்பட்டணம்
4. புலவர் கும. ஆறுமுகம்
5. சா. முத்துவீர வேளார்
6. புலவர் கும. ஆறுமுகம்
7. சா. முத்துவீர வேளார்
8. புலவர் கும. ஆறுமுகம்

உ

காடலாற் கருதாத காடப்ப ஐயனார்

(80. நல்லகாடன் என வழங்கும் காடப்ப ஐயனார் திருக்கோயில், ஆலத்திப்பட்டி)

கலிகாலத்தில் விநாயகர் விரைந்து அருள்புரிவார் என்று சாத்திரங்கள் கூறுவதாக முன்னர் கண்டோம். அதன் விளைவாக, வாணியங்குடி அடைக்கலங்காத்த அம்மன் கோயிலில், அம்மன் என்ற பெயரில், ஐங்கரனே அமர்ந்திருக்கக் கண்டோம். இப்போது நாம் செல்லும் ஆலத்திப்பட்டியில் நல்லகாடன் என வழங்கும் காடப்ப ஐயனார், தம் மூத்த சகோதரரைத் தம்முடன் கருவறையிலேயே அமர்த்திக் கொண்டிருக்கக் காண்கிறோம்.

வழக்கமாக ஐயனார், அம்பிகையர் இன்றி (யோக சாஸ்தாவாக)த் தனித்திருந்தாலும், விநாயகர்அர்த்த மண்டபம் வரை தான் செல்வார். ஆனால் இங்கேயோ கருவறையிலேயே அவர் ஐயனாரின் வலப்புறம் அமர்ந்திருக்கிறார். மிகச் சிறிய அழகிய மூலவருக்கு ஏற்ற அடக்கமான பிள்ளையாராக அவர் காட்சி தருகிறார். இக்கோயிலில் காணப்பெறும் இன்னொரு தனித்தன்மை, கருவறைக்கு முன் உள்ள அர்த்த மண்டபத்தில், மூலவர் காடப்ப ஐயனாரின் இடப்புறத்தில் மழுக்கை ஐயனார் என இன்னோர் ஐயனாரும் அமர்ந்துள்ளார். இவர் வேறோர் இடத்திலிருந்து இங்கு குடி பெயர்ந்தவர் என்று கூறப்பெறுகிறது.[1]

முதலில் இந்த மழுக்கையார் இருந்த இடத்தைப் பார்த்தால் இவர் கொம்படி ஆலயம் ஒன்றில்தான் இருந்திருக்க வேண்டும் என ஊகிக்க வேண்டியிருக்கிறது. அங்கு கோயில் கட்டடம் இருந்ததற்கான எந்த அடையாளமும் காணப்பெறவில்லை. மரங்கள் சூழ்ந்த பகுதியில் நடுவில் பெரியதொரு திறந்த வெளி; மரங்களின் அடியில் உடைந்து சிதைந்து போன மண்குதிரைகள். மழு(வை ஏந்திய) கை (யை உடைய) ஐயனார் என்னும் பெயரில் இவர் அங்கிருந்து, பின்னர் இங்கு பிரதிஷ்டை செய்யப்பெற்றிருக்கிறார்.

சிவனுக்கு மழுக்கரன் என்று ஒரு திருப்பெயரும் உண்டு. யாரும் விரும்பி ஏற்காதவற்றை ஏற்பதுதானே அவன் வழக்கம்? ஆடுவது சுடலை; சூடுவது எருக்கு, ஊமத்தை; ஏற்பது பிச்சை! அதனால் அவன் பெயரைக் கொண்டவரும், திறந்த வெளியிலேயே குடியி

ருந்திருப்பார் போலும்! முதலில் இங்கு கொண்டு வரப்பெற்றபோது மண்சிலையாகவே இருந்த மழுக்கையார், 72ஆம் ஆண்டுக் குட முழுக்கின்போதுதான் கற்சிலையாக மாறினாராம்.[2]

அர்த்த மண்டப நுழைவாயிலின் இருபுறமும் உள்ள துவார பால கர்களுக்கு அருகில் ஒருபுறம் பிள்ளையாரும், மறுபுறம் சந்நியாசி யும் உள்ளனர். முருகனாக நினைத்து இவரை வைத்திருக்கின்றனரோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

மகா மண்டபத்தில் மூலவரின் வலப்புறம் உள்ள துவார பாலக ரின் வலப்பக்கம், பெரியதோர் நீண்ட அரிவாளும், சுக்குமாந்தடி



கணபதி உடனாய காடப்ப ஐயனார்

யும், படிக்கறுப்பரைக் குறிப்பதற்காக வைக்கப் பெற்றுள்ளன. அவற்றுக்கு முன்னால், மேலக்கறுப்பர், அரசன் மகன் (பீடம் மட்டும்) ஆகியோர் உள்ளனர்.

இதற்கு முன்னால் இருக்கும், யானை வாகனமும், பலிபீடமும் உள்ள மண்டபத்தை, யானை மண்டபம் என்கின்றனர்.

* * *

ஆத்தங்குடி, உ.சிறுவயல், சொக்கலிங்கம்புதூர், ஆ. முத்துப்பட்டணம் ஆகிய ஊர்களின் மாத்தூர் மணலூர் நகரத்தார்களோடு, அரிமழம், ஆவிணிப்பட்டி, கொ. இலட்சுமிபுரம், உலகம்பட்டி, கல்லுப்பட்டி, குழிபிறை, தேவகோட்டை, நற்சாந்துபட்டி, பனையப்பட்டி, வலையபட்டி நகரத்தார்களும் வழிபடும்[3] ஆலத்திப்பட்டிக் காடப்ப ஐயனார் கோயிலில், முன்பு இரண்டு அல்லது மூன்று முறை திருக்குட நீராட்டு நடைபெற்றிருக்கிறது என்னும் மாறுபட்ட கருத்துகள் நிலவியபோதிலும்,[4] 17.11.1972ல் குடமுழுக்கு நடைபெற்றதை, அந்த நேரத்தில் வெளியிடப்பெற்ற ஐம்மணி மாலை என்னும் சிறுநூல் உறுதிப்படுத்துகிறது. (நாங்கள் சென்றிருந்த நேரத்தில், கோயிலில் இருந்த மிக வயதான தேவர் சமுகப் பெரியவர் ஒருவர், தம் வாழ்நாளில் இக்கோயிலில் நான்கு முறை திருக்குட நீராட்டினைக் கண்டிருப்பதாகக் கூறினார்.) அந்த நேரத்தில், ஆத்தங்குடி, சொக்கலிங்கம்புதூர் ஆகிய ஊர்களின் மாத்தூர் மணலூர்ப் பிரிவு நகரத்தார்களால், பிள்ளையார் கோயில், மடப்பளி, யானை மண்டபம், கோபுரம் (மூலவர் விமானமாகத்தான் இருக்க வேண்டும்.) ஆகியவை கட்டப் பெற்றதோடு, ஐயனார் கோயில் பழுது பார்க்கப்பெற்று, மண்டபம் புதுப்பித்துத் தளவரிசை போடப் பெற்றதாகவும், மண்டபத்தில் எழுதி வைக்கப்பெற்றுள்ளது.

நாங்கள் கோயிலுக்குச் சென்ற நேரத்தில் (14.07.94) நடைபெற்றுக் கொண்டிருந்த திருப்பணி முடிந்து, விரைவில் திருக்குட நீராட்டு நடைபெறவிருப்பதாகச் சொல்லப் பெற்றது[5]. இப்போது நகரத்தார்களிடம் நிதி வசூலித்துச் சிறுவயல் நகரத்தார்கள் திருப்பணிகளைக் கவனிக்கிறார்களாம்.[6]

* * *

தென் பிராகாரத்தில் உள்ளதொரு சந்நிதியில், நெடும்பிறவி, வெள்ளைப்பிறவி, வயிற்றுப் பிறவி என மூவர் உள்ளனர். பிறவிச் சகோதரர்களான இம்மூவரும் வல்லத்திலிருந்து கறுப்பரைக் கொண்டு வந்தவர்களாகக் கருதப் பெறுகின்றனர். எல்லாச் சந்நிதிகளிலும் பூசை நடைபெற்ற பின்னர், இவர்களுக்கும் வழிபாடு உண்டாம். இவர்கள், தேவர் சமுகத்தினர் மிகுதியாக உள்ள இந்தக் கிராமத்தின் தேவர் சகோதரர்களாக இருப்பார்களோ? உயரமானவர், வெளுப்பு நிறத்தினர், தொப்பை வயிற்றினர் என்னும் இவர்கள் தோற்றத்தைக் குறிக்க, இந்த இடுகுறிப் பெயர்கள் இவர்களுக்கு ஏற்பட்டிருக்கலாம்.

அடுத்தடுத்துள்ள இரு சந்நிதிகளில் சின்னக் கறுப்பரும், பெரிய கறுப்பரும் உள்ளனர். கிழக்குப் பார்த்துள்ளதொரு தனிச் சந்நிதியில் விநாயகர் இடம் பெற்றிருக்கிறார். அவருக்கு அருகில் காணப்பெறும்

நாகர்களையடுத்து, இடைச்சியம்மன் மண்சிலையாக அமைந்திருக் கிறார்.

இடைச்சியம்மன் — கர்ப்பிணிப் பெண் ஒருவர் தகப்பனாருடன் பிரசவத்துக்காகத் தாய் வீட்டுக்கு இவ்வழியே சென்றவர், இங்கு தங் கியிருந்த நேரத்தில் காணாமற் போய்த் தாம் இங்கேயே (ஐக்கிய மாய்) அணைந்திருப்பதாய்க் கூறினாராம். அவருக்குச் சிலை அமைத்து, அரளிக்கோட்டை, அரண்மனைப்பட்டி ஆகிய ஊர்களின் கோனார் கள் (யாதவர்கள்) இந்த அம்மையாரை வழிபடுகின்றனராம். திருப் பணி நடைபெறும் இந்த நேரத்தில் இடைச்சியம்மனுக்குத் தனி யொரு மண்டபம் கட்டப்பெறுகிறது. ஆனால் இப்போதுள்ள குலால சிலையே அங்கும் இடம்பெறுமாம்; கற்சிலை அமைக்க அனுமதி கிடைக்கவில்லை என்று சொல்கின்றனர்.

வடக்குப் பிராகாரத்தில் திருமஞ்சனக் கிணற்றை ஒட்டியுள்ள ஒரு கல்பீடம், காளியம்மனாகக் கருதப்பெறுகிறது. மற்றொரு மேடை யில் உள்ள பீடத்தை முன்னோடி என்று கூறுகின்றனர்.

கோயிலுக்குள் திருச்சுற்றுச் சுவரை ஒட்டியுள்ள சேமங்குதிரை, கோயிலின் நுழைவாயிலில் காணப்பெறும் இரு துவார பூதங்கள் ஆகியவையும், மூலவர் விமானம், விநாயகர், பெரிய — சின்னக் கறுப்பர்களின் சந்நிதிகளின் விமானங்கள் ஆகியவையும், நாங்கள் சென்ற நேரத்தில் புதிதாகவோ, புதுப்பிக்கப்பெற்றோ வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. நுழைவாயில் மாடத்தில் காணப் பெறும் கஜலட்சுமி, அழகிய தோற்றமுடைய சுதைச் சிற்பம். நுழை வாயிலின் வலப்புறமுள்ள துவார பூதத்தின் அருகில் காணப்பெறு பவர் ஆகாசக் கறுப்பர்.

நாள்தோறும் ஒருகாலப் பூசையும், திங்கள், வெள்ளிக்கிழமைகளில் மட்டும் இருகாலப் பூசையும் நடைபெறும் இந்து அறநிலையத் துறை சார்ந்த இக்கோயிலில், மாசி மாதத்தில் மகா சிவராத்திரி மிகச் சிறப் பாகக் கொண்டாடப் பெறுகிறது. அந்த நாளில் நகரத்தார்கள் அதிக அளவில் கலந்து கொண்டு வழிபடுகின்றனராம். அவர்கள் இங்கு தங்கியிருந்தும் வழிபடுவது உண்டாம். ஐயனாரின் உற்சவத் திரு மேனி, அந்த நாளில் சகடையில் வைக்கப் பெற்று உலா வருவதுண்டு.

அரிமழம் நகரத்தார்கள் நடத்தும் படைப்புக்கு (யாருக்குப் படைப்பு நடத்துகின்றனர் என்று தெரியவில்லை.) முன்னர் இங்கு வந்து தீர்த் தம் எடுத்துச் செல்கின்றனராம்.[7] ஆத்தங்குடி, சிறுவயல், சொக்க லிங்கம்புதூர், முத்துப்பட்டணம் மாத்தூர் மணலூர்ப் பிரிவினர் இங்கு வந்து வழிபட்டுத் தீர்த்தம் எடுத்துச் சென்று, அழகாத்தாள் படைப்பை நடத்துகின்றனராம்.[8] ஆத்தங்குடி, தேவகோட்டை நகரத்தார்கள், தங்கள் வீடுகளில் நடைபெறும் திருமணங்களுக்கு இங்கிருந்து மாலை வாங்கிச் செல்வது உண்டாம்.

நகரத்தார் வீட்டுக் குழந்தைகளுக்குச் சிவராத்திரியின்போது முடிஇறக் குவது, கரும்புத் தொட்டில் கட்டுவது, பெயர் கூப்பிடுவது ஆகி யவை மேற்கொள்ளப் பெறுகின்றன.

ஆடி மாதத்தில் கிராமத்தார் நடத்தும் கிடாய்ப் பூசை பற்றிக் குறிப் பிட்ட அர்ச்சகர், சித்திராப் பௌர்ணமித் திருவிழா[9] பற்றி ஏதும் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஒருநாள் சித்திராப்

பௌர்ணமித் திருவிழாவின்போது, பொங்கல் இடுதல், சுவாமி புறப்பாடு, தெருக்கூத்து ஆகியவை நடைபெறுமாம்.

சிவராத்திரியின்போது ஐயனாருக்கு வெள்ளிப் பூணூல்கள் காணிக்கையாகச் செலுத்தப் பெறுவது உண்டாம். சில நேரங்களில் இரு நூறு பூணூல்கள் கூடக் காணிக்கையாக வருமாம்; அவற்றை அர்ச்சகர்களான வேளார்கள் வைத்துக் கொள்கின்றனர்.

பல மூர்த்தங்கள் மண் திருமேனிகளாக இருந்து பின்னர் கற்சிலைகளாக மாற்றப் பெற்ற இக்கோயிலின் மின்சாரக் கட்டணங்களை, ஆத்தங்குடி நகரத்தார் கட்டி வருகின்றனராம்.[10]

சுற்றுப்புறத்திலும், கண்மாய்ப் பகுதியிலும் காஞ்சிர மரங்கள் நிறைந்துள்ள இந்தக் கோயிலைப் பலவான்குடி — கானாடுகாத்தான் சாலையில், பலவான்குடியை அடுத்துள்ள திருவேலங்குடி கிராமத்தில் இடப்புறம் திரும்பிச் சுமார் ஒரு கி.மீ. மண் சாலையில் சென்று அடையலாம். மாலையிட்டான்பட்டிக்கு அருகில் ஆலத்திப்பட்டி அமைந்திருக்கிறது.

பரவும் சொல்மாலை

செங்கழுநீர் சூடும் திருமுடியும், மைவண்ணம்
தங்கொளிசேர் ஐயன் தனிஅழகும் — பொங்கும்அருள்
வெள்ளமுடன் வெள்ளானை மீதுவரும் சேவகமும்
உள்ளமுறக் காண்பன் உவந்து.

ஆலத்திப்பட்டி ஐயனார் கோயில்
ஐம்மணி மாலை

குறிப்பு விளக்கம்:

1. கே.எம். பழனியப்ப வேளார்; பலவான்குடி
2. கே.எம். பழனியப்ப வேளார்
3. ஆலத்திப்பட்டி ஐயனார் கோயில் ஐம்மணி மாலையில் அடங்கியுள்ள தகவல்; கா. சந்திரசேகரன், ஆத்தங்குடி; மு. பழனியப்ப செட்டியார், உ. சிறுவயல்; சுப.சுயி. பழனியப்பன், உ. சிறுவயல்; கே. எம். பழனியப்ப வேளார் ஆகியோர் கொடுத்த தகவல்கள் ஆகியவற்றின் அடிப்படையில்
4. தில்லை அ. சிதம்பரம், ஆ. முத்துப்பட்டணம்; கா. சந்திரசேகரன்
5. கா. சந்திரசேகரன்
6. கே.எம். பழனியப்ப வேளார்
7. கே.எம். பழனியப்ப வேளார்
8. ஆலத்திப்பட்டி ஐயனார் கோயில் ஐம்மணி மாலை
9. தில்லை அ. சிதம்பரம்
10. கா. சந்திரசேகரன்

உ

கருணை வெள்ளமே, கட்டுச்சோற்றுக் கறுப்பையா!

(81. கட்டுச்சோற்றுக் கறுப்பர் (உளிவீர சுவாமி) திருக்கோயில், ஆலத்துப்பட்டி)

சிறந்த வீரரும், அரச குலத்தினருக்கு வாள் வித்தை பயிற்றுவிப்பவருமான ஏனாதிநாத நாயனாரின் தாயாதியான அதிசூரன் என்பான், ஏனாதிநாதர் மீது அழுக்காறு கொண்டு, தன் உறவினர், மாணவர்களுடன் சென்று, அவருடன் போர் தொடுக்கிறான். இரு தரப்பிலும், எண்ணிறந்தோர் மடிந்ததைத் தவிர, யாருக்கும் வெற்றி தோல்வி ஏற்படவில்லை. அதிசூரனோ ஏனாதிநாதர் முன் நிற்க இயலாது ஓடி மறைந்தனன். அவரைச் சூழ்ச்சியினால் மட்டுமே வெல்ல முடியும் என்று உணர்ந்த அதிசூரன், அவரைத் தனித்துப் போருக்கு அழைத்தனன். ஏனாதிநாதர் தனித்து வந்தபோது, நீறு துலங்கும் நெற்றியுடன் வந்து, அவரை ஏமாற்றித் தன் வஞ்சக எண்ணத்தை முடித்துக் கொண்டனன் என்று பெரிய புராணம் கூறுகிறது.

இது போன்றதொரு நிகழ்வினை, ஆலத்துப்பட்டி, உளிவீர சுவாமி வாழ்க்கையிலும் கேள்விப்படுகிறோம்.

சக்கிலியர் குலத்தில் உதித்தவர் உளிவீரன்; மாபெரும் வீரர். பஞ்சகல்யாணிக் குதிரை[1]யைத் தேடி, மலையாளத்திலிருந்து, தொட்டியன் என்னும் மலையாளத்துக் கறுப்பர், சின்னக் கறுப்பர், கட்டுச்சோற்றுக் கறுப்பர் ஆகியோருடன் புறப்பட்டுத் தமிழ் மண்ணுக்கு வருகிறார். சூரக்குடியில் ஜமீன்தார் ஒருவரிடம் அக்குதிரை இருப்பதாக அறிந்து, அங்கு சென்று இரவோடு இரவாக அதை அபகரித்துக் கொண்டு காயாங்காடு என்னும் இடத்தைச் சென்றடைந்த போது, பொழுது புலர்ந்து விடுகிறது. யாரும் காணாதவாறு காட்டினுள்ளேயே மறைந்திருந்தனர்.

இதனிடையே குதிரையைக் காணாத ஜமீன்தார், ஆள் அம்புகளுடன் அதைத் தேடி வந்து, கானகத்தில் அவர்களைக் கண்டு, அவர்களுடன் சண்டையிட்டபோது, ஜமீன்தாரின் ஆட்கள் பலரும் உளிவீரனின் துணைவர்களும் மடிகின்றனர். இந்த நிலையில் தனித்துப் போரிட உளிவீரனை ஜமீன்தார் அழைக்க, அப்பால் இரு

வரும் தனித்துப் போரிட்ட நிலையில், ஊழ்வலியால் உளிவீரன் மடிய நேரிடுகிறது.

இவர்களைத் தேடிவந்த இவர்களது தாய் தங்கம்மாள், தம் பிள்ளை கள் சண்டையில் இறந்தது கண்டு, அதனைப் பொறுக்க இயலாத நிலையில், தானும் தற்கொலை செய்து கொள்கிறாள்.

பின்னர் ஆலத்துப்பட்டியில் இருந்த குருக்கள்மாரின் கனவில் தோன்றித், தம் கதையைக் கூறித் தமக்குக் கோயில் கட்டி வழி பட்டால், வழிபடுவோருக்கு வற்றாத வளத்தை வழங்குவதாக உளி வீரன் சொல்ல, நகரத்தாரின் முயற்சியால் உளிவீர சுவாமிக்கு அங்கு கோயில் எழுந்தது.[2]

★ ★ ★

ஆனால் இக்கோயில் புதிதாக எழுந்ததா, முன்பு இருந்த கோயி லில் உளிவீர சுவாமி சந்நிதி ஏற்படுத்தப் பெற்றதா என்பதற்கான விவரம் எதனையும் இந்த வர்ணிப்பிலிருந்து அறிந்து கொள்ள முடியவில்லை. மேலும், இப்போது உளிவீர சுவாமி கோயில் என்று பிரபலமாக விளங்கும் இக்கோயிலின் பிரதான தெய்வம் கட்டுச் சோற்றுக் கறுப்பரே[3] என்று சொல்கின்றனர். ஆனால் சந்நியா சியே இங்கு மூலவர் போன்று காணப்பெறுகிறார். ''அழகான சிம்மவாகனம்[4] ஏறி சந்நாசி ஆட்சி பீடத்தில் நிற்க''[5] என்னும் பாடல் வரியும்,இதை உறுதிப்படுத்துகிறது. சந்நியாசியை நடுநாயக மாக வைத்தே மற்ற தெய்வங்களைக் குறிப்பிட்டிருக்கிறார் கவிஞர்.

எனவே இக்கோயிலின் மூலவர் சந்நியாசியா, கட்டுச்சோற்றுக் கறுப்பரா, உளிவீரனா? இந்தக் குழப்பத்தில் சிக்கிக் கொண்டு விடாமல், கோயிலுக்குச் சென்று வருவோம் வாருங்கள்!

★ ★ ★

நகரத்தார்கள் வழிபடும் (நாங்கள் சென்றவந்த) குலதெய்வக் கோயில் களில், சற்று வித்தியாசமானவை, இப்போது நாம் வந்திருக்கும் ஆலத்துப்பட்டிக் கட்டுச்சோற்றுக் கறுப்பர் கோயிலும், அடுத்து நாம் செல்லவிருக்கும் சந்திவீரன் கோயிலும்.


ஆலத்(தி)துப்பட்டிக் காடப்ப ஐயனார் கோயிலில் வழிபாட்டை முடித்துக் கொண்டு, அருகிலிருக்கும் கண்மாய் வழி தெற்கே சென் றால், கட்டுச்சோற்றுக் கறுப்பர் கோயிலை அடைந்து விடலாம். இந்தப் பகுதியைத்தான் காயாங்காடு[6] என்று கவிஞர் குறிப்பிட் டிருப்பார் போலும். இக்கோயிலின் தலமரம் காஞ்சிரமரம் அன்று, காயாமரமே என இக்கோயிலை வழிபடுவோரும் அழுத்தந்திருத்த மாகக் கூறுகின்றனர்.[7]

வெள்ளிக்கிழமைகளில் மட்டுமே இக்கோயிலில் ஒருகாலப் பூசை நடைபெறுகிறதாகையால், மற்ற நாட்களில் (நேரத்தில்) செல் வோர், ஆலத்துப்பட்டியிலிருந்து பூசாரியை அழைத்துச் செல்வது நல்லது.

கோயிலின் இடப்புறம் கண்மாயும், முன்புறம் ஊருணியும் உள் ளன. ஊருணியை ஒட்டித் தனியாக உள்ள சிறியதொரு கோயி லில் ஆஞ்சநேயர் காட்சி தருகிறார். கோயிலினுள் பெருமாளும்

இடம் பெற்றிருப்பதால்,[8] வெளியிலிருந்து அவர்தம் பெருமையைக் கேட்டுக் கொண்டிருக்கிறாரோ?

கோயிலினுள் நுழைந்ததும், நமக்கு இடப்புறம் மடப்பளியும், வலப்புறம் தனியாக உளிவீர சுவாமி சந்நிதியும் காணப்பெறுகின்றன.



ஒளிவீசும் உளிகொண்டு ஒருநொடியில் வரநிற்கும் உளிவீர சுவாமி கோயில்

பரந்த திறந்த வெளியில், வேல்களும் நிறைய உள்ளன. இவற்றைக் கடந்து சென்றால், பெரியதொரு மண்டபம்; வலையபட்டி நகரத்தார் குடும்பத்தினர் 1992ஆம் ஆண்டில் செய்த திருப்பணி. அடுத்து உள்ளதுதான் பிரதான சந்நிதி. மூன்று விமானங்களைக் கொண்டு நீண்ட மண்டப வடிவில் இச்சந்நிதி அமைந்துள்ளது.

தர்பார் மண்டபத்தில் மந்திரி பிரதானிகள் புடைசூழ மன்னர் கொலு வீற்றிருப்பது போன்று, பரந்து விரிந்த சந்நிதியில், சந்நியாசியை நடுநாயகமாக வைத்து, அவரின் வலப்புறம் அரசுமகன், மலுக்கர் (இவர் காடப்ப ஐயனார் கோயிலுக்குக் குடியேறிய மழுக்கை ஐயனாருடன் தொடர்பு உடையவர் என்கிறார் பூசாரி. தொடர்பு என்ன? அவரேதான் இவர்! இங்கு ஐயனார் இல்லாத குறையைத் தீர்க்க, அவரை அருகில் வைத்திருக்கிறார்கள்!) ஆகியோரும், சந்நிதியின் தென்புறத்தை ஒட்டி முன்பு நாம் குறிப்பிட்ட மெய்யப் பெருமாள் (திருமயம் சத்தியமூர்த்தி என்னும் — மெய்யநாதன் என்றும், மெய்யப்பன் என்றும் வழங்கப்பெறும் — பெருமாளின்

பிரதிபலிப்புப் போலும்!), பெரிய கறுப்பர், சின்னக் கறுப்பர் ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

சந்நியாசியின் இடப்புறம் சந்தனக் கறுப்பர், தொட்டியன், ஊராளி கட்டுச்சோற்றுக் கறுப்பர், வேடர், செங்கிடாய்க் கறுப்பர், மேலக் கறுப்பர் ஆகியோருடன் தங்கஅம்மனும் உள்ளார். இந்தப் பரி வார மூர்த்தங்களில் சின்னக் கறுப்பர், தொட்டியன், கட்டுச் சோற்றுக் கறுப்பர் ஆகியோரே உளிவீரனுடன் மலையாளத்திலி ருந்து வந்தவர்கள் என்பதையும், தங்க அம்மனே இவர்களின் தாய் என்பதையும் நீங்களே புரிந்து கொண்டிருப்பீர்கள்! இங்குதான், இக்கோயில் மற்ற கோயில்களிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது என்பதைத் தெரிந்து கொள்கிறோம். மற்ற கோயில்களில் மூல வரும், பெரும்பாலான பரிவார தெய்வங்களும் கற்சிலைகளாகவே அமைந்திருக்கின்றன. ஒரு சில மட்டுமே குலால (மண்) சிலை களாகக் காணப்பெறுகின்றன. ஆனால் இங்குள்ள எல்லாச் சிலை களுமே அரைவைச் சாந்தைக் கொண்டு அமைக்கப்பெற்ற சுதைச் சிற்பங்களே; ஆனால் சிற்ப வேலைப்பாடு நிறைந்த அழகிய திரு மேனிகள்.

சுதைச் சிற்பங்களாக இருப்பதால், இவற்றுக்குத் திருமஞ்சனம் (நீராட்டல்) கிடையாது! திருக்குட நீராட்டு விழாவின்போது மட்டும் எல்லா மூர்த்தங்களுக்கும் புனிதநீர் அபிஷேகம் நடைபெறும்![9] இக்கோயிலில் தங்களுக்குத் தெரிய ஈசுவர ஆண்டு ஆனித் திங்கள் 14ஆம் நாளில் (1937) ஒருமுறையும், 24.08.1977ல் ஒருமுறை யுமாக இருமுறை திருக்குட நீராட்டு நடைபெற்றிருப்பதாக, 81, 77 வயதுப் பெரியவர்களைக் கலந்தாலோசித்து, வலையபட்டிப் பெருமகனார் ஒருவர் எழுதியிருக்கிறார்.[10]

தொடக்கத்தில் இது ஒரு கொம்படி ஆலயமாக, ஆலத்துப்பட்டிக் காயாங்காட்டில், மரத்தடியில் நடுகற்களுக்கான வழிபாடாகத் தொடங்கியிருக்கிறது. (ஜமீன்தாருடன் நடந்த சண்டையில் இறந்து பட்ட உளிவீரன், கட்டுச்சோற்றுக் கறுப்பர் போன்றோருக்கும், தற்கொலை செய்து கொண்ட தங்கம்மாளுக்குமான நடுகற்களாக இருந்திருக்கலாம்.) அடுத்த நிலையில் நாட்டு ஓடுகள் வேயப்பெற்ற கூடமாக அது உருமாறியிருக்கிறது. அப்போதே உளிவீரனுக்குத் தனிக்கூடம் இருந்திருக்கிறது. இவை சேதமுற்ற நிலையில்தான், நகரத்தார்களின் திருப்பணி தொடங்கியிருக்கிறது. கல் மண்டபம், கம்பிப் பாதுகாப்பு, திருச்சுற்றுச் சுவர், நடுகற்கள் இருந்த இடத் தில் சுதை வேலைப்பாடான சிலைகள் எனக், கோயில் மேம்பாடு கண்டிருக்கிறது.[11]

மண்டபத் தூணில் சிலை வடிவாக உள்ள மறவர் சமுகப் பெரியவர் தாம், கொம்படி ஆலயத்தைக் கட்டட அமைப்புக்கு மாற்றியவராக இருக்கவேண்டும் என்றும், அடுத்து நகரத்தார் திருப்பணி செய்த காலத்தில் அதை முன்னின்று நடத்தியவர், மற்றொரு தூணில் சிறிய உருவில் சிலை வடிக்கப் பெற்றுள்ள தேவகோட்டைக் கும ரப்ப செட்டியாராக இருக்க வேண்டும் என்றும் ஊகிக்க முடி கிறது. நகரத்தார் திருப்பணி செய்வதற்கு முன்னர் இக்கோயில், கண்மாய்க்குள் இருந்ததாகவும், தேவகோட்டைச் செட்டியார்தாம் இப்போதைய இடத்தில் கோயிலை அமைத்ததாகவும் கூறப்பெறு கிறது என்கிறார் பூசாரி.

அமராவதி புதூர், அரிமழம் (பிள்ளையார்பட்டி), உலகம்பட்டி, கடியாபட்டி, கல்லுப்பட்டி, குழிபிறை, கொத்தமங்கலம், கோனா பட்டு, தெக்கூர், தேவகோட்டை, நற்சாந்துபட்டி (பிள்ளையார் பட்டி), மேலைச்சிவபுரி, வலையபட்டி (பிள்ளையார்பட்டி — 30 புள்ளிகள்), வேகுப்பட்டி, வேந்தன்பட்டி ஆகிய ஊர்களின் பிள்ளை யார்பட்டி, வைரவன் கோயில், மாத்தூர் நகரத்தார்களான[12] சுமார் 1000புள்ளிகள்[13], உளிவீரன், கட்டுச்சோற்றுக் கறுப்பர் ஆகியோரைக் குலதெய்வங்களாகக் கொண்டு வழிபடுகின்றனர்.

மூலவர் (என்று தொகுப்பாளன் கருதும்) சந்நியாசி, ஆண்டிக் கோலத்தில் தாடி மீசையுடன் உருத்திராக்க மாலை, ஒலைச்சுவடி, தண்டம் ஏந்திப், புலியின்மீது அமர்ந்த கோலத்தில் காணப்பெறுகிறார். வேல் ஒன்றை இவர் கையில் வைத்திருக்கின்றனர். மூலி மலையா னாக — முருகனாக உருவகப்படுத்தப் பெறும் சந்நியாசி இவரா? ஆனால் ஏன் புலி மீது அமர்ந்திருக்கிறார்? பாந்தள அரசன் மக னாக வளர்ந்த மணிகண்டன் (பின்னர் ஐயப்பன்), புலிப்பால் கொண்டுவரக் காட்டிற்குச் சென்றபோதுதான், புலியையே வாகன மாக்கி அதில் அமர்ந்து வந்ததாகக் கதைகள் கூறுகின்றன. ஆனால் இவர் ஐயனாரும் அல்லரே?

கட்டுச்சோற்றுக் கறுப்பருக்கு ஊராளி என்று பட்டம்(?) கொடுக்கப் பெற்றுள்ளது. ஊராளி என்பவர் ஊர் அதிகாரி என்றும், மதுரை, திருநெல்வேலியிலுள்ள உழவரில் ஒரு வகையினர் என்றும் கூறப் பெறுகிறது.[14] ஆனால் இவர் உளிவீரனுடன் மலையாளத்திலிருந்து வந்ததாகப் பாடலில் கூறப் பெறுவதால், இரண்டாவதுள்ளது அடி பட்டு விடுகிறது. இவர்களின் பூர்வீக ஊரில் இவர் ஊர் அதிகாரி யாக இருந்திருக்கக் கூடும்.

எப்போதாவது நடைபெறும் ஆடி மாதப் படைப்பில் இவருக்குக் கட்டுச்சோறு வைத்துப் படைக்கப் பெறுவதால், இவர் கட்டுச் சோற்றுக் கறுப்பர் எனப்பெறுகிறார் என்பதையும்[15] ஏற்பதற் கில்லை. ஏனெனில் மலையாளத்திலிருந்து வரும்போதே இவர் பெயரைக் கட்டுச்சோற்றுக் கறுப்பணன் என்று கவிஞர் குறிப்பிடு கிறார். இருப்பினும், எத்தனை நாளானாலும், ''கட்டிய சோற்றுக் குக் காவலாய் நிற்பவர்'' இந்தக் கட்டுச்சோற்றுக் கறுப்பர் என்று கூறப்பெறுவது[16] பொருத்தமுடையதாக இருக்கிறது.

தங்கம்மாள் மிக அழகிய சிலா வடிவம். இவரைத் தெய்வமாக்கி விட்டதால், தங்க அம்மன் என்கின்றனர். தாய்மைத் தோற்றம், வயது முதிர்ச்சி ஆகியவற்றை அம்மையின் சிலையில் காண முடிகிறது. நற்சாந்துபட்டி(ப் பிள்ளையார்பட்டி) நகரத்தாரின் முன்னோ ரான அழகி அப்பத்தாள் என்பவருக்கு இங்கு சிலை வைக்கப் பெற்றுள்ளதாகக் கூறப்பெறுவது,[17] இந்தத் தங்க அம்மனைத் தான் குறிப்பிடுகிறார்களோ என ஐயுற வேண்டியிருக்கிறது; கார ணம், இந்தத் தங்க அம்மனைத் தவிர, வேறு பெண் மூர்த்தம் எதனையும் இங்கு காணமுடியவில்லை.

சின்ன — பெரிய கறுப்பர்களுடன் உள்ள மெய்யப் பெருமாள் பற்றிய ஒரு சுவையான தகவல்: எப்போதாவது நடைபெறும்[18] ஆடிப் பெரும் படைப்பில், வயிற்றில் குட்டியுடன் கூடிய (சூல்)

ஆடு, வெட்டப் பெறாமல், வயிற்றில் ஈட்டி கொண்டு குத்திப் பலியிடப் பெறும் (அந்தோ, பெருங் கொடுமை!) என்று சொல்லப் பெறுகிறது. அந்த நேரத்தில் (இந்தப் பூசை தொடங்குமுன்னர்) சந் நியாசி, மெய்யப் பெருமாள் ஆகியவற்றைப் (இவை சைவச் சாமி களாம்!) பெரிய துப்பட்டி கொண்டு மூடி வைத்துவிடுவார்கள் என்று சொல்கிறார், இக்கோயிலைப் பற்றிய ஏராளமான தகவல் களைத் தெரிவித்துள்ள வலையபட்டித் திருப்பதி செட்டியார். ஆனால், மெய்யப் பெருமாளுக்கே இந்தச் சூலாட்டுப் பலி நடை பெறுகிறது என்கிறார் பூசாரி முருகப்பன்.

இது என்ன விந்தை? மெய்யப் பெருமாள், திருமால் திருவுருவ மாயிற்றே என்று கேட்டபோது, தொன்றுதொட்டு இந்த வழக்கம் இருந்து வருகிறது என்கிறார் பூசாரி. இதில் எது சரியான தகவல்?

மண்டபத்துத் தூண்களில் வடக்குச் சுவரை ஒட்டியுள்ள அரைத் தூணில் காணப்பெறும் புரையில்,[19] இந்தச் சூலாட்டுப் பலிகளை யெல்லாம் பார்க்க விரும்பாமல், தம்மை மறைத்துக் கொண்டு விநாயகர் அமர்ந்திருக்கிறார்.

பிரதான சந்நிதியிலிருந்து, கோயில் வளாகத்தினுள் வடமேற்கு மூலையில் உள்ள உளிவீர சுவாமி சந்நிதிக்குச் செல்கிறோம்.

ஒட்டுக்கூடத்தின் வழியே சென்று, அரச வம்சத்துப் போர்வீரர் போன்று, வலப்புறம் சரிந்த கொண்டையில் கிரீடம் தரித்து, வலக் கையில் உருவிய பிச்சுவா(ள்), இடக்கையில் கதாயுதம் தாங்கி, இடுப்பில் பிச்சுவா(ள்) உறை, கேடயம் அணிந்து உருட்டி விழித்து, அடியாரைக் காக்க — தீயோரைத் தட்டிக் கேட்கத் தயாரான நிலை யில் இருக்கும் உளிவீர சுவாமியைத் தரிசிக்கிறோம். உளிவீரன் என்னும் பெயருக்கேற்ப, இவரிடம் உளி போன்ற ஆயுதம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் இவரிடத்து நேர்ந்து கொள் வோர், சிவராத்திரியின் போது, தங்கம், வெள்ளியினாலான உளி, கத்தி போன்றவற்றை ஏராளமாகக் காணிக்கையாகச் செலுத்துகின் றனராம்.

இவர் சிறந்த பிரார்த்தனைத் தெய்வமாகக் கருதப் பெறுகிறார். அநீதி இழைக்கப் பெறுபவர்கள் இவரிடம் தங்கள் குறைகளைச் சொல்லிப் பரிகாரம் தேடிக் கொள்கின்றனராம்.

முன்பு இவருக்குப் படைக்கப் பெற்றது போன்று இப்போது சாரா யம் படைக்கப் பெறுவதில்லை என்கிறார் பூசாரி. அதே நேரத்தில், எப்போதும் — இப்போதும் மதுபானங்கள் (கள் முதல் உயர் வகைச் சீமைச் சரக்கு வரை) நிவேதிக்கப் பெறுகின்றன என்னும் மாறுபட்ட கருத்தும் நிலவுகிறது.[20] இப்போது மதுவுக்குப் பதி லாக இளநீரைச் சீவி வைத்துப் படைக்கின்றனர் என்று பூசாரி சொல்கிறார். சில நேரங்களில் 100, 200 இளநீர்கள்கூட நிவே திக்கப் பெறுவது உண்டாம். இவருக்கு நிவேதிக்கப்பெறும் எந்தப் பொருளும், பக்தர்களுக்குக் கொடுக்கப் பெறுவதில்லை. முன்பு ஹரிஜனங்களுக்கு அவை கொடுக்க பெற்றனவாம்; பின்னர் அவற் றைக் கண்மாயில் சேமம் செய்து வந்தார்களாம்; இப்போது தெய்வ சம்மதத்துடன் பூசாரிகள் அவற்றை எடுத்துக் கொள்கின்றனராம்.[21]

★ ★ ★

சிவராத்திரி இங்கு மிகச் சிறப்பாக இரண்டு நாட்களுக்குக் கொண் டாடப் பெறுகிறது. சிவராத்திரிக்கு முதல்நாள் பச்சைவாழை பரப் பிச், சிவராத்திரியன்று நள்ளிரவுக்குப் பிறகு வேக வைத்த நவதானி யங்கள், காய்கறிகள் ஆகியவற்றுடன் பொங்கலிட்டுப், படைத்துப், பள்ளயம் பார்ப்பதற்காகச் சுவாமி அழைத்துப், பின்னர் சுவாமி அருள்வாக்குச் சொல்வது உண்டாம்.[22] இங்கிருந்து நகரத்தார் இருவரும், கிராமத்தார் ஒருவரும் (சூலாயுதம், அரிவாள் ஏந்திச்) சாமியாடி, ஆலத்துப்பட்டி ஐயனார் கோயிலைச் சென்றடைவார் கள் என்று பூசாரி கூறுகிறார். இவ்விரு நாட்களிலும் நகரத்தார்கள் பேரளவில் கலந்து கொண்டு வழிபட்டு மகிழ்கின்றனர்.



தாயாகித் தண்ணளி செய்யும் தங்க அம்மன்

இந்த இரு நாட்களிலும் பிள்ளைகளுக்கு முடி இறக்குவது, பெயர் கூப்பிடுவது, கரும்புத் தொட்டில் கட்டுவது (சில நேரங்களில் 50, 60 தொட்டில்கள்கூடக் கட்டப் பெறுமாம்) போன்றவற்றை நகரத்தார் கள் மேற்கொள்கின்றனர். நகரத்தார்களுக்குச் சொந்தமான இந்தக் கோயிலை, அறங்காவலர்களாக உள்ள ஒன்பது பேர், ஆண்டுக்கு மூவர் வீதம் நிர்வகித்து வருகின்றனர். கோயில் திருப்பணிகள், மராமத்து ஆகிய எல்லாவற்றையும் நகரத்தார்களே செய்து வரு கின்றனராம்.

உளிவீரனுடன் சண்டையிட்டு அவரைக் கொன்றதாக, உளிவீர சுவாமி வர்ணிப்பில் கூறப்பெறும் சூரக்குடி ஜமீன்தார் பரம்பரைக்கே, முன்பு, முதல் மரியாதை வழங்கப் பெற்றதாம்!! இப்போது நாட் டாருக்கு முதல் மரியாதை வழங்கப்பெறுகிறது.[23]

★ ★ ★

கள்ளணன்—பிள்ளைப் பெருமாள் கோயிலில், கள்வனான கள் ளணன்; அழகர் கோயிலில், சிலைத் திருட்டுக்கு உடந்தையாகக் காவலுக்கு வந்த கறுப்பர்; இங்கு பஞ்ச கல்யாணிக் குதிரை திருட வந்த உளிவீரன் போன்றோர்,[24] பிரபலமான தெய்வ மூர்த்தங் களாக — பிரார்த்தனைத் தெய்வங்களாகத் திகழ்வது எங்ஙனம் என்னும் (நியாயமான?) ஐயம் யாருக்குமே எழுவது இயற்கை.

அந்த நாள் முதல் இந்த நாள் வரை, அடாவடிக்காரர்களான சிலர், தத்தம் பகுதிகளிலுள்ள மக்களிடம் பாதுகாப்புப் பணம் (Protection money) பெற்று, மற்ற பகுதிகளிலிருந்து கள்வர், கொலை காரர் போன்ற தீயோர் தம் பகுதியை அணுகாவண்ணம் காத்து வந்தனர், வருகின்றனர் என்பது கண்கூடு. அந்தந்தப் பகுதிகளில் உள்ள மக்களும், தமக்குப் பிறரால் தீங்கு, ஆபத்து நேரும்போது, அந்த அடாவடிக்காரர்களை அணுகி, அவர்களுக்குக் கப்பம்(!) கட்டித் தீமையைத் தவிர்த்துக் கொள்கின்றனர்; பாதுகாப்பைத் தேடிக் கொள்கின்றனர். இத்தகையோர், பெரும்பாலும் பூர்வீகத்தில் வன்செயலில் ஈடுபட்டவர்களாகவே இருப்பர். இந்த அடிப்படை யிலேயே, முன்னர் கூறப்பெற்ற மூர்த்தங்கள், சிறந்த பிரார்த் தனைத் தெய்வங்களாகத் திகழ்கின்றன என்று கூறினால், சி(ப)லர் சீற்றங்கொள்ளக்கூடும்; தெய்வ அபசாரம் செய்து விட்டதாகச் சீறக்கூடும். ஆனால், இறைவன் 'அடியார் செய்த (நியாயமான) அனாசாரம் பொறுத்தருளி, அவர்மேல் என்றும் சீறாத பெரு மான்'[25] என்னும் நம்பிக்கை எளியேனுக்கு நிறைய உண்டு!

★ ★ ★

இக்கோயில் பற்றிய மேலும் பல ஆதாரங்கள் — தகவல்கள், கோயி லில் உள்ளதாகக் கருதப்பெறும் மிகப் பழைய ஓலைச் சுவடிகளில் அடங்கியிருக்கக் கூடும் என்று சிலர் கருதுகின்றனர். அவை, திரு முறைப் பாக்கள் பல செல்லரித்துப் போனது போல் அழிந்து போகாமல், அவற்றின் உள்ளடக்கத்தை அறிந்து, உலகுக்கு — உங்கள் கோயில் பங்காளிகளுக்காவது — உணர்த்துங்கள் என்று கோயில் நிர்வாகத்தினரைக் கும்பிட்டுக் கேட்டுக் கொள்கிறேன்.

பரவும் சொல்மாலை

1. தங்கம்மன்

தாயாகி நாளும் தாங்குகின்ற தெய்வமே!
தங்க நிறமான அம்மையே!
சேயான நாங்கள்உன் திருவருளை நாடியே
திருவடி மலர்காண வந்தோம்,
காயாத கொம்புமுன் கருணையால் பூத்துக்
கனிதரக் கடைக்கண்அருள் செய்வாய்,
வாயாரத் துதித்து வலம்வந்த எமக்கு
வரந்தர இதுசமயம் வருகவே.

2. கட்டுச்சோற்றுக் கறுப்பர்

எட்டுநாள் ஆனாலும், எத்தனைநாள் ஆனாலும்,
எந்தவூர் குறையும்இன்றிக்
கட்டிய சோற்றுக்குக் காவலாய் நிற்கின்ற
கட்டுச் சோற்றுக் கறுப்பரே!
தொட்டுத் திருவடியைத் தொழுவதற்கு வந்துள்ளோம்,
துன்பம் துடைக்க வருகவே!
மட்டிலாக் கருணையுடன் மக்கள்குறை தீர்ப்பதற்கு
மனமகிழ வருக வருகவே!

3. உளிவீர சுவாமி

சீர்மருவு செல்வச் செழிப்புடைய குலதெய்வத்
திருவருளை எண்ணி எண்ணி,
ஏர்மருவு வாசலில் நிற்கின்றார் உன்அடியார்
இன்பஅருள் சுரக்க வருகவே!
கார்மருவு சோலைவளர் ஆலத்துப் பட்டிதனில்
கண்குளிரக் கண்ட தெய்வமே!
கூர்மருவு உளிகொண்ட உளிவீர சுவாமியே!
குளிர்கருணை பெற்று வருகவே!

— பேராசிரியர் வித்துவான் வே. அண்ணாமலை

குறிப்பு விளக்கம்:

1. மயூரகதி (மயில் போலும் நடை), மல்லகதி (மல்யுத்தம் செய்பவர் போன்ற நடை), வானரகதி (குரங்கு போன்ற நடை), விடபகதி (எருது நடை), வியாக்ரகதி (புலி நடை) ஆகிய ஐந்து நடைகளைக் கொண்ட குதிரை
2. ஆதாரம்: உளிவீர சுவாமி பேரில் வர்ணிப்பு — குலசேகரப்பட்டினம் இராமநாத பிள்ளை, 1933
3. கு. முருகப்ப பூசாரி, ஆலத்துப்பட்டி; இராம.வெ.லெ. திருப்பதி செட்டியார், வலையபட்டி

'ஆவணங்களில் கட்டுச்சோற்றுக் கறுப்பர் கோயில் என்றே உள்ளது. இவரும், உளிவீர சுவாமியும், அரசரும், அமைச்சரும் போல் திகழ்கின்றனர்' என்கிறார் பூசாரி

ஆனால், உளிவீரனுடன் வந்தவரே இந்தக் கட்டுச்சோற்றுக் கறுப்பர். மேலும் பூசாரிகள் கனவில் தோன்றிப் பூசை வைக்குமாறு கேட்டுக் கொண்டவரும் உளிவீரனே

4. பாடலில் குறிப்பிடப் பெறுவது போன்று சந்நியாசி சிம்ம வாகனத்தில் அமர்ந்திருக்கவில்லை. அமர்ந்திருக்கும் புலி மீதே, இடக்காலைத் தொங்கவிட்டு வலக்காலை மடக்கி வைத்து அமர்ந்திருக்கிறார்
5. உளிவீர சுவாமி பக்திப் பாடல்
6. 'வனமிகுந்த காயாங்காடு வந்துசேர்ந்தீர்' — உளிவீர சுவாமி பேரில் வர்ணிப்பு
7. இராம.வெ.லெ. திருப்பதி செட்டியார்

   காயா என்பது பூவை, காசா மரம், கருமையான ஊதா நிற மலர்களைக் கொண்ட கட்டையான மரம்; திருமாலின் மேனி இம்மரங்களின் மலர்களை ஒத்திருப்பதால் அவருக்குக் காயாம்பூ மேனியன் என்றொரு பெயரும் உண்டு — கலைக்களஞ்சியம்
8. பிரதான சந்நிதியின் வலப்புறம் சின்னக் கறுப்பர், பெரிய கறுப்பர் ஆகியோருடன் உள்ள மெய்யப் பெருமாள்
9. கு. முருகப்ப பூசாரி
10. மு.அ.கதி. சுப்பிரமணியன் செட்டியார், பெரி.நா. நாகப்ப செட்டியார், வலையபட்டி; இராம வெ.லெ. திருப்பதி செட்டியார்
11. இராம.வெ.லெ. திருப்பதி செட்டியார்
12. எம். பழனியப்பன், நற்சாந்துபட்டி; இராம.வெ.லெ. திருப்பதி செட்டியார்; மு. பழனியப்ப செட்டியார், உ. சிறுவயல்; கு. முருகப்ப பூசாரி ஆகியோரின் தகவல்
13. இராம.வெ.லெ. திருப்பதி செட்டியார்
14. தமிழ் அகராதி, அபிதான சிந்தாமணி
15. கு. முருகப்ப பூசாரி
16. ஆலத்துப்பட்டிக் கட்டுச்சோற்றுக் கறுப்பர் கோயில் குலதெய்வ எழுச்சிப் பாடல்கள் — பேராசிரியர் வே. அண்ணாமலை
17. எம். பழனியப்பன்
18. கோயிலின் உட்புறம் தென்மேற்கு மூலையில் உள்ள ஒற்றைப் பனைமரத்தில் கௌளி சொல் கேட்டு. இறைவாக்குக் கிடைக்குமேயானால் மட்டுமே இந்தப் படைப்பு நடைபெறும் — இராம.வெ.லெ. திருப்பதி செட்டியார்
19. தூண் போன்ற அமைப்புச், சுவரை ஒட்டி இருப்பின், அது அரைத் தூண் எனப்பெறும். சுவரில் சிலைகளை வைக்க அமைக்கப்பெறும் குழி போன்ற பகுதி புரை என்று அழைக்கப்பெறுகிறது. — தென்னிந்தியச் சிற்பங்களும் சிலைகளும் — தி. இராசமாணிக்கம்
20. இராம.வெ.லெ. திருப்பதி செட்டியார்
21. கு. முருகப்ப பூசாரி
22. இராம.வெ.லெ. திருப்பதி செட்டியார்
23. இராம.வெ.லெ. திருப்பதி செட்டியார்
24. இக்கூற்றுக்கு ஆதாரம்: கள்ளணன்—பிள்ளைப் பெருமாள் : பூசாரி சுப. பழனியப்பன், கோனாபட்டு; புலவர் கும. ஆறுமுகம், கோனாபட்டு; பதினெட்டாம்படிக் கறுப்பர் : அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் வரலாறு; உளிவீர சுவாமி : உளிவீர சுவாமி பேரில் வர்ணிப்பு
25. ஆறாந் திருமுறை — அப்பர் சுவாமிகள்

உ

சிந்திப்பரிய சந்திவீரன்

(82. சந்திவீர(ப்ப)ர் திருக்கோயில், ஆலத்துப்பட்டி)

திருப்புத்தூர்க் கோட்டைக் கறுப்பரை வழிபடும் ஒரு பிரிவினர், ஆடி மாதத்தில் அங்கு சென்று சேர்ந்து வழிபடும் நாளில், கறுப்பருக்கு அபிஷேகங்கள் செய்து, அங்கிகள் சாத்திய பின்னர், உடனடியாகத் திருத்தளிநாதர் கோயில் சென்று வைரவரை வழிபட்டுவிட்டு வந்துதான், கறுப்பருக்கான வழிபாட்டைத் தொடங்குகின்றனர்;[1]

அம்மாபட்டி பெரியநாயகியை வழிபடும் நகரத்தார்களில் ஒரு பிரிவினர், அருகிலுள்ள (செண்பகம்பேட்டை பணிச்சாருடைய(?)) ஐயனார் கோயிலுக்குச் சென்று, அவருக்கு அபிஷேகம் செய்து, பாற்பொங்கல் வைத்த பின்னரே, பெரியநாயகிக்கு அபிஷேகம், பொங்கல் முதலியவற்றை மேற்கொள்கின்றனர்;[2]

ஆலத்துப்பட்டியில், இதற்கு முன்னர் நாம் சென்று வந்த கட்டுச்சோற்றுக் கறுப்பர் (உளிவீரசுவாமி)கோயில், மற்றும், நாம் இப்போது வந்துள்ள சந்திவீர(ப்ப)ர் கோயில் ஆகியவற்றைக் குலதெய்வக் கோயில்களாகக் கொண்டோர், ஆலத்துப்பட்டி(க் காடப்ப) ஐயனாரை வழிபட்ட பின்னரே, இவ்விரு கோயில்களிலும் வழிபாடு செய்வார்களாம்.[3]

பின்னர் குறிப்பிடப்பெற்ற இரு கோயில்களில், கட்டுச்சோற்றுக் கறுப்பர் கோயிலில், மழுக்கை ஐயனார் சிலை இருந்தாலும், அது மூலவர் நிலையை(தகுதியை) எட்டவில்லை; சந்திவீரன் கோயிலில் அதுவும் இல்லை. எனவே, மூலவராக ஐயனார் உள்ள காடப்ப ஐயனார் கோயிலை இவர்கள் வழிபட்டு வருவது, கோட்டைக் கறுப்பர், பெரியநாயகி ஆகியோரை வழிபடுவோர் முறையே வைரவர், பணிச்சாருடைய ஐயனார் ஆகியோரை வழிபடுவது ஆகியவை, மற்ற கோயில்களுடன் இவர்களுக்கு உள்ள தொடர்பைக் குறிக்கின்றனவா? அந்தக் கோயில்களை முன்பு வழிபட்டுக் கொண்டிருந்து, பின்னர் இக்கோயில்களுக்கு வந்தவர்கள் என்று பொருள்படுகின்றதா? (மணமேற்பட்டி கண்ணப்ப ஐயனாரை வழிபட்டு வந்த ஆவிணிப்பட்டி ஒக்கூருடையார், பின்னர் மூலங்குடிப் பொன்னன் கோயிலுக்குப் போகவில்லையா?)

இதற்குச் சரியான விளக்கம் ஏதும் கிடைக்கவில்லை. இருப்பினும், (செண்பகம்பேட்டை) ஐயனாரை வழிபடும் பெரியநாயகியின்

பிள்ளை ஒருவர்,[4] 'அது (ஐயனார்), உபதெய்வம் தானே தவிரக் குலதெய்வமாக அதனை நாங்கள் கொண்டாடவில்லை' என்கிறார்; 'அது ஒரு காவல் தெய்வம்; அதனை வேண்டும்போது, ''கால்மாடு காக்க தலைமாடு காக்க'' என்றுதான் வேண்டுகிறார்கள்' என்று மேலும் கூறுகிறார்.

கொ.இலட்சுமிபுரம், குழிபிறை, பனையப்பட்டி ஆகிய ஊர்களின் மாத்தூர்க்கோயிலின் மணலூர், உறையூர்ப்பிரிவு நகரத்தார்கள் சுமார் 200 புள்ளிகள்,[5] சிறப்புடன் கொண்டாடப்பெறும் சிவ ராத்திரியன்று ஆலத்துப்பட்டி ஐயனார் கோயிலில் வழிபட்டு விட்டு, அடுத்த நாள்தான், இப்போது நாம் வந்திருக்கும் (தங்கள் குலதெய்வக் கோயிலான)ஆலத்துப்பட்டி சந்தி வீர(ப்ப)ர் கோயி லுக்கு வருகின்றனர்.[6]

* * *

கட்டுச்சோற்றுக் கறுப்பர் கோயிலிலிருந்து, பிரதான சாலைக்குச் சென்று, சந்திவீரன் கோயில் என்னும் பெயர் அறிவிப்புப் பலகை உள்ள இடத்தில் சாலையின் வலப்புறம் திரும்பிச் சிறிது தொலைவு சென்றால், சந்தி வீரப்பர் என்னும் சந்திவீரன் கோயிலை அடைய லாம்.

இந்தக் கோயிலும், கட்டுச்சோற்றுக் கறுப்பர் கோயிலைப் போன்று, அரைவைச் சாந்தினாலான (சுதைச்)சிற்பங்களையே கொண்டிருக் கிறது. இங்கும் மூலவர் (என்று தொகுப்பாளனால் கருதப் பெறு பவர்) முனிபுங்கவரே (சந்நியாசி)!

நுழைவாயிலின் மேல் சிறு கோபுரம் போன்ற அமைப்பினை உடைய மாடத்தில், குதிரையின்மீது சந்திவீரன் அமர்ந்திருப்பது போன்ற சுதைச் சிற்பத்தைக் கொண்டிருக்கும் கோயிலினுள் செல் கிறோம். பரந்த பெரிய திறந்த வெளி.


முதலில் ஓர் ஓட்டுக்கூடம்; அடுத்து ஒரு மண்டபம். அடுத்துள்ள, மேற்கூரையாகக் கல் தகடுகள் பரப்பப்பெற்ற கல் மண்டபத்தில், வழிபடு மூர்த்தங்கள் வரிசையாக உள்ளன. இவை தவிரத் திறந்த வெளியிலும் சில மூர்த்தங்கள்; சித்திரங்களாகவும் சில!

கட்டுச்சோற்றுக் கறுப்பர், உளிவீரன் ஆகியோரும்கூட இங்கு இடம்
பிடித்துக் கொண்டிருக்கின்றனர், பிரதான மண்டபத்துக்குச் செல்லு
முன்னர் உள்ள திறந்த வெளியில். உளிவீரப்பர் பிரதான மண்
டபத்தை நோக்கியவாறும், அவருடைய இடப்புறம் கட்டுச்சோற்
றுக் கறுப்பரும், ஓட்டு மண்டபத்தை ஒட்டிக் குப்பம்மாள் என்னும்
தேவதையும் தனித்தனியாக உள்ளனர். இந்தக் குப்பம்மாள் ஒரு
வரே, இங்குள்ள ஒரே பெண் மூர்த்தம், (கட்டுச்சோற்றுக் கறுப்பர்
கோயிலில் தங்கம்மாள் போன்று). தகவல் கொடுத்திருப்போரோ,
அர்ச்சகரோ, இந்தக் குப்பம்மாள் பற்றி எதுவும் விவரிக்கவில்லை.
எனவே, நாமும் அந்த அளவில், பிரதான மண்டபத்துக்குச் செல்
கிறோம்.

தாரண ஆண்டு வைகாசித் திங்கள் 32ஆம் நாள் (1944) கானாடு காத்தான் நகரத்தாரால்[7] திருப்பணி செய்யப்பெற்றதென்றும், 07.02.1946ல் திருச்சுற்றுச் சுவர், விடுதி ஆகியவை மராமத்துச்

செய்யப்பெற்று, நகரத்தார்களால் திருக்குட நீராட்டுச் செய்யப் பெற்றது என்றும் குறிப்பிடும் தகவல் பலகையைக் கோயிலில் காணமுடிகிறது. ஆனால் இருமுறை குடமுழுக்கு நடைபெற்றிருக் கிறது என்று கூறப்பெறுவதற்கும்,[8] அண்மையில் (மூன்று ஆண்டு களுக்கு முன்னர்) குடமுழுக்கு நடைபெற்றது என்று கூறப்பெறு வதற்குமான[9] குறிப்புகள் எதனையும் கோயிலில் காண இயல வில்லை. இருப்பினும் மூர்த்தங்களும், சித்திரங்களும் புதுமை கலையாது காணப்பெறுவது, அண்மையில் கோயில் புதுப்பிக்கப் பெற்றிருக்கலாம் என்னும் எண்ணத்தைத் தோற்றுவிக்கின்றது.

(தர்பாரில்) நடுநாயகமாகச் சந்நியாசி (நிற்கும் புலி மீது) அமர்ந் திருப்பது, அவரையே மூலவர் என எண்ணவைக்கிறது. அவரின் வலப்புறம், கோயிலின் நாயகர் சந்தி வீர(ப்ப)ர், உருவிய கத்தியை உயர்த்திப் பிடித்த வண்ணம் குதிரைமீது அமர்ந்திருக்கிறார். இவர் அமர்ந்திருக்கும் குதிரையின் முன் இரு கால்களையும், தன் கரங் களால் தாங்கி நிற்கிறது குள்ளமான பூதம் ஒன்று; குதிரையின் இரு புறமும் (இன்னும் குள்ளமான) இரு பூதங்கள் இடுப்பில் கை வைத்து எழிலாக நிற்கின்றன. சந்தி வீரப்பர் தலையில் மாப்பிள்ளைத் தொப்பி போன்று தரித்துப், பரந்து விரிந்த மீசையுடன், எதற்கும் அஞ்சாத



சந்திவீரன் கோயில்

தோற்றத்தினராய்க் காட்சி தருகிறார். இவரை வழிபடுவோர், நிச்சயமாக எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை; காரணம், தம்மை நம்பினோரை இவர் ஒருநாளும் கைவிடமாட்டார்! சந்தி என்பதற்கு வணக்கம் என்றும் பொருள் சொல்லப்பெறுகிறது. ஆகையால் இவரை வணக்கத்திற்குரிய வீர(ப்ப)ர் என்பது பொருத்தமாக இருக்குமன்றோ?

சந்திவீரரின் இடப்புறத்தில் செங்கிடாய்க் கறுப்பரும், சந்நியாசியின் வலப்புறம் பெரிய கறுப்பரும், சின்னக் கறுப்பரும் உள்ளனர். இந்த மூர்த்தங்களுக்குப் பின்னால், சுவரில் திரைச்சீலைகள் போன்ற சித்திரங்கள் தீட்டப்பெற்றிருப்பதோடு, மாரியம்மன், விநாயகர், மகாவிஷ்ணு, முருகன் போன்ற தெய்வ உருவங்களும் சித்திரங்களாகவே தீட்டப்பெற்றிருக்கின்றன!

* * *

சிவராத்திரி போன்ற சிறப்பு நாட்களில் மட்டுமே வழிபாடு நடைபெறும் இக்கோயிலில், ஒவ்வொரு நாளும் தீபம் மட்டுமே போடப்பெறுகிறது. எண்ணெய் (நெய்)த் தீபம் மட்டும் போதாதென்று கருதியே, குழிபிறை நகரத்தார்கள் 03.07.87ல் மின்சார விளக்குகளையும் போட்டுக் கொடுத்திருக்கின்றனர்.

சிவராத்திரியன்று இங்கு பச்சைவலை சிறப்பாக நிவேதனம் செய்யப்பெறுகிறது. பாசிப்பயறு அவித்து, ஊறப்போட்ட அரிசியை அதில் கலந்து படைப்பது பச்சைவலையாகும். ஆண்டுதோறும் நடைபெறும் இந்தச் சிவராத்திரியின்போதும், எப்போதாவது நடைபெறும் பெரும் படைப்பின்போதும், சாமியாடி கையில் அரிவாளுடன் சுவாமி ஆவேசிக்கப் பெற்று அருள்வாக்குக் கூறுவார்.

நகரத்தார் வீடுகளில் திருமணம் நடைபெற்ற பின்னர் மணமக்கள் இங்கு வந்து வழிபடுவதும், பிறந்த குழந்தைகளுக்குத் தொட்டில் கட்டுவதும் இங்கு வழக்கமாக நடைபெறுகின்றன. இரும்பு உளி இங்கு காணிக்கையாகச் செலுத்தப்பெறுகிறது என்று அர்ச்சகர் கூறியபோதிலும், எந்த மூர்த்தத்திற்கு என அவர் குறிப்பிடவில்லை. ஆனால் உளிவீரனுக்குத் தங்க, வெள்ளி, இரும்பு உளிகள் காணிக்கையாகச் செலுத்தப் பெறுகின்றன என்று நகரத்தார் பெருமக்கள் கூறுகின்றனர்.[10]

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

பூவலர் கொன்றைய மாலைமார்பன்,
　　போருகிர் வன்புலி கொன்றவீரன்,
மாதுநல் லாள்உமை மங்கைபங்கன்,
　　வண்பொழில் சூழ்தென் பெருந்துறைக்கோன்,
ஏதில் பெரும்புகழ் எங்கள் ஈசன்
　　இருங்கடல் வாணற்குத் தீயில்தோன்றும்

ஓவிய மங்கையர் தோள்புணரும்
உருவறிவார் எம்பிரான் ஆவாரே.

திருச்சிற்றம்பலம்

— 8 ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

— சிந்தையால் அணுகல் அரிய

1. லெ. கறுப்பன் செட்டி, தேவகோட்டை
2. புலவர் மு. சேதுராமன், மேலைச்சிவபுரி
3. கே.எம். பழனியப்ப வேளார், பலவான்குடி
4. புலவர் மு. சேதுராமன்
5. ஏ.ஆர். சுவாமிநாதன், பனையப்பட்டி
6. அர்ச்சகர் கா. முத்துவிசயன், ஆலத்துப்பட்டி
7. தகவல் கொடுத்துள்ளோரும், அர்ச்சகரும், கானாடுகாத்தான் நகரத்தார் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. இருப்பினும் கானாடுகாத்தான் நகரத்தாரால் திருப்பணி செய்யப்பெற்றதென்றால், அவர்களும் இக்கோயிலுக்கு அடிமைப்பட்டவர்களாக (குலதெய்வக் கோயிலாய்க் கொண்டவர்களாக)த் தானே இருக்கவேண்டும்?
8. ஏ.ஆர். சுவாமிநாதன்
9. கா. முத்துவிசயன்
10. ஏ.ஆர். சுவாமிநாதன்

உ

சொற்பதம் கடந்த சோலையாண்டவர்

(83. சோலையாண்டவர் திருக்கோயில், கொத்தரி, பள்ளத்தூர்)

கோனாபட்டு கள்ளணன்— பிள்ளைப் பெருமாள் கோயிலில் நான்கு ஐயனார் மூர்த்தங்கள் கருவறையில் இருக்கக் கண்டோம்; பின்னர் நாம் செல்லவிருக்கும் கருவியப்பட்டியில், இரு ஐயனார் சந்நிதி கள் இருக்கின்றன; ஆனால் இப்போது நாம் வந்துள்ள சோலை யாண்டவர் கோயிலில் உள்ள மூலவர், மூன்று ஐயனார்கள் இணைந் தவர் என்று கூறப்பெறுகிறது.[1] சோலையாண்டவர் என்றே பொது வாக அழைக்கப்பெறும் இவருக்கு ஆவணங்களில் உள்ள பெயர் சோலை வளர்த்த ஐயனாராம்! இந்த ஐயனாருடன், பாலை வளர்த்த ஐயனார், குருந்தய்யனார் என மொத்தம் மூன்று ஐயனார்கள், இந்த மூர்த்தத்தில் சேர்ந்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் அடுத்து நாம் செல்லவிருக்கும் கோயில், பாலை வளர்த்த ஐய னார் கோயிலே. அங்கு வேறு விதமானதொரு தகவல் தெரிவிக் கின்றனர். அதை அங்கு செல்லும்போது, அங்குள்ள அர்ச்சகரே கூறக் கேட்போமே?

காளி, கறுப்பர் கோயில்களில்தான், மூலவரை நேரில் வழிபடப் (பருவம் எய்தாத சிறுமியர், மூப்படைந்த மூதாட்டியர் தவிர்த்த) பெண்களுக்குத் தடை விதிக்கப்பெற்றிருப்பதாக நினைக்க வேண் டாம். இங்குள்ள ஐயனார் சந்நிதியிலும் அந்தத் தடை நடைமுறை யில் இருக்கிறது. இந்த ஐயனார், தனியாக — யோக சாஸ்தாவாக இருப்பதால், (சபரிமலை ஐயப்பன் கோயில் போன்று) இங்கும் இந்தத் தடை நிலவுவதாகச் சொல்கின்றனர். தமக்குத் துணையாகப் பெரிய கறுப்பர், சந்நியாசி, பிரமர், முனீஸ்வரர் — எல்லோருமே தனியாகத் தவநிலையில் உள்ளோர்தாமே! — ஆகியோரையும் சேர்த்துக் கொண்டு, அனைவரும் பருவமடைந்த பெண்கள் தங் களைப் பார்க்காதவண்ணம் செய்து கொண்டிருக்கின்றனர்.

சந்நிதி (மண்டபத்துக்கு) வெளியே நின்று, இந்தப் பெண்கள், மானசீகமாகத்தான் ஐயனார், கறுப்பர் ஆகியோரை வழிபட வேண் டும். பொங்கல், ஆண்டுப் பிறப்பு, மற்றும் உற்சவ நாட்களில், மண்டபத்தில் உற்சவ விக்கிரகங்கள் வைக்கப்பெற்றிருக்கும்; வெளியே நின்று வழிபடுவோர், அந்த நாட்களில் மட்டும், அவற்றை வேண்டு மானால் கண்டு வழிபடலாம். (அவர்கள் எழுந்தருளிகள்தாமே; அதனால் அவர்களுக்குத் தொடக்கு (தீட்டு)க் கிடையாது!)

இறைவன் படைப்பில் எல்லோரும் சமம் என்கிறோம்; ஆன்மாவுக்கு ஆண் — பெண் பேதம் கிடையாது, அழியும் இவ்வுடலில் தான் அந்த வேறுபாடு என்கிறோம். ஆனால் எல்லா உயிர்களுக்கும் பொதுவான இறைவனை வழிபடுவதில், ஆண் — பெண் வேற்றுமை பாராட்டுகிறோம்! தீண்டத்தகாதோர் என ஒரு பிரிவினரைத் தோற்றுவித்து, அவர்களை ஆலயங்களுக்குள் நுழைய விடாமல் செய்த பெருங்கொடுமை கூடக் களையப்பெற்று விட்டது. ஆனால் பெண்களுக்கு விதிக்கப்பெறும் — இழைக்கப்பெறும் இந்தக் கொடுமைக்கு இன்னும் மு(வி)டிவு ஏற்படவில்லை. பரம்பொருளின் பெருங்கோயில்களில் கூடக் காணப்பெறாத இந்த அநீதி, குலதெய்வக் கோயில்களில் மட்டும் ஏன் நிலவ வேண்டும்? (சபரிமலை சாஸ்தா கோயிலில் நிலவும் விதிமுறைகளை நாம் ஏன் கண் மூடித்தனமாகப் பின்பற்றவேண்டும்?)

நம் கோயில்களில் அர்ச்சகர்கள் மேலாடை அணியாதுதான் இறை வழிபாடுகளைச் செய்கின்றனர்; ஆனால் குளிர் நிறைந்த திருக்கேதாரம், பத்ரிநாத் போன்ற இடங்களில் உள்ள மிக உயர்ந்த சைவ — வைணவ ஆலயங்களில், அர்ச்சகர்கள் காலுறைகூட அணிந்துதான் பூஜைகளைச் செய்கின்றனர். காரணம், அங்குள்ள தட்ப—வெப்ப நிலை அப்படி!

இங்குமே பல ஐயனார் கோயில்களில் மூலவர் தனியாக — யோக சாஸ்தாவாக இருக்கிறார். பிரபலமான கறுப்பர் சந்நிதிகள், காளி சந்நிதிகள் உள்ளன. ஆனால் அவற்றில் பெண்களுக்கு எந்தத் தடையும் இல்லையே! ஒரு சில கோயில்களில் மட்டும், ஐயனாரை — கறுப்பரை — காளியை நேரில் காணக்கூடாத அளவுக்கு, நம் பெண்கள் செய்த — செய்யக்கூடும் என்று கருதப்பெறும் பெருந் தவறுதான் என்ன? சமுதாய — ஆன்மிகப் பெரியவர்கள் சிந்திக்க வேண்டும்.

* * *


இராயவரம், கடியாபட்டி, காரைக்குடி, கானாடுகாத்தான், கோட்டையூர், நற்சாந்துபட்டி, நேமத்தான்பட்டி, பள்ளத்தூர் (மாத்தூர் கருப்பூர்ப் பிரிவினரும், இரணிக்கோயிலாருமாக 200 புள்ளிகள்) ஆகிய ஊர்களைச் சேர்ந்த[2] மொத்தம் சுமார் 300 புள்ளிகளும், வல்லம்பர்களும்[3] இக்கோயிலைக் குலதெய்வக் கோயிலாகக் கொண்டுள்ளனர் என்று கூறப்பெறுகிறது. ஏழு ஊர் இரணிக்கோயிலார் இங்கு வழிபடுவதாகக் கூறப்பெறுவதில், அவர்கள் எந்தெந்த ஊர்களைச் சேர்ந்தவர்கள் என்பது தெரிவிக்கப்பெறவில்லை.

காரைக்குடியிலிருந்து பள்ளத்தூருக்குச் செல்லும்போது, பள்ளத்தூரில் ஊரின் நடுவில் கொத்தரி என்னும் பெயர் அறிவிப்புப் பலகை உள்ள இடத்தில் இடப்புறம் திரும்பிச் சுமார் ஒரு கி.மீ. தொலைவு கப்பிச் சாலையில் சென்று, தொடர்ந்து நேரே செல்லும் மண் சாலையில் சிறிது தொலைவு சென்றால், திருக்குளமும், அதன் இடப்புறம் கோயிலும் உள்ளன. பெயருக்கேற்பச் சோலையாகத் திகழும் பகுதியில் கோயில் அமைந்திருக்கிறது.

* * *

திருக்குளத்தை ஒட்டி விநாயகருக்குச் சிறிய கோயில் ஒன்று அமைந் திருக்கிறது. யானை, பலிபீடம் ஆகியவை உள்ள அஸ்பெஸ்டாஸ் கூடத்தைத் தாண்டிக் கல் திருப்பணி செய்யப்பெற்ற மகா மண்டப மும், கருவறையும் உள்ளன.

யோக சாஸ்தாவான சோலையாண்டவருக்குப் புத்தாண்டு நாளன்று நடைபெறும் பூச்சொரியல் மிகப் பிரபலமானது. அருகிலுள்ள பல ஊர்களிலிருந்தும், தொலைவில் நற்சாந்துபட்டியிலிருந்தும் கூடப் பூத்தட்டுகள் ஏந்திவரப் பெறுகின்றன.[4]



சுற்றிவண்டு யாழ்செயும் சோலைசூழ் கோயில்

சித்திராப் பௌர்ணமிக்கு முன்னதாக வரும் அஷ்டமியில் காப்புக் கட்டிப் பத்து நாள் திருவிழா மிக விமரிசையாக நடைபெறுகிறது. கொத்தரியில் மண்டகப்படிகள் நடைபெறுகின்றன. பௌர்ணமி யன்று கரியப்பட்டியிலிருந்து புரவிகள் புறப்பட்டுப் பத்தாம் நாள் கோயிலை அடைகின்றன.

தைப் பொங்கலும், மகா சிவராத்திரியும் இங்கு சிறப்பாகக் கொண் டாடப் பெறுகின்றன. சிவராத்தியின்போது காவடி எடுப்பது உண்டாம்.[5] ஊமக்குறும்பன், குறும்பையனார் என்னும் பெயர் களையும் கொண்ட சோலையாண்டவருக்குப் புரட்டாசி மாதத்தில் இலட்சார்ச்சனை நடைபெறுகிறதாம்.[6]

கருவறையின் வலப்புறத்தில் பெரிய கறுப்பர், சின்னக் கறுப்பர் சந்நிதிகள் இடம் பெற்றிருக்கச் சன்னாசி, கலிக்காளி, தட்சிணா

மூர்த்தி, பட்டவர், சின்னான் ஆகியோர், சின்னக் கறுப்பர் சந்நிதியை ஒட்டி உள்ளனர். சன்னாசி முதலியவை மண் சிலைகளே.

கோயிலின் வலப்புறத்தில் உள்ள இரு மேடைகளில் ஒன்று பிரமருக்குரியது. மேடையில் நடுகல் காணப்பெறுகிறது. மேடையின் கீழே பாதகுறடுகள் உள்ளன. அதன் வலப்புறத்தில் உள்ள மேடை, சாத்தப்ப செட்டியார் என்பவருக்காக அமைந்தது. இங்கு அடக்கமாகிய இந்தச் செட்டியாரின் மேடைக்கு அன்றாடம் பூசை நடைபெறுகிறதாம்.[7]

அடுத்துத் தல மரமான பாலை மரத்தை ஒட்டியுள்ள சந்நிதியைக் காளியம்மனாக வழிபடுகின்றனர். மார்பளவு கம்பி அடைப்புடன் கூடிய இந்த அஸ்பெஸ்டாஸ் கூடத்தில், காளியம்மனின் சிலை வைக்கவோ, விமானத்துடன் கூடிய சந்நிதி அமைக்கவோ, திருவருட் சம்மதம் கிடைக்கவில்லையாம்.

கோயிலின் இடப்புறத்தில் மண் சிலைகளான அடைக்கலங்காத்த ஐயனார், சப்த கன்னியர் இடம் பெற்றுள்ளனர். இந்த ஐயனார் சிலை இக்கோயிலின் ஆதி மூர்த்தமாக இருக்குமோ என்னவோ?

* * *

திங்கள், வெள்ளிக்கிழமைகளில் மட்டும் இங்கு காலை ஏழு மணிக்குக் கோயில் திறக்கப்பெற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு உச்சிக் காலமும், இரவு ஏழு மணிக்கு மற்றொரு பூசையும் நடைபெறுகின்றன. மற்ற நாட்களில் காலையில் ஒன்பது மணி முதல் பதினொன்றரை வரையிலும், பிற்பகலில் மூன்று மணி முதல் ஐந்தரை மணி வரையிலும் கோயில் திறந்திருக்கும். ஒவ்வொரு நாளும் இருகாலப் பூசை நடைபெறுகிறது. திங்கட்கிழமை மட்டும் இரவு ஏழு மணிக்குப் பலி கொடுக்கப்பெறுமாம்.

வல்லம்பர்களின் நிர்வாகத்தில் உள்ள இக்கோயிலில் நகரத்தார் வீட்டுப் பிள்ளைகளுக்குப் பிறந்து ஓராண்டு கழித்து முடி இறக்குவதும், தொட்டில் கட்டுவதும் உண்டாம்.[8] இக்கோயிலை வழிபடுவோர், மூலவரின் பெயரை ஒட்டிச் சோலையப்பன், சோலை, சோலைச்சி என்னும் பெயர்களைத் தங்கள் பிள்ளைகளுக்குச் சூட்டுகின்றனர்.

* * *

கொத்தரி நாட்டார், மற்றும் நகரத்தார்களால் திருப்பணி செய்யப் பெற்று, 11.01.1992ல் இரண்டாவது முறையாக இங்கு திருக்குட நீராட்டு நடைபெற்றிருக்கிறது. முதல் குடமுழுக்கு, அதற்கு இருபது ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்றிருக்கலாம் என நம்பப் பெறுகிறது.[9]

கிராம மக்கள் பேரளவில் இங்கு வந்து விதைப்புக் கொடுத்துப் பிரசாதம் பெற்றுச் செல்கின்றனர்.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

1\. படைஎ லாம்பக(டு) ஆர ஆளிலும்,
பெளவம் சூழ்ந்(து)அர(சு) ஆளிலும்,

கடைஎ லாம்பிணைத் தேரை வால்,கவ
லா(து)எ ழும்,மட நெஞ்சமே!
மடைஎ லாம்கழு நீர்ம லர்ந்து,
மருங்(கு)எ லாம்கரும்(பு) ஆடத்,தேன்
புடைஎ லாமணம் நாறு சோலைப்
புறம்ப யம்தொழப் போதுமே.

திருச்சிற்றம்பலம்

— 7 ஆம் திருமுறை

2. கொத்தரி குடிகொண்ட குலதெய்வமே வருக!
குலம் தழைக்கவந்த குணக்குன்றே வருக!
பக்தனைப் பாதுகாக்கும் பரமனே வருக!
சோலைஆண்டவ ஜோதியே வருக வருகவே!

— தவத்திரு காசிவிசுவநாத ஞான தேசிகர்

குறிப்பு விளக்கம்:

— சொல்லின் தரத்தைக் கடந்த, பேசப்பெறுகின்ற பதத்தைக் கடந்த......
1. வீர. சண்முகம், கோயில் கணக்கப்பிள்ளை, சோலையாண்டவர் கோயில்
2. எம். இலட்சுமணன் செட்டியார், பள்ளத்தூர்
3. எம். வள்ளியம்மை, கோட்டையூர்
4. வீர சண்முகம்
5. எம். இலட்சுமணன் செட்டியார்
6. பி.ஆர். சோலைமலை அம்பலம், ஆர்.எம். நடேசன் அம்பலம், ஆ.சுப. பழனியப்பன் வைராவி, பள்ளத்தூர்
7. வீர. சண்முகம்
8. எம். இலட்சுமணன் செட்டியார், எம். வள்ளியம்மை
9. எம். இலட்சுமணன் செட்டியார், எம். வள்ளியம்மை

உ

பண்ணியலும் பாடல் உகப்பார் பா(ள)ல விளத்த ஐயனார்

(84. பா(ள)ல விளத்த ஐயனார் திருக்கோயில், பள்ளத்தூர்)

சோலையாண்டவர் ஐயனார், திரிமூர்த்தி போன்று, மூவரின் ஐக்கியத் திருவுருவம் என்று அங்கு கூறக் கேட்டோம். அந்த மூவரில் ஒருவர் பாலை வளர்த்த ஐயனார் என்றும் கூறினர். அவருக்கும், இப்போது நாம் வந்துள்ள பள்ளத்தூர் பா(ள)ல விளத்த ஐயனாருக்கும் ஏதேனும் தொடர்பு உண்டா என்பது தெரியவில்லை. ஆனால், சோலையாண்டவருடன் இவருக்கு இங்கு வேறு வகையான உறவு கற்பிக்கின்றனர்.

பாலை ஐயனார் (பாலையூர்), கருவி ஐயனார், கரியப்பட்டியில் இரு ஐயனார்கள், நெல்லி ஐயனார் (வடகுடி), சோலையாண்டவர், இங்குள்ள பால் வளர்த்த ஐயனார் (இவர் பெயரில் ஒரே குழப்பம்) ஆகியோர் ஒரு தொகுதியான ஏழு ஐயனார்கள் என்று இங்கு கூறுகின்றனர். அடுத்து நாம் கருவியப்பட்டி (கரியப்பட்டி)க்குச் செல்லும்போது, இன்னும் சிறிது மாறுபட்ட தகவலைக் கேள்விப்படவிருக்கிறோம். (ஒரு வட்டாரத்தில் அடுத்தடுத்த ஊர்களில் உள்ள ஏழு மாரியம்மன்களைச் ‘சகோதரியர் எழுவர்’ என்று கூறுவது போன்று, ஐயனாரிலும், சகோதர உறவை உருவாக்கியிருப்பர் போலும்!)

* * *

கொத்தரி சோலையாண்டவர் ஐயனார் கோயிலிலிருந்து பள்ளத்தூருக்குத் திரும்பிச் சென்று, பள்ளத்தூர்ச் சத்திரத்தின் இடப்புறம் உள்ள ஊருணி வழியாக இரண்டு கி.மீ. சென்றால், இந்தப் பா(ள)ல விளத்த ஐயனார் கோயிலை அடையலாம்.

இங்குள்ள ஐயனார், பால விளத்த ஐயனாரா, பால் வளர்த்தவரா, பாலை வளர்த்தவரா, பாலை விளத்தவரா? பாலை என்பதற்குப் பாலை நிலம், நீர் வளமற்ற நிலம், புறங்காடு (burning ground) என்பவற்றோடு, கடல் என்றுகூடப் பொருள் சொல்லப்பெறுகிறது. விளத்தல் என்பதற்கு விலகுதல் என்று பொருள் சொல்வர். எனவே, பாலை விளத்த ஐயனார் என்னும் பெயரை ஏற்று, நீர் வளமற்ற நிலத்திலிருந்து, அல்லது புறங்காட்டிலிருந்து அல்லது கடற்பகுதியி

லிருந்து விலகியிருக்கும் ஐயனார் என்று பொருள் கொள்ளலாமா? (நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து உள்நாட்டுக்குள் வந்தவர்கள்தாமே?)


* * *

வினாத்தொகுதிகளுக்கு விளக்கமாக மறுமொழி அனுப்பியிருந்த நகரத்தார் பெருமக்களின் தகவல்கள், ஆங்காங்கே விசாரித்தறிந்த தகவல்கள் ஆகியவற்றின் அடிப்படையில், நகரத்தார் வழிபடும் நூற்றுக்கும் மேற்பட்ட குலதெய்வக் கோயில்களுக்குச் (பல கோயில் களுக்கு மிகச் சிரமப்பட்டே) சென்று வந்ததிலிருந்து, ஏறத்தாழ எல்லாக் கோயில்களுமே நகரத்தார்களால் திருப்பணி செய்யப் பெற்றவையே என்னும் உண்மை தெரியவந்தது. (அந்த மாபெரும் பணிக்கு உரிய மரியாதை செலுத்தப் பெறுகிறதா என்பது வேறு விஷயம்.) நகரத்தார்களின் திருப்பணிகள், கால ஓட்டத்தில் ம(றை)றக் கப்பட்டு விடாமல் இருக்கும் வகையில், அந்தந்தக் கோயில்களில் அவை எழுதி — கல்லில் பொறித்து வைக்கப் பெற்றுள்ளனவா என்பதைச் சமுகப் பெரியவர்கள் சிந்தித்துத், தக்க நடவடிக்கை களை மேற்கொள்ளவேண்டியது இன்றியமையாததாகும்!

சில கோயில்களைத் தவிர்த்துப் பெரும்பாலான கோயில்களின் அர்ச்சகர்கள், நகரத்தார்களின் கைங்கரியத்தை வெகுவாக — மன மாரப் பாராட்டுகின்றனர். (நகரத்தார்கள் முன்பு போல அதிக மாக உயிர்ப்பலி கொடுப்பதில்லை என்பதுதான் அவர்களின் பொது வான மனக்குறை!) ஒரு சில கோயில்களில் திருப்பணிச் (செய்த) செட்டியார்களின் சிலைகள் சந்நிதித் தூண்களில் காணப்பெறு கின்றன. (மூதாதையர் வழிபாட்டுச் சிலைகளை — கோயிலில் அணைந்தோர் என்று கூறப்பெறுவோரின் சிலைகளை இங்கு குறிப் பிடவில்லை.) எந்த ஊரை — எந்த நகரக்கோயிலை — எந்த வகையை — எந்த நிலையைச் சேர்ந்தவர் என்று பேதம் கற்பித்துக் கொண்டிராமல், நாட்டுக்கோட்டை நகரத்தார் என்னும் பொது வான சமுக உணர்வில், அந்தந்தக் கோயிலின் அமைப்புக்கு — உயர்வுக்கு — வளர்ச்சிக்குப் பாடுபட்ட தொடக்க கால நகரத் தார்களின் சிலைகளை அந்தந்தக் கோயிலில் வைக்க முயலவேண் டும். ஏராளமான கோயில்கள் தற்போது புதுப்பிக்கப்பெற்று வரு கின்றன. இந்த நேரத்தில், மூதாதையர் செய்த பெரும் (திருப்) பணிகளை நினைவுகூர்ந்து, அவற்றை அந்தந்தக் கோயில்களில் நிலையாக இடம்பெறச் செய்ய வேண்டியது, இந்தத் தலைமுறை யினரின் மாபெரும் கடமையாகும். இது சமுகத்திற்குப் பெருமை யைத் தேடித் தருவதோடு, உரிய மரியாதையையும் உருவாக்கிக் கொடுக்கும்.

இப்போது நாம் வந்துள்ள பா(ை)ல விளத்த ஐயனார் கோயிலில் திருப்பணிச் செட்டியார் சிலரின் சிலைகளைக் காண நேர்ந்தது மகிழ்ச்சி தருவதாக இருந்தது. தேவகோட்டை குஞ்சான் செட்டி யார், பள்ளத்தூர் பால்விளத்த செட்டியார் (இந்த ஐயனாரின் பெயரையே தாங்கி இருக்கிறார்!), பள்ளத்தூர் முருகப்ப செட்டி யார் ஆகியோரின் சிலைகள் சந்நிதியில் இடம் பெற்றுள்ளன.

மகா மண்டபத்தில் உள்ள யானை வாகனம், பலிபீடத்துக்கு அருகில், ''கும்பிடு சாமி'' என்று ஒரு சிலை காணப் பெறுகிறது. திருப்



திருப்பணிச் செட்டியார்

பணி செய்தவர்களின் சிலைகளைக் கோயில்களில் தூண்களில் வடித்து வைக்கும்போது, அவை கூப்பிய கரங்களுடனேயே காணப் பெறுவது வழக்கம். அந்த முறையில் இந்தச் சிலையும் கூப்பிய கரங்களுடன் காணப்பெறுவதே, 'கும்பிடு சாமி' என்று இச்சிலை பெயர் பெற்றதற்கான காரணமாக இருக்கலாம். இந்தத் திருப் பணியாளரைப் பற்றிய அதிகமான விவரங்களைத் தெரிந்துகொள்ள இயலாவிடினும், வருந்த வேண்டிய விஷயம், இது ஊருணிக்குள் ளிருந்து எடுக்கப்பெற்றது என்பதாகும்.[1] (இளையாற்றங்குடியில்,

உற்சவர் கேணிக்குள் போடப் பெற்றிருந்தது; இங்கு திருப்பணி செய்தவரின் (கற்)சிலையே குளத்துக்குள் போய்விட்டது!)

* * *

உயிர்ப்பலித் தடைச் சட்டத்தை அரசாங்கம் கொண்டுவந்து எத்தனையோ ஆண்டுகள் ஆகிவிட்டன; ஆனால் ஒரு சில கோயில்களைத் தவிர்த்துப் பெரும்பாலான கோயில்களில் இன்னமும் பலி கொடுப்பது நடைமுறையில் இருந்தே வருகிறது. ஒரு சில கோயில்களில் சட்டத்துக்கே சவால் விடவும் செய்கின்றனர்! ஆனால் நாம் இப்போது வந்துள்ள இந்தக் கோயிலில், தடைச் சட்டம் நடைமுறைக்கு வந்ததும், திருவுளச் சீட்டு எழுதிப் போட்டுப் பார்த்தார்களாம். இறைவனின் வாக்கு, தடைச் சட்டத்துக்கே கிடைத்தது![2] ஆனால் கோயிலின் வடமேற்கு மூலையில் உள்ள சின்னக்கறுப்பர் என்னும் பதினெட்டாம்படிக் கறுப்பர் சந்நிதியின் முன் உள்ள பீடத்தில், திங்கள், வெள்ளிக்கிழமைகளில்(மட்டும்) கிடாய் வெட்டுவது உண்டு என்று கோயில் சிப்பந்திகள் கூறுவது, இவ்வன்பரின் தகவலுக்கு முரண்பட்டதாக உள்ளது. கோயிலினுள் கிடாய் வெட்டி, அந்த உதிரத்தை வெண்பொங்கலுடன் சேர்த்துப் பிசைந்து, மூன்று உருண்டைகளாக்கிப் பின்புறமாக எறிசோறு வீசுவார்களாம். இது போன்று இந்தப் பகுதியில் உள்ள எல்லா ஐயனார் கோயில்களிலும் நடைபெறுகிறது என்று இவர்கள் கூறுகின்றனர். (நகரத்தார்களின் பூசை மட்டும் சுத்த (சைவ)ப் பூசையாக இருக்க வாய்ப்பு உண்டு.) நகரத்தார்களாவது, கால நிலையை உணர்ந்து, மாற்றத்தை ஏற்றுக் கொண்டுள்ளார்களே என்பதை நினைக்கும்போது, பெருமையாக இருக்கிறது. ஏனெனில், ''அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன், உயிர்செகுத்து உண்ணாமை நன்று''[3] அன்றோ?

இந்த ஐயனாரைக் கடியாபட்டி, கண்டனூர், காரைக்குடி, கொத்தமங்கலம், கோட்டையூர், தேவகோட்டை, பலவான்குடி, பள்ளத்தூர், புதுவயல் ஆகிய ஊர்களின் இரணிக்கோயில், நேமங்கோயில் (40 புள்ளிகள்), மாத்தூர்க் கோயில் ஆகியவற்றைச் சேர்ந்த நகரத்தார்களும், பள்ளத்தூர், பனையூர் வல்லம்பர்களும் வழிபடுகின்றனர்.[4]

* * *

13.07.1987ல் நாட்டார், நகரத்தார் கூட்டு முயற்சியில் திருக்குட நீராட்டு நடைபெற்ற இக்கோயிலில், அதற்கு முன்னர் 1942ல் ஒருமுறை குடமுழுக்கு நடைபெற்றிருக்கலாம் என நம்பப்பெறுகிறது.[5] கருவறைக்கு முன் உள்ள மண்டபத்தில், கல்லில் பொறித்து வைக்கப் பெற்றுள்ள வரலாற்றுக் குறிப்பு ஒன்றில், அந்த மண்டபம் 25.05.1936ல் இரணியூர் அள(ழ)கஞ்செட்டியார், காளியாத்தா(ள்) பொதுப் படைப்பைச் சேர்ந்த பங்காளிகளால் புதிதாகத் திருப்பணி செய்யப் பெற்றது என்று குறிப்பிடப் பெற்றிருக்கிறது. இதுவே, 1942 என்று கோயில் சிப்பந்திகள் கூறும் முதலாவது குடமுழுக்கு நடந்த ஆண்டாக இருக்குமோ?

இங்கு குறிப்பிடப்பெற்ற இரணிக்கோயில் அழகஞ்செட்டியாரின் சிலையுடன், மற்றொரு படைப்புத் தெய்வமான இராயவரம் சின்னான் செட்டியாரின் சிலையும், கோயிலின் வடக்குப் பிராகாரத்

தில் உள்ள மண்டபத்தில் வைக்கப்பெற்றுள்ளது. மற்றும் நொண்டிக் கறுப்பர், சந்நியாசி, குழந்தையுடன் பேச்சியம்மன், சப்த மாதர் சிலைகளும் இச்சந்நிதியில் வைக்கப் பெற்றுள்ளன.

அழகஞ்செட்டியார் சிலை இங்கு வைக்கப் பெற்றிருப்பதற்குச் கூறப்பெறும் வரலாறு, வழக்கமான ஒன்றுதான். மாமனாருடன் வந்தவர், இங்கு அடங்கிவிட்டார். இவருக்கு ஈராண்டுகளுக்கு ஒரு முறை ஆவணி மாதத்தில் படைக்கப்பெறும்போது, இங்கு வந்து ஐயனாருக்கும், அழகஞ்செட்டியாருக்கும் அபிஷேக ஆராதனைகள் செய்து, தீர்த்தம் எடுத்துச் செல்கின்றனராம். இவர் வகையில் வந்தவர்களின் குடும்பங்களில் திருமணம் நடைபெறும்போதும், இங்கு வந்து வழிபட்டுத் தீர்த்தம் எடுத்துச் செல்வார்களாம். இந்தச் சந்நிதிக்குத் தீபம் போட, ஒவ்வொரு மாதமும் எண்ணெய் கொடுக் கப்பெறுகிறது.[6] அடுத்துள்ள சின்னான் செட்டியாரைப் பற்றிய எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

* * *

சிறிய அழகிய கோபுரத்துடன் கூடிய கோயில் நுழைவாயிலுக்கு முன்னே திருச்சுற்றுச் சுவரை ஒட்டி, இரட்டைப் பூதங்களுடன் ஒரு சிறிய சேமங்குதிரையும், அதன் வலப்புறம் ஒற்றைப் பூதத்துடன் கூடிய பெரியதொரு சேமங்குதிரையும், வடக்கு நோக்கி அமைக்கப் பெற்றிருக்கின்றன. மகா மண்டபத்தில் யானை வாகனம், பலி பீடம், கும்பிடு சாமி ஆகியவற்றுக்கு அருகில், வடக்கு நோக்கிப் பெரிய கறுப்பர் சந்நிதி உள்ளது.

அர்த்த மண்டபத்தில் ஐயனாரின் வலப்புறம் விநாயகர் வீற்றிருக்கக், கருவறையில் பூரணி, புஷ்கலை உடனாய பா(ை)ல விளத்த ஐய னார் அருட்காட்சி தருகிறார்.

பள்ளத்தூர் நாட்டாருக்குச் சொந்தமான இக்கோயிலில், நாட்டார், நகரத்தார் கூட்டாகச் சேர்ந்து, நாட்டார் முயற்சியில் திருப்பணிகள், மராமத்துகள் நடைபெறுகின்றனவாம். முன்பு இது நகரத்தார் நிர்வாகத்தில் இருந்து, பின்னர் அவர்கள் அதைக் கைவிட்ட நேரத் தில், நாட்டார் ஏற்று நடத்தி வருகின்றனர் என்று கோயிற் சிப் பந்திகள் கூறுகின்றனர்.

சிவராத்திரியும், பொங்கலும் இங்கு சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றன. நகரத்தார் செய்து கொடுத்துள்ள வெள்ளி அங்கி கள் அந்த நாட்களில் சாத்தப்பெறுவது உண்டாம்.

நகரத்தார்கள் முன்பு மாசி, பங்குனி மாதங்களில் இங்கு சேர்ந்து வந்து வழிபட்டார்கள்; இப்போது அவரவரும் விருப்பப்பட்ட நேரத்தில் வந்து வழிபட்டுச் செல்கின்றனர் என்று கூறப்பெறு கிறது. மின்சாரக் கட்டணத்தை நகரத்தார்களே கட்டி வருகின்றன ராம்.[7]

நகரத்தார் வீட்டுக் குழந்தைகளுக்கு இங்கு முடியிறக்கிப், பெயர் கூப்பிடுவது உண்டாம்.

முழுமையும் கல் திருப்பணியான இக்கோயிலின் தூண்களில் அழ கிய சிற்பங்கள் காணப்பெறுகின்றன.

* * *

திங்கள், வெள்ளிக்கிழமைகளில் மாலை நான்கு மணிக்குக் கோயில் திறக்கப்பெற்று, ஆறு மணி வரை (சில நேரங்களில் எட்டு மணி வரைகூடக்) கோயில் திறந்திருக்கும். மற்ற நாட்களில் காலை ஒன்பது மணி முதல் பதினொரு மணி வரை கோயிலில் வழிபாடு செய்யலாம். இவை தவிர்த்த மற்ற நாட்களில் — நேரங்களில், கோயிலுக்குச் செல்வோர், வைராவி இருந்தால் அவரிடம் சொல்லியனுப்பியோ, கரியபட்டியிலிருந்து வேளாரை அழைத்து வந்தோ, ஐயனாரை வழிபட்டு மகிழலாம்.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

விழுது நிணத்தை விழுங்கியிட்டு
வெண்தலை மாலை விரவப்பூட்டிக்
கழுதுதன் பிள்ளையைக் காளிஎன்று
பேரிட்டுச் சீருடைத் தாவளர்த்துப்
புழுதி துடைத்து முலைகொடுத்துப்
போயின தாயை வரவுகாணா(து)
அழு(து)உறங் கும்புறங் காட்டில்ஆடும்
அப்பன் இடம்திரு ஆலங்காடே.

திருச்சிற்றம்பலம்

— 11ஆம் திருமுறை,
காரைக்கால் அம்மையார்

குறிப்பு விளக்கம்:

— பண்ணுடன் பொருந்திய பாடலை விரும்புபவர்; பாடல் கேட்டு மகிழ்பவர்
1. எஸ்.பி. செல்வராஜ் வேளார், இராம சேது வைராவி, கரியபட்டி
2. அழ.ந. அழகப்ப செட்டியார், கடியாபட்டி இராமச்சந்திரபுரம்
3. 'தீயினிடத்து நெய் முதலிய அவிகளைச் சொரிந்து ஆயிரம் வேள்வி (யாகம்) செய்தலினும், ஒரு விலங்கின் உயிரைப் போக்கி அதன் ஊனை உண்ணாமை நன்று.' — திருக்குறள்
4. அழ.ந. அழகப்ப செட்டியார்; எஸ்.பி. செல்வராஜ் வேளார்; இராம. சேது வைராவி; பழ. முத்தையா, பள்ளத்தூர்
5. எஸ்.பி.செல்வராஜ் வேளார், இராம. சேது வைராவி
6. கோயில் பற்றிய விவரங்கள், தகவல்களைக் கூறியோர்: கோயில் சிப்பந்திகளான எஸ்.பி. செல்வராஜ் வேளார், இராம. சேது வைராவி ஆகியோர்
7. அழ.ந. அழகப்ப செட்டியார்

உ

நெல்லி ஆண்டவர் பாதம் நினைவுற்ற தென்றன் மனனே

(85. நெல்லி ஆண்டவர் ஐயனார் திருக்கோயில், வடகுடி, பள்ளத்தூர்)

'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே'[1] என்று அப்பர் சுவாமிகள் திருவையாற்று இறைவனைப் பாடுகிறார். இறைப்பண்பான இந்த ஓசை, பரம்பொருளைப் போன்று உருவமற்றது. ('வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி'[2] என்பர் மணிவாசகப் பெருந் தகை. காற்றுக்கு ஊறு, ஓசை ஆகிய இரு பண்புகளே உள்ளன என்பதை இது உணர்த்துகிறது.) இந்த அடிப்படையில், உருவமற்ற ஒரு சிறு தெய்வம், ஓசையாக நின்று, சிலரைச் சிறிது காலத்துக்குக் காப்பாற்றியிருக்கிறது. அவர்கள் அதைத் தவறாகப் பயன்படுத்த முற்பட்டபோது, அது அவர்க்ளைக் காப்பாற்ற முயலவில்லை.

திருடர்கள் சிலர் (கோனாபட்டுக் கள்ளணன் போன்றவர்களாய் இருந்திருக்கலாம்!), தங்களிடம் இருந்த ஓசைத் தாயத்து (அதைக் காதில் வைத்துக் கேட்டால், சங்கிலிருந்து ஓங்கார ஒலி கேட்பது போன்று, ஒருவகை ஒலி கேட்டதாம்.) ஒன்றைக் காவலாய் வைத் துக்கொண்டு, வறியார்க்கு ஒன்று ஈயாத செல்வந்தர்களின் பொருளை எடுத்து வறியவர்களுக்கு வழங்கி வாழ்ந்து வந்திருக்கின்றனர். (சீரும் சிறப்புமாய் வாழ்ந்தபோது அடியார்களை உபசரித்துப், பின்னர் வறுமை வந்துற்ற போது, பல இடங்களுக்கும் சென்று சூதாடி வெற்றி பெற்று, அவ்வாறு கிடைத்த பொருளைக் கொண்டு அடியார்களுக்குத் திருவமுது ஊட்டிய மூர்க்க நாயனாரைப்[3] போன்று இருந்திருப்பர் போலும்!) நாளடைவில் குறிக்கோளை மறந்து, குறுக்கு வழியில் போக நினைத்து, ஐயனின் ஆலயத் தினுள்ளேயே நுழைந்தபோது, அந்த ஒலி ஆற்றல், தன்னை மறைத் துக் கொண்டு விட்டது. காவல் தெய்வத்தின் கவசம் அகன்றபோது, தெற்குப் பிராகாரத்தில் உள்ள சுதையினாலான முனியன், மலை போன்று அவர்கள் முன் தோன்ற, அவர்கள் திகிலடைந்துவிட் டனர். (மிகவும் சக்தி வாய்ந்தவராய்க் கருதப்பெறும் இந்த முனி யன், அடாது மழை பெய்தாலும், விடாது வெயில் அடித்தாலும், அவற்றையெல்லாம் தாங்கும் ஆற்றல் படைத்தவர் போலும்!) திரு டர்களின் தீய செயலுக்குத் தண்டனையாக, அவர்களின் கண் பார்வை மறைந்தது. தவற்றை உணர்ந்து அவர்கள் வருந்தியபோது,

அவர்கள் முன்பு செய்த நற்செயல்களின் பயனாக, அவ்வழியே சென்ற கிராமவாசி ஒருவர், ஐயனிடம் மன்றாடி; அவர்களுக்கு மன்னிப்பு வழங்கச் செய்திருக்கிறார். அவர்கள் அதற்குக் கைம் மாறாக, அந்தக் கவசத்தையே அவரிடம் கொடுத்திருக்கிறார்கள். கிராம்வாசி சுயநலம் கருதாது, அந்த ஓசைத் தாயத்தைக் கோயி லில் வைத்து ஊருக்கே காவலாக்க நினைத்திருக்கிறார். அந்தத் தாயத்தை நிலத்தில் புதைத்து, அதன்மீது உருவமற்ற கல் ஒன்றை வைத்து ஊர்மக்கள் வழிபடலாயினர். (அழகர்கோயிலில் பதி னெட்டாம்படிக் கறுப்பரைக் கண்டு வழிபட்டபோது, அவர், மலை யாளத்திலிருந்து வந்த சிலைத்திருடர் பதினெண்மருக்குக் காவலாய்



என்னை யாரென்று நினைத்து நீ பார்க்கிறாய்?

வந்து, பின்னர் அவரே அந்தக் கோயிலின் காவல் தெய்வமாய்த் திகழ்கிறார் என்று கேட்டறிந்தோம் அன்றோ?) படியாய்க் கிடந்து பரம்பொருளின் பவளவாய் காணும் பதினெட்டாம்படிக் கறுப்பர் போன்று, வடகுடி நெல்லி ஆண்டவரின் வாயிலில் காவல் தெய்வ மாக — ஓசைமணிக் காளியாக இருந்து, இறைவனின் அருட்குணங் களை நாளும் கண்டு, அவன் அடியாருக்குச் சிறந்த காவலாகத் திகழ்ந்து வருகிறது, அந்த உருவமற்ற ஓசைத்தெய்வம்![4]

முன்பு நெல்லி மரங்கள் அதிகமாய் இருந்த இந்தப் பகுதியில் கோயில் கொண்டிருப்பதால், இந்த ஐயனார் நெல்லி ஆண்டவர் என்று பெயர் பெற்றிருக்கலாம் என்று கோயில் வைராவி கருது கிறார். 'இறைவன்மீது ஆறாக்காதல் கொண்டு அவனை மறவாத மனத்தினர்க்கு, உள்ளங்கை நெல்லிக்கனி போன்று அப்பெருமான் புலப்பட்டு அருள்புரிவான்'[5] என்று அப்பர் சுவாமிகள் பாடுவார். அதுபோன்று தன் அடியாருக்கு அருள்புரியும் இந்த வடகுடி நெல்லி ஆண்டவரைக், கண்டனூர், பள்ளத்தூர் நகரத்தார்கள் குலதெய்வ மாகக் கொண்டு வழிபடுகின்றனர்.

பள்ளத்தூர் நகரத்தார் குடும்பத்தினர்தாம் முதன்முதலில் இங்கு கல்திருப்பணி செய்திருக்கின்றனர். வடக்குப் பிராகாரத்தில் வைர வர் சந்நிதி அருகே காணப்பெறும் சிதைந்துபோன ஒரு சிலை, திருப்பணி செய்த செட்டியாருடையதாக இருக்கலாம் என்று கருதப் பெறுகிறது. (நகரத்தார்களின் திருப்பணிப் பெருமைகள், இவ் வாறு சிதைந்து தேய்ந்து போக அனுமதிக்கலாகாது என்பது எளி யேனின் பணிவான கோரிக்கை!)

இப்போது கண்டனூர் நகரத்தார்கள் கோயிலைப் பராமரிக்கின் றனர். அவர்களின் நிதி உதவியால் ஒருகாலப் பூசையாக இருந்தது, இப்போது இரு நேரப் பூசையாகியுள்ளது. கண்டனூர் நகரத்தார் களின் நிரந்தர நிதியின்வழி, ஒவ்வொரு நாளும் காலையில் ஒன்பது மணி முதல் பனிரெண்டு மணி வரை கோயில் திறந்து வைக்கப் பெற்று, அபிஷேகம், பூசை ஆகியவை நடைபெறுகின்றன. (மாலை யில் வழக்கப்படியான ஒருகாலப் பூசையும் நடைபெறுகிறது.)

கண்டனூர் நகரத்தார், நெல்லியாண்டவர் — காளியம்மன் கோயில் சுற்றுப் பிராகாரத்திற்கு, 02.06.1991ல் வெள்ளைக்கல் தள வரி சையைப் போட்டிருக்கின்றனர். அவர்களின் உதவியினாலேயே கோயிலுக்கும், அதைத் தொடர்ந்து வடகுடிக் கிராமத்துக்கும் மின் இணைப்புக் கிடைத்ததாம்.

பள்ளத்தூரிலிருந்து தெற்கே ஒரு கி.மீட்டரில் (காரைக்குடியிலிருந்து பள்ளத்தூர் செல்லுமுன்) உள்ள மணச்சை சென்று (வடகுடி பெயர் அறிவிப்புக் கைகாட்டிப் பலகை உள்ள இடத்தில்) இடப்புறம் திரும்பி இரு கி.மீ. சென்று வடகுடியை அடையலாம்.

* * *

தேவியர் புடைசூழக் கருவறையில் அமர்ந்திருக்கும் நெல்லியாண்ட வருக்கு ஒவ்வோர் ஆண்டும் ஆடி மாதம் முதல் அல்லது இரண்டா வது வெள்ளிக்கிழமையன்று இலட்சார்ச்சனை நடைபெறுகிறதாம். புதன்கிழமை மாதம் பிறந்தால் முதல் வெள்ளிக்கிழமையன்றும்,

வியாழக்கிழமை மாதம் பிறந்தால் இரண்டாவது வெள்ளிக்கிழமை யன்றும் செய்யப்பெறும் இவ்வர்ச்சனை, கடந்த பத்தாண்டுகளாக நடைபெற்று வருகிறது. இரு நாட்களுக்கு நடைபெறும் இந்த இலட் சார்ச்சனையைக் குலால சிவாசாரியார்கள் நடத்தி வைக்கின்றனர்.

ஆடி மாதம் முதல் வெள்ளியில் இங்கு சங்காபிஷேகம் நடைபெறு வதாகக் கூறப்பெற்றது,[6] இந்த இலட்சார்ச்சனையை ஒட்டி நடை பெறுகிறதா என்பது தெரியவில்லை. இத்தகைய புனிதமான இலட் சார்ச்சனை, சங்காபிஷேகம் ஆகியவை நடைபெறும் அதே ஆடி மாதத்தில், ஈராண்டுகளுக்கு ஒருமுறை மூன்றாவது செவ்வாய்க் கிழமையன்று, ஊரார் நடத்தும் உயிர்ப்பலிப் பூசையும் நடைபெறு கிறது. இதில் 10,15 கிடாய்கள் வரை வெட்டப்பெறுமாம். நகரத் தார்களும், அதில் கலந்து கொள்வதுண்டாம். இதன் மறு ஆண்டு வைகாசி கடைசி அல்லது ஆனி மாதத்தில் புரவி எடுப்பு நிகழ் கிறது.

புரவி எடுப்பின்போது இங்கிருந்து சுவாமி வடகுடிக் கிராமத்துக் குச் சென்று, அங்கு மூன்று நாட்கள் தங்கியிருந்து அருள்பாலித்துத் திரும்புவாராம். (ஐயனார், தேவியர், விநாயகர், கறுப்பர் ஆகி யோரின் உற்சவத் திருமேனிகள் மகா மண்டபத்தில் வைக்கப் பெற் றுள்ளன.)

இக்கோயிலில் காணப்பெறும் மற்றொரு சிறப்பு, வேறு இரண் டொரு கோயில்களைப் போன்று, இங்கும் தட்சிணாமூர்த்தி சிலை வைக்கப்பெற்றிருப்பது. வழக்கம்போல், கலைத்திறனையோ, சிற்பியின் கைத்திறனையோ காணமுடியவில்லை. எனினும் தட் சிணாமூர்த்தியின் அங்க அமைப்புகளைச் சிலையில் காண்கிறோம்.

தெற்கு நோக்கி வீற்றிருப்பதால் இவரைத் தட்சிணா (தெற்கு) மூர்த்தி — தென்முகக் கடவுள் என்கின்றனர். தட்சிணம் என்னும் சொல்லுக்கு ஞானம் என்னும் பொருள் கொண்டு, ஞானத்தை வழங்கும் ஞானமூர்த்தியாதலின், தட்சிணாமூர்த்தி என்றும் சொல் வர். தியான நிலையில் வலக்காலை ஆசனத்தின் கீழ் தொங்க விட்டு, இடக்காலை வளைத்து வலத்தொடையின்மீது குறுக்காக வைத்திருக்கிறார். (இதனை வீராசனம் என்பர்.) திருவடியின்கீழ் முயலகன் கிடக்கிறான். எல்லாத் தீமைகளையும் அடக்கியாளும் வல்லமை படைத்தவர் என்பதை இது குறிக்கிறது. வலக்கை சின் முத்திரையைக் காட்டிக் கொண்டிருக்கிறது. மற்றொரு வலக்கரத் தில் பாம்பு இருக்கிறது. இடக்கரத்தில் அமுத கலசமும், மற்றோர் இடக்கரத்தில் மலரும் ஏந்தியிருக்கிறார். (அமுத கலசம் அனைத் துயிர்க்கும் பேரின்பத்தை அளிக்க வல்லராதலையும், பாம்பு குண் டலி சக்தியையும், மலர் ஓங்காரத்தையும் குறிக்கும் என்பர். உயி ரானது, பிறப்பு இறப்புத் துன்பங்களினின்றும் விடுபட வேண்டு மாயின், மும்மலங்களின் தொடர்பை விட்டுப் பதிப்பொருளின் திரு வடிகளை அடைதல் வேண்டும் என்பதைச் சின்முத்திரை உணர்த்து கிறது என்று சொல்வர்.[7])

சனகர், சநந்தனர், சநாதனர், சனற்குமாரர் என்னும் நான்கு முனி வர்கள், வேதத்தின் பொருள் விளங்காமல் மயங்கி இறைவனை நோக்கித் தவம் செய்தபோது, அவர் தட்சிணாமூர்த்தியாக வெளிப்

பட்டு, ஒரு நொடி, ஒரு செயலும் இல்லாமல் யோகம் செய்பவர் போல வீற்றிருந்தார். சிவபெருமான் இந்தக் காட்சியைப் போதிக்க... ஞானபோதம் சொல்லால் விளக்கத்தக்கதன்று என்னும் உண்மையை உணர்ந்த அவர்கள், மனத்திலே அடக்கத்தை அடைந்தனர் என்கிறது கந்த புராணம்.[8]

தெற்கு, வடக்குப் பிராகாரங்களில், தட்சிணாமூர்த்தி, முனியன் ஆகியோருடன், தனிச்சந்நிதியில் பெரிய கறுப்பர், மற்றும் அரசு மகன், சந்நியாசி, சப்த கன்னியர், அழகிய நாச்சியம்மன் (துர்க்கை), வைரவர், கையில் குழந்தையுடன் பேச்சியம்மன் ஆகியோரும், கோயிலின் முன்புறத்தில் ஓசைமணிக் காளி சந்நிதிக்கு எதிரே சின்னக்கறுப்பரும் இக்கோயிலில் பரிவார தெய்வங்களாக அமைந்துள்ளனர்.

கோயிலின் எதிரில் இரு சேமங்குதிரைகளும், சிறிது தொலைவில் மஞ்சணத்தி மரத்தைக் கடந்து முன்னோடியும் உள்ளனர். முன்னோடிக்கு யாரும் பூசை செய்வதில்லை என்றும், அவரவரும் தாங்களாகவே நிவேதனம் செய்து வழிபட்டுச் செல்வர் என்றும் சொல்லப் பெறுகிறது.

* * *

10.06.84ல் நடைபெற்ற திருக்குட நீராட்டுப் பற்றித்தான் தகவல் தெரிகிறதே தவிர, அதற்கு முந்திய குடமுழுக்கு விழாக்கள் பற்றிய எந்தக் குறிப்பும் கோயிலிலும் காணப்பெறவில்லை; சொல்லுவாருமிலர்!

(கண்டனூர்) நகரத்தார் குடும்பங்களில் நிகழும் திருமணங்களுக்குச் சொல்லியனுப்புவதும், அர்ச்சகர் மாலை கொடுத்து வருவதும், இங்கு நடைமுறையில் உள்ளன. குழந்தைகளுக்கு முடியிறக்குவதும், பெயர் வைப்பதும் வழக்கத்தில் உள்ளனவாம்.

மகிழமரம் இக்கோயிலின் தலமரமாக உள்ளது என்பதைக் கேள்விப்பட்டதும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் சங்கிலி நாச்சியாருக்கு மகிழ மரத்தடியில் செய்து கொடுத்த சபதம் நினைவுக்கு வந்தது.[9] அவ்வுறுதிமொழியை மீறி (சத்தியம் தவறி)த் திருவொற்றியூர் எல்லையைத் தாண்டிய போதுதான், அவர் கண்பார்வையை இழந்தார். அதைப்போன்று, மகிழமரம் தலமரமாக உள்ள இக்கோயிலினுள் வரம்பு மீறி நுழைந்த திருடர்களும், கண்பார்வை இழந்தனரோ என எண்ணிப் பார்த்தேன்; அன்றும், இன்றும், என்றுமே இறைவனின் திருவுள்ளம் — அருட்சக்தி ஒரே மாதிரிதான் உள்ளது; ஆனால், மனிதன்(தான்) மாறிவிட்டான் என்று எண்ணிப் பெருமூச்செறிந்தேன்!

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

அல்லிக் கமலத்(து) அயனும் மாலும்
அல்லா தவரும், அமரர்கோனும்
சொல்லிப் பரவும் நாமத் தானைச்,
சொல்லும் பொருளும் இறந்தசுடரை,

நெல்லிக் கனியைத், தேனைப், பாலை,
நிறையின் அமுதை, அமுதின்சுவையைப்,
புல்லிப் புணர்வ(து) என்று கொல்லோ,என்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

திருச்சிற்றம்பலம்

— 8 ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

— என் மனம் எண்ணலுற்றது

1. 'நீ ஓசை ஒலி எல்லாம் ஆனாய்' — 6 ஆம் திருமுறை

ஓசை, ஒலி என்பன சத்தம், நாதம் என்னும் பொருளுடையன. வெற்றோசையை 'ஓசை' என்றும், பொருளோசையை 'ஒலி' என்றும் அருளிச் செய்தார் என்பர் சித்தாந்தக் கலைமணி சி. அருணை வடிவேல் முதலியார். 'ஓசை' என்பது 'அநர்த்த (பயனில்லாச்) சத்தம்,' 'ஒலி' என்பது 'அர்த்த சத்தம்' என்று சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியாரும் கூறுவார்

2. 8 ஆம் திருமுறை
3. 'வல்லார்கள் தமைவென்று சூதினால் வந்தபொருள்
அல்லாருங் கறைக்கண்டர் அடியவர்கள் தமக்காக்கும்
நல்லார்நற் சூதராம் மூர்க்கர்...' — பெரிய புராணம்
4. இந்தப் பழைய வரலாற்றினையும், மற்றும் பயனுள்ள பல தகவல்களையும் கூறியவர்: ஆ.சுப. பழனியப்பன் (கோயில் வைராவி), வடகுடி
5. '....மைய லாய்மற வாமனத் தார்க்கெலாம்
கையில் ஆமல கக்கனி ஒக்குமே.' — 5 ஆம் திருமுறை
6. பி.ஆர். சோலைமலை அம்பலம், ஆர்.எம். நடேசன் அம்பலம், பள்ளத்தூர் (கருவி ஐயனார் கோயில் திருப்பணிப் பொறுப்பாளர்கள்)
7. தெய்வத் திருவுருவங்கள் — ந.ரா. முருகவேள்
8. '............மோனமுத் திரையைக் காட்டி
ஒருகணம் செயல்ஒன்று இன்றி யோகுசெய் வாரின்உற்றான்'
'இயைந்ததோர் தன்மை காட்டி எம்பிரான் உணர்த்தக்கண்டு
....ஞானபோதம் .....தெரிந்து ....புந்தியின் ஒடுக்கம் பெற்றார்.'
9. '....மூவாத திருமகிழை முக்காலும் வலம்வந்து
மேவா(து)இங் கியான்அகலேன் எனநின்று.... 'விளம்பினார். — பெரிய புராணம்

முதிராத மகிழ மரத்தை (நம்பியாரூரர்) மும்முறை வலம்வந்து நின்று 'நான் இந்தத் திருவொற்றியூரை நீங்கிச் செல்லேன்' என்று (உறுதி) கூறினார்.

உ

கனக நற்றூணே, கருவி ஐயனே!

(86. கருவி ஐயனார் திருக்கோயில், கருவியப்பட்டி)

இப்போது நாம் காணப்போகும் கருவிஐயனார் கோயில், பல தனித்தன்மைகளைப் பெற்றிருக்கிறது. முதலில், இங்கு இரு ஐய னார் சந்நிதிகள் உள்ளன; இங்குள்ள மூன்று சேமங்குதிரைகளில் ஒன்று புல் தின்றிருக்கிறது; அதன் காரணமாக வெள்ளைக்கார உயர் அதிகாரியும், சிப்பாய்களும் உயிர்த்தியாகம் செய்திருக்கின் றனர்; சிரச்சேதம் செய்துகொண்ட சிப்பாய்கள், அதிகாரிக்குக் கோயிலில் நடுகற்கள் வைக்கப்பெற்றுள்ளன; முன்பு, இங்குள்ள கண்மாய் நீரை இரண்டாவது வாய் குடித்தால், இரத்தமணம் வீசும் என்று சொல்கிறார்கள்.

இந்தக் கோயிலை உடனே காண வேண்டும் என்று பலர் விரும்பக் கூடும். கோயில் கும்பாபிஷேகத் திருப்பணிக்குழுப் பொறுப்பாளர் இருவர்[1] தெரிவித்த தகவல்களையும், கோயிலுக்கு நாங்கள் சென் றிருந்தபோது (27.06.94) கண்டவற்றையும் முதலில் விவரிக் கிறேன். நீங்கள் சென்று காண விரும்பினால், வடகுடி நெல்லி ஆண்டவர்(மணியோசைக் காளி) கோயிலிலிருந்து கண்மாய், வயல் களின் இடையே உள்ள மண்சாலையில் சுமார் 3 கி.மீ. சென்று, கருவியப்பட்டியை அடைந்து, அங்கிருந்து இடப்புறம் திரும்பி வண்டிப் பாதையில் சுமார் 1 கி.மீ. சென்றால், கோயிலை அடைய லாம்.

முதலில் ஓட்டுக்கூடமாய் இருந்த கோயில், கல் திருப்பணி செய் யப்பெற்றுக் காலம் அதிகமாகி விட்டதால் பழைமை அடைந்து விட்ட நிலையில், மூன்றாண்டுகளாக, நாட்டார், நகரத்தார்களின் முயற்சியில் திருப்பணி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போதுதான், நாங்கள் அங்கு சென்றோம். ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு முன்னால், முதல் குடமுழுக்கு நடைபெற்றிருக்கக் கூடும் என்று, திருப்பணிப் பொறுப்பாளர்கள் கருதுகின்றனர்.

கருவி ஐயனார் சந்நிதியில் தூணில் வடிக்கப்பெற்றிருக்கும் சிலை, கல் திருப்பணி செய்தவரின் நினைவாய் அமைக்கப்பெற்றதாக இருக்கக்கூடும். நகரத்தார் பெருமகனாரின் தோற்றப்பொலிவு சிலையில் தெரிவதால், (முதல்)கல் திருப்பணியைச் செய்தவர்கள் நகரத்தார்களாகவே இருக்க வேண்டும் என்று நினைக்கத் தோன்று

கிறது. ஆனால், இந்தச் சிலை பற்றிய தகவலோ, முதல் திருப்பணி செய்தவர்கள் யார் என்பதோ, இப்போது உள்ள பொறுப்பாளர் யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. (அறிந்திருக்கக்கூடிய நகரத்தார் களோ, தகவல் தெரிவிக்க முன்வரவில்லை! நாளடைவில், நகரத் தாரின் திருப்பணிச் சிறப்புகள் முற்றாக ம(றை)றக்கப்பெற்று விடு வதற்கு, இவை வழி வகுக்கின்றன.)

பள்ளத்தூர் நாட்டாரின் பொறுப்பில் உள்ள இக்கோயிலைக் கானாடுகாத்தான், கோட்டையூர், பள்ளத்தூர் நகரத்தார்கள் குல தெய்வக் கோயிலாகக் கொண்டு வழிபடுகின்றனர். காலை பத்து மணி முதல் பனிரெண்டரை மணி வரை திறந்து வைக்கப்பெற்று, ஒருவேளைப் பூசை நடைபெறும் இக்கோயிலில், புதன், சனிக் கிழமைகளில் மட்டுமே மாலை ஆறு மணிக்கு மேல் உயிர்ப்பலி கொடுக்கப்பெறுகிறதாம்.

பலி கொடுப்பதில் கூட இங்கு ஒரு விந்தையான முறை பின் பற்றுப்பெறுகிறது. பொதுவாக ஐயனார் சைவக் கடவுளாகக் கருதப் பெற்று, அவருக்கு எந்தக் கோயிலிலும் பலி கொடுக்கப்பெற வில்லை என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமே! ஆனால், இந்தக் கருவி ஐயனார் கோயிலில் ஐயனாருக்கெனப் பலி கொடுக்கப்பெறா விட்டாலும், அந்தக் கிடாய்க்கு ஐயனார் முன்னிலையில் நீர் ஊற்றப் பெற்று, அங்கு அக்கிடாய் சிலிர்த்த பின்னரே, அதைக் கறுப்பருக் கெனப் பலியிடுகின்றனர்! (வழக்கமாகக் கிடாயோ, ஆடோ, கோழியோ தலையை — உடம்பைக் குலுக்கி நீரைச் சிதறுவதைப் 'பில்லிகொடுத்தல்' என்கின்றனர். ஆனால் அது சரியான சொல்லா என்று தெரியவில்லை. பில்லி என்றால் சூனிய வித்தை, சூனியக் காரர் ஏவும் துர்த்தேவதை, பூனை என்றுதான் பொருள் சொல்லப் பெறுகிறது.)

இக்கோயிலில் இரு ஐயனார் உளர் என்று முதலில் கண்டோம். (ஒருவர் மருதுடை ஐயனார்; மற்றவர் கருவி ஐயனார் — இவர் பெயராலேயே இக்கோயில் வழங்கி வருகிறது.) கறுப்பருக்கு வெட் டப்பெறும் கிடாய், முதலில் மருதுடை ஐயனார் சந்நிதியில் நிறுத் தப்பெற்று, அங்கு அதன்மீது நீர் ஊற்றியதும், கருவி ஐயனார் சந்நிதியில் அதைக் கொண்டு சென்று நிறுத்துகின்றனர். அங்கு அது தலையைக் குலுக்கியதும் (பில்கியதும் — பில்குதல் — சிறு திவலை வீசுதல்.) அதனைக் கறுப்பர் சந்நிதிக்கு இட்டுச்சென்று, அங்கு மீண்டும் அதன்மீது நீர் ஊற்றுகின்றனர். மீண்டும் அது பில்கிய பின்னர், அதைப் பலியிடுவார்களாம். இந்த வழக்கம் இந்தக் கோயி லில் மட்டுமே நிலவுவதாகப் பா(றை)ல விளத்த ஐயனார் கோயில் சிப்பந்திகள்,[2] அக்கோயிலுக்குச் சென்றிருந்தபோது தெரிவித்தனர்.

* * *

இங்கு ஒரே நிலையில் — படித்தரத்தில், இரு ஐயனார்கள் உள் ளனரே, ஏன்? என்னும் நியாயமான கேள்வி எல்லோருக்கும் எழுவது இயல்பே! ஆனால், இது குறித்துக் கோயில் சிப்பந்திகளுக்கோ, திருப்பணிப் பொறுப்பாளர்களுக்கோ எதுவும் தெரியவில்லை. இருவரிடத்தும் எந்த வேறுபாடும் இல்லை! பூசை முறைகளிலும் மாறுதல் இல்லை என்று மட்டுமே எல்லோரும் கூறுகின்றனர்.

ஆனால், அவர்கள் சுவையான வேறொரு தகவலைக் கூறுகின்றனர். பாலையூரில் உள்ள பாலை ஐயனார், கரியபட்டியிலுள்ள (கருவியப்பட்டியாகவே இருக்க வேண்டும்) கருவி ஐயனார், பன்னடி ஐயனார் (இவர்தாம் மருதுடை ஐயனாரோ?), வடகுடியிலுள்ள நெல்லி ஐயனார், பள்ளத்தூர் பால் வளர்த்த ஐயனார், சோலை யாண்டவர், வேலங்குடியிலுள்ள சோலை வளர்த்த ஐயனார் ஆகிய எழுவரும் சகோதரர்களாம்! (கோயிலுக்குக் கோயில் தகவல்கள் எப்படி மாறுபடுகின்றன பார்த்தீர்களா?) இவ்வெழுவரும் மேற்கிலிருந்து வந்தவர்கள். (இதுவரை, கறுப்பரைத்தான் மலையாளத்திலிருந்து வந்தவர் என்று கூறக் கேட்டிருக்கிறோம்.) மூத்தவர் பாலை ஐயனார் முன்னே செல்ல, இளையோர் அறுவரும் அவர் அடிச்சுவட்டைப் பின்பற்றியிருக்கின்றனர். என்ன காரணமோ, அடுத்தவர் அறுவரும், வரும்வழியில் இருந்த அந்தந்த ஊர்களில் தங்கிவிட, ஆளரவம் கேட்கவில்லையே என்று அண்ணன் திரும்பிப் பார்க்கத், தம்பிகள் தங்கிவிட்டதால், தாமும் (மேற்கே) திரும்பிப்பார்த்த வண்ணமே பாலையூரில் கோயில் கொண்டுவிட்டாராம்!

இங்குள்ள இருவரில், கருவி ஐயனார் வடக்கே உள்ள கருவறையிலும், மருதுடை ஐயனார், கருவி ஐயனாரின் வலப்புறம் (தெற்கில்) உள்ள சந்நிதியிலும் அருளாட்சி புரிகின்றனர். இருவருக்குமே தனித்தனியாக யானை வாகனம், பலிபீடம் ஆகியவை உள்ளன. (ஒருவேளை இருவரும் அருகருகே இருந்த இரு கோயில்களில் குடிகொண்டிருந்து, பின்னர் கோயில்களின் ஒருங்கிணைப்பினால் ஒன்று சேர்ந்திருப்பார்களோ? ஐயனார்களே அறிவார்கள் அந்த உண்மையை!)

இங்கு மகா சிவராத்திரி மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகிறது. பல ஊர்களிலிருந்து பாற்குடம், காவடி ஆகியவை ஏந்தி வருவார்களாம். பகலில் அன்னதானமும் நடைபெறுமாம். தைப் பொங்கலும் இங்கு சிறப்பாக நடைபெறுகிறது. பல்வேறு ஊர்களைச் சேர்ந்த நகரத்தார்களும், பொங்கலுக்கு அரிசி, சர்க்கரை போன்றவற்றைக் கொடுத்தனுப்புவது உண்டாம். மற்ற கோயில்களில் நடைபெறும் புரவி எடுப்பு இங்கு நடைபெறுவதில்லை.


* * *

கோயிலின் முன்னால் இரு பூதங்கள், மூன்று சேமங்குதிரைகள், ஒரு யானை ஆகியவை நிற்கக் காண்கிறோம். இவற்றில் மூன்று குதிரைகள் காரி ஐயனாருக்கு உரியவை என்றும், யானை மரு து(டை) ஐயனாருக்கு உரியது என்றும் கோயில் பொறுப்பாளர்கள் கூறுகின்றனர். யானைக்கு நேரே உள்ள ஒற்றைத் தனிக் குதிரை தான் புல் தின்ற குதிரை!

சுண்டக்காடு வேலங்குடியில் (சாம்பிராணி வாசகர் கோயிலில்) குதிரை வாலைத் திருகிக் கனைத்தது பற்றிச் சொன்னார்கள். இங்கு புல் தின்ற கதையைச் சொல்கிறார்கள்!

ஆங்கிலேயர் அரசாட்சி செய்த காலம்; வெள்ளைக்கார அதிகாரியின் தலைமையில் வந்த பட்டாளம், கோயிலுக்கருகில் முகாமிட்

டிருந்தது. ஒவ்வொரு நாளும் சேமங்குதிரைக்கும் நைவேத்தியம், தூப தீபம் காட்டப்பெறுவதைக் கண்டு வியந்த அதிகாரி, 'இக் குதிரை புல்லும் தின்னுமா?' என்று அர்ச்சகரான வேளாரிடம் கேட்டிருக்கிறார். 'தின்னும்' என்று, வேளார் துணிந்து மறுமொழி சொல்லிவிட்டாலும், அடுத்து என்ன நேரப் போகிறதோ என்று பயந்து கொண்டிருந்தார். பயந்தது நடந்து விட்டது. 'இந்த மண் குதிரை புல் தின்றால், நாங்கள் அனைவரும் சிரச்சேதம் செய்து கொள்கிறோம்; தின்னாவிட்டால் உம் தலை உம்முடையதன்று' என்று வெள்ளைக்காரர் விடுத்த சவாலை ஏற்றுக் கொண்டு, அர்ச்சகர் ஐயனாரிடம் ஓடிச் சென்று முறையிட்டார்; இறை உண்மையை எல்லோரும் அறியச் செய்யுமாறு பிரார்த்தித்தார்.



மண் குதிரை புல் தின்னுமா?

அடுத்த நாள் காலை. ஐயனாரை வழிபட்டு விட்டு, ஒரு தாம் பாளத்திலிருந்த புல்லைக் (மண்) குதிரையின் முன் நீட்டினார் அர்ச்சகர். குதிரை, என்ன வேகமாகப் புல்லைத் தின்றது என்கிறீர் கள்! அதிகாரியும், அவர்தம் சிப்பாய்களும், சொன்ன சொல்லைக் காப்பாற்றினார்கள்! அவர்கள் உடலிலிருந்து பெருகிய குருதி, அடுத்துள்ள கண்மாய் நீருடன் கலந்ததாம். (அப்போதெல்லாம் ஒவ்வொரு கண்மாயிலும், நீர் நிறைந்திருந்தது போலும்!) அதி லிருந்து அந்த நீரை இரண்டாவது வாய் குடித்தால், இரத்த மணம் வீசுமாம்! இந்த அதிசயம் நிகழ்ந்தது அந்தக் காலத்தில்தான்; இப் போதுதான், எல்லாமே தலைகீழாகிவிட்டனவே!

ஐயனாரின் அடியார்களுக்கே சவால் விட்டவர்களானாலும், பெரிய தோர் உண்மையை உலகுக்கு உணர்த்தியவர்கள் அன்றோ? அத னால் அந்த அதிகாரி, சிப்பாய்கள் ஆகியோருக்குக் கோயிலினுள் ளேயே வடக்குத் திருச்சுற்றுச் சுவரை ஒட்டிப் பல நடு(செங்)கற்கள் வைக்கப் பெற்று, வழிபாடும் நடந்துவருகிறது. திருப்பணி நடை பெறும் இந்த வேளையில், செங்கற்களுக்குப் பதிலாக நிரந்தர அமைப்பாக நடுகற்களை அமைக்கப் போவதாகத் திருப்பணிப் பொறுப்பாளர்கள் கூறினர்!

* * *

கருவி ஐயனாரின் கருவறை முன்னர் உள்ள விநாயகர், தண்டாயுத பாணி சிலைகள் வேலைப்பாடு நிறைந்து காணப்பெறுகின்றன. மருதுடை ஐயனார், கருவி ஐயனார் இருவருமே அன்னையர் சமேத ராகவே அமர்ந்திருக்கின்றனர். இரு கருவறைகளின் அர்த்த மண் டபங்களிலுமே விநாயகர் வீற்றிருக்கிறார்.

மருதுடை ஐயனாரின் வலப்பக்கம் ஒரே வரிசையாக உள்ள சந்நிதி களில் சந்நியாசி, பெரிய கறுப்பர், சின்னக் கறுப்பர் ஆகியோ ரோடு, பத்ரகாளியும் உள்ளார். இந்தப் பத்ரகாளி சிறந்த பிரார்த் தனைத் தெய்வம் என்று கூறுகிறார்கள். மகா மண்டபத்தின் முன் னுள்ள தலைவாசல் மண்டபம் 08.11.92ல் அமைக்கப்பெற்ற தாம்.

மண்டபத்தை விட்டு இறங்கியதும், கோயிலின் வடகிழக்கில் பதி னெட்டாம்படிக் கறுப்பர் சந்நிதி காணப்பெறுகிறது.

* * *

இக்கோயிலுக்கு அடிமைப்பட்ட நகரத்தார்கள், தங்கள் குடும்பங் களில் நிகழும் எல்லா மங்கல நிகழ்ச்சிகளுக்குமுன்னர், இங்கு வந்து வழிபாடு செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். திரு மண அழைப்பிதழை ஐயனார் பாதத்தில் வைத்து வழிபட்ட பின் னரே, அடுத்த நடவடிக்கைகளை மேற்கொள்வார்களாம். இங்கு குழந்தைகளுக்கு முடி இறக்குவது, தொட்டில் கட்டுவது உண்டு.

இக்கோயிலுக்கு வருவதற்கான சாலையை முதன்முதலில் அமைத் துக் கொடுத்தவர், பள்ளத்தூர் நகரத்தார் பெருமகனார் ஒருவர் தாம் என்று, திருப்பணிப் பொறுப்பாளர்கள் நன்றியுணர்வுடன் கூறுகின்றனர்!

பரவும் சொல்மாலை

1. கருவி ஐயனார்

கட்டளைக் கலித்துறை

பையா(டு) அரவைப் புனைந்தோனு மாலும் பயின்றெடுத்த
மெய்யான மூர்த்தி உனையன்றி வேறில்லை மேதினியில்
ஒய்யார மானமா பூரண வேதம் உபசரிக்கும்
ஐயா! கருவிமெய் யாண்டி!உன் பாதம் அடைக்கலமே!

2. மருதுடை ஐயனார் துதி

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

திருமகள் கொழுநன், கேசவ முகுந்தன்
சிறந்திடு மோகினி யான
உருவினைக் கண்டு சிவன்மிகக் கனிவாய்
உவந்(து)அளித் திடுதிருப் புதல்வன்,
கருவையம் பதியில் இலகிவாழ் மூர்த்தி
கருணையங் கடலென அமைந்த
மருதுடை ஐயன் மலர்ப்பதம் இரண்டு
மகிழ்வுடன் சிரத்தினில் தரிப்பாம்.

— பி.கு. குட்டை ஐயா என்ற
பி.சு. சுப்பிரமணியன் செட்டியார்

குறிப்பு விளக்கம்:

— அழகிய பொற்றூண் போன்றவனே!

1. பி.ஆர். சோலைமலை அம்பலம், ஆர்.எம். நடேச அம்பலம், பள்ளத்தூர்
2. பா(ல)ல விளத்த ஐயனார் கோயில் சிப்பந்திகள்: எஸ்.பி. செல்வராஜ் வேளார், இராம. சேது வைராவி, கரியபட்டி

உ

நன்றருளித் தீதகற்றும் நம்பெருமாள் சுவாமி; காதலிப்பார்க்கு ஆற்றஎளிய காடேரி அம்பாள்

(87. பெத்தபெருமாள், காடேரி அம்பாள் திருக்கோயில்கள், கோயில்பட்டி)

பெரிய புராணத்தில் சிறப்பிக்கப்பெறும் சிவனடியார் அறுபத்து மூவரில் ஒருவர், திருக்குறிப்புத் தொண்ட நாயனார். காஞ்சிபுரத்தில் தோன்றிய இவர், பிறப்பினாலும், தொழிலாலும் ஏகாலியர் (வண்ணார்) ஆனாலும், ஒழுக்க நெறியில் நின்று சிவபெருமானின் திருவடிகளை வணங்கும் வழித்தொண்டராகத் திகழ்ந்தார். சிவனடியார்களின் உடைகளில் உள்ள துகள் மாசு போக்கி ஒலித்து (ஆடை அழுக்கு அகற்றி)க் கொடுத்ததன்வழி, தமது பிறவி மாசுகளை, அவர் களைந்து வந்தார். அவர்தம் உண்மைத் தொண்டின் சிறப்பினால், 'உனது அன்பின் நிலைமையை மூவுலகங்களும் அறியும்படி செய்தோம். நீ இனி நமது நிலைபெற்ற உலகில் பிரியாமல் இருப்பாயாக'[1] என்று இறைவனால் அருளப்பெற்ற இனிய அடியார் ஆனார். இவருடைய தன்னலமற்ற சிவத் தொண்டினால், ஏகாலியர் குலமே பெருமை பெறுகிறது!

நகரத்தார்கள் வழிபடும் குலதெய்வக் கோயில்களில் அர்ச்சகர்களாக இருந்து, முப்போதும் (இறைவனின்) திருமேனி தீண்டும் பெரும் பாக்கியம் பெற்றவர்களில், திருக்குறிப்புத் தொண்ட நாயனாரின் ஏகாலிய குலத்தவரும் உள்ளிட்டிருக்கின்றனர். அவர்களுக்கே சொந்தமான கோயில்பட்டி பெத்த பெருமாள்— காடேரி அம்பாள் கோயில்களில்,[2] (காடேரி அம்பாள் கோயிலில் மட்டும் எழுபதுக்கும் மேற்பட்ட பரிவார தேவதைகள் உள்ளன!) அவர்களின் சமுகத்துக்குப் பெருமை சேர்க்கும் திருக்குறிப்புத் தொண்டர் சிலை இல்லாதது வியப்புக்குரியதே!

* * *

புதுவயல் — அறந்தாங்கி சாலையில், புதுவயலிலிருந்து ஐந்து கி.மீ. தொலைவிலுள்ள கல்லூர் தாண்டியதும், வலப்புறம் செல்லும் தார்ச் சாலையில் திரும்பி இரண்டு கி.மீ. சென்று கோயில்பட்டியை

அடைந்து, சாலையின் வலப்புறமுள்ள தொடக்கப்பள்ளியின் அருகே வலப்புறம் திரும்பிச் சென்றால், சிறிது தொலைவில் பெரிய திருக் குளமும், பெத்த பெருமாள், காடேரி அம்பாள் கோயில்களும் உள்ளன. (காரைக்குடி — அறந்தாங்கி சாலையில் கீழாநிலைக்கோட் டைக்கு அருகில் சுமார் முக்கால் கி.மீ. தொலைவில் உள்ளது.) அடுத் தடுத்துள்ள இந்த இரு கோயில்களையும், ஆராவயல் சண்முகநாத புரம், காரைக்குடி, கானாடுகாத்தான், கொத்தமங்கலம், கோட் டையூர், கோனாபட்டு, உ.சிறுவயல், தேவகோட்டை, புதுவயல் ஆகிய ஊர்களின் இலுப்பைக்குடி, இளையாற்றங்குடி, நேமங்கோயில், பிள்ளையார்பட்டி, மாத்தூர் (உறையூர்) கோயில்களைச் சேர்ந்த நகரத்தார் சுமார் 900 — 1000 புள்ளிகளும், தஞ்சை அந்தணர், பிள்ளைமார், மற்றும் அகம்படியரும் குலதெய்வக் கோயில்களாகக் கொண்டுள்ளனர்.[3]

பெத்த பெருமாள் கோயிலில் உள்ள பெருமாளுக்குப் பால் பள்ள யம் போடும் அதே நேரத்தில், காடேரி அம்பாள் கோயிலில் உள்ள பெத்த பெருமாளுக்குக் கிடாய் வெட்டிப் பள்ளயம் போடும் விந் தையும், இக்கோயில்களில் மிகச் சிறப்பாக நடைபெறும் மகா சிவ ராத்திரியின்போது, விநாயகர், பெத்த பெருமாளுடன், இராமச் சந்திர மூர்த்தியும் வெளியில் எழுந்தருளும்[4] விந்தையும் நிகழும் இக்கோயில்களில் ஒன்றான பெத்த பெருமாள் கோயிலில், மூல வர் என்று சொல்லி உற்சவரான இராமச்சந்திர மூர்த்தியை வைத் திருக்கின்றனர்; காடேரி அம்பாள் கோயிலில் புதிய — பெரிய காடேரி அம்பாள் கருவறையில் வீற்றிருக்கிறார்; அம்பிகையின் பழைய திருமேனியும் கருவறையிலேயே உள்ளது.

ஓட்டுக்கூடத்தைக் கொண்ட பெத்த பெருமாள் கோயில் நுழைவா யில்மீது, இராமர், சீதை, இராமனின் இளவல்கள், ஆஞ்சநேயர், வசிஷ்டர் ஆகியோரின் திருவுருவங்கள் சுதையினால் அழகுற அமைக் கப் பெற்றுள்ளன.

கல் திருப்பணியான கருவறையில், முன்னர் குறிப்பிட்ட இராமச் சந்திர மூர்த்தியும், சீதா பிராட்டியும் உள்ளனர்; அழகிய சிலா வடிவம். மரவேலைப்பாடான பல உற்சவர்கள், பெத்த பெருமாள், பரம நாயகி, மெய்க்கநாயகி, நொண்டிக் கறுப்பர், சாமுண்டி, கறுப்பர், மாரியம்மன் எனப் பல மூர்த்தங்கள் அடுத்தடுத்து உள்ளன. கரு வறையின் வலப்புறம் தண்டாயுதபாணி சந்நிதி உள்ளது.


பெத்த பெருமாள் கோயில் வளாகத்தினுள் தனியாக அமைந்துள்ள விநாயகர் கோயிலில், காசி விசுவநாதர், சித்தி விநாயகர், ஆத்தி யடி விநாயகர், முன்னோடி, பெத்தையா எனப் பல மூர்த்தங்கள் காணப் பெறுகின்றன.

மற்றொரு தனிச் சந்நிதியில் காமாட்சி அம்மன், தீப்பாய்ந்த அம் மன் ஆகியோரும், திருச்சுற்றுச் சுவருக்கு உள்ளேயே இரு சேமங் குதிரைகளும், இன்னும் பல பரிவார தெய்வங்களும் இக்கோயிலில் இடம் பெற்றிருக்கக் காண்கிறோம்.

* * *

காடேரி அம்பாள் கோயிலில், கருவறையின் இடப்புறம் அடுத்தடுத் துள்ள சந்நிதிகளில் பெத்த பெருமாள், மதுரை வீரன் தம்பதியர்,

மற்றும் தூண்டி நயினார், உத்தண்டராயர், கல்யாணராமர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். பெத்த பெருமாள் (இரு கோயில்களிலுமே) தோற்றத்தில் கறுப்பர் போன்று காணப் பெறுகிறார்; ஆனால் இரு தேவியருடன் இருக்கிறார். சந்நிதியின் முன்னர் யானை வாகனமும், பலிபீடமும் உள்ளன. எனவே பெத்த பெருமாள் என்று, இவர்கள் யாரைக் குறிப்பிடுகின்றனர் என்பது புரியாத புதிராக உள்ளது.



காண்பெருந் தோற்றத்துளம் காகுத்தநம்பி கோயில்

முன் குறிப்பிட்ட இக்கோயிலில் உள்ள எழுபதுக்கும் மேற்பட்ட பரிவார தேவதைகளில், சப்த (7) இருடிகள்(ரிஷிகள்), சித்திர குப்தர், இரதி — மன்மதன், பரமசிவன் — பார்வதி, அரங்கநாதர், எமதர்மன் — எல்லாமே மண்சிலைகள். சிலவற்றுக்குத் தலைகளைக் கூடக் காணோம்! (வைகைக் கறுப்பர், இராங்கியம் கறுப்பர், கண்ணாத்தாள் போன்றோரின் சிலைகளும் விட்டு வைக்கப்பெறவில்லை.)

இரு கோயில்களுக்கும் இடையில் வீரப்ப சுவாமி, நொண்டி ஐயா, பொற்பனை முனி ஆண்டவர் போன்ற தேவதைகள் வைக்கப் பெற்றுள்ளன.

* * *

10.06.73ல் பெத்த பெருமாள் கோயிலில் திருக்குட நீராட்டும், 12.02.86ல் இரு கோயில்களிலுமே குடமுழுக்கும் நடைபெற்றுள்ள தாகக் குறிப்புகள் காணப்பெறும் இங்கு, 11.09.77ல் ஏகதின இலட்சார்ச்சனை நடைபெற்ற தகவலும் குறித்துவைக்கப் பெற்றுள்ளது.

மகா சிவராத்திரி, நவராத்திரி ஆகியவை சிறப்பாகக் கொண்டா டப்பெறும் இக்கோயில்களில்,[5] சித்திரை, ஆடி, கார்த்திகை, தை மாதங்களில் சிறப்புப் பூசைகள் நடைபெறுகின்றன. இராமநாதபுரம் அரசர், முன்னர் ஏற்படுத்திய சித்திரைப் பூசையை, இப்போது தேவ கோட்டைப் பகுதியில் உள்ள கள்ளர் — மறவர்கள் நடத்துகின்ற னர். ஆடிப் பூசை முதலில் புதுக்கோட்டை மன்னர் நடத்தியதாம்; இப்போது விரும்புவோர் செய்கின்றனர். கார்த்திகை மாதப் பூசை நகரத்தார்களால் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது. தைப் பூசை யைப் பிள்ளைமார் நடத்துகிறார்களாம். எல்லாப் பூசைகளும் ஒரே மாதிரித்தான் நடக்கின்றன. ஞாயிற்றுக்கிழமை காப்புக் கட்டிச் செவ்வாய்க்கிழமை பால் பள்ளயம் போட்டுப்படைத்து, இரவு சுவாமி எழுந்தருளுவார்.[6]

ஆனால் இந்த நான்கு பூசைகளிலுமே சூலாடு வெட்டுவது உண்டு என்றும், குட்டியைப் புதைத்து விட்டு, ஆட்டைச் சமைத்து அம் பாளுக்கு முன்னால் பள்ளயம் போடுவார்கள் என்றும் மற்றொரு தரப்பினர் கூறுகின்றனர்.[7]

நகரத்தார் வீடுகளில், குறிப்பாகத் தலைக் குழந்தைக்குக் குழந்தை பிறந்ததும், சூலாட்டுப் பூசை கொடுப்பதாக நேர்ந்து கொள்வது உண்டு என்றும் சொல்லப் பெறுகிறது.

பெத்த பெருமாள் கோயிலில் இராமருக்குப் பச்சை வாழை, வடை, சுண்டல், பாயசம் மட்டுமே நிவேதனம் செய்யப்பெறுகின்றன.

ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவில் பூசாரிமீது சுவாமி ஆவேசித்து அருள் வாக்குக் கூறுவதும், பில்லி சூனியம் எடுப்பது, பேய் ஓட்டுவது போன்றவையும் நடக்கும் என்று கூறுப்பெறுகிறது.


முதலில் கூரைக் கொட்டகையாக இருந்து, பின்னர் ஓட்டுக்கூடங்க ளாக வளர்ந்து, இப்போது முறையான கோயில் அமைப்புகளுடன் திகழும் இவ்விரு கோயில்களிலும், கோட்டையூர் நகரத்தார் அதிக மான திருப்பணிகளைச் செய்துள்ளனராம்.[8]

உச்சிக்காலம், மாலை வழிபாடு ஆகிய இரு வழிபாடுகள் நாள் தோறும் நடைபெறும் இரு கோயில்களிலும், கருவறை விளக்குகள் எந்த நேரமும் எரிந்து கொண்டிருக்குமாம்.

இக்கோயில்களுக்கு அடிமைப்பட்ட நகரத்தார்கள், ஆடி, கார்த்தி கைப் பூசைகளின்போது, பேரளவில் வந்து வழிபடுகின்றனர் என் றும், சுவாமிகளின் பெயர்களை ஒட்டிப் பெத்த பெருமாள், பெத் தாச்சி, பெத்தையா, பெத்தாள் என்னும் பெயர்களைத் தங்கள் குழந்தைகளுக்கு வைக்கின்றனர் என்றும் கூறப்பெறுகிறது.[9]

காடேரி அம்பாள் கோயிலில், கருவறைக்கு முன்னுள்ள மண்டபத் தில் காணப்பெறும் பல பெண்களின் சிலைகள், நகரத்தார் குடும் பங்களைச் சேர்ந்த பெண்களின் நினைவாக, முன்பு வைக்கப் பெற்றவையாக இருக்கலாம் என்று கருதப்பெறுகிறது. மற்றும் கல்

தூண்களில், அரசர்கள், பூசாரிகளின் முன்னோர் சிலைகளும் காணப்பெறுகின்றன.



புரியாத புதிர்

பலவகையான தனித்தன்மைகளுடன் திகழும் பெத்த பெருமாள் சுவாமியையும், காடேரி அம்பாளையும் கண் குளிரக் கண்டு தரிசித்த மகிழ்வுடன் அவர்களைப் பாடிப் பரவுவோம்!

பரவும் சொல்மாலை

1. பெத்த பெருமாள்:

தத்து வத்தின் விளக்க மய்யா,
தமிழ் மணத்தின் தென்ற லய்யா,
முத்து மணி,மா ணிக்க மய்யா,
முதன் மையான மன்ன னய்யா,
நித்தம் உனையே எண்ணி னாலே
சுத்த வாழ்வு துலங்கு மய்யா,
பெத்த பெருமாள் சுவாமி யய்யா,
பெற்ற பேற்றில் பணிவம் யாமே.

2. காடேரி அம்பாள்:

கருணையது காட்டுகின்ற காடேரித் தாய்நீயே,
கதிரவனின் ஒளிபெறு சிறப்பு நெறிநீயே,
திருவான செந்தமிழின் சிறப்புப் பாநீயே,
தித்திக்கும் செந்தேனின் சுவைபெறு வளம்நீயே,
கருவான கோவில்பட்டி கொற்றவை நீயேதான்,
உருவான உளமதிலே வாழ்கின்ற துணைநீயே,
தருவாயே தண்மைமிகு அருளொளி தினம்நீயே,
தணிந்து தாள்பணிந்து தாயேஉமை வாழ்த்துவமே.

— இரவை இரா. தமிழ்ச் செல்வன்

குறிப்பு விளக்கம்:

— ஆற்ற — மிக்க

1. ....மூவுலகு
நின்நிலைமை அறிவித்தோம், நீயும்இனி நீடியநம்
மன்னுலகு பிரியாது வைகுவாய் எனஅருளி.....' — பெரிய புராணம்
2. எல்.எஸ்.டி. இராமநாதன் செட்டியார், தேவகோட்டை
3. எல்.எஸ்.டி. இராமநாதன் செட்டியார்; ஏ.எல்.ஏ.ஆர்.எஸ்.எம். நாராயணன் செட்டியார், தேவகோட்டை; என். இளங்கோவன், கோனாபட்டு
4. எஸ்.மணி, உ. முத்துராமன் — கோயில் சிப்பந்திகள், கோயில்பட்டி
5. ஏ.எல்.ஏ.ஆர்.எஸ்.எம். நாராயணன் செட்டியார்
6. எஸ்.மணி, எல். முத்துராமன்
7. எல்.எஸ்.டி. இராமநாதன் செட்டியார்
8. எல்.எஸ்.டி. இராமநாதன் செட்டியார்
9. ஏ.எல்.ஏ.ஆர்.எஸ்.எம். நாராயணன் செட்டியார்

உ

உலகெலாம் ஈன்றவளே, உய்யவந்த அம்பாளே!

(88. உய்யவந்தாள் (தனியம்மன்) திருக்கோயில், சாக்கோட்டை)

நட்பிற்கு இலக்கணங்கூற வந்த திருவள்ளுவப் பெருந்தகை, 'உடுக்கை இழந்தவன் கைபோல'[1] நண்பனுக்கு இடுக்கண் ஏற்படும்போது, அப்போதே சென்று அதனைக் களைவதே நட்பு என்று கூறினார். 'உடையழி காலை உதவிய் கைபோல' என்று பெருங்கதையிலும் இது குறிப்பிடப் பெறுகிறது. ஆனால், அவ்விரு கைகளும் ஏதேனும் ஒரு செயலில் ஈடுபட்டிருக்கும்போது யார் துணை?

தாடகை என்னும் அசுரப் பெண் (யட்ச கன்னி), பிரமதேவர் கூறிய வண்ணம், பிள்ளைப் பேற்றுக்காகத் திருப்பனந்தாள் இறைவனான செஞ்சடையப்பரை ஒவ்வொரு நாளும், மாலை சாத்தி வழிபட்டு வந்தபோது, ஒருநாள் மாலை சாத்த முற்பட்ட நேரத்தில் ஆடை நெகிழ்ந்து விட, அதனைத் தன் இரு முழங்கைகளாலும் இடுக்கிக் கொண்டாள். உற்றவிடத்து உதவிய அதே கரங்களாலேயே இறைவனுக்கு மாலை சாத்த வேண்டும்; மாலை சாத்தக் கைகளை உயர்த்தினால், ஆடை அவிழ்ந்துவிடும். இந்த இக்கட்டைத் தீர்த்து வைக்க இறைவன் முன்வருகிறார். பெரியவர் ஒருவருக்குக் குழந்தை ஒன்று மாலை அணிய முயன்றால், பெரியவர் குனிந்து அதை ஏற்றுக் கொள்வது இயல்பன்றோ? அவ்வாறே தாடகையின் இடுப்பில் இடுக்கிய கரங்களில் இருந்த மாலையின் அளவுக்குத் தம் முடியைச் சாய்த்து, அவளுடைய அன்பை இறைவன் ஏற்றுக் கொண்டாராம். அன்று முதல் செஞ்சடையப்பரின் திருமுடி சாய்ந்தே இருந்ததாம்.

அன்பின் மிகுதியால் ஆண்டவன் இவ்வாறு செய்திருந்தாலும், சோழ மன்னன் ஒருவன்,[2] இறைவனின் பழைய நேர்நின்ற தோற்றத்திலேயே அவரை வழிபட விழைந்து, தன்னுடைய நால்வகைப் படைகளையும் கொண்டு இலிங்கத் திருமேனியை நேராக்க முயன்றும் முடியாமல், உடலாலும், உள்ளத்தாலும் களைத்திருந்தான். இதனைக் கேள்விப்பட்ட குங்குலியக் கலயர்,[3] தாமும் அதில் பங்கு கொண்டு வருந்த எண்ணிக் கயிற்றினைத் தம் கழுத்தில் கட்டி இழுத்து வருந்தலுற்றார். '.....கலய னார்தம் ஒருப்பாடு கண்ட போதே அண்ணலார் நேரே நின்றார்.......[4] மன்னன் மகிழ்ந்தான்; வானவர் பூமாரி பொழிந்தனர்; உலகம் உவகைக் கடலில் மிதந்தது!

குங்குலியக் கலயனாரின் செயல்கள், இறைவனிடத்து அவர் கொண்டிருந்த தீராக் காதலை — அளவிடற்கரிய அன்பினை வெளிப்படுத்துகின்றன. செயற்கரிய செய்த பதினொரு நாயன்மாரின் வரிசையில் சேர்க்கப்பெறும் குங்குலியக் கலயர் காலம் கி.பி.600 — 660 என்று அறிஞர் கூறுவர்.[5]

இத்தகையதொரு நிகழ்வு, பிற்காலத்திலும், இப்போது நாம் வந்துள்ள சாக்கோட்டை உய்யவந்தாள் கோயிலில் நிகழ்ந்திருப்பதாகக் கூறப்பெறுகிறது.

கோயில் திருப்பணி நடைபெற்றுக் கொண்டிருந்த காலம் அது. ஓட்டுக்கூடமாகவோ, செங்கல் கட்டடமாகவோ இருந்திருக்கக்கூடிய கோயிலைக், கல் திருப்பணி செய்து, இப்போதைய அமைப்புக்கு மாற்றிய நேரமாக இருந்திருக்கலாம். அம்பாளை வேறிடத்தில் பாலஸ்தாபனம் செய்ய முயன்றனர்; அவளுடைய திருமேனியை அசைக்கக்கூட முடியவில்லை. என்ன செய்வது என, சமஸ்தானத்தார் கவலையுடன் யோசித்துக் கொண்டிருந்த வேளையில், குங்குலியக் கலயர் போன்று, தேவகோட்டையிலிருந்து வீரப்ப செட்டியார் என்பவர் வந்து, மன ஒருமைப்பாட்டுடன் அம்பிகையின்மீது கையை வைத்திருக்கிறார்; அடியார்தம் ஒருப்பாடு கண்டபோதே, அம்பிகை அசைந்து கொடுத்து விட்டாள்! (திருக்களரில் வீரப்ப சுவாமிகள் தேரின் முன் விழுந்தபோது, தேர் அசைந்து கொடுத்தது என்று முன்னர் கேள்விப்பட்டிருக்கிறோம் அன்றோ? அவர் போன்றே இவரும் ஒரு வீரப்பர்தாம்! இத்தகைய ஒரு தீவிர பக்தர், அம்மாபட்டி பெரியநாயகி கோயிலில் அந்நாளில் இல்லை போலும்! அதனால்தான் திருப்பணி நேரத்தில் அவளை இருந்த இடத்திலேயே வைத்துக் கோயிலை எழுப்பியிருக்கின்றனர்.) அன்பின் துணை கொண்டு அன்னையை அசையச் செய்த அப்பெரியவருக்குக் கோயிலில் சிலை எடுக்கப் பெற்றிருக்கிறது.[6] நகரத்தார்களின் இத்தகைய அரிய செயல்கள் — பெரிய திருப்பணிகளை உலகறியச் செய்ய வேண்டாமா? இந்த அற்புதமான தகவலைத் தெரிவித்த பெரியவரைப் போன்று, எவ்வளவு பேர் தகவல் கொடுக்க முன் வந்திருக்கின்றனர்? வேதனைப்பட வேண்டிய விஷயமன்றோ? நாயன்மார்களை உலகுக்கு அறிமுகப்படுத்த ஒரு சுந்தரமூர்த்தி சுவாமிகள் இருந்தார்; ஒரு சேக்கிழார் சுவாமிகள் இருந்தார்; மன்னர்களின் மாண்புகளை உலகறியச் செய்ய அவர்கள் காலத்துக் கல்வெட்டுகள் இருக்கின்றன; ஆனால், நகரத்தார்களின் திருப்பணிகள்....? அருமை பெருமைகள்...? பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போக வேண்டியவைதாமா?

★ ★ ★

தேவகோட்டையின் மாத்தூர் உறையூர்ப் பிரிவு நகரத்தார்கள், முதலில் சாக்கோட்டை உமையாம்பிகையைக் குலதெய்வமாகக் கொண்டிருந்தார்களாம். தேனிப்பட்டியில் பூசை கொடுத்துப் பின்னர் உமையாம்பிகையை வழிபட்டு வந்திருக்கின்றனர். இப்போது உலகம் உய்ய வந்தாளை — மக்களை உய்விக்க வந்தவளை வழிபடுகின்றனர்.[7]

புதுவயலிலிருந்து அரை கி.மீ. தொலைவிலுள்ள சாக்கோட்டையை அடைந்ததும், சாலையின் இடப்புறத்தில் உய்யவந்தாள் கோயில்

அமைந்திருக்கிறது. அஸ்பெஸ்டாஸ், ஓட்டுக்கூடங்களைக் கடந்து சென்றால், அழகிய மூன்று நிலை இராஜகோபுரத்துடன் அமைந் திருக்கிறது இந்தச் சிறிய கோயில். சிவகங்கை தேவஸ்தானக் கோயி லான இங்கு, நகரத்தார்கள் நிறையத் திருப்பணிகள் செய்துள்ள னர். இங்குள்ள சுவர்ண அங்கி, தேர் போன்றவை நகரத்தார் களின் ஒத்துழைப்பில் உருவானவையே![8]

சுற்றுப் பிராகாரத்தில் வைரவரை மட்டும் கொண்டு, சிம்மம், பலி பீடம் ஆகியவை கருவறை முன் இருக்கத், தனிஅம்மன் என்று அழைக்கப்பெறும் உய்யவந்தாள், எட்டுக் கரங்களுடன் துர்க்கையாக எழிலுடன் அமர்ந்திருக்கிறாள்.



உய்விக்க வந்தவளே! உன் பொன்னடி சரணம்!

நன்றி: உய்யவந்தாள் அம்மன் கோயில், சாக்கோட்டை

இங்குள்ள கொடிமரம், இக்கோயிலில் வைகாசித் திங்களில் பத்து நாள் மகோற்சவம் நடைபெறுவதை உணர்த்தி நிற்கிறது. எட்டாம் நாள் மண்டகப்படியை நகரத்தார்கள் நடத்துகின்றனராம். திருவிழாவை ஒட்டி இங்கு உயிர்ப்பலி கொடுக்கப் பெறுவதுண்டு. கொடி மரத் தின் அருகில் கிடாய்க்குக் குருக்கள் நீர் தெளித்து, அது பில்கியதும், (தலையை ஆட்டி, என்னை வெட்டுங்கள் என்று அது கூறிச் சம் மதித்து விட்டதாகக் கருதிக்), கிடாயை வெள்ளியில் கொண்டு சென்று கோயில் வைராவி வெட்டுவாராம்.

இங்கு நடைபெறும் சக்தி பூசையை அடுத்துப் பூச்சொரியலும், பின்னர் திருவிழாவும் நடைபெறுகின்றன.

கடந்த எட்டு ஆண்டுகளாகத் தை மாதத்தில் கடைசி வெள்ளிக்கிழமையன்று, இங்கு திருவிளக்குப் பூசை நடைபெற்று வருகிறது. 100 விளக்குகளில் தொடங்கிய இந்த வழிபாடு, இப்போது ஆயிரத்தைத் தாண்டிவிட்டதாம்! நேர்ந்து கொண்டவர்கள் இலட்சார்ச்சனை செய்வது உண்டு என்கிறார் அர்ச்சகர்.

* * *

கண்பார்வை அற்றோரின் விழிகளுக்கு ஒளியூட்டியதாகவும் கூறப்பெறும் அன்னையைக், காலை மணி ஆறு முதல் பனிரெண்டு வரையிலும், மீண்டும் மாலையில் ஐந்தரை முதல் ஏழரை வரையிலும் தரிசித்துப் பேரின்பம் பெற்றுப் பெருவாழ்வு வாழலாம்!

பரவும் சொல்மாலை

சாக்கை நகரில் வாழ்கின்றாள்,
சந்ததி எல்லாம் காக்கின்றாள்,
ஊக்கம் அளிக்க உருவானாள்,
உயிரும் உடலும் அவளானாள்,
ஓமெனும் ஒலியிற் கருவானாள்,
உய்ய வந்தாள் பெயரானாள்,
பாமலர் சூடிடும் தாயானாள்,
பத்திக் கிவளே வித்தானாள்,
குங்குமம் நெற்றியிற் கொண்டிடுவாள்,
குளிர்சந் தனக்காப் பணிந்திடுவாள்,
பொங்கல் திருவிழாக் கண்டிடுவாள்,
புதுவயல் நகரில் வலம்வருவாள்,
எங்கள் காவல் தெய்வமிவள்,
இருபத்தி ரண்டரைக் கிராமமகள்,
சிங்க வாகனம் ஏறுமிவள்,
சிந்தை யெலாம்குடி கொண்டமகள்!

— கவிஞர் பெரி. சிவனடியான்

குறிப்பு விளக்கம்:

1. '(அவையிடை) ஆடை குலைந்தவனுக்கு அப்பொழுதே கை சென்று உதவுவது போன்று..' — திருக்குறள்
2. 'வீரசோழ மகாராசாவினால் வழிபடப்பட்ட இறைவன் இவர்' என்று வடமொழிச் சுவடி ஒன்று கூறுவதால் (சி.கே. சுப்பிரமணிய முதலியார்), இந்த வீரசோழன் என்பவரே, அந்தச் சோழ மன்னராக இருக்கக்கூடும்
3. வறுமை வந்துற்றபோது, தம் மனைவியின் தாலியைக்கூட விற்றுக் குங்குலியம் வாங்கி இறைவனுக்குத் திருத்தொண்டு புரிந்ததன்வழி, இறைவனின் அன்புக்கு உரியவரான திருத்தொண்டர்
4. பெரிய புராணம். ஒருப்பாடு — (மனத்தில் எழுந்த) ஒருமைப்பாடு
5. பெரிய புராண ஆராய்ச்சி — டாக்டர் மா. இராசமாணிக்கம்
6. எல்.எஸ்.டி. இராமநாதன் செட்டியார், தேவகோட்டை
7. எல்.எஸ்.டி. இராமநாதன் செட்டியார்
8. கோயில் பற்றிய தகவல்களைக் கூறியவர்: உமாசேகரக் குருக்கள், சாக்கோட்டை

உ

சாத்திரத்தால் அளவுபடாச் சாக்கோட்டைக் கறுப்பர்

(89. கறுப்பர் திருக்கோயில், சாக்கோட்டை)


சாக்கோட்டையில் உள்ள நூறாண்டுகளுக்குமேல் பழைமையான[1] வீரசேகர உமையாம்பிகை திருக்கோயில் மிகவும் புகழ்பெற்றது. மூலவரான பெரிய சிவலிங்கத் திருமேனியும், சிறிய அழகிய உமையாம்பிகை சிலையும், நம் சிந்தையைக் கவர்ந்து, பக்தி உணர்வைத் தூண்டுகின்றன. நகரத்தார்களின் திருப்பணிகளைப் பெற்றுள்ள இக்கோயிலுடன், நகரத்தார்களுக்கு அதிகத் தொடர்பு உண்டு. (மதுரையில் மீனாட்சி பெயராலேயே, அக்கோயில், புகழ்பெற்று விளங்குவது போன்று, இங்கும் இந்தச் சிவாலயம், உமையாம்பிகை கோயில் என்றே வழங்கி வருகிறது.) இங்குள்ள வீரராகவப் பெருமாளும் பெரிய திருவுருவத்தினரே!

இக்கோயிலிலிருந்து தெற்கே செல்லும் சாக்கோட்டை — ஏம்பல் சாலையில், சிறிது தொலைவு சென்றால், கானாடுகாத்தான், கொத்தமங்கலம், தேவகோட்டை, தேனிப்பட்டி, பள்ளத்தூர், புதுவயல் ஆகிய ஊர்களின் நகரத்தார்கள் வழிபடும் சாக்கோட்டைக் கறுப்பரின் கொம்படிக் கோயிலை அடையலாம்.

நடுவில் திறந்த வெளி; சுற்றிலும் அடர்ந்த பெரிய மரங்கள். இத்தகைய சூழலைக் கொண்ட இந்தக் கொம்படி ஆலயத்தில், விநாயகருடன் கறுப்பரும், முனியும், முன்னோடி சாம்பனும் குடி கொண்டிருக்கக், கண்ணுக்குப் புலப்படாத 108 தேவதைகளும் இருக்கின்றனராம். தெரிந்த தெய்வங்களில் விநாயகருக்கு மட்டுமே பெரிய உருவச்சிலை இருக்கிறது; கறுப்பர், முனி, முன்னோடி ஆகியோரைக் குறிக்கக் கற்பீடங்களே உள்ளன.

பெரிய ஆலமரத்தின் அடியில் அமைந்துள்ள உயரமான கல் மேடையில், மேலே இருக்கும் கறுப்பருக்குரிய கற்பீடத்தில் அரிவாள்கள் பொருத்தி வைக்கப் பெற்றுள்ளன. இந்தக் கறுப்பரை வழிபடும் தேனிப்பட்டி நகரத்தார்கள், தங்கள் ஊரில் நடைபெறும் படைப்புக்கு முன்னர் மாலை நேரத்தில் இங்கு வந்து, உமையாம்பிகை (சிவன்)

கோயிலிலிருந்து யாரையேனும் அழைத்து வந்து, கறுப்பருக்குப் பானக்கம் நிவேதனம் செய்து வழிபட்டுச் செல்வார்களாம். மற்ற ஊர்களின் நகரத்தார்கள், இக்கோயிலின் பூசாரியான ஆசாரியை அழைத்து வந்து (அருகில்தான் இரும்புப் பட்டறை வைத்திருக்கிறார்.) பெரிய அளவில் பலி கொடுத்துப் பூசை செய்து வழிபடுகிறார்களாம். பெரும் பூசை என்பது, நூற்றுக்கு மேற்பட்ட உயிர்களைப் பலி கொடுக்கும் அதிகச் செலவுடைய பூசையாகையால், அதில் கால் பூசை, அரைக் கால் பூசை என்று சிலர் நேர்ந்து கொள்வது உண்டாம்!



சாலை ஓரத்தில் சாக்கோட்டைக் கறுப்பர் கோயில்

கறுப்பர் பீடத்தின் கீழே உள்ள கல் மேடையில் பெரிய விநாயகர் திருவுருவம் உள்ளது. எதிரே நிலத்தில் மூஷிஹம், பலிபீடம் ஆகியவை வைக்கப் பெற்றுள்ளன. கறுப்பரின் இடப்புறம் உள்ள கல் மேடையில் உள்ள பீடம், முனிக்குறடு எனப்பெறுகிறது. கறுப்பருக்கு எதிரில் உள்ள கற்பீடம் முன்னோடி சாம்பனைப் பிரதிநிதித்து அமைந்திருக்கிறது.

அருகிலுள்ள கல் மேடையில்தான் 108 தேவதைகள் குடிகொண்டிருக்கின்றனவாம்! பெரும்பூசை நடத்தும்போது இந்த மேடையில்தான், பள்ளயம் போடுவார்களாம்.

வானமே எல்லையாக நம் கண்ணுக்குப் புலப்படாமல் வளர்ந்து நிற்கும் இந்தத் தெய்வங்களை — தேவதைகளை வழிபட்டுக் கொண்டு, அடுத்துள்ள கோயிலுக்கு நம் யாத்திரையைத் தொடர்கிறோம்.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

வானம் மணிமுகடா, மால்வரையே தூணாக,
ஆன பெரும்பார் அரங்காக், — கானகத்தில்
அம்மா முழ(வு)அதிர ஆடும் பொழு(து), ஆரூர்
எம்மானுக்(கு) எய்தா(து) இடம்.

திருச்சிற்றம்பலம்

— 11ஆம் திருமுறை,
கபிலதேவ நாயனார்

குறிப்பு விளக்கம்:

— சாத்திரங்களினால் வரையறுக்க முடியாத

1. விவரம் தெரிந்த முதற் குடமுழுக்கு, கி.பி.1887ஆம் ஆண்டில் (பார்த்திப — தை — 9) நடைபெற்றிருக்கிறது

உ

பொன்னியலும் மேனியரே, புலிக்குட்டி ஐயனாரே!

(90. புலிக்குட்டி ஐயனார் திருக்கோயில், சாக்கவயல்)


சாக்கோட்டையில் உள்ள உய்யவந்தாள், கறுப்பர் ஆகியோரை வழி பட்டுக் கொண்டு, சாக்கோட்டை — ஏம்பல் சாலையில் இரண்டு கி.மீ. சென்று, கடைகள் இருக்குமிடத்தில் வலப்பக்கம் (மாத்தூர் பெயர் அறிவிப்புக் கைகாட்டிப் பலகை உள்ள இடத்தில்) திரும் பிச் சிறிது தொலைவு சென்று, பின்னர் கண்மாய்க் கரையில் செல் லும்போது, கவனம் தேவை! முட்செடிகள் கால்களைத் தீண்டக் காத்திருக்கின்றன.

புதுவயல் நகரத்தார் வழிபடும் இக்கோயில், திங்கள், சனிக்கிழமை களில் மட்டுமே, பிற்பகல் மூன்று மணி முதல் ஐந்து வரை திறந் திருக்கும். மற்ற நாட்களில் சின்ன வேங்காவயலிலிருந்து அர்ச்ச கரை அழைத்து வர வேண்டும்.

ஒரு புறம் கண்மாயையும், மறுபுறம் வயல்களையும் கொண்டு அமைந் துள்ள மிகச் சிறிய பழைய கோயிலான இது, சுற்றுச்சுவர் ஏது மின்றி இருக்கிறது. கல் திருப்பணியான கருவறையில், புலிக்குட்டி ஐயனார், பூரணை — புஷ்கலை புடைசூழ அமர்ந்திருக்கிறார். முன் னால் சிறிய மண்டபம். கருவறையின் எதிரே மண்டபத்துக்கு வெளி யில் யானை வாகனமும், பலிபீடமும், கல் மேடையில் வானமே கூரையாக வைக்கப் பெற்றுள்ளன.

ஐயனாரின் வலப்புறம் (தெற்கில்) உள்ள இரு சந்நிதிகளில், கிழக்கே உள்ள சந்நிதியில் நொண்டிக் கறுப்பரும், பத்ரகாளியும் இடம் பெற்றுள்ளனர். இவை இரண்டும் அழகிய சிலைகள் எனினும், சிரத்தையின்மையால், பொலிவிழந்து காணப்பெறுகின்றன. இரண் டுமே வேலைப்பாடு நிறைந்த திருமேனிகள். இச்சந்நிதிக்கு இடப் புறம் உள்ளதொரு சந்நிதியில், பெரிய கறுப்பர் வீற்றிருக்கிறார்.

இக்கோயிலுக்கு அடிமைப்பட்ட நகரத்தார்கள் குறிப்பிட்ட ஒரு நாளில் வழிபாட்டுக்கென இங்கு வருவதில்லையாம். திருமணம், மற்றும் குழந்தை பிறந்த பின்னர் வந்து வழிபட்டுச் செல்வார்களாம். நகரத் தார் பிள்ளைகளுக்கு இங்கு முடி இறக்குகிறார்கள்.



கறுப்பரும், காளியும்

உயிர்ப்பலியோ, மதுபான நிவேதனமோ இல்லாத இக்கோயிலில், ஐந்தாறு ஆண்டுகளுக்கு ஒருமுறை புரவி எடுப்பு மட்டும் நடை பெறுகிறது. அந்த விழாவினை நாட்டார் நடத்துகின்றனர்.

சிறிய — அடக்கமான கோயிலானாலும், தூய்மையான சுற்றுப் புறத்துடன் சிறப்பாகத் திகழ்கிறது!

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

பொன்னைக் கடந்(து)இலங் கும்புலித் தோலினன்,
மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை
துன்னிக் கிடந்த சுடுபொடி ஆடிக்குப்
பின்னிக் கிடந்த(து)என் பேரன்பு தானே!

திருச்சிற்றம்பலம்

— 10ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

— பொன்னியலும் — பொன் போன்று விளங்கும்

கோயில் பற்றிய குறிப்புகளை நல்கியவர் : அ. பழனி வேளார், சின்ன வேங்கா வயல்

உ

வெற்றியே நல்கும் வேங்கை ஐயனார்

(91. வேங்கை ஐயனார் திருக்கோயில், சின்ன வேங்காவயல்)

புலிக்குட்டி ஐயனாரைத் தரிசித்த நாம், அடுத்து வேங்கை ஐயனாரை வழிபடவிருக்கிறோம். எல்லாம் விலங்குகளின் பெயர்களாக இருக்கின்றனவே என்று யோசிக்கிறீர்களா? ஐயனாரை ஐயப்பனுடன் தொடர்புபடுத்தினால், ஐயப்பன் புலிகளை வசமாக்கினவராயிற்றே? அவரைப் புலி என்றும், வேங்கை என்றும் சொல்வதில் தவறென்ன இருக்கிறது?

சாக்கோட்டையிலிருந்து மணக்குடி வழியாகச் சின்ன வேங்காவயல் வந்து, ஊருக்குள் செல்லுமுன்னர், சாலை ஓரத்திலேயே வலப்பக்கம் அமைந்திருக்கும் வேங்கை ஐயனார் கோயிலை எளிதில் கண்டு பிடித்து விடலாம்.

அழகிய சிலைகள் அமைந்துள்ள மற்றொரு கோயில் இது!

வடக்கு நோக்கி உள்ள முன்னோடி சந்நிதியைத் தாண்டி, மண் புரவிகள், யானைகளைக் கடந்து ஓட்டுக்கூடத்துடன் கூடிய கருவறைக்குச் சென்றபோது, ஓர் இன்ப அதிர்ச்சி காத்திருந்தது!

கருவறைக்கு வெளியே (ஐயனாரின்) வலப்புறம் பெரிய அழகிய விநாயகர் திருவுருவம். கொட்டிக் கொடுக்கும் கோர்ட்டுமலையார் கோலாலம்பூரில் அன்றோ இருக்கிறார்? இங்கு எப்படி வந்தார் என்ற வியப்பில் ஆழ்ந்து போனோம்!

கோர்ட்டுமலைக் கணேசரையே குலதெய்வமாக நம்பி இருப்பவன், வேறு குலதெய்வங்களை நாடிச் செல்லலாமா எனும் வினா எழுந்த போது, அவரை நம்பி அவரின் அனுமதியுடனேயே இந்தப் புனித யாத்திரையை மேற்கொள்கிறேன்; அவர் அருள் புரிவார் என்று கூறினேன்; அது உண்மை என்று உணர்த்துவது போல், ஏறத்தாழ யாத்திரை முடியவிருக்கும் நேரத்தில், அவரே வந்து அருட்காட்சி கொடுத்து, எல்லாம் நல்லபடி நடக்கின்றனவா என்று கேட்பது போல், வேங்கை ஐயனார் கோயில் விநாயகர் தரிசனம் தந்தார்!

கருவறைக்கு வெளியே ஐயனாரின் இடப்புறம் சுப்பிரமணியருடன் ஒரு வேலாயுதமும் உள்ளது.

ஒரு சில கோயில்களிலேயே மிக அழகிய தெய்வப் படிமங்களைப் பார்த்து வந்திருக்கிறோம். அந்தச் சில கோயில்களில் வேங்கை ஐய னார் கோயிலும் ஒன்று என்று சொன்னால் மிகையாகாது.

ஐயனார் தம்பதியர் அழகிய திருவுருவத்தினர். தம்பதியரின் முகங் களில் தவழும் சாந்தமும், அமைதியும், இவர்களுக்கா வேங்கை ஐய னார் (தம்பதியர்) என்று பெயரிட்டனர் என்று கேட்கத் தோன்று கிறது. இவ்வளவு அழகிய மூர்த்தங்கள் முறையாக வைத்திருக்கப் பெறவில்லையோ எனும் ஐயமும் எழுகிறது. ஒரு சுவாமிக்குக் கூட (மருந்துக்குக்கூட) அஷ்டபந்தன மருந்து காணப்பெறவில்லை! எல் லாம் எப்போதோ விடை பெற்றுக்கொண்டு விட்டன போலும்.



கொட்டிக் கொடுக்கும் கோர்ட்டுமலையாரா இவர்!



கொடிகள் படரக் கொழுகொம்பாய் இருப்போம்!

இங்குள்ள மூலவரும், தேவியரும், விநாயகரும்(கூட) இரண்டாம் தலைமுறையினரே. (அதனால்தான் இவ்வளவு அழகாக உள்ள னரோ?) பழைய ஐயனார், அம்பிகையர், விநாயகர் சிலைகள் அரு கிலுள்ள மரத்தடியில் வைக்கப் பெற்றுள்ளன. (பழைய பிள்ளை யாரைப் பார்த்தீர்களா, விளையாட்டுப் பொம்மை மாதிரி?)

இவ்வுளவு அழகிய தெய்வப் படிமங்கள் உள்ள கோயிலில், கரு வறை, மற்றும் கறுப்பர் சந்நிதிகளில் உள்ள விமானங்கள், பிடித்து வைத்த பிள்ளையார் (பிள்ளையாரே! பிழை பொறுப்பீர்!) போன்று வேலைப்பாடு எதுவுமே இல்லாத கூம்புகள் போன்று காட்சியளிக் கின்றன!

கருவறையின் முன் உள்ள பெரிய ஒட்டுக்கூடத்தின் ஒரு கோடியில், யானை வாகனமும், பலிபீடமும் உள்ளன. ஐயனாரின் வலப்புறம் ஒட்டுக்கூடத்தை ஒட்டியுள்ள இரு சந்நிதிகளில், மேற்கே பெரிய கறுப்பரும், கிழக்கே பேச்சி, இராக்காயி, காளி ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

கோயிலின் வலப்புறம் உள்ளதொரு சந்நிதியில் சேவல் கறுப்பர்,

மற்றும் மண் சிலைகளான பட்டவர், சப்த மாதர், சந்நியாசி ஆகியோர் உள்ளனர்.

★ ★ ★

எவ்வளவு தொலைவு வந்து, எங்கெங்கோ போய்க் கொண்டிருந்த நேரத்தில், முன்பின் தெரியாத ஓரிடத்தில், கோர்ட்டுமலையாரின் சாயலில் ஒரு விநாயகரைத் தரிசிக்க முடிந்ததென்றால், அது கடவுள் செயல்தானே என்று எண்ணி மகிழ்ந்து கொண்டிருந்த நேரத்தில்தான், அருகில் உள்ள வளையன்வயலில் கடவுள் ஐயனார் இருக்கிறார்; அவரையும் பார்த்து வந்துவிடுங்கள் என்று அர்ச்சகர் ஆ. பழனி வேளார் கூறினார்; இடத்தைத் தேடிப் பிடிக்கச் சிரமம் இல்லாமல், அர்ச்சகர் ஒருவரையும் உடன் அனுப்பி வைத்தார்; அதுவும் கடவுள் செயல்தானே!

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

1. நள்ளாறு தெள்ளா(று) அரத்துறை வாய்எங்கள் நம்பனே!
வெள்ளாடை வேண்டாய், வேங்கையின் தோலை விரும்பினாய்,
புள்ளேறு சோலைப் புக்கொளி யூரில் குளத்திடை
உள்ளாடப் புக்க மாணிஎன் னைக்கிறி செய்ததே.

— 7 ஆம் திருமுறை

2. மையார் கதலி வனத்து
வருக்கைப் பழம்விழுதேன்
எய்யா(து), அயின்(று),இள மந்திகள்
சோரும் இருஞ்சிலம்பா!
மெய்யா அரிய(து)என் அம்பலத்-
தான்மதி யூர்கொள்வெற்பின்
மொய்யார் வளர்இள வேங்கைபொன்
மாலையின் முன்னினவே.

திருச்சிற்றம்பலம்

— 8 ஆம் திருமுறை (திருக்கோவையார்)

உ

காட்சிக்கு எளிய கடவுள் ஐயனார்

(92. கடவுள் ஐயனார் திருக்கோயில், வளையன்வயல்)

ஆ.முத்துப்பட்டணம் வெழுவூரில் உள்ள தர்ம (மகா) சாத்தையனார் கோயிலில், ஐயனாருடன் புஷ்கலாதேவி மட்டும் இருக்கக் கண்டோம். ஆலத்துப்பட்டிக்குச் சென்றிருந்தபோது, அங்கு தனிமையில் இருக்கும் காடப்ப ஐயனார், பேச்சுத் துணைக்குப் பிள்ளையாரைத் தம் வலப்புறம் வைத்திருக்கக் கண்டோம்.

சின்ன வேங்காவயல் ஊருக்குள் போய், அங்கிருக்கும் பிள்ளையார் கோயில் உள்ள இடத்திலிருந்து கிழக்கே சென்று ஓர் ஊருணியை அடைந்து, அங்கிருந்து வயல் வரப்புகள், கண்மாய் வழியே நடந்து சென்று அடையக்கூடிய கடவுள் ஐயனார் கோயிலிலோ, ஐயனாரின் இடப்புறம் புஷ்கலா தேவியும், வலப்புறம் சிறிய பிள்ளையாரும் இருக்கக் காண்கிறோம். ஓர் அம்பிகை மட்டும் இருக்கக் கூடாது என்னும் பிரச்னை முன்னரே ஏற்பட்டு, வெற்றிடத்தில் பிள்ளையாரைப் பிடித்து வைத்து விட்டார்களோ?

* * *

தொண்டு மனப்பான்மை கொண்ட சிலரின் உதவியுடன், பலரின் முகவரிகளைத் தொகுத்துப், பாரதம், மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் உள்ள ஏறத்தாழ எழுநூறு நகரத்தார் பெருமக்களுக்கு வினாத்தொகுதிகளை அனுப்பியதில், சுமார் நூறு பெருமக்கள் மட்டுமே மறுமொழி தெரிவித்திருந்தனர். (ஒரு சிலர், மிக முயன்று, அரிய பல தகவல்களைத் தொகுத்து எழுதியிருந்தனர் என்பதை நன்றியுடன் நினைவுகூர்கிறேன்!) பலர் இதைப் பற்றிக் கவலைப் பட்டதாகவே தெரியவில்லை.

ஒரு 'பெரிய' மனிதர், (இந்த நூலின் தொடர்பாகவே வேறு வேலையாகச் சென்றிருந்தபோது), ''இதற்கெல்லாம் யார் ஐயா பதில் எழுதிக் கொண்டிருப்பார்கள்? பார்த்ததும் கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டு விட்டேன்!'' என்று அலட்சியமாகச் சொன்னார். (உடன் இருந்த கோர்ட்டுமலைக் கணேசரின் படம் கூடவா, அவர் கண்ணில் படவில்லை?) ''கண்ணதாசனே ஓர் ஆய்வை மேற்கொண்டு, தம் பத்திரிகையில் கேள்வித் தாளை இணைத்திருந்தார்; அவருக்கே யாரும் பதில் எழுதவில்லை! உம்மால் ஆகக் கூடிய செயலா இது? இதெல்லாம் ஒரு டிரஸ்ட் செய்ய வேண்டிய வேலை; பலர் கூடிச்

செய்யவேண்டிய செயல்'' என்று, வெளியில் விரட்டாத குறையாக வெகுண்டு பேசினார்.

சிறந்த கவிஞர் என்னும் முறையில் கண்ணதாசனிடத்து எனக்கு மதிப்பு உண்டு; ஆனால் அவர்தாம், எல்லோருக்கும், எல்லாச் செயல்களுக்கும் அளவுகோல் என்பதை என்னால் ஏற்க இயலவில்லை! **கண்ணதாசனால் ஒரு செயலைச் செய்ய முடியாவிட்டால், வேறு யாராலுமே அத்தகைய செயலைச் செய்ய முடியாதா?**

மேலும் ஓரிருவர் ''எங்களைத் தொல்லைப்படுத்தாதீர்கள்'' (''ஆளை விடுங்கள்'') என்று மனம் நொந்து எழுதியிருந்தனர். யாரையும்



சங்குலும் பகலும் காக்கும் கடவுள் ஐயனார் கோயில்

புண்படுத்துவதோ, யாருக்கும் தொல்லை கொடுப்பதோ அடியேனின் நோக்கமன்று. ஒருவேளை யாரேனும் எளியேனைத் தவறாகப் புரிந்து கொண்டிருந்தால், அவர்கள் என்னை மன்னிக்குமாறு மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

* * *

மூன்று பக்கம் சுவரின்றி, முன் பக்கம் மட்டும் திருச்(சுற்றுச்)சுவரைக் கொண்டுள்ள கடவுள் ஐயனார் கோயிலைப், பலவான்குடியைச் சேர்ந்த மாத்தூர் உறையூர்ப் பிரிவினர் குலதெய்வக் கோயிலாகக் கொண்டுள்ளனர்.[1] ஏறத்தாழப் பன்னிரு ஆண்டுகளுக்கு முன் வரை, இதுதான் தங்கள் குலதெய்வக் கோயில் என்று இந்தப் பங்காளிகள் அறியாதிருந்தனராம்! பத்து ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற திருக்குட நீராட்டுக்குப் பின்னர், ஐயனாரின் அருளால் தாங்கள் நன்றாய் வாழ்வதாக அவர்கள் கூறுகின்றனராம்.[2] (இந்தப் பலவான்குடி நகரத்தார்களே, இது தங்கள் குலதெய்வக் கோயில் என்று அறிந்த பின்னர், திருப்பணி செய்து அந்தத் திருக்குட நீராட்டு விழாவைச் செய்திருப்பார்களோ?) இன்னும் இரண்டோர் ஆண்டுகளில், இந்நகரத்தார்கள் அடுத்த குடமுழுக்கு விழாவினை நடத்த முயல்கின்றனராம்!

சிறிய கருவறையும், முன்னால் ஒரு சிறிய கல் மண்டபமும் அடக்கமாக அமைந்துள்ளன. வேலைப்பாடு ஏதுமில்லாத விமானத்தைக் கொண்ட கருவறையினுள், கடவுள் ஐயனார், முன்பு குறிப்பிட்டது போன்று, இடப்பக்கம் புஷ்கலையுடனும், வலப்பக்கம் மிகச்சிறிய இராமநாத விநாயகருடனும்[3] அமர்ந்திருக்கிறார்.

'தாமென்றும் மனந்தளராத் தகுதியராய் உலகத்துக்(கு)
ஆமென்று சரண்புகுந்தார் தமைக்காக்கும் கருணை'[4]யை உடையவர் இக்கடவுள் ஐயனார் என்பதைத், தம்மை வந்தடைந்த நகரத்தார் பெருமக்களைச் சிறப்புடன் வாழ வைத்திருப்பதிலிருந்தே அறிந்து கொள்ளலாம்! கருவறைக்கு முன்னால் யானை வாகனமும், இரு பலிபீடங்களும் மேடையில் காணப்பெறுகின்றன.

கருவறைக்கும் வாகன மேடைக்கும் இடையில், கருவறையின் வலப் பக்கம் உள்ள அடுத்தடுத்த சந்நிதிகளில் பெரிய கறுப்பர், கையில் குழந்தையுடன் செட்டிச்சி ஆத்தாள் ஆகியோரின் சிலைகள் உள்ளன. இச்சந்நிதிகளுக்குக் கிழக்கேயும், கருவறையின் வலப்புறமும் சிமெண்டினால் அமைக்கப்பெற்றுள்ள திண்டு போன்ற அமைப்புகள், சந்நியாசி, ரிஷி (இவருக்குக் கன்னிமார் காவலர் என்று பெயராம்!), சப்த கன்னியர், நொண்டிக் கறுப்பர், காளி, சின்னக்கறுப்பர், முனி ஆகியோரைப் பிரதிநிதிக்கின்றன. முன்புறத்திலுள்ள சுவரை ஒட்டி, ஒற்றைச் சேமங்குதிரை காணப்பெறுகிறது.

வெள்ளிக்கிழமைகளில் மட்டும் ஒருநேரப் பூசை நடைபெறும் இக் கோயிலுக்குப், பலவான்குடி நகரத்தார்கள், சித்திரைத் திருவிழா முடிந்ததும் வந்து சிறப்பாக அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபடுகின்றனராம்.

இங்கு கோழிப் பூசை மட்டுமே உண்டு என்றும், அதுவும் இரவு ஏழு மணிக்கு மேல்தான் நடக்கும் என்றும், நகரத்தார்கள் அதற்குத் தங்கியிருக்கமாட்டார்கள் என்றும் அர்ச்சகர் கூறுகிறார்.

'தன்னடைந்தார்க்கு இன்பங்கள் தரும் தத்துவனை'- கடவுள் ஐய னாரைக் கண்டு தரிசித்த மகிழ்ச்சியில், சின்ன வேங்காவயலுக்குத் திரும்பிச் செல்கிறோம்.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

சாம்பலோ டும்,தழல் ஆடினானும், சடையின்மிசைப்
பாம்பினோ டும்,மதி சூடினானும், பசுஏறியும்,
பூம்படு கல்இள வாளைபாயும் புகலிந்நகர்க்
காம்பன தோளியொ. டும்இருந்த கடவுள்அன்றே.

திருச்சிற்றம்பலம்

— 3 ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

1. சுப.வீர. சுப்பிரமணியன் செட்டியார், பலவான்குடி
2. இக்கோயில் பற்றிய ஒரு சில தகவல்களையாவது உள்ளன்போடு கூறியவர்: மு. முத்து வேளார், சின்ன வேங்காவயல்
3. அர்ச்சகர் கூட அறியாத விநாயகரின் பெயரைத் தெரிவித்தவர்: சுப. வீர. சுப்பிரமணியன் செட்டியார்
4. 'என்றும் மனந்தளராத தகுதியை உடையவராகி, உலகத்துக்கு அடைக்கலம் கடவுள் ஒருவரே என்று உணர்ந்து, அவரையே சரணம் அடைந்தவர்களைக் காக்கும் கருணை...' (உடையவன்)

— 2 ஆம் திருமுறை

உ

வாச மலர்எலாம் ஆனாய் நீயே, வையக் கறுப்பராய் நின்றாய் நீயே!

(93. வைய(கை)க் கறுப்பர் திருக்கோயில், கண்டனூர்)

ஏறத்தாழப் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த நிகழ்ச்சி இது.

ஆண்டுதோறும் வைகாசி மாதக் கடைசித் திங்கட்கிழமை, வையாண்டிக்கு (வேறு யார்? முருகன்தான்!) மாஹேஸ்வர பூஜை[1] நடப்பதுண்டு. பத்து மூடை அரிசிக்குக் குறையாமல் சோறு வடித்து அன்னதானம் செய்வார்கள். அந்த ஆண்டுப் பூஜைக்குப் போதுமான பணம் இல்லாததால், வெளியிலும் வசூலிக்கத் தொடங்கினார்கள். திடீரென ஒருநாள் உள்ளூர்ப் பொருளகம் ஒன்றின் நிர்வாகி ''கோயம்புத்தூரிலிருந்து ஒருவர், பூசைச் செலவுக்குக் கொடுக்குமாறு ஈராயிரம் ரூபாய் அனுப்பியிருக்கிறார்'' என்று சொல்லிப் பணத்தைக் கொடுத்தார். அந்தக் கோயம்புத்தூர் அன்பர் யார்? இங்குள்ள நிதிப் பற்றாக்குறை அவருக்கு எப்படித் தெரிந்தது? - விசாரித்தார்கள். இந்த ஊரைப் பற்றியோ, இங்கு நடக்கும் பூசை பற்றியோ, பணப் பற்றாக்குறை பற்றியோ அவருக்கு ஏதும் தெரியாது; மேலும், அவர் அவ்வளவு பெரிய செல்வந்தரும் அல்லர்; 'கனவில் முருகன் தோன்றிப் பணம் அனுப்பச் சொன்னான்; அனுப்பினேன்' என்றார் அவர். அவ்வளவு சக்தி வாய்ந்தவர் எங்கள் முருகன் என்று, கண்டனூர் வையக்கறுப்பர் கோயிலில் உள்ள வையக்கறுப்பரையும், வையாண்டியையும் வழிபடும் நகரத்தார் பெருமகனார் ஒருவர்[2] பெருமிதமாகக் கூறுகிறார்.

* * *

கண்டனூரில், ஊரின் கடைசியில் கண்மாய்க்கரையில் அமைந்திருக்கும் இந்த வையக்கறுப்பர் கோயிலைத் தேடித்தான் சென்றோம். ஆனால் அந்தக் கொம்படிக் கோயிலில் காணப்பெற்ற அறிவிப்புப் பலகை ஒன்றில், வைகைக் கறுப்பர் என்று எழுதப் பெற்றிருந்தது. மதுரைக்கு அருகிலுள்ள அழகர்கோயிலிலிருந்து பிடி மண் எடுத்து வந்து பிரதிஷ்டை செய்திருக்கக்கூடிய பதினெட்டாம்படிக் கறுப்பராகையால், மதுரையில் உள்ள வைகை ஆற்றை வைத்து, வைகைக் கறுப்பர் என்று இங்குள்ள கறுப்பருக்குப் பெயரிட்டிருப்பார்களோ? ஆனால், அடுத்துள்ள முருகனை வையாண்டி என்கிறார்களே? அப்படியானால் கறுப்பருமே வையக் கறுப்பர்தாமோ? (வையம்-பூமி).

வைகைக் கறுப்பர், வைகை ஆண்டி என்று முதலில் பெயர் இருந்து, பின்னர் வையக்கறுப்பர், வையாண்டி என்று ஆகியிருக்குமோ?

வண்டுகள் எழுப்பும் இசையைக் குளக்கரையில் உள்ள ஆலமரங் களின் கிளைகளிலிருந்து நல்ல குயில்கள் கேட்டுப் பயில்கின்ற,[3] மற்றும், நீண்ட அடியினையுடைய தென்னை மரங்களும், குறிய அடி யினையுடைய பலா மரங்களும் ஒன்றாய்ப் பொருந்துவதால் குளிர்ச் சியை அடைகின்ற, மணம் நிறைந்த[4] எழிற் பொழிற் சோலை,[5] இந்தப் பெயர் ஆராய்ச்சியை மறக்கச் செய்து விடுகிறது. 'அண்ணல் யானை அணிதேர் புரவி ஆட்பெரும் படை'[6]யும் இந்தச் சோலை யில் மகிழ்ச்சியோடு தங்கியிருக்கலாம்!

முன்புறம் கண்மாயையும், பின்னால் குளத்தையும் கொண்டு, நிழல் தரும் மரங்கள் செறிந்த இயற்கைச் சூழலில் அமைந்த இந்தக் கொம் படிக் கோயிலைக் காண்பதே ஓர் இன்பம்! நம்மை மறந்து இறை நினைவில் திளைப்பதே பேரின்பம்!

பெரிய மரங்களின் அடியில் காணப்பெறும் செம்புறைக் கல்லால் அமைந்த இரு பெரும் குறடுகளும், பெரியதொரு மரமும், சிறிய வெள்ளைக்கல் குறடு ஒன்றுமே இங்குள்ள தெய்வ சந்நிதானங்கள்! எனவே, இங்கு இயற்கை எனும் சிற்பி வனைந்த எழிற் கோலங் களைத்தான் காணமுடியுமே தவிர, செயற்கைச் சிற்பங்களுக்கோ, சிலைகளுக்கோ இடமில்லை.

* * *

கண்டனூரிலிருந்து கண்மாய்க் கரைக்கு வருவதற்கான சாலையே, இக்கோயிலுக்கு வருவதற்கெனவே அமைக்கப்பெற்றதுதானாம். இடையிலுள்ள பாலத்தைக் கடந்து கோயில் வளாகத்தினுள் வந்த தும், முதலில் காணப்பெறும் பெரிய அழகிய குறடு (கல்மேடை) வையாண்டி குடிகொண்டிருக்கும் இடம். மரத்தை ஒட்டிக் குறட் டின்மீது வேல் ஒன்று வைக்கப்பெற்றிருக்கிறது.

இது சாதாரண வேல் அன்று! 'வீரவேல், தாரைவேல், விண்ணோர் சிறைமீட்ட தீரவேல், செவ்வேள் திருக்கைவேல், வாரி குளித்தவேல், கொற்றவேல், சூர்மார்பும் குன்றும் தொளைத்தவேல்..'[7]. இவர் தாம் வையாண்டி! இவருக்குத்தாம் வைகாசி மாதத்தில் (மாஹேஸ் வர)பூசை நடைபெறுகிறது. அந்த நேரத்தில் வெள்ளியினாலான திருமுகம், ஹஸ்தம், பாதங்கள் வைத்து(ப் பெயருக்கேற்ப) ஆண் டிக் கோலத்தில் அலங்காரம் செய்வர்.[8]

ஆராவயல், கண்டனூர், கானாடுகாத்தான், தேவகோட்டை, தேனிப் பட்டி, பள்ளத்தூர் ஆகிய ஊர்களின்[9] மாத்தூர் மணலூர்ப் பிரி வினரும், சூரக்குடிக் கோயிலாரும், இக்கறுப்பர் கோயிலைக் குல தெய்வக் கோயிலாகக் கொண்டு வழிபடுகின்றனர். மாஹேஸ்வர பூசைக்கு இந்த நகரத்தார்கள் புள்ளி ஒன்றுக்கு நான்குபடி அரிசி யும், ஒரு ரூபாயும் கொடுக்கின்றனர். பூசையில் ஒவ்வோர் ஊர் நகரத் தாருக்கும் வெவ்வேறு வகையில் பூசைச் சாப்பாடு கொடுக்கப் பெறு மாம். கானாடுகாத்தான் நகரத்தாருக்கு, நகர விடுதிக்குச் சாப்பாடு அனுப்புவர்; (குளத்தின் இடப்புறம் (வடக்கில்)இரு மடங்கள் உள் ளன. அவற்றில் ஒன்று கோயில் விடுதி என்றும், மற்றது கானாடு

காத்தான் நகரத்தார் விடுதி என்றும் கூறப்பெறுகிறது.) பள்ளத்தூர் நகரத்தார்களுக்குப் புள்ளிப்படி சோறும், குழம்பும் கொடுக்கப் பெறும்; கண்டனூரார் பந்தியில் அமர்ந்து சாப்பிடுவர்; தேனிப் பட்டிக்காரர்கள் இரவு தங்கிக் கஞ்சி வாங்கி, அடுத்த நாள் காலை சாப்பிட்ட பின்னர் புறப்படுவார்கள். கானாடுகாத்தானைச் சேர்ந் தோர் இரவு தங்கி, அடுத்த நாள் பிற்பகல் உணவு சமைத்துச் சாப் பிட்டுவிட்டுச் செல்வார்களாம்.

மாஹேஸ்வர பூசையில் மாங்காய் மண்டி சிறப்பானதோர் இடத்தை வகிக்கிறது. இதனைப்பெற எல்லோரும் ஆசைப்படுவார்களாம். பூசைக் காலத்தில் இங்குள்ள மாமரங்களில் மாவடு இல்லாவிட்டா லும், விலைக்கு வாங்கியாவது மண்டி தயாரித்து விடுவார்களாம்!

விளக்குப் போடுவதற்கான எண்ணெய்க்கு நகரத்தார் பணம் கொடுக்கின்றனர்.

* * *



கலைநவின்ற பொருளெல்லாம், கறுப்பையா! நீ தருவாய்!

வையாண்டி மேடை(குறடு)க்கு வலப்புறம் உள்ளதுதான் வைய (கை)க் கறுப்பர் குடிகொண்டுள்ள இடம். இதுவும் முருகனுக்கு உள்ளது போன்ற செம்புறைக்கல் அம்பலந்தான். ஆனால் இதில் பதினெட்டாம்படி (வைய)க் கறுப்பருக்குக் கற்பீடம் ஒன்று உள்ளது.

அதன்மேல் முத்தலைச் சூலம் பொருத்தப் பெற்றிருக்கிறது. அதை ஒட்டி மாலைகள், பட்டுகள் சாத்துவதற்கெனச் சட்டம் ஒன்றும் இணைக் கப்பெற்றிருக்கிறது. அந்த இடத்திலேயே அழகியநாச்சி அம்மனும், சந்நியாசி, மற்றும் காளியும் இருப்பதாக ஐதிகம். அருகில் அரி வாள்கள் காணப் பெறுகின்றன.

சிறப்புப் பூசைகள் நடைபெறும் நாட்களில் முத்தலைச் சூலத்தின் பின்னால் கயிறு கட்டிக் கறுப்பருக்கு, நடுவில் கறுப்பு ஆடையும், இடப்பக்கம் சந்நியாசிக்குத் துவர்(காவி) ஆடையும், காளிக்குச் சிவப்பு ஆடையும் பரப்பப்பெறுமாம். அழகியநாச்சி அம்மனுக்கு, நேர்ந்து கொண்டவர்கள் கூறினால், அலங்காரம் செய்வது உண்டாம். இந் தக் கறுப்பர் சந்நிதியில்தான் குழந்தைகளுக்குப் பெயர் கூப்பிடு வார்களாம்.

இவ்விரு குறடுகளின் வலப்புறமுள்ள ஆலமரத்தின் (மரத்தைப் பார்க் கும்போதே மிகப் பழைய மரமாக இருக்க வேண்டும் என்று தெரி கிறது.) அடியிலும், பீடமும், ஒரு சூலாயுதமும் காணப்பெறுகின் றன. மரத்தில் சிவப்பு(ச் சேலை)த் துண்டு கட்டி, நிறையக் குங்குமம் கொட்டப்பெற்றுள்ளது. இந்த அம்பாளைக் கரகக்காரி என்கின்ற னர். இந்த இடத்தில், நேர்ந்து கொண்டவர்கள் கட்டிய தொட்டில் கள் நிறையத் தொங்குகின்றன; வளையல்களும், கருகமணிகளும் கோர்த்துத் தொங்கவிடப் பெற்றுள்ளன.

இவற்றுக்குச் சிறிது தள்ளி உள்ள வெள்ளைக்கல் குறட்டில் பலி பீடம் ஒன்று உள்ளது. இது சோனையனுக்கு உரியது. சிறிது தொலை வில் உள்ள மற்றோர் குறடு, கருகப்பிலான் காளிக்கு உரியது என் கின்றனர்.

★ ★ ★

இறைவனின் திருவுளச் சம்மதம் கிடைக்காததால், கோயில் கட்டப் பெறவில்லை என்று கூறும் பூசாரி, சில நேரங்களில் பெருமழை பெய்யத் தொடங்கிவிடும்; அப்போது, வாழ்க்கையின் உயர் மட் டத்தில் உள்ளோரும், மற்றவர்களுடன் சேர்ந்து மழையில் நனைந்து கொண்டே வழிபடுவது, உள்ளத்தை உருக்குவதாக இருக்கும் என் கிறார். ஊரார் நிர்வாகத்தில் உள்ள இக்கோயிலில் மின்சார விளக்கு களும் கிடையாது; அன்றாடப் பூசையும் கிடையாது.

முன்பு கறுப்பருக்குக் கிடாய் வெட்டிப் பூசையிடுவது உண்டாம். வெட்டப்பெற்ற கிடாயின் இரத்தத்தைச் சாமியாடி குடித்து விடு வாராம். இப்போது சாமியாடி என ஒருவரும் இல்லாததால், பல ஆண்டுகளாகக் கிடாய்ப் பூசை இல்லையாம்! (கறுப்பர் காப்பாற்றி னார்!)

★ ★ ★

வேனிற்காலமாகிய (வசந்த ருது) சித்திரை மாதத்தில் வளர்பிறைப் பிரதமை முதல் ஒன்பது நாள், உமாதேவியைக் குறித்து விரதமிருந்து வழிபடுவதை 'வசந்த நவராத்திரி' என்பர். இது வடநாட்டில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது. காசி (வாரணாசி)யில் அந்த ஒன்பது நாட்களும், அன்னபூரணி, விசாலாட்சி உட்பட ஒன்பது அம்பிகையர் கோயில்களில், ஒவ்வொரு கோயிலிலும் ஒவ்வொரு

நாளாக, மக்கள் அம்பிகையரை 108 முறை வலம் வருவது கண் கொள்ளாக் காட்சியாகும்! (தாங்கள் வலம் வர இயலாவிட்டாலும், இதற்கென உள்ள மற்றவர்களிடம் பணம் கொடுத்து அவர்களை வலம் வரச் சொல்கிறார்கள்; அதற்கும் பலன் உண்டாம்!) இவ்வாறு விடியற்காலை தொடங்கி, இரவு வரை கோயில்களில் மக்கள் வலம் வரும்போது, எண்ணிக்கைக்காகக் காசியில் பிரபலமான சீனி மிட்டாய்களை (சிறு வெள்ளை உருண்டைகள்) வாங்கி, ஒரு பிரதட்சிணத்துக்கு ஒன்றாகச் சந்நிதியை நோக்கி வீசுகின்றனர். ஏராளமான பெண்கள் மண்டபத்தின் ஓரத்தில் நின்று மடி ஏந்தி, அந்த மிட்டாய் உருண்டைகளை, அன்னையரின் பிரசாதமாக - மடிப்பிச்சையாக ஏற்றுக் கொள்வது உள்ளத்தை உருக்குவதாக இருக்கும்!

வையக் கறுப்பர் கோயிலில் மடிப்பிச்சைப் பிரார்த்தனை மிகச் சிறப்பானது என்று அர்ச்சகர் கூறக் கேட்டபோது, வாரணாசி அன்னை அன்னபூரணி கோயிலில் கண்ட மடிப்பிச்சை, மனத்திரையில் நிழலாடியது. திருமணம், குழந்தைப் பேறு ஆகியவற்றுக்காக நேர்ந்து கொள்வோர், இங்கு வந்து விரதமிருந்து பூசாரியிடமோ, சாமியாடியிடமோ மடி ஏந்திச் சோறு வாங்கிக், குளத்துக்குச் சென்று சாப்பிட்ட பின்னர், மீதமிருப்பதைக் குளத்து நீரிலேயே கொட்டி விட்டுச் செல்வார்களாம். இவ்வாறு நேர்ந்து கொள்வோரின் பிரார்த்தனை, நிச்சயம் நிறைவேறுகிறது என்று அர்ச்சகர் உறுதியாகக் கூறுகிறார்.

பரவும் சொல்மாலை

1. கறுப்பர்

சங்கிலிநற் கறுப்பன்நீ, சார்ந்திட்ட பொருளும்நீ,
　　சடாக்ஷர மந்திரமும் நீயே,
சகலரும் துதிக்கின்ற தேவாதி தேவன்நீ,
　　சாம்பிராணி வாசகனும் நீயே,
எங்கெங்கு அழைத்தாலும் ஏழையின் வாசலில்
　　எழுந்தோடி வருபவனும் நீயே,
இதயத்தில் இருப்போன்நீ, இரத்தத்தில் கலப்போன்நீ,
　　இரவுபகல் காப்பவனும் நீயே.

—கவிஞர் கண்ணதாசன்,
திருப்புத்தூர் கறுப்பர் அருட்பா மலர்

2. வையாண்டி

ஓகையாற் றிரைமுன் னாளில் உழக்குமா
　　வினையும் வாட்டும்,
ஏகவெவ் வரையின் எல்லை இடித்திடும்,
　　இமையோர் போற்றத்
தோகைமேல் உலவும் கந்தன் சுடர்க்கரத்(து)
　　இருக்கும், வெற்றி

வாகையே சுமக்கும் வேலை, வணங்குவ(து)
எமக்கு வேலை.

— செவ்வந்திப் புராணம்

குறிப்பு விளக்கம்:

1. தேசிகர், நிர்வாண-விசேட-சமய தீட்சை பெற்றோர், மாகேசுரர் எனப்பெறுவர். (மகேசுவரனை வழிபடுவோர் ' மாகேசுரர்). சிவதீட்சை பெறாதோர் மாகேசுரர்களாயிருத்தற்குத் தகுதியுடையோரல்லர். சிவனையும், குருவையும், சமயத்தையும், சிவசாத்திரங்களையும் நிந்தை செய்வோரும், சிவ திரவியங்களை அபகரித்தோரும், நித்திய கருமங்களை விட்டோரும், மாகேசுர பூசைக்குத் தகுதி உடையோரல்லர். மாகேசுரர்களைப் பூசித்து அமுதூட்டுவோர், சிவபதங்களை அடைவர். ஏனையோருக்கு அமுதூட்டுவது, அன்னதானம் எனப் பெயர் பெற்றுப், பசு புண்ணியமாகி, நற்போகங்களுக்கு ஏதுவாகிய சுவர்க்கலோகம் முதலியவற்றைத் தருமேயன்றிச் சிவ புண்ணியமாகாது. - பெரிய புராண உரை, சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார்
2. இராம. அண்ணாமலை, கானாடுகாத்தான்
3. '...களிதரு வண்டு
உளங்க ளார்கலிப் பாடல்
உம்பரில் ஒலித்திடும் காட்சி
குளங்கள் ஆல்நிழற் கீழ்;நற்
குயில்பயில்.....'

- 7 ஆம் திருமுறை

4. '......நெடுந் தாட்தெங்கும்
குறுந்தாட்பல வும்விர விக்குளிரும்
விரையார் பொழில்...'

- 7 ஆம் திருமுறை

5. ஒருபொருட் பன்மொழி
6. 'பெருமை பொருந்திய யானையும், அலங்கரிக்கப் பெற்ற குதிரையும், வீரர்களும் அடங்கிய பெரிய சேனை...'- அதிவீரராம பாண்டியரின் நறுந்தொகை
7. திருமுருகாற்றுப்படையின் இறுதியில் காணப்பெறும் பிற்காலச் சான்றோரின் பாடல்களில் ஒன்று:
தாரை -சூரிய; செவ்வேள் - முருகன்; வாரி - கடல்; குளித்த - மூழ்கிய; கொற்ற - வெற்றி பொருந்திய; சூர் - சூரபதுமன்; குன்று - கிரௌஞ்ச மலை
8. கோயில் பற்றிய பல பயனுள்ள தகவல்களைத் தெரிவித்தவர்: கோயில் பூசாரி இராம. சின்னசாமி, கண்டனூர்
9. வெவ்வேறு கோயில்களைச் சேர்ந்த ஏழூர்களில் உள்ள இருநூற்றுக்கும் மேற்பட்ட புள்ளிகள் இக்கோயிலில் வழிபடுகின்றனர்; அனைவரும் பூஜையில் கலந்து கொள்வர் என்று இராம. அண்ணாமலை குறிப்பிடுகிறார். ஆனால் ஆறு ஊர்களே தெரிய வருகின்றன. ஏழாவது ஊர்?
கண்டனூரைச் சேர்ந்த வல்லம்பர்களும் இக்கோயிலுக்கு அடிமைப்பட்டவர்களே



அகிலாண்ட கோடி ஈன்ற அன்னை விசாலாட்சி

உ

வானகத்து அமரர்தாயே, வயல்நாச்சி அம்மையே!

(94. வயல்நாச்சியம்மன் திருக்கோயில், வேலங்குடி)

பாண்டவர்கள் வனவாசம் முடிந்து மறைந்து வாழ வேண்டியிருந்த காலத்தில், ஒரு மயானப் பகுதியை அடைந்து, அங்கு ஒரு காளி கோயிலைச் சார்ந்திருந்த வன்னி மரப் பொந்தில், தங்கள் படைக் கலங்களையும், அரச உடைகளையும் மறைத்து வைத்ததாகவும், கரந்துறை காலம் முடிந்த பின்னர் திரும்பி வந்து அவற்றை எடுத்துக் கொண்டதாகவும் வில்லிபுத்தூரார் பாடுகிறார்.[1]

சிராவயல் பகுதியிலுள்ள ஒரு கோயிலில் அம்பாள் சிலை ஒன்று திருட்டுப் போயிருக்கிறது. திடீரென நேர்ந்த அதிர்ச்சி ஒன்றில் செய்வதறியாது தடுமாறிய திருடர்கள், பின்னர் எடுத்துக் கொள்வோம் என்று (பாண்டவர்களைப் போன்று) நினைத்து, மரப்பொந்து ஒன்றில் அச்சிலையை மறைத்து வைத்துவிட்டு ஓடியிருக்கின்றனர். பின்னர் அவர்களுக்கு என்ன நேர்ந்ததோ? (அம்பிகை தண்டித்திருப்பாளோ?) போனவர்கள் திரும்பவே இல்லை. பாண்டவர்கள் 'பக்தி' யோடு மறைத்து வைத்தனர்; திருடியவர்களோ, திருட்டுப் 'புத்தி' யோடு மறைத்து வைத்தனர். முன்னவர்கள் சிறப்போடு வாழ்ந்தனர்; பின்னவர்கள் இறப்போடு மறைந்தனர்.

காலம் யாருக்கும் காத்திருப்பதில்லை. முயல் வேட்டைக்குச் சென்ற ஊரார் சிலர், தாம் விரட்டிச் சென்ற முயல் மரப்பொந்தினுள் நுழையவே, முயலுக்காக மரத்தையே வெட்டியிருக்கின்றனர். (மலாயாவில் ஜப்பானியர் ஆட்சிக் காலத்தில், ஜப்பானிய வீரர்கள், இளநீர் வேண்டுமானால் தென்னை மரத்தையே அடியோடு வெட்டி விடுவார்களாம்!) அதுவும் ஒருவழிக்கு நல்லதாகப் போயிற்று. இல்லாவிட்டால் அம்பாள் சிலை கிடைத்திருக்காதே!

கிடைத்த சிலையை வேலங்குடியில் வைத்துப் பெரியநாயகி என்று பெயரிட்டு, ஊரார் வழிபட்டு வரலாயினர். அதற்கு முன்பே, வேலங்குடிக் கண்மாய் அருகில் வயல்களிடையே கோயில் கொண்டிருந்த வயல்நாச்சியம்மன், அந்தப் பகுதியில் பிரபலமாக இருந்திருக்கிறாள். இதில் ஒரு விந்தை என்னவென்றால், பழையவளும், புதியவளும், உருவத்தில் ஒத்திருந்திருக்கின்றனர். அதன் காரணமா

கப் பெரியநாயகியை ஊர்நாச்சியம்மன் என்று அழைக்கத் தலைப் பட்டனர்; இருவருக்கும் உறவும் உண்டாகிவிட்டது.

பங்குனி உத்திரம் முடிந்த முதல் திங்கட்கிழமை, அருகிலுள்ள அழ காபுரியில் காப்புக் கட்டியதும், அதிலிருந்து எட்டாவது நாள், வேலங்குடியிலுள்ள ஊர்நாச்சியம்மனுக்குக் காப்புக் கட்டி, ஏழூர்ச் செவ்வாய் என்னும் பத்து நாள் திருவிழா தொடங்கும். திருவிழா வின் 2, 6, 9 ஆம் நாட்களில், அம்பாள் வயல்நாச்சியம்மன் (சகோ தரியின்) கோயிலுக்குச் செல்வதும், இரண்டாவது நாள் தேரில் செல்லும் அம்பாள், இரவு அங்கேயே தங்கி, மறுநாள் அபிஷேக ஆராதனைகள் முடிந்து ஊர்க் கோயிலுக்குத் திரும்புவதும், இரு கோயில்களுக்குமிடையில் உள்ள நெருக்கமான பிணைப்பைப் புலப் படுத்துகின்றன.[2]

* * *

அழகாபுரி, ஆத்தங்குடி, இராயவரம், கடியாபட்டி, கானாடுகாத் தான், கோட்டையூர், உ.சிறுவயல் (வைரவன் கோயில்), தேவ கோட்டை (பிள்ளையார்பட்டி), பள்ளத்தூர் ஆகிய ஊர்களின் பெரும்பாலும் வைரவன் கோயில், மாத்தூர்க் கோயில் பங்காளி கள்[3] குலதெய்வமாக வழிபடுவது, வேலங்குடி வயல்நாச்சி அம் மனைத்தான் என்றாலும், வேலங்குடியிலுள்ள விளக்கெண்ணெய்க் காளி, பதினெட்டாம்படிக் கறுப்பர், பெரியநாயகி, சிவன் கோயில் அருகிலுள்ள சொற்கேட்டான் விநாயகர் ஆகியோரையும் வழி படுகின்றனர்.[4] இவர்களுடன் அழகாபுரி, கானாடுகாத்தான், கோட் டையூர், நெடுங்குடி, பள்ளத்தூர், பாளையம்பட்டி நாட்டாரும் இக்கோயிலைக் குலதெய்வக் கோயிலாகக் கொண்டுள்ளனர்.

காரைக்குடி — பள்ளத்தூர் சாலையில், கோட்டையூரை அடுத்துள்ள வேலங்குடியைத் தாண்டியதும் காணப்பெறும் ஓர் ஓட்டுக்கூடத்தருகில் வலப்புறம் திரும்பி, (பள்ளத்தூரிலிருந்து செல்லும்போது, வேலங் குடி ஊருக்குள் செல்வதற்கு முன்னர் உள்ள ஓட்டுக்கூடத்தருகில் இடப்புறம் திரும்பி), மண்சாலையில் அரை கி.மீ சென்றால், வயல் களின் நடுவே வீற்றிருக்கும் வயல்நாச்சியம்மனின் கோயிலைக் காண லாம்.

* * *

குருக்கள் பூஜை செய்யும் இக்கோயிலிலும் உயிர்ப்பலி கொடுப்ப துண்டாம். கோயிலுக்கு முன்னால்தான் கிடாய் வெட்டப்பெறும். குருக்கள் கிடாயின்மீது தண்ணீர் ஊற்றி, அது சம்மதம் தெரிவிக் கும் (சிலிர்க்கும்) வரை நின்று, பின்னர் அங்கிருந்து சென்று விடு வார். பூசாரி மற்ற வேலையை முடித்து வைப்பார். (செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் மட்டுமே இங்கு பலி கொடுக்கப்பெறு கிறது.) இவ்வாறு பலி கொடுக்கும் கிடாயைச் சமைத்துப் பூசாரி கள் மட்டுமே சாப்பிடுவார்களாம். (அவர்களின் குடும்பத்தார்கூட அதில் பங்கு கேட்கக்கூடாது!) மீதமுள்ளவற்றைக் கிணற்றில் கொட்டிவிடுவார்களாம். கிடாய் வெட்டுவதைப் பெண்கள் பார்க் கத் தடை விதிக்கப்பெற்றுள்ளது.[5]

குருக்களிடம், ''நீங்களும் உயிர்ப்பலிக்கு உடன்படுகிறீர்களா'' என்று கேட்டபோது, ''சிறு தேவதைகளுக்குப் பலி கொடுப்பது

என்பது, தொன்று தொட்டு நிலவிவரும் ஒரு வழக்கம். அதை நிறுத்தினால், சில அசம்பாவிதங்கள் ஏற்படக்கூடும். அப்படி ஏதேனும் நேர்ந்தால் அதற்கு யார் பொறுப்பு ஏற்பது? சில கோயில்களில் கிடாய் வெட்டுவார்கள்; துளி இரத்தம்கூட வராது; இரத்தம் வரும் வரை பல கிடாய்களை வெட்டிக் கொண்டே இருப்பார்கள். சில நேரங்களில் எத்தனை குடம் தண்ணீர் ஊற்றினாலும், கிடாய் சிலிர்க்காமலே இருக்கும். இவற்றுக்கெல்லாம் என்ன சமாதானம் சொல்கிறீர்கள்? மக்களின் நம்பிக்கையை எப்படிக் குலைக்க முடியும்?'' என்று எதிர்க்கணைகள் தொடுத்தார். திருக்களர் வீரப்ப சுவாமிகள் உண்மையிலேயே மிகமிகப் பெரிய மகான்; அஹிம்ஸாவாதி; துணிச்சல்காரர்...! மனம் அடுக்கிக் கொண்டே போனது!

* * *



உன் தலை போகத்தான் போகிறது; படத்தில் கூடவா அது பதிந்திருக்கக் கூடாது?

நாங்கள் கோயிலுக்குச் சென்றிருந்தது ஒரு செவ்வாய்க்கிழமை. பிற்பகல் இரண்டு மணியிலிருந்து ஆடவரும், பெண்டிரும் கூட்டங்கூட்டமாக வரத் தொடங்கினர். ஆம், செவ்வாய்க்கிழமைகளில் துர்க்கையான இந்த வயல்நாச்சியம்மனுக்கு நடைபெறும் இராகு காலப் பூஜை, இப்பகுதியில் மிகப் பிரபலமானது! மூன்று மணிக்கு அபிஷேகம் செய்து, ஐந்து மணிக்குப் பூஜை நடைபெறுகிறது.

ஏராளமான எலுமிச்சைத் தீபங்கள் ஏற்றப்பெற்றன; மகளிர் மாலை வாங்கிச் சாத்தினர். மக்களுக்கு வாழ்வளிக்கும் மகராசி, மண மாலையை விரைவில் எடுத்துக் கொடுக்கிறாளாம்!

* * *

நகரத்தார் வீடுகளில் குழந்தை பிறந்தால், தாய் வீட்டிலிருந்து கண வர் வீட்டுக்குச் சென்றதும், உடனடியாக இங்கு வந்து குழந்தைக்கு முடியிறக்கி, இரு கிடாய் வெட்டிப், பெயர் கூப்பிட்டு வழிபாடு செய்த பின்னரே, அடுத்த வீட்டுக்குக்கூடப் போவார்களாம்!

சுவாமிகள் பெயருடன் மூதாதையர், பெரியவர்கள் பெயர்களை யும் எழுதி, அம்பாள்முன் வைக்கிறார்கள். அவள் தேர்ந்தெடுக்கும் பெயரைக் குழந்தைக்குச் சூட்டுகின்றனர். இந்த நகரத்தார் வீடு களில் பெரியநாயகி, பெரியண்ணன், முத்துக்கறுப்பன், பெரிய கறுப்பன் போன்ற பெயர்களை அதிகமாகக் காணலாமாம்.

நகரத்தார் வீடுகளில் நடைபெறும் திருமணத்திற்கு முன்னர் இங்கு அரிசி, தேங்காய், பழம் கொண்டு வந்து கொடுத்து, மாலை பெற்றுச் செல்வார்களாம். திருமணம் ஆனதும் இங்கு வந்து வழி பட்ட பின்னரே, மணமக்கள் வெளியூர் செல்வராம்.[6]

* * *

1993 ஜூனில் (ஸ்ரீமுக ஆனி 17) இக்கோயிலில் திருக்குட நீராட்டு நடைபெற்றிருக்கிறது. கோயில் திருப்பணிகளைப் பெரும் பாலும் நகரத்தார்களே செய்கின்றனர்.[7] குடமுழுக்கு நாளை ஒட்டி 21.06.94ல் வருஷாபிஷேகம் நடைபெற்றது. இனி ஒவ்வோராண் டும் இது தொடருமா?

மின்சாரக் கட்டணம், படித்தரம், சம்பளம் போன்றவற்றுக்கு நாட் டாரே பொறுப்பேற்றிருக்கின்றனர்.

காஞ்சி மடத்தின் இப்போதைய சங்கராச்சாரிய சுவாமிகள், 06.03.1977ல் இக்கோயிலுக்கு வருகை புரிந்து வழிபட்டுச் சென் றிருக்கிறார். நாயன்மார்களும், ஆழ்வார்களும் சென்ற — பாடிய கோயில்கள் புனிதக் கோயில்களாக — பாடல் பெற்ற தலங்களாக — மங்களாசாஸனம் செய்யப் பெற்ற திருப்பதிகளாகத் திகழ்கின்றன. நம் காலத்தில் சங்கராச்சாரிய சுவாமிகளின் திருப்பாதங்கள் படும் கோயில்கள், உண்மையிலேயே அத்தகைய புனிதக் கோயில்கள் தாம்! மனிதப்புனிதர்களின் ஆசிகள்தாமே மனித குலத்தை உய்விக் கின்றன!

அழகிய — வேலைப்பாடு மிகுந்த — கல் திருப்பணி செய்யப் பெற்ற கோயிலுக்கு வழிபடச் செல்வோரை, முத்தான மூன்று நிலை இராஜகோபுரம் முகமன் கூறி வரவேற்கிறது. கோயிலினுள் செல்லும் பக்தர்களை ஆட்கொள்ள, அருகிலேயே (வலப்புறம்) அமர்ந்திருக்கிறார் ஆட்கொண்ட விநாயகர். கருவறையில் துர்க்கா தேவியான அன்னை வயல்நாச்சி, பெரிய மூர்த்தமாகக் காட்சி தருகிறார். அன்னை இவள், புதுக்கோட்டையில் உள்ள புவனேஸ் வரி போன்று அமைந்து, வரதராக இருப்பதால், இவளுக்குப் புவனேஸ்வரி என்னும் பெயரும் உண்டாம்.[8]

அன்னைக்கு இலட்சார்ச்சனை, சங்காபிஷேகம் ஆகியவை ஒவ்வோராண்டும் குறிப்பிட்ட நாட்களில் நடைபெறாவிட்டாலும், அவ்வப்போது நேர்ந்து கொள்வோரால் செய்யப்பெறுகின்றன.

வாகன வசதிகள் அதிகமில்லாதிருந்த அந்தக் காலத்தில், நகரத்தார்கள் ஒற்றுமையுடன் சேர்ந்து வண்டி கட்டி வந்து வழிபட்டிருக்கின்றனர். இப்போது அவரவரும் தனித்தனியே வந்து வழிபட்டுச் செல்கின்றனர். நேர்ந்து கொண்டவர்கள், ஊரினுள் இருக்கும் கோயிலிலிருந்து உற்சவரை இங்கு கொண்டு வந்து வழிபாடு செய்வதுண்டாம். முன்பு, நேர்ந்து கொண்டவர்கள், ஊரினுள் உள்ள கறுப்பர் கோயிலில் தங்கியிருந்து, இங்கு வந்து வழிபட்டிருக்கிறார்கள். (இப்போது கோயிலருகில் உள்ள நகரத்தார் விடுதி அப்போது இல்லையோ?) இந்தக் கறுப்பர் கோயிலைப் பற்றிய சுவையான தகவல் ஒன்று கூறப்பெறுகிறது.

தேவகோட்டையில் உள்ள பிள்ளையார்பட்டிக் கோயிலார் வீடு ஒன்றில், ஆண் வாரிசு இல்லாதிருந்ததாம். அந்தக் குடும்பத் தலைவர், குதிரை வண்டியில் அங்கிருந்து பள்ளத்தூர் சென்ற போது, வேலங்குடி எல்லை வந்ததும், குதிரை மேலே ஓடாமல் நின்று விட்டது; திடீரெனக் 'கல் எரி, நெல் எரி' மழை பெய்ததாம். (ஏழு மேகங்களைப் பற்றிய விவரத்தை முன்பு அறிந்த போது,[9] அவை மண், நீர், பொன், பூ, மண், கல், தீ ஆகியவற்றைத்தான் பொழிவதாகக் கேள்விப்பட்டோம்.) பெரியவர் இறங்கி விசாரித்த போதுதான், அங்குள்ள சக்திமிக்க கறுப்பர் பற்றித் தெரிந்ததாம். ஆகையால் அவ்வழியே குதிரைவண்டி போகக்கூடாது என்று சொன்னார்களாம். (தங்களுக்கு உள்ள குதிரையில் மனிதர்கள் சவாரி செய்யக்கூடாது என்று, ஐயனாரும் கறுப்பரும் நினைப்பார்களோ?) அங்கேயே அவர் தங்கி 41 நாள் புறங்கை கட்டி ஒரு வேளை சாப்பிட்டு வீடு திரும்பினாராம்; அடுத்த ஆண்டே அந்தக் குடும்பத்தில் ஆண் வாரிசு உதயமாகி விட்டதாம்!

பின்னர் அந்த இடத்தில் மண்டபம், கொட்டகை கட்டப்பெற்றுப், பதினெட்டாம்படிக் கறுப்பர், விளக்கெண்ணெய்க் காளி படங்கள் சுவரில் வரையப் பெற்று, வழிபாடு நடைபெற்று வருகிறதாம்.[10]

* * *

கோயிலுக்கு வெளியே அம்பிகையின் சந்நிதிக்கு எதிரில் உள்ள உயரமான கல் மேடையில் மூன்று பலிபீடங்கள் உள்ளன. கோயிலின் இடப்புறம், மகிழ (தல) மரம் மேடை அமைப்புடன் காணப் பெறுகிறது. அருகில் உள்ள கல் மேடையில் (குறடு) உள்ள பீடம், பதினெட்டாம்படிக் கறுப்பராக வழிபடப் பெறுகிறது.

கோயிலின் வலப்புறம் பேச்சியம்மனுக்கு ஒரு தனிச் சந்நிதி உள்ளது. அதில் சுதை வேலைப்பாடான பேச்சியம்மனும், அவள் காலடியில் ஒரு குழந்தையும் உள்ளனர். அதனருகில் உள்ள கல்மேடையும், பீடமும் மற்றொரு பதினெட்டாம்படிக் கறுப்பருக்கு உரியவை.

* * *

கோயிலின் பின்புறம் உள்ள குளத்தின் ஒரு கரையில், உருக் குலைந்து போனதால், உத்தியோகம் இழந்த, அழகிய வேலைப்

பாடு நிறைந்த விநாயகர் சிலை ஒன்று, காற்று வாங்கிக் கொண்டு அமர்ந்திருக்கிறது! புத்தம் புதிதாகக் (எண்ணெய்க் காப்பையே அறிந் திருக்கமாட்டார் போலும்!) காணப்பெறும் இந்த விநாயகர் சிலை, ஏன் இப்படிச் சிதைந்து (சோர்ந்து) போய் இங்கு வந்து உட்கார்ந் திருக்கிறது?

* * *

செவ்வாய்க்கிழமைகளில் மட்டும் (இராகு கால பூஜை நடைபெறு வதால்) மாலையிலும், மற்ற நாட்களில் நண்பகல் 12 மணிக்கும் இக்கோயிலில் தீபாராதனை நடைபெறுகிறது. அன்னையை வழி பட்டு ஆனந்த வாழ்வு பெற, ஒருமுறை சென்று வாருங்களேன்!

பரவும் சொல்மாலை

பரங்கிரியின் மேவி,அருந் தவம்இழைத்து,
விறல்சேர்ந்து பாருள் ஓங்கித்,
திரங்குலவும் அவுணனையே வீட்டி,அவன்
சிரமிதித்த சிலம்பி னாளை,
வரங்குலவும் வேலவனார் மணக்கோலம்
கண்டிருந்த மகிழ்ச்சி யாளைக்,
கரங்குலவு சங்(கு)ஆழி தரித்துவளர்
துர்க்கைதனைக் கருத்துள் வைப்பாம்.

— திருப்பரங்கிரிப் புராணம்

குறிப்பு விளக்கம்:

— மேலுலகங்களில் உள்ள அடக்கமுடைய விண்ணவரின் தாயானவளே!
1. .....வன்னிப் பொதும்பர் வயின்வைத்த வயங்குசோதி
மின்னிற் திகழ்வெம் படையாவையு மீண்டுகொண்டார்' — மகா பாரதம்
2. வி. சுப்பிரமணியக் குருக்கள், வேலங்குடி
3. எல். திருஞானசம்பந்தம், உ.சிறுவயல்; வி. சுப்பிரமணியக் குருக்கள்
4. வி.எல். இராமநாதன், தேவகோட்டை
5. எல். திருஞானசம்பந்தம்
6. எல். திருஞானசம்பந்தம்
7. வி.எல். இராமநாதன்
8. கோட்டையூர் சோமசுந்தரேசுவரர் திருக்கோயில் திருக்குட நீராட்டு மலர் 1980
9. குருந்துடை ஐயனார் திருக்கோயில், ஆதனூர்
10. வி.எல். இராமநாதன்

உ

கோலக் குழகர் கொத்தங் கறுப்பர்

(95. கொத்தங் கறுப்பர் திருக்கோயில், கோட்டையூர்)

கோயில்களில் உயிர்வதைத் தடைச் சட்டத்தை அரசாங்கம் நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு முன்பே, சைவ சமய — சைவ சித்தாந்த இயக்கங்கள், ''ஆலயங்களில் ஆண்டவனுக்காக உயிர்களைப் பலியிடுவதை நிறுத்துங்கள்'' என்று தீவிரமாகப் பிரசாரம் செய்து வந்த நேரம்.

கிடாய்களை வெட்டி இரத்தத்தைக் குடிப்பதையும், உதிரத்தை ஆறாக ஓட விடுவதையுமே ஆதரித்து, உயிர்ப்பலி கொடுக்காவிட்டால் உபத்திரவங்கள் ஏற்படும் என்னும் வீண் மனப்பயத்தை ஏற்படுத்தி வந்தவர்களிடையே உதித்த ஓர் உத்தமர் — காணப் பெற்ற ஒரு நல் முத்து — தாம் சாமியாடியாக இருந்த கோயிலில் உயிர்வதையைத் தைரியமாக நிறுத்தினார்!

'பலி கொடுப்பதை நிறுத்தியதால் ஏதேனும்...?'

'எவ்வித அசம்பாவிதமோ, தீங்கோ, இங்கும் நிகழவில்லை; இக் கோயிலை வழிபடுவோருக்கும் ஏற்படவில்லை...' — ஆணித்தரமாக — திட்டவட்டமாகக் கூறுகிறார் சாமியாடி ஐயா! 'இந்தக் கோயிலில் பலி கொடுப்பதோ, மதுபானம் நிவேதனம் செய்வதோ, கிடையவே கிடையாது!' — குரலில்தான் எவ்வுளவு உறுதி தொனிக்கிறது.

தொன்றுதொட்டு நிலவி வரும் (குருட்டு) நம்பிக்கையை எப்படிக் குலைப்பது என்று கேட்கும் அந்தணர்களிடையே, நானே (எங்கள் குலதெய்வக் கோயிலில் என் சார்பில்) கோழி வாங்கிக் கொடுத்து வெட்டச் சொல்கிறேன் என்று கூறும் குருக்கள்களிடையே, ஓர் அப்பிராமணர் — வல்லம்பர் — சாமியாடி, இவ்வளவு உறுதியாகக் கூறுகிறார்; பலியிடுவதைத் துணிந்து நிறுத்தியிருக்கிறார்!

திருக்களர் வீரப்ப சுவாமிகள் வரிசையில் மற்றொரு மாணிக்கம்; சி.மு. சின்னையா அம்பலம் — கோட்டையூர்க் கொத்தங்கறுப்பர் கோயிலின் சாமியாடி.

* * *

ஆனால் ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதி என்னும் பாரபட்சம் மட்டும் இங்கு நிலவவே செய்கிறது!

பொதுவாகவே தமிழ் இந்துப் பெண்கள் இறைவனுக்கு மிகவும் பயந்தவர்கள்; அதிலும் குலதெய்வங்களிடம் மிகவும் அச்சங்கொண்டவர்கள். மாதவிலக்கு நேரிடக்கூடிய நேரம் என்று தெரிந்தால், நிச்சயம் கோயிலுக்குச் செல்லவேமாட்டார்கள். (புதிதாக முளைத்துள்ள சில ''சாமியார்கள்''தாம், எப்படிப்பட்ட நிலையிலும் பெண்கள் கோயிலுக்குச் செல்லலாம் என்று கூறி, இளம் பெண்களைக் குழப்பி வருகின்றனர்.) இத்தகைய தடைகளை எந்தக் கோயிலைப் பார்த்து மேற்கொள்கின்றனரோ, அந்தக் கோயிலிலேயே அண்மையில் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன; நீதி மன்றம் வரை செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஆகையால், வயதுக்கு வந்த பெண்கள் (வயோதிகம் வரை) கோயிலுக்குள் — கோயிலின் சில பகுதிக்குள் செல்லக்கூடாது என்னும் தடையை விதித்துள்ள (குலதெய்வக்) கோயில் நிர்வாகிகள், அன்பு கூர்ந்து தங்கள் முடிவை மாற்றிக் கொள்ளவேண்டும்!

இந்தக் கொத்தங்கருப்பர் கோயிலுக்குள் பெண்கள்(வயதுக் கட்டுப்பாடின்றி) யார் வேண்டுமானாலும் செல்லலாம்; ஆனால் வயதுக்கு வந்த பெண்கள் (முழுக்கு நிற்கும்வரை), கோயிலின் தென் கிழக்குப் பகுதியிலேயே நிற்க வேண்டும்; வலம் வரக்கூடாது என்னும் கட்டுப்பாடு இங்கு நிலவுகிறது. வலம் வரும்போது தீட்டாகி விடக்கூடிய அபாயம்(?) இருக்கிறதாம்! மலையாளத்தில் உள்ளது போன்ற முறையை இங்கும் பின்பற்றுகிறார்களாம்![1]

கோட்டையூரிலிருந்து காரைக்குடி செல்லும் பிரதான சாலையில், ஊரின் எல்லையில் இடப்புறம் (கிழக்கே) திரும்பிச் சுமார் அரை கி.மீ சென்று அடையக்கூடிய இடத்தில் அமைந்திருக்கும் கொத்தங் கருப்பரைக், கழனிவாசல், காரைக்குடி, பலவான்குடி ஆகிய ஊர்களின் வல்லம்பர்களுடன், இளையாற்றங்குடி (பெருமருதூருடையார்), இரணிக்கோயில், நேமங்கோயில், மாத்தூர் (மணலூர்) ஆகிய நகரக் கோயில்களைச் சார்ந்த ஆத்தங்குடி, கண்டனூர், கோட்டையூர், முத்துப்பட்டணம் நகரத்தார்களும் குலதெய்வமாகக் கொண்டுள்ளனர்.[2]

கொத்தம் என்பது எல்லை என்னும் பொருளைக் கொண்டிருப்பதால், 'ஊரின் எல்லையிலிருந்து ஊரைக் காக்கும் கருப்பர்' என்று பொருள் கொள்ளலாம். கொற்றங் கருப்பண சுவாமி கோயில் என்றும் இக்கோயிலைக் குறிப்பிடுகின்றனர்.[3] கொற்றம் என்னும் சொல்லுக்கு உரிய பல பொருள்களில் வெற்றி என்பதும் ஒன்றாகும். ஆகையால் இவரை 'வெற்றிவீரர் கருப்பர்', 'வெற்றியைத் தரும் கருப்பர்' என்றும் சொல்லலாம்.

* * *

இக்கோயிலின் சந்நிதிக்கு நேரே உள்ள ஊருணியும், சொற்கேட்டான் விநாயகர்[4] ஊருணியுமே, கோட்டையூர் மக்களுக்குக் குடிநீர் வழங்குகின்றன என்னும் குறிப்பைக் கோட்டையூர்க் குடமுழுக்கு விழா மலரில் கண்டபோது, 'ஒப்புரவினால் உலகம் வாழுமாறு விரும்பும் 'பேரறிவாளியின் செல்வம், ஊரார் நீருண்ணும் குளம், நீரால் நிறைந்தாற் போன்றது'[5] என்னும் வள்ளுவப் பெருந்தகை

யின் வாக்கு நினைவுக்கு வந்தது. சொற்கேட்டான் விநாயகர் கோயில் ஊருணி எப்போதுமே வற்றுவதில்லையாம். அது போன்று, வற்றாத ஊற்றாக இருந்து, வாரி வாரி வழங்கிக் கல்வித் தெய்வத்துக்குக் கனகாபிஷேகமே செய்த வள்ளல் பிறந்து வாழ்ந்த ஊரின் எல்லையில் (வேலங்குடியிலிருந்து வந்து) கால் வைத்தபோது, திருக்காளத்தி மலையைக் கண்ட திண்ணனார் பெற்ற பேரின் பத்தை[6] — இனம் புரியாத ஒரு களிப்பினை அடைந்து, இதயம் பூரித்தது! வள்ளலின் கடைசிச் சில ஆண்டுகளிலாவது, கல்லூரி வளாகத்தில் அவரைக் காணும் பாக்கியம் செய்த கண்களால், கறுப்பண்ண சுவாமியைத் தரிசிக்கச் சென்றேன்.

★ ★ ★

கற்றூண் மண்டபத்தின் நடுவே உள்ள (விமானம் இல்லாத) நாலு கால் மண்டபத்தில், சுற்றிக் கம்பி அடைத்து, நடுவில் சுயம்பு மூர்த்தமான (நடுகல் அமைப்பில்) அழகப்பெருமாள் (கொற்றங் கறுப்பர்) அழகுற அமைந்திருக்கிறார். மிகவும் வரதரான இவரை உள்ளன் போடு வழிபடுவோர், உடல் நலனும், உலக வளனும் பெற்றுப் பேரின்பம் எய்துகின்றனராம்.

புதிய நெல் கொண்டு வந்து, கோயிலருகிலேயே குத்தி, இடித்துக் கிடைக்கும் புதிய மாவினால் கொழுக்கட்டை பிடித்துக், கொதிக்கும் நீரில் வேக வைக்கும் பச்சைக் கொழுக்கட்டையே, இவருக்கு மிகவும் சிறப்பான நிவேதனம். கொதிக்கும் கொழுக்கட்டையின் ஆவியை, அழகப்பர் ஆவேசிக்கும் சாமியாடி நுகர்வது, கொத்தங் கறுப்பரே கொழுக்கட்டையை ஏற்றுக் கொண்டது போல் இருக்குமாம்! இது திங்கட்கிழமைகளில் மட்டுமே நடைபெறுகிறது.

மற்றும், ஆனி மாதத்தில் நடைபெறும் பிராமண போஜனம், தை மாதத்தில் நடைபெறும் மாஹேஸ்வர பூஜை போன்றவற்றை வல்லம்பர்களும், நகரத்தார்களும் இணைந்து நடத்துகின்றனர். இந்தப் பூஜைகளுக்கு நகரத்தார் காய்கறிகள் வழங்குவராம். பாடுவார் முத்தப்ப செட்டியார் இந்த அழகப்பரைப் பாடிப் பரவியிருக்கிறாராம். (சுவாமிகளுக்குச் சாத்தும் (நிருமாலியமான) பூமாலைகளைக் கூடப் பெற்று விடலாம் போலிருக்கிறது; அவர்களைப் பரவும் சொல் (பா)மாலைகளைப் பெறுவதுதான் குதிரைக் கொம்பாக இருக்கிறது!)

இவருக்குத் திங்கள், வெள்ளிக்கிழமைகளில் மட்டுமே காலை ஒன்பது மணியிலிருந்து பனிரெண்டு மணிக்குள் பூசை நடைபெறுகிறது. வழிபாடு நடைபெறும் நாட்களில், நிறையப் பால் அபிஷேகமாவது உண்டாம். பின்னர் அலங்காரம் செய்து, தூப தீபம் காட்டுவதோடு வழிபாடு நிறைவுறும். மூலவருக்கு வெள்ளியினாலான அங்கி, நாகாபரணம், திருவாசி போன்றவை உள்ளன. இவற்றில் நகரத்தார் செய்து கொடுத்தவையும் நிறைய உள்ளனவாம்.


★ ★ ★

மூலவரின் பின்னால் காணப்பெறும் ஒரு வட்ட வடிவம், அழகப்பரின் சக்தியாக விளங்கும் முப்பிராட்டியைக் குறிக்கிறதாம். இதற்கு வெள்ளிக் கவசம் உள்ளது. பின்னால் உள்ள இரு தூண்களில்

கருப்பரின் வலப்புறம் சந்நியாசியும், இடப்புறம் கரகக்காரியும் உள்ளனர். இந்த மண்டபத்தின் கீழே நிறையத் தடிகளும், அரிவாள் களும் காணப் பெறுகின்றன.

திருச்சுற்றுச் சுவருக்குள் (இந்தக் கல் மண்டபத்துக்கு வெளியே) முனியன் மேடை, வேடன், முன்னோடி, நொண்டி ஆகியோருக் கான சிறு கற்பீடங்கள் உள்ளன.

திருச்சுற்றுச் சுவரை ஒட்டி ஒரு மூலையில் உள்ள குருந்துதான், இங்கு தலமரமாக விளங்குகிறது. மிகப் பழைமையான இந்த மரம் முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் முழுமையாகப் பட்டுப் போய்ப்,



கொற்றச் சேவகர் கொத்தங் கருப்பர்

பின்னர் சாமியாடியின்மீது அழகப்பர் ஆவேசித்து, அதனைத் தழைக்கச் செய்தனராம். இங்குதான் சாமியாடி அருள்வாக்குக் கூறுகிறார். சுவாமி ஆவேசிக்கும்போது, மற்ற கோயில்களைப் போன்று, ஆடிப்பாடி ஆர்ப்பாட்டம் செய்யாமல், சுவாமியாடி அமைதியாகவே காணப்பெறுவார் என்றும், 'அடே' என்றுகூடச், சுவாமி பக்தர்களை விளிக்கமாட்டார் என்றும் சாமியாடி கூறு கிறார்.

இளையாற்றங்குடிப் பங்காளிகள் ஒவ்வோராண்டும் ஆடி மாதம் கடைசி வெள்ளிக்கிழமை, இங்கு சேர்ந்து வந்து அபிஷேக ஆரா தனைகள் நடத்தி அன்னதானமும் செய்கின்றனர்ராம். பங்காளிகள் அனைவரும் நன்கொடை எழுதி இச்சிறப்பு வழிபாட்டினைச் செய் கின்றனராம். நேர்ந்து கொள்வோர் இங்கு பதினொரு நாள் தங்கித் தீர்த்தமாடி வழிபாடு செய்வது உண்டாம்.[7]

நகரத்தார் குழந்தைகளுக்கு இங்கு முடி இறக்குவதும், கரும்புத் தொட்டில் கட்டுவதும் உண்டு என்று கூறப்பெறுகிறது. குழந்தை களுக்குக் கறுப்பன் செட்டி, அழகம்மை, கறுப்பாயி என்று பெயரிடு கின்றனராம்.

* * *

'நம்பினோர் கெடுவ தில்லை, நான்கு மறைத் தீர்ப்பு' என்று பாரதி யார் பாடுவார். அதுபோன்று அழகப்பெருமாளை — கொத்தங் கறுப்பரை நம்பி வழிபட்டுக், கறுப்பரின் கவசத் திருநீற்றை அணிந்து வந்தால், 'கலைமகளும் திருமகளும் வீட்டில் களிநடம் புரிவர்' என்று சாமியாடி கூறுவதில் உண்மை இருக்கவே செய்கிறது என் கின்றனர், இக்கோயிலுக்கு அடிமைப்பட்ட அன்பர்கள்!

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

1. அட்ட மூர்த்தி அழகன், இன்னமு
 தாய ஆனந்த வெள்ளத்தான்,
 சிட்டன் மெய்ச்சிவ லோக நாயகன்,
 தென்பெ ருந்துறைச் சேவகன்,
 மட்டு வார்குழல் மங்கை யாளைஓர்
 பாகம் வைத்த அழகன்தன்
 வட்ட மாமலர்ச் சேவ டிக்கண்நம்
 சென்னி மன்னி மலருமே.

திருச்சிற்றம்பலம்

— 8 ஆம் திருமுறை

2. வந்திருக்கு மலர்ப்பொழில், வளமிருக்கும் தடக்கரை
 மேல்மந்தி ரத்தின்
 நந்திருக்கும் சுதந்தரக்கை நாயகமால் கலைநலமா
 நாட்டுந் தேவன்

தந்திருக்கும் நடுவுடையார் தனமிருக்கும் கொடியனையார்
சரிக்கு மாடம்,
தந்திருக்கும் கோட்டையூர்ச் சாமிகொற்றங் கறுப்பணன்பொற்
சரணம் சார்பே.

— வித்துவான் சுப்ரமண்ய ஐயர்,
நவமணிப் பிரபந்தம்

குறிப்பு விளக்கம்:

— அழகும் இளமையும் உடையவர்

1. முக்கியமான சொந்த வேலைகள் பல இருந்துங் கூடக் கோயிலுக்கு அழைத்துச் சென்று, இக்கோயில் பற்றிய பயனுள்ள பல தகவல்களைக் கூறிய பெரியவர்: சாமியாடி சி.மு. சின்னையா அம்பலம், கோட்டையூர்
2. எம்.ஆர். கறுப்பன் செட்டி, கோட்டையூர்
3. கோட்டையூர் சோமசுந்தரேசுவரர் திருக்கோயில் திருக்குட நீராட்டு மலர், 1980
4. பக்தர்கள் கூறுபவற்றை 'ம்...ம்' என்று கேட்பதால், சொற்கேட்டான் விநாயகர் என்று பெயர் பெற்றிருக்கலாம் — கோட்டையூர்த் திருக்குட நீராட்டு மலர்
5. 'ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு' — திருக்குறள்
6. '....களிவரு மகிழ்ச்சி பொங்கக் காளத்தி
கண்டு கொண்டு....' — பெரிய புராணம்
7. எம்.ஆர். கறுப்பன் செட்டி.

உ

பொய்யிருள் கடியும் பொய்சொலா மெய்யர்

(96. பொய்சொல்லா மெய்ய ஐயனார் திருக்கோயில், காரைக்குடி)

திருக்கயிலையில் சிவபெருமானிடம் ஆகமங்களின் திறங்களை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த உமாதேவியிடம், தாம் விரும் பும் உண்மையாவது பூசனையே என்று அண்ணல் கூறியருள, அந்தப் பூசனையைச் செய்யப் பேராவல் கொண்டார் பெண்ணின் நல்லா ளாகிய பெருந்தவக் கொழுந்து. அண்ணல் கூறியபடி, இலிங்க வடிவில் அவரைக் காஞ்சியில் வழிபட்டு வந்த அன்னை, பரம் பொருளின் திருவிளையாடலால் கம்பை ஆற்றில் வெள்ளம் பெரு கியபோது, தாம் வழிபடும் சிவலிங்கத்தை வெள்ளத்தின் வேகத் திலிருந்து காப்பாற்ற விழைந்து, அதைக் கட்டித் தழுவிக் கொள்ள, அதைக் கண்டு மகிழ்ந்த சிவபெருமான், தம் தேவியின் கொங்கை களுக்கும், கைகளுக்கும் மெத்தென்று குழையும்படி தம் வலிமை யான திருமேனியைக் குழைந்து காட்டினாராம்![1]

இறைவன் காட்டிக் கொடுத்த வழியில், தன் முன் நீதி கேட்பவரின் கூற்றில் உண்மை இருக்குமானால், கட்டிப் பிடிக்க முடியாத அளவு பெருத்த ஒரு மரம், குழைந்து கொடுத்து, உலகுக்கு உண்மையை உணர்த்துமாம்! என்ன புதிர் போடுகிறான் இவன் என்று நினைக் கிறீர்களா? காரைக்குடிப் பொய்சொல்லா மெய்யர் கோயிலுக்கு வாருங்கள், புதிருக்கு விடை காண!

காரைக்குடியிலிருந்து தேரோடும் வீதி வழியாகக், காட்டம்மன் கோயில் செல்லும் வழியில், இரண்டு கி.மீ தொலைவில் உள்ள சங்கராபுரத்தில், ஆராவயல், காரைக்குடி, தாணிச்சாவூரணி ஆகிய ஊர்களின் நகரத்தார்கள் குலதெய்வமாகக் கொண்டாடும் பொய் சொல்லா மெய்ய ஐயனார், கோயில் கொண்டிருக்கிறார். அங்கு தான் தழுவக் குழையும் நீதி மரம் நம் வருகைக்காகக் காத்திருக் கிறது.

பெரியதொரு குளத்தை ஒட்டி அமைந்துள்ள கோயிலின் மூன்று நிலை இராஜகோபுர நுழைவாயிலிலிருந்து பார்த்தால், கோயிலை மறைத்துக் கொண்டு பெரியதோர் இலுப்பை மரம்[2] காணப் பெறும். அதுதான் நீதி வழங்கும் மரம்.

காரைக்குடிச் செட்டியார் ஒருவர் வெள்ளிக்கிழமைகளில், இம் மரத்தடியில் இருந்து சுவாமி ஆவேசிக்கப்பெற்று அருள்வாக்குக் கூறுவாராம். அப்போது அநீதி இழைக்கப்பெற்றோர் யாரேனும், அவரிடம் முறையிட்டால், அந்த மரத்தைக் கட்டிப் பிடிக்குமாறு கூறுவாராம், சுவாமி ஆவேசிக்கப் பெற்ற செட்டியார். கட்டிப் பிடிக்க முடியாத அளவு பெருத்த அந்த மரம், முறையிட்டவரின் பக்கம் நியாயம் இருக்குமானால், அம்மை தழுவக், குழைந்து கொடுத்த அண்ணல் போன்று, அவர் கட்டிப் பிடிக்கும் வகையில் குழைந்து (சுருங்கிக்) கொடுக்குமாம்![3] நீதி கோரி யாரேனும் இங்கு வந்து இந்த மரத்தடியில் படிகட்டி (காணிக்கை வைத்து)த் தமக்கு நீதி வழங்குமாறு முறையிட்டால், நிச்சயம் நியாயம் நிலை நாட்டப் பெறும் என்பது, கோயில்காரர்கள் கூறும் வேறு வகையான நீதி வழங்கும் முறை.[4] இரண்டும் ஒன்றுக்கொன்று மிகவும் மாறுபட்ட கூற்றுகளாக இருப்பினும், இம்மரம் நிச்சயம் நீதி வழங்குகிறது என்பதில் ஐயமில்லை. இன்றளவும் நீதி வழங்கும் ஆற்றலைக் கொண்டிருக்கும் இம்மரமே, இக்கோயிலின் தலமரமாகவும், கொடித் தம்பமாகவும் (கொடி மரம் — த்வஜஸ்தம்பம்) இருந்து வருகிறது.[5] இது, தல (கோயில்) மரங்களே கொடி மரங்களாக மாறியிருக் கின்றன என்னும் கூற்றை[6] உறுதிப்படுத்துகிறது.

* * *

இக்கோயிலில் காணப்பெறும் தனித்தன்மை, இங்குள்ள ஒவ்வொரு பொருளுமே, ஒரு கதை சொல்லும் போலும்!

சகடை நிறுத்தும் கூடம், நுழைவாயில் வளைவு ஆகியவற்றைக் கடந்து உள்ளே சென்றால் இருபுறமும் துவார பூதங்களைக் கொண்ட மூன்றுநிலை இராஜகோபுரம் காணப்பெறுகிறது. கோபுரத்தில் நம் இடப்புறம் அமைந்துள்ள விடையேறிய பெருமானும், வலப் புறமுள்ள அறிதுயில் கொள்ளும் பெருமாளும், ஐயனாரின் பிறப்பை நமக்குக் குறிப்பால் உணர்த்திவிடுகின்றனர்.

அடுத்து இராஜகோபுரத்தின் இருபுறமுமுள்ள சேமங்குதிரைகளில் ஒன்று, தனக்கென ஒரு தனிக் கதையைக் கொண்டிருக்கிறது. இது மாதிரிக் கதைகளை(ச் சிறிது வேறுபாடுகளுடன்) வேறு சில கோயில்களிலும் கேட்டிருக்கிறோம்.

மிளகு வியாபாரி ஒருவர், வழக்கமாகக் காரைக்குடிச் சந்தைக்கு வியாபாரத்துக்காகச் செல்பவர், ஒரு முறை, அதில் என்ன இருக் கிறது என்று கேட்ட அர்ச்சகரிடம், பொய்யாக உளுந்து என்று சொல்லச், சந்தையில் பொதியைப் பிரித்துப் பார்க்கும்போது, மிளகு உளுந்தாக மாறியிருந்த விந்தையைக் கண்டு பதறிப் போய், இங்கு ஓடோடி வந்து ஐயனாரிடம் மன்னிப்புக் கோரினாராம். தாம் கூறிய பொய்க்குப் பரிகாரமாக, ஒரு சேமங்குதிரையை அவர் கட்டிக் கொடுத்தாராம். அவருடைய சந்ததியினர் இன்றளவும் இங்கு வந்து வழிபட்டுச் செல்கின்றனர் என்று அர்ச்சகர் கூறுகிறார்.

* * *

ஐயனார் சந்நிதியில் கொம்பு முளைத்த(து போன்ற) சில இளநீர்கள் கட்டித் தொங்குகின்றன. இது என்ன புது வகை அலங்காரமோ

என்று வியப்படைகிறோம். ('மிகப் பெரிய' செல்வந்தரான ஒருவர், தம் வீட்டுத் திருமணத்தின்போது, வீதியில் போடப்பெற்றிருந்த காவணத்தில் அலங்கார விளக்குகள் தொங்குவது போன்று, ஏழைகளுக்கு எட்டாத (கைக்கு எட்டாத உயரத்தில்தான் கட்டித் தொங்கின.) உயர் ரக ஆப்பிள், மாம்பழம், திராட்சை போன்றவற்றைக் குலைகுலையாகக் கட்டி அலங்காரம் செய்திருந்தாராம்! அத்தகைய கொடுமை போன்று இது ஒரு வகைப் புதுமையான அலங்காரமோ எனப் பாழும் மனம் எண்ணியபோது), அந்த இளநீர் தன்னுடைய சுயசரிதையைச் சொல்லி, உண்மையை உணர்த்துகிறது.

முன்பு இங்கு ஈழத்துச் (உண்மையான) சாமியார் ஒருவர் இருந்தாராம். அவர் நகரத்தார் பெண்களிடம் பணம் சேர்த்து, அந்தப் பணத்தைக் கொண்டு, நாம் முதலில் பார்த்த குளத்தைச் சுற்றித் தென்னங்கன்றுகளைப் பயிர் செய்தாராம். 'தாள் உண்ட நீரைத் தலையாலே' தரும் தென்னை மரங்கள், பலன் தரத் தொடங்கிய போது, சில இளநீர்களில் (காண்டா மிருகத்தின்) கொம்பு போன்றதொரு வளர்ச்சி காணப் பெற்றதாம். அந்த இளநீர்களை அப்படியே சந்நிதியில் கட்டி வைத்திருக்கின்றனர். அவை இன்னமும், ஈழத்துடன் உள்ள இனிய தொடர்பை நினைவுபடுத்தி அங்கு தொங்கிக் கொண்டிருக்கின்றன![8]

* * *


புராதனமான, பழைமையடைந்துவிட்ட (திருக்குட நீராட்டு நடைபெற்று ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள் ஆகியிருக்கலாம் என்று கூறப்பெறுகிறது.) கல் திருப்பணியான அழகிய கோயிலில், பரிவார மூர்த்தங்களுக்குப் பஞ்சமில்லை. அது போன்று திருப்பணிகள் — கைங்கரியங்கள் செய்த செட்டியார்களின் சிலைகளும் நிறைய உள்ளன. நகரத்தார்கள் இக்கோயிலுக்குச் செய்துள்ள திருப்பணிகளைச் சுருக்கமாகத் தெரிந்து கொள்வோமே?

காரைக்குடி நகரத்தார்கள் பெரிய கறுப்பர், வைரவர் சந்நிதிகளின் திருப்பணிகளைச் செய்துள்ளனர்; தாணிச்சாவூரணி நகரத்தார்கள், சின்னக் கறுப்பர் சந்நிதியை அமைத்திருக்கின்றனர். ஐயனார், பூரணை, புஷ்கலை மற்றும் ஏராளமான மூர்த்தங்களுக்குத் தனிப்பட்ட நகரத்தார்கள் நிறைய வெள்ளி அங்கிகள் செய்து கொடுத்திருக்கின்றனர். மற்றும் தங்கத் தலைப்பாகை, இரத்தினக் கிரீடம் ஆகியவற்றையும் நகரத்தார்கள் செய்திருக்கிறார்கள். காரைக்குடி நகரத்தார்கள் பசுமடம் வைத்து நாள்தோறும் அபிஷேகத்திற்குப் பால் கொடுக்கின்றனர்; ஆராவயல் நகரத்தார் நந்தவனம் வைத்திருக்கிறார்கள். காரைக்குடி நகரத்தார் ஒருவரின் தீவிர முயற்சியாலேயே கோயில் இந்த அளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளது என்று கூறும் வேளார், பொதுவாக இக்கோயிலுக்கு நகரத்தார்கள் செய்துள்ள சேவை அளப்பரிது என்று கூறி மனமாரப் பாராட்டுகிறார்!

செட்டியார்களுக்கு வைக்கப் பெற்றுள்ள நினைவுச் சிலைகளில்,[8] ஆச்சி ஒருவரின் சிலையும் உள்ளிட்டிருக்கிறது. இவற்றில் சில வற்றுக்கே பெயர்கள் தெரிகின்றன. அடையாளம் தெரியாமல் அநேகச் (செட்டியார்) சிலைகள் உள்ளன. அவற்றை அடையாளம்

கண்டு, அவர்கள் முயன்று செய்த திருப்பணிகளை எழுத்து வடிவில் வைத்துக் கொள்வது, எதிர்காலத்துக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

* * *



'கறையணி மூக்குடைப் பிள்ளை'

அருமையான திருப்பணி செய்யப் பெற்றுள்ள கருவறைச் சுவரில் காணப்பெறும் கருடாழ்வார் சித்திரம் நம் கவனத்தை ஈர்க்கிறது. காசிபருக்கு விநதையிடம் பிறந்தவன் இந்தக் கருடன். தாயின் அடிமைத்தனத்தை அகற்றத் தேவலோகம் சென்று, அமுத கலசத்தைக் கொணர்ந்தவன். இவனது வலிமை கண்டு, திருமால் கேட்

டுக் கொண்டதற்கு இணங்கத், திருமாலின் வாகனமும், கொடியும் ஆனவன். திருமாலைப் பாடும்போது, 'கருளக்கொடி ஒன்று உடையீர்',[9] என்றும், 'கெருட வாகனனும்'[10] என்றும் ஆழ்வார்கள் கூறுவர். கருடாழ்வாரைப் பெரிய திருவடி, புள்ளரசு, சுகபதி, நாகாரி என்றெல்லாம் கூறுவர்.[11]

கருவறையில் தேவியர் புடைசூழ அமர்ந்திருக்கும் பொய் சொல்லா மெய்யர், தம் அருகிலேயே (சொர்க்க) விநாயகரை (சொர்க்கத்தைத் தேடி வேறு எங்கும் போக வேண்டாம்!) அமர்த்திக் கொண்டிருக்கிறார். இந்த விநாயகர்தாம் எத்தனை வகைகளில் குலதெய்வக் கோயில்களின் கருவறைகளில் ஊடுருவி இருக்கிறார் பார்த்தீர்களா? இவருக்கான வெள்ளி அங்கி மட்டும் வேளார்கள் செய்ததாம்.

மூலவர் பொய்சொல்லா மெய்யர், மற்றவர்களையும் பொய்சொல்ல அனுமதிக்க மாட்டார். அதனால்தான் தம் சந்நிதானத்தின் எதிரிலேயே நீதி உரைக்கும் மரத்தை நிற்க வைத்திருக்கிறார். இவர் இப்போது இருக்கும் இடம் (கருவறை), புதிய குடியிருப்புத்தான் என்று கருதப்பெறுகிறது.

கருவறையின் முன்னுள்ள பதினாறுகால் மண்டபம் இருக்கும் இடத்தில்தான்; முதலில் இவர் குடிகொண்டிருந்தார் என்றும், மிக நீண்ட காலத்திற்கு முன்னரே இப்போதைய இடத்திற்கு மாறியிருக்க வேண்டும் என்றும் கூறுகின்றனர். யார் இந்த மாற்றத்தைச் செய்தது என்பது ஒருவருக்கும் தெரியவில்லை.

அர்த்த மண்டபத்தில் விநாயகருக்கு அருகில் உற்சவர்களுக்கான இடந்தான் இருக்கிறதே தவிர, உற்சவர்களைக் காணமுடியாது. இடையில் ஏற்பட்ட ஓர் அசம்பாவிதத்தினால், வேளார்களின் கோயில் வீட்டில் நகைகளுடன் பாதுகாப்பாக அவற்றை வைத்திருக்கின்றனர்.

ஆமாம், அது என்ன உற்சவத் திருமேனிகளைப் பார்த்தால், ஐயனார், பூரணை, புஷ்கலை மாதிரித் தெரியவில்லையே? இதுவரை ஒரு கோயிலிலும் இத்தகைய உற்சவரை நாம் பார்க்கவே இல்லையே? அது மட்டுமா? சிவராத்திரிக்கு அடுத்த நாள் உற்சவருக்கு அலங்காரம் செய்து மாலையில் சுவாமி பவனி வரும்போது பார்த்தீர்களானால், ஐயனாரின் கையில் அழகிய கிளி ஒன்றும் அமர்ந்திருக்கக் காண்பீர்கள். (மதுரையிலிருந்து பறந்து இங்கு வந்து விட்டதோ?)

★ ★ ★

இந்தக் கோயிலில் பரிவார தெய்வங்களுக்குப் பஞ்சமில்லை என்று முதலில் சொன்னோம். பெரிய கறுப்பர், சின்னக்கறுப்பர், (ஆராவயல், தாணிச்சாவூரணி நகரத்தார்களின் குலதெய்வம்), வீரபத்திரர், வீரமாகாளி, இராக்காச்சி, பேச்சியம்மன், அமரர் வேடப்பன் சேர்வை, பட்டவர், சங்கிலிக் கறுப்பர், வீரப்பசாமி, மாவடிக்காளி, மாவடிக் கறுப்பர், தொண்டி முனி, நொண்டிக் கறுப்பர், காத்தாயி, இருளாடி, உளிவீரன், சோனையன், ஆஞ்சநேயர், குலாலப் பிரமரிஷி, கற்பக விநாயகர், பத்ரகாளி, சடாமுனி, மலையாளக் கறுப்பர்....

★ ★ ★

முன்பு இக்கோயிலில் நிறைய உயிர்ப்பலி கொடுக்கப் பெற்றதாம். இப்போது (இராஜாஜி அமைச்சரவை அமைத்த காலத்திலிருந்து பலி கொடுப்பது நிறுத்தப்பெற்று விட்டதாம்.) கொல்லங்குடி வெட்டுடைய ஐயனார் கோயிலைப் போன்று, கிடாய்களைக் கொண்டு வந்து இங்கு ஒப்படைத்து விடுகிறார்களாம். பின்னர் அவற்றை ஏலம் விட்டு அந்த ஏலப் பணத்தைக் கோயில் நிதியில் சேர்த்துக் கொள்கிறார்கள்.

* * *

இந்து அறநிலையத் துறையின் நிர்வாகத்தில் உள்ள இக்கோயில், காலை பதினொரு மணி முதல் நான்கு மணி வரை திறந்திருக்கும். இதற்கு முன்னரோ, பின்னரோ வழிபடச் செல்வோர் செஞ்சையில் உள்ள வேளார்கள் தெருவிலிருந்து அர்ச்சகரை அழைத்து வரவேண்டும்.

இரு நாட்களுக்குச் சிறப்பாகக் கொண்டாடப்பெறும் சிவராத்திரியின்போது நகரத்தார்கள் பேரளவில் வந்து வழிபட்டுச் செல்கின்றனர்; ஆறு காலப் பூசைகளில் சிலவற்றை நகரத்தார்களே செய்கின்றனராம். இரண்டாவது நாள் காவடி எடுத்தல், நகரத்தார் வீட்டுப் பிள்ளைகளுக்கு முடி இறக்குதல், தொட்டில் கட்டுதல் ஆகியவை நடைபெறுகின்றன. திருமண அழைப்பிதழை ஐயனாரிடம் வைத்து ஆசி பெற்றுச் செல்வதையும் நகரத்தார்கள் வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். குளத்தைச் சுற்றி நகரத்தார்களின் மடங்களும் அமைந்திருக்கின்றன. சிவராத்திரியின்போது அங்கு தங்கியிருந்து வழிபடுவர் போலும்.

பல ஆண்டுகளுக்கு முன்னர் இலட்சார்ச்சனை நடைபெற்றுள்ள இக்கோயிலில், இப்போது ஐயப்ப பக்தர்கள் வந்து மாலை போட்டுக் கொள்வதும், சபரி யாத்திரை தொடங்குமுன்னர் இங்கு வந்து அன்னதானம் செய்து வழிபட்டுச் செல்வதும் வழக்கமாக உள்ளன.

* * *

இந்தக் கோயிலுக்கு இவ்வளவு சிறப்புகள் உள்ளன; நகரத்தார்கள் நிறையத் திருப்பணிகள் — சேவைகள் செய்துள்ளனர். ஆனால், (நகரத்தார்கள் செய்து வைத்த வெள்ளி, சுவர்ண அங்கிகள், நகைகளின் விவரங்களைக் கொடுத்து) வேளார்கள் மனமாரப் பாராட்டும் திருப்பணிகளைச் செய்துள்ள நகரத்தார்களின் வாரிசுதாரர் யாருமே, எந்தத் தகவலும் கொடுக்க முன்வரவில்லையே, ஏன்? அதுதான் நகரத்தார்களின் தனித்தன்மையோ?

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

1. உய்யும் வகையால் உணர்வினால் ஏத்துமின்,
மெய்யன், அரநெறி மேலுண்டு, திண்ணெனப்
பொய்யொன்றும் இன்றிப் புறம்பொலி வார்நடு,
ஐயனும் அங்கே அமர்ந்துநின் றான்அன்றே.

திருச்சிற்றம்பலம்

— 10ஆம் திருமுறை

2. பொய்யுற்ற நினைவு போய்அகல,
மெய்யுற்ற நெஞ்சம் வந்தருள,
அருள்பெற்ற நெஞ்சம் பொருள்கிட்ட,
பொருள்பெற்ற வாழ்வில் நற்பெயர்கிட்ட,
நோயுற்ற உடலும்நற் சீர்கிட்ட,
நொய்யுற்ற உள்ளம் மகிழ்வூட்ட,
அய்யனாம் மெய்யன் அவன்தன்
பொற்பாதம் எந்தன் அடைக்கலமே.

— கறு. இலட்சுமிநாராயணன்

குறிப்பு விளக்கம்:

— பொய்மையாகிய அறியாமையைத் தொலைக்கும்

1. 'மலைக்கு லக்கொடி பரிவுறு பயத்தால்,
மாவின் மேவிய தேவர்நா யகரை
முலைக்கு வட்டொடு வளைக்கையால் நெருக்கி,
முறுகு காதலால் இறுகிடத் தழுவச்,
சிலைத்த னித்திரு நுதல்திரு முலைக்கும்,
செந்த ளிர்க்கரங் களுக்குமெத் தெனவே
கொலைக்க ளிற்றுரி புனைந்ததம் மேனி
குழைந்து காட்டினார் விழைந்தகொள் கையினார்'—பெரியபுராணம்
2. இதனை மகிழமரம் என்கிறார், காரைக்குடி மு.மெ.மு. முத்தையா செட்டியார்
3. மு.மெ.மு. முத்தையா செட்டியார்
4. கு.மெ.உ. மெய்யப்ப வேளார், காரைக்குடி
5. கோயிலைப் பற்றிய இது போன்ற பல தகவல்களைக் கூறியதோடு, பழைய படங்கள், நகைகளின் விவரம் ஆகியவற்றையும் அஞ்சலில் அனுப்பிப் பேருதவி செய்தவர்,' இக்கோயிலைச் சேர்ந்த கு.மெ.உ. மெய்யப்ப வேளார். இவரைப் போன்று தாமாகவே முன்வந்து, கைம்மாறு கருதாது அரிய பல உதவிகளைச் செய்த — தகவல்களை வழங்கிய நகரத்தார் பெருமக்கள் சிலருக்கும், அர்ச்சகர் சிலருக்கும், எளியேனின் மனப்பூர்வமான நன்றி உரியது.
6. ஆலயங்களும் ஆகமங்களும் — நஜன்
7. மு.மெ.மு. முத்தையா செட்டியார்
8. இதுபோன்ற சிலைகளை 'உருக்கா' என்கின்றனர்
9. திருமங்கையாழ்வார்
10. தொண்டரடிப் பொடியாழ்வார்
11. அபிதான சிந்தாமணி

உ

சீரார் மேனியனே, ஸ்ரீநிவாசப் பெருமாளே!

(97. ஸ்ரீநிவாசப் பெருமாள் திருக்கோயில், அரியக்குடி)

நிலவுலகில் சிவனே பரம்பொருள் என்பதை மறந்து, பல்வேறு தெய்வங்களையும் பரம்பொருளாகக் கொண்டு வழிபடும் அவல நிலையை அண்ணலிடம் எடுத்துரைக்கத், திருமாலும், நான்முகனும், ஏனைய தேவர்களும் கயிலைக்குச் சென்றனர். 'பெரிய நிலவுலகில் உள்ள அனைவரும் அஞ்ஞானத் தொடர்பால், நீங்களே பரம் பொருள் என்பதை உணரவில்லை;[1] என்னையும், பிரமனையும் கூடப் பரம்பொருளாக மதிப்பவர்களும் உளர்' என்று நிலவுலக நிலையைத் திருமால் விளக்கியபோது, 'உலகில் உள்ள உயிர்கள் அனைத்தையும் காப்பவன் நீ. அதனால்தான் அந்த உயிர்களிடத்துத் தீவினை நீங்கும்படி வேண்டிக் கொண்டாய்'[2] என்று திருமாலைப் பாராட்டிய சிவபரம்பொருள், மேலும், 'வியாசன் என்னும் ஞான மிகுந்த முனிவனாகத் தோன்றி வாழ்ந்து[3]....(மக்கள்தம்) மனத்தின் அஞ்ஞான இருளை நீ அகற்றுவாயாக!' என்றும் அருளினார்.

இருப்பினும், உலகில் நிலவும் பல சமயங்களில், உயர்வற உயர்ந்து விளங்குவது வைணவமே என்று கூறுவர், அச்சமயத்தைச் சார்ந்தோர்.

சைவர்களாகப் பிறந்தும், இத்தகைய ஒரு மயக்கத்தில், பெருமாளையே தங்கள் குலதெய்வமாக வழிபடுவோரும் இருக்கவே செய்கின்றனர். அவ்வாறு பெருமாளை வழிபடும் அரியக்குடி (வைரவன் கோயில் தெய்வநாயக வகுப்பினர்), ஆராவயல், கண்டனூர், காரைக்குடி (பிள்ளையார்பட்டி), தேவகோட்டை, பள்ளத்தூர், புதுவயல் நகரத்தார்களின்[4] குலதெய்வமாகப் போற்றப்பெறும் ஸ்ரீநிவாசப் பெருமாளைத் தரிசிக்கக், காரைக்குடியிலிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ள வைணவத் தலமான அரியக்குடிக்குச் செல்கிறோம்.

தென் திருப்பதித் திருவேங்கடமுடையான் திருக்கோயில் என்றும் இக்கோயிலைக் கூறுவர். அதற்(குக்)கான காரணத்தை அறிய வரலாற்று ஏடுகளைச் சிறிது புரட்டிப் பார்க்கவேண்டும்.

* * *

சில நூறு ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சி அது. திருப்பதித் திருவேங்கடநாதனிடம் தீராத பக்தி பூண்ட செட்டியார் ஒருவர்

ஆண்டுதோறும் அங்கு சென்று பெருமாளைத் தரிசித்து வந்தார். மேலும் அங்கு செல்ல இயலாதவர்களிடம், அவர்களின் காணிக்கை, உண்டியல்களை வசூலித்து அவர்கள் சார்பில் திருவேங்கடமுடை யானிடம் சேர்த்தும் வந்தார். இவ்வாறு சேரும் காணிக்கைகள், உண்டியல் ஆகியவற்றையும், திருப்பதி சென்று வருவதற்கான உணவுப் பொருட்களையும் காளைமாட்டின்மீது ஏற்றிக் கொண்டு திருப்பதி சென்று வந்த செட்டியார், ஒருமுறை முதுமை காரண மாகக் களைத்து மயங்கி விழுந்தபோது, மேகம் குடை பிடித்ததாம்; அவர் களைப்பை அகற்றியதாம்!

வேங்கடமுடையானிடம் தம் தள்ளாமையை முறையிட்டுத், தாம் வாழும் நாள் வரை இத்தகைய தரிசனத்துக்கு எத்தகைய தடையும் வராதிருக்கப் பிரார்த்தித்தார். அன்று அவர் கனவில் தோன்றிய எம்பெருமான், 'நீ இருக்குமிடத்திலேயே எனக்குக் கோயில் கட்டு; உனக்கும், உன் போன்றோருக்கும் இங்கு போன்றே அங்கும் சேவை சாதிக்கிறேன்' என்று கூறியிருக்கிறார். 'இங்கு செலுத்தும் காணிக்கை, உண்டியல்களை, நீ கட்டும் கோயிலிலேயே ஏற்றுக் கொள்கிறேன்' என்றும், கூறியிருக்கிறார்.

தம்மால் எங்கே, எப்படிக் கோயில் கட்ட முடியும் என்ற எண்ணத் திலேயே ஊர் திரும்பிய செட்டியாரின் கனவில் மீண்டும் தோன் றிய பெருமாள், 'நாளை நீ மேற்கே செல்; இடம் தெரியும்' என்றாராம்.

அதுபோல் அடுத்த நாள் அவர் சென்ற போது, இக்கோயில் இருக் கும் இடத்தில் ஒரு துளசிச் செடியும், தேங்காய்க் காளாஞ்சியும் இருந்தனவாம். பின்னர் அந்த இடத்தில் கோயில் கட்ட நிலத்தைச் சீர்திருத்தியபோது, இங்குள்ள மூலவரின் சிலை, நிலத்தின் அடியி லிருந்து கிடைத்ததாம். திருப்பதியைப் போன்று பெருமாளை மட் டும் தனியாக வைக்க விரும்பாது, அலர்மேல்மங்கைத் தாயார், ஸ்ரீதேவி, பூதேவி சமேதராகப் பிரதிஷ்டை செய்திருக்கின்றனர். பின்னர் அவர் சந்ததியில் வந்த ஒருவர், கண்டனூர், தேவகோட்டை, புதுவயல் நகரத்தார்களுடன் சேர்ந்து கோயிலை விரிவுபடுத்தினார்.[5]

மிகப் புராதனமான இக்கோயிலில், நகரத்தார் ஒருவரின் முயற்சி யில், 21.04.1902ல் ஒருமுறை குடமுழுக்கு நடைபெற்றது என் றும், 10.06.1918ல் மற்றொரு நகரத்தார் பெருமகனார், நகரத் தார்களின் பேராதரவுடன் ஒருமுறை கும்பாபிஷேகம் நடத்தினார் என்றும் கூறப் பெறுபவை,[6] விவரம் தெரிந்து நடைபெற்ற திருக் குட நீராட்டுகளாக இருக்கலாம்.

இராமானுஜர் காலத்தில், உற்சவ விக்கிரகங்கள் திருவரங்கத்தி லிருந்து எல்லாக் கோயில்களுக்கும் கொடுக்கப் பெறுகின்றன என் பதை அறிந்து, நகரத்தார்கள் அவற்றை அங்கிருந்து பெற்று வந் தனர்.

ஆகையால் இங்கு அரியக்குடியில் ஸ்ரீநிவாசப் பெருமாளை வழி படுவதன்வழி, ஏழுமலையானையும், அரங்கத்தம்மானையும் ஒருங்கே வழிபட்ட பலனையும், மனநிறைவையும் அடையலாம் என்கிறார் பட்டாச்சாரியார். இவ்வாறு நகரத்தார்களின் பெருமுயற்சியால் உருவாகி, முதலில் நகரத்தார்களுக்கே சொந்தமாக இருந்த இந்தக்

கோயில்,[7] இப்போது இந்து அறநிலையத் துறையின் நிர்வாகத்தில் உள்ளது.

* * *

புரட்டாசி மாதம் முதல் சனிக்கிழமையன்று, இக்கோயிலைக் குல தெய்வக் கோயிலாகக் கொண்ட காரைக்குடி நகரத்தார்கள் இங்கு வந்து வழிபட்டுச் செல்கின்றனர்;[8] அரியக்குடியில் வாழ்ந்த வைரவன் கோயில் தெய்வநாயக வகுப்பைச் சேர்ந்த பெரியவர் ஒருவர், வைணவ தீட்சை பெற்றுத், தம் வீட்டில் அதுவரை படைப்புக் காகப் பயன்படுத்திவந்த சேலை, வேட்டி ஆகியவற்றை ஒரு புரட்



நற்பணி செய்த நகரத்தார்

டாசி மாதம் திருவோண நட்சத்திரத்தன்று, இங்கு கொண்டு வந்து, பெருமாள் சந்நிதியில் சூடம், நெய் ஆகியவற்றுடன் அக்கினியில் சேர்ப்பித்தாராம். அதுமுதல் அவருடைய வழித்தோன்றல்கள், ஒவ்வோராண்டும் புரட்டாசி மாதம் திருவோண நட்சத்திரத்தன்று இங்கு வந்து 'கோவிந்தா' போடுவார்களாம்! (இப்போது அவர் கள் வீடுகளில் படைப்பதில்லை.) மேலும், அவர்களின் முன்னோர், அருகிலுள்ள உஞ்சனை கிராமத்திலிருந்து அரியக்குடிக்குக் குடி யேறியதாக நம்பப்பெறுவதால், தை மாதம் மூன்றாம் நாள் உஞ் சனை சென்று அங்குள்ள காளியையும் வழிபடுகின்றனராம்.[9]

★ ★ ★

நகரத்தார்கள் இக்கோயிலுக்கு நிறைய நகைகளும், வாகனங்களும் செய்து கொடுத்திருப்பதாகச் சொல்லப்பெறுகிறது. ஏழுமலை யானை வழிபடுவதன்வழி கிடைக்கப்பெறும் எல்லா நலன்களை யும், இந்த ஸ்ரீநிவாசப் பெருமாளை வழிபட்டு அவர்கள் அடையப் பெறுகின்றனர்.[10]

அலர்மேல் மங்கைத் தாயார், ஆண்டாள், இராமர், மற்றும் தேசி கன் சந்நிதிகள் உள்ள இக்கோயிலில், பெருமாள் சந்நிதியில் சேவ கன் செட்டியார் சிலையும், கருடாழ்வாருக்கு அருகில் காரைக்குடி மெய்யப்ப செட்டியார் சிலையும், அலர்மேல் மங்கைத் தாயார் சந்நிதியில் சேவகன் செட்டியார் சிலையும், ஆண்டாள் சந்நிதியில் சாத்தப்ப செட்டியார், நாச்சியப்ப செட்டியார் சிலைகளும் வைக் கப் பெற்றிருக்கின்றன. (இம்முறையைப் பின்பற்றி மற்ற கோயில் களிலும் சந்நிதிகளில் உள்ள திருப்பணி நகரத்தார்களின் சிலை களுக்கு மேலே பெயர்களை எழுதி வைக்கலாம்!)

★ ★ ★

இமயத்தில் உள்ள இரு பெரும் சைவ — வைணவத் தலங்களான திருக்கேதாரம், பத்ரிநாத் ஆகியவற்றில், குளிர் காலமான ஆறு மாதங்களுக்குக் கோயில்களை மூடுமுன்னர், கருவறைகளில் நெய் விளக்குகளை ஏற்றி வைப்பார்களாம். ஆறு மாதம் கழித்துக் கோயில் கள் திறக்கப் பெறும்போது, அவ்விளக்குகள் எரிந்து கொண்டே இருக்குமாம்! அது போன்று ஆறு மாதங்களுக்கு இல்லாவிட்டா லும் இரண்டு மூன்று நாட்களுக்காவது இக்கோயில் விளக்கு எரிந்து கொண்டிருந்த நிகழ்ச்சி, கடந்த நூற்றாண்டில் நடந்திருப்பதாகச் சொல்லப்பெறுகிறது. கோயில் நிர்வாகிகளிடையே சச்சரவு மூண்ட நேரத்தில், சில நாட்களுக்குக் கோயிலைத் திருக்காப்பிட்டு விட் டனராம். சச்சரவு தீர்ந்து கோயில் திறக்கப்பெற்றபோது, கருவறை யில் ஏற்றி வைக்கப் பெற்றிருந்த விளக்கு எரிந்து கொண்டிருந்த தாம்.[10]

கருவறையின் பின்புறம் சங்கு, சக்கரமும், திருமண்ணும் கல்லில் பொறித்து வைக்கப் பெற்றிருக்கின்றன. இங்குள்ள பள்ளியறையை யாரும் பார்க்காமல் போக முடியாது. காரணம் பளிச்சென்று எல்லோருடைய கண்களிலும் படும்வண்ணம், வண்ணச் சித்திரங் களைக் கொண்டு அது அமைந்திருக்கிறது.

★ ★ ★

இக்கோயிலில் பெருமாளுக்கு அடுத்துப் பெரும் பெயருடன் விளங்குபவர், மூலைக் கருடன். கோயிலினுள் நுழைந்ததும் நம் வலப் புறம் (கோயிலுக்கு வடக்கே) காணப்பெறும் வழியில் சென்றால், வடகிழக்கு நோக்கிச், சுவரின்மீது அமைந்துள்ள, விமானத்துடன் கூடிய சிறிய சந்நிதியில் இந்த மூலைக் கருடனைத் தரிசிக்கலாம். நாள்தோறும் இவருக்கும் பூஜை உண்டெனினும், கீழிருந்தபடியே தான் பூஜை செய்யப்பெறுகிறது. ஆனால், சுவாதி நட்சத்திரத் தன்று மட்டும், அர்ச்சகர், மேலேயுள்ள சந்நிதிக்கே சென்று, நிறைய அபிஷேகங்கள் செய்வதுடன், அங்கிருந்தே பூஜையும் நடைபெறுகிறது. இந்த மூலைக் கருடனிடம் நேர்ந்து கொள்வோர், அன்றாடம் நிறையத் தேங்காய்கள் உடைக்கின்றனர். சாதாரணமாகத் தேங்காய் உடைப்பது போன்று தரையில் உடைக்காமல், சுவரில் உள்ள கல்லில் இத்தேங்காய்களை உடைக்கின்றனர்.

* * *

இங்கு நகரத்தார்களுடன் தொடர்புடைய மற்றோர் இடம், கோயிலுக்கு எதிரில் கிழக்கே செல்லும் சாலையில் சிறிது தொலைவு சென்று, வலப்புறம் திரும்பினால் காணப்பெறும் சுவாமி வீடு.

கோயிலை நிறுவிய செட்டியாரின் கதை இங்கு தொடர்கிறது. திருப்பதியிலிருந்து திரும்பிய அவரின் கனவில், கோயிலுக்கான இடத்தைப் பற்றிப் பெருமாள் கூறியதாக முன்னர் கேள்விப்பட்டோமன்றோ? கண் விழித்த செட்டியாரின் எதிரே வானில், ஜோதி மயமான இரு தங்கத் திருவடிகள் தென்பட்டனவாம். அதன் நினைவாகத் தங்கத்தில் இரு சிறிய பாதுகைகளைச் செய்து, அவற்றில் இரத்தினக் கல் பதித்துக் கோயிலின் எதிரில் உள்ள இந்த(க் கோயில்) வீட்டில் வைத்து, அவர் வழிபட்டு வந்தாராம்.[11]

இராமனை மீண்டும் அயோத்திக்கு அழைத்து வந்து ஆட்சிப் பொறுப்பை அவனிடம் ஒப்படைக்கப் பரதன் மேற்கொண்ட முயற்சி வெற்றி பெறாது போகவே, இராமனின் பாதுகைகளைப் பெற்று, அவற்றை அயோத்தி நகரின் புறத்தே உள்ள நந்திக்கிராமத்தில் வைத்து(ப் பரதன் பாதுகாத்து)ச் செங்கோல் செலுத்தினான்[12] என்று இராமாயணத்தில் கூறப்பெறுவது போன்று, பெருமாளின் பாதுகைகளை, அவருடைய சொந்த வீடு போன்ற இந்தச் சுவாமி வீட்டில் வைத்து அவர் வழிபட்டு வந்தார்!

அப்பாதுகைகளும், பெரியதொரு சாளக்கிராமமும்[13] ஒரு பேழையில் வைக்கப்பெற்று, இங்கு வழிபடப்பெறுகின்றன. (ஜம்முவில் உள்ள பொற்றகடு வேயப்பெற்ற விமானத்தைக் கொண்ட இரகுவீர் மந்திரில் (கோயிலில்) ஆயிரக் கணக்கான சாளக்கிராமங்கள் பதித்து வைக்கப்பெற்று வழிபடப் பெறுகின்றன.)

அரியக்குடியில் உள்ள சுவாமி வீட்டில் சிவாச்சாரியார் ஒருவரே பேழைக்குப் பூஜை செய்கிறார்[14] என்பதோடு, இங்கு திருநீறும் கொடுக்கப் பெறுகிறது! ஒவ்வொரு நாளும் காலையில் திருவடிகளுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்யப் பெற்றுப் பதினொரு மணிக்கு இந்தப் பேழையை உள்ளே வைத்து விடுவார்களாம். மீண்டும் மாலை ஆறு மணிவாக்கில் இரண்டாவது பூஜை நடைபெறுகிறது. இப்பேழை உள்ள கருவறைச் சுவரில், ஸ்ரீதேவி, பூதேவி

உடனாய எம்பெருமான் புடைச் சிற்பமாகக் காட்சி தருகிறார். கீழே சங்கு, சக்கரம், திருமண், ஆஞ்சநேயர், கருடன் ஆகியவை வைக்கப் பெற்றுள்ளன. அதன் கீழ்நிலையில் 21 வெள்ளி விளக்கு கள் காணப்பெறுகின்றன.

வைகாசி மாதம் நடைபெறும் பிரமோற்சவத்தின்போது, நான்காவது நாள் கருட வாகனத்தில் சுவாமி இந்த(ச் சுவாமி) வீட்டுக்கு எழுந்தருளுகிறார். அப்போது ஓர் அலாதியான அழகுடன் அவர் திகழ்வார் என்று பட்டாச்சாரியார் கூறுகிறார். திருமணமான பெண்களுக்குத் தாய் வீட்டுக்குச் செல்வதென்றால், தனியொரு மகிழ்ச்சிதானே! அது போன்றதுதான் இது!

* * *

ஸ்ரீநிவாசப் பெருமாளைத் தரிசித்துக் கொண்டு அரியக்குடியிலிருந்து புறப்பட்டபோது, 'நன்றாக அனுஷ்டிக்கப்பட்ட பிற தர்மங்களைக் காட்டிலும், தனக்கென்று ஏற்பட்ட தர்மம் குணமில்லாததாக இருப் பினும், அதுவே உயர்ந்தது! தன்னுடைய தர்மத்தில் அழிவதே மேல்' என்னும், எப்போதோ கேட்ட பகவத் கீதை காதில் ஒலித்துக் கொண்டிருந்தது!

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

1. சுருதிவா னவனாம், திருநெடு மாலாம்,
   சுந்தர விசும்பின்இந் திரனாம்,
   பருதிவா னவனாம், படர்சடை முக்கட்
   பகவனாம், அகவுயிர்க்(கு) அமுதாம்,
   எருதுவா கனனாம், எயில்கள்மூன்(று) எரித்த
   ஏறுசே வகனுமாம், பின்னும்
   கருதுவார் கருதும் உருவமாம், கங்கை
   கொண்டசோ ளேச்சரத் தானே.

திருச்சிற்றம்பலம்

— 9ஆம் திருமுறை,
கருவூர்த் தேவர்

2. எந்நாள் எம்பெரு மான்உன்ற னக்(கு)அடி
   யோமென்(று) எழுத்துப்பட்ட
   அந்நா ளே,அடி யோங்கள்அ டிக்குடில்
   வீடுபெற்(று) உய்ந்ததுகாண்,
   செந்நாள் தோன்றித் திருமது ரையுள்சிலை
   குனித்(து), ஐந்தலைய
   பைந்நா கத்தலைப் பாய்ந்தவ னே!உன்னைப்
   பல்லாண்டு கூறுதுமே!

— முதலாயிரம், பெரியாழ்வார் திருமொழி —
திருப்பல்லாண்டு

குறிப்பு விளக்கம்:

— அழகு பொருந்திய திருமேனியை உடையவனே

1. '...இருநில மேலவர் யாரும் நின்றனைப்
   பரமென உணர்கிலர் மாயைப் பான்மையால்.' — கந்த புராணம்
2. '..........................ஆருயிர்
   அனையவும் புரப்பவன் ஆதலால் அவர்
   வினையறு நெறிமையால் வேண்டு கிற்றி..' — கந்த புராணம்
3. '....மேதினி அதனிடை வியாதன் என்றிடு
   போதக முனியெனப் போந்து வைகுதி.' — கந்த புராணம்
   இதை வைணவமும் ஏற்றுக் கொள்கிறது. '...துவாபர யுகத்தின் இறுதியில் வேத வியாச முனிவராக அவதரித்த விஷ்ணு...' — ஸ்ரீவைஷ்ணவம், ஆர். இராமஸ்வாமி ராமானுஜதாசர்
4. இராம. வெங்கடாசலம், அரியக்குடி
5. ஸ்ரீநிவாச பட்டாச்சாரியார், அரியக்குடி
6. சுப. வெங்கிடாசலம் செட்டியார், காரைக்குடி
7. இராம. வெங்கடாசலம்
8. சுப. வெங்கிடாசலம் செட்டியார்
9. இராம. வெங்கடாசலம்
10. ஸ்ரீநிவாசப் பட்டாச்சாரியார்
11. ஸ்ரீநிவாசப் பட்டாச்சாரியார்
12. '...செம்மையின் திருவடித் தலம்தந்(து) ஈகென
    எம்மையும் தருவன இரண்டு நல்கினான்'.
    'நந்தியம் பதியிடை நாதன் பாதுகம்
    செந்தனிக் கோன்முறை செலுத்த...' — கம்பராமாயணம்
13. இமயமலைக்கு அருகிலுள்ள சாளக்கிராமம் என்னும் ஆற்றிலிருந்து சிவ—விஷ்ணு உருக்கள் அமைந்த சாளக்கிராமங்கள் பிறக்கின்றன. எங்கு சாளக்கிராமம் (சிலை) இருக்குமோ அங்கு ஹரி சாந்நித்தியமாய் இருப்பார்; அங்கு எல்லாத் தேவதைகளும் வசிப்பர்; எல்லாச் செல்வமும் உண்டாகும்; சாளக்கிராம அர்ச்சனையால் சகல பாவங்களிலிருந்தும் நீங்கி வைகுண்டப் பேற்றைப் பெறலாம். — அபிதான சிந்தாமணி
14. இங்கு முதன்முதலில் நகரத்தார்களே பூஜை செய்தனராம்.

உ

ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் உஞ்சனை மாகாளி

(98. மகாகாளி திருக்கோயில், உஞ்சனை)

முத்தி தரும் ஏழு நகரங்களுள் ஒன்று உஞ்சை என்றும், உஞ்சேனை என்றும், உஜ்ஜைனி என்றும் வழங்கும் அவந்தி நகரம்.[1] அங்குள்ள மகாகாளம் என்னும் சிவத்தலம், பன்னிரு ஜோதிர்லிங்கத் தலங்களுள் ஒன்று.[2] மூலவரான மகாகாளர் பெரிய சிவலிங்கத் திருமேனி. அவருக்கு ஒவ்வொரு நாளும் விடியற்காலை நான்கு மணிக்கு நடைபெறும் அபிஷேகம் — அலங்காரம் — ஆராதனை ஆகியவை அவசியம் காணவேண்டியவை! நிறைய அபிஷேகங்கள் ஆகி, அலங்காரமான பின்னர் (ஒவ்வொரு நாளும் வெவ்வேறு வகையான அலங்காரம்; விநாயகரை இஷ்ட தெய்வமாக வழிபடுவோர் கண்டபோது, விநாயகர் அலங்காரமே செய்யப் பெற்றிருந்ததில் வியப்பேது?), சுடலையி(மயானத்தி)லிருந்து அன்றன்று எரிக்கப்பெற்ற பிணத்தின் சாம்பலைக் கொண்டுவந்து சுவாமியின் மீது தூவி[3]ப், பின்னர் அதனையே பிரசாதமாகப் பக்தர்களுக்கு வழங்குகிறார்கள்!

உஜ்ஜைனி(அவந்தி)க் காளி மிகவும் பிரபலமானவள். உஜ்ஜைனி மன்னனான விக்கிரமாதித்தன் அந்தக் காளியின் அருளைப் பெற்றே, எந்தச் செயலையும் மேற்கொள்ளும் ஆற்றலைப் பெற்றான் என்பர். அவளை நேரில் காண இயலாவிடினும், மகாகாளர் கோயிலில் வைக்கப் பெற்றிருக்கும் சிலா வடிவத்தில் கண்டு வழிபடலாம். அந்த உஜ்ஜைனி — உஞ்சேனை மகாகாளியைத் தரிசிக்க வடநாட்டுக்குத்தான் செல்லவேண்டும் என்பதில்லை; நாம் இருக்கும் இடத்திலேயே — உஞ்சனையில் கண்டு வழிபடலாம்!

★ ★ ★

அரியக்குடியிலுள்ள வைரவன் கோயில் தெய்வ நாயக வகுப்பினர், ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயிலுடன், பூர்விகம் காரணமாக உஞ்சனை மகாகாளியையும் வழிபடுகின்றனர் என்று முன்னர் அறிந்தோம். 128 புள்ளிகளான அவர்களுடன், கண்டனூர் நகரத்தார்களும் வழிபடும்[4] இந்தக் காளி கோயில், அரியக்குடி — ஆராவயல் (சண்முகநாதபுரம்) சாலையில் சுமார் ஆறு கி.மீட்டரில்



'.....சுடலைப் பெடி பூசி......'

உள்ள உஞ்சனை கிராமத்துக்குச் செல்லுமுன்னரே, (மொட்டை வயல் என்னும் பெயர்க்கல் இருக்குமிடத்தில்) இடப்பக்கம், வயல்களும், காட்டு மரங்களும் நிறைந்த பகுதியில், அமைந்திருக்கிறது. (அரியக்குடி கோயில் சந்நிதியிலிருந்து நேரே (கிழக்கே) சென்று இடப்புறம் திரும்பி மண் சாலையில் நான்கு கி.மீ சென்றும் உஞ்சனையை அடையலாம்). நகரத்தார்களோடு பூசாரி வகையினரும், வேளார்களும் இக்கோயிலுக்கு அடிமைப்பட்டிருக்கின்றனர். நாள் தோறும் காலையிலோ, மாலையிலோ ஏதேனும் ஒரு நேரத்தில் மட்டுமே பூசை நடைபெறுகிறது. ஆகையால் உஞ்சனை கிரா

மத்தை ஒட்டியுள்ள (சுண்டான்தர்மம் கிராமத்தில்) சிலையான் குடியிருப்பிலிருந்து பூசாரியை அழைத்து வருவது நல்லது.

* * *

சாலையின் இடப்புறம் முழுமையடையாத கோயிலும், அதற்கு முன்னால் சுற்றுச் சுவருடன் கூடிய ஓட்டுக்கூடமும், அவற்றின் இடப்புறத்தில் குளம் ஒன்றும் இருக்கின்றன. இந்தக் குளத்தில் நிறைய மீன்கள் இருப்பதாயும், ஆனால் யாரும் அவற்றைப் பிடிப்ப தில்லை என்றும், நீர் முகக்கும்போது தவறிப் போய் மீன்கள் குடத்தினுள் சென்றுவிட்டாலும், அவற்றைத் திரும்பக் கொண்டு வந்து குளத்தில் விட்டுவிடுவர் என்றும் சொல்லப்பெறுகிறது.

அழகிய — உயரமான விமானத்தைக் கொண்ட கல் திருப்பணி யான கோயில், ஏன் இப்படிப் பாழடைய விடப் பெற்றிருக்கிறது? பிரபலமான உஞ்சனைக் காளி, ஏன் ஓட்டுக்கூடத்தில் குடி கொண் டிருக்கிறாள்? என வியப்படைகிறோம்.

பூர்த்தியடையாத கற்கோயில் இருக்கும் இடத்தில்தான், முதலில், அன்னை கூரைக் கொட்டகையில் கோயில் கொண்டிருந்தாளாம். அது எரிந்து போனபோது, கண்டனூர் நகரத்தார் குடும்ப ஆச்சி ஒருவர் கோயிலைக் கட்ட விரும்பி, இப்போது உள்ள ஓட்டுக்கூடத் தில் அன்னையைப் பாலஸ்தாபனம் செய்து, கோயிலைக் கட்டிக் கொண்டிருந்தார். யாருடைய துரதிர்ஷ்டமோ, கோயில் முழுமை யடைவதற்கு முன்னரே, அவருடைய வாழ்க்கை முழுமையடைந்து விட்டது. அவருடைய சந்ததியினர் கோயிலைப் பூர்த்தி செய்ய முயன்றபோது, அன்னை அங்கு குடிபுக விரும்பவில்லை என்று தெரியவந்ததாம். எனவே கடந்த 70,80 ஆண்டுகளாகப் பாலஸ் தாபனம் செய்யப்பெற்ற இந்தக்கூடத்திலேயே இருந்து வருகிறாள் அன்னை. கூடம் பழுதடைந்தபோது, ஊரார் முயன்று அதைச் சீர்திருத்தியிருக்கின்றனர்.[5] செம்புறைக்கற்கள் கொண்டு கட்டப் பெற்ற திருச்சுற்றுச் சுவருடன் கூடிய கோயிலில் அன்னை அடக்க மாக இருந்து அருள் பாலிக்கிறாள்.

அன்னையின் திருவுருவத்தில் கலையம்சத்தைக் காண இயலாது; ஆனால் அருள்பொழியும் அவள் முகம் அனைவரையும் ஈர்த்து விடும்! அந்த ஈர்ப்புச் சக்திதான், அரியக்குடி போன பின்னரும் கூட, அங்குள்ள நகரத்தாரை ஆண்டுக்கொரு முறையாவது இங்கு வரச் செய்திருக்கிறது போலும்!

அரியக்குடி நகரத்தார் தை மாதம் மூன்றாம் நாள் இங்கு வந்து வழிபட்டுச் செல்கின்றனர் என்று முன்னர் கண்டோம். அவ்வாறு வரும்போது, கடந்த சில ஆண்டுகளாக இங்கு பிராமண போஜனம் நடத்துகின்றனராம்.[6] பெயருக்கு ஓரிரு பிராமணர்களை அழைத்து வந்து, அவர்களுடன் மற்றவர்களையும் வைத்து இந்த அன்ன தானத்தை அவர்கள் நடத்துகின்றனர். இது தவிரக் குழந்தைகளுக்கு முடி இறக்குவது, தொட்டில் கட்டுவது போன்றவற்றை நகரத்தார் கள் மிக அபூர்வமாகவே இங்கு மேற்கொள்ளுகின்றனர். வைகாசி மாதத்தில் ஒருநாள் திருவிழாவாக, மது எடுப்பு விழா நடைபெறு கிறது.[7]

ஓட்டுக்கூடத்தில் காளியின் கருவறைக்கு முன்னால் கருவறையின் இடப்புறம் சிறிய விநாயகர் சிலை ஒன்று உள்ளது. சந்நிதிக்கு எதிரில் ஓரிரு பலிபீடங்கள் காணப்பெறுகின்றன. கோயிலின் தென்புறமுள்ள திறந்த வெளியில் வைரவரும், குருவாச்சி தம்பதியரும் இடம் பெற்றுள்ளனர். குருவாச்சியைப் பூசாரி வகையினரும், வேளார்களும் வழிபடுகின்றனராம். திறந்த வெளியான வடப்புறத்தில், மூஷிஹம், பலிபீடத்துடன் கூடிய இரட்டை விநாயகருடன், ஐயனார், பூரணை, புஷ்கலையும் அமர்ந்திருக்கின்றனர்.

புதிய (இப்போது பழையதாகிவிட்ட) கோயிலுக்குப் போயிருந்தால், பரிவார தெய்வங்கள் எல்லாம் இப்படிப் பரிதாபமாக வெயில் — மழையில் சிரமப்பட வேண்டி இருந்திருக்காது! என்ன செய்வது, அவர்கள் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்!

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

1. பூத்தா டிக்கழி யாதே,நீர் பூமியீர்!
தீத்தா டித்திறம் சிந்தையுள் வைம்மினோ,
வேர்த்தா டும்காளி தன்விசை தீர்கென்று
கூத்தா டிய்யுறை யும்குட மூக்கிலே.

— 5 ஆம் திருமுறை

2. காளையர்கள் ஈளையர்கள் ஆகிக், கருமயிரும்
பூளையெனப் பொங்கிப், பொலிவழிந்து — தூளையர்கள்
ஓகாளம் செய்யாமுன், நெஞ்சமே! உஞ்சேனை
மாகாளம் கைதொழுது வாழ்த்து

திருச்சிற்றம்பலம்

— 11ஆம் திருமுறை,
ஐயடிகள் காடவர்கோன் நாயனார்

குறிப்பு விளக்கம்:

— உடம்பை உருகுவித்து உள்ளத்தே அறிவொளியை வளர்க்கும்
1. மற்றவை: காசி, காஞ்சி, மதுரா, மாயா (ஹரித்வார்), அயோத்தி, துவாரகை
2. மற்றவை: சோமநாதம் (குஜராத்), மல்லிகார்ஜுனம் (ஸ்ரீசைலம் — ஆந்திரா), ஓங்காரம் (மத்தியப் பிரதேசம்), வைத்தியநாதம் (பீகார்), பீமசங்கரம் (மகாராஷ்டிரா), இராமேஸ்வரம் (தமிழகம்), நாகேசம் (மகாராஷ்டிரா), விஸ்வேசம் (காசி — உத்திரப் பிரதேசம்), திரியம்பகம் (மகாராஷ்டிரா), கேதாரம் (உத்திரப் பிரதேசம்), குஸ்மேசம் (மகாராஷ்டிரா)
3. 'தோடுடையசெவி யன்விடைஏறிஓர் தூவெண்மதிசூடிக்,
காடுடையசுட லைப்பொடிபூசி,என் உள்ளங்கவர்கள்வன்...' — ஞானசம்பந்தர்
4. அரு. கோவிந்தன், அரியக்குடி; மெ. கழனியப்பன் பூசாரி, சுண்டான்தர்மம், உஞ்சனை
5. மெ. கழனியப்பன் பூசாரி-
6. மெ. கழனியப்பன் பூசாரி; அரு. கோவிந்தன்
7. அரு. கோவிந்தன்

உ

பவநோய் மாற்றும் பனந்தமுடை ஐயனார்

(99. பனந்தமுடை ஐயனார் திருக்கோயில், செம்பொன்மாரி, சண்முகநாதபுரம்)

பனந்தாரான் என்று, பனம்பூமாலை அணிந்த சேர மன்னர்களைக் குறிப்பிடுவதுண்டு.[1]
பனந்தாமன்[2] என்றும் சில நேரங்களில் குறிப்பிடப் பெறும் ஐயனார், சேர நாட்டின் சாஸ்தாவுடன் தொடர்புபடுத்தப் பெறுவதால், சேர மன்னர்களைப் போன்று பனம்பூமாலையைக் கொண்டவர் என்னும் பொருளில், 'பனந்தாமம் உடை(ய) ஐயனார்' என்று, முன்பு அழைக்கப் பெற்றிருந்திருப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது.

அரியக்குடி - ஆராவயல் சாலையில் உஞ்சனையிலிருந்து மூன்று கி.மீட்டரில், அமராவதிபுதூர் கைகாட்டி அறிவிப்புப் பலகை உள்ள முச்சந்தியில் வலப்புறம் திரும்பி, ஒரு கி.மீ சென்று ஆராவயலை (சண்முகநாதபுரம்) அடைந்து, அங்கிருந்து தெற்கே செல்லும் மண்சாலையில் கண்மாய்க்கரை வழியே இரண்டு கி.மீ சென்று அடையக்கூடிய செம்பொன்மாரி பனந்தமுடை ஐயனார் கோயிலுக்குச் செல்கிறோம் என்றவுடன், பெயர் பற்றிய இந்தச் சிந்தனை எழுந்தது.

பனந்தமுடை ஐயனார் என்பதற்கு வேறு ஏதேனும் பொருள் இருக்கிறதா என்பதை அறியாத நிலையில், பனந்தாமமுடைய ஐயனார் என்றிருந்து, நாளடைவில் அது குறுகிப் பனந்தமுடை ஐயனார் என்று ஆகியிருக்கலாமோ என்று எண்ணினேன். 'நீங்கள் இப்படிச் சொல்வீர்கள் என்று தெரியும்; ஆனால் எங்கள் கறுப்பருக்கும் (அவர்தாம் எங்கள் குலதெய்வம்) பனந்தமுடைக் கறுப்பர்[3] என்று பெயராயிற்றே? அதற்கு என்ன சமாதானம் சொல்கிறீர்கள்?' என்று நீங்கள் கேட்கலாம்; கேட்பீர்கள்! பெயர் பற்றிய எளியேனின் சிந்தனையை உறுதிப்படுத்த, அருகில் ஓரிரு பனை மரங்களாவது இருக்கக்கூடும் என்று சுற்றுமுற்றும் பார்த்தால், துரதிர்ஷ்டவசமாகத் தென்னை மரங்கள்தாம் தென்பட்டன; மருந்துக்குக்கூட ஒரு பனை மரத்தைக் காணோம்!

மாலையிட்டான் வயலுக்கு முன்னால், வயல்கள் நிறைந்த பகுதியில் உள்ள இக்கோயிலை, ஆராவயல் (மாத்தூர் அரும்பாக்கூர்) நகரத்தார்கள் குலதெய்வக் கோயிலாகக் கொண்டிருந்தாலும், காரைக்குடி, தேவகோட்டை நகரத்தார்களும் (குலதெய்வமாகவா என்பது தெரியவில்லை.) பனந்த(ரம)முடை ஐயனாரையும், கறுப்பரையும் வழிபடுகின்றனர்.[4]

* * *

எங்களைப் போன்று நீங்களும் புதன், சனிக்கிழமைகள் தவிர்த்த வேறு நாட்களில் கோயிலுக்குச் சென்றால், சண்முகநாதபுரத்திலிருந்துதான் அர்ச்சகரான அம்பலக்காரரை அழைத்து வர வேண்டும். ஏனெனில் புதன், சனிக்கிழமைகளில் மட்டுமே இக்கோயி



ஆதித் திருப்பணிதாரரின் அழகிய- சிலை

லில், சண்முகநாதபுரம் நகரத்தார்கள் கொடுக்கும் படித்தரத்தில் காலையில் பூசை நடந்து வருகிறது.

பெரிய திருச்சுற்றுச் சுவரைக் கொண்டு விசாலமாக அமைந்துள்ள கோயில், மிகவும் பழுதடைந்து போயிருக்கிறது. நாட்டாருடன் கலந்தாலோசித்தே எல்லாக் காரியங்களும் நடைபெறுகின்றன என்றாலும், நகரத்தார்களின் பொறுப்பிலேயே கோயில் இருப்ப தால், விரைவில் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தினால், சிறப்பாக இருக்கும் என்பது எளியேனின் தாழ்மையான கருத்து.

முதன்முதலில் இங்கு திருப்பணி செய்தவர்கள் நகரத்தார்கள்தாம் என்பதை, மகா மண்டபத்தின் முன்பகுதியில் நம் இடப்புறம் உள்ள ஆராவயல் செட்டியாரின் அழகிய சிலை சொல்லாமற் சொல் கிறது. அவருடைய பெயர், திருப்பணிக்காலம் போன்ற விவரங் கள் ஏதும் தெரியவில்லை. ஓட்டுக்கூடமான இந்தப் பகுதியிலேயே யானை வாகனம், பலிபீடம் ஆகியவையும், கருவறை நுழைவாயி லில் துவார பாலகரும் அமைக்கப்பெற்றிருக்க, அர்த்த மண்டபத் தில் ஐயனாரின் வலப்புறம் விநாயகரும், இடப்புறம் தண்டாயுத பாணியும் காட்சியளிக்கின்றனர்.

மூலவர் பனந்த(ாம)முடை ஐயனார், அம்பிகையர் புடைசூழ வீற் றிருக்கிறார். மற்ற ஐயனார் கோயில்களைப் போன்றே இங்கும் மகா சிவராத்திரி மிக விமரிசையாகக் கொண்டாடப்பெற்று வந் திருக்கிறது. நகரத்தார்களின் சர்க்கரைக் காவடிகள், மற்றவர்களின் பாற்காவடிகள், வேற் காவடிகள், மற்றும் பாற்குடங்கள், பூக்குழி இறங்குவது (தீமிதி) ஆகியவை அந்த நாட்களில் மிகச் சிறப்பாக நடந்திருக்கின்றன. நகரத்தார்கள் முன்னின்று மஞ்சு விரட்டும் நடத்தியிருக்கின்றனர். இப்போது 'எடுத்து நடத்த' யாரும் முன் வராததால், எல்லாம் பழைய வரலாறுகளாகி விட்டன!

ஆனால் இப்போதும், சிவராத்திரியன்று, பிள்ளைப்பேறு வேண்டி நேர்ந்து கொள்பவர்கள் மண் பொம்மைகளைக் கொண்டு வந்து வைக்கின்றனராம். சிவராத்திரிக்கு அடுத்த நாள் நகரத்தார்கள் சேர்ந்து கிடாய்ப் பூசை நடத்துவது உண்டாம். (சிவ சிவ!)

* * *

கோயிலுக்கு வரும்போது, கோயிலின் இடப்புறத்தில் (வடக்கே) சிறிய பழைய ஓட்டுக்கூடம் ஒன்று காணப்பெறுகிறது. நகரத்தார் கள் தங்குவதற்கென அது அமைக்கப்பெற்றதாம்.

கிழக்கு வாயிலின் வலப்புறம் முன்னோடியும், இருபுறமும் ஒன்றை ஒன்று பார்த்த வண்ணம் இரு சேமங்குதிரைகளும் உள்ளன. தென் திருச்சுற்றுச் சுவரை ஒட்டி உள்ள மூன்று சந்நிதிகளில் மகா காளி யம்மன், சின்னக்கருப்பர், பெரியகருப்பர், (இவர்தாம் பெயர் பற்றிய சிந்தனையில் குழப்பத்தைத் தோற்றுவித்தவராக இருக்க வேண்டும்!), இரு மனைவியர் சகிதம் மதுரைவீரன், மற்றும் சந் நியாசி, வீரபத்திரர், நாகர் ஆகியோர் குடிகொண்டிருக்கின்றனர்.

வடபுறத் திருச்சுற்றுச் சுவரை ஒட்டிக் கோயிலினுள் நிறையத் தென்னை மரங்கள் உள்ளன. (என்மீது இரக்கங்கொண்டு ஒரு பனை மர மாவது இருந்திருக்கக் கூடாதா?)

* * *

நகரத்தார் குடும்பங்களில் நடைபெறும் திருமணம், அறுபதாம் ஆண்டு மணிவிழா போன்றவற்றிற்கு அர்ச்சகர் திருநீறு, தீர்த்தம் கொண்டு போய்க் கொடுப்பது உண்டாம். சிவராத்திரியன்று பிள்ளைகளுக்கு முடியிறக்கித், தொட்டில் கட்டி நகரத்தார்கள் வழிபடுகின்றனர்.

மின்சார வசதியில்லாத இக்கோயிலில், குடமுழுக்கு நடந்து சுமார் அரை நூற்றாண்டு ஆகியிருக்கலாம் என்று அர்ச்சகர் கூறுகிறார்.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

மாதொரு பாலும், மாலொரு பாலும் மகிழ்கின்ற
நாதன்என்(று) ஏத்தும் நம்பரன் வைகும் நகர்போலும்,
மாதவி மேய வண்(டு)இசை பாட மயிலாடப்
போதலர் செம்பொன் புன்னை கொடுக்கும் புறவம்மே.

திருச்சிற்றம்பலம்

— முதலாந் திருமுறை

2. பனந்தமுடைக்கறுப்பர்

ஆறாவயல் விட்டு இரண்டுகல் தொலைவிலே
சீராக வீற்றிருக்கும்
அன்பான பனந்தமுடைக் கறுப்பண்ணன் அருளையே
அன்றாடம் நாடிநிற்போம்,
மாறாத செல்வவளம் மங்காத நல்லறிவு
மழைபோலப் பொழிந்துவருவான்,
மேலான அவன்நாமம் மெய்யாகத் துதிப்போர்க்கு
மேன்மையோர் கோடிதருவான்,
கூரான வாளோடு தோதான அரிவாளும்
கொண்டவன் பனந்தமுடையான்,
குழந்தைகள் பெரியவர் சகலரின் நலத்தையும்
காப்பவன் பனந்தமுடையான்,
தீராத வினைகளை ஒரிருகணங்களில் தொலைத்திடும்
தெய்வம் அவனைத்
தொழுகின்ற பேருக்குத் தெவிட்டாத இன்பங்கள்
தந்திடுவான் இல்லைஐயம்!

— மீ. வயிரவன்

குறிப்பு விளக்கம்:

பவநோய் — பிறவிநோய்
1. பனந்தாரான் — சேர(மன்ன)ன்
2. தாமம் — மாலை; தாமன் — மாலையை அணிந்தவன்
3. ....அன்பான பனந்தமுடைக் கறுப்பண்ணன்..' — மீ. வயிரவன்
4. கோயில் பற்றிய தகவல்களைத் தெரிவித்தவர்: வெ. நாட்டான் அம்பலம், சண்முகநாதபுரம்

உ

ஆடிய நாடகத்துளம் கூத்தாடி பாதம் அவையாம் நமக்கொர் சரணே!

(100. உசிலுடை(ய) ஐயனார் — கூத்தாடி முத்துப் பெரியநாயகி அம்மன் திருக்கோயில், தாழையூர்)

சிறப்புற்று விளங்கும் கிராமிய நடனங்களில் ஒன்று, தமிழ்நாட்டுக்கே உரிய தனிச்சிறப்புடைய பொய்க்காற் குதிரை என்னும் புரவி ஆட்டமாகும். மரக்கட்டைகளைக் காலில் பொருத்திக் கொண்டு, குதிரை உருவத்தை இடுப்பில் கட்டி ஆண், பெண் இருபாலரும் ஆடும் இந்தக் கிராமிய நடனத்துக்குத் திறமையும் பயிற்சியும் தேவை.[1] இத்தகைய ஒரு நடனத்தை மரக்காலை மட்டும் கொண்டு காளி ஒருமுறை கூத்தாடினாளாம். அந்தக் கூத்துக்கு ''மரக்கால்'' என்று பெயர். தக்ஷ யாகத்தை அழிக்கும் பொருட்டு இறைவியின் கோபத் தீயில் தோன்றிய காளியிடம் பகைமை கொண்ட அசுரர்கள், அவளைக் கொல்லப் பாம்பு, தேள் போன்ற நச்சு உயிர்களை அவள் மீது ஏவி விட்டனர். அவற்றிடமிருந்து தப்பவும், அவற்றை அழிக்கவும், காளி மரக்கால் கொண்டு ஆடினாள் என்பர்.[2]

ஆனால், ஐயனாரிடம் அளவற்ற பக்தி பூண்ட ஒரு கூத்தாடிப் பெண், ஆடும் கோலத்திலேயே மரச்சிலையாகி, (மதுரையில் மீனாட்சி போன்று) ஆட்சி செய்யும் கோயில்தான், உசிலுடை(ய) அல்லது உசிலையுடை(ய) ஐயனார் கோயில் என்று சொன்னால் பலருக்குத் தெரியாது; ஆனால் கூத்தாடி கோயில் என்றோ, கூத்தாடி முத்துப் பெரியநாயகி அம்மன் கோயில் என்றோ சொன்னால், எல்லோரும் எளிதில் அறிந்து கொள்வர். (மதுரையில் மீனாட்சியம்மன் கோயில் என்றால்தானே பலருக்குத் தெரியும்; சொக்கநாதர் கோயில் என்று கூறினால், பழைய சொக்கநாதர் கோயிலைத் தான் காட்டுவார்கள்!)

ஒரு நாடகக் கணிகை (கூத்தாடி) எப்படித் தேவ பதத்தை அடைந்தாள்? எல்லாம் தற்கொலைக் கதைதான்! ஆனால் இது சற்று வித்தியாசமான தற்கொலை......!

கதை கேட்க ஆவலாக இருக்கிறீர்களா? வாருங்கள், சாதாரணமான அமைப்புள்ள மண்டபத்தில் சிறியதொரு கலசத்தை மட்டும்

கொண்டு அமைந்துள்ள ஐயனார் சந்நிதிக்கு அருகில் இருக்கும் புதிய மண்டபத்தில் அமர்ந்து பேசுவோமே?

* * *

அறந்தாங்கிக்கு அருகில் உள்ள கம்பங்காடு என்னும் ஊரில், நாடக மாடிப் பிழைக்கும் குடும்பம் ஒன்றைச் சேர்ந்த அண்ணனும், தங்கையும், ஒரு நாடகக் குழுவை நடத்திப் பிழைத்து வந்தனர். அவர்கள் நாடகங்களுக்கு — குறிப்பாகத் தங்கை முத்துப்பெரிய நாயகியின் கதாநாயகி(ஸ்திரீபார்ட்)பாத்திரத்துக்குத்தான் ஏகப்பட்ட வரவேற்பு! எவ்வளவுதான் புகழின் உச்சாணிக் கொம்பில் இருந்தாலும், இடையிடையே (ஆண்டுக்கொரு முறையாகிலும்) தாழையூர் ஐயனார் கோயிலுக்கு வந்து, இலவச நாடகம் நடத்த அவர்கள் தவறுவதில்லை. ஐயனாரிடம் அவ்வளவு பக்தி அவர்களுக்கு!.



கூத்தாடி குடிகொண்டிருக்கும் கோயில் மண்டபம்

அவ்வாறு ஒருமுறை ஐயனார் கோயிலில் நாடகம் நடத்த வந்திருந்த போதுதான், அந்த அவல நிகழ்ச்சி நடந்தது.

நாடகம் தொடங்கி விட்டது. மேடைக்கு வந்த கோமாளி (பபூன்), தம் சொல்லாலும், செயலாலும் மக்களை விலா விரியச் சிரிக்க வைக்கக் கொண்டிருந்தார். அவருடைய நடிப்பை — கோமாளித்

நேரந்தான் அவர்களால் காந்தம்போல் ஈர்க்கும் கதாநாயகியைக் காணாதிருக்கமுடியும்?

மக்களிடையே முதலில் ஏற்பட்ட சிறு சலசலப்பு, பெருங்கூச்சலாக உருமாறியது. நாரதர் வேடம் அணிந்திருந்த அண்ணனுக்கு இருப்புக் கொள்ளவில்லை; நாடகக் கொட்டகையினுள் அங்குமிங்கும் அலைந்தார்; எங்கும் தங்கை முத்துவைக் காணவில்லை. 'எங்கே தொலைந்து போய் விட்டாள் இவள்?' — கோபம் கொதிநிலையைக் கடந்தது. அந்நேரத்தில்தான் முத்து அரக்கப்பரக்க, அரைகுறை வேடமணிந்த நிலையில், கொட்டகையின் பின்புறமிருந்து உள்ளே ஓடி வந்தாள்.

'எவனோடு இவ்வளவு நேரம் சரசமாடிவிட்டு வருகிறாய்? கேடு கெட்டவளே...!' — இதுவரை தங்கையிடம் இப்படிப் பேசியே அறியாத — தங்கையிடம் பாசத்தை மட்டுமே பொழிந்து வந்த அண்ணன், கருநாகம் போல் சீறிக் கடுமையான விஷத்தைக் கக்கி விட்டார்; தாங்குவாளா தங்கை? பெற்றோருக்குப் பிறகு சகோதரனே சகலமும் என்று வாழ்ந்து வந்தாள்; எவ்வளவு பெரிய களங்கத்தை இப்போது அவன் கற்பித்து விட்டான்? அண்ணனின் ஆலகால விஷத்தை மிடற்றிலேயே அடக்கிக்கொள்ள, அவள் என்ன சர்வேஸ்வரனா?

அண்ணன் அழுது துடித்தார்! மக்கள் மயங்கி விழுந்தனர்! ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும், மாண்டார் வருவரோ? கோயில் பிரமுகர்களின் கனவில் ஐயனார் வந்தார். "அவள் சாதாரணப் பெண் அல்லள்; தெய்விக சக்தி நிறைந்தவள்; அவளுக்கு மரத்தில் சிலை செய்து என் இடப்புறம் வைத்து வழிபட்டு வாருங்கள்" என்று கூறினார். தெய்வ வாக்கை ஏற்று, உசிலை மரத்தில் அவளுக்குச் சிலை அமைத்தனர். "அவளுக்கே இங்கு முதன்மை வழங்கப்பெற வேண்டும்" என்றும் ஐயனார் ஆணை இட்டதால், ஐயனார் கோயில், கூத்தாடி முத்துப் பெரியநாயகி கோயிலாகி விட்டது.[3]

* * *

தேவகோட்டைக்குக் கிழக்கே 2 கி.மீட்டரில் சிறுவாச்சி செல்லும் சாலையில் தாழையூர் உள்ளது. அங்கு கண்மாய்க்கரையில் அமைந்துள்ள இந்தக் கோயிலை, நிரந்தர அமைப்பான பெரிய கற்கோயிலுக்கு மாற்ற எண்ணிய தீவிர பக்தர் ஒருவர், கோயிலும் கட்டத் தொடங்கி விட்டார்.

அழகிய சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த கல் திருப்பணி. ஆனால், ஐயனும், அம்மையும் நாட்டங்கொள்ளவில்லை. இப்போது போன்று எப்போதும் எளிமையாகவே இருப்போம் என்று கூறிவிட்டனர். இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தக் கற்றளிக்கான திருப்பணி தொடங்கியிருக்கலாம் என நம்பப் பெறுகிறது. இப்போது மண் மேடிட்டுப் புதர் மண்டிக் காணப் பெறுகிறது.

இப்போதுள்ள எளிமையான கோயிலில் 50, 60 ஆண்டுகளுக்கு முன்னர் குடமுழுக்கு நடந்திருக்கலாம் என்று சொல்கிறார்கள்.[4]

* * *

ஐயனார் (அன்னை) கோயிலுக்கும், முற்றுப்பெறாத கற்றளிக்கும் இடையில் உள்ள சந்நிதிகளில் உளிவீரன், சந்நியாசி, இராக்காச்சி யம்மன், காளியம்மன், சப்பாணிக் கறுப்பர் (மண்சிலை), பெரிய கறுப்பர், சின்னக் கறுப்பர் ஆகியோரும், மரத்தடியில் நினைத் ததைக் கொடுக்கும் விநாயகரும் அருள் பாலிக்கின்றனர்.

அடுத்து, நாம் கதை கேட்ட மண்டபத்தை ஒட்டியுள்ள சிறிய கோயி லில், கிழக்குப் பார்த்து, உசிலுடை(ய) ஐயனார் சிறிய உருவினராக அமர்ந்திருக்கிறார்.

உடை மரத்தில் இது உசுலை உடை; எனவே உசுலையுடை ஐயனார் என்று இவருக்குப் பெயர் என்று கூறுகிறார்கள்.[5] ஆனால் கோயி லில் உசுலையுடைய ஐயனார் என்று சொல்கின்றனர்.[6]

உசிலை அல்லது உசில் என்பது சி(சீ)க்கிரி மரம்; உடை என்பது வேல மரம்.[7] இதற்கு முன்னர் பல கோயில்களில் குருந்துடை ஐயனார், மருதுடை ஐயனார் என்றெல்லாம் பெயர்கள் வழங்கக் கேட்டிருக்கிறோம். எனவே, இருவகை மரங்களைச் சேர்ப்பதை விடுத்து, உசிலை(மரத்தை)உடை(ய) ஐயனார் என்று பெயர் வழங் கப் பெற்றிருக்கலாம் என்று கொள்வது பொருத்தமாக இருக்க லாம். ஆனால், இந்த ஐயனாரின் பூர்வீகம் பற்றிய எந்தக் குறிப் பும் கிடைக்கவில்லை. (அம்மையார் வந்து சேர்ந்ததிலிருந்துதான் அவர் பெயரே வெளிவரத் தொடங்கியிருக்கிறது!) உசிலை மரத் தின் அடியில் உதித்தவரா? உசிலை மரங்கள் நிறைந்திருந்த இடத் தில் இருந்தவரா? கூத்தாடி முத்துப் பெரியநாயகிக்கு, மரத்தினால் சிலை அமைக்குமாறு ஐயனாரே கூறியதாகச் சொல்கிறார்கள்; மேலும், தாழையூர்க் கோயில், அம்பிகை பெயராலேயே வழங்கி வர வேண்டும் என்று பணித்திருக்கிறார் என்கிறார்கள். ஒருவேளை அம்பிகை சிலை உசிலை மரத்தில் செய்யப்பெற்று, அவள் பெய ராலேயே (முத்துப் பெரியநாயகியம்மன்) கோயில் விளங்குவதால், உசிலை மரத்(தினால் செய்யப்பெற்ற சிலையை)தை உடைய ஐய னார் என்று இவரும், இவருடைய பழைய பெயரைத் துறந்து, புதிய பெயரை ஏற்றிருப்பாரோ?

* * *

சிவபெருமான்கூட விசாரசருமனாருக்குச் சண்டீசப் பதம் ஈந்த போது, நாம் உண்டு மிகுந்த உணவு, உடுத்துக் களைந்த உடை, சூடிக் களைந்த மாலை மற்றும் அணிகலன்களை உனக்கே உரிமை யாகத் தந்தோம்[8] என்று, எஞ்சியவற்றையே சண்டிகேசுவரருக்கு உரிமையாக்கினார். ஆனால் இங்குள்ள ஐயனாரோ, தமக்குரிய எல்லாவற்றையுமே அம்பாளுக்கு விட்டுக் கொடுத்து விட்டார். முத்துப் பெரியநாயகி மரச்சிலையாக அமைந்து, அதன் காரணமாக அவருக்குத் திருமஞ்சனம் (அபிஷேகம்) கிடையாதாகையால், அந்த அபிஷேகத்தை மட்டும் (அம்பிகைக்கே அபிஷேகம் செய்வதாக நேர்ந்து கொண்டிருந்தாலும் கூடத்)தாம் ஏற்றுக்கொள்கிறார். அம்ம னுக்கு அபிஷேகத்துக்குப் பதிலாகப், புனுகு, ஜவ்வாது, சந்தனம், மற்றுமுள்ள மணப்பொருட்கள் மட்டுமே சாத்தப் பெறுகின்றன; மணமுள்ள மலர் மாலைகளே அணியப்பெறுகின்றன.

இவ்வாறு அம்பிகைக்கு அணியப்பெறும் நிர்மாலியங்(மலர் மாலை)

களைச் சிவராத்திரிக்கு அடுத்தநாள் மட்டுமே பக்தர்களுக்குக் கொடுப்பார்கள். மற்ற நாட்களில் அவை யாருக்கும் கொடுக்கப்பெற மாட்டா! மேலும், கூத்தாடி அம்மனின் திருமேனி எந்த நேரமும் அலங்காரத்தாலும், மாலைகளாலும் மூடப்பெற்றே இருக்கும். நாங்கள் சென்றிருந்ததன் நோக்கத்தை அறிந்து கொண்ட கோயில் நிர்வாகிகளும், குருக்களும், அம்பாளின் அலங்காரத்தைக் களைந்துவிட்டு, அவளுடைய அழகுத் திருமேனியைப் படம் பிடித்துக்கொள்ள அனுமதித்தது, அவர்களுடைய பரந்த மனப்பான்மையைக் காட்டுகிறது; அம்பிகையின் அருளாட்சி, எங்கும் பரவ வேண்டும் என்னும் ஆர்வம் அவர்களுக்கு இருந்ததை உணர்த்துகிறது.

இடுப்பை வளைத்து, இடப்புறம் சாய்ந்து, இடக்காலை முழந்தாளிட்டு, வலக்காலை மடித்து நின்று, வலக்கையை உயர்த்திக் கீழ் நோக்கிய வண்ணம் காணப்பெறும் முத்துப் பெரியநாயகியின் தோற்றமும், அவர் அணிந்துள்ள ஆடை அணிகலன்களின் அழகும்.... கூத்தாடி என்று சிவனுக்கே ஒரு பெயர் உண்டு. அப்பெயரையே தாங்கியுள்ள அம்மையும், உலக உயிர்களை உய்விப்பவளாகத் திகழ்கிறாள்! இவளை இல்லத்தில் வைத்து வழிபடுவோருக்கு எல்லா நலன்களும் கிட்டுமாம்!

* * *

ஐயனார் கருவறை நுழைவாயிலின் இருபுறமும் துவார பாலகரும், மண்டபத்துக்கு வெளியே திறந்த வெளியில் யானை வாகனமும், பலிபீடமும் உள்ளன.

அம்பிகையிடம், அதிகமானோர், நாடகம் நடத்துவதாகவே நேர்ந்து கொள்கின்றனராம். அதனால் கோயிலுக்குச் சிறிது தொலைவில் நிரந்தர நாடக மேடை ஒன்று அமைக்கப் பெற்றிருக்கிறது.

புதன், சனிக்கிழமைகளில் மட்டும் கோயில் எந்த நேரமும் திறந்து வைக்கப் பெற்று, மாலை ஐந்தரை மணிக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றனவாம்; மற்ற நாட்களில் ஏதேனும் ஒரு நேரம் ஒருகாலப் பூசை நடைபெறுகிறது.

தேவகோட்டை நகரத்தார்களின் குலதெய்வக் கோயிலான இங்கு, சிவராத்திரி வெகு சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது. சிவராத்திரியன்று பாற்குடம், மற்றும் காவடி எடுப்போர் பூக்குழி இறங்குவதும், சாமியாடி அருள்வாக்குச் சொல்வதும் உண்டாம். நகரத்தார்கள் இங்கு பிள்ளைகளுக்குப் பெயரிட்டுத் தொட்டில் கட்டி வழிபடுகின்றனர்.

* * *

தேவகோட்டை, இரவுசேரி உள்ளிட்ட 22 ஊர்களுக்கு இது பிரதானமான கோயில் என்று சொல்லப் பெறுகிறது.

ஐயனார் கோயிலுக்குப் பக்கத்தில் அதிஷ்டானமாகச் சமாதி செய்து வைத்திருக்கிறது என்று கூறப்பெறுவது,[9] கூத்தாடி முத்துப் பெரிய நாயகியின் சமாதியாகத்தான் இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. இந்த அம்பிகையின் சந்நிதி சிறந்து — பிரபலமாகத் திகழ்வதற்கு, அதுவே காரணமாக இருக்கலாம். ஏனெனில், பழனி, மதுரை, திருவண்ணாமலை, வைத்தீஸ்வரன் கோயில், திருக்கடவூர் போன்ற தலங்கள் (ஒரு சில தலங்களே இங்கு குறிப்பிடப்

பெற்றுள்ளன.) அருள்மழை பொழியும் அருட்தலங்களாகத் திகழ்வதற்கு, அந்தந்தத் தலத்துடன் தொடர்புடைய (முறையே போகர், சுந்தரானந்தர், இடைக்காட்டுச் சித்தர், தன்வந்திரி, பாம்பாட்டிச் சித்தர் போன்ற) சித்தர்களே காரணம் என்று கூறப்பெறுவதைப் பலர் அறிந்திருக்கக்கூடும்!

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

1. பாடகக் கால்,கழற் கால்,பரி திக்கதிர் உக்கஅந்தி
நாடகக் கால்,நங்கை முன்செங்கண் ஏனத்தின் பின்நடந்த
காடகக் கால்,கணம் கைதொழும் கால்,எம் கணாய்நின்றகால்,
ஆடகக் கால்,அரி மால்தேர வல்லன்ஐ யாற்றனவே.

— 4 ஆம் திருமுறை

2. வீழக் காலனைக் கால்கொடு பாய்ந்த விலங்கலான்
கூழை ஏ(று)உகந் தான்இடம் கொண்டது, கோவலூர்,
தாழை யூர்,தகட் டூர்,தக்க ளூர்,தரு மபுரம்,
வாழை காய்க்கும் வளர்மரு கல்நாட்டு மருகலே.

— 7 ஆம் திருமுறை

3. பாடகமும் நூபுரமும் பல்சிலம்பும் பேர்ந்(து)ஒலிப்பச்
சூடகக்கை நல்லார் தொழுதேத்தத், தொல்உலகில்
நாடகத்தின் கூத்தை நவிற்றுமவர் நாள்தோறும்
ஆடகத்தால் மேய்ந்(து)அமைந்த அம்பலம்நின் ஆடரங்கே.

— 9 ஆம் திருமுறை,
பூந்துருத்தி நம்பி காடநம்பி

குறிப்பு விளக்கம்:

— நாடகமாடிய கூத்தாடி(யம்மனின்) திருவடிகளே நமக்கு ஒரு புகலாகும்

1. கலைக்களஞ்சியம்
2. அபிதான சிந்தாமணி
3. கண்டதேவி ஏ. கணேச குருக்கள்; தேவகோட்டை ஏ.எல். ஏ.ஆர். எஸ்.எம். நாராயணன் செட்டியார் ஆகியோர் கொடுத்த குறிப்புகளைக் கொண்டு, இந்தக் குறுநாடகம் தயாரிக்கப் பெற்றது
4. இக்கோயில் பற்றிய பல தகவல்களை வழங்கியவர், அம்பிகையின் ஆணையால் அர்ச்சகராகிய ஏ. கணேச குருக்கள்
5. ஏ.எல். ஏ.ஆர். எஸ்.எம். நாராயணன் செட்டியார்
6. ஏ. கணேச குருக்கள்
7. உசிலை — சிக்கிரி மரம். A fine timber tree, a kind of ebony with yellow veins — Acacia pennata
உடை — வேல மரம். a species of thorny tree — A Dictionary of Tamil and English by V. Visvanatha Pillai
8. '....................................நாம்
உண்ட கலமும், உடுப்பனவும், தூடு வனவும் உனக்காக ...
.......................தந்தோம்............' — பெரிய புராணம்
9. ஏ.எல். ஏ.ஆர். எஸ்.எம். நாராயணன் செட்டியார்



கூத்தாடி பொற் பாதம் நற்றுணையே

உ

தேவர்க்கும் அரிய தேரடிக் கறுப்பர்

(101. தேரடிக் கறுப்பர் திருக்கோயில், கண்டதேவி)

வயிரவன்பட்டியில் உள்ள நகரச் சிவன் கோயிலின் திருச்சுற்றுச் சுவரை ஒட்டி முப்பலிக் கறுப்பர் கோயில் அமைந்திருக்க, முன்பு கண்டு வந்தோம். இப்போது நாம் செல்லும் கண்டதேவி தேரடிக் கறுப்பர் கோயில், அங்குள்ள புகழ்பெற்ற சுவர்ணபுரீசுவரர் திருக் கோயிலின் எதிரே, தேரடியில் அமைந்திருக்கிறது.


காரைக்குடி — தேவகோட்டை சாலையில், தேவகோட்டைக்கு மூன்று கி.மீ. முன்னதாக இடப்புறம் திரும்பிக் கண்டதேவிக்குச் செல்லலாம். கடந்த 30.06.94ல் சுவர்ணபுரீசுவரர் கோயிலின் திருக்குட நீராட்டு நடைபெற்ற அதே நாளில், ஆராவயல், காரைக்குடி, தாணிச்சா வூரணி, தேவகோட்டை நகரத்தார்களின் குலதெய்வக் கோயிலான தேரடிக் கறுப்பர் கோயிலிலும் குடமுழுக்கு நடைபெற்றது.

சிவன்கோயில் தேரின் அருகில் உள்ள திருவாயிலின்மீது மாடத் தில், கறுப்பண்ண சுவாமியின் உருவமும், இருபுறமும் வெண்குதிரை களும் சுதை வேலைப்பாடாக அமைந்துள்ளன. உள்ளே சென்ற தும், காளி, உளிவீரன், முனிஐயா, சப்பாணிக் கறுப்பர் ஆகிய பரி வார தெய்வங்களைக் காண்கிறோம். காளியைத் தவிர மற்ற மூர்த் தங்கள் பலிபீட வடிவிலேயே அமைந்துள்ளன.

மூலவரும், காளியும் சுயம்பு மூர்த்தங்களாம். இவை இரண்டுமே நடுகல் அமைப்பில் காணப்பெறுகின்றன. திருவாசியுடன் கூடிய இக் கறுப்பரின் அருகில் நிறைய அரிவாள்கள் வைக்கப்பெற்றுள்ளன. இவர் மிகவும் சக்தி வாய்ந்தவராகக் கருதப் பெறுகிறார். இவரை வழிபடும் நகரத்தார்களுக்கு ஏற்பட்ட பல பிரச்னைகள், இவரு டைய திருவருளால் தீர்ந்திருக்கின்றனவாம். வேண்டாதவர்கள் வைத்த பில்லி சூனியங்களை அகற்றுவதற்கும் இவர் உதவியிருக்கிறா ராம்.

இந்தச் சந்நிதியின் முன்னால், வீதியில் யாரும் வெண்குதிரையில் சவாரி செய்வதில்லையாம். வெள்ளைப் புரவி கறுப்பருக்கே உரிய தாகையால், இந்த மரியாதை செய்யப் பெறுகிறது போலும்! இவருக்கு வெள்ளி அங்கி, அரிவாள், பிரம்பு போன்றவை உள்ளன என்

றும், மாசி மகத்தன்றும், சிவன் கோயிலில் தேர்த் திருவிழா நடைபெறும் போதும், இவை சாத்தப்பெறும் என்றும், சிவன் கோயில் வைராவியான கறுப்பர் கோயில் பூசாரி[1] கூறுகிறார்.



தேரடிக் கறுப்பர் கோயில் திருவாயில்

இந்த வைராவியைச் சேர்ந்தோரே இக்கோயிலை நிர்வகிக்கின்றனர். கடந்த ஆண்டு நடந்த திருக்குட நீராட்டுக்குப் பின்னரே, இங்கு ஒவ்வொரு நாளும் காலைப் பூசை நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பெற்று வருகின்றனவாம். இதுவரை (குடமுழுக்குக்கு முன்பு வரை), யாரேனும் நேர்ந்து கொண்டவர்கள் வழிபாடு செய்ய வந்தால் மட்டுமே, அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று வந்தன. இல்லாவிடில், தீபம் போட்டுச் சாம்பிராணி தூபம் காட்டுவதோடு, கறுப்பர் திருப்தி அடைந்து வந்திருக்கிறார்! இப்போது நகரத்தார்களின் உதவியால் அன்றாடப் பூசைக்கு ஏற்பாடு செய்யப்பெற்று வருகிறது.


கோயில் திருப்பணிகள் மற்றும் மராமத்துகளையும், கோயிலுக்கு அவ்வப்போது தேவைப்படுபவற்றையும், நகரத்தார்களே செய்து வருகின்றனர்.

★ ★ ★

தேரடிக் கறுப்பரான பெரிய கறுப்பரின் வலப்புறத்தில், சின்னக் கறுப்பர் மிடுக்கோடு நின்ற கோலத்தில் காட்சி தருகிறார்.

இவர் மிக அழகிய சிலா வடிவம். ஓங்கிய அரிவாளுடன், குறுநகை மிளிரத் தரிசனம் தருகிறார். வேலைப்பாடு நிறைந்த இந்தச் சிலையைத் தேவகோட்டை நகரத்தார் ஒருவர், சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்னர், தம் கனவில் தென்பட்ட அதே வடிவில் செய்து, பிரதிஷ்டை செய்தாராம்! அதற்கு முன்னர் பலிபீட வடிவிலேயே இவரும் இருந்து வந்திருக்கிறார்.

இந்தச் சிலை அப்படியே (சுயம்புவாகக்) கிடைத்தது என்றுகூடச் சிலர்



தேரடிக் கறுப்பரின் திவ்விய தரிசனம்

சொல்கிறார்கள் என்னும் பூசாரியின் கூற்றை, எளிதில் ஜீரணிக்க முடியவில்லை!

உயிர்ப்பலி இல்லாத கறுப்பர் கோயிலா? ஆனால், சிவன் சந்நிதிக்கு எதிரில், இது எப்படி நடைபெறுகிறது என்று கேட்டபோது, கோயில் திருக்காப்பிடப் பெற்றிருக்கும் நேரத்தில், சுமார் மூன்று மணி அள வில் கிடாய் வெட்டப்பெறும் என்றும், இரவு அர்த்த யாமத்திற்குப் பின்னர் கோயில் மூடிய பிறகே, பள்ளயம் போடப்பெறும் என் றும், பூசாரி கூறுகிறார்.

* * *

மாசி மகத்தின் போது நடைபெறும் சிறப்பு வழிபாட்டில், நிறைய அபிஷேகங்கள் நடைபெறும் என்றும், சாமியாடி அருள்வாக்குச் சொல் வது உண்டு என்றும், அந்த நாளில் நிறைய நகரத்தார்கள் வந்து வழிபாடு செய்வர் என்றும், அப்போது பிள்ளைகளுக்குத் தொட் டில் கட்டப்பெறும் என்றும் சொல்லப்பெறுகிறது.

நகரத்தார்கள் தங்கள் வீடுகளில் நடைபெறும் திருமணங்களுக்கு முன் னர் இங்கு வந்து, சுவாமிக்கு மாலை சாத்தி வழிபட்டு மணமக்களுக்கு மாலை கொண்டு செல்வார்களாம். பிறந்த குழந்தைகளுக்கு இங்கு வந்து முடி இறக்குகின்றனர்.

கிடாய்ப் பூசையின்போது, உளிவீரனுக்குப் படைக்கப்பெறும் நிவே தனங்களையும், முன்னோடிக்கு வைக்கப்பெறும் சாராயத்தையும் குடும்பர்கள் எடுத்துக் கொள்கின்றனர்.

இறையருளும், வாய்ப்பும் கிட்டினால், ஒடு வேயப்பெற்றுள்ள சந் நிதானங்களை மாற்றியமைத்து, அழகிய கோயிலாக்க விரும்புகின் றனர். அடியார்களின் நியாயமான கோரிக்கைகளை இறைவன் நிச் சயம் நிறைவேற்றி வைப்பான் அன்றோ?

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

ஆரார் வந்தார்? அமரர்
குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர்
குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து,
பாரார் தொல்புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்

— 9ஆம் திருமுறை, சேந்தனார்

குறிப்பு விளக்கம்:

1. இக்கோயில் குறித்த தகவல்களை வழங்கியவர், கோயில் பூசாரி நீ. நாரா யணன் பிள்ளை, கண்டதேவி

உ

வம்பமரும் குழலாள் வடக்குவாசல் செல்லாயி

(102. வடக்குவாசல் செல்லாயி அம்மன் திருக்கோயில், எழுவன்கோட்டை)

காரைக்குடி — தேவகோட்டை பிரதான சாலையில், தேவகோட்டைக்கு மூன்று கி.மீ. முன்பாக உள்ள இராமநகரில், (கண்டதேவியிலிருந்து வரும் சாலை இங்குதான் பிரதான சாலையுடன் இணைகிறது.) வலப்புறம் பிரியும் சாலை, எழுவன்கோட்டைக்கு இட்டுச் செல்கிறது. அச்சாலையில் ஐந்து கி.மீ. பயணம் செய்து எழுவன் கோட்டையை அடைந்து, அங்குள்ள பெரிய சிவன் கோயிலின் வலப்புறம் அமைந்துள்ள மண்சாலையில் சிறிது தொலைவு சென்றால், சாலையின் வலப்புறம், தேவகோட்டை(பிள்ளையார்பட்டி) நகரத்தார்கள் குலதெய்வமாக வழிபடும் வடக்குவாசல் செல்லாயி அம்மன் குடிகொண்டுள்ள கோயிலை அடையலாம்.


முழுமையும் கல் திருப்பணி செய்யப்பெற்ற அழகிய-சிறிய-அமைதியான கோயில்! நுழைவாயிலின் மீது அமைந்துள்ள அன்னையின் அமர்ந்த கோலத்திலான சுதைச் சிற்பம், வருவோருக்கு வாழ்த்துக் கூறி வரவேற்கிறது.

தென்னை மரங்களும், திருமஞ்சனக் கிணறும் உள்ள பிராகாரத்தில், வடமேற்கு மூலையில் வைரவரும், தென்கிழக்கு மூலையில் பீடத்தில் நாகரும், விநாயகரும் இடம்பெற்றுள்ளனர். பலிபீடமும், கொடிமரமும் கருவறைக்கு எதிரில் திறந்த வெளியிலேயே உள்ளன.

சில படிகள் ஏறி மகா மண்டபத்தை அடைந்து அன்னையின் கருவறையை அடைகிறோம். அன்னை வடக்கு நோக்கி இருப்பதால், வடக்குவாசல் செல்லாயி எனப் பெயர் பெறுகிறாள்.

18.04.89ல் திருக்குட நீராட்டு நடைபெற்றிருக்கும் இக்கோயிலில், காலை, மாலை இரு நேரங்களிலும் பூஜை நடைபெறுகிறது.[1] இடைப்பட்ட நேரத்தில் செல்ல நேரும் பக்தர்கள், சிவன் கோயிலுக்கு அருகிலுள்ள அக்ரஹாரத்திலிருந்து (அஞ்சல் நிலையமும் அதுதான்!) அர்ச்சகரை அழைத்து வரவேண்டியதிருக்கும்.

* * *



மணம் வீசும் குழல்கொண்ட மங்கையமர் கோயில்

தேவகோட்டை நகரத்தாரால் திருப்பணி செய்யப்பெற்ற இக்கோயிலிலிருந்து, நகரத்தார்கள் தங்கள் வீடுகளில் நடைபெறும் படைப்புக்கு முன்னர் தீர்த்தம் எடுத்துச் செல்வார்களாம்.

குழந்தைகளுக்கு முதன்முறையாக இங்குதான் முடி இறக்குவார்கள் என்றும், சிலர் மட்டுமே குழந்தைகளுக்கு இங்கு பெயர் கூப்பிடுவர் என்றும் அர்ச்சகர் கூறுகிறார்.

சித்திரை மாதத்தில் பத்து நாள் தேர்த்திருவிழா நடைபெறும் இக்கோயிலில், கறுப்பர் சந்நிதி கூடக் கோயிலுக்கு வெளியில்தான் அமைந்திருக்கிறது. உயிர்ப்பலி உள்ளே கொடுக்க வேண்டாம் என்னும் எண்ணத்தில் இப்படிச் செய்திருக்கிறார்களோ?

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

இளையாள் இவளைஎன் சொல்லிப்
  பரவுதும், ஈர்எயிறு
முளையா அளவின் முதுக்குறைந்
  தாள்,முடி சாய்த்(து)இடையோர்

வளையா வழுத்தா வருதிருச்
சிற்றம் பலத்துமன்னன்,
திளையா வரும்அரு விக்கயி
லைப்பயில் செல்வியையே.

திருச்சிற்றம்பலம்

— 8 ஆம் திருமுறை — திருக்கோவையார்

குறிப்பு விளக்கம்:

— மணம் பொருந்திய கூந்தலை உடையவள்

1. இக்கோயில் குறித்த தகவல்களை வழங்கியவர்: நாகநாதக் குருக்கள் மகன் ஐயாசாமிக் குருக்கள், எழுவன்கோட்டை (தலையிருக்க வாலாடக்கூடாது என்று நினைக்கும் தகைமையாளர்)

உ

கந்தமலர் சூடும் மந்திக் கறுப்பர்

(103. மந்திக் கறுப்பர், ஆலடிக் கறுப்பர் திருக்கோயில்கள், கோட்டூர்)

சிவமூர்த்திக்கு இந்திரனிடம் ஏற்பட்ட கோபத்தின் விளைவாகத் தோன்றிய சலந்திரன் என்பவன் பிரமனிடம் பல வரங்கள் பெற்றுச், சிவபெருமானையே எதிர்க்கத் துணிகிறான். அந்நேரத்தில் அவன் எதிரே கிழ வேதியராகச் சென்ற சிவமூர்த்தி, சிவனை எதிர்க்கு முன்னர், முதலில் நிலத்தில் தாம் கீறிய ஒரு வட்டத்தைப் பெயர்த்து எடுக்குமாறு அவனிடம் கூற, அவன் அதைப் பெயர்த்து எடுத்தபோது, தலை அளவு வந்த நேரத்தில், அதுவே சக்கரமாக மாறி அவனைக் கொல்கிறது. அந்தச் சக்கரத்தைச் சிவபெருமானிடமிருந்து பெற்ற திருமால், குபன் என்னும் அரசன் காரணமாகத் ததீசி முனிவருடன் போரிட்டபோது அதை இழக்க நேரிடுகிறது. பின்னர், நாள்தோறும் ஆயிரம் தாமரை மலர்களால் சிவபெருமானை அருச்சித்து வழிபட்டுச், சுதர்சனம் என்னும் அந்தச் சக்கராயுதத்தைத் திருமால் திரும்பப் பெற்றார் என்று கூறுவர்.


சலந்தரனைக் கொன்றபோது, அவன் உடலில் பெருகிய இரத்தக் கறை படிந்ததனால், அந்தச் சக்கராயுதம் புலால் நாற்றத்தைக் கொண்டிருந்ததாம். அதனால், சிவபெருமானிடமிருந்து திருமால் திரும்பப் பெற்ற சுதர்சனச் சக்கரத்தைக், காஞ்சிபுரத்திலுள்ள விகடசக்கர விநாயகர் திருமாலிடமிருந்து பெற்று, அதில் இருந்த புலால் நாற்றத்தைத், தம் (ஒழுகும்) மதநீரால் மாற்றி மணம் ஊட்டினார் என்று காஞ்சிப் புராணம் கூறுகிறது.[1]

கறுப்பர் குருதிப்பலி விருப்பராகையால், அவர் வீற்றிருக்கும் புனித மேடையில் (புலால் நாற்றம் இருக்கக்கூடும்; கோட்டூரில் மந்திக் கறுப்பர் என்னும் மாகாளர் குடிகொண்டிருக்கும் இடம் சிவாலயம் ஆதலால், அங்கு புலால் நாற்றம் இருத்தலாகாது என்று கருதி, அப்புலால் நாற்றத்தை மாற்றி) நறுமணம் கமழச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில், கந்தவிடி[2]யாகிய நறுமணப் பொருளை மெய்யன்பர்கள் கறுப்பருக்குச் சாத்தத் தொடங்கியிருக்கலாம்; மணப்புகை எழுப்பும் சாம்பிராணிப் புகையைக் கறுப்பர் திருமுன்னே எழுப்புவதும், இக்கருத்தை வலியுறுத்தும்[3] என்றும், உயிர்ப்பலி கொடுக்கும் இரத்த மணம் ('கவிச்சி') (சந்நிதியில்) இருக்கக்கூடாது என்பதற்காகத் தான் கந்தவெடி தூவுகின்றனர்[4] என்றும் கூறப்பெற்ற கருத்துகளைப் படித்தபோது — கேட்டபோது, மேற்காணும் காஞ்சிப் புராணப்

பாடல் நினைவுக்கு வந்தது. உஜ்ஜைனியிலுள்ள மகாகாளருக்கு (சிவன்) நாள்தோறும் சுடலைப்பொடி தூவப் பெறுவது போன்று, அவர் பெயரைக் கொண்டுள்ள ம(க)ாகாளர், பக்தர்களால் நாள் தோறும் நறுமணத்தூள் (கந்தவிடி, கந்தவடி, கந்தவெடி, கந்தப்பொடி) தூவப்பெறுவதோடு, மேலும் பல தனித்தன்மைகளையும் தமக்கெனப் பெற்றுள்ளார்!

* * *

திருப்புத்தூரிலும் (திருத்தளிநாதர் கோயிலுக்கு அருகில் அமைந் துள்ள கோட்டைக் கறுப்பர்), கண்டதேவியிலும் (சுவர்ணபுரீசுவரர் கோயிலுக்கு எதிரில் உள்ள தேரடிக் கறுப்பர்), சிவாலயங்களுக்கு வெளியே சற்றுத் தள்ளியே குடிகொண்டிருக்கும் கறுப்பர், வைர வன்பட்டியில் சிவன் கோயிலின் திருச்சுற்றுச் சுவரை ஒட்டி நெருக் கமாக வந்து, தேவகோட்டையிலிருந்து ஏறத்தாழ ஏழு கி.மீ. தொலை வில் உள்ள கோட்டூரில், அகத்தீசுவரர் கோயிலுக்குள்ளேயே வந்து அருளாட்சி செய்கிறார். சிவன்கோயில்களில் ஆஞ்சநேயர்கூட இடம் பிடித்திருக்கிறார்; (சுசீந்திரத்தில் உள்ள தாணுமாலயன் கோயிலில் சுதையினாலான பெரிய ஆஞ்சநேயர் அமைந்திருப்பதைப் பலர் அறிந்திருப்பர்!) ஆனால், நகரத்தார்களின் குலதெய்வங்களில் ஒரு



மந்திக் கறுப்பர் என்னும் மாகாளர் சரித்திரம்

நன்றி: கோட்டூர் அகத்தீசுவரர் கோயில்

வரான கறுப்பர், (எளியேன் அறிந்தவரை) இந்த ஒரு கோயிலில் தான் இடம் பிடித்திருக்கிறார்!

1898ஆம் ஆண்டில் எழுதப்பெற்ற கோட்டூர்ப் புராணத்தில்,[5] மாகாளர் வரலாறு வரையப் பெற்றுள்ளது. கந்த புராணத்தின் அசுர காண்டத்திலுள்ள ஐயனார் — மாகாளர் வரலாற்றினை அடியொற்றி அமைந்துள்ள கோட்டூர்ப் புராணத்தின் மாகாளப் படலம், முடிவில் மட்டும் சிறிது மாற்றத்தைக் கொண்டுள்ளது.

இந்திராணிக்குக் காவல் இருந்த மாகாளர், சூரனின் தங்கையான அசமுகி, இந்திராணியைக் கடத்திச் செல்ல முயன்றபோது, இந்திராணியைப் பிடித்த அசமுகியின் கரத்தைத் துண்டித்தார்[6] என்பதை, முன்னர் அறிந்திருக்கிறோம். அசமுகி அங்கிருந்து அகன்ற பின்னர், 'உன் கணவன் வரும்வரையும் நான் உன்னைக் காப்பேன்' என்று சொல்லி மாகாளர் வேறு இடத்துக்குப் போனார்[7] என்பதோடு, கந்த புராணத்தில் மாகாளர் பாத்திரம் நிறைவு பெறுகிறது. ஆனால் கோட்டூர்ப் புராணத்தில் இந்நிகழ்வு தொடர்கிறது. அசமுகியின் கரத்தை மாகாளர் துண்டித்தது ஒரு சிவராத்திரி நாள் என்றும், அதனை அறிந்த மாகாளர் தேவர்களுடன் சென்று, அகத்தீசரை (கோட்டூர் இறைவன்) அபிஷேகம் செய்து வழிபட்டார் என்றும், அப்போது அகத்தீசர் வெளிப்பட்டு 'இந்தக் கோயிலின் தென்மேற்கு மூலையில் நீ இருந்து வருவாயாக!' என்று அருள் புரிந்ததாகவும் கோட்டூர்ப் புராணம் கூறுகிறது.

இதன்வழி, மகாசிவராத்திரியோடு ஐயனாரின் அவதாரம் தொடர்பு படுத்தப் பெறுவது போன்று, மாகாள(பெரிய கறுப்ப)ருக்குச் சிவபெருமான் அருட்காட்சி கொடுத்த நாளாகவும் அமைந்து, சிவனுக்குரிய அந்தப் புனித நாள், கறுப்பருடனும் தொடர்பு கொண்டு விடுகிறது! இக்காரணங்களாலேயே குலதெய்வக் கோயில்களில் (ஐயனாரோ, கறுப்பரோ, எக்கோயிலாயினும்) மகா சிவராத்திரி சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது; நகரத்தார்களும் அதிக அளவில் கலந்து கொள்கின்றனர் என்று நினைக்கத் தோன்றுகிறது!

* * *

தேவகோட்டையிலிருந்து சருகணி — சிவகங்கை செல்லும் சாலையில் ஐந்து கி.மீ. சென்று வலப்புறம் கல்லலுக்குச் செல்லும் சாலையில் திரும்பிச் சுமார் இரண்டு கி.மீ. சென்றால், கோட்டூர் கிராமத்தை அடையலாம். அங்கு அகத்தீசர் கோயிலும், குளமும் ஊரின் எல்லையை ஒட்டி உள்ளன.

அகத்தீசர் கருவறையின் வலப்புறம், தென்மேற்கு மூலையில் அமைந்துள்ளது, மாகாளர் என்னும் மந்திக் கறுப்பர் சந்நிதி. அழகிய விமானத்தைக் கொண்ட சிறிய சந்நிதி; சுற்றிலும் கம்பி அடைப்பு; எங்கிருந்தும் எப்படியும் இவரை வழிபடலாம்.

அகத்தீசுவரர் கோயில் திருப்பணி செய்யப் பெற்றுக், கி.பி. 1818ல் முதல் திருக்குட நீராட்டு நடைபெற்ற நேரத்திலேயே, மாகாளரின் சந்நிதியும் அங்கு இடம் பெற்றிருந்ததாகக் கூறப்பெறுவது,[8] இச்சந்நிதியின் தொன்மையைப் புலப்படுத்துகிறது. தொடர்ந்து 1880, 1920, 1950, 1971ஆம் ஆண்டுகளிலும், 10.07.1987லிலும்

குடமுழுக்குகள் நடைபெற்றுள்ள[9] இக்கோயிலுக்குக் காஞ்சி சங்கராச்சாரிய சுவாமிகள் (68ஆவது பீடாதிபதி) 08.06.1961ல் வருகை புரிந்தது, வரலாற்றில் பொறிக்கப்பெற வேண்டிய ஒரு புனித நிகழ்வு![10]

'கருநிறத்தன் கரத்து அரி வாளினன், உருமு வொத்த உரத்த குரலினன், திருகு மீசையன் செங்கச் சுடையன்'[11] என வருணிக்கப்பெறும் மாகாளரை உருவமற்ற கற்பீட வடிவிலேயே இங்கு கண்டு வழிபட முடியும்.

கறுப்பர் சந்நிதிக்கு உள்ளே சதுரமான கல்மேடை; அம்மேடையின் இடப்புறம் (வடக்கில்) மாகாளரைக் குறிக்கும் கற்பீடம் உள்ளது. இப்பீடத்தின் பின் ஒரு திருவாசியும், அதன் வலப்புறம் மற்றொரு (சிறிய) திருவாசியும் காணப்பெறுகின்றன. கறுப்பரின் திருவாசியில் வெண்கலத்தினாலான குடை, கொடி முதலியவை வைக்கப்பெற்றுள்ளன. கல்மேடையின் கீழே சில அரிவாள்களோடு, இரு பாதகுறடுகளும், இரு சிலம்புகளும் காணப்பெறுகின்றன. அடுத்துள்ள வெற்றிடம் (திருவாசி மட்டும் உள்ள இடம்) காளிக்குரியதாகக் கருதப் பெறுகிறது. (கத்தப்பட்டுக் கோயிலில் தொட்டியத்துக் கறுப்பருக்கு வலப்புறம் காளி இருப்பதாகக் கருதித் தீபாராதனை காட்டப்பெறுவதை மறந்திருக்கமாட்டீர்கள்.)

நாம் கோட்டூர்ப் புராணத்தைக் காட்டி, ஐயனாரின் மூத்த துணைவர் மாகாளர் என்று சொல்லி, இந்திராணியைக் காப்பாற்றியவர் என்று ஏற்றங்கொடுக்கும் நேரத்தில், கோயில் குருக்கள் புதியதொரு புதிரைப் போடுகிறார்.

இந்தக் கறுப்பரை ஆதியில் மலையாளத்திலிருந்து மலையாளத்துக் கறுப்பராகக் கொண்டு வந்திருக்கிறார்கள்; அதிலிருந்தே இப்படிப் பீடமாகத்தான் இருந்து வருகிறது என்கிறார் அவர்.[12] இக்கூற்றைத் தவறு என்று கூறி ஒதுக்கித் தள்ளி விடவும் முடியாது. காரணம், பெரும்பாலான குலதெய்வக் கோயில்களில் உள்ள கறுப்பர் சந்நிதிகளுக்குக் கூறப்பெறும் தகவல்தான் இது! மேலும், (தல)புராணங்கள் என்பவை, அந்தந்தத் தலத்துக்கு ஒரு சிறப்பை — ஒரு பெருமையை — ஓர் உயர்ந்த தோற்றத்தை உருவாக்க எழுந்தவைதாமே?[13]

* * *

தேவகோட்டை (இளையாற்றங்குடிப் பெருமருதூருடையார்), வெற்றியூர் (சுமார் 45 புள்ளிகள்) நகரத்தார்கள் மொத்தம் சுமார் 100 புள்ளிகளும், திருமணவயல், அனாசிவயல், காரை, பூங்குடி, சின்னக்கோட்டூர், நயினார் வயல் ஆகிய ஊர்களின் அம்பலக்காரர்களும் மாகாளரைக் குலதெய்வமாகக் கொண்டுள்ளனர்.[14] கல்லல் நகரத்தார்களும்கூட இக்கோயிலுக்கு அடிமைப்பட்டிருப்பார்கள் போலிருக்கிறது.[15]

மாகாளர் என்பது பெரிய கறுப்பரைக் குறிக்கும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் மாகாளர் என்ற மந்திக் கறுப்பர் என்று இவரை அழைக்கின்றனரே, ஏன்? இதற்கு மறுமொழி யாரும் தெரிவிக்கவில்லை.

சிவாலயத்தில் நான்கு காலப் பூசை நடைபெற்றாலும், இக்கறுப்பர் சந்நிதியில் மாலையில் மட்டுமே ஒருவேளைப் பூசை நடைபெறுகிறது. வெள்ளிக்கிழமை மட்டும் கோயில் திட்டத்தில் இவருக்கு அபிஷேகம் உண்டு. மற்ற நாட்களில் பக்தர்கள் நேர்ந்து கொண்டு அபிஷேகம் செய்தால்தான் உண்டு.[16] இடைநாட்களில் அபிஷேகம் இல்லாவிடில் சாத்துப்படிகளைக்கூடக் களைவதில்லையாம்![17] சிவன் கூடத் தாம் சூடிக் களையும் மலர் மாலைகளைச் சண்டிகேசுவரருக்குக் கொடுக்கிறார்; ஆனால், மாகாளருக்குச் சாத்தப்பெறும் எந்த நிருமாலியமும், யாருக்கும் கொடுக்கப் பெறுவதில்லையாம். திருநீறு மட்டும்தான் இங்கு கொடுப்பார்கள்.

மாசி மாத மகா சிவராத்திரியின்போது எல்லா ஊர் நகரத்தார்களும் இங்கு வந்து, மூன்றாவது காலத்தில் கறுப்பருக்கு அபிஷேகங்கள் செய்து, வெள்ளி அங்கிகள் சாத்தி வழிபடுகிறார்கள். நேர்ந்து கொள்வோர் வெள்ளியினாலான அரிவாள்கள், பாதகுறடுகள் ஆகியவற்றைக் காணிக்கையாகச் செலுத்துவது உண்டாம். நகரத்தார்கள் இந்த நாளில் (இடைப்பட்ட நாட்களிலும்கூட) குழந்தைகளுக்குத் தொட்டில் கட்டுவது, பெயர் கூப்பிடுவது உண்டாம். மறுநாள் காலை அருகிலுள்ள கிராமங்களின் மக்கள் காவடி ஏந்தி வந்து பூக்குழி இறங்கி வழிபடுவார்களாம்.

சிவன் கோயிலில் இந்த மாகாளர் வந்து சிக்கிக் கொண்டிருப்பதால், இவருக்கு உயிர்ப்பலி கொடுக்கப் பெறுவதில்லை. நகரத்தார்கள் எப்போதுமே இங்கு (வெளியில்கூட) அந்தப் பாவத்தைச் செய்வதில்லையாம்; ஆனால் மற்றவர்கள், கறுப்பருக்குப் பலி கொடுக்காதிருப்பதைத் தானே பெரும் பாவமாகக் கருதுகின்றனர்? அதற்காகத்தான் அருகில் அமைந்திருக்கிறது, ஆலடிக் கறுப்பர் கோயில்.

தேவகோட்டையிலிருந்து வந்து கோட்டூர் அகத்தீசுவரர் (மாகாளர்) கோயிலுக்குச் செல்லுவதற்கு (அரைக் கிலோமீட்டர் தொலைவு) முன்னதாகவே, வலப்புறம் அமைந்துள்ளது இக்கோயில். ஓர் ஓட்டுக்கூடத்தில் ஆலடிக் கறுப்பரும், அருகில் திறந்த வெளியில் ஏனைய தெய்வங்களும் இடம் பெற்றுள்ளனர்.

மாகாளரைப் போன்றே இந்த ஆலடிக் கறுப்பரும், பீட வடிவில்தான் காட்சி தருகிறார். அருகில் ஆல மரங்கள் சில உள்ளன. ஆல மரத்தின் அடியில் கோயில் கொண்டிருப்பதால், இவர் ஆலடிக் கறுப்பர் ஆனாரோ?

இவருக்கு அன்றாடம் பூசை கிடையாது! நேர்ந்து கொள்வோர் வந்தால் மட்டுமே, கள்ளர்களான பூசாரிகள் வந்து பூசை செய்வார்கள். இருந்தாலும், செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் மட்டுமே பலி கொடுக்கப் பெறும்!

உங்களுக்கு நல்லகாலம் வருமா, வாழ்வு வளம் பெறுமா என்று தெரிந்து கொள்ள, நீங்கள் ஜோதிடர்களை நாடிப் போகவேண்டாம்! (ஜோதிடர்கள் மன்னிப்பார்களாக!) ஆலடிக் கறுப்பரை நாடினால், அதைத் தெரிந்து கொண்டு விடலாம்.

கோட்டூர்க் கறுப்பர் கோயிலிலிருந்து, ஆலடிக் கறுப்பர் கோயிலுக்கு உயிர்ப்பலி கொடுப்பதற்காகச் சாமியாடியுடன் செல்வார்களாம்.

அப்போது கொதிக்கும் சர்க்கரைப் பொங்கல் உள்ள பாத்திரத்தில் சாமியாடி கையை வைத்து, அதை அடித்துச் சிதறச் செய்வாராம்; அந்த நேரத்தில் யார் மீதெல்லாம் அந்தச் சிதறல் விழுகிறதோ, அவர்கள் வாழ்வு ஒளி மயமாக இருக்குமாம்!

மேலும், சிவராத்திரிக்கு அடுத்த நாள் அரிவாள்மீது ஏறி நின்று, (யாரென்று அறியாமலேயே சிலரை நோக்கிச்) சாமியாடி கூறும் அருள்வாக்குகள், ஆலடிக் கறுப்பரின் அருளினால், 'நிச்சயம்' பலிக்குமாம்! இதை 'ஆட்டுப்பாட்டு' என்று கூறுகின்றனர்.[18]

இந்த ஆலடிக் கறுப்பர் கோயிலின் ஓட்டுக்கூடத்திற்கு வெளியில், சின்னக் கறுப்பர், காளியம்மா, சோனையா, செவிட்டு முனி போன்றோர், சிமெண்டினாலான திண்டு போன்ற அமைப்பில், திறந்த வெளியில் குடிகொண்டிருக்கின்றனர்.

* * *

திருத்தேர்வளை என்னும் ஊரில் கோயில் கொண்டுள்ள ஆகாச முத்துக் காளிக்குச் (ஆகாயத்தை நோக்கிய வண்ணம் அவளது திரு முக மண்டலம் அமைந்திருப்பதே இப்பெயருக்குக் காரணம்.) சூலாடு தான் பலி கொடுப்பது வழக்கமாம். அந்தக் காளி, அதற்கு ஒரு படி மேலே சென்று, நிறை மாதக் கர்ப்பிணிப் பெண் ஒருத்தியையே தனக்குப் பலி கொடுக்குமாறு, அவளைக் குலதெய்வமாகக் கொண்ட சிவாச்சாரியார் குடும்பம் ஒன்றைக் கேட்க, அவர்கள் அவளுடன் பேரம் பேசிச் சூலாட்டுப் பலிக்கு அவளை இணங்க வைத்து, அதைச் செய்து வந்தார்களாம். இப்போது, அது கோழிப் பூசையில் வந்து நிற்கிறதாம்! ஆண்டுக்கொருமுறை சிவாச்சாரியார் குடும்பத்தினரே கோழி வாங்கிப் பூசாரியிடம் கொடுத்துப் பூசை போடச் சொல்கின்றனராம்.

குருக்களே கூறிய கதை இது!..... குமட்டல் எடுக்கிறதா? வாருங்கள், கோட்டூர்க் கோயிலில் நறுமணத்தூள் (கந்தவிடியோ, வடியோ?) விற்கிறார்கள், அதை வாங்கி மாகாளருக்குத் தூவிவிட்டுச் செல்வோம்!

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

1. பலவு நீள்பொழில் தீங்கனி தேன்பலா
   மாங்கனி பயில்வாய
   கலவ மஞ்ஞைகள் நிலவுசொற் கிள்ளைகள்
   அன்னஞ்சேர்ந்(து) அழகாய
   குலவு நீள்வயற் கயல்உகள் கோட்டூர்நற்
   கொழுந்தேஎன்(று) எழுவார்கள்
   நிலவு செல்வத்த ராகி,நீள் நிலத்திடை
   நீடிய புகழாரே.

திருச்சிற்றம்பலம்

— 2ஆம் திருமுறை

2. மங்கலங்கள் பொங்கிவர மனைகாக்கும் கறுப்பணனே!
வங்காளக் கடல்போல வளங்கொடுக்கும் தாயகமே!
சிங்காரத் தமிழாலே திருவடியைப் போற்றுகிறோம்,
இங்கின்றே அருள்பொழிய எழுவாய் இதுசமயம்!

— டாக்டர் அர. சிங்காரவடிவேலன்

3. வானவர் தலைவிதன் மானத்தைக் காக்கவே
வாள்தொட்ட கைகள் வாழ்க!
வந்தாடும் பேய்களை நெஞ்சேறி மிதித்திடும்
வலுவான கால்கள் வாழ்க!
தானென்று முறைமீறும் தருக்கரை ஒடுக்கியே
தலைவாங்கும் வாளும் வாழ்க!
தாள்ஒன்றிக் கதறுவார் தம்குரல் என்றென்றும்
தான்கேட்கும் செவிகள் வாழ்க!
நானுண்டு எனச்சொல்லி நலிந்தாரைக் காக்கின்ற
நயமான தோள்கள் வாழ்க!
நாடிஒரு பூக்கட்ட நல்லவழி காட்டுமோர்
நல்லருட் சிந்தை வாழ்க!
கானென்றும், ஊரென்றும், கடலென்றும், நிலமென்றும்
கருதாத கறுப்பர் வாழ்க!
கழனிசூழ் கோட்டூரில் காவல்புரி தெய்வமே,
கறுப்பண்ண சுவாமி துரையே!

— திருவையாறு மீயன்னா சேவகன் செட்டி

குறிப்பு விளக்கம்:

கந்தம் — நறுமணம்

1. 'விழிமலர்ப்பூ சனைஉஞற்றித், திருநெடுமால்
பெறும்ஆழி மீள வாங்கி,
வழிஒழுகாச் சலந்தரன்மெய்க் குருதிபடி
முடைநாற்றம் மாறும் ஆற்றால்
பொழிமதநீர் விரை ஏற்றி......' — காஞ்சிப் புராணம்

2. கந்தவடி என்பது நறுமணப்பொடி. இடிக்கப்படுவது இடி; அந்த முறையில் நறுமணப் பொருட்கள் இடித்துச் சாத்தப் பெறுவதால் கறுப்பருக்குரிய நறுமணப்பொடி, கந்தவிடி என்று வழங்கப்பெற்று நாளடைவில் கந்தவடி ஆகியிருக்கலாம் — டாக்டர் அர. சிங்காரவடிவேலன்
(கந்தவடி — வாசனைத் தைலம் — தமிழ் மொழி அகராதி, கழகத் தமிழ் அகராதி)
ஓம வாசனைத் திரவியங்கள் நிறையக் கலந்த இந்தத் தூளைக் கந்தப்பொடி என்கிறார் ஏ. கிருஷ்ணமூர்த்திக் குருக்கள்
(இலவங்கப் பட்டை சிறுசிறு துண்டு, மல்லிகை மொட்டு, செண்பக மொட்டு, ரோஜா மொட்டு, பூலாங்கிழங்கு ஆகியவற்றை வெயிலில் உலர்த்தி இடித் துத் தூளாக்கி, அதில் அத்தர் முதலிய நறுமணப் பொருட்களைக் கலந்து கந்தவிடி தயாரிக்கப்பெறுகிறது. -டாக்டர் அர. சிங்காரவடிவேலன்)

3. டாக்டர் அர. சிங்காரவடிவேலன், மந்திக்கறுப்பர் வருகைப் பதிகத்தின் முக வுரையில்

4. திருமதி ஏகநாதன், தேவகோட்டை

5. தஞ்சாவூர் சதாவதானம் சுப்பிரமணிய ஐயர் இயற்றியது. — தகவல்: சொ.சொ. மீ. சுந்தரம், கோட்டூர்க் கும்பாபிஷேக மலர் 1987
6. இந்திராணியைப் பற்றி இழுத்துச் சென்ற அசமுகியின் கையை மாகாளர் வெட்டித் தள்ளினார் என்று கந்த புராணம் கூறுகிறது. ஆனால் கோட்டூர்ப் புராணத்தில், அசமுகி இந்திராணியை இழுத்துச் செல்ல, அதனால் மயங்கிய நிலையில் இருந்த மாகாளர், 'மாகாளனே! உடை வாளினால் இந்தப் பாதகி கையை வெட்டு' என்று எழுந்த அசரீரி கேட்டுத் துள்ளி எழுந்து அவள் கரத்தைத் துண்டித்தார் என்று சொல்லப் பெறுகிறது. ஆதாரம்: கும்பாபிஷேக மலரில் சொ.சொ.மீ. எழுதியுள்ள 'கோட்டூர்ப் புராணம்' கட்டுரை.
7. '.......அன்னைஉன் தலைவன்
புகுதும் எல்லையும் அளிப்பன்ஈண்(டு) உறைகென்று போனான்' — கந்த புராணம்
8. மா.பழ. மாயாண்டியின் 'கோட்டூர் நயினார் வரலாறு' கட்டுரை, கும்பாபிஷேக மலர் 1987
9. மா.பழ. மாயாண்டி செட்டியார், தேவகோட்டை
10. கோட்டூர் அகத்தீசுவரர் கோயில் கும்பாபிஷேக மலர் 1987
11. கோட்டூர்ப் புராணம்
12. ஏ. கிருஷ்ணமூர்த்திக் குருக்கள், கோட்டூர்
13. 'புராணங்களைப் பணிவோடு, மரியாதையோடு, அதனால் பயனடைய வேண்டும் என்ற எண்ணத்தோடு படித்தால் குழப்பம் எதுவும் உண்டாகாது...... கொஞ்சம் கூட்டிக் குறைத்துச் சொல்லியிருந்தாலும், அதுவும் கூட நல்ல உத்தேசத்துடன்தான் என்று புரிந்து கொள்வோம்' — காஞ்சிப் பெரியவர் — தெய்வத்தின் குரல், இரண்டாம் பகுதி
14. மா.பழ. மாயாண்டி செட்டியார்
15. ஏகநாதன், தேவகோட்டை
16. ஏ. கிருஷ்ணமூர்த்திக் குருக்கள்
17. ஏகநாதன்
18. திருமதி ஏகநாதன்

—

உ

கருதுவார்க்கு ஆற்றஎளிய கருங்கமுடைய ஐயனார்

(104. கருங்கமுடைய ஐயனார் திருக்கோயில், புளியங்குண்டுபட்டி)

உயிர்ப்பலி இல்லாத குலதெய்வக் கோயில்கள் மிகச் சிலவே உள்ளன; அவற்றில் இரு கோயில்களில், 'கோயில் எல்லைக்குள் பலி இடுவது குற்றமாகும்' என்று எழுதப்பெற்ற அறிவிப்புப் பலகை கூடக் காணப்பெறுகிறது!

இது ஒரு மகிழ்ச்சி தரக்கூடிய செய்திதான் என்றாலும், இதற்கான பின்னணி மகிழ்ச்சியூட்டுவதாக இல்லை.

சோனையாவுக்குக் கோழி பலியிட்டதில் ஏற்பட்ட தகராறு, நீதி மன்றம் வரை சென்று, கோயில் நிர்வாகம் வேளார்களுக்கே உரியது என்று தீர்ப்பு வழங்கப் பெற்றதைத் தொடர்ந்து, ஊரார் இக்கோயிலுக்கு வருவதில்லை; அதன் விளைவாக ஏற்பட்டதே இந்தத் தடை.

மேலும், சித்திராப் பௌர்ணமியன்று நடைபெற்று வந்த ஊராரின் காவடி எடுப்பு, மஞ்சு விரட்டு ஆகியவை, இன்னமும் நடைபெறுகின்றன என்றாலும், கோயிலுடன் உள்ள தொடர்பு துண்டிக்கப் பெற்றுவிட்டது. அவர்கள் (ஊரார்), கோயிலுக்கு அருகில் உள்ள ஓர் ஆலமரத்தடியில் அரிவாள் ஒன்றை நட்டுவைத்து, அங்கு காவடிகளைச் செலுத்தி மஞ்சுவிரட்டு நடத்தி மகிழ்வதோடு நிறுத்திக் கொள்கின்றனர்.

அதற்காக அரண்மனை சிறுவயல், புளியங்குண்டுபட்டியில் உள்ள கருங்கமுடைய ஐயனார் கோயிலில் நிகழும் சித்திராப் பௌர்ணமி விழா தன் சிறப்பினை இழந்துவிடவில்லை. சிறு அளவில், காவடி எடுத்தல் போன்றவையும் இங்கு நிகழத்தான் செய்கின்றன!

* * *

க்ாரைக்குடி (சூரக்குடிக் கோயிலார்) அ.சிறுவயல், தேவகோட்டை நகரத்தார்கள் குலதெய்வமாக வழிபடும் இந்தக் கருங்கமுடைய ஐயனாரின் பெயர், முதலில் 'கருங்கம்புடைய ஐயனார்' என்றே இருந்ததாம். கருங்காலிக் கம்பிலிருந்து தோன்றியவர் (!) என்னும் பொருள்பட இப்பெயர் அமைந்திருந்ததாம்.

ஆதி ஐயனார் குடும்பத்தினர் (ஐயனார், தேவியர், யானை, பலி பீடம், மற்றும் கறுப்பர் ஆகிய எல்லா மூர்த்தங்களுக்குமே ஒய்வு கொடுக்க வேண்டிய காரணம் என்ன? எல்லாச் சிலைகளுமா சேத முற்று விட்டன?) பின்னால் உள்ள ஒட்டுத் தாழ்வாரத்திற்குக் குடி பெயர்ந்ததை ஒட்டி, அந்தக் காலகட்டத்தில் பெயர் மாற்றமும் ஏற் பட்டிருக்குமோ? (சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர், சிலை மாற் றம் நிகழ்ந்திருக்கலாம் என்று அர்ச்சகர்[1] கூறுவது மிகைப்படுத்தப் பெற்றது போல் தோன்றவில்லையா?)

முன்னர் கூறப்பெற்ற மூன்று ஊர்களின் நகரத்தார்களுடன், மேலப் பூங்குடி, சிறுவயல் நாட்டாரும், இக்கோயிலைக் குலதெய்வக் கோயி லாகக் கொண்டுள்ளனர்.

கோயில் நிர்வாகம் குறித்த மனக்கசப்பு, நகரத்தார்களின் குலதெய்வ வழிபாட்டைக் குலைக்கவில்லை. நகரத்தார்கள் ஆண்டுதோறும் தவ றாமல் இங்கு வந்து வழிபடுகிறார்கள். ஆடிப்(மாதம் பதினெட் டாம்) பெருக்கன்று நகரத்தார்கள் பெரும்பாலானோர் இங்கு வந்து குழந்தைகளுக்கு முடியிறக்கித் தொட்டில் கட்டியும் வழிபடுகிறார்க ளாம். முன்பு, நிறையத் திருப்பணிகள் செய்துள்ள நகரத்தார்கள், இப்போதும் கோயிலுக்கு வேண்டியவற்றைச் செய்து வருகின்றன ராம்.

நற்சாந்துபட்டி நகரத்தார்கள் முன்பு 'சாமத்துப் பூசை' என்னும் ஒரு வழிபாட்டை நடத்துவது உண்டு என்றும், அதில் கோழி பலி கொடுப்பது உண்டென்றும், இப்போது அவர்கள் அதற்குள்ள பணத்தை உண்டியலில் போட்டுவிட்டுத் தீர்த்தம் எடுத்துச் செல் கின்றனர் என்றும் அர்ச்சகர் கூறுகிறார். அப்படியானால் அவர் களும் இக்கோயிலுக்கு அடிமைப்பட்டவர்களா?

* * *

அரண்மனை சிறுவயலிலிருந்து கல்லல், வெற்றியூர் செல்லும் சாலை யில் இரண்டு கி.மீட்டர் சென்று, வலப்பக்கம் திரும்பும் மண்சாலை யில் சுமார் 1½ கி.மீ. சென்றால் கருங்கமுடைய ஐயனார் கோயிலை அடையலாம்.

1969ஆம் ஆண்டில் நகரத்தார்கள் கோயிலைப் புதுப்பித்திருக் கின்றனர்; ஆனால் அப்போது திருக்குட நீராட்டு நடைபெறவில்லை என்று சொல்லப்பெறுகிறது. முதுமை நிலையை நோக்கி மெதுவாக நகர்ந்துகொண்டிருக்கும் கோயிலின் நுழைவாயில்மீது சிறிய கோபுர அமைப்புக் காணப்பெறுகிறது.

கருவறை, அர்த்த மண்டபத்தின் முன்னால், இடப்புறம் ஆஞ்சநேய ரும், வலப்புறம் ஐந்தலை நாகப் படுக்கையில் பள்ளி கொண்ட பெருமாளும் உள்ளனர்.

பக்தர்கள், தத்தம் நிலைக்கு ஏற்பத் தம்மை வழிபட்டு உய்யவேண் டும் என்பதற்காகத் திருமால் ஐந்து நிலைகளில்[2] தரிசனம் தருகி றார் என்பர். இவற்றுள் கோயில்களில் எழுந்தருளச் செய்யப் பெறும் உருவத் திருமேனிகள் அர்ச்சாவதாரம் எனப்பெறும். இந் நிலைக்கே ஏற்றமும் அதிகம் என்று வைணவர்கள் கூறுவர். ஆகம முறைப்படி இந்த உருவங்கள், நின்ற — இருந்த — கிடந்த திருக்

கோலங்களில் அமைய வேண்டும் என்பார்கள். இவற்றுள் சயனத் (கிடந்த) திருக்கோலங்கள் குறைவாகவே காணப்பெறும் என்றும் சொல்வர். அத்தகைய ஒரு சயனத் திருக்கோலத்தை இக்கோயிலில் காண்கிறோம்.

இடக்கை தலையைத் தாங்க, வலக்கை வலத்தொடை வரை நீண்டு காணப்பெறுகிறது. பக்தர்களை (அல்லது அர்ச்சகர்களையாவது) இடித்துவிடப் போகிறோமே என்று நினைத்துப் பெருமாள் கால் களை மடித்தே வைத்திருக்கிறார் போலும்!

ஐந்தலை நாகத்தணையில் ஐயன் அறிதுயில் கொள்கிறார் என்பதை மேலெழுந்தவாரியாகத் தெரிந்து கொள்ளலாமே தவிர, வேறு அங்கங்களையோ, அழகையோ அனுபவிக்க முடியாதபடி அமைந்த சிலை. அதைப் பெரிதாக நினைத்துக் கொண்டிராமல், 'நாகத்து அணையானை நாள்தோறும் ஞானத்தால் ஆகத்து அணைப்பார்க்கு அருள்செய்யும் அம்மான்...'[3] என்று ஆழ்வார்கள் பாடும் அண் ணலை, நாமும் உள்ளத்தால் வணங்கி, உயர்ந்த அவன் அருளைப் பெறுவோம்!



ஐந்தலைவாய் நாகத்து நெடுங்காலம் கண்வளர்ந்தான்

அர்த்த மண்டபத்தில் விநாயகரும், கருவறையில் இரண்டாவது தலை முறையினரான ஐயனார் தம்பதியரும் இடம் பெற்றுள்ளனர்.

பிராகாரத்தில் வடமேற்கு மூலையில் உள்ள தனிச்சந்நிதி ஒன்றில் மற்றொரு விநாயகர், மண்டபத்தில் வீற்றிருக்கிறார்; சந்நிதியினுள் வள்ளி—தெய்வயானை சமேத முருகன் அருள்பாலிக்கிறார்.

மற்றும், தென்பிராகாரத்தில் முனிஐயா (மண் சிலை), பத்ரகாளி, குழந்தையுடன் பேச்சியம்மன், பெரிய — சின்னக் கறுப்பர்கள், மண்சிலையான வீரபத்திரர், பழைய கறுப்பர் சிலை, பழைய ஐய னார் — அம்பிகையர் சிலைகள், வடக்குப் பிராகாரத்தில் சப்த கன்னியர், சங்கிலிக் கறுப்பன், வடக்குப் பந்திக் காளி எனப் பல பரிவார தெய்வங்கள் இடம்பெற்றுள்ளன.

கோயிலுக்கு வெளியே சோனையனுக்குத் தனிச் சந்நிதி ஒன்று உள்ளது. முதலில் பரிவார தெய்வங்கள் அனைத்தும் மண்சிலைகளாகவே இருந்தன என்றும், அவை சேதமுற்றபோது கற்சிலைகளாக மாற்றப் பெற்றன என்றும், வேளார் கூறுகிறார். நல்ல வேளையாக, எந்தத் தெய்வமும், 'மண்சிலையிலிருந்து என்னை மாற்றாதே!' என்று உத் திரவிடவில்லை!

* * *

பக்தர்கள் அதிகம் வருவதில்லையோ என்னவோ, வெள்ளிக்கிழமை மட்டும்தான் காலை பத்து மணிக்குக் கோயில் திறக்கப்பெற்றுப் பூசை நடைபெறுகிறதாம்; மாலை வரை கோயில் திறந்திருக்கும். மற்ற நாட்களில் வழிபட வேண்டுமானால், அரண்மனை சிறுவயலி லிருந்து அர்ச்சகரை அழைத்துக் கொண்டுதான் செல்லவேண்டும்.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

புரிந்தமரர் தொழுதேத்தும் புகழ்த் கோன்காண்,
போர்விடையின் பாகன்காண், புவனம் ஏழும்
விரிந்துபல உயிராகி விளங்கி னான்காண்,
விரைக்கொன்றைக் கண்ணியன்காண், வேதம் நான்கும்
தெரிந்துமுதற் படைத்தோனைச் சிரங்கொண் டோன்காண்,
தீர்த்தன்காண், திருமால்ஓர் பாகத்தான் காண்,
திருந்துவயல் புடைதழுவு திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்,அவன்என் சிந்தை யானே.

திருச்சிற்றம்பலம்

— 6 ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

ஆற்ற — மிக
1. இக்கோயில் பற்றிய எல்லாத் தகவல்களையும் தெரிவித்தவர்: கோயில் அர்ச்ச கர் ஆதி.சுப. வேலு வேளார், அரண்மனை சிறுவயல்
2. பரத்துவம், வியூகம், விபவம், அந்தரியாமித்துவம், அர்ச்சை
3. திருவாய்மொழி, நம்மாழ்வார்

உ

நம்புமவர்க்கு அரும்பொருளே, நல்லுடைய ஐயனே!

(105. களத்தீருடைய ஐயனார் என்னும் நல்லுடைய ஐயனார் திருக்கோயில், களத்திவயல்)

நடுநிசி. திடீரென விழிப்பு ஏற்படுகிறது.
டக்டக்...டக்டக்...டக்டக்...குதிரையின் சீரான குளம்போசைதான் திடீர் விழிப்புக்குக் காரணம். குதிரை நிற்கிறது...இலேசான கனைப் பொலி. மீண்டும் டக்..டக்..

திடுக்கிட்டு எழுந்து பார்த்தால், பக்கத்தில் படுத்திருப்பவர்கள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கின்றனர். சிறிது தொலைவில் காணப்பெற்ற மண்குதிரைகளைத் தவிர, வேறு நடமாட்டமே இல் லாத அந்தப் பகுதியில், உயிருள்ள குதிரை செல்வதற்கான எந்த வாய்ப்பும் இல்லை!

படுக்கப் போகுமுன்னர் பார்த்த மண்குதிரை, கனவில் வந்து உலவி யிருக்கலாம்; அல்லது வீண் மனப்பிரமையாக இருக்கலாம். ஒரு வழியாக மனத்தைத் தேற்றிக் கொண்டு படுத்.... டக்டக்..டக்டக்..... கனைப்பொலி...

இங்கு எந்தப் பயமும் இல்லையென்று சொன்னார்களே? அதை நம்பித்தானே இரவு இங்கு தங்க இணங்கினோம்...ஐயனாரே!... ஐயனாரே!....
பகலெல்லாம் பல கோயில்களுக்குச் சென்றுவந்த களைப்பு..... பொங்கிவரும் பெருநிலவு போன்றஒளி முகத்து உறக்கம் என்னும் கன்னி அரவணைத்துக் கொண்டாள்.

★ ★ ★


'நேற்றிரவு நீங்கள் கனவு காணவும் இல்லை; மனப்பிரமையும் இல்லை. இங்கு படுத்திருந்தோர் பலர் நடுநிசியில் இதுபோன்று குதிரையின் குளம்போசையைக் கேட்டிருக்கிறார்கள். அதற்குக் காரணமும் இருக்கிறது!'

திருச்சுற்றுச் சுவர் போன்ற எந்தப் பாதுகாப்பும் இல்லாத சில கோயில்களைப் போன்று, இப்போது நாம் வந்திருக்கும் களத்தி வயல் களத்தீருடைய ஐயனார் கோயிலிலும், மதில் சுவர் ஏதும்

கிடையாது. முன்னால் ஓர் ஓட்டுக்கூடத்தைக் கொண்ட கருவறை; அதன் வலப்புறம் சில சந்நிதிகள்; எதிரே இரு சேமங்குதிரைகள்; சுற்றிலும் வயல்; எதிரே குளம்; தொலைவில் கண்மாய்!

'இரவு இந்த மண்டபத்தில் சின்னக் குழந்தையைத் தனித்து விட்டுச் சென்றால்கூட, அக்குழந்தைக்கு எந்தத் தீங்கும் நேராது; குழந்தை பயப்படுவதுகூட இல்லை. ஐயனார் அவ்வளவு சக்தி வாய்ந்தவர்!' (அதை நம்பித்தானே இரவு இங்கு தங்கினோம்?)

* * *



காலதேவனாலும் அழிக்கமுடியாத கற்கோயில்

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில், இந்தப் பகுதியில் சாலை அமைக்கும் வேலை நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதன் மேற்பார்வையாளராக இருந்த ஆங்கிலேய அதிகாரி ஒருவர், இந்தக் கோயில் வழியே குதிரையில் போய்க் கொண்டிருந்திருக்கிறார். அப்போது இங்கு இந்த இரு சேமங்குதிரைகள் இருப்பதைக் கண்டு, ஏளனமாகச் சிரித்தவாறு, 'உனக்குப் போட்டியாக அதோ அங்கு இரு குதிரைகள் இருப்பதைப் பார்!' என்று தம் குதிரையிடம் கூறியிருக்கிறார். அதனுடன் அமையாது, ஒரு சேமங்குதிரையின் அருகில் சென்று சிறிது புல்லை நீட்டி, 'ம்...சாப்பிடு!' என்று அதட்டலாகக் கூறியிருக்கிறார். அடுத்த நிமிடம், மண் குதிரை அவர் நீட்டிய

புல்லைப் பறித்துத் தின்னப், பிரிட்டிஷ் அதிகாரியும், அவர் குதிரையும் அந்த இடத்திலேயே உயிர் துறந்தனராம்!

அதிலிருந்து நடுநிசியில் இந்தப் பகுதியில் குதிரையின் குளம்பொலி கேட்பதுண்டு.[1]

'எதிரே இரு குதிரைகள் உள்ளனவே, அவற்றில் எது புல் தின்ற குதிரை?'

'இரண்டில் ஒன்று!' — இதுதான் கிடைத்த மறுமொழி.

('இதுபோன்று புல் தின்ற குதிரை ஒன்றை முன்னர் எங்கோ பார்த்திருக்கிறோமே?....கருவியப்பட்டி கருவி ஐயனார் கோயிலில்.... உயிர் துறந்த சிப்பாய்களுக்கு நடுகற்கள்கூட வைத்திருந்தார்களே?....' 'சரியாகச் சொன்னீர்கள்! ஆனால் ஒரு வேறுபாடு. அங்கு அவர்களே உயிரைப் போக்கிக் கொண்டனர்; இங்கு தெய்வம் தண்டித்துவிட்டது என்கின்றனர். மேலும் இவர்களுக்கு வழிபாடு போன்ற எதுவும் கிடையாது.')

* * *

இந்தக் கோயில் ஏற்படுவதற்கு முன்னர் நடந்த ஒரு நிகழ்ச்சி. இந்த வழியாகப் பக்கத்தில் உள்ள கிராமத்துக்காரர்கள் பால் கொண்டு போவது உண்டு. ஒவ்வொரு முறையும் அவர்கள் கால் இடறித் தடுமாறிப், பால் கீழே கொட்டிக் கொண்டிருந்தது. இதில் ஏதோ மர்மம் இருக்கிறது என்றெண்ணிக் கிராமத்துக்காரர்கள் இந்த இடத்தைத் தோண்டியபோது, திடீரென இரத்தம் பீறிட்டது; பின்னர்தான் நிலத்தில் ஐயனார் சிலை புதையுண்டிருப்பதும், அதன் தலையில் வெட்டுப்பட்டுத்தான் இரத்தம் வெளிப்பட்டது என்பதும் தெரியவந்தன. தலையிலும், தோளிலும் வடுக்கள் உள்ள அந்த ஐயனார் சிலையை வைத்தே இந்தக் கோயில் எழுந்தது.

('கத்தப்பட்டு ஐயனார் கோயிலில் உள்ள சுயம்பு இலிங்கத்துக்கும், இதே போன்ற கதையைத்தானே கூறினார்கள்?')

* * *

கோயில் உருவான பின்னர் நடந்த ஒரு நிகழ்ச்சி.

நற்சாந்துபட்டி (வைரவன் கோயில் கழனிவாசற் பிரிவினர்) நகரத்தார்கள் இங்கு வழிபாட்டுக்காக வந்திருக்கிறார்கள். (ஆடி பதினெட்டில் இக்கோயிலுக்கு அடிமைப்பட்ட காரைக்குடி, நற்சாந்துபட்டி, தேவகோட்டை நகரத்தார்கள் பெரும்பாலும் வருவார்களாம்.) அவர்களில் சேவாத்தாள் என்னும் நிறை கர்ப்பிணியான பெண்ணும் ஒருவர்.

பிராகாரம் வரும்போது அந்தப் பெண் இறைவனுடன் ஐக்கியமாகி விட்டார். மகளைக் காணாத தகப்பனார் பன்முறை அழைத்தும் பதில் இல்லாது போகவே, மகளைத் தேடிப் போனபோது, தெய்வமாகிவிட்ட சேவாத்தாளின் காட்சி, அவருக்கு மட்டுமே தென்பட்டது. பின்னர் அவருக்கு இங்கு சிலை வைத்து நகரத்தார்கள் வழிபட்டு வருகிறார்கள். அந்தப் பங்காளிகள், ஊரில் படைப்பு நடத்துமுன்னர், இங்கு வந்து வழிபட்டுத் தீர்த்தம் எடுத்துச் செல்

கின்றனர். நற்சாந்துபட்டி நகரத்தார்கள் மட்டுமன்றி, எல்லா நகரத்தார்களுமே சேவாத்தாளைச் சேவிக்கின்றனர்.

('நிறைமாத கர்ப்பிணி என்று சொன்னாரே?'
'ஆமாம்'
'அப்படியானால் சிலையில் காணப்பெறும் மடியில் உள்ள குழந்தை?....')

'ஐயனார் சந்நிதியில் அபய பண்டிதர், வீரபத்திரர் ஆகியோரிடையே ஆதியாரம்மன் என்று ஒருவர் இருக்கிறாரே, அவரும் இப்படி....?'

'வேளார்களின் குலதெய்வம் அவர். எங்களில் ஒரு பிரிவினர் அவரை வழிபடுகிறார்கள்.'

* * *

'அதோ சற்றுத் தொலைவில் மண் மேடிட்ட பகுதி ஒன்று தெரிகிறது; அதில் கட்டடம் இருந்த அடையாளம்கூடக் காணப்பெறுகிறதே, அது என்ன?'

வயல்களுக்கிடையே வரப்புவழி வரவேண்டியிருக்கிறதே என்பதால், போகவர வசதியாகச் சிறிது தொலைவில் நகரத்தார்கள் புதிய கற்கோயில் ஒன்றை, 1930களில் கட்டினர்; இங்கிருந்து சுவாமிகளைக்கூட அங்கு எடுத்துச் சென்று பிரதிஷ்டை செய்து விட்டார்களாம். ஆனால் அது அனுகூலமில்லாது போகவே....

'இல்லை ஐயா, சுவாமிகளை அங்கு எடுத்துச் செல்லவில்லை; கோயில்தான் கட்டினார்கள். ஆனால் அது கட்டி முடியுமுன்னரே, அங்கு செல்ல விருப்பமில்லை என்று தெய்வவாக்குக் கிட்டியதால், அப்படியே.....'

இரண்டாவது வேளார் முடிக்குமுன்னரே, முதலில் வரலாற்றைத் தெரிவித்தவர் குறுக்கிட்டு, 'எனக்குத் தெரியும்.....' என்று கூறப் போக...

'பரவாயில்லை! சுவாமிகளை அங்கு வைத்தார்களா, இல்லையா என்பது முக்கியமன்று; புதிய கோயில் கட்டி அது பயன்படுத்தப் பெறாமல் பாழடைந்து கொண்டிருக்கிறது, அதுதானே முக்கியம்' என்று நாங்கள் கூற...

'உண்மைதான்! எனக்கு விவரம் தெரிய 1937லிலிருந்து அந்தக் கோயில் இப்படித்தான் காணப் பெறுகிறது!' என்று முதலாவது வேளார் கூறி முடித்தார்!

எத்தனை கோயில்கள் இப்படிப் பாழடைய விடப்பெற்றுள்ளன? காடு மலையாக இருந்தாலும், மக்கள் கஷ்டப்பட்டாவது வந்து வழிபடுவார்கள் என்று காஞ்சிப் பெரியவர்கள் கூறினார்களே; இந்த வயல் வரப்புதானா பெரிய பிரச்னை?

* * *

அரண்மனை சிறுவயல் ஊர் எல்லையில் வலப்புறம் திரும்பி மண் சாலையில் இரண்டு கி.மீ. பயணம் செய்து, களத்திவயலில் உள்ள களத்தீருடைய ஐயனார் கோயிலைச் சென்றடையலாம்.

இவரை நல்லுடைய ஐயனார், நல்லுடையப்பன், கண்கொடுத்த ஐயனார் என்றும் அழைக்கின்றனர்.

நற்சாந்துபட்டி நகரத்தார்கள், வைரவன் கோயிலின் கழனிவாசற் பிரிவினர் என்பது தெரிகிறது; அவர்கள்தாம் 03.03.1972ல் திருக்குட நீராட்டு நடத்தியிருக்கின்றனர்; அந்த ஊர் நகரத்தார் ஒருவர்தாம் கருவறைக்கு முன் உள்ள கூடத்தைக் கட்டியிருக்கிறார்; இனிக் கோயிலைச் சீர் செய்து குடமுழுக்கு நடத்தவும் நற்சாந்து பட்டி நகரத்தார்கள் முயன்று வருகின்றனர். இக்கோயிலுக்கு வரும் மற்ற ஊர் நகரத்தார்களில் மாத்தூர் கருப்பூர்ப் பிரிவினரும், நேமங் கோயிலாரும் இருப்பார்கள் போலிருக்கிறது. அரண்மனை சிறு வயல் நகரத்தார்களும் முன்பு இங்கு வந்து கொண்டிருந்தார்களாம்; பின்னர் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளால், இப்போது அவர்கள் இங்கு அதிகம் வருவதில்லையாம்.

முன்பு குறிப்பிட்டது போன்று திருச்சுற்றுச் சுவர் இல்லாத இக் கோயில் கருவறைக்கு முன் உள்ள மண்டபத்தில், வீரபத்திரர், அப்பயபண்டிதர், ஆதியாரம்மன் ஆகியோருடன், வள்ளி, தெய்வ யானை உடனாய சுப்பிரமணியர், விநாயகர், ஆஞ்சநேயர் ஆகி யோரும், கருவறையின் இடப்பக்கம் வயிரவரும் உள்ளனர். கரு வறையில் ஐயனாரும் தேவியரும் ஒரே கல்லில் அமைந்த உருவங் கள்.

கருவறை, அதன் முன் உள்ள ஓட்டுக்கூடம் ஆகியவற்றுக்கு வலப் புறம் உள்ள மூன்று சந்நிதிகளில் சேவாத்தாள் இருக்கும் சந்நிதி யைத் தவிர்த்து, மற்ற இரண்டும் காலியாகவே உள்ளன. அந்தச் சந்நிதிகள் பழுதடைந்திருப்பதால், அங்குள்ள மூர்த்தங்களை சந் நிதிக்கு வெளியில் வைத்திருக்கிறார்களாம். இச்சந்நிதிகளின் இடப் புறம், கறுப்பரின் பழைய சிலை உள்ளது.

கோயிலின் முன்புறத்தில் உள்ள சேமங்குதிரைகள் (இவற்றில் ஒன்று தான் புல் தின்றது!) கிழக்கு நோக்கிப் பயணத்துக்கு ஆயத்தமான நிலையில் உள்ளன. தெற்கே உள்ள சேமங்குதிரையின் அருகில் பெரிய கறுப்பர் காணப் பெறுகிறார்.

* * *

நாள்தோறும் ஒருகாலப் பூசை நடைபெறும் இக்கோயிலிலும், கோயில் வளாகத்தினுள் உயிர்ப்பலி கொடுப்பதில்லையாம். ஆனால் இங்கிருந்து தீர்த்தம் எடுத்துச் சென்று வீட்டிலோ, வேறு இடங் களிலோ சுவாமியை நினைத்துக் கிடாய் வெட்டுவார்களாம்!


மகா சிவராத்திரி மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெறும்போது, நகரத்தார்கள் அதிக அளவில் வந்து, குழந்தைகளுக்குக் கரும்புத் தொட்டில் கட்டி வழிபடுகிறார்களாம். நேர்ந்து கொண்டவர்கள் கும்பிடுகரணம் போடுவதும் உண்டாம்!

மறுநாள் காலை வேளார்கள் பாற்குடம், காவடி ஏந்தி வந்து, பூக்குழி இறங்கி, சுவாமிகளுக்கு நிறைய அபிஷேகங்கள் செய்தார் களாம், முன்பு!

எத்தகைய தொடக்கு (தீட்டு) உள்ளவர்களும், கண்மாயைத் தாண் டிக் கோயில் பகுதிக்கு வரமாட்டார்களாம். ஐந்து மாதத்திற்கு மேற்

பட்ட கர்ப்பிணிகள்கூட இங்கு வர அஞ்சுவார்களாம், குழந்தைக்கு ஏதேனும் அங்கவீனம் ஏற்பட்டுவிடுமோ என்று பயந்து!

* * *



நல்லுடையப்பனின் நயமிகு கோயில்

கருங்கமுடையவர் கோயிலிலும், இங்கும் ஆடி பதினெட்டைச் சிறப்பாகக் கொண்டாடுகிறார்களே, ஏன்?

கதிரவனின் இயக்கத்தை வைத்து ஆண்டின் பனிரெண்டு மாதங்களை உத்தராயனம், தக்ஷிணாயனம் என்று இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். கதிரவன் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நகர்ந்து செல்லும் காலத்தை — அதாவது தென்புறம் சாய்ந்து சஞ்சரிக்கும் காலத்தைத் தக்ஷிணாயனம் என்று சொல்வர். அந்த அயனத்தின் (செல்லும் வழி) தொடக்கமாக ஆடி மாதம் அமைகிறது.

பண்டைக் காலத்தில் விவசாய ஆண்டு என்பது ஆடியில் தொடங்கி ஆனியில் முடிவடைவதாகக் கருதினர். 'ஆடிப் பட்டம் தேடி விதை' என்று விவசாயிகள் கூறுவதும், உழவர்கள் பள்ளயம் போட்டு 'ஆடிப் பச்சை இடுதல்' என்று கொண்டாடுவதும், இம்மாதத்துடன் விவசாயப் பெருமக்களுக்கு உள்ள தொடர்பைப் புலப்படுத்துகின்றன. மேலும், 'ஆடி அழைக்கிறது பூசம் போகச் சொல்கிறது' (ஆடி மாதம் தொடங்கித் தை மாதம் வரை ஒரே பண்டிகை மயம்தான் என்பதை இது குறிப்பிடுகிறது) என்று பண்டிகைகளைப் பற்றிக் குறிப்பிடுவதையும் இங்கு நினைவுகூரலாம்.

ஆடி மாதம் அம்பாளுக்குச் சிறப்பானது. உத்தராயனத்தைச் சிவ அம்சமாகவும், தக்ஷிணாயனத்தைச் சக்தி அம்சமாகவும் கொள்வதே இதற்குக் காரணம்.

ஆடி பதினெட்டில் ஏற்படும் ஆற்றுப் பெருக்கைப் பண்டைக் காலத்தில் மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடி மகிழ்ந்திருக்கின்றனர். காவிரி ஆறு கரை புரண்டு வருவதைக் கண்டு, காவிரி அம்மன் மசக்கை கொண்டிருப்பதாகக் கூறிச் சித்திரான்னங்கள் தயாரித்து நிவேதனம் செய்வார்களாம்!

ஐயனார் கோயில்கள் கிராமப் புறங்களிலேயே பெரும்பாலும் அமைந்திருப்பதாலும், ஐயனார், வயல்வெளிகள் — நீர் நிலைகளின் காவல் தெய்வமாகக் கருதப் பெறுவதாலும், ஆடிப் பெருக்கை அவருடன் இணைத்துக் கொண்டாடுவதும் பொருத்தந்தானே!

பதினெட்டாம்படிக் கறுப்பருடன் தொடர்புடைய அழகர்கோயிலில் சிறப்பாகக் கொண்டாடப் பெறும் விழாக்களில் பதினெட்டாம் பெருக்கும் ஒன்றாகும். அதை ஒட்டியும் இங்கு ஆடி பதினெட்டைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர் என்றும் நினைக்கத் தோன்றுகிறது.

* * *

குலதெய்வக் கோயில்களில் ஒரு சில பெரிய கோயில்களைத் தவிர்த்துப் பெரும்பாலான சிறிய கோயில்களில், எப்போது பக்தர்கள் வருவார்கள் என்று வழி மேல் விழி வைத்துக் காத்திருக்கும் நிலைதான்! அத்தகைய கோயில்களில் அர்ச்சனை, காணிக்கைக்குச் சீட்டு முறை வைத்து, அவற்றை யார் வாங்குவது? ஆனால், இக்கோயிலில் 01.02.1991 முதல் சீட்டு வாங்கித்தான் அர்ச்சனை செய்ய வேண்டுமாம்!

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

விரும்பில் அவன்அடி வீர சுவர்க்கம்,
பொருந்தில் அவன்அடி புண்ணிய லோகம்,
திருந்தில் அவன்அடி தீர்த்தமும் ஆகும்,
வருந்தி அவன்அடி வாழ்த்த வல்லார்க்கே.

திருச்சிற்றம்பலம்

— 10ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

அரும்பொருள் — பெறுதற்கரிய பொருள்

1. கோயில் அர்ச்சகர்கள் கூறிய கதை எனும் குழந்தைக்குப் பவுடர் போட்டுப் பொட்டு வைத்துக் கண்ணுக்கு மைதீட்டி.... சிறிது அலங்காரம் செய்து உங்களிடம் குழந்தையைக் கொடுத்திருக்கிறேன். அடியேனின் கைங்கரியம் அம்மட்டே!
2. கோயில் அர்ச்சகர்கள்: கே.ஆர். அழகப்பன், எஸ்.பி. கறுப்பையா, அரண் மனை சிறுவயல்

உ

வெற்றியூரின் விரிசுடரை உள்ளத்துள்ளே வைத்தேனே!

(106. மருதூருடைய ஐயனார் திருக்கோயில், வெற்றியூர்)

நகரத்தார்கள் வழிபடும் குலதெய்வக் கோயில்களுக்கான நம் புனிதப் பயணத்தை, நாட்டரசனகோட்டையில் தொடங்கியபோது, அவ்வூரில் உள்ள மூன்று குலதெய்வக் கோயில்களைக் கண்டு வழிபட்டோம். இப்போது யாத்திரையின் இறுதிக் கட்டமாக வெற்றியூருக்கு வந்திருக்கிறோம். இங்கும் மூன்று கோயில்களை வழிபட்டு, நம் பயணத்தை நிறைவு செய்யவிருக்கிறோம்!

வெற்றியூர்ப் பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள பெரிய ஊருணியின் தென் கரையில் அமைந்திருக்கிறது, நம் யாத்திரையில் நாம் இறுதியாக வழிபடவிருக்கும் ஐயனார் கோயில்.

திருச்சுற்றுச் சுவருக்குள் கிழக்கு நோக்கி அமைந்திருக்கும் இரு சேமங் குதிரைகள், தொலைவிலிருந்தே கண்களுக்குப் பளிச்சென்று தென்படுகின்றன. எனவே வேறு சில கோயில்களைப் போன்று, இடம் தேடி அலைய வேண்டிய நிலை ஏற்படாது.

பெரிய தோட்டத்தைக் கொண்ட வீடு ஒன்றைக் கோயிலாக மாற்றியிருப்பார்களோ எனும் ஐயம் யாருக்கேனும் ஏற்பட்டால், அது நியாயமானதே! இடையிடையே வீடு போன்ற அமைப்பு; அவற்றினிடையே சந்நிதிகளின் விமானங்கள்.

07.09.1978ல் நடைபெற்ற திருக்குட நீராட்டுக்கு முன்னரோ, பின்னரோ குடமுழுக்கு நடைபெற்றிருக்கிறதா என்பதை அறிவதற்கான குறிப்போ, தகவலோ எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் சேமங் குதிரைகள் புதிதாக வண்ணம் தீட்டப் பெற்றிருக்கின்றன; விமானங்கள் பளிச்சென்று காணப்பெறுகின்றன; கோயிலும் தூய்மையாக உள்ளது.

* * *

கண்டனூர், தேவகோட்டை, பாகனேரி நகரத்தார்கள் குலதெய்வமாகக் கும்பிடும் மருதூருடைய ஐயனார்[1], பெரிய அழகிய சிலா வடிவம். நீண்ட காலத்துக்கு முன்னரே இங்கிருந்த ஐயனார், விநாயகர் சிலைகளை மாற்றிப் புதிய சிலைகளை வைத்து விட்டனராம்.

பழைய ஐயனாரைக் கருவறையின் இடப்புறத்திலும், பழைய விநாயகரை இரண்டாவது சுற்றுச்சுவரை ஒட்டி வடமேற்கு மூலையிலும் வைத்திருக்கிறார்கள்.

கருவறையின் முன் உள்ள மண்டபத்தில் இடப்புறம் மயில்மீது சுப்பிரமணியர் அமர்ந்து அருட்காட்சி கொடுக்கிறார்; துவார பாலகர், யானை வாகனம், பலிபீடம் ஆகிய அனைத்துமே வெளியிலேதான் உள்ளன.



வெற்றியூரின் விரிசுடர் வீற்றிருக்கும் கோயில்

கருவறையின் வலப்புறம் உள்ள நாச்சிய(ரர)ம்மன் யாதவ (கோனார்) சமுகத்தினரின் குலதெய்வமாம். யாதவப்பெண் ஒருவர் (வழக்கம் போல்) இங்கு அணைந்ததைத் தொடர்ந்து சந்நிதி அமைக்கப்பெற்றிருக்கிறது. இந்தச் சந்நிதியின் வலப்பக்கம் ஒரு கதவு இருக்கிறது. அதன் வழியாக அவர்கள் கோழி முதலியவற்றை வைத்து வழிபட்டு எடுத்துச் செல்வார்களாம். பூசாரியையும் கூட அவர்களே அழைத்து வருவது உண்டாம்!

சில ஆண்டுகளுக்கு முன்பு வரை தேவகோட்டையிலிருந்து யாதவர்கள், சித்திரை மாதத்தில் அழகர் ஆற்றில் இறங்கும் நாளில் காவடி எடுத்து வருவது உண்டாம். அப்போது பூக்குழியில் இறங்குவதும் உண்டு. இப்போது ஏனோ அதை நிறுத்திவிட்டனர். இது

போன்று முன்பு நடைபெற்று வந்த புரவி எடுப்பும், கடந்த இருபது ஆண்டுகளாக நடைபெறுவது இல்லையாம்.

* * *

கருவறையின் வலப்புறம் உள்ள நான்கு சந்நிதிகளில் காளி, நாச்சி, (ஆதி நாச்சியாராக இருப்பாரோ?), பேச்சி, சின்னக்காளி, சின்னக்கருப்பர், பெரிய கருப்பர், வீரபத்திரர் ஆகியோர் காணப் பெறுகின்றனர். கருவறையின் இடப்புறம் கன்னிமாப் பெண்கள், அம்மன், வைரவர் சந்நிதிகள் உள்ளன. கருவறை மண்டபத்துக்கும், கோயில் நுழைவாயிலுக்கும் இடையில் பெரிய மண்டபம் ஒன்று உள்ளது. முன்பு காவடி எடுத்து வந்தவர்களும், மற்றவர்களும் தங்குவதற்கு இது பயன்பட்டிருக்கக்கூடும். இந்த மண்டபத்தை ஒட்டி வெளியில் தென்புறத்தில் சோனையன் சந்நிதி காணப்பெறுகிறது.

* * *

நகரத்தார்கள் அவரவரும் தனித்தனியே வந்து வழிபட்டுச் செல்லும் இக்கோயிலில், செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் மட்டுமே ஒருகாலப் பூசை நடைபெறுகிறது. மற்ற நாட்களில் மாலைகொண்டானிலிருந்து அர்ச்சகரை அழைத்து வந்து வழிபட வேண்டும்.

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

1. பற்றற்றார்சேர் பழம்பதியைப், பாசூர்நிலாய பவளத்தைச்,
சிற்றம்பலத்(து)எம் திகழ்கனியைத், தீண்டற்கரிய திருவுருவை,
வெற்றியூரில் விரிசுடரை, விமலர்கோனைத் திரைசூழ்ந்த
ஒற்றியூர்எம் உத்தமனை, உள்ளத்துள்ளே வைத்தேனே.

திருச்சிற்றம்பலம்

— 4 ஆம் திருமுறை

2. நாச்சியாரம்மன்

வெற்றியூரில் அமர்ந்து வினைதீர்க்கும் நாச்சியம்மன்
பெற்றிமிகப் பெரிது பெற்றவளாம் — நற்றவத்தால்
உற்றகலி நீங்கி உவகையொடு வாழ்வதற்கே
பற்றற்றார் திருப்பாதம் பற்று.

— கோயிலில் காணப்பெறும் பாடல்

குறிப்பு விளக்கம்:

1. என்.கே. வேலாயுதம் செட்டியார், அலவாக்கோட்டை; வே. கணேச வேளார், மாலைகொண்டான்
2. கோயில் குறித்த தகவல்களை வழங்கியவர்: அர்ச்சகர் வே. கணேச வேளார்

உ

வேண்டிற்றொன்று ஈவார் வெற்றியூர்க் கறுப்பர்

(107. வெற்றியூர்க் கறுப்பர் திருக்கோயில், வெற்றியூர்)

திருக்காளத்தி மலையில் காளத்திநாதரை முதன் முதலில் கண்ட திண்ணனார் பெருமகிழ்ச்சி அடைந்து, விரைந்து ஓடிச் சென்று அவரைத் தழுவினார், உச்சி மோந்தார், 'ஐயோ கொடிய விலங்குகள் நிறைந்த இடத்தில் இப்படித் தனித்து உள்ளாரே?' என்று உள்ளம் வெதும்பினார்; இவருடைய பசியறிந்து உணவூட்டக்கூட ஒருவருமில்லையே என்று மனம் நொந்து, 'நாதனே! அமுது செய்ய நல்லமெல் இறைச்சி நானே, கோதறத் தெரிந்து வேறு கொண்டிங்கு வருவேன்'[1] என்றார். பின்னர் அடிவாரம் சென்று பன்றி இறைச்சியை நெருப்பில் வதக்கி, வாயினில் இட்டுச் சுவைத்துப் பார்த்து அவற்றில் நல்லவற்றை எடுத்துக் கொண்டு சென்று இறைவனை அணுகி, '......இவ் இறைச்சி சால, அழகிது நாய னீரே! அமுதுசெய் தருளும் ...'[2] என்று கூறி இறைவனுக்குப் படைத்தார்!

திண்ணப்பர் அன்பின் மிகுதியால், இறைவன் பசியைத் தீர்க்கத், தம் பசி தீர்க்கும் வகை போல் இறைச்சி தேட முற்பட்டார்; அதை அவருக்குப் படைத்தார். அதுபோன்றுதான் அடியாராயினார், தாம் உண்ணும் உணவை ஆண்டவனுக்கு நிவேதிக்கின்றனர். அன்பு பாவ — புண்ணியங்களைக் கடந்தது.

இறைவனால் நமக்குக் கொடுக்கப்பெற்ற எல்லாவற்றையும் அவனுக்குப் படைத்துவிட்டே நாம் அனுபவிக்க வேண்டும் என்று காஞ்சிப் பெரியவர்கள் கூறியிருப்பதை இங்கு நினைவுகூரலாம். ஆண்டவனுக்குப் படைக்காமல் ஒரு பொருளை அனுபவிப்பது, திருட்டுச் சொத்தின் பயன் நுகர்வது போன்றதாகும்.

வெற்றியூர்க் கறுப்பர் கோயிலுக்கு அடிமைப்பட்ட அலவாக்கோட்டை நகரத்தார்கள், புதிதாகத் தாங்கள் செய்யும் எதிலும், முதலில் கறுப்பருக்கு என்று எடுத்து வைத்திருந்து, இங்கு வரும்போது கொண்டுவந்து கறுப்பருக்கு நிவேதனம் செய்யத் தவறுவதில்லை; புதிதாக உப்புக் கண்டம் போட்டால்கூட, எடுத்து வைத்திருந்து, இங்கு கொண்டு வந்து நிவேதனம் செய்யாமல் இருக்கமாட்டார்கள் என்று கோயில் பூசாரி[3] கூறியதைத் தெரிவித்தபோது, அதுபற்றிக்

கருத்துரைத்த நேரத்திலேயே, தமிழறிஞர் ஒருவர் கண்ணப்பர் வரலாற்றை விரித்துரைத்தார்.



வேதனை தீர்க்கும் வெற்றியூர்க் கறுப்பர்

இதனைக் கேட்ட மற்றொரு தமிழறிஞர், ''கண்ணப்பரின் அன்பு நிலை எங்கே? நாம் எங்கே? 'கண்ணப்பன் அன்பின்மை கண்ட பின்'[4] என்று மணிவாசகப் பெருமானாலேயே சிறப்பித்துக் கூறப் பெறும் அவருடன், உலக ஆசாபாசங்களில் உழன்று கொண்டிருக்கும் நம் செயல்களை ஒப்பிட முடியுமா? அன்பின் மிகுதியால் தாம் ஒன்றைச் செய்வதாக நினைத்துக் கொண்டு, தாம் உண்பதையெல் லாம் படைப்பது — தம் உணவு என்னும் காரணத்தால், பிறவுயிர் களைக் கொன்று, அவற்றை இறைவனுக்கு நிவேதிப்பது, பெரும் பாவமாகும்'' என்று வாதிட்டார்.[5]

வெற்றியூர்ப் பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள பள்ளிக்கூடத்தை ஒட்டி அமைந்திருக்கும் மண்பாதை வழியே சென்று, வெற்றியூர்க் கறுப்பர் கோயிலை அடைகிறோம்.

குலதெய்வமாக வழிபடுவோரோ, வேறு நேர்ந்து கொண்டவர் களோ வந்தால்தான் இங்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். இல்லாவிடில் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் மட்டும் கோயி லைத் திறந்து, சந்நிதிகளில் சாம்பிராணி தூபம் போடுவார்கள். தைப் பொங்கல், மாசி மாதத்தில் வெற்றியூரில் நடைபெறும் மஞ்சு விரட்டு ஆகிய நாட்களில் மட்டுமே, இங்கு சிறப்பு வழிபாடு நடை பெறுகிறது.

ஒற்றைக் கறுப்பர் என்றும் அழைக்கப் பெறும் வெற்றியூர்க் கறுப் பரை நினைத்துத்தான் இவருக்கு அடிமைப்பட்ட நகரத்தார்கள் எந்த நல்ல காரியத்தையும் தொடங்குகிறார்களாம்; செய்கிறார்களாம்!

* * *

கணமாய்க்கு எதிரே அமைந்திருக்கும் இக்கறுப்பர் கோயிலுக்கான முன்னோடி, சாலையின் மறுபுறத்தில் உள்ள கண்மாய்க்குள்தான் இருக்கிறார். முன்புதான் இவருக்குச் சாராயம், கள் படைத்தார் கள் என்பதில்லை; இப்போதும் அவ்வப்போது சாராயம் படைக் கவே செய்கிறார்கள்.

கோயிலினுள் கிடாய் வெட்டுவார்கள்; நாம் ஏன் அந்தப் பாவத் தைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்று நினைத்தோ என் னவோ விநாயகப் பெருமான் கோயிலுக்கு வெளியில், சுற்றுச் சுவரை ஒட்டி அமர்ந்து விட்டார்! (ஒருவேளை தம் அன்னையைப் போன்ற அழகிய பெண்மணி யாரேனும் இவ்வழியே போகிறாரா என்று பார்த்துக் கொண்டிருக்கிறாரோ?)

கோயிலினுள் சென்றால், நம் இடப்புறம் பதினெட்டாம்படிக் கறுப்பர், சங்கிலிக் கறுப்பர், காளியாத்தா, இருளாயி, பேச்சியம்மா ஆகியோர் ஒரு சந்நிதியில் குடிகொண்டிருக்கின்றனர்.

கருவறையில், பெரிய கறுப்பர் அழகிய வேலைப்பாடு நிறைந்த திருமேனி. அவருக்கு வலப்புறம் சின்னக்கறுப்பரும், இடப்புறம் கன்னிமாப் பெண்டிரும் உள்ளனர். கருவறையையும், பதினெட் டாம்படிக் கறுப்பர் ஆகியோரின் சந்நிதியையும் இணைத்துத் தகரக் கூடம் போடப்பெற்றிருக்கிறது.

திருக்குட நீராட்டு நடைபெற்று இருபது ஆண்டுகள் ஆகியிருக் கலாம் என்று பூசாரி கூறும் இக்கோயிலில், நகரத்தார்கள் பெரும் பாலும் உயிர்ப்பலி கொடுப்பதில்லையாம். நிறையப் பழங்கள், பட்டுகள் கொண்டுவந்து சுவாமிக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து மகிழ்கிறார்களாம். ஆண்டுக்கொரு முறையாவது அவர்கள் இங்கு வந்து வழிபடத் தவறுவதில்லை!

பரவும் சொல்மாலை

திருச்சிற்றம்பலம்

மனவஞ்சர்மற் றோடமுன் மாதராரு
மதிகூர் திருக்கூடலில் ஆலவாயும்,
இனவஞ்சொல் இலாஇடை மாமருதும்,
இரும்பைப்பதி, மாகாளம், வெற்றியூரும்,
கனம்அஞ்சின மால்விடை யான்விரும்பும்
கருகாவூர், நல்லூர், பெரும்புலியூர்
தனமென்சொலில் தஞ்சம்என் றேநினைமின்,
தவமாம்,மல மாயின தான்அறுமே.

திருச்சிற்றம்பலம்

— 2ஆம் திருமுறை

குறிப்பு விளக்கம்:

1. 'நாதனே! தேவரீர் அமுது செய்ய நல்ல மெல்லிய இறைச்சியை நானே குற்றமறத் தெரிந்து கொண்டு வருவேன்.!' — பெரிய புராணம்
2. 'இவ்விறைச்சி மிகவும் அழகியது, நாயனாரே! இதனை உண்டருளவேண்டும்... — பெரிய புராணம்
3. பூசாரி கறுப்பையா, வெற்றியூர்
4. திருவாசகம்
5. நன்னெறிக் கோட்பாட்டின் அடிப்படையில், பெயர் குறிப்பிடப்பெறாத இரு தமிழறிஞர்களின் வாதப் பிரதிவாதங்கள், கண்ணப்பரை அடிப்படை யாகக் கொண்டு, இந்த வகையில் அமைந்திருந்தன.

உ

அருமையில் எளிய அன்னபூர்ணேசுவரி

(108. அன்னபூரணியம்மன் திருக்கோயில், வெற்றியூர்)

''கருணையின் பற்றுக்கொம்பாக இருக்கிற அம்மாவே!
அன்னபூர்ணேசுவரியே! பிச்சை போடு!'' — ஆதி சங்கரர், காசியில் உள்ள அன்னை அன்னபூரணியிடம் இந்தப் பிச்சையைக் கேட்பது, தமக்காக அன்று; நமக்காக — உலக மக்களுக்காக![1]

அன்னையோ, ஊனை வளர்க்கும் உணவை மட்டும் வழங்காமல், உள்ளத்தை வளர்க்கும் ஞானத்தையும் வழங்குகிறாள்!

உலகை உய்விக்கும் அந்த அன்னையை — அன்னபூர்ணேசுவரியை வழிபட்டு, நம் புனித யாத்திரையை நிறைவு செய்ய, வெற்றியூர் அன்னபூரணி அம்மன் கோயிலுக்கு வந்திருக்கிறோம்.


நாட்டரசன்கோட்டை, பாகனேரி, பனங்குடி, உருவாட்டி, மறவர் மங்கலம், காளையார்கோயில், வெற்றியூர் ஆகிய ஊர்களின் அன்னையர் எழுவரும் சகோதரியர் என்று கூறப்பெறுவதைக்,[2] கண்ணுடையநாயகி நமக்குக் காட்சி கொடுத்தபோதே அறிந்திருக் கிறோம். அந்த எழுவரில், நகரத்தாரின் குலதெய்வமாகத் திகழ் பவர் மூவர்; அவர்களில், நாம் இப்போது வழிபட வந்திருப்பவர் மூன்றாமவர்.

* * *

வெற்றியூர்க் கறுப்பரை வழிபட்ட பின்னர், அங்கிருந்து தீழிறங்கிச் செல்லும் மண்சாலையில் சிறிது தொலைவு சென்றால், அன்(ன)ன பூரணி கோயிலை அடைந்து விடலாம்.

அலவாக்கோட்டை (மாத்தூர் அரும்பாக்கூர்), வலையபட்டி, வெற்றி யூர் நகரத்தார்கள் குலதெய்வமாகக் கொண்டாடும் அன்னை அன்ன பூரணியின் கோயில், முதலில் நகரத்தார்களின் கோயிலாகவே இருந்ததாம்.[3] இப்போது, இந்து அறநிலையத் துறையின்கீழ்க், காரைக்குடி கொப்புடையநாயகி அம்மன் கோயில் நிர்வாகத்தில் உள்ளதாம்.

கடந்த 40, 50 ஆண்டுகளுக்கு இடையில் திருக்குட நீராட்டே நடந்ததாகத் தெரியவில்லை என்று அர்ச்சகர் கூறுவதுதான், இக் கோயில் மிகவும் பழுதடைந்து போயிருப்பதற்குக் காரணமாக இருக்கலாமோ? இங்குள்ள மணியில் பொறிக்கப்பெற்றிருக்கும் 1894ஆம் ஆண்டு என்னும் குறிப்பு, இக்கோயில் ஒரு நூற்றாண் டைக் கடந்து விட்டதைக் குறிக்கிறது. இவ்வளவு புராதனமான கோயிலின் திருச்சுற்றுச் சுவரிலும், கருவறைச் சுவரிலும் வளர்ந்து, வெட்டப்பெற்று, மீண்டும் வளர்ந்து கொண்டிருக்கும் மரங்கள், அழகிய கல் திருப்பணியை அழிக்க அனுமதிக்கலாமா? இருப்பினும், கோயிலைப் புனரமைப்புச் செய்து, குடமுழுக்கு விழா நடத்தப் பேச்சு வார்த்தைகள் நடைபெறுகின்றன என்று, அர்ச்சகர் கூறுவது ஓரளவு ஆறுதலாக இருக்கிறது. இக்கோயிலுக்கு அடிமைப்பட்டோரே நிதிஉதவி செய்து, இதுவரை திருப்பணிகளைச் செய்து வந்திருக் கின்றனராம்![4]



அன்னையின் அருள்பெற
அழைக்கின்ற தெங்குகள்

* * *

கோயிலுக்குள் நுழையுமுன்னர், வெளியில் நம் இடப்புறம் வீற் றிருக்கும் விநாயகரை வணங்கிக் கொண்டு உள்ளே செல்கிறோம். ஓட்டுக்கூடத்தில் உள்ள கொடிமரம், இரு பலிபீடங்கள், யக்ஷிணி சிலை ஆகியவற்றைக் கடந்து கருவறையை அடைகிறோம். கரு

வறையின் நுழைவாயிலை ஒட்டித் துவார சக்தியர் காணப்பெறு கின்றனர்.

கருவறையில், அன்னை அன்னபூர்ணேசுவரி அருளாட்சி புரிகிறாள்.

பேருந்து வசதிகள் அதிகம் இல்லாதிருந்த நாட்களில், நகரத்தார் கள் ஒன்று சேர்ந்து வண்டி கட்டிக் கொண்டு இங்கு வந்து வழி பட்டு, வழியில் எங்கும் தங்காது வீடு போய்ச் சேர்வார்களாம். இப்போது அவரவரும் தனித்தனியே, குறிப்பாகச் சித்திரை. ஆடி, தை மாதங்களில் இங்கு வந்து வமிபட்டுச் செல்கிறார்களாம்.[5]



மரம் இடந்தவறி முளைத்துவிட்டதா?

எப்போதாவதுதான் நடைபெறும் மதுவெடுப்புக், கடந்த ஆண்டு நடைபெற்றிருக்கிறது. இந்த ஒரு நாள் திருவிழாவின்போது, அம்பாள் குதிரை வாகனத்தில் வீற்றிருந்து காட்சி கொடுப்பாளாம். 40, 50 ஆண்டுகளாகத் திருவிழா ஏதும் இங்கு நடைபெறுவதில்லை என்று கூறப்பெறுவது,[6] இந்த மதுவெடுப்பு விழாத் தவிர்த்த வேறு திருவிழாவாக இருக்குமோ?

* * *

ஒட்டுக்கூடத்தின் முன்புறத்தில் உள்ள கறுப்பரும், தென்மேற்கு மூலையில் அமர்ந்திருக்கும் விநாயகரும், வடக்குப் பிராகாரத்தில் காணப்பெறும் வைரவரும் மட்டுமே, இங்குள்ள பரிவார தெய்வங்கள் ஆவர்!

தென்கிழக்கு மூலையில் உள்ள திருமஞ்சனக் கிணறு, 21.06.71ல் வெற்றியூர் நகரத்தார் செய்த திருப்பணி.

செவ்வாய், வெள்ளிக்கிழமைகள் தவிர்த்த ஏனைய நாட்களில், இங்கு ஏதேனும் ஒரு நேரம், ஒருகாலப் பூசையே நடைபெறுகிறது. அந்த இரு நாட்களில் மட்டும் இரண்டுவேளைப் பூசை நடைபெறுகிறதாம். தேவையானால், வெற்றியூர்ப் பேருந்து நிலையத்தருகில் உள்ள அன்னபூரணி ஆலயக் குருக்களிடம் சொன்னால், வெற்றியூரில் உள்ள மூன்று குலதெய்வக் கோயில்களிலும் வழிபாடு செய்வதற்கு, வேண்டிய உதவிகளைச் செய்வார்.

பரவும் சொல்மாலை

கன்னிய குமாரி,அருள் காந்திமதி, மீனாட்சி,
கருணை பருவத வர்த்தனி,
கமலைப் பராசக்தி, சிவகாம சுந்தரி,
காழிஉ மை,பிரம வித்தை,
தன்நிகர் இலாஞான, அபயவர தாம்பிகை,
தையல்,அ பிராமி மங்கை,
தந்தஅகி லாண்ட நாயகி,அறம் வளர்த்தவள்,
தன்னருள் செய் காமாட்சி,இங்(கு)
என்னைஆள் கௌரி,ஜ்வா லாமுகி, உண்ணாமுலை,
இலங்கு நீலா 'ய்தாட்சி,
எழிற்பிரம ராம்பிகை, இலங்குபார் வதிஆதி,
எண்ணிலா நாம ரூப
அன்னையாய்க், காசிமுத லாகிய தலத்துவிளை
யாடிடு விசா லாட்சியாம்,
அண்டகோ டிகள்பணி அகண்டபூரணி என்னும்
அன்ன பூரணி அன்னையே![7]

— சிவஞான தேசிக சுவாமிகளின்
திருவருட்பாத் திரட்டு

இதனுடன் நம் புனித யாத்திரை நிறைவு பெறுகிறது! நாம் எதைச் செய்தாலும், அது தெய்வ சங்கற்பத்தால் — இறைவனின் இன்னருளால்தான் நடைபெறுகிறது. அவன் அருள் இன்றி — அவனுடைய உந்துதல் இன்றி, எதுவும் நடைபெறுவதில்லை.

குலதெய்வக் கோயில்களுக்கான இந்தப் புனிதப் பயணத்தைப் பொறுத்தவரை, இது நூற்றுக்கு நூறு உண்மை!

கோர்ட்டுமலை கணேசரின் அருளினால் — ஆசியினால்தான், இந்தத் திட்டம் உருவாகியது; பயணம் சாத்தியமாகியது; திரட்டிய தகவல்களைத் தொகுத்து நூலாக்க முடிந்தது!

அந்தப் பெருமானின் பேரருளை வியந்து, அவன் பாதர விந்தங்களைப் பணிந்து, உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்.

நல்லவை பெருக வேண்டும்,
நாடெலாம் வாழ வேண்டும்!

நல்லவை நீடி மல்கத்,
தீயவை நலிய, நாயேன்
சொல்லவை நல்லோர் சூழல்
துலங்கிடத், திருநணா வாழ்
வல்லபை இடத்து வைத்த
வாரண முகவன், தெய்வப்
பல்லவம் மருட்டும் பைம்பொற்
பதயுகழ் பணிதல் செய்வாம்!

— பவானிகூடல் புராணம்

குறிப்பு விளக்கம்:

— அரிய பொருளாயிருந்து (அன்பர்க்கு) எளிதில் வந்தருளும்...
1. காஞ்சிப் பெரியவர் — தெய்வத்தின் குரல், முதற் பகுதி
2. என்.கே. வேலாயுதம் செட்டியார், அலவாக்கோட்டை
3. அர்ச்சகர் ஆர். ஐயப்ப கணேசன், வெற்றியூர்; என்.கே. வேலாயுதம் செட்டியார்; மற்றும் அலவாக்கோட்டை நகரத்தார் பெருமகனார் ஒருவர் வழங்கிய தகவல்களை ஆதாரமாகக் கொண்டது
4. என்.கே. வேலாயுதம் செட்டியார்
5. ஆர். ஐயப்ப கணேசன்
6. சுப்பிரமணியன் செட்டியார், வெற்றியூர்; ஆர். ஐயப்ப கணேசன்
7. (அன்னை அன்னபூரணி பல்வேறு தலங்களில் பல்வேறு திருநாமங்களுடன் அருள்பாலிப்பதை இப்பாடல் குறிப்பிடுகிறது. இதில் கூறப்பெற்றுள்ள அன்னையர் கோயில் கொண்டுள்ள தலங்கள் வருமாறு:

   கன்னியாகுமரி, திருநெல்வேலி, மதுரை, இராமேசுவரம், திருவாரூர் (கமலைப் பராசக்தி), தில்லை, சீகாழி (பெரியநாயகி), திருவெண்காடு (பிரம்ம வித்தியா நாயகி), தருமபுரம் (ஞானாம்பிகை), மயிலாடுதுறை, புள்ளிருக்கு வேளூர் (தையல்நாயகி), திருக்கடவூர், திருவானைக்கா, திருவையாறு, காஞ்சிபுரம், இலங்கை திருக்கேதீச்சரம் (கௌரி), இங்குலை, திருவண்ணாமலை, நாகப்பட்டினம், திருப்பருப்பதம், கயிலை, காசி.)

உ

கருதும் கருத்துடையேன், கையுடையேன் கூப்ப!

(தகவல்கள், மலர்கள், பாமாலைகள், படங்கள் தந்துதவிய பெருமக்கள்)

அடைக்கம்மை ஆச்சி, மு. கீழச்சிவற்பட்டி
அடைக்கலவன், இராம. வி.இலட்சுமிபுரம் (கோலாலம்பூர்)
அடைக்க வேளார், மு. வடகுடிப்பட்டி
அண்ணாமலை, இராம. கானாடுகாத்தான்
அண்ணாமலை, எஸ்.டி. ஒக்கூர்
அண்ணாமலை, ஏ.ஆர். டாக்டர் சண்முகநாதபுரம்
அண்ணாமலை, பழ. பொ.புதுப்பட்டி (சிங்கப்பூர்)
அண்ணாமலை செட்டியார், வி.ஆர்.எம். இராயவரம் (ஈப்போ)
அண்ணாமலை பண்டாரம், கறு. தேக்காட்டூர்
அம்பிகாபதி பட்டர், குழிபிறை
அருணாசலம், மு. பொ.புதுப்பட்டி (கோலாலம்பூர்)
அருணாசலம் செட்டியார், இராம. தேவகோட்டை
அழகப்ப செட்டியார், அழ.ந. கடியாபட்டி இராமச்சந்திரபுரம்
அழகப்பன், என். டாக்டர் இராங்கியம்
அழகப்பன், கே.ஆர். அ.சிறுவயல்
அன்பு, சொக்கநாதபுரம்
ஆண்டியப்பன், அண. டாக்டர் இராங்கியம்
ஆதப்ப செட்டியார், கறு. ஒக்கூர்
ஆறுமுகம், கும. புலவர் கோனாபட்டு
ஆறுமுகம், மு. அரிமழம்
ஆறுமுக வேளார், ஆறு. பட்டமங்கலம்
ஆறுமுக வேளார், சுப. இராமலிங்கபுரம், வீழநேரி
ஆறுமுக வேளார், லெ. ஜோதிடர் கோனாபட்டு
இராமசாமி, நா. குழிபிறை
இராமசாமி, மு. பொ. புதுப்பட்டி
இராமசாமி, ரெ. கண்டனூர் (அலோர் ஸ்டார்)
இராமசாமி செட்டியார், அலவாக்கோட்டை
இராமசாமி செட்டியார், எஸ். சிறுகூடல்பட்டி

இராமசாமி செட்டியார், பி.இராம. அலவாக்கோட்டை
(கோலாலம்பூர்)
இராமசசந்திர பட்டர், மு.இராம. விரையாச்சிலை
இராமநாதன், எஸ்.எம். வலையபட்டி (மதுரை)
இராமநாதன், எஸ்.பி.வி. காரைக்குடி (ஜோகூர் பாரு)
இராமநாதன், டி. மதுரை
இராமநாதன், வி.எல். தேவகோட்டை
இராமநாதன் செட்டியார், ஆர்.எம்.ஏ. சண்முகநாதபுரம்
இராமநாதன் செட்டியார், எம். தேவகோட்டை
இராமநாதன் செட்டியார், எம்.கே.எம். நெற்குப்பை
இராமநாதன் செட்டியார், எல்.எஸ்.டி. தேவகோட்டை
இராமநாதன் செட்டியார், சுப.இராம.சுப. பேராசிரியர்
நாட்டரசன்கோட்டை
இராமநாதன் செட்டியார், மு. வேகுப்பட்டி (புதுக்கோட்டை)
இராமநாதன் செட்டியார், வயி. சொக்கநாதபுரம்
இராமநாதன் செட்டியார், வி. அலவாக்கோட்டை
இராமநாதன் செட்டியார், ராம.பழ.ராம. வேகுப்பட்டி
இராமையா செட்டியார், சுப. பூலாங்குறிச்சி
(பெட்டாலிங் ஜெயா)
இராமையா வேளார், சாமியாடி துவார்
இராமையா வேளார், பூ.சா. கண்ணன்கார்குடி
இலட்சுமண வேளார், மரு. தேக்காட்டூர்
இலட்சுமணன் செட்டியார், எம். பள்ளத்தூர்
இளங்கோவன், என். கோனாபட்டு
உடைய வேளார், கே.ஆர். கொல்லங்குடி
உடைய வேளார், பெரி. சுண்டக்காடு
உடையப்ப வேளார், கும. குன்றக்குடி
உடையார் அம்பலம், பெரி. மு.வாணியம்பாடி
உமாசேகர குருக்கள், சாக்கோட்டை
உமையாள் ஆச்சி, உ.சிறுவயல்
ஏகநாதன், திரு, திருமதி தேவகோட்டை
ஏகப்பன், ஆர்.எம். கோட்டையூர்
ஐயப்ப கணேசன், ஆர். வெற்றியூர்
ஐயாக்கண்ணு வேளார், பொ. மூலங்குடி
கணபதி செட்டியார், எஸ்.ஒ.ஆர்.எம். கண்டவராயன்பட்டி
கணபதி பண்டாரம், சிவ.ஆறு. இராங்கியம்
கணபதி பண்டாரம், பூ.வீர.மு.வீர. இராங்கியம்
கணேச குருக்கள், ஏ. கண்டதேவி
கணேச வேளார், மாலைகொண்டான்
கணேசன், கீழக்கோட்டை
கணேசன் செட்டியார், எம். காரைக்குடி
கண்ணப்ப செட்டியார், முரு.சொ. கண்டவராயன்பட்டி
கண்ணப்ப வேளார், மணமேல்பட்டி

கண்ணப்ப வேளார், வெ. தூரக்குளம்
கண்ணன் செட்டியார், ஆர்.ஜி. பூசாரி நாட்டரசன்கோட்டை
கண்ணுசாமி பட்டர், நாட்டரசன்கோட்டை
கதிரேசன் செட்டியார், எஸ்.ஏ.ஆர்.எம். பள்ளத்தூர்
கலியபெருமாள், டி. பெட்டாலிங் ஜெயா
கறுப்பன் செட்டி, எம்.ஆர். கோட்டையூர்
கறுப்பன் செட்டி, லெ. தேவகோட்டை
கறுப்பையா, வெற்றியூர்
கறுப்பையா, எஸ்.பி. அ.சிறுவயல்
கறுப்பையா செட்டியார், கே.ஆர்.கே. கண்டரமாணிக்கம்
கறுப்பையா செட்டியார், மா. கண்டவராயன்பட்டி
கறுப்பையா பண்டாரம், சி. திருப்புத்தூர்
கறுப்பையா பூசாரி, அய்யர் மகன் அலவாக்கோட்டை
கறுப்பையா வேளார், சுப. கத்தப்பட்டு
கறுப்பையா வேளார், சுப. மேல்குடி தெற்கு, நடுவிக்கோட்டை
கறுப்பையா வேளார், மு. செண்பகம்பேட்டை
கனகு வேளார், பழ. கத்தப்பட்டு
காசிவிஸ்வநாத ஞான தேசிக சுவாமிகள், தவத்திரு கோவிலூர்
காசிவிஸ்வநாதன் செட்டியார், வீர. பொ. புதுப்பட்டி
காமாட்சி சுந்தர தேசிகர், தவத்திரு கலாமடம், பாதரக்குடி
காளீஸ்வரக் குருக்கள், ஆர். சிராவயல்
காளீஸ்வரன் வேளார், எம். அரியாக்குறிச்சி
கிருஷ்ண வேளார், உ. செண்பகம்பேட்டை
கிருஷ்ணப்ப செட்டியார், நா.கி.நா.கி. கீழச்சிவற்பட்டி
கிருஷ்ணமூர்த்தி, மு.ஸ்ரீ. கல்லல் (கோலாலம்பூர்)
கிருஷ்ணமூர்த்தி குருக்கள், ஏ. கோட்டூர்
கிருஷ்ணமூர்த்தி ராவ், மூலங்குடி
குணா வேளார், சி. நெய்வாசல்
குமார் வேளார், கறு. திருக்கோஷ்டியூர்
கோட்டை அழகப்பன், சுவாமியாடி ஐயாபட்டி
சங்கரலிங்கம், மு. பொ.புதுப்பட்டி (சிங்கப்பூர்)
சண்முக வேளார், குரு. குளத்துப்பட்டி
சண்முக வேளார், சேவு. கத்தப்பட்டு
சண்முகம், ஏ.எல். கோனாபட்டு
சண்முகம், வீர. கொத்தரி
சந்திரசேகரன், கா. ஆத்தங்குடி
சம்பந்தம், இராம. ஈப்போ
சாத்த வேளார், வீர. செங்கீரை
சிங்கார வேளார், பழ. பட்டமங்கலம்
சிங்காரம், மூ. கருங்குளம்
சிங்காரவடிவேலன், அர. டாக்டர் கண்டனூர் (தேவகோட்டை)
சிதம்பர வேளார், வே. செம்பனூர்

சிதம்பரம், அ. தில்லை, ஆ. முத்துப்பட்டணம் (கோலாலம்பூர்)
சிதம்பரம், ஏ. கானாடுகாத்தான்
சிதம்பரம், ஏ.என். விரையாச்சிலை
சிதம்பரம் செட்டியார், பழ. பொ.புதுப்பட்டி (கோலாலம்பூர்)
சிவசுப்பிரமணியன், ஆர்.எம். கண்டவராயன்பட்டி
சிவநடராசன், சிவ. மிதிலைப்பட்டி
சிவலிங்க வேளார், ஆர். வார்ப்பட்டு
சின்னக்கறுப்பன் செட்டியார், நாவினிப்பட்டி
சின்னச்சாமி அம்பலம், இராம. கண்டனூர்
சின்னையன் செட்டியார், கண்டரமாணிக்கம்
சின்னையா அம்பலம், சி.மு. கோட்டையூர்
சின்னையா சிவாசாரியார், பெரி.சே. சிங்கம்புணரி
சின்னையா வேளார், பூ.உ. செண்பகம்பேட்டை
சுந்தரம், சொ.சொ.மீ பேராசிரியர் மதுரை
சுந்தரம், நா. குழிபிறை
சுந்தரம், லெ. ஒக்கூர் (மதுரை)
சுப்பிரமணிய அம்பலக்காரர், கத்தாளம்பட்டு
சுப்பிரமணிய வேளார், வீர. சூரக்குளம்
சுப்பிரமணியக் குருக்கள், வி. வேலங்குடி
சுப்பிரமணியன் ஆத.நா. பட்டமங்கலம்
சுப்பிரமணியன், ச. ஆத்தங்குடி
சுப்பிரமணியன், சோம. மிதிலைப்பட்டி
சுப்பிரமணியன் செட்டியார், வெற்றியூர்
சுப்பிரமணியன் செட்டியார், எஸ்.பி. கீழச்சிவற்பட்டி
சுப்பிரமணியன் செட்டியார், கும.ராம. ஆவிணிப்பட்டி
சுப்பிரமணியன் செட்டியார், சா.நா. செம்பனூர்
சுப்பிரமணியன் செட்டியார், சுப.வீர. பலவான்குடி
சுப்பிரமணியன் செட்டியார், பழ. பூசாரி பள்ளத்தூர்
சுப்பிரமணியன் செட்டியார், பெரி.வெ.சுப.சு. தேவகோட்டை
சுப்பிரமணியன் செட்டியார், மு.அ.சுதி. வலையபட்டி
சுப்பையா அம்பலம், பெரி. செங்கீரை
சுப்பையா செட்டியார், அரு.கும. செம்பனூர்
சுப்பையா செட்டியார், எம்.எஸ்.எஸ்.பி. பொ.புதுப்பட்டி (கும்பகோணம்)
சுப்பையா செட்டியார், எஸ்.டி.எஸ்.பி. காரைக்குடி
சுப்பையா வேளார், அரிமழம்
சுப்பையா வேளார், சுப. செம்பனூர்
சுவாமிநாதன், ஏ.ஆர். பனையப்பட்டி
செந்தமிழன், சுப. மதுரை
செந்தாமரை, இராம. நடராஜபுரம்
செல்லப்பன், சி. அரிமழம்
செல்லப்பா, ப. கவிஞர் அரிமழம்
செல்வராஜ் வேளார், எஸ்.பி. சுரியபட்டி

சேது, பெரி. இஞ்சினியர் நெற்குப்பை (மதுரை)
சேது வைராவி, இராம. கரியப்பட்டி
சேதுநாராயணன், ஆர்.எம். டாக்டர், பேராசிரியர்
காளையார்மங்கலம்
சேவக வேளார், மணமேற்பட்டி
சேவகப் பெருமாள் வேளார், நெற்குப்பை
சேவகப் பெருமாள் வேளார், பட்டமங்கலம்
சேவகப் பெருமாள் வேளார், உ. முனைசந்தை, தேக்காட்டூர்
சொக்கலிங்கம், அழ. கீழச்சிவற்பட்டி
சொக்கலிங்கம், சோம. டாக்டர் பூலாங்குறிச்சி
சொக்கலிங்கம், தே. டாக்டர் பி.அழகாபுரி (காரைக்குடி)
சோமசுந்தரக் குருக்கள், பொன்னமராவதி
சோமசுந்தரம், பெரி. குழிபிறை
சோமசுந்தரன், அரு. காசிஸ்ரீ தேவகோட்டை
சோமன் பூசாரி, எம். நாட்டரசன்கோட்டை
சோலைமலை அம்பலம், பி.ஆர். பள்ளத்தூர்
தியாகராஜன் செட்டியார், பழ. மிதிலைப்பட்டி
திருஞானசம்பந்தம், எல். உ.சிறுவயல்
திருநாவுக்கரசு வேளார், சுத்தப்பட்டு
திருப்பதி செட்டியார், இராம.வெ.லெ. வலையபட்டி
தினமணி, டி இளையாற்றங்குடி
தேனப்பன், வ. டாக்டர் கீழச்சிவற்பட்டி (தேவகோட்டை)
நடராஜ வேளார், கும. கொரட்டி
நடராஜன் செட்டியார், மது.கும. வலையபட்டி
நடேசன் அம்பலம், ஆர்.எம். பள்ளத்தூர்
நாகநாதக் குருக்கள் மகன் ஐயாசாமி குருக்கள்,
எழுவன்கோட்டை
நாகப்ப செட்டியார், பெரி.நா. வலையபட்டி
நாகப்பன், எஸ். இராங்கியம்
நாகப்பன், பி.ஏ. செவ்வூர்
நாகு வைராவி, ஆர்.எம். வைரவன்பட்டி
நாச்சியப்பன், என்.சி.டி. ஆத்தங்குடி
நாச்சியப்பன், நா. கண்டரமாணிக்கம்
நாராயணன், இராம. அரியக்குடி
நாராயணன், எஸ். அமராவதிபுதூர்
நாராயணன் செட்டியார், ஏ.எல்.ஏ.ஆர்.எஸ்.எம்.
தேவகோட்டை
நாராயணன் பிள்ளை, நீ. கண்டதேவி
பழனி வேளார், ஆ. சின்னவேங்காவயல்
பழனியப்ப செட்டியார், எஸ்.பி. கீழப்பூங்குடி
பழனியப்ப செட்டியார், சு.வீ.மு.ப.கதி. கோட்டையூர்
பழனியப்ப செட்டியார், சுப.பழ. வேகுப்பட்டி
பழனியப்ப செட்டியார், மு. முப்பழம் உ.சிறுவயல்

பழனியப்ப வேளார், கே.எம். பலவான்குடி
பழனியப்ப வேளார், லெ. இலங்குடி
பழனியப்பன், எம். நற்சாந்துபட்டி
பழனியப்பன், சுப. பூசாரி கோனாபட்டு
பழனியப்பன், சுப. கயி. உ.சிறுவயல்
பழனியப்பன் திட்டாணிக் கறுப்பையா, ஆத்தங்குடி
பழனியப்பன் திருமணச்சோலை, சொக்கலிங்கபுரம்
பழனியப்பன், மு. வேந்தன்பட்டி
பழனியப்பன், மெ. கண்டரமாணிக்கம்
பழனியப்பன், வி.எம். டாக்டர் சிறுகூடல்பட்டி
(பெட்டாலிங் ஜெயா)
பாட்டையா பூசாரி, ஆ.ஏ.நா. சாமியாடி இளையாற்றங்குடி
பாண்டிய வேளார், மணமேற்பட்டி
பில்லப்பன் வேளார், ஏ. காடனேரி
பெரிச்சியப்பன், அண. கொத்தமங்கலம்
பெரியகறுப்பன், தமிழண்ணல், இராம. டாக்டர் நெற்குப்பை
(மதுரை)
பெரியசாமி, நா. கருங்குளம்
பொன்னுசாமி சேர்வை, கத்தாளம்பட்டு
மகாலிங்கம் செட்டியார், இராம. காரைக்குடி (சென்னை)
மணி, எஸ். கோயில்பட்டி
மலையாண்டி செட்டியார், அ.நா. புலவர் வலையபட்டி
மாசன் பூசாரி, கொப்பனாபட்டி
மாணிக்கம், கா. மதுரை
மாணிக்கம், லெ. ஐயாபட்டி
மாணிக்கம் செட்டியார், ஆர்.எம். வி.இலட்சுமிபுரம்
மாணிக்கம் செட்டியார், எஸ். கண்டவராயன்பட்டி
மாணிக்கம் செட்டியார், எஸ்.எஸ். நாச்சியாபுரம் (சிங்கப்பூர்)
மாணிக்கம் செட்டியர்ர், சொ. கண்டவராயன்பட்டி
மாணிக்கம் செட்டியார், முரு.கும. செம்பனூர்
மாயாண்டி செட்டியார், மா.பழ. தேவகோட்டை (ஈரோடு)
மீனாட்சிசுந்தரம், ஆர். அலவாக்கோட்டை (சிதம்பரம்)
மீனாட்சிசுந்தரம் பட்டர், ஆ. பாகனேரி
முத்தப்பன், பழ. டாக்டர் மேலைச்சிவபுரி
முத்திருளப்ப பூசாரி, பூ.வீர.மு.மு. இராங்கியம்
முத்து வேளார், மு. சின்னவேங்காவயல்
முத்துக்கறுப்பன், சுப. வலையபட்டி (ஈரோடு)
முத்துக்குமார் வேளார், ஜி. தொலையானூர்
முத்துடைய வேளார், உ. சுண்டக்காடு
முத்துப்பழனியப்பன், பி.ஆர்.எம்.பி. இராங்கியம்
முத்துராமன், உ. கோயில்பட்டி
முத்துராமன், எம்.எஸ். மதகுபட்டி
முத்துராமன் செட்டியார், மெ. பொ.புதுப்பட்டி

முத்துவள்ளியப்ப செட்டியார், நா. வலையபட்டி
முத்துவிசயன், கா. ஆலத்துப்பட்டி
முத்துவீர வேளார், சா. வெழுவூர், ஆத்தங்குடி
முத்தையா, பழ. பள்ளத்தூர்
முத்தையா, பி.எல். முல்லை தேவகோட்டை (சென்னை)
முத்தையா, வே. மிதிலைப்பட்டி
முத்தையா செட்டியார், அ. அரிமழம்
முத்தையா செட்டியார், எஸ்.எம். கீழச்சிவற்பட்டி
முத்தையா செட்டியார், சி.பழ.ராம. வேகுப்பட்டி
முத்தையா செட்டியார், ப.வ. நாட்டரசன்கோட்டை
முத்தையா செட்டியார், மு.நா.மு. கீழச்சிவற்பட்டி
முத்தையா செட்டியார், மெ.மு.கறு. கீழச்சிவற்பட்டி
முத்தையா வேளார், மணமேற்பட்டி
முத்தையா வேளார், வெ. .செம்பனூர்
முருகப்ப பூசாரி, கு. ஆலத்துப்பட்டி
முருகப்பன், சா.நா. செம்பனூர்
முருகப்பன், நா. காரைக்குடி
மெய்யப்ப செட்டியார், எஸ்.ஆர்.எம். காரைக்குடி
மெய்யப்பன், எம். கண்டரமாணிக்கம்
லெட்சுமணன் செட்டியார், லெ. புதுவயல்
வல்லநாட்டான், ஏ. கண்டவராயன்பட்டி
வள்ளியப்ப செட்டியார், தெ. பி.அழகாபுரி (கோலாலம்பூர்)
வள்ளியப்பன், எஸ்.வி. மிதிலைப்பட்டி
வள்ளியப்பன், கும. பலவான்குடி
வள்ளியம்மை, மு. கோட்டையூர் (காரைக்குடி)
விசுவநாதன், இராம. நெற்குப்பை (மதுரை)
வீரப்ப செட்டியார், பழ. புதுவயல் (கோலாலம்பூர்)
வீரப்பா, சோம. நேமத்தான்பட்டி
வெங்கடாசலம் செட்டியார், இராம. அரியக்குடி
வெங்கிடாசலம் செட்டியார், சுப. காரைக்குடி (பினாங்கு)
வெங்கிடாசலம் செட்டியார், வெ.சித.அழ. கோட்டையூர்
வெள்ளைச்சாமி, கீழக்கோட்டை
வெள்ளைச்சாமி ஆசாரி, மு. காளையார்மங்கலம்
வேலாயுதம் செட்டியார், என்.கே. அலவாக்கோட்டை (மதுரை)
வேலாயுதம் செட்டியார், சு.வெ,கதி. விராமதி
வேலுப்பட்டர், விரையாச்சிலை
வைத்திலிங்கம் வேளார், மு. வடகுடிப்பட்டி
ஷண்முகம் செட்டியார், சு.அரு. அரியக்குடி
ஸ்ரீநிவாச பட்டாச்சாரியார், அரியக்குடி

இந்நூலைத் தொகுப்பதற்குப் பல்வகை உதவிகளையும் நல்கிய
பண்பாளர் அனைவருக்கும்,
எளியேனின் இதயபூர்வமான நன்றி உரியது

உ

கலைமுத் தமிழ்நூல்கள்

அகநானூறு — நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் உரை
அபிதான சிந்தாமணி — ஆ.சிங்காரவேலு முதலியார்
அரிமளம் செட்டிக் கறுப்பர் பக்திப் பாடல்கள்
அருள்மிகு கறுப்பண்ண சுவாமியின் திருவிளையாடல்கள் — ஆக்கியவர்: மு.முத்துக்கறுப்பசாமி
அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் வரலாறு — தேவஸ்தான வெளியீடு
அருள்மிகு சோனையன் பதிகம்
அருள்மிகு வடுகச்சி அம்மன் வணக்கப் பாமாலை — இயற்றியவர்: டாக்டர் அர.சிங்காரவடிவேலன்
ஆதினமழகி ஐயனார் ஆனந்தக் களிப்பு — இயற்றியவர்: சி.கறு.சோமசுந்தரம் செட்டியார் (1925)
ஆலத்திப்பட்டி ஐயனார் ஐம்மணி மாலை
ஆலத்துப்பட்டிக் கட்டுச்சோற்றுக் கறுப்பர் கோயில் — குல தெய்வ எழுச்சிப் பாடல்கள் — இயற்றியவர்: பேராசிரியர் வித்துவான் வே.அண்ணாமலை
ஆலயங்களின் உட்பொருள் விளக்கம் — இலஞ்சி ஆ.சொக்க லிங்கம்
ஆலயங்களும் ஆகமங்களும் — நஜன்
இந்து சமயக் களஞ்சியம் — மு.திரவியம்
இராங்கியம் அருள்மிகு பெரியகறுப்பண்ண சுவாமி கோயில் குடமுழுக்கு விழா மலர் (1987)
இராங்கியம் பெரியகறுப்பண்ண சுவாமி பாமாலை (1989)
இராங்கியம் பெரியகறுப்பண்ண சுவாமி பாமாலை (1993)
இலங்குடி ஐயனார் திருக்குட நீராட்டு மலர் (1982)
உளிவீர சுவாமி பக்திப் பாடல்கள்
உளிவீர சுவாமி பேரில் வர்ணிப்பு — குலசேகரப்பட்டினம் இராமநாத பிள்ளை (1933)
ஒன்பது நகரக்கோயில்கள் — டாக்டர் வ. தேனப்பன்
ஓம் சக்தி — மாத இதழ்கள்
கணபதி ஹ்ருதயம் — நஜன்
கண்டரமாணிக்கம் மாணிக்கநாச்சியம்மன் திருக்கோயில் குடமுழுக்கு விழா மலர் (1992)
— டாக்டர் பூவண்ணன்
கந்த புராணம் — முதற் தொகுதி — டாக்டர் பூவண்ணன் உரை

கந்த புராணம் — நான்காம் தொகுதி — புலவர் அ.மாணிக்கம் உரை
கம்பராமாயணம் — வை.மு.கோபாலகிருஷ்ணமாசாரியார் உரை
கலைக் களஞ்சியம்
கறுப்பர் அருட்பா மலர் (1990)
காசி கங்கா சேது யாத்திரை — நஜன்
கீழக்கோட்டை ஆதினமழகி ஐயனார் மீதான பாடல்கள் — இயற்றியவர்: ஒக்கூர் சி.கறு.சோமசுந்தரம் செட்டியார் (1925)
கீழக்கோட்டை ஆதினமிளகி ஐயனார் கோயில் திருக்குட நன்னீராட்டு விழா மலர் (1992)
கோட்டூர் அருள்தரு சௌந்தரநாயகியம்பாள் சமேத அருள்மிகு அகத்தீஸ்வர சுவாமி திருக்கோயில் மகா கும்பாபிஷேக விழா மலர் (1987)
கோட்டூர்க் கறுப்பர் பதிகம்
கோட்டையூர் சோமசுந்தரேசுவரர் கோயில் திருக்குட நீராட்டு மலர் (1980)
சாத்தையா துதிப்பாடல்கள்
சித்தர் பாடல்கள்
சிருங்கபுரமென்னும் கோட்டூர் மந்திக் கறுப்பர் வருகைப் பதிகம் — டாக்டர் அர.சிங்காரவடிவேலன்
சிலப்பதிகாரம் — பொ.வே.சோமசுந்தரனார் உரை
சிவதோத்திரத் திரட்டு — வித்துவான் தி.பட்டுச்சாமி ஓதுவார்
சிவப்பதிகள் — கழக வெளியீடு
சிவாலய பூஜை விளக்கம் — சுவாமிநாத சிவாசாரியார்
செட்டிநாடும் செந்தமிழும் — சோமலெ
செந்தமிழ்ச் செல்வி — மாத இதழ்கள்
செவலூர் அருள்மிகு மதுக்கார நாச்சியம்மன் திருக்கோயில் மகா கும்பாபிஷேக மலர் (1990)
செவலூர் அருள்மிகு மதுக்கார நாச்சியம்மன் பாமாலை
செவ்வலூர் மதுவநாயகியம்மை பதிற்றுப் பத்தந்தாதி — இயற்றியவர்: பி.ராம.கு.மெ.மெய்யப்ப செட்டியார், காரைக்குடி
சைவ ஆகமங்கள் — டாக்டர் எஸ்.பி.சபாரத்தினம்
சைவ சமய வளர்ச்சி — டாக்டர் மா.இராசமாணிக்கம்
சைவ வினா விடை — இரண்டாம் பகுதி — தவத்திரு ஆறுமுக நாவலர்
சோலையாண்டவர் துதிமாலை — இயற்றியவர்: தவத்திரு காசி விஸ்வநாத ஞான தேசிகர்
தமிழ் மொழி அகராதி — நா.கதிரைவேற் பிள்ளை
திருக்கோயில் — மாத இதழ்கள்
திருச்சிக்கல் கோயில் வரலாறு — சொ.கணபதி தேசிகர்
திருமந்திரம் — கழக வெளியீடு
திருமாலடியார்கள் — காழியூர் சேஷாத்திரி மணவாளன்
திருமுறைத் தலங்கள் — புலவர் பு.மா.ஜயசெந்தில்நாதன்
திருவாசகம் — கா.சுப்பிரமணிய பிள்ளை உரை

திருவாதவூரடிகள் புராணம் — பு.சி.புன்னைவனநாத முதலியார் உரை
திருவிசைப்பா திருப்பல்லாண்டு — வித்துவான் தி.பட்டுச்சாமி ஓதுவார் உரை
திருவைந்தெழுத்து — டாக்டர் கு.சுந்தரமூர்த்தி
தெய்வ தரிசனம் — ஆனந்தி
தெய்வத் திருவுருவங்கள் — ந.ரா.முருகவேள்
தெய்வத்தின் குரல் — தொகுப்பாசிரியர்: ரா.கணபதி
தெய்வீகத் துதிப் பாடல்கள் — பாலாஜி பப்ளிகேஷன்ஸ்
தென்னிந்தியச் சிற்பங்களும் கோயில்களும் — தி.இராசமாணிக்கம்
தேவகோட்டை கரு.மு. குடும்ப வரலாறு — பெரி.வெ.சுப.சு.சுப்பிரமணியன் செட்டியார்
தேவாரம் — ஆறு திருமுறைகள் — தருமையாதின வெளியீடு
தேவி பாகவதம் — துர்காதாஸ் எஸ்.கே.ஸ்வாமி
நகரத்தார் அறப்பட்டயங்கள் — டாக்டர் வ.சுப.மாணிக்கனார் பதிப்பு (1961)
நகரத்தார் சிறப்பு வரலாறு — சித.நடராஜன்
நலந்தரும் நாடியம்மன் — இரமேஷ் சாமியப்பா
நாட்டரசன்கோட்டை அருள்மிகு கண்ணுடையநாயகி அம்மன் கும்பாபிஷேக நகரத்தார் திருப்பணி மலர் (1989)
நாட்டரசன்கோட்டை அருள்மிகு சிவகாமியம்மன் உடனாய கரிகால சோழீஸ்வரர் திருக்கோயில் கும்பாபிஷேக நகரத்தார் திருப்பணி மலர் (1988)
நாட்டரசன்கோட்டை கண்ணுடையநாயகி அம்மன் தங்க அங்கி அணிவிப்பு விழா மலர் (1992)
நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு — வயிநாகரம் அ.இராமநாதன் செட்டியார் தொகுத்தது
நாட்டுப்புற நடனங்களும் பாடல்களும் — டாக்டர் கே.ஏ.குணசேகரன்
நாலாயிர திவ்வியப் பிரபந்தம் — கரப்பங்காடு கோபாலாசாரியார் பதிப்பு
நேமம் ஸ்ரீ ஜெயங்கொண்ட சோழீஸ்வரர் கோயில் குடமுழுக்கு விழா மலர் (1991)
பதினொராந் திருமுறை — சு.அ.இராமசாமிப் புலவர் குறிப்புரை
பரிபாடல் — நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் உரை
பிங்கல நிகண்டு — பிங்கல முனிவர் அருளியது
புகழ் மணக்கும் வைணவத் தலங்கள் — புலவர் சி.முத்துப் பிள்ளை
புட்ப பலன் — சி.அருணை வடிவேல் முதலியார் உரை
பெரிய புராண ஆராய்ச்சி — டாக்டர் மா.இராசமாணிக்கம்
பெரிய புராணம் — சிவக்கவிமணி சி.கே.சுப்பிரமணிய முதலியார் உரை
முருகவேள் பன்னிரு திருமுறை — தணிகைமணி வ.சு. செங்கல்வராய பிள்ளை
முருகன் அருள் செல்வம் — பி.எல்.முத்துக்குமரன்
மூலங்குடி ஸ்ரீ பொய்சொல்லா மெய்யர் கோயில் சுவாமிகள் போற்றிப் பாடல்கள்

மொழிக்கு மொழி தித்திக்கும் மூவர் தமிழ் மாலை — ஆங்கீரஸ வேங்கடேச சர்மா
லீலா விபூதிகள் — அ.சுப்பராமன்
வியாசர் அருளிய மகாபாரதம் — அ.லெ.நடராஜன்
வில்லிபுத்தூரார் பாரதம் — சே.கிருஷ்ணமாசாரியார், வை.மு.கோபாலகிருஷ்ணமாசாரியார் உரை
வினை தீர்க்கும் விநாயகர் — நஜன்
வேங்கடம் முதல் குமரி வரை — தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான்
வேலாபுரி கறுப்பண்ண சுவாமி சதகம் — இயற்றியவர்: வாலகவி இராமசாமிக் கவிராயர் (17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி)
ஸ்ரீ அழகியமெய்யர் சுவாமி பதிகம் — இயற்றியவர்: கவிஞர் பெரி.இலக்குமணச் செட்டியார்
ஸ்ரீ கோகர்ண க்ஷேத்ர மகிமை — மூல ஆசிரியர்: கோரா குரு
ஸ்ரீ தேவி அங்காளீஸ்வரி கவசம் — கவிஞர் சுப.சுந்தரம்
ஸ்ரீ தேனாட்சியம்மன் பாடல்கள் — இயற்றியவர்: பி.கு.குட்டை ஐயா என்ற பி.சு.சுப்பிரமணியன் செட்டியார்
ஸ்ரீ மக்கமடை ஐயனார் பாமாலை (1994)
ஸ்ரீ வைஷ்ணவம் — வித்வான் ஆர்.இராமஸ்வாமி ராமாநுஜ தாஸன்
ஜைன சமயத் திருவுருவங்கள் — பூசை ச. அருணவசந்தன்
A STUDY ON MARIAMMAN WORSHIP IN SOUTH INDIA BY YUKO NISHIMURA, 1987

(இவை, இத்தொகுப்பிற்குத் துணை நின்ற நூல்கள்)

உ

ஞானப்பேர் நவிலவைத்தார்

அம்பிகை 108 போற்றித் தொடர்கள்

ஓம் அகிலாண்டநாயகி போற்றி
ஓம் அஞ்சனாட்சியம்மை போற்றி
ஓம் அத்துவிதநாயகி போற்றி
ஓம் அபயாம்பிகை போற்றி
ஓம் அபிராமியம்மை போற்றி
ஓம் அமிர்தநாயகி போற்றி
ஓம் அருந்தவநாயகி போற்றி
ஓம் அருமருந்தம்மை போற்றி
ஓம் அருள்நாயகி போற்றி
ஓம் அலங்காரநாயகி போற்றி 10
ஓம் அல்லியங்கோதை போற்றி
ஓம் அழகாம்பிகை போற்றி
ஓம் அழகுசடைமுடியம்மை போற்றி
ஓம் அறம்வளர்த்தநாயகி போற்றி
ஓம் அன்னபூரணி போற்றி
ஓம் ஆனந்தவல்லி போற்றி
ஓம் ஆவுடைநாயகி போற்றி
ஓம் இமயமடக்கொடியம்மை போற்றி
ஓம் இறையார்வளையம்மை போற்றி 20
ஓம் உண்ணாமுலையம்மை போற்றி
ஓம் உமையம்மை போற்றி
ஓம் உலகநாயகி போற்றி
ஓம் ஏலவார்குழலியம்மை போற்றி
ஓம் ஒப்பிலாநாயகி போற்றி
ஓம் ஓசைகொடுத்தநாயகி போற்றி

ஓம் கடந்தைநாயகி போற்றி
ஓம் கருந்தாள்குழலி போற்றி
ஓம் கரும்பனையாளம்மை போற்றி
ஓம் கருவார்குழலியம்மை போற்றி
ஓம் கலியாணசுந்தரி போற்றி 30
ஓம் கற்பகவல்லி போற்றி
ஓம் கனகாம்பிகை போற்றி
ஓம் காந்திமதியம்மை போற்றி
ஓம் காமாட்சியம்மை போற்றி
ஓம் காம்பனதோளியம்மை போற்றி
ஓம் காவியங்கண்ணி போற்றி
ஓம் குயில்மொழியம்மை போற்றி
ஓம் குரவங்கமழ்குழலி போற்றி
ஓம் குழல்வாய்மொழியம்மை போற்றி
ஓம் கேதாரகௌரியம்மை போற்றி 40
ஓம் கைலாயநாயகி போற்றி
ஓம் கோகர்ணநாயகி போற்றி
ஓம் சகிதேவி போற்றி
ஓம் சத்தியம்மை போற்றி
ஓம் சாந்தநாயகி போற்றி
ஓம் சிநேகவல்லி போற்றி
ஓம் சிவகாமியம்மை போற்றி
ஓம் சிவயோகநாயகி போற்றி
ஓம் சிவானந்தவல்லி போற்றி
ஓம் சொக்கநாயகி போற்றி 50
ஓம் சொர்ணநாயகி போற்றி
ஓம் சோதிமின்னம்மை போற்றி
ஓம் சோபுரநாயகி போற்றி
ஓம் சோமகலாநாயகி போற்றி
ஓம் ஞானப்பூங்கோதை போற்றி
ஓம் தவளவெண்ணகையம்மை போற்றி
ஓம் தாயம்மை போற்றி
ஓம் திரிபுரசுந்தரி போற்றி
ஓம் திருக்குழல்நாயகி போற்றி
ஓம் திருநிலைநாயகி போற்றி 60
ஓம் தேனமிர்தவல்லி போற்றி
ஓம் தேன்மொழிப்பாவை போற்றி

ஓம் தையல்நாயகி போற்றி
ஓம் நங்கையுமையம்மை போற்றி
ஓம் நல்லநாயகி போற்றி
ஓம் நீலாம்பிகை போற்றி
ஓம் பசுபதிநாயகி போற்றி
ஓம் பஞ்சின்மெல்லடியம்மை போற்றி
ஓம் பண்மொழிநாயகி போற்றி
ஓம் பந்தாடுநாயகி போற்றி 70
ஓம் பரிமளசுகந்தநாயகி போற்றி
ஓம் பவளக்கொடியம்மை போற்றி
ஓம் பாகம்பிரியாநாயகி போற்றி
ஓம் பார்வதியம்மை போற்றி
ஓம் பாலசௌந்தரி போற்றி
ஓம் பாலினும்நன்மொழியம்மை போற்றி
ஓம் பிரத்தியட்சமின்னம்மை போற்றி
ஓம் பிரம்மவித்தியாநாயகி போற்றி
ஓம் புறவாம்பிகை போற்றி
ஓம் பூங்குழலம்மை போற்றி 80
ஓம் பூங்கொடிநாயகி போற்றி
ஓம் பெண்ணின்நல்லாளம்மை போற்றி
ஓம் பெரியநாயகி போற்றி
ஓம் பொற்கொடியம்மை போற்றி
ஓம் பொன்மயிலாம்பிகை போற்றி
ஓம் மங்களநாயகி போற்றி
ஓம் மங்கையர்க்கரசி போற்றி
ஓம் மட்டுவார்குழலம்மை போற்றி
ஓம் மரகதவல்லி போற்றி 90
ஓம் மருவார்குழலி போற்றி
ஓம் மலர்க்குழல்மின்னம்மை போற்றி
ஓம் மலையான்மடந்தை போற்றி
ஓம் மலைவளர்காதலி போற்றி
ஓம் மாணிக்கவல்லி போற்றி
ஓம் மீனாட்சியம்மை போற்றி
ஓம் முகிழாம்பிகை போற்றி
ஓம் முத்தாம்பிகை போற்றி
ஓம் முருகுவளர் கோதையம்மை போற்றி
ஓம் மேகலாம்பிகை போற்றி

ஓம் யாழிசை மென்மொழியம்மை போற்றி 100
ஓம் வடிவுடையம்மை போற்றி
ஓம் வடுவகிர்க்கண்ணம்மை போற்றி
ஓம் வண்டார்குழலி போற்றி
ஓம் வாளையங்கண்ணியம்மை போற்றி
ஓம் வாள்நெடுங்கண்ணி போற்றி
ஓம் விசாலாட்சி போற்றி
ஓம் வேனெடுங்கண்ணி போற்றி
ஓம் வைகலாம்பிகை போற்றி 108

தொகுத்தவர்: க. தேசிகனார்

நன்றி: அங்காள பரமேஸ்வரி அம்மன் திருக்கோயில்,
தேக்காட்டூர்